# வாசக நூல்

# II

ST. XAVIER'S COLLEGE
PALAYANKOTTAI
TIRUNELVELI-2.
627002.

# திருப்பலிப் புத்தகம்

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் ஆணையின்படி திருத்தி
அமைக்கப்பெற்று, திருத்தந்தை ஆறும் சின்னப்பரின்
அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

## வாசக நூல்

## II

பரிசுத்த ஆவி விழாவுக்குப்பின்
ஆண்டின் பொதுக் காலம்

தமிழ் இலக்கியக் கழகம்
திருச்சிராப்பள்ளி-620001
1974

ST. XAVIER'S COLLEGE
PALAYAMKOTTAI
TIRUNELVELI-2.
627002.

தமிழக மறை ஆயர்களின் ஆணைப்படி
இறைபணிக் குழுவினரால் தயாரிக்கப்பட்டது.

தமிழாக்கம் மூலநூலுக்கு ஒத்திருக்கிறது.

அச்சிடலாம் :

✠ THOMAS,

திருச்சி மறை ஆயர்

# SACRA CONGREGATIO PRO CULTU DIVINO

Prot. No. 1758/70

## DECRETUM

Ordine lectionum Missae approbato per Constitutionem Apostolicam Missale Romanum, a Summo Pontifice Paulo VI die 3 aprilis 1969 datam, Sacra haec Congregatio pro Cultu Divino, quae decreto diei 25 maii 1969 elenchum lectionum biblicarum jam evulgaverat, curavit ut Lectionarium quoque conficeretur, quod omnium lectionum integrum textum lingua latina exhiberet.

Praesentem nunc editionem latinam Lectionarii Missalis Romani haec Sacra Congregatio evulgat, eandemque typicam esse declarat.

Contrariis quibuslibet minime obstantibus.

Ex aedibus Sacrae Congregationis pro Cultu Divino, die 30 Septembris 1970, in festo Hieronymi.

Benno Card. Gut
PRAEFECTUS

A. Bugnini
a SECRETIS

## விழாக்கள், ஞாயிறுகளுக்கு ஏற்றவாறு வாசகங்களை ஒழுங்குபடுத்தக் கால அட்டவணை

| ஆண்டு | காலச்சக்கரம் | | திருநீற்றுப் புதன் | உயிர்ப்பு ஞாயிறு | பரிசுத்த ஆவி விழா | ஆண்டின் பொதுக்கால வாரங்கள் | | | திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஞாயிறு | வார நாட்கள் | | | | தவக்காலத்திற்கு முன் வாரங்கள் | பாஸ்கா காலத்திற்குப் பின் தொடக்க நாள் | பாஸ்கா காலத்திற்குப் பின் தொடக்க வாரம் | |
| 1974 | 3 | 2 | பெப்ரவரி 27 | ஏப்ரல் 14 | ஜூன் 2 | 7 | ஜூன் 3 | 9 | டிசம்பர் 1 |
| 1975 | 1 | 1 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1976 | 2 | 2 | மார்ச் 3 | | | | | | |
| 1977 | 3 | 1 | பெப்ரவரி 23 | ஏப்ரல் 18 | ஜூன் 6 | 8 | ஜூன் 7 | 10 | நவம்பர் 28 |
| 1978 | 1 | 2 | பெப்ரவரி 8 | ஏப்ரல் 10 | மே 29 | 7 | மே 30 | 9 | நவம்பர் 27 |
| 1979 | 2 | 1 | பெப்ரவரி 28 | மார்ச் 26 | மே 14 | 5 | மே 15 | 6 | டிசம்பர் 3 |
| | | | | ஏப்ரல் 15 | ஜூன் 3 | 8 | ஜூன் 4 | 9 | டிசம்பர் 2 |
| 1980 | 3 | 2 | பெப்ரவரி 20 | ஏப்ரல் 6 | மே 25 | 6 | மே 26 | 8 | நவம்பர் 30 |
| 1981 | 1 | 1 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1982 | 2 | 2 | பெப்ரவரி 24 | ஏப்ரல் 11 | மே 30 | 7 | மே 31 | 9 | நவம்பர் 28 |
| 1983 | 3 | 1 | பெப்ரவரி 16 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1984 | 1 | 2 | மார்ச் 7 | ஏப்ரல் 22 | ஜூன் 10 | 9 | ஜூன் 11 | 10 | டிசம்பர் 2 |
| 1985 | 2 | 1 | பெப்ரவரி 20 | ஏப்ரல் 7 | மே 26 | 6 | மே 27 | 8 | டிசம்பர் 1 |
| 1986 | 3 | 2 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1987 | 1 | 1 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1988 | 2 | 2 | பெப்ரவரி 17 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1989 | 3 | 1 | பெப்ரவரி 8 | மார்ச் 26 | மே 14 | 5 | மே 15 | 6 | டிசம்பர் 3 |
| 1990 | 1 | 2 | பெப்ரவரி 28 | ஏப்ரல் 15 | ஜூன் 3 | 8 | ஜூன் 4 | 9 | டிசம்பர் 2 |
| 1991 | 2 | 1 | பெப்ரவரி 13 | மார்ச் 31 | மே 19 | 5 | மே 20 | 7 | டிசம்பர் 1 |
| 1992 | 3 | 2 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1993 | 1 | 1 | பெப்ரவரி 24 | ஏப்ரல் 11 | மே 30 | 7 | மே 31 | 9 | நவம்பர் 28 |
| 1994 | 2 | 2 | பெப்ரவரி 16 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1995 | 3 | 1 | மார்ச் 1 | ஏப்ரல் 16 | ஜூன் 4 | 8 | ஜூன் 5 | 9 | டிசம்பர் 3 |
| 1996 | 1 | 2 | பெப்ரவரி 21 | ஏப்ரல் 7 | மே 26 | 7 | மே 27 | 8 | டிசம்பர் 1 |
| 1997 | 2 | 1 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1998 | 3 | 2 | பெப்ரவரி 25 | ஏப்ரல் 12 | மே 31 | 7 | ஜூன் 1 | 9 | நவம்பர் 29 |
| 1999 | 1 | 1 | பெப்ரவரி 17 | ஏப்ரல் 4 | மே 23 | 6 | மே 24 | 8 | நவம்பர் 28 |

ஆண்டின் பொதுக்காலம்

6ஆம் வாரம் முதல் 34ஆம் வாரம் முடிய.

# ஆறும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அக்கிரமமாய் நடக்க எவருக்கும் கற்பித்ததில்லை.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 15 : 16-21

கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அவருக்கு நித்தியத்திற்கும் விருப்பமாய் நடக்கவும் உனக்கு மனமுண்டானால் அவைகள் உன்னைக் காப்பாற்றும்.

அவர் நீரும் நெருப்பும் உன் முன்பாக வைத்தார்; எது வேண்டுமோ, உன் கையை நீட்டு. மனிதனுக்கு முன்பாக வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும் உண்டு; அவன் எதைத் தேர்ந்துகொள்வானோ அதை அடைவான்.

ஏனென்றால், கடவுளுடைய ஞானம் மகத்தானது, அதிகாரத்தில் வல்லமை உள்ளது; அவர் இடைவிடாமல் அனைவரையும் கண்டறிகிறார். ஆண்டவருடைய கண்கள் அவருக்கு அஞ்சி நடப்பவர்கள்மீது இருக்கின்றன; மனிதனுடைய எல்லாச் செயல்களையும் அவர் அறிகிறார்.

அக்கிரமமாய் நடக்க அவர் எவனுக்கும் கற்பித்ததில்லை; பாவம் செய்யும்படி எவருக்கும் உத்தரவு கொடுத்ததில்லை.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 118: 1-2, 4-5, 17-18, 33-34 (பல்லவி : 1b)

பல்லவி : ஆண்டவர்தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

1 மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர் :
ஆண்டவர்தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.
2 அவருடைய ஆணைகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்.
முழு மனத்தோடு அவரைத் தேடுவோர் பேறுபெற்றோர்.

பல்லவி

4 நீர் உம் கட்டளைகளைத் தந்தீர் : அவற்றை முற்றிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்றீர்.
5 உம்முடைய நியமங்களை நான் கடைப்பிடிக்க என் நடத்தை உறுதியுள்ளதாய் நிலைத்திருந்தால் எவ்வளவோ நலம் !
பல்லவி

17 உம் வார்த்தைகளை நான் கடைப்பிடித்து வாழும் வண்ணம், உம் ஊழியன் எனக்கு அருள் கூரும்.
18 உமது திருச்சட்டத்தின்படி வியத்தகு செயல்களை நான் நன்குணரும் வண்ணம் என் கண்களைத் திறந்தருளும்.
பல்லவி

33 ஆண்டவரே, உம் நியமங்கள் குறிப்பிடும் வழியை எனக்குக் காட்டியருளும்: நான் அவற்றை அப்படியே கடைப்பிடிப்பேன்.
34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும் :
அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

ஞானம் நமது மகிமைக்காக உலகம் உண்டாகுமுன்பே கடவுள் திட்டத்தில் இருந்தது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்
2:6-10

சகோதரர்களே :

நிறைவு பெற்றவர்களிடையில் நாங்கள் ஞானத்தையே பேசுகிறோம். ஆனால் அது இவ்வுலகின் ஞானமன்று. அழிவுக்குரிய இவ்வுலகத் தலைவர்களின் ஞானமுமன்று.

கடவுளின் ஞானத்தையே பேசுகிறோம். அதுவோ மறை பொருளான ஞானம், இதுவரையில் அது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அது நமது மகிமைக்காக உலகம் உண்டாகுமுன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது. அதை இவ்வுலகின் தலைவர்களுள் யாரும் அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால் மாட்சிமை மிக்க ஆண்டவரைச் சிலுவையில் அறைந்திருக்கவே மாட்டார்கள். நாங்கள் அறிவிப்பதோ மறைநூலில் எழுதியுள்ளவாறு, 'கண்ணுக்குப் புலப்படாதது, காதுக்கு எட்டாதது, மனித உள்ளத்தில் எழாதது, கடவுள் தமக்கு அன்பு செய்கிறவர்களுக்காக ஏற்பாடு செய்தது.'

இதைக் கடவுள் தம் ஆவியின் வழியாய் நமக்கு வெளிப்படுத்தினார். தேவ ஆவி எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார்; கடவுளுடைய உள்ளத்தின் ஆழத்தையும் காண்கிறார்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

அல்லேலூயா மத். 11 : 25 காண்

**அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி : ஏனெனில், விண்ணரசின் மறையுண்மைகளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கும் தரப்பட்ட அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக இப்புத்தகத்தின் இறுதியில் உள்ளவற்றைப் பயன்படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

**இவ்வாறு முன்னோர்க்குச் சொல்லியுள்ளது; நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:17-37

*அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:*

“ திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்க வேண்டாம். அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே வந்தேன். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகுமுன் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்து போகாது; எல்லாம் நிறைவேறும்.

ஆகையால், இச்சின்னஞ் சிறு கட்டளைகளில் ஒன்றையேனும் மீறி, அப்படியே மனிதர்க்கும் போதிப்பவன், விண்ணரசில் மிகச் சிறியவன் எனப்படுவான். அவற்றைக் கடைப்பிடித்துப் போதிப்பவனோ, விண்ணரசில் பெரியவன் எனப்படுவான்.

உங்களுக்குச் சொல்லுகிறேன்: மறை நூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிட்டால், விண்ணரசு சேரமாட்டீர்கள். ‘கொலை செய்யாதே, கொலை செய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்’ என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன் : தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான். தன் சகோதரனை ‘முட்டாள்’ என்பவன், தலைமைச் சங்கத் தீர்ப்புக்குள்ளாவான். அவனை ‘மதிகெட்டவனே’ என்பவனோ எரிநரகத்திற்குள்ளாவான்.

நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்த வரும்பொழுது, உன் சகோதரனுக்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால்,

அங்கேயே, பீடத்தின் முன், உனது காணிக்கையை வைத்துவிட்டு, முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின்னர் வந்து, உன் காணிக்கையைச் செலுத்து.

நீ உன் எதிரியோடு போகும்போது, வழியிலேயே அவனுடன் விரைவாகச் சமரசம் செய்துகொள். இல்லையேல், உன் எதிரி உன்னை நீதிபதியிடம் கையளிக்க, நீதிபதி உன்னைக் காவலனிடம் கையளிக்கக் கூடும்; நீ சிறையில் அடைபட நேரிடும். உறுதியாகவே உனக்குச் சொல்லுகிறேன்: கடைசிக் காசை நீ கொடுத்துத் தீர்க்கும்வரை, அங்கிருந்து வெளியேறமாட்டாய்.

'விபசாரம் செய்யாதே' என்று முன்னோர்களுக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

"உன் வலக் கண் உனக்கு இடறலாயிருந்தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் உறுப்புக்களுள் ஒன்று அழிந்துபோவது உனக்கு நலம். உன் வலக்கை உனக்கு இடறலாயிருந்தால், அதை வெட்டி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்துக்குச் செல்வதைவிட, உன் உறுப்புக்களுள் ஒன்று அழிந்து போவது உனக்கு நலம்.

'தன் மனைவியை விலக்கிவிடுகிறவன் எவனும் அவளுக்கு முறிவுச் சீட்டு கொடுக்கட்டும்' என்று கூறியுள்ளது. நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: கெட்ட நடத்தைக்காக அன்றி எவனொருவன் தன் மனைவியை விலக்கிவிடுகிறானோ, அவன் அவளை விபசாரியாகும்படி செய்கிறான். விலக்கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம் செய்கிறான்.

மேலும், 'பொய்யாணை இடாதே, ஆணையிட்டு நேர்ந்துகொண்டதை ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் அரியணை. மண்ணுலகின் மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் கால்மணை. யெருசலேமின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது பேரரசரின் நகரம். உன் தலையின்மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், உன் தலைமயிர் ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ, கறுப்பாக்கவோ உன்னால் இயலாது.

உங்கள் பேச்சு, 'ஆம் என்றால், ஆம்; இல்லை என்றால், இல்லை' என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது."

**இது ஆண்டவரின் அருள் வாக்கு.**

## மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

5: 20-22a, 27-28, 33-34a, 37.

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உங்களுக்குச் சொல்லுகிறேன்; மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிட்டால், விண்ணரசு சேரமாட்டீர்கள். 'கொலை செய்யாதே. கொலைசெய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான்.

'விபசாரம் செய்யாதே' என்று முன்னோர்களுக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன் உள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

மேலும், 'பொய்யாணை இடாதே, ஆணையிட்டு நேர்ந்துகொண்டதை ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம்.

உங்கள் பேச்சு, 'ஆம் என்றால், ஆம்; இல்லை என்றால், இல்லை' என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

---

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

தொழுநோயாளி பாளையத்துக்கு வெளியே தனித்து வாழக்கடவான்.

லேவியர் ஆகமத்திலிருந்து வாசகம் 13: 1-2, 44-46

ஆண்டவர் மோயிசனையும் ஆரோனையும் நோக்கிக் கூறியதாவது:

ஒருமனிதனுடைய தோலிலோ சதையிலோ வித்தியாசமான நிறமாவது கொப்புளமாவது ஒருவிதத் துலக்கமான வெண்படலமாவது

உண்டானால், அது தொழுநோயென்று அறிந்து, அவனைக் குருவான ஆரோனிடமோ, அவர் புதல்வருள் எவனிடமோ கொண்டுவர வேண்டும்.

ஆகையால், தொழுநோயாளியென்று குருக்களின் தீர்மானப்படி விலக்கப்பட்டிருக்கிறவன் தையல் பிரிக்கப்பட்ட ஆடை அணிந்து, தன் தலையை மூடாமலும், முகத்தைத் துணியால் மறைக்காமலும் இருந்து, (யாரைக் கண்டாலும்): தீட்டு, தீட்டு என ஓலமிடக்கடவான். அவனுக்குத் தொழுநோய் இருக்கும்மட்டும் அவன் அசுத்தனானதால், அவன் பாளையத்திற்கு வெளியே தனித்து வாழக்கடவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 31 : 1-2, 5, 11* (பல்லவி : 7 காண்)

பல்லவி : ஆண்டவரே நீர் எனக்கு அடைக்கலமாயுள்ளீர்:
உம் மீட்பால் வரும் மகிழ்ச்சியால் என்னை அணைக்கிறீர்.

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ, அவன் பேறு பெற்றவன்: எவன்
பாவம் மறைக்கப்பட்டதோ, அவனும் பேறு பெற்றவன்.
2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறு
பெற்றவன் : யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறு
பெற்றவன்.

பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன்; என் குற்றத்தை நான்
உம் திருமுன் மறைத்தேனில்லை; "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக்
கொள்கிறேன்" என்றேன்; நீரும் என் குற்றத்தை மன்னித்தீர்:

பல்லவி

11 ஆண்டவரில் மகிழ்ந்திடுவீர், நீதிமான்களே, களிகூர்ந்திடுவீர்: நேர்மை
யுள்ளவர்களே, நீங்கள் அனைவரும் அவரில் அக்களித்திடுவீர்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

நான் கிறிஸ்துவைப் போல் நடக்கிறவாறே நீங்களும் என்னைப்போல் நடந்துகொள்ளுங்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *10:31-11:1*

சகோதரர்களே:

நீங்கள் உண்டாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாம் கடவுளின் மகிமைக்கெனச் செய்யுங்கள். யூதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடைஞ்சலாய் இராதீர்கள். நானும் அவ்வாறே அனைத்திலும் அனைவருக்கும் உகந்தவனாய் இருக்க முயலுகிறேன். எனக்குப் பயன் தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன்.

நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிறவாறே நீங்களும் என்னைப் போல் நடந்துகொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 7:16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்: கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தொழுநோய் அவனை விட்டு நீங்க, அவன் குணமானான்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:40-45

அக்காலத்தில்:

தொழுநோயாளி ஒருவன் யேசுவிடம் வந்து முழந்தாளிட்டு, "நீர் விரும்பினால் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்று வேண்டினான். யேசு அவன்மீது மனமிரங்கி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, "விரும்புகிறேன், குணமாகு" என்றார். உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்க, அவன் குணமானான்.

அவனை நோக்கி, "பார், யாருக்கும் ஒன்றும் சொல்லாதே. போய் உன்னைக் குருவிடம் காட்டி, நீ குணமானதற்காக, மோயீசன் கட்டளையிட்டதைக் காணிக்கையாகச் செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சியாகும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

அவனோ சென்று நடந்ததைச் சொல்லி எங்கும் விளம்பரப்படுத்தினான். அதனால் அவர் எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ப் போக

முடியாமல் வெளியே தனிமையான இடங்களில் இருந்தார். எனினும் மக்கள் எங்குமிருந்து அவரிடம் வந்தனர்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

மனிதரை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்;
ஆண்டவரை நம்புகிறவனே ஆசிபெற்றவன்.

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *17:5-8*

ஆண்டவர் கூறுவதாவது:

"மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; மனித பலவீனத்தையே அவன் தன் வலிமையாய்க் கொள்கிறான்; தன் இதயத்தை ஆண்டவரிடமிருந்து அகற்றுகிறான். அவன் பாலைநிலத்துப் பூண்டுக்குச் சமம்; நன்மை வந்தாலும் அதில் பலனைக் காணமாட்டான்; வறட்சி மிக்க பாலைநிலத்திலும், வாழ முடியாத உவர் நிலத்திலுமே அவன் குடியிருப்பு.

ஆண்டவரை நம்புகிறவனே ஆசி பெற்றவன்; ஆண்டவரே அவனுடைய நம்பிக்கை; அவன் நீரருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பானவன்; அது ஈரத்தில் வேரூன்றி இருக்கும்; கோடைக்காலத்தில் அதற்கு அச்சமில்லை; அதன் இலைகள் பசுமையோடிருக்கும்; வறட்சிக் காலத்தில் அதற்குக் கவலையில்லை; அது ஒருகாலும் கனி கொடாதிருக்காது."

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 1; 1-2, 3, 4 & 6 (பல்லவி: சங். 39;4a)*

பல்லவி: தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவர்மீது வைத்தவனே பேறு பெற்றவன்.

தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லாதவன், பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.

2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும்
பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்
தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்: அவன் செய்வ
தனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது: காற்றோடு காற்றாய்ப்
பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்: தீயோரின் வழியோ
அழிவுக்கே செல்லும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் உங்கள் விசுவாசம் வீணானதே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். *15 : 12,16-20.*

சகோதரர்களே:

கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என அறிவிக்கப்பட்டிருக்க, இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுள் சிலர் சொல்வதெப்படி ?

ஏனெனில், இறந்தவர்கள் உயிர்த்தெழுவதில்லையென்றால் கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே. நீங்கள் இன்னும் பாவ நிலையிலேயே இருக்கிறீர்கள். அப்படியானால், கிறிஸ்துவுக்குள் துஞ்சியவர்களும் அழிந்துவிட்டனர். இம்மை வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்தவர்களாயிருந்தால், எல்லாரையும் விட நாம் இரங்குதற்குரியவர் ஆவோம்.

ஆனால் உள்ளபடி, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; துஞ்சினோரின் முதற் கனி அவரே.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

லூக். 6 : 23ab

அல்லேலூயா

அல்லேலூயா. நீங்கள் துள்ளி மகிழுங்கள் : ஏனெனில், இதோ வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஏழைகள் பேறுபெற்றவர்கள். பணக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு!

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:17, 20-26

அக்காலத்தில் :

யேசு சீடர்களோடு இறங்கி வந்து சமதளமான ஓரிடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீடர்கள் பெருங்கூட்டமாய் இருந்தனர். யூதேயா முழுவதிலிருந்தும் யெருசலேமிலிருந்தும், தீர்சீதோன் கடற்கரையிலிருந்தும் மாபெரும் திரளாக மக்களும் வந்திருந்தனர். அவர் சொல்லுவதைக் கேட்கவும், தங்கள் நோய்கள் நீங்கிக் குணமாகவும் அவர்கள் வந்திருந்தனர்.

அவரோ தம் சீடரை ஏறெடுத்துப் பார்த்துக் கூறியதாவது: "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், கடவுளின் அரசு உங்களதே. இப்பொழுது பசியாய் இருப்பவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், நிறைவுபெறுவீர்கள். இப்பொழுது அழுபவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், சிரிப்பீர்கள்.

மனுமகன் பொருட்டு மனிதர் உங்களை வெறுத்துப் புறம்பாக்கி வசை கூறி, உங்கள் பெயரே ஆகாது என்று இகழ்ந்து ஒதுக்கும்பொழுது நீங்கள் பேறுபெற்றவர்கள். அந்நாளில் துள்ளி அகமகிழுங்கள். ஏனெனில், இதோ! வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய முன்னோரும் இறைவாக்கினருக்கு அவ்வாறே செய்தனர்.

ஆனால் பணக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், உங்களுக்கு ஆறுதல் கிடைத்துவிட்டது. இப்பொழுது திருப்தியாயிருப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், பசியாயிருப்பீர்கள். இப்பொழுது சிரிப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், துயருற்று அழுவீர்கள். மனிதர் எல்லாரும் உங்களைப் புகழும்பொழுது உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், அவர்களுடைய முன்னோரும் போலித் தீர்க்கதரிசிகளுக்கு அவ்வாறே செய்தனர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*காயின் தன் தம்பி ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்று விட்டான்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *4 : 1-15,25*

ஆதாம் தன் மனைவி ஏவாளோடு கூடி வாழ்ந்தான். அவள் கருத்தரித்துக் காயினைப் பெற்று, கடவுள் அருளால் ஓர் ஆண் மகனைப் பெற்றேன் என்றாள். பின் அவனுடைய தம்பியாகிய ஆபேலைப் பெற்றாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயினோ நிலத்தைப் பயிரிடுபவன் ஆனான்.

நீண்ட நாட்களுக்குப் பின் நிகழ்ந்ததாவது: காயின் தன் விளைச்சலின் பலனை ஆண்டவருக்குக் காணிக்கையாய்ச் செலுத்தினான். ஆபேலோ தன் மந்தையின் தலையீற்றுக்களில் மிகக் கொழுத்த ஆடுகளைக் காணிக்கையாய்க் கொடுத்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் ஏற்றுக்கொண்டார். காயினையோ அவன் காணிக்கைகளையோ அவர் கண்ணோக்கவில்லை. அதனால் காயின் மிக்க சினம் கொண்டான். அவன் முகம் வாடியது. அப்போது ஆண்டவர் அவனை நோக்கி: நீ ஏன் கோபமாய் இருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்? நீ நன்மை செய்தால் உனக்கு வெகுமதி கிடைக்கும்; தீமை செய்தால் உடனே பாவம் உன் வாயிலில் வந்து பதுங்கி நிற்குமன்றோ? அதன் ஆசை உன்மேல் இருக்கும்; நீயோ அதை அடக்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

ஒரு நாள் காயின் தன் தம்பி ஆபேலைப் பார்த்து: வெளியே போகலாம் வா என்றான். வயல்வெளியில் இருந்தபோது காயின் தன் தம்பி ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்று விட்டான்.

அப்பொழுது ஆண்டவர் காயினை நோக்கி: உன் தம்பி ஆபேல் எங்கே என்று வினவ, அவன்: நான் அறியேன்; என் தம்பிக்கு நான் என்ன காவலாளியா? என்றான். அதற்கு அவர்: உன் தம்பியின் இரத்தக் குரல் பூமியினின்று நம்மை நோக்கிக் கூக்குரலிடுகிறதே; நீ என்ன செய்தாய்? இதோ கேள்; பூமி தன் வாயைத் திறந்து, உன் கையால் சிந்திய உன் தம்பியின் இரத்தத்தை உட்கொண்டது. ஆகவே, இன்று முதல் நீ அந்தப் பூமியில் சபிக்கப்பட்டவனாய் இருப்பாய். அதனை நீ பயிரிட்டால் அது உனக்குப் பலன் தராது. பூமியில் நீ நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பாய் என்றார்.

அப்போது காயின் ஆண்டவரை நோக்கி, என் பாவம் மன்னிக்கப் படக் கூடுமானதன்று; அது அத்தனை பெரிது. இதோ, இந்நாட்டிலிருந்து என்னை இன்று துரத்திவிடுகிறீர். இனி நான் உம் கண்ணிற்கு மறைந்த வனாய்ப் பூமியில் நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பேன். அப்படி யானால் என்னைக் காணும் எவனும் என்னைக் கொல்வானே என்றான்.

ஆண்டவர்: அப்படி நடக்கவே நடக்காது; காயினைக் கொல்பவன் ஏழு மடங்கு பழியைச் சுமப்பான் என்று காயினுக்குச் சொல்லி, அவனைக் கண்டு பிடிப்பவன் எவனும் அவனைக் கொல்லாதபடிக்கு அவனுக்கு ஓர் அடையாளம் இட்டார்.

மீண்டும் ஆதாம் தன் மனைவியோடு கூடி வாழவே, அவள் ஒரு மகனைப் பெற்றாள்: காயின் கொலை புரிந்த ஆபேலுக்குப் பதிலாகக் கடவுள் எனக்கு வேறொரு மகனைத் தந்தருளினார், என்று சொல்லி, அவள் அவ னுக்குச் சேத் என்று பெயரிட்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49: 1 & 8, 16bc-17, 20-21 (பல்லவி: 14a)

பல்லவி: இறைபுகழ்ச்சி எனும் பலியை
ஆண்டவருக்குச் செலுத்து.

1 ஆண்டவராகிய இறைவன் பேசலானார்; கீழ்த்திசைமுதல் மேற்றிசை
வரையுள்ள பூவுலகைத் தீர்ப்புக்கு அழைக்கலானார்.
8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில், உன் தக
னப் பலிகள் எந்நேரமும் என் கண் முன்னே இருக்கின்றன. பல்லவி

16 "என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்? என் உடன்படிக்கையைப்
பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்
தவன் அன்றோ நீ? பல்லவி

20 கூட்டத்தில் உட்கார்ந்து நீ பேசுவதெல்லாம் உன் சகோதரனுக்கெதிராக!
உன் சொந்த சகோதரனை நிந்தைக்குள்ளாக்குகிறாய்!
21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப்
போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம்
எடுத்துச் சொல்கிறேன், பார்!" பல்லவி

## ௨ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுவதால், மனவுறுதி விளையும்:*
*இவ்வாறு நீங்கள் சீர்மை குன்றாமல் நிறைவுள்ளவர்களாய் இருப்பீர்கள்.*

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்தின் தொடக்கம். 1:1-11

உலகெங்கும் சிதறுண்டு வாழும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும், கடவுளுக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியனான யாகப்பன் வாழ்த்துக்கூறி எழுதுவது:

என் சகோதரரே, பலவகைச் சோதனைகளுக்கு நீங்கள் உள்ளாகும் போது, அவை எல்லாம் மகிழ்ச்சி என்றே எண்ணுங்கள். உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுவதால், மனவுறுதி விளையும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. அம் மனவுறுதியோ நிறைவான செயல்களில் விளங்குவதாக! இவ்வாறு நீங்கள் குறைபாடு எதுவுமின்றி, சீர்மை குன்றாமல் நிறைவுள்ளவர்களாய் இருப்பீர்கள்.

உங்களுள் எவனுக்காவது ஞானம் குறைவாயிருந்தால், அவன் கடவுளிடம் கேட்கட்டும்: அவனுக்குக் கொடுக்கப்படும். முகம் கோணாமல் தாராளமாக எல்லாருக்கும் கொடுப்பவர் அவர். ஆனால் விசுவாசத்தோடு கேட்கவேண்டும். தயக்கம் எதுவும் கூடாது. தயக்கம் காட்டுபவன் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலைக்கு ஒப்பாவான். இத்தகையவன் ஆண்டவரிடம் ஏதாவது பெறக்கூடும் என நினைத்துக்கொள்ளலாகாது. இவன் இரு மனம் உள்ளவன்: நிலையற்ற போக்கு உடையவன்.

தாழ் நிலையிலுள்ள சகோதரன், தன் உயர்வை எண்ணிப் பெருமை கொள்வானாக. செல்வம் உள்ளவனோ தாழ் நிலையுற்றதிலும் பெருமை கொள்வானாக. ஏனெனில், அவன் புல்வெளிப் பூக்களைப்போல் மறைந்து போவான்; கதிரோன் எழ, வெயில் ஏறி, புல்லைத் தீய்த்துவிடுகிறது. பூக்களோ உதிர்ந்துவிட, அழகிய காட்சி மறைந்துவிடுகிறது. அவ்வாறே செல்வமுள்ளவனும் தான் மேற்கொள்ளும் காரியங்களில் வாடிப் போவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 118: 67, 68, 71, 72, 75, 76 (பல்லவி : 77a)*

பல்லவி : **ஆண்டவரே, நான் வாழ்வு பெறும்படி உம் இரக்கப் பெருக்கம் எனக்கு உதவட்டும்.**

67 துன்பம் என்னைத் தாக்குமுன்பு நான் தவறிழைத்தேன்: ஆனால் இப்போது உமது வாக்கின்படி நடக்கிறேன். பல்லவி

68 நல்லவர் நீர், நன்மையே செய்பவர்: எனக்கு உம் நியமங்களைக் கற்பியும். பல்லவி

71 எனக்குத் துன்பம் விளைந்தது நன்மையே: அதனால் உம் நியமங்களை நான் கற்றுக்கொள்ள முடிந்தது. பல்லவி

72 நீர் திருவாய் மலர்ந்த சட்டம், ஆயிரம் பொன்னையும் வெள்ளியையும் விட மேலானது. பல்லவி

75 ஆண்டவரே, உம் தீர்ப்புகள் நீதியானவை என அறிவேன்: நீர் என்னைத் துன்பத்துக்குள்ளாக்கியது நீதியே: பல்லவி

76 எனக்கு ஆறுதலளிக்க உமது இரக்கம் எனக்குக் கிடைக்கட்டும்: உம் ஊழியனுக்கு வாக்குறுதி தந்தீர் அன்றோ. பல்லவி

அல்லேலூயா அரு. 14:6

அல்லேலூயா: ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும் உண்மையும் உயிரும் : என்வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்ட அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக இப்புத்தகத்தின் இறுதியில் உள்ளவற்றைப் பயன்படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

***இத்தலைமுறை அருங்குறி கேட்பானேன் ?***

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 11-13

*அக்காலத்தில்:*

பரிசேயர் வந்து யேசுவோடு தர்க்கிக்கத் தொடங்கி, வானிலிருந்து அருங்குறி ஒன்றைக் காட்டும்படி கேட்டு அவரைச் சோதித்தனர். அவர் பெருமூச்சுவிட்டு, "இத்தலைமுறை அருங்குறி கேட்பானேன்? உறுதி

யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: இத்தலைமுறைக்கு அருங்குறி எதுவும் அளிக்கப்படமாட்டாது'' என்றார்.

அவர்களை விட்டுவிட்டு மீண்டும் படகேறி அக்கரைக்குச் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

நாம் படைத்த மனித இனத்தைப் பூமியில்
இல்லாதபடி அழித்து விடுவோம்.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *6: 5-8; 7: 1-5, 10*

மண்ணுலகில் மனிதருடைய அக்கிரமம் பெருகினதையும், அவர்கள் எண்ணமெல்லாம் எப்போதும் தீமையையே நாடியிருந்ததையும் கண்டு, கடவுள், இவ்வுலகில் மனிதனைப் படைத்தது குறித்து வருந்தினார். அப்போது அவர் மனம் நொந்து: நாம் படைத்த மனித இனத்தைப் பூமியில் இல்லாதபடி அழித்து விடுவோம்; மனிதன்முதல் மிருகங்கள் வரையிலும், ஊர்வன முதல் வானத்துப் பறவைகள் வரையிலும், எல்லாவற்றையும் அழித்தொழிப்போம்; ஏனென்றால் அவற்றைப் படைத்ததை நினைத்து வருந்துகிறோம் என்றார். ஆனால் நோவா ஒருவர் மட்டும் ஆண்டவர் திருமுன் அருள் பெற்றவர் ஆனார்.

ஆண்டவர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பெட்டகத்தினுள் செல்லுங்கள். ஏனென்றால், இப்பொழுது இருக்கிற மனிதர்களுக்குள்ளே உன்னையே நமது முன்னிலையில் நீதிமானென்று கண்டோம். சுத்தமான எல்லா மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும், அசுத்தமான மிருகங்களிலோ ஆணும் பெண்ணுமாக இரண்டு சோடியும், வானத்துப் பறவைகளிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும் உன்னோடு சேர்த்துக்கொள். அதனால் பூமியெங்கும் உள்ளவற்றின் வித்து காக்கப்படும். ஏனென்றால், இன்னும் ஏழு நாட்களுக்குப்பின் நாற்பது பகலும் நாற்பது இரவுமாகப் பூமியின்மேல் நாம் மழை பொழியச் செய்து, படைக்கப்பட்ட உயிரினங்கள் எல்லாவற்றையும் பூமியின்கண் அழித்துவிடுவோம் என்றார்.

ஆகையால், ஆண்டவர் தனக்குக் கட்டளையிட்டபடி நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார். ஏழு நாட்களுக்குப் பின்னர் வெள்ளம் பூமியின்மீது பெருக்கெடுத்தோடியது.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 28: 1a & 2, 3ac-4, 3b & 9b-10 (பல்லவி : 11b)

பல்லவி : **ஆண்டவர் அமைதியளித்துத் தம் மக்களை ஆசீர்வதிப்பார்.**

1 **வானோர்களே, ஆண்டவரை வாழ்த்துங்கள்,**
2 **ஆண்டவர் பெயருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள் :**
**அவருடைய திருமன்றத்தில் அவரை வழிபடுங்கள்.** பல்லவி

3 **நீர்த்திரள்களின் மீது ஆண்டவரின் குரல் ஒலிக்கின்றது. நீர்ப்பரப்பின்**
**மீது ஆண்டவர் விளங்குகின்றார்.**
4 **ஆண்டவரது குரல் வலிமை வாய்ந்தது, அவரது குரல் மாட்சிமை**
**மிக்கது.** பல்லவி

3 **மகத்துவமிக்க ஆண்டவர் பேரிடி முழங்குகின்றார்.**
9 **அவரது ஆலயத்தில் அனைவரும் 'போற்றி', 'போற்றி' என்று ஆர்ப்பரிக்**
**கின்றனர்.**
10 **வெள்ளப் பெருக்கின்மீது விளங்குகின்றார், ஆண்டவர் : என்றென்றும்**
**அரசரென வீற்றிருப்பார் ஆண்டவர்.** பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் எவரையும் சோதிப்பதில்லை.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம்: 1: 12-18

அன்பு மிக்கவர்களே:

**சோதனைகளை மனவுறுதியோடு தாங்குபவன் பேறுபெற்றவன். இதனால் அவனது தகைமை எண்பிக்கப்படும்; இறைவன் தம்மீது அன்பு செலுத்துவோர்க்கு வாக்களித்த வாழ்வை அவன் வெற்றி வாகையாகப் பெறுவான்.**

சோதனைக்குள்ளாகும் எவனும் 'இச்சோதனை கடவுளிடமிருந்தே வருகிறது' எனச் சொல்லக்கூடாது. ஏனெனில், கடவுள் தீமைபுரியச் சோதிக்கப்படுபவர் அல்லர்; ஒருவரையும் அவர் சோதிப்பதுமில்லை. ஒருவன் சோதனைக்குட்படுவது, தன் சொந்த இச்சையாலேதான். அதுவே அவனைக் கவர்ந்து தன்வயப்படுத்துகிறது. இச்சையோ, கருவுற்றுப் பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை ஈன்றெடுக்கிறது.

என் அன்புச் சகோதரர்களே, ஏமாந்துபோகவேண்டாம். நன்மையான எக்கொடையும், நிறைவான எவ்வரமும், விண்ணினின்றே வருகின்றன. ஒளியெல்லாம் படைத்த தந்தையே அவற்றிற்குப் பிறப்பிடம். அவரிடம் எவ்வகை மாற்றமும் இல்லை; மாறி மாறி நிழல்விழச் செய்யும் ஒளியன்று அவர். தம் படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு உண்மையை அறிவிக்கும் வாக்கினால் நம்மை ஈன்றெடுத்தார். தாமே விரும்பியபடி இங்ஙனம் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 93: 12-13a. 14-15. 18-19 (பல்லவி: 12a)

பல்லவி: ஆண்டவரே, உம்மால் அறிவு புகட்டப் பெறுபவன் பேறு பெற்றவன்.

12 ஆண்டவரே உம்மால் அறிவு புகட்டப்பெறுபவன் பேறுபெற்றவன்:
உமது சட்டத்தைக் கொண்டு நீர்யாருக்குக் கற்பிக்கின்றீரோ அவன் பேறுபெற்றவன்.
13 அப்போது அவன் துன்பநாளிலும் உம்மிடமிருந்து இளைப்பாற்றி அடைவான்.

பல்லவி

14 ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை : தம் உரிமைப் பொருளானவர்களைக் கைவிடுவதில்லை.
15 நீதிமான்கள் நீதித் தீர்ப்பையே பெறுவர் : நேரிய மனத்தோர் யாவரும் அதையே பின்பற்றுவர்.

பல்லவி

18 "இதோ என் நடை தள்ளாடுகிறது" என்று நான் நினைக்கையில் : ஆண்டவரே, உம் அருள் என்னைத் தாங்குகிறது.
19 என் இதயத்தில் கவலைகள் மிகும் வேளையில், உமது ஆறுதல் என் ஆன்மாவை இன்பத்தில் ஆழ்த்துகிறது.

பல்லவி

அல்லேலூயா அரு. 14:23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான்: என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்; நாங்களும் அவனிடம் வருவோம். அல்லேலூயா!

## நற்செய்தி வாசகம்

**பரிசேயருடைய புளிப்பு மாவையும், ஏரோதுடைய புளிப்பு மாவையும் குறித்து விழிப்பாயிருங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *8: 14-21*

*அக்காலத்தில்:*

சீடர்கள் அப்பம் கொண்டுவர மறந்துவிட்டார்கள். படகில் ஒரே ஓர் அப்பந்தான் இருந்தது. "பரிசேயருடைய புளிப்பு மாவையும், ஏரோதுடைய புளிப்பு மாவையும் குறித்து விழிப்பாயிருங்கள், எச்சரிக்கை" என்று இயேசு அறிவுரை கூறினார்.

"நம்மிடம் அப்பம் இல்லையே" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். இதையறிந்த இயேசு அவர்களை நோக்கி, "உங்களிடம் அப்பம் இல்லை என்று பேசிக் கொள்வானேன்? இன்னுமா உணரவில்லை? இன்னுமா விளங்கவில்லை? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் காண்பதில்லையா? காதிருந்தும் கேட்பதில்லையா? உங்களுக்கு நினைவில்லையா? ஐயாயிரம் பேருக்கு ஐந்து அப்பத்தை நான் பகிர்ந்தபோது, மீதித் துண்டுகளை எத்தனைக் கூடை நிறைய எடுத்தீர்கள்?" என்று கேட்க, "பன்னிரண்டு" என்றனர்.

"ஏழு அப்பத்தை நாலாயிரம் பேருக்கு நான் பகிர்ந்தபோது மீதித் துண்டுகளை எத்தனைக் கூடை நிறைய எடுத்தீர்கள்?" என, "ஏழு" என்றனர். அவர் அவர்களை நோக்கி, "இன்னும் உங்களுக்கு விளங்கவில்லையா?" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

பூமியின் மேல் தண்ணீர் இல்லை என்று கண்டார்.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 8: 6-13, 20-22

நாற்பது நாட்களுக்குப்பின் நோவா பெட்டகத்தின் சன்னலைத் திறந்து ஒரு காக்கையை வெளியே விட்டார். அது புறப்பட்டுப் போய்ப் பூமியில் வெள்ளம் வற்றுமட்டும் இங்குமங்குமாகச் சுற்றித் திரும்பவே யில்லை. மறுபடியும், பூமியின்மீது வெள்ளம் வற்றிவிட்டதா என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, (நோவா) ஒரு புறுவை வெளியே விட்டார். பூமியின்மீது எங்கும் வெள்ளம் பரந்து கிடந்தமையால், கால் வைத்து இளைப்பாறவும் இடம் காணமல் அது திரும்பவும் அவரை நாடிப் பெட்டகத்திற்கு வந்தது. அவர் கை நீட்டி அதைப் பிடித்துப் பெட்ட கத்தினுள் சேர்த்தார். அவர் மேலும் ஏழு நாட்கள் பொறுத்து மீண்டும் புறுவைப் பெட்டகத்திலிருந்து வெளியே விட்டார். அது மாலை நேரத்தில் பசும் இலைகளையுடைய ஒலிவ மரத்தின் கிளையொன்றை அலகில் கவ்விக் கொண்டு தன் அண்டையில் வந்ததனுல், பூமியின்மீது வெள்ளம் அற்றுப் போயிற்றென்று நோவா தெரிந்துகொண்டார். மேலும் அவர் வேறு ஏழு நாட்கள் பொறுத்திருந்து புறுவை விட, அது அவரிடம் திரும்பி வரவே யில்லை.

இவ்வாறு அறுநூற்றோராம் ஆண்டின் முதல் மாதம், முதல் நாளன்று பூமியின்மீது வெள்ளம் வற்றிப் போயிற்று. அப்பொழுது நோவா பெட்டகத்தின் மேல்தட்டைப் பிரித்து (வெளியே) பார்த்துப் பூமியின்மேல் தண்ணீர் இல்லையென்று கண்டார்.

பின் நோவா ஒரு பீடத்தைக் கட்டி, மிருகங்களிலும் சுத்தமான பறவைகளிலும் பலவற்றை எடுத்து அதன்மேல் தகனப் பலியாக ஒப்புக் கொடுத்தார். ஆண்டவர் அவற்றை நறுமணமுள்ள பரிமளமாக ஏற்றுக் கொண்டு: நாம் இனி மனிதன் பொருட்டுப் பூமியை ஒருபோதும் சபிக்க மாட்டோம். ஏனென்றால், மனிதனுடைய இதய சிந்தனைகள் இளமை முதல் தீமையின் மீதே நாட்டம் கொண்டுள்ளன. ஆதலால், இப்பொழுது செய்ததுபோல் இனி நாம் உயிரினங்கள் யாவையும் மறுமுறை அழிக்க மாட்டோம். பூமி இருக்குமட்டும் விதைப்பும் அறுப்பும், குளிரும் வெப்ப மும், கோடைக் காலமும் குளிர் காலமும், இரவும் பகலும் ஒழிவதில்லை என்று திருவுளம் பற்றினுர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 115: 3-4, 5-6, 9-10 (பல்லவி : 8a)

பல்லவி : **ஆண்டவரே, புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்.**

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன
கைம்மாறு செய்வேன்?
4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவருடைய
திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

5 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்.
6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக
மதிப்புக்குரியது. பல்லவி

9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்.
10 ஆண்டவருடைய ஆலயத்தின் முற்றங்களிலும், யெருசலேமே, உன்
நடுவிலும் ஆண்டவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இறைவார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள்;**
**அதைக் கேட்பதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 19-27

என் அன்புச் சகோதரர்களே, இவை உங்களுக்குத் தெரியும். இனி இறை வார்த்தையைக் கேட்பதற்கு விரைதல் வேண்டும்; பேசுவதற்கோ, தாமதித்தல் வேண்டும்; சினங்கொள்வதற்கும் தாமதித்தல் வேண்டும். ஏனெனில், சினங்கொள்வதால் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் விளைவதில்லை. ஆகவே, பெருக்கெடுக்கும் தீமையையும் மாசு அனைத்தையும் அகற்றி, உங்கள் உள்ளத்திலே ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்கவல்லது.

இறை வார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள். அதைக் கேட்பதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள். அப்படிச் செய்வது உங்களையே ஏமாற்றிக்கொள்வதாகும். ஏனெனில் கேட்பதோடு மட்டும் நின்று அதன்படி நடவாதவன், தன் முகச்சாயலைக் கண்ணாடியில் பார்த்துவிட்டுப் போனதும், அச்சாயல் எப்படியிருந்ததென்பதை உடனே மறந்துவிடும் ஒருவனுக்கு ஒப்பாவான். ஆனால் நிறைவான திருச்சட்டத்தை, விடுதலையாக்கும் அச்சட்டத்தைக் கூர்ந்து நோக்கி அதிலே நிலைப்பவன் அதைக் கேட்பதோடுமட்டும் நின்றுவிடுவதில்லை; கேட்பதை மறந்துவிடுவதுமில்லை; அதன்படி நடக்கிறான். அதன்படி நடப்பதால் அவன் பேறு பெற்றவன்.

இறைவனின் தொண்டனாகத் தன்னைக் கருதும் ஒருவன் நாவடக்கமற்றவனாயிருப்பின், அவனது தொண்டு வீணானதே. இத்தகையவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான். தந்தையாகிய கடவுள் முன்னிலையில் புனிதமும் மாசற்றதுமான தொண்டு எதுவெனில், வேதனையுறும் அனாதைகள், கைம்பெண்கள் இவர்களை ஆதரிப்பதும், உலகத்தால் மாசுபடாமல் தன்னைக் காத்துக்கொள்வதுமே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 14 : 2-3ab, 3cd-4ab, 5 (பல்லவி : 1b)*

பல்லவி : **ஆண்டவரே உமது திருமலையில் குடியிருப்பவர் யார் ?**

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன், இதயத்தில் நேரியவை நினைப்பவன். நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன்.
பல்லவி

3 அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன் :
4 தீயோரை இழிவாகக் கருதுபவன், ஆண்டவருக்கு அஞ்சுவோரை உயர்வாக மதிப்பவன் :
பல்லவி

5 தனக்குத் துன்பம் வந்தாலும் தந்த வாக்குறுதியை மீறாதவன், தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன்: மாசற்றவர்களுக்கு எதிராகக் கைக்கூலி வாங்காதவன், இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்திடுவான்.
பல்லவி

அல்லேலூயா எபேசி 1 : 17-18 காண்

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால், எத்தகைய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென்று நாம் அறிந்துகொள்ளும்படி, நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக்கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவன் பார்வைபெற்றுக் குணமடைந்து,
அனைத்தையும் தெளிவாகக் காணலானான்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 22-26

அக்காலத்தில் :

யேசுவும் சீடர்களும் பெத்சாய்தாவுக்கு வந்தனர். குருடன் ஒருவனை மக்கள் அவரிடம் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி வேண்டினர். அவர் குருடனுடைய கையைப்பிடித்து, அவனை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றார். அவன் விழிகளில் உமிழ்ந்து, கைகளை அவன்மேல் வைத்து, "ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டார். அவன் பார்வை பெறத் தொடங்கி, "மக்களைப் பார்க்கிறேன், மரங்கள் போலிருக்கின்றனர், ஆனால் நடக்கின்றனர்." என்றான்.

பின்பு அவர் தம் கைகளை அவன் கண்களில் மீண்டும் வைக்கவே, அவன் பார்வைபெற்றுக் குணமடைந்து, அனைத்தையும் தெளிவாகக் காணலானான். அவர் அவனை வீட்டிற்கனுப்பி, "ஊருக்குள் நுழையவும் வேண்டாம்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நமது வில்லை மேகங்களிலே வைப்போம்: அதுவே நமக்கும் உலகத்துக்குமிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** 9: 1-13

கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். பூமியின் எல்லா உயிரினங்களும், வானத்துப் பறவைகள் அனைத்தும் பூமியின் மீது நடமாடுகிற மற்றுமுள்ள யாவும் உங்கள் முன்னிலையில் அஞ்சி நடுங்குவனவாக. (அன்றியும்) கடலிலுள்ள எல்லா மீன்களும் உங்களுக்குக் கையளிக்கப் பட்டிருக்கின்றன. உயிரும் அசைவும் கொண்டுள்ள யாவும் உங்களுக்கு உணவாய் இருப்பனவாக. பசும் புற்பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல் அவையெல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தோம்.

ஆயினும், இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணாதிருப்பீர்களாக. ஏனென்றால், உங்கள் உயிரின் இரத்தத்துக்காக எல்லா உயிரினங்களிடத்தும் மனிதனிடத்தும் பழிவாங்குவோம். மனிதனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடம் பழிவாங்குவோம். மனித இரத்தத்தைச் சிந்துபவன் இரத்தமும் சிந்தப்படும். ஏனென்றால், மனிதன் தெய்வச் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான். நீங்களோ பலுகிப் பெருகிப் பூமியில் பரவி அதனை நிரப்புங்கள் (என்றருளினார்).

மேலும் கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் நோக்கி: இதோ, நாம் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியாரோடும், பெட்டகத்திலிருந்து வெளியேறி உங்கள் அண்டையிலிருக்கிற பறவைகள், வீட்டு மிருகங்கள், மற்றும் பூமியிலுள்ள காட்டு விலங்குகள் முதலிய எல்லா உயிரினங்களோடும் நமது உடன்படிக்கையை நிறுவுவோம். உங்களோடு நாம் உடன்படிக்கை செய்வோம். ஆதலால், இனி மாமிசமெல்லாம் வெள்ளப் பெருக்குகளால் ஒருபோதும் அழிக்கப்படா. உண்மையில், பூமியைப் பாழாக்க இனி வெள்ளப் பெருக்கு வராது என்றருளினார்.

மேலும் கடவுள்: நமக்கும் உங்களுக்கும், உங்களுடனிருக்கும் எல்லா உயிரினங்களுக்குமிடையே நித்திய தலைமுறைகளுக்கென்று நாம் செய்துகொள்ளும் உடன்படிக்கையின் அடையாளமாவது நமது வில்லை மேகங்களிலே வைப்போம். அதுவே நமக்கும் உலகத்துக்குமிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும், என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 101 : 15-17, 18-20, 27 & 21-22 (பல்லவி : 20b)

பல்லவி: **ஆண்டவர் வானினின்று வையகத்தை நோக்கினார்.**

15 ஆண்டவரே புற இனத்தார் உமது பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர் :
மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமைகண்டு மருள்வர்.
16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது, தம் மாட்சிமையில் அவர்
விளங்கும்போது
17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார்: அவர்
களுடைய வேண்டுதலைப் புறக்கணியார்.

பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும் : உருவாகி வரும்
மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.
19-20 சிறைப்பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும், சாவுக்கென குறிக்கப்
பட்டவர்களை விடுவிக்கவும், உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று
ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார் : வானினின்று வையகத்தை
நோக்கினார்.

பல்லவி

27 உம் ஊழியரின் மக்கள் அச்சமின்றி வாழ்வார்கள் : அவர்கள் மக்கள்
உம்முன்னே நிலைத்திடுவர்.
21 இவ்வாறு ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படி மக்களினங்கள், அரசுகள்
அனைத்தும் ஒன்றாய்க் கூடும்போது,
22 ஆண்டவருடைய திருப்பெயர் சீயோனில் போற்றப்படும் : அவருடைய
புகழ் யெருசலேமிலும் சாற்றப்படும்.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் ஏழைகளைத் தேர்ந்துகொள்ளவில்லையா?**
**நீங்களோ ஏழைகளை அவமதிக்கிறீர்கள்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர்
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

2 : 1-9

என் சகோதரர்களே, மாட்சிமை மிக்க நம் ஆண்டவராகிய யேசு கிறீஸ்துவில் விசுவாசமுள்ள நீங்கள் மக்களின் தோற்றத்தைப் பார்த்து அவர்களை நடத்தாதீர்கள். நீங்கள் கூடியுள்ள இடத்தில், பொன் மோதிர மணிந்து பகட்டான உடை உடுத்திய ஒருவன் வருகிறான் என்று வைத்

துக்கொள்வோம். அழுக்குக் கந்தையோடு ஏழை ஒருவனும் அங்கே வருகிறான். பகட்டாக உடுத்தியவனைப் பார்த்து, "ஐயா, தயவுசெய்து இங்கே அமருங்கள்" என்று கவனித்துக் கொள்கிறீர்கள். ஏழையிடமோ, "அடே, அங்கே நில்" என்கிறீர்கள், அல்லது "தரையில் உட்கார்" என்கிறீர்கள். இப்படி உங்களுக்குள்ளே வேறுபாடு காட்டி, தவறான முறையில் தீர்ப்பிடுகிறீர்கள் அல்லவா?

என் அன்புச் சகோதரர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்: உலகினர் கண்ணுக்கு ஏழையாய் உள்ளவர்களைக் கடவுள் விசுவாசத்தில் செல்வமுடையவர்களாக்கவும், தம்மீது அன்பு செலுத்தபவர்களுக்கு வாக்களித்த அரசில் உரிமை தரவும் தேர்ந்துகொள்ளவில்லையா? நீங்களோ, ஏழைகளை அவமதிக்கிறீர்கள். உங்களைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் யார்? உங்களை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்பவர்கள் யார்? பணக்காரர்கள் அல்லரா? யாருக்கு நீங்கள் உரியவர்களாய் இருக்கிறீர்களோ அவருடைய திருப் பெயரைப் பழித்துரைப்பவர்கள் அவர்கள் அல்லரோ?

"உன்மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக" என்று மறைநூல் கூறும் இறையரசின் திருச்சட்டத்தை நீங்கள் கடைப்பிடிப்பீர்களாகில் நன்று. ஆனால் நீங்கள் ஒருவனின் தோற்றத்தைப் பார்த்து அவனை நடத்தினால், நீங்கள் செய்வது பாவம். திருச் சட்டத்தை மீறுகிறவர்களென அச் சட்டமே உங்களைக் கண்டனம் செய்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 3-4, 5-6. (பல்லவி: 6a)

பல்லவி: இதோ திக்கற்றவன் கூவியழைக்க
ஆண்டவர் அவன் குரலைக் கேட்கிறார்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன். அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்: சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக.
பல்லவி

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்: எல்லோரும் சேர்ந்து அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்; அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார்: எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார்.
பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்: வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.

6 இதோ திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்: எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

அல்லேலூயா அரு. 6:63 b. 68 b.

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்: முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

மெசியா நீரே ,.. மனுமகன் பாடுகள் பல படவேண்டும்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 27-33

அக்காலத்தில்:

யேசு தம் சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போனார். வழியில் தம் சீடரை நோக்கி, "மக்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்?" எனக் கேட்டார்.

அதற்கு அவர்கள், "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் இறைவாக்கினர்களுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர். பின் அவர், "நீங்களோ என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா" என்றார். தம்மைப்பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

மேலும் மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும், தலைமைக் குருக்களாலும், மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டுக் கொலையுண்டு, மூன்று நாளுக்குப் பின் உயிர்த்தெழவும் வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இதெல்லாம் வெளிப்படையாகச் சொன்னார்.

இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து அவரைக் கடிந்துகொண்டார். அவர் தம் சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து, "போ பின்னாலே, சாத்தானே, ஏனெனில் உன் கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல, மனிதனுடைய கருத்துக்களே" என்று இராயப்பரைக் கடிந்து கொண்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

நாம் இறங்கிப் போய் அவர்கள் மொழியைக் குழப்பிவிடுவோம்.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் : *11: 1-9*

உலகத்தில் ஒரே மொழியும் ஒரே விதமான பேச்சும் வழங்கி வந்தன. மக்கள் கீழ்த்திசையிலிருந்து புறப்பட்டபோது, சென்னார் நாட்டில் சமவெளியைக் கண்டு அங்கே குடியேறினர். அப்பொழுது அவர்கள் ஒருவரோடொருவர் : வாருங்கள், செங்கல் அறுத்துச் சூளையி லிட்டுச் சுடுவோம் என்று பேசிக்கொண்டு, கருங்கல்லுக்குப் பதிலாகச் செங்கற்களையும், சாந்துக்குப் பதிலாகத் தாரையும் பயன்படுத்தினர்.

மேலும் அவர்கள் : வாருங்கள், நாம் நாடுகள் தோறும் சிதறிப் போகுமுன்னே ஒரு நகரையும், விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோமாக என்று சொன்னார்கள்.

ஆனால், ஆதாமின் புதல்வர் கட்டிவந்த நகரையும் கோபுரத் தையும் பார்க்க ஆண்டவர் இறங்கி வந்தார். அப்பொழுது அவர் : இதோ, மக்கள் ஒரே இனமாயிருந்து ஒரே மொழி பேசி வருகிறதனாலன்றோ இதைச் செய்யத் தொடங்கினார்கள் : தாங்கள் செய்ய நினைத்ததை அவர்கள் விடாமல் எப்படியும் செய்து முடிப்பார்கள். சரி நாம் இறங்கிப் போய், அவர்களுள் ஒருவர் பேசுவதை மற்றவர் அறியாவண்ணம் அவர் களது மொழியைக் குழப்பி விடுவோம் என்றார்.

அவ்வாறு ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து உலகமெங்கும் சிதறிப் போகச் செய்தமையால், அவர்கள் அந்நகரைக் கட்டுவதை விட்டு விட்டனர். பூமியெங்கும் வழங்கும் மொழிக்குழப்பம் அவ்விடத்தில் பிறந்தமையால் அதன் பெயர் பாபேல் எனப்பட்டது. ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து நாடுகள் தோறும் சிதறிப்போகச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 32:10-11, 12-13, 14-15. (பல்லவி: 12b)

பல்லவி: தமது உரிமைப் பொருளாக ஆண்டவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

10 மக்கள் இனங்களின் திட்டங்களை ஆண்டவர் சிதறடிக்கிறார்:
மக்களின் எண்ணங்களைப் பயனற்றவை ஆக்குகிறார்.
11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்:
அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
பல்லவி

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது:
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறு
பெற்றவர்கள்.
13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார்:
ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார். பல்லவி

14 பூவில் வாழ்வோர் அனைவரையும், அவர் தம் உறைவிடத்தினின்று
நோக்குகிறார்.
15 அனைவருடைய நெஞ்சங்களையும் உருவாக்கின அவர்,
அவர்கள் செய்வதையெல்லாம் கவனிக்கிறார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

ஆன்மாவை இழந்த உடல் எப்படி உயிரற்றதோ,
அப்படியே செயலற்ற விசுவாசமும் உயிரற்றது.

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 14-24, 26.

என் சகோதரர்களே, தன்னிடம் விசுவாசம் உண்டு எனச் சொல்லுகிறவன், செயலில் அதைக் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த விசுவாசம் அவனை மீட்க முடியுமா?

போதிய உடையோ அன்றாட உணவோ இல்லாத சகோதர சகோதரி யாரேனும் இருந்தால், தேவையானது ஒன்றையும் கொடாமல், ஒருவன் அவர்களைப் பார்த்து, "சுகமாகப் போய் வாருங்கள்; குளிர்

காய்ந்துகொள்ளுங்கள்; பசியாற்றிக்கொள்ளுங்கள்" என்பானுகில் பயன் என்ன? விசுவாசமும் இதைப்போலவே செயலோடு கூடியதாய் இரா விட்டால், அது தன்னிலே உயிரற்றதாகும்.

ஆனால் "ஒருவனிடம் விசுவாசம் உள்ளது, இன்னெருவனிடம் செயல் உள்ளது; அதனுல் என்ன?" என்று யாராவது சொல்லக்கூடும். செயல்கள் இல்லாத அந்த விசுவாசத்தை எனக்குக் காட்டு. நான் செயல்களைக் கொண்டு என் விசுவாசத்தை உனக்குக் காட்டுகிறேன். கடவுள் ஒருவரே என்று நீ விசுவசிக்கிறுய், நல்லதுதான். பேய்கள்கூட அதை விசுவசிக் கின்றன: விசுவசித்து நடுங்குகின்றன. அறிவிலேயே, செயலற்ற விசுவாசம் பயனற்றதென நீ அறிய வேண்டுமா? நம் தந்தை யாகிய ஆபிரகாமைப்பார். தம் மகன் ஈசாக்கைப் பீடத்தின்மேல் பலி கொடுத்தபோது, செயல்களால் அன்றோ இறைவனுக்கு ஏற்புடைய வராஞர்? விசுவாசமும் செயல்களும் ஒருங்கே செயலாற்றின என்பதும், செயல்களால் விசுவாசம் நிறைவு பெற்றது என்பதும் இதிலிருந்து புலப் படுகிறதன்றோ? இவ்வாறு "ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார்; அதனுல் கடவுள் அவரைத் தமக்கு ஏற்புடையவர் என மதித்தார்" என்ற மறை நூல் வாக்கு நிறைவேறியது. மேலும் அவர் கடவுளின் நண்பன் எனவும் அழைக்கப் பெற்ருர்.

ஆகவே, மனிதன் விசுவாசத்தினுல் மட்டுமன்று, செயல்களாலும் இறைவனுக்கு ஏற்புடையவனுகிருன் என்று தெரிகிறது. ஆன்மாவை இழந்த உடல் எப்படி உயிரற்றதோ, அப்படியே செயலற்ற விசுவாசமும் உயிரற்றதே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 111: 1-2, 3-4, 5-6.* (பல்லவி : *1* காண்)

பல்லவி : ஆண்டவரின் கட்டளைகளை நினைத்து இன்பம் கொள்வோன் பேறுபெற்றேன்.

அல்லது: அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்ருேன்:
அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும்:
நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசி பெறும். பல்லவி

3 செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உலவும்:
அவனுடைய ஈகை என்றென்றும் நிலைக்கும்.
4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்:
கருணை, இரக்கம், நீதி உள்ளவனுய் இருப்பான். பல்லவி

5 மனமிரங்கி கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்:
தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
6 எந்நாளும் அவன் அசைவுறான்: என்றென்றும் அவன்
மக்கள் நினைவில் வாழ்வான். பல்லவி

அல்லேலூயா அரு. 15 : 15 b

**அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நான் உங்களை நண்பர்கள் என்றேன்; ஏனெனில், தந்தையிடமிருந்து நான் கேட்டதை எல்லாம் உங்களுக்கு அறிவித்தேன். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**என் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவன் அதைக் காத்துக்கொள்வான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *8: 34-9:1*

*அக்காலத்தில் :*

யேசு தம் சீடரையும் கூட்டத்தையும் அழைத்து, "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக் கொள்வான்.

ஒருவன் தன் ஆன்மாவிற்குக் கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிச்கொள்வதனால் அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்கமுடியும்? விபசாரமும் பாவமும் உள்ள இத்தலைமுறையில் என்னைப்பற்றியும், என் வார்த்தைகளைப் பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனோ, அவனைப்பற்றி மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் பரிசுத்த வானதூதரோடு வரும்போது வெட்கப்படுவார்" என்றார்.

மேலும் அவர்களை நோக்கி, "உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசு வல்லமையோடு வந்திருப்பதைக் காணும்வரை இங்கிருப்பவர்களுள் சிலர் சாவுக்குள்ளாக மாட்டார்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உலகங்கள் எல்லாம் கடவுளால் உருவாயின என்று விசுவாசத்தினால் உணர்கிறோம்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 11:1-7

சகோதரர்களே :

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவைபற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர். உலகங்களெல்லாம் கடவுளின் திருச்சொல்லால் உருவாயின என்றும், ஆகவே காணாதவற்றினின்று காண்பவை உண்டாயின என்றும் விசுவாசத்தினாலேயே உணர்கிறோம்.

விசுவாசத்தினால்தான் ஆபேல் காயினைவிட மேலான பலியைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தான்; விசுவாசத்தினாலேயே, அவன் நல்லவன் எனக் கடவுளிடமிருந்து சான்று பெற்றான்; ஏனெனில், அவனுடைய காணிக்கைகள் ஏற்றவையெனக் கடவுளே சான்று பகர்ந்தார். இறந்தும் அவ்விசுவாசத்தினால் இன்னும் பேசுகிறான்.

விசுவாசத்தினாலேயே ஏனோக் சாவைக் காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டார். கடவுள் அவரை மேலே எடுத்துக்கொண்டதால் மறைந்து போய்விட்டார். மேலே எடுத்துக்கொள்ளப்படுமுன்பே கடவுளுக்கு உகந்தவர் என்று நற்சான்று பெற்றவரானார். விசுவாசத்தினாலன்றி ஒருவனும் கடவுளுக்கு உகந்தவனாயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்கிறவன் அவர் இருக்கிறார் என்றும், தம்மைத் தேடுபவர்களுக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறாரென்றும் விசுவசிக்கவேண்டும்.

விசுவாசத்தினாலே, தம் கண்ணுக்கு மறைவாயிருந்ததைக் குறித்து நோவா இறைவனால் எச்சரிக்கப்பெற்றபோது, தம் குடும்பத்தைக் காப்பாற்றப் பயபக்தியோடு பேழையை அமைத்தார். அதே விசுவாசத்தினால் உலகைக் கண்டனம் செய்து, விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவராகும் பேற்றுக்கு உரிமையாளர் ஆனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 2-3, 4-5, 10-11 (பல்லவி : 1b காண்)

பல்லவி : ஆண்டவரே, உம் திருப்பெயரை என்றென்றும்
வாழ்த்துவேன்.

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன்.
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் :
அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

4 தலைமுறை தலைமுறையாக மனிதர் உம்முடைய செயல்களை
எடுத்துரைப்பர் : தலைமுறை தலைமுறையாக உமது வல்லமையை
வெளிப்படுத்துவார்கள்.
5 உம்முடைய மகத்துவத்தின் சொல்லரிய மாட்சிமையைப் பற்றிப்பேசுவர்.
உம் வியத்தகு செயல்களை எடுத்துரைப்பர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக.
உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நாவையோ எம்மனிதனாலும் அடக்க முடிவதில்லை.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 3: 1-10

என் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் போதகர்கள் ஆகிவிட விரும்ப வேண்டாம். போதகர்களாகிய நாங்கள் கண்டிப்பான தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பது தெரியுமன்றோ? ஏனெனில், நாம் அனைவரும் பலவற்றில் தவறுகிறோம்.

தவறான பேச்சுக்கு இடங்கொடாதவன் தன் முழு உடலையும் கட்டுப்படுத்த வல்லவன் ; அவனே நிறைவு பெற்றவன். குதிரைகளைப் பாருங்கள். அவற்றை அடக்க வாயில் கடிவாளம் போட்டு முழுக் குதிரையையே கட்டுப்படுத்திவிடுகிறோம். கப்பல்களைப் பாருங்கள். அவை எவ்வளவு பெரியவையாய் இருந்தாலும், புயல் காற்றில் அடிபட்டாலும், கப்பலோட்டி சிறியதொரு சுக்கானைக்கொண்டு தான் விரும்பும் திசையிலெல்லாம் அவற்றைச் செலுத்துகிறான்.

மனிதனின் நாவும் அவ்வாறே. அது உடலின் மிகச் சிறிய உறுப்பு தான். ஆயினும் பெரிய காரியங்களைச் சாதிப்பதாகப் பெருமையடிக் கிறது. சிறியதொரு நெருப்புப் பொறி எவ்வளவு பெரிய காட்டை எரித்துவிடுகிறது, பாருங்கள். நாவும் அந்த நெருப்பு போலத்தான். அக்கிரம உலகின் உருவே அது. நம் உடலின் உறுப்புக்களுள் அமைக் கப்பட்டு உடல் முழுவதையும் கறைப்படுத்தி, மனிதனின் வாழ்க்கைச் சக்கரத்தை எரிக்கும் நெருப்புப்போல் உள்ளது. அந்நெருப்போ நரகத்தி லிருந்தே வருகிறது.

காட்டில் வாழ்வன, பறப்பன, ஊர்வன, கடலில் நீந்துவன ஆகிய எல்லா உயிரினங்களையும் மனிதன் அடக்கிவிடலாம், அடக்கியும் உள்ளான். நாவையோ எம் மனிதனாலும் அடக்க முடிவதில்லை. ஓயாமற் தொல்லைப் படுத்தும் தீமை அது; சாவு விளைக்கும் நஞ்சு நிறைந்தது அது. பரம தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவதும் அந்நாவாலே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனைத் தூற்றுவதும் அந்நாவாலே. போற்றுவதும் தூற்றுவதும் ஒரே வாய்தான். என் சகோதரர்களே, இப்படி இருத்தலாகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 11 : 1-2, 3-4, 6-7 (பல்லவி : 7a)

பல்லவி : ஆண்டவரே, நீர் எங்களைக் காத்தருளும்.

1 ஆண்டவரே, காத்தருளும்; ஏனெனில், உலகில் நல்லவர்களே இல்லாமல் போனார்கள்; மக்களிடையே சொல்லுறுதி என்பது இல்லை.
2 ஒவ்வொருவனும் தன் அயலானிடம் பொய் பேசுகிறான் : வஞ்சக நாவால் இரண்டகம் பேசுகிறான். பல்லவி

3 வஞ்சக நாவையெல்லாம் ஆண்டவர் வேரோடு பிடுங்கி விடுவாராக; வீம்பு பேசுகிற நாவை அறுத்துவிடுவாராக.
4 'எங்கள் நாவன்மை எங்கள் வலிமை; எங்கள் பேச்சுத்திறனே எங்கள் பக்கத் துணை : எங்களுக்குப் பெரியவன் யார்?' என்று சொல்லுகிற வர்களை ஒழித்துவிடுவாராக. பல்லவி

6 ஆண்டவர்தம் சொற்கள் நேர்மையானவை : மண்ணிலிருந்து பிரித்து ஏழு முறை புடமிடப்பட்ட நல்ல வெள்ளி போன்றவை.
7 ஆண்டவரே, நீர் எங்களைக் காத்தருளும் : இந்தத் தலைமுறை மக்களி னின்று என்றும் எங்களைக் காப்பாற்றும். பல்லவி

அல்லேலூயா — மாற்கு 9 : 6 காண்

அல்லேலூயா. வானம் திறக்க, தந்தையின் குரல் ஒலித்தது : "இவரே என் அன்பார்ந்த மகன் : இவருக்குச் செவிசாயுங்கள்." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர்களுக்கு முன் அவர் உருமாறினார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 2-13

யேசு இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரையும் அழைத்து ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையில் ஒதுக்கமாய்க் கூட்டிக்கொண்டு போய் அவர்களுக்குமுன் உருமாறினார். அவர் ஆடைகள் வெள்ளைவெளேரென ஒளி வீசின. இவ்வுலகில் எந்தச் சலவைக்காரனும் அதுபோல வெளுக்க முடியாது. எலியாசும் மோயீசனும் அவர்களுக்குத் தோன்றி, யேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர்.

இராயப்பர் யேசுவை நோக்கி, "ராபி, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! உமக்கு ஒன்றும் மோயீசனுக்கு ஒன்றும் எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரம் அமைப்போம்" என்றார். தாம் சொல்வது இன்னதென அறியாமலே சொன்னார். ஏனெனில், அவர்கள் பேரச்சம் கொண்டிருந்தனர்.

அப்போது மேகம் ஒன்று வந்து அவர்கள்மேல் நிழலிட, "இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயுங்கள்" என்ற குரலொலி மேகத்திலிருந்து கேட்டது. அவர்கள் உடனே சுற்றிலும் பார்த்தபோது, தங்கள் அருகில் யேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.

மலையினின்று அவர்கள் இறங்கும்பொழுது, மனுமகன் இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போதன்றி, அவர்கள் கண்டவற்றை ஒருவருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அவ்வார்த்தையை மனத்தில் இருத்தி, "இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போது" என்பதன் பொருள் என்ன என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர்.

"முதலில் எலியாஸ் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர் கூறுவதேன்?" என அவர்கள் அவரைக் கேட்டனர். அவர், "எலியாஸ் முதலில் வந்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தத்தான் போகிறார். ஆனால் மனுமகன் பாடுகள் பல படவும், புறக்கணிக்கப்படவும் வேண்டுமென எழுதப்பட்டுள்ளதே, அது எப்படி? ஆகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாஸ் வந்தாயிற்று. அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளபடி அவர்கள் தாங்கள் விரும்பியதெல்லாம் அவருக்குச் செய்தார்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஏழாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்புசெய்.

லேவியர் ஆகமத்திலிருந்து வாசகம் *19 : 1-2, 17-18*

ஆண்டவர் மோயீசனை நோக்கிக் கூறியதாவது :

இஸ்ராயேல் மக்கள் எல்லாச் சபையாருக்கும் நீ சொல்ல வேண்டியதாவது : நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர், நாம் பரிசுத்தராய் இருப்பதால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.

உன் சகோதரனை உன் இதயத்தில் பகைக்காதே. ஆனால், அவனுடைய பாவத்திற்கு நீ உடந்தையாகாதபடிக்கு வெளிப்படையாய் அவனுக்கு அறிவுரை சொல். பழிக்குப் பழி வாங்கத் தேடாதே. உன் மக்கள் உனக்கு அநீதி செய்தாலும், மனத்தில் பொருமை கொள்ளாதே. உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்பு செய். நாம் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 8 & 10, 12-13 (பல்லவி: 8a)

பல்லவி : **ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.**

1 நெஞ்சே, நீ உன் ஆண்டவரை வாழ்த்துவாயாக.
என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக :
அவர் செய்த நன்மைகளை யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்,
உன் நோய்களை யெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார் ; அருளையும் இரக்கத்தையும்
உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர், சினங் கொள்ளத்
தாமதிப்பவர் ; சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை ;
நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து
அகற்றிவிடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல,
ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

எல்லாம் உங்களுக்கு உரியவையே; நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள்; கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 16-23

சகோதரர்களே :

நீங்கள் கடவுளின் ஆலயம் என்பதும், கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா? கடவுளின் ஆலயத்தை எவனாவது அழித்தால், அவனைக் கடவுள் அழித்து விடுவார். ஏனெனில், கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது. நீங்களே அவ்வாலயம்.

யாரும் தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். உங்களுள் எவனாவது இவ்வுலகப் போக்கின்படி தன்னை ஞானி எனக் கருதினால், ஞானியாகும்படி மடையனாகட்டும். ஏனெனில், இவ்வுலகத்தின் ஞானம் கடவுள் முன் மடைமைதானே. 'ஞானிகளை அவர்களுடைய சூழ்ச்சியிலேயே சிக்கவைக்கிறார்' என்றும், 'ஞானிகளின் எண்ணங்களை அறிவார், அவை வீண் என அவருக்குத் தெரியும்' என்றும் எழுதியுள்ளதன்றோ?

ஆகையால் வெறும் மனிதர்களைப் பற்றி யாரும் பெருமை பாராட்டலாகாது. சின்னப்பனோ, அப்பொல்லோவோ, கேபாவோ, உலகமோ, வாழ்வோ, சாவோ, நிகழ்காலமோ, எதிர்காலமோ எல்லாம் உங்களுக்கு உரியவையே. நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள்; கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

1 அரு. 2:5

**அல்லேலூயா.** கிறிஸ்துவின் வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால், அவனிடம் கடவுளன்பு உண்மையாகவே நிறைவாகியுள்ளது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:38-48
அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

" 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீயோனை எதிர்க்கவேண்டாம். ஆனால் யாராவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. யாராவது வழக்காடி, உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு. யாராவது உன்னை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால், இரு கல் தொலை அவனோடு செல். கேட்கிறவனுக்குக் கொடு; உன்னிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே.

'அயலானுக்கு அன்பு; பகைவனுக்கு வெறுப்பு' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர்மேலும், தீயோர்மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும், மழை பொழியச் செய்கிறார்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லையா? உங்கள் சகோதரருக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்? புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா? ஆதலால், உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நம்மை முன்னிட்டு உங்கள் அக்கிரமங்களை அழிப்போம்.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்**
*43 : 18-19, 21-22, 24b-25*

**ஆண்டவர் கூறுவதாவது :**

"கடந்து போனவற்றைச் சிந்திக்க வேண்டா, முற்காலத்து நிகழ்ச்சிகளைப்பற்றி எண்ண வேண்டா ; இதோ, நாம் புதியன செய்கிறோம், இப்பொழுது அவை தோன்றும், நீங்களும் காண்பீர்கள் ; பாழ்வெளியில் நாம் பாதையொன்று அமைப்போம். பாலைநிலத்தில் ஆறுகள் ஓடச் செய்வோம்.

நமது மகிமையைப் பரப்பும்படி நமக்கென்றே இந்த மக்களை உண்டாக்கினோம். யாக்கோபே, நம்மை நீ மன்றாடவில்லை, இஸ்ராயேலே, நம்மைப்போற்ற நீ சிரத்தை கொள்ளவில்லை. உங்கள் பாவங்களால் நம்மை வருத்தினீர்கள், உங்கள் அக்கிரமங்களால் நமக்கு வேதனை தந்தீர்கள்.

நாமே, நம்மை முன்னிட்டு நாம்தாமே உங்கள் அக்கிரமங்களை அழிப்போம், உங்கள் பாவங்களை மறுபடி நினைவுகூரவும் மாட்டோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 40: 1-2, 3-4, 12-13 (பல்லவி 4b)*

பல்லவி : **உமக்கெதிராய் பாவம் செய்தேன் :**
**ஆண்டவரே, என்னைக் குணப்படுத்தும்.**

1 ஏழை எளியவனைக் குறித்து கவலை உள்ளவன் பேறு பெற்றவன்,
துன்பநாளில் ஆண்டவர் அவனுக்கு மீட்பளிப்பார்.
2 ஆண்டவர் அவனைக் காத்துக்கொள்வார் : நீண்ட ஆயுளை அவனுக்கு
அளிப்பார். உலகில் அவனுக்கு நற்பெயர் அளிப்பார் ; பகைவரின் விருப்
பத்திற்கு அவனைக் கையளிக்க மாட்டார்.
பல்லவி

3 அவன் நோயுற்றுப் படுக்கையில் இருக்கையில் ஆண்டவர் அவனுக்குத் துணை செய்வார்.
4 'ஆண்டவரே, என்மீது இரக்கம்வையும்: என்னைக் குணப்படுத்தும், உமக்கெதிராய்ப் பாவம் செய்தேன்' என்று நான் வேண்டுகிறேன். பல்லவி

12 தீமை எனக்கெதுவும் நேராதபடி காத்துக்கொள்வீர்:
என்றென்றும் உம் முன்னிலையில் என்னை நிறுத்திவைப்பீர்.
13 இஸ்ராயேலின் இறைவனாகிய ஆண்டவர் வாழ்த்தப்பெறுவாராக:
என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக! ஆமென், ஆமென். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுவிடம் ஆம் என்பதும் இல்லை என்பதும் கலந்ததில்லை.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம்: *1:18-22*

சகோதரர்களே!

உங்களிடம் நான் பேசும்போது, ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்தில்லை; உண்மையாம் கடவுளே இதற்குச் சாட்சி. என் வழியாகவும், சில்வானு, தீமோத்தேயு வழியாகவும் உங்களிடையே அறிவிக்கப்பட்ட இறைவனாகிய யேசு கிறிஸ்துவிடம் ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்தில்லை. ஆம் என்பது ஒன்றே அவரிடம் இருந்து வருகிறது. ஏனெனில் கடவுளின் வாக்குறுதிகள் யாவற்றுக்கும் ஆம் என்பதே அவரிடம் இருந்தது. ஆகையால்தான் நாம் கடவுளுக்குப் புகழுரை கூறும்பொழுது, அவர் வழியாகவே 'ஆமென்' என்கிறோம்.

உங்களையும் எங்களையும் கிறிஸ்துவின் ஒன்றிப்பில் உறுதிப்படுத்தி, நம்மை அபிஷேகம் செய்தவர் கடவுளே. அவரே நம்மீது தம் முத்திரையிட்டு நம் உள்ளங்களில் இருக்கும்படி தேவ ஆவியை அச்சாரமாக அளித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *லூக். 4:18-19*

**அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரமுண்டு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். *2:1-12*

சில நாட்களுக்குப்பின் யேசு கப்பர்நகூம் ஊருக்கு மீண்டும் வந்தார். வீட்டில் அவர் இருக்கிறார் என்ற செய்தி பரவிற்று. பலர் வந்து கூடவே, வாசலுக்கு வெளியே முதலாய் இடமில்லை. அவர் அவர்களுக்குத் தேவ வார்த்தையை எடுத்துச் சொன்னார்.

அப்பொழுது திமிர்வாதக்காரன் ஒருவனை நால்வர் சுமந்துகொண்டு அவரிடம் வந்தனர். கூட்ட மிகுதியால் அவர்முன் அவனைக் கிடத்த முடியாமல் அவர் இருந்த வீட்டின் மேல்தட்டைப் பிரித்து, திறப்பு உண்டாக்கி, திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை இறக்கினர். யேசுவோ அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.

அங்கிருந்த மறைநூல் அறிஞருள் சிலர், "என்ன, இவர் இப்படிப் பேசுகிறார்? கடவுளைத் தூஷிக்கிறார். கடவுள் ஒருவரேயன்றிப் பாவத்தை மன்னிக்க வல்லவர் வேறு யார்?" என்று உள்ளத்தில் எண்ணினர்.

இவர்கள் தமக்குள் இவ்வாறு எண்ணுவதை யேசு உடனே மனத்தில் அறிந்து, அவர்களை நோக்கி, "உங்கள் உள்ளத்தில் இப்படி நினைப்பதேன்? எது எளிது? இந்தத் திமிர்வாதக்காரனை நோக்கி, 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்பதா? 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்பதா? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு" - திமிர்வாதக்காரனை நோக்கி - "நான் உனக்குச் சொல்லுகிறேன்: எழுந்து உன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போ" என்றார்.

என்றதும், அவன் எழுந்து தன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு எல்லாருக்கும் முன்பாக வெளியே சென்றான். இதனால் அனைவரும் திகைப்புற்று, "இதைப் போல் நாம் ஒருபோதும் கண்டதேயில்லை" என்று கடவுளை மகிமைப்படுத்தினர்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*ஆண்டவர் உம்மை இன்று என் கையில் ஒப்படைத்தார்;*
*நானோ உம்மீது கையைவைக்கத் துணியவில்லை.*

*சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்*
26 : 2, 7-9, 12-13, 22-23.

*அந்நாட்களில் :*

சவுல் எழுந்து ஜிப் பாலைவனத்துக்குப் புறப்பட்டார். இஸ்ராயேலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் மனிதர்கள் அவரோடு ஜிப் பாலைவனத்தில் தாவீதைத் தேடச் சென்றார்கள்.

அப்படியே தாவீதும் அபிசாயியும் இரவில் ஆட்கள் இருந்த இடத்திற்கு வந்து, சவுல் தம் கூடாரத்தில் படுத்துத் தூங்குகிறதையும், அவர் தலைமாட்டில் அவருடைய ஈட்டி தரையில் குத்தியிருக்கிறதையும், அப்நேரும் மற்ற ஆட்களும் அவரைச் சுற்றிலும் தூங்குகிறதையும் கண்டனர். அபிசாயி தாவீதைப் பார்த்து, "இன்று கடவுள் உம் எதிரியை உமது கையில் ஒப்படைத்தார். இப்பொழுது நான் அவனை ஈட்டியினால் இரண்டாம் முறை குத்தாமல், ஒரே குத்தாய் நிலத்தில் பாயக் குத்தப் போகிறேன்" என்றான். தாவீது அபிசாயியை நோக்கி, "அவரைக் கொல்லாதே, ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவரின் மேல் கை வைப்பவன் குற்றவாளி அன்றோ?" என்று சொன்னான்.

ஆகையால் தாவீது ஈட்டியையும், சவுல் தலைமாட்டிலிருந்த தண்ணீர்ப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு இருவரும் புறப்பட்டுப் போயினர். ஒருவரும் காணவுமில்லை, அறியவுமில்லை, விழிக்கவுமில்லை. ஆண்டவர் அவர்களுக்கு ஆழ்ந்த தூக்கத்தை அனுப்பியிருந்தபடியால் அவர்கள் எல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

தாவீது நடந்து சற்றுத் தொலைவிலிருந்த மலையுச்சியை அடைந்தான். இரு திறத்தாருக்கும் இடையே அதிக தூரம் இருந்தது. தாவீது மறுமொழியாக, "இதோ, அரசருடைய ஈட்டி இங்கே இருக்கிறது. அரசரின் ஊழியர்களில் ஒருவன் இவ்விடம் வந்து அதை எடுத்துக் கொண்டு போகட்டும். ஆனால், அவனவன் நீதிக்கும் பிரமாணிக்கத்திற்கும் தகுந்தபடி ஆண்டவர் ஒவ்வொருவனுக்கும் பலன் கொடுப்பார். ஆண்டவர் உம்மை இன்று என் கையில் ஒப்படைத்தார். நானோ ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவர் மேல் கை வைக்கத் துணியவில்லை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102: 1-2, 3-4, 8 & 10, 12-13 (பல்லவி: 8a)

பல்லவி: **அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக:
என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்
பெயரை வாழ்த்துவதாக:
2 நெஞ்சே நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக:
அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்,
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார், அருளையும்
இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்: சினங்
கொள்ளத் தாமதிப்பவர்: சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை:
நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து
அகற்றிவிடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்புகாட்டுவதுபோல, ஆண்டவர்
தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**மண்ணைச் சார்ந்தவன் சாயலைத் தாங்கியிருந்தது போல,
விண்ணைச் சார்ந்தவனின் சாயலையும் தாங்கியிருப்போம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 15: 45-49

சகோதரர்களே:

முதல் மனிதனாகிய ஆதாம் மனித உயிருள்ளவன் ஆனான். கடைசி ஆதாமோ உயிர் தரும் ஆவியானார்.

முதலில் உண்டானது தேவ ஆவிக்குரிய உயிர்கொண்டதன்று, மனித உயிர்கொண்டதுதான்; தேவ ஆவிக்குரியது பிந்தியதே. முதல்

மனிதன் மண்ணிலிருந்து வந்தான். அவன் மண்ணைச் சார்ந்தவன். இரண்டாம் மனிதனோ விண்ணிலிருந்து வந்தார். மண்ணைச் சார்ந்த அவன் எப்படியோ, அப்படியே மண்ணைச் சார்ந்த யாவரும் உள்ளனர்; விண்ணைச் சார்ந்த இவர் எப்படியோ, அப்படியே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர்.

ஆகவே, மண்ணைச் சார்ந்தவனின் சாயலைத் தாங்கியிருந்ததுபோல, விண்ணைச் சார்ந்தவரின் சாயலையும் தாங்கியிருப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா :* *அரு. 13:34*

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்: நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல், நீங்களும் ஒருவர்க்கொருவர் அன்பு செய்யுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். *6:27-38*

அக்காலத்தில் :

யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: "நான் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன்: உங்கள் பகைவர்க்கு அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். உங்களைத் தூற்றுவோருக்காகச் செபியுங்கள். ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு, மறு கன்னத்தையும் காட்டு. உன் மேலாடையைப் பறிப்பவனுக்கு, உள்ளாடையையும் மறுக்காதே. உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் தமக்கு அன்பு செய்பவர்களுக்கு அன்பு செய்கின்றனரே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் அவ்வாறு செய்கின்றனரே. எவரிடமிருந்து திரும்பிப்பெற எதிர்பார்க்

கிறீர்களோ, அவர்களுக்கே கடன் கொடுத்தால் உங்களுக்கு என்ன பலன்? ஏனெனில், சரிக்குச் சரி பெறுமாறு பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கின்றனரே.

உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். அவர்களுக்கு நன்மை புரியுங்கள். ஒன்றும் எதிர்பாராமல் கடன் கொடுங்கள். அப்போது உங்களுக்கு மிகுதியான கைம்மாறு கிடைக்கும். உன்னதரின் மக்களாயிருப்பீர்கள். ஏனெனில், அவர் நன்றிகெட்டவர்க்கும் தீயவர்க்கும் பரிவு காட்டுகிறார். உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள். கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெறமாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில், எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

எல்லாவற்றிற்குமுன் ஞானம் உண்டாக்கப்பட்டது.

சீராக் ஆகமத்தின் தொடக்கம்

1 : 1-10

எல்லா ஞானமும் ஆண்டவராகிய கடவுளிடமிருந்து உண்டாகி, அவருடன் என்றென்றைக்கும் நித்தியமாய் இருக்கின்றது.

கடல் மணல்களையும் மழைத்துளிகளையும், உலகத்தின் நாட்களையும் கணக்கிட்டவன் யார்? வானத்தின் உயரத்தையும் பூமியின் அகலத்தையும் பாதாளத்தின் ஆழத்தையும் அளந்தவன் யார்? எல்லாவற்றிற்கும் முன்னிருந்த கடவுளின் ஞானத்தைக் கண்டுபிடித்தவன் யார்?

எல்லாவற்றிற்கும் முன் ஞானம் உண்டாக்கப்பட்டது. காலத் துவக்கத்திலிருந்து விவேகமுள்ள அறிவு இருந்தது.

வான மண்டலங்களில் வீற்றிருக்கும் கடவுளின் வார்த்தையே ஞானத்தின் ஊற்றும், அதனை அடையும் வழிகளே அவருடைய நித்திய கட்டளைகளுமாய் இருக்கின்றன.

ஞானத்தின் அடித்தளம் எவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது? அதன் வியத்தகு பண்புகளை அறிந்தவன் யார்? ஞானத்தின் உணர்வு எவனுக்குத் தெரிவித்து வெளியாக்கப்பட்டது? அதன் பலவித வழிகளையும் கண்டுபிடித்தவன் யார்?

எல்லாவற்றிற்கும் மேலான, எல்லாம் வல்ல படைப்பாளர் ஒருவர் இருக்கிறார். வல்லமையுள்ள அவ்வரசர் மிகவும் அஞ்சத்தக்கவர். தமது அரியணையில் வீற்றிருந்து ஆண்டுவரும் கடவுள் அவரே. அவரே தமது அளவில்லாப் பரிசுத்த ஆவியைக் கொண்டு அதை உண்டாக்கி, அறிவித்து வெளிப்படுத்தினார். ஏனென்றால், தமது எல்லாப் படைப்புகளிலும், எல்லா உயிரினங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி அதைப் பகிர்ந்திட்டார்; தம்மை நேசிப்பவர்களுக்கு அதைக் கொணர்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 92: 1ab, 1c-2, 5. (பல்லவி: 1a)

பல்லவி: ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்,
மகத்துவத்தை ஆடையாய் உடுத்தியுள்ளார்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார். ஆண்டவர் வல்லமையைக் கச்சைபோல் அணிந்துகொண்டிருக்கிறார். பல்லவி

2 பூவுலகை அவர் நிலைப்படுத்தினார். அது அசைவுறாது.
ஆதியினின்றே உமது அரியணை நிலையாய் உள்ளது. ஆதியினின்றே நீரும் உள்ளீர். பல்லவி

5 உம்முடைய நியமங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவை. ஆண்டவரே, புனிதமே உமது இல்லத்திற்கு ஏற்றது. எந்நாளும் ஏற்றதே. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் உள்ளத்தில் கட்சிமனப்பான்மை யிருந்தால்**
**அதைப்பற்றி பெருமை பாராட்ட வேண்டாம்.**

அப்போஸ்தலரான புனித யாசப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *3: 13-18*

அன்புக்குரியவர்களே :

உங்களுள் ஞானமும் அறிவும் படைத்தவன் யாராவது இருந்தால், அவன் அதைத் தனது நன்னடத்தையினுல் எண்பிக்கட்டும் : அவன் செயல்கள் ஞானத்தால் விளையும் சாந்தத்தோடு விளங்கட்டும். ஆனுல், உங்கள் உள்ளத்தில் மனக்கசப்பும் பொருமையும் கட்சி மனப்பான்மையும் இருந்தால், அதைப்பற்றிப் பெருமை பாராட்டவேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம். இத்தகைய ஞானம் விண்ணினின்று வருவதன்று : மண்ணுலகையே சார்ந்தது, கீழ் நாட்டத்தைப் பின்பற்றுவது, பேய்த்தன்மை வாய்ந்தது. பொருமையும் கட்சி மனப்பான்மையும் எங்குள்ளதோ, அங்கே குழப்பமும் எல்லா தீச்செயல்களும் இருக்கும். விண்ணினின்று வரும் ஞானமோ தீய எண்ணத்துடன் கலவாதது: இதுவே அதன் தலையான பண்பு. மேலும் அது சமாதானத்தை நாடும் ; பொறுமையைக் கடைப்பிடிக்கும்; இணக்கத்தை விரும்பும் ; இரக்கமும் நற்செயல்களும் பெருகச் செய்யும் ; நடுநிலை தவருது ; கள்ளமறியாது. சமாதானம் செய்வோர், சமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வென்னும் கனி விளைகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 18: 7, 8, 9, 14 (பல்லவி : 8a)*

பல்லவி : ஆண்டவரின் கட்டளைகள் நேரியவை ;
உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது : ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது : ஆண்டவருடைய கட்டளை உறுதியானது : எளியோருக்கு அறிவூட்டுவது.

பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது.

பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது: ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை.

பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலையில் என் வாய்மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தனவாகட்டும்.

பல்லவி

அல்லேலூயா 2 திமோ. 1: 10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறீஸ்து சாவை அழித்து, வாழ்வை, நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விசுவசிக்கிறேன் ஆண்டவரே, என் விசுவாசமின்மையை நீக்க உதவி செய்தருளும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 14-29

அக்காலத்தில்:

யேசு மலையினின்று இறங்கித் தம் சீடரிடம் திரும்பி வந்தபோது பெருங்கூட்டம் ஒன்று அவர்களைச் சூழ்ந்து இருப்பதையும், மறைநூல் அறிஞர் அவர்களுடன் வாதாடுவதையும் கண்டனர். மக்கள் அனைவரும் அவரைக் கண்டவுடனே திடுக்கிட்டு ஓடிவந்து வணக்கம் செய்தனர். அவர், "எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார்.

கூட்டத்திலிருந்த ஒருவன் மறுமொழியாகக் கூறியது: "போதகரே, ஊமைப்பேய் பிடித்த என் மகனை உம்மிடம் கொண்டுவந்தேன். அது எங்கே அவனை ஆட்கோள்கிறதோ அங்கே அவனைக் கீழே தள்ளுகிறது. அவன் நுரை தள்ளிப் பல்லைக் கடித்து விறைத்துப் போகிறான். அதை ஓட்டும்படி உம் சீடரைக் கேட்டேன். அவர்களால் முடியவில்லை."

அதற்கு அவர், "விசுவாசமில்லாத தலைமுறையே, எதுவரை உங்களோடு இருப்பேன்? எதுவரை உங்களைப் பொறுத்துக்கொண்டிருப்பேன்? அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்" என்றார். அவனை அவரிடம் கொண்டுவந்தனர். அவரைக் கண்டவுடன் பேய் அவனை அலைக்கழிக்க, அவன் தரையில் விழுந்து நுரை தள்ளிக்கொண்டு புரண்டான்.

அவர், "இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாகிறது?" என்று அவனுடைய தகப்பனைக் கேட்க, அவன், "சிறுவத்திலிருந்தே இப்படித்தான். இவனைத் தொலைக்க அந்தப் பேய் அடிக்கடி நீரிலும் நெருப்பிலும் தள்ளியிருக்கிறது. உம்மால் ஏதாவது செய்யக்கூடுமானால் எங்கள்மேல் மனமிரங்கி உதவி புரியும்" என்றான்.

யேசு அவனை நோக்கி, "கூடுமானால் ஆ? விசுவசிப்பவனுக்கு எல்லாம் கூடும்" என்றார். உடனே சிறுவனுடைய தகப்பன், "விசுவசிக்கிறேன். என் விசுவாசமின்மையை நீக்க உதவி செய்யும்" என்று கத்தினான்.

கூட்டம் தம்மிடம் ஓடி வருவதைக் கண்டு, யேசு அசுத்த ஆவியைக் கடிந்து, "ஊமைச் செவிட்டுப் பேயே, உனக்குக் கட்டளையிடுகிறேன்: இவனை விட்டுப்போ, மீண்டும் இவனுள் நுழையாதே" என்றார். அது கத்திக்கொண்டு அவனை மிகவும் அலைக்கழித்தபின் வெளியேறிற்று. பையன் பிணம்போலானான். அதைப் பார்த்த மக்கள்கூட்டம், "இறந்து விட்டான்" என்றது. யேசுவோ அவன் கையைப் பிடித்துத் தூக்கினார். அவன் எழுந்தான்.

அவர் வீட்டிற்குள் போன பின்பு, சீடர்கள், "அதை ஓட்ட எங்களால் ஏன் முடியவில்லை?" என்று அவரைத் தனிமையாகக் கேட்டார்கள். அதற்கு அவர், "இவ்வகைப் பேய் செபத்தினாலன்றி வேறு எதனாலும் வெளியேறாது" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*சோதனைக்குத் தப்ப உன் ஆன்மாவை ஆயத்தப்படுத்து.*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் **2 : 1-13**

மகனே, நீ கடவுளுக்கு ஊழியம் செய்யப் போகையில் நீதியிலும் அச்சத்திலும் நிலைகொண்டு, சோதனைக்குத் தப்ப உன் ஆன்மாவை ஆயத்தப்படுத்து.

உன் இதயத்தைத் தாழ்த்தி அமைந்திரு. செவிகொடுத்து நல்லறிவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள். கலக்க நேரத்தில் ஆத்திரப்பட்டு யாதொன்றும் செய்யாதே. ஆண்டவருடைய இரக்கத்தின் காலம் வரைக்கும் காத்திரு. அவரோடு ஒன்றித்துக் கடைசியில் உன் வாழ்க்கை பலன் கொடுக்கும்படி பொறுமையாய் இரு.

உனக்கு நேர்வன எல்லாவற்றையும் பொறுத்துக்கொள். துன்பத்தில் திடமாயும், தாழ்வில் பொறுமையாயும் இரு. பொன்னும் வெள்ளியும் நெருப்பினால் சுத்தமாவதுபோல, மனிதரும் தாழ்ச்சி என்னும் உலையில் தகுதியானவர்கள் ஆகிறார்கள்.

கடவுள்பால் உன் விசுவாசத்தை வை; அவர் உன்னைக் காப்பாற்றுவார். செவ்வழியில் சென்று, அவர்பால் உன் நம்பிக்கையை வை; அவருக்கு அஞ்சி நட; நெடுங்காலம் நிலைகொள்வாய்.

ஆண்டவருக்கு அஞ்சுவதால் நீங்கள் அவர் இரக்கத்தை அடைவீர்கள். நன்னெறி வழுவாதபடி அவரை மறவாதீர்கள். ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை விசுவசியுங்கள்; உங்கள் சம்பாவனை வீணாகாது. ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை நம்புங்கள்; அவர் இரக்கம் உங்கள் மகிழ்ச்சியாகும். ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்களே, அவரை நேசியுங்கள்; உங்கள் இதயங்கள் ஒளிபெறும்.

மக்களே, எல்லா மனிதரையும் பாருங்கள்; ஆண்டவரை நம்பின எவனும் கலங்கினதில்லையென்று கண்டறியுங்கள். அவருடைய கட்டளைகளில் நிலைநின்றவன் எவன் கைவிடப்பட்டான்? அவரை மன்றாடினவன் எவன் புறக்கணிக்கப்பட்டான்?

ஆண்டவர் தயவும் இரக்கமும் உள்ளவராதலால் துன்ப நேரங்களில் பாவங்களை மன்னிப்பார்; உண்மையாகத் தம்மைத் தேடுகிறவர்களை ஆதரிக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 36 : 3-4, 18-19, 27-28, 39-40 (பல்லவி : 5 காண்)

பல்லவி : உன் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு : அவரே எல்லாம் செய்வார்.

3 ஆண்டவர்மீது நம்பிக்கை வை, நன்மை செய் ; புனித நாட்டில் எவ்விதக் கவலையின்றி இருப்பாய்.
4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு: அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார். பல்லவி

18 நீதிமான்களுடைய வாழ்நாட்களைக் குறித்து ஆண்டவர் கருத்தாய் இருக்கிறார், அவர்கள் உரிமைச் சொத்து என்றென்றும் நிற்கும்.
19 அழிவின் காலத்தில் அவர்கள் வெட்கிப்போகமாட்டார்கள் : பஞ்சக் காலத்திலோ அவர்கள் நிறைவுகொள்வார்கள். பல்லவி

27 தீமையை விலக்கு. நன்மை செய். அப்போது என்றென்றும் வாழ்வாய்.
28 ஏனெனில், ஆண்டவர் நேர்மையை விரும்புகிறார், தம் புனிதர்களை அவர் கைவிடுவதில்லை. நெறிகெட்டவர் அழிவுறுவர், அவர்கள் மக்கள் வேரோடு ஒழிந்துபோவர். பல்லவி

39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும் : துன்ப வேளையில் அவர்களுக்குப் புகலிடம் அவரே.
40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலையளிக்கிறார் ; தீயோரின் கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார். ஏனெனில், அவர்கள் அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**தீய எண்ணத்தோடு கேட்பதாலே, நீங்கள் கேட்டாலும் அடைவதில்லை.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *4 : 1-10*

அன்புக்குரியவர்களே :

உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணம் என்ன? உங்கள் உடலில் போராட்டம் விளைவிக்கும் கீழ்த்தர ஆசைகள் அல்லவா? பிறர் பொருள்மீது ஆசை வைக்கிறீர்கள்; அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்; பேராசை கொள்கிறீர்கள்; ஆசைப்படுவதை அடைய முடியாததால், சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். ஆசைப்படுவதை ஏன் அடையமுடியவில்லை? இறைவனிடம் கேட்காததால்தான். கேட்டாலும் ஏன் அடைவதில்லை? தீய எண்ணத்தோடு கேட்பதாலே. கிடைப்பதைக் கீழ்த்தர ஆசைகளை நிறைவேற்றுவதில் செலவழிக்கவே கேட்கிறீர்கள்.

விபசாரிகள்போல் வாழ்பவர்களே, உலகத்தோடு நட்புகொள்வது, கடவுளைப் பகைப்பது என அறியீர்களோ? உலகுக்கு நண்பனாக விரும்பும் எவனும் கடவுளுக்குப் பகைவனாகிறான். நம்முள் குடியிருக்கச் செய்த ஆன்மாவை இறைவன் பேராவலோடு நாடுகிறார் என மறைநூல் கூறுவது வீண் என எண்ணுகிறீர்களோ? நாம் அதற்கேற்ப வாழ நமக்குத் தேவைக்கு மேலாகவே அருளையும் வழங்குகிறார்; ஆகவேதான், "செருக்குற்றவர்களைக் கடவுள் எதிர்க்கிறார்: தாழ்ச்சியுள்ளவர்களுக்கோ அருளை அளிக்கிறார்" என்று எழுதியுள்ளது.

ஆகவே கடவுளுக்குப் பணிந்து நடங்கள். அலகையை எதிர்த்து நில்லுங்கள், அது ஓடிவிடும். கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள். இருமனத்தோரே, இதயங்களைப் புனிதப்படுத்துங்கள். உங்கள் இழிநிலையை உணர்ந்து புலம்பி அழுங்கள். உங்கள் சிரிப்பு அழுகையாக மாறட்டும்; மகிழ்ச்சி துயரமாகட்டும். ஆண்டவர்முன் உங்களைத் தாழ்த்துங்கள்: அவர் உங்களை உயர்த்துவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 54 : 6-7, 8-9a, 9b-10a, 22. (பல்லவி : 22a)

பல்லவி : ஆண்டவர் மீது உன் கவலையைப் போட்டுவிடு :
அவர் உன்னை ஆதரிப்பார்.

6 "புறாவைப்போல் எனக்குச் சிறகுகள் இல்லையே!
இருந்தால் பறந்துபோய் அமைதியடைந்திருப்பேனே!"
என்று சொல்லிக்கொண்டேன்.
7 வெகு தொலைவு போயிருப்பேன், பாலைவெளியில் தங்கியிருப்பேன். பல்லவி

8 புயலினின்றும் பெருங்காற்றினின்றும் வெகு விரைவில்
புகலிடம் தேடியிருப்பேன்.
9 ஆண்டவரே, அவர்களுடைய மொழிகளைக் கலங்கடித்து,
குழப்பம் உண்டாகச் செய்யும். பல்லவி

ஏனெனில் நகரத்தில் வன்முறையும் கலகமும் காண்கிறேன்.
10 இரவும் பகலும் அவைகள் அதன் மதில்களைச் சுற்றி வருகின்றன. பல்லவி

22 ஆண்டவர்மீது உன் கவலையைப் போட்டுவிடு, அவர் உன்னை ஆதரிப்பார் :
நீதிமான் என்றும் நிலைகலங்க விடமாட்டார். பல்லவி

*அல்லேலூயா* *கலாத். 6 : 14*

அல்லேலூயா. நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் சிலுவையிலன்றி நான் வேறெதிலும் பெருமைப்பட மாட்டேன் : அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது : நானும் உலகுக்கு அறையுண்டவனாய் இருக்கிறேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் கையளிக்கப்படுவார். ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால், அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *9:30-37*

*அக்காலத்தில்:*

யேசுவும் அவர் சீடரும் மலையை விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவினூடே சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று விரும்பினார். ஏனெனில், "மனுமகன் மனிதர்களிடம் கையளிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப் பின் உயிர்த்தெழுவார்" என்று தம் சீடருக்குப் போதிக்கலானார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்கவும் அஞ்சினர்.

கப்பர்நகூமுக்கு வந்தனர். வீட்டிலிருக்கும்போது அவர் அவர்களை நோக்கி, "வழியில் என்ன வாதாடிக்கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். ஏனெனில், "பெரியவன் யார்?" என்பதைப்பற்றி வழியில் தங்களுக்குள் விவாதித்திருந்தார்கள்.

அப்போது அவர் அமர்ந்து பன்னிருவரையும் அழைத்து, "ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும், அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்" என்றார்.

பின்னர் ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, அதை அரவணைத்து, "இத்தகைய குழந்தைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்ளுகிற எவனும் என்னையே ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளும் எவனும் என்னையன்று, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஞானத்தை நேசிப்பவர்களைக் கடவுள் நேசிக்கிறார்.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* 4 : 12-22

ஞானம் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு உயர்வுள்ள வாழ்வைத் தருகின்றது; தன்னைத் தேடுகிறவர்களை ஏற்றுக்கொண்டு, நீதிநெறியில் முன்செல்கின்றது. அதை நேசிக்கிறவன் வாழ்வை நேசிக்கிறான்; அதை அடையக் கவலை கொள்கிறவர்கள் அதன் சமாதானத்தைக் கைக்கொள்வார்கள்.

ஞானத்தைக் கைப்பற்றினவர்கள் வாழ்வை அடைவார்கள். அது புகுந்த இடமெல்லாம் கடவுள் ஆசீர்வதிப்பார். அதற்கு ஊழியம் செய்கிறவர்கள் புனிதருக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆவார்கள். அதை நேசிப்பவர்களைக் கடவுள் நேசிக்கிறார். அதற்குச் செவி கொடுக்கிறவன் மனிதருக்கு நியாயம் தீர்க்க வல்லவன் ஆகிறான். அதைப் பார்க்கிறவன் நம்பிக்கையைக் கைவிடான்.

அதன்மீது நம்பிக்கை வைக்கிறவன் அதைத் தன் உரிமையாக அடைவான். அவன் சந்ததியாரும் அதில் நிலை கொள்வார்கள். ஏனென்றால் அது துன்ப நேரத்தில் அவனோடு உலாவுகின்றது; அவனை ஆதியில் தேர்ந்துகொள்கின்றது. பயத்தையும் அச்சத்தையும் சோதனையையும் அவன்மீது ஏவுகின்றது; அவன் எண்ணங்களால் அவனைச் சோதித்து, அவன் தன் ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளும் வரையிலும் தன் போதனையினால் உண்டாகும் துன்பத்தில் அவனை வருத்துகின்றது.

அவனை உறுதிப்படுத்தி அவனிடம் நேர்வழி சென்று அவனை மகிழ்விக்கும்; அவன் இரகசியங்களை அவனுக்கு வெளியாக்கி, கலையையும் நீதியின் அறிவையும் அவனிடம் சேர்ப்பிக்கும்; அவன் தவறினால், அவனை விட்டகன்று, பகைவன் கையில் அவனைக் காட்டிவிடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 165, 168, 171, 172, 174, 175 (பல்லவி : 165 a)

பல்லவி : ஆண்டவரே உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதி உண்டு.

165 உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு : அவர்களை விழத்தாட்டக்கூடிய தடைகள் இல்லை. பல்லவி

168 உம் கட்டளைகளையும் கற்பனைகளையும் நான் அனுசரிக்கிறேன் : ஏனெனில், என் நடத்தை உமக்குத் தெரிந்திருக்கிறது. பல்லவி

171 உம் நியமங்களை எனக்கு நீர் கற்பிப்பதால், என் நா உமது புகழைப் பாடும். பல்லவி

172 உம் வாக்கைக் குறித்து என் நாவு பாடுவதாக, ஏனெனில் உம் கற்பனைகள் எல்லாம் நீதியானவை. பல்லவி

174 ஆண்டவரே, உம்மிடமிருந்து வரும் மீட்பை நான் விரும்புகிறேன் : உமது திருச்சட்டத்தில் நான் இன்பம் காண்கிறேன். பல்லவி

175 வாழ்வு பெற்று நான் உம்மைப் புகழ்வேனாக, உம் விதி முறைமைகள் எனக்குத் துணைபுரிவனவாக. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

உங்கள் வாழ்க்கை என்னவாகும்? எனவே
" ஆண்டவருக்குத் திருவுளமானால் ... " என்று சொல்லுங்கள்.

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 4 : 13-17

அன்புக்குரியவர்களே :

" இன்றோ நாளையோ அந்த நகர்க்குச் செல்வோம், அங்கே ஓராண்டு தங்கி வியாபாரம் செய்வோம் : பணம் சம்பாதிப்போம் " என்றெல்லாம் பேசுகிறீர்களே, சற்றுக் கேளுங்கள். நாளைக்கு உங்கள் வாழ்க்கை என்ன ஆகும் என்பது உங்களுக்குத் தெரியாதே. நொடிப் பொழுதில் தோன்றி மறையும் புகையே நீங்கள்.

ஆகவே அப்படிப் பேசாமல், "ஆண்டவர்க்குத் திருவுளமானால் நாம் உயிர் வாழ்வோம். இன்னின்ன செய்வோம்" என்று சொல்வதே சரி. நீங்கள் இப்போது வீம்பு பாராட்டித் தற்பெருமை கொள்ளுகிறீர்கள். இது போன்ற தற்புகழ்ச்சி நல்லதன்று. ஒருவனுக்கு நன்மை செய்யத் தெரிந்திருந்தும் அதைச் செய்யாவிட்டால் அவனுக்கு அது பாவம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 48 : 1-2, 5-6, 7-9, 10. (பல்லவி : 5 : 3)

பல்லவி : எளிய மனத்தோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

மக்கள் இனங்களே: நீங்களனைவரும் நான் சொல்வதற்குச் செவிசாயுங்கள்:
1 புவிமீது வாழ்வோரே, நீங்களனைவரும் இதற்குச் செவிகொடுங்கள்.
தாழ்ந்தோர் உயர்ந்தோர், பணக்காரர் ஏழைகள் நீங்கள் அனைவரும்:
2 இதற்குச் செவிகொடுங்கள். பல்லவி

துன்பமிகு நாளில் நான் அஞ்சவேண்டுவதேன்? என்னைத் துன்புறுத்
5 துவோர் செய்யும் அக்கிரமம் என்னைச் சூழும்போது நான் ஏன் அஞ்ச
வேண்டும்?
தங்கள் செல்வத்தில் நம்பிக்கை வைப்போருக்கும் தம் செல்வப் பெருக்கை
6 நினைத்துப் பெருமைப்படுவோருக்கும் நான் அஞ்சவேண்டுவதேன்? பல்லவி

தன்னைத்தானே விடுவித்துக் கொள்பவன் ஒருவனுமில்லை: தன்
7 மீட்புக்குரிய விலையைக் கடவுளுக்குத் தர யாராலும் இயலாது.
அந்த மீட்புக்குரிய விலை மிக உயர்ந்தது.
8 சாவைக் காணாததும் என்றென்றும் நீடிப்பதுமான வாழ்வை வாங்கிக்
9 கொள்ள எத்தொகையும் போதவே போதாது. பல்லவி

ஞானிகள்கூட இறப்பதைக் காணலாம்: அப்படியே ஞானமற்றவர்களும்
10 அறிவீனர்களும் இறந்தொழிவதைக் காணலாம்: தம் செல்வத்தை
அந்நியருக்கு விட்டுச் செல்வதைக் காணலாம். பல்லவி

அல்லேலூயா

அரு. 14 : 6

அல்லேலூயா. அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும் உண்மையும் உயிரும்: என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

நமக்கு எதிராக இல்லாதவன் நம் சார்பாக இருக்கிறான்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 38-40

அக்காலத்தில்:

அருளப்பர் யேசுவிடம், 'போதகரே, நம்மைச் சாராத ஒருவன் உம் பெயரால் பேயோட்டுவதைக் கண்டு, அவனைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில், அவன் நம்மைச் சாராதவன்'' என்றார். யேசு கூறியதாவது, "அவனைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், என் பெயரால் புதுமை செய்தபின் உடனே என்னைப் பழித்துப் பேசக்கூடியவன் எவனுமில்லை. நமக்கு எதிராக இல்லாதவன் நம் சார்பாக இருக்கிறான்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

• மனந்திரும்பி ஆண்டவரிடம் சேரத் தாமதியாதே.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 5 : 1-10

அநீதப் பொருட்கள்மீது உன் நம்பிக்கையை வைக்காதே. வாழ்க்கைக்குப் போதுமானது எனக்கு உண்டு என்று சொல்லாதே; ஏனென்றால் பழிவாங்கும் காலத்திலும், மரண நேரத்திலும் அவை உனக்கு உதவப் போவதில்லை. உன் வலிமையை நம்பி உன் இதயத்தின் தீய நாட்டங்களைப் பின் செல்லாதே. நான் எவ்வளவோ வலிமை உள்ளவன்; என் செயல்களைப்பற்றி என்னைக் கணக்குக் கேட்பவன் யார் என்று சொல்லாதே. ஏனென்றால், பழி வாங்கும் கடவுள் பழி வாங்குவார்.

பாவம் செய்தேன்; அதனால் எனக்கு வந்த தீங்கு என்ன என்று சொல்லாதே. ஏனென்றால் உன்னத கடவுள் பொறுத்திருந்து தண்டிப்பார். பொறுக்கப்பட்ட பாவத்தைப் பற்றி அச்சமற்று இராதே. பாவத்தின்மேல் பாவம் கட்டிக்கொள்ளாதே.

ஆண்டவருடைய இரக்கம் பெரிது; என் கணக்கற்ற பாவங்கள்மீது அவர் இரங்குவார் என்று சொல்லாதே. ஏனென்றால், இரக்கமும் கோபமும் அவரிடம் விரைவில் சேர்ந்துவிடும். அப்பொழுது அவர் கோபம் பாவிகள் மீது விழும்.

மனந்திரும்பி ஆண்டவரிடம் சேரத் தாமதியாதே; நாளுக்கு நாள் தாமதம் செய்யாதே. ஏனென்றால், அவர் கோபம் திடீரென வரும்; பழி வாங்கும் காலத்திலோ அவர் உன்னைச் சிதறடிப்பார். அநீதச் செல்வங்களைப் பற்றி ஏக்கம் கொள்ளாதே. ஏனென்றால், மரண நேரத்திலும் பழிவாங்கும் நாளிலும் அவைகளால் உனக்கு யாதொரு பயனும் உண்டாகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1 : 1-2, 3, 4 & 6 (பல்லவி: சங். 39 : 4a)

பல்லவி : தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவர்மீது வைத்தவனே பேறுபெற்றவன்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லாதவன் பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறுபெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான் : அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது : காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர்போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார். தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**கொடுக்காத கூலி கூக்குரலிடுகிறது : அப்பேரொலி ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். *5 : 1-6*

பணக்காரரே, சற்றுக் கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும் அவல நிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மட்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச்சாட்சியாய் இருக்கும்; உங்கள் சதையைத் தின்றுவிடும். இறுதி நாளுக்காக நீங்கள் உங்களுக்கென நெருப்பைத்தான் குவித்து வைத்திருக்கிறீர்கள்.

உங்கள் வயலில் அறுவடை செய்தவர்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். கொடுக்காத கூலி கூக்குரலிடுகிறது. அறுவடையாளர் எழுப்பும் அப்பேரொலி வான்படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது. இவ்வுலகிலே இன்பப் பெருவாழ்வில் மூழ்கியிருந்தீர்கள். உங்களுடைய அழிவு நாளுக்காக உங்கள் உள்ளங்களைக் கொழுக்க வைத்திருக்கிறீர்கள். நீதிமானுக்குத் தண்டனைத் தீர்ப்பளித்துக் கொலை செய்தீர்கள். அவனோ உங்களை எதிர்க்கவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 48: 13-14ab, 14cd-15, 16-17, 18-19* (பல்லவி மத். 5: 3)

பல்லவி : எளிய மனத்தோர் பேறுபெற்றோர் :
ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

13 மூடத்தனமான நம்பிக்கையுள்ளவர்கள் கதி இதுவே : தங்களுக்குக்
கிடைத்த செல்வத்தில் மகிழ்ச்சி கொள்பவர்கள் கதி இதுவே.
14 கீழுலகில் அவர்கள் ஆடுகளைப்போல அடைபடுவர் ; சாவே அவர்களுக்கு
மேய்ப்பன்.

பல்லவி

நீதிமான்கள் அவர்கள்மேல் ஆட்சி செலுத்துவர்: விரைவில் அவர்கள்
தோற்றம் மறைந்தொழியும், கீழுலகே அவர்கள் இருப்பிடமாகும்.
15 எனினும், கடவுள் என்னைக் கீழுலகினின்று விடுவிப்பார்: என்னை அவர்
ஏற்றுக்கொள்வார்.

பல்லவி

16 ஒருவன் பணக்காரனானால் அவனைக் கண்டு அஞ்சவேண்டாம்: அவன்
குடும்பச் செல்வம் பெருகினால் அஞ்சவேண்டாம்.
17 அவன் சாகும்பொழுது தன்னோடு எடுத்துச் செல்வது ஒன்றுமில்லை:
அவனுடைய சொத்து அவனோடு போவதில்லை.

பல்லவி

18 "நிம்மதியான வாழ்வு உனக்குக் கிடைத்ததென பிறர் புகழ்வர்" என்று
வாழ்நாளில் அவன் தன்னைப் பாராட்டிக் கொண்டாலும்,
19 தன் முன்னோர்கள் போன இடத்திற்கே அவனும் போவான்: அவர்கள்
எந்நாளும் ஒளியைக் காணப்போவதில்லை.

பல்லவி

அல்லேலூயா — 1 தெச. 2:13

அல்லேலூயா. கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுங்கள்:
அதை மனித வார்த்தையாக அன்று, உள்ளபடியே
கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இரண்டு கைகளோடு நரகத்திற்குப் போவதை விட
கை ஊனனாய் வாழ்வில் நுழைவது உனக்கு நலம்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 41-50

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறியதாவது:

நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன், கைம்மாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என்னை விசுவசிக்கும் இச்சிறுவருள் ஒருவனுக்கு இடறலாய் இருப்பவன் எவனோ, அவனுடைய கழுத்தில் பெரிய எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் தள்ளுவது அவனுக்கு நலம்.

உன் கை உனக்கு இடறலாய் இருந்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கைகளோடு நரகத்திற்கு, அணையாத நெருப்பிற்குப் போவதை விடக் கை ஊனனாய் வாழ்வில் நுழைவது உனக்கு நலம். உன் கால் உனக்கு இடறலாயிருந்தால் அதை வெட்டி விடு. இரண்டு கால்களோடு

நரகத்தில் தள்ளப்படுவதைவிட முடவனாய் முடிவில்லா வாழ்வில் நுழைவது உனக்கு நலம். உன் கண் உனக்கு இடறலாயிருந்தால் அதை எறிந்து விடு. இரண்டு கண்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைவிட, ஒற்றைக் கண்ணனாய்க் கடவுளின் அரசிற்குள் நுழைவது உனக்கு நலம். அந்நரகத்திலோ, அவர்களை அரிக்கும் புழு இறவாது; நெருப்பும் அணையாது. ஏனெனில், ஒவ்வொருவனும் நெருப்பினால் உப்பிடப்படுவான்.

உப்பு நல்லதுதான். ஆனால் உப்பு உவர்ப்பு அற்றுப் போனால் எதைக்கொண்டு அதற்குச் சாரம் ஏற்றுவீர்கள்? உங்களுக்குள் உப்பு இருக்கட்டும். ஒருவர் ஒருவரோடு சமாதானமாயிருங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றுமில்லை.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம். 6 : 5-17

இன்சொல் நண்பரைப் பெருகச் செய்யும்; பகையாளிகளைச் சாந்தப் படுத்தும். இனிய சொல்லால் புண்ணியவானிடம் பல நலன்கள் உண்டாகும். பலர் உன் நண்பராய் இருக்கக் கடவார்கள். ஆனால், ஆயிரத்தில் ஒருவன் உன் ஆலோசனைக்காரனாய் இருக்கக்கடவான்.

உனக்கு நண்பன் வேண்டியிருக்கும்போது அவனை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள். எளிதாய் அவன்மீது நம்பிக்கை வைக்காதே. ஏனென்றால், தன்னலத்தை நாடும் நண்பனும் உண்டு; அவன் உன் துன்ப காலத்தில் நிலைத்திருக்க மாட்டான். பகைவனாய்த் திரும்பும் நண்பனும் உண்டு; பகையும் சச்சரவும் நிந்தையும் காண்பிக்கும் நண்பனும் உண்டு. பந்தியில் அமர்ந்து சாப்பிடும் நண்பனும் உண்டு. ஆனால், அவன் ஆபத்துக் காலத்தில் நிலைப்பவனல்லன்.

உறுதியாய் நிலைத்திருக்கும் நண்பனே உன்னை ஒத்தவனாய் இருப்பான்; உன் வீட்டில் உள்ளவர்களோடு விசுவாசமாய் நடந்து கொள்வான். அவன் உனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினாலும், உன் கண்முன் நின்று மறைந்தாலும் உன் நல்ல நட்பு மாறாமல் இருக்கக்கடவது.

பகைவர்களினின்றும் விலக உன் நண்பனுக்கு உன்னைக் கையளி. நம்பிக்கையுள்ள நண்பன் பலமான காவலுக்குச் சமம்; அவனைக் கண்டடைந்தவன் செல்வத்தைக் கண்டவன் போலாவான். நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றும் இல்லை; அவனது நம்பிக்கைக்கு எந்த அளவு பொன்னும் வெள்ளியும் நிகராகா.

நம்பிக்கையுள்ள நண்பன் வாழ்வைத் தரும் மருந்துபோல் இருக்கிறான். ஆண்டவருக்கு அஞ்சுகிறவர்கள் அவனைக் கண்டடைவார்கள். கடவுளுக்கு அஞ்சுகிறவன் நல்ல நண்பனை உரிமையாக்கிக் கொள்வான். ஏனென்றால், அவனைப்போலவே அவன் நண்பனும் இருப்பான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 12, 16, 18, 27, 34, 35 (பல்லவி : 35 a)

பல்லவி : உம் கற்பனைகள் காட்டும் நெறியில்
ஆண்டவரே, எம்மை நடத்தும்.

12 ஆண்டவரே, நீர் வாழ்த்துக்குரியவர், எனக்கு உம் நியமங்களைக்
கற்பித்தருளும். பல்லவி

16 உம் நியமங்களை நினைத்து இன்புறுவேன். உம் வார்த்தைகளை
நான் மறவேன். பல்லவி

18 உமது திருச்சட்டத்தின் வியத்தகு செயல்களை நான்
நன்குணரும் வண்ணம் என் கண்களைத் திறந்தருளும். பல்லவி

27 உம் கட்டளைகள் காட்டும் வழியில் என்னைச் செலுத்தும்
நான் உம் வியப்புக்குரிய செயல்களைத் தியானிப்பேன். பல்லவி

34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும் :
அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். பல்லவி

35 உம் கற்பனைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும் :
அதுவே என் இன்பம். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

இதோ! நடுவர் வாசலிலே நிற்கிறார்.

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம். 5 : 9-12

சகோதரர்களே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதபடி ஒருவர்க்கெதிராய் ஒருவர் குறைகூறி முறையிடாதீர்கள். இதோ! நடுவர், வாசலிலே நிற்கிறார்.

சகோதரர்களே, ஆண்டவர் பெயரால் பேசின இறைவாக்ினரை நினைத்துக்கொள்ளுங்கள். துன்பத்தைத் தாங்குவதிலும், பொறுமையைக் கடைப்பிடிப்பதிலும் அவர்களை மாதிரிகளாகக் கொள்ளுங்கள். இத்தகைய மனவுறுதியுள்ளவர்களைப் பேறுபெற்றவர்கள் என்கிறோம். யோபின் மன உறுதியைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள். இறுதியில் ஆண்டவர் அவருக்கு என்ன செய்தார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆண்டவர் மிகுந்த இரக்கமும் தயவுமுள்ளவர் என்று அறிந்திருக்கிறீர்கள்.

குறிப்பாக, என் சகோதரர்களே, ஆணையிடாதீர்கள். விண்ணுலகின் மீதோ, மண்ணுலகின்மீதோ, வேறெதன்மீதோ ஆணையிடவேண்டாம். நீங்கள், ஆம் என்றால் ஆம் என்றிருக்கட்டும்; இல்லையென்றால் இல்லை என்றிருக்கட்டும். இப்படிச் செய்தால் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 8-9, 11-12 (பல்லவி : 8a)

பல்லவி : அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக :
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே.
பல்லவி

3 அவர் உன் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார்: உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார்.
பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர், சினங்கொள்ளத் தாமதிப்பவர்,
சாந்தமுடையவர்.
9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர், எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
பல்லவி

11 ஏனெனில் வானகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கு
அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி
விடுகிறார்.
பல்லவி

அல்லேலூயா அரு. 17 : 17ba

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை :
உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 1-12

அக்காலத்தில் :

யேசு புறப்பட்டு யூதேயா நாட்டுக்கும், யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள்கூட்டம் அவரிடம் வந்து கூட, வழக்கம்போல் அவர் அவர்களுக்கு மறுபடியும் போதித்தார்.

பரிசேயர் அவரை அணுகி, "கணவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர். அதற்கு அவர், "மோயீசன் உங்களுக்கு என்ன கட்டளையிட்டார்?" என்று கேட்க அவர்கள், "முறிவுச் சீட்டு எழுதி அவளை விலக்கிவிடலாம் என்று மோயீசன் அனுமதி அளித்தார்" என்றனர்.

அதற்கு யேசு, "உங்களுடைய முரட்டுத்தனத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே, கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதலால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார்.

வீட்டிற்கு வந்து அவருடைய சீடர் மீண்டும் அதைப்பற்றி அவரைக் கேட்டனர். அதற்கு அவர் அவர்களை நோக்கி, "தன் மனைவியை விலக்கி விட்டு வேறொருத்தியை மணப்பவன் எவனும் அவளுக்கு விரோதமாக விபசாரம் செய்கிறான். மனைவி தன் கணவனை விலக்கி வேறொருவனை மணந்துகொண்டால் அவளும் விபசாரம் செய்கிறாள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுள் தமது சாயலாக மனிதனைப் படைத்தார்.*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம். *17 : 1-13*

கடவுள் மண்ணால் மனிதனை உண்டாக்கினார்; தமது சாயலாக அவனைப் படைத்தார். திரும்பவும் அவனை மண்ணாகவே மாற்றுவார்; அவனுக்குத் தக்க வலிமையைக் கொடுத்தார். நாட்களின் தொகையையும் காலத்தையும் அவனுக்குக் குறித்தார்; நிலத்தில் உள்ளவைகளின்மீது அவனுக்கு அதிகாரம் கொடுத்தார். எல்லா உயிரினங்களும் அவனுக்கு அஞ்சும்படி செய்தார். அவனும் மிருகங்கள் மேலும் பறவைகள்மேலும் அதிகாரம் செலுத்தினான்.

அவர் அவனிடத்திலிருந்து அவனைப்போலவே அவனுக்கு ஒரு துணைவியை உண்டாக்கினார்; அறிவையும் நாவையும் கண்களையும் காதுகளையும், நினைப்பதற்கு மனத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்; அறிவின் ஒளியால் அவர்களை நிரப்பினார். ஞான அறிவையும் அவர்களுக்குத் தந்தார்; அவர்கள் இதயத்தை ஞானத்தினால் நிரப்பினார்; நன்மையையும் தீமையையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

தம் செய்கைகளின் மாட்சியை அவர்களுக்குக் காண்பிக்க அவர்கள் இதயங்களின்மேல் தமது கண் வைத்தார். தம் புனித பெயரை அவர்கள் கொண்டாடவும், அவர்கள் தம் செய்கைகளின் மாட்சியை வெளிப்படுத்துவதனால் தம் அரும் பெரும் செயல்களில் மகிமைப்படுத்தப்படவும் திருவுளம் கொண்டார்.

அவர் அவர்களுக்கு நன்னெறியை ஏற்படுத்தி வாழ்நாளின் ஒழுங்குக்கு அவர்களை உரிமையாளராக்கினார். அவர்களோடு நித்திய ஒப்பந்தம் செய்துகொண்டார்; தமது நீதியையும் தீர்மானங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

அவருடைய பெருமையின் மாட்சியை அவர்கள் கண்கள் கண்டன. அவர் குரலின் மேன்மையை அவர்கள் செவிகள் கேட்டன. மேலும் அவர்: எல்லா அக்கிரமத்திலிருந்தும் விலகுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அயலாரைப்பற்றிய கட்டளைகளை ஏற்படுத்தினார்.

அவர்கள் நடத்தைகள் எப்போதும் அவர் முன்பாக இருக்கின்றன; அவருடைய கண்களுக்கு அவை மறைந்தவை அல்ல.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 13-14, 15-16, 17-18a (பல்லவி : 17 காண்)

பல்லவி : ஆண்டவருககு அஞ்சி நடப்போர்மீது
அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்திருக்கும்.

13 தந்தை தம் மக்களுக்கு அன்புகாட்டுவதுபோல, ஆண்டவர்
தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார்.
14 ஏனெனில், அவர் நம்முடைய நிலைமையை நன்றாய் அறிந்திருக்கிறார்.
நாம் தூசிக்குச் சமம் என்பது அவருக்குத் தெரியாமலில்லை. பல்லவி

15 மனிதனின் வாழ்நாள் புல்லைப்போன்றது. வயல்வெளிப்
பூக்களைப்போல் அவன் மலர்கிறான்.
16 காற்றடித்ததும் அது வதங்கிவிடுகிறது. இருக்கிற இடம்
தெரியாமல் போய்விடுகிறது. பல்லவி

17 ஆண்டவருடைய இரக்கமோ அவருக்கு அஞ்சி நடப்போர் மீது
என்றென்றும் நிலைநிற்கும். அவருடைய நீதியோ
தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருக்கும்.
18 அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போர் மேலும்,
அவர் நீதி நிலைகொள்ளும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீதிமான் முழு உள்ளத்தோடு செய்யும் மன்ருட்டு ஆற்றல் மிக்கது.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம். 5 : 13-20

அன்புக்குரியவர்களே :

உங்களுள் யாரேனும் துன்புற்ருல் செபிக்கட்டும்; மகிழ்ச்சியாயிருந்தால் இறைப்புகழ் பாடட்டும். உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால் அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும்; அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன் மீது எண்ணெய் பூசி, அவனுக்காகச் செபிப்பர். விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கும். ஆண்டவர் அவனை எழுப்பிவிடுவார். அவன், பாவம் செய்தவனுயிருந்தால், மன்னிப்புப் பெறுவான்.

ஆகவே, ஒருவர்க்கொருவர் பாவ அறிக்கை செய்துகொள்ளுங்கள். ஒருவருக்காக ஒருவர் செபியுங்கள்: அப்போது குணமடைவீர்கள். நீதிமான் முழு உள்ளத்தோடு செய்யும் மன்ருட்டு ஆற்றல்மிக்கது. எலியாஸ் நம்மைப்போல் எளிய நிலைக்குட்பட்ட மனிதர் தான். ஆயினும் மழை பெய்யக்கூடாது என்று உருக்கமாகச் செபித்தார். மூன்று ஆண்டு ஆறுமாதங்கள் மழையில்லாதுபோயிற்று. திரும்பவும் செபித்தார். வானம் பொழிந்தது; நிலம் விளைந்தது.

என் சகோதரர்களே, உங்களுள் ஒருவன் உண்மையை விட்டு விலகித் திரியும்போது, அவனை ஒருவன் மனந்திருப்பினுல், தவருன வழியினின்று பாவியை மனந்திருப்புகிறவன் அவனது ஆன்மாவையே இறப்பினின்று மீட்பான் என்றும், திரளான பாவங்கள் அகலச் செய்வான் என்றும் அறிவீர்களாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 140 : 1-2, 3 & 8 (பல்லவி : 2a)*

பல்லவி : ஆண்டவரே, என் மன்ருட்டு
தூபம் போல் உம்மிடம் எழுக.

1 ஆண்டவரே, நான் உம்மை நோக்கிக் கூவுகிறேன். விரைவாய் எனக்குத் துணைசெய்யும்.

2 உம்மை நோக்கி நான் கூப்பிடும்போது என் குரலுக்குச் செவி சாய்த்தருளும். தூபம்போல் என் மன்றாட்டு உம்மிடம் எழுக. மாலைப் பலிபோல் என் கைகள் உம்மை நோக்கி உயர்க.
பல்லவி

3 ஆண்டவரே, என் நாவுக்குக் காவல் வைத்தருளும். என் நாவாகிய வாயிலைக் காத்துக்கொள்ளும்,
8 ஏனெனில், ஆண்டவராகிய இறைவா, என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன. உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன். நான் அழிய விடாதேயும்.
பல்லவி

அல்லேலூயா

மத். 11:25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும்
ஆண்டவரே போற்றி:
ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச்
சிறுவருக்கும் வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளின் அரசைக் குழந்தைபோல் ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:13-16

அக்காலத்தில்:

குழந்தைகளை யேசு தொடவேண்டும் என்று அவரிடம் கொண்டு வந்தனர். சீடர் அதட்டினர்.

யேசு அதைக் கண்டு சினந்து, அவர்களை நோக்கி, "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்கவேண்டாம். ஏனெனில், கடவுளின் அரசு இத்தகையோரதே. உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசைக் குழந்தைபோல ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது" என்றார்.

பின்பு அவர் அவர்களை அரவணைத்து, கைகளை அவர்கள்மேல் வைத்து ஆசீர்வதித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# எட்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் உன்னை மறக்க மாட்டோம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *49 : 14-15*

சீயோன் மகள், "ஆண்டவர் என்னைக் கைவிட்டுவிட்டார், ஆண்டவர் என்னை மறந்து போய்விட்டார்" என்றாள். பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்ப துண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும், நாம் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டோம்!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 61 : 1-2, 5-6, 7-8ab (பல்லவி : 5a)*

*பல்லவி :* நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள்.

1 கடவுளிடம்தான் என் ஆன்மா சாந்திகொள்கிறது.
அவரிடமிருந்தே எனக்கு மீட்பு வருகிறது.
2 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார் :
எந்நாளும் நான் அசைவுறேன். *பல்லவி*

5 நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள்;
ஏனெனில், நான் எதிர்பார்ப்பது அவரிடமிருந்தே வருகிறது.
6 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார்.
நான் அசைவுறேன். *பல்லவி*

7 கடவுளிடம் உள்ளது என் மீட்பும் மகிமையும்:
எனக்கு வலிமை தரும் அரணும் என் அடைக்கலமும் இறைவனே.
8 நாட்டு மக்களே, எந்நாளும் அவர்மீது நம்பிக்கை வையுங்கள்:
உங்கள் உள்ளத்திலுள்ளதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள். *பல்லவி*

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவர் உள்ளங்களின் உட்கருத்துக்களை வெளியாக்குவார்.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.** *4 ; 1-5*

**சகோதரர்களே :**

**எங்களைக் கிறிஸ்துவின் பணியாளர், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர் என்றே எவரும் கருதவேண்டும். இனி, கண்காணிப்பாளர் நம்பிக்கைக்குரியவராய் இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம் அன்றோ ?**

**என்னைப் பொருத்தமட்டில் எனக்கு நீங்களோ, மனிதரின் நீதிமன்றமோ தீர்ப்புக் கூறுவதுபற்றி நான் கவலைப்படவில்லை. நானும் எனக்குத் தீர்ப்பிட்டுக்கொள்ளமாட்டேன். என் மனச்சாட்சி என்னை எதிலும் குற்றம் சாட்டவில்லை. ஆயினும் இதனால் நான் குற்றமற்றவன் என்று சொல்லமுடியாது. எனக்குத் தீர்ப்புக் கூறுகிறவர் ஆண்டவர் தாம்.**

**ஆகையால் குறித்த காலம் வருமுன் தீர்ப்பிடாதீர்கள். ஆண்டவர் வரும்வரை காத்திருங்கள். இருளில் மறைந்திருப்பதை அவர் வெட்ட வெளிச்சமாக்குவார். உள்ளங்களின் உட்கருத்துக்களை வெளியாக்குவார். அப்பொழுதுதான் ஒவ்வொருவனும் கடவுளிடமிருந்து புகழ் பெறுவான்.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா *எபி. 4 : 12*

**அல்லேலூயா. கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது;**
**உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும்**
**சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** *6:24-34*

**அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :**

**எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்யமுடியாது.**

ஆதலால் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உயிர்வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப் படவேண்டாம். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந் தவையல்லவா? வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பது மில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். நீங்கள் அவற்றிலும் மிக மேலானவர்களன்றோ? கவலைப்படுவதினால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்டமுடியும்?

உங்கள் உடையைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? வயல்வெளி மலர்கள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பது மில்லை, நூற்பதுமில்லை. ஆயினும் சாலொமோன்கூடத் தன் மாட்சியி லெல்லாம் இவற்றில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். குறைவான விசுவாசம் உள்ளவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வயல் வெளிப் புல்லைக் கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்வளவுதான் செய்யமாட்டார்!

ஆதலால், எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப் போம் என்று கவலைப்படவேண்டாம். ஏனெனில், புறவினத்தார் தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவையென உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே, கடவுளின் அரசையும், அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்; இவையனைத்தும் உங்க ளுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப் பற்றிக் கவலைகொள்ளும். அன்றன்றைய தொல்லை அன்றன் றைக்குப் போதும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணமுடிப்போம்.**

இறைவாக்கினர் ஒசே ஆகமத்திலிருந்து வாசகம். 2 : 14b, 15b, 19-20

ஆண்டவர் கூறுவதாவது :

“இதோ, நாம் அவளை நயமாகக் கவர்ந்திழுத்துப் பாலைநிலத்துக்குக் கூட்டிப்போய் அவள் நெஞ்சோடு பேசுவோம். அப்பொழுது அவள் தன் இளமையின் நாட்களிலும், எகிப்து நாட்டினின்று வெளியேறிய காலத் திலும் செய்ததுபோல் அன்புக்கன்பு செய்வாள்.

முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணமுடிப்போம். நேர்மையிலும் நீதியிலும், நிலையான அன்பிலும், இரக்கத்திலும் உன்னை நாம் திருமணம் செய்துகொள்வோம். பிரமாணிக்கத்துடன் நாம் உன்னை மணந்துகொள்வோம். நாமே ஆண்டவர் என்பதை நீயும் அறிந்து கொள்வாய்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 8 & 10, 12-13. (பல்லவி : 8a)

பல்லவி : **அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக : என்னகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக.
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார், உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார் : அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர், சினங்கொள்ளத் தாமதிப்பவர், சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை; நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல, ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். *3 : 1b-6*

சகோதரர்களே :

எங்களைப் பற்றி நாங்களே நற்சான்று கூறத் தொடங்குகிறோமா? அல்லது நற்சான்றுக் கடிதங்கள் சிலருக்குத் தேவையாய் இருப்பதுபோல் அத்தகைய கடிதங்களை உங்களிடம் காட்டவோ, உங்களிடமிருந்து பெறவோ வேண்டிய தேவை எங்களுக்கு உண்டா? நீங்களே எங்களுடைய நற்சான்றுக் கடிதம்; அது எங்கள் உள்ளங்களில் பொறிக்கப்பட்டுள்ளது; இதை எல்லா மனிதரும் பார்க்கவும் படிக்கவும் கூடும். எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. எழுதியதோ மையினாலன்று, உயிருள்ள கடவுளின் ஆவியினாலே; கற்பலகையில் அன்று, உங்கள் உள்ளங்களாகிய உயிர்ப் பலகைகளிலேயே எழுதப்பட்டது.

இத்தகைய நம்பிக்கையே நாங்கள் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள் மேல் வைத்திருக்கிறோம். நாங்களே செய்துவிட்டதுபோல எதன்மேலும் உரிமை பாராட்டிக்கொள்ளும் தகுதி எங்களுக்கு இல்லை; எங்கள் தகுதியுடைமை கடவுளிடமிருந்தே வருகிறது. அவரே எங்களுக்குப் புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைத் தந்தார்; அந்த உடன்படிக்கையோ எழுதிய சட்டத்தைச் சார்ந்ததன்று; ஆவியானவரையே சார்ந்தது. ஏனெனில், எழுதிய சட்டம் விளைப்பது சாவு, ஆவியானவர் அளிப்பதோ வாழ்வு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *யாகப். 1 : 18*

அல்லேலூயா : தம்முடைய படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு, உண்மையை அறிவிக்கும் வாக்கினால் பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மணமகன் அவர்களோடு இருக்கிறன்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:18-22

அக்காலத்தில் :

அருளப்பருடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்தனர். அப்பொழுது சிலர் யேசுவிடம் வந்து, 'அருளப்பருடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பிருக்க, உம்முடைய சீடர் ஏன் நோன்பிருப்பதில்லை?' என்றனர்.

யேசு அவர்களை நோக்கி, மணமகன் தங்களோடு இருக்குமளவும் அவன் தோழர்கள் நோன்பு இருக்கலாமா? மணமகனுடன் இருக்குந்தனையும் அவர்கள் நோன்பு இருக்கமுடியாது. மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்.

பழைய ஆடையில் கோடித் துணியை எவனும் ஒட்டுப்போடுவதில்லை. அப்படிப் போட்டால் அந்த ஒட்டுப் பழையதைக் கிழிக்கும், கிழியலும் பெரிதாகும். புதுத் திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பவர் எவரும் இல்லை. வைத்தால் இரசம் சித்தைகளைக் கிழிப்பதுமல்லாமல், இரசமும் சித்தைகளும் பாழாகும். ஆனல், புது இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றிவைக்கவேண்டும்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**பேசுவதற்கு முன்பே மனிதனைப் புகழாதே.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 27 : 5-8

சல்லடையில் சலிக்கும்போது உமி நின்று போவதுபோல, மனிதனுடைய எண்ணத்தில் சஞ்சலம் நின்றுபோகும். குயவனின் பாண்டங்களைச் சூளை பரிசோதிக்கின்றது. துன்ப சோதனைகள் நீதிமான்களைப் பரிசோதிக்கின்றன.

மரத்தின் கண்காணிப்பை அதன் கனி காண்பிப்பதுபோல, மனிதன் வாயினின்று புறப்படும் வார்த்தைகள் அவன் மனத்திலுள்ள எண்ணத்தைக் காண்பிக்கும். பேசுவதற்கு முன்னரே மனிதனைப் புகழாதே. ஏனென்றால், வார்த்தைகளைக் கொண்டுதான் அவனை அறியவேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 91 : 1-2, 12-13, 14-15.* (பல்லவி: 1a காண்)

பல்லவி : **ஆண்டவரே, உம்மைப் புகழ்வது நல்லது.**

1 ஆண்டவரைப் புகழ்வது நல்லது ; உன்னதமானவரே, உம்
திருப்பெயருக்குப் புகழ் பாடுவது நல்லது.
2 காலையில் உம் இரக்கத்தையும், இரவெல்லாம் உம் பிரமாணிக்கத்தையும்
எடுத்துரைப்பது நல்லது. பல்லவி

12 நீதிமான் பனையைப்போல் செழித்து வளர்வான் :
லீபானின் கேதுரு மரம்போல் ஓங்கி வளர்வான்.
13 ஆண்டவருடைய இல்லத்திலும், நம் கடவுளின் ஆலய முற்றங்களிலும்
நடப்பட்ட அவர்கள் செழிப்புற்று விளங்குவர். பல்லவி

14 அவர்கள் முதிர்வயதிலும் பலனளிப்பர் : செழுமையும் கொழுமையும்
கொண்டு விளங்குவர்.
15 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் எவ்வளவு நேர்மையுள்ளவர்
என்றும், அவரிடத்தில் அநீதி இல்லையென்றும் பறைசாற்றுவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுகிறீஸ்து வழியாக நமக்கு வெற்றியளித்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 15 : 54-58

சகோதரர்களே :

அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையையும், சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையையும் அணிந்துகொள்ளும்பொழுது, எழுதியுள்ள இவ்வாக்கு நிறைவேறும். ‘ சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி

எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?' பாவமே சாவின் கொடுக்கு: பாவத்திற்கு வலிமை தருவது சட்டம். ஆனால், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய் நமக்கு இந்த வெற்றிதரும் கடவுளுக்கு நன்றி.

ஆகையால், என் அன்பார்ந்த சகோதரர்களே, உறுதியாய் இருங்கள். நிலை பெயராதீர்கள், உங்கள் உழைப்பு ஆண்டவருக்குள் வீணாவதில்லை என்பதை அறிந்து, ஆண்டவரின் வேலையைச் செய்வதில் சிறந்து விளங்குங்கள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா :

பிலிப். 2 : 15-16

அல்லேலூயா. வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை ஏந்தி நின்று,
உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத்
துலங்குவீர்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

6 : 39-45

அக்காலத்தில் :

யேசு சீடர்களுக்கு ஓர் உவமை கூறினார்: குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இருவரும் குழியில் விழமாட்டார்களா? சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்லன். தேர்ச்சி பெற்ற எவனும் தன் குருவைப் போன்றிருப்பான்.

உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன்? உன் கண்ணிலுள்ள விட்டத்தைப் பார்க்காத நீ, உன் சகோதரனை நோக்கி, 'தம்பி, உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுக்கவிடு' என்று எப்படிச் சொல்லலாம்? வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்தெறி: பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்றாய்க் கண் தெரியும்.

கெட்ட கனி தரும் நல்ல மரமில்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே.

ஏனெனில், முட்செடியில் அத்திப் பழம் பறிப்பாருமில்லை; நெருஞ்சியில் திராட்சைக்குலை கொய்வாருமில்லை. நல்லவன் தன் உள்ளமாகிய நற்கருவூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக்கொடுக்கிறான். தீயவனோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக்கொடுக்கிறான். ஏனெனில், உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர்பால் திரும்பி, அவருடைய தீர்ப்புக்களை அறிந்து கொள்.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் *17 : 20-28*

மனவருத்தப்படுகிறவர்களை மனந்திரும்பச் செய்வார்; பலவீனரைத் தேற்றி நிலை நிறுத்துவார்; உண்மையை அவர்கள் உடைமையாக நியமிப்பார்.

ஆண்டவரிடமாய்த் திரும்பி உன் பாவங்களை விட்டுவிடு. ஆண்டவர் முன் மன்றாடி உன் குற்றங்களைக் குறைத்து விடு. ஆண்டவர்பால் திரும்பி உன் அநீதத்தினின்று விலகு. அக்கிரமத்தை வெறுத்துப் பகைப்பாயாக.

கடவுளுடைய நீதிச் செயல்களையும் தீர்மானங்களையும் அறிந்து, அவர் உனக்கு நியமித்த நிலையிலும், உன்னதக் கடவுளை நோக்கி வேண்டுவதிலும் நிலைத்திரு. உயிரோடிருந்து கடவுளுக்கு வணக்கம் புரிகிறவர்களோடு புனித உலகின் பேற்றைப் பெறச் செல்.

அக்கிரமிகளுடைய பொய்மையில் நில்லாதே. மரணத்திற்கு முன்பே கடவுளை வாழ்த்து. இறந்தவனுடைய வாழ்த்து ஒன்றுமில்லாமைபோல் ஒழிந்துபோகின்றது. உயிருள்ளபோது கடவுளை வணங்குவாய். உயிரும் உடல் நலமும் இருக்கும்போதே அவரைப் புகழ்ந்தேத்து. அவருடைய இரக்கத்தைக் கொண்டாடுவாய்.

தம்மிடத்தில் திரும்புகிறவர்கள்மீது ஆண்டவருடைய இரக்கமும் அவருடைய மன்னிப்பும் எவ்வளவோ மாட்சிமையுள்ளனவாய் இருக்கின்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 31 : 1-2, 5, 6, 7 (பல்லவி : 11a)

பல்லவி : ஆண்டவரில் மகிழ்ந்திடுவீர்,
நீதிமான்களே, களிகூருவீர்.

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறு பெற்றவன் :
எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறு பெற்றவன்.
2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறு
பெற்றவன் : யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறு
பெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன் ; என் குற்றத்தை
நான் உம் திருமுன் மறைத்தேனில்லை :
" ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக்கொள்கிறேன் " என்றேன் ;
நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

6 இதனால் நல்லவர் யாவரும் உம்மை நோக்கி வேண்டுவர் :
நெருக்கடியான வேளையில் அவர்கள் உம்மை மன்றாடுவார்கள்.
வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் அவர்களை நெருங்காது. பல்லவி

7 " ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர்,
இன்னல்கள் அனைத்திலின்றும் என்னைக் காத்தருள்வீர் :
உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர். " பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

கிறிஸ்துவை நீங்கள் கண்டதில்லை; எனினும் அவர் மீது அன்பும் விசுவாசமும்
கொண்டு, சொல்லொண்ணா மகிழ்ச்சியோடு அக்களிப்புறுகிறீர்கள்.

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 1 : 3-9

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி! இறந்தோரினின்று எழுந்த யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் தம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கையைத் தரும் புதுப்பிறப்பை அளித்தார். இதனால் நமக்குக் கிடைக்கும் உரிமைப்பேறு அழியாதது, மாசுற முடியாதது, வாடாதது.

இறுதிக் காலத்தில் வெளிப்படப்போகும் மீட்பு வரும்வரை, விசுவாசத்தின் வழியாய்க் கடவுளின் வல்லமையால் காக்கப்பட்டிருக்கும் உங்களுக்கென, அந்த உரிமைப் பேறு வானுலகில் வைக்கப்பட்டுள்ளது.

இப்போது சொற்பக் காலம் நீங்கள் பலவகைச் சோதனைகளால் துன்புற்றாலும், அப்பேற்றை நினைத்து களிகூருகிறீர்கள். இச்சோதனைகள் நிகழ்வது உங்கள் விசுவாசம் உண்மையானதென்று காட்டவே. அழியக் கூடிய பொன்னும் நெருப்பில் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் விசுவாசம் சோதிக்கப்படவேண்டும். அப்போதுதான் யேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் அவ்விசுவாசம் உங்களுக்குப் புகழும் மகிமையும் மாண்பும் தருவதாய் விளங்கும். நீங்கள் அவரைப் பார்த்ததில்லை; எனினும், அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்போதும் நீங்கள் அவரைப் பார்க்கிறதில்லை; எனினும், அவர்மீது விசுவாசம்கொண்டு, சொல்லொண்ணா மகிழ்ச்சியும், மகிமைநிறை அக்களிப்பும் உற்று, உங்கள் விசுவாசத்தின் இறுதிப் பயனாகை ஆன்ம மீட்பை அடைகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 110 : 1-2, 5-6, 9 & 10c (பல்லவி : 5b)*

பல்லவி : **ஆண்டவர் தாம் செய்த உடன்படிக்கையை என்றுமே மறவார்.**
**அல்லேலூயா.**

1 நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன்:
நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை:
அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

5 தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார்.
தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.
6 புறவினத்தாரைத் தம் மக்களுக்கு உரிமையாக்கினார்: இவ்வாறு வல்லமை
மிக்க தம் செயல்களைத் தம் மக்களுக்கு வெளிப்படுத்தினார். பல்லவி

9 தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்;
தம் உடன்படிக்கையை என்றென்றும் நிலைக்கச் செய்தார்:
10 அவரது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். பல்லவி

அல்லேலூயா — 2 கொரி 8:9

அல்லேலூயா. யேசுகிறிஸ்து செல்வம் மிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உனக்கு உள்ளதெல்லாம் விற்று, என்னைப் பின்செல்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 10:17-27

அக்காலத்தில் :

யேசு புறப்பட்டுப் போகும்போது, ஒருவன் ஓடிவந்து அவர்முன் முழந்தாளிட்டு, "நற்போதகரே, நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

யேசுவோ அவனை நோக்கி, "என்னை நல்லவர் என்பானேன்? கடவுள் ஒருவர் அன்றி நல்லவர் எவருமில்லை. கட்டளைகள் உனக்குத் தெரியுமே. கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, அநியாயம் செய்யாதே, தாய் தந்தையரைப் போற்று" என்றார். அதற்கு அவன், "போதகரே, சிறுவமுதல் இவை எல்லாம் கடைப்பிடித்து வருகிறேன்" என்றான்.

யேசு, அவனை உற்று நோக்கி, அவன்மீது அன்புகூர்ந்தார். "உனக்கு ஒன்று குறைவாயிருக்கிறது. போய் உனக்குள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்பு வந்து என்னைப் பின்செல்" என்றார். அவன் இவ்வார்த்தையைக் கேட்டு, முகம் வாடி, வருத்தத்துடன் சென்றான். ஏனெனில், அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது.

யேசு சுற்றிலும் பார்த்துத் தம் சீடரிடம், "கடவுளின் அரசில் செல்வமுடையவர் நுழைவது எவ்வளவோ அரிது!" என்றார். சீடர், அவருடைய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டனர். யேசுவோ மீண்டும் அவர்களை நோக்கி, "பிள்ளைகளே, பணத்தை நம்பி இருப்பவர்கள் கடவுளின் அரசில் நுழைவது எவ்வளவோ அரிது! பணக்காரன் கடவுளின் அரசில் நுழைவதைவிட, ஊசிக் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

அவர்கள் இன்னும் அதிகமாக மலைத்துப்போய், "பின் யார்தான் மீட்புப் பெற முடியும்?" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர். யேசு, அவர்களை உற்றுநோக்கி, "மனிதரால் இது முடியாது. ஆனால், கடவுளுக்கு அப்படியன்று. கடவுளால் எல்லாம் முடியும்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கட்டளைகளைக் கவனிப்பது பயனுள்ள பலியாகும்.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* 35 : 1-15

கட்டளையைக் காப்பாற்றுகிறவன் காணிக்கையைப் பெருகச் செய்கிறான். கட்டளைகளைக் கவனிப்பதும், எல்லா அக்கிரமத்தினின்றும் அகல்வதும் பயனுள்ள பலியாகும். அநீதத்தை விட்டகன்று போவது பொறுத்தலை மன்றாடும் பலியாகவும், பாவங்களுக்கு மன்னிப்பாகவும் இருக்கின்றது.

மாவுக் காணிக்கை கொடுக்கிறவன் நன்றியறிந்த வணக்கம் செய்கின்றான், இரக்கம் காண்பிக்கிறவன் பலி ஒப்புக்கொடுக்கிறான். அக்கிரமத்தினின்று அகன்று போவது ஆண்டவருக்கு விருப்பமானது. அநீதத்தினின்று விலகுவது பாவ நிவாரணம்.

அப்பொழுது நீ ஆண்டவருடைய முன்னிலையில் வெறுங்கையனாய்க் காணப்படமாட்டாய். இவைகளெல்லாம் கடவுள் கட்டளையைப் பற்றிச் செய்யப்படுகின்றன. நீதிமானுடைய காணிக்கை பலிபீடத்தைச் செழிப்பிக்கின்றது; உன்னத கடவுள் திருமுன் இனிய மணமாய் இருக்கின்றது. நீதிமானுடைய பலி விருப்பமாய் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆண்டவர் அவனை மறந்துவிடமாட்டார்.

நல்ல மனத்தோடு கடவுளுக்கு வணக்கம் செலுத்து. உன் கைகளின் முதற் காணிக்கைகளைக் குறைக்காதே. ஈகையிலெல்லாம் மகிழ்ந்த முகம் காண்பி; உன் பத்திலொரு பாகங்களை மகிழ்ச்சியாய்க் காணிக்கை கொடு.

உன்னத கடவுள் கொடுத்திருப்பதற்குத் தக்க வண்ணம் நீயும் அவருக்குக் கொடு. நல்ல முகத்தோடு உன் கைகளில் உள்ளதைக்கொடு. ஏனென்றால், ஆண்டவர் பதிலளிப்பவராய் இருக்கிறார்; ஏழு மடங்கு உனக்குத் திரும்பக் கொடுப்பார். தகாத காணிக்கைகளை ஒப்புக் கொடுக்காதே. ஏனென்றால், அவர் அவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். அநீதப் பலியைக் கவனியாதே. ஏனென்றால், ஆண்டவர் நீதிபதியாய் இருக்கிறார்; அவரிடம் மனித ஒருதலைச் சார்பு இல்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 49: 5-6, 7-8, 14 & 23 (பல்லவி 23b)

பல்லவி : நேர்மையோடு நடப்பவனுக்கு
இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

5 'பலிகளினால் என்னுடன் உடன்படிக்கை செய்துகொண்ட
என் புனிதர்களை ஒன்று கூட்டுங்கள்' என்கிறார்.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்தியம்பும், ஏனெனில்,
கடவுளே நீதிபதியாய் வருகின்றார். பல்லவி

7 "என் மக்களே, எனக்குச் செவி கொடுங்கள், இதோ நான் பேசுகிறேன்:
இஸ்ராயேலே கேள், உனக்கெதிராய் நான் சான்று பகர்வேன்;
'நானே கடவுள், உன் கடவுள் நானே.
8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில், உன்
தகனப் பலிகள் எந்நேரமும் என் கண்முன்னே இருக்கின்றன. பல்லவி

14 இறை புகழ்ச்சி எனும் பலியை ஆண்டவருக்குச் செலுத்து:
உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து.
23 இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன் :
நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்."
பல்லவி

## 2.ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

உங்களுக்கென்றிருந்த வாழ்வைப் பற்றி இறைவாக்குரைத்தனர்.
எனவே, மட்டுமிதத்தோடு, முழு நம்பிக்கை வையுங்கள்.

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 10-16

அன்புக்குரியவர்களே:

மீட்பைக் குறித்துத்தான் இறைவாக்கினர் துருவித் துருவி ஆராய்ந்தனர்; உங்களுக்கென்றிருந்த அருளைப்பற்றி இறைவாக்குரைத்தனர். தங்களுக்குள்ளிருந்த கிறிஸ்துவின் ஆவி, கிறிஸ்து படவேண்டிய பாடுகளையும் அவற்றிற்குப் பின் வரவேண்டிய மகிமையையும் முன்னறிவித்த போது, அவர் குறிப்பிட்ட காலமும் சூழ்நிலையும் எவையென்று ஆராய்ந்தனர். இவற்றை முன்னறிவிக்கும் பணி தங்கள் பொருட்டன்று, உங்கள்

பொருட்டே என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் முன்னுரைத்தவையெல்லாம் விண்ணினின்று அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியால் நற்செய்தி அறிவிப்பவர்கள் வாயிலாய், இப்போது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காண வானதூதர்களும் வேட்கை கொள்ளுகின்றனர்.

ஆகவே, உங்கள் மனம் செயலாற்ற ஆயத்தமாயிருக்கட்டும். மட்டு மிதத்தோடு இருங்கள்; யேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் உங்களுக்கு அளிக்கப்பெறும் அருளின் மீது முழு நம்பிக்கை வையுங்கள். கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் என நடங்கள். முன்பு நீங்கள் அறியாமையில் உழன்ற போது உங்கள் நடத்தை இச்சைகளுக்கு ஏற்றதாய் இருந்தது. அப்படி நடவாமல், உங்களை அழைத்த இறைவன் பரிசுத்தராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையில் முற்றும் பரிசுத்தராய் இருங்கள். ஏனெனில், "யாம் பரிசுத்தர், ஆகவே நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" என எழுதப்பட்டிருக்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1,2-3ab, 3c-4 (பல்லவி : 2a)

பல்லவி : ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார். அவரது வலக்கரமும்
புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் : மக்கள் இனத்தார் காணத்
தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்,
அகமகிழுங்கள், களிகூறுங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

அல்லேலூயா

மத். 11 : 25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே,
போற்றி : ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச்
சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இம்மையில் இன்னல்களோடு இவற்றை நூறு மடங்காகவும் மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறுவான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *10:28-31*

அக்காலத்தில் :

இராயப்பர் யேசுவிடம், "இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோமே" என்று சொன்னார்.

அதற்கு யேசு, "தன் வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலங்களையோ, என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறந்துவிடும் எவனும், இம்மையில் இன்னல் களோடுகூட, வீடு, சகோதர சகோதரி, தாய், பிள்ளை, நிலபுலங்களை நூறு மடங்காகவும், மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

முதலானோர் பலர் கடைசியாவர், கடைசியானோர் பலர் முதலாவர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று புறவினத்தார் அறிவார்களாக.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 36:1-2a, 5-6, 13-19

எல்லாவற்றிற்கும் ஆண்டவரான கடவுளே, எங்கள்மீது இரக்கமாயிரும்; எங்களை நோக்கிப் பார்த்து, உம் இரக்கங்களின் தன்மையை, எங்களுக்குக் காண்பியும். உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று அறியவும், உம் மகத்துவங்களை வெளிப்படுத்தவும் தேடாத அஞ்ஞானிகள் மீது உமது பயத்தை வரவிடும். உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று, ஆண்டவரே, நாங்கள் அறிந்திருப்பதுபோல, அவர்களும் உம்மை அறியக்கடவார்கள்.

நீர் புதுமைகளைப் புதுப்பியும்; புதிய அற்புதங்களைச் செய்யும். உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று அறியவும், உம் மகத்துவங்களை வெளிப்படுத்தவும் யாக்கோபின் கோத்திரத்தையெல்லாம் ஒன்றுயச் சேரும். தொடக்கத்தில் இருந்ததுபோல் அவர்களை உரிமையாய் ஏற்றுக்கொள்வீர்.

உமது பெயரால் அழைக்கப்பட்ட மக்கள்மீதும், உம்முடைய மூத்த பிள்ளைக்கு ஒத்த இஸ்ராயேல் மீதும் நீர் இரக்கமாயிரும். நீர் புனிதப் படுத்திய நகரமும், இளைப்பாறும் நகரமுமாகிய யெருசலேமின்மீது இரக்கமாயிரும். உம் அற்புத வார்த்தைகளால் சீயோனையும், உமது மகிமையால் உம் மக்களையும் நிரப்பும்.

உமது படைப்பின் தொடக்கமுதல் இருக்கிறவைகளுக்குச் சான்று கொடும். முன்னிருந்த இறைவாக்கினர்கள் உமது பெயரால் உரைத்த இறைவாக்குகளை மெய்யாக்கும். உம் இறைவாக்கினர்கள் உண்மையுள்ளவர்களென்று நிரூபிக்க உம் ஊழியருக்குச் சம்பாவனை அளியும்; உம் ஊழியர்களின் மன்றுட்டைக் கேட்டருளும்.

உம் மக்களின்மேல் ஆரோனின் ஆசிக்குத் தகுந்தாற்போல, எங்களை நீதியின் வழியில் நடத்தும். இம்மண்ணிலுள்ள யாவரும், நீரே எக்காலத்தையும் காணும் கடவுள் என்று அறியக்கடவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 78: 8, 9, 11, 13 (பல்லவி: சிராக். 36:1b)

பல்லவி : **ஆண்டவரே, உமது இரக்கத்தின் ஒளியை
எங்களுக்குக் காட்டியருளும்.**

8 முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள்மேல் சுமத்தாதேயும், உமது இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக. ஏனெனில், நாங்கள் துயரத்துக்குள்ளானோம். பல்லவி

9 எங்கள் மீட்பரான இறைவா, உம் திருப்பெயரின் மகிமைக்காக எங்களுக்குத் துணை செய்யும், உம் பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை மன்னித்து எங்களுக்கு விடுதலையளித்தருளும். பல்லவி

11 சிறைப்பட்டவர்களின் பெருமூச்சு உம் காதில் விழுவதாக : சாவுக்குக் குறிக்கப்பட்டவர்களை உமது கரத்தின் வல்லமைக்கேற்ப விடுவித்தருளும். பல்லவி

13 நாங்களோ உம் மக்கள், உமது மேய்ச்சலின் ஆடுகள்; என்றென்றும் உம்மைப் போற்றிப் புகழ்வோம்; தலைமுறைத் தலைமுறையாக உமது புகழை எடுத்துரைப்போம். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*மாசுமறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தத்தினால் நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள்.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 1: 18-25

அன்புக்குரியவர்களே :

உங்கள் முன்னோரிடமிருந்து வழிவழியாய் வந்த பயனற்ற நடத்தையினின்று உங்களை விடுதலை ஆக்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது அழிவுறும் பொன்னும் வெள்ளியுமன்று, மாசு மறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தமே. உலகம் தோன்றுமுன்னே முன்னறியப்பெற்ற இவர் உங்களுக்காக இந்த இறுதிக் காலத்தில் வெளிப்பட்டார். இறந்தோரினின்று அவரை உயிர்ப்பித்து மகிமைப்படுத்திய கடவுள்மீது நீங்கள் விசுவாசம் கொள்வது அவரால்தான். இதனால் உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் கடவுள்மீது ஊன்றியிருக்கின்றன.

உண்மைக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆன்மாக்களைப் புனிதப்படுத்திய நீங்கள் சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு காட்டமுடியும். ஆகவே, ஒருவருக்கொருவர் ஆர்வமுடன் உளமாற அன்புசெய்யுங்கள். நீங்கள் புதிதாய்ப் பிறந்துள்ளீர்கள். அப்பிறப்பு உங்களுக்கு அழிவுள்ள வித்தினாலன்று, அழிவில்லா வித்தினால் கிடைத்தது. உயிருள்ளதும், என்றும் நிலைத்து நிற்பதுமான கடவுளின் வார்த்தையால் பிறந்துள்ளீர்கள். ஏனெனில், மனிதன் எவனும் புல்லைப்போன்றவன்; அவன் மகிமை அனைத்தும் புல்வெளிப் பூவைப்போன்றது. புல் உலர்ந்துபோம்; பூ உதிர்ந்துபோம். ஆனால், ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும். இச்சொல்லே உங்களுக்கு அளிக்கப்பட்ட நற்செய்தி.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147 : 1-2, 3-4, 8-9. (பல்லவி 1 a)

பல்லவி : **யெருசலேமே ! உன் ஆண்டவரைப் போற்றுவாய்.**
அல்லது : **அல்லேலூயா.**

1 யெருசலமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்:
சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்:
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசி யளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்;
கோதுமை வளத்தால் உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார்:
விரைந்து செல்கிறது அவருடைய வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார் :
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை:
தம் கட்டளைகளை அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

அல்லேலூயா மாற்கு. 10:45

அல்லேலூயா. மனுமகன் பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதோ, யெருசலேமுக்குப் போகிறோம்; அங்கு மனுமகன் கையளிக்கப்படுவார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 10 : 32-45

அக்காலத்தில் :

சீடர்கள் பயணமாகி யெருசலேமை நோக்கிப் போகையில், யேசு அவர்களுக்கு முன் நடந்துகொண்டிருந்தார். அவர்களோ திகைப்புற்றிருந்தனர். பின்னே வந்தவர்களும் அச்சங்கொண்டிருந்தனர். மீண்டும் பன்னிருவரையும் அழைத்துத் தமக்கு நேரப்போவதை அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் :

"இதோ! யெருசலேமுக்குப் போகிறோம். மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞரிடமும் கையளிக்கப்படுவார். அவர்கள் அவருக்குக் கொலைத் தீர்ப்பிட்டு, அவரைப் புறவினத்தாரிடம் கையளிப்பர். அவர்கள் அவரை எள்ளி நகையாடி, துப்பி, சாட்டையால் அடித்துக் கொல்லுவார்கள். அவரோ மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்" என்றார்.

செபெதேயுவின் மக்கள் யாகப்பரும் அருளப்பரும் அவரிடம் வந்து, "போதகரே, நாங்கள் கேட்கப்போவதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும்" என்றனர். இயேசுவோ அவர்களை நோக்கி, "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்றார். "நீர் உம் மாட்சிமையில் வீற்றிருக்கும்போது, எங்களுள் ஒருவர் உமது வலப்பக்கமும், மற்றவர் இடப் பக்கமுமாக அமர அருளும்" என்றார்கள்.

அதற்கு யேசு, "நீங்கள் கேட்பது என்னவென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்களும் குடிக்க முடியுமா? நான் பெறும் ஞானஸ்நானத்தை நீங்களும் பெற முடியுமா?" என்றார். "முடியும்" என்றனர். அதற்கு யேசு, "நான் குடிக்கும் கிண்ணத்தில் குடிப்பீர்கள்; நான் பெறும் ஞானஸ்நானத்தையும் பெறுவீர்கள். ஆனால் எனது வலப்பக்கமோ இடப்பக்கமோ அமர அருள்வது என்னுடையதன்று; யாருக்கு ஏற்பாடு ஆகியிருக்கிறதோ அவர்களுக்கே அது கிடைக்கும்" என்றார்.

அதைக் கேட்ட பதின்மரும், யாகப்பர்மேலும் அருளப்பர்மேலும் சினங்கொள்ளத் தொடங்கினர். யேசு, அவர்களைத் தம்மிடம் அழைத்து, அவர்களுக்குக் கூறியது: "புறவினத்தாரிடையே தலைவர்கள் எனப் படுவோர் அவர்களை அடக்கி ஆளுகின்றனர். அவர்களுள் பெரியோர் அவர்கள்மீது அதிகாரம் காட்டுகின்றனர். இது உங்களுக்குத் தெரியும். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுக்குள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும். ஏனெனில், மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவருடைய படைப்பு அவர் மகிமையால் நிறைந்திருக்கிறது.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 42 : 15-26

ஆண்டவருடைய செயல்களை நினைத்துக்கொள். நான் பார்த்தவைகளை அறிவிப்பேன். ஆண்டவருடைய வார்த்தைப்படியே அவர் உண்டாக்கினவை செய்கின்றன. கதிரவன் அனைத்தையும் ஒளிர்வித்துப் பார்த்தது. ஆண்டவருடைய செயல் அவர் மகிமையால் நிறைந்திருக்கின்றது.

தமது மகிமையில் நிறுத்தி நிலைப்படுத்தின தம் எல்லா அதிசயங்களையும் புண்ணியவான்கள் அறிவிக்கும்படி எல்லாம் வல்ல ஆண்டவர் செய்யவில்லையா ? அவர் பாதாளத்தையும் மனிதர் இதயத்தையும் பரிசோதித்தார் ; அவர்களுடைய சூழ்ச்சிநிறை எண்ணங்களை அறிந்து கொண்டார்.

ஏனென்றால், ஆண்டவர் எல்லாக் கலைகளையும் அறிந்தவர் ; யுகங்களின் அடையாளங்களைக் கண்டவர். அவர் கடந்தவைகளையும் வருங் காரியங்களையும் அறிவிக்கிறார் : மறைக்கப்பட்டவைகளின் குறிப்புகளைத் தெரிவிக்கிறார். எவ்வித எண்ணமும் அவருக்குத் தெரியாமல் போவதில்லை; எவ்வித வார்த்தையும் அவரிடத்தினின்று தன்னை மறைப்பதில்லை.

அவர் தமது ஞானத்தின் மகத்துவங்களை அலங்கரித்தார். அவரே யுகங்களுக்கு முன்னும் நித்திய காலத்திற்கும் இருக்கிறவர். யாதொன்றும் அவருக்குச் சேர்க்கப்படவில்லை ; குறைக்கப்படுவதில்லை. மற்றவர்களுடைய அறிவுரையும் அவருக்கு வேண்டுவதில்லை.

அவருடைய செயல்கள் யாவும் எவ்வளவோ விரும்பத்தக்கவை. ஆனால், அவைகளைப்பற்றி நாம் சிந்திப்பதோ ஒரு துளி அளவேயாம். இவை யாவும் வாழ்ந்திருக்கின்றன ; என்றும் நிலைத்திருக்கின்றன. தேவையானபோது, எல்லாம் அவருக்குக் கீழ்படிகின்றன.

எல்லாம் இரட்டையாயும் ஒன்றுக்கொன்று எதிரானவையாயும் இருக்கின்றன. அவர் யாதொன்றையும் குறைவாய்ச் செய்யவில்லை. ஒவ்வொன்றின் நன்மையையும் அவர் நிலைப்படுத்தினார். அவருடைய மகிமையைக் கண்டு சலித்துப்போகிறவன் யார் ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32: 2-3, 4-5, 6-7, 8-9, (பல்லவி 6a)

பல்லவி : **ஆண்டவரின் வார்த்தையால் வானங்கள் உண்டாயின.**

2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் : பத்து நரம்பு வீணையால்
அவரது புகழ் பாடுங்கள்.
3 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள் :
மகிழ்ச்சிக் குரலில் நன்றாகப் பாடுங்கள்.

பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார், அவருடைய
அருளால் பூமி நிறைந்துள்ளது.

பல்லவி

6 ஆண்டவருடைய வார்த்தையால் வானங்கள் உண்டாயின.
அவரது சொல்லால் வான் அணிகள் எல்லாம் உருவாயின.
7 குடத்தில் தண்ணீர் எடுப்பதுபோல் அவர் கடல் நீரை ஒன்று சேர்க்கிறார்.
பாத்திரங்களில் தண்ணீரை வைப்பதுபோல் ஆழ்கடலை அடைத்து
வைத்திருக்கிறார்.

பல்லவி

8 பூவுலகெல்லாம் ஆண்டவருக்கு அஞ்சுவதாக : அதில் வாழ்வோரெல்லாம்
அவருக்கு அஞ்சுவார்களாக.
9 ஏனெனில், அவர் ஒரு வார்த்தை சொல்லவே, எல்லாம் உண்டாயின :
அவர் கட்டளையிடவே அவை உருவாயின.

பல்லவி

## 2 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*நீங்கள் அரசகுருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம்,*
*உங்களை அழைத்தவரின் புகழ்ச்சிகளை அறிவிப்பீர்களாக.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 2-5, 9-12

அன்புக்குரியவர்களே.

புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்போல் கலப்பற்ற ஞானப்பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் வளர்ச்சி பெற்று மீட்படைவீர்கள். ஆண்டவர் இனியவர் எனச் சுவைத்தீர்களன்றோ!

அவரையணுகி வாருங்கள். மனிதரால் விலக்கப்பட்டு, கடவுள் முன்னிலையில் விலைமதிப்பற்றதாய்த் தேர்ந்து கொள்ளப்பட்ட உயிருள்ள கல் அவரே. நீங்களும் உயிருள்ள கற்களென, ஞான இல்லமாக அமைக்கப் படுவீர்களாக. அதில் யேசு கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்குகந்த ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டமாக அமைவீர்கள்.

நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக் கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்: உங்களை இருளினின்றும் தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி. ஒரு காலத்தில் நீங்கள் மக்கள் இனமாகவே இல்லை; இன்றோ நீங்கள் கடவுளுடைய மக்கள் இனம். ஒரு காலத்தில் நீங்கள் இரக்கம் பெறாதவர்கள்; இன்றோ இரக்கம் பெற்றவர்கள்.

அன்பிற்குரியவர்களே, நீங்கள் அந்நியரும், வெளி நாட்டினருமாய் இருப்பதால், ஆன்மாவிற்கு எதிராகப் போர் புரியும் ஊனியல்புக்குரிய இச்சைகளினின்று விலகுமாறு உங்களை வேண்டுகிறேன். புற மதத்தினர் உங்களைத் தீயவரென்று இப்போது தூற்றினாலும், உங்கள் நற்செய்கை களைப் பார்த்து, கடவுள் வரும் நாளில், அவர்கள் அவரை மகிமைப்படுத்து மாறு, அவர்களிடையே நீங்கள் நன்னடத்தையில் சிறந்து விளங்குங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99: 1-2, 3,4,5 (பல்லவி: 2b)

பல்லவி: ஆண்டவரின் திருமுன்னே அக்களிப்புடன் செல்லுங்கள்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு
ஆண்டவரை போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.
பெருமகிழ்வுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவர் கடவுள் என்று அறியுங்கள், அவரே நம்மை உண்டாக்கினவர்.
அவருக்கே நாம் சொந்தம்: அவருடைய மக்கள் நாம், அவருடைய
மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப்பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்; இன்னிசையுடன்
அவருடைய முற்றங்களில் நில்லுங்கள்: அவரைப் போற்றிப் புகழுங்கள்,
அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது:
அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

அல்லேலூயா

அரு. 8 : 12

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே உலகின் ஒளி; என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ராபூனி, நான் பார்வை பெறவேண்டும்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 10:46-52

அக்காலத்தில் :

எரிக்கோவிலிருந்து யேசுவும் அவர் சீடரும், ஒரு பெருங் கூட்டமும் புறப்படும்பொழுது திமேயுவின் மகன் பர்த்திமேயு என்ற கண் தெரியாத பிச்சைக்காரன் வழியோரத்தில் உட்கார்ந்திருந்தான். நாசரேத்தூர் யேசுதான் அவர் என்று கேள்வியுற்று, “தாவீதின் மகனே, யேசுவே, என்மீது இரக்கம் வையும்” என்று கூவத் தொடங்கினான். பேசாதிருக்கும்படி பலர் அவனை அதட்டினார்கள். அவனோ, “தாவீதின் மகனே, என்மீது இரக்கம் வையும்” என்று இன்னும் அதிகமாய்க் கூவினான்.

யேசு நின்று, “அவனை அழைத்து வாருங்கள்” என்றார். அவர்கள் குருடனை அழைத்து, “தைரியமாயிரு, எழுந்திரு, உன்னை அழைக்கிறார்” என்றார்கள். அவன் தன் போர்வையை எறிந்துவிட்டு, துள்ளிக் குதித்து அவரிடம் வந்தான். யேசு, “உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று அவனைக் கேட்க, குருடன், “ராபூனி, நான் பார்வை பெறவேண்டும்” என்றான்.

யேசு அவனை நோக்கி, “உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது, நீ போகலாம்” என்றார். அவன் உடனே பார்வை பெற்று, யேசுவுக்குப் பின்னே வழி நடந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நம் முன்னோர்கள் இரக்கமுள்ள மனிதர்: அவர்களது பெயர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும்.**

*44: 1, 9-12*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்

மகிமை பொருந்திய மனிதரையும், நம் முன்னோரையும் அவர்களுடைய சந்ததியில் வாழ்த்துவோம்.

நினைவு கூரப்படாத சிலர் உண்டு. அவர்கள் இராதவர்களைப் போல் ஒழிந்தார்கள். அவர்களும் அவர்களது பிள்ளைகளும் பிறவாதவர்களைப்போலப் பிறந்தார்கள். ஆனால், இரக்கத்தின் செயல்கள் குன்றாதவர்களோ இரக்கமுள்ள மனிதராய் இருக்கிறார்கள்.

அவர்கள் சந்ததியில் நன்மை நிலைத்திருக்கின்றது. அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகள் புனித உரிமையைக் கொண்டவர்கள். உடன்படிக்கைகளிலும் அவர்களுடைய சந்ததி நிலைகொண்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 149: 1-2, 3-4, 5-6a & 9b (பல்லவி 4a)*

பல்லவி : ஆண்டவர் தம் மக்கள் மீது அன்புகூர்கிறார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள் : புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக :
2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து அகமகிழ்வார்களாக : சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.
பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக : தம்புராவும் யாழும் கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக !
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிறார் : தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார்.
பல்லவி

மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக: தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக!
இத்தகைய மகிமை அவர்தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கடவுளுடைய பல்வகைப்பட்ட அருளின் சீரிய கண்காணிப்பாளர்களாக இருங்கள்.

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 4: 7-13

அன்புக்குரியவர்களே:

அனைத்தின் முடிவும் நெருங்கிவிட்டது. எனவே, நீங்கள் செபத்தில் ஈடுபடுவதற்குச் சம நிலையோடும், மட்டுமிதத்தோடும் வாழுங்கள். அனைத்திற்கும் மேலாக, ஒருவர்க்கொருவர் எப்போதும் அன்பு காட்டுங்கள்; ஏனெனில், அன்பு திரளான பாவங்களை அகற்றிவிடும். முணுமுணுக்காமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.

உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்ற வரத்திற்கு ஏற்றவாறு, கடவுளுடைய பலவகைப்பட்ட அருளின் சீரிய கண்காணிப்பாளர் என, கிடைத்த வரத்தைப் பிறர்க்குப் பணிபுரியப் பயன்படுத்துங்கள். பேசும் வரத்தைப் பெற்றவன், கடவுள் மொழியையே பேசுபவன்போல் பேசட்டும்; பணிசெய்யும் வரத்தைப் பெற்றவன், கடவுள் அளிக்கும் ஆற்றலை அடைந்தவன்போல் பணி செய்யட்டும்; இவ்வாறு யேசு கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் அனைத்திலும் மகிமை அடைவார். அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரித்தாகும். ஆமென்.

அன்பிற்குரியவர்களே, துன்பத் தீயில் நீங்கள் புடமிடப்படுகையில், ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென மலைத்துப்போகாதீர்கள். எந்த அளவிற்குக் கிறிஸ்துவின் பாடுகளில் நீங்கள் பங்குகொள்ளுகிறீர்களோ, அந்த அளவிற்கு அகமகிழுங்கள்; அவரது மகிமை வெளிப்படும்போது, உவப்புடன் அக்களிப்புக் கொள்வீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 95 : 10, 11-12, 13 (பல்லவி : 13a)

பல்லவி: **பூவுலகை ஆட்சிசெய்ய ஆண்டவர் வருகின்றார்.**

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்:
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; பூவுலகை அவர் நிலைநிறுத்தியுள்ளார்.
அது அசைவுறாது : மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கிறார். பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும் :
கடலும் அதில் வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும். பல்லவி

12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும் :
காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது ஆண்டவர் முன்
மகிழ்ச்சியுறும். பல்லவி

13 ஏனெனில், அவர் வருகின்றார் : பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார் :
மக்களை அவர்தம் சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

அல்லேலூயா யோவா. 15 : 16

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : "நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்; நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாகவும் அந்தப் பலன் நிலைத்திருக்கும் படியாகவும்மே." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் வீடு எல்லா இனத்தார்க்கும் செப வீடு எனப்படும் ;
கடவுள் மீது விசுவாசம் கொண்டிருங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:11-26

யேசுவை மக்கள் கூட்டம் புகழ்ந்து ஆர்ப்பரித்த பின், அவர் யெருசலேமிற்கு வந்து கோவிலுக்குள் சென்றார். எல்லாம் சுற்றிப் பார்த்தார். ஏற்கெனவே பொழுது போய்விட்டதால் பன்னிருவருடன் பெத்தானியாவுக்குச் சென்றார்.

மறுநாள் பெத்தானியாவிலிருந்து போகும்பொழுது அவருக்குப் பசித்தது. இலைகள் நிறைந்த ஓர் அத்திமரத்தைத் தொலைவிலே கண்டு, அதில் ஏதாவது அகப்படுமாவென்று பார்க்கப்போனார். அதன் அருகே வந்தபோது இலைகள் தவிர வேறொன்றும் காணவில்லை. ஏனெனில், அது அத்திப்பழக் காலமன்று. அவர் அதை நோக்கி, "இனி ஒருவனும் ஒருகாலும் உன் பழத்தை உண்ணாதிருக்கட்டும்" என்றார். அவருடைய சீடர்கள் இதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் யெருசலேமிற்கு வந்தார்கள். அவர் கோயிலுக்குள் சென்று அங்கே விற்பவர்களையும் வாங்குபவர்களையும் துரத்தத் தொடங்கி, நாணயம் மாற்றுபவர்களின் பலகைகளையும், புறா விற்பவர்களின் இருக்கைகளையும் கவிழ்த்துவிட்டார். யாதொரு பண்டத்தையும் கோயில் வழியாகக் கொண்டுபோக எவனையும் விடவில்லை. "என் வீடு எல்லா இனத்தாருக்கும் செப வீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறதல்லவா? நீங்களோ அதைக் கள்வர் குகையாக்கிவிட்டீர்கள்" என்று அவர்களுக்குப் போதிக்கலானார்.

இதைக் கேட்டுத் தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் அவரை எப்படித் தொலைக்கலாம் என்று வழிதேடினார்கள். ஏனெனில், மக்கள்கூட்டம் அனைத்தும் அவருடைய போதனையைப்பற்றி மலைத்துப் போனதால் அவர்கள் அவருக்கு அஞ்சியிருந்தார்கள். மாலையானதும் பட்டணத்தை விட்டு வெளியேறினர்.

காலையில் அவர்கள் அவ்வழியோரமாய்ப் போகும்பொழுது அந்த அத்திமரம் வேரோடு பட்டுப்போயிருக்கக் கண்டார்கள். இராயப்பர் நிகழ்ந்ததை நினைவுகூர்ந்து, அவரை நோக்கி, "ராபி, நீர் சபித்த அத்திமரம் இதோ! பட்டுப்போயிற்று" என்றார்.

யேசு மறுமொழியாக, "கடவுள் மீது விசுவாசங் கொண்டிருங்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: இம்மலையைப் பார்த்து, 'நீ பெயர்ந்து கடலில் விழு' என்று சொல்லி, தான் சொல்லியதெல்லாம் நிறைவேறும் என்று தன்னுள்ளத்தில் தயங்காது விசுவசிப்பவன் எவனோ, அவனுக்கு அது கைகூடும். ஆதலால் நான் உங்களுக்குக் கூறுகிறேன்: நீங்கள் செபத்தில் எதெதைக் கேட்பீர்களோ, அதையெல்லாம் பெற்றுக் கொண்டோம் என்று விசுவசியுங்கள், உங்களுக்குக் கைகூடும்.

நீங்கள் செபம் செய்ய நிற்கும்போது யார்மேலாவது உங்களுக்கு மனத்தாங்கல் ஏதேனும் இருந்தால், மன்னித்து விடுங்கள். அவ்வாறே வானகத்திலிருக்கும் உங்கள் தந்தையும் உங்களுடைய குற்றங்களை மன்னித்துவிடுவார்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் ஆண்டு

### முதல் வாசகம்

எனக்கு ஞானம் கொடுக்கின்றவரை மகிமைப்படுத்துவேன்.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 51: 17-27

உமக்கு நன்றியறிந்து புகழ்ச்சி கூறுவேன். ஆண்டவருடைய பெயரைத் துதிப்பேன்.

நான் இளைஞனாய் இருந்தபோதே, தவறிப் போவதற்கு முந்தியே, என் செபத்தில் வெளிப்படையாய் ஞானத்தைத் தேடினேன். கடவுள் ஆலயத்திற்கு முன்பாக அதற்காக மன்றாடினேன். இறுதிவரை அதைப் பின்பற்றுவேன். காலத்திற்குமுன் பழுக்கும் கொடிமுந்திரிப் பழத்தைப் போல் அது என்னிடம் வளமுற்றது. என் இதயம் அதன்பால் மகிழ்ச்சி கொண்டது.

என் பாதம் செவ்வழி நடந்தது. என் இளமைமுதல் நான் அதை ஆராய்ந்தேன். தாழ்மையாய் என் செவியைச் செலுத்தினேன். அதை அடைந்தேன். என்னிடம் மிகுந்த ஞானத்தைக் கண்டேன். அதில் மிகவும் விருத்தி அடைந்தேன்.

எனக்கு ஞானம் கொடுக்கின்றவரை மகிமைப்படுத்துவேன். அதைச் செய்வதற்குத் தீர்மானம் செய்துகொண்டேன். நன்மை செய்வதில் பெரும் முயற்சி எடுத்தேன். நான் கலக்கம் அடைய மாட்டேன்.

என் ஆன்மா அதில் போராடினது. அதைச் செய்வதில் நான் உறுதிப்படுத்தப்பட்டேன். என் கைகளை உயர்த்தினேன். அவற்றின் மூடத்தனத்தைப்பற்றிப் புலம்பினேன்.

ஞானத்தை நோக்கி என் ஆன்மாவை நடத்தினேன். அறிவில் அதைக் கண்டேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 18 : 7, 8, 9, 10 (பல்லவி : 8a)

பல்லவி : ஆண்டவரின் கட்டளைகள் நேரியவை, உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.

7 ஆண்டவருடைய திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது: ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத் தக்கவை: தேனினும் இனிமையானவை. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**தவறி விழாமல் உங்களைக் காக்கவும், தம் மாட்சிமையின் முன்னிலையில் உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லவர் கடவுளே.**

அப்போஸ்தலரான புனித யூதா எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 17, 20b-25

அன்புக்குரியவர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் முன்பே கூறியதை நினைவில் கொள்ளுங்கள் :

மிகப் பரிசுத்த விசுவாசத்தை அடிப்படையாய்க் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புங்கள் ; பரிசுத்த ஆவியின் ஆற்றலால் செய்யுங்கள். நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து தம் இரக்கத்தில் முடிவில்லா வாழ்வை அளிக்கும் நாளை எதிர்பார்ப்பவர்களாய், கடவுளன்பில் நிலைத்திருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். தயங்கிக் கிடக்கும் சிலர் உள்ளனர் ; அவர்களுக்கு இரக்கங்காட்டுங்கள். வேறு சிலரைத் தீயினின்று

வெளியேற்றிக் காப்பாற்றுங்கள். வேறு சிலருக்கு இரக்கம் காட்டும்போது எச்சரிக்கையாய் இருங்கள் : பாவ இச்சையால் மாசு படிந்த அவர்களுடைய ஆடையை முதலாய் அருவருத்துத் தள்ளுங்கள்.

தவறி விழாமல் உங்களைக் காக்கவும், தம் மாட்சிமையின் முன்னிலையில் அக்களிப்போடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்ல, நம் மீட்பராகிய ஒரே கடவுளுக்கு, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய், மகிமையும் மாட்சியும் ஆற்றலும் ஆட்சியும் அன்றும் இன்றும் என்றும் உரியன ! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 62 : 1, 2-3, 4-5 (பல்லவி: 1b)

பல்லவி : **ஆண்டவரே, என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது.**

1 இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன் : நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பதுபோல் என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது ; என் உடலும் உம்மை ஆசிக்கிறது. பல்லவி

2 உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன் : உமது வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.
3 வாழ்க்கையைவிட உமது அருள் எவ்வளவோ மேலானது : என் நாவும் உம்மைப் புகழ்ந்தேத்தும். பல்லவி

4 இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன் : உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.
5 செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் என் உள்ளம் நிறைவுபெறும் : என் வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும் ; என் நாவில் புகழ்ச்சி எழும். பல்லவி

அல்லேலூயா கொலோ. 3 : 16a, 17c

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக : அவர் வழியாகத் தந்தையாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

*11: 27-33*

அக்காலத்தில் :

யேசுவும் அவர் சீடர்களும் மீண்டும் யெருசலேமிற்கு வந்தார்கள். அவர் கோயிலின் முற்றத்தில் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது, தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் மூப்பரும் அவரிடம் வந்து, "எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்? அல்லது, இப்படிச் செய்ய உமக்கு அதிகாரம் கொடுத்தது யார்?" என்றார்கள்.

அதற்கு யேசு, "நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குக் கூறுவேன். அருளப்பருடைய ஞானஸ்நானம் வானகத்திலிருந்து வந்ததா? மனிதரிடமிருந்து வந்ததா? பதில் சொல்லுங்கள்" என்றார்.

அவர்கள் தங்களுக்குள் ஆலோசித்ததாவது: வானகத்திலிருந்து வந்தது என்போமாகில், பின் ஏன் நீங்கள் அவரை நம்பவில்லை என்று கேட்பார். இல்லை, மனிதரிடமிருந்து வந்தது என்று சொல்லலாமா? — பொது மக்களுக்கு அஞ்சினார்கள். ஏனெனில், எல்லாரும் அருளப்பரை உண்மையான இறைவாக்கினர் என்று கருதி வந்தனர். — எனவே, அவர்கள் யேசுவுக்கு மறுமொழியாக, "எங்களுக்குத் தெரியாது" என்றார்கள்.

அதற்கு யேசு, "நானும் எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என உங்களுக்குச் சொல்லேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஒன்பதாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ நான் ஆசியையும் சாபத்தையும் உங்கள் முன் வைக்கிறேன்.**

உப ஆகமத்திலிருந்து வாசகம் *11: 18, 26-28*

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது :

" நீங்கள் இவ்வாக்கியங்களை உங்கள் இதயங்களிலும் ஆன்மாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கைகளிலும் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவிலும் தொங்கவிடுங்கள்.

இதோ இன்று நான் ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். இன்று உங்களுக்குக் கற்பிக்கின்ற உங்கள் கடவுளாகிய ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவீர்களாயின் ( உங்களுக்கு ) ஆசி ( வரும் ). உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், இப்போது நான் உங்களுக்குக் காண்பிக்கிற வழியை விட்டு விலகி, நீங்கள் முன் அறிந்திராத பிற தேவர்களைப் பின்பற்றுவீர்களாயின், ( உங்களுக்குச் ) சாபம் ( வரும் )."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 30 : 1-2a, 2b-3, 16 & 24 (பல்லவி : 2b)

பல்லவி : **ஆண்டவரே, எனக்கு அடைக்கலந் தரும் பாறையாயிரும்.**

1 ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன், நான் ஒருநாளும் ஏமாற்றம் அடையவிடாதேயும் : உம்முடைய நீதியின்படி என்னை விடுவித்தருளும்.
2 என் பக்கம் செவிசாய்த்தருளும்; என்னை விடுவிக்க விரைந்தருளும். பல்லவி

எனக்கு அடைக்கலந்தரும் பாறையாயிரும்: கோட்டைபோலிருந்து என்னைக் காப்பாற்றும்.
3 ஏனெனில், நீர் எனக்குக் கற்கோட்டையாகவும் அரணாகவும் இருக்கின்றீர்: உம் பெயரின் பொருட்டு என்னை வழி நடத்தியருள்வீர்; நல்வழி காட்டுவீர். பல்லவி

16 கனிந்த உம் திருமுகத்தை எனக்குக் காட்டியருளும்: உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்.
24 ஆண்டவர்மீது நம்பிக்கையுள்ளவர்களே; மனத்திடன் கொள்ளுங்கள்: உங்கள் நெஞ்சம் உறுதிகொள்ளட்டும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகிறான்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 3: 21-25a, 28

சகோதரர்களே:

இப்பொழுது கடவுளின் திருவருட் செயல்முறை திருச்சட்டத்தின் சார்பின்றியே வெளியாக்கப்பட்டுள்ளது: அச்செயல்முறையையே திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்தனர். இத்திருவருட் செயல்முறைப்படி யேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் வழியாய்க் கடவுள் செயலாற்றுகின்றார். விசுவசிக்கும் அனைவருக்காகவுமே இப்படிச் செயலாற்றுகின்றார். இதில் இன வேறுபாடே இல்லை. ஏனெனில், எல்லாருமே பாவம் செய்தனர்: எல்லாருமே கடவுளது மாட்சிமையின் சாயல் இழந்து போயினர். ஆனால் இறைவன் அருளால் அவர்கள் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகிறார்கள்; கிறிஸ்து யேசு நிறைவேற்றிய விடுதலைச் செயலின் வாயிலாய் அங்ஙனம் ஆக்கப்படுகிறார்கள். விசுவாசத்தின் வழியாய்ச் செயல்படும் பரிகாரச் சாதனமாக அவரைக் கடவுள் இரத்தப் பலியாக்கினார்.

ஏனெனில், திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகிறான் என்பது என் கருத்து.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 15:5

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நான் திராட்சைக்கொடி, நீங்கள் அதன் கிளைகள்; ஒருவன் என்னுள்ளும், நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கற்பாறையின்மீதும் மணல்மீதும் கட்டப்பட்ட வீடுகள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7: 21-27

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே விண்ணரசு சேருவான். அந்நாளில் பலர் என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் தீர்க்கதரிசனம் கூறவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா?' என்பர். அதற்கு, 'உங்களை நான் அறிந்ததேயில்லை. நெறிகெட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள்' என்று அவர்களுக்கு நான் வெளிப்படையாகச் சொல்லுவேன்.

ஆகவே, நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது. ஆனால், அது விழவில்லை. ஏனென்றால், கற்பாறையின்மேல் ஊன்றியிருந்தது.

நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய மூடனுக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின் மேல் மோதியது. அது விழுந்தது. பெரிது அதன் அழிவு.!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நீயும் எகிப்தில் அடிமையாய் இருந்தாய் என்று நினைத்துக்கொள்.*

உப ஆகமத்திலிருந்து வாசகம் 5: 12-15

ஆண்டவர் கூறுவதாவது :

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டபடியே ஓய்வு நாளைப் புனிதமுள்ளதாக நினைக்கக்கடவாய். ஆறு நாளும் உழைத்து உன் வேலையெல்லாம் செய்வாய். ஏழாம் நாளோ சாபத்; அதாவது: உன் கடவுளாகிய ஆண்டவருடைய ஓய்வு நாளாம்.

அதிலே நீயேனும், உன் புதல்வன் புதல்வியேனும், வேலைக்காரன் வேலைக்காரியேனும், மாடு கழுதை வேறெந்த மிருகமேனும், உன் வாயிலின் உள்ளேயிருக்கிற அந்நியனேனும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். நீ இளைப்பாறுவதுபோல் உன் வேலைக்காரனும் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்.

நீயும் எகிப்திலே அடிமையாய் இருந்தாயென்றும், அங்கிருந்து உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னை வலுத்த கையாலும் ஓங்கிய புயத்தாலும் புறப்படச் செய்தாரென்றும் நினைத்துக்கொள். அது பற்றியே ஓய்வு நாளை அனுசரிக்கும்படி உனக்குக் கட்டளையிட்டார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 80 : 2-3, 4-5ab, 5c-7a, 9-10ab (பல்லவி : 1a)

பல்லவி : நம் துணைவராம் இறைவனுக்கு அக்களிப்போடு புகழ் பாடுங்கள்.

2 வீணை மீட்டுங்கள், முரசு கொட்டுங்கள், இன்னிசை எழுப்பும் யாழும்
சுரமண்டலமும் இசைத்துப் பாடுங்கள்.
3 அமாவாசை, முழுமதி, மற்றும் விழா நாட்களில் எக்காளம் ஊதுங்கள்.
பல்லவி

4 இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுத்த ஆணை அது, யாக்கோபின் இறைவன்
தந்த கட்டளை அது.
5 எகிப்தைவிட்டு வெளியேறியபோது இச்சட்டத்தை அவர் சூசையின்
இனத்தவர்க்குத் தந்தார். பல்லவி

அறியாத மொழியொன்று என் செவியில் விழுந்தது.
6 சுமையின்கீழ் அவர்கள் நொறுங்காத வண்ணம் அவர்களை விடுவித்தேன்.
மண்சுமந்து உழைத்துவந்த அவர்களை விடுவித்தேன்.
7 துன்ப வேளையில் நீ என்னைக் கூவி அழைத்தாய், நான் உனக்கு விடுதலை
அளித்தேன். பல்லவி

9 வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது ; அந்நிய தேவன் யாரையும்
நீ வணங்கலாகாது.
10 எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற்றிய கடவுளாகிய ஆண்டவர்
நாமே. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுவின் வாழ்வு உங்கள் உடலில் வெளிப்படுவதாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 4: 6-11

சகோதரர்களே:

'இருளினின்று ஒளி சுடர்க' என்று சொன்ன கடவுள்தாமே கிறிஸ்துவின் முகத்தில் வீசிய இறைமாட்சிமையின் அறிவொளி மிளிரும்படி, எங்கள் உள்ளங்களிலும் ஒளி சுடரச் செய்தார்.

ஆயினும், இணையற்ற இவ்வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, கடவுளுக்கே உரியது என்று விளங்கும்படி, இந்தச் செல்வத்தைக்கொண்டிருக்கும் நாங்கள் வெறும் மட்கலங்களாகவே இருக்கிறோம். எல்லாவகையிலும் வேதனையுறுகிறோம் ; ஆனால், ஒடுங்கிப்போவதில்லை. மனக்கலக்கம் அடைகிறோம் ; ஆனால், மனம் உடைவதில்லை. துன்புறுத்தப்படுகிறோம் ; ஆயினும், இறைவனால் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்படுகிறோம் ; ஆனால், அழிவுறுவதில்லை. யேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் யேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்.

ஏனெனில், யேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் ஊனுடலில் வெளிப்படும்படி, உயிரோடிருக்கும்போதே யேசுவுக்காக நாங்கள் எந்நேரமும் சாவுக்குக் கையளிக்கப்படுகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 17 : 17b, a

அல்லேலூயா. **ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை :**
**உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 2: 23-3: 6

ஓய்வு நாளில் வயல் வழியே யேசு செல்லும்பொழுது சீடர் நடந்து கொண்டே கதிர்களைக் கொய்யத் தொடங்கினர். பரிசேயரோ அவரை நோக்கி, "பாரும், ஓய்வு நாளில் செய்யத் தகாததை ஏன் செய்கிறார்கள்?" என்றனர்.

அதற்கு அவர், "தாவீதும் அவரோடு இருந்தவர்களும் உணவின்றிப் பசியாயிருந்தபொழுது அவர் என்ன செய்தார் என்று நீங்கள் ஒருபோதும் வாசித்ததில்லையோ? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்தபொழுது அவர் கடவுளின் இல்லத்தில் நுழைந்து, குருக்களைத் தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத காணிக்கை அப்பங்களைத் தாம் உண்டதுமன்றி, கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே" என்றார்.

அவர் அவர்களை நோக்கி, "ஓய்வுநாள் இருப்பது மனிதனுக்காக; மனிதன் இருப்பது ஓய்வு நாளுக்காக அன்று. ஆதலால் மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்" என்றார். ★

மீண்டும் செபக்கூடத்திற்கு வந்தார். அங்கே சூம்பிய கையன் ஒருவனிருந்தான். அவர்மேல் குற்றஞ்சாட்டும்படி, ஓய்வுநாளில் குணமாக்குவாராவென்று பார்த்துக்கொண்டே இருந்தனர்.

அவரோ சூம்பிய கையனை நோக்கி, "வந்து நடுவிலே நில்" என்றார். பின் அவர்களிடம், ஓய்வு நாளில் எது செய்வது முறை? நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். அவர் சினத்தோடு அவர்களைச் சுற்றிப் பார்த்து, அவர்களது மனக் கடினத்தைக் கண்டு வருந்தி, அவனை நோக்கி, "கையை நீட்டு" என்றார். நீட்டினான்; கை குணமாயிற்று.

பரிசேயரோ, வெளியே போய், ஏரோதியரோடு சேர்ந்து அவரை எப்படித் தொலைக்கலாமென்று அவருக்கெதிராக உடனே ஆலோசனை செய்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2: 23-28

(★ இக்குறியோடு முடித்துக்கொள்க.)

---

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*இங்கு வரும் புறவினத்தாருக்கும் செவிசாய்த்தருளும்.*

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 8: 41-43

அந்நாட்களில்: சாலமோன் ஆலயத்தில் மன்றாடிச் சொன்னதாவது:

"உம் மக்களாகிய இஸ்ராயேல் அல்லாத புறவினத்தார் உமது புகழ்பெற்ற பெயரையும் உமது கைவன்மையையும் உமது தோள் வலிமையையும் கேள்வியுற்று, உம் பெயரின் பொருட்டுத் தொலை நாட்டிலிருந்து வந்து, எங்கும் புகழ்பெற்ற இச்செய்தியால் அவர்கள் இங்கு வந்து விண்ணப்பம் செய்யும்போது, உமது உறைவிடமாகிய விண்ணிலிருந்து நீர் அவர்களது குரலைக் கேட்டு, அவர்கள் கேட்பவற்றை எல்லாம் அருள்வீராக. இதனால் பூமியின் மக்கள் எல்லாரும் உம் மக்கள் இஸ்ராயேலைப்போல் உமக்கு அஞ்சி, நான் கட்டின இவ்வாலயத்தில் உமது பெயர் விளங்குகிறதென்று அறிந்துகொள்வார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 116 : 1, 2 (பல்லவி : மாற்கு. 16 : 15)

பல்லவி : **உலகெங்கும் போய் நற்செய்தியினை அறிவியுங்கள்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்:
மண்ணுலக மக்களே, நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
பல்லவி

2 ஏனெனில், நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது:
நம்மீது அவர் கொண்டுள்ள பிரமாணிக்கம் என்றும் நிலைத்திருக்கும்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப் பார்த்தால்
நான் கிறிஸ்துவின் ஊழியனாய் இருக்கவே முடியாது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்தின் தொடக்கம் *1: 1-2, 6-10*

கலாத்திய நாட்டில் உள்ள சபைகளுக்கு,

மனிதர்களாலோ, மனிதன் வழியாகவோ ஏற்படுத்தப்படாமல், யேசுகிறிஸ்துவினாலும், அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்த பரம தந்தையாகிய கடவுளாலும் அப்போஸ்தலனாய் ஏற்படுத்தப்பட்ட சின்னப்பனாகிய யானும், என்னுடனிருக்கும் எல்லாச் சகோதரரும், எழுதுவது :

கிறிஸ்துவின் அருளால் உங்களை அழைத்தவரை விட்டுவிட்டு, இவ்வளவு குறுகிய காலத்தில், வேறொரு நற்செய்தியைப் பின்பற்றப் போய்விட்டீர்களே ! எனக்கே வியப்பாய் இருக்கிறது. வேறொரு நற்செய்தி இருக்கிறது என்பதன்று; உங்கள் மனத்தைக் குழப்பிக் கிறிஸ்துவின் நற்செய்தியைத் திரிக்க விரும்பும் சிலர் உள்ளதுதான் தொல்லை.

ஆனால் நாங்கள் அறிவித்த நற்செய்தியினின்றும் வேறான ஒன்றை, நாங்களோ, விண்ணிலிருந்து வந்த ஒரு தூதரோ, யார் வந்து அறிவித்தாலும், அவன் சபிக்கப்படுக ! ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இப்பொழுது திரும்பவும் சொல்லுகிறேன் : நீங்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தியினின்று வேறானதொன்றை எவனாவது உங்களுக்கு அறிவித்தால், அவன் சபிக்கப்படுக !

இப்படி நான் சொல்லும்போது, நான் தேடுவது, மனிதருடைய நல்லெண்ணமா, கடவுளுடைய நல்லெண்ணமா ? நான் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கவா பார்க்கிறேன் ? இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப்பார்த்தால், நான் கிறிஸ்துவின் ஊழியனாய் இருக்கவே முடியாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா *அரு. 3 : 16*

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவனும் அழியாமல் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு, அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 7: 1-10

அக்காலத்தில்:

மக்களுக்கு தம் உரையெல்லாம் கூறி முடித்த பின் யேசு கப்பர்நகூம் ஊருக்கு வந்தார். நூற்றுவர் தலைவன் ஒருவனுடைய வேலையாள் நோயுற்றுச் சாகக்கிடந்தான். தலைவன் அவன்மீது மிகுந்த பற்றுக்கொண்டிருந்தான். யேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு, யூதரின் மூப்பரை அவரிடம் அனுப்பித் தன் வேலையாளைக் காப்பாற்ற வருமாறு வேண்டினான்.

அவர்களும் யேசுவிடம் வந்து, வருந்திக் கேட்டதாவது: "உம்மிடம் இவ்வரம் பெறுவதற்கு அவர் தகுதியுள்ளவரே. ஏனெனில், நம் மக்கள்மீது அவருக்கு அன்பு மிகுதி. நமக்கெனச் செபக்கூடம் கட்டியிருக்கிறார்."

யேசு அவர்கள்கூடப் போனார். வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலிருந்த பொழுதே அவரிடம் நூற்றுவர் தலைவன் நண்பர்களை அனுப்பி, "ஆண்டவரே, இவ்வளவு தொந்தரை வேண்டாம்; நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். அதனால்தான் நானும் உம்மிடம் வரத் தகுதியற்றவன் எனக் கருதினேன். ஒரு வார்த்தை சொல்லும். என் வேலையாள் குணமாகட்டும். ஏனெனில், நான் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயினும் எனக்கு அடியிலும் படைவீரர் உள்ளனர். ஒருவனை நோக்கிப் 'போ' என்றால் போகிறான்; வேறொருவனை நோக்கி 'வா' என்றால் வருகிறான். என் வேலையாளைப் பார்த்து 'இதைச் செய்' என்றால் செய்கிறான்" என்றான்.

அதைக் கேட்ட யேசு அவனை வியந்து தம்மைப் பின்தொடரும் மக்கட் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்து, "இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்து வேலையாள் உடல் நலத்தோடு இருப்பதைக் கண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தொபியாசு அரசனுக்கு அஞ்சுவதைவிட கடவுளுக்கு அதிகம் அஞ்சினர்.**

தொபியாசு ஆகமத்தின் தொடக்கம் 1: 1a, 2; 2: 1-9

நெப்தலி குலத்தினரான தொபியாசு என்பவர் நெப்தலி நகரில் வாழ்ந்து வந்தார். அசீரிய அரசன் சல்மனசாரின் காலத்தில், அவர் சிறைப் படுத்தப்பட்டு அடிமையானார். அவ்வடிமைத்தனத்தின் போதும், அவர் உண்மை வழியை விட்டு விலகாது நின்றார்.

ஆண்டவரின் திருவிழாவின்போது தொபியாசின் வீட்டில் பெரிய விருந்து ஒன்று தயாரிக்கப்பட்டது. அப்பொழுது அவர் தம் மகனை நோக்கி, "நம் குலத்தாரில் தெய்வபயமுள்ள சிலரை விருந்துக்கு அழைத்து வா" என்று சொன்னார். அவனும் அவ்வாறே சென்றான். திரும்பி வந்தபோது, "இஸ்ராயேல் மக்களுள் ஒருவன் கொலை செய்யப் பட்டுத் தெருவிலே கிடக்கிறான்" என்று தன் தந்தையிடம் சொல்லவே, அவர் அவ்வினாடியே பசியோடு பந்தியை விட்டு எழுந்து பிணம் கிடந்த இடத்திற்குச் சென்றார். சூரியன் மறைந்தபின் அவனை எச்சரிக்கையாய் அடக்கம் செய்யலாம் என்று எண்ணி, ஒருவருக்கும் தெரியாமல் பிணத்தைத் தம் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு வந்தார். அதை அங்கே மறைத்து வைத்துவிட்டு, ஆறுத்துயரோடும் திகிலோடும் உணவு அருந்தினார். ஏனெனில், "உங்கள் திருநாட்களைத் துக்கமும் புலம்பலும் நிறைந்த நாட்களாக மாற்றுவோம்" என்று இறைவாக்கினர் ஆமோசு மூலம் கடவுள் கூறியிருந்த வாக்கு அவரது நினைவுக்கு அப்போது வந்தது.

சூரியன் மறைந்தபின், அவர் போய்ப் பிணத்தைப் புதைத்தார். எனவே, அவருடைய அயலார் அனைவரும் அவரைக் கடிந்து பேசி, "இதே செயலைச் செய்ததற்காக முன்பு ஒரு முறை சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டும், எப்படியோ தப்பித்துக்கொண்டீர். மறுபடியும், நீர் இறந்தோரை அடக்கம் செய்யத் துணிந்தது ஏன்?" என்றனர். ஆனால் அரசனுக்கு அஞ்சுவதைவிடத் தொபியாசு கடவுளுக்கே அதிகம் அஞ்சி வந்தார். ஆதலால், கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களைத் தூக்கி வந்து தம் வீட்டிலேயே ஒளித்து வைத்து, நள்ளிரவில் அவற்றை அடக்கம் செய்து வந்தார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 111 : 1-2, 3-4, 5-6. (பல்லவி 1a)

பல்லவி : ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்ருேன்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்ருேன் : அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும் : நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசி பெறும். பல்லவி

3 செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உலவும் : அவனுடைய ஈகை என்றென்றும் நிலைக்கும்.
4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான் : கருணை, இரக்கம், நீதி உள்ளவனுய் இருப்பான். பல்லவி

5 மனமிரங்கி கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிருன் : தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
6 எந்நாளும் அவன் அசைவுருன் ; என்றென்றும் அவன் மக்கள் நினைவில் வாழ்வான். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**மதிப்புமிக்க கொடைகளை நமக்கு வழங்கினுர் ;
அவற்றினுல் நீங்கள் இறை இயல்பில் பங்குபெறக்கூடும்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
இரண்டாம் திருமுகத்தின் தொடக்கம் 1: 1-7

நம் கடவுளும் மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் நீதிக்கேற்ப, நாங்கள் பெற்ற விசுவாசத்தைப் போலவே மதிப்புள்ள விசுவாசத்தைப் பெற்றுள்ளவர்களுக்கு, யேசு கிறிஸ்துவின் ஊழியனும் அப்போஸ்தலனுமான சீமோன் இராயப்பன் எழுதுவது : கடவுளையும் நம் ஆண்டவராகிய யேசுவையும் அறியச் செய்யும் அறிவினுல், உங்களுக்கு அருளும் சமாதானமும் பெருகுக !

தமக்கேயுரிய மாட்சிமையாலும், ஆற்றலாலும் நம்மை அழைத்த இறைவனை அறியச் செய்யும் அறிவின் வாயிலாக, இறைப்பற்றுடன் கூடிய வாழ்வை வளர்க்கும் அனைத்தையும் அவரது தெய்வீக வல்லமை நமக்கு

வழங்கியுள்ளது. இறைவன் வாக்களித்த கொடைகள் அந்த மாட்சிமையாலும் ஆற்றலாலும் நமக்கு வழங்கப்பட்டன. மதிப்பும் மாண்பும் மிக்க இக்கொடைகளால் நீங்கள், இச்சையின் விளைவாக இவ்வுலகிலுள்ள அழிவுக்குத் தப்பி, இறை இயல்பில் பங்குபெறக்கூடும்.

இதை மனத்தில் வைத்து, முழு ஊக்கங்காட்டி, உங்களிடம் விசுவாசத்தோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மனவுறுதியும், மனவுறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேசமும், சகோதர நேசத்தோடு அன்பும் இணைந்திருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 90 : 1-2, 14-15ab, 15c-16 (பல்லவி : 2b காண்)

பல்லவி : **என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்.**

1 உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவனே,
2 நீ ஆண்டவரை நோக்கி: "நீரே என் புகலிடம், நீரே என் அரண், என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். பல்லவி

14 அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன்.
என் பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்.
15 என்னை நோக்கிக் கூப்பிடுவான் அவன் செபத்தைக் கேட்பேன், துன்ப வேளையில் அவனோடு இருப்பேன். பல்லவி

16 அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன். நீடிய வாழ்வினால் அவனுக்கு மனநிறைவு தருவேன் : என் மீட்பினை அவனுக்குக் காட்டுவேன். பல்லவி

அல்லேலூயா

திருவெளி. 1 : 5ab

அல்லேலூயா. யேசு கிறிஸ்துவே, நம்பிக்கைக்குரிய சாட்சி நீரே, இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைமையானவரும் நீரே : நீர் எங்களுக்கு அன்புசெய்து, உமது இரத்தத்தினால் எங்களைப் பாவங்களினின்று விடுவித்தீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அன்புமிக்க மகனை அவர்கள் பிடித்துக்கொன்று,
திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்து விட்டார்கள்.**

✠ **மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 12: 1-12

**அக்காலத்தில்:**

தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், மூப்பர் ஆகியோரிடம் யேசு உவமைகளில் பேசத் தொடங்கினார்.

"ஒருவன் ஒரு திராட்சைத் தோட்டம் வைத்து, சுற்றிலும் வேலி யடைத்து, அதில் ஆலைக்குழி தோண்டி, கோபுரமும் கட்டி, அதைக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விட்டு வெளியூர் சென்றான்.

பருவகாலத்தில் அக்குடியானவர்களிடமிருந்து தோட்டத்துப் பலனில் தன் பங்கை வாங்கி வரும்படி வேலையாள் ஒருவனை அனுப்பினான். அவர்களோ அவனைப் பிடித்து அடித்து வெறுங்கையாய் அனுப்பி விட்டார்கள். மீண்டும் மற்றோர் வேலையாளை அவர்களிடம் அனுப்பினான். அவனையும் அவர்கள் தலையில் அடித்து இழிவுபடுத்தினார்கள். வேறொரு வனையும் அனுப்பினான். அவனைக் கொன்றனர். வேறு பலரை அனுப்பினான். அவர்களுள் சிலரை அடித்து, சிலரைக் கொன்றுபோட்டனர்.

அனுப்புவதற்கு இன்னும் ஒருவனே இருந்தான். அவன் அவனு டைய அன்பார்ந்த மகன். 'என் மகனை மதிப்பார்கள்' என்று, இறுதியாக அவனை அவர்களிடம் அனுப்பினான். குடியானவர்களோ, 'இவனே சொத்துக்குரியவன்; வாருங்கள் இவனைக் கொன்று போடுவோம், சொத்து நம்முடையதாகும்' என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித்துக் கொன்று திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்து விட்டார்கள்.

இனி, தோட்டத்துக்கு உரியவன் என்ன செய்வான்? வந்து, அக்குடி யானவர்களை ஒழித்துத் தோட்டத்தை வேறு ஆட்களுக்கு விடுவான். 'கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது. ஆண்டவர் செயல் இது. நம் கண்ணுக்கு வியப்பே' என்று மறைநூலில் நீங்கள் படித்த தில்லையா?" என்றார்.

தங்களைக் குறித்தே இவ்வுவமையைக் கூறினார் என்று அவர்கள் உணர்ந்து, அவரைப் பிடிக்க வழி தேடினார்கள். ஆனால் பொதுமக்களுக்கு அஞ்சி அவரை விட்டுப் போனார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**பார்வை இழந்ததுபற்றிக் கடவுளுக்கு எதிராய் அவர் முறையிடவில்லை.**

தொபியாசு ஆகமத்திலிருந்து வாசகம். *2: 10-23*

தொபியாசு அன்று அடக்கம் செய்த களைப்பில், தம் வீட்டிற்குத் திரும்பி வந்து, அங்கே சுவரோரமாய்க் கீழே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது தூக்கணாங்குருவிக் கூண்டிலிருந்து சூடான எச்சம் தூங்கிக்கொண்டிருந்த அவர் கண்களில் விழ, அவை குருடாயின.

புனித யோபின் பொறுமையைப்போல், இவரது பொறுமையும் இவருடைய சந்ததியாருக்கு எடுத்துக்காட்டாய் இருக்கும் பொருட்டே, இச்சோதனை இவருக்கு நேரிடக் கடவுள் திருவுளமானார். இவர் இளமை முதல் எப்பொழுதும் கடவுளுக்கு அஞ்சி, அவர் கட்டளைகளைக் கடைப்பிடித்து வந்திருந்தபடியால், பார்வையிழந்த இந்த அவல நிலையிலும், அதுபற்றிக் கடவுளுக்கு எதிராய் அவர் முறையிடவில்லை. அதற்கு மாறாக, அவர் தெய்வ பயத்தில் நிலையாய் நின்று தம் வாழ்நாள் முழுவதும் கடவுளுக்கு நன்றி கூறி வந்தார்.

ஏனெனில், புனித யோபை மன்னர்கள் பழித்ததுபோல், இவருடைய உற்றார் உறவினரும் இவரது நடத்தையை இகழ்ந்து பேசினார்கள். "நீர் எதை நம்பித் தர்மம் கொடுத்தும், இறந்தோரை அடக்கம் செய்தும் வந்தீரோ, அந்த உமது நம்பிக்கை வீண்போயிற்று அன்றோ?" என்று அவரைப் பழித்து வந்தார்கள். தொபியாசோ அவர்களைக் கடிந்து, "நீங்கள் இவ்வாறு பேசாதீர்கள். ஏனெனில், நாம் புனிதர்களின் மக்கள். கடவுள்மேல் என்றுமே தளரா விசுவாசம் கொண்டிருப்போருக்கு அவர் அளிக்கவிருக்கும் மறுவுலக வாழ்வை எதிர்பார்த்திருப்போர் நாம்" என்பார்.

அவருடைய மனைவி அன்னாள் நாள்தோறும் நெசவு வேலைக்குப் போய்த் தன் சொந்த உழைப்பால் பெறக்கூடிய ஊதியத்தை வீட்டிற்குக் கொண்டு வருவாள். ஒருநாள், அவள் ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கி அதை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு வந்தாள். அவளுடைய கணவர் அது கத்தக் கேட்டு, "இது களவு செய்யப்பட்ட ஆடு அல்ல என்று பார்த்துக்கொள். களவு செய்யப்பட்டதாயின் அதன் உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்துவிடு. ஏனெனில், களவு செய்யப்பட்ட பொருளைத் தொடுவதும் உண்ணு

வதும் நமக்கு ஆகாது" என்றார். இதைக் கேட்ட அவருடைய மனைவி கோபம் கொண்டு, "உமது நம்பிக்கை எல்லாம் வீண் என்றும், உம் தருமச் செயல்கள் அனைத்தும் இவ்வளவுதான் என்றும் இப்போது நான் தெளிவாய்க் காண்கிறேன்" என்றாள். இவ்வாறு அவள் அவரை ஏசினாள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 111 : 1-2, 7bc-8, 9 (பல்லவி : 7c காண்)*

பல்லவி : **நீதிமானின் இதயம் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டது : எதையும் அது தாங்கக் கூடியது.**

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன் : அவருடைய
கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும் : நேர்மை
யுள்ளோரின் சந்ததி ஆசி பெறும். பல்லவி

7 தீமையான செய்தி எதுவும் அவனை வருத்தத்துக்குள்ளாக்காது : அவன்
இதயம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து எதையும் தாங்கக்கூடியது.
8 அவன் நெஞ்சம் நிலையாய் இருக்கும் ; அவனுக்கு அச்சம் மேலிடாது : தன்
எதிரிகள் சிதறுண்டு போவதை அவன் பார்ப்பான். பல்லவி

9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான் ; அவனது ஈகை என்றும் நிலைத்திருக்கும்:
அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**புதிய வானமும் புதிய வையமும் வருமென்று காத்திருக்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 11-15a, 17-18

அன்புக்குரியவர்களே :

கடவுளுடைய நாளுக்காகக் காத்திருந்து, அது விரைவில் வர உழைக்கும் நீங்கள், பரிசுத்த நடத்தையிலும் இறைப்பற்றிலும் எவ்வளவோ சிறந்து விளங்கவேண்டும். அந்நாள் வரும்போது வானங்கள்

நெருப்புக்கிரையாகி மறைந்தொழியும், ஐம்பெரும் பூதங்கள் வெந்துருகிப் போகும். நாமோ, நீதி குடிகொள்ளும் புதிய வானமும் புதிய வையமும் அவர் வாக்களித்தபடியே வருமென்று காத்திருக்கிறோம்.

ஆகவே, அன்புக்குரியவர்களே, இவற்றிற்காகக் காத்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், அமைதியான நிலையில் காணும்படி உழைத்துவாருங்கள். நம் ஆண்டவரின் பொறுமையே நமக்கு மீட்பு என எண்ணுங்கள்.

அன்புக்குரியவர்களே, நீங்களோ இவையெல்லாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறீர்கள். தீயவர்களின் தவறான கொள்கைகளால் இழுபட்டு, உங்கள் உறுதி நிலையினின்று விழுந்து விடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நம் ஆண்டவரும் மீட்பருமான யேசு கிறிஸ்துவின் அருளிலும், அவரை அறியச்செய்யும் அறிவிலும் வளர்ச்சியடையுங்கள். அவருக்கே இன்றும் என்றும் மகிமை உண்டாகுக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 89 : 2, 3-4, 10, 14 & 16 (பல்லவி : 1)

பல்லவி : ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக
நீரே எங்களுக்குப் புகலிடம்.

2 மலைகள் தோன்றுமுன்பே, பூமியும் உலகும் உண்டாகுமுன்பே, ஊழ் ஊழிக் காலமாக இறைவா, நீர் இருக்கிறீர். பல்லவி

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர் :
“ மனுமக்களே மண்ணாகத் திரும்புங்கள் ” என்கிறீர்.
4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட, கடந்துபோன நேற்றைய தினத்தைப்போலவும், ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன. பல்லவி

10 எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகள் ; வலிமையுடையோர்க்கு எண்பது ; அவற்றில் பெரும் பகுதி வருத்தமும் வீண் கவலையுமே ! ஏனெனில், அவை விரைவில் கழிந்து போகின்றன : நாங்களும் அவற்றோடு போய்விடுகிறோம். பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் : எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
16 உம் திருச்செயலை உம் அடியார்கள் காண்பார்களாக : அவர்களுடைய மக்களுக்கு உம் மகிமை விளங்குவதாக. பல்லவி

அல்லேலூயா

எபே. 1:17-18 காண்

**அல்லேலூயா.** இறைவன் நம்மை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்து கொள்ளும்படி நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக்கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**செசாருடையதை செசாருக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *12: 13-17*

அக்காலத்தில் :

தலைமை குருக்களும், மறைநூல் அறிஞரும் மூப்பரும் யேசுவைப் பேச்சில் சிக்கவைக்கும்படி, பரிசேயர், ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பினார்கள். அவர்கள் அவரிடம் வந்து, "போதகரே, நீர் உண்மையுள்ளவர். எவர் தயவும் உமக்கு வேண்டியதில்லை. ஏனெனில், முகத்தாட்சணியம் பாராமல் கடவுளின் வழியை உண்மைக் கேற்பப் போதிக்கின்றீர் என்று எங்களுக்குத் தெரியும். செசாருக்கு வரி கொடுப்பது முறையா? இல்லையா? கொடுக்க வேண்டுமா? வேண்டாமா?" என்று கேட்டார்கள்.

அவர்களுடைய கபடத்தை அறிந்து, "ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? ஒரு வெள்ளிக்காசை என்னிடம் கொண்டுவாருங்கள், நான் பார்க்கவேண்டும்" என்றார். அவர்கள் கொண்டுவந்தார்கள். "இவ்வுருவமும் எழுத்தும் யாருடையவை?" என்றார். "செசாருடையவை" என்றனர்.

யேசு, "செசாருடையதைச் செசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**அவர்கள் இருவரின் மன்றாட்டுக்களும் உன்னத கடவுளின் மகிமைத் திருமுன் கேட்கப்பட்டன.**

தோபியாகமத்திலிருந்து வாசகம் 3: 1-11, 24-25

அந்நாட்களில் :

தோபியாக பெருமூச்செறிந்து கண்ணீர் விட்டு அழுது செபிக்கத் தொடங்கினார்: "ஆண்டவரே, நீர் நீதியுள்ளவர். உம் தீர்ப்புகள் அனைத்தும் நேர்மையானவையே: உம் வழிகள் எல்லாம் இரக்கமும் உண்மையும் நீதியுமானவையே. ஆண்டவரே, இப்பொழுது அடியேனை நினைவுகூர்ந்தருளும். என் பாவங்களுக்காகப் பழிவாங்கவும் வேண்டாம்; என் குற்றங்களையும் என் பெற்றோரின் தீச்செயல்களையும் நினைக்கவும் வேண்டாம். ஏனெனில், நாங்கள் உம் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தோமில்லை. அதன்பொருட்டு நீர் எங்களை எந்நாடுகளில் சிதறடித்தீரோ, அந்நாட்டுக் குடிகளெல்லாம் எங்களைக் கொள்ளையிடவும் சிறைப் படுத்தவும் சாகடிக்கவும் கேலி செய்யவும், இட்டுக்கட்டி எங்களைப் பழிக்கவும் எங்களை அவர்கள் கையில் ஒப்புவித்து விட்டீரே.

இப்போதும் ஆண்டவரே, நாங்கள் உம் கட்டளைகளின்படி செயல் புரியாமலும், உமது திருமுன் நேர்மையுடன் நடவாமலும் போனதால் அன்றோ உமது பயங்கரமான தீர்ப்புகளுக்கு ஆளானோம்? எனவே ஆண்டவரே, உமது விருப்பம்போல் என்னை நடத்தி, என்னை அமைதியில் இளைப்பாறக் கட்டளையிட்டருளும். ஏனெனில், நான் உயிர்வாழ்வதைவிட இறப்பதே மேல்" என்று வேண்டிக்கொண்டார்.

அதே நாளில் நிகழ்ந்ததாவது: மேதியருடைய ஊராகிய இராகேசு நகரில் இரகுவேலின் மகள் சாராளை அவளுடைய தந்தைவீட்டு ஊழியக்காரிகளில் ஒருத்தி பழித்துப் பேசினாள். அதற்குக் காரணம், அவள் ஏழு கணவர்களுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவர்கள் அவளோடு சேர்ந்தவுடன் அசுமோதேயுசு என்ற பேய் அவர்களைக் கொன்றுபோட்டது. ஆகையால் அவ்வூழியக்காரி செய்த குற்றத்தைக் குறித்து சாராள் அவளைக் கடிந்து பேசினபோது, வேலைக்காரி அவளை நோக்கி, "நீ உன் கணவர்களைக் கொன்றவள்; உன் வயிற்றில் பிறந்த மகனையோ மகளையோ நாங்கள் பூமியின்மீது காணாதிருக்கட்டும். நீ ஏற்கெனவே ஏழு கணவர்களைக் கொன்று விட்டாய். அவ்விதமே என்னையும் கொல்ல உனக்கு விருப்பமோ?" என்றாள். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் சாராள் தன் வீட்டின் மாடிக்குப்போய் மூன்று நாள் இரவு பகலாக ஒன்றும் உண்ணாமலும்

குடியாமலும் இருந்தாள். செபத்தில் நிலைத்து, இந்த நிந்தையினின்று தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கண்ணீர் விட்டு அழுது கடவுளை இறைஞ்சி மன்றாடி வந்தாள்.

அந்நேரத்திலேயே அவர்கள் இருவரின் மன்றாட்டுகளும் உன்னத கடவுளின் மகிமைத் திருமுன் கேட்டருளப்பட்டன. ஆதலால், ஒரே காலத்தில் ஆண்டவர் திருமுன் மன்றாடி வேண்டிக்கொண்ட அவ்விருவரின் குறையும் நீங்கும் பொருட்டு, ஆண்டவரின் புனித தூதர் இரபாயேலைக் கடவுள் அனுப்பி வைத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 24 : 2-3, 4-5ab, 6-7bc, 8-9 (பல்லவி : 1b)

பல்லவி : ஆண்டவரே, உம்மை நோக்கி
என் ஆன்மாவை எழுப்பினேன்.

2 உம்மீது நம்பிக்கை வைக்கிறேன் ; நான் ஏமாற்றம் அடைய விடாதேயும் : என் எதிரிகள் என் நிலையைக் கண்டு அக்களிக்க விடாதேயும்.
3 ஏனெனில், உம்மை நம்பும் எவரும் வெட்கிப் போகார்: கண்மூடித்தனமாய் வாக்குறுதி தவறுவோரே வெட்கிப் போவர்.
பல்லவி

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும் : உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.
5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும் : என் மீட்பராம் இறைவன் நீரே.
பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும் : ஆதிகாலமுதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.
7 உம் அருள் அன்பிற்கேற்ப என்னை நினைவுகூரும், உமது அருள்நன்மையின் பொருட்டென்னை மறவாதேயும்.
பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர் : ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.
9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார், எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உம்மீது என் கைகளை விரித்ததால் உமக்குள் வந்துள்ள கடவுளின் வரத்தைப் புத்துயிர்பெறச் செய்யும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்தின் தொடக்கம் *1: 1-3; 6-12*

என் அன்பு மகன் தீமோத்தேயுவுக்கு, கிறிஸ்து யேசுவுக்குள் நமக்குள்ள வாழ்வைப்பற்றிய வாக்குறுதியை அறிவிப்பதற்குக் கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனாக அனுப்பப்பட்ட சின்னப்பன் யான் எழுதுவது: பரம தந்தையாகிய கடவுளிடமிருந்தும், நம் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவிடமிருந்தும் உமக்கு அருளும், இரக்கமும் சமாதானமும் உண்டாகுக!

அல்லும் பகலும் என் செபங்களில் உம்மை இடையறாது குறிப்பிட்டு, முன்னோர் செய்ததுபோலவே குற்றமற்ற மனச்சாட்சியோடு நான் வழிபடும் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்.

உம்மீது என் கைகளை விரித்ததால் கடவுளின் வரம் உமக்குள் வந்துள்ளது. அதை நீர் தீயெனப் பற்றியெரியச் செய்யவேண்டுமென்று உமக்கு நினைவுறுத்துகிறேன். கடவுள் தம் ஆவியால் கோழை உள்ளத்தை நமக்கு அருளவில்லை; வலிமையும் அன்பும் விவேகமும் கொண்ட உள்ளத்தையே அருளினார். ஆதலின் ஆண்டவரைப்பற்றிச் சாட்சியம் கூற வெட்கப்படாதீர். அவருடைய கைதியான என்னைக் குறித்தும் வெட்கப்படாதீர். கடவுளின் வல்லமை பெற்று நற்செய்திக்காக என்னோடு துன்புறத் தயங்காதீர். கடவுள் நம்மை மீட்டு நமக்குப் பரிசுத்த அழைப்பை அளித்துள்ளார். நம்முடைய செயல்களை முன்னிட்டு அவ்வாறு செய்யவில்லை; தாமே வகுத்த திட்டத்திற்கும் தமது அருளுக்கும் ஏற்பவே அவ்வாறு செய்தார். இவ்வருள் எல்லாக் காலங்களுக்கு முன்னரே கிறிஸ்து யேசுவில் நமக்குக் கொடுக்கப்பட்டது;

இக்காலத்தில் நம் மீட்பராம் கிறிஸ்து யேசு உலகுக்குப் பிரசன்னமானதால் வெளிப்படையாயிற்று. அவர் சாவை அழித்து, சாவே அறியா வாழ்வை நற்செய்தியின் வழியாய் ஒளிரச் செய்தார். நானே இந்த நற்செய்தியின் தூதனாகவும் அப்போஸ்தலனாகவும் போதகனாகவும் ஏற்படுத்தப்பெற்றேன்.

இதன் பொருட்டே நான் இத்துன்பங்களுக்கு உள்ளானேன். ஆனால், வெட்கப்படவில்லை. யாரை நம்பியிருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். அவர் என்னிடம் ஒப்படைத்ததை அந்த இறுதி நாள்வரை பாதுகாக்க அவர் வல்லவரென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 122 : 1-2a, 2bcd. (பல்லவி : 1a)

பல்லவி : ஆண்டவரே, உம்மை நோக்கி என் கண்களை உயர்த்தினேன்.

1 வானுலகில் உறைபவரே, உம்மை நோக்கி என் கண்களை உயர்த்துகிறேன்.
2 பணியாட்களின் பார்வை தம் தலைவர்களின் கையைப் பார்த்து
நிற்பதுபோல, பல்லவி

2 பணிப் பெண்ணின் கண்கள் தன் தலைவியின் கையைப் பார்த்து
நிற்பதுபோல, நம் கண்கள் நம் ஆண்டவராகிய கடவுளையே பார்க்கின்றன:
நம்மீது இரக்கம் காட்டும்வரை அவரைப் பார்த்தபடியே இருக்கும். பல்லவி

அல்லேலூயா அரு. 11 : 25a, 26

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : உயிர்ப்பும் உயிரும் நானே : என்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவர் வாழ்வோரின் கடவுள், இறந்தோரின் கடவுள் அல்லர்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 18-27

அக்காலத்தில்:

'உயிர்த்தெழுதல் இல்லை' என்று கூறும் சதுசேயர் யேசுவிடம் வந்து, "போதகரே, ஒருவனுடைய சகோதரன் இறந்து, பிள்ளையில்லாமல் மனைவியை விட்டுச் சென்றால், அவனுடைய சகோதரன் அவளை மணந்து தன் சகோதரனுக்கு மகப்பேறு அளிக்கட்டும் என்று மோயீசன் எழுதி வைத்துள்ளார்.

சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவன் ஒருத்தியை மணந்து மகப்பேறு இன்றி இறந்தான். இரண்டாம் சகோதரனும் அவளை மணந்து மகப்பேறு இன்றி இறந்தான். மூன்றாம் சகோதரனும் அப்படியே. இவ்வாறு எழுவருக்கும் மகப்பேறு இல்லாமல் போயிற்று. எல்லாருக்கும் கடைசியில் அப்பெண்ணும் இறந்தாள். உயிர்ப்பு நாளில் அவர்கள் உயிர்த்தெழும்போது அவள் யாருக்கு மனைவியாய் இருப்பாள்? எழுவரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்தனரே" என்று வினவினர்.

யேசு அவர்களிடம், "மறைநூலையும் கடவுளுடைய வல்லமையையும் நீங்கள் அறியாததால் அன்றோ, இவ்வாறு தவறாக நினைக்கிறீர்கள்? ஏனெனில், இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழும்போது பெண் கொள்வதுமில்லை கொடுப்பதுமில்லை. ஆனால் வானகத்தில் தேவ தூதர்களைப்போல் இருப்பார்கள். இறந்தோர் உயிர்த்தெழுவது குறித்து மோயீசன் ஆகமத்தில் முட்செடியைப் பற்றிய பகுதியில், 'நாம் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்' என்று கடவுள் அவருக்குக் கூறியதை நீங்கள் படித்ததில்லையா? அவர் வாழ்வோரின் கடவுளே அன்றி, இறந்தோரின் கடவுள் அல்லர். நீங்கள் பெரிதும் தவறிவிட்டீர்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இவள் உன்னோடு மணம் புரிவதற்கென்றே ஆண்டவர் உங்களை என்னிடம் அனுப்பியுள்ளார்.**

தொபியாசு ஆகமத்திலிருந்து வாசகம் *6: 10-11a; 7: 1,9-17; 8: 4-10*

*அந்நாட்களில்:*

தோபி கடவுளின் தூதரைப் பார்த்து, "நாம் இன்று எங்கே தங்கலாம் என்று நினைக்கிறீர்?" என்று கேட்டான். அதற்குத் தூதர், "இந்த ஊரில் உன் குலத்தினனும் உனக்கு உறவினனுமான இரகுவேல் வாழ்ந்து வருகிறான். சாராள் என்ற பெயர்கொண்ட ஒரு மகள் அவனுக்கு உண்டு. அவர்கள் இரகுவேல் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அவர் அதிக மகிழ்ச்சியோடு அவர்களுக்கு இல்லிடம் கொடுத்தார்.

பேசி முடிந்ததும், ஆடு அடித்து, விருந்து செய்ய இரகுவேல் கட்டளையிட்டார். பின்பு பந்தியில் அமரும்படி அவர்களை அழைத்தார். அதற்குத் தோபி, நீர் முதன்முதல் எனது விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்து, உம் மகள் சாராளை எனக்குத் தருவதாக வாக்குறுதி கொடுத்தாலொழிய நான் சாப்பிடமாட்டேன்; குடிக்கவும் மாட்டேன்" என்றான். இதைக் கேட்டவுடன் இரகுவேல் திடுக்கிட்டுப் பயந்தான். ஏனெனில், சாராளிடம் உறவு வைத்திருந்த அவளுடைய ஏழு கணவர்களுக்கும் நேரிட்டதை நினைத்து, இவனுக்கும் அவ்விதமே நிகழக்கூடும் என்று அஞ்சி இருமனப்பட்டவராய்ப் பதில் ஏதும் சொல்லாமல் இருந்தார்.

இது கண்டு கடவுளின் தூதர் அவரை நோக்கி, "அவளை இவனுக்கு மணம் முடித்துக்கொடுக்க நீர் அஞ்சவேண்டாம். ஏனெனில், தெய்வ பயமுள்ள இவனுக்கு உம் மகள் மனைவியாக உடன்படத்தான் வேண்டும். இதனால் அன்றோ வேறு மனிதர் அவளோடு உறவுகொள்ள முடியாது போயிற்று?" என்றார்.

அதற்கு இரகுவேல், "கடவுள் என் மன்றாட்டுகளையும் என் கண்ணீரையும் தமது திருமுன் ஏற்றுக்கொண்டார் என்பதுபற்றி இப்போது எனக்கு ஐயமே இல்லை. மோயீசன் கட்டளையிட்டபடியே இவள் தன் உறவினனோடு மணம் புரிய வேண்டியதாயிற்று. அதனால்தான் கடவுள் உங்களை என்னிடம் அனுப்பியுள்ளார் என்று உறுதியாக நம்புகிறேன். எனவே ஐயம் வேண்டாம். நான் அவளை உனக்கு மணம் முடித்துக் கொடுப்பேன்" என்றார்.

பின்னர் தம் மகளின் வலக்கையைப் பிடித்துத் தோபியின் வலக் கையோடு சேர்த்து வைத்து, ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் உங்களோடு இருப்பாராக! அவரே உங்கள் இருவரையும் இணைத்துத் தம் நிறையாசீர் உங்களிடம் நிறைவேறச் செய்வாராக!" என்றார். மேலும் ஒரு தாளை எடுத்து அதில் திருமணப் பதிவு செய்தனர். கடவுளைப் புகழ்ந்து பாடிய பின் விருந்து உண்டனர்.

பின்னர் தோபி கன்னியைப் பார்த்து, "சாராளே, எழுந்திரு. இன்றிரவும் நாளையும் நாளைக் கழித்தும் நாம் கடவுளை மன்றாடுவோம். ஏனெனில், இம் மூன்றிரவும் கடவுளுடன் நாம் ஒன்றித்திருந்து, மூன்றாவது இரவு கழிந்தபின் நமது இல்வாழ்வில் இணைவோம். நாம் புனிதர்களின் மக்கள் அல்லவா? கடவுளை அறியாத புறவினத்தாரைப் போல் நாம் உறவு கொள்ளக்கூடாது" என்று புத்தி சொன்னான். எனவே இருவரும் எழுந்து தங்களுக்கு வாழ்வு பிறக்க வேண்டும் என்று உருக்கத்துடன் வேண்டிக் கொண்டனர்.

அப்பொழுது தோபி சொன்ன செபமாவது: "எங்கள் முன்னோரின் ஆண்டவரான கடவுளே, விண்ணும் மண்ணும் கடலும் நீர் ஊற்றுகளும் அருவிகளும் அவற்றிலுள்ள எல்லாப் படைப்புகளும் உம்மை வாழ்த்தட்டும்! நீர் களிமண்ணைக் கொண்டு ஆதாமைப்படைத்து, ஏவாளை அவனுக்குத் துணைவியாகக் கொடுத்தீர். இப்பொழுதும், ஆண்டவரே, நான் என் உறவினளாகிய இப்பெண்ணை மணந்து கொண்டது உமது திருப்பெயர் என் சந்ததியில் என்றென்றும் வாழ்த்தப்படும்படியாகவே அன்றி, என் உடல் இச்சையை நிறைவேற்றுவதற்காக அல்ல என்று நீர் அறிவீர்."

சாராளும் கடவுளை நோக்கி, "ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும். நாங்கள் இருவருமே நலமுடன் முதிர் வயதை அடைய அருள் தாரும்" என்று வேண்டிக்கொண்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 127 : 1-2, 3, 4-5 (பல்லவி : 1a காண்)

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சுவோர் பேறுபெற்றோர்.**

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன் : அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறுபெற்றோன்.
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக்கொள்வாய் : பேறு பெற்றவனுவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனி தரும் கொடி முந்திரிபோல் உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள். ஒலிவச் செடிகள்போல உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக : உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கடவுளுடைய வார்த்தைக்கு விலங்கெதுவுமில்லை,
அவரோடு இறந்தோமானுல், அவரோடு வாழ்வோம்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 8-15.

அன்புக்குரியவரே :

யேசு கிறிஸ்துவை நினைவில் வையும். அவர் தாவீதின் மரபில் தோன்றி, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். இதுவே நான் கூறும் நற்செய்தி. இந்த நற்செய்தியின் பொருட்டே, நான் ஒரு குற்றவாளியைப் போல விலங்கிடப்படும் அளவுக்குத் துன்புறுகிறேன். ஆனுல் கடவுளுடைய வார்த்தைக்கு விலங்கெதுவுமில்லை. தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து யேசுவிலுள்ள மீட்பையும் முடிவில்லா மகிமையையும், பெறவேண்டுமென்று அவர்களுக்காக நான் இவையெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன்.

உண்மையான வார்த்தை இது: ‘அவரோடு இறந்தோமானால், அவரோடு வாழ்வோம். நிலைத்து நின்றால், அவரோடு அரசாள்வோம். நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார். நாம் அவருக்கு உண்மையாயில்லாவிடினும், அவரது வாக்குறுதி பொய்க்காது; அவர் தம்மையே மறுதலிக்க முடியாது.’

இவற்றை அவர்களுக்கு நினைவூட்டும். வெறும் சொற்களைப்பற்றிச் சண்டையிடுவதை நிறுத்தும்படி கடவுள் முன்னிலையில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும். அப்படிச் சண்டையிடுவது பயனற்றது. அதைக் கேட்போருக்கும் அது கேட்டையே விளைவிக்கும். கடவுளால் ஏற்கப்படத் தக்கவராய் விளங்கவும், நாணித் தலைகுனியவேண்டிய செயலில் ஈடுபடாத வேலையாளாய் இருக்கவும், நெறி பிறழாது உண்மையின் வார்த்தையைப் போதிப்பவராய் இருக்கவும் முயற்சி செய்யும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 24 : 4-5ab, 8-9, 10 & 14 (பல்லவி : 4a)*

பல்லவி : **ஆண்டவரே. உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்.**

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்:
5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும். என் மீட்பராம் இறைவன் நீரே.
பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்: ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.
9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார், எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார்.
பல்லவி

10 ஆண்டவருடைய உடன்படிக்கையும் கட்டளைகளையும் கடைப்பிடிப்போர்க்கு அவருடைய வழிகள் எல்லாம் அருளும் உண்மையும் கொண்டவை.
14 தமக்கு அஞ்சி நடப்போரிடம் ஆண்டவர் அன்புறவு கொண்டுள்ளார்: தமது உடன்படிக்கையை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார்.
பல்லவி

அல்லேலூயா

*சங். 118 : 34*

அல்லேலூயா. உமது திருச் சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும்; அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

இதுவே முதற் கட்டளை; இரண்டாம் கட்டளை அதற்கு ஒப்பானது.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 28b-34

அக்காலத்தில்:

மறை நூல் அறிஞருள் ஒருவன் முன்வந்து, "எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது?" என்று யேசுவைக் கேட்டான். யேசு மறுமொழியாக: "'இஸ்ராயேலே கேள்: நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். ஆகவே, உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக' என்பது முதல் கட்டளை. 'உன்மீது நீ அன்புகாட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக' என்பது இரண்டாம் கட்டளை. இவற்றைவிடப் பெரிய கட்டளை வேறில்லை" என்றார்.

அதற்கு மறைநூல் அறிஞன், "சரிதான், போதகரே, நீர் சொன்னது உண்மையே. கடவுள் ஒருவரே, அவரைத் தவிர வேறொருவரில்லை, அவருக்கு முழு உள்ளத்தோடும், முழு அறிவோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வதும், தன்மீது அன்பு காட்டுவதுபோல் அயலான்மீது அன்பு காட்டுவதும், தகனப் பலிகள், மற்றப் பலிகள் எல்லாவற்றையும்விட மேலானது" என்றான்.

அவன் அறிவோடு விடை அளித்ததைக் கண்ட யேசு, நீ கடவுளுடைய அரசிற்குத் தொலைவிலில்லை" என்றார். அதுமுதல் ஒருவனும் அவரைக் கேள்வி கேட்கத் துணியவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நீரே என்னைத் தண்டித்தீர், நீரே என்னை மீட்டீர் : இதோ! நான் என் மகனைக் காணப்பெற்றேன்.**

தொபியாசு ஆகமத்திலிருந்து வாசகம் 11 : 5-17

அந்நாட்களில் :

பாதை அருகே ஒரு மேடு இருந்தது. அன்னாள் நாளும் அங்குச் சென்று அதன்மேல் உட்கார்ந்துகொள்வாள் ; ஏனெனில், அங்கிருந்து நாடு வெகுதூரம் தெரியும். ஒருநாள் அவள் அவ்வாறு மகனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், அதோ, தொலைவில் தன் மகனே வருகிறான் என்று கண்டதும் துரிதமாய்ப் போய்த் தொபியாசுக்குச் செய்தி சொல்லி, " உம் மகன் அதோ வருகிறான் " என்றாள்.

அப்போது இரபாயேல் தோபியை நோக்கி, " நீ உன் வீட்டில் நுழைந்தவுடன் உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவருக்கு நன்றி கூறி உன் தந்தையிடம் போய், அவரை முத்தமிட்ட பின்பு, தாமதியாது, நீ கொண்டுவரும் மீன் பித்தத்தை எடுத்து அவரது கண்களில் பூசு. உடனே உன் தந்தையின் கண்கள் திறக்கப்பட்டு அவர் விண்ணக ஒளியைக் கண்டு உன்னைப் பார்த்து அகமகிழ்வார். இது உறுதி " என்றார்.

அந்நேரத்தில் அவர்களோடு போயிருந்த நாய், முன்னறிவிக்கும் தூதனைப்போல் வந்து வாலையாட்டித் தன் மகிழ்ச்சியைக் காட்டத் தொடங்கிற்று. அப்போது கண்பார்வை அற்றிருந்த தந்தை எழுந்து கால் தட்டுத்தடுமாறி ஒரு வேலைக்காரனின் துணையோடு துரிதமாய் நடந்து மகனை எதிர்கொண்டு போனார். அவரும் அவர் மனைவியும் அவனை வாரி அணைத்து முத்தமிட்டு மகிழ்ச்சி மிகுதியால் இருவரும் கண்ணீர் விட்டு அழத் தொடங்கினர். பின்னர் கடவுளைத் தொழுது அவருக்கு நன்றி நவின்றபின் அவர்கள் உட்கார்ந்தனர்.

அப்போது தோபி மீன் பித்தத்தில் கொஞ்சம் எடுத்துத் தன் தந்தையின் கண்களில் பூசினான். அரைமணி நேரம் சென்ற பின் அவர் கண்களிலிருந்து முட்டைத்தோல் போன்ற ஒரு படலம் வெளிவரத் தொடங்கிற்று. தோபி அதைப் பிடித்து அவர் கண்களினின்று இழுக்க, தந்தை உடனே பார்வை அடைந்தார். அதனால் அவரும் அவர் மனைவியும்

அவருக்கு அறிமுகமானவர் அனைவருமே கடவுளைப் புகழ்ந்து கொண்டாடினர். "இஸ்ராயேலின் ஆண்டவரான கடவுளே, நான் உம்மைத் துதிக்கிறேன். ஏனெனில் நீரே என்னைத் தண்டித்தீர் நீரே என்னை மீட்டீர். இதோ, நான் என் மகனைக் காணப்பெற்றேன்" என்று தொபியாக கடவுளைப் புகழ்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145 : 1-2, 6c-7, 8-9a, 9bc-10 (பல்லவி : 1)

பல்லவி : **நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 நெஞ்சே நீ ஆண்டவரைப் புகழ்வாய், என் வாழ்நாளில் ஆண்டவரைப் புகழ்வேன்.
2 என் உயிருள்ளவரையில் நான் கடவுளுக்குப் புகழ் பாடுவேன். பல்லவி

6-7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர். துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார். பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார். சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்து விடுகிறார். தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கிவிடுகிறார். நீதிமான்கள் மீது ஆண்டவர் அன்பு கூர்கிறார்.
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார். பல்லவி

அனாதைகளையும், விதவைகளையும் ஆதரிக்கிறார், பாவிகளின் திட்டங்களைக் கலைத்து விடுகிறார்.
10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார்; சீயோனே, உன் இறைவன் தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

***பக்தியோடு கிறிஸ்துவில் வாழவிரும்புவோர் துன்புறுத்தப்படுவர்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 10-17

அன்புக்குரியவரே :

நீர், என்போதனை, நடத்தை, குறிக்கோள், விசுவாசம், பொறுமை, அன்பு, மனவுறுதி ஆகிய இவற்றில் என்னைப் பின்பற்றினீர். அந்தியோக்கியா, இக்கோனியா, லீஸ்திரா ஆகிய இடங்களில் நான் துன்புறுத்தப்பட்டபோது என் பாடுகளிலும் என்னைப் பின்பற்றினீர். எத்தனையோ துன்பங்களுக்கு உள்ளானேன். ஆனால் ஆண்டவர் அவை அனைத்தினின்றும் என்னை விடுவித்தார். பக்தியோடு கிறிஸ்து யேசுவில் வாழவிரும்புவோர் அனைவரும் துன்புறுத்தப்படுவர். தீயவர்களும் எத்தர்களும் மேன்மேலும் கேடுறுவார்கள். ஏமாற்றும் இவர்கள் ஏமாந்து போவார்கள்.

நீரோ, கற்றுக்கொண்டவற்றையும், உம் மனத்தில் உறுதியாய் நிறுத்திய உண்மைகளையும் கடைப்பிடியும். உமக்குக் கற்பித்தவர்கள் யாரென்று தெரியுமன்றோ? குழந்தைப் பருவமுதலே உமக்கு மறைநூல் தெரியும் என்பதை நீர் மறவாதீர். மறைநூல் கிறிஸ்து யேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் மீட்பிற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஞானத்தை அளிக்க வல்லது. மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும் கண்டிக்கவும் சீர்திருத்தவும் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும். இவ்வாறு கடவுளின் அடியான், நிறைமை நிரம்பப் பெற்று, எல்லா வகையான நற்செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவனாகின்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 118 : 157, 160, 161, 165, 166, 168 (பல்லவி : 165a)

பல்லவி : **இறைவா, உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு.**

157 என்னைத் துன்புறுத்தித் தொல்லைபடுத்துவோர் பலர்,
ஆனால் உம் ஆணைகளை விட்டு நான் தவறுவதில்லை.
பல்லவி

160 உமது வார்த்தையின் உட்பொருள் உண்மையினின்று வழுவாதது;
நீதி வாய்ந்த உமது தீர்ப்புகள் என்றும் நிலைத்திருப்பவை. பல்லவி

161 தலைவர்கள் என்னைக் காரணமின்றித் துன்புறுத்தினர்,
என் இதயம் உம் வார்த்தைகள் மீது அச்சம் கொண்டுள்ளது. பல்லவி

165 உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு:
அவர்களை விழத்தாட்டக்கூடிய தடைகள் இல்லை. பல்லவி

166 ஆண்டவரே, உமது உதவியை நம்பி வாழ்கிறேன்,
உம் கற்பனைகளை அனுசரிக்கிறேன். பல்லவி

168 உம் கட்டளைகளையும் கற்பனைகளையும் நான் அனுசரிக்கிறேன்:
ஏனெனில், என் நடத்தை உமக்குத் தெரிந்திருக்கிறது. பல்லவி

அரு. 14 : 23

அல்லேலூயா: ஒருவன் எனக்கு அன்புசெய்தால் என் வார்த்தையைக் கேட்பான்: என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்: நாங்களும் அவனிடம் வருவோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மெசியா தாவீதின் மகனென்று எப்படிக் கூறலாம்?**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 35-37

*அக்காலத்தில் :*

யேசு கோயிலில் போதித்துக்கொண்டிருந்தபோது, "மெசியா தாவிதின் மகன் என்று மறைநூல் அறிஞர் எப்படிக் கூறலாம்? ஏனெனில், 'ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது: நான் உம் பகைவரை உமக்குத் கால் மணையாக்கும் வரை, நீர் என் வலப்பக்கத்தில் அமரும்' எனத் தாவிதே பரிசுத்த ஆவியின் ஏவுதலால் கூறியிருக்கிறார்.

தாவிதே அவரை ஆண்டவரென்று சொல்ல, அவர் எப்படி அவருடைய மகனாய் மட்டும் இருத்தல் கூடும்?" என்றார். திரளான மக்கள் அவர் சொல்வதை மனமுவந்து கேட்டு வந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*என்னை அனுப்பினவரிடம் திரும்பிப் போகிறேன்;
நீங்களோ கடவுளைப் போற்றுங்கள்.*

தொபியாசு ஆகமத்திலிருந்து வாசகம் 12: 1, 5-15, 20

அந்நாட்களில்:

தொபியாசு தம் மகனை அழைத்து, "உன்னோடு வந்த இந்தப் புண்ணியவானுக்கு என்ன கொடுக்கலாம்?" என்று கேட்டார். அதன்பின் தந்தையும் மகனும் அவரைத் தனியே அழைத்து, மேற்சொன்ன சொத்தில் பாதியை ஏற்றுக்கொள்ளும்படி அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

அப்போது அசாரியாசு அவர்களை நோக்கி, "விண்ணக இறைவன் உங்கள்மேல் இரக்கம் காட்டியுள்ளபடியால், அவரை வாழ்த்திப் போற்றி, உயிர்வாழ் மாந்தர் அனைவர் முன்னிலையிலும் அவரது மகிமையை அறிக்கையிடுங்கள். ஏனெனில், அரசனின் இரகசியத்தை மறைத்துக் காப்பாற்ற வேண்டியது உண்மையே. இருந்தபோதிலும் கடவுளின் செயல்களை வெளிப்படுத்திக் கொண்டாடுவது மதிப்பிற்குரிய செயலாகும்.

நோன்போடு கூடிய செபமே நன்று. பொற்குவியல்களைக் குவிப்பதை விடத் தானதருமம் செய்வதே மேல். ஏனெனில் தானம் ஆன்மாவைச் சாவினின்று மீட்கும்: பாவங்களைப் போக்கும்; கடவுளின் இரக்கத்தையும் நித்திய வாழ்வையும் அளிக்கும். பாவமும் தீச்செயல்களும் புரிபவர்கள் தங்கள் ஆன்மாவுக்கு எதிரிகளாய் இருக்கிறார்கள்.

நானே உங்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவேன். இரகசியமாயிருந்தாலும் ஒரு வார்த்தைகூட உங்களுக்குச் சொல்லாமல் விடமாட்டேன். நீர் கண்ணீரோடு மன்றாடி இறந்தோரைப் புதைத்து, உம் உணவை மறந்து, செத்தவர்களைப் பகலில் உம் வீட்டில் ஒளித்துவைத்திருந்து இரவில் புதைத்து வந்தீர் அல்லவா? அப்பொழுது நான் உம் மன்றாட்டை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன்.

நீர் அவருக்குப் பிரியமானவராய் இருந்ததனால் உம்மைப் பரிசோதிக்கச் சோதனைகள் வரவேண்டியிருந்தன. இப்போதோ உமக்கு நலம் அளிக்கவும் உம் மகனின் மனைவி சாராளைப் பேயினின்று விடுதலையாக்கவும் நான் கடவுளால் அனுப்பப்பட்டுள்ளேன். ஏனெனில் நான் ஆண்டவரின் திருமுன் நிற்கும் ஏழு வானவர்களுள் ஒருவன்; என் பெயர்

இரபாயேல். இப்பொழுது என்னை அனுப்பினவரிடம் திரும்பிப் போகும் காலம் வந்துள்ளது. நீங்களோ கடவுளைப் போற்றி அவர்தம் வியப்புக்குரிய செயல்களை வெளிப்படுத்தக் கடவீர்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

தொபி. 13: 2, 6, 7, 8. (பல்லவி: 1b)

பல்லவி: **ஆண்டவரே, நீர் என்றென்றும் பெரியவர்.**

2 ஏனெனில், தண்டிப்பவரும் மீட்பவரும் நீரே. பாதாளத்தில் அமிழ்த்துகிறவரும் அதினின்று எழுப்புகிறவரும் நீரே. ஒருவனும் உமது கைக்குத் தப்பமுடியாது.
பல்லவி

6 நம் நடுவில் அவர் செய்தவற்றைப் பாருங்கள். அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அவரை மகிமைப்படுத்துங்கள். என்றும் ஆளும் அரசரை உங்கள் செயல்களால் ஏத்திப் போற்றுங்கள்.
பல்லவி

7 நானோ அடிமை நாட்டில் இருந்துகொண்டே அவரைப் புகழ்ந்து பாடுவேன். ஏனெனில் அவர் பாவியான மக்கள்மீது தமது மகிமையை வெளிப்படுத்தினார்.
பல்லவி

8 ஆகையால், ஓ பாவிகளே, மனம் திரும்புங்கள். கடவுள் உங்களுக்கு இரக்கம் காட்டுவார் என்று நம்பி அவரது திருமுன் நேர்மையோடு நடங்கள்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

நற்செய்தித் தொண்டனுக்குரிய வேலையைச் செய்யும். எனக்கோ, பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது; நல்வாழ்வின் பரிசான வெற்றிவாகையை ஆண்டவர் எனக்களிப்பார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *4: 1-8*

அன்புக்குரியவரே:

கடவுள் முன்னிலையிலும், வாழ்வோர்க்கும் இறந்தோர்க்கும் தீர்ப்பிடப்போகும் கிறிஸ்து யேசுவின் முன்னிலையிலும் இவரது பிரசன்னத்தை முன்னிட்டும், இவரது அரசாட்சியை முன்னிட்டும் நான் வற்புறுத்திக்

கேட்டுக்கொள்வது : தேவ வார்த்தையை அறிவியும்; வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிடினும் வலியுறுத்திப் பேசும்; கண்டித்துப் பேசும்; கடிந்து கொள்ளும்; அறிவுரை கூறும். மிகுந்த பொறுமையோடு போதித்துக்கொண்டே இரும். ஒரு காலம் வரும், அப்போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்கமாட்டார்கள். மாறாக, செவித்தினவுகொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர், உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து, கட்டுக்கதைகளுக்குத்தான் செவி சாய்ப்பர். நீரோ எந்தச் சூழ்நிலையிலும் சமநிலையாயிரும். துன்பத்தை ஏற்றுக்கொள்ளும். நற்செய்தித் தொண்டனுக்குரிய வேலையைச் செய்யும். உம் திருப்பணியைச் செவ்வனே செய்யும்.

எனக்கோ, பிரியவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதோ என் வாழ்க்கை, பலியின் இரத்தமென வார்க்கப்படுகிறது. சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன், ஓட்டத்தை முடித்து விட்டேன் : விசுவாசத்தைப் பாதுகாத்தேன். இனி எனக்கு இருப்பது ஒன்றே; நல்வாழ்வின் பரிசான வெற்றி வாகை எனக்காகக் காத்திருக்கிறது. இதை நீதியுள்ள நடுவராம் ஆண்டவர் அந்த இறுதி நாளிலே எனக்குக் கைம்மாறாக அருள்வார். எனக்கு மட்டுமன்று, அவரது பிரசன்னத்தை ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் அனைவருக்குமே அருள்வார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 70 : 8-9, 14-15ab, 16-17, 22 (பல்லவி : 15 காண்)

பல்லவி : ஆண்டவரே, உம் அருட்துணையை என் நா எடுத்துரைக்கும்.

8 என் நாவில் உள்ளதெல்லாம் உமது புகழே. நாளெல்லாம் நான் பேசுவது உமது பெருமையே.
9 முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும். என் பலம் குன்றும் நாளில் என்னைக் கைவிடாதேயும்.
பல்லவி

14 நானோ என்றும் நம்பிக்கையோடிருப்பேன் : ஒவ்வொரு நாளும் மேன் மேலும் உம்மைப் புகழ்ந்துகொண்டிருப்பேன்.
15 உமது அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும் : நாள் முழுதும் உம் அருட்துணையை எடுத்துச் சொல்லும்.
பல்லவி

16 இறைவனின் வல்லமையை எடுத்துரைப்பேன் : ஆண்டவரே உமக்கு உரிய நீதி நேர்மையைப் புகழ்ந்து உரைப்பேன்.
17 இறைவா, நீர் எனக்கு என் இளமையிலிருந்தே அறிவு புகட்டினீர் : இந்நாள்வரை நான் உமது வியத்தகு செயல்களை வெளிப்படுத்துகிறேன்.
பல்லவி

22 இறைவா, நானும் வீணை கொண்டு உமது சொல்லுறுதியைக் கொண்டாடுவேன். இஸ்ராயேலின் பரிசுத்தரே, யாழ் கொண்டு உமக்குப் புகழ் பாடுவேன்.

பல்லவி

அல்லேலூயா

மத். 5 : 3

அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எல்லாரிலும் இந்த ஏழைக் கைம்பெண் அதிகம் போட்டாள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 38-44

அக்காலத்தில் :

யேசு மக்களுக்குப் போதிக்கையில், "மறைநூல் அறிஞர் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் நீண்ட அங்கி தரித்து நடமாடவும், பொது இடங்களில் வணக்கம் பெறவும் விரும்புகிறார்கள். செபக்கூடங்களில் முதலிருக்கைகளும், விருந்துகளில் முதலிடங்களும் தேடுகிறார்கள். கைம்பெண்களின் உடைமைகளை விழுங்குகிறார்கள். பார்வைக்கோ நீண்ட செபம் செய்கிறார்கள். இவர்கள் அதிக தண்டனைக்கு ஆளாவார்கள்" என்றார்.

யேசு காணிக்கைப் பெட்டிகளுக்கு எதிரே அமர்ந்து, மக்கள் அவற்றினுள் காசு போடுவதைக் கவனித்துக்கொண்டிருந்தார். பணக்காரர் பலர் அதிகம் போட்டார்கள். ஏழைக் கைம்பெண் ஒருத்தி வந்து ஓர் அணு பெறுமானமுள்ள இரண்டு செப்புக் காசுகள் போட்டாள்.

யேசு சீடர்களைத் தம்மிடம் அழைத்து, "காணிக்கைப் பெட்டியில் பணம்போட்ட எல்லாரிலும் இந்த ஏழைக் கைம்பெண்ணே அதிகம் போட்டாள் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், மற்ற எல்லாரும் தங்களிடம் மிகுதியாயிருந்த பணத்திலிருந்து போட்டனர். இவளோ, தன் வறுமையிலும் தான் வைத்திருந்த யாவும், தன் பிழைப்புக்கானது முழுவதுமே போட்டுவிட்டாள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பத்தாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**நாம் பலியையன்று, அன்பையே விரும்புகிறோம்.**

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம்

6: 3b-6

ஆண்டவரைப்பற்றி அறிந்திடுவோம், அவரைப்பற்றி அறிய முனைந்திடுவோம்; அவருடைய வருகை விடி வெள்ளிபோலத் திண்ணமானது, மழை போலவும், நிலத்தை நனைக்கும் இளவேனிற்கால மாரி போலவும் அவர் நம்மிடம் வருவார். எப்பிராயீமே, உன்னை நாம் என்ன செய்வோம்? யூதாவே, உன்னை நாம் என்ன செய்வோம்? விடியற் காலையின் மேகம்போலும், கதிரவனைக்கண்ட பனிபோலும் உங்கள் அன்பு இருக்கிறதே! ஆதலால்தான் இறைவாக்கினர்களைக் கொண்டு நாம் அவர்களை வெட்டி வீழ்த்தினோம்; நமது வாய் மொழிகளால் அவர்களைக் கொன்றொழித்தோம், நமது தீர்ப்பு வெட்ட வெளிச்சம்போல வெளிப்படுகிறது. ஏனெனில், நாம் விரும்புவது பலியை அன்று, அன்பையே நாம் விரும்புகிறோம்; தகனப்பலிகள் நமக்கு வேண்டியதில்லை, கடவுளை அறியும் அறிவே நாம் விரும்புகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49 : 1 & 8, 12-13, 14-15 (பல்லவி : 23b)

பல்லவி: நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும்
மீட்பைக் காட்டுவேன்.

1 ஆண்டவராகிய இறைவன் பேசலானார் : கீழ்த்திசை முதல்
மேற்றிசைவரையுள்ள பூவுலகைத் தீர்ப்புக்கு அழைக்கலானார்.
8 " நீ இடும் பலிகளைக் குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை :
ஏனெனில், உன் தகனப் பலிகள் எந்நேரமும்
என் கண்முன்னே இருக்கின்றன.

பல்லவி

12 எனக்குப் பசியெடுத்தால் உன்னிடமா சொல்வேன்?
பூவுலகும் அதில் உள்ள தனைத்தும் என்னுடையதுதானே!
13 எருதுகளின் சதையையா நான் உண்பேன்?
செம்மறிகளின் இரத்தத்தையா நான் குடிப்பேன்?

பல்லவி

14 இறைபுகழ்ச்சி எனும் பலியைக் கடவுளுக்குச் செலுத்து:
உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து.
15 துன்பநாளில் என்னைக் கூப்பிடு:
உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்"

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆபிரகாம் விசுவாசத்தில் மேலும் வலிமை பெற்றுன், கடவுளை மகிமைப்படுத்தினுர்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

*4: 18-25*

சகோதரர்களே:

"உன்வழி வருவோர் இத்துணை மிகுதியாய் இருப்பர்" எனச் சொல்லப்பட்டது. அது நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாததுபோலத் தோன்றினும், ஆபிரகாம் நம்பிக்கைகொண்டார்; விசுவசித்தார்; ஆகவே அந்த வாக்குறுதிக்கேற்பப் பல இனத்தார்க்குத் தந்தையானுர்.

தமக்கு ஏறத்தாழ நூறு வயது ஆனதால் தம் உடல் ஆற்றலற்றுப் போனதையும், சாராளுடைய சூலகத்தின் ஆற்றலின்மையையும் எண்ணிப் பார்த்தபோதும், அவர் விசுவாசத்தில் உறுதிதளரவில்லை, அவிசுவாசம் கொள்ளவில்லை: கடவுளின் வாக்குறுதியைப்பற்றி ஐயப்படவுமில்லை; விசுவாசத்தில் அவர் மேலும் வலிமை பெற்றுர், கடவுளை மகிமைப் படுத்தினுர். ஏனெனில், தாம் வாக்களித்ததை இறைவன் செய்யவல்லவர் என்பதை உறுதியாய் அறிந்திருந்தார். ஆகவே, இறைவனுக்கு ஏற்புடையவரென மதிக்கப்பட்டார்.

ஏற்புடையவரென மதிக்கப்பட்டார் என்பது அவரை மட்டும் குறிக்கவில்லை; நம்மையும் குறிக்கின்றது; நம் ஆண்டவராகிய யேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தவர்மீது விசுவாசம் வைத்திருக்கும் நாமும் அவ்வாறு ஏற்புடையவரென மதிக்கப்படுவோம். இவர் நம் குற்றங்களுக்காகக் கையளிக்கப்பட்டார்: நாம் இறைவனுக்கு ஏற்புடையவராகும்படி உயிர்ப்பிக்கப்பெற்றுர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 4 : 18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீதிமான்களை அன்று பாவிகளையே அழைக்கவந்தேன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 9-13

அக்காலத்தில் :

யேசு போகையில், மத்தேயு என்ற ஒருவர் சுங்கத்துறையில் அமர்ந்திருக்கக் கண்டு அவரை நோக்கி, "என்னைப் பின்செல்" என்றார். அவர் எழுந்து அவரைப் பின்சென்றார்.

பின், அவர்வீட்டில் யேசு பந்தியமர்ந்திருக்கையில், இதோ! ஆயக்காரர், பாவிகள் பலர் அவருடனும் சீடருடனும் ஒருங்கே அமர்ந்திருந்தனர். இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீடரைப் பார்த்து, "உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் உண்பதேன்?" என்றனர்.

இதைக் கேட்ட யேசு, "மருத்துவன் நோயற்றவருக்கன்று, நோயுற்றவருக்கே தேவை. 'பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதன் கருத்தைப் போய்க் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நீதிமான்களை அன்று, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உன் வித்துக்கும், பெண்ணின் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 3: 9-15

மரத்தின் கனியை ஆதாம் தின்றபின், ஆண்டவராகிய கடவுள் ஆதாமைக் கூப்பிட்டு: எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் இன்ப வனத்தில் உமது குரலொலியைக் கேட்டேன். நிருவாணியாய் இருந்ததால் பயந்து ஒளிந்து கொண்டேன் என்றான்.

கடவுள் : "நீ நிருவாணியாய் இருப்பதாக உனக்குச் சொன்னவன் யார்? உன்னை வேண்டாமென்று நாம் உனக்கு விலக்கியிருந்த கனியைத் தின்றாயோ" என்று வினவினர். ஆதாம்: "எனக்குத் துணைவியாய் இருக்கும்படி நீர் எனக்குத் தந்தருளிய அந்தப் பெண்ணே அம்மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் தின்றேன்" என்றான்.

அப்போது ஆண்டவராகிய கடவுள் பெண்ணை நோக்கி: "நீ ஏன் அவ்வாறு செய்தாய்" என்று கேட்டார். அவள்: "பாம்பு என்னை வஞ்சித்ததால் தின்றுவிட்டேன்" என்று பதில் சொன்னாள்.

அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் பாம்பைப் பார்த்து: "நீ அவ்வாறு செய்ததால் பூமியிலுள்ள எல்லாப் பிராணிகளிலும் சபிக்கப் பட்டதாய், உன் வயிற்றினால் ஊர்ந்து, உயிரோடிருக்கும் வரை மண்ணைத் தின்பாய்; உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கு மிடையே பகையை உண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்; நீயோ அவளுடைய குதிங்காலைத் தீண்ட முயலுவாய்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 129: 1-2, 3-4, 5-6, 7-8 (பல்லவி: 7)*

பல்லவி: ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது:
அவரது மீட்புத்துணை பொங்கிவழிகின்றது.

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக்
கூவி அழைக்கிறேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவிசாய்த்தருளும்:
என் வேண்டுதலின் குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும். பல்லவி

3 ஆண்டவரே, யான் செய்த பாவங்களை நினைவு கூர்வீராகில்,
உமக்குமுன் யார் நிற்கமுடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு, நீர்
பாவங்களை மன்னிக்கிறீர். பல்லவி

5 அவரது வாக்குறுதியில் என் ஆன்மா நம்பிக்கை கொண்டுள்ளது.
6 என் ஆன்மா ஆண்டவரை எதிர்நோக்குகின்றது:
காவலர் உதயத்தை எதிர்பார்ப்பதற்கு மேலாக,
இஸ்ராயேலர் ஆண்டவரை எதிர்ப்பார்ப்பார்களாக. பல்லவி

7 ஏனெனில் ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது. அவருடைய
மீட்புத்துணை பொங்கி வழிகின்றது.
8 இஸ்ராயேலரை அவர் மீட்பார்: அவர்கள் செய்த பாவங்கள்
அனைத்தினின்றும் அவர்களை மீட்டுக்கொள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**விசுவசிக்கிறோம், ஆகவே பேசுகிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *4 : 13-5 : 1*

சகோதரரே,

'விசுவசித்தேன், ஆகவே பேசினேன்' என்று எழுதியுள்ளபடி, அதே விசுவாச மனப்பான்மைகொண்டிருக்கும் நாங்களும் விசுவசிக்கிறோம், ஆகவே பேசுகிறோம். ஆண்டவராகிய யேசுவை உயிர்ப்பித்தவர், எங்களை யேசுவோடு உயிர்ப்பித்துத் தம் திருமுன் கொணர்ந்து நிறுத்துவார் என அறிந்திருக்கிறோம்; அவ்வாறே உங்களையும் நிறுத்துவார். இவையெல்லாம் உங்கள் நன்மைக்கே. அதனால் மக்களிடையே இறையருள் பெருகப்பெருக, கடவுளின் மகிமைக்காகப் பலருடைய உள்ளத்தில் நன்றியறிதலும் பெருகும்.

ஆகவே நாங்கள் உள்ளம் தளர்வதில்லை; ஆனால், எங்கள் புறவுடலைச் சார்ந்தது அழிந்தவண்ணமாய் இருந்தாலும், உள் மனம் நாளுக்குநாள் புதுப்பிக்கப்படுகிறது. நாம் படும் வேதனை அற்பமானது, நொடிப்பொழுதே நீடிப்பது; ஆயினும் அது நம்மில், அளவிடமுடியாத நித்திய மாட்சிமையை ஒப்புயர்வற்ற வகையில் விளைவிக்கிறது. ஆனால், காண்பவற்றை அல்ல, காணாதவற்றையே நோக்கியவண்ணமாய் நாம் வாழ்தல் வேண்டும்; ஏனெனில், காண்பவை நிலையற்றவை; காணாதவை முடிவற்றவை.

ஏனெனில் மண்மீது நாம் குடியிருக்கும் இக்கூடாரம் தகர்ந்து வீழ்ந்தாலும், கடவுளிடமிருந்து கிடைத்த வீடு ஒன்று நமக்கு விண்ணில் உள்ளது. இது கையால் அமைக்கப்படாதது; முடிவில்லாதது. இதையெல்லாம் நாம் அறிவோமன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா*

*அரு. 12 : 31b-32*

அல்லேலூயா. இப்பொழுதே இவ்வுலகின் தலைவன் புறம்பே தள்ளப்படுவான்: நானோ உலகினின்று உயர்த்தப்பெற்றபின் அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

சாத்தான் தொலைவான்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3: 20-35

அக்காலத்தில்:

யேசு வீட்டிற்கு வரவே, மீண்டும் கூட்டம் கூடியது. ஆதலால் அவர்கள் சாப்பிடவும் முடியவில்லை. அவருடைய உறவினர் இதைக்கேட்டு அவரைப் பிடித்துக்கொண்டுவரப் புறப்பட்டார்கள். ஏனெனில், அவர் மதிமயங்கிவிட்டார் என்று மக்கள் சொல்லிக்கொண்டிருந்தனர்.

யெருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞர் இவரைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறதென்றும், பேய்த் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறார் என்றும் சொல்லி வந்தனர்.

ஆதலால் அவர் அவர்களை அழைத்து அவர்களுக்கு உவமையாகச் சொன்னதாவது: "சாத்தான் சாத்தானை எப்படி ஓட்ட முடியும்? ஓர் அரசு தனக்கு எதிராகத் தானே பிரிந்தால் அவ்வரசு நிலைக்க முடியாது. ஒரு வீடு தனக்கு எதிராகத் தானே பிரிந்தால், அவ்வீடு நிலைக்க முடியாது. சாத்தான் தனக்கெதிராகத் தானே எழுந்தால், பிரிவு பட்டு நிற்க முடியாமல் தொலைவான். முதலில் வலியவனைக் கட்டினாலன்றி அவ்வலியவனுடைய வீட்டினுள் நுழைந்து அவனுடைய பொருள்களைக் கொள்ளையிட எவனாலும் முடியாது. கட்டின பின்புதான் அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான்.

உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மக்களுக்கு எல்லாம் மன்னிக்கப்படும். பாவங்களும் அவர்கள் சொல்லும் தேவ தூஷணங்களும் மன்னிக்கப்படும். ஆனால், பரிசுத்த ஆவியைத் தூஷிப்பவன் எவனும் ஒரு போதும் மன்னிப்புப் பெறான், என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவான்." "அசுத்த ஆவி அவரைப் பிடித்திருக்கிறது" என்று அவர்கள் சொல்லிவந்ததால் யேசு இவ்வாறு கூறினார்.

அவருடைய தாயும் சகோதரரும் வந்து வெளியே நின்று கொண்டு, அவரை வரச்சொல்லி ஆள் அனுப்பினர். அவரைச் சுற்றி மக்கள் கூட்டமாய் உட்கார்ந்திருந்தனர். "இதோ! உம் தாயும் சகோதரரும் உம்மைத் தேடிக் கொண்டுவந்து வெளியே இருக்கின்றனர்" என்று அவரிடம் சொன்னார்கள்.

அதற்கு அவர், "என் தாயும் சகோதரரும் யார்?" என்று கேட்டு, தம்மைச் சூழ்ந்து இருந்தவர்களைச் சுற்றிப்பார்த்து, "இதோ! என் தாயும் சகோதரரும். கடவுளின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும் சகோதரியும் தாயுமாவான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ! உன் மகன் உயிரோடிருக்கிறான்**

அரசராகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 17 :17-24

குடும்பத் தலைவியாகிய ஒரு பெண்ணின் மகன் நோயுற்றான். அந்நோய் எவ்வளவு கொடுமையாயிருந்ததென்றால், அவன் உயிர் நீத்தான். அப்போது அப்பெண் எலியாசை நோக்கி, "கடவுளின் மனிதரே, உமக்கும் எனக்கும் என்ன? நீர் என் தீச் செயல்களை நினைவூட்டவும் , என் மகனைச் சாகடிக்கவுமா என்னிடம் வந்தீர்?" என்றாள்.

அதற்கு எலியாசு, "உன் மகனை என்னிடம் கொடு" என்று சொன்னார். பின்னர் அவளது மடியிலிருந்த அப்பிள்ளையைத் தாமே வாங்கிக்கொண்டு தமது அறைக்குச் சென்றார். அங்கே அவனைத் தம் படுக்கையின்மேல் கிடத்தினார். "என் கடவுளாகிய ஆண்டவரே, தன்னால் முடிந்தவரை என்னைப் பேணிவந்த இவ்விதவையின் மகனைச் சாகடித்து அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ?" என்று கடவுளை நோக்கிக் கதறியழுதார். பிறகு பிள்ளையின் உடலை அளந்தாற்போல் அவர் மும்முறை அதன்மேல் படுத்து, "என் கடவுளாகிய ஆண்டவரே, இப்பிள்ளையின் உயிர் இதன் உடலில் திரும்ப நுழையுமாறு செய்தருளும்" என்று ஆண்டவரை நோக்கி மன்றாடினார்.

ஆண்டவர் எலியாசின் விண்ணப்பத்திற்கு இரங்கினார். பிள்ளையின் உயிர் திரும்பி வர அவன் உயிர் பிழைத்தான். அப்பொழுது எலியாசு பிள்ளையை எடுத்துக்கொண்டு மேல்மாடியிலிருந்து கீழ் வீட்டுக்கு வந்து அவனை அவன் தாயின் கையிலே கொடுத்து, "இதோ உன் மகன் உயிரோடு இருக்கின்றான்" என்றார்.

அப்பொழுது அம்மாது எலியாசை நோக்கி, "நீர் கடவுளின் மனிதர் என்றும், உமது வாயிலிருந்து பிறக்கும் ஆண்டவருடைய வாக்கெல்லாம் உண்மை என்றும் இதன் மூலம் அறிந்துகொண்டேன்" என்றாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 29: 1&3, 4-5, 10-11a & 12b (பல்லவி: 1)

பல்லவி : ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்.
ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்.

1 ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன் : ஏனெனில், நீர் எனக்கு விடுதலை
யளித்தீர் : என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.
3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர் :
பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர்.
பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள் : அவர் எத்துணை
பரிசுத்தர் என்பதை நினைத்துப் போற்றுங்கள்.
5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே,
அவரது தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். மாலையில்
அழுகை என்றால், காலையில் உண்டாவது அக்களிப்பு ! பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என் மீதிரங்கும் :
ஆண்டவரே, எனக்குத் துணைசெய்யும்.
11 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர் :
12 ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறைவன் தம்மகனைப் பற்றிய நற்செய்தியை நான் புறவினத்தார்க்கு அறிவிக்கும்படி, அம்மகனை எனக்குள் வெளிப்படுத்தினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 11-19

சகோதரர்களே, உங்களுக்கு ஒன்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதனின் படைப்பன்று. மனிதனிடமிருந்து நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. எந்த மனிதனும் அதை எனக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. யேசு கிறிஸ்து அருளிய திருவெளிப்பாட்டின் வழியாகவே அந்நற்செய்தி எனக்குக் கிடைத்தது.

ஒரு காலத்தில் நான் யூத மறையைப் பின் பற்றியபொழுது, என்ன செய்து வந்தேன் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கடவுளின் திருச்சபையை எவ்வளவோ துன்புறுத்தி, ஒழிக்க முயன்றேன். முன்னோர் பரம்பரையில் ஆர்வம் மிக்கவனாய், என் இனத்தவருள் என் வயதினர் பலரினும் மேலாக யூத மறை ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினேன்.

ஆனால் தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தேர்ந்தெடுத்துத் தமது அருளால் என்னை அழைத்த இறைவன், தம் மகனைப் பற்றிய நற்செய்தியை நான் புறவினத்தார்க்கு அறிவிக்கும்படி, அம்மகனை எனக்குள் வெளிப்படுத்தத் திருவுளங் கொண்டார். அப்போது நான் எந்த மனிதனிடமும் போய்க் கலந்து ஆலோசிக்காமல், எனக்கு முன் அப்போஸ்தலர் ஆனவர்களையும் காண யெருசலேமுக்குப் போகாமல், உடனே அரேபியாவுக்குச் சென்றேன். அங்கிருந்து தமஸ்கு நகருக்குத் திரும்பினேன். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் கேபாவைப் பார்த்துப் பேச யெருசலேமுக்குப் போனேன்; அங்கே பதினைந்து நாள் அவருடன் தங்கியிருந்தேன். மற்ற அப்போஸ்தலருள் ஆண்டவரின் சகோதரரான யாகப்பரைத் தவிர வேறு யாரையும் நான் காணவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 7 : 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்: கடவுள் தம் மக்களைத்தேடி வந்திருக்கின்றார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இளைஞனே, உனக்கு நான் சொல்லுகிறேன்: எழுந்திரு.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:11-17

அக்காலத்தில்:

யேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும், திரளான மக்களும் அவரோடு சென்றுகொண்டிருந்தனர். அவர் ஊர் வாயிலை நெருங்கியபொழுது, இறந்த ஒருவனைத் தூக்கி வந்தனர். தாய்க்கு அவன் ஒரே பிள்ளை. அவளோ கைம்பெண்.

ஊராரும் அவளோடு பெருங்கூட்டமாக இருந்தனர். அவளைக் கண்டு ஆண்டவர் அவள் மீது மனமிரங்கி, “அழாதே” என்றார். பின்பு முன்னால் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கி வந்தவர்கள்

நின்றூர்கள். நின்றதும், "இளைஞனே, உனக்கு நான் சொல்லுகிறேன், எழுந்திரு" என்றூர். இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினுன். தாயிடம் அவனை ஒப்படைத்தார்.

அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள, "நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறூர்" என்று அவர்கள் கடவுளை மகிமைப்படுத்தினுர்கள். அவரைப் பற்றிய பேச்சு யூதேயா முழுவதிலும் சுற்றுப் புறமெங்கும் பரவியது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

கடவுள் எங்களுக்கு ஆறுதல் அளித்து வருகிறூர்: இவ்வாறு நாங்களும் எத்தகைய வேதனையுறுவோர்க்கும் ஆறுதல் அளிக்க முடிகிறது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தின் தொடக்கம் 1: 1-7

கொரிந்து நகரில் இருக்கும் கடவுளின் சபைக்கும், அக்காயா முழுவதிலுமுள்ள இறை மக்கள் அனைவருக்கும், கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனுன சின்னப்பனும் சகோதரனுன தீமோத்தேயுவும் எழுதுவது: நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உங்களுக்கு உண்டாகுக.

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றப்பெறுவாராக! அவர் இரக்கம் நிறைந்த தந்தை, ஆறுதல் அனைத்துக்கும் ஊற்றூன கடவுள். அவரே எங்களுக்கு எல்லாவகை வேதனையிலும் ஆறுதல் அளித்து வருகிறூர். இவ்வாறு கடவுளிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்ட ஆறுதலால், நாங்களும் எத்தகைய வேதனையுறுவோர்க்கும் ஆறுதலளிக்க முடிகிறது.

ஏனெனில், கிறிஸ்துவின் பாடுகள் எங்கள் வாழ்வில் மிகுந்திருப்பது போல், கிறிஸ்துவின் வழியாய் வரும் ஆறுதலும் மிகுந்திருக்கிறது. நாங்கள் வேதனைக்குள்ளானுல், அது உங்கள் ஆறுதலுக்காவும் மீட்புக்காகவுமே;

நாங்கள் ஆறுதல் அடைந்தால், அதுவும் உங்கள் ஆறுதலுக்காகவே. நாங்கள் படும் அதே பாடுகளை நீங்களும் பொறுமையாய்த் தாங்கிக் கொள்ளவே அந்த ஆறுதல் செயலாற்றுகிறது. ஆகவே, உங்களைப்பற்றி எங்களுக்குள்ள நம்பிக்கை உறுதியாய் உள்ளது: ஏனெனில், எங்கள் பாடுகளில் நீங்கள் பங்குபெறுவதுபோலவே ஆறுதலிலும் பங்கு பெறுவீர்கள் என்று அறிவோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 33: 1-2, 3-4, 5-6, 7-8 (பல்லவி: 8a)*

பல்லவி: ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று
சுவைத்துப் பாருங்கள்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்: அவரது புகழ் எப்போதும்
என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்: சிறுமையுற்றோர் இதைக்
கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்: எல்லோரும் சேர்ந்து
அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்; அவர் என் மன்றாட்டைக் கேட்டருளி
னார்: எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார். பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்: வெட்கத்தால் தலைகுனிய
மாட்டீர்கள்.
6 இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்:
எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

7 ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரைச் சுற்றி, அவருடைய தூதர் பாளையம்
இறங்கிக் காத்திடுவார்.
8 ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்: அவரிடம்
தஞ்சம் புகுவோன் பேறு பெற்றவன். பல்லவி

## 2 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*இஸ்ராயேலின் கடவுளை எலியாஸ் வழிபடுகிறார்.*

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 17 : 1-6

அந்நாட்களில் :

காலாதிலுள்ள குடிகளில் தெசுபித்தரான எலியாசு ஆக்காபை நோக்கி, "நான் வழிபட்டு வரும் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை! என் வாக்கினால் அன்றி இவ்வாண்டுகளில் பனியும் மழையும் பெய்யா" என்றார்.

மேலும் ஆண்டவர் எலியாசை நோக்கி, "நீ இவ்விடத்தை விட்டுக் கிழக்கு நோக்கிச் சென்று யோர்தானுக்கு எதிரேயுள்ள காரீத் ஆற்றோரத்தில் ஒளிந்துகொள். அவ்வாற்றின் தண்ணீரைப் பருகு. அவ்விடத்தில் உனக்கு உணவளிக்கக் காகங்களுக்குக் கட்டளையிட்டுள் ளோம்" என்றார். இதைக் கேட்டதும் எலியாசு புறப்பட்டு, ஆண்டவர் திருவுளம் பற்றினபடியே யோர்தானுக்கு எதிரே இருந்த காரீத் ஆற்றோரத்தில் தங்கியிருந்தார். காகங்கள் அவருக்குக் காலையிலும் மாலை யிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தன. அவர் அவ்வாற்றின் நீரைப் பருகிவந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 120 : 1-2, 3-4, 5-6, 7-8 (பல்லவி : 2 காண்)

பல்லவி : எனக்கு உதவி ஆண்டவரிடமிருந்தே வரும் :
வானமும் வையமும் படைத்தவர் அவரே.

1 "மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்தினேன்; உதவி எனக்கு எங்கிருந்து வரும்?" என்றேன்.
2 உதவி எனக்கு ஆண்டவரிடமிருந்தே வரும்; அவரே வானமும் வையமும் படைத்தவர். பல்லவி

3 உன் கால் இடறவிடமாட்டார்; உன்னைக் காக்கும் அவர் உறங்கிவிட மாட்டார்.
4 இதோ இஸ்ராயேலைக் காப்பவர் அயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை. பல்லவி

5 ஆண்டவர் உன்னைக் காக்கிறார்; ஆண்டவர் உன் வலப்புறத்தில் உன் பாதுகாப்பாயிருக்கிறார்.
6 பகலில் வெயில் உனக்குத் தீங்கு இழைக்காது, இரவில் நிலாவும் தீமை ஒன்றும் செய்யாது. பல்லவி

7 ஆண்டவர் எல்லாத் தீமையினின்றும் உன்னைக் காப்பார்; அவரே உன் ஆன்மாவையும் காப்பவர்.
8 ஆண்டவர் நீ போகும்போதும் காப்பார், வரும்போதும் காப்பார்; இப்போதும் எப்போதும் உன்னைக் காப்பார். பல்லவி

அல்லேலூயா — மத். 5:12a

அல்லேலூயா. அகமகிழ்ந்து, களிகூறுங்கள்.
ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எளிய மனத்தோர் பேறுபெற்றோர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5: 1-12

அக்காலத்தில் :

யேசு திரளான கூட்டத்தைக் கண்டு, மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரை அணுகினர். அவர் திருவாய்மலர்ந்து போதிக்கலானார்: "எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர். சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில், மண்ணுலகு அவர்களது உரிமையாகும். நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர். தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர். சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர். நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

என்பொருட்டுப் பிறர் உங்களை வசை கூறித் துன்புறுத்தி, உங்கள் மேல் இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லும்போது, நீங்கள் பேறுபெற்றோர். அகமகிழ்ந்து களிகூருங்கள். ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் இவ்வாறே துன்புறுத்தினர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசுகிறிஸ்துவிடம் ஆம் என்பதும் இல்லை என்பதும் கலந்தில்லை; ஆம் என்பது ஒன்றே உளது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *1: 18-22*

உங்களிடம் நான் பேசும்போது, ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்தில்லை; உண்மையாம் கடவுளே இதற்குச் சாட்சி. என் வழியாகவும், சில்வானு, தீமோத்தேயு வழியாகவும் உங்களிடையே அறிவிக்கப்பட்ட இறைமகனுகிய யேசு கிறிஸ்துவிடம் ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்தில்லை. ஆம் என்பது ஒன்றே அவரிடம் இருந்து வருகிறது. ஏனெனில், கடவுளின் வாக்குறுதிகள் யாவற்றுக்கும் ஆம் என்பதே அவரிடம் இருந்தது. ஆகையால்தான் நாம் கடவுளுக்குப் புகழுரை கூறும்பொழுது, அவர் வழியாகவே ‘ஆமென்’ என்கிறோம்.

உங்களையும் எங்களையும் கிறிஸ்துவின் ஒன்றிப்பில் உறுதிப்படுத்தி, நம்மை அபிஷேகம் செய்தவர் கடவுளே. அவரே நம்மீது தம் முத்திரை யிட்டு நம் உள்ளங்களில் இருக்கும்படி ஆவியானவரை அச்சாரமாக அளித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 118: 129, 130, 131, 132, 133, 135* (பல்லவி 135a)

பல்லவி: **உம் ஊழியன் எனக்கு இன்முகம் காட்டியருளும்.**

129 உம் ஆணைகள் வியப்புக்குரியவை, ஆகவே என் ஆன்மா அவற்றைக்
கடைப்பிடிக்கிறது. பல்லவி

130 உம் வார்த்தைகளுக்குத் தரும் விளக்கம் அறிவொளி தருகிறது,
அது எளியோர்க்கு அறிவூட்டுகிறது. பல்லவி

131 வாய் திறக்கிறேன், பெருமூச்சு விடுகிறேன்: ஏனெனில் உம் கற்பனைகளை
விரும்புகிறேன். பல்லவி

132 என்மீது உமது பார்வையைத் திருப்பி இரக்கம் வையும் : உம்மீது அன்பு கொள்பவர்களுக்கு இரங்குவதுபோல என் மீது இரங்கும். *பல்லவி*

133 உமது வாக்கின்படி என் நடத்தையை நெறிப்படுத்தும், தீமையானது எதுவும் என்னை மேற்கொள்ளாது. *பல்லவி*

135 உம் ஊழியன் எனக்கு இன்முகம் காட்டியருளும், உம் நியமங்களை எனக்குக் கற்பித்தருளும். *பல்லவி*

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் எலியாசின் மூலம் சொன்ன வார்த்தைப்படியே அன்றுமுதல் பானையில் மாவு செலவழிந்ததில்லை.**

*அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்* *17 : 7-16*

*அந்நாட்களில் :*

எலியாஸ் ஒளிந்திருந்த ஆறு, நாட்டில் மழை பெய்யாததால், சில நாட்களுக்குப் பின் வற்றிப் போயிற்று. அப்போது ஆண்டவர் அவரை நோக்கி, "நீ சீதோனியரின் ஊராகிய சரேப்தாவுக்குச் சென்று அங்கே தங்கி இரு. உனக்கு உணவூட்டும்படி அங்கேயிருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டுள்ளோம்" என்றார். அதன்படி எலியாசு புறப்பட்டுச் சரேப்தாவுக்குப் போனார்.

அந்நகரின் வாயிலை அடைந்தபோது அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவர் அவளைக் கூப்பிட்டு, "நான் குடிக்க ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார். அவள் தண்ணீர் கொண்டுவரச் செல்கையில் பின்னிருந்து சத்தமிட்டு "எனக்குக் கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டுவா" என்றார்.

அவள் அவருக்கு மறுமொழியாக "உம் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை! என்னிடம் அப்பம் இல்லை. என் பானையில் ஒரு சிறங்கை மாவும், கலயத்தின் அடியில் கொஞ்சம் எண்ணெயுமே இருக்கின்றன. அப்பம் சுடத்தான் இந்த இரண்டொரு விறகைப் பொறுக்கினேன். அதைச் சாப்பிட்டபின் நானும் என் மகனும் மீண்டும் உண்ண ஒன்றும் இல்லாமல் சாவோம்" என்றாள்.

அப்போது எலியாசு அவளைப் பார்த்து, "அஞ்சாதே; போய் நீ சொன்னபடி செய். எனினும், முதலில் ஒரு சிறிய அப்பம் சுட்டு எனக்குக் கொண்டு வா. பிறகு உனக்கும் உன் மகனுக்கும் அப்பம் தயார் செய்யலாம். ஏனென்றால், 'ஆண்டவர் நிலத்தில் மழை பொழியச் செய்யும்வரை உன் பானையின் மாவு செலவழிந்து போவதுமில்லை; கலயத்தின் எண்ணெய் குறைந்து போவதுமில்லை" என்று இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்றார்.

அவள் போய் எலியாசின் சொற்படி செய்தாள். அவரும் உண்டார்; அவளும் அவள் வீட்டாரும் உண்டனர். ஆண்டவர் எலியாசின் மூலம் சொன்ன வார்த்தையின்படியே அன்றுமுதல் பானையின் மாவு செலவழிந்ததுமில்லை; கலயத்தின் எண்ணெய் குறைந்ததுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 4 : 1-2, 3-4, 6c-7 (பல்லவி : 6c)

பல்லவி : ஆண்டவரே, உம் முகத்தின் ஒளி
எம்மீது வீசச் செய்யும்.

1 இறைவா, என் சார்பாக நின்று நீதியை விளங்க வைப்பவரே, உம்மை நான் கூப்பிடும்போது எனக்குச் செவி சாய்த்தருளும்: நான் இடுக்கண் உற்ற போது எனக்கு ஆறுதல் அளித்தீர்; என் மீதிரங்கி என் மன்றாட்டைக் கேட்டருளும்.
2 மானிடரே, இன்னும் எவ்வளவு காலம் கல்நெஞ்சராயிருப்பீர்கள்? ஏன் வீணானதை நாடுவீர்கள்? பொய்யானதைத் தேடிச் செல்வீர்கள்? பல்லவி

3 ஆண்டவர் தம் அடியார்களுக்காக வியப்புக்குரியன செய்கிறார், இதை மனத்தில் வையுங்கள் : ஆண்டவரை நான் கூப்பிடும்போது எனக்கு அவர் செவிசாய்க்கிறார்.
4 அச்சமுறுங்கள், பாவத்தை விடுங்கள்; இரவிலும் உள்ளத்தில் இறைவனைத் தியானித்து அமைதியாயிருங்கள். பல்லவி

6 ஆண்டவரே, உம் முகத்தின் ஒளி எம்மீது வீசச்செய்யும்.
7 கோதுமையும் திராட்சையும் நன்கு விளையும் காலத்தில் மக்கள் அடையும் மகிழ்ச்சியிலும் மேலான மகிழ்ச்சி என் இதயத்தில் பொங்கச் செய்தீர். பல்லவி

மத். 5 : 16

அல்லேலூயா

அல்லேலூயா. மக்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு, வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்வதாக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உலகிற்கு ஒளி நீங்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:13-16

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

“ உலகிற்கு உப்பு நீங்கள். உப்பு சாரமற்றுப்போனால் வேறு எதனால் சாரம் பெறும்? இனி, வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடுமே யொழிய, ஒன்றுக்கும் உதவாது.

உலகிற்கு ஒளி நீங்கள். மலைமேல் உள்ள ஊர் மறைவாயிருக்க முடியாது. மேலும், விளக்கைக் கொளுத்தி மரக்காலின்கீழ் வைக்க மாட்டார்கள்; மாறாக, வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்பொருட்டு, விளக்குத் தண்டின்மீது வைப்பார்கள்.

அப்படியே, மக்கள் உங்கள் நற்செயல்களைக்கண்டு, வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்வதாக. ”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைக் கடவுள் எங்களுக்குத் தந்திருக்கின்றார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 4-11

சகோதரர்களே :

இத்தகைய நம்பிக்கையே நாங்கள் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள் மேல் வைத்திருக்கிறோம். நாங்களே செய்துவிட்டதுபோல எதன்மேலும் உரிமை பாராட்டிக்கொள்ளும் தகுதி எங்களுக்கு இல்லை; எங்கள் தகுதியுடைமை கடவுளிடமிருந்தே வருகிறது. அவரே எங்களுக்குப் புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைத் தந்தார்; அந்த உடன்படிக்கையோ எழுதிய சட்டத்தைச் சார்ந்ததன்று; ஆவியானவரையே சார்ந்தது. ஏனெனில், எழுதிய சட்டம் விளைப்பது சாவு, ஆவியானவர் அளிப்பதோ வாழ்வு.

கற்களில் எழுத்துக்களால் வரையப்பட்ட அச்சட்டத்தோடு பொருந்திய திருப்பணி சாவை விளைப்பதாய் இருந்தும், அத்திருப்பணி இறைமாட்சிமை சூழ அருளப்பட்டது. விரைவில் மறையவேண்டியதாய் இருந்த அந்த மாட்சிமை மோயீசன் முகத்தில் எவ்வளவு ஒளி வீசிற்றென்றால், இஸ்ராயேல் மக்கள் அவர் முகத்தை உற்றுப் பார்க்கவும் இயலவில்லை. அத்தகைய மாட்சிமை அதைச் சூழ்ந்திருந்ததென்றால், ஆவியின் திருப்பணியை இன்னும் எவ்வளவு மாட்சிமை சூழவேண்டும்! ஏனெனில், தண்டனைத் தீர்ப்புக்குட்படுத்தும் திருப்பணி இவ்வளவு மாட்சிமையுள்ளதாய் இருந்ததென்றால், மன்னிப்புத் தரும் திருப்பணி இன்னும் எவ்வளவோ மாட்சிமை நிறைந்ததாய் இருக்கவேண்டும்! உள்ளபடி அன்றைய மாட்சிமையை இவ்வளவு மேன்மையுள்ள இன்றைய மாட்சிமையோடு ஒப்பிட்டால் அது மாட்சிமையே அன்று. ஏனெனில், மறையப்போவது மாட்சிமையினிடையே தோன்றியதென்றால், நிலைத்திருக்கப்போவது இன்னும் எவ்வளவோ மாட்சிமையோடு விளங்கவேண்டும்!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 98:5, 6, 7, 8, 9 (பல்லவி: 9c காண்)

பல்லவி: எங்கள் இறைவனாகிய ஆண்டவரே, நீர் பரிசுத்தர்.

5 நம் ஆண்டவராகிய இறைவனைப் போற்றிப் புகழுங்கள்: அவருடைய கால் மணையில் விழுந்து பணியுங்கள்; அவர் பரிசுத்தர். பல்லவி

6 மோயீசனும் ஆரோனும் அவர் அமைத்த குருகுலத்தைச் சார்ந்தவர்: அவருடைய பெயரைக் கூவியழைப்பவர்களுள் சாமுவேலும் உள்ளார்; ஆண்டவரை அவர்கள் கூவியழைத்தார்கள்; அவர் அவர்களுடைய மன்றாட்டுக்குச் செவிசாய்த்தார். பல்லவி

7 மேகத் தூணிலிருந்து அவர்களிடம் பேசினார்; அவர் அவர்களுக்குத் தந்த கற்பனைகளையும் கட்டளையையும் அவர்கள் செவியுற்றனர். பல்லவி

8 ஆண்டவரே, எம் இறைவா, நீர் அவர்களுக்குச் செவிசாய்த்தீர்; இறைவனே, நீர் அவர்களுக்கு மன்னிப்பளிக்கும் இறைவனாயிருக்கின்றீர்: ஆயினும் அவர்களுடைய தீச்செயல்களுக்குப் பழிவாங்கினீர். பல்லவி

9 நம் ஆண்டவராகிய இறைவனைப் புகழ்ந்து போற்றுங்கள், அவருடைய திருமலையில் வீழ்ந்து பணியுங்கள். ஏனெனில், நம் இறைவனாகிய ஆண்டவர் பரிசுத்தர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவர் நீரே என்றும், நீரே இம்மக்களின் மனதை மாற்றியுள்ளீர் என்றும் இவர்கள் அறிவார்களாக.

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 18: 20-39

அந்நாட்களில் :

ஆக்காசு இஸ்ராயேல் மக்கள் எல்லாரையும் கூட்டிவர ஆட்களை அனுப்பி, கார்மேல் மலையிலிருந்த அந்தத் தீர்க்கதரிசிகளையும் அழைத்து வரும்படி செய்தான்.

அப்போது எலியாசு மக்களுக்கு முன் சென்று, “ நீங்கள் எதுவரை இருபக்கமும் சாய்ந்து நடக்கும் நொண்டியைப்போல் இருப்பீர்கள்? ஆண்டவர் கடவுளானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாவால் கடவுளானால் அவனைப் பின்பற்றுங்கள்” என்றார். மக்கள் மறுமொழியாக ஒன்றும் சொல்லவில்லை. எலியாசு மறுமுறையும் மக்களை நோக்கி, “ ஆண்டவரின் இறைவாக்கினரில் எஞ்சியிருப்பவன் நான் ஒருவனே. பாவாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பது பேர் உள்ளனர். இருப்பினும், இரண்டு காளைகளை எம்மிடம் கொண்டு வாருங்கள். ஒரு காளையை அவர்கள் தேர்ந்துகொண்டு அதைத் துண்டு துண்டாய் வெட்டித் தீப்போடாமல் விறகுகளின்மேல் வைக்கட்டும். நானோ மற்றக் காளையை அப்படியே செய்து தீப்போடாமல் விறகுகளின்மேல் வைக்கிறேன். நீங்கள் உங்கள் தெய்வங்களைப் பெயர் சொல்லி அழைத்து வேண்டிக்கொள்ளுங்கள். நானும் என் கடவுளைப் பெயர் சொல்லி அழைத்து வேண்டிக்கொள்கிறேன். அப்போது தீயை உண்டுபண்ணுவதின் மூலம் நம் மன்றாட்டுகளுக்குச் செவி மடுக்கும் கடவுளே உண்மைக் கடவுள்” என்றார். அதற்கு மக்கள் எல்லாரும், “ இதுவே சரியான யோசனை ” என்றனர்.

அப்போது எலியாசு பாவாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி, “ நீங்கள் பலராய் இருப்பதால், நீங்களே முதலில் ஒரு காளையைத் தேர்ந்துகொண்டு அதைத் தயார் செய்து தீப்போடாமல் உங்கள் தெய்வங்களின் பெயரை

மட்டும் சொல்லி அழைத்து வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். அத்தீர்க்கதரிசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை வாங்கி அதைத் தயார் செய்து, "பாவாலே, எங்களுக்குச் செவிகொடும்" என்று காலை முதல் நண்பகல் வரைத் தங்கள் பலிபீடத்தைப் பலமுறை சுற்றிவந்து பாவாலின் பெயரைச் சொல்லி அழைத்து வேண்டிக் கொண்டனர். இருப்பினும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை; மறுமொழி கொடுப்பாரும் இல்லை.

நண்பகல் வேளையில் எலியாசு கிண்டலாக அவர்களை நோக்கி, "இன்னும் உரத்த குரலில் செபியுங்கள்; அவர் கடவுள் அல்லரோ? சிலவேளை அவர் உரையாடிக்கொண்டிருப்பார்; அல்லது சத்திரத்தில் தங்கியிருப்பார்: அல்லது அவர் பயணம் சென்றிருக்கக் கூடும்; ஒருவேளை, அவர் தூங்கிக்கொண்டிருப்பார்; எனவே, அவரை எழுப்பவேண்டியிருக்கலாம்" என்றார். அவர்கள் உரத்த குரலில் கூப்பிட்டுத் தம் வழக்கத்தின்படியே, இரத்தம் மிகுதியாக வடியும்வரைக் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களையே குத்திக்கொண்டனர்.

பிற்பகலிலும் அவர்கள் கத்திக் கொண்டுதான் இருந்தார்கள். இதோ பலி செலுத்தும் நேரமும் வந்தது. இருப்பினும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை; மறுமொழி கொடுப்பாரும் இல்லை; அவர்களது மன்றாட்டைக் கவனிப்பாரும் இல்லை. அப்போது எலியாசு எல்லா மக்களையும் நோக்கி, "எல்லாரும் என்னிடம் வாருங்கள்" என்றார். மக்கள் அனைவரும் அவர் அருகே வந்தனர். உடனே எலியாசு முன்னே இடிந்து கிடந்த ஆண்டவருடைய பலிபீடத்தை மீண்டும் கட்டி எழுப்பினார். "உனக்கு இஸ்ராயேல் என்ற பெயர் இருப்பதாக" என்று ஆண்டவர் யாக்கோபுக்குச் சொல்லியிருந்ததின் பொருட்டு, எலியாசு யாக்கோபின் புதல்வர்களுடைய கோத்திரங்களின் கணக்குப்படியே பன்னிரு கற்களை எடுத்தார். பின்னர் அக்கற்களைக் கொண்டே ஆண்டவருடைய பெயரால் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். மேலும் பலிபீடத்தைச் சுற்றிலும் இரண்டு உழவுசால் அகலம் உள்ள ஒரு வாய்க்காலை வெட்டினார். விறகுகளை அடுக்கி, ஒரு காளையைத் துண்டு துண்டாய் வெட்டி, விறகுகளின்மேல் வைத்தார். மக்களை நோக்கி, "நான்கு குடம் தண்ணீர் கொணர்ந்து தகனப் பலியின் மேலும் விறகுகளின்மேலும் ஊற்றுங்கள்" என்றார். பிறகு இன்னும் ஒருமுறை அப்படியே ஊற்றுங்கள்" என்றார். "மூன்றாம் முறையும் அப்படியே ஊற்றுங்கள்" என்று மீண்டும் கூற, அவர்கள் மூன்றாம் முறையும் ஊற்றினார்கள். அப்போது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடி வாய்க்காலையும் நிரப்பிற்று.

தகனப்பலி செலுத்தும் நேரமானவுடன் இறைவாக்கினர் எலியாசு பீடத்தருகே வந்து, "ஆபிரகாம், ஈசாக், யாக்கோப் என்பவர்களின் கடவுளாகிய ஆண்டவரே, நீர் இஸ்ராயேலின் கடவுள் என்றும், நான் உம்முடைய ஊழியன் என்றும், இவற்றை எல்லாம் நான் உமது வாக்கின்படியே செய்தேன் என்றும் இன்று விளங்கச் செய்யும். நீரே கடவுளாகிய ஆண்டவர் என்றும், நீரே இம்மக்களின் மனத்தை மாற்றியுள்ளீர் என்றும்

இவர்கள் அறியும்படி என் மன்றாட்டைக் கேட்டருளும்; ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்" என்றார். உடனே ஆண்டவரிடமிருந்து தீ இறங்கி வந்து அந்தத் தகனப் பலியையும் விறகுகளையும் கற்களையும் மணலையும் சுட்டெரித்து, வாய்க்கால் நீரையும் வற்றச் செய்தது. மக்கள் அனைவரும் இதைக் கண்டவுடனே நெடுந்தெண்டனிட்டு விழுந்து, "ஆண்டவரே கடவுள், ஆண்டவரே கடவுள்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15 : 1-2a, 4, 5 & 8, 11 பல்லவி : 1)

பல்லவி : இறைவா, என்னைப் பாதுகாத்தருளும் : உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும் : உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.
2 "நீரே என் ஆண்டவர்," என்று ஆண்டவரிடம் சொன்னேன். பல்லவி

4 வேறு தெய்வங்களை வழிபடுவோர் தங்கள் துன்பங்களைப் பெருக்கிக்கொள்கின்றனர். அவற்றுக்குச் செய்யப்படும் இரத்தப் பலிகளில் நான் கலந்துகொள்ளமாட்டேன் : அவற்றின் பெயரை முதலாய் நாவால் உச்சரிக்கமாட்டேன். பல்லவி

5 ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்; எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன் : அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர் : உம் திருமுன் எனக்கு நிறை மகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர். பல்லவி

அல்லேலூயா சங். 24 : 4c, 5a

அல்லேலூயா. என் இறைவா, உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும் : உமது உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தியருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே வந்தேன்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 5: 17-19

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

“ திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்க வேண்டாம். அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே வந்தேன்.

உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகுமுன் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்துபோகாது ; எல்லாம் நிறைவேறும்.

ஆகையால், இச் சின்னஞ் சிறு கட்டளைகளில் ஒன்றையேனும் மீறி, அப்படியே மனிதர்க்கும் போதிப்பவன், விண்ணரசில் மிகச் சிறியவன் எனப்படுவான். அவற்றைக் கடைப்பிடித்துப் போதிப்பவனே, விண்ணரசில் பெரியவன் எனப்படுவான்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*இறைமாட்சியின் அறிவொளி மிளிரும்படி, கடவுள் எங்கள் உள்ளத்தில் ஒளி கடரச்செய்தார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3: 15-4: 1, 3-6

சகோதரர்களே :

இன்றுவரை, மோயீசன் எழுதியதைப் படிக்கும்போதெல்லாம், இஸ்ராயேல் மக்களுடைய மனத்தின்மீது திரை ஒன்று கிடக்கிறது. “ஆண்டவர்பால் திரும்பினால்தான் அந்த மூடு திரை அகற்றப்படும்.” ஆண்டவர் என்றது தேவ ஆவியைத்தான்; ஆண்டவரின் ஆவி எங்கிருக்கிறாரோ அங்கு விடுதலை உண்டு. இப்பொழுது நாமனைவரும் மூடு திரையில்லா முகத்தினராய், ஆண்டவரின் மாட்சிமையைக் கண்ணாடி

போல் காட்டுகிறோம். அதனால், மேன்மேலும் மாட்சிமை ஒளி பெற்று, அதன் சாயலாகவே உருமாற்றம் அடைகிறோம்; இவையெல்லாம் ஆவியாகிய ஆண்டவரின் செயலே.

அதனால்தான் இறைவனின் இரக்கத்தால் இந்தத் திருப்பணியைப் பெற்றிருக்கும் நாங்கள் உள்ளம் தளராதிருக்கிறோம். மறைவாக மக்கள் செய்யும் இழிவான செயல்களை வெறுத்துவிட்டோம்; எங்கள் நடத்தையில் சூழ்ச்சி என்பதே இல்லை; கடவுள் வார்த்தையை நாங்கள் திரித்துக் கூறுவதில்லை; உண்மையை வெளிப்படுத்துவதுதான் எங்களைப் பற்றி நாங்கள் தரும் நற்சான்று. இதுவே கடவுள் முன்னிலையில் நல்ல மனச்சாட்சியுள்ள மனிதர் அனைவருக்கும் நாங்கள் தரும் சான்று. நாங்கள் அறிவிக்கும் நற்செய்தி சிலருக்கு இன்னும் மறை பட்டதாய் உள்ளதென்றால், அழிவுறுவோர்க்கே அது மறைபட்டுள்ளது. கடவுளது சாயலான கிறிஸ்துவினுடைய மாட்சிமை விளங்கும் நற்செய்தியின் ஒளியை அவர்கள் பார்க்காதபடி இவ்வுலகத்தின் தெய்வம் விசுவாசமற்றவர்களின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டது.

நாங்கள் தூதுரைப்பது எங்களைப்பற்றியன்று, யேசு கிறிஸ்துவே ஆண்டவர் எனத் தூதுரைக்கிறோம். நாங்களோ யேசுவுக்காக உங்கள் ஊழியர்களே. ஏனெனில், 'இருளினின்று ஒளி சுடர்க' என்று சொன்ன கடவுள்தாமே கிறிஸ்துவின் முகத்தில் வீசிய இறைமாட்சிமையின் அறிவொளி மிளிரும்படி, எங்கள் உள்ளங்களிலும் ஒளி சுடரச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 84 : 8ab-9, 10-11, 12-13* (பல்லவி : 9b காண்)

பல்லவி : நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும்.

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன் :
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது:
அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும் :
நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும் :
நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார் : நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

எலியாஸ் செபித்தார், வானம் பொழிந்தது.

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 18: 41-46

அந்நாட்களில்:

எலியாசு ஆக்காபை நோக்கி, "நீர் போய் உணவு அருந்தும்; ஏனெனில், பெருமழையின் இரைச்சல் கேட்கிறது" என்றார். ஆக்காப் சாப்பிடப் போகவே, எலியாசு கார்மேல் மலையின் உச்சிக்கு ஏறிச் சென்று, அங்கே முழந்தாளிட்டுத் தம் முகத்தைத் தம் முழங்கால்களுக்கு இடையில் வைத்தவாறு, தம் ஊழியனை நோக்கி, "நீ போய்க் கடல் பக்கமாய்ப் பார்" என்றார். அவன் போய்ப் பார்த்து, "ஒன்றும் இல்லை" என்றான். எலியாசு அவனைப்பார்த்து, "ஏழு முறை சென்று பார்" என்றார்.

ஏழாம் முறை அவன் சென்று பார்த்தபோது, இதோ மனிதனின் அடிச் சுவட்டை ஒத்த ஒரு சிறிய மேகம் கடலிலிருந்து எழும்பி வந்தது. அப்போது எலியாசு தம் ஊழியனை நோக்கி, "நீ போய் ஆக்காபுக்கு: 'நீர் மழையில் அகப்பட்டுக்கொள்ளாதபடி தேரைப் பூட்டிப் போய்விடும்' என்று சொல்" என்றார்.

அவன் புறப்படுவதற்குள் கார் முகில் சூழ, வானம் இருண்டது; காற்றும் அடித்தது. உடனே பெருமழை பெய்தது: ஆக்காப் தேரில் ஏறி ஜெஸ்ராயேலுக்குச் சென்றான். அந்நேரத்தில் ஆண்டவரின் கை எலியாசின்மேல் இருந்தது. அவரும் தம் இடையை வரிந்து கட்டிக் கொண்டு ஜெஸ்ராயேல்வரை ஆக்காபுக்கு முன்னே ஓடினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 64: 9abcd, 9e-10, 11-12a (பல்லவி: 1a)

பல்லவி: சீயோனில், இறைவா, உமக்குப் பாடல் இசைப்பது தகுதியே.

9 மண்ணுலகைத் தேடி வந்தீர், அதற்கு நிறைய மழையைக் கொடுத்தீர்:
அதற்கு நிறை வளம் தந்தீர்.
கடவுளின் ஆறு கரை புரண்டோடியது.
தானியங்கள் நிரம்ப விளையச் செய்தீர். பல்லவி

10 விளையச் செய்ததோ இவ்வாறு : படைசால்களில் தண்ணீர் ஓடச்செய்தீர்;
மண்கட்டிகளைப் பரம்படித்து மழையால் அதை மிருதுவாக்கினீர்;
முளைத்து வரும் விதையை ஆசீர்வதித்தீர். பல்லவி

11 ஆண்டு முழுவதையும் உமது கருணையால் நிரப்பினீர்;
நீர் செல்லும் இடத்தில் செழுமை சிந்துகிறது.
12 பாலைவெளியின் மேய்ச்சல் நிலம் கொழுமைகொண்டு விளங்குகிறது;
குன்றுகளைச் சூழ்ந்து அக்களிப்பு காணப்படுகிறது. பல்லவி

அல்லேலூயா அரு. 13:34

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன் : நான் உங்களுக்கு அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5: 20-26

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

மறைநூல் அறிஞர், "பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிட்டால், விண்ணரசு சேரமாட்டீர்கள்.

'கொலை செய்யாதே, கொலை செய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன் : தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான். தன் சகோதரனை 'முட்டாள்' என்பவன், தலைமைச் சங்கத் தீர்ப்புக்குள்ளாவான். அவனை 'மதிகெட்டவனே' என்பவனோ எரிநரகத்திற்குள்ளாவான்.

நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்த வரும்பொழுது, உன் சகோதரனுக்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால், அங்கேயே, பீடத்தின் முன், உனது காணிக்கையை வைத்துவிட்டு, முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின்னர் வந்து, உன் காணிக்கையைச் செலுத்து.

நீ உன் எதிரியோடு போகும்போது, வழியிலேயே அவனுடன் விரைவாகச் சமரசம் செய்துகொள். இல்லையேல், உன் எதிரி உன்னை நீதிபதியிடம் கையளிக்க, நீதிபதி உன்னைக் காவலனிடம் கையளிக்கக் கூடும்; நீ சிறையில் அடைபட நேரிடும். உறுதியாகவே உனக்குச் சொல்லுகிறேன்: கடைசிக் காசை நீ கொடுத்துத் தீர்க்கும்வரை; அங்கிருந்து வெளியேறமாட்டாய்"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசுவை உயிர்ப்பித்தவர், எங்களை யேசுவோடு உயிர்ப்பித்து, தம் திருமுன் கொணர்ந்து நிறுத்துவார்; அவ்வாறே உங்களையும் நிறுத்துவார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 4: 7-15

சகோதரர்களே :

இணையற்ற இவ்வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, கடவுளுக்கே உரியது என்று விளங்கும்படி, இந்தச் செல்வத்தைக் கொண்டிருக்கும் நாங்கள் வெறும் மட்கலங்களாகவே இருக்கிறோம். எல்லாவகையிலும் வேதனையுறுகிறோம்; ஆனால், ஒடுங்கிப்போவதில்லை. மனக்கலக்கம் அடைகிறோம்; ஆனால், மனம் உடைவதில்லை. துன்புறுத்தப்படுகிறோம்; ஆயினும், இறைவனால் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்படுகிறோம்; ஆனால், அழிவுறுவதில்லை. யேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் யேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம். ஏனெனில், யேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் ஊனுடலில் வெளிப்படும்படி, உயிரோடிருக்கும்போதே யேசுவுக்காக நாங்கள் எந்நேரமும் சாவுக்குக் கையளிக்கப்படுகிறோம். இவ்வாறு எங்களுள் சாவும், உங்களுள் வாழ்வும் செயலாற்றுகிறது.

"விசுவசித்தேன், ஆகவே பேசினேன்" என்று எழுதியுள்ளபடி, அதே விசுவாச மனப்பான்மை கொண்டிருக்கும் நாங்களும் விசுவசிக்கிறோம், ஆகவே பேசுகிறோம். ஆண்டவராகிய யேசுவை உயிர்ப்பித்தவர், எங்களை யேசுவோடு உயிர்ப்பித்துத் தம் திருமுன் கொணர்ந்து நிறுத்துவார் என அறிந்திருக்கிறோம்; அவ்வாறே உங்களையும் நிறுத்துவார்

**இவையெல்லாம் உங்கள் நன்மைக்கே. அதனால் மக்களிடையே இறையருள் பெருகப் பெருக, கடவுளின் மகிமைக்காகப் பலருடைய உள்ளத்தில் நன்றியறிதலும் பெருகும்.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 115 : 1-2, 6-7, 8-9 (பல்லவி : 8அ)*

*பல்லவி :* **ஆண்டவரே, புகழ்ச்சிப்பலியை உமக்குச் செலுத்துவேன்.**

*அல்லது :* **அல்லேலூயா.**

1 “மிக மிகத் துன்புறுகிறேன்!” என்று சொன்னபோதுங்கூட நான் ஆண்டவரை நம்பினேன்:
2 “எந்த மனிதனும் நம்பிக்கைக்குரியவனல்ல” என்று அச்சத்தால் மேலிட்டுச் சொன்னேன். *பல்லவி*

6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது.
7 ஆண்டவரே, நான் உம் ஊழியன்; உம் அடியேன்; உமது அடியாளின் மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர். *பல்லவி*

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்; ஆண்டவருடைய திருப் பெயரைக் கூவி அழைப்பேன்.
9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். *பல்லவி*

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவருக்கு முன்பாக மலையின்மேல் நில்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 19: 9a, 11-16

*அந்நாட்களில் :*

எலியாசு அங்கு வந்தபின், ஒரு குகைக்குள் தங்கியிருந்தார். அப்பொழுது ஆண்டவர் அவரை நோக்கி: "நீ வெளியே வந்து ஆண்டவருக்கு முன்பாக மலையின்மேல் நில். ஏனெனில், ஆண்டவர் இதோ நடந்து செல்கிறார்" என்றார்.

அப்பொழுது ஆண்டவருக்கு முன்பாகக் குன்றுகளைப் பெயர்த்துக் கொண்டும், கற்பாறைகளைப் பிளந்துகொண்டும் வலுத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆயினும் அக்காற்றில் ஆண்டவர் இருக்கவில்லை. காற்றுக்குப் பின் நிலநடுக்கம் ஏற்பட்டது; நில நடுக்கத்திலும் ஆண்டவர் இருக்கவில்லை. நில நடுக்கத்திற்குப்பின் தீ கிளம்பிற்று; தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை. தீக்குப்பின் தென்றலின் மெல்லிரைச்சல் உண்டானது.

அதை எலியாசு கேட்டவுடன் போர்வையினால் தம் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து குகையின் வாயிலில் நின்றார். அப்பொழுது, "எலியாசு, நீ அங்கே என்ன செய்கிறாய்?" என்ற குரல் கேட்டது. அதற்கு எலியாசு மறுமொழியாக, "சேனைகளின் கடவுளாகிய ஆண்டவர் மாட்டு மிகுந்த ஆர்வம் கொண்டவனாய் இருக்கிறேன்; ஏனெனில் இஸ்ராயேல் மக்கள் உமது உடன்படிக்கையைப் புறக்கணித்துவிட்டனர்; உம் பலிபீடங்களையும் தகர்த்து உம் இறைவாக்கினரையும் வாளால் வெட்டிக் கொன்று விட்டனர். நான் ஒருவன் மட்டும் எஞ்சியிருக்க, என் உயிரையும் வாங்கத் தேடுகிறார்களே" என்றார்.

அப்பொழுது ஆண்டவர் அவரை நோக்கி, "பாலைவனம் மூலம் நீ வந்த வழியே திரும்பித் தமாஸ்குவுக்குச் செல். அவ்விடம் சேர்ந்தவுடன் சீரியாவுக்கு அரசனாக அசாயேலை அபிஷேகம் செய். பிறகு நாம்சியின் மகன் ஏகுவை இஸ்ராயேலுக்கு அரசனாகவும் அபேல்மேவுலா ஊரானான சாபாத்தின் மகன் எலிசேயுவை உனக்குப் பதிலாய் இறைவாக்கினராகவும் அபிஷேகம் செய்" என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 26 : 7-8a, 8b-9abc, 13-14 (பல்லவி : 8b)

பல்லவி : ஆண்டவரே, நீர் எனக்கு இன்முகம் காட்டவேண்டுமென்று விழைகின்றேன்.

7 ஆண்டவரே, நானும்மை நோக்கி எழுப்பும் குரலைக் கேட்டருளும் :
என்மீது அருள்கூரும், என் மன்றாட்டுக்குச் செவி சாய்த்தருளும்.
8 என் உள்ளம் உம்மோடு உரையாடுகிறது: உம்மை நான் பார்க்க விரும்பு
கிறேன். பல்லவி

ஆண்டவரே, நீர் எனக்கு இன்முகம் காட்டவேண்டுமென விழைகிறேன்.
9 உம் முகத்தை எனக்கு மறைத்துக்கொள்ளாதேயும்; சினங்கொண்டு உம்
ஊழியனைத் தள்ளிவிடாதேயும். நீரே எனக்குத் துணை. என்னைத் தள்ளி
விடாதேயும். பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக்
காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு; உன் உள்ளம் திடம்
கொள்வதாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு. பல்லவி

அல்லேலூயா பிலிப். 2 : 15-16

அல்லேலூயா. வாழ்வைப் பற்றிய வார்த்தைகளை ஏந்திநின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்களெனத் துலங்குவீர்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும்
ஏற்கெனவே தன் உள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5 :27-32

அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறியதாவது :

'விபசாரம் செய்யாதே' என்று முன்னோர்களுக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன் : ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

உன் வலக் கண் உனக்கு இடறலாயிருந்தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் உறுப்புக்களுள் ஒன்று அழிந்து போவது உனக்கு நலம். உன் வலக்கை உனக்கு இடறலாயிருந்தால், அதை வெட்டி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்துக்குச் செல்வதைவிட, உன் உறுப்புக்களுள் ஒன்று அழிந்து போவது உனக்கு நலம்.

'தன் மனைவியை விலக்கிவிடுகிறவன் எவனும் அவளுக்கு முறிவுச் சீட்டு கொடுக்கட்டும்' என்று கூறியுள்ளது. நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: கெட்ட நடத்தைக்காக அன்றி எவனொருவன் தன் மனைவியை விலக்கிவிடுகிறானோ, அவன் அவளை விபசாரியாகும்படி செய்கிறான். விலக்கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம் செய்கிறான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

பாவமே அறியாத அவரை நமக்காகப் பாவ உருவாக்கினார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5:14-21

சகோதரர்களே:

அனைவருக்காகவும் ஒருவர் உயிர் துறந்தார் என்று உணர்ந்ததும் கிறிஸ்துவின் அன்பு எங்களை ஆட்கொள்கிறது: அனைவருக்காகவும் ஒருவர் இறந்தாரென்றால், அனைவருமே இறந்துபோயினர் என்பது பொருள். அப்படி அனைவருக்காகவும் அவர் உயிர் துறந்ததோ, வாழ்கிறவர்கள் இனித் தங்களுக்கென வாழாமல், தங்களுக்காக இறந்து உயிர்த்தவர்க்கென வாழவேண்டும் என்பதற்காகவே.

ஆதலால், இனிமேல் நாங்கள் ஊனக்கண்கொண்டு யாரையும் பார்ப்பதில்லை; இதற்குமுன் ஊனக்கண்கொண்டு கிறிஸ்துவைப் பார்த்திருந்தாலும், இனிமேல் அப்படிப் பார்ப்பதில்லை. ஆகவே ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பு தோன்றுகிறது; பழையன கழிந்துபோயின. இதோ! புதியன தோன்றியுள்ளன.

இவை எல்லாம் கடவுள் செயல்தான். அவரே கிறிஸ்துவின் வழியாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி, ஒப்புரவு செய்யும் திருப்பணியை எங்களுக்குக் கொடுத்தார். உள்ளபடியே கடவுள் உலகினரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிக்காமல் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார், அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். ஆகவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய்ச் செயலாற்றுகிறோம்; நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும். ஆகவே கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகிறோம்: கடவுளோடு ஒப்புரவாகுங்கள். கடவுளுடைய அருள் நன்மையோடு நாமும் கிறிஸ்துவுக்குள் விளங்கும்படி, பாவமே அறியாத அவரை நமக்காகப் பாவ உருவாக்கினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 8-9, 11-12 (பல்லவி : 8a)

பல்லவி : அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர், சினங்கொள்ளத் தாமதிப்பவர்: சாந்தமுடையவர்.
9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர்: எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர். பல்லவி

11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**எலிசேயு புறப்பட்டுப் போய் எலியாவைப் பின் தொடர்ந்தார்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 19: 19-21

அந்நாட்களில் :

எலியாசு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, பன்னிரு ஏர் பூட்டி உழுத சாபாத்தின் மகன் எலிசேயுவைக் கண்டார். அவன் பன்னிரு ஏரில் ஒன்றை ஓட்டிக்கொண்டிருந்தான். எலியாசு அவனிடம் சென்று தம் போர்வையை அவன் மேல் போட்டார். உடனே எலிசேயு மாடுகளை விட்டு விட்டு எலியாசைப் பின்சென்றார். "நான் என் தாய் தந்தையரிடம் விடைபெற்று வர அனுமதி கொடும்; அதற்குப் பின் உம்மைத் தொடர்ந்து வருகிறேன்" என்றார். அதற்கு அவர், "போய் வா; நான் செய்ய வேண்டியதை உமக்குச் செய்துவிட்டேன்" என்றார்.

எலிசேயு எலியாசை விட்டு வந்து, ஒரு ஜோடி ஏர் மாடுகளைப் பிடித்து அடித்துத் தாம் உழுத கலப்பையைக் கொண்டு இறைச்சியைச் சமைத்து மக்களுக்குப் பரிமாற, அவர்களும் அதை அருந்தினர். பின்பு அவர் புறப்பட்டுப் போய் எலியாசைப் பின் சென்று அவருக்கு ஏவல் புரிந்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 15 : 1-2a & 5, 7-8, 9-10 (பல்லவி : 5a காண்)

பல்லவி : **ஆண்டவரே, என் உரிமைச் சொத்து நீரே.**

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம்
புகுந்தேன்.
2 "நீரே என் ஆண்டவர் என்று ஆண்டவரிடம் சொன்னேன்.
5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்: எனக்
குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே. பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன்:
இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்:
அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உள்ளம் அக்களிக்கும்: என் உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர்: உமது புனிதர் அழிவு காண விடமாட்டீர். பல்லவி

அல்லேலூயா சங். 118 : 36a, 29b

அல்லேலூயா. இறைவா, உம் ஆணைகளின்பால் என் இதயம் திருப்பியருளும்: உமது திருச்சட்டத்தை எனக்கு அருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:33-37

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது:

"மேலும், 'பொய்யாணை இடாதே, ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் அரியணை. மண்ணுலகின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் கால்மணை. யெருசலேமின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது பேரரசரின் நகரம். உன் தலையின்மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், உன் தலைமயிர் ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ, கறுப்பாக்கவோ உன்னால் இயலாது.

உங்கள் பேச்சு, 'ஆம் என்றால், ஆம்; இல்லை என்றால், இல்லை' என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பதினேரும் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

நீங்கள் நமக்கு இராசரீக ஆசாரியக் கூட்டமும், பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள்,

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 19: 2-6a

அந்நாட்களில்:

இஸ்ராயேல் மக்கள் பயணமாகிச் சீனுய்ப் பாலைவனம் சேர்ந்து, அவ்விடத்திலேயே பாளையம் இறங்கினர். அங்கே இஸ்ராயேல் மக்கள் மலைக்கு எதிரே கூடாரம் அடித்தனர்.

மலையிலிருந்து கடவுள் தம்மைக் கூப்பிடுவதை மோயீசன் கேட்டு அவருடைய மலையில் ஏறினபோது, ஆண்டவர் அவரை நோக்கி: நீ யாக்கோபு வம்சத்தாராகிய இஸ்ராயேல் மக்களுக்கு அறிவிக்க வேண்டியதாவது: நாம் எகிப்தியருக்குச் செய்தவைகளையும், உங்களை நாம் கழுகுகளின் இறக்கைகள் மேல் சுமந்து நமக்குச் சொந்தமாய் ஏற்றுக்கொண்ட விதத்தையும் நீங்களே கண்டிருக்கிறீர்கள்.

ஆகையால், நீங்கள் நமது வாக்கைக் கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில், எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனென்ருல், பூமியெல்லாம் நம்முடையது. அன்றியும், நீங்கள் நமக்கு இராசரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள்," என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99: 1ஆ & 2, 3, 5 (பல்லவி: 3இ)

பல்லவி: **அவருடைய மக்கள் நாம்,**
**அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்.**

1 **மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்**
**ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.**
2 **மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ் செய்யுங்கள் :**
**பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள்.** பல்லவி

3 **ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள் :**
**அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம் :**
**அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்.** பல்லவி

5 **ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது.**
**அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும்.** பல்லவி

## இரண்டாம் வாசகம்

**திருமகனது மரணத்தின் வழியாய் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டோமானால், அவருடைய உயிரால் மீட்கப்படுவோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 6-11

சகோதரர்களே :

நாம் பாவத்தால் வலுவற்றிருந்தபோதே, குறித்த காலத்தில் கிறிஸ்து பாவிகளுக்காக இறந்தார் ; நீதிமானுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுத்தல் அரிது—ஒருவேளை நல்லவன் ஒருவனுக்காக யாரேனும் தன் உயிரைக் கொடுக்கலாம்—ஆனால் நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார் ; இதனால் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பை எண்பிக்கிறார்.

ஆகையால் நாம் இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி அவர் வழியாய் இறுதித் தண்டனைக்குத் தப்பி மீட்புப் பெறுவோம் என மிக உறுதியாய் நம்பலாமன்றோ? கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகனது மரணத்தின்

வழியாய் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டோமானுல், ஒப்புரவாக்கப்பட்ட நாம் அவருடைய உயிரால் மீட்கப்படுவோம் என மிக உறுதியாய் நம்பலாமன்றே ? அதுமட்டுமன்று ; இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கிய நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளில் பெருமை கொள்கிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *மாற்கு 1 : 15*

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கிவிட்டது :
மனந்திரும்பி, இந் நற்செய்தியை நம்புங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர் தம் சீடர் பன்னிருவரையும் அழைத்து, அவர்களை அனுப்பினுர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *9: 36-10:8*

அக்காலத்தில் :

யேசு மக்கட் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஆயனில்லா ஆடுகள்போல் தவித்துக் கிடந்தமையால், அவர்கள் மேல் மனமிரங்கினுர். அப்பொழுது அவர் தம் சீடர்களை நோக்கி, "அறுவடையோ மிகுதி ; வேலையாட்களோ குறைவு. ஆதலால், தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்ருடுங்கள்" என்ருர்.

அவர் தம் சீடர் பன்னிருவரையும் அழைத்து நோய் பிணியெல்லாம் குணப்படுத்தவும், அசுத்த ஆவிகளை ஓட்டவும் அவற்றின்மேல் அதிகாரம் அவர்களுக்கு அளித்தார்.

பன்னிரு அப்போஸ்தலர்களின் பெயர்கள் பின்வருமாறு : முதல்வர் இராயப்பர் என்னும் சீமோன், அவர் சகோதரர் பெலவேந்திரர், செபெதேயுவின் மகன் யாகப்பர், அவர் சகோதரர் அருளப்பர், பிலிப்பு, பார்த்தொலொமேயு, தோமையார், ஆயக்கார மத்தேயு, அல்பேயுவின் மகன் யாகப்பர், ததேயு, கனுனேய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்து.

இப்பன்னிருவரையும் யேசு அனுப்புகையில் கற்பித்ததாவது: 'புறவினத்தாருடைய நாட்டுக்குச் செல்லவேண்டாம். சமாரியருடைய ஊரில் நுழைய வேண்டாம். சிதறிப்போன இஸ்ராயேல் குலத்து ஆடுகளிடமே செல்லுங்கள். சென்று, விண்ணரசு நெருங்கியுள்ளது என்று அறிவியுங்கள். நோயாளிகளைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்ப்பியுங்கள், தொழுநோயுற்றோரைச் சுகமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள்; இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*தாழ்ந்திருக்கும் மரத்தையெல்லாம் ஓங்கச் செய்வோம்.*

எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம். 
ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: 17: 22-24

உயர்ந்த கேதுரு மரத்தின் நுனிக்கிளையொன்றை நாமே எடுப்போம்; அதன் நுனிக் கொப்புகளிலிருந்து இளங்கொழுந்து ஒன்றைக் கொய்து ஓங்கி உயர்ந்த மலைமேல் நாமே நாட்டுவோம்.

இஸ்ராயேல் என்னும் உயர்ந்த மலைமீது நாம் அதை நாட்டுவோம். அது கிளைத்து வளர்ந்து கனிதரும் பெரிய கேதுரு மரமாகும்; பறப்பன யாவும் அதன்கீழ் வந்தடையும்; எல்லா வகையான பறவைகளும் அதன் இலைகளின் நிழலில் வந்து கூடுகட்டும்.

ஆண்டவராகிய நாமே ஓங்கி வளர்ந்த மரத்தை எல்லாம் தாழ்த்துவோம்; தாழ்ந்திருக்கும் மரத்தையெல்லாம் ஓங்கச் செய்வோம்; பசுமையான மரத்தை உலரச் செய்வோம்; உலர்ந்த மரத்தைத் தழைக்கச் செய்வோம்; இதை உலகிலுள்ள மரங்களெல்லாம் அறியும்; ஆண்டவராகிய நாமே இதைச் சொன்னோம்; சொன்னதை நாம் தவறாமல் செய்வோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 91 : 1-2, 12-13, 14-15 (பல்லவி : 1a காண்)

பல்லவி : **ஆண்டவரே, உம்மைப் புகழ்வது நல்லது.**

1 ஆண்டவரைப் புகழ்வது நல்லது; உன்னதமானவரே, உம் திருப்பெயருக்குப்
புகழ் பாடுவது நல்லது.
2 காலையில் உம் இரக்கத்தையும், இரவெல்லாம் உம் பிரமாணிக்கத்தையும்
எடுத்துரைப்பது நல்லது. பல்லவி

12 நீதிமான் பனையைப்போல் செழித்து வளர்வான்; லீபானின் கேதுரு மரம்
போல் ஓங்கி வளர்வான்.
13 ஆண்டவருடைய இல்லத்திலும், நம் கடவுளின் ஆலயமுற்றங்களிலும்
நடப்பட்ட அவர்கள் செழிப்புற்று விளங்குவார்கள். பல்லவி

14 அவர்கள் முதிர்வயதிலும் பலனளிப்பர்; செழுமையும் கொழுமையும்
கொண்டு விளங்குவர்.
15 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் எவ்வளவு நேர்மையுள்ளவர்
என்றும், அவரிடத்தில் அநீதி இல்லையென்றும் பறைசாற்றுவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உடலில் குடியிருந்தாலும் அதனின்று குடிபெயர்ந்தாலும்
ஆண்டவருக்கு உகந்தவர்களாய் இருக்க முயல்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5: 6-10

சகோதரர்களே :

நாங்கள் எப்பொழுதும் நம்பிக்கையோடு இருக்கிறோம் : இந்த உடலில் குடியிருக்கும்வரை ஆண்டவரின் வீட்டினின்று தொலைவில் அலைகிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். — ஏனெனில், கண்கூடான காட்சி நமக்கில்லை, நாம் வாழ்வது விசுவாச வாழ்வு. — நம்பிக்கையை இழக்காமல், இவ்வுடலைவிட்டுக் குடிபெயர்ந்து ஆண்டவரது வீட்டில் குடியேறுவதையே விரும்புகிறோம்.

ஆகவே உடலில் குடியிருந்தாலும் அதனின்று குடிபெயர்ந்தாலும் அவருக்கு உகந்தவர்களாய் இருக்கவேண்டும் என்பதே எங்கள் பேராவல். ஏனெனில், உடலோடு இருந்தபோது அவனவன் செய்த நன்மை தீமைக்குத்

தக்க பலனடையும்படி கிறிஸ்துவின் நீதியிருக்கைமுன் நாம் அனைவரும் செய்ததெல்லாம் வெளிப்படவேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அல்லேலூயா. இறைவாக்கு வித்தாகும், கிறிஸ்துவே விதைப்பவர் ; அவரைக் கண்டடைகிறவன் என்றென்றும் நிலைத்திருப்பான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விதைகளிலெல்லாம் மிகச் சிறியது**
**செடிகளில் எல்லாம் மிகப் பெரியதாகிறது.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4 : 26-34

அக்காலத்தில் : யேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது :

"கடவுளரசு நிலத்தில் விதையைப் போட்ட ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் இரவில் தூங்கினாலோ பகலில் விழித்திருந்தாலோ எவ்வாறென்று அவனுக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. நிலம் தானாகவே பலன் அளிக்கிறது : முதலில் பயிர், பின் கதிர், அதன் பின் கதிர் நிறைய மணி. பயிர் விளைந்ததும் அவன் அரிவாளை எடுக்கிறான். ஏனெனில், அறுவடை வந்துவிட்டது" என்றார்.

பின்னும், "கடவுளரசை எதற்கு ஒப்பிடுவோம் ? எந்த உவமையால் எடுத்துக் காட்டுவோம் ? அது கடுகு மணியைப் போன்றது. இது நிலத்தில் விதைக்கப்படும்பொழுது உலகிலுள்ள விதைகளிலெல்லாம் மிகச் சிறியது. விதைத்த பின்போ, முளைத்தெழுந்து செடிகளிலெல்லாம் மிகப் பெரியதாகித் தன் நிழலில் வானத்துப் பறவைகள் வந்து தங்கக்கூடிய பெருங் கிளைகளை விடும்" என்றார்.

அவர்கள் கேட்டறியும் திறனுக்கேற்ப இத்தகைய பல உவமைகளால் அவர்களுக்குத் தேவ வார்த்தையைச் சொல்லுவார். உவமைகளால் அன்றி அவர் அவர்களிடம் பேசியதில்லை. தம் சீடருக்கோ தனியாக அனைத்தையும் விளக்குவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவர் உமது பாவத்தை மன்னிப்பார்; நீர் சாகப் போவதில்லை.**

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 12: 7-10, 13.

அந்நாட்களில்:

நாத்தான் தாவீதை நோக்கி, "நீரே அந்த மனிதன்; இஸ்ராயேலின் ஆண்டவராகிய கடவுள் சொல்வதைக் கேளும்; 'இஸ்ராயேலுக்கு அரசனாக உன்னை அபிஷேகம் செய்தவரும் நாமே; சவுலின் கைக்கு உன்னைத் தப்புவித்தவரும் நாமே. உன் தலைவனுடைய வீட்டையும் உனக்குக் கொடுத்தோம். உன் தலைவனின் மனைவியரையும் உன் கையில் அளித்தோம். இஸ்ராயேல் வம்சத்தையும் யூதா வம்சத்தையும் உனக்குத் தந்தோம். இவை எல்லாம் போதாது என்றால் இதைவிட அதிகமாகவும் உனக்குத் தந்திருப்போம்.

அப்படியிருக்க, ஆண்டவருடைய வார்த்தையைப் புறக்கணித்து நீ என் முன்னிலையில் பாவம் செய்தது ஏன்? ஏத்தையனான உரியாசை நீ வாளால் தாக்கி, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அம்மோனியரின் வாளால் அவனைக் கொன்று போட்டாய். நீ நம்மைப் புறக்கணித்து ஏத்தையனாகிய உரியாசின் மனைவியை உனக்கு மனைவியாகக் கொண்டபடியால், வாளானது என்றும் உன் வீட்டை விட்டு அகலாது."

அப்போது தாவீது நாத்தானிடம், "நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்தேன்" என்றார். நாத்தான் தாவீதை நோக்கி, "ஆண்டவர் உமது பாவத்தை மன்னிப்பார். நீர் சாகப்போகிறதில்லை." என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 31 : 1-2, 5, 7, 11 (பல்லவி : 5ஈ)

பல்லவி : **ஆண்டவரே, என் குற்றத்தை மன்னித்தருளும்.**

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறுபெற்றவன் : எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறுபெற்றவன்.
2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்துவதில்லையோ அவன் பேறு பெற்றவன் : யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறு பெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன் : என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்ததில்லை. "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக் கொள்கிறேன்" என்றேன் : நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

7 "ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர். இன்னல்கள் அனைத்திலின்றும் என்னைக் காத்தருள்வீர் : உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர்." பல்லவி

11 ஆண்டவரில் மகிழ்ந்திடுவீர், நீதிமான்களே, களிகூர்ந்திடுவீர் : நேர்மையுள்ளவர்களே, நீங்கள் அனைவரும் அவரில் அக்களித்திடுவீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இனி வாழ்பவன் நானல்ல : என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 16, 19-21

சகோதரர்களே :

திருச்சட்டம் விதிக்கும் செயல்களால் அன்று, யேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகக்கூடும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே தான் நாமும் திருச்சட்டம் விதித்த செயல்களாலன்று, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் இறைவனுக்கு ஏற்புடையவராகும்படி, கிறிஸ்து யேசுவில் விசுவாசம் கொண்டோம்; எனெனில், திருச்சட்டம் விதித்த செயல்களால் எந்த மனிதனும் இறைவனுக்கு ஏற்புடையவனாவதில்லை.

கடவுளுக்கென்று வாழும்படி நான் சட்டத்தின் செயலால் சட்டத்தைப் பொருத்தமட்டில் இறந்தவன் ஆனேன். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். இனி, வாழ்பவன் நானல்ல; என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே. இப்போது ஊனுடலோடு நான் வாழ்வது கடவுளின் மகன்மேல் உள்ள விசுவாசத்தின் வாழ்வாகும். இவரே என்மேல் அன்புகூர்ந்தார்; எனக்காகத் தம்மையே கையளித்தார். கடவுளின் அருளை நான் வெறுமையாக்கமாட்டேன். ஏனெனில், திருச்சட்டத்தின் வழியாய் இறைவனுக்கு ஏற்புடையவராகக் கூடுமாயின், கிறிஸ்து இறந்தது வீணே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 1 அரு. 4 : 10b

அல்லேலூயா. கடவுளே முந்தமுந்த நமக்கு அன்பு செய்து,
நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன;
அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 36-8 : 3

அக்காலத்தில் :

பரிசேயன் ஒருவன் யேசுவைத் தன்னுடன் உண்பதற்கு அழைத்தான். அவரும் பரிசேயனுடைய வீட்டுக்கு வந்து உணவருந்தப் போகிறார் என்று அறிந்து பரிமளத் தைலம் நிறைந்த படிகச் சிமிழ் ஒன்றை எடுத்து வந்தாள். அவருடைய கால்மாட்டில் பின்புறமாக இருந்து, அழுதுகொண்டே அவர் பாதங்கள் மேல் கண்ணீர் பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்து, முத்தமிட்டு அப்பாதங்களில் தைலம் பூசினாள்.

அவரை அழைத்த பரிசேயன் இதைக் கண்டு, "இவர் இறைவாக்கினராய் இருந்தால் தம்மைத் தொடும் இவள் யார், எத்தகையவள் என்று அறிந்திருப்பார். இவளோ பாவி" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். யேசு அவனை நோக்கி, "சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்லவேண்டும்" என்று கூற, அவனும் "போதகரே, சொல்லும்" என்றான்.

"கடன் கொடுப்பவன் ஒருவனுக்குக் கடன்காரர் இருவர் இருந்தனர். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கடன்பட்டிருந்தனர். கடனைத் திருப்பிக் கொடுக்க அவர்களால் முடியாமற் போகவே இருவர் கடனையும் மன்னித்துவிட்டான். அவர்களுள் யார் அவனுக்கு அதிகமாக அன்பு செய்வான்?" "யாருக்கு அதிகக் கடனை மன்னித்தானோ அவன்தான் என்று நினைக்கிறேன்" என்றான் சீமோன். "நீர் சொன்னது சரி" என்றார் அவர்.

பின்பு அப்பெண்ணின் பக்கம் திரும்பி, சீமோனிடம், "இவளைப் பார்த்தீரா? நான் உம் வீட்டுக்குள் வந்தபொழுது, நீர் என் பாதங்களைக் கழுவத் தண்ணீர் தரவில்லை; இவளோ, என் பாதங்கள்மேல் கண்ணீர் பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு முத்தமளிக்கவில்லை; இவளோ, நான் உள்ளே வந்ததுமுதல் என் பாதங்களை முத்தம் செய்து ஓயவில்லை. நீர் என் தலையில் எண்ணெய் பூசவில்லை; இவளோ, என் பாதங்களுக்குப் பரிமளத் தைலம் பூசினாள். ஆதலால், நான் உமக்குச் சொல்வதாவது: 'அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன. அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று. குறைவாக மன்னிப்புப் பெறுபவர்களோ குறைவாக அன்பு செய்கிறார்கள்'" என்றார்.

பின் அவளை நோக்கி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். "பாவங்களையும் மன்னிக்கும் இவர் யார்?" என்று அவரோடு பந்தி அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். அவரோ, அப்பெண்ணை நோக்கி, "உன் விசுவாசம் உன்னை மீட்டது, சமாதானமாய்ப் போ" என்றார். ★

பின்னர், கடவுளின் அரசைப்பற்றிய நற்செய்தியை அறிவித்துக்கொண்டே பேக ஊர் ஊராய்ச் செல்லலானார். பன்னிருவரும் அவருடன் சென்றனர். பொல்லாத ஆவிகளினின்றும் பிணிகளினின்றும் குணமான பெண்கள் சிலரும் அவர்களோடு இருந்தனர். இப்பெண்கள் யாரெனில், ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மதலேன் என்னும் மரியாள், ஏரோதின் காரியத் தலைவன் கூசாவின் மனைவி அருளம்மாள், சூசன்னா, மற்றும் பெண்கள் பலர். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம் லூக். 7:36-50

★ அடையாளம் வரை

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

நாங்கள் கடவுளின் பணியாளரென்றே நடத்தையில் காட்டுகிறோம்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 6: 1-10

சகோதரர்களே:

இறைவனின் உடனுழைப்பாளிகளான நாங்கள், நீங்கள் பெற்ற கடவுளின் அருளை வீணாக்கவேண்டாமென மன்றாடுகிறோம். ஏனெனில், "ஏற்ற காலத்தில் உனக்குச் செவிமடுத்தேன்; மீட்பின் நாளில் உனக்குத் துணை நின்றேன்" என்கிறார் இறைவன். இதோ! அந்த மீட்பின் நாள் இதுவே.

எங்கள் திருப்பணி, பழிச் சொல்லுக்கு உட்படாதவாறு நாங்கள் யாரையும் எதிலும் மனம் நோகச் செய்யவில்லை. ஆனால், வேதனைகள், நெருக்கடி, இடுக்கண், சாட்டையடிகள், சிறை வாழ்வு, குழப்பங்கள், அயரா உழைப்பு, கண்விழிப்பு, பட்டினி இவற்றையெல்லாம் மிகுந்த மன உறுதியோடு ஏற்றுக்கொண்டு, புனிதம், அறிவு, பொறுமை, பரிவு, பரிசுத்த ஆவிக்குரிய செயல்கள், கள்ளமில்லா அன்பு இவற்றைக் கடைப் பிடித்து, உண்மையே பேசி, கடவுளின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வைச் சார்ந்த படைக்கலங்களை வலப்பக்கத் திலும் இடப்பக்கத்திலும் தாங்கி, மேன்மையிலும் இழிவிலும், தூற்றப் படினும் போற்றப்படினும், அனைத்திலும் நாங்கள் கடவுளின் பணியாள ரென்றே நடத்தையில் காட்டுகிறோம்.

எங்களை வஞ்சகர் என்கிறார்கள்; நாங்களோ உண்மையுள்ளவர்கள். அறியப்படாதவர்கள் என்கிறார்கள்; ஆனால், எல்லாரும் எங்களை அறிவர். சாகவேண்டியவர்களைப்போல் இருந்தாலும், இதோ, உயிர் வாழ்கிறோம். நாங்கள் ஒறுக்கப்படுகிறோம்; ஆனால், சாவுக்கு இரையாவதில்லை. துயரத்தில் ஆழ்ந்தவர்களாய்த் தென்படுகிறோம்; ஆனால், எப்பொழுதும் மகிழ்ச்சியில் திளைக்கிறோம். நாங்கள் ஏழைகளாயினும், பலரைச் செல்வ ராக்குகிறோம். ஒன்றுமே இல்லாதவர்கள்போல் இருக்கிறோம்; ஆனால், அனைத்துமே எங்களுக்குச் சொந்தம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1, 2-3ab, 3cd-4 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் : வியத்தகு செயல்களை
அவர் செய்துள்ளார் ; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு
வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் : மக்கள் இனத்தவர் காணத்
தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும், இஸ்ராயேல் இனத்தார் சார்பாய்த் தாம்
தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்,
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

## 2 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நாபோத் கல்லால் எறியுண்டு மடிந்தான்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 21: 1-16

ஜெஸ்ராயேலனாகிய நாபோத்துக்கு ஜெஸ்ராயேலில் ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அது சமாரியாவின் அரசன் ஆக்காபின் அரண்மனை அருகில்தான் இருந்தது. ஆக்காப் நாபோத்தைப் பார்த்து, "உன் திராட்சைத் தோட்டம் என் வீட்டை அடுத்திருக்கிறதால், நான் அதைக் காய்கறித் தோட்டமாக்கும்படி எனக்குக் கொடு. அதைவிட நல்ல திராட்சைத் தோட்டத்தை அதற்குப் பதிலாய் உனக்குத் தருவேன் ; அல்லது உனக்கு வேண்டுமானால் அதன் விலையைத் தருகிறேன்" என்றான். அதற்கு நாபோத், "நான் என் முன்னோரது உடைமையை உமக்குக் கொடாதபடி ஆண்டவர் என்னைக் காப்பாராக" என்றான்.

இப்படி, "என் முன்னோரின் உடைமையை உமக்குக் கொடேன்" என்று ஜெஸ்ராயேலனாகிய நாபோத் தனக்குச் சொன்ன வார்த்தைக்காக ஆக்காப் சினந்து எரிச்சலோடு தன் வீட்டிற்கு வந்தான். அங்கே உண்ணாமல் தன் கட்டிலில் படுத்துத் தன் முகத்தைச் சுவர்ப் பக்கமாய்த் திருப்பிக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுடைய மனைவி எசாபேல் அவனிடம் வந்து, “நீர் ஏன் சாப்பிடவில்லை? உமது மனம் சஞ்சலப்படுவதேன்?” என்று அவனைக் கேட்டாள். அதற்கு அவன், “நான் ஜெஸ்ராயேலனுகிய நாபோத்தோடு பேசி, ‘உன் திராட்சைத் தோட்டத்தை எனக்கு விலைக்குக் கொடு, அல்லது உனக்கு விருப்பமானால் அதற்குப் பதிலாக வேறு திராட்சைத் தோட்டத்தை உனக்குத் தருவேன்’ என்றேன். அதற்கு அவன் ‘என் திராட்சைத் தோட்டத்தை உமக்குக் கொடுக்கமாட்டேன்’ என்று சொல்லிவிட்டான்” என்ருன். அப்பொழுது அவன் மனைவி எசாபேல் அவனை நோக்கி, “உம்முடைய அதிகாரம் இவ்வளவுதானு? இஸ்ராயேலை இப்படித்தான் ஆட்சிசெய்து வருகிறீர்களோ? எழுந்திருங்கள். சாப்பிட்டுவிட்டு மன அமைதியுடன் இருங்கள். ஜெஸ்ராயேலனுகிய நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்” என்று சொன்னுள்.

எசாபேல் ஆக்காபின் பெயரால் கடிதங்களை எழுதி, அவற்றில் அவனது முத்திரையை இட்டு, அக்கடிதங்களை நாபோத் இருக்கும் நகரில் குடியிருக்கிற மூப்பரிடமும் பெரியோரிடமும் அனுப்பினுள். அக்கடிதங்களில் அவள், “நீங்கள் ஒரு நோன்பைப் பறைசாற்றி, நாபோத்தைப் பெரியோர் நடுவில் அமரச் செய்யுங்கள். அவனுக்கு எதிராய்ப் பெலியாலின் மக்கள் இருவரை ஏவி விட்டு, ‘நாபோத் கடவுளையும் அரசனையும் பழித்துரைத்தான்’ என்று அவர்களைப் பொய்ச்சாட்சி சொல்லச் செய்யுங்கள். பின்னர் அவனை ஊருக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லால் எறிந்து கொன்று போடுங்கள்” என்று எழுதியிருந்தாள்.

நாபோத்தோடு அவ்வூரில் குடியிருந்த மூப்பர்களும் பெரியோர்களும் எசாபேல் தமக்கு அனுப்பியிருந்த கடிதங்களில் எழுதியிருந்தபடியே செய்தனர். அவர்கள் ஒரு நோன்பைப் பறைசாற்றி, நாபோத்தைப் பெரியோர் முன்னிலையில் அமர்த்தினர். அப்பொழுது அவர்கள் பேயின் மக்களாகிய இருவரை வரவழைத்து அவனுக்கு எதிராக அமர்த்தி வைத்தனர். இந்தப் பேயின் மக்களோ மக்கட் கூட்டத்தைப் பார்த்து, “நாபோத் கடவுளையும் அரசனையும் பழித்துரைத்தான்” என்று அவனுக்கு எதிராய்ச் சாட்சி சொன்னுர்கள். அச்சாட்சியத்தின்பேரில் மக்கள் நாபோத்தை ஊருக்கு வெளியே கொண்டுபோய்க் கல்லால் எறிந்து கொன்று போட்டனர். பிறகு, “நாபோத் கல்லால் எறியுண்டு மடிந்தான்” என்று எசாபேலுக்குச் செய்தி அனுப்பினர்.

நாபோத் கல்லால் எறியுண்டு மடிந்ததை எசாபேல் கேட்டபோது, அவள் ஆக்காபை நோக்கி, “நீர் போய் ஜெஸ்ராயேலனுகிய நாபோத் உமது விருப்பத்துக்கு இசையாமல், ‘உமக்கு விலைக்குக் கொடேன்’ என்று சொன்ன திராட்சைத் தோட்டத்தை நீர் சொந்தமாய் எடுத்துக் கொள்ளும்; நாபோத் உயிரோடில்லை; அவன் இறந்து போனுன்” என்ருள். நாபோத் இறந்துபோனதை ஆக்காப் கேட்டு எழுந்து, ஜெஸ்ராயேலனுகிய நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போனுன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 5: 1-2, 4-5a, 5b-6 (பல்லவி: 1b)

பல்லவி: **ஆண்டவரே, என் புலம்பலைக் கவனித்தருளும்.**

1 **ஆண்டவரே, என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்;**
**என் புலம்பலைக் கவனித்தருளும்.**
2 **என் அரசே, என் இறைவா, என் கூக்குரலைக் கேட்டருளும்.** பல்லவி

4 **தீமையை விரும்பும் கடவுள் நீர் அல்லீர்; தீயவன் உம்மோடு**
**தங்கமாட்டான்.**
5 **கெட்டவர்கள் உம் திருமுன் நிற்கமாட்டார்கள்.** பல்லவி

**தீமை செய்யும் அனைவரையும் வெறுக்கின்றீர்.**
6 **பொய் சொல்லும் அனைவரையும் நீர் அழிக்கின்றீர்;**
**கொலை வெறியரை, வஞ்சகரை ஆண்டவர் வெறுக்கின்றார்.** பல்லவி

அல்லேலூயா

சங். 118 : 105

அல்லேலூயா. நான் நடக்கவேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உமது வார்த்தை: செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே, அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீயோனை எதிர்க்க வேண்டாம்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 5: 38-42

அக்காலத்தில்: **யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:**

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீயோனை எதிர்க்கவேண்டாம். ஆனால் யாராவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. யாராவது வழக்காடி, உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு. யாராவது உன்னை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால், இரு கல் தொலை அவனோடு செல். கேட்கிறவனுக்குக் கொடு; உன்னிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கிறிஸ்து உங்களுக்காக ஏழையானார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். *8: 1-9*

சகோதரர்களே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குக் கடவுள் தந்த அருளைப்பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் வேதனையால் மிகவும் சோதிக்கப்பட்டபோது, கொடிய வறுமையில் ஆழ்ந்திருந்தும், அவர்களுற்ற பெருமகிழ்ச்சி வள்ளன்மையாய்ப் பொங்கி வழிந்தது. தங்களால் இயன்ற அளவுக்குக் கொடுத்தார்கள்; இயன்ற அளவுக்கு மேலும் கொடுத்தார்கள்; அதற்கு நானே சாட்சி. இறை மக்களுக்குச் செய்யப்படும் அறப்பணியில் பங்கு கொள்ளும் பேறு தங்களுக்கு அளிக்க வேண்டுமென்று தாங்களே முன்வந்து எங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக, அவர்கள் கடவுளின் திருவுளத்தால் தங்களையே ஒப்புக்கொடுத்தார்கள்; இப்படி அவர்கள் எங்கள் பணிக்குத் தங்களைக் கையளித்தது, முதன்மையாக ஆண்டவருக்கே கையளித்ததாயிற்று. ஆகையால், தீத்து தொடங்கிய அத்தகைய அன்புத் தொண்டினை உங்களிடையே செய்து முடிக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டோம்.

மேலும், விசுவாசம், சொல்வன்மை, அறிவு, தளராத ஊக்கம், எங்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட அன்பு, இவற்றிலெல்லாம் நிறைவளம் உங்களுக்கு வாய்த்துள்ளது; அதே வளம் இந்த அன்புத் தொண்டிலும் உங்களிடம் விளங்கட்டும். இதை நான் கட்டளையாகச் சொல்லவில்லை; பிறருடைய ஊக்கத்தை எடுத்துக்காட்டி, உங்கள் அன்பு உண்மையானதா எனச் சோதிக்கவே விரும்புகிறேன். ஏனெனில், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அருள் வண்மையை நீங்கள் அறிந்தே இருக்கிறீர்கள். அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 146: 1b-2, 5-7a, 7bcd, 8-9a (பல்லவி 1a)

பல்லவி: **நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.**

1 **என் வாழ்நாளில் ஆண்டவரைப் புகழ்வேன், என் உயிர்**
2 **உள்ளவரையில் நான் கடவுளுக்குப் புகழ்பாடுவேன்.** பல்லவி

5 யாக்கோபின் இறைவன் யாருக்குத் துணைபுரிகிறாரோ,
அவன் பேறுபெற்றவன்.
6 அவரே வானத்தையும் வையத்தையும் கடலையும்,
அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கினார்.
7 அவர் என்றென்றும் சொல்தவறாதவர். பல்லவி

துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்;
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்;
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்துவிடுகிறார்;
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கிவிடுகிறார்;
நீதிமான்கள்மீது ஆண்டவர் அன்பு கூர்கிறார்;
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இஸ்ராயேலைப் பாவத்திற்கு ஆளாக்கினாய்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம். 21: 17-29

நாபோத் இறந்த பின், தெகபித்தரான எலியாவுக்கு ஆண்டவர் திருவுளம்பற்றி, "சமாரியாவிலிருக்கிற இஸ்ராயேலின் அரசன் ஆக்காபை நீ சந்திக்கும்படி போ. அதோ அவன் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள அங்கே போகிறான். நீ அவனைப் பார்த்து, 'ஆண்டவர் சொல்வதாவது: "நீ நாபோத்தைக் கொன்றதுமன்றி அவனது திராட்சைத் தோட்டத்தையும் அபகரித்துக்கொண்டாய்" என்று சொல். மீண்டும் அவனை நோக்கி, 'ஆண்டவர் சொல்லுகிறதாவது: "நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்திலேயே உனது இரத்தத்தையும் நக்கும்" என்று சொல்" என்றார். அப்போது ஆக்காப் எலியாசை நோக்கி, "நான் உனக்கு எதிரியாக எப்போதாவது இருக்கக் கண்டதுண்டா?" என்றான்.

அதற்கு அவர், "ஆம்; நீ ஆண்டவர் திருமுன் தீயன புரியத் துணிந்துள்ளதை நான் அறியேனோ? இதோ! நாம் உன்மேல் தீங்குவரச் செய்வோம். உன் சந்ததியை அழித்துவிட்டு உன் வீட்டின் ஆண் மக்கள் அனைவரையும் இஸ்ராயேலில் கடைசியானவனையும், இன்னும் கருவில் அடைபட்டுள்ள குழந்தையையும் கொன்றொழிப்போம். நீ உன் தீச்செயல்களினால் நமக்குக் கோபமுண்டாக்கி இஸ்ராயேலைப் பாவத்திற்கு ஆளாக்கியதின் பொருட்டு நாம் உன் குடும்பத்தை நாபோத்தின் மகன் எரோபோவாமின் குடும்பத்துக்கும், ஆகியாவின் மகன் பாசாவின் குடும்பத்துக்கும் நிகராக்குவோம்" என்றார்.

எசாபேலைக் குறித்தும் ஆண்டவர் சொல்வதாவது: "ஜெஸ்ராயேலின் நிலத்திலே நாய்கள் எசாபேலைத் தின்னும். ஆக்காப் நகரில் மடிந்தால் நாய்களுக்கு இரையாவான்; நகருக்கு வெளியே இறந்தால் வானத்துப் பறவைகளுக்கு இரையாவான், என்பதாம்" என்றார்.

ஆண்டவர் திருமுன் தீயன புரியத் துணிந்த ஆக்காபைப்போல் கெட்டவன் ஒருவனுமில்லை; ஏனெனில், அவனுடைய மனைவி எசாபேல் அவனை ஏவிவிட்டாள். அவன் எவ்வளவு வெறுப்புக்குரியவன் என்றால், இஸ்ராயேல் மக்கள் முன்னிலையில் ஆண்டவர் அழித்தொழித்த அமோறையரின் விக்கிரகங்களையும் அவன் தொழுது வந்தான்.

இவ்வார்த்தைகளை ஆக்காப் கேட்ட பிறகு தன் ஆடைகளைக் கிழித்துத் தன் உடலின்மேல் மயிராடையைப் போட்டுக்கொண்டு நோன்பு காத்து சாக்கின்மீது படுத்துறங்கினான். மேலும், அவன் தலை கவிழ்ந்தே நடந்து வந்தான். அப்பொழுது தெசுபித்தரான எலியாசுக்கு ஆண்டவர் திருவுளம்பற்றி, "நமக்கு முன்பாக ஆக்காப் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயன்றோ? அவன் நமக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதால் நாம் அவனது காலத்தில் அத்தீமைகளை வரச்செய்யாமல் அவனுடைய மகனின் நாட்களிலே அவன் சந்ததியின் மேல் அவைகளை வரச்செய்வோம்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 50 : 1-2, 3-4a, 9 & 14 (பல்லவி : 1a காண்)

பல்லவி : இரக்கமாயிரும், ஆண்டவரே, ஏனெனில் பாவம் செய்தோம்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்குறைகளைப் போக்கிவிடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும் : என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

[illegible] குற்றங்களையெல்லாம் [illegible];
[illegible]
[illegible] பல்லவி

[illegible]
[illegible]
[illegible] பல்லவி

அல்லேலூயா அரு. 13:34

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்:
நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல
நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5: 43-48

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறியதாவது:

43 “‘அயலானுக்கு அன்பு; பகைவனுக்கு வெறுப்பு’ என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர்மேலும் தீயோர்மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர்மேலும் நீதியற்றோர்மேலும், மழை பொழியச் செய்கிறார்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லையா? உங்கள் சகோதரருக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்? புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா? ஆதலால், உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*முகமலர்ச்சியுடன் கொடுப்பவன் மேல்தான் கடவுள் அன்பு கூர்கிறார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 9: 6-11

சகோதரர்களே :

சிறுக விதைப்பவன் சிறுக அறுப்பான்; பெருக விதைப்பவன் பெருக அறுப்பான். ஒவ்வொருவனும் தனக்குள் முடிவுசெய்தவாறு கொடுக்கட்டும்; முகவாட்டத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடாதீர்கள்; ஏனெனில், முகமலர்ச்சியுடன் கொடுப்பவன் மேல்தான் கடவுள் அன்பு கூர்கிறார்.

கடவுள் உங்களை எல்லா நன்மைகளாலும் நிரப்பவல்லவர்; எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் போதுமான அளவில் உங்களிடம் இருக்கச் செய்வார்; அதோடு எந்நற்செயலையும் செய்வதற்குத் தேவையான பொருள் உங்களிடம் மிகுதியாகவே இருக்கச் செய்வார். அதைக் குறித்தே, 'வாரி வழங்கினான், ஏழைகளுக்கு ஈந்தான், அவனது ஈகை என்றென்றும் மறக்கப்படாது!' என்று எழுதியுள்ளது.

விதைக்கிறவனுக்கு விதையும், உண்பதற்கு உணவும் கொடுத்து உதவுகின்றவர் விதைப்பதற்கு வேண்டியதை உங்களுக்கும் கொடுத்து, அதைப் பெருகச் செய்து, உங்களுடைய ஈகையால் ஏராளமான பலன் விளையச் செய்வார். நீங்களும் எல்லாவகையிலும் செல்வர்களாகி, உங்கள் வள்ளன்மையில் எக்குறைவுமின்றி விளங்குவீர்கள்; எங்கள் பணியின் வாயிலாக அவ்வள்ளன்மை மக்களின் நன்றியறிதலைக் கடவுள்பால் எழும்பச்செய்யும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 111:1-2, 3-4, 9 (பல்லவி: 1a)

பல்லவி: **ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்.**

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறு பெற்றோன். அவருடைய
கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும். நேர்மை
யுள்ளோரின் சந்ததி ஆசிபெறும். பல்லவி

3 செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உலவும்: அவனுடைய ஈகை
என்றென்றும் நிலைக்கும்.
4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்.
கருணை, இரக்கம், நீதி உள்ளவனாய் இருப்பான். பல்லவி

9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான்: அவனது ஈகை என்றும்
நிலைத்திருக்கும்: அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ நெருப்புமயமான தேர்; எலியாசு விண்ணகம் ஏறினார்.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 2: 1, 6-14

ஆண்டவர் எலியாசைச் சூறாவளிக் காற்றால் விண்ணிற்கு எடுத்துக் கொள்ள விழைந்தபோது, எலியாசும் எலிசேயுவும் கல்கலாவினின்று வெளியே சென்றுகொண்டிருந்தனர். மீண்டும் எலியாசு எலிசேயுவைப் பார்த்து, "ஆண்டவர் என்னை யோர்தான் நதிவரை அனுப்பி இருக்கின்றார். ஆதலின் நீ இங்கேயே இரு" என்றார். அதற்கு அவர், "ஆண்டவர் மேலும் உம் உயிரின்மேலும் ஆணை! நான் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன்" என மறுமொழி தந்தார். ஆதலின், இருவரும் ஒன்றாகச் சென்றனர். இறைவாக்கினரின் புதல்வருள் ஐம்பதுபேர் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று, அவர்களை நோக்கியவாறு தொலையில் நின்றனர். எலியாசும் எலிசேயுவும் யோர்தான் நதி தீரத்தில் நின்று கொண்டிருந்தனர்.

அப்பொழுது எலியாசு தம் போர்வையை எடுத்து மடித்து அதைக் கொண்டு நீரையடித்தார். அது இரண்டாகப் பிரிந்தது. இருவரும் கால் நனையாமல் நடந்து நதியைக் கடந்தனர். அவர்கள் கரையை அடைந்ததும், எலியாசு எலிசேயுவை நோக்கி, "உன்னை விட்டுப் பிரியுமுன் நான்

உனக்கு என்ன செய்யவேண்டும் என நீ விரும்புகிறாய், சொல்" என்று கேட்டார். அதற்கு எலிசேயு, "உமது ஆவி இருமடங்கு என்மேல் இருக்க வேண்டுகிறேன்" என்று பதில் இறுத்தார். எலியாசு அவரைப் பார்த்து, "நீ கேட்கும் காரியம் மிகவும் அரிதானது. எனினும், உன்னை விட்டு நான் பிரியும்போது என்னை நீ காண்பாயாகில், நீ கேட்டதை அடைவாய்; என்னைக் காணாவிட்டால், அடைய மாட்டாய்" என்றார்.

இவர்கள் இவ்வாறு உரையாடிக்கொண்டு வழி நடந்து போகையில், இதோ நெருப்பு மயமான ஒரு தேரும், தீயைப் போன்ற குதிரைகளும் திடீரென நடுவே வந்து அவர்களைப் பிரித்துவிட்டன. அன்றியும், எலியாசு சூறாவளியின் மூலம் விண்ணகம் ஏறினார். எலிசேயுவோ அவரைப் பார்த்த வண்ணம், "என் தந்தாய், என் தந்தாய்! இஸ்ராயேலின் தேரே! அத்தேரின் சாரதியே!" என்று கதறிக் கொண்டிருந்தார். பிறகு அவரைக் காணவில்லை. உடனே அவர் தம் உடைகளைப் பிடித்து அவற்றை இரண்டாய்க் கிழித்தார். மேலும், அருகில் விழுந்து கிடந்த எலியாசுடைய போர்வையை எடுத்துக்கொண்டு திரும்பி வந்து யோர்தானின் கரைமேல் நின்றார்.

எலியாசு தமக்கு விட்டுச் சென்றிருந்த போர்வையைக் கொண்டு நீரை அடிக்க, நீர் இரண்டாகப் பிரியவில்லை. அப்போது எலிசேயு, "எலியாசின் கடவுள் இப்போது எங்கு இருக்கிறார்?" என்று சொன்னார். மீண்டும் அவர் நீரை அடிக்க நீர் இரண்டாய்ப் பிரிந்தது. எலிசேயுவும் நதியைக் கடந்து சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 30 : 19, 20, 23* (பல்லவி : 24)

பல்லவி : ஆண்டவர்மீது நம்பிக்கையுள்ளவர்களே,
உங்கள் நெஞ்சம் உறுதிகொள்ளட்டும்.

19 ஆண்டவரே, உம்மை அஞ்சுவோர்க்கு நீர் சேர்த்துவைத்திருக்கும் அருள் எத்துணைமிக்கது!
உம்மை நாடி வருவோர்க்கு அனைவர் முன்னிலையிலும் நீர் காட்டும் அருள் எத்துணை மிகுதியானது! பல்லவி

20 எதிரிகளுடைய சதிகளினின்று உம்முடைய திருமுகத்தின் ஆதரவால் அவர்களைப் பாதுகாக்கின்றீர். தீ நாவுகளுடைய பேச்சுக்கு இரையாகாதபடி அவர்களை உம் கூடாரத்தில் ஒளித்துக் காக்கின்றீர். பல்லவி

23 ஆண்டவருடைய புனிதர்களே, அவருக்கு அன்புகாட்டுங்கள் : விசுவாசம் உள்ளவர்களை ஆண்டவர் பாதுகாக்கிறார். செருக்குற்று நடப்பவர்களுக்கு அவர் நிறைவான தண்டனை அளிக்கின்றார். பல்லவி

அல்லேலூயா அரு. 14:23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்; நாங்கள் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தை உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 1-6, 16-18

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"மனிதர் பார்க்கவேண்டுமென்று உங்கள் நற்செயல்களை அவர்கள் முன் காட்டிக்கொள்ளாதபடி கவனமாயிருங்கள். இல்லையேல், வானகத்திலுள்ள உங்கள் தந்தையிடம் உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

எனவே, நீ பிச்சையிடும்பொழுது, மக்கள் புகழ வேண்டுமென்று வெளிவேடக்காரர் செபக் கூடங்களிலும் தெருக்களிலும் செய்வதுபோல், உனக்குமுன் பறை சாற்றச் செய்யாதே. அவர்கள் தங்கள் கைம்மாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீ பிச்சையிடும்பொழுதோ, உன் வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும். அப்பொழுது, நீ இடும் பிச்சை மறைவாயிருக்கும்; மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.

நீங்கள் செபம் செய்யும்பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்கவேண்டாம்; ஏனெனில், மனிதர் பார்க்கும்படி, அவர்கள் செபக் கூடங்களிலும் தெருக்கோடிகளிலும் நின்று செபம் செய்ய விரும்புவர். அவர்கள் தங்கள் கைம்மாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீயோ செபம் செய்யும்பொழுது, உன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டு, மறைவாயுள்ள உன் தந்தையை நோக்கிச் செபம் செய். மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.

நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல் முக வாட்டமாய் இருக்கவேண்டாம். அவர்கள் நோன்பு இருப்பதை மனிதர் பார்க்கும்பொருட்டுத் தங்கள் முகத்தை விகாரப்படுத்திக்கொள்கின்றனர். அவர்கள் கைம்மாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீ நோன்பு இருக்கும்போது தலைக்கு எண்ணெய் தடவு; முகத்தைக் கழுவு. அப்பொழுது நீ நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாமல், மறைவாயுள்ள உன் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கைம்மாறு கருதாமல் உங்களுக்குக் கடவுளின் நற்செய்தியை அறிவித்தேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *11: 1-11*

சகோதரர்களே :

என் பேதைமையை நீங்கள் ஓரளவு பொறுத்துக்கொள்வீர்களா? ஆம், சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் உங்கள் மீதுகொண்டுள்ள அன்பார்வம் கடவுள் கொண்டிருக்கும் அன்பார்வமே. ஏனெனில், கிறிஸ்து என்னும் ஒரே மணவாளர்க்கு உங்களை மண ஒப்பந்தத்தில் பிணைத்துள்ளேன். அவர்முன் உங்களைக் கற்புள்ள கன்னியென நிறுத்தவேண்டுமென்பதே என் விருப்பம். ஆனால், ஏவாள், எவ்வாறு பாம்பின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டாளோ அவ்வாறே நீங்களும் உங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டு, கிறிஸ்துவிடம் இருக்கவேண்டிய ஒருமனப் பற்றுதலை இழந்து விடுவீர்களோ என அஞ்சுகிறேன்.

ஏனெனில், எவனாவது வந்து நாங்கள் அறிவிக்காத வேறொரு யேசுவை அறிவிக்கும்போது, அல்லது நீங்கள் பெற்றிருக்கும் தேவ ஆவியைத் தவிர வேறொரு ஆவியைப் பெற்றுக்கொள்ளச் செய்யும்போது அல்லது நீங்கள் ஏற்றுக்கொண்ட நற்செய்திக்கு ஒவ்வாத வேறொரு நற்செய்தியைக் கொணரும்போது, அவனை எளிதில் பொறுத்துக்கொள்ளுகிறீர்களே; ஆயினும் இந்தப் 'பேர்போன' அப்போஸ்தலர்களைவிட நான்

எதிலும் தாழ்ந்தவனல்லேன் என்றே எண்ணுகிறேன். எனக்குப் பேச்சு வன்மை இல்லை, மெய்தான்; ஆயினும் அறிவு இல்லாமற் போகவில்லை. இதை நாங்கள் எப்போதும் எல்லா வகையிலும் உங்களுக்குக் காட்டியிருக்கிறோம்.

கைம்மாறு கருதாமல் உங்களுக்குக் கடவுளின் நற்செய்தியை அறிவித்து, உங்களை உயர்த்துவதற்காக நான் என்னையே தாழ்த்திக் கொண்டேனே, இப்படிச் செய்தது குற்றமா? உங்களிடையே பணிபுரிந்த போது, என் செலவுக்கு வேண்டியதை மற்றச் சபைகளிடமிருந்து பெற்றுக் கொண்டேன். உங்களுக்காக இவ்வாறு அவர்களிடமிருந்து பொருளைக் கவர்ந்தேன். நான் உங்களோடு இருக்கையில் எனக்குக் குறையிருந்த போதிலும், நான் யாருக்கும் சுமையாய் இருக்கவில்லை; எனக்கிருந்த குறையை மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர்கள் நீக்கினார்கள்; எதிலும் உங்களுக்குச் சுமையாய் இராமல் பார்த்துக்கொண்டேன், இனியும் பார்த்துக்கொள்வேன்.

என்னுள் இருக்கும் கிறிஸ்துவின் உண்மையே சாட்சியாகச் சொல்லுகிறேன் : எனக்குரிய இப்பெருமையை அக்காயா நாட்டுப் பகுதிகளிலிருந்து யாரும் எடுக்க முடியாது. நான் இப்படியெல்லாம் செய்வானேன்? உங்கள்மேல் எனக்கு அன்பு இல்லை என்பதாலோ? கடவுளுக்குத் தெரியும் நான் உங்கள்மேல் வைத்துள்ள அன்பு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 110 : 1-2, 3-4, 7-8 (பல்லவி : 7a)

பல்லவி : ஆண்டவரே, உமது திருக்கரச் செயல்கள்
நம்பிக்கைக்குரியவை, நேர்மையானவை.

அல்லது : அல்லேலூயா

1 நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன் : நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை : அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

3 அவருடைய செயல் மகத்துவமும் மாண்பும் மிக்கது : அவருடைய நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
4 தம் வியத்தகு செயல்கள் என்றென்றும் நினைவிலிருக்கச் செய்தார் : அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர். பல்லவி

7 அவரது திருக்கரச் செயல்கள் நம்பிக்கைக்குரியவை, நேர்மையானவை,
அவர் தரும் கட்டளைகள் நிலையானவை :
8 என்றென்றும், நித்தியமும் நிலையாயுள்ளவை, உறுதியும் நேர்மையும்
அவற்றின் அடிப்படை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*எலியாசு சுழல்காற்றால் மூடப்பட்டார்; எலிசேயுவிடத்தில் அவருடைய கருத்து நிறைவுபெற்றது.*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 48: 1-15

நெருப்பைப்போல் எலியாசு இறைவாக்கினர் எழுந்தார். பந்தம் போல் அவருடைய வார்த்தை பற்றி எரிந்தது. அவர் மக்களுக்குப் பஞ்சம் வரும்படி செய்தார். அவர்கள் தங்கள் பொறாமையால் அவருக்குக் கோபம் மூட்டினார்கள். அவர்களோ சொற்பப் பேர் ஆனார்கள். ஏனென்றால், அவர்களால் ஆண்டவருடைய கட்டளைகளைச் சகிக்கக் கூடவில்லை. அவர் ஆண்டவருடைய வார்த்தையால் வானத்தை மூடினார்; வானத்தினின்று மும்முறை நெருப்பு விழச் செய்தார்.

இவ்வாறே எலியாசு தம்முடைய புதுமைகளால் புகழ் பெற்றார். உம்மைப் போல மகிமை பாராட்டக்கூடியவன் யார்? ஆண்டவரான கடவுளுடைய வார்த்தையால் இறந்தவனை மரணத் தீர்ப்பினின்றும் பாதாளத்தினின்றும் எழச் செய்தீர். மன்னர்களைக் கெடுதிக்குள் விழத்தாட்டினீர்; எளிதாய் அவர்கள் வல்லமையை ஒடித்தீர்; மகிமையில் வாழ்ந்தவர்களைப் படுக்கையில் வைத்தீர். சீனாயில் தீர்மானத்தைக் கேட்கிறீர். ஓரேபில் பழியின் தீர்ப்புகளைக் கேட்கிறீர். அரசரைத் தவம் செய்யும்படி அபிஷேகம் செய்கிறீர். உமக்குப்பின் இறைவாக்கினர்கள் வரும்படி செய்கிறீர்.

நெருப்புச் சுவாலையில் நெருப்புக் குதிரைகள் பூட்டின வண்டியில் எடுத்துக்கொள்ளப்பட்டீர். ஆண்டவருடைய கோபத்தைத் தணிக்கக் காலங்களின் தீர்மானங்களில் எழுதப்பட்டீர். தந்தையின் இதயத்தைப் பிள்ளையுடன் சமாதானப்படுத்தவும், யாக்கோபின் கோத்திரங்களைத் திரும்ப ஏற்படுத்தவும் நியமிக்கப்பட்டீர்.

உம்மைப் பார்த்தவர்கள் பேறுபெற்றோர். அவர்கள் உமது நேசத்தால் மகிமைப்படுத்தப்பட்டார்கள். ஏனென்றால், நாம் வாழ்வில் மட்டுமே வாழ்கிறோம். சாவுக்குப் பிறகோ நம் பெயர் அதைப்போல் இராது.

எலியாசு சுழல் காற்றால் மூடப்பட்டார். எலிசேயுவிடத்தில் அவருடைய கருத்து நிறைவுபெற்றது. தம் காலத்தில் தலைவர்க்கு அவர் அஞ்சியவரல்லர். வல்லமையில் ஒருவனும் அவரை வென்றவனல்லன். யாதொரு வார்த்தையும் அவரை மேற்கொள்ளவில்லை. இறந்த பின்பும் அவர் பிணம் இறைவாக்கு உரைத்தது. அவர் தமது வாழ்நாளில் அற்புதங்களைச் செய்தார்; மரணத்தின்போது புதுமைகளை ஆற்றினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 96: 1-2, 3-4, 5-6,7 (பல்லவி: 12a)

பல்லவி: நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகு களிகூர்வதாக! தீவுகள் எல்லாம்
அகமகிழட்டும்.
2 மேகமும் இருளும் அவரைச் சூழ்ந்துள்ளன: நீதியும் நேர்மையும் அவரது
அரியணைக்கு அடிப்படை. பல்லவி

3 அவருக்குமுன் செல்வது நெருப்பு: சுற்றிலுமுள்ள எதிரிகளை அது எரித்து
விடுகிறது.
4 அவர் விடுக்கும் மின்னல்கள் பூவுலகுக்கு ஒளி வீசும்: அதைக் கண்டு
பூவுலகம் நடுங்குகிறது. பல்லவி

5 பூவுலகனைத்தையும் ஆளும் ஆண்டவர் முன்னே மலைகள் மெழுகு போல்
உருகுகின்றன.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன: உலக மக்களனைவரும்
அவரது மகிமையைக் காண்கின்றனர். பல்லவி

7 சிலைகளை வழிபடுவோர், அவற்றில் பெருமை கொள்வோர் யாவரும்
அவற்றில் நாணம் அடைகின்றனர்: அவர் முன்னிலையில் தெய்வங்
களெல்லாம் குப்புற விழுகின்றன. பல்லவி

## அல்லேலூயா

உரோ. 8 : 15

அல்லேலூயா. பிள்ளைகளாக்கும் தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டீர்கள்: அந்த ஆவியினால் நாம் "அப்பா, தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் இவ்வாறு செபியுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 7-15

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"செபம் செய்யும்பொழுது, புறவினத்தாரைப்போல் நீங்கள் பிதற்றவேண்டாம். அதிகம் பேசுவதால் தங்கள் செபம் கேட்கப்படும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் இருக்க வேண்டாம். நீங்கள் கேட்பதற்கு முன்னமே உங்களுக்குத் தேவையானது இன்னது என்று உங்கள் தந்தைக்குத் தெரியும்.

ஆதலால், நீங்கள் இவ்வாறு செபியுங்கள்: வானகத்திலுள்ள எங்கள் தந்தாய், உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக, உமது அரசு வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக. எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை நாங்கள் மன்னித்துள்ளதுபோல, எங்கள் குற்றங்களை மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும்.

மனிதருடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களாகில், உங்கள் வானகத் தந்தை உங்களையும் மன்னிப்பார். மனிதரை நீங்கள் மன்னியாவிடில், உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இவையேயன்றி எல்லாச் சபைகளையும் பற்றிய கவலை வேறு எனக்கு அன்றாடச் சுமையாய் உள்ளது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 11: 18, 21b-30

சகோதரர்களே :

உலகச் சிறப்புகளைச் சொல்லிக் காட்டி, பலர் பெருமையடித்துக் கொள்வதால் நானும் அவ்வாறே பெருமையடித்துக் கொள்கிறேன். என்னும் அவர்கள் எதிலே பெருமை பாராட்டத் துணிகிறார்களோ, அதிலே நானும் துணியக்கூடும் — அறிவின்மையைப் போலவே இன்னும் பேசுகிறேன்-

அவர்கள் எபிரேயரோ? நானும் எபிரேயன்தான். அவர்கள் இஸ்ராயேலரோ? நானும் இஸ்ராயேலன்தான். அவர்கள் ஆபிரகாமின் வழிவந்தவர்களோ? நானும் ஆபிரகாமின் வழி வந்தவன்தான். அவர்கள் கிறிஸ்துவின் பணியாளர்களோ? — அறிவிழந்தவனாகவே பேசுகிறேன் — நான் அவர்களுக்குமேல் கிறிஸ்துவின் பணியாளன். அவர்களைவிட மிகுதியாய் உழைத்தேன். அவர்களைவிட மிகுதியாய்ச் சிறையில் துன்புற்றேன். அவர்களைவிட மிகக் கொடுமையாகச் சாட்டையால் அடிபட்டேன். பலமுறை மரண வாயில் நின்றேன். ஐந்து முறை யூதரிடமிருந்து ஒன்று குறைய நாற்பது கசையடிகள் வாங்கினேன். மும்முறை தடியால் அடிபட்டேன். ஒரு முறை என்னைக் கல்லால் எறிந்தார்கள். மும்முறை கப்பற் சிதைவில் சிக்குண்டேன். ஓர் இரவும் பகலும் நடுக்கடலில் அல்லலுற்றேன். நான் செய்த பயணங்கள் மிகப் பல: அவற்றில் ஆறுகளாலும் கள்ளர்களாலும் இடர்கள், சொந்த இனத்தாரும் வேற்றினத்தாரும் இழைத்த இடர்கள், நாட்டிலும் இடர்கள், காட்டிலும் இடர்கள், கடலிலும் இடர்கள், போலிச் சகோதரர்களால் இடர்கள், இப்படி எத்தனையோ இடர்களுக்கு ஆளானேன். அயராது உழைத்துக் களைத்தேன்; பன்முறை கண் விழித்தேன்; பசிதாகமுற்றேன்; பன்முறை பட்டினி கிடந்தேன்; குளிரில் வாடினேன்; போதிய ஆடையின்றியிருந்தேன்; இவைபோல் வேறு பல இடர்கள் நேர்ந்தன.

இவையேயன்றி, எல்லாச் சபைகளையும் பற்றிய கவலை வேறு எனக்கு அன்றாடச் சுமையாய் உள்ளது. யாராவது மன வலிமையற்றிருந்தால், நானும் அவனைப்போல் ஆவதில்லையோ? எவனாவது இடறல் உற்றால், என் உள்ளம் கொதிப்பதில்லையோ? நான் பெருமை பாராட்டுவதாய் இருந்தால் என் வலுவின்மையைக் காட்டுவதனைத்தையும் குறித்தே பெருமை பாராட்டுவேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 17 b காண்)

பல்லவி : **இறைவன் எல்லாத் துன்பங்களினின்றும் நீதிமான்களை விடுவித்தார்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்,
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமை கொள்ளும்.
சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்:
எல்லோரும் சேர்ந்து அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்:
அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார்.
எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார். பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்:
வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.
6 இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்:
எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அவனை அரசனாக அபிஷேகம் செய்து, 'அரசர் வாழ்க' என்றனர்.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம். *11: 1-4, 9-18, 20*

அந்நாட்களில் :

ஒக்கோசியாசின் தாய் அத்தாலி தன் மகன் இறந்துவிட்டதைக் கண்டு அரச குலத்தார் அனைவரையும் கொன்று குவிக்கத் தொடங்கினாள். யோராம் அரசனின் மகளும் ஒக்கோசியாசின் சகோதரியுமான யோசபா, கொல்லப்பட இருந்த அரச புதல்வரில் ஒருவனான ஒக்கோயாசின் மகன் யோவாசையும், அவனுடைய தாதியையும் பள்ளியறையினின்று இரகசியமாய்க் கூட்டிச் சென்று அத்தாலியாளுக்குத் தெரியாத இடத்தில் ஒளித்து வைத்து அவனது உயிரைக் காப்பாற்றினாள். யோவாசு ஆறு ஆண்டுகள் தன் தாதியோடு கோயிலில் தலைமறைவாய் இருந்தான். அப்பொழுதெல்லாம் அத்தாலியே நாட்டை ஆண்டுவந்தாள்.

ஏழாம் ஆண்டிலோ, யோயியாதா நூற்றுவர் தலைவர்களையும் விரர்களையும் வரவழைத்து, ஆண்டவரின் ஆலயத்திற்குள் கூட்டிச் சென்று அவர்களோடு உடன்படிக்கை செய்தார். பின், கோயிலில் அவர்களை ஆணையிடச் செய்து, அரசனின் மகனை அவர்களுக்குக் காட்டி, குரு யோயியாதா கட்டளையிட்டபடி நூற்றுவர் தலைவர் நடந்துகொண்டனர்.

ஓய்வு நாளில் தத்தம் முறைப்படி வந்து போய்க்கொண்டிருக்கிற தங்கள் வீரர்கள் அனைவரையும் அவரவர் கூட்டிக்கொண்டு குரு யோயியாதாவிடம் வந்தனர். அவர் ஆண்டவரின் ஆலயத்தில் இருந்த தாவீது அரசரின் ஈட்டி முதலிய ஆயுதங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் ஒவ்வொருவரும் ஆயுதம் தாங்கியவராய்க் கோயிலின் வலப்புறம் தொடங்கிப் பீடத்தின் இடப்புறம் வரை ஆலயத்தில் அரசனைச் சூழ்ந்து நின்றனர். யோயியாதா இளவரசனை வெளியே கூட்டிவந்து அவனது தலையின்மேல் முடியை வைத்து, கையில் திருச்சட்ட நூலை அளித்தார்; இவ்வாறு அவனை அரசனாக அபிஷேகம் செய்தனர். பிறகு எல்லாரும், “அரசர் வாழ்க!” என்று சொல்லிக் கைதட்டினர்.

அப்பொழுது மக்கள் ஓடிவரும் ஓசையை அத்தாலி கேட்டு, ஆண்டவரின் ஆலயத்தில் கூடி நின்ற மக்களிடம் வந்தாள். அப்போது வழக்கம்போல் அரசன் அரியணையில் வீற்றிருப்பதையும், அவன் அருகில் பாடகர்களும் எக்காளம் ஊதுபவர்களும் நிற்பதையும், எல்லா மக்களும் மகிழ்ச்சி கொண்டாடி எக்காளம் ஊதுவதையும் கண்ட அவள் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு “சதி, சதி!” என்று கூக்குரலிட்டாள். யோயியாதா நூற்றுவர் தலைவரான படைத் தலைவர்களை நோக்கி, “இவளைக் கோயில் வளாகத்துக்கு வெளியே கொண்டு போங்கள். எவனாவது இவளைப் பின்பற்றுவானானால், அவன் வாளுக்கிரையாவான்” எனக் கட்டளையிட்டார். ஏற்கெனவே, “ஆண்டவரின் ஆலயத்திற்குள் அவளைக் கொல்லலாகாது” என்று சொல்லியிருந்தார். படைத் தலைவர்கள் அவளைப் பிடித்து, அரண்மனைக்கு அருகே ‘குதிரைகளின் வாயில்’ என்ற சாலையிலே அவளை இழுத்துக் கொண்டுபோய் அங்கு அவளைக் கொன்றனர்.

பின்பு யோயியாதா தாங்கள் ஆண்டவரின் மக்களாய் இருப்பதாக, அரசனும் மக்களும் ஆண்டவரோடும், மக்களும் அரசனும் தங்களுக்குள்ளேயும் உடன்படிக்கை செய்யச் செய்தார். அப்போது நாட்டின் மக்கள் எல்லாம் பாவாலின் கோயிலில் நுழைந்து, பீடங்களை இடித்துச் சிலைகளைச் சுக்கு நூறாய் உடைத்தெறிந்தனர். பாவாலின் பூசாரி மாத்தானையும் பீடத்திற்கு முன்பாகக் கொலை செய்தனர். பிறகு குரு ஆண்டவரின் ஆலயத்திலும் காவலரை நிறுத்தி வைத்தார்.

நாட்டின் எல்லா மக்களும் மகிழ்ச்சி கொண்டாடினர். நகரில் அமைதி நிலவிற்று. அத்தாலி என்பவளோ அரசனின் அரண்மனை அருகே வாளுக்கு இரையானாள்”.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 131 : 11, 12, 13-14, 17-18 (பல்லவி : 13)

பல்லவி : **ஆண்டவர் சீயோனைத் தம் உறைவிடமாகத் தேர்ந்தெடுத்தார்.**

11 தாவீதிற்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறினார். அவரது வாக்குறுதி தவறாது:
"உம் வழித்தோன்றல் ஒருவனை உம் அரியணைமீது ஏற்றுவேன். பல்லவி

12 "உம் மக்கள் என் உடன்படிக்கையைக் காத்து நான் தரும் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் அவர்களுடைய மக்களும் என்றென்றுமே உன் அரியணை மீது அமர்வர்" என்றார். பல்லவி

13 ஏனெனில் ஆண்டவர் சீயோனைத் தேர்ந்தெடுத்தார். தம்முடைய அரியணை யாகக்கொள்ள விரும்பினார்.
14 "என்றென்றும் என் இளைப்பாற்றியின் இடம் இதுவே, இங்கே நான் தங்குவேன். ஏனெனில் இதை நான் விரும்பினேன். பல்லவி

17 "தாவீதுக்கு அங்கே வல்லமைமிகு சந்ததியை எழுப்புவேன். நான் அபிஷேகம் செய்தவருக்கு ஒரு விளக்கை ஆயத்தம் செய்வேன்.
18 "அவருடைய எதிரிகளுக்கு வெட்கமெனும் ஆடையை உடுத்துவேன். அவர் தலையின்மீதோ நான் வைக்கும் மணி மகுடம் விளங்கும்." பல்லவி

அல்லேலூயா

மத். 5 : 3

அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர்;
ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 19-23

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"மண்ணுலகில் செல்வம் சேர்த்துவைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும்; திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியும் துருவும் அழிப்பதில்லை; திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.

"உன் கண்தான் உன் உடலுக்கு விளக்கு; உன் கண் தெளிவாயிருந்தால் உன் உடல் முழுதும் ஒளியுள்ளதாய் இருக்கும். உன் கண் கெட்டிருந்தால் உன் உடல் முழுதும் இருண்டிருக்கும். ஆகவே உன்னுள் இருக்கும் ஒளியே இருளாயிருந்தால், இருள் என்னவாயிருக்கும்!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**என் குறைபாடுகளில்தான் நான் மனமாரப் பெருமைப்படுவேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *12: 1-10*

சகோதரர்களே:

பெருமை பாராட்டுதல் பயனற்றதே; ஆயினும் பெருமை பாராட்டவேண்டிய தேவை இருப்பதால், ஆண்டவர் அருளிய காட்சிகளையும், வெளிப்பாடுகளையும் சொல்லப்போகிறேன். கிறிஸ்தவன் ஒருவன் எனக்குத் தெரியும்; அவன் பதினன்கு ஆண்டுகளுக்கு முன் மூன்றும் வானம் வரை கவர்ந்தெடுக்கப்பட்டான் - உடலோடு அங்குச் சென்றுனே உடலின்றிச் சென்றுனே யானறியேன், கடவுளே அறிவார் - அந்த ஆள், வான் வீட்டுக்குள் கவர்ந்தெடுக்கப்பட்டது எனக்குத் தெரியும். - உடலோடு அங்கே சென்றுனே உடலின்றிச் சென்றுனே, எனக்குத் தெரியாது, கடவுளுக்கே தெரியும். - அங்கே, மனித மொழிக்கெட்டாத சொற்களை, மனிதன் திருப்பிச் சொல்லக்கூடாத சொற்களைக் கேட்டான்.

அவனைப்பற்றியே நான் பெருமை பாராட்டுவேன்; என்னைப் பற்றிப் பெருமை பாராட்டமாட்டேன். என் குறைபாடுகளே எனக்குப் பெருமை! அப்படி நான் பெருமைப்பட விரும்பினலும், அது அறிவீனமாய் இராது; சொல்வது உண்மையாகவே இருக்கும். ஆயினும் என்னிடம் காண்பதிலும் கேட்பதிலும் உயர்வாக என்னைப்பற்றி யாரும் எண்ணுதபடி நான் பெருமை பாராட்டாது விடுகிறேன்.

ஆகவே, எனக்கருளிய தனிப்பட்ட வெளிப்பாடுகளால் நான் செருக்குருதபடி, இறைவன் அனுப்பிய நோய் ஒன்று என் உடலில் தைத்த முள்போல் வருத்தியது. அது என்னைக் குத்திக் கொடுமை

படுத்தச் சாத்தான் அனுப்பிய தூதனைப்போல் இருந்தது: நான் செருக்குறுதிருக்கவே இவ்வாறு நடந்தது. ஆதலால், என்னிடமிருந்து அதை அகற்றுமாறு மும்முறை ஆண்டவரை வேண்டினேன். அவரோ, “நான் தரும் அருள் உனக்குப் போதும்; ஏனெனில், மனித வலுவின்மையில்தான் என் வல்லமை சிறந்தோங்கும்” என்று சொல்லி விட்டார்.

ஆகையால் நான் என் குறைபாடுகளில்தான் மனமாரப் பெருமைப் படுவேன். அப்போதுதான் கிறிஸ்துவின் வல்லமை என்னுள் குடிகொள்ளும். ஆகவே, நான் என் குறைபாடுகளைக் காணும்போது, இழிவுறும்போது, நெருக்கடியில் இருக்கும்போது, துன்புறுத்தப்படும்போது, இடுக்கண் ணுறும்போது கிறிஸ்துவை முன்னிட்டு நான் மன நிறைவோடு இருக்கிறேன். ஏனெனில், வலுவின்றி இருக்கும்போதுதான் நான் வலிமை மிக்கவனாய் யிருக்கிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 33 : 7-8, 9-10, 11-12 (பல்லவி : 8 a)*

பல்லவி : ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று
சுவைத்துப் பாருங்கள்.

7 ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரைச் சுற்றி அவருடைய தூதர் பாளையம்
இறங்கிக் காத்திடுவார்.
8 ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள் : அவரிடம்
தஞ்சம் புகுவோன் பேறுபெற்றவன். பல்லவி

9 ஆண்டவருடைய புனிதர்களே, அவருக்கு அஞ்சுங்கள் : ஏனெனில்,
அவருக்கு அஞ்சுவோருக்கு எதுவும் குறைவுபடாது.
10 வலிமையுற்றோர் வறிஞராய்ப் பசியுற்றார் : ஆண்டவரைத்
தேடுவோர்க்கோ எந்த நன்மையும் குறைவுபடாது. பல்லவி

11 வாரீர் மக்களே, நான் சொல்லுவதைக் கேளீர் : உங்களுக்குத் தேவ
பயத்தைக் கற்பிப்பேன்.
12 வாழ்க்கைமீது பற்றுதல் கொண்டுள்ளவன் யார்? நலன்களைத் துய்க்க
நீடிய வாழ்வை விரும்பும் மனிதன் யார்? பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

***சக்கரியாசை ஆலயத்தில், பீடத்தருகில் கொலைசெய்தீர்கள்.***

**நாளாகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்** 24: 17-25

யோயியாதா இறந்தபின் யூதாவின் தலைவர்கள் வந்து அரசனுக்கு மரியாதை செலுத்தினர். அப்பொழுது அரசன் அவர்களின் உபசார மிகுதியினால் மயங்கி அவர்களது விருப்பப்படி நடக்கத் தொடங்கினான். யூதா மக்கள் தங்கள் முன்னோரின் கடவுளாகிய ஆண்டவரின் ஆலயத்தைப் புறக்கணித்துவிட்டுச் சிலைத் தோப்புகளை அமைத்துச் சிலைகளையும் வழிபடத் தொடங்கினர். அவர்கள் செய்த இப்பாவத்தின் பொருட்டு யூதாவின் மேலும் யெருசலேமின்மேலும் கடவுள் கடுங்கோபம் கொண்டார். அவர்கள் மனந்திரும்பித் தம்மிடம் திரும்பவும் வரும்படியாக ஆண்டவர் அவர்களிடம் இறைவாக்கினரை அனுப்பினார். ஆயினும் மக்கள் இவர்களின் குரல்களுக்குச் செவிமடுக்கவே இல்லை.

ஆகவே, ஆண்டவரின் ஆவி குரு யோயியாதாவின் மகன் சக்கரியாசின்மேல் இறங்கினது. இவர் மக்களுக்குமுன் நின்று அவர்களை நோக்கி, "கடவுளாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது: 'நீங்கள் ஆண்டவரின் கற்பனைகளை மீறுவது ஏன்? அதனால் உங்களுக்கு நன்மை ஒன்றும் வராது. நீங்கள் ஆண்டவரைப் புறக்கணித்ததால் ஆண்டவரும் உங்களைப் புறக்கணிப்பார்' என்பதாம்" என்றார்.

இதைக் கேட்டு மக்கள் அவருக்கு எதிராய்ச் சதிசெய்து அரசனின் கட்டளைப்படி ஆண்டவரின் ஆலய முற்றத்தில் அவரைக் கல்லால் எறிந்தனர். இவ்வாறு செய்நன்றி கொன்றவனாய் யோவாஸ் யோயியாதாவினுடைய மகனைக் கொலைசெய்தான். இவர், "ஆண்டவர் இதைப் பார்க்கிறார்; அதற்குப் பழிவாங்குவார்" என்று சொல்லிக்கொண்டே உயிர்விட்டார்.

அடுத்த ஆண்டு சீரியர் அவனுக்கு எதிராகப் படையெடுத்து வந்து, யூதாவிலும் யெருசலேமிலும் புகுந்து மக்களின் எல்லாத் தலைவர்களையும் கொன்று குவித்தனர்; கொள்ளையிட்ட அவர்களின் உடைமைகளை எல்லாம் தமாஸ்குவில் இருந்த தங்கள் அரசனுக்கு அனுப்பி வைத்தனர்.

சீரியர் படை சிறியதே எனினும் யூதா மக்கள் தங்கள் முன்னோரின் கடவுளாகிய ஆண்டவரைப் புறக்கணித்திருந்ததால் ஆண்டவர் அவர்களது பெரும் படையைச் சீரியர் கையில் ஒப்படைத்தார்; யோவாசைக் கொடூரமாகத் தண்டித்தார். கடும் நோயுற்ற நிலையில் சீரியர் யோவாசை விட்டுச் சென்றனர்.

குரு யோயியாதாவின் மகனின் இரத்தப்பழியின் பொருட்டு அவனுடைய ஊழியர்கள் அவனுக்கு எதிராகச் சதி செய்து படுக்கையிலேயே அவனைக் கொன்று போட்டனர். யோவாஸ் தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டான். ஆயினும் அரசர்களின் கல்லறையிலே அவன் வைக்கப்படவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88 : 3-4, 28-29, 30-31, 32-33 (பல்லவி : 28a)

பல்லவி: என்றென்றும் என் அருளன்பை அவர்மேல் பொழிவேன்.

3 ‘நான் தேர்ந்தெடுத்தவரோடு உடன்படிக்கை செய்துகொண்டேன். என்
ஊழியன் தாவீதுக்கு ஆணையிட்டுக் கூறியது :
4 உம் சந்ததியை என்றென்றும் நிலைநாட்டுவேன் : எல்லாத் தலைமுறைகளிலும் உன் அரியணை நிலைக்கச் செய்வேன்.’ பல்லவி

28 என்றென்றும் என் அருளன்பை அவர்மேல் பொழிவேன் : அவரோடு
நான் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கும்.
29 அவரது சந்ததி என்றென்றும் வாழச் செய்வேன் : அவரது அரியணை
வானங்கள்போல் நீடிக்கச் செய்வேன். பல்லவி

30 அவருடைய மக்கள் என் சட்டத்தை மீறுவார்களாகில், என் கட்டளைகளைக் கடைப்பிடிக்காவிடில்,
31 என் நியமங்களைப் பின்பற்றாவிடில், என் கற்பனைகளின்படி ஒழுகாவிடில், பல்லவி

32 அவர்கள் செய்த குற்றத்திற்காகச் சாட்டையால் அடிப்பேன். அவர்கள்
பாவங்களுக்காகக் கசையால் அடிப்பேன். அடி கொடுத்து அவர்களைத்
திருத்துவேன்.
33 ஆனால் எனது அருளைத் தாவீதிடமிருந்து நீக்கிவிடமாட்டேன் : என்
வாக்குறுதியை நான் மீறவே மாட்டேன். பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 8 : 9

அல்லேலூயா. யேசுகிறிஸ்து செல்வமிக்கவராயிருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா.

# நற்செய்தி வாசகம்

**நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 24-34**

**அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறியதாவது :**

"எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது.

ஆதலால் உங்களுக்குச் சொல்லுகிறேன் ; உயிர்வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப் படவேண்டாம். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவையல்லவா? வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். நீங்கள் அவற்றிலும் மிக மேலானவர்களன்றோ? கவலைப்படுவதனால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்ட முடியும்?

உங்கள் உடையைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? வயல்வெளி மலர்கள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பது மில்லை; நூற்பதுமில்லை. ஆயினும் சாலொமோன்கூடத் தன் மாட்சி யிலெல்லாம் இவற்றில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். குறைவான விசுவாசம் உள்ளவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வயல்வெளிப் புல்லைக் கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்வளவுதான் செய்யமாட்டார்!

ஆதலால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப் போம் என்று கவலைப்படவேண்டாம். ஏனெனில், புறவினத்தார் தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே, கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள் ; இவையனைத்தும் உங்க ளுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப்பற்றிக் கவலைகொள்ளும். அன்றன்றைய தொல்லை அன்றன் றைக்குப் போதும்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# பன்னிரண்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஏழையின் உயிரைத் தீயோர் கையினின்று விடுவித்தார்.

எரேமியால் ஆகமத்திலிருந்து வாசகம் 20: 10-13

எரேமியால் கூறியதாவது :

என்னைப் பலரும் பழித்துரைப்பதைக் கேட்கிறேன் : "எப்பக்கமும் திகில் இருக்கிறது!" "அவன்மேல் பழி சுமத்துங்கள், வாருங்கள் அவன் மேல் பழி சுமத்துவோம்" என்கிறார்கள். என்னோடு நெருங்கிப் பழகிய என் நண்பர்கள்கூட, என் வீழ்ச்சியை எதிர்பார்க்கிறார்கள் : "ஒருவேளை அவன் ஏமாந்து போவான், அப்பொழுது நாம் அவனை மேற்கொள்வோம், அவன்மேல் பழிதீர்த்துக் கொள்வோம்" என்கிறார்கள்.

ஆனால் ஆண்டவர் வலிமை மிகுந்த போர் வீரனைப்போல் என்னோடு இருக்கின்றார்; ஆதலால் என்னைத் துன்புறுத்துகிறவர்கள் இடறி விழுவார்கள்; என்னை அவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள். அவர்கள் மிகவும் வெட்கி நாணுவார்கள்; ஏனெனில் அவர்கள் வெற்றிபெற மாட்டார்கள்; அவர்கள் அடைந்த இழிவு என்றென்றும் நீடிக்கும்; ஒருகாலும் அது மறக்கப்படாது.

சேனைகளின் ஆண்டவரே, நீதிமானைச் சோதிக்கிறவரே, உள்ளத்தையும் இதயத்தையும் பார்க்கிறவரே, நீர் அவர்களைப் பழிவாங்குவதை நான் பார்க்க வேண்டும்; ஏனெனில் உம்மிடந்தான் என் வழக்கைச் சொன்னேன்.

ஆண்டவரைப் பாடிப் புகழுங்கள்; ஆண்டவரை வாழ்த்திப் போற்றுங்கள்; ஏனெனில் ஏழையின் உயிரைத் தீயோர் கையினின்று விடுவித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 68 : 7-9, 13 & 16, 32-34 (பல்லவி : 13c)

பல்லவி : **ஆண்டவரே, மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கேற்ப என் மன்றாட்டை ஏற்றருளும்.**

7 ஏனெனில், உம் பொருட்டே நான் நிந்தனையை ஏற்றேன் : உம் பொருட்டே வெட்கத்தால் என் முகம் கவிந்து போயிற்று.
8 என் உறவினர்க்கும் நான் அந்நியனுனேன் : என் சகோதரருக்கும் நான் வேற்று மனிதனுனேன்.
9 உமது இல்லத்தின்மீது எனக்குண்டான ஆர்வம் என்னை எரித்துவிட்டது : உம்மை நிந்திப்பவர்களின் நிந்தனைகள் என்மேல் விழலாயின. பல்லவி

13 ஆனுல் ஆண்டவரே, உம்மை நோக்கியே உள்ளது என் மன்றுட்டு : இறைவா, உமக்குகந்த நேரத்தில் உம்மை நோக்கி வேண்டுகிறேன். மிகுதி யான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப என் மன்றுட்டைக் கேட்டருளும் : உறுதியான உமது அருட்துணைக்கேற்ப எனக்குச் செவிசாய்த்தருளும்.
16 உமது அருள் கனிவுமிக்கதாதலின், ஆண்டவரே, என் மன்றுட்டைக் கேட் டருளும் : உமது இரக்கப் பெருக்கத்திற் கேற்ப என்னைக் கண்ணோக்கும். பல்லவி

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளுங்கள். இறைவனைத் தேடு வோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.
33 ஏனெனில், ஏழைகளின்குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றுர் : சிறைப் பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை.
34 வானமும் வையமும் அவரைப் புகழ்வனவாக : கடல்களும், கடல்களில் வாழும் அனைத்துமே அவரைப் புகழ்வனவாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**குற்றத்தின் தன்மை வேறு, அருட்கொடையின் தன்மை வேறு.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 12-15

சகோதரர்களே :

ஒரே மனிதனுல் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போலவும், இவ்வாறு எல்லாரும் பாவஞ்செய்தமையால் எல்லா மனிதர்க்குள்ளும் சாவு பரவியதுபோலவும் ...

ஏனெனில், திருச்சட்டம் வருமுன்னும், உலகில் பாவம் இருந்தது ; ஆனால், சட்டம் இல்லாதபோது, குற்றச்சாட்டுக்கு இடமில்லை. ஆயினும், ஆதாம் முதல் மோயீசன் வரை இருந்தவர்கள், ஆதாம் கட்டளையைமீறிச் செய்த பாவத்தைப்போன்ற பாவம் செய்யாவிடினும், அவர்கள்மேலும் சாவு ஆட்சி செலுத்திற்று ; இந்த ஆதாமோ வரவிருப்பவர்க்கு முன்னடையாளம்.

ஆனால் குற்றத்தின் தன்மை வேறு, அருட்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில், ஒருவன் செய்த குற்றத்தால் அனைவரும் இறந்தார்கள் அல்லவா ? ஆனால் கடவுளின் அருளும், யேசு கிறிஸ்து என்னும் ஒரு மனிதரின் அருளால் கிடைக்கும் கொடையும் அனைவருக்கும் எவ்வளவோ மிகுதியாய்ப் பெருகியுள்ளன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 15 : 26b, 27a

அல்லேலூயா. உண்மையின் தேவ ஆவி என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார் ; நீங்கள்கூட சாட்சியம் கூறுவீர்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10: 26-33

அக்காலத்தில் : யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது :

மனிதர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில், வெளிப்படாதபடி மறைந்திருப்பது ஒன்றுமில்லை. அறியப்படாதபடி ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை. நான் உங்களுக்கு இருளில் கூறுவதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். நீங்கள் காதோடு காதாய்க் கேட்பதைக் கூரைமீதிருந்து அறிவியுங்கள்.

ஆன்மாவைக் கொல்ல முடியாதவர்களாய் உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள். உடலையும் ஆன்மாவையும் நரகத்தில் அழிக்கவல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு குருவி விற்பதில்லையா ? எனினும், அவற்றில் ஒன்றுகூட உங்கள் தந்தையால் அன்றி, நிலத்தில் விழாது. உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளது. எனவே, அஞ்சாதீர்கள். ஏனெனில், குருவிகள் பலவற்றினும் நீங்கள் மேலானவர்கள்.

மனிதர் முன்னிலையில் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன். மனிதர் முன்னிலையில் என்னை மறுதலிப்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் மறுதலிப்பேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உன் கொந்தளிப்பின் இறுமாப்பு இங்கே அடங்கி நிற்கட்டும்.**

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் *38: 1, 8-11*

ஆண்டவர் சுழற்காற்றின் நடுவினின்று யோபுவுக்கு கூறிய மறுமொழி பின்வருமாறு:

"கருப்பையினின்று கடல் உடைப்பெடுத்தபோது, கதவுகளிட்டு அதனை அடைத்தவர் யார்? கார் மேகங்களை அதற்கு மேலாடையாய்த் தந்து, சுற்றிக்கிடத்தும் துணியாய்க் காரிருளைக் கொடுத்து, எல்லைகளை அதற்கு நாம் ஏற்படுத்தி, கதவுகளும் தாழ்ப்பாள்களும் அதற்குப் பொருத்தி, 'இதுவரையில் வா, இதைக் கடந்து வராதே, உன் கொந்தளிப்பின் இறுமாப்பு இங்கே அடங்கி நிற்கட்டும்' என்று நாம் சொன்னபோது நீ எங்கே இருந்தாய்?"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 106 : 23-24, 25-26, 28-29, 30-31 (பல்லவி : 1)*

பல்லவி: **ஆண்டவரைப் போற்றுங்கள் :**
**என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.**

அல்லது: **அல்லேலூயா.**

23 அவர்கள் கப்பலேறிக் கடலைக் கடந்து : வியாபாரம் செய்யப் போயிருந்தார்கள்.
24 இவர்களும் ஆண்டவருடைய செயல்களைக் கண்டனர் : கடலில் அவருடைய வியத்தகு செயல்களைப் பார்த்தனர். பல்லவி

25 அவர் ஒரு வார்த்தை சொல்ல, புயல்காற்று எழுந்தது: கடல் கொந்
தளிக்க, அலைகள் கொதித்தெழுந்தன.
26 வானமட்டும் மேலே வீசப்பட்டனர், பாதாளமட்டும் கீழே எறியப்
பட்டனர்: அவர்கள் உள்ளமோ துன்ப நிலையைக் கண்டு தளர்வுற்றது.
பல்லவி

28 தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர்: அவர்களுக்குற்ற
துன்பங்களிலிருந்து அவர் அவர்களை விடுவித்தார்.
29 புயல்காற்றை அவர் இளந்தென்றலாக மாற்றிவிட்டார்: கடல் அலைகளும்
ஓய்ந்துவிட்டன.
பல்லவி

30 அவ்வமைதியைக் கண்டு அவர்கள் மகிழ்ந்தனர்: அவர்கள் விரும்பிய
துறைமுகத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார்.
31 ஆண்டவருடைய இரக்கத்தை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவார்க
ளாக: மனுமக்களுக்காக அவர் செய்த வியத்தகு செயல்களை நினைத்துக்
கொள்வார்களாக.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இதோ, புதியன தோன்றியுள்ளன!**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5: 14-17

சகோதரர்களே:

அனைவருக்காகவும் ஒருவர் உயிர்துறந்தார் என்று உணர்ந்ததும் கிறிஸ்துவின் அன்பு எங்களை ஆட்கொள்கிறது; அனைவருக்காகவும் ஒருவர் இறந்தாரென்றால், அனைவருமே இறந்துபோயினர் என்பது பொருள். அப்படி அனைவருக்காகவும் அவர் உயிர்துறந்ததோ, வாழ்கிறவர்கள் இனித் தங்களுக்கென வாழாமல், தங்களுக்காக இறந்து உயிர்த்தவர்க்கென வாழவேண்டும் என்பதற்காகவே.

ஆதலால், இனிமேல் நாங்கள் ஊனக்கண்கொண்டு யாரையும் பார்ப்பதில்லை; இதற்குமுன் ஊனக்கண்கொண்டு கிறிஸ்துவைப் பார்த்திருந்தாலும், இனிமேல் அப்படிப் பார்ப்பதில்லை. ஆகவே ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பு தோன்றுகிறது: பழையன கழிந்துபோயின.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா                                                            லூக். 7:16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்: கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கின்றார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே,
இவர் யாராயிருக்கலாம்?

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்                4: 35-40

அன்று மாலை யேசு சீடர்களை நோக்கி, "அக்கரைக்குச் செல்வோம்" என்றார். அவர்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு அவரை அப்படியே படகில் அழைத்துச் சென்றனர். அவருடன் வேறு படகுகளும் சென்றன.

அப்போது பெரிய புயல் காற்று உண்டாயிற்று. அலைகள் படகின் மேல் மோத, படகு நீரால் நிரம்பும் தறுவாயிலிருந்தது. அவர் பின்னணியத்தில் தலையணைமீது தூங்கிக்கொண்டிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி, "போதகரே, மடிந்து போகிறோமே; உமக்கு அக்கறை இல்லையா?" என்றனர். அவர் எழுந்து, காற்றைக் கடிந்து கடலை நோக்கி, "இரையாதே, சும்மாயிரு" என்றார். காற்று நின்றது, பேரமைதி உண்டாயிற்று.

பின், அவர் அவர்களை நோக்கி, "ஏன் இவ்வளவு பயம்? இன்னும் உங்களுக்கு விசுவாசமில்லையா?" என்றார். அவர்கள் பெரிதும் அச்சமுற்று, "காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாராயிருக்கலாம்?" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

தாங்கள் ஊடுருவக் குத்தினவனை நோக்குவர்.

இறைவாக்கினரான சக்கரியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 12: 10-11

ஆண்டவர் கூறுவதாவது:

"நாம் தாவீதின் வீட்டார்மேலும், யெருசலேம் மக்கள்மேலும் இரக்க உள்ளத்தையும், மன்றாடும் மனநிலையையும் பொழிவோம்; அப்போது அவர்கள் தாங்கள் ஊடுருவக் குத்தியவனை நோக்குவர்; நோக்கி, ஒருவன் தன் ஒரே பிள்ளையைப் பறிகொடுத்து விட்டுப் புலம்புவது போலும், இறந்துபோன தன் தலைப்பேற்றுக்காக ஒருவன் கதறியழுவதுபோலும் அவனுக்காக அழுவார்கள்.

அந்நாளில் யெருசலேமில் எழும்பும் புலம்பல் மெகித்தோ சமவெளியில் ஆதாதிரம்மோன் பட்டணத்தில் எழுந்த புலம்பலைப்போலப் பெரிதாயிருக்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 62 : 1, 2-3, 4-5, 7-8 (பல்லவி : 1b)

பல்லவி : ஆண்டவரே, என் இறைவா,
என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது.

இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன். நீரின்றி
1 வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பதுபோல் என் உள்ளம்
உம்மீது வேட்கைகொண்டுள்ளது. என் உடலும் உம்மை ஆசிக்கிறது.

பல்லவி

உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன். உமது
2 வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.
வாழ்க்கையைவிட உமது அருள் எவ்வளவோ மேலானது. என் நாவும்
3 உம்மைப் புகழ்ந்தேத்தும்.

பல்லவி

இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன். உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.
செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் என் உள்ளம் நிறைவுபெறும்; என் வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும்: என் நாவில் புகழ்ச்சி எழும்.

ஏனெனில், நீர் எனக்கு உதவியாயுள்ளீர்; உம் சிறகுகளின் நிழலில் நான் அக்களிக்கின்றேன்.
என் ஆன்மா உறுதியாக உம்மைப் பற்றிக்கொண்டது. உமது வலக்கரம் எனக்கு ஆதரவாயுள்ளது.

## இரண்டாம் வாசகம்

*கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பெற்ற நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவை அணிந்துகொண்டீர்கள்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3: 26-29

சகோதரர்களே :

கிறிஸ்து யேசுவின்மீது வைத்த விசுவாசத்தின் வழியாய் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். எவ்வாறெனில், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவை அணிந்துகொண்டீர்கள். இனி யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும் இல்லை; ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து யேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே.

நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களாயின், ஆபிரகாமின் வழி வந்தவர்களாய் இருக்கிறீர்கள், வாக்குறுதியின்படி உரிமையாளர்களுமாய் இருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன், அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீர் கடவுளின் மெசியா ......**
**மனுமகன் பாடுகள் பல படவேண்டும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
*9: 18-24*

அக்காலத்தில் :

யேசு தனியே செபித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவருடைய சீடரும் அவருடன் இருந்தனர். அவர் அவர்களை நோக்கி, "மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?" எனக் கேட்டார்.

அவர்கள், "சிலர் ஸ்நானக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் முற்காலத்து இறைவாக்கினர்களுள் ஒருவர் உயிர்த்தார் என்றும் சொல்லுகின்றனர்" என்றார்கள்.

"நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர் மறுமொழியாக, "நீர் கடவுளின் மெசியா" என்றார். இதை ஒருவருக்கும் சொல்லக்கூடாது என்று கண்டிப்பான கட்டளையிட்டார்.

மேலும், "மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும், தலைமைக் குருக்களாலும், மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழவும் வேண்டும்" என்று சொன்னார்.

அவர்கள் எல்லாரையும் பார்த்து, "என்னைப் பின் செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்து, தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டுத் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக்கொள்வான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***ஆண்டவர் கட்டளையிட்டவாறு ஆபிராம் புறப்பட்டான்.***

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** 12: 1-9

அந்நாட்களில் :

ஆண்டவர் ஆபிராமை நோக்கி: நீ உன் நாட்டையும், உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டவிருக்கிற நாட்டிற்குப் போகக்கடவாய். நாம் உன்னைப் பெருங்குடியாய்ப் பெருகச் செய்து, உன்னையும் ஆசீர்வதித்து, உன் பெயரையும் மேன்மைப்படுத்துவோம். நீ ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிப்பவர்களை நாம் ஆசீர்வதிப்போம். உன்னைச் சபிப்பவர்களை நாமும் சபிப்போம். மேலும், பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப்படும் என்றருளினார்.

ஆண்டவர் தனக்குக் கட்டளையிட்டவாறு ஆபிராம் புறப்பட்டான். லோத்தும் அவனோடு சென்றான். ஆபிராம் ஆரானை விட்டுப் புறப்பட்ட போது அவனுக்கு வயது எழுபத்தைந்து. அவன் தன் மனைவி சாறாயியையும், தன் சகோதரனின் மகன் லோத்தையும், தாங்கள் வைத்திருந்த பொருள் அனைத்தையும், ஆரானிலே பிறந்திருந்த உயிர்களையும் கூட்டிக் கொண்டு கானான் நாடு போய்ச் சேர்ந்தான்.

பின்னர் ஆபிராம் அந்த நாட்டில் சுற்றித் திரிந்து, சிக்கேம் என்னும் இடம் வரை — அதாவது, மகிமைப் பள்ளத்தாக்குவரை — வந்தான். அக்காலத்தில் கானானையர் அந் நாட்டில் இருந்தனர்.

பின் ஆண்டவர் ஆபிராமுக்குத் தோன்றி: இந்த நாட்டை உன் சந்ததிக்குத் தருவோம் என்று அவனுக்குத் திருவாக்கு அருளினார். அவனோ, தனக்குத் தோன்றின ஆண்டவருக்கு அவ்விடத்தில் ஒரு பீடத்தைக் கட்டினான்.

பின் அவன் அவ்விடத்திலிருந்து பெத்தெலுக்குக் கிழக்கேயிருக்கும் மலைக்குப் போய், பெத்தெல் தனக்கு மேற்காகவும், ஆயி கிழக்காகவும் இருக்க, அங்கே கூடாரம் அடித்தான். அவ்விடத்திலும் ஆண்டவருக்கு ஒரு பீடத்தைக் கட்டி அவருடைய திருப் பெயரைத் தொழுதான். அதன்பின் ஆபிராம் மீண்டும் நடந்து தெற்கு நோக்கிச் சென்றான்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 12-13, 18-19, 20 & 22 (பல்லவி : 12b)

பல்லவி : ஆண்டவர் தமது உரிமைப் பொருளாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்கள்.

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது.
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்ற
வர்கள்.
13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார், ஆதாமின் மக்கள் எல்லாரையும்
பார்க்கிறார். பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை
நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில் அவர்களுக்கு
உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது: அவரே நமக்கு
உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக: நாங்கள் உம்மை நம்பி
யிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் இஸ்ராயேலைத் தம் திருமுன்னின்று தள்ளிவிட்டார். யூதா கோத்திரம் மட்டுமே எஞ்சியிருந்தது.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்

17: 5-8, 13-15a, 18

அந்நாட்களில்:

சல்மனசார் இஸ்ராயேல் நாடெங்கும் தன் படையுடன் சுற்றி வந்து சமாரியாவைத் தாக்கி, அதை மூன்று ஆண்டுகளாக முற்றுகையிட்டான். ஓசேயின் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் அசீரிய அரசன் சமாரியாவைப் பிடித்து, இஸ்ராயேலரை அசீரியா நாட்டிற்குச் சிறைப்பிடித்துக் கொண்டுபோய், கோசான் நதியோரத்திலுள்ள மேது நாட்டின் நகர்களான ஆலாயிலும் காபோரிலும் அவர்களைக் குடியேறக் கட்டளையிட்டான்.

இஸ்ராயேல் மக்கள் தங்களை எகிப்து நாட்டினின்றும், அந்நாட்டு அரசன் பாரவோனின் ஆதிக்கத்தினின்றும் விடுவித்திருந்த தங்கள் கடவுளான ஆண்டவருக்கு எதிராய்ப் பாவம் செய்து பிற தெய்வங்களைத் தொழுது வந்தனர். மேலும் ஆண்டவர் இஸ்ராயேல் மக்களின் பொருட்டு அழித்திருந்த புறவினத்தாரின் இழிவான பழக்கவழக்கங்களின்படி நடந்துவந்தனர். இதனாலேயே இவை நிகழ்ந்தன.

ஆண்டவர் எல்லா இறைவாக்கினர், திருக்காட்சியாளர்கள் மூலமாயும் இஸ்ராயேலிலும் யூதாவிலும், "நீங்கள் இத்தகாத வழிகளை விட்டு மனம் திரும்புங்கள். நாம் உங்கள் முன்னோருக்கு அளித்ததும், நம் அடியார்களாகிய இறைவாக்கினரை அனுப்பிச் சொன்னதுமான முறையின்படி நம் கற்பனைகளையும், சடங்கு முறைகளையும் கைக்கொண்டு நடங்கள்" என்று திட்டவட்டமாய் எச்சரித்துக் கொண்டிருந்தார். ஆனால், அவர்கள் அதற்குச் செவி கொடுத்ததே இல்லை. ஆண்டவரான கடவுளுக்கு அடிபணிய மனமில்லாத தங்கள் முன்னோரைப்போல் தாங்களும் வணங்காக் கழுத்தினர் ஆயினர். மேலும் ஆண்டவரின் சட்டங்களையும், தங்கள் முன்னோரோடு அவர் செய்திருந்த உடன்படிக்கையையும், தங்களுக்கு அவர் விடுத்த எச்சரிக்கைகளையும் புறக்கணித்தனர். வீணான வழிகளைப் பின்பற்றி வீணராகி, தங்களைச் சுற்றிலுமிருந்த இனத்தாரைப் பின்பற்றி ஆண்டவர் கட்டளையிட்டு விலக்கியிருந்தவற்றையே செய்துவந்தனர்.

ஆகையால், ஆண்டவர் இஸ்ராயேலின்மேல் மிகவும் சினமுற்று, அவர்களைத் தன் திருமுன் நின்றும் தள்ளிவிட்டார். யூதா கோத்திரத்தார் மட்டுமே இன்னும் எஞ்சியிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 59 : 1, 2-3, 10-12 (பல்லவி : 5b)

பல்லவி : உமது வலக்கரத்தால் எங்களுக்குத் துணை செய்யும்,
ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1 இறைவா, நீர் எங்களைப் புறக்கணித்தீர். எங்களைச் சிதறடித்தீர். எங்கள் மீது சினம்கொண்டீர். மீண்டும் எங்களுக்கு வாழ்வளித்தருளும். பல்லவி

2 நாட்டை அதிரச் செய்தீர். அது பிளவுண்டுபோகச் செய்தீர். அதன் வெடிப்புக்களைச் சரிப்படுத்தும். ஏனெனில், அது ஆட்டங்கொள்கிறது.
3 கொடுமைகள் பல உம் மக்கள்மீது விழச் செய்தீர், மயக்கமுற்று விழச் செய்யும் மதுபானத்தை நாங்கள் குடிக்கச்செய்தீர். பல்லவி

10 இறைவனே நீர்தாம் அன்றோ; ஆனால் எங்களைக் கைவிட்டீரே!
இறைவனே, நீர் இனி எங்கள் படைகளோடு செல்லப்போவதில்லையே.
11 என் எதிரியை மேற்கொள்ள எனக்கு உதவியளித்தருளும். ஏனெனில்,
மனிதன் தரும் உதவி வீண்.
12 கடவுள் துணையால் வீரத்துடன் போராடுவோம்: நம் எதிரிகளை அவரே
நசுக்கிவிடுவார்.

பல்லவி

அல்லேலூயா — எபி. 4:12

அல்லேலூயா. இறைவன் அருள்வாக்கு உயிருள்ளது, ஆற்றல் மிக்கது. ஆன்மாவின் உள்ளாழத்தை, ஆவியின் உள்ளாழத்தை ஊடுருவுகிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7: 1-5

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"நீங்கள் தீர்ப்புக்குள்ளாகாதபடி தீர்ப்பிடாதீர்கள். எந்தத் தீர்ப்பு இடுகிறீர்களோ அந்தத் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.

உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணில் உள்ள துரும்பைப் பார்ப்பதேன்? உன் சகோதரனை நோக்கி, 'உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க விடு' என்று நீ எப்படிச் சொல்லலாம்? இதோ! உன் கண்ணிலே விட்டம் இருக்கிறதே. வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி; பின்பு உன் சகோதரன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க நன்றாகக் கண் தெரியும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உனக்கும் எனக்குமிடையே வாக்குவாதம் வேண்டாம்: நாம் சகோதரர் அல்லரோ?**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** *13: 2,5-18*

ஆபிராம் பொன்னும் வெள்ளியுமாகத் திரளான செல்வங்களைக் கொண்டிருந்தான். ஆபிராமுடன் இருந்த லோத்துக்கு ஆட்டு மந்தைகளும், மாட்டு மந்தைகளும், கூடாரங்களும் இருந்தன. அவர்கள் இருவரும் ஒன்றாய்க் குடியிருப்பதற்குப் போதுமான இடம் இல்லை. உண்மையிலே அவர்களுடைய சொத்து மிகுதியாயிருந்தமையால் அவர்கள் சேர்ந்து வாழக் கூடாமல் போயிற்று. எனவே, ஆபிராமின் மந்தை மேய்ப்பவருக்கும், லோத்தின் மந்தை மேய்ப்பவருக்குமிடையே (பிணக்குகள்) உண்டாயின. அக்காலத்தில் கானானையரும் பெரேசையரும் அதே நாட்டில் குடியிருந்தனர்.

அது கண்டு ஆபிராம் லோத்தை நோக்கி: "உனக்கும் எனக்கும், உன் மேய்ப்பர்களுக்கும் என் மேய்ப்பர்களுக்குமிடையே வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர் அல்லரோ? அதோ, நாடு முழுவதும் கண்முன் இருக்கிறது. தயவு செய்து என்னைவிட்டுப் பிரிந்து போ. நீ இடப்பக்கம் போனால், நான் வலப்பக்கம் போகிறேன்; நீ வலப்பக்கம் போக விரும்பினால், நான் இடப்பக்கம் செல்கிறேன்" என்றான்.

இது கேட்டு லோத் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான்; யோர்தான் நதியின் இரு புறத்திலுமுள்ள இடம் முழுவதும் (நீர்) வளமுள்ளதாய் இருக்கக் கண்டான். உண்மையில் ஆண்டவர் சொதோம், கொமோரா (என்னும் நகரங்களை) அழிக்குமுன்பே, அந்நாடு ஆண்டவருடைய இன்ப வனத்தைப் போலவும், செகோர் பக்கம் செல்பவர்களுக்கு எகிப்தைப் போலவும் தோற்றமளிக்கும். ஆகையால் லோத் யோர்தான் நதியின் இரு புறத்திலுமுள்ள நாட்டைத் தேர்ந்துகொண்டு, கீழ்த்திசையை விட்டுப் புறப்பட்டான். இவ்வாறு அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தனர். ஆபிராம் கானான் நாட்டில் குடியிருந்தான். லோத்தோ யோர்தான் நதிக்கு அருகிலிருந்த நகரங்களில் வாழ்ந்து, இறுதியில் சொதோம் நகரில் குடியேறினான். சொதோம் நகர மக்கள் மிகக் கொடியவரும், ஆண்டவர் முன்பாகப் பெரும் பாவிகளுமாய் இருந்தனர்.

லோத் பிரிந்து போன பின்பு ஆண்டவர் ஆபிராமை நோக்கி: நீ கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கிப் பார். நீ காண்கிற

இந்தப் பூமி முழுவதையும் நாம் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்போம். அன்றியும் உன் சந்ததியைப் பூமியின் புழுதிபோலப் பெருகச் செய்வோம். மனிதர்களுள் ஒருவன் பூமியின் புழுதியை எண்ணக் கூடுமாயின், அவனால் உன் சந்ததியாரையும் எண்ணக் கூடுவதாகும். நீ எழுந்துபோய், நாட்டை நீளவசமாயும் அகல வசமாயும் நடந்துபார். ஏனென்றால், அதனை உனக்குத் தரவிருக்கிறோம் என்றருளினார்.

ஆபிராம் தன் கூடாரத்தைப் பெயர்த்து எபிரோனில் இருக்கும் மாம்பிரே என்ற பள்ளத்தாக்கிற்கு அண்மையிலே குடியேறினான். அவ்விடத்திலும் ஆண்டவருக்கு ஒரு பீடத்தைக் கட்டினான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 14 : 2-3ab, 3cd-4ab, 5 (பல்லவி : 1 a)

பல்லவி : ஆண்டவரே, உம் இல்லத்தில் தங்கி வாழ்வோர் யார் ?

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன், இதயத்தில் நேரியவை நினைப்பவன்.
3 நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன். பல்லவி

அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன் :
4 தீயோரை இழிவாகக் கருதுபவன், ஆண்டவருக்கு அஞ்சுவோரை, உயர்வாக மதிப்பவன். பல்லவி

5 தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன் : மாசற்றவர்களுக்கு எதிராகக் கைக்கூலி வாங்காதவன். இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்திடுவான். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

நம் வாக்குறுதியின் பொருட்டும், நம் ஊழியன் தாவீதின் பொருட்டும், நான் இந்நகரைப் பாதுகாத்து மீட்பேன்.

**அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்**

19: 9b-11, 14-21, 31-35a, 36

அந்நாட்களில்:

அசீரியா அரசனாகிய செனக்கெரிபு எசேக்கியாவிடம் தூதுவரை அனுப்பி, "நீங்கள் போய் யூதா அரசன் எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியதாவது: 'உம் கடவுளை நம்பி ஏமாற்றம் அடையாதீர். யெருசலேம் அசீரிய அரசனின் கையில் பிடிபடாது என்று நீர் எண்ணவும் வேண்டாம். அசீரிய அரசர்கள் எல்லா நாடுகளையும் அழித்து நிர்மூலமாக்கியதை நீர் அறிவீர். நீர் மட்டும் தப்பிவிட முடியுமோ?' என்றான்.

எசேக்கியாசு தூதுவர்களின் கையிலிருந்த ஓலையை வாங்கி வாசித்த பின்பு, ஆலயத்திற்குச் சென்று ஆண்டவர் திருமுன் அவ்வோலையை விரித்து வைத்தான். மேலும் ஆண்டவரை நோக்கி, "கெருபீம்களின்மேல் வீற்றிருக்கும் ஆண்டவரே, இஸ்ராயேலின் கடவுளே, நீர் இவ்வுலகத்து அரசர்களுக்கெல்லாம் கடவுளாய் இருக்கின்றீர். இவ்விண்ணையும் மண்ணையும் படைத்தவர் நீரே. ஆண்டவரே, செவிசாய்த்து என் வேண்டுதலைக் கேளும். உம் திருக்கண்களை என்மீது திருப்பியருளும். என்றும் வாழும் ஆண்டவரை எங்கள் முன்பாகப் பழித்துரைக்கும்படி சொல்லியனுப்பிய செனக்கெரிபின் வார்த்தைகளைக் கேளும். ஆண்டவரே, அசீரிய அரசர்கள் எல்லாம் மக்களையும் அவர்கள் நாடுகளையும் அழித்து, அவர்களின் தெய்வங்களையும் நெருப்பிலிட்டனர். அவை உண்மைக் கடவுளல்ல, மனிதன் வனைந்த கைவேலையான மரமும் கல்லுமே. எனவேதான் அவர்கள் அவற்றை அழிக்க முடிந்தது. எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, உலக நாடுகளுக்கெல்லாம் நீர் ஒருவரே கடவுள்; நீர் ஒருவரே ஆண்டவர் என்று அறியும் பொருட்டு, அவனுடைய கையினின்று எங்களைக் காப்பீராக" என்று வேண்டினான்.

அப்பொழுது ஆமோசின் மகன் இசையாசு எசேக்கியாவிடம் ஆள் அனுப்பிச் சொன்னதாவது: "இதோ, இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் சொல்வதாவது: 'அசீரிய அரசன் செனக்கெரிபைப்பற்றிய உன் வேண்டுதலைக் கேட்டோம்.' அவனைக் குறித்து ஆண்டவர் சொல்கிறதாவது: 'சீயோனின் மகளான கன்னிப்பெண் உன்னை இகழ்ந்தாள்; உன்னை எள்ளி நகையாடினாள். யெருசலேமின் மகள் பின் நின்று உன்னைப் பரிகசித்தாள். ஏனெனில் எஞ்சியோர் யெருசலேமிலிருந்து வெளியேறுவர்; உயிர் பிழைத்தோர் சீயோன் மலையினின்று புறப்படுவர்: சேனைகளின் ஆண்டவரது அளப்பெரிய அன்பே இவற்றை எல்லாம் செய்து முடிக்கும்.

ஆதலால் ஆண்டவர் அசீரியா வேந்தனைக் குறித்துச் சொல்கிற தாவது: இந்நகரில் அவன் காலடி வைக்கப்போவதில்லை. அதன்மேல் அம்பும் எய்யமாட்டான். ஒரு கேடயமாவது அதனுள் வராது. அதைச் சுற்றி முற்றுகையிட மாட்டான். அவன் வந்த வழியே திரும்பிப் போவான். இந்நகருக்குள் நுழையவே மாட்டான். இந்நகரை நாம் பாது காப்போம். வாக்குறுதியின் பொருட்டும், நம் ஊழியன் தாவீதின் பொருட்டும் நாம் இந்நகரை மீட்போம் என்கிறார் ஆண்டவர்" என்பதாம்.

அன்றிரவில் நிகழ்ந்ததாவது: ஆண்டவருடைய தூதர் வந்து அசீரியரின் பாளையத்தில் இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் பேரைக் கொன்று குவித்தார். அசீரிய அரசன் செனக்கெரிப் விடியற் காலையில் எழுந்த போது, அங்கு மடிந்து கிடந்த பிணங்களைக் கண்டு, உடனே அவன் அங்கிருந்து திரும்பிச் சென்றான். திரும்பிச் சென்று அவன் நினிவே நகரில் தங்கி இருந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 47 : 1-2a, 2b-3, 9-10 (பல்லவி : 8d)

பல்லவி : இறைவன் தம் நகரை என்றென்றைக்கும் நிலைநிறுத்துகிறார்.

1 ஆண்டவர் மகத்துவமிக்கவர், நம் இறைவனின் நகரில் மிகுந்த புகழ்ச்சிக் குரியவர்.
2 அவர் தம் மலை புனிதமானது, புகழ்மிக்கது. உலகனைத்திற்கும் மகிழ்ச்சியாய் விளங்குவது. பல்லவி

சீயோன் மலை வடகோடியில் உள்ளது. பேரரசரின் நகரம் அதுவே.
3 அதன் கொத்தளங்களில் கடவுள் உறைகின்றார். அசைக்க முடியாத பாதுகாப்பாய் விளங்குகின்றார். பல்லவி

9 இறைவா, உம் இரக்கத்தைத் தியானித்தோம்; உம் ஆலயத்தில் அதைச் சிந்தனை செய்தோம்.
10 இறைவா, உமது பெயரைப்போலவே உமது புகழும் பூமியின் கடையெல்லை வரை எட்டுகின்றது. உமது வலக்கரம் நீதியால் நிரம்பியுள்ளது. பல்லவி

## அல்லேலூயா

அரு. 8 : 12

அல்லேலூயா. "நானே உலகின் ஒளி," என்கிறார் ஆண்டவர்: "என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்களுக்குப் பிறர் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

7: 6, 12-14

அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறியதாவது :

"பரிசுத்தமானதை நாய்களுக்குப் போடவேண்டாம். உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் எறியவும் வேண்டாம்; எறிந்தால், அவை அவற்றைக் காலால் மிதித்து உங்கள்மேல் பாய்ந்து பீறிவிடலாம்.

ஆகையால் உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் இதுவே.

இடுக்கான வாயில்வழியே நுழையுங்கள். ஏனெனில், அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது; வழி பரந்தது; அதன் வழியே நுழைபவரும் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் எவ்வளவோ ஒடுக்கமானது; வழி எவ்வளவோ இடுக்கானது. இதைக் கண்டுபிடிப்பவரும் சிலரே."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆபிராம் கடவுளை விசுவசித்தான் ; அது அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டது. ஆண்டவர் அவனோடு உடன்படிக்கை செய்தார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 15: 1-12, 17-18

அந்நாட்களில் :

ஆண்டவருடைய திருவாக்கு ஆபிராமுக்குக் காட்சியில் உண்டாகி, அஞ்சாதே, ஆபிராம், நாம் உன் அடைக்கலமும், மிகவும் சிறந்த உன் பரிசுமாய் இருக்கிறோம் என்றது. அதைக் கேட்டு, ஆபிராம் : ஆண்டவராகிய கடவுளே, அடியேனுக்கு நீர் என்ன தருவீர்? நான் பிள்ளையின்றிப்

போவேனே ! என் வீட்டு மேற்பார்வையாளனின் மகனுன இந்தத் தமாஸ் ஊராஞகிய எலியேசேர் தான் இருக்கிறுன் என்றுன். மீண்டும் ஆபிராம் : "நீர் எனக்கு மகப்பேறு அருளினீரில்லே. ஆதலால், இதோ, என் வீட்டில் பிறந்த ஊழியனே எனக்கு வாரிசாய் இருப்பான்" என்றுன்.

ஆண்டவருடைய திருவாக்கு அவனுக்கு உடனே உண்டாகி : இவன் உன் வாரிசு ஆகான். உனக்குப் பிறக்கும் புதல்வன்தான் உனக்கு வாரிசு ஆவான் என்று சொன்னது. பின் ஆண்டவர் அவனே வெளியே அழைத்துக் கொணடு போய் : நீ வானத்தை அண்ணுந்து பார். கூடுமாயின் விண்மீன்கள் எத்தனையென்று எண்ணிப் பார். உன் சந்ததி அவ்வளவு இருக்கும் என்றுர். ஆபிராம் கடவுளே விசுவசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

மீண்டும் அவர் அவனே நோக்கி : இந் நாட்டை உனக்குக் கொடுக்கும்படியாகவும், அதனே நீ உரிமையாக்கிக் கொள்ளும்படியாகவும் அல்லவா ஆண்டவராகிய நாம் 'ஊர்' என்னும் கல்தேயர் நகரிலிருந்து உன்னே வெளிக் கொணர்ந்தோம் என்றுர். அதற்கு அவன் : ஆண்டவராகிய கடவுளே, நான் இதனே உரிமையாக்கிக் கொள்வேனென்று எப்படி அறிவேன் ? என்று கேட்டான்.

ஆண்டவர் அவனுக்கு மறுமொழியாக : மூன்று வயதுக் கிடாரி ஒன்றும், மூன்று வயதுள்ள வெள்ளாடு ஒன்றும், மூன்று வயது ஆட்டுக் கிடாய் ஒன்றும், காட்டுப் புரு ஒன்றும், மாடப் புரு ஒன்றும் நம்மிடம் கொண்டு வா என்றுர். அவற்றையெல்லாம் அவன் கொண்டுவந்து, அவற்றை நடுவே வெட்டித் துண்டங்களே ஒன்றிற்கொன்று எதிராக வைத்தான். பறவைகளேயோ அவன் துண்டிக்கவில்லே. வானத்துப் பறவைகள் அந்த உடல்களின் மேல் வந்திறங்கின. அவற்றை ஆபிராம் துரத்திக்கொண்டிருந்தான்.

பின் சூரியன் மறையும் வேளேயில் ஆபிராமுக்கு அயர்ந்த தூக்கம் உண்டானது. பெரும் திகிலும் காரிருளும் அவனேச் சூழ்ந்துகொண்டன. சூரியன் மறைந்து காரிருள் உண்டானபின், புகைகின்ற ஒரு சூளேயும், மேற் சொல்லப்பட்ட துண்டங்களின் நடுவே உலாவி நின்ற நெருப்புமயமான ஒரு விளக்கும் காணப்பட்டன. அந்நாளிலே ஆண்டவர் ஆபிராமோடு உடன்படிக்கை செய்து : "எகிப்தின் நதிமுதல் யூஃப்ரத்தீஸ் மாநதிவரையிலுமுள்ள இந்த நாட்டை உன் சந்ததியாருக்குத் தருவோம்" என்றுர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 104 : 1-2, 3-4, 6-7, 8-9 (பல்லவி :8a)

பல்லவி : ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவு கூர்கின்றார்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள் : அவர் தம் திருப் பெயரைச் சொல்லி
வழிபடுங்கள். எல்லா இனத்தாரும் அவருடைய செயல்களை அறியச்
செய்யுங்கள்.
2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள் ; இசைக் கருவி மீட்டுங்கள் : அவர்
செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள். பல்லவி

3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள் : ஆண்டவரைத்
தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.
4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள் : அவரது திருமுகத்தை
என்றும் தேடுங்கள். பல்லவி

6 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள் : அவருடைய
புதுமைகளையும் அவர் உரைத்த நீதித்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.
7 ஆண்டவரே நம் கடவுள் : அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது.
பல்லவி

8 தம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவு கூர்கின்றார் : ஆயிர
மாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த வாக்குறுதியை அவர் நினைவு
கூர்கின்றார்.
9 ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை :
ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை நூலில் எழுதப்பட்டவை எல்லாம் அரசன் மக்களுக்குப் படித்துக்காட்டி, ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்துகொண்டான்.*

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்

*22: 8-13; 23: 1-3.*

*அந்நாட்களில் :*

பெரிய குரு எல்கியாசு கணக்கனை சாபானை நோக்கி, "ஆலயத்தில் ஒரு சட்ட நூலைக் கண்டெடுத்தேன்" என்று சொல்லி, அந்நூலைச் சாபானிடம் கொடுக்க, அவனும் அதைப் படித்தான். பின் கணக்கன் சாபான் அரசனிடம் வந்து தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஆணையைப்பற்றிக் கூறி, "அரசே, உம் அடியார்கள் ஆலயத்தில் கிடைத்த பணத்தைச் சேகரித்து அதை வேலையாட்களுக்குக் கொடுக்கும்படி ஆலயத்தை மேற்பார்ப்பவரிடம் கொடுத்தனர்" என்று சொன்னான். மேலும், "குரு எல்கியாசு என்னிடம் ஒரு நூல் கொடுத்துள்ளார்" என்று கூறி, சாபான் அதை அரசனுக்குமுன் படித்துக் காட்டினான். அரசன் ஆண்டவருடைய சட்டநூலின் வாக்கியங்களைக் கேட்டதும் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டான்.

பின் குரு எல்கியாசையும், சாபானின் மகன் அயிக்காமையும், மிக்காவின் மகன் அக்கோபோரையும், கணக்கன் சாபானையும், அரசனின் ஊழியன் அசாயியாசையும் நோக்கி, "நீங்கள் போய் கண்டெடுக்கப்பட்ட நூலில் எழுதியுள்ளதன்படி, என்னைப் பற்றியும் மக்களைப் பற்றியும் யூதாவின் மக்கள் எல்லாரையும் பற்றியும் ஆண்டவர் திருவுளம் என்ன என்று விசாரியுங்கள். ஏனெனில் அந்நூலில் நமக்காக எழுதப்பட்டுள்ளவற்றிற்கு நம் முன்னோர் செவி கொடுக்கவும் இல்லை; அவற்றின்படி நடக்கவும் இல்லை. எனவே ஆண்டவர் நம்மேல் மிகுந்த கோபம் கொண்டுள்ளார்" என்றார்.

தங்களுக்குச் சொல்லப்பட்டதை அவர்கள் அரசனுக்கு அறிவித்தனர். அவன் அழைப்புக்கிணங்கி யூதாவிலும் யெருசலேமிலுமுள்ள பெரியோர்கள் யாவரும் அவனிடம் வந்து கூடினர். அப்பொழுது அரசனும் யூதா மனிதர் அனைவரும் யெருசலேம் குடிகள் அனைவரும் குருக்களும் இறைவாக்கினர்களும், சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் ஆண்டவரின் ஆலயத்திற்கு வந்தனர். அரசனே ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை நூலில் எழுதப்பட்டிருந்த யாவற்றையும் அவர்கள் கேட்கும்படி படித்தான். அரசன் படியில் நின்றுகொண்டு ஆண்டவரைப் பின்பற்றி நடப்பதாகவும், அவர் கட்டளைகளையும் சட்டங்களையும் சடங்குமுறைகளையும்

முழு இதயத்தோடும், முழு ஆன்மாவோடும் கடைப்பிடிப்பதாகவும், அந்நூலில் உடன்படிக்கையாக எழுதப்பட்டிருந்த அனைத்தையும் நிறைவேற்றுவதாகவும் ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்து கொண்டான். மக்களும் அவ்வுடன்படிக்கைக்கு உடன்பட்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 33, 34, 35, 36, 37, 40 (பல்லவி : 33a)

பல்லவி: உம் நியமங்கள் காட்டும் வழியை,
ஆண்டவரே, எனக்குக் காட்டியருளும்.

33 ஆண்டவரே, உம் நியமங்கள் குறிப்பிடும் வழியை எனக்குக் காட்டி
யருளும் : நான் அவற்றை அப்படியே கடைப்பிடிப்பேன். பல்லவி

34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும் : அதை நான்
முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். பல்லவி

35 உம் கற்பனைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும் : அதுவே என்
இன்பம். பல்லவி

36 உம் ஆணைகளின்பால் என் இதயம் திருப்பியருளும் : இம்மைப் பயனை
நாடவிடாதேயும். பல்லவி

37 பயனற்றதின்மீது பார்வையைச் செலுத்தாதபடி என் கண்களைத் திருப்பி
விடும் : நீர் காட்டும் வழியின் வாயிலாய் எனக்கு வாழ்வளித்தருளும்.
பல்லவி

40 உம் கட்டளைகளைப் பெரிதும் விரும்பினேன். உமது நீதியின்படி எனக்கு
வாழ்வளித்தருளும். பல்லவி

அல்லேலூயா

அரு. 15 : 4, 5b

அல்லேலூயா. நான் உங்களில் நிலைத்திருப்பதுபோல் நீங்களும் என்னில் நிலைத்திருங்கள் : என்னுள் நிலைத்திருப்பவன் மிகுந்த கனி தருவான், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கனிகளைக் கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 15-20

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

" போலித் தீர்க்கதரிசிகள்மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடம் வருகிறார்கள்; உள்ளுக்கோ பறித்துச் செல்லும் ஓநாய்கள். அவர்கள் கனிகளைக் கொண்டே அவர்களை அறிந்துகொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்புதர்களில் அத்திப் பழங்களையோ பறிப்பாருண்டோ? அவ்வண்ணமே, நல்ல மரமெல்லாம் நல்ல பழம் கொடுக்கும்; தீய மரமோ தீய பழம் கொடுக்கும். நல்ல மரம் தீய பழம் கொடாது. தீய மரமும் நல்ல பழம் கொடாது.

நல்ல பழம் கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப் படும். ஆதலால், அவர்கள் கனிகளைக்கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆகார் ஆபிராமுக்கு ஒரு புதல்வனைப் பெற்றாள். இவனுக்கு அவன் இஸ்மாயில் எனப் பெயரிட்டான்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 16: 1-12, 15-16

அந்நாட்களில் :

ஆபிராமின் மனைவி சாறாயிக்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால், அவளுக்கு எகிப்து நாட்டினளான ஆகார் என்னும் பெயர்கொண்ட வேலைக்காரி ஒருத்தி இருந்தாள். சாறாயி தன் கணவனை நோக்கி : இதோ,

நான் பிள்ளை பெறுவண்ணம் ஆண்டவர் என் கருப்பத்தை அடைத்திருக்கிறார். நீர் என் வேலைக்காரியோடு சேரும். அவள் மூலமாவது நான் பிள்ளைகளை அடைவேனாக என்றாள். அவன் அவள் வேண்டுகோளுக்கு இணங்கினான். கானான் நாட்டில் அவர்கள் பத்தாண்டுகள் குடியிருந்த பின் (சாறாயி) எகிப்து நாட்டினளான ஆகார் என்னும் தன் வேலைக்காரியை அழைத்து, அவளைத் தன் கணவனுக்கு மனைவியாகக் கொடுத்தாள். அவன் அவளோடு கூடி வாழ்ந்தான். பின்னர் அவள் தான் கருவுற்றிருக்கக் கண்டு, தன் தலைவியை அலட்சியம் பண்ணினாள்.

அது கண்டு சாறாயி ஆபிராமை நோக்கி: எனக்கு நீர் அநீதி செய்து வருகிறீரே! நான் என் அடிமைப் பெண்ணை உமது மடியிலே கொடுத்திருக்க, அவள் தான் கருவுற்றிருப்பதை அறிந்தவுடன் என்னைப் பழிக்கத் தொடங்கி விட்டாளே! ஆண்டவர் உமக்கும் எனக்கும் நடுவராயிருந்து நீதி வழங்கக் கடவார் என்றாள். அதற்கு ஆபிராம்: இதோ, உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள். உன் மனப்படி அவளை நடத்துவாய் என்றான். பின்பு, சாறாயி தன்னைக் கண்டிப்பாய் நடத்தியது கண்டு அவள் ஓடிப் போனாள்.

அப்பொழுது ஆண்டவருடைய தூதர் அவளைப் பாலைவனத்திலே சூருக்குப் போகும் வழியருகே உள்ள நீரூற்றண்டையில் கண்டு: சாறாயியின் அடிமைப் பெண்ணாகிய ஆகாரே, நீ எங்கிருந்து வந்தாய்? எங்கே போகிறாய் என்று கேட்க, அவள்: நான் என் தலைவி சாறாயியை விட்டு ஓடிப் போகிறேன் என்று பதில் கூறினாள்.

ஆண்டவருடைய தூதர் அவளைப் பார்த்து: உன் தலைவியிடம் நீ திரும்பிப் போய் அவளுக்கு அடங்கியிரு என்றார். மேலும் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் விருத்தியடையச் செய்வோம். அது எண்ண முடியாததாய் இருக்கும் என்று சொன்னார். மீண்டும் இதோ, கருவுற்றிருக்கிற நீ ஒரு புதல்வனைப் பெறுவாய். உன் இன்னலைக் கண்டு ஆண்டவர் இரங்கினதனாலே, அவனுக்கு இஸ்மாயில் என்று பெயரிடுவாயாக. அவன் கொடும் குணமுள்ள மனிதனாய் வளர்வான். அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் ஓங்கியிருக்கும். தன் சகோதரர் அனைவரும் வாழ்ந்து வரும் இடத்தில் அவர்களுக்கெதிராக அவன் குடியிருப்பான் என்றார்.

பின் ஆகார் ஆபிராமுக்கு ஒரு புதல்வனைப் பெற்றாள். இவனுக்கு அவன் இஸ்மாயில் என்று பெயரிட்டான்: ஆகார் இஸ்மாயிலைப் பெற்ற போது ஆபிராமுக்கு வயது எண்பத்தாறு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 16: 6b-12, 15-16

சாருயி தன்னைக் கண்டிப்பாய் நடத்தியது கண்டு ஆகார் ஓடிப் போனாள். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் அவளைப் பாலை வனத்திலே சூருக்குப் போகும் வழியருகே உள்ள நீரூற்றண்டையில் கண்டு: சாருயியின் அடிமைப் பெண்ணாகிய ஆகாரே, நீ எங்கிருந்து வந்தாய்? எங்கே போகிறாய்? என்று கேட்க, அவள்: நான் என் தலைவி சாருயியை விட்டு ஓடிப் போகிறேன் என்று பதில் கூறினாள்.

ஆண்டவருடைய தூதர் அவளைப் பார்த்து: உன் தலைவியிடம் நீ திரும்பிப் போய் அவளுக்கு அடங்கியிரு என்றார். மேலும் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் விருத்தியடையச் செய்வோம். அது எண்ண முடியாததாய் இருக்கும் என்று சொன்னார். மீண்டும்: இதோ, கருவுற்றிருக்கிற நீ ஒரு புதல்வனைப் பெறுவாய். உன் இன்னலைக் கண்டு ஆண்டவர் இரங்கினதனாலே, அவனுக்கு இஸ்மாயில் என்று பெயரிடுவாயாக. அவன் கொடும் குணமுள்ள மனிதனாய் வளர்வான். அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் ஓங்கியிருக்கும். தன் சகோதரர் அனைவரும் வாழ்ந்து வரும் இடத்தில் அவர்களுக்கெதிராக அவன் குடியிருப்பான் என்றார்.

பின் ஆகார் ஆபிராமுக்கு ஒரு புதல்வனைப் பெற்றாள். இவனுக்கு அவன் இஸ்மாயில் என்று பெயரிட்டான்: ஆகார் இஸ்மாயிலைப் பெற்ற போது ஆபிராமுக்கு வயது எண்பத்தாறு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

பதிலுரைப் பாடல்

சங். 105: 1-2, 3-4a, 4b-5. (பல்லவி: 1a)

பல்லவி: **ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில், அவர் நல்லவர்.**

1 ஆண்டவரைப் போற்றுங்கள். ஏனெனில், அவர் நன்மை மிகுந்தவர்.
என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.
2 ஆண்டவர் செய்த வல்லமைமிக்க செயல்களை யார் எடுத்துரைக்க இயலும்?
அவருடைய புகழனைத்தையும் யார் விளம்ப இயலும்? பல்லவி

3 அவர் தந்த கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் பேறு பெற்றோர்:
நீதியானதை எந்நாளும் செய்பவர் பேறுபெற்றோர்.
4 ஆண்டவரே, நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப என்னை நினைவுகூரும். பல்லவி

4 உமது உதவியை எனக்குத் தாரும். அப்போது உம்மால் தேர்ந்தெடுக்கப்
5 பட்டவர்களுக்குள்ள பெரும் பேற்றைக் கண்டு நான் இன்புறுவேன் : உம்
மக்களின் மகிழ்ச்சியைக் கண்டு நானும் மகிழ்ச்சியுறுவேன் : உம் உரிமைப்
பேறான மக்களோடு நான் பெருமை அடைவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

அரசன் யோவாக்கினையும் வலிமையுள்ளவர் அனைவரையும் சிறைப்படுத்திப் பபிலோனுக்குக் கொண்டு சென்றான்.

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 24: 8-17

யோவாக்கின் அரசனான போது அவனுக்கு வயது பதினெட்டு. யெருசலேமில் மூன்று மாதம் அவன் அரசாண்டான். அவன் தாயின் பெயர் நோகெஸ்தா. இவள் யெருசலேமைச் சேர்ந்த எல்நாத்தான் என்பவனுடைய மகள். யோவாக்கின் தன் தந்தை செய்தபடியே ஆண்டவர் திருமுன் பாவம் புரிந்தான்.

அக்காலத்தில் பபிலோனிய அரசன் நபுக்கொதொனோசோரின் படைவீரர் யெருசலேம் நகர்மேல் போர்தொடுத்து வந்து நகரை முற்றுகை யிட்டனர். பபிலோனிய அரசன் நபுக்கொதொனோசோர் தன் மக்களோடு நகரைப் பிடிக்க வந்தான். அப்போது யூதாவின் அரசன் யோவாக்கினும் அவன் தாயும் அவன் ஊழியர்களும் பெருமக்களும் அண்ணகர்களும் பபிலோன் அரசனிடம் சரணடைந்தனர். பபிலோன் அரசனும் அவனை ஏற்றுக்கொண்டான். இது நபுக்கொதொனோசோருடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில் நிகழ்ந்தது.

பின்பு அவன் ஆலயத்திலும் அரண்மனையிலும் இருந்த செல்வங்களை யெல்லாம் எடுத்துச்சென்றான். ஆண்டவர் சொன்ன வாக்கின்படி ஆலயத்தில் இஸ்ராயேலின் அரசன் சாலமோன் செய்துவைத்திருந்த எல்லாப் பொன் பாத்திரங்களையும் உடைத்தெறிந்தான். மேலும், யெருசலேம் நகர மக்கள் அனைவரையும், நகரப் பெருமக்கள், ஆற்றல் வாய்ந்த பதினாயிரம் படை வீரர்கள், சிற்பக் கலைஞர், கொல்லர் ஆகியோரையும் சிறைப்பிடித்துப் பபிலோன் நகருக்குக் கொண்டு சென்றான். நாட்டில் உள்ள ஏழை மக்கள் மட்டும் தங்கள் ஊரில் விடப் பட்டனர். இதுவுமன்றி, அவன் யோவாக்கினையும், அவன் தாயையும் மனைவியரையும் அண்ணகர்களையும் பபிலோனுக்குச் சிறைப்படுத்திக் கொண்டுசென்றான். நாட்டின் நீதிபதிகளையும் யெருசலேமிலிருந்து பபிலோனுக்குக் கைதிகளாகக் கொண்டுபோனான். மேலும், உடல் வலிமை

யுள்ள ஏழாயிரம் பேரையும், சிற்பக் கலைஞரும் கொல்லருமாகிய ஆயிரம் பேரையும், ஆற்றல்மிக்கவர்களையும், போர் வீரர்களையும் அவன் சிறைப் படுத்திப் பபிலோனுக்குக் கொண்டுசென்றான்.

யோவாக்கினுக்குப் பதிலாக அவனுடைய சிற்றப்பன் மாத்தானியாசை அரசனாக்கி அவனுக்கு செதேசியாசு என்ற மறு பெயரை இட்டான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 78: 1-2, 3-5, 8-9 (பல்லவி: 9 bc)

பல்லவி: ஆண்டவரே, உம் திருப்பெயரின் மகிமைக்காக எங்களுக்கு விடுதலையளித்தருளும்.

1 இறைவனே, புற இனத்தார் உமது சொந்த நாட்டின்மீது படையெடுத்
தார்கள். உமது திருக்கோயிலைத் தீட்டுப்படுத்தினார்கள். யெருசலேமைத்
தரைமட்டமாக்கினார்கள்.
2 உம் அடியார்களின் பிணங்களை வானத்துப் பறவைகளுக்கு இரையாக்கி
னார்கள். உம் புனிதர்களின் உடல்களை விலங்குகளுக்கு உணவாகத்
தந்தார்கள். பல்லவி

3 அவர்களுடைய இரத்தத்தை எருசலேமைச் சுற்றித் தண்ணீர்போல்
இறைத்தார்கள். அவர்களை அடக்கம் செய்வதற்குக் கூட யாருமில்லை.
4 எங்கள் அயலாரின் நிந்தனைக்கு நாங்கள் ஆளானோம்: எங்களைச்
சூழ்ந்துள்ள மக்களின் ஏளனத்திற்கும் நகைப்புக்கும் உள்ளானோம்.
5 ஆண்டவரே, இன்னும் எவ்வளவு காலத்திற்கு? என்றென்றும் சினம்
கொள்வீரோ? உமது எரிச்சல் நெருப்புப்போல் எரிந்து கொண்டிருக்
குமோ? பல்லவி

8 முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள்மேல் சுமத்தாதேயும். உமது
இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக. ஏனெனில், நாங்கள்
துயரத்துக்குள்ளானோம். பல்லவி

9 எங்கள் மீட்பரான இறைவா, உம் திருப்பெயரின் மகிமைக்காக எங்க
ளுக்குத் துணை செய்யும், உம்பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை
மன்னித்து எங்களுக்கு விடுதலையளித்தருளும். பல்லவி

அல்லேலூயா

அரு. 14 : 23

**அல்லேலூயா.** ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான் ; என் தந்தையும் அவனிடம் அன்பு கூர்வார் ; நாங்களும் அவனிடம் வந்தருள்வோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கற்பாறை மீதும், மணல் மீதும் கட்டப்பட்ட வீடுகள்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 7 : 21-29

**அக்காலத்தில் :** யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான். அந்நாளில் பலர் என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் தீர்க்கதரிசனம் கூறவில்லையா ? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா ? உம் பெயரால் புதுமை பல செய்யவில்லையா?' என்பர். அதற்கு, 'உங்களை நான் அறிந்ததேயில்லை. நெறி கெட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள்' என்று அவர்களுக்கு நான் வெளிப்படையாகச் சொல்லுவேன்.

ஆகவே, நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது. ஆனால், அது விழவில்லை. ஏனென்றால், கற்பாறையின்மேல் ஊன்றியிருந்தது.

நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய மூடனுக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின் மேல் மோதியது. அது விழுந்தது. பெரிது அதன் அழிவு !"

யேசு இவ்வார்த்தைகளைச் சொல்லி முடித்ததும் மக்கள் அவருடைய போதனையைக் கேட்டு மலைத்துப் போயினர். ஏனெனில், அவர் மறைநூல் அறிஞர்போலன்றி, அதிகாரமுள்ளவராகப் போதித்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உடன்படிக்கைக்கு அடையாளமாக, ஆண்களுக்கு எல்லாம் விருத்தசேதனம் செய்யப்படும்; சாறாள் உனக்கொரு புதல்வனைப் பெறுவாள்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** *17: 1, 9-10, 15-22*

ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதுள்ளவனாய் இருந்தபோது ஆண்டவர் அவனுக்குத் தோன்றி: நாம் எல்லாம் வல்ல கடவுள். நீ நமக்குமுன் நடந்து உத்தமனாய் இரு, என்றார்.

மீண்டும் கடவுள் ஆபிரகாமை நோக்கி: ஆதலால், நமது உடன் படிக்கையை நீயும் உனக்குப் பின் உன் சந்ததியாரும் தலைமுறை தலைமுறையாய்க் கடைப்பிடித்து வருவீர்களாக. நமக்கும் உங்களுக்கும் உனக்குப் பின்வரும் சந்ததிக்குமிடையே உள்ள உடன்படிக்கை என்னவெனில், உங்களுக்குப் பிறக்கும் எல்லா ஆண் பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம் செய்யப்படும் என்பதாம், என்றருளினார்.

மீண்டும் கடவுள் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாறாயியை, இனிச் சாறாயி என்றழையாமல், சாறாள் என்று அழைப்பாய். நாம் அவளை ஆசீர்வதிப்போம். அவள் மூலம் நாம் உனக்குத் தரவிருக்கிற புதல்வனையும் ஆசீர்வதிப்போம். இவன் பல மக்களுக்கும் முதல்வனாவான்; எல்லா இனத்தவரின் அரசர்களுக்கும் தந்தையாவான் என்றருளினார்.

ஆபிரகாம் முகம் குப்புற விழுந்து, புன்முறுவலோடு: நூறு வயதுள்ளவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதுள்ள சாறாள் பிள்ளை பெறுவாளோ என்று உள்ளத்தில் நினைந்து, கடவுளைப் பார்த்து: இஸ்மாயில் உம் முன்னிலையில் பிழைக்கக் கடவான் என்று விண்ணப்பம் செய்தார்.

அதற்குக் கடவுள் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாறாள் உனக்கு ஒரு புதல்வனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக் என்று பெயரிடுவாய். தம் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக நிறுவுவோம். அன்றியும் இஸ்மாயிலுக்காக நீ செய்த விண்ணப்பத்தையும் கேட்டருளினோம். இதோ, அவனுக்கு நாம் ஆசீர் அளிப்போம். அவனை நாம் மிகவும் பலுகிப் பெருகச் செய்வோம். அவன் பன்னிரண்டு தலைவர்களைப் பெறுவான். அவனை மாபெரும் இனமாக விருத்தியடையச செய்வோம். ஆனால், வருகிற ஆண்டு இதே காலத்தில் சாறாள் உனக்குப் பெறவிருக்கிற ஈசாக்கோடு நாம் நம் உடன்படிக்கையை ஏற்படுத்துவோம் என்றார்.

ஆண்டவர் ஆபிரகாமோடு பேசி முடித்த பின்பு ஆபிரகாமை விட்டு மறைந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 127: 1-2, 3, 4-5 (பல்லவி)

பல்லவி: ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன்; அவர் காட்டிய வழியில்
நடப்பவன் நீ பேறுபெற்றோன்.
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்; பேறு
பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனி தரும் கொடிமுந்திரிபோல் உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில்
இருப்பாள். ஒலிவச் செடிகள்போல உன் மக்கள் பந்தியில் உன்னைச்
சூழ்ந்திருப்பர். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக; உன் வாழ்
நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை நீ காணும்படி உனக்கு ஆசி
கூறுவாராக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**யூதா மக்கள் நாடுகடத்தப்பட்டனர்.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 25: 1-12

செதேசியாசினுடைய ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டு பத்தாம் மாதம் பத்தாம் நாளில் பபிலோனிய அரசன் நபுக்கொதொனேசோர் தன் படையனைத்துடனும் யெருசலேமுக்குப் படையெடுத்து வந்து அதை முற்றுகையிட்டு அதைச் சுற்றிலும் கொத்தளங்களைக் கட்டினான். அவ்வாறே செதேசியாசு அரசனுடைய ஆட்சியின் பதினோராம் ஆண்டின்

நான்காம் மாதத்தின் ஒன்பதாம் நாள்வரை நகர் முற்றுகையிடப்பட்டு, கொத்தளங்களால் சூழப்பட்டிருந்தது. இதனால் நகரில் பஞ்சம் நிலவிற்று. நாட்டு மக்களுக்கு உணவு இல்லை.

அப்பொழுது நகர மதிலில் ஒரு திறப்பு செய்யப்பட்டது. கல்தேயர்கள் நகரைச் சுற்றியிருக்க, படைவீரர்கள் எல்லாரும் அரசனின் தோட்டத்தினருகே உள்ள இரண்டு மதில்களுக்கும் நடுவிலுள்ள வாசலின் வழியாய்த் தப்பியோடினர். அரசன் செதேசியாசோ பாலைவனத்திற்குச் செல்லும் வழியே தப்பியோடினான்.

கல்தேயரின் படையினர் அரசனைப் பின்தொடர்ந்து எரிக்கோ நகரின் சமவெளியில் அவனைப் பிடித்தனர். அவனோடு இருந்த போர்வீரர் அனைவரும் அவனைத் தனியே விட்டுவிட்டுச் சிதறியோடிவிட்டனர். அவர்கள் அரசனைப் பிடித்து, ரெப்ளாத்தாவில் தங்கியிருந்த பபிலோனிய அரசனிடம் கூட்டிவந்தனர். அவன் செதேசியாசுக்கு எதிராய்த் தீர்ப்பிட்டான். செதேசியாசின் புதல்வர்களை அவனது கண்முன்னே வெட்டினான்; மேலும் அவன் இரு கண்களையும் பிடுங்கியபின், விலங்கிட்டு அவனைப் பபிலோன் நகருக்குக் கொண்டு சென்றான்.

நபுக்கொதொனோசோருடைய ஆட்சியின் பத்தொன்பதாம் ஆண்டு ஐந்தாம் மாதம் ஏழாம் நாளில் பபிலோனிய அரசனின் ஊழியனும் படைத்தலைவனுமான நபுசர்தான் யெருசலேமுக்கு வந்தான். ஆண்டவரின் ஆலயத்தையும் அரச அரண்மனையையும் யெருசலேமில் உள்ள கட்டடங்களையும், எல்லா வீடுகளையும் தீக்கிரையாக்கினான். அப்படைத்தலைவனுடன் வந்திருந்த கல்தேயரின் படையினர் எல்லாரும் யெருசலேமைச் சுற்றியிருந்த மதில்களை இடித்து வீழ்த்தினர்.

நகரில் எஞ்சியிருந்த மக்களையும் ஒளிந்து ஓடிப் பபிலோனிய அரசனிடம் சரணடைந்திருந்தவர்களையும், மற்றச் சாதாரண மக்களையும் படைத்தலைவன் நபுசர்தான் கைதிகளாகக் கொண்டு போனான். திராட்சைத் தோட்டக்காரர், உழவர் போன்ற ஏழை எளியோரை அவன் அங்கேயே விட்டு வைத்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 137 : 1-2, 3, 4-5, 6 (பல்லவி : 6a)

பல்லவி: **உன்னை நான் நினையாதிருந்தால் என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.**

1 பாபிலோனின் ஆறுகளருகே அமர்ந்து சீயோனை நினைத்தபோது நாங்கள் கண்ணீர் சிந்தினோம்.
2 அந்த நாட்டு அலரிச் செடிகள்மீது எங்கள் யாழ்களை மாட்டிவைத்தோம். பல்லவி

3 எங்களைச் சிறையாக்கியவர்கள், நாங்கள் பாடும்படி கேட்டார்கள், எங்களைத் துன்புறுத்தியவர்கள் மகிழ்ச்சிப் பா இசைக்கச் சொன்னார்கள். 'சீயோனைப் பற்றிக் கீதங்கள் சிலவற்றைப் பாடிக்காட்டுங்கள்' என்றார்கள். பல்லவி

4 ஆண்டவருடைய பாடலை அந்நிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்?
5 யெருசலேமே நானுன்னை மறப்பதாயிருந்தால், என் வலக்கை சூம்பிப் போவதாக. பல்லவி

6 உன்னை நான் நினையாதிருந்தால், என் நாவு மேல்வாயோடு ஒட்டிக் கொள்வதாக. எனக்குள்ள மகிழ்ச்சிக்கெல்லாம் மேலானதாக நான் யெருசலேமைக் கருதாவிடில் எனக்கு இதெல்லாம் நிகழ்வதாக. பல்லவி

அல்லேலூயா

மத். 8 : 17

அல்லேலூயா. அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்,
நம் நோய்களைச் சுமந்துகொண்டார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீர் விரும்பினால், உம்மால் என்னைக் குணமாக்கக்கூடும்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 1-4

அக்காலத்தில் :

யேசு மலையினின்று இறங்கியபின் பெருங்கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. இதோ! தொழுநோயாளி ஒருவன் வந்து அவரைப் பணிந்து, " ஆண்டவரே, நீர் விரும்பினால், என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்றான். இயேசு கையை நீட்டி, "விரும்புகிறேன், குணமாகு" என்று சொல்லி அவனைத் தொட்டார். உடனே தொழுநோய் குணமாயிற்று.

யேசு அவனை நோக்கி, 'பார்! ஒருவருக்கும் சொல்லாதே. ஆனால், போய் உன்னைக் குருவிடம் காட்டி, மோயீசன் கட்டளையிட்ட காணிக்கைகளைச் செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சியாகும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுளுக்கு அரிதான காரியம் உண்டோ? நாம் மீண்டும் வருவோம்; அப்போது சாராளுக்கு ஒரு மகன் இருப்பான்,**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம். *18: 1-15*

அந்நாட்களில் :

கடவுள் மம்பிறே பள்ளத்தாக்கில் ஆபிரகாமுக்குத் தோன்றினார். அந்நேரம் வெப்பம் மிகுந்த உச்சிப் பகல் வேளையானதனால், அவர் கூடார வாயிலில் உட்கார்ந்திருந்தார். திடீரென அவர் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார்.

அவர்களைக் கண்டவுடனே அவர் கூடார வாயிலை விட்டு அவர்களுக்கு எதிர்கொண்டோடிக் குப்புற விழுந்து வணங்கி : ஆண்டவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்ததாயின், அடியேனை விட்டுக் கடந்துபோக வேண்டாம். இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவருகிறேன். உங்கள் கால்களைக் கழுவி இம் மரத்தடியில் இளைப்பாறுங்கள். அதற்குள் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன். நீங்கள் உள்ளத்தைச் சற்றே திடப்படுத்திக்கொண்டபின் அப்பால் செல்வீர்களாக. இதற்காகத்தானே அடியேனிடத்திற்கு எழுந்தருளி வந்தீர்கள் என்றார். அவர்கள் : நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டு ஆபிரகாம் தம் கூடாரத்திற்கு விரைந்துசென்று, சாராளை நோக்கி : நீ மிக விரைவில் மூன்றுபடி மாவைப் பிசைந்து, அடுப்புத் தணலில் அப்பங்களைச் சுடு என்றார். மாட்டு மந்தைக்குத் தாமே ஓடிச் சென்று, ஒரு நல்ல இளங் கன்றுக்குட்டியைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுக்க இவன் அதனை விரைவில் சமைத்தான்.பிறகு

வெண்ணெயையும் பாலையும் சமைக்கப்பட்ட கன்றுக்குட்டியையும் கொண்டுவந்து அவர்களுக்குமுன் வைத்து, அவர்களுக்குப் பக்கமாய் மரத் தடியில் நின்றுகொண்டிருந்தார்.

சாப்பிட்ட பின்னர் அவர்கள் அவரை நோக்கி: உன் மனைவி சாரள் எங்கே என்று கேட்க, அவர்: அதோ, கூடாரத்தில் இருக்கிறாள் என்று பதில் கூறினார். மூவருள் ஒருவர் அவரை நோக்கி: நாம் திரும்பும்போது இதே காலத்தில் உன்னிடத்திற்கு வருவோம். அப்போது நீயும் உயிரோடிருப்பாய்; சாராளுக்கும் ஒரு மகன் இருப்பான் என்றார்.

கூடார வாயிலின் பின்புறமாய் நின்றுகொண்டிருந்த சாராள் இதைக் கேட்டுச் சிரித்தாள். ஏனென்றால், அவர்கள் இருவரும் வயது சென்று முதிர்ந்தவராய் இருந்தனர். சாராளுக்கு மாதவிடாய் நின்று போயிருந்தது. ஆதலால், அவள் மறைவில் இருந்துகொண்டு புன் சிரிப்புடன்: நானும் கிழவி, என் கணவரும் முதிர்ந்த வயதினர். பின், நான் இன்பத்திற்கு இடம் கொடுப்பதா என்றாள்.

அப்போது ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, சாராள், நான் கிழவியாய் இருக்கப் பிள்ளை பெறுவது மெய்யாய் இருக்குமோவென்று நகைத்தாளே, கடவுள் செய்வதற்கு அரிதான காரியமும் உண்டோ? முன் சொன்னதுபோல், நாம் இதே காலத்தில் மறுபடியும் வருவோம். அப்போது நீயும் உயிரோடிருப்பாய்; சாராளுக்கும் ஒரு மகன் இருப்பான் என்று சொன்னார்.

சாராள் பயத்தினாலே கலங்கி: நான் சிரிக்கவில்லை என்று மறுத்தாள். அதற்கு ஆண்டவர்: இல்லை, நீ சிரித்தாய் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

லூக். 1:46-47, 48-49, 50 & 53, 54-55 (பல்லவி: 54a)

பல்லவி: ஆண்டவர் இரக்கம் காட்ட நினைவு கூர்ந்தார்.

என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களிகூருகின்றது. பல்லவி

ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார்.
இதோ! இந்நாள்முதல் எல்லாத் தலைமுறைகளும், என்னைப்
பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார்.
பல்லவி

50 அவர் தம் பெயர் புனிதமாமே.
அவர் தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத் தலைமுறை
தலைமுறையாய் உளதாமே.
53 பசித்தோரை நலன்களால் நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய்
அனுப்பினார். (பல்லவி)

54-55 நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே ஆபிரகாமுக்கும் அவர் தம்
வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியாராகிய இஸ்ராயேலை ஆதரித்தார். (பல்லவி)

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*சீயோன் மகளே, ஆண்டவரை நோக்கிப் புலம்பிக் கூக்குரலிடு.*

புலம்பல் ஆகமத்திலிருந்து வாசகம் 2: 2, 10-14, 18-19

யாக்கோபின் வீடுகள் யாவற்றையும் ஆண்டவர் இரக்கமின்றி அழித்துவிட்டார்; யூதா என்னும் மகளின் கோட்டைகளைத் தம்முடைய கோபத்தில் தகர்த்து விட்டார்; அரசையும் அதன் ஆள்வோரையும் வீழ்த்திச் சாபத்துக்குள்ளாக்கினார்.

சீயோன் மகளின் முதியவர்கள் பேச்சற்றுத் தரையில் அமர்ந்துள்ளார்கள்; தலையின்மேல் சாம்பலைத் தெளித்துக்கொண்டு இடையில் கோணி உடுத்தியுள்ளனர்; யெருசலேமின் கன்னிப் பெண்பிள்ளைகள் தலைகளைத் தரையினில் நட்டுக் கொண்டார்கள்.

கண்ணீர் சிந்தி என் கண்கள் சோர்ந்துபோயின, என்னுள்ளம் கலங்கித் துடிக்கின்றது; என் மக்களாம் மகளுடைய துயரங்கண்டு, சிறுவரும் குழந்தைகளும் தெருக்களிலே விழுவதைக் கண்டு உள்ளம் உருகிப் பாகாய்ப் பூமியில் ஓடிச் சிதைகின்றது.

கத்தியால் குத்துண்டோர் சாய்வதுபோல நகரத்தின் தெருக்களில் விழும் போதும், தங்களின் தாய்மார் மடிதனிலே ஆவியைத் துறக்கச் சாயும்போதும், தாய்மாரை நோக்கி, "உணவெங்கே?" எனக் கேட்டுக் கதறுகிறார்கள்.

யெருசலேம் மகளே! யாருக்கு நீ நிகரென்பேன்? உன்னை நான் யாருக்கு ஒப்பிடுவேன்? சீயோன் மகளே கன்னிப் பெண்ணே, உன்னை யாருக்குச் சமமாக்கித் தேற்றுவேன்? உன் அழிவு கடல்போலப் பெரிதாயிற்றே! உன்னைக் குணமாக்க வல்லவன் யார்?

உன் தீர்க்கதரிசிகள் உனக்குப் பொய்களையும் மடமைகளையும் பார்த்துச் சொன்னார்கள் ; அடிமைத்தனத்திற்கு உள்ளாகாதபடி உன் அக்கிரமத்தை உனக்கெடுத்துக் காட்டவில்லை ; பொய்யான வாக்குகளும் கற்பனைகளும் உனக்குச் சொல்லி உன்னை வஞ்சித்தார்கள்.

சீயோன் மகளே, ஆண்டவரை நோக்கிப் புலம்பிக் கூக்குரலிடு ; இரவும் பகலும் உன் கண்களினின்று வெள்ளம்போலக் கண்ணீர் வழிந்தோடட்டும் ; ஓய்வென்பது உனக்கிருக்கக் கூடாது, கண்விழிகள் சும்மாயிருகக விட்டிடாதே.

எழுந்திரு, இரவில் முதற் சாமத்தின் தொடக்கத்திலேயே குரலெழுப்பு ; ஆண்டவரின் திருமுன் உன் இதயத்தை வழிந்தோடும் தண்ணீராய் வார்த்திடுக ! தெரு தோறும் மூலையினில் பசியால் வாடி மயங்கிடும் உன் மக்களின் உயிருக்காக உன்னுடைய கைகளை மேலுயர்த்தி அவரிடத்தில் இப்பொழுது இறைஞ்சிடுவாய்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 73 : 1-2, 3-4, 5-7, 20-21 (பல்லவி : 19b)*

பல்லவி : **உம்முடைய எளிய மக்களின் வாழ்வை ஒருநாளும் மறவாதேயும்.**

1 இறைவா, நீர் எங்களை ஏன் என்றென்றைக்கும் தள்ளிவிட்டீர் ? உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமக்குச் சினம் மூள்வதேன் ?
2 ஆதிகாலமுதல் நீர் நிறுவிய உமது சபையை நினைவுகூர்ந்தருளும் : உம்முடைய உரிமைப் பொருளென மீட்டுக்கொண்ட குலத்தை நினைவுகூர்ந்தருளும் : உமது உறைவிடம் அமைந்துள்ள சீயோன் மலையை நினைவுகூர்ந்தருளும். பல்லவி

3 நெடுங்காலமாய்ப் பாழ்பட்டுக் கிடந்த இடத்தை நோக்கி அடி எடுத்து வையும் : பகைவன் உமது திருத்தலத்தில் அனைத்தையும் பாழ்படுத்தி விட்டான்.
4 உம் மக்கள் கூடிய தலத்தில் உம்முடைய எதிரிகள் முழக்கமிட்டனர் : தங்கள் கொடிகளை அங்கே வெற்றிச் சின்னங்களாக நாட்டினர். பல்லவி

5 அடர்ந்த சோலையில் கோடரியைக் கையில் தாங்குபவர்கள் போலாயினர் :
6 இதோ அவர்கள் கோடரியும் சம்மட்டியும் கொண்டு அதன் வாயிலைத் தகர்த்தெறிகின்றனர்.
7 உமது திருத்தலத்தைத் தீக்கிரையாக்கினர் : மாநிலத்தில் உமது பெயர் விளங்கிய உறைவிடத்தைத் தீட்டுப்படுத்தினர். பல்லவி

20 உமது உடன்படிக்கையை நினைவுகூர்ந்தருளும். பூமியின் மறைவிடங்
களிலும் வெளியிடங்களிலும் கொடுமை நிறைந்திருக்கிறதே !
21 சிறுமையுற்றவன் ஏமாற்றமடைய விடாதேயும். ஏழை எளியோர் உமது
திருப்பெயரைப் புகழ்வாராக. பல்லவி

அல்லேலூயா

மத். 8 : 17

அல்லேலூயா. அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்;
நம் நோய்களைச் சுமந்துகொண்டார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் பந்தி அமர்வார்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 8 : 5-17

அக்காலத்தில் :

யேசு கப்பர்நகூம் ஊருக்குள் போனபோது, நூற்றுவர் தலைவன் ஒருவன் அவரிடம் வந்து அவரை வேண்டி, "ஆண்டவரே, என் வேலையாள் திமிர்வாதத்தால் வீட்டில் கிடந்து மிகுந்த வேதனைப்படுகிறான்" என்றான். யேசு அவனை நோக்கி, "நான் வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார்.

நூற்றுவர் தலைவன் மறுமொழியாகக் கூறியதாவது: "ஆண்டவரே, நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். ஆனால், ஒரு வார்த்தை சொன்னால் போதும்; என் ஊழியன் குணமடைவான். ஏனெனில், நான் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயினும், எனக்கு அடியிலும் படை வீரர்கள் உள்ளனர். ஒருவனை நோக்கி, 'போ' என்றால் போகிறான்; வேறொருவனை நோக்கி, 'வா' என்றால் வருகிறான். என் வேலையாளைப் பார்த்து, 'இதைச் செய்' என்றால் செய்கிறான்."

இதைக் கேட்டு யேசு வியந்து தம்மைப் பின்தொடர்ந்தவர்களை நோக்கி, "இஸ்ராயேலில் யாரிடமும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் பந்தி அமர்வார்கள். அரசின் மக்களோ வெளியிருளில் தள்ளப்படுவர். அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். பின்னர் யேசு நூற்றுவர் தலைவனை நோக்கி, "நீ போகலாம். விசுவசித்தபடியே உனக்கு ஆகட்டும்" என்று சொன்னார். அந்நேரமே வேலையாள் குணமடைந்தான்.

யேசு இராயப்பரின் வீட்டுக்கு வந்து, அவருடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடப்பதைக் கண்டார். அவர் அவளுடைய கையைத் தொடவே, காய்ச்சல் அவளை விட்டு நீங்கியது. அவள் எழுந்து அவருக்குப் பணிவிடை புரிந்தாள்.

மாலையானதும் பேய் பிடித்த பலரை அவரிடம் கொண்டு வந்தனர். அவர் பேய்களை ஒரு வார்த்தையால் ஓட்டினார். நோயுற்ற அனைவரையும் குணமாக்கினார். இவ்வாறு 'அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்; நம் நோய்களைச் சுமந்துகொண்டார்' என்று இசையாஸ் இறைவாக்கினர் கூறியுள்ளது நிறைவேறவேண்டியிருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பதின்மூன்றாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**இவர் ஆண்டவரின் மனிதரும் புனிதருமாயிருக்கிறார், இங்கே தங்கியிருப்பாராக.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் *4: 8-11, 14-16a*

ஒருநாள் எலிசேயு சூனம் நகர் வழியே செல்ல, அவ்விடத்துச் சீமாட்டி ஒருத்தி சாப்பிடும்படி அவரை வற்புறுத்தினாள். அதன்பின் அவர் அவ்வழியே சென்றபோதெல்லாம் உணவருந்த அவள் வீட்டிற்குச் செல்வது வழக்கம். ஒருநாள் அவள் தன் கணவனை நோக்கி, “நம்மிடம் அடிக்கடி வருகிறவர் ஆண்டவரின் மனிதரும் புனிதருமாய் இருக்கிறார் என்று எனக்கு நன்றாய் விளங்குகிறது. ஆதலால், அவர் நம்மிடம் வரும் போதெல்லாம் அவர் நம்மோடு தங்கும்படி நாம் சிறு அறை ஒன்றை அவருக்காகக் கட்டி, அதில் ஒரு படுக்கை, மேசை, நாற்காலி, விளக்குத் தண்டு முதலியன தயார் படுத்தி வைப்போம்” என்றாள்.

ஒருநாள் எலிசேயு அவ்வறையில் தங்கி அங்கு ஓய்வெடுத்தார். மேலும், அவர் ஜியேசியைப் பார்த்து, “நான் அவளுக்கு என்ன செய்யும்படி அவள் விரும்புகிறாள் என்று கேள்” என்றார். அதற்கு ஜியேசி, “கேட்கவும் வேண்டுமோ? அவளுக்குப் பிள்ளையே கிடையாது; அவள் கணவருக்கும் வயதாகி விட்டது” என்றான். அப்போது எலிசேயு அவளைத் தம்மிடம் அழைத்துவர ஜியேசிக்குக் கட்டளையிட்டார். அவளும் வந்து வாயில் முன் நின்றாள். அப்போது எலிசேயு அவளைப் பார்த்து, “நீ உயிரோடு வாழ்ந்து வருவாயாகில், இதே நேரத்தில் இதே வினாடியில் நீ ஒரு மகனைக் கருத்தரிப்பாய்” என்று மொழிந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 88 : 1-2, 15-16, 17-18 (பல்லவி : 1a)*

பல்லவி : **ஆண்டவரது அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.**

1 ஆண்டவரது அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன் :
உமது சொல்லுறுதியை எல்லாத் தலைமுறைகளுக்கும் என் நாவால்
எடுத்துரைப்பேன்.
2 'என்றென்றும் உள்ளது எம் அருளன்பு' என்று நீர் கூறினீர் : உமது
சொல்லுறுதிக்கு வானமே அடித்தளம். பல்லவி

15 உமது விழா ஆர்ப்பரிப்பில் பங்குபெறுவோர் பேறு பெற்றோர் :
ஆண்டவரே, அவர்கள் உமது முகத்தின் ஒளியில் நடக்கின்றனர்.
16 உமது பெயரை நினைத்து என்றும் அகமகிழ்கின்றனர் ; உமது நீதியை
நினைத்துப் பெருமிதப்படுகின்றனர். பல்லவி

17 ஏனெனில், அவர்களது வல்லமைக்குச் சிறப்புத் தருபவர் நீர் : உம்
தயவால்தான் எங்கள் வலிமை ஓங்கியுள்ளது.
18 நமக்குள்ள கேடயம் ஆண்டவருடையதே : நம் அரசரும் இஸ்ராயேலின்
பரிசுத்தருக்குச் சொந்தமானவரே. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஞானஸ்நானத்தின் வழியாய் அவரோடு இறந்து புதைக்கப்பட்ட நாம் புத்துயிர் பெற்றவர்களாய் வாழுவோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *6: 3-4, 8-11*

சகோதரர்களே :

கிறிஸ்து யேசுவுக்குள் ஞானஸ்நானம்பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றோம் என்பதை அறியீர்களா? ஆகவே, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து பரம தந்தையின் மாட்சிமையால் எழுப்பப்பட்டதுபோல நாமும் புத்துயிர் பெற்றவர்களாய் வாழும்படி ஞானஸ்நானத்தின் வழியாய் அவரோடு இறந்து புதைக்கப்பட்டோம்.

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்; இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர் என்று நாம் அறிந்திருக்கிறோம். அவர் சாவுக்குள்ளானார்; அந்தச் சாவு பாவத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வாழ்க்கையை ஒரே முறையில்

எக்காலத்திற்கும் ஒழித்துவிட்ட சாவு. அவர் வாழ்கிறார்; அந்த வாழ்வு கடவுளுக்காக வாழும் வாழ்வு. அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொருத்தமட்டில் செத்தவர்கள்; கிறிஸ்து யேசுவுக்குள் கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என எண்ணிக்கொள்ளுங்கள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா 1 இரா. 2:9

அல்லேலூயா. நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம்:
உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சிலுவையை ஏற்றுக்கொள்ளாதவன் எனக்கு ஏற்றவன் அல்லன்.**
**உங்களை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
10: 37-42

அக்காலத்தில்: யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது:

"என்னைவிடத் தன் தந்தையையோ தாயையோ அதிகம் நேசிக்கிறவன் எனக்கு ஏற்றவன் அல்லன். என்னைவிடத் தன் மகனையோ மகளையோ அதிகம் நேசிக்கிறவனும் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் சிலுவையை ஏற்றுக்கொண்டு, என்னைப் பின்செல்லாதவன் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் உயிரைக் கண்டடைந்தவன் அதை இழந்துவிடுவான். எனக்காகத் தன் உயிரை இழந்தவனே அதைக் கண்டடைவான்.

உங்களை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக்கொள்பவனே என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறான். இறைவாக்கினரை இறைவாக்கினராக ஏற்றுக்கொள்பவன் இறைவாக்கினரின் கைம்மாறு பெறுவான். நீதிமானை நீதிமானாக ஏற்றுக்கொள்பவன் நீதிமானுடைய கைம்மாறு பெறுவான்.

என் சீடன் என்பதற்காக இச் சிறியவருள் ஒருவனுக்கு ஒரே ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கைம்மாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது.**

1 : 13-15; 2 : 23-24

**ஞான ஆகமத்திலிருந்து வாசகம்**

சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை. வாழ்வோரின் அழிவைக் கண்டு அவர் மகிழ்வாரல்லர். ஏனெனில் நிலைத்திருக்கும்படிக்கே அனைத்தையும் படைத்தார், உலகின் உயிர்கள் யாவும் நலம் பயப்பவை, அழிவு விளைக்கும் நஞ்செதுவும் அவற்றில் இல்லை, கீழுலகின் ஆட்சி மண்ணுலகில் இல்லை. நீதி சாகாமையுடைத்து.

ஏனெனில் அழியாமைக்கென்றே கடவுள் மனிதனைப் படைத்தார், தமது காலங் கடந்த தன்மையின் சாயலாகவே அவனை உண்டாக்கினார். ஆனால் பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. அவன் பக்கம் சேர்கிறவர்கள் அதை நுகர்வார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 29 : 1 & 3, 4-5, 10 & 11a & 12b (பல்லவி : 1a)

பல்லவி : **ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன் ;**
**ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்.**

1 ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன் : ஏனெனில், நீர் எனக்கு விடுதலை
யளித்தீர்; என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.
3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர் :
பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர்.
பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்: அவர் எத்துணை பரிசுத்தர்
என்பதை நினைத்துப் போற்றுங்கள்.
5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே. அவரது
தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். மாலையில் அழுகை என்றால்,
காலையில் உண்டாவது அக்களிப்பு?
பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என்மீதிரங்கும்: ஆண்டவரே, எனக்குத் துணைசெய்யும்.
11-12 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர்: ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

உங்களிடம் மிகுதியாயிருப்பதைக்கொண்டு ஏழைகளின் குறைவை நீக்குங்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 8: 7, 9, 13-15

சகோதரர்களே:

விசுவாசம், சொல்வன்மை, அறிவு, தளராத ஊக்கம், எங்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட அன்பு, இவற்றிலெல்லாம் நிறைவளம் உங்களுக்கு வாய்த்துள்ளது.

ஏனெனில், நம் ஆண்டவராகிய யேசு கிறீஸ்துவின் அருள் வன்மையை நீங்கள் அறிந்தேயிருக்கிறீர்கள். அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார்.

மற்றவர்களின் வேதனையைத் தணிக்க, நீங்கள் வேதனைக்குள்ளாக வேண்டியதில்லை; சமநிலைப்படுத்துவது பற்றியே இங்கே பேச்சு. அதாவது இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது; அவர்களுடைய குறைவை நீக்குங்கள்; அவர்களிடம் மிகுதியாயிருக்கும்போது, அவர்கள் உங்கள் குறைவை நீக்கக்கூடும். இவ்வாறு சமநிலை ஏற்படும். 'மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மிச்சமுமில்லை. குறைவாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவுமில்லை' என எழுதியுள்ளதன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 திமோ 1: 10b

அல்லேலூயா. நம் மீட்பராம் யேசுகிறிஸ்து சாவை அழித்து, நற்செய்தியின் வழியாக வாழ்வை ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சிறுமியே, உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 5: 21-43

அக்காலத்தில் :

யேசு படகேறி, மீண்டும் கடலைக் கடந்து, இக்கரையை அடைந்ததும் பெருங் கூட்டமாக மக்கள் அவரிடம் வந்தனர். அவர் கடலோரத்தில் இருந்தார். செபக்கூடத் தலைவர்களுள் ஒருவனான யாயீர் என்பவன் வந்து, அவரைக் கண்டு, காலில் விழுந்து, "என் மகள் சாகக் கிடக்கிறாள். நீர் வந்து அவள்மீது உம் கைகளை வையும், அவள் குணமாகிப் பிழைத்துக் கொள்வாள்" என்று அவரை வருந்தி வேண்டினான். அவர் அவனுடன் சென்றார். பெருங்கூட்டம் அவரைப் பின்தொடர்ந்து நெருக்கியது.

பன்னிரு ஆண்டுகளாய்ப் பெரும்பாட்டினால் வருந்திய பெண் ஒருத்தி அக்கூட்டத்தில் இருந்தாள். அவள் மருத்துவர் பலரிடம் மிகத் துன்பப்பட்டும், உடைமையெல்லாம் செலவிட்டும் ஒரு பயனும் அடையவில்லை. மாறாக, அவள் நிலைமை இன்னும் மோசமாயிற்று. அவள் யேசுவைப்பற்றிய செய்தி கேள்வியுற்றுக் கூட்டத்தில் அவருக்குப் பின்னே வந்து அவருடைய போர்வையைத் தொட்டாள். ஏனெனில் அவள், "நான் அவருடைய ஆடையையாகிலும் தொட்டால் குணம் பெறுவேன்" என்று சொல்லிக்கொண்டாள். உடனே அவளுடைய உதிரப்பெருக்கு வற்றிப் போயிற்று. அவள் நோயினின்று குணம் பெற்றதைத் தன் உடலில் உணர்ந்தாள்.

உடனே யேசு தம்மிடமிருந்து வல்லமை வெளியேறியதை உணர்ந்து, கூட்டத்திடையே திரும்பி, "என் ஆடையைத் தொட்டது யார்?" என்று கேட்டார். அவருடைய சீடர் அவரை நோக்கி, "கூட்டம் உம்மை நெருக்குவதைக் கண்டும், 'என்னைத் தொட்டது யார்?' என்கிறீரே" என்றனர்.

அவரோ, இதைச் செய்தவளைக் காணுமாறு சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அந்தப் பெண் தனக்கு நேர்ந்ததை அறிந்தவளாய், அஞ்சி நடுங்கிக்கொண்டு வந்து, அவர் காலில் விழுந்து உண்மையெல்லாம் உரைத்தாள். அவரோ, அவளை நோக்கி, "மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று, சமாதானமாய்ப் போ, நோய் நீங்கி நலமாயிரு" என்றார்.

அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே செபக்கூடத் தலைவனது வீட்டிலிருந்து ஆட்கள் வந்து, "உம் மகள் இறந்துவிட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரை செய்கிறீர்?" என்றனர். அவர்கள் சொன்னது காதில்விழவே, யேசு செபக்கூடத் தலைவனிடம், "அஞ்சாதே, விசுவாசத்

தோடு மட்டும் இரு" எனக் கூறினார். இராயப்பர், யாகப்பர், யாகப்பரின் சகோதரர் அருளப்பர் இவர்களைத் தவிர வேறெவரையும் தம்முடன் வர விடவில்லை.

அவர்கள் செபக்கூடத் தலைவனின் வீட்டுக்கு வந்தபோது, அவர் சந்தடியையும், ஓலமிட்டு அழுது புலம்புவோரையும் கண்டார். உள்ளே போய், "ஏன் இந்தச் சந்தடி? ஏன் இந்த அழுகை? சிறுமி சாகவில்லை, தூங்குகிறாள்" என்றார். அவர்களோ அவரை ஏளனம் செய்தனர்.

ஆனால், அவர் அனைவரையும் வெளியே அனுப்பிச் சிறுமியின் தந்தையையும் தாயையும் தம்முடன் வந்தவரையும் அழைத்துக்கொண்டு, சிறுமி இருந்த இடத்திற்கு வந்தார். சிறுமியின் கையைப் பிடித்து "தலித்தாகூம்" — அதாவது, சிறுமியே, உனக்குச் சொல்லுகிறேன்: எழுந்திரு — என்றார். என்றதும், சிறுமி எழுந்து நடக்கலானாள். அவளுக்கு வயது பன்னிரண்டு. மக்கள் பெரிதும் திகைத்துப் போயினர். இது யாருக்கும் தெரியக்கூடாது என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார். அவளுக்கு உணவு கொடுக்கச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

5: 21-24, 35b-43

அக்காலத்தில்:

யேசு படகேறி, மீண்டும் கடலைக் கடந்து, இக்கரையை அடைந்ததும் பெருங் கூட்டமாக மக்கள் அவரிடம் வந்தனர். அவர் கடலோரத்தில் இருந்தார். செபக்கூடத் தலைவர்களுள் ஒருவனான யாயீர் என்பவன் வந்து, அவரைக் கண்டு, காலில் விழுந்து, "என் மகள் சாகக் கிடக்கிறாள். நீர் வந்து அவள்மீது உம் கைகளை வையும், அவள் குணமாகிப் பிழைத்துக்கொள்வாள்" என்று அவரை வருந்தி வேண்டினான். அவர் அவனுடன் சென்றார். பெருங் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்து நெருக்கியது.

செபக்கூடத் தலைவனது வீட்டிலிருந்து ஆட்கள் வந்து, "உம் மகள் இறந்துவிட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரை செய்கிறீர்?" என்றனர். அவர்கள் சொன்னது காதில் விழவே, யேசு செபக்கூடத் தலைவனிடம், "அஞ்சாதே, விசுவாசத்தோடு மட்டும் இரு" எனக் கூறினார். இராயப்பர், யாகப்பர், யாகப்பரின் சகோதரர் அருளப்பர் இவர்களைத் தவிர வேறெவரையும் தம்முடன் வரவிடவில்லை.

அவர்கள் செபக்கூடத் தலைவனின் வீட்டுக்கு வந்தபோது, அவர் சந்தடியையும், ஓலமிட்டு அழுது புலம்புவோரையும் கண்டார். உள்ளே போய், "ஏன் இந்தச் சந்தடி? ஏன் இந்த அழுகை? சிறுமி சாகவில்லை, தூங்குகிறாள்" என்றார். அவர்களோ அவரை ஏளனம் செய்தனர்.

ஆனால், அவர் அனைவரையும் வெளியே அனுப்பிச் சிறுமியின் தந்தையையும் தாயையும் தம்முடன் வந்தவரையும் அழைத்துக்கொண்டு, சிறுமி இருந்த இடத்திற்கு வந்தார். சிறுமியின் கையைப் பிடித்து "தலித்தாகூம்" — அதாவது, சிறுமியே, உனக்குச் சொல்லுகிறேன்: எழுந்திரு—என்றார். என்றதும், சிறுமி எழுந்து நடக்கலானாள். அவளுக்கு வயது பன்னிரண்டு. மக்கள் பெரிதும் திகைத்துப் போயினர். இது யாருக்கும் தெரியக்கூடாது என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார். அவளுக்கு உணவு கொடுக்கச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எலிசேயு புறப்பட்டுப்போய் எலியாசைப் பின் சென்றார்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *19: 16b, 19-21*

அந்நாட்களில்:

ஆண்டவர் எலியாசை நோக்கி, அபேல்மேவுலா ஊரானான சாபாத்தின் மகன் எலிசேயுவை உனக்குப் பதிலாய் இறைவாக்கினராக அபிஷேகம் செய், என்றார்.

அப்படியே எலியாசு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, பன்னிரு ஏர் பூட்டி உழுத சாபாத்தின் மகன் எலிசேயுவைக் கண்டார். அவன் பன்னிரு ஏரில் ஒன்றை ஓட்டிக்கொண்டிருந்தான். எலியாசு அவனிடம் சென்று தம் போர்வையை அவன் மேல் போட்டார். உடனே எலிசேயு மாடுகளை விட்டுவிட்டு எலியாசைப் பின்சென்றார். "நான் என் தாய் தந்தையரிடம் விடைபெற்று வர அனுமதி கொடும்; அதற்குப் பின் உம்மைத் தொடர்ந்து வருகிறேன்" என்றார். அதற்கு அவர், "போய் வா; நான் செய்ய வேண்டியதை உனக்குச் செய்துவிட்டேன்" என்றார்.

எலிசேயு எலியாசை விட்டு வந்து, ஒரு ஜோடி ஏர் மாடுகளைப் பிடித்து அடித்துத் தாம் உழுத கலப்பையைக் கொண்டு இறைச்சியைச் சமைத்து மக்களுக்குப் பரிமாற, அவர்களும் அதை அருந்தினர். பின்பு அவர் புறப்பட்டுப் போய் எலியாசைப் பின் சென்று அவருக்கு ஏவல் புரிந்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15 : 1-2a & 5, 7-8, 9-10, 11 (பல்லவி : 5a காண்)

பல்லவி : **ஆண்டவரே, என் உரிமைச் சொத்து நீரே.**

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம்
புகுந்தேன்.
2 "நீரே என் ஆண்டவர்" என்று ஆண்டவரிடம் சொன்னேன்.
5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்; எனக்
குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே. பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன்:
இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்: அவர்
என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உள்ளம் அக்களிக்கும்: என்
உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர்: உம்
புனிதர் அழிவுகாண விடமாட்டீர். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்; உம் திருமுன்
எனக்கு நிறைமகிழ்ச்சியையும், உம் வலக் கையில் இடைவிடா இன்பத்
தையும் நீர் காட்டுவீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 1, 13-18

சகோதரர்களே :

கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வு நமக்கு அளித்தார். அதிலே நிலைத்திருங்கள். அடிமைத்தனத்தின் நுகத்தைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

நீங்களோ, சகோதரர்களே, உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; அந்த உரிமை, ஊனியல்பின் இச்சைகளுக்கு ஏற்ற வாய்ப்பாகும்படி விட்டுவிடாதீர்கள். மாறாக, ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள். "உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல, உன் அயலான்

மீதும் அன்பு காட்டுவாயாக" என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவேறுகிறது. ஆனால் நீங்கள் ஒருவரையொருவர் காட்டு விலங்குகளைப்போல் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால், எச்சரிக்கை! ஒருவரால் ஒருவர் அழிந்துபோவீர்கள்.

ஆகவே நான் சொல்லுவது: ஆவியின் ஏவுதலின்படி நடங்கள்; அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்றமாட்டீர்கள். அந்த இயல்பு இச்சிப்பது தேவ ஆவிக்கு முரணானது, தேவ ஆவி விரும்புவதோ அவ்வியல்புக்கு முரணானது. இவை ஒன்றுக்கொன்று முரணாய் உள்ளன; அதனால் தான் விருப்பமானதை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது. நீங்கள் தேவ ஆவியினால் இயக்கப்பட்டால் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கமாட்டீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *1 சாமு. 3:9; அரு. 6:69b*

அல்லேலூயா. ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்: முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எருசலேமுக்குச் செல்ல முனைந்து நின்றார். நீர் எங்கு சென்றாலும் நான் உம்மைப் பின் செல்வேன்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 51-62

யேசு விண்ணேற்படையும் நாட்கள் நெருங்கி வரவே, யெருசலேமுக்குச் செல்ல முனைந்து நின்றவராய்த் தமக்கு முன்பாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் சென்று முன்னேற்பாடு செய்யும்படி சமாரியருடைய ஊர் ஒன்றுக்கு வந்தார்கள். அவர் யெருசலேமுக்குச் செல்லும் நோக்கமாயிருந்ததால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவருடைய சீடர் யாகப்பரும் அருளப்பரும் இதைக் கண்டு, "ஆண்டவரே, இவர்களை அழிக்க வானத்திலிருந்து நெருப்பு விழும்படி நாங்கள் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீரா?" என்றனர். அவர் அவர்கள் பக்கம் திரும்பி அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு, வேறு ஓர் ஊருக்குச் சென்றனர்.

அவர்கள் வழியே போகையில் ஒருவன் அவரிடம், "நீர் எங்குச் சென்றாலும் நானும் உம்மைப் பின் செல்வேன்" என்றான். யேசு அவனை நோக்கி, "நரிகளுக்கு வளைகள் உண்டு. வானத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ, தலை சாய்க்கவும் இடமில்லை" என்றார்.

அவர் வேறொருவனை நோக்கி, "என்னைப் பின்செல்" என, அவன், "ஆண்டவரே, முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்து விட்டு வர விடை கொடும்" என்றான். யேசு அவனைப் பார்த்து, "இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்து கொள்ளட்டும். நீ போய் கடவுளுடைய அரசை அறிவி" என்றார்.

இன்னொருவன், "ஆண்டவரே, உம்மைப் பின் செல்வேன்; ஆனால் முதலில் வீட்டில் சொல்லிவிட்டு வர விடைதாரும்" என்றான். யேசுவோ, அவனை நோக்கி, "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவன் எவனும் கடவுளின் அரசிற்குத் தகுதியற்றவன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தீயவர்களோடு நீதிமானையும் அழிப்பீரோ?*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 18: 16-33

மம்பிரே பள்ளத்தாக்கிலிருந்து வந்த மனிதர்கள் எழுந்து, அவ்விடம் விட்டுச் சொதோமை நோக்கிப் போனார்கள். ஆபிரகாமும் அவர்களோடு கூடப் போய், அவர்களை வழியனுப்பினார்.

அப்பொழுது ஆண்டவர்: நாம் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைக்கக் கூடுமோ? இல்லை. அவன் மிகவும் பெரிய, வலிமைமிக்க இனமாவான். மேலும், பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் அவனில் ஆசி பெறவிருக்கின்றனர். உண்மையிலே, ஆண்டவர் ஆபிரகாமுக்குத் திருவுளம் பற்றின எல்லாவற்றையும் ஆபிரகாமின் பொருட்டு நிறைவேற்றும்படி, அவன் தன் மக்களுக்கும் தனக்குப் பின்னால் வரும் தன் வீட்டாருக்கும் புத்தி சொல்லி, நீங்கள் கடவுள் கட்டளையிட்ட நெறியில் ஒழுகி நியாயத்தையும் நீதியையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கற்பிப்பான் என்று அறிவோம் (என்றார்).

ஆகையால் ஆண்டவர்: சொதோம் கொமோரா நகரங்களின் ஆரவாரம் மிஞ்சிப் போயிற்று. அவைகளின் பாவமும் அளவின்றிப் பெருகிப் போயிற்று. ஆதலால், இதோ, நாம் இறங்கிப் போய், நம்மை எட்டிய அந்தக் கூக்குரலுக்கு ஏற்ப அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்ப்போம் என்றார்.

அப்பொழுது அவர்கள் அவ்விடம் விட்டுச் சொதோமை நோக்கிப் போனார்கள். ஆபிரகாமோ, ஆண்டவர் திருமுன் நின்றவராய், அண்மையில் வந்து: நீர் தீயவர்களோடு கூட நீதிமானையும் அழிக்கவிருக்கிறீரோ? நகருக்குள்ளே நீதிமான்கள் ஐம்பது பேர் இருந்தால், (பாவிகளோடு) கூட அவர்களும் அழிந்து போவார்களோ? அவ்விடத்திலே நீதிமான்கள் ஐம்பது பேர் இருப்பார்களாயின், அவர்கள் பொருட்டு அந்த இடத்தைக் காப்பாற்றமாட்டீரோ? தீயவனோடு நீதிமானையும் அழிப்பதும், நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவதும் உமக்குத் தூரமாய் இருப்பதாக. அது உமக்கு உகந்ததன்று. மண்ணகம் முழுவதற்கும் நடுவராய் இருக்கிறீரே: இத்தகைய தீர்ப்பு நிச்சயம் செய்ய மாட்டீரே? (என்றார்).

ஆண்டவர் அவரை நோக்கி: நாம் சொதோம் நகருக்குள்ளே ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அவர்களின் பொருட்டு அந்நகர் முழுவதையும் காப்பாற்றுவோம் என்றார்.

ஆபிரகாம் மறுமொழியாக: புழுதிக்கும் சாம்பலுக்கும் சமமாய் இருக்கிற அடியேன் ஆண்டவரோடு பேசத் தொடங்கினபடியால், இன்னும் என் ஆண்டவரிடம் ஒன்று கேட்பேன். ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்து பேர் குறைந்திருந்தாலும் இருக்கலாம். நாற்பத்தைந்து பேரைப் பாராது நகர் முழுவதையும் அழிப்பீரோ என்று கேட்க, கடவுள்: நாம் நாற்பத்தைந்து பேரை அங்கே கண்டால் அதனை அழிப்பதில்லை என்றார்.

மீண்டும் அவரை நோக்கி: அவ்விடத்தில் நாற்பது பேர் மட்டும் இருந்தால் என்ன செய்வீர் என, ஆண்டவர்: நாற்பது நீதிமான்களின் பொருட்டு அதனை அழிப்பதில்லை என்றார்.

அப்பொழுது ஆபிரகாம்: ஆண்டவரே, தயை புரியும். நான் பேசுவதினால் கோபிக்கவேண்டாம். முப்பது நீதிமான்கள் காணப்பட்டால் என்று கேட்க, அவர்: முப்பது பேர் காணப்பட்டால் அதை அழியேன் என்று பதில் கூறினார். அவர்: நான் பேசத் தொடங்கிவிட்டேன்; எப்படியாவது என் ஆண்டவரிடம் இன்னும் ஒன்று கேட்கத் துணிவேன்: அவ்விடத்தில் இருபது நீதிமான்களை இருக்கக் கண்டால் என்ன என, அவர்: இருபது பேராகிலும் அதை நாம் அழிப்பதில்லை என்றார்.

அவர்: ஆண்டவரே, அருள் கூரும். அடியேன் இன்னும் ஒருமுறை மட்டும் கேட்கிறேன், ஆண்டவருக்குக் கோபம் வேண்டாம். அவ்விடத்தில் பத்துப்பேர் மட்டும் காணப்பட்டால் என, ஆண்டவர்: அந்தப் பத்துப் பேருக்காக அந்நகரை அழிக்கமாட்டோம் என்றார்.

ஆபிரகாமோடு பேசி முடிந்தபோது ஆண்டவர் போய்விட்டார். ஆபிரகாமும் தம் இல்லிடத்துக்குத் திரும்பிப் போனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 8-9, 10-11 (பல்லவி : 8a)

பல்லவி : **அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. என் அகத்துள்ள தெல்லாம்
அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார். அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங்கொள்ளத் தாமதிப்பவர்;
சாந்தமுடையவர்.
9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர்: எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
பல்லவி

10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்குத்
தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை.
11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வள
வுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*ஏழைகளின் தலைகளை மண்ணில்பட மிதிக்கிறார்கள்.*

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 2: 6-10, 13-16

ஆண்டவர் கூறுவது இதுவே:

இஸ்ராயேல் பழிச்செயலுக்குமேல் பழிச்செயல் செய்ததற்காக நாம் இட்ட தண்டனைத் தீர்ப்பை மாற்றமாட்டோம்; அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு சோடி செருப்புக்கும்

விற்கிறார்கள். ஏழைகளின் தலைகளை மண்ணில்பட மிதிக்கிறார்கள், தாழ்த்தப்பட்டோரின் நெறியைக் கெடுக்கிறார்கள்; மகனும் தகப்பனும் ஒரே பெண்ணிடம் கூடி, நம் திருப்பெயரைப் பங்கப்படுத்துகிறார்கள். தங்களிடம் அடகுவைத்த பிறராடைகளை விரித்துப் போட்டு, எல்லாப் பீடங்களின் முன்பும் உட்கார்ந்துகொண்டு, அபராதம் விதித்துத் திரட்டிய பணத்திற்கு மது வாங்கித் தங்கள் கடவுளின் இல்லத்தில் குடிக்கிறார்கள்.

நாமோ, உயரத்தில் கேதுரு மரங்களைப் போலும், வலிமையில் கருவாலி மரங்களைப்போலும் இருந்த அமோரியர்களை அவர்கள் முன்பாக அழித்துப் போட்டோம்; உயரத்தில் இருந்த அவனுடைய கனிகளையும், ஆழத்திலிருந்த வேர்களையும் நாம் நாசமாக்கினோம். மேலும், எகிப்து நாட்டினின்று உங்களைப் புறப்படச் செய்து, நாற்பதாண்டுகள் பாலைநிலத்தில் உங்களை வழிநடத்தி வந்து, அமோரியர் நாட்டை நீங்கள் உரிமையாக்கிக்கொள்ளச் செய்தோம்.

இதோ, வைக்கோல் பொதியேற்றிய வண்டியின் அச்சு கிறீச்சிடுவதுபோல், உங்களையும் உங்களிடத்திலேயே அழுத்தி நீங்களும் கிறீச்சிடச் செய்வோம். விரைந்தோடுகிறவனுக்கும் வேகமிராது, வலிமையுள்ளவனுக்கும் வலுவிருக்காது; வீரனும் தன்னுயிரைக் காத்துக்கொள்ள முடியாது. வில்வீரன் நிற்கவுமாட்டான், விரைந்தோடுபவனும் தப்பமாட்டான்; குதிரை வீரனும் தன்னுயிரைக் காத்துக்கொள்ள முடியாது. அந்நாளில் வீரர்களுள் மிக்க வீரம் படைத்தவன்கூட எல்லாப் படைக்கலங்களையும் எறிந்துவிட்டுத் தப்பி ஓடுவான், என்கிறார் ஆண்டவர்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 49 : 16bc-17, 18-19, 20-21, 22-23 (பல்லவி : 22a)

பல்லவி : **கடவுளை நினையாதவர்களே, நீங்கள் இதைக் கண்டுணருங்கள்.**

16 என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்? என் உடன்படிக்கையைப் பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்தவன் அன்றோ நீ? பல்லவி

18 திருடனைப் பார்த்தால் அவன் பின்னே ஓடுகிறாய்: விபசாரிகளோடு உறவு கொள்கிறாய்.
19 நீ வாய்திறந்தால் வெளிப்படுவது தீமையே: உன் நாவிலிருந்து புறப்படுவது வஞ்சகமே. பல்லவி

20 கூட்டத்தில் உட்கார்ந்து நீ பேசுவதெல்லாம் உன் சகோதரனுக்கெதிராக
உன் சொந்த சகோதரனை நிந்தைக்குள்ளாக்குகிறாய் !
21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப்
போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம்
எடுத்துச் சொல்கிறேன், பார்? பல்லவி

22 கடவுளை நினையாதவர்களே, நீங்கள் இதைக் கண்டுணருங்கள்; இல்லையேல்,
நான் உங்கள் உயிரைப் பறிப்பேன்: என் கையில் வந்து விழும்போது
23 உங்களைக் காப்பவர் யாரும் இரார் !
இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன் :
நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.
பல்லவி

அல்லேலூயா • சங். 94 : 8b, 7b

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள் : மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவிகொடுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

என்னைப் பின்செல்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 18-22

அக்காலத்தில் :

பெருங்கூட்டம் தம்மைச் சூழ்ந்திருப்பதை யேசு கண்டு அக்கரைக்குச் செல்லக் கட்டளையிட்டார். மறைநூல் அறிஞன் ஒருவன் வந்து, "போதகரே, நீர் எங்குச் சென்றாலும் நானும் உம்மைப் பின்செல்லுவேன்" என்று அவரிடம் சொன்னான். யேசு அவனை நோக்கி, "நரிகளுக்கு வளைகள் உண்டு, வானத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை" என்றார்.

அவருடைய சீடர்களுள் இன்னொருவன் அவரை நோக்கி, "ஆண்டவரே, முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர விடை கொடும்" என்றான். யேசு அவனைப் பார்த்து, "என்னைப் பின்செல். இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்துகொள்ளட்டும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் சோதோம், கொமோரா நகரங்களின்மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச் செய்தார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *19: 15-29*

அந்நாட்களில் :

ஆண்டவரின் தூதர்கள் லோத்தை அவசரப்படுத்தி : நீ எழுந்திரு. உன் மனைவியையும் உன் இரு புதல்விகளையும் கூட்டிக்கொண்டு போ. இல்லையேல், இந் நகரின் அக்கிரமத் ( தண்டனையிலே ) நீயும் அகப்பட்டு அழிவாய் என்றார்கள். அவன் தயங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு, அவர்கள் அவனையும் அவன் மனைவியையும் இரு புதல்விகளையும் கையால் பிடித்தார்கள். ஏனென்றால், ஆண்டவர் லோத்தின்மீது இரக்கம் வைத்திருந்தார்.

அவர்கள் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் நகருக்கு வெளியே விட்டார்கள். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் உயிர் காக்க ஓடிப்போ. திரும்பிப் பார்க்காதே. சுற்றுப்புறத்தில் தங்காதே. நகரோடு கூட நீயும் அழியாதபடிக்கு மலையில் சரணடையக் கடவாய் என்றார்கள். லோத் அவர்களை நோக்கி: ஆண்டவரே, ஒரு வார்த்தை சொல்கிறேன், கேளும். அடியேன் உம் முன்னிலையில் அருள் அடைந்தேனே; என் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நீர் அளவில்லாத தயவு புரிந்தீரே; ஆனால், மலைக்கு ஓடிப்போக என்னால் இயலாது. போனாலும், தீங்கு என்னை அங்கே தொடருமாயின் செத்துப் போவேனே! அதோ, அந்தச் சிற்றூர் தெரிகிறதே, அது அருகிலிருப்பதனால் எளிதாய் அங்கே போய்ச் சேரலாம். சேர்ந்தால் என் உயிர் பிழைக்கும். அது சிறிய ஊரல்லவா? அவ்விடத்தில் சாவுக்குத் தப்பிப் பிழைப்பேனன்றோ என்றான்.

அதற்கு அவர்: நல்லது, அப்படியே ஆகட்டும். இக்காரியத்திலும் உனக்குக் கருணை புரிந்தோம். நீ சொன்ன ஊரை நாம் அழிக்கமாட்டோம். நீ அங்கே விரைந்தோடித் தப்பித்துக்கொள். ஏனென்றால், நீ அவ்விடம் சேருமட்டும் நாம் ஒன்றும் செய்யக் கூடாதிருக்கிறது என்றார். இதனால் அந்த நகரத்துக்குச் செகோர் என்னும் பெயர் வழங்கிற்று. லோத் செகோருக்குள் புகுந்தபோது பூமியின் மேல் சூரியன் உதித்தது.

அப்பொழுது ஆண்டவர் வானத்திலிருந்து சொதோம் கொமோரா நகரங்களின்மேல் தெய்வீக கந்தகமும் நெருப்பும் பொழியச்செய்தார்; அந் நகரங்களையும், அவற்றைச் சுற்றிலுமுள்ள ஊர் முழுவதையும்,

அவற்றின் எல்லாக் குடிகளையும், நிலத்தின் எல்லாப் பயிர்களையும் அழித்தார். அப்பொழுது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புச் சிலையாக மாறினாள்.

ஆபிரகாம் காலையில் எழுந்திருந்து, தாம் ஏற்கெனவே ஆண்டவர் முன்னிலையில் நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் போய், சொதோம் கொமோரா நகரங்கள் இருந்த திசையையும் அவைகளுக்குச் சுற்றிலுமுள்ள நாட்டையும் நோக்கிப் பார்த்தபோது, சூளையில் எழும்பும் புகை போலப் பூமியிலிருந்து தீப்பொறி கிளம்பக் கண்டார்.

ஆனால், அந்நாட்டின் நகரங்களை அழித்தபோது, கடவுள் ஆபிரகாமின் பொருட்டு, லோத் குடியிருந்த நகரின் அழிவிலிருந்து அவனைக் காப்பாற்றினார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 25 : 2-3, 9-10, 11-12 (பல்லவி : 3a)

பல்லவி : **ஆண்டவரே, உமது அருளன்பு என் மனக்கண்முன் உள்ளது.**

2 ஆண்டவரே, என்னை ஆராய்ந்து சோதித்துப் பாரும் : என் மனத்தையும் இதயத்தையும் துருவிப் பாரும்.
3 உமது அருளன்பு என் மனக்கண்முன் உள்ளது: நீர் காட்டிய உண்மைப் பாதையில் நான் நடக்கிறேன். பல்லவி

9 என்னைப் பாவிகளோடு சேர்த்து என் ஆன்மாவை எடுத்து விடாதேயும். இரத்த வெறியர்களோடு என் உயிரை எடுத்துக் கொள்ளாதேயும்.
10 அவர்களுடைய கைகள் அக்கிரமம் நிரம்பியவை; அவர்கள் வலக்கரம் கைக்கூலி நிறைய வாங்குபவை. பல்லவி

11 நானே மாசற்றவனாய் நடந்து கொள்ளுகிறேன்: என்மீது இரக்கம் வைத்து என்னை மீட்டுக்கொள்ளும்.
12 நான் நடப்பது நேரிய பாதையாகும்: சபையில் நான் ஆண்டவரை வாழ்த்துவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கடவுளாகிய ஆண்டவர் பேசுகிறார், இறைவாக்கு உரைக்காதவன் யார்?

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 3: 1-8; 4: 11-12

இஸ்ராயேல் மக்களே, உங்களுக்கு எதிராக-எகிப்து நாட்டினின்று நாம் கூட்டிவந்த முழுக் குடும்பமாகிய உங்களுக்கு எதிராக - ஆண்டவர் உரைத்த இந்த வாக்கைக் கேளுங்கள்: "உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நாம் அறிந்துகொண்டோம்; ஆதலால் உங்கள் அக்கிரமங்கள் அனைத்திற்காகவும் நாம் உங்களைத் தண்டிப்போம்.

தங்களுக்குள் ஏற்கெனவே உடன்படாமல் இருவர் சேர்ந்து நடப்பார்களோ? இரை அகப்படாமல் இருக்கும்போது காட்டில் சிங்கம் கர்ச்சிக்குமோ? தான் ஒன்றையும் பிடிககாமல் இருக்கையில், குகையிலிருந்து இளஞ்சிங்கம் முழக்கம் செய்யுமோ? வேடன் தரையில் வலை விரிக்காதிருக்கும்போதே பறவை கண்ணியில் சிக்கிக்கொள்வதுண்டோ? ஒன்றுமே கண்ணியில் படாதிருக்கும்போது வலை தரையை விட்டு மேலெழும்புமோ? நகரத்தில் எக்காளம் ஊதப்படுமானால், மக்கள் அஞ்சி நடுங்காமல் இருப்பார்களோ? ஆண்டவர் அனுப்பாமல், நகரத்துக்குத் தீமை தானாக வருமோ? தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்கும் தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல், ஆண்டவராகிய இறைவன் ஏதும் செய்வதில்லை. சிங்கம் கர்ச்சனை செய்கிறது, அஞ்சி நடுங்காதவன் எவன்? கடவுளாகிய ஆண்டவர் பேசுகிறார், இறைவாக்கு உரைக்காதவன் எவன்?"

"சோதோம், கொமோராவைக் கடவுள் இடித்ததுபோல் உங்கள் நடுவிலும் நாம் ஊர்களை இடித்தோம். நீங்களோ, நெருப்பிலிருந்து இழுக்கப்பட்ட கொள்ளியைப்போல் ஆனீர்கள்; இருப்பினும் நீங்கள் நம்மிடம் திரும்பவில்லை" என்கிறார் ஆண்டவர். "ஆகவே, இஸ்ராயேலே, இவ்வாறெல்லாம் உனக்குச் செய்வோம், இஸ்ராயேலே, இப்படி நாம் உனக்குச் செய்யப்போவதால், உன் கடவுளைச் சந்திக்கத் தயாராயிரு!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 5 : 4-5, 6, 7 (பல்லவி : 8a)

பல்லவி : **ஆண்டவரே, உம் நீதியைக் காட்டி என்னை வழி நடத்தும்.**

4 **தீமையை விரும்பும் கடவுள் நீர் அல்லீர் : தீயவன் உம்மோடு தங்க மாட்டான்.**
5 **கெட்டவர்கள் உம் திருமுன் நிற்கமாட்டார்கள், தீமை செய்யும் அனைவரையும் நீர் வெறுக்கின்றீர்.** பல்லவி

6 **பொய் சொல்லும் அனைவரையும் நீர் அழிக்கின்றீர் : கொலை வெறியரை, வஞ்சகரை ஆண்டவர் வெறுக்கின்றார்.** பல்லவி

7 **நானோ, உம் திருவருளின் பெருக்கத்திற்கேற்ப உம் இல்லத்தில் சென்றிடுவேன், உமது புனித ஆலயத்தில், ஆண்டவரே, உம்மை அஞ்சித் தொழுதிடுவேன்.** பல்லவி

அல்லேலூயா சங். 129 : 5

அல்லேலூயா. ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன் :
அவரது வாக்குறுதியில் நம்பிக்கை கொண்டுள்ளேன்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர் எழுந்து, காற்றையும் கடலையும் கடியவே, பேரமைதி உண்டாயிற்று.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 23-27

அக்காலத்தில் :

யேசு படகில் ஏறவே, அவருடைய சீடர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். இதோ! கடலில் மாபெரும் கொந்தளிப்பு ஏற்பட, படகுக்குமேல் அலைகள் எழுந்தன. அவரோ தூங்கிக்கொண்டிருந்தார். சீடர் அவரிடம் வந்து அவரை எழுப்பி, “ஆண்டவரே, எங்களைக் காப்பாற்றும்; மடிந்து போகிறோம்” என்றனர்.

யேசு அவர்களை நோக்கி, "குறைவான விசுவாசம் உள்ளவர்களே, ஏன் இவ்வளவு பயம்? " என்று கூறி, எழுந்து காற்றையும் கடலையும் கடியவே, பேரமைதி உண்டாயிற்று.

அங்கிருந்தவர்கள் வியந்து, "காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யார்?" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**வேலைக்காரியின் மகன் என் மகன் ஈசாக்கோடு பங்காளியாய் இருக்கக்கூடாது.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 21: 5, 8-20

ஆபிரகாமுக்கு வயது நூறாயிருக்கும்போது, அத்தனை வயதுள்ள தந்தைக்கே ஈசாக்கு பிறந்தான். அந்தக் குழந்தை வளர்ந்து பால்குடியும் மறந்தது. அப்படிப் பால்குடி மறந்த நாளன்று ஆபிரகாம் பெரியதொரு விருந்து செய்தார்.

எகிப்து நாட்டினளான ஆகாரின் புதல்வன், சாராள் புதல்வனான ஈசாக்கோடு கேலி பண்ணி விளையாடுவதைச் சாராள் கண்டு, ஆபிரகாமை நோக்கி: இந்த வேலைக்காரியையும் அவள் புதல்வனையும் துரத்திவிட வேண்டும். ஏனென்றால், வேலைக்காரியின் மகன் என் மகன் ஈசாக்கோடு பங்காளியாய் இருக்கக் கூடாது என்றாள். தன் மகன் இஸ்மாயிலைப்பற்றிச் சாராள் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஆபிரகாம் வருத்தமுற்றார்.

அப்போது கடவுள் அவரை நோக்கி: பையனையும் வேலைக்காரியையும் பொறுத்த வரையில் அது கொடுமையென்று எண்ணாதே. சாராள் உனக்குச் சொல்வதையெல்லாம் கேட்டு நட. ஏனென்றால் ஈசாக்கிடமிருந்து உனக்குச் சந்ததி தோன்றும். உன் வேலைக்காரியின் மகனும் உன் வித்தானதால், அவனையும் ஒரு பெரிய இனத்துக்குத் தலைவனாக்குவோம் என்றார்.

ஆபிரகாம் இதைக் கேட்டு, காலையில் எழுந்து, ஓர் அப்பத்தையும், தண்ணீர் நிறைந்த ஒரு தோல் பையையும் அவள் தோளில் சுமத்தி, பையனையும் அவளிடம் ஒப்புவித்து அவளை அனுப்பிவிட்டார். அவள் புறப்பட்டுப் போய்ப் பெற்சபே என்னும் பாலைவனத்தில் அலைந்து திரிந்து

கொண்டிருந்தாள். தோல் பையிலிருந்த தண்ணீர் தீர்ந்த பின் அவள் அவ்விடத்துள்ள மரங்களில் ஒன்றின் அடியில் பையனைக் கிடத்திய பின், அம்பு எறி தூரத்திற்கும் அதிகமாகச் சென்று அங்கே எதிர்நோக்கி உட்கார்ந்தாள்: குழந்தை சாவதைப் பார்க்கச் சகியேன் என்று, தான் அமர்ந்திருந்த இடத்திலேயே கூக்குரலிட்டு அழுதாள்.

அப்போது கடவுள் குழந்தையின் குரலை நன்றாகக் கேட்டருளினதால், ஆண்டவருடைய தூதர் ஒருவர் வானத்தினின்று ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உன்னை வருத்துவது யாது? பயப்படாதே. ஏனென்றால், கிடத்தியிருக்கிற இடத்தினின்று பையன் இட்ட சத்தத்தைக் கடவுள் நன்றாகக் கேட்டருளினார். நீ எழுந்து பையனைத் தூக்கியெடுத்து அதன் கையைப் பிடி. ஏனென்றால், அவனை ஒரு பெரிய இனத்திற்குத் தந்தையாக்குவோம் என்றார்.

அந்நேரத்திலே கடவுள் அவள் கண்களைத் திறந்துவிட, அவள் ஒரு தண்ணீர்க் கிணற்றைக் கண்டாள்; அவ்விடம் சென்று தோல் பையை நீரால் நிரப்பிப் பையனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கடவுள் அவனோடு இருந்தார். ஆதலால் அவன் வளர்ந்து, பாலைவனத்தில் அலைந்து திரிந்து, வில்வித்தையில் கைதேர்ந்தவனானான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 6-7, 9-10, 11-12 (பல்லவி : 6a)

பல்லவி : திக்கற்றவன் கூவியழைக்க,
ஆண்டவர் அவன் குரலைக்கேட்டார்.

6 இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக்கேட்டார்;
எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார்.
7 ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரைச் சுற்றி அவருடைய தூதர் பாளையம்
இறங்கிக் காத்திடுவார். பல்லவி

9 ஆண்டவருடைய புனிதர்களே, அவருக்கு அஞ்சுங்கள்: ஏனெனில்,
அவருக்கு அஞ்சுவோருக்கு எதுவும் குறைவு படாது.
10 வலிமையுற்றோர் வறிஞராய்ப் பசியுற்றார்: ஆண்டவரைத்
தேடுவோர்க்கோ எந்த நன்மையும் குறைவுபடாது. பல்லவி

11 வாரீர் மக்களே, நான் சொல்லுவதைக் கேளீர்:
உங்களுக்குத் தேவபயத்தைக் கற்பிப்பேன்.
12 வாழ்க்கைமீது பற்றுதல் கொண்டுள்ளவன் யார்? நலன்களைத்
துய்க்க நீடிய வாழ்வை விரும்பும் மனிதன் யார்? பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் பாடல்களின் பண்ணை நம்மிடமிருந்து அகற்றுங்கள்; நேர்மை நீரோடைபோல் பாயட்டும்.**

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 5: 14-15, 21-24

தீமையைத் தேடாதீர்கள்; நன்மையையே நாடுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்; அப்பொழுது நீங்கள் சொல்வது போலவே, சேனைகளின் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடிருப்பார். தீமையைப் பகையுங்கள், நன்மையை விரும்புங்கள், ஊர்ச்சபையில் நீதியை நிலை நாட்டுங்கள்; அப்போது ஒருவேளை சேனைகளின் கடவுளாகிய ஆண்டவர் யோசப் வீட்டாரில் எஞ்சினோர்க்கு இரக்கம் காட்டுவார்.

“உங்கள் திருவிழாக்களை அருவருக்கிறோம், வெறுக்கிறோம்; உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் நமக்கு விருப்பமே இல்லை. தகனப்பலிகளும் உணவுப்பலிகளும் நமக்கு நீங்கள் கொடுத்தாலும் நாம் ஏற்க மாட்டோம்; சமாதானப் பலிகளான உங்கள் கொழுத்த மிருகங்களையும் நாம் ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டோம். உங்கள் பாடல்களின் பண்ணை நம்மிடமிருந்து அகற்றுங்கள், உங்கள் வீணைகளின் இசையை நாம் கேட்க மாட்டோம். அதற்கு மாறாக, நீதி தண்ணீரைப்போல வழிந்தோடட்டும், நேர்மை நீரோடைபோலப் பாயட்டும்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 49:7, 8-9, 10-11, 12-13, 16 bc-17 (பல்லவி: 23b)

பல்லவி: நேர்மையோடு நடப்பவனுக்கு
இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

7 என் மக்களே, எனக்குச் செவி கொடுங்கள், இதோ நான் பேசுகிறேன்:
இஸ்ராயேலே கேள், உனக்கெதிராய் நான் சான்று பகர்வேன்; ‘நானே
கடவுள், உன் கடவுள் நானே’. பல்லவி

8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில், உன்
தகனப் பலிகள் எந்நேரமும் என் கண் முன்னே இருக்கின்றன.
9 உன் வீட்டில் உள்ள காளைமாட்டையா நான் கேட்கிறேன்?
உன் மந்தையிலுள்ள ஆடுகளையா நான் கேட்கிறேன்? பல்லவி

10 காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் எனக்கே சொந்தம்;
என் மலைகளில் மேயும் பல்லாயிர மிருகங்களும் என்னுடையவை.
11 வானில் உலவும் பறவைகளையெல்லாம் நான் அறிவேன்;
வயல்வெளியில் மேய்வனவும் எனக்குத் தெரியும்.

பல்லவி

12 எனக்குப் பசியெடுத்தால் உன்னிடமா சொல்வேன்?
பூவுலகும் அதில் உள்ள தனைத்தும் என்னுடையதுதானே!
13 எருதுகளின் சதையையா நான் உண்பேன்? செம்மறிகளின்
இரத்தத்தையா நான் குடிப்பேன்?

பல்லவி

16 என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்?
என் உடன்படிக்கையைப்பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ?
என் வார்த்தையைப் புறக்கணித்தவன் அன்றோ நீ?

பல்லவி

அல்லேலூயா — யாகப். 1:18

அல்லேலூயா. தம் படைப்புக்களுள் நாம் முதற் கனிகளாகும் பொருட்டு, உண்மையை அறிவிக்கும் வாக்கினால் பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

குறித்தகாலம் வருமுன்னே பேய்களை வதைக்க இங்கே வந்தீரோ?

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8: 28-34

அக்காலத்தில்:

யேசு அக்கரை சேர்ந்து, கதரேனர் நாட்டிற்கு வந்தபோது, பேய் பிடித்த இருவர் கல்லறைகளிலிருந்து வெளியேறி, அவருக்கு எதிரே வந்தனர். அவர்கள் எவ்வளவு கொடியவர்கள் என்றால், அவ்வழியே யாரும் போக முடியாது. இதோ! அவர்கள், "கடவுளின் மகனே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர்? குறித்த காலம் வருமுன்னே எங்களை வதைக்க இங்கே வந்தீரோ?" என்று கத்தினர்.

அவர்களுக்குச் சற்றுத் தொலையில் பன்றிகள் பல கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. அப்போது பேய்கள் அவரை நோக்கி, "நீர் எங்களை ஓட்டுவதாயிருந்தால் அப்பன்றிக் கூட்டத்திற்குள் அனுப்பும்"

என்று வேண்டின. அவர் "போங்கள்" என்றார். அவை வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. உடனே, கூட்டம் முழுதும் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து நீரில் மடிந்தது.

பன்றிகளை மேய்த்தவர்களோ ஓடிப்போய் நகருக்குச் சென்று எல்லாவற்றையும், பேய்பிடித்தவர்களைப்பற்றிய செய்தியையும் அறிவித்தார்கள். இதோ! நகரினர் அனைவரும் யேசுவை எதிர்கொண்டு போய் அவரைக் கண்டு, தம் நாட்டைவிட்டு அகலுமாறு அவரை வேண்டினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நம் முதுபெரும் தந்தை ஆபிரகாமின் பலி.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 22: 1-19

அந்நாட்களில் :

கடவுள் ஆபிரகாமைச் சோதிப்பதற்காக, அவரை: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட்டார். அவர், அடியேன் தயார் என்று கூற, கடவுள்: நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே புதல்வனை ஈசாக்கைத் தரிசனைப் பூமிக்குக் கூட்டிக் கொண்டு போய், அங்கே நாம் உனக்குக் காட்டும் ஒரு மலையின் மீது அவனைத் தகனப்பலியாக ஒப்புக் கொடுப்பாய், என்று மொழிந்தருளினார்.

அவ்வாறே ஆபிரகாம் இரவில் எழுந்து தமது கழுதைக்குச் சேணம் போட்டு, தம்மோடு இரண்டு ஊழியரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டு போய்த் தகனப் பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை வெட்டின பின், கடவுள் தமக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கிப் பயணமானார். மூன்றாம் நாள் அவர் கண்களை உயர்த்தி அவ்விடத்தைத் தூரத்திலிருந்து கண்டபோது, தம் ஊழியர்களை நோக்கி: நீங்கள் கழுதையைப் பார்த்துக் கொண்டு இங்கே காத்திருங்கள். நானும் என் மகனும் அவ்விடம் விரைந்து சென்று (ஆண்டவரை) ஆராதித்த பின் உங்களிடம் திரும்பி வருவோம் என்றார்.

பின் தகனப் பலிக்கு வேண்டிய கட்டைகளை எடுத்து, தம் மகன் ஈசாக்கின் (தோளின்) மீது சுமத்தினார்; நெருப்பையும் வாளையும் கையில் எடுத்துக்கொண்டார். இவ்வாறு இருவரும் சேர்ந்து செல்கையில், ஈசாக் தன் தந்தையை நோக்கி, அப்பா! என, அவர்: ஏன் மகனே! என்று கேட்டார். அதற்கு: இதோ நெருப்பும் கட்டைகளும் இருக்கின்றன. தகனப் பலிக்கு வேண்டிய மிருகம் எங்கே? என்று வினவினான். ஆபிரகாம்: தகனப் பலிக்கு வேண்டிய மிருகத்தைக் கடவுளே தயார் செய்து கொடுப்பார் மகனே! என்றார். இருவரும் ஒன்றாக நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

கடவுள் ஆபிரகாமுக்குக் காண்பித்திருந்த இடத்தை அவர்கள் அடைந்ததும், அவர் அங்கே ஒரு பீடம் அமைத்து அதன்மேல் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டிப் பீடத்தில் அடுக்கியிருந்த விறகுக் கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தி, தம் கையை நீட்டி வாளை உருவி அவனைப் பலியிட முயற்சித்தார். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் வானத்தினின்று: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட, அவர் அடியேன் தயார் என்று பதில் கூறினார். அவர்: உன் பிள்ளையின்மேல் கையோங்கி அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடையவனாய், நம்பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத் தயங்கவில்லை என்று நாம் இப்போது அறிந்துகொண்டோம் என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை ஏறெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், முட்செடியிலே கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கண்டார்; அதைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக அதைத் தகனப் பலியாய் ஒப்புக்கொடுத்தார். அவ்விடத்திற்கும், ஆண்டவர் காண்கிறார், என்று பெயரிட்டார். அதனாலே, இந்நாள் வரை, ஆண்டவர் மலையிலே காண்பார், என்று சொல்லப்பட்டு வருகின்றது.

ஆண்டவருடைய தூதர் வானத்தினின்று மீண்டும் ஆபிரகாமைக் கூப்பிட்டு: ஆண்டவர் சொல்லுகிறதாவது: நம் பெயரைச் சொல்லி நாம் ஆணையிட்டு வாக்குறுதி செய்வது ஏதெனில், நீ அச்செயலைச் செய்ததனாலும், நம்மைப் பற்றி நீ உன் ஒரே மகனையும் பலியிட மனம் துணிந்ததனாலும், நாம் உன்னை ஆசீர்வதித்து, விண் மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் இனம் பெருகச் செய்வோம். உன் இனம் தன் பகைவர்களின் வாயில்களை உரிமையாக்கிக்கொள்ளும். அன்றியும், நீ நமது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததினால் பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

பின் ஆபிரகாம் தம் ஊழியர் இருந்த இடத்திற்குத் திரும்பிவர, அவர்கள் எல்லாரும் ஒன்றாக பெற்சபேயை அடைந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 114 : 1-2, 3-4, 5-6, 8-9 (பல்லவி : 9)

பல்லவி : ஆண்டவர் திருமுன் நடந்திடுவேன் :
வாழ்வோர் நாட்டில் வாழ்ந்திடுவேன்.

1 ஆண்டவர்மீது அன்பு வைத்தேன் : ஏனெனில், என் மன்றாட்டின் குரலை
அவர் கேட்டருளினார்.
2 ஏனெனில், அவரை நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவி சாய்த்
தருளினார். பல்லவி

3 மரணத்தின் தளைகள் என்னை வளைத்துக்கொண்டன ;
பாதாளங்களின் கண்ணிகள் என்னைப் பற்றிக்கொண்டன :
கவலைக்கும் துன்பத்துக்கும் நான் ஆளானேன்.
4 நானோ ஆண்டவருடைய பெயரைக் கூவி அழைத்தேன். 'ஓ ஆண்டவரே,
என் உயிரைக் காத்தருளும்' என்று வேண்டினேன். பல்லவி

5 ஆண்டவர் கருணையும் நீதியுமுள்ளவர் ; நம் இறைவன் இரக்கமுள்ளவர்.
6 எளியோரை ஆண்டவர் காக்கின்றார். துயர்மிக்கவனான எனக்கு
மீட்பளித்தார். பல்லவி

8 ஏனெனில், என் ஆன்மாவை மரணத்தினின்று விடுவித்தார் : நான்
கண்ணீர் சிந்தாதபடியும் என் கால்கள் இடறி விழாதபடியும் காப்
பாற்றினார்.
9 நான் ஆண்டவர் திருமுன் நடந்திடுவேன் ; வாழுவோர் நாட்டில்
வாழ்ந்திடுவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நம் மக்களிடம் போய் இறைவாக்குக் கூறு.**

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 10-17

*அந்நாட்களில் :*

பேத்தேலின் அர்ச்சகனாகிய அமாசியாஸ் என்பவன் இஸ்ராயேல் அரசனாகிய யெரோபோவாமுக்கு இவ்வாறு சொல்லியனுப்பினான் : "இஸ்ராயேல் வீட்டார்களின் நடுவில் ஆமோஸ் உமக்கு எதிராகக் கலகம்

விளைவிக்கிறான் ; நாடு அவன் சொற்களைப் பொறுக்க இயலாது. ஏனெனில், ஆமோஸ், 'யெரோபோவாம் வாளால் மடிவான் ; அவனது நாட்டை விட்டு இஸ்ராயேல் அடிமையாய்க் கொண்டுபோகப்படும்' என்று சொல்லுகிறான்."

பின்பு அமாசியாஸ் ஆமோசைப் பார்த்து, "காட்சி காண்பவனே, போய்விடு ; யூதாவின் நாட்டுக்கு ஓடிவிடு ; அங்கே போய் இறைவாக்குச் சொல், பிழைப்புத் தேடிக் கொள். இனிப் பேத்தேலில் மறுபடியும் இறைவாக்குச் சொல்லாதே ; ஏனெனில் இது அரசரின் பரிசுத்த இடம், அரசுக்குரிய கோயில்" என்று சொன்னான்.

ஆமோஸ் அதற்கு மறுமொழியாக அமாசியாசைப் பார்த்துக் கூறினார் : "இறைவாக்கினனுமல்லேன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனுமல்லேன் ; நான் ஆடுமாடு மேய்ப்பவன், காட்டு அத்தி மரங்களைக் கண்காணிப்பவன். ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோன என்னை ஆண்டவர் தெரிந்தெடுத்து, 'நம் மக்களாகிய இஸ்ராயேலிடம் போய், இறைவாக்குக் கூறு' என்று அனுப்பினார்.

இப்பொழுது ஆண்டவரின் வாக்கைக் கேள் : இஸ்ராயேலுக்கு எதிராக இறைவாக்குச் சொல்லாதே, ஈசாக்கின் வீட்டாருக்கு எதிராகப் பேசாதே' என்று நீ சொல்லுகிறாயே! ஆதலால் ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: 'உன் மனைவி நகரத்தில் விலைமகளாய் இருப்பாள், உன் புதல்வர் புதல்வியர் வாளால் மடிவார்கள், உன் நிலபுலம் பங்குபோட்டுக் கொள்ளப்படும், நீயோ தீட்டுள்ள நாட்டிலே மாண்டுபோவாய் ; இஸ்ராயேல் தன் நாட்டை விட்டுத் தொலை நாட்டுக்கு அடிமைகளாய்க் கூட்டிப் போகப்படும்.'"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 18 : 7, 8, 9, 10 (பல்லவி : 9 b)

பல்லவி : ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை ;
அவையெல்லாம் நீதியானவை.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது : ஆண்டவருடைய கட்டளை உறுதியானது; எளியோருக்கு அறிவூட்டுவது.
பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை : உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை : ஆண்டவரது கற்பனை தூய்மையானது ; கண்களுக்கு ஒளியூட்டுவது.
பல்லவி

9 *ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது ; என்றென்றும் நிலைத்திருப்பது:*
*ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை ; அவை எல்லாம்*
*நீதியானவை.* பல்லவி

10 *பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத்தக்கவை : தேனினும்*
*தேனடையினும் இனிமையானவை.* பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 5 : 19

அல்லேலூயா : கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார் : அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இத்தகைய வல்லமையை மனிதருக்கு அளித்த கடவுளை மகிமைப்படுத்தினர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 1-8

அக்காலத்தில் :

யேசு படகேறி அக்கரை சென்று தம் சொந்த ஊரையடைந்தார். இதோ ! திமிர்வாதக்காரன் ஒருவனைக் கட்டிலில் கிடத்தி அவரிடம் கொண்டுவந்தனர். யேசுவோ அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர் வாதக்காரனை நோக்கி, "மகனே, தைரியமாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.

அப்போது மறைநூல் அறிஞர் சிலர், "இவர் கடவுளை நிந்திக்கிறார்" என்று தமக்குள் சொல்லிக் கொண்டனர். யேசு, அவர்கள் சிந்தனைகளை அறிந்து கூறியதாவது : "உங்கள் உள்ளங்களில் தீயன சிந்திப்பானேன் ? எது எளிது ? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதா ? எழுந்து நட என்பதா ? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு" — திமிர்வாதக்காரனை நோக்கி— "எழுந்து உன் கட்டிலைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போ" என்றார். அவன் எழுந்து தன் வீடு சென்றான்.

இதைக் கண்ட மக்கட் கூட்டம் அஞ்சி, இத்தகைய வல்லமையை மனிதருக்கு அளித்த கடவுளை மகிமைப்படுத்திற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இரெபேக்காள்மீது ஈசாக் கொண்டிருந்த அன்பு எவ்வளவு என்றால், தாயின் மரணத்தால் ஏற்பட்டிருந்த துயரமும் அதனால் பெரும்பாலும் தணிந்து போயிற்று.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *23: 1-4, 19; 24: 1-8, 62-67*

சாராள் நூற்றிருபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த பின், கானான் நாட்டிலுள்ள எபிரோன் என்னும் பெயருள்ள அற்பே நகரில் இறந்தாள். அவளுக்காகப் புலம்பி அழும்படி ஆபிரகாம் வந்தார்.

இறுதிக்கடன்களை முடித்த பின் அவர் எழுந்து, ஏட் என்பவனுடைய புதல்வர்களோடு பேசி: நான் உங்களிடையே அந்நியனும் அகதியுமாய் இருக்கிறேன். என் வீட்டுப் பிணத்தை அடக்கம் செய்வதற்கு எனக்குச் சொந்தமாக உங்களிடமுள்ள ஒரு கல்லறை நிலத்தைத் தரவேண்டும் என்று மன்றாடினார். இவ்வாறு மம்பிறேய்க்கு எதிரான அந்த நிலத்திலுள்ள இரட்டைக் குகையில் ஆபிரகாம் தம் மனைவி சாராளை அடக்கம் செய்தார். கானான் நாட்டிலுள்ள எபிரோன் அதுவேயாம்.

ஆபிரகாம் எல்லாக் காரியங்களிலும் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப் பட்டு, வயதில் முதிர்ந்தவராய் இருந்தார்.

அவர் தம் வீட்டிலுள்ள ஊழியர்களில் வயதில் மூத்தவனும், தனக்குள்ள எல்லாவற்றிற்கும் மேற்பார்வையாளனுமானவனை நோக்கி; உன் கையை என் தொடையின் கீழ் வைத்து, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராகிய கடவுள்மேல் ஆணையிட்டு, நான் வாழும் இக்கானான் நாட்டுப் பெண்களிடையே நீ என் மகனுக்குப் பெண் கொள்ளாமல், என் சொந்த நாட்டிற்குப் போய், என் உற்றாரிடம் என் மகன் ஈசாக்கிற்குப் பெண் கொள்வாய் என்று உண்மையாகச் சொல் என்றார்.

அதற்கு ஊழியன் ; சிலவேளை பெண் என்னோடு இந்நாட்டிற்கு வர மனமில்லாதவளானால், தாங்கள் விட்டு வந்த அந்நாட்டிற்குத் தங்கள் மகனைக் கூட்டிக்கொண்டு போகலாமா? என்று கேட்க, ஆபிரகாம்: அவ்விடத்திற்கு என் மகனை ஒருகாலும் கூட்டிக்கொண்டு போகாதே. என் தந்தை வீட்டினின்றும், நான் பிறந்த நாட்டினின்றும் என்னை அழைத்து வந்து என்னோடு பேசி: இந்த நாட்டை உன் இனத்தாருக்குத் தருவோம், என்று ஆணையிட்டுத் திருவாக்கருளிய அந்த விண்ணக ஆண்டவராகிய கடவுளே உனக்கு முன் தம் தூதனை அனுப்பி வைப்பார். நீ போய்

அவ்விடத்தில் என் மகனுக்கு ஒரு பெண் பார்ப்பாயாக. உன்னைப் பின் தொடர்ந்துவர அப்பெண்ணிற்கு மனமில்லாதிருந்தால் ஆணையைப்பற்றி உனக்கு யாதொரு கடமையுமில்லை. என் மகனை மட்டும் அவ்விடத்திற்குக் கூட்டிக் கொண்டு போகாதே என்று மறுமொழி சொன்னார்.

தென்னாட்டில் வாழ்ந்து வந்த ஈசாக் அந்நேரத்தில், வாழ்கிறவரும் காண்கிறவரும் என்று சொல்லப்படும் கிணற்றுக்குப் போகும் வழியில் உலாத்திக் கொண்டிருந்தான். பொழுது சாய்ந்தபோது, அவன் தியானம் பண்ண வெளியே போயிருக்கையில், தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்க, தூரத்தில் ஒட்டகங்கள் வருவதைக் கண்டான். இரெபேக்காளும் ஈசாக்கைக் கண்டவுடனே ஒட்டகத்தை விட்டிறங்கி, ஊழியனை நோக்கி: அதோ வெளியிலே நம்மை எதிர்கொண்டு வரும் அந்த மனிதர் யார் என்று வினவினாள். அதற்கு அவன்: அவரே என் தலைவர் என்றான். அவள் உடனே முக்காடிட்டுத் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

ஊழியன் போய், தான் செய்தவற்றையெல்லாம் ஈசாக்கிற்கு விவரித்துச் சொன்னான். ஈசாக் இரெபேக்காளைத் தன் தாயாகிய சாராளின் கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டு போய், அவளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான். அவள் மீது அவன் கொண்டிருந்த அன்பு, எவ்வளவென்றால், தாயின் மரணத்தினாலே அவனுக்கு ஏற்பட்டிருந்த துயரமும் அதனால் பெரும்பாலும் தணிந்து போயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 105 : 1-2, 3-4a, 4b-5 (பல்லவி : 1a)

பல்லவி : ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில் அவர் நல்லவர்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில், அவர் நன்மை மிகுந்தவர்.
என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.
2 ஆண்டவர் செய்த வல்லமைமிக்க செயல்களை யார் எடுத்துரைக்க இயலும்?
அவருடைய புகழனைத்தையும் யார் விளம்ப இயலும்? பல்லவி

3 அவர் தந்த கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் பேறுபெற்றோர் :
நீதியானதை எந்நாளும் செய்பவர் பேறுபெற்றோர்.
4 ஆண்டவரே, நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப என்னை நினைவு கூரும். பல்லவி

5 உமது உதவியை எனக்குத் தாரும். அப்போது உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குள்ள பெரும் பேற்றைக் கண்டு நான் இன்புறுவேன் : உம் மக்களின் மகிழ்ச்சியைக் கண்டு நானும் மகிழ்ச்சியுறுவேன் : உம் உரிமைப் பேறான மக்களோடு நான் பெருமை அடைவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*உணவில்லாத பஞ்சத்தையன்று, ஆண்டவரின்
வார்த்தையைக் கேட்காதிருக்கும் பஞ்சத்தை அனுப்புவோம்.*

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 8: 4-6, 9-12

எளியவர்களை நசுக்கி, நாட்டில் உள்ள ஏழைகளை ஒழிக்கத் தேடுகிறவர்களே, இதைக் கேளுங்கள் : "நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்? ஓய்வு நாள் எப்பொழுது முடிவுறும்? முடிந்தால், கோதுமையை நல்ல விலைக்கு விற்கலாம், படியைச் சிறிதாக்கி, ஷெக்கெல் நிறையை உயர்த்தி கள்ளத்தராசினால் மோசடி செய்யலாம்; பணத்துக்கு ஏழைகளையும், ஒரு சோடி செருப்புக்கு எளியவர்களையும் வாங்கலாம், கோதுமைப் பதர்களையும் விற்கலாம்" என்றெல்லாம் நீங்கள் ஏங்குகிறீர்கள்.

இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார் : "அந்நாளில், நண்பகலில் கதிரவனை மறையச் செய்து பட்டப் பகலிலே நாம் பூமியை இருள்சூழச் செய்வோம். உங்கள் திருவிழாக்களை அழுகையாகவும், பாடல்களையெல்லாம் புலம்பல்களாகவும் மாற்றுவோம்; ஒவ்வொருவனையும் இடையில் கோணியுடுத்தவும், ஒவ்வொரு தலையும் மழிக்கப்படவும் செய்வோம். ஒரே பிள்ளையைப் பறிகொடுத்துப் புலம்புவதுபோலப் புலம்பச் செய்வோம்; அதன் முடிவு கசப்பு மிக்க நாளாய் இருக்கும்.

இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார் : "இதோ நாட்கள் வருகின்றன ; அப்போது நாட்டில் பஞ்சம் அனுப்புவோம் ; அது உணவு கிடைக்காத பஞ்சமோ, நீரில்லாத வறட்சியோ அன்று, ஆண்டவரின் வார்த்தையைக் கேட்காதிருக்கும் பஞ்சமே அது. ஒரு கடல்முதல் இன்னொரு கடல்வரைக்கும் வடதிசைமுதல் கீழ்த்திசைவரை தேடியலைந்து அங்குமிங்கும் தள்ளாடி ஆண்டவரின் வார்த்தையைத் தேடுவார்கள் ; ஆனால் அவர்கள் அதைக் கண்டடைய மாட்டார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 2, 10, 20, 30, 40, 131 (பல்லவி : மத். 4 : 4)

பல்லவி : **மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்.**

2 அவருடைய ஆணைகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர் : முழு மனத்தோடு அவரைத் தேடுவோர் பேறு பெற்றோர். பல்லவி

10 முழு மனத்தோடு நான் உம்மைத் தேடுகிறேன் ; உம் கற்பனைகளை விட்டுத் தவறிச்செல்ல என்னை விடாதேயும். பல்லவி

20 எந்நேரமும் உம் விதிகளின்மீது ஆசை வைத்திருப்பதால் என் உள்ளம் உருகிப்போகின்றது. பல்லவி

30 உண்மையின் பாதையை நான் தேர்ந்துகொண்டேன், உம் முறைமைகளை என் கண்முன் கொண்டேன். பல்லவி

40 உம் கட்டளைகளைப் பெரிதும் விரும்பினேன், உமது நீதியின்படி எனக்கு வாழ்வளித்தருளும். பல்லவி

131 வாய் திறக்கிறேன், பெருமூச்சு விடுகிறேன் : ஏனெனில் உம் கற்பனைகளை விரும்புகிறேன். பல்லவி

அல்லேலூயா மத். 11 : 28

அல்லேலூயா. சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள் ; உங்களை நான் இளைப்பாற்றுவேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று; நோயுற்றவர்க்கே தேவை ; பலியையன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 9-13

அக்காலத்தில் :

யேசு அங்கிருந்து போகையில், மத்தேயு என்ற ஒருவர் சுங்கத் துறையில் அமர்ந்திருக்கக் கண்டு அவரை நோக்கி, "என்னைப் பின்செல்" என்றார். அவர் எழுந்து அவரைப் பின்சென்றார்.

பின், அவர் வீட்டில் யேசு பந்தியமர்ந்திருக்கையில் இதோ! ஆயக்காரர், பாவிகள் பலர் அவருடனும் சீடருடனும் ஒருங்கே அமர்ந்திருந்தனர். இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீடரைப் பார்த்து, "உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் உண்பதேன்?" என்றனர்.

இதைக் கேட்ட யேசு, "மருத்துவன் நோய் அற்றவருக்கன்று, நோயுற்றவருக்கே தேவை. 'பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதன் கருத்தைப் போய்க் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நீதிமான்களை அன்று, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யாக்கோபு தன் சகோதரனை வஞ்சித்து, அவனுக்குரிய ஆசியைக் கவர்ந்து கொண்டான்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 27: 1-5, 15-29

ஈசாக் முதியவனானதனால் அவன் கண்கள் கெட்டுப் பார்வை அற்றுப் போயின. ஒரு நாள் அவன் தன் மூத்த மகன் எசாயூவைக் கூப்பிட்டு, என் மகனே, என்று அழைக்க எசாயூ: இதோ வருகிறேன், என்று பதில் கூறினன். தந்தை அவனை நோக்கி: நானோ கிழவன். என் மரணம் எப்பொழுது வருமென்று அறிந்திலேன். ஆகையால், உன் ஆயுதங்களாகிய அம்புக்கூட்டையும் வில்லையும் எடுத்துக்கொண்டு வெளியே சென்று, வேட்டையில் அகப்பட்டதைக் (கொண்டுவந்து) எனக்கு விருப்பமான சமையலை நீ அறிந்துள்ளபடி சமைத்து, நான் உண்ணும்படியும், சாகுமுன் முழு அன்புடன் உன்னை ஆசீர்வதிக்கவும், (அதை) என்னிடம் கொண்டு வா என்றான்.

இரெபேக்காள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். எசாயூ தந்தையின் கட்டளையை நிறைவேற்றும்படி காட்டிற்குப் புறப்பட்டுப் போனவுடனே, வீட்டிலே தன்னிடம் இருந்த எசாயூவின் உடைகளில் மிக நல்லவற்றை எடுத்து அவனுக்கு அணிவித்து, அவன் கைகளிலும் உரோமமற்ற கழுத்திலும் வெள்ளாட்டுத் தோலைக் கட்டி, கறிவகைகளையும், தான் சுட்ட அப்பங்களையும் அவனிடம் கொடுத்தாள்.

அவன் அவற்றைக் கொண்டுபோய் : அப்பா ! என்று அழைத்தான். அதற்கு ஈசாக்: காது கேட்கிறது, மகனே, நீ யார் என்று கேட்க, யாக்கோபு : நான் உமது மூத்த மகனாகிய எசாயூதான். நீர் எனக்குக் கட்டளையிட்டபடி செய்துள்ளேன். எழுந்து உட்கார்ந்து என் வேட்டைப் (பொருளை) உண்ணும் என்றான். ஈசாக மறுபடியும் தன் மகனை நோக்கி: மகனே, இது உனக்கு இவ்வளவு சீககிரத்தில் எப்படி அகப்பட்டது என, அவன்: ஆண்டவர் அருளால் நான் விரும்பியது உடனே எனக்குக் கிடைத்தது என்று மறுமொழி சொன்னான்.

ஈசாக்: மகனே, கிட்ட வா, நீ என் மகன் எசாயூதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப் பார்த்தே உறுதி கொள்வேன் என்றான். யாக்கோபு தந்தை அருகில் வந்தான். ஈசாக் அவனைத் தடவிப் பார்த்து: குரல் யாக்கோபின் குரல்: கைகளோ எசாயூவின் கைகள் என்று சொல்லி, (ஆட்டு) மயிர்களால் மூடியிருந்த அவனுடைய கைகள் மூத்தவனுடைய கைகளைப் போன்று தோன்றினதால், அவன் இன்னானென்று அறியாமல் அவனை ஆசீர்வதித்து: நீ என் மகன் எசாயூதானா என்று வினவ, அவன் : நான்தான் எனப் பதில் கூறினான்.

அப்பொழுது ஈசாக்: நீ பிடித்த வேட்டையைச் சமைத்திருக்கிறாயே, அதைக் கொண்டு வா, மகனே! அதன் பின்பே நான் உன்னை ஆசீர் வதிப்பேன் என்றான். அப்படியே முன் வைக்கப்பட்ட கறியை உண்டான். உண்டு முடித்தபின், (யாக்கோபு) தன் தந்தைக்குத் திராட்சை இரசமும் கொணர்ந்து கொடுத்தான். அதைக் குடித்து முடித்ததும், (ஈசாக்) மகனை நோக்கி: மகனே, என் கிட்ட வந்து என்னை முத்தம் செய் என்றான். அவன் கிட்டப் போய் அவனை முத்தமிட, ஈசாக் அவனது ஆடைகளின் நறுமணத்தை முகர்ந்து :

இதோ, என் மகன் விடுகின்ற மணம் ஆண்டவர் ஆசீர்வதித்த விளைநிலத்தின் வாசனைபோல் இருக்கின்றதே! கடவுள் கருணை புரிந்து உனக்கு வானத்துப் பனியையும், பூமியின் செழுமையையும், மிகுந்த தானியத்தையும், திராட்சை இரசத்தையும் தந்தருள்வாராக. நாடுகள் உனக்குப் பணி புரியவும், மக்கள் உன்னை வணங்கவும் கடவர். நீ உன் சகோதரர்களுக்குத் தலைவனாய் இரு. உன் தாயாருடைய மக்களும் உனக்கு முன் பணியக கடவார்கள். உன்னைச் சபிப்பவன் சபிக்கப்பட்டவனாகவும், உன்னை ஆசீர்வதிப்பவன் ஆசிகளால் நிறைந்தவனாகவும் இருக்கக்கடவான் என்று ஆசீர்வதித்தான்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 134: 1-2, 3-4, 5-6 (பல்லவி : 3a)

பல்லவி: **ஆண்டவரைப் போற்றுங்கள். ஏனெனில் அவர் நல்லவர்.**

அல்லது: **அல்லேலூயா.**

1 **ஆண்டவர் தம் திருப்பெயரைப் போற்றுங்கள். ஆண்டவர் தம்**
**ஊழியர்களே, அதனைப் போற்றுங்கள்.**
2 **ஆண்டவர் தம் இல்லத்தில் இருப்பவர்களே, நம் இறைவனின் இல்லத்து**
**முற்றங்களில் உள்ளவர்களே, அவரைப் போற்றுங்கள்.** பல்லவி

3 **ஆண்டவரைப் போற்றுங்கள்; ஏனெனில் அவர் நல்லவர்:**
**அவர் திருப்பெயருக்குப் புகழ் பாடுங்கள். ஏனெனில் அது இனிமை மிக்கது.**
4 **ஆண்டவர் யாக்கோபைத் தமக்கெனத் தேர்ந்துகொண்டார்: இஸ்ரா**
**யேலைத் தம் சொந்த உடைமையாகத் தேர்ந்தெடுத்தார்.** பல்லவி

5 **ஆண்டவர் உயர்ந்தவர்: தேவர்கள் அனைவரையும்விட நம்மீது அதிகாரம்**
**கொண்டவர்; இதை நான் நன்கறிவேன்.**
6 **விண்ணிலும் மண்ணிலும் கடலிலும் நீர்த்திரளின் ஆழத்திலும், தாம்**
**விரும்பியதையெல்லாம் அவர் செய்கின்றார்.** பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நம் மக்களின் அடிமைத்தனத்தை மாற்றுவோம்;**
**அவர்களைத் தம் நாட்டில் திரும்ப நாட்டுவோம்.**

**இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 9: 11-15

**ஆண்டவர் கூறுவதாவது:**

**அந்நாளில், விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புவோம்; அதிலுள்ள திறப்புகளைப் பழுதுபார்த்துப் பழுதானவற்றைச் சேர்ப்படுத்திப் பண்டைநாளில் இருந்தது போலவே மறுபடி கட்டுவோம்; அப்பொழுது, ஏதோமில் எஞ்சியிருப்போரையும், நமது திருப்பெயரைத் தாங்கியிருக்கும் புறவினத்தார் அனைவரையும் அவர்கள் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்வார்கள் என்கிறார் இதைச் செயல்படுத்தும் ஆண்டவர்.**

இதோ, நாட்கள் வருகின்றன, அப்போது அறுவடை செய்பவனை ஏர் உழுகிறவனும், விதைப்பவனைத் திராட்சைப்பழம் பிழிபவனும் தொடர்ந்து சென்று பிடிப்பார்கள்; மலைகள் புதிய இரசத்தைப் பொழியும், குன்றுகளிலெல்லாம் அது வழிந்தோடும்" என்கிறார் ஆண்டவர். "நம் மக்களாகிய இஸ்ராயேலை முன்போல நன்னிலைக்குக் கொணர்வோம். அவர்கள் பாழடைந்த நகரங்களைத் திரும்பக் கட்டி அவற்றில் குடியேறுவார்கள்; திராட்சைத் தோட்டங்களை நட்டும் பயிர் செய்து அவற்றின் இரசத்தைக் குடிப்பார்கள்; பழத் தோட்டங்களைப் போடுவார்கள், அவற்றிலிருந்து கனிகளைப் புசிப்பார்கள். அவர்கள் நாட்டில் நாம் அவர்களைத் திரும்ப நாட்டுவோம், நாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் நாட்டிலிருந்து இனி அவர்கள் மறுபடியும் அகற்றப்படமாட்டார்கள் என்கிறார் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்"

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 84 : 8, 10-11, 12-13 (பல்லவி : 8 காண்.)*

பல்லவி : **ஆண்டவர் தம் மக்களுக்குக் கூறுவது சமாதானமே.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன் : அவர் பேசுவதோ சமாதானமே.
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும், மனந்திரும்பி அவரிடம் செல்வோருக்கும் அவர் கூறுவது சமாதானமே. பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும் : நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும் : நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார் : நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## அல்லேலூயா

*அரு. 10 : 27*

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன் : அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மணமகன் தங்களோடு இருக்குமளவும், அவன் தோழர்கள் துக்கம் கொண்டாடலாமா ?**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 14-17

அக்காலத்தில் :

அருளப்பருடைய சீடர்கள் யேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அடிக்கடி நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை ?" என்றார்கள். யேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்குமளவும், அவன் தோழர்கள் துக்கம் கொண்டாடலாமா ? மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும் ; அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்.

பழைய ஆடையில் கோடித் துணியை எவனும் ஒட்டுப்போடுவதில்லை. ஏனெனில், அந்த ஒட்டு ஆடையைக் கிழிக்கும் ; கிழியலும் பெரிதாகும். புதுத் திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பதில்லை. வைத்தால் சித்தைகள் வெடிக்கும் ; இரசம் சிந்திப்போகும் ; சித்தைகளும் பாழாகும். ஆனால் புது இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றிவைப்பர். அப்போது இரண்டும் கெடாமலிருக்கும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பதினான்காம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ உன் அரசர் எளியவராய் உன்னிடம் வருகிறார்.**

இறைவாக்கினர் சக்கரியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *9: 9-10*

ஆண்டவர் கூறுவதாவது :

சீயோன் மகளே, மிகுந்த மகிழ்ச்சியால் அக்களி, யெருசலேம் மகளே, ஆர்ப்பரி; இதோ, உன் அரசர் உன்னிடம் வருகிறார், நீதியும் வெற்றியும் பெற்றுக்கொண்ட அந்த வீரர் எளியவர்; கழுதையின் மேலும், பொதிமிருகக் குட்டியின்மேலும் அமர்ந்து வருகிறார். எப்பிராயீமிடமிருந்து தேர்ப்படையையும், யெருசலேமிலிருந்து குதிரைப்படையையும் அழிப்போம்; போர்க்கருவியான வில் முறிக்கப்படும்; புறவினத்தார்க்குச் சமாதானத்தை அறிவிப்பார்; அவருடைய ஆட்சி ஒரு கடல் முதல் மறுகடல்வரையும், பேராறுமுதல் மாநிலத்தின் எல்லைகள் வரையும் செல்லும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144 : 1-2, 8-9, 10-11, 13cd-14 (பல்லவி : 1 காண்.)*

பல்லவி : என் இறைவா, என் அரசே,
என்றென்றும் உம் பெயரைப் புகழ்வேன்.

1 என் இறைவா, என் அரசே, நான் உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
என்றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.
2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன். என்றென்றைக்கும் உம்
திருப்பெயரைப் புகழ்வேன். பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர். சினங்கொள்ளத் தாமதிப்பவர்.
அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்: தம் படைப்புகள்
அனைத்தின் மீதும் இரக்கம்காட்டுபவர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக. உம்மு
டைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக. உமது
ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக.

பல்லவி

13 ஆண்டவர் தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவராயிருக்கிறார்.
தம் செயல்களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார்: தாழ்த்
தப்பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தேவ ஆவியின் செயலால் உடலின் செயல்களைச் சாகடித்தால், வாழ்வீர்கள்.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்**

8: 9, 11-13

சகோதரர்களே:

நீங்கள் ஊனியல்புக்கு உட்பட்டவர்கள் அல்ல; ஆவியின் செயலுக்கு உட்பட்டவர்கள். ஆனால், கடவுளின் ஆவி உங்களுள் குடியிருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் ஆவியை ஒருவன் கொண்டிராவிடில், அவன் கிறிஸ்தவன் அல்லன். இறந்தோரிடமிருந்து யேசுவை உயிர்ப்பித்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்தவர் உங்களுள் குடிகொண்டுள்ள தமது ஆவியாலேயே சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார்.

இதனால் சகோதரர்களே! நாம் கடமைப்பட்டிருப்பது, ஊனியல்புக்கு அன்று; அதன்படி நாம் வாழ வேண்டுமென்பதில்லை. ஏனெனில், நீங்கள் இந்த இயல்புக்கு ஏற்றபடி வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள்; ஆனால், ஆவியின் செயலால், உடலின் செயல்களைச் சாகடித்தால், வாழ்வீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

மத். 11: 25 காண்

அல்லேலூயா: தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி. ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:25-30

அக்காலத்தில் : யேசு கூறியதாவது :

"தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய், இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று, தந்தையன்றி வேறெவனும் அறியான். தந்தை யாரென்று மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவனும் அறியான்.

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*தங்கள் நடுவில் இறைவாக்கினர் ஒருவர் அனுப்பப்பட்டுள்ளார் என்பதை அந்தக் கலகக்காரர்கள் அறிந்துகொள்ளட்டும்.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 2: 2-5

அந்நாட்களில் :

ஆவி என்னுள் புகுந்து என்னை என் கால்களின்மேல் நிலைநிறுத்திற்று; என்னிடம் பேசியவரின் குரல் கேட்டது.

அவர் என்னிடம் கூறியது: "மனிதா, எம்மை விட்டு அகன்றுபோன கலகக்காரராகிய இஸ்ராயேல் மக்களிடம் உன்னை நாம் அனுப்புகிறோம். அவர்களும் அவர்களின் தந்தையரும் இந்நாள் வரை எம் உடன்படிக்கையை மீறினார்கள். நாம் யாரிடத்தில் உன்னை அனுப்புகிறோமோ

அவர்கள் விவேகமற்றவர்கள்; முரட்டுத்தனம் உள்ளவர்கள். நீ போய் அவர்களிடத்தில், 'இது ஆண்டவராகிய இறைவன் வாக்கு' என்று சொல். நீ சொல்வதை அவர்கள் கேட்பார்களோ, கேட்டுப் பாவஞ் செய்யாமல் இருப்பார்களோ, தெரியாது; ஆயினும், தங்கள் நடுவில் இறைவாக்கினர் ஒருவர் அனுப்பப்பட்டுள்ளார் என்பதை அந்தக் கலகக்காரர்கள் அறிந்து கொள்ளட்டும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 122 : 1-2a, 2 bcd, 3-4 (பல்லவி : 2 cd)*

பல்லவி : ஆண்டவர் நம்மீது இரக்கம் காட்டும்வரை நம் கண்கள் அவரைப் பார்த்தபடியே இருக்கும்.

1 வானுலகில் உறைபவரே, உம்மை நோக்கி என் கண்களை உயர்த்துகிறேன் :
2 பணியாட்களின் பார்வை தம் தலைவர்களின் கையைப் பார்த்து நிற்பது
போலவே. பல்லவி

பணிப் பெண்ணின் கண்கள் தன் தலைவியின் கையைப் பார்த்து நிற்பது போல, நம் கண்கள் நம் ஆண்டவராகிய கடவுளையே பார்க்கின்றன : நம்மீது இரக்கம் காட்டும்வரை அவரைப் பார்த்தபடியே இருக்கும். பல்லவி

3 எம்மீது இரக்கம் வையும், ஆண்டவரே, எம்மீது இரக்கம் வையும்.
ஏனெனில், அளவுக்குமேல் நாங்கள் சிறுமையுற்றோம்.
4 சுகமாய் வாழ்வு உள்ளவர் செய்யும் ஏளனத்தாலும், செருக்குற்றோர்
காட்டும் இகழ்ச்சியாலும் எங்கள் உள்ளம் சலித்துப் போயிற்று. பல்லவி

## இரண்டாம் வாசகம்

என் குறைபாடுகளில்தான் மனமாரப் பெருமைப்படுவேன் :
அப்போதுதான் கிறிஸ்துவின் வல்லமை என்னுள் குடிகொள்ளும்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 12: 7-10

சகோதரர்களே :

எனக்கருளிய தனிப்பட்ட வெளிப்பாடுகளால் நான் செருக்குறாதபடி இறைவன் அனுப்பிய நோய் ஒன்று என் உடலில் தைத்த முள்போல் வருத்தியது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்தச் சாத்தான்

அனுப்பிய தூதனைப்போல் இருந்தது: நான் செருக்குறாதிருக்கவே இவ்வாறு நடந்தது. ஆதலால் என்னிடமிருந்து அதை அகற்றுமாறு மும்முறை ஆண்டவரை வேண்டினேன். அவரோ, "நான் தரும் அருள் உனக்குப் போதும்; ஏனெனில், மனித வலுவின்மையில்தான் என் வல்லமை சிறந்தோங்கும்" என்று சொல்லிவிட்டார்.

ஆகையால் நான் என் குறைபாடுகளில்தான் மனமாரப் பெருமைப் படுவேன். அப்போதுதான் கிறிஸ்துவின் வல்லமை என்னுள் குடிகொள்ளும். ஆகவே, நான் என் குறைபாடுகளைக் காணும்போது, இழிவுறும் போது, நெருக்கடியில் இருக்கும்போது, துன்புறுத்தப்படும்போது, இடுக்கண்ணுறும்போது கிறிஸ்துவை முன்னிட்டு நான் மனநிறைவோடு இருக்கிறேன். ஏனெனில், வலுவின்றி இருக்கும்போதுதான் நான் வலிமை மிக்கவனாயிருக்கிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — லூக். 4 : 18

அல்லேலூயா. ஆண்டவருடைய ஆவி என்மேலே. எளியோர்க்கு நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*சொந்த ஊரில் தவிர மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: -1-6

அக்காலத்தில் :

யேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் சொந்த ஊருக்கு வந்தார். அவர் சீடரும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஓய்வுநாளன்று செபக் கூடத்தில் போதிக்கத் தொடங்கினார்.

கேட்டவர் பலர் மலைத்துப்போய், "இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது? என்னே இவர் பெற்ற ஞானம்! என்னே இவர் கையால் ஆகும் புதுமைகள்! இவர் தச்சன் அல்லரோ? மரியாளின் மகன்தானே! யாகப்பன், சூசை, யூதா, சீமோன் இவர்களுடைய சகோதரர்தானே! இவர் சகோதரிகளும் இங்கு நம்மோடு இல்லையா?" என்று சொல்லி அவர் மட்டில் இடறல்பட்டனர்.

யேசு அவர்களை நோக்கி, "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு" என்றார். அங்கே பிணியாளர் ஒரு சிலர்மீது கைகளை வைத்துக் குணமாக்

கியது தவிர வேறு ஒரு புதுமையும் செய்யமுடியவில்லை. அவர்களுக்கு விசுவாசமில்லாததைக் கண்டு அவர் வியப்புற்றார். சுற்றிலுமுள்ள ஊர்களில் அவர் போதித்துக்கொண்டு வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ, ஆற்றுப்பெருக்குபோல் அவள்மேல் சமாதானத்தை நாம் பொழிந்திடுவோம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 66: 10-14c

யெருசலேமுடன் சேர்ந்து மகிழ்ச்சியடையுங்கள், அவள்மேல் அன்பு கொண்ட அனைவரும் அக்களியுங்கள்; அவளைக் குறித்துத் துயரப்படும் நீங்கள் எல்லோரும் அவளோடு சேர்ந்து அகமகிழுங்கள்.

அப்பொழுது, அவளுடைய ஆறுதலின் கொங்கைகளில் பால் குடித்து நீங்கள் நிறைவடைவீர்கள். அவளுடைய மகிமையின் பெருக்கினின்று இன்பமாய்ப் பருகி மிகுதியாய்த் திளைத்திருப்பீர்கள்.

ஏனெனில் ஆண்டவர் கூறுகிறார்: "இதோ, ஆற்றுப் பெருக்கு போல் அவள்மேல் சமாதானத்தை நாம் பொழிந்திடுவோம்; மடை புரண்டோடும் வெள்ளம்போல் அவள்மேல் மக்களினங்களின் மகிமையை ஓடச் செய்வோம்.

அவள் பாலை அருந்துவீர்கள், மார்போடணைக்கப்படுவீர்கள், மடிமேல் சீராட்டப் பெறுவீர்கள். தாயானவள் தன் மகவைச் சீராட்டுவது போல நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம், நீங்களும் யெருசலேமில் தேற்றப்படுவீர்கள். இவற்றை நீங்கள் காண்பீர்கள், உங்கள் இதயமும் மகிழ்ச்சி கொள்ளும்; உங்கள் எலும்புகள் புல்லைப்போலப் பசுமை பெற்றெழும். ஆண்டவர் தம்முடைய ஊழியர்களுக்கு நமது வல்லமையுள்ள கரத்தைக் காட்டுவார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 65 : 1-3a, 4-5, 6-7a, 16 & 20 (பல்லவி : 1)

பல்லவி : **மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.**

1 **மாநிலத்தோரே, நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.**
2 அவருடைய பெயரின் மாட்சிமையைப் புகழ்ந்து பாடுங்கள். அவரது புகழ் எங்கும் விளங்கச் செய்யுங்கள்.
3 இறைவனை நோக்கிக் கூறுங்கள் : உம் செயல்கள் எத்துணை மலைப்புக் குரியவை. பல்லவி

4 மாநிலமனைத்தும் உம்மை வணங்கி உமக்குப் புகழ் பாடுவதாக: உமது பெயரின் புகழைப்பாடுவதாக.
5 வாருங்கள், கடவுளுடைய செயல்களைப் பாருங்கள் : மனிதர்களிடையே அவர் செய்தவை மலைப்புக்குரியவையே ! பல்லவி

6 கடலை அவர் கட்டாந்தரையாக்கினார் ; ஆற்றை அவர்கள் நடந்து கடந்தனர் : ஆகவே, அவரை நினைத்து மகிழ்வோம்.
7 தம் வல்லமையால் அவர் என்றென்றும் ஆட்சி செலுத்துகின்றார். பல்லவி

16 கடவுளுக்கு அஞ்சுவோரே வாருங்கள், வந்து கேளுங்கள் : எனக்கு எத்துணை நன்மை அவர் செய்துள்ளார் எனக்கூறுவேன்.
20 என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி ! தம் இரக்கத்தை என்னிடமிருந்து எடுத்துவிடாத இறைவன் போற்றி ! பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவராகிய யேசுவின் தழும்புகளை என் உடலில் தாங்குகிறேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் : 6; 14-18

சகோதரர்களே,

நானோ நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் சிலுவையிலன்றி வேறெதிலும் ஒருகாலும் பெருமை பாராட்டமாட்டேன்; அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது. நானும் உலகத்திற்கு அறையுண்டவனாய் இருக்கிறேன். விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமின்மையும் ஒன்றுமில்லை. புதிய படைப்பாவதே முக்கியம்.

யார் யார் இந்த ஒழுங்குமுறையைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் மேலும், உண்மையான இஸ்ராயேலராகிய இறைமக்கள் மேலும் சமாதானமும் இரக்கமும் இருப்பதாக!

இனிமேல் எவனும் எனக்குத் தொல்லை கொடுக்கவேண்டாம்: ஏனெனில், என் உடலில் நான் தாங்கும் தழும்புகள் நான் யேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்.

சகோதரர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — கொலோ. 3 : 15a, 16a

**அல்லேலூயா.** கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி புரிவதாக; கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் சமாதானம் அவனிடம் தங்கும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
*10: 1-12, 17-20*

அக்காலத்தில்:

ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் அவர்களை இருவர் இருவராகத் தமக்கு முன்னால் அனுப்பினார். அப்போது அவர்களைப் பார்த்துக் கூறினதாவது:

"அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள். செல்லுங்கள், ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளைப்போல் உங்களை அனுப்புகிறேன். பணப்பையோ கைப்பையோ மிதியடியோ எதுவும் எடுத்துச் செல்லவேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.

நீங்கள் எந்த வீட்டுக்குப் போனாலும், முதலில், 'இவ்வீட்டுக்குச் சமாதானம்' என்று வாழ்த்துங்கள். சமாதானத்திற்குரியவன் அங்கு இருந்தால், உங்கள் சமாதானம் அவனிடம் தங்கும்; இல்லையேல் உங்களிடம் திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை உண்டு குடித்து

அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில், வேலையாள் கூலிக்கு உரிமை உடையவன். வீடு வீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால், உங்களுக்குப் பரிமாறுகிறதை உண்டு, அங்குள்ள பிணியாளரைக் குணமாக்கிக் 'கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளது' என்று மக்களுக்குத் தெரிவியுங்கள்.

மாறாக, நீங்கள் போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், தெருவில் சென்று, 'எங்கள் காலில் ஒட்டிய உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிப் போடுகிறோம்; இருப்பினும் கடவுளின் அரசு நெருங்கியுள்ளது என்று அறிந்து கொள்ளுங்கள்' எனச் சொல்லுங்கள். அந்நாளில் சோதோமுக்கு நேரிடுவது அவ்வூருக்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாயிராது என உங்களுக்குக் கூறுகிறேன்."

பின்பு, எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் வந்து, "ஆண்டவரே, உம் பெயரால் பேய்கள்கூட எங்களுக்கு அடங்குகின்றன" என்றனர்.

அதற்கு அவர், "வானத்தினின்று மின்னலைப்போல் சாத்தான் விழக் கண்டேன். இதோ பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வலிமையை வெல்லவும் உங்களுக்கு வல்லமை அளித்தேன். எதுவும் உங்களுக்குத் தீங்கு இழைக்காது. ஆயினும் ஆவிகள் உங்களுக்கு அடங்கி இருக்கின்றன என்று மகிழ வேண்டாம். ஆனால் உங்கள் பெயர் வானகத்தில் எழுதியுள்ளது என்றே மகிழுங்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *10: 1-9*

அக்காலத்தில் :

ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, தாம் போக விருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் அவர்களை இருவர் இருவ ராகத் தமக்கு முன்னால் அனுப்பினார். அப்போது அவர்களைப் பார்த்துக் கூறினதாவது :

"அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள். செல்லுங்கள், ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளைப்போல் உங்களை அனுப்புகிறேன். பணப்பையோ கைப்பையோ மிதியடியோ எதுவும் எடுத்துச் செல்லவேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.

நீங்கள் எந்த வீட்டுக்குப் போனாலும், முதலில், 'இவ்வீட்டுக்குச் சமாதானம்' என்று வாழ்த்துங்கள். சமாதானத்திற்குரியவன் அங்கு இருந்தால், உங்கள் சமாதானம் அவனிடம் தங்கும்; இல்லையேல் உங்களிடம் திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை உண்டு குடித்து அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில், வேலையாள் கூலிக்கு உரிமை உடையவன். வீடு வீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால், உங்களுக்குப் பரிமாறுகிறதை உண்டு, அங்குள்ள பிணியாளரைக் குணமாக்கிக் 'கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளது' என்று மக்களுக்குத் தெரிவியுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஊன்றி நிற்கும் ஏணியையும், அதில் ஏறி இறங்கும் தேவ தூதர்களையும், அவனோடு உரையாடும் கடவுளையும் அவன் கண்டான்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** *28: 10-22a*

*அந்நாட்களில் :*

யாக்கோபு, பெஞ்சபேயிலிருந்து புறப்பட்டு, ஆரானை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவன் ஓரிடத்தில் வந்து, சூரியன் மறைந்த படியால், அங்கே இளைப்பாற விரும்பி, அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத் தலையணையாகத் தன் தலையின் கீழ் வைத்துக்கொண்டு, அங்கேயே துயில்கொள்ளுமாறு படுத்துக்கொண்டான்.

அப்போது அவன் கண்ட கனவாவது: ஓர் ஏணி பூமியிலே ஊன்றியது; அதன் மேல் நுனியோ வானத்தை எட்டுவதாய் இருந்தது. அதன்மேல் கடவுளுடைய தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர். அதற்குமேல் ஆண்டவர் வீற்றிருந்து அவனை நோக்கி :

நாம் உன் தந்தை ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் கடவுளுமாகிய ஆண்டவர். நீ படுத்துக்கொண்டிருக்கிற இப்பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தந்தருள்வோம். உன் சந்ததியோ நிலப் புழுதிக்கு ஒக்கும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பலுகுவாய். உன்னிலும், உன் சந்ததியிலும் பூமியின் எல்லா இனத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவர்.

நீ எவ்விடம் போனாலும் உனக்கு நாம் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச் செய்வோம். மேலும் நாம் உனக்குச் சொல்லியதை யெல்லாம் நிறைவேற்று மட்டும் உன்னைக் கைவிடமாட்டோம் என்றார்.

யாக்கோபு தூக்கம் தெளிந்து: மெய்யாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார்; நானோ இதை அறியாதிருந்தேன்! என்று கூறித் திகிலடைந்து: இந்த இடம் எவ்வளவு அச்சத்திற்குரியதாய் இருக்கிறது! இதுவே இறைவனின் இல்லம், வானக வாயில் என்றான். பிறகு யாக்கோபு காலையில் எழுந்து, தலையணையாகத் தான் வைத்திருந்த கல்லை எடுத்து நினைவுத் தூணாக அதை நாட்டி, அதன்மேல் எண்ணெயை வார்த்து, லூசா என்று வழங்கப்பட்ட அந்த இடத்திற்குப் பெத்தெல் என்று பெயரிட்டான்.

மேலும், கடவுளாகிய ஆண்டவர் என்னோடிருந்து, நான் போகிற இந்த வழியில் என்னைக் காப்பாற்றி, உண்ண உணவும் உடுக்க உடையும் எனக்குத் தந்தருள்வாராயின், நானும் என் தந்தையின் வீட்டிற்கு நலமுடன் திரும்பிச் செல்வேனாயின், ஆண்டவரே எனக்குக் கடவுளாக இருப்பார். அன்றியும், நான் நினைவுத் தூணாக நாட்டிய இந்தக் கல்லே கோயில் எனப்படும். மேலும், நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் நான் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன் என்று நேர்ந்து கொண்டான்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 90 : 1-2, 3-4, 14-15 ab (பல்லவி : 2b காண்)

பல்லவி : என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்.

1 உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவனே,
2 நீ ஆண்டவரை நோக்கி: "நீரே என் புகலிடம், நீரே என் அரண், என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். பல்லவி

3 ஏனெனில், வேடர்களின் கண்ணிகளினின்றும், கொடிய கொள்ளை நோயினின்றும் உன்னை அவரே விடுவிப்பார்.
4 தம் சிறகுகளால் உன்னைக் காப்பார்; அவருடைய இறக்கைகளுக்கடியில் அடைக்கலம் புகுவாய். பல்லவி

14 அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன். என் பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்.
15 என்னை நோக்கிக் கூப்பிடுவான்; அவன் செபத்தைக் கேட்பேன், துன்ப வேளையில் அவனோடு இருப்பேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணந்து கொள்வோம்.

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 2: 14, 15-16, 19-20

ஆண்டவர் கூறுவதாவது :

"ஆதலால், இதோ, நாம் அவளை நயமாகக் கவர்ந்திழுத்துப் பாலை நிலத்துக்குக் கூட்டிப்போய் அவள் நெஞ்சோடு பேசுவோம். அப்பொழுது அவள் தன் இளமையின் நாட்களிலும், எகிப்து நாட்டினின்று வெளியேறிய காலத்திலும் செய்ததுபோல் அன்புக்கன்பு செய்வாள்.

அந்நாளில் 'என் கணவன்' என நம்மை அவள் சொல்லுவாள், 'என் பாகாலே' எனச் சொல்லமாட்டாள், என்கிறார் ஆண்டவர்.

முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணமுடிப்போம், நேர்மையிலும் நீதியிலும் நிலையான அன்பிலும், இரக்கத்திலும், உன்னை நாம் திருமணம் செய்துகொள்வோம். பிரமாணிக்கத்துடன் நாம் உன்னை மணந்து கொள்வோம், நாமே ஆண்டவர் என்பதை நீயும் அறிந்து கொள்வாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 144 : 2-3, 4-5, 6-7, 8-9 (பல்லவி : 8a)

பல்லவி : **அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்.**

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன். என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் : அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

4 தலைமுறை தலைமுறையாக மனிதர் உம்முடைய செயல்களை எடுத்துரைப்பர் : தலைமுறை தலைமுறையாக உமது வல்லமையை வெளிப்படுத்துவார்கள்.
5 உம்முடைய மகத்துவத்தின் சொல்லரிய மாட்சிமையைப் பற்றிப் பேசுவர். உம் வியத்தகு செயல்களை எடுத்துரைப்பர். பல்லவி

6 அச்சமிகு உம் செயல்வலிமையை எடுத்துச்சொல்வர். உமது மேன்மையைப் பறை சாற்றுவர்.
7 உமது நன்மைப் பெருக்கின் புகழை வெளிப்படுத்துவர். உமது நீதியை நினைத்து அக்களிப்பர். பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர். சினங்கொள்ளத் தாமதிப்பவர். அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்: தம் படைப்புகள் அனைத்தின் மீதும் இரக்கம்காட்டுபவர். பல்லவி

*அல்லேலூயா* 2 திமோ 1 : 10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து, வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். எனினும் வருக, அவள் உயிர் பெறுவாள்.**

✠ *மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 18-26*

*அக்காலத்தில் :*

யேசு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, தலைவன் ஒருவன் அவரை அணுகிப் பணிந்து, "என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள் ; ஆயினும் நீர் வந்து அவள்மீது உமது கையை வையும் ; அவள் உயிர் பெறுவாள்" என்றான். யேசு எழுந்து தம் சீடர்களோடு அவன் பின்னே சென்றார்.

இதோ ! பன்னிரு ஆண்டுகளாய்ப் பெரும்பாட்டினால் வருந்திய பெண் ஒருத்தி பின்புறமாக வந்து, அவர் போர்வையின் விளிம்பைத் தொட்டாள். "நான் அவருடைய போர்வையைத் தொட்டாலே குணம் பெறுவேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். யேசு திரும்பி, அவளைப் பார்த்து, "மகளே, தைரியமாயிரு ; உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று" என்றார். அந்நேர முதல் அவள் குணமாயிருந்தாள்.

யேசு, தலைவன் வீட்டுக்கு வந்தபோது, தாரை ஊதுவோரையும், சந்தடி செய்யும் கூட்டத்தையும் கண்டு, "விலகிப்போங்கள் ; சிறுமி சாகவில்லை ; தூங்குகிறாள்" என்றார். அவர்களோ அவரை ஏளனம் செய்தனர். கும்பலை வெளியேற்றிவிட்டு, அவர் உள்ளே சென்று, அவள் கையைப் பிடிக்கவே, சிறுமி எழுந்தாள். இச்செய்தி அந்நாடெங்கும் பரவிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*உன் பெயர் இஸ்ராயேல் எனப்படும், ஏனென்ருல், நீ கடவுளோடு போராடி மேற்கொண்டாய்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *32; 22-32*

*அந்நாட்களில் :*

யாக்கோபு அதிகாலையிலே துயில் விட்டெழுந்து, தன் புதல்வர் பதினொருவரையும் இரு மனைவியரையும் இரண்டு வேலைக்காரிகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு, ஜாபோக் ஆற்றின் துறையைக் கடந்தான். பின்னர் தனக்கு உண்டான யாவையும் ஆற்றைக் கடக்கப் பண்ணி, தான் (மட்டும்) பிந்தித் தனித்திருந்தான்.

அப்பொழுது ஓர் ஆடவன் பொழுது விடியுமட்டும் அவனோடு போராடிக் கொண்டிருந்தான். யாக்கோபை வெல்லத் தன்னாலே கூடாதென்று கண்ட அந்த ஆடவன் அவன் தொடை நரம்பைத் தொட்டான். தொடவே, அது மரத்துப் போயிற்று. அப்பொழுது ஆடவன் : என்னைப் போகவிடு ; பொழுது புலரப் போகிறது என, யாக்கோபு : நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன் என்று மறுமொழி சொன்னான். ஆடவன் : உன் பெயர் என்ன என, அவன்: நான் யாக்கோபு என்றான். அப்பொழுது அவர் : உன் பெயர் இனி யாக்கோபு இல்லை ; இஸ்ராயேல் எனப்படும். ஏனென்றால், நீ கடவுளோடு போராடி மேற்கொண்டாயென்றால், மனிதர்களை மேற்கொள்வாயென்று சொல்லவும் வேண்டுமோ என்றார். யாக்கோபு அவரை நோக்கி : உம் பெயர் என்ன? அடியேனுக்கு அறிவிக்க வேண்டும் என்று வினவ, அவர் : என் பெயரை நீ கேட்பதென்ன என்று பதில் சொல்லி, அந்த இடத்திலேயே அவனை ஆசீர்வதித்தார்.

அப்பொழுது யாக்கோபு : நான் கடவுளை நேரிலே கண்டிருந்தும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த இடத்திற்குப் பானுவேல் என்று பெயரிட்டான். அவன் பானுவேலுக்கு அப்பால் சென்றவுடனே சூரியன் உதித்தது. அவனோ, கால் நொண்டி நொண்டி நடந்தான். அதன் பொருட்டு, இஸ்ராயேல் மக்கள் இந்நாள் வரை தொடைச் சந்து நரம்பை உண்பதில்லை. ஏனென்றால், (முன் சொல்லப்பட்ட ஆடவனால்) யாக்கோபின் நரம்பு தொடப்படவே, அது சூம்பிப்போயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 16 : 1, 2-3, 6-7, 8 & 15 (பல்லவி : 15 a)

பல்லவி : நான் நீதியில் நிலைத்து, உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன்.

1 ஆண்டவரே, என் நியாயமான என் வழக்கைக் கேட்டருளும் : என் கூக்குரலைக் கவனித்தருளும் : வஞ்சகமற்ற உதட்டினின்று எழும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

2 நீரே எனக்கு நீதி வழங்கியருளும் : நேர்மையானது எதுவென்று நீரே பார்க்கின்றீர்.
3 என் இதயத்தை நீர் பரிசோதிப்பீராகில், இரவு நேரத்தில் என்னைச் சந்திக்க வருவீராகில் : நெருப்பில் என்னைப் புடமிட்டுப் பார்ப்பீராகில் : தீமையானது எதையும் என்னிடம் காணமாட்டீர். பல்லவி

6 இறைவா, என் மன்றாட்டைக் கேட்டருள்வீர் என்பதால் நான் உம்மைக் கூவியழைக்கிறேன் : எனக்குச் செவிசாய்த்தருளும்; என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
7 வியப்புக்குரிய உமது இரக்கத்தைக் காட்டியருளும் : உம் வலக்கரத்தில் உம்மிடம் அடைக்கலம் புகுவோரை எதிரிகளிடமிருந்து காப்பவர் நீரே. பல்லவி

8 கண்ணின் மணியைப்போல என்னைக் காத்தருளும், உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும்.
15 நானோவெனில், நீதியில் நிலைத்து உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன்; உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே நான் விழைகிறேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அவர்கள் விதைப்பது காற்று, அறுக்கப்போவது கடும் புயல்.**

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 8 : 4-7, 11-13

ஆண்டவர் கூறுவதாவது :

இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு அரசர்களை ஏற்படுத்திக் கொண்டனர், ஆனால், அதுபற்றி அவர்கள் நம் ஆலோசனை கேட்கவில்லை. அவர்களே தலைவர்களை வைத்துக்கொண்டார்கள், நாமோ அதைப்பற்றி

ஒன்றுமறியோம்; தங்களது வெள்ளி, பொன் கொண்டு சிலைகள் செய்தார்கள், தாங்கள் அழிந்து போகவே அவற்றைச் செய்து கொண்டார்கள். சமாரியாவே, உன் கன்றுக்குட்டியை நாம் வெறுக்கிறோம், நம் கோபத்தீ அதற்கு எதிராய் எரிகின்றது, இன்னும் எத்துணைக்காலம் தூய்மையடையாமல் இருப்பார்கள்? ஏனெனில் அக்கன்றின் சிலை இஸ்ராயேலில் செய்யப்பட்டது, அதை ஒரு தொழிலாளி செய்தான்; எனவே அது கடவுளன்று; சமாரியாவின் கன்றுக்குட்டி தவிடுபொடியாகும். ஏனெனில் அவர்கள் விதைப்பது காற்று, அறுக்கப்போவது கடும் புயல்; கோதுமை கதிர் வாங்காது, கோதுமை மணி மாவு தராது, அப்படியே தரினும், அந்நியரே அதை விழுங்குவர்.

பாவம் செய்வதற்காகவே எப்பிராயீம் பீடங்களைப் பலவாகச் செய்து கொண்டதால், அந்தப் பீடங்கள் அவர்கள் பாவஞ் செய்வதற்கே காரணமாயின. பத்தாயிரம் சட்டங்களை அவர்களுக்கு நாம் எழுதிக் கொடுத்தாலும் அவை நமக்கில்லை என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்கள் பலியை விரும்புகிறார்கள், பலி கொடுத்து, அந்த இறைச்சியையும் உண்ணுகிறார்கள்; ஆயினும் ஆண்டவர் அவற்றில் விருப்பம் கொள்ளவில்லை; அதற்கு மாறாக அவர்களுடைய அக்கிரமத்தை நினைவில் கொண்டு, அவர்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனை தருவார்; அவர்களோ எகிப்து நாட்டுக்குத் திரும்புவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 113 : 11-12, 13-14, 15-16, 17-18* (பல்லவி : 17 a)

பல்லவி : **இஸ்ராயேல் மக்களுக்கு ஆண்டவர் மீது நம்பிக்கை உண்டு.**

11 நம் இறைவனோ வானுலகில் உள்ளார்: தாம் விரும்பிய யாவும்
செய்துள்ளார்.
12 அவர்களுடைய சிலைகள் வெறும் வெள்ளியும் பொன்னுமே, வெறும்
மனிதக் கைவேலையே.

பல்லவி

13 அவைகளுக்கு வாய் உண்டு, பேசுவதில்லை; கண்கள் உண்டு பார்ப்பதில்லை.
14 செவிகள் உண்டு, கேட்பதில்லை; நாசி உண்டு, முகர்வதில்லை.

பல்லவி

15 கைகள் உண்டு தொடுவதில்லை; கால்கள் உண்டு நடப்பதில்லை; தொண்டையிலிருந்து ஒலி எழும்புவதில்லை.
16 அவற்றைச் செய்கிறவர்களும் அவைகளுக்கு ஒப்பானவர்களே: அவற்றை
நம்புகிறவர்களும் அவற்றைப் போன்றவர்களே.

பல்லவி

17 இஸ்ராயேல் மக்களுக்கு ஆண்டவர்மீது நம்பிக்கை உண்டு: அவரே
அவர்களுக்குத் துணையும் கேடயமுமாவார்.
18 ஆரோனின் குலத்தார்க்கு ஆண்டவர்மீது நம்பிக்கை உண்டு: அவரே
அவர்களுக்குத் துணையும் கேடயமுமாவார்.

பல்லவி

அல்லேலூயா

அரு. 10:14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே, என்கிறார் ஆண்டவர்:
என் ஆடுகளை நான் அறிவேன்,
அவையும் என்னை அறிகின்றன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 32-38

அக்காலத்தில் :

"இதோ! பேய் பிடித்த ஊமையன் ஒருவனை யேசுவிடம் கொண்டு வந்தனர். அவர் பேயை ஓட்ட ஊமையன் பேசினான். மக்கட் கூட்டம் வியப்புற்று, 'இப்படி ஒருகாலும் இஸ்ராயேலில் கண்டதில்லை' என்றது. பரிசேயரோ, "இவன் பேய்களின் தலைவனைக்கொண்டே பேய்களை ஓட்டுகிறான்" என்றனர்.

யேசு, நகரங்கள் ஊர்கள் எல்லாம் சுற்றி வந்து, அவர்களுடைய செபக் கூடங்களில் போதித்து, விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, நோய் பிணியெல்லாம் குணமாக்கி வந்தார். அவர் மக்கட் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஆயனில்லா ஆடுகள்போல் தவித்துக் கிடந்தமையால், அவர்கள்மேல் மனமிரங்கினார்.

அப்பொழுது அவர் தம் சீடர்களை நோக்கி, "அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆதலால், தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

இந்த ஆபத்து நமக்கு நேர்ந்தது முறையே; ஏனென்றால் நம் சகோதரனுக்குத் துரோகம் செய்துள்ளோம்.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 41: 55-57; 42: 5-7a, 17-24a

அந்நாட்களில் :

பஞ்சம் சூழ்ந்தபோது, எகிப்திய மக்கள் உணவுக்காகப் பாரவோவிடம் வந்து ஓலமிட, அவன்: சூசையிடம் சென்று, அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள் என்று அவர்களை அனுப்பி வந்தான். வரவர எல்லா நாடுகளிலும் பஞ்சம் அதிகமாகிவிட்டது. ஆகையால், சூசை களஞ்சியங்களைத் திறந்து, எகிப்தியர்களுக்குத் தானியங்களை விலைக்குக் கொடுத்து வந்தார். ஏனென்றால், அவர்களும் பஞ்சத்தால் வருந்தினார்கள். அன்றியும், பிற நாட்டாரும் பஞ்சத்தின் கொடுமையை முன்னிட்டுத் தானியங்களை விலைக்கு வாங்குவதற்கு சூசையிடம் வந்தார்கள்.

யாக்கோபின் புதல்வர்கள், (தானியம்) வாங்கப் போன மற்றும் பலரோடு எகிப்து நாட்டிற்குள் புகுந்தனர். உண்மையிலே கானான் நாட்டிலும் பஞ்சம் நிலவியது. சூசையோ எகிப்து நாட்டுக்குத் தலைவராய் இருந்தார். அவர் விருப்பப்படியே மக்களுக்குத் தானியங்கள் விலைக்குக் கொடுக்கப்படும். அவருடைய சகோதரர்கள் வந்து, தரையில் விழுந்து தம்மை வணங்கும்பொழுது, அவர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டார். ஆயினும், அறியாதவரைப் போல் மிகக் கடுமையுடன் அவர்களோடு பேசி: நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று வினவினார். அவர்கள்: கானான் நாட்டிலிருந்து உயிர் பிழைக்கத் தேவையான உணவுப் பொருட்கள் வாங்கும்படியாக வந்தோம் என்று மறுமொழி கூறினர். அப்படியே அவர்களை மூன்று நாள் காவலிலே வைத்தார்.

மூன்றும் நாள் அவர்களைச் சிறையிலிருந்து அழைப்பித்து: நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்; செய்தால் பிழைக்கலாம். ஏனென்றால், நான் தெய்வபயம் உள்ளவன். நீங்கள் உண்மையிலேயே குற்றம் அற்றவர்களானால் சகோதரராகிய உங்களில் ஒருவன் சிறையில் கட்டுண்டிருக்கட்டும். மற்றவர்கள் புறப்பட்டு, வாங்கின தானியத்தை உங்கள் வீட்டுக்குக் கொண்டு போகலாம். பின்னர் உங்கள் இளைய சகோதரனை என்னிடம் அழைத்து வாருங்கள். வந்தால், நீங்கள் கூறியது உண்மை யென்று விளங்கும். அப்படியெனில், நீங்கள் சாகமாட்டீர்கள் என்றார். அவர்களும் அப்படியே செய்தனர்.

அப்போது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து: இந்த ஆபத்து நமக்கு நேர்ந்தது முறையே. ஏனென்றால், நம் சகோதரனுக்குத் துரோகம் செய்துள்ளோமே! அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மனத் துயரைக் கண்டும் நாம் கேளாமல் போனோமே! அதனாலல்லவா இந்தத் துன்பம் நமக்கு வந்தது என்றனர். அவர்களில் ஒருவனான ரூபன் அவர்களை நோக்கி, சிறுவனுக்கு விரோதமாய்த் தீங்கு யாதொன்றும் செய்யாதீர்கள் என்று உங்களுக்கு நான் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமல் போனீர்களே! இதோ, அவனுடைய இரத்தம் நம்மைப் பழி வாங்குகிறது என்றான்.

கூசை மொழிபெயர்ப்பாளனைக்கொண்டு அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். ஆதலால் தாங்கள் சொன்னது அவருக்குத் தெரியுமென்று அவர்கள் அறியாதிருந்தனர். அப்போது அவர் சிறிதுநேரம் ஒதுங்கிப்போய் அழுதார். பின் திரும்பி வந்து, அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 32 : 2-3, 10-11, 18-19 (பல்லவி : 22)*

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக: ஏனெனில் உம்மையே நம்பியிருக்கிறோம்.

2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் : பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள்.
3 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள், மகிழ்ச்சிக் குரலில் நன்றாகப் பாடுங்கள்.
பல்லவி

10 மக்கள் இனங்களின் திட்டங்களை ஆண்டவர் சிதறடிக்கிறார் : மக்களின் எண்ணங்களைப் பயனற்றவை ஆக்குகிறார்.
11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் : அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார் : தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்சக் காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*ஆண்டவரைத் தேடுங் காலம் இதுவே.*

**இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம்** *10: 1-3, 7-8, 12*

இஸ்ராயேல் தழைத்து வளர்ந்த ஒரு திராட்சைக் கொடி, அது நிரம்பக் கனிகளைக் கொடுக்கின்றது; எவ்வளவு மிகுதியாகக் கனிகளைக் கொடுத்ததோ, அவ்வளவு மிகுதியாகப் பீடங்களை அமைத்தது; நாடு எவ்வளவுக்குச் சிறப்புற்றதோ அவ்வளவுக்குச் சிலைகள் சிறப்புப் பெற்றன. இருமனம் கொண்ட மக்கள் அவர்கள், ஆதலால் அவர்கள் தண்டனை பெறுவார்கள். ஆண்டவரே அவர்களுடைய பீடங்களைத் தகர்த்திடுவார், அவர்களுடைய சிலைகளை நொறுக்கிடுவார். அப்போது அவர்கள், "நமக்கு அரசன் இல்லை. நாமோ ஆண்டவருக்கு அஞ்சி நடக்கவில்லை, அரசனுந்தான் நமக்கு என்ன செய்வான்?" என்பார்கள்.

சமாரியா அழிந்து போயிற்று, அதன் மன்னன் நீர்க் குமிழிபோல் ஆனான். இஸ்ராயேலின் பாவமாகிய சிலைவழிபாட்டின் உயர்ந்த இடங்களெல்லாம் அழிக்கப்படும்; அவற்றின் பீடங்கள்மேல் முட்களும் முட்புதர்களும் வளரும், அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, "எங்களை மூடிவிடுங்கள்," குன்றுகளைப் பார்த்து, "எங்கள்மேல் விழுங்கள்" என்பார்கள்.

உங்களுக்கென நீதியை விதையுங்கள், அன்பை அறுவடை செய்யுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; ஏனெனில் ஆண்டவர் வந்து உங்கள்மேல் நீதியைப் பொழியுமாறு நீங்கள் அவரைத் தேடுங்காலம் நெருங்கி வந்துவிட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 104 : 2-3, 4-5, 6-7 (பல்லவி : 4b)*

பல்லவி : **ஆண்டவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள்.**

அல்லது : **அல்லேலூயா.**

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்; இசைக் கருவி மீட்டுங்கள் : அவர்
செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள்.
3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள் : ஆண்டவரைத்
தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.

பல்லவி

4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள் : அவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள்.
5 ஆண்டவருடைய ஊழியர்களாகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய யாக்கோபின் மக்களே.

பல்லவி

6 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள் : அவருடைய புதுமைகளையும் அவர் உரைத்த நீதித்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.
7 ஆண்டவரே நம் கடவுள் : அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது.

பல்லவி

அல்லேலூயா மாற்கு : 1 : 15

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கிவிட்டது,
மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சிதறிப்போன இஸ்ராயேல் குலத்து ஆடுகளிடமே செல்லுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10: 1-7

அக்காலத்தில் :

யேசு தம் சீடர் பன்னிருவரையும் அழைத்து நோய் பிணியெல்லாம் குணப்படுத்தவும், அசுத்த ஆவிகளை ஓட்டவும் அவற்றின்மேல் அதிகாரம் அவர்களுக்கு அளித்தார்.

பன்னிரு அப்போஸ்தலர்களின் பெயர்கள் பின்வருமாறு : முதல்வர் இராயப்பர் என்னும் சீமோன், அவர் சகோதரர் பெலவேந்திரர், செபதேயுவின் மகன் யாகப்பர், அவர் சகோதரர் அருளப்பர், பிலிப்பு, பார்த்தொலொமேயு, தோமையார், ஆயக்கார மத்தேயு, அல்பேயுவின் மகன் யாகப்பர், ததேயு, கனானேய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்து.

இப்பன்னிருவரையும் யேசு அனுப்புகையில் கற்பித்ததாவது : 'புறவினத்தாருடைய நாட்டுக்குச் செல்ல வேண்டாம். சமாரியருடைய ஊரில் நுழையவேண்டாம். சிதறிப்போன இஸ்ராயேல் குலத்து ஆடுகளிடமே செல்லுங்கள். சென்று, விண்ணரசு நெருங்கியுள்ளது என்று அறிவியுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களைக் காப்பாற்ற, கடவுளே என்னை எகிப்துக்கு அனுப்பியருளினார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *44: 18-21, 23b-29; 45: 1-5*

அந்நாட்களில் :

யூதா இன்னும் அவனண்டை நெருங்கி, துணிந்து: துரை அவர்களே, அடியேன் கூறவிருக்கும் வார்த்தைக்கு அருள்கூர்ந்து செவி மடுப்பீராக. என்மீது கோபம் கொள்ளவேண்டாம். ஏனென்றால், நீர் பாரவோனுக்கு இரண்டாவதாய் இருக்கிறீர்; எனது தலைவராய் இருக்கிறீர். உங்களுக்குத் தந்தையாவது (வேறு) சகோதரனாவது உண்டோ என்று உம் அடியோர்களை நீர் கேட்டீரே, அதற்கு, நாங்கள் எங்களுக்கு வயது முதிர்ந்த தந்தையும் அவருக்கு முதிர்ந்த வயதில் பிறந்த ஓர் இளைஞனும் உண்டென்றும், இவனுடைய தமையன் இறந்துவிட்டானென்றும், இவன் ஒருவன் மட்டுமே பெற்ற தாய்க்குப் பிள்ளையாய் இருப்பதனால் தந்தை இவன்மேல் அளவுகடந்த அன்பு கொண்டிருக்கிறாரென்றும் துரை அவர்களுக்குச் சொன்னோம். அப்பொழுது: அவனை என்னிடம் கொண்டு வாருங்கள்; நான் அவனைக் கண்ணால் பார்க்க வேண்டும் என்று உம் அடியோர்களுக்குச் சொன்னீர். உங்கள் இளைய தம்பி உங்களோடு வராவிட்டால் என்னைக் காணமாட்டீர்கள் என்று அடியோர்களுக்குச் சொன்னீர்.

ஆகையால், நாங்கள் உமது ஊழியனாகிய எங்கள் தந்தையிடம் சேர்ந்து, தாங்கள் சொல்லிய யாவற்றையும் அவரிடம் விவரமாய்ச் சொன்னோம். அப்போது எங்கள் தந்தை: நீங்கள் திரும்பப் போய் நமக்குக் கொஞ்சம் தானியம் வாங்கி வாருங்கள் என்றார். நாங்கள்: போக இயலாது; எங்கள் இளைய தம்பி எங்களோடு கூட வந்தால் புறப்படுவோம். வராவிட்டால், இவன் இல்லாதே நாங்கள் அந்தப் பெரிய மனிதரின் முகத்தில் விழிக்கவும் துணியோம் என்றோம். அவர்: இராக்கேல் என்னும் என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளை (மட்டும்) பெற்றாளென்று உங்களுக்குத் தெரியுமே. ஒருவன் வெளியே புறப்பட்டான். அவனை ஒரு கொடிய மிருகம் தின்று விட்டதென்று சொன்னீர்கள். இதுவரை அவன் காணப்படவேயில்லை. இப்பொழுது நீங்கள் இவனை அழைத்துப் போகும் வழியில் இவனுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டால், நரைத்த கிழவனாகிய என்னைத் துயரத்தினால் இறக்கச் செய்வீர்கள் என்றார்.

(அப்பொழுது) சூசை தம் அருகே நின்ற அத்தனை பேருக்கு முன்பாகத் தம்மை அடக்கிக் கொள்ளக் கூடாமல், தாமும் தம் சகோதரரும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்கையில், பிறர் ஒருவரும் இல்லாதிருக்கும் வண்ணம், மற்றவர்கள் எல்லாரும் வெளியே போகும்படி கட்டளையிட்டார். பின், எகிப்தியரும் பாரவோன் வீட்டாரும் கேட்கும் அளவுக்குத் தேம்பி அழுது,

தம் சகோதரர்களை நோக்கி: நானே சூசை! என் தந்தை இன்னும் உயிரோடு இருக்கிறாரா என்று அலறிக் கேட்டார். ஆனால், தம் சகோதரர்கள் திகிலடைத்து பதில் சொல்ல இயலாமலிருப்பது கண்டு, அவர் அவர்களை அன்போடு நோக்கி: என் அண்டை வாருங்கள் என்றார். அவர்கள் பக்கத்தில் வந்தபோது, அவர்: நீங்கள் எகிப்துக்குச் செல்வோரிடத்தில் விற்ற உங்கள் சகோதரனாகிய சூசை நான்தான்! அஞ்சாதீர்கள். நான் இந்நாட்டிற்கு வந்து சேருமாறு நீங்கள் என்னை விற்று விட்டது குறித்து மனம் கலங்க வேண்டாம். ஏனென்றால், உங்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, கடவுளே உங்களுக்கு முன்னே என்னை எகிப்துக்கு அனுப்பியருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104: 16-17, 18-19, 20-21 (பல்லவி: 5a)*

பல்லவி: ஆண்டவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்.

அல்லது: அல்லேலூயா.

16 நாட்டில் பஞ்சத்தை வரவழைத்தார். உணவுப் பொருட்களனைத்தையுமே எடுத்துவிட்டார்.
17 ஆனால் அதற்குமுன்: அடிமையாக விற்கப்பட்ட சூசையை அனுப்பி வைத்தார். பல்லவி

18 அவருடைய கால்களுக்கோ விலங்குகள் இடப்பட்டன. அவருடைய கழுத்துக்கு இருப்புத்தளை இடப்பட்டது.
19 நாளடைவில் அவர் சொன்னது நிறைவேறியது. ஆண்டவருடைய வார்த்தை உண்மையென எண்பிக்கப்பட்டது. பல்லவி

20 அரசன் ஆளனுப்பி அவரை விடுதலை செய்தான்; நாட்டின் மன்னன் அவருக்கு விடுதலையளித்தான்.
21 தன் இல்லத்திற்கு அவரைத் தலைவராக்கினான்: தன் உடைமை அனைத்தின் மீதும் அவருக்கு அதிகாரமளித்தான். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

நமது உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகிறது.

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 11:1b, 3-4, 8c-9

ஆண்டவர் கூறுவதாவது :

இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோதே நாம் அவன்மேல் அன்பு கூர்ந்தோம்; எகிப்திலிருந்து தம் மகனை அழைத்தோம். எவ்வளவு வற்புறுத்தி நாம் அவர்களைக் கூப்பிட்டோமோ, அவ்வளவு பிடிவாதமாய் அவர்கள் நம்மைவிட்டு விலகினார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டார்கள்; சிலைகளுக்குத் தூபம் காட்டினார்கள்.

எப்பிராயீமுக்கு நடை பயிற்றுவித்தவர் நாம்தாம், அவர்களைக் கையிலேந்தி நாம் சீராட்டினோம்; ஆயினும் தங்களைப் பராமரித்து வருபவர் நாமே என்பதை அவர்கள் உணரவில்லை. பரிவு என்னும் கயிற்றால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிற்றால் கட்டி நடத்தி வந்தோம். அவர்கள் கழுத்திலிருந்து நாம் நுகத்தை அகற்றி அவர்களை இளைப்பாறச் செய்து உணவளித்தோம்.

நமது உள்ளம் கோபத்தை வெறுத்தொதுக்குகிறது, நம் இரக்கம் பொங்கி யெழுந்து துடிக்கிறது. நமது கோபத்தின் ஆத்திரத்தை நிறைவேற்ற மாட்டோம், மறுபடியும் எப்பிராயீமை அழிக்கமாட்டோம்; ஏனெனில் நாம் கடவுள், வெறும் மனிதன் அல்ல; நாமே உங்கள் நடுவில் இருக்கும் பரிசுத்தர்: எனவே உங்களை அழிக்கும்படி வரமாட்டோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 79 : 1ac-2b, 14-15 (பல்லவி : 3b)

பல்லவி : எங்களுக்கு மீட்புக் கிடைக்க, ஆண்டவரே,
உமது இன்முகம் காட்டியருளும்.

1 இஸ்ராயேலின் மேய்ப்பரே, செவிசாய்த்தருளும்; கெருபீம்களின்மேல்
வீற்றிருப்பவரே, உம் மாண்பு விளங்கச் செய்யும்.
2 உமது வல்லமையைத் தூண்டி எழுந்தருளும்: எம்மை மீட்க எழுந்து வாரும். பல்லவி

ST. XAVIER'S COLLEGE
PALAYANKOTTAI
TIRUNELVELI-2.
627002.

14 சேனைகளின் இறைவனே, மீளவும் எழுந்து வாரும்; வானினின்று
கண்ணோக்கிப் பாரும்: இத்திராட்சைக் கொடியை வந்து பாரும்.
15 உமது வலக்கரத்தால் நீர் நட்டதைப் பாதுகாத்தருளும்: நீர் வலிமைப்
படுத்த விரும்பிய இவ்விளஞ் செடியைக் காத்தருளும். பல்லவி

அல்லேலூயா மாற்கு 1:15

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கிவிட்டது, மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10: 7-15

அக்காலத்தில்: யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது:

நீங்கள் சென்று, விண்ணரசு நெருங்கியுள்ளது என்று அறிவியுங்கள். நோயாளிகளைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்ப்பியுங்கள், தொழு நோயுற்றோரைச் சுகமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள்; இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். பொன், வெள்ளி, செப்புக் காசு எதையும் உங்கள் மடியில் வைத்துக்கொள்ள வேண்டாம். பயணத்திற்குப் பையோ இரண்டு உள்ளாடையோ மிதியடிகளோ கோலோ எதுவும் வேண்டாம்; ஏனெனில், வேலையாள் தன் உணவிற்கு உரிமை உடையவன்.

நீங்கள் எந்த நகருக்கு, எந்த ஊருக்குப் போனாலும், அங்கே தகுதியுள்ளவன் யார் என்று கேட்டறிந்து அங்கிருந்து போகும்வரை அவனிடம் தங்கியிருங்கள். நீங்கள் வீட்டுக்குள் போகும்போது, 'உங்களுக்குச் சமாதானம்' என்று வாழ்த்துங்கள். அவ்வீடு தகுதியுள்ளதாயின், நீங்கள் கூறும் சமாதானம் அவ்வீட்டின்மேல் இறங்கும். தகுதியற்றதாயின் உங்கள் சமாதானம் உங்களிடமே திரும்பி வரும்.

யார் உங்களை ஏற்றுக்கொள்ளாது உங்கள் வார்த்தைகளுக்குச் செவிமடுப்பதில்லையோ, அவர்களுடைய வீட்டில் இருந்தோ, நகரத்தில் இருந்தோ வெளியே போகும்போது காலிலிருந்து தூசியைத் தட்டி விடுங்கள். தீர்வை நாளில் சொதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது அந்த நகரத்திற்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாய் இராது என்று உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உன் முகத்தைக் கண்டுவிட்டேன், இனி மகிழ்ச்சியுடன் மரிப்பேன்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** 46: 1-7, 28-30

அந்நாட்களில் :

இஸ்ராயேல் தனக்குள்ள யாவற்றையும் சேர்த்துக்கொண்டு பயணமாகி, பிரமாணிக்கக் கிணறு என்னும் இடம் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் தன் தந்தையாகிய ஈசாக்கின் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக் கொடுத்தான். அன்றிரவு கடவுள் அவனுக்குத் தோன்றி : யாக்கோப், யாக்கோப் என்று அழைப்பதைக் கேட்டு, அவன் : இதோ இருக்கிறேன் என்று பதில் கூறினான். கடவுள் : உன் தந்தையின் எல்லாம் வல்ல கடவுள் நாமே. அஞ்சாதே. எகிப்து நாட்டிற்குப் போ. ஏனென்றால், அங்கே உன்னைப் பெருங்குடியாக வளரச் செய்வோம். நாம் உன்னோடு அவ்விடத்திற்கு வருவோம். நாம் அவ்விடத்திலிருந்து திரும்பி வரும்போது உன்னைக் கூட்டி வருவோம். சூசை தன் கையாலே உன் கண்களை மூடுவான் என்றார்.

யாக்கோபு பிரமாணிக்கக் கிணறு என்னும் இடத்திலிருந்து எழுந்தான். அப்பொழுது அவன் புதல்வர்கள், அவனையும் அவன் பிள்ளைகளையும் மனைவிகளையும் முதிர்ந்த வயதினனாகிய அவனுக்குப் பாரவோன் அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக்கொண்டான். கானான் நாட்டில் அவன் சம்பாதித்திருந்த சொத்துக்கள் யாவற்றையும் கூடச் சேர்த்துக் கொண்டான். யாக்கோபு அவற்றோடும் தன் இனத்தார் எல்லாரோடும் எகிப்துக்குப் போனான். அவன் புதல்வரும் பேரரும் புதல்வியரும் (அவன்) இனத்தார் அனைவரும் அவனோடு போனார்கள்.

யேசேன் நாட்டில் சூசை தம்மை வந்து சந்திக்க வேண்டுமென்று சொல்லும்படி யாக்கோபு யூதாவை அவனுக்குத் தூதராக அனுப்பினார். இவன் அவ்விடம் சேர்ந்ததும், சூசை தம் தேரைத் தயார் செய்து, அதன்மேல் ஏறித் தந்தைக்கு எதிர்கொண்டுபோய், அவனைக் கண்டவுடன் அவன் கழுத்தின் மீது விழுந்து அணைத்து அணைத்து அழுதார். அப்பொழுது தந்தை சூசையை நோக்கி : (அப்பா மகனே !) உன் முகத்தை நான் கண்டுவிட்டேன் ! எனக்குப்பின் உன்னை உயிருடன் இவ்வுலகில் விட்டுவைப்பேன் ! ஆதலால், எனக்கு இப்பொழுதே சாவு வந்தாலும் மகிழ்ச்சிதான் என்றான்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

திபா. 36 : 3-4, 18-19, 27-28, 39-40 (பல்லவி : 39a)

பல்லவி : நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும்.

3 ஆண்டவர் மீது நம்பிக்கை வை, நன்மை செய் ; புனித நாட்டில் எக்னிதக் கவலையின்றி இருப்பாய்.
4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு ; அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார். பல்லவி

18 நீதிமான்களுடைய வாழ்நாட்களைக் குறித்து ஆண்டவர் கருத்தாய் இருக்கிறார், அவர்கள் உரிமைச் சொத்து என்றென்றும் நிற்கும்.
19 அழிவின் காலத்தில் அவர்கள் வெட்கிப்போகமாட்டார்கள் ;
பஞ்சக் காலத்திலோ அவர்கள் நிறைவுகொள்வார்கள். பல்லவி

27 தீமையை விலக்கு, நன்மை செய், அப்போது என்றென்றும் வாழ்வாய்.
28 ஏனெனில், ஆண்டவர் நேர்மையை விரும்புகிறார், தம் புனிதர்களை அவர் கைவிடுவதில்லை. நெறிகெட்டவர் அழிவுறுவர், அவர்கள் மக்கள் வேரோடு ஒழிந்துபோவர். பல்லவி

39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும் :
துன்ப வேளையில் அவர்களுக்குப் புகலிடம் அவரே.
40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலையளிக்கிறார் :
தீயோரின் கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார் :
ஏனெனில், அவர்கள் அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எங்கள் கைவேலைப்பாடுகளை நோக்கி 'எங்கள் இறைவா' என்று சொல்லமாட்டோம்.**

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 14: 2-10

ஆண்டவர் கூறுவதாவது :

இஸ்ராயேலே, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா, ஏனெனில் உன் அக்கிரமத்தினாலேயே நீ வீழ்ச்சியுற்றாய், வாய்விட்டுச் சொல்லி ஆண்டவரிடம் திரும்புங்கள் : "அக்கிரமங்களை எல்லாம்

அப்புறப்படுத்தியருளும், நன்மையானதை ஏற்றுக்கொள்ளும், உதடுகளால் தரும் காணிக்கையை உமக்களிக்கிறோம்; அசீரியர் எங்களைக் காக்க மாட்டார்கள், குதிரைகள்மேல் நாங்கள் இனி ஏற மாட்டோம்; எங்கள் கைவேலைப்பாடுகளை நோக்கி, 'எங்கள் இறைவா!' என்று சொல்ல மாட்டோம்; ஏனெனில் திக்கற்ற பிள்ளைக்குப் பரிவு காட்டுபவர் நீரே" என்று ஆண்டவரிடம் சொல்லுங்கள்.

அவர்களுடைய பிரமாணிக்கமின்மையை நாம் குணமாக்குவோம், அவர்கள்மேல் உளமார அன்பு கூர்வோம்; ஏனெனில் அவர்கள் மேலிருந்த நம் சினம் ஆறிவிட்டது, நாம் இஸ்ராயேலுக்குப் பனிபோல் இருப்போம், அவன் லீலியைப் போலத் தளிர்ப்பான், லீபானைப்போல வேரூன்றி நிற்பான். அவனுடைய கிளைகள் நீண்டு படரும், ஒலிவ மரம்போல் அவன் அழகு இருக்கும்; லீபானைப்போல் அவன் நறுமணம் பரப்புவான்.

நமது நிழலில் வாழ அவர்கள் திரும்பி வருவர், வளமான தானியமும் திராட்சையும் பயிரிடுவர், லீபானின் திராட்சை இரசம்போல் அவர்களது புகழ் விளங்கும். இனிமேல் எப்பிராயீமுக்குச் சிலைகள் எதற்கு? நாமே அவனுக்குச் செவி சாய்த்துக் கண்காணிக்கிறோம்; பசுமையான தேவதாரு மரம்போல் இருக்கிறோம்; நீ கனிகொடுப்பது நம்மாலேதான். ஞானம் நிறைந்தவன் இவற்றைக் கண்டுபிடிக்கட்டும், புத்தியுள்ளவன் இவற்றை அறிந்துகொள்ளட்டும்; ஏனெனில் ஆண்டவரின் வழிகள் நேர்மையானவை, நேர்மையானவர்கள் அவற்றில் நடக்கிறார்கள்; மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகிறார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50 : 1-2, 6-7, 10-11, 12 & 15 (பல்லவி : 15 b)*

பல்லவி : **ஆண்டவரே, என் வாய் உமது புகழ்ச்சியை எடுத்துரைக்கும்.**

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும் : உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங் குறைகளைப் போக்கிவிடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும் : என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

6 இதோ! இதயத்தின் நேர்மையைக் கண்டு நீர் பெரிதும் மகிழ்கின்றீர். இதயத்தின் உள்ளிருந்தே எனக்கு மெய்ஞ்ஞானம் புகட்டுகின்றீர்.
7 ஈஸ்ஸோப் புல்லால் என்மேல் தெளித்தருளும், நான் தூய்மையாவேன் : நீர் என்னைக் கழுவியருளும், வெண்பனியிலும் வெண்மையாவேன். பல்லவி

12 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும், உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
13 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும், உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி

14 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்: உமது பெருந்தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்துவிடும்: என் வாய் உமது புகழ்ச்சியை எடுத்துரைக்கும். பல்லவி

அல்லேலூயா — அரு. 16 : 13a ; 14 : 26

அல்லேலூயா. உண்மையின் ஆவி வந்தபின் நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பேசுவது நீங்கள் அல்லீர், உங்கள் தந்தையின் ஆவியே.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 16-23

அக்காலத்தில்: யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது:

"இதோ! ஓநாய்களிடையே ஆடுகளைப்போல் உங்களை நான் அனுப்புகிறேன். ஆகவே, பாம்புகளைப்போல் விவேகம் உள்ளவராயும், புறுக்களைப்போல் கபடற்றவராயும் இருங்கள்.

எச்சரிக்கையாயிருங்கள்! மனிதர் உங்களை நீதிமன்றங்களுக்குக் கையளிப்பார்கள். தங்கள் செபக் கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு உங்களை ஆளுநரிடமும் அரசர்களிடமும் இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு, அவர்கள் முன்னும், புறவினத்தார் முன்னும் சாட்சியாய் இருப்பீர்கள். உங்களை இப்படிக் கையளிக்கும்போது என்ன சொல்லுவது, எப்படிச் சொல்லுவது என்று கவலைப்படவேண்டாம். என்ன சொல்ல வேண்டுமென்பது அவ்வேளையில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில், பேசுவது நீங்கள் அல்லீர்: உங்களில் இருந்து பேசுவது உங்கள் தந்தையின் ஆவியே.

சகோதரன் சகோதரனையும், தந்தை மகனையும் சாவுக்குக் கையளிப்பர். மக்கள் பெற்றோருக்கு எதிராக எழுந்து அவர்களைக் கொலை செய்வார்கள். என் பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள்,

இறுதிவரை நிலைத்து நிற்கிறவன் மீட்கப்பெறுவான். அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால், வேறொரு நகருக்கு ஓடிப்போங்கள். மனுமகன் வருவதற்குள் நீங்கள் இஸ்ராயேல் நாட்டு ஊர்களை எல்லாம் சுற்றி முடிக்கமாட்டீர்கள் என்று உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

### முதல் ஆண்டு

**கடவுள் உங்களைச் சந்தித்து இந்நாட்டிலிருந்து போகச்செய்வார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *49: 29-32; 50: 15-25*

அந்நாட்களில் :

யாக்கோபு தன் மக்களை நோக்கி: இதோ நான் என் முன்னோரோடு சேர்க்கப்பட இருக்கிறேன். என்னை என் மூதாதையர் அண்டையில், ஏத்தையனான எபிரோனின் நிலத்திலுள்ள இரட்டைக் குகையில் அடக்கம் செய்யக் கடவீர்கள். அது கானான் நாட்டிலே மம்பிறேய்க்கு எதிரே இருக்கின்றது. ஆபிரகாம் ஏத்தையனான எபிரோனின் கையில் அதையும் அதற்குரிய நிலத்தையும் சொந்தக் கல்லறை நிலமாய் இருக்கும்படி வாங்கினார். அங்கே அவரையும் அவர் மனைவி சாராளையும் அடக்கம் செய்தார்கள். அங்கே ஈசாக்கையும் அவர் மனைவி இரெபேக்காளையும் சேமித்தார்கள். அங்கே லீயாளையும் அடக்கம் செய்திருக்கிறேன் என்றான்.

யாக்கோபு தன் புதல்வர்களுக்கு அறிவுரை வழங்கி முடித்தபின், தன் கால்களைப் படுக்கையின்மேல் மடக்கி உயிர் துறந்தான்; தன் முன்னோரோடு சேர்க்கப்பட்டான்.

யாக்கோபின் மரணத்திற்குப் பின் சூசையின் சகோதரர்கள் தமக்குள்: நாம் அவனுக்குச் செய்த அநியாயத்தை அவன் ஒருவேளை நினைத்தாலும் நினைக்கலாம். அப்போது அவனுக்கு நாம் செய்த எல்லாத் தீங்குகளுக்கும் அவன் பழிக்குப் பழி வாங்கினாலும் வாங்கலாம் என்று அச்சமுற்று, அவனிடம் ஆளனுப்பி: உம் தந்தையார் இறக்குமுன் எங்களுக்குக் கட்டளையிட்டு, உம்மிடம் சொல்லச் சொன்னதாவது: 'உன் சகோதரர்கள் செய்த துரோகத்தையும் தீங்கையும் அவர்கள் உன்மேல் பகை வைத்துச் செய்த அக்கிரமத்தையும் நீ தயவு செய்து மறந்துவிடு' என்று சொல்லச் சொன்னார்கள். அதன்படியே உம் தந்தையின் கடவுளுக்கு

ஊழியர்களாகிய நாங்களும் அவ்வக்கிரமத்தை மன்னிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம் என்று சொல்லச் சொன்னார்கள் என்பதாம். இந்த வார்த்தைகளைக் கேட்டு சூசை அழுதார்.

மேலும் அவர் சகோதரர்கள் அவரிடம் போய்க் குப்புற விழுந்து வணங்கி: நாங்கள் உமக்கு அடிமைகள் என்றனர். அவர் அவர்களை நோக்கி: அஞ்சாதீர்கள். கடவுளின் திருவுளத்தைத் தடுப்பது நம்மால் ஆகுமோ? நீங்கள் என்னைக் கெடுக்கச் சதியாலோசனை செய்தீர்களே; ஆனால், கடவுள் தீமையை நன்மையாக மாற்றி, பல இனத்தாரைக் காப்பாற்றத் தக்கதாக, நீங்கள் இந்நேரம் தெளிவாய்க் கண்டறிந்தபடி என்னை உயர்த்தினார். அஞ்சாதீர்கள். நானே உங்களையும் உங்கள் சிறுவர்களையும் காப்பாற்றி வருவேன் என்றார். பின் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அன்போடும் இனிமையாகவும் அவர்களுடன் உரையாடி வந்தார்.

சூசையும் அவர் தந்தையின் குடும்பத்தார் அனைவரும் எகிப்திலே குடியிருந்தனர். அவர் நூற்றுப் பத்தாண்டுகள் உயிர் வாழ்ந்து, எபிராயிமின் புதல்வர்களை மூன்றும் தலைமுறைவரை கண்டார். மனாசேயின் மகனாகிய மக்கீருடைய புதல்வர்களும் சூசையின் மடியில் வளர்க்கப் பட்டனர்.

இதன்பின் ஒரு நாள் சூசை தம் சகோதரர்களை நோக்கி: நான் மரணமடைந்த பின் கடவுள் உங்களைச் சந்தித்து, உங்களை இந்நாட்டிலிருந்து தாம் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு ஆகியோர்க்கு வாக்களித்திருக்கும் நாட்டிற்கும் போகச் செய்வார் என்றார். மேலும்: கடவுள் உங்களைச் சந்திப்பார். நீங்கள் இவ்விடத்திலிருந்து புறப்படும்போது, என் எலும்புகளைக் கொண்டுபோகக் கடவீர்கள் என்று ஆணையிட்டுக் கூறியபின் உயிர் துறந்தார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 104: 1-2, 3-4, 6-7* (பல்லவி: *சங். 68: 32* காண்.)

பல்லவி: **எளியோரே, இறைவனைத் தேடுங்கள்,**
**உங்கள் உள்ளம் புத்துயிர் பெறும்.**

1 ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள்: அவர்தம் திருப்பெயரைச் சொல்லி வழிபடுங்கள். எல்லா இனத்தாரும் அவருடைய செயல்களை அறியச் செய்யுங்கள்.
2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்; இசைக் கருவி மீட்டுங்கள்: அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள். பல்லவி

௩ அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள்; ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.
௪ ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள்.

பல்லவி

௬ ஆண்டவருடைய ஊழியராகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகிய யாக்கோபின் மக்களே,
௭ ஆண்டவரே நம் கடவுள்; அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; சேனைகளின் அரசராகிய ஆண்டவரை என் கண்களால் கண்டேனே.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 6: 1-8

ஒசியாஸ் அரசன் இறந்த ஆண்டில், மிகவும் உயரமான ஓர் அரியணையின்மேல் ஆண்டவர் வீற்றிருப்பதைக் கண்டேன்; அவருடைய தொங்கலாடை திருக்கோயிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேலே உயரத்தில் சேராபீன்கள் நின்றனர். ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன; இரண்டு இறக்கைகளால் முகத்தை மூடிக்கொண்டனர்; இன்னும் இரண்டினால் கால்களை மறைத்துக் கொண்டனர்; மற்ற இரண்டினால் பறந்தனர்.

ஒருவரை ஒருவர் உரத்த குரலில் கூப்பிட்டு, "சேனைகளின் ஆண்டவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; உலக முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்துள்ளது" என்று கூறிக்கொண்டிருந்தார்கள். கூறியவரின் குரலொலியால் வாயில் நிலைகளெல்லாம் அதிர்ந்தன; கோயில் முழுவதும் புகை நிறைந்தது.

அப்பொழுது நான்: "ஐயோ, நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; அசுத்த உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கிற நான், சேனைகளின் ஆண்டவராகிய அரசரை, என் கண்களால் கண்டேனே!" என்றேன்.

அப்பொழுது, சேராபீன்களுள் ஒருவர் பீடத்திலிருந்து எரி நெருப்புப் பொறியொன்றைக் குறட்டினால் எடுத்துக்கொண்டு என்னிடம் பறந்து வந்தார். அதனால் என் வாயைத் தொட்டு, "இதோ இந் நெருப்புத் தழல் உன் இதழ்களைத் தொட்டது; ஆதலின் உன் குற்றம் நீக்கப்பட்டது; உன் பாவம் மன்னிக்கப்பட்டது" என்றார்.

மேலும் ஆண்டவருடைய குரலைக் கேட்டேன்; அவர், "யாரை அனுப்புவோம்? நமக்காக எவன் போவான்?" என்றார். உடனே நான், "இதோ, அடியேன் என்னை அனுப்பும்" என்றேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 92 : 1 ab, 1 c-2, 5 (பல்லவி : 1a)

பல்லவி: ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்:
மகத்துவத்தை ஆடையாய் உடுத்தியுள்ளார்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார். ஆண்டவர் வல்லமையைக் கச்சைபோல் அணிந்துகொண்டிருக்கின்றார்.
பல்லவி

பூவுலகை அவர் நிலைப்படுத்தினார்; அது அசைவுறாது.
2 ஆதியினின்றே உமது அரியணை நிலையாய் உள்ளது. ஆதியினின்றே நீரும் உள்ளீர்.
பல்லவி

5 உம்முடைய நியமங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவை: ஆண்டவரே, புனிதமே உமது இல்லத்திற்கு ஏற்றது, எந்நாளும் ஏற்றதே. பல்லவி

அல்லேலூயா 1 இரா. 4 : 14

அல்லேலூயா. இயேசுவினுடைய பெயரின் பொருட்டு பிறர் உங்களை வசை கூறினால், நீங்கள் பேறுபெற்றவர்கள்: ஏனெனில் கடவுளின் ஆவி உங்கள் மீது தங்குவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*10: 24-33*

அக்காலத்தில்: யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது:

"சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்லன். ஊழியன் தலைவனுக்கு மேற்பட்டவன் அல்லன். குருவைப்போல இருப்பது சீடனுக்குப் போதும்; தலைவனைப்போல இருப்பது ஊழியனுக்குப் போதும். வீட்டுத் தலைவனையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், வீட்டாரை எவ்வளவு அதிகமாகச் சொல்லமாட்டார்கள்!

எனவே, அவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில், வெளிப்படாதபடி மறைந்திருப்பது ஒன்றுமில்லை. அறியப்படாதபடி ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை. நான் உங்களுக்கு இருளில் கூறுவதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். நீங்கள் காதோடு காதாய்க் கேட்பதைக் கூரைமீதிருந்து அறிவியுங்கள்.

ஆன்மாவைக் கொல்ல முடியாதவர்களாய் உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள். உடலையும் ஆன்மாவையும் நரகத்தில் அழிக்கவல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு குருவி விற்பதில்லையா? எனினும், அவற்றில் ஒன்றுகூட உங்கள் தந்தையால் அன்றி, நிலத்தில் விழாது உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளது. எனவே, அஞ்சாதீர்கள். ஏனெனில்; குருவிகள் பலவற்றினும் நீங்கள் மேலானவர்கள்.

மனிதர் முன்னிலையில் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன். மனிதர் முன்னிலையில் என்னை மறுதலிப்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் மறுதலிப்பேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதினைந்தாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*மழை நிலத்தை நனைத்து விளையச் செய்கிறது.*

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 55: 10-11

ஆண்டவர் கூறுவதாவது:

"மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்திற்குத் திரும்பாமல், நிலத்தை நனைத்து, செழிப்பாக்கி, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவும் தருகிறது. அவ்வாறே, நம் வாயினின்று புறப்படும் வார்த்தையும் இருக்கும்; அது பயன் தராமல் நம்மிடம் திரும்பாது; நாம் விரும்பியதையெல்லாம் செய்து முடிக்கும்; எதற்காக நாம் அதை அனுப்பினோமோ, அதை நிறைவேற்றும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 64 : 9abcd, 9e-10, 11-12, 13 (பல்லவி: லூக். 8:8)

பல்லவி: **விதை நல்நிலத்தில் விழுந்து பலன் கொடுத்தது.**

மண்ணுலகைத் தேடி வந்தீர், அதற்கு நிறைய மழையைக் கொடுத்தீர்: அதற்கு நிறைவளம் தந்தீர்: கடவுளின் ஆறு கரை புரண்டோடியது. தானியங்கள் நிரம்ப விளையச் செய்தீர்.

பல்லவி

விளையச் செய்ததோ இவ்வாறு: படைசால்களில் தண்ணீர் ஓடச் செய்தீர். மண் கட்டிகளைப் பரம்படித்து மழையால் அதை மிருதுவாக்கினீர். முளைத்து வரும் விதையை ஆசீர்வதித்தீர்.

பல்லவி

11 ஆண்டு முழுவதையும் உமது கருணையால் நிரப்புகின்றீர்; நீர் செல்லும்
12 இடத்தில் செழுமை சிந்துகிறது. பாலைவெளியின் மேய்ச்சல்நிலம்
கொழுமைகொண்டு விளங்குகிறது; குன்றுகளைச் சூழ்ந்து அக்களிப்பு
காணப்படுகிறது. பல்லவி

13 மேய்ச்சல்களில் ஆடுமாடுகள் நிரம்பியிருக்கின்றன; பள்ளத்தாக்குகளில் தானி
யங்கள் மிகுந்துள்ளன; இவையெல்லாம் அக்களிப்புடன் பாடல்கள்
இசைக்கின்றன. பல்லவி

## இரண்டாம் வாசகம்

*கடவுளின் மக்கள் வெளிப்பட வேண்டுமென்று படைப்பனைத்துமே எதிர்நோக்கியிருக்கிறது.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8: 18-23

சகோதரர்களே : இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப்போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை என எண்ணுகிறேன். இம்மகிமையுடன் கடவுளுடைய மக்கள் வெளிப்பட வேண்டுமென்று படைப்பனைத்துமே ஏக்கத்தோடு எதிர்நோக்கியிருக்கிறது. ஏனெனில், படைப்பு முழுவதும் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது; தானே விரும்பி அப்படி உட்படவில்லை; அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அப்படி உள்ளது. எனினும் அது நம்பிக்கையற்ற நிலையில் இல்லை. படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கைகொண்டுள்ளது.

இந்நாள் வரை படைப்புப் பொருள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். படைப்புமட்டுமன்று; முதற்கனியாகத் தேவ ஆவியைக்கொண்டுள்ள நாமும் இறைமக்களாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையே விதை, அதை விதைப்பவர் கிறிஸ்துவே; அவரைக் கண்டடைபவர் எல்லாரும் என்றென்றும் நிலைத்திருப்பார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***விதைப்பவன் விதைக்கச் சென்றான்.***

✠ ***மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13: 1-23***

அந்நாளில் யேசு வீட்டைவிட்டு வெளியே போய்க் கடலோரத்தில் உட்கார்ந்திருந்தார். பெருங்கூட்டம் அவரை நெருக்கவே, அவர் படகிலேறி அமர வேண்டியிருந்தது. கூட்டம் அனைத்தும் கரையில் இருந்தது. அவர், அவர்களுக்கு உவமைகளால் பற்பல எடுத்துரைத்தார்:

“இதோ, விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரமாய் விழுந்தன. வானத்துப் பறவைகள் வந்து அவற்றைத் தின்றுவிட்டன. சில அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடிமண் இல்லாததால் விரைவில் முளைத்தன. வெயில் ஏறியதும் தீய்ந்து, வேரில்லாமையால் காய்ந்து போயின. சில முட்செடிகள் நடுவில் விழுந்தன. முட்செடிகள் அவற்றை நெரித்துவிட்டன. சில நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் ஒரு சில நூறு மடங்கு, வேறு சில அறுபது மடங்கு, இன்னும் சில முப்பது மடங்கு பலன் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்” என்றார்.

சீடர் அவரை அணுகி, “அவர்களிடம் நீர் உவமைகளில் பேசுவதேன்?” என்றனர். அவர், அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது: “விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில், உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; அவனும் நிறைவு பெறுவான். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். ஏன் அவர்களிடம் உவமைகளில் பேசுகிறேனெனில், அவர்கள் கண்டும் காண்பதில்லை; கேட்டும் கேட்பதில்லை; உணர்வதுமில்லை. இசையாஸ் கூறியுள்ள இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது.

‘கேட்டுக் கேட்டும் நீங்கள் உணர்வதில்லை, பார்த்துப் பார்த்தும் நீங்கள் காண்பதில்லை. அவர்கள் கண்ணால் காணாமலும், காதால் கேட்காமலும், உளத்தால் உணராமலும் அவர்கள் மனந்திரும்பாமலும் நான் அவர்களைக் குணமாக்காமலும் இருக்கும்படி இம்மக்களின் உள்ளம் மழுங்கிவிட்டது; இவர்கள் காது மந்தமாகிவிட்டது; கண்ணை மூடிக் கொண்டனர்.’

உங்கள் கண்களோ பேறுபெற்றவை; ஏனெனில் அவை காண்கின்றன. காதுகளும் பேறுபெற்றவை; ஏனெனில் அவை கேட்கின்றன. நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்; இறைவாக்கினர், நீதிமான்கள் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை.

எனவே, விதைப்பவன் உவமையின் பொருள் என்னவென்று கேளுங்கள்; விண்ணரசைப் பற்றிய வார்த்தையை ஒருவன் கேட்டும் உணராவிட்டால், அவன் உள்ளத்தில் விதைத்ததைத் தீயவன் வந்து பறித்துக்கொள்வான். வழியோரம் விதைக்கப்பட்டவன் இவனே.

பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு உடனே மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறவனே. ஆனால், அவன் தன்னில் வேரற்றவன்; நிலையற்றவன். வார்த்தையின் பொருட்டு வேதனையுற்றதும் அல்லது துன்புறுத்தப்பட்டதும் இடறல் படுவான்.

முட்செடிகள் நடுவில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு, இவ்வுலகக் கவலையும் செல்வ மாயையும் வார்த்தையை நெரிக்க, பயனற்றுப் போகிறவனே.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு உணர்ந்துகொள்ளுகிறவனே. இவன் நூறு மடங்கோ, அறுபது மடங்கோ, முப்பது மடங்கோ பலன் கொடுப்பான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13: 1-9

அந்நாளில் யேசு வீட்டைவிட்டு வெளியே போய்க் கடலோரத்தில் உட்கார்ந்திருந்தார். பெருங்கூட்டம் அவரை நெருக்கவே, அவர் படகிலேறி அமர வேண்டியிருந்தது. கூட்டம் அனைத்தும் கரையில் இருந்தது. அவர், அவர்களுக்கு உவமைகளால் பற்பல எடுத்துரைத்தார்:

"இதோ, விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரமாய் விழுந்தன. வானத்துப் பறவைகள் வந்து அவற்றைத் தின்றுவிட்டன. சில அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடிமண் இல்லாததால் விரைவில் முளைத்தன. வெயில் ஏறியதும் தீய்ந்து, வேரில்லாமையால் காய்ந்து போயின. சிலமுட்செடிகள் நடுவில் விழுந்தன. முட்செடிகள் அவற்றை நெரித்துவிட்டன. சில நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் ஒரு சில நூறு மடங்கு, வேறு சில அறுபது மடங்கு, இன்னும் சில முப்பது மடங்கு பலன் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நம் மக்களிடம் போய் இறைவாக்குக் கூறு.*

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7: 12-15

அந்நாட்களில்: பெத்தேலின் அர்ச்சகனாகிய அமாசியாஸ் ஆமோசை நோக்கிக் கூறியதாவது:

"காட்சி காண்பவனே, போய்விடு; யூதாவின் நாட்டுக்கு ஓடிவிடு; அங்கே போய் இறைவாக்குச் சொல், பிழைப்புத் தேடிக்கொள். இனிப் பெத்தேலில் மறுபடியும் இறைவாக்குச் சொல்லாதே; ஏனெனில் இது அரசரின் பரிசுத்த இடம், அரசுக்குரிய கோயில்".

ஆமோஸ் அதற்கு மறுமொழியாக அமாசியாசைப் பார்த்துக் கூறினார்: நான் இறைவாக்கினனுமல்லேன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனுமல்லேன்; நான் ஆடுமாடு மேய்ப்பவன், காட்டு அத்தி மரங்களைக் கண்காணிப்பவன். ஆடுகளை ஓட்டிக்கொண்டுபோன என்னை ஆண்டவர் தெரிந்தெடுத்து, 'நம் மக்களாகிய இஸ்ராயேலிடம் போய், இறைவாக்குக் கூறு' என்று அனுப்பினார்".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 84 : 8 ab-9, 10-11, 12-13 (பல்லவி : 7)

பல்லவி: ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்:
உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன்:
8 தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில்
9 உள்ளது. அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும்,

பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்: நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும்: நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும்.

பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார்: நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*உலகம் உருவாகுமுன்னரே, நம்மைத் தேர்ந்துகொண்டார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

*1: 3-14*

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி! அவர் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும், தேவ ஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தும் பொழிந்து, நமக்கு ஆசி அளித்தார். எவ்வாறெனில், நாம் அவரது திருமுன் பரிசுத்தரும் மாசற்றவருமாய் இருக்குமாறு, உலகம் உருவாகு முன்னரே அவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்துகொண்டார். அவர் தம் திருவுள விருப்பத்திற்கேற்ப, தம் அன்பு மகனுக்குள் நமக்கருளிய அருளின் மாட்சிமை புகழ் பெற்று விளங்க, யேசு கிறிஸ்துவின் வழியாகவே, நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார்.

அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய், இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்பு அடைகிறோம், குற்றங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறோம். அந்த அருளை முழுஞானமாகவும் அறிவுத்திறனாகவும், நம்மில் பெருகச் செய்தார். தம் திருவுளத்தின் மறைவான திட்டத்தை நமக்கு அறிவித்தார். கால நிறைவில் நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடாக முதலிலிருந்தே கிறிஸ்துவுக்குள் அத்தயவான திட்டத்தை வகுத்து வைத்திருந்தார். விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டும் என்பதே அத்திட்டம்.

தம் திருவுளக் கருத்திற்கேற்ப அனைத்தையும் செய்து முடிக்கும் இறைவனின் திட்டப்படி, முன் குறிக்கப்பட்ட நாங்கள் கிறிஸ்துவுக்குள்ளே பங்கு பெற்றுக்கொண்டோம். இவ்வாறு, கிறிஸ்துவின்மேல் முதன் முதல் நம்பிக்கைவைத்த நாங்கள் தம்முடைய மாட்சிமைக்குப் புகழ்ச்சியாய் விளங்கவேண்டுமென, இறைவன் விரும்பினார். நீங்களும், உங்கள் மீட்பின் நற்செய்தியாகிய உண்மை வார்த்தையைக் கேட்டு,

விசுவாசம் கொண்டு, வாக்களிப்பட்ட பரிசுத்த ஆவியின் முத்திரையைக் கிறிஸ்துவுக்குள்ளே பெற்றுக்கொண்டீர்கள். நாம் மீட்படைந்து, இறைவனது உடைமையாவதற்கென, ஆவியானவரே நம் உரிமைப் பேற்றின் அச்சாரமாய் இருக்கிறார். இவ்வாறே இறைவனுடைய மாட்சிமையின் புகழ் விளங்க வேண்டியிருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 3-10

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி ! அவர் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும், தேவ ஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தும் பொழிந்து, நமக்கு ஆசி அளித்தார். எவ்வாறெனில், நாம் அவரது திருமுன் பரிசுத்தரும் மாசற்றவருமாய் இருக்குமாறு, உலகம் உருவாகு முன்னரே அவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்து கொண்டார். அவர் தம் திருவுள விருப்பத்திற்கேற்ப, தம் அன்பு மகனுக்குள் நமக்கருளிய அருளின் மாட்சிமை புகழ் பெற்று விளங்க, யேசு கிறிஸ்துவின் வழியாகவே, நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக்கொள்ள அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார்.

அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய், இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்பு அடைகிறோம், குற்றங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறோம். அந்த அருளை முழு ஞானமாகவும் அறிவுத்திறனாகவும், நம்மில் பெருகச் செய்தார். தம் திருவுளத்தின் மறைவான திட்டத்தை நமக்கு அறிவித்தார். கால நிறைவில் நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடாக முதலிலிருந்தே கிறிஸ்துவுக்குள் அத்தயவான திட்டத்தை வகுத்து வைத்திருந்தார். விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டும் என்பதே அத்திட்டம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லேலூயா எபே. 1 : 17-18 காண்.

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்துகொள்ளும்படி நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர்களை அனுப்பத் தொடங்கினார்.**

✠ *மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்* *6: 7-13*

*அக்காலத்தில் :*

யேசு பன்னிருவரையும் அழைத்து இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார்.

அவர்களுக்கு அசுத்த ஆவிகளின்மேல் அதிகாரம் அளித்தார். மேலும் பயணத்துக்கு ஒரு கோல் தவிர, பையோ உணவோ, மடியில் காசோ கொண்டுபோக வேண்டாம் என்று கட்டளையிட்டார். ஆனால், "மிதியடி போட்டுக்கொள்ளலாம். உள்ளாடை இரண்டு அணிய வேண்டாம்" என்றார்.

பின்னும் அவர்களுக்குக் கூறியது: "நீங்கள் எங்கேயாவது ஒரு வீட்டிற்குச் சென்றால் அவ்விடத்திலிருந்து போகும்வரை அங்கேயே தங்கியிருங்கள். எந்த ஊராவது உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்களுக்குச் செவிசாய்க்காமலும் இருந்தால், நீங்கள் அங்கிருந்து வெளியேறி அவர்களுக்கு எதிர்ச்சாட்சியாக உங்கள் காலிலிருக்கும் தூசியைத் தட்டி விடுங்கள்."

அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனந்திரும்ப வேண்டுமென்று அறிவித்தனர். பேய்கள் பல ஓட்டினர். பிணியாளர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நீ கட்டளையின்படி நடக்கும்பொருட்டு, அது உனக்கு மிகவும் அண்மையில் உள்ளது.**

**உப ஆகமத்திலிருந்து வாசகம்** *30: 10-14*

**மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:**

**நீ உன் கடவுளாகிய ஆண்டவருடைய குரலொலிக்குச் செவி கொடுத்து, இந்த நூலில் எழுதப்பட்டுள்ள அவருடைய கட்டளைகளையும் சடங்குமுறைகளையும் கைக்கொண்டு அனுசரித்து, உன் முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடமாய்த் திரும்பினால் மட்டுமே (முன் குறிக்கப்பட்ட நன்மைகளைப் பெறுவாய்).**

**இன்று நான் உனக்குக் கற்பிக்கின்ற இக்கட்டளை உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும் அன்று. உனக்குத் தூரமானதும் அன்று. நாங்கள் அதைக் கண்டுபிடித்து அதன்படி செய்யும்பொருட்டு, எங்களுக்காக வானத்தில் ஏறிக்கொண்டு வரத்தக்கவன் யார் என்று நீ சொல்லும்படிக்கு, (அந்தக் கட்டளை) வானத்தில் வைக்கப்பட்டதும் அன்று; நாங்கள் அதைக் கண்டுபிடித்து அதன்படி நடக்கும்பொருட்டு, எங்களுக்காகக் கடலைத் தாண்டிக்கொண்டு வரத்தக்கவன் யார் என்று நீ சாக்குப்போக்குச் சொல்லும்படிக்கு, (அந்தக் கட்டளை) கடலுக்கு அப்பால் வைக்கப்பட்டதும் அன்று. நீ அந்தக் கட்டளையின்படி நடக்கும்பொருட்டு, அது உனக்கு மிகவும் அண்மையிலேயே இருக்கிறது; அது உன் வாயிலும் இதயத்திலும் உள்ளது.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 69: 13, 16, 29-30, 35 ab & 36 (பல்லவி: 32 காண்)*

பல்லவி: **எளியோரே, இறைவனைத் தேடுங்கள்,**
**உங்கள் உள்ளம் புத்துயிர் பெறும்.**

13 **ஆனால் ஆண்டவரே, உம்மை நோக்கியே உள்ளது என் மன்றாட்டு: இறைவா, உமக்குகந்த நேரத்தில் உம்மை நோக்கி வேண்டுகிறேன். மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப என் மன்றாட்டைக் கேட்டருளும்: உறுதியான உமது அருட்துணைக்கேற்ப எனக்குச் செவி சாய்த்தருளும்.** பல்லவி

16 உமது அருள் கனிவுமிக்கதாதலின், ஆண்டவரே, என் மன்றாட்டைக்
கேட்டருளும்: உமது இரக்கப்பெருக்கத்திற்கேற்ப என்னைக்
கண்ணோக்கும்.
பல்லவி

29 நானோவெனில் சிறுமையுற்றவனும் துயர்மிக்கவனும் ஆனேன். இறைவா,
30 உமது அருட்துணை என்னைக் காப்பதாக. புகழ் இசைத்து இறைவனின்
பெயரைப் புகழ்வேன்: நன்றி உணர்வோடு அவர் புகழ் சாற்றுவேன்.
பல்லவி

35 ஏனெனில், கடவுள் சீயோனுக்கு மீட்பளிப்பார்: யூதாவின் நகரங்களைக்
36 கட்டி எழுப்புவார்: அவருடைய ஊழியர்கள் வழிவந்தோர் அதை
உரிமைப்படுத்திக்கொள்வர்: அவர்மீது அன்பு கொள்பவர் அதில்
வாழ்வார்கள்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

அவராலேயே, அவருக்காகவே அனைத்தும் ஆயின.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 15-20

கிறிஸ்து யேசு கட்புலனாகாக் கடவுளின் சாயல், படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்; ஏனெனில், அவரில் அனைத்தும் உண்டாயிற்று. விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை கட்புலனாவன, கட்புலனாகாதன, அரியணை சூழ்வோர், ஆட்சி புரிவோர், தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் ஆகிய வானதூதர் அனைவரும் உண்டானது அவரிலேதான். அவராலேயே அவருக்காகவே அனைத்தும் ஆயின. அனைத்துக்கும் முன்பே உள்ளவர் அவர்; அனைத்தும் அவரில் இணைந்து நிலைக்கும்.

திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் அவரே. ஆதியானவரும் அவரே. அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு அவரே. முழுநிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார். சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால் சமாதானம் உண்டாக்கி விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 6 : 63b, 68b

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்: முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் அயலான் யார்?**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 10: 25-37

அக்காலத்தில் :

சட்ட வல்லுநன் ஒருவன் எழுந்து யேசுவைச் சோதிக்க, "போதகரே, முடிவில்லாத வாழ்வுபெற, நான் செய்ய வேண்டியதென்ன?" என்று வினவினன். அதற்கு அவர், "திருச்சட்ட நூலில் என்ன எழுதியுள்ளது? அதில் என்ன வாசிக்கிறீர்?" என்றார். அவர் மறுமொழியாக, "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல், உன் அயலான்மீதும் நீ அன்பு காட்டுவாயாக" என்றான். அவரோ, "சரியாய்ப் பதில் சொன்னீர்; இப்படியே செய்யும்; வாழ்வீர்" என்றார்.

அவன், தான் கேட்டது சரியான கேள்வி என்று காட்டவிரும்பி, "என் அயலான் யார்? என்று யேசுவை வினவினன். அதற்கு யேசு,

"யெருசலேமிலிருந்து, யெரிகோவுக்கு ஒருவன் இறங்கிச் செல்லுகையில், கள்வர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் ஆடைகளைப் பறித்துக்கொண்டு அவனைக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுச் சென்றார்கள். அதே வழியாக ஒரு குருவும் இறங்கிச் செல்ல நேர்ந்தது. அவர் அவனைக் கண்டும் விலகிச் சென்றார். அவ்வாறே லேவியன் ஒருவனும் அவ்விடத்துக்கு வந்து அவனைக் கண்டு விலகிச் சென்றான். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியன் ஒருவன் அவன் அருகில் வந்து, அவனைக் கண்டு, மனமிரங்கினன். அவனை அணுகி எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து, அவன் காயங்களைக் கட்டித் தன் சொந்த வாகனத்தில் ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவனைக் கண்காணித்தான். மறுநாள் இரு வெள்ளிக்காசுகளை எடுத்துச் சாவடிக்காரனிடம் கொடுத்து, 'இவனைக் கண்காணித்துக்கொள். இதற்கு மேல் செலவானால் திரும்பி வரும்போது கொடுத்துவிடுவேன்' என்றான்.

"கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவருள் எவன் அயலான் என்று உமக்குத் தோன்றுகிறது?" என்றார். அதற்கு அவன், "அவனுக்கு இரக்கம் காட்டியவன்தான்" என்றான். யேசு, "நீரும் போய் அவ்வாறே செய்யும்" என்று கூறினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அவர்கள் பெருகாதபடி அவர்களை வதைப்போம்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *1: 8-14, 22*

அந்நாட்களில் :

புதிய அரசன் ஒருவன் எகிப்தை ஆள எழுந்தான். இவனோ சூசையை அறியாதவன். எனவே தன் மக்களை நோக்கி: இதோ, இஸ்ராயேல் புதல்வராகிய மக்கள் பெரும் திரளாய், நம்மிலும் வல்லவராய் இருக்கிறார்கள். வாருங்கள், அவர்கள் பெருகாதபடி நாம் அவர்களைத் தந்திரமாய் வதைக்கவேண்டும். இல்லாவிடில், ஏதேனும் போர் நேரிடும் காலத்தில் அவர்கள் நம் பகைவரோடு கூடி நம்மை வென்று நாட்டை விட்டுப் புறப்பட்டுப் போகக்கூடும் என்றான்.

அப்படியே அவன், சுமை சுமக்கும் கடின வேலையினால் அவர்களைத் துன்புறுத்தச் சொல்லி, வேலைவாங்கும் மேற்பார்வையாளரை நியமித்தான். அப்பொழுது அவர்கள் பாரவோனுக்குக் களஞ்சிய நகரங்களாகிய பிட்டோமையும் இராம்சேசையும் கட்டி எழுப்பினார்கள். ஆயினும், அவர்களை எவ்வளவுக்கு வருத்தினார்களோ அவ்வளவுக்கு அவர்கள் பெருகிப் பலுகினார்கள். எகிப்தியர் இஸ்ராயேல் மக்களைப் பகைத்துப் பழித்துத் துன்புறுததினர். சாந்து, செங்கல் சம்பந்தமான கொடிய வேலைகளாலும், மண் தொழில்களுக்குரிய பல வகைப் பணிவிடைகளாலும் அவர்களைக் கொடுமைப்படுத்தியதன்மூலம் அவர்களுக்கு வாழ்க்கையே கசப்பாகும்படி செய்தனர்.

அதன் பின், பாரவோன்: பிறக்கும் ஆண் குழந்தைகளையெல்லாம் ஆற்றில் எறிந்து விடுங்கள்; பெண் குழந்தைகளையெல்லாம் காப்பாற்றுங்கள் என்று தனது மக்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 123 : 1-3, 4-6, 7-8 (பல்லவி : 8 அ)

பல்லவி : **ஆண்டவர் பெயரால் நமக்கு உதவி உண்டு.**

1 ஆண்டவரே நம் சார்பில் இருந்திராவிடில், இஸ்ராயேலர் இங்ஙனம் திரும்பச் சொல்லட்டும்.
2 ஆண்டவரே நம் சார்பில் இருந்திராவிடில் நம்மை எதிர்த்து ஆட்கள் எழுந்தபோது,
3 நம்மீது அவர்கள் சினம் மூண்டெழுந்தபோது உயிரோடு நம்மை விழுங்கியிருப்பர். பல்லவி

4 அப்போது வெள்ளம் நம்மை மூழ்கடித்திருக்கும். வெள்ளப்பெருக்கு நம்மேல் பாய்ந்திருக்கும்.
5 அது நம்மேல் பொங்கி எழுந்து பாய்ந்திருக்கும்.
6 ஆண்டவர் போற்றி; ஏனெனில் அவர் நம்மை எதிரிகளின் பற்களுக்கு இரையாகத் தரவில்லை. பல்லவி

7 வேடர்கள் வைத்த கண்ணியினின்று தப்பிய பறவைபோல் நாம் உயிர் தப்பினோம். கண்ணி அறுந்தது, நாம் பிழைத்தோம்.
8 ஆண்டவர் பெயரால் நமக்கு உதவி உண்டு. விண்ணும் மண்ணும் படைத்தவர் அவரே. பல்லவி

## 2 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களைச் சுத்திகரியுங்கள், நம் கண்முன்னிருந்து உங்கள் தீச்செயலை அகற்றுங்கள்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 1: 11-17

“கணக்கற்ற உங்கள் பலிகள் நமக்கு எதற்காக என்கிறார் ஆண்டவர்; ஆட்டுக் கடாக்களின் தகனப் பலிகளும், கொழுத்த மிருகங்களின் கொழுப்பும் நமக்குப் போதுமென்றாகி விட்டன; காளைகளின் இரத்தத்திலும், ஆட்டுக்குட்டிகளின் குருதியிலும், வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தத்திலும் நமக்கு விருப்பமில்லை; நீங்கள் நம் திருமுன் வரும்போது, நம் முற்றத்தை வலம்வந்து இவற்றைத் தரும்படி கேட்டவர் யார்?

இனிமேல் பயனில்லாக் காணிக்கைகளைக் கொணர வேண்டாம், நீங்கள் காட்டும் தூபம் எனக்கு அருவருப்பையே தருகின்றது; அமாவாசை, ஓய்வு நாள், வழிபாட்டுக் கூட்டங்கள் முதலிய அக்கிரமங்களையும் கொண்டாட்டத்தையும் சகிக்க மாட்டோம். உங்கள் அமாவாசை, திருவிழாக் கொண்டாட்டங்களையும் முழு உள்ளத்தோடு நாம் வெறுத்துத் தள்ளுகிறோம்; அவை நமக்கொரு சுமையாகி விட்டன; அவற்றைச் சுமந்து சோர்ந்து போனோம். நம்மை நோக்கி நீங்கள் கைகளை உயர்த்தும்போது, உங்களிடமிருந்து நம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறோம். நீங்கள் எவ்வளவுதான் மன்றாடினாலும் நாம் செவி சாய்ப்பதில்லை. உங்கள் கைகளோ இரத்தத்தில் தோய்ந்துள்ளன.

உங்களைச் சுத்திகரியுங்கள், தூய்மைப்படுத்துங்கள். நம் கண் முன்னிருந்து உங்கள் தீச்செயலை அகற்றுங்கள்; தீமை செய்வதைவிட்டு ஓயுங்கள்; நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள், திக்கற்ற பிள்ளைக்கு நீதி வழங்குங்கள், கைம்பெண்ணுக்காக வழக்கு நடத்துங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49 : 8-9, 16 bc-17, 21 & 23 (பல்லவி : 23 b)

பல்லவி : நேர்மையோடு நடப்பவனுக்கு
இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை : ஏனெனில், உன்
தகனப் பலிகள் எந்நேரமும் என் கண் முன்னே இருக்கின்றன.
9 உன் வீட்டில் உள்ள காளைமாட்டையா நான் கேட்கிறேன் : உன் மந்தை
யிலுள்ள ஆடுகளையா நான் கேட்கிறேன் ?
பல்லவி

16 "என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்? என் உடன்படிக்கையைப்
பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்
தவன் அன்றோ நீ?
பல்லவி

21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப்
போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம்
எடுத்துச் சொல்கிறேன், பார்!
23 இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன் :
நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்."
பல்லவி

அல்லேலூயா மத். 5: 10

அல்லேலூயா. நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

சமாதானத்தையன்று, வாளையே கொணர வந்தேன்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

10: 34-11: 1

அக்காலத்தில் : யேசு தம் அப்போஸ்தலர்களை நோக்கிக் கூறியதாவது :

"உலகிற்குச் சமாதானம் கொணர வந்தேன் என்று நினைக்க வேண்டாம். சமாதானத்தை அன்று, வாளையே கொணர வந்தேன். தந்தைக்கு எதிராக மகனையும், தாய்க்கு எதிராக மகளையும், மாமிக்கு எதிராக மருமகளையும் பிரிக்க வந்தேன். தன் வீட்டாரே தனக்குப் பகைவர்.

என்னைவிடத் தன் தந்தையையோ தாயையோ அதிகம் நேசிக்கிறவன் எனக்கு ஏற்றவன் அல்லன். என்னைவிடத் தன் மகனையோ மகளையோ அதிகம் நேசிக்கிறவனும் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் சிலுவையை ஏற்றுக்கொண்டு, என்னைப் பின்செல்லாதவன் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் உயிரைக் கண்டடைந்தவன் அதை இழந்து விடுவான். எனக்காகத் தன் உயிரை இழந்தவனே அதைக் கண்டடைவான்.

உங்களை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக்கொள்பவனே என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறான். இறைவாக்ினரை இறைவாக்ினராக ஏற்றுக்கொள்பவன் இறைவாக்கினரின் கைம்மாறு பெறுவான். நீதிமானை நீதிமானாக ஏற்றுக்கொள்பவன் நீதிமானுடைய கைம்மாறு பெறுவான்.

என் சீடன் என்பதற்காக இச் சிறியவருள் ஒருவனுக்கு ஒரே ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கைம்மாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்."

யேசு தம் பன்னிரு சீடருக்கும் கட்டளை கொடுத்து முடிந்ததும், பக்கத்து ஊர்களில் போதிக்கவும் தூது உரைக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தண்ணீரினின்று எடுத்ததால் அவனுக்கு மோயீசன் என்று பெயரிட்டாள். அவன் பெரியவனானபின் தன் சகோதரரிடம் போனான்.*

**யாத்திராகமத்திலிருந்து வாசகம்** 2: 1-15a

அந்நாட்களில்:

லேவி கோத்திரத்து மனிதன் ஒருவன் தனது கோத்திரத்துப் பெண்ணைக் கொண்டான். இவள் கருவுற்று ஒரு மகனைப் பெற்றாள். அவன் வடிவழகு உள்ளவனென்று கண்டு, அவனை மூன்று மாதமாய் ஒளித்து வைத்திருந்தாள். பிறகு குழந்தையை ஒளிக்க இயலாமையால், அவள் ஒரு நாணல் கூடையை எடுத்து, அதைக் களிமண்ணாலும் தாராலும் பூசி, அதனுள்ளே குழந்தையை வைத்து, ஆற்றங்கரைக் கோரைக்குள்ளே அதைப் போட்டுவிட்டாள். பிள்ளையின் சகோதரியோ என்ன நிகழுமோ என்று, தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது பாரவோனின் புதல்வி நீராட வந்து ஆற்றிலே இறங்கினாள். அவளுடைய பணிப் பெண்கள் கரையோரத்தில் உலாவிக் கொண்டிருந்தனர். அவள் கோரைகளுக்குள் கூடையைக் கண்டு, தன் பணிப்பெண்களுள் ஒருத்தியை அனுப்பி, அதைக் கொண்டு வரச் செய்தாள். அதைத் திறந்தபோது, அதனுள் அழுது கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கண்டாள். உடனே அதன்மீது இரக்கம் கொண்டாள். எபிரேயருடைய குழந்தைகளில் இது ஒன்றாகும் என்றாள். அந்நேரத்திலே குழந்தையின் சகோதரி அவளை நோக்கி: குழந்தைக்குப் பாலூட்டும்படி எபிரேயப் பெண்களில் ஒருத்தியை உம்மிடம் அழைத்துக்கொண்டு வரட்டுமா என்றாள். அவள்: ஆம், அழைத்து வா என்று பதில் கூறவே, சிறுமி போய்த் தன் தாயை அழைத்து வந்தாள். பாரவோன் புதல்வி அவளை நோக்கி: நீ இச்சிறுவனை எடுத்து எனக்காக வளர்த்திடுவாய். நான் உனக்குச் சம்பளம் கொடுப்பேன் என்று வாக்களித்தாள். அந்தப் பெண், சிறுவனை ஏற்றுக்கொண்டு வளர்த்தாள். பிறகு, பிள்ளை பெரிதானபோது, அதைப் பாரவோன் புதல்வியிடம் கொண்டுபோய் விட்டாள். இவளோ, அவனைச் சொந்தப் பிள்ளையாகச் சுவீகரித்துக்கொண்டு: அவனை நான் தண்ணீரினின்று எடுத்தேன் என்று கூறி, அவனுக்கு மோயீசன் என்று பெயரிட்டாள்.

மோயீசன் பெரியவனான காலத்தில் தன் சகோதரரிடம் போய், அவர்கள் கடும் துன்பம் அனுபவிப்பதையும், எபிரேயராகிய தன்

சகோதரரில் ஒருவனை ஓர் எகிப்தியன் அடிப்பதையும் கண்டான். அவன் இங்கும் அங்கும் சுற்றிப் பார்த்து ஒருவரும் இல்லையென்று அறிந்து, எகிப்தியனை வெட்டி வீழ்த்தி மணலில் புதைத்துவிட்டான்.

அவன் மறுநாளும் வெளியே போகையில் எபிரேய மனிதர் இருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவன் அநியாயம் செய்தவனை நோக்கி: நீ உன் அயலானை அடிப்பதென்ன? என்று கேட்டான். அதற்கு அவன்: எங்களுக்கு உன்னைத் தலைவனாகவும் நடுவராகவும் நியமித்தவன் யார்? நேற்று நீ எகிப்தியனைக் கொன்றதுபோல் என்னையும் கொன்றுவிட நினைக்கிறாயோ? என்று பதில் சொன்னான். அதைக் கேட்ட மோயீசன்: அச்செய்தி எவ்வாறு வெளிப்பட்டது என்று அச்சம் கொண்டான்.

பாரவோனும் இச்செய்தியைக் கேட்டு அறியவே, மோயீசனைக் கொலை செய்ய வழி தேடினான். இவனோ, அவன் முன்னிலையினின்று ஓடிப் போய், மதியான் நாட்டிலே தங்கியிருந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 68 : 2, 13, 29-30, 32-33* (பல்லவி : 32 காண்.)

பல்லவி : **எளியோரே, இறைவனைத் தேடுங்கள், உங்கள் உள்ளம் புத்துயிர் பெறும்.**

2 ஆழ்ந்த சேற்றில் அமிழ்ந்திக் கிடக்கிறேன் : கால் ஊன்ற இடமேயில்லை.
ஆழ்ந்த வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டேன் : வெள்ளம் என்னை மூழ்கடிக்கிறது. பல்லவி

13 ஆனால் ஆண்டவரே, உம்மை நோக்கியே உள்ளது என் மன்றாட்டு : இறைவா, உமக்குகந்த நேரத்தில் உம்மை நோக்கி வேண்டுகிறேன். மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப என் மன்றாட்டைக் கேட்டருளும் : உறுதியான உமது அருட்துணைக்கேற்ப எனக்குச் செவி சாய்த்தருளும். பல்லவி

29 நானோவெனில் சிறுமையுற்றவனும் துயர்மிக்கவனும் ஆனேன். இறைவா,
30 உமது அருட்துணை என்னைக் காப்பதாக.
புகழ் இசைத்து இறைவனின்பெயரைப் புகழ்வேன்: நன்றி உணர்வோடு அவர் புகழ் சாற்றுவேன். பல்லவி

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளுங்கள். இறைவனைத் தேடுவோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.
33 ஏனெனில், ஏழைகளின்குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார் :
சிறைப்பட்ட தம்மக்களை அவர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்களிடம் விசுவாசம் இல்லாவிடில், நீங்கள் நிலைபெற்றிருக்க மாட்டீர்கள்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7: 1-9

யூதாவின் அரசனான ஓசியாஸ் என்பவனின் மகன் யோவாத்தானின் மகன் ஆக்காஸ் அரசனுடைய நாட்களில் சீரியாவின் அரசனான இராசீன் என்பவனும், இஸ்ராயேலின் அரசனாகிய ரொமேலியின் மகன் பாசே என்பவனும் யெருசலேமுக்கு எதிராகப் படையெடுத்துவந்து, அதைப் பிடிக்கப் பார்த்தனர்; ஆயினும் அதைப் பிடிக்க முடியவில்லை. "சீரியா எப்பிராயீமோடு சேர்ந்துகொண்டது" என்னும் செய்தி தாவீதின் வீட்டாருக்கு எட்டியதும், ஆக்காஸ் உள்ளமும், அவன் நாட்டினரின் உள்ளங்களும் காட்டு மரங்கள் காற்றில் அலைக்கழிக்கப்படுவதுபோல் அலைக்கழிக்கப்பட்டன.

அப்போது ஆண்டவர் இசையாசை நோக்கிக் கூறினார்: "நீயும் உன் மகன் ஷெயார்யஷூப் என்பவனும் 'வண்ணான் வயல்' என்னுமிடத்திற்குப் போகும் சாலையில், மேற்குளத்துக்குப் போகும் கட்டுக் கால்வாயின் மறுமுனைக்குப் போய் அங்கே ஆக்காசைச் சந்தித்து, அவனுக்கு இதைச் சொல்:

அமைதியாய் இரு, அஞ்சாதே; சீரியாவின் அரசனான இராசீனுடையவும் ரொமேலியின் மகனுடையவும் பொங்கியெழும் கடுஞ்சினமாகிய புகையும் இரண்டு கொள்ளிகளைக் கண்டு உன் உள்ளம் கலங்காதிருக்கட்டும். சீரியாவும் எப்பிராயீமும் ரொமேலியின் மகனும், உனக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டி, யூதாவுக்கு எதிராகப் படையெடுத்துப்போய், அதனை அச்சுறுத்திப் போர் புரிந்து கைப்பற்றுவோம்; தபேயேல் என்பவனின் மகனை அதற்கு அரசனாக்குவோம்" என்று பேசிக் கொண்டார்கள்.

ஆதலால் ஆண்டவராகிய இறைவன் கூறுவது இதுவே: அவர்களின் திட்டம் நிலைபெறாது, அது நிறைவேறாது; ஏனெனில் சீரியாவுக்குத் தலைநகரம் தமஸ்குப் பட்டணம், தமஸ்குப் பட்டணத்தின் தலைவன் இராசீன் அரசன். (இன்னும் அறுபத்தைந்து ஆண்டுகளில் எப்பிராயீம் தவிடு பொடியாக்கப்படும்: அதன்பின் அது ஒரு மக்களினமாகவே இராது.) எப்பிராயீமுக்குத் தலைநகரம் சமாரியாப் பட்டணம், சமாரியாப் பட்டணத்தின் தலைவன் ரொமேலியின் மகன். உங்களிடம் விசுவாசம் இல்லாவிட்டால், நீங்கள் நிலைபெற்றிருக்க மாட்டீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 47 : 1-2a, 2b-3, 4-5, 6-7 (பல்லவி : 8d)

பல்லவி : **இறைவன் தம் நகரை என்றென்றைக்கும் நிலைநிறுத்துகிறார்.**

1 **ஆண்டவர் மகத்துவமிக்கவர், நம் இறைவனின் நகரில் மிகுந்த புகழ்ச்சிக்குரியவர்.**
2 **அவர் தம் மலை புனிதமானது, புகழ்மிக்கது. உலகனைத்திற்கும் மகிழ்ச்சியாய் விளங்குவது.** பல்லவி

**சீயோன் மலை வடகோடியில் உள்ளது. பேரரசரின் நகரம் அதுவே.**
3 **அதன் கொத்தளங்களில் கடவுள் உறைகின்றார். அசைக்க முடியாத பாதுகாப்பாய் விளங்குகின்றார்.** பல்லவி

4 **இதோ! அரசர் அனைவரும் கூடினர்; ஒன்றுபடத் தாக்கினர்.**
5 **பார்த்தவுடனே திகைத்துப் போயினர்: கலக்கமுற்றனர், ஓட்டம் பிடித்தனர்.** பல்லவி

6 **அங்கேயே அச்சம் அவர்களை ஆட்கொண்டது. பேறுகால வேதனைபோல் அவர்களுக்குத் துன்பம் உண்டாயிற்று.**
7 **தார்சிஸ் நாட்டுக்குச் செல்லும் கப்பல்களைக் கீழ்த்திசைக் காற்று தாக்கும் போது உண்டாகும் அச்சத்தைப் போன்றது அது.** பல்லவி

அல்லேலூயா சங். 94 : 8b, 7b

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள். மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவிகொடுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தீர்வை நாளில் தீருக்கும் சீதோனுக்கும் சோதோம் நாட்டுக்கும் நேரிடுவது உங்களுக்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாயிராது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

**11: 20-24**

*அக்காலத்தில் :*

யேசு புதுமை பல செய்த நகரங்கள் மனந்திரும்பாமையால் அவற்றைக் கடிந்துகொள்ளத் தொடங்கினார்: “கொராசின் நகரே, உனக்கு ஐயோ கேடு! பெத்சாயிதா நகரே, உனக்கு ஐயோ கேடு!

ஏனெனில், உங்களிடம் செய்த புதுமைகள் தீர், சீதோனில் செய்யப்பட்டிருப்பின், முன்பே கோணி உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பர். எனினும், தீர்வை நாளில் தீர், சீதோனுக்கு நேரிடுவது உங்களுக்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாய் இராது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கப்பர் நகூமே, வானளாவ உயர்வாயோ? பாதாளம்வரை தாழ்ந்திடுவாய். ஏனெனில், உன்னிடம் செய்த புதுமைகள் சொதோமில் செய்யப்பட்டிருப்பின், இந்நாள்வரை அது நிலைத்திருக்குமே. எனினும், தீர்வை நாளில் சொதோம் நாட்டுக்கு நேரிடுவது உனக்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாய் இராது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவர் ஒரு முட்செடியின் நடுவினின்று, நெருப்பு கொழுந்து உருவத்தில் காட்சியளித்தார்.

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 3: 1-6, 9-12

அந்நாட்களில்:

மோயீசன் மதியான் நாட்டுக் குருவாகிய யெத்திரோ என்னும் தன் மாமனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், மந்தையைப் பாலை நிலத்தில் உட்புறமாய் ஓட்டிக்கொண்டு, தெய்வ (காட்சி) மலை எனப்படும் ஓரேபு மலைவரை வந்தான். ஆண்டவரோ ஒரு முட்செடியின் நடுவினின்று, நெருப்புக் கொழுந்து உருவத்தில் அவனுக்குக் காட்சியளித்தார். அவன், முட்செடி வெந்து போகாமலே எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆகவே, மோயீசன்: நான் போய், முட்செடி வெந்துபோகாகாமல் எரிகிற இந்த அதிசயக் காட்சியைப் பார்ப்பேன் என்றான். ஆனால், அவன் உற்றுப் பார்க்க வருவதை ஆண்டவர் கண்டு, முட்செடியின் நடுவினின்று: மோயீசா, மோயீசா என்று அவனை அழைக்க, அவன்: இதோ இருக்கிறேன் என்று மறுமொழி கூறினான். அவர்: அணுகி வராதே! உன் காலணிகளைக் கழற்றி விடு. ஏனென்றால், நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.

மீண்டும் அவர்: உன் தந்தையின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நாமே என்றருளினார். மோயீசன், கடவுளை உற்றுப் பார்க்கத் துணியாது தன் முகத்தை மூடிக் கொண்டான். இஸ்ராயேல் மக்களின் அழுகுரல் நம்மை எட்டியது. அவர்கள் எகிப்தியரால் வதைக்கப்படும் தொல்லையையும் கண்டுள்ளோம். ஆனால், நீ வா; இஸ்ராயேல் மக்களாகிய நம் மக்கள் எகிப்தினின்று புறப்படும் பொருட்டு உன்னைப் பாரவோனிடம் அனுப்புவோம் என்றார்.

மோயீசனோ, கடவுளை நோக்கி: பாரவோனிடம் போகவும், இஸ்ராயேல் மக்களை எகிப்தினின்று அழைத்து வரவும் நான் எம்மாத்திரம் என்றான். அவர்: நாமே உன்னோடு இருப்போம். அதுவுமன்றி, நீ நம் மக்களை எகிப்தினின்று வெளியேறச் செய்த பின்னர், இம்மலையின் மீதே கடவுளுக்குப் பலி இடுவாய். நாம் உன்னை அனுப்பினோம் என்பதற்கு இதுவே அடையாளமாகும் என்று அருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 6-7 (பல்லவி : 8a)

பல்லவி : அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே.
பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார். அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாகச் சூட்டுகிறார்.
பல்லவி

6 நீதிமிக்க செயல்களைப் புரிகிறார் ஆண்டவர் : துன்புற்றோர் யாவருக்கும்
நீதி வழங்குகிறார்.
7 மோயீசனுக்குத் தம் வழிகளை வெளிப்படுத்தினார்: இஸ்ராயேல்
மக்களுக்குத் தம் செயல்களை விளங்கச் செய்தார்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**பிளப்பவனுக்கும் மேலாகக் கோடரி பெருமை கொள்வதுண்டோ?**

*இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 10: 5-7, 13-16*

ஆண்டவர் கூறுவதாவது:

"அசீரியாவுக்கு ஐயோ கேடு: கோபத்தில் நாம் எடுக்கும் கோல் அது- ஆத்திரத்தில் நாம் ஏந்தும் தடி அந்நாடு. இறைப் பற்றில்லா இனத்திற் கெதிராய் அதை அனுப்புகிறோம். நம் ஆத்திரத்துக்கு ஆளான மக்களுக்கு விரோதமாய் அதற்கு நாம் ஆணை கொடுக்கிறோம்; அவர்களைக் கொள்ளையடித்துப் பொருட்களைப் பறித்துக்கொள்ளவும், தெருவிலிருக்கும் சேற்றைப்போல் அவர்களை மிதிக்கவும், அந்நாட்டுக்கு நாம் கட்டளையிடுகிறோம். ஆனால் அந் நாட்டினர் அவ்வாறு நினைக்கவில்லை, அவர்கள் மனம் அவ்வாறு கருதவில்லை: ஆனால் அவர்கள் மனம் மக்களினம் பலவற்றை அழித்து நாசமாக்கவே விரும்புகிறது."

ஏனெனில் அவன் இவ்வாறு சொல்லிவந்தான்: "என்னுடைய கையின் வல்லமையால் அதைச் செய்து முடித்தேன், என் ஞானத்தால் அதற்கான திட்டங்கள் தீட்டினேன்; மக்களினங்களின் எல்லைகளை அகற்றிவிட்டேன், அவர்களுடைய கருவூலங்களைச் சூறையாடினேன், அரியணைகளில் அமர்ந்திருந்தவர்களைக் கீழே தள்ளினேன். குருவிக் கூட்டைப் பிரித்தெடுப்பதுபோல் என் கை மக்களினங்களின் செல்வங்களை எடுத்துக் கொண்டது; கைவிடப்பட்ட முட்டைகளைச் சேர்த்தெடுப்பதுபோல் உலக முழுவதையும் நான் சேர்த்துக்கொண்டேன்; எனக்கெதிராய் இறக்கை படிக்க யாருமில்லை, வாய் திறக்கவோ கீச்சிடவோ துணிந்தாரில்லை.

பிளப்பவனுக்கும் மேலாகக் கோடரி பெருமை கொள்வதுண்டோ? அறுப்பவனுக்கு எதிராக வாள் மேன்மை பாராட்டுமோ? தன்னைத் தூக்கியவனைக் கைத்தடி சுழற்றியதுபோலும், மரமல்லாத மனிதனை மரக்கோலானது தூக்கியது போலுமாகும்!"

ஆதலால் ஆண்டவர் - சேனைகளின் ஆண்டவர், அவனுடைய கொழுத்த வீரர்கள் நடுவில் பாழாக்கும் நோயை அனுப்புவார்; அவனுடைய மகிமைக்குக் கீழே தணல் பற்றவைக்கப்படும், அது நெருப்பைப்போல் எரியும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 93 : 5-6, 7-8, 9-10, 14-15 (பல்லவி : 14 a)

பல்லவி : **ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை.**

5 ஆண்டவரே, உம் மக்களை அவர்கள் நசுக்குகின்றனர் : உம் உரிமைப்
பொருளான அவர்களை ஒடுக்குகின்றனர்.
6 விதவையையும் வழிப்போக்கனையும் கொல்லுகின்றனர் : திக்கற்ற
வர்களைச் சாகடிக்கின்றனர். பல்லவி

7 "ஆண்டவர் இதைப் பார்ப்பதில்லை யாக்கோபின் இறைவன்
இதைக் கவனிப்பதில்லை" என்று சொல்லிக்கொள்கின்றனர்.
8 மக்களிடையே அறிவிலிகளாயிருப்பவர்களே, இதை உணர்ந்துகொள்
ளுங்கள் : அறிவீனர்களே, உங்களுக்கு என்று ஞானம் பிறக்கும்? பல்லவி

9 செவியைக் கொடுத்தவர் கேளாமலிருப்பாரோ? கண்ணை உருவாக்கினவர்
பாராமலிருப்பாரோ?
10 எல்லா நாட்டினருக்கும் அறிவூட்டுபவர் தண்டியாமலிருப்பாரோ?
மக்களுக்கு அறிவு தருபவர் வாளாயிருப்பாரோ? பல்லவி

14 ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை : தம் உரிமைப் பொருளான
வர்களைக் கைவிடுவதில்லை.
15 நீதிமான்கள் நீதித் தீர்ப்பையே பெறுவர் :
நேரிய மனத்தோர் யாவரும் அதையே பின்பற்றுவர். பல்லவி

அல்லேலூயா மத். 11 : 25 காண்.

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளை சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஞானிகளுக்கு இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11 : 25-27

அக்காலத்தில் யேசு கூறியதாவது :

"தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானி களுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்

படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய், இதுவே உமது திருவுளம்.

என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று, தந்தையன்றி வேறெவனும் அறியான். தந்தை யாரென்று மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவனும் அறியான்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இருக்கிறவர் நாமே; இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *3: 13-20*

*அந்நாட்களில்:*

முட்செடி நடுவினின்று குரல் கேட்ட மோயீசன் கடவுளை நோக்கி: இதோ நான் இஸ்ராயேல் மக்களிடம் போய்: உங்கள் முன்னோரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார் என்று நான் சொல்லும் போது, அவர்கள்: அவருடைய பெயர் என்ன என்று என்னைக் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன் என்றான். கடவுள் மோயீசனை நோக்கி: இருக்கிறவர் நாமே. (ஆதலால்,) நீ இஸ்ராயேல் மக்களிடம் போய்: இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லுவாய் என்றார்.

மீண்டும் கடவுள் மோயீசனை நோக்கி: உங்கள் முன்னோரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுளாய் இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லுவாய். என்றும் நமது பெயரும் இதுவே; தலைமுறை தலைமுறையாக நமது நினைவுச் சின்னமும் இதுவே.

நீ போய், இஸ்ராயேலரில் பெரியோர்களைக் கூட்டி அவர்கட்குச் சொல்லுவாய்: உங்கள் முன்னோரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் எனக்குக் காட்சி கொடுத்துத் திருவாக்கருளினதாவது: நாம் உங்களைச் சந்திக்க வந்தோம்; உங்களுக்கு எகிப்திலே நேரிட்ட யாவையும் கண்டுகொண்டோம்; ஆதலால், நாம் உங்களை எகிப்தின் துன்ப துயரத்தினின்று விடுவித்து,

கானானேயர், ஏத்தையர், ஆமோறையர், பாரேசையர், ஏவையர், யெபுசேயர் வாழும் நாட்டிற்கு, பாலும் தேனும் பொழியும் பூமிக்கு, கூட்டிக் கொண்டு போகத் திருவுளம் கொண்டோம். அவர்கள் உன் சொல்லுக்குச் செவி கொடுப்பார்கள். பின், நீ இஸ்ராயேலின் பெரியோர்களோடு எகிப்து மன்னனிடம் போய்: எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் எங்களை அழைத்திருக்கிறார். நாங்கள் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலி செலுத்த வேண்டும் என்று அவருக்குச் சொல்லுவாய்.

ஆனால், எகிப்து மன்னன் (நம்) கை வல்லமை கண்டாலொழிய உங்களைப் போகவிடமாட்டான் என்று அறிவோம். ஆதலால், நாம் கையை நீட்டி எகிப்தியரிடையே பல வகை அற்புதங்களையும் செய்து அவர்களைத் தண்டிப்போம். அதன்பின், அவன் உங்களைப் போக விடுவான், என்று மொழிந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104: 1 & 5, 8-9, 24-25, 26-27* (பல்லவி: 8a)

பல்லவி: ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவு கூர்கின்றார்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள்: அவர்தம் திருப் பெயரைச் சொல்லி வழிபடுங்கள். எல்லா இனத்தாரும் அவருடைய செயல்களை அறியச் செய்யுங்கள்.
5 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்: அவருடைய புதுமைகளையும் அவர் உரைத்த நீதித்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள். பல்லவி

8 நம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவுகூர்கின்றார்: ஆயிரமாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த வாக்குறுதியை அவர் நினைவு கூர்கின்றார்.
9 ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை: ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

24 தம் மக்கள் பெரிதும் பெருகச் செய்தார். எதிரிகளைவிட அவர்களை வல்லவர்களாக்கினார்.
25 தம் மக்கள்மீது வெறுப்புண்டாகும் அளவுக்கு எதிரிகளின் மனத்தை மாற்றினார்: தம் ஊழியரிடம் அவர்கள் வஞ்சகம் காட்டச் செய்தார். பல்லவி

26 அதன்பின் தம் ஊழியன் மோயீசனை அனுப்பினர் : தாம் தேர்ந்தெடுத்த
ஆரோனையும் அனுப்பினர்.
27 அவர் சொன்ன செயல்களை அடையாளமாகச் செய்தனர் : காமின்
நாட்டில் புதுமைகளைப் புரிந்தனர். பல்லவி

## 2-ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**புழுதியில் குடியிருப்பவர்களே, விழித்தெழுந்து புகழ்பாடுங்கள்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

*26: 7-9, 12, 16-19*

நீதிமானின் நெறி நேரானது. நீதிமானின் பாதை நடப்பதற்குச் செவ்வையானது. ஆண்டவரே, உம்முடைய கற்பனைகளின் நெறி நடந்து, உம்மீது நம்பிக்கை வைக்கிறோம்; உமது திருப்பெயரும் உமது நினைவும் எங்கள் ஆன்மாவின் ஆவலாய் இருக்கின்றன.

என் ஆன்மா இரவில் உம்மேல் ஆவல் கொள்ளுகிறது, என் ஆவி எனக்குள்ளே ஏக்கத்தோடு உம்மைத் தேடுகிறது; உம்முடைய நீதித்தீர்ப்புகளை நீர் பூமியின்மேல் செலுத்தும்போது, பூமியின் மக்கள் நீதி என்ன என்பதை அறிகின்றனர்.

ஆண்டவரே, நீர் எங்களுக்குச் சமாதானம் அளிப்பீர், ஏனெனில் எங்கள் வேலைகளையெல்லாம் எங்களுக்காக நீரே செய்து முடித்தீர்.

ஆண்டவரே, துன்பத்தில் உம்மைத் தேடினோம், தண்டனை பெறும் போது உம்மைப் பார்த்து மன்றாடினோம். பேறுகாலம் நெருங்கும்போது தன் வேதனையில் துயருற்றுக் கதறுகின்ற கர்ப்பவதியைப் போலவே, ஆண்டவரே, உம் முன்னிலையில் நாங்களும் இருக்கிறோம். நாங்களும் கர்ப்பமானோம், வேதனைப்பட்டோம், ஆனால் காற்றைப் பெற்றவர்களைப் போலத்தான் இருக்கிறோம்; நாட்டுக்கு எங்களால் மீட்பு கிட்டவில்லை. உலகத்தின் மக்கள் வீழ்ச்சியடையவில்லை.

இறந்துபோன உம் மக்கள் வாழ்வு பெறுவார்கள். கொலையுண்ட என் இனத்தார் உயிர்த்தெழுவர். புழுதியில் குடியிருப்பவர்களே, விழித்தெழுங்கள், மகிழ்ச்சியினால் புகழ்பாடுங்கள்; ஏனெனில் நீர் பெய்யும் பனி ஒளிவீசும் பனி, கீழ் உலகமானது உயிர் கொடுக்கும்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சாங். 101 : 12-13ab & 14, 15-17, 18-20 (பல்லவி : 20b)

பல்லவி : **ஆண்டவர் வானினின்று வையகத்தை நோக்கினார்.**

12 நீரோ ஆண்டவரே, என்றென்றும் நிலைத்துள்ளீர் : உமது பெயரின் புகழ்
தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருக்கும்.
13 நீர் எழுந்து சீயோனுக்கு இரக்கம் காட்டும் : அதன்மீது இரக்கம்காட்ட
காலம் வந்தது :
14 அதன் கற்கள்மீது உம் ஊழியர் பற்றுக்கொண்டுள்ளனர் : அதன்
அழிவை நினைத்துத் துயருறுகின்றனர். பல்லவி

15 ஆண்டவரே, புற இனத்தார் உமது பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர் :
மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமைகண்டு மருள்வர்.
16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது, தம் மாட்சிமையில் அவர்
விளங்கும்போது,
17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார் :
அவர்களுடைய வேண்டுதலைப் புறக்கணியார். பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும் : உருவாகி வரும்
மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.
19-20 சிறைப்பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும், சாவுக்கென குறிக்கப்
பட்டவர்களை விடுவிக்கவும், உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று
ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார் : வானினின்று வையகத்தை
நோக்கினார். பல்லவி

அல்லேலூயா

மத். 11 : 28

அல்லேலூயா. சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள் : உங்களை நான் இளைப்பாற்றுவேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

*11: 28-30*

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆட்டுக்குட்டியை மாலையில் அறுப்பீர்கள்; அந்த இரத்தத்தைக் காணவே, நாம் உங்களைக் கடந்து போவோம்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் **1 : 10 - 12 : 14**

அந்நாட்களில்:

பல அதிசயங்களை மோயீசனும் ஆரோனும் பாரவோன் முன்னிலையில் செய்தனர். ஆனால், ஆண்டவர் பாரவோன் மனத்தைக் கடினப்படுத்தினமையால், அவன், நாட்டைவிட்டுப் போகும்படி இஸ்ராயேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை.

ஆண்டவர் மேலும் எகிப்து நாட்டிலே மோயீசனுக்கும் ஆரோனுக்கும் திருவாக்கருளியதாவது: இம்மாதமே உங்களுக்கு மாதங்களின் தொடக்கமாம். இதுவே ஆண்டின் மாதங்களில் முதல் மாதமாம். நீங்கள் இஸ்ராயேல் மக்களின் கூட்டத்தார் யாவரையும் அழைத்துச் சொல்ல வேண்டியதாவது: இம்மாதத்தின் பத்தாம் நாள் குடும்பத்திற்கும்,

வீட்டிற்குமாக ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுக்கக் கடவர். ஆனால், ஒருவன் வீட்டில் இருக்கிறவர்கள் ஆட்டுக் குட்டியை உண்பதற்குப் போதுமானவர்களாய் இராமற் போனால், அவன், தன் அயல் வீட்டாரில் ஆட்டுக் குட்டியை உண்பதற்குத் தேவையான பேரை அழைத்து வருவான்.

ஆட்டுக் குட்டியோ, மறுவற்றதும் ஆண்பாலானதும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும். ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் அந்த முறைப்படியே தெரிந்துகொள்ளவேண்டும். அதனை இம்மாதத்தின் பதினான்காம் நாள்வரை வைத்திருந்து, இஸ்ராயேல் மக்களின் ஒவ்வொரு கூட்டத்தாரும் மாலையில் அதனை அறுத்து, அதன் இரத்தத்தில் சிறிது எடுத்து, ஆட்டை உண்ணும் வீட்டு வாயில் நிலைக்கால் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கவேண்டும்.

பின், அன்று இரவிலே, அடுப்பில் சுட்ட இறைச்சியைக் காட்டுக் கீரைகளோடும் புளியாத அப்பங்களோடும் உண்பார்கள். பச்சையாயும் நீரில் அவிக்கப்பட்டதாயும் உள்ள இறைச்சியில் ஒன்றும் உண்ணாமல், அடுப்பிலே பொரித்த கறியை மட்டும் உண்ணவேண்டும். (ஆட்டின்) தலை, கால், குடல் முதலிய எல்லாவற்றையும் உண்பீர்களாக. அதிலே எதையும் விடியற்காலை வரை மீதி வைக்கவேண்டாம். ஏதும் எஞ்சி இருந்தால் அதை நெருப்பில் சுட்டெரிக்கக் கடவீர்கள். அதனை உண்ண வேண்டிய முறையாவது: நீங்கள் இடுப்பிலே கச்சை கட்டிக் காலிலே செருப்பு அணிந்தவர்களாயும், கையிலே கோலைப் பிடித்தவர்களாயும், அதனை விரைந்து உண்ணக் கடவீர்கள். ஏனென்றால், அது ஆண்டவருடைய பாஸ்கா (அதாவது: ஆண்டவருடைய கடத்தல்).

உண்மையில் அந்த இரவிலே நாம் எகிப்து நாடெங்கும் கடந்து போய், எகிப்திலுள்ள மனிதன் முதல் விலங்குவரை தலைப் பேறானவை யெல்லாம் கொன்று, எகிப்தியத் தேவதைகளின்மீது நீதியைச் செலுத்துவோம். நாமே ஆண்டவர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தைக் காணவே, உங்களை நாம் கடந்து போவோம். இவ்வாறு, நாம் எகிப்து நாட்டைத் தண்டிக்கும்போது, கொள்ளைநோய் உங்கள்மேல் வந்து அழிக்காதிருக்கும்.

நீங்களோ, அந்நாளை நினைவுகூர வேண்டிய நாளாகக் கொண்டு, அதை உங்கள் தலைமுறை தோறும் ஆண்டவருடைய திருவிழா என்று எக்காலமும் கொண்டாடி வரக் கடவீர்கள்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 115 : 3-4, 6-7, 8-9 (பல்லவி : 4)*

பல்லவி : **மீட்புக்காக நன்றிகூறி, கிண்ணத்தைக் கையிலெடுத்து, ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்.**

அல்லது : **அல்லேலூயா.**

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன
கைம்மாறு செய்வேன்?
4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவ
ருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக
மதிப்புக்குரியது.
7 ஆண்டவரே, நான் உம் ஊழியன்; உம் அடியேன்; உமது அடியாளின்
மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர். பல்லவி

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்; ஆண்டவருடைய திருப்
பெயரைக் கூவி அழைப்பேன்.
9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்
தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

# 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் உன் மன்றாட்டைக் கேட்டோம், உன் கண்ணீரைக் கண்டோம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

38: 1-6, 21-22, 7-8

அந்நாட்களில் எசேக்கியாஸ் நோய்வாய்ப்பட்டுச் சாகும் நிலையில் இருந்தான்: ஆமோஸ் மகனான இசையாஸ் இறைவாக்கினர் அவனைக் காண வந்து, அவனை நோக்கி, "ஆண்டவர் கூறுகிறார்: உன் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்து; ஏனெனில் சாகப் போகிறாய். நீ பிழைக்க மாட்டாய்" என்றார். அப்போது எசேக்கியாஸ் சுவர்ப் பக்கமாய்த் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, உமது முன்னிலையில் நான் எவ்வாறு உண்மையோடும் முழு உள்ளத்தோடும் நடந்து வந்தேன் என்பதையும், உம் கண்களுக்கு நல்லதெனப்

பட்டதையே செய்து வந்தேன் என்பதையும் நினைத்தருளும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்" என்று சொல்லி வேண்டிக்கொண்டு, ஏராளமாய்க் கண்ணீர் வடித்தான்.

அப்போது ஆண்டவருடைய வாக்கு இசையாசுக்கு உண்டாயிற்று: "போய், நீ எசேக்கியாசிடம் சொல்: உன் தந்தை தாவீதின் கடவுளான ஆண்டவர் கூறுகிறார்: நாம் உன் மன்றாட்டைக் கேட்டோம்; உன் கண்ணீரைக் கண்டோம்; இதோ உன் வாழ்நாட்களோடு பதினைந்து ஆண்டுகளைக் கூட்டுவோம்: உன்னையும் இந்த நகரத்தையும் அசீரிய அரசனுடைய கையினின்று விடுவிப்போம்; நாம் இந்நகரத்தைப் பாதுகாப்போம்.

இசையாஸ் என்பவரோ, எசேக்கியாஸ் நலம் பெறும்படிக்கு அத்திப் பழத்தைக் கொண்டுவந்து அரைத்து பிளவையின்மேல் வைத்துக் கட்டு கட்டச் சொன்னார். அப்போது எசேக்கியாஸ் அவரைப் பார்த்து, "நான் ஆண்டவரின் கோயிலுக்கு ஏறிப் போவேன் என்பதற்கு அடையாளம் யாது?" என்று கேட்டான். ஆண்டவர் தாம் வாக்களித்ததைச் செய்வார் என்பதற்கு ஆண்டவர் உனக்குக் கொடுக்கும் அடையாளம் இதுவே: "இதோ, ஆக்காசின் நிழற்கடிகையில் சாய்ந்திருக்கும் கதிரவனால் உண்டாகும் நிழல் பத்துப் பாகை பின்னுக்குப் போகச் செய்வோம்." அவ்வாறே, சாய்ந்திறங்கிக் கொண்டிருந்த கதிரவன் பத்துப் பாகை மேலேறினான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

இசை. 38 : 10, 11, 12, 16 (பல்லவி : 17 b)

பல்லவி : ஆண்டவரே, அழிவின் குழியினின்று என்னுயிரைக் காத்தருளினீர்.

10 நான் சொன்னேன் : என் வாழ் நாட்களின் நடுவில் பாதாளத்தின் வாயில்களுக்குப் போக வேண்டுமே! இன்னும் நான் வாழக்கூடிய ஆண்டுகள் எனக்குக் கிட்டாமற் போகுமே! பல்லவி

11 மேலும் சொன்னேன் : வாழ்வோருக்குரிய இவ்வுலகில் ஆண்டவரை நான் இனிக் காணமுடியாதே! வையத்தின் குடிகளுள் எவரையும் இனி நான் பார்க்க இயலாது. பல்லவி

12 என்னுடைய இருப்பிடம் தகர்க்கப்படும், இடையர்களின் கூடாரம்போலப் பெயர்க்கப்படும்; நெசவாளனைப்போல நான் என் வாழ்வைச் சுருட்டுகிறேன்; அவரோ என்னைத் தறியிலிருந்தே வெட்டுகிறார். பல்லவி

16 ஆண்டவரே, நான் உமக்காகவே வாழ்கிறேன், என் உள்ளம் உமக்காக மட்டுமே வாழ்கின்றது : என்னை நீர் நலமாக்கினீர், உயிரோடு என்னைக் காப்பாற்றினீர்.

பல்லவி

அல்லேலூயா அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நான் அவற்றை அறிவேன், அவையும் என்னைப் பின்தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 12: 1-8

அக்காலத்தில் :

யேசு ஓய்வு நாளில் வயல் வழியே சென்றார். அவருடைய சீடர்களுக்குப் பசியெடுக்க, அவர்கள் கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினர். இதைக் கண்ட பரிசேயர், அவரை நோக்கி, “இதோ! உம் சீடர் ஓய்வு நாளில் செய்யத் தகாததைச் செய்கிறார்களே” என்றனர்.

அவரோ அவர்களிடம் “தாவீதும் அவருடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபொழுது அவர் என்ன செய்தார் என்று நீங்கள் வாசித்ததில்லையோ? அவர் கடவுளின் ஆலயத்தில் நுழைந்து காணிக்கை அப்பங்களை உண்டார். அவரோடு இருந்தவர்களும் உண்டனர். அவற்றை அவரோ அவரோடு இருந்தவர்களோ உண்ணலாகாதன்றோ? குருக்கள் மட்டுமே உண்ணலாம்.

ஓய்வு நாளில் குருக்கள் கோயிலில் ஓய்வை மீறினாலும் அது குற்றமாகாது என்று திருச்சட்டத்தில் நீங்கள் வாசித்ததில்லையோ? ஆனால் கோயிலைவிடப் பெரியது இங்கே இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

‘பலியை அன்று, இரக்கத்தையே விரும்புகிறேன்’ என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருப்பின், குற்றமற்றோரைக் கண்டனம் செய்திருக்கமாட்டீர்கள். ஏனெனில், மனுமகன் ஓய்வு நாளுக்கு ஆண்டவர்” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டினின்று வெளிக்கொணர்ந்த இரவு இதுவே.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 12: 37-42

*அந்நாட்களில் :*

இஸ்ராயேல் மக்கள் இராம்சேசை விட்டுச் சொக்கோட்டுக்குப் போயினர். அவர்கள், பிள்ளைகளைத் தவிர்த்து, சுமார் ஆறுலட்சம் பேர் நடக்கக்கூடியவர் இருந்தனர். கணக்கிலடங்காத இன்னும் பெரிய கூட்டம் இவர்களோடு சேர்ந்து புறப்பட்டுப் போனதுமன்றி, மிகுதியான ஆடு மாடுகளும் பலவகை விலங்குகளும் போயின. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்த மாவைப் புளியாத அப்பங்களாகச் சுட்டனர். அவை புளியாத அப்பங்களாய் இருந்தன. ஏனென்றால், எகிப்தியர் அவர்களைத் தாமதிக்கவிடாமல் விரைவில் புறப்பட்டுப் போகக் கட்டாயப் படுத்தினதினாலே, அவர்கள் பயணத்திற்கென்று தங்களுக்கு ஒன்றும் தயாரித்துக்கொள்ளவில்லை.

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலே குடியேறி வாழ்ந்த காலம் நானூற்று முப்பது ஆண்டுகள். அந்த நானூற்று முப்பது ஆண்டுகள் நிறைவெய்திய அதே நாளில் ஆண்டவருடைய படைகளெல்லாம் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்டன. ஆண்டவர் அவர்களை எகிப்து நாட்டினின்று வெளிக்கொணர்ந்த அந்த இரவு பெரிய திருநாள் ஆயிற்று. இஸ்ராயேல் மக்கள் எல்லாரும் தலைமுறை தோறும் அதனை அனுசரிக்கக் கடமைப்பட்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 136 : 1 & 23-24, 10-12, 13-15

பல்லவி : **ஏனெனில் அவரது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது.**

1 ஆண்டவர் நல்லவர், அவரைப் போற்றுங்கள் : ஏனெனில் அவரது
அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது.
23 தாழ்வுற்ற நிலையில் நம்மை நினைவுகூர்ந்தவர் அவரே; அவரைப்
போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.
24 நம் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவித்தவர் அவரே; அவரைப்
போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பல்லவி

10 எகிப்தியரின் தலைப்பேறுகளை வீழ்த்தியவர் அவரே; அவரைப்
போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.
11 எகிப்தியரிடையிலிருந்து இஸ்ராயேலரை வெளியேற்றியவர் அவரே;
அவரைப் போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும்
நிலைத்துள்ளது.
12 வலிமையுள்ள கரத்தையும், தம் தோளின் பலத்தையும் காட்டியவர்
அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும்
நிலைத்துள்ளது.

பல்லவி

13 செங்கடலை இரண்டாகப் பிரித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள் :
ஏனெனில் அவரது இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.
14 அக்கடல் நடுவே இஸ்ராயேலை வழி நடத்தியவர் அவரே: அவரைப்
போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.
15 பார்வோனையும் அவன் படைகளையும் செங்கடலில் அமிழ்த்தியவர்
அவரே; அவரைப் போற்றுங்கள் : ஏனெனில் அவர் இரக்கம்
என்றென்றும் நிலைத்துள்ளது.

பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நிலங்கள்மேல் ஆசை கொண்டவர்கள், வீடுகளைக் கவர்ந்தார்கள்.**

இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 2: 1-5

தங்கள் படுக்கைகளில் தீமையைத் திட்டமிட்டுக் கொடுமை செய்ய முயல்பவர்களுக்கு ஐயோ கேடு! பொழுது புலர்ந்தவுடன் அதைச் செய்து

முடிக்கிறார்கள், அவர்கள் கைகளும் அந்தத் திறமையைக் கொண்டுள்ளன; நிலங்கள்மேல் ஆசை கொண்டு வலுவந்தமாய்ப் பிடுங்குகிறார்கள், வீடுகளை விரும்பி வஞ்சகமாய்க் கவர்கிறார்கள்; ஆளையும் வீட்டையும் பறிமுதல் செய்து, ஒடுக்கிச் சொந்தக்காரனையும் சொத்தையும் கவர்ந்து கொள்ளுகிறார்கள்.

ஆதலால் ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: இதோ, இந்த இனத்தார்க்கு எதிராய் நாமே தீமை செய்யத் திட்டமிடுகிறோம்; அதினின்று உங்கள் தலையை உங்களால் விடுவிக்க இயலாது; நீங்கள் இறுமாந்து நடக்கமாட்டீர்கள். ஏனெனில் காலம் பொல்லாததாய் இருக்கும். அந்நாளில் மக்கள் உங்கள்மேல் வசைப்பாடலைப் புனைந்து, "நாங்கள் முற்றிலும் பாழாய்ப் போனோம், என் மக்களின் உரிமைச் சொத்து பறிபோயிற்று. ஐயோ, என்னிடமிருந்து அது பறிக்கப்படுகிறதே; கொள்ளைக்காரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறதே!" என்று ஒப்பாரி வைத்துப் புலம்புவார்கள்.

ஆகையால், நூல்பிடித்துப் பாகம் பிரித்து உங்களுக்குத் தருபவன் ஆண்டவரின் சபையில் ஒருவனும் இரான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 9 : 21-22, 23-24, 27-28, 34 (பல்லவி : 12b காண்க)

பல்லவி : **ஆண்டவரே, எளியோரை மறந்துவிடாதீர்.**

21 ஆண்டவரே, ஏன் தொலைவிலுள்ளீர்? நெருக்கடியான வேளையில் ஏன்
ஒளிந்துகொள்கிறீர்?
22 தீயோர் செருக்குற, எளியவரோ அவதிப்படுகிறார்கள்: அவர்கள் செய்யும்
சூழ்ச்சிகளில் எளியோர் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். பல்லவி

23 தன் தீய நாட்டத்தைப்பற்றி பாவியானவன் பெருமை கொள்கிறான்,
பேராசைக்காரன் ஆண்டவரைப் பழிக்கிறான், புறக்கணிக்கிறான்.
24 "கடவுளே இல்லை, எங்கே பழிவாங்கப்போகிறார்!" என்று தீயவன்
செருக்குடன் சொல்கிறான்: இதுவே அவன் நினைவாயிருக்கிறது. பல்லவி

27 அவன் பேசுவதெல்லாம் சாபனையும் கபடமும் வஞ்சகமுமே: அவன்
நாவில் ஒலிப்பது தீமையும் இன்னலுமே.
28 சிற்றூர்களுக்கருகில் கண்ணி வைத்துப் பதுங்கியிருப்பான், மறைவான
இடங்களில் குற்றமற்றவர்களைக் கொலை செய்கிறான். எளியவர்களுக்குத்
தீமை செய்வதிலேயே அவன் கண்ணாயிருக்கிறான். பல்லவி

31 *ஆனால் ஆண்டவரே, நீர் எல்லாம் பார்க்கிறீர்! துன்புறுவோரையும் வேதனைப்படுவோரையும் நீர் கவனித்துக் கொள்கிறீர்: அவர்களை உம்மிடம் ஏற்றுக்கொள்கிறீர்: எளியவன் தன்னை உம்மிடம் ஒப்படைக்கிறான்: அநாதைக்கு நீரே துணை.* பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 5: 19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார்: அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இறைவாக்கினர் கூறியது நிறைவேறும்படி, தம்மை வெளிப்படுத்த வேண்டாமென்று அவர்களுக்குக் கற்பித்தார்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*12: 14-21*

அக்காலத்தில் :

பரிசேயர் வெளியே போய், அவரை எப்படித் தொலைக்கலாம் என்று அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர்.

இதை அறிந்து, யேசு அங்கிருந்து விலகினார். அவரைப் பலர் பின்தொடர அவர்கள் அனைவரையும் குணமாக்கினார். தம்மை வெளிப்படுத்த வேண்டாமென அவர்களுக்குக் கண்டிப்பாகச் சொன்னார். இசையாஸ் இறைவாக்கினர் கூறியுள்ளது இவ்வாறு நிறைவேற வேண்டியிருந்தது.

“இதோ நான் தெரிந்தெடுத்த ஊழியன், இவரே என் அன்பர், இவரிடம் என் ஆன்மா பூரிப்படைகின்றது, இவர்மேல் எனது ஆவியைத் தங்கச்செய்வேன்; புறவினத்தாருக்கு இவர் அறத்தை அறிவிப்பார். சச்சரவு செய்யமாட்டார்; கூக்குரலிடவும் மாட்டார்; இவர் குரல் தெருவிலே கேட்காது. அறம் வெற்றிபெறச் செய்யும்வரை இவர் நெரிந்த நாணலை முறியார், புகையும் திரியை அணையார், புறவினத்தார் இவர் பெயரில் நம்பிக்கை வைப்பர்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பதினாறாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**பாவங்களுக்குத் தவஞ்செய்யக் காலம் கொடுக்கிறீர்.**

**ஞான ஆகமத்திலிருந்து வாசகம்** *12: 13, 16-19*

அனைவரையும் அக்கறையாய்க் காப்பாற்றுவதற்கு உம்மைத் தவிர வேறு கடவுளில்லை; நீதியான தீர்ப்பளித்தீர் என்பதை நீர் எவருக்கும் விளக்கிக் காட்ட உமக்குக் கடமை இல்லை.

ஏனெனில் உமது ஆற்றல்தான் நீதியின் ஊற்று; அனைத்தின்மீதும் உமக்கிருக்கும் அரசுரிமை அனைத்தையும் நீர் இரக்கத்தோடு நடத்தச் செய்கிறது. உமது வல்லமையின் நிறைவை நம்பாதவர்களுக்கு நீர் உம்முடைய ஆற்றலைக் காட்டுகிறீர்; உம்மை அறியாதவர்களின் ஆணவத்தை அடக்குகிறீர். நீர் ஆற்றலில் இணையற்றவராயிருப்பதால், கனிவோடு தீர்ப்பு வழங்குகிறீர்; மிகுந்த பொறுமையோடு எங்களை நடத்துகிறீர்: ஏனெனில் விருப்பமானபோது செயலாற்ற உமக்கு வல்லமை இருக்கிறது.

நீதிமான் ஈர நெஞ்சனாய் இருக்க வேண்டும் என்று இவற்றால் உம் மக்களுக்கு அறிவுறுத்தினீர். உம்முடைய மக்களை நன்னம்பிக்கையால் நிரப்பினீர்: ஏனெனில், பாவங்களுக்குத் தவஞ் செய்யக் காலங் கொடுக்கிறீர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 85 : 5-6, 9-10, 15-16 (பல்லவி : 5அ)*

பல்லவி : ஆண்டவரே, நீர் நல்லவர், கருணைமிக்கவர்.

5 ஏனெனில் ஆண்டவரே, நீர் நல்லவர்; கருணைமிக்கவர்: உம்மைக்
கூவியழைக்கிற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்.
6 ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும். என் வேண்டுதலின்
குரலுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

9 ஆண்டவரே, நீர் படைத்த மக்களினத்தார் அனைவரும் உம்மை
வணங்குவார்கள். உமது புகழைச் சாற்றுவார்கள்.
10 ஏனெனில், நீர் மகத்துவமுள்ளவர், வியப்புக்குரிய செயல்களைச் செய்பவர்,
நீர் ஒருவரே கடவுள். பல்லவி

15 ஆனால் ஆண்டவரே, நீர் இரக்கமுள்ள கடவுள். அருள்மிக்கவர், சினந்து
கொள்ளத் தாமதிப்பவர். அளவுகடந்த அருளன்புள்ளவர், சொல்
தவறாதவர்.
16 என்மீது உம் கடைக்கண் காட்டி எனக்கு இரங்கியருளும்: உம்
ஊழியனுக்கு ஆற்றல் தாரும், உம் அடியானின் மகனை இரட்சியும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தேவ ஆவி தாமே சொல்லொண்ணாப் பெருமூச்சுகளோடு பரிந்துபேசுகிறார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8 : 26-27

சகோதரர்களே :

நம் வலுவற்ற நிலையில் நமக்குத் தேவ ஆவி துணைநிற்கிறார்; ஏனெனில், செபிக்கவேண்டிய முறையில் செபிப்பதெப்படி என நாம் அறியோம்: தேவ ஆவி தாமே சொல்லொண்ணாப் பெருமூச்சுகளோடு பரிந்து பேசிச் செபிக்கிறார். உள்ளங்களை ஊடுருவிக் காண்கிற இறைவன் ஆவியானவரின் கருத்தை அறிவார்; ஆவியானவர் இறைமக்களுக்காகக் கடவுளுக்கேற்பப் பரிந்து பேசுகிறார் என்பதை இறைவன் அறிவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 11 : 25 காண்.

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13: 24-43

அக்காலத்தில் :

யேசு இன்னுமோர் உவமையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் :

"விண்ணரசு, தன் வயலில் நல்ல விதை விதைத்தவனுக்கு ஒப்பாகும். ஆட்கள் தூங்கும்போது அவனுடைய பகைவன் வந்து கோதுமையிடையே களைகளை விதைத்துவிட்டுப் போனான்.

பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் தோன்றின. வீட்டுத் தலைவனிடம் ஊழியர் வந்து, 'ஐயா, உம் வயலில் நல்ல விதையல்லவா விதைத்தீர்? பின் அதில் களைகள் வந்தது எப்படி?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'இது பகைவன் செய்த வேலை' என்றான். ஊழியரோ, 'நாங்கள் போய் அவற்றைப் பிடுங்கிச் சேர்க்க வேண்டுமா?' என்றனர். அவன் வேண்டாம்; களைகளைச் சேர்க்கும்போது ஒருவேளை கோதுமைப் பயிரையும் அவற்றுடன் பிடுங்கிவிடக்கூடும். அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடைக்காலத்தில் அறுப்போரிடம், 'முதலில் களைகளை ஒன்றுசேர்த்து, எரிப்பதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று சொல்வேன்' என்றான்."

இன்னுமோர் உவமையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் : "விண்ணரசு, கடுகு மணிக்கு ஒப்பாகும். அதை ஒருவன் எடுத்துத் தன் வயலில் விதைக்கிறான். அது விதைகளிலெல்லாம் மிகச் சிறியதாயினும், வளர்ந்ததும் செடிகளிலெல்லாம் மிகப் பெரியதாகி வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில் தங்கக்கூடிய மரமாகும்."

இன்னுமோர் உவமையும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் : "விண்ணரசு புளிப்பு மாவுக்கு ஒப்பாகும். அதைப் பெண் ஒருத்தி எடுத்து மூன்றுபடி மாவில் பொதிந்து வைக்கிறாள். மாவு முழுதும் புளிப்பேறுகிறது."

இவையெல்லாம் யேசு மக்கட் கூட்டத்திற்கு உவமைகளால் சொன்னார். உவமைகளால் அன்றி அவர் அவர்களிடம் ஒன்றும் பேசியதில்லை. 'உவமைகளில் பேசுவேன். உலகம் தோன்றியதுமுதல் மறைந்துள்ளதை வெளியாக்குவேன்' என்று இறைவாக்கினர் கூறியது இவ்வாறு நிறைவேற வேண்டியிருந்தது. பின்பு அவர் கூட்டத்தை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தார். அப்பொழுது அவருடைய சீடர் அவரை அணுகி, "வயலில் விதைத்த களைகளின் உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்" என்றனர். அதற்கு அவர் :

நல்ல விதை விதைக்கிறவன் மனுமகன். வயல், இவ்வுலகம்; நல்ல விதை, அரசின் மக்கள்; களைகளோ தீயோனுடைய மக்கள். அவற்றை விதைத்த பகைவன், அலகை; அறுவடை, உலகின் முடிவு; அறுப்போர், வானதூதர்.

எவ்வாறு களைகள் ஒன்றுசேர்த்துத் தீயில் எரிக்கப்படுமோ, அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். மனுமகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய அரசில் இடறலாய் உள்ளன யாவற்றையும், நெறிகெட்டவர்களையும் ஒன்று சேர்த்து, தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தம் தந்தையின் அரசில் கதிரோனைப்போல ஒளிர்வர்.

கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

---

அல்லது குறுகிய வாசகம்

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 13:24-30

அக்காலத்தில்:

யேசு இன்னுமோர் உவமையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்:

"விண்ணரசு, தன் வயலில் நல்ல விதை விதைத்தவனுக்கு ஒப்பாகும். ஆட்கள் தூங்கும்போது அவனுடைய பகைவன் வந்து கோதுமையிடையே களைகளை விதைத்துவிட்டுப் போனான்.

பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் தோன்றின. வீட்டுத் தலைவனிடம் ஊழியர் வந்து, 'ஐயா, உம் வயலில் நல்ல விதையல்லவா விதைத்தீர்? பின் அதில் களைகள் வந்தது எப்படி?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'இது பகைவன் செய்த வேலை' என்றான். ஊழியரோ, 'நாங்கள் போய் அவற்றைப் பிடுங்கிச் சேர்க்க வேண்டுமா?' என்றனர். அவன் 'வேண்டாம்; களைகளைச் சேர்க்கும்போது ஒருவேளை கோதுமைப் பயிரையும் அவற்றுடன் பிடுங்கிவிடக்கூடும். அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடைக் காலத்தில் அறுப்போரிடம், 'முதலில் களைகளை ஒன்று சேர்த்து, எரிப்பதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று சொல்வேன்' என்றான்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நமது மந்தையில் மீதியாயிருக்கும் ஆடுகளை நாம் ஒன்று சேர்த்து, அவற்றைக் கண்காணிக்கப் புதிய ஆயர்களை ஏற்படுத்துவோம்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *23: 1-6*

"நமது மேய்ச்சலின் ஆடுகளைச் சிதறடித்துப் பாழாக்கும் ஆயர்களுக்கு ஐயோ கேடு!" என்கிறார் ஆண்டவர்.

நம் மக்களாகிய மந்தையை நடத்தும் ஆயர்களுக்கு இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைக்கும் வாக்கு இதுவே: "நீங்கள் நமது மந்தையைச் சிதறடித்தீர்கள்; அவர்களைத் துரத்தினீர்கள்; அவர்களுக்குப் பணிவிடை புரியவில்லை. ஆதலால் உங்கள் செயல்களின் கெடுதிக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்போம்," என்கிறார் ஆண்டவர்.

"பின்னர், நாம் நமது மந்தையில் மீதியாயிருக்கும் ஆடுகளை, அவை சிதறியுள்ள நாடுகள் அனைத்தினின்றும் சேர்த்து, அவற்றின் கழனிகளுக்குத் திரும்ப அழைத்து வருவோம்; அங்கு அவை பெருகிப் பலுகும். அவற்றைக் கண்காணிக்கப் புதிய ஆயர்களை ஏற்படுத்துவோம்; இவர்கள் அவற்றை மேய்ப்பார்கள்; அவை இனிப் பயப்படுவதுமில்லை; திகிலடைவதுமில்லை; காணாமற்போவதுமில்லை," என்கிறார் ஆண்டவர்.

"நாட்கள் வருகின்றன," - ஆண்டவர் கூறுகிறார் - "நீதியுள்ள 'தளிரை' தாவீதுக்குப் பிறப்பிப்போம்; அரசராக இருந்து அவர் ஆட்சி செய்வார்; அவர் ஞானமுள்ளவராய் இருப்பார்; நாட்டில் நியாயத்தையும் நீதியையும் செலுத்துவார். அந்நாட்களில் யூதா மீட்புப் பெறும்; இஸ்ராயேல் நம்பிக்கையோடு வாழும்; 'ஆண்டவர் நமது நீதி' என்பதே அவருக்குப் பெயராய் வழங்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 22: 1-3a, 3b-4, 5, 6 (பல்லவி: 1)*

பல்லவி: **என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!**

1 என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்:
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

3 தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில் செலுத்துகின்றார்.
4 இருள்சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையானதெதற்கும் அஞ்சேன் : ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர்; உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர் : என் தலைக்கு எண்ணெய் பூசினீர் : என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது.
பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும் : என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடரும் : ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன் ; ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இரண்டையும் ஒன்றாய் இணைத்த கிறிஸ்துவே நம் சமாதானம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 13-18

சகோதரர்களே :

ஒரு காலத்தில் தொலைவில் நின்ற நீங்கள், இப்பொழுது கிறிஸ்து யேசுவுக்குள் அவருடைய இரத்தத்தினால் அருகே கொணரப்பெற்றீர்கள்.

ஏனெனில், கிறிஸ்துவே நம் சமாதானம். அவரே யூத இனத்தையும் புறவினத்தையும் ஒன்றாய் இணைத்தார். தடைச் சுவரென நின்ற பகைமையைத் தம் ஊனுடலில் தகர்த்தெறிந்தார் ; இவ்விரு இனத்தாரிலிருந்தும் தமக்குள் புதியதொரு மனுக்குலத்தைப் படைத்துச் சமாதானம் செய்யும்படி, பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை வெறுமையாக்கினார் ; சிலுவையினால் பகைமையை ஒழித்து, அதன் வழியாக இவ்விருதிறத்தாரையும் ஒரே உடலில் கடவுளோடு ஒப்புரவாக்கும்படியும் இவ்வாறு செய்தார்.

அவர் வந்து, தொலைவில் நின்ற உங்களுக்கும் அருகிலிருந்தவர்களுக்கும் சமாதான நற்செய்தியை அறிவித்தார். அவர் வழியாகவே இருதிறத்தாராகிய நாம் ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு பெற்றோம்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன. நான் அவற்றை அறிவேன், அவையும் என்னைப் பின் தொடர் கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆயனில்லா ஆடுகள் போலிருந்தார்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 30-34

அக்காலத்தில் :

அப்போஸ்தலர் யேசுவிடம் வந்து கூடித் தாங்கள் செய்தது போதித்ததெல்லாம் அவருக்குத் தெரிவித்தனர். அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் தனிமையான இடத்துக்கு ஒதுக்கமாக வந்து சற்றே இளைப்பாறுங்கள்" என்றார். ஏனெனில், பலர் வருவதும் போவதுமாயிருந்தனர். உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரங் கிடைக்கவில்லை.

அவர்கள் படகேறி, தனிமையான இடத்துக்கு ஒதுக்கமாகச் சென்றனர். அவர்கள் போவதை மக்கள் கண்டார்கள். இதைப் பலர் தெரிந்துகொண்டு எல்லா ஊர்களிலிருந்தும் கால் நடையாகக் கூட்டமாய் ஓடி அவர்களுக்குமுன் அங்குவந்து சேர்ந்தார்கள்.

யேசு கரையில் இறங்கியபோது பெருங்கூட்டத்தைக் கண்டார். ஆயனில்லா ஆடுகள்போல் இருந்ததால் அவர்கள்மீது மனமிரங்கி நெடு நேரம் போதிக்கலானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவரே, அடியேனைக் கடந்துபோக வேண்டாம்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** *18: 1-10a*

**அந்நாட்களில் :**

கடவுள் மம்பிரே பள்ளத்தாக்கில் ஆபிரகாமுக்குத் தோன்றினார். அந்நேரம் வெப்பம் மிகுந்த உச்சிப் பகல் வேளையானதனால், அவர் கூடார வாயிலில் உட்கார்ந்திருந்தார். திடீரென்று அவர் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார். அவர்களைக் கண்டவுடனே அவர் கூடார வாயிலை விட்டு அவர்களுக்கு எதிர்கொண் டோடிக் குப்புற விழுந்து வணங்கி : ஆண்டவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்ததாயின், அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம். இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறேன். உங்கள் கால்களைக் கழுவி இம் மரத்தடியில் இளைப்பாறுங்கள். அதற்குள் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன். நீங்கள் உள்ளத்தைச் சற்றே திடப்படுத்திக் கொண்டபின் அப்பால் செல்வீர்களாக. இதற்காகத்தானே அடியேனிடத் திற்கு எழுந்தருளி வந்தீர்கள் என்றார். அவர்கள் : நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டு ஆபிரகாம் தம் கூடாரத்திற்கு விரைந்து சென்று, சாராளை நோக்கி: நீ மிக விரைவில் மூன்றுபடி மாவைப் பிசைந்து, அடுப்புத் தணலில் அப்பங்களைச் சுடு என்றார். மாட்டு மந்தைக்குத் தாமே ஓடிச் சென்று, ஒரு நல்ல இளங் கன்றுக் குட்டியைக் கொணர்ந்து வேலைக்கார னிடம் கொடுக்க இவன் அதனை விரைவில் சமைத்தான். பிறகு வெண்ணெ யையும் பாலையும் சமைக்கப்பட்ட கன்றுக் குட்டியையும் கொண்டு வந்து அவர்களுக்கு முன் வைத்து, அவர்களுக்குப் பக்கமாய் மரத்தடியில் நின்று கொண்டிருந்தார்.

சாப்பிட்ட பின்னர் அவர்கள் அவரை நோக்கி : உன் மனைவி சாராள் எங்கே என்று கேட்க, அவர் : அதோ, கூடாரத்தில் இருக்கிறாள் என்று பதில் கூறினார். மூவருள் ஒருவர் அவரை நோக்கி : நாம் திரும்பும்போது இதே காலத்தில் உன்னிடத்திற்கு வருவோம். அப்போது நீயும் உயிரோ டிருப்பாய் ; சாராளுக்கும் ஒரு மகன் இருப்பான் என்றார். கூடார வாயிலின் பின் புறமாய் நின்று கொண்டிருந்த சாராள் இதைக் கேட்டுச் சிரித்தாள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 14 : 2-3 ab, 3 cd 3 cd-4 ab, 5 (பல்லவி : 1a)

பல்லவி : **ஆண்டவரே, உம் இல்லத்தில் தங்கி வாழ்வோர் யார்?**

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன்,
இதயத்தில் நேரியவை நினைப்பவன்.
பல்லவி

3 நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன்.
அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன் :
4 தீயோரை இழிவாகக் கருதுபவன், ஆண்டவருக்கு அஞ்சுவோரை,
உயர்வாக மதிப்பவன்.
பல்லவி

5 தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன், மாசற்றவர்களுக்கு எதிராகக்
கைக்கூலி வாங்காதவன். இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்
திடுவான்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஊழிஊழியாக ஒளிவிலிருந்த திட்டம் இப்பொழுது இறைமக்களுக்கு வெளியாக்கப்பட்டுள்ளது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர்
கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 24-28

சகோதரர்களே :

உங்களுக்காக நான் படும் துன்பங்களில் இப்பொழுது மகிழ்ச்சி கொள்கிறேன். திருச்சபையாகிய தம் உடலின்பொருட்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குகிறேன். கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் அலுவலை நிறைவேற்ற, கடவுள் உங்களை முன்னிட்டு எனக்களித்த பொறுப்பை ஏற்றுள்ளதால் நான் திருச்சபையின் பணியாளன் ஆனேன்.

நான் அறிவிப்பதோ மறைவான இறைத்திட்டம். ஊழிஊழியாக, தலைமுறை தலைமுறையாக ஒளிவிலிருந்த இத்திட்டம் இப்பொழுது இறைமக்களுக்கு வெளியாக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இத்திட்டத்தின் மாட்சிமை புறவினத்தாரிடையே எவ்வளவு வளமிக்கதாய் உள்ளது என்பதைத் தம் மக்களுக்குத் தெரிவிக்க இறைவன் திருவுளங்

கொண்டார். கிறிஸ்து உங்களுக்குள் இருத்தலே அத்திட்டம். நாம் மாட்சிமை அடைவோம் என்பதற்கு அவரே நம் நம்பிக்கை. அவரையே நாங்கள் அறிவிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரையும் நிறைவுள்ளவராக்கும்படி ஒவ்வொருவருக்கும் அறிவு புகட்டி, ஒவ்வொருவருக்கும் முழு ஞானத்தோடு போதிக்கிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — லூக். 8 ; 15 காண்.

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில் பதித்து, நிலையாயிருந்து பயன் அளிப்பவர் பேறுபெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மார்த்தாள் அவரைத் தன் வீட்டில் வரவேற்றாள் ;**
**மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*10 : 38-42*

*அக்காலத்தில் :*

யேசு ஓர் ஊருக்குள் வர, மார்த்தாள் என்னும் பெண் ஒருத்தி தன் வீட்டில் அவரை வரவேற்றாள். அவளுக்கு மரியாள் என்னும் சகோதரி இருந்தாள். அவள் ஆண்டவருடைய காலடியில் அமர்ந்து, அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ, பலவகையாய்ப் பணிவிடை புரிவதில் பரபரப்பாயிருந்தாள். அவள் வந்து, “ஆண்டவரே, நான் உமக்குப் பணிபுரிய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும்” என்றாள்.

அதற்கு ஆண்டவர், “மார்த்தா, மார்த்தா, நீ பல காரியங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால், தேவையானது ஒன்றே. மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் பாரவோனால் மாட்சி அடையும்போது, ஆண்டவர் நாமே என்று அறிந்துகொள்வார்கள்.**

**யாத்திராகமத்திலிருந்து வாசகம்** *14: 5-18*

அந்நாட்களில் :

மக்கள் ஓடிப் போய்விட்டார்களென்று பாரவோன் அரசன் அறிய வந்தான். உடனே, அவர்களுக்கு விரோதமாய்ப் பாரவோனுக்கும் அவனுடைய ஊழியக்காரர்களுக்கும் மனம் மாறுபட்டுப் போயிற்று. அவர்கள் : நம் வேலைகளைச் செய்யாதபடி நாம் அவர்களைப் போகவிட்டது தவறல்லவா என்றார்கள். அவ்வாறு சொல்லி, தன் தேரைப் பூட்டி, தன் படைவீரர் எல்லாரையும் தன்னோடு கூட்டி, நல்ல முதல் தரமான அறுநூறு தேர்களையும், எகிப்திலிருந்த பலவித வண்டிகளையும் தயார்ப்படுத்தி, எல்லாப் படைத் தளபதிகளையும் சேர்த்துக்கொண்டான்.

ஆண்டவர் எகிப்து மன்னனான பாரவோனின் மனத்தைக் கடினப்படுத்தியமையால், அவன் இஸ்ராயேல் மக்களைப் பின் தொடர்ந்தான். அவர்களோ மிக வலுவுள்ள கையால் ஆதரிக்கப்பட்டுப் புறப்பட்டிருந்தார்கள். எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து போய், அவர்கள் கடலோரமாய்ப் பாளையம் இறங்கினதைக் கண்டுகொண்டார்கள். பாரவோனின் குதிரைகளும் தேர்களும் படைகள் எல்லாமே பேல்செப்போனுக்கு எதிரேயுள்ள பிகாயி ரோட்டிலே நின்றுகொண்டன.

பாரவோன் அணுகி வரவே, இஸ்ராயேல் மக்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, தங்களுக்குப் பிறகாலே எகிப்தியர் இருக்கக் கண்டு, மிகவும் பயந்து, ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினர். பின் மோயிசனை நோக்கி: எகிப்தில் கல்லறைகள் இல்லாதிருந்ததனாலோ நீர் பாலைவனத்திலே சாகும்படி எங்களைக் கூட்டி வந்தீர்? என்ன செய்யக் கருதி எங்களை எகிப்தினின்று புறப்படச் செய்தீர்? நாங்கள் எகிப்திலே உமக்குச் சொன்ன சொல் இதுவே அன்றோ? எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுப்போம் என்று சொன்னோம் அல்லவா? பாலைநிலத்தில் சாவதைக் காட்டிலும் அவர்களுக்கு வேலை செய்வது எங்களுக்கு நலமாய் இருக்குமே என்றார்கள்.

அப்போது மோயீசன் மக்களை நோக்கி: அஞ்ச வேண்டாம். நீங்கள் நின்றுகொண்டே இன்று ஆண்டவர் செய்யப்போகிற மகத்துவங்களைப் பாருங்கள். உண்மையிலே நீங்கள் இப்போது காண்கிற இந்த எகிப்தியரை இனி எந்தக் காலத்திலுமே காணப்போவதில்லை. ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார். நீங்கள் பேசாதிருங்கள் (என்றுரைத்தார்).

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ நம்மிடம் முறையிடுகிறதென்ன? இஸ்ராயேல் மக்களைப் புறப்பட்டுப் போகச் சொல். நீயோ உன் கோலை ஓங்கி, உன் கையைக் கடலின்மேல் நீட்டி கடலைப் பிரித்துவிடு. இஸ்ராயேல் மக்கள் அதன் நடுவிலே கால் நனையாமல் நடந்து போவார்கள். உங்களைப் பின்தொடரும்படி நாம் எகிப்தியரின் மனத்தைக் கடினப்படுத்துவோம். அதனால், பாரவோனாலும், அவன் படைகளாலும், அவனது தேர், குதிரைகளினாலும் நாம் மாட்சி அடைவோம். இப்படி நாம் பாரவோனாலும், அவனுடைய தேர்களாலும், குதிரைகளினாலும் மாட்சி அடையும்போது, ஆண்டவர் நாமே என்று எகிப்தியர் அறிந்து கொள்வார்கள் என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

யாத். 15 : 1, 2. 3-4, 5-6 (பல்லவி: 1b)

பல்லவி : ஆண்டவருக்குப் புகழ்பாடுவோம்.
ஏனென்றால் அவர் பெரும் புகழோடு வெற்றியில் சிறந்தார்.

1 ஆண்டவருக்குப் பாட்டுப் பாடுவோம். ஏனென்றால் அவர் பெரும் புகழோடு வெற்றியில் சிறந்தார்; குதிரையையும் அதன்மேல் ஏறியிருந்த வீரனையும் கடலிலே வீழ்த்தினார். பல்லவி

2 ஆண்டவர் என் வலிமையும் என் போற்றுரைகளுக்குத் தகுதி வாய்ந்தவருமாய் இருக்கிறார். அவர் எனக்கு மீட்பைத் தந்தார். அவர் என் கடவுளாகையால் அவரை நான் மேன்மைப்படுத்துவேன், அவர் என் தந்தையின் கடவுளென்று போற்றிப் புகழ்வேன். பல்லவி

3 ஆண்டவர் போர்வீரனைப் போன்றவர். அவர் எல்லாம் வல்லவர் என்று அழைக்கப்படுகின்றார்.
4 அவர் பாரவோனின் தேர்களையும் படைகளையும் கடலிலே வீழ்த்தினார். கடல் அவர்களை மூடினது. பல்லவி

5 அவர்கள் கல்லைப்போல் ஆழத்திலே வீழ்ந்தனர்.
6 ஆண்டவரே, உம்முடைய வலக்கை வலிமையால் பெரும் சிறப்பு எய்துகிறது. உமது வலக்கை பகைவரை நொறுக்கியது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

மனிதா, உன்னிடமிருந்து ஆண்டவர் எதைக் கேட்கிறார் என்பதை உனக்குக் காட்டுவேன்.

இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 6 : 1-4, 6-8

ஆண்டவர் கூறுவதைக் கேளுங்கள் : நீ எழுந்து மலைகளின் முன்னிலையில் உன் வழக்கைச் சொல், குன்றுகள் உன் சொற்களைக் கேட்கட்டும். மலைகளே, பூமியின் நிலையான அடிப்படைகளே, ஆண்டவருடைய வழக்கைக் கேளுங்கள் ; ஏனெனில் தம் மக்கள்மேல் ஆண்டவர் வழக்குத் தொடுக்கிறார். இஸ்ராயேல்மீது குற்றம் சாட்டுகிறார் :

“ எம் மக்களே, உங்களுக்கு நாம் என்ன செய்தோம் ? எதில் நாம் உங்களுக்குத் துயர் தந்தோம் ? சொல்லுங்கள் ! எகிப்து நாட்டிலிருந்து உங்களைக் கூட்டிவந்தோம், அடிமைத்தன வீட்டிலிருந்து உங்களை மீட்டு வந்தோம் ; உங்களுக்கு முன்பாக மோயீசனையும் ஆரோனையும் மீரியாளையும் அனுப்பினோமே. ”

“ எதைக் கொணர்ந்து நான் ஆண்டவரின் முன் வந்து, உன்னதரான கடவுள்முன் பணிந்து நிற்பேன் ? தகனப்பலிகளோடும், ஒரு வயது கன்றுகளோடும் அவர் முன்னிலையில் வந்து நிற்பேனோ ? ஆயிரக்கணக்கான ஆட்டுக்கடாக்கள் மேலும், எண்ணெய் பெருக்கெடுத்தோடும் பத்தாயிரம் ஆறுகள்மேலும் ஆண்டவர் விருப்பங் கொள்வாரோ ? என் அக்கிரமத்தைப் போக்க என் தலைப்பேறான பிள்ளையையும், என் ஆன்மாவின் பாவத்துக்காக என் வயிற்றுக்கனியான குழந்தையையும் கொடுப்பேனோ ?”

மனிதா, நல்லது எது என உனக்கு அவர் காட்டியிருக்கிறாரே ! நீதியோடு நடத்தல், அன்பு கூர்தல், உன் கடவுள் முன்னிலையில் தாழ்ச்சியோடிருத்தல், இவையன்றி வேறெதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49 : 5-6, 8-9, 16 bc-17, 21 & 23 (பல்லவி : 23b)

பல்லவி : நேர்மையுடன் நடப்பவனுக்கு
இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

5 'பலிகளினால் என்னுடன் உடன்படிக்கை செய்துகொண்ட என் புனிதர்களை
ஒன்று கூட்டுங்கள்' என்கிறார்.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்தியம்பும் : ஏனெனில், கடவுளே நீதிபதி
யாய் வருகின்றார். பல்லவி

8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை : ஏனெனில், உன்
தகனப் பலிகள் எந்நேரமும் என் கண்முன்னே இருக்கின்றன.
9 உன் வீட்டில் உள்ள காளைமாட்டையா நான் கேட்கிறேன்? உன் மந்தை
யிலுள்ள ஆடுகளையா நான் கேட்கிறேன்? பல்லவி

16 'என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்?' என் உடன்படிக்கையைப்
பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்
தவன் அன்றோ நீ? பல்லவி

21 'இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப்
போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம்
எடுத்துச் சொல்கிறேன், பார்!
23 'இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன்:
நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.'

பல்லவி

### அல்லேலூயா

சங். 94 : 8b, 7b

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளா தீர்கள் : மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவி கொடுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தீர்வையின்போது தென்னாட்டு அரசி இத்தலைமுறைக்கு எதிராக எழுவாள்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

12: 38-42

அக்காலத்தில் :

மறைநூல் அறிஞர், பரிசேயருள் சிலர் யேசுவுக்கு மறுமொழியாக: "போதகரே, நீர் அருங்குறி ஒன்று செய்வதைக் காண விரும்புகிறோம்" என்றனர்.

அதற்கு அவர் கூறியது: "கெட்டுப்போன விபசாரத் தலைமுறை அருங்குறி ஒன்று கேட்கிறது. யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியே யன்றி வேறு எந்த அருங்குறியும் அதற்கு அளிக்கப்படாது. எவ்வாறு யோனாஸ் மூன்று பகலும் மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்.

தீர்வையின்போது நினிவே மக்கள் இத்தலைமுறைக்கு எதிராக எழுந்து இதனைக் கண்டனஞ் செய்வார்கள். ஏனெனில், அவர்கள் யோனாஸ் உரைத்த தூதைக் கேட்டு மனந் திரும்பினார்கள். யோனாசிலும் மேலானது இதோ! இங்குள்ளது.

தீர்வையின்போது தென்னாட்டு அரசி இத்தலைமுறைக்கு எதிராக எழுந்து இதனைக் கண்டனஞ் செய்வாள். ஏனெனில், சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க உலகின் எல்லையிலிருந்து வந்தாள். சாலொமோனிலும் மேலானது இதோ! இங்குள்ளது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இஸ்ராயேல் மக்கள் வறண்டு கிடந்த கடலின் நடுவே நடந்தனர்.**

**யாத்திராகமத்திலிருந்து வாசகம்** *14: 21-15 : 1*

*அந்நாட்களில் :*

மோயீசன் கடலின்மேல் கையை நீட்டினார். நீட்டவே, ஆண்டவர் இரவு முழுவதும் மிகக் கொடிய வெப்பக்காற்று வீசச் செய்து, கடலை வாரிக் கட்டாந்தரையாக மாற்றினார். நீர் இரு பிரிவாகிவிட்டது. இஸ்ராயேல் மக்களும் வறண்டு கிடந்த கடலின் நடுவே நடந்தனர். ஏனென்றால், அவர்களுக்கு வலப் புறத்திலும் இடப் புறத்திலும் நீர், மதிலைப்போல் நின்றுகொண்டிருந்தது. பின் தொடர்ந்து வந்த எகிப்தியர்களும், பாரவோனுடைய தேர்களோடு குதிரை வீரர்களும் அவர்களுக்குப் பின்னால் கடலின் நடுவே புகுந்தனர்.

காலை நேரத்திலே ஆண்டவர் நெருப்பும் மேகமுமான தூணுக்குள் இருந்து, எகிப்தியரின் படைகள்மீது நோக்கம் வைத்து, அவர்களுடைய படைகளை அழித்தொழித்தார். அதாவது, தேர்களின் உருளைகள் கழலவே, அவை கவிழ்ந்து மிக ஆழமான இடத்தினுள் அமிழ்ந்து போயின. அதனால் எகிப்தியர் : இஸ்ராயேலை விட்டு ஓடிப்போவோமாக : இதோ ஆண்டவர் நம்மை எதிர்த்து அவர்கள் சார்பாய் நின்று போராடுகின்றார் என்றார்கள்.

அப்பொழுது ஆண்டவர் மோயீசனை நோக்கி : கடலின் மேலே கையை நீட்டு. நீட்டினால், நீர்த்திரள் திரும்பி, எகிப்தியர் மேலும் அவர்களுடைய தேர்குதிரைகள் மேலும் வந்து விழும் என்றார். மோயீசன் கடல் மீது கையை நீட்டினார். நீட்டவே, விடியற்காலையில், கடல் வேகமாய்த் திரும்பி வந்தது. எகிப்தியர் ஓடிப் போகையில், நீர்த்திரள் அவர்களுக்கு எதிராக வந்தமையால், ஆண்டவர் அவர்களைக் கடலின் நடுவே அமிழ்த்திவிட்டார். இவ்வாறு நீர்த்திரள் திரும்பி வந்து, தொடர்ந்து கடலில் புகுந்திருந்த பாரவோனின் எல்லாப் படைகளையும் தேர்குதிரைகளையும் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவனும் தப்பவில்லை. இஸ்ராயேல் மக்களோ வறண்டுபோன கடலின் நடுவே நடந்து வரும்போது அவர்களுடைய வலப்புறத்திலும் இடப்புறத்திலும் நீர்த்திரள் மதில்போல் நின்றுகொண்டிருந்தது.

இவ்வாறு ஆண்டவர் அன்று இஸ்ராயேலரை எகிப்தியருடைய கைகளினின்று காப்பாற்றினார். பின் அவர்கள் கடற்கரையில் எகிப்தியரின் சடலங்களைக் கண்டபோதும், ஆண்டவர் அவர்களைக் கண்டித்துக் காண்பித்த வல்லமையைக் கண்டுணர்ந்தபோதும் ஆண்டவருக்குப் பயந்து, அவர்மீதும் அவருடைய ஊழியனான மோயீசன்மீதும் நம்பிக்கை வைத்தார்கள்.

அப்பொழுது மோயீசன் இஸ்ராயேல் மக்களோடுகூட ஆண்டவரைப் புகழ்ந்து பாடிய சங்கீதமாவது :

## பதிலுரைப் பாடல்

யாத். 15 : 8-9, 10 & 12, 17 (பல்லவி : 1 a)

பல்லவி : ஆண்டவருக்குப் பாட்டுப் பாடுவோம் :
ஏனென்றால், அவர் பெரும் புகழோடு வெற்றியில் சிறந்தார்.

8 உமது கடும் கோபப் புயலால் நீர்த்திரள்கள் குவிந்தன. வெள்ளம் தடுக்கப்
பட்டு, நடுக்கடலில் ஆழப் பாதாளங்கள் அடுக்கப்பட்டன.
9 பகைவன் : அவர்களை நான் தொடர்வேன் ; பிடிப்பேன் ; கொள்ளையிடப்
பட்டவைகளை பங்கிடுவேன் ; என் ஆசை நிறைவுறச் செய்வேன் ; என்
கத்தியை உருவி என் கையாலே அவர்களைக் குத்துவேன் என்று சொன்னான்.

பல்லவி

10 உமது காற்றை வீசச் செய்தீர். அந்நேரமே கடல் அவர்களை மூடிக்கொண்ட
தனால், அவர்கள் ஓலமிடும் வெள்ளத்தில் ஈயக் குண்டுபோல் அமிழ்ந்தனர்.
12 உம்முடைய கையை நீட்டினீர். நீட்டவே, பூமி அவர்களை விழுங்கிற்று.

பல்லவி

17 நீர் அவர்களைக் கொண்டுபோய் மலைமீதும், ஆண்டவராகிய நீர் அமைத்
துள்ள அசையாத உறைவிடத்திலும் அவர்களை நாட்டுவீர். அது உமது
கையாலே நிலைநிறுத்தப்பட்ட உம்முடைய திருவுறைவிடமாம்.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*நம் பாவங்களையெல்லாம் ஆழ்கடலில் எறிந்துவிட்டார்.*

இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7: 14-15, 18-20

உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம் மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்; அவர்கள் தோட்டம் நிறைந்த நாட்டின் நடுவில் காட்டில் தனித்து வாழ்கிறார்களே; முற்காலத்தில் செய்ததுபோலவே அவர்கள் பாசானிலும் கலகாத்திலும் மேயட்டும். எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாட்களில் காட்டியவாறு வியத்தகு செயல்களை எங்களுக்குக் காட்டியருளும்.

உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் பாவத்தைப் பொறுத்து, அக்கிரமத்தை மன்னிக்கிற உமக்கு நிகரான கடவுள் உண்டோ? அவர் தம் கோபத்தை என்றென்றுமாய்ப் பாராட்ட மாட்டார்; ஏனெனில் நிலையான அன்பில் அவர் விருப்பமுள்ளவர். திரும்பவும் அவர் நம்மீது இரக்கம் கொள்வார், நம் அக்கிரமங்களைத் தம் காலடியில் மிதித்துப்போடுவார்; நம் பாவங்களையெல்லாம் ஆழ்கடலில் எறிந்துவிடுவார். பண்டைநாளில் நீர் எங்கள் தந்தையர்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருப்பதுபோல, யாக்கோபுக்குப் பிரமாணிக்கத்தையும் ஆபிரகாமுக்கு நிலையான அன்பையும் காட்டியருளும்!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 84: 1-3, 4-5, 6-7 (பல்லவி : 7a)

பல்லவி : **ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்.**

1 ஆண்டவரே, உமது நாட்டின்மீது அருள் கூர்ந்தீர். யாக்கோபின் இனத்தார்
பட்ட துன்பங்களை இன்பமாக மாற்றினீர்.
2 மக்கள் செய்த குற்றத்தை மன்னித்தீர்: அவர்கள் செய்த பாவங்களை
எல்லாம் போக்கினீர்.
3 உம்முடைய கடுஞ்சினத்தை எல்லாம் அடக்கிக்கொண்டீர்: உமது வெஞ்
சினத்தை நீர் காட்டவில்லை.

பல்லவி

4 எம் மீட்பரான இறைவா, எங்களுக்கு மீண்டும் வாழ்வளித்தருளும். எங்கள்மீது உமக்கிருந்த வெறுப்பு நீங்கட்டும்.
5 என்றென்றைக்குமா எங்கள்மேல் நீர் கோபம் காட்டுவீர்? தலைமுறை தலைமுறையாகவா உமது சினம் நீடிக்கும்?

பல்லவி

6 எங்களுக்கு நீர் மீளவும் வாழ்வு அளிக்காமலா இருப்பீர்? உம் மக்கள் உம்மை நினைத்து மகிழ்ச்சி கொள்ளாமலா இருப்பர்?
7 ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும். உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

பல்லவி

அல்லேலூயா

அரு. 14:23

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான்: என் தந்தையும் அவன் மேல் அன்பு கூர்வார்; நாங்களும் அவனிடம் வருவோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தம் சீடர் பக்கம் கையைக் காட்டி, "இதோ, என் தாயும், என் சகோதரரும்" என்றார்.**

மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12: 46-50

அக்காலத்தில்:

யேசு கூட்டத்தை நோக்கி இன்னும் பேசிக்கொண்டிருக்கும்போது, இதோ! அவருடைய தாயும் சகோதரரும் அவருடன் பேச வெளியே காத்துக்கொண்டிருந்தனர். ஒருவன் அவரை நோக்கி, "இதோ! உம் தாயும் சகோதரரும் உம்மோடு பேச வெளியே காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்றான்.

இதைத் தம்மிடம் கூறியவனுக்கு அவர் மறுமொழியாக: "யார் என் தாய்? யார் என் சகோதரர்?" என்று சொல்லி, தம் சீடர் பக்கம் கையைக் காட்டி, "இதோ என் தாயும் என் சகோதரரும். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும் சகோதரியும் தாயும் ஆவான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களுக்கு வானத்தினின்று அப்பங்களைப் பொழிவோம்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *16: 1-5, 9-15*

இஸ்ராயேல் மக்கள் எல்லாரும் ஏலிமை விட்டுப் பயணமாகி, எகிப்து நாட்டினின்று புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் நாளன்று ஏலிமுக்கும் சீனாயிக்கும் நடுவிலிருக்கும் சின் என்னும் பாலைவனம் வந்து சேர்ந்தனர்.

அந்தப் பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களின் கூட்டத்தார் எல்லாரும் மோயீசனையும் ஆரோனையும் பகைத்து முறுமுறுத்துப் பேசினர். இஸ்ராயேல் மக்கள் அவர்களை நோக்கி, நாங்கள் எகிப்து நாட்டிலேயே ஆண்டவருடைய கையாலே செத்துப் போயிருப்போமாயின் தாவிளை. அவ்விடத்திலே நாங்கள் இறைச்சி நிறைந்த பாத்திரங்களண்டை உட்கார்ந்து, வயிறுர அப்பம் சாப்பிட்டு வருவோம். இந்த மக்களெல்லாரையும் பட்டினிபோட்டுக் கொல்லவேண்டுமென்று அல்லவோ நீங்கள் எங்களை ஆள் நடமாட்டமில்லாத இந்த இடத்திற்கு அழைத்து வந்தீர்கள் என்று சொன்னார்கள்.

ஆண்டவர் (அதனைக்) கேட்டு மோயீசனை நோக்கி: இதோ நாம் உங்களுக்கு வானத்தினின்று அப்பங்கள் பொழிவிப்போம். மக்கள் வெளியே போய், ஒவ்வொரு நாளும் அந்நாளுக்குப் போதுமானதை மட்டும் சேகரிக்கட்டும். அதன்மூலம் அவர்கள் நமது நியாயச் சட்டப்படி நடப்பார்களோ அல்லவோ என்று அவர்களைச் சோதித்துப் பார்ப்போம். ஆறும் நாளில், அவர்கள் நாள்தோறும் சேகரிப்பதைப்போல் இரண்டு மடங்கு அதிகமாய்ச் சேகரித்து, அதனை ஆயத்தப்படுத்தி வைக்கக் கடவார்கள் என்றார்.

மேலும், மோயீசன் ஆரோனை நோக்கி: நீ இஸ்ராயேல் மக்கள் எல்லாரையும் பார்த்து: நீங்கள் ஆண்டவருடைய சந்நிதிக்கு வாருங்கள்: உங்கள் முறுமுறுப்புக்களை அவர் கேட்பார் என்று சொல்லுவாய் என்றார். ஆரோன் இஸ்ராயேல் மக்கள் அனைவரோடும் பேசிக்கொண்டிருக்கையில், அவர்கள் பாலைவனப் பக்கம் திரும்பிப் பார்த்தனர். அந்நிமிடமே ஆண்டவருடைய மாட்சி மேகத்திலே காணப்பட்டது.

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நாம் இஸ்ராயேல் மக்களின் முறுமுறுப்புக்களைக் கேட்டுக்கொண்டோம். நீ அவர்களை நோக்கி, மாலையில் இறைச்சிகளை உண்பீர்கள்; விடியற்காலையில் அப்பங்களைத் திருப்தியாகச் சாப்பிடுவீர்கள்; உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே என்று அறிந்து கொள்வீர்கள் என்று சொல் என்றார்.

அவ்வாறே மாலையில் காடைகள் வந்து விழுந்து பாளையத்தை மூடிக்கொண்டன. விடியற்காலையில் பாளையத்தைச் சுற்றிலும் பனி பெய்திருந்தது. பூமியை மூடிக்கொண்ட பின்னர், பாலைவனத்தில் உரலிலே குத்தப்பட்டதும் உறைந்த பனிக்கட்டியைப் போன்றதுமான ஒரு பொருள் காணப்பட்டது. இஸ்ராயேல் மக்கள் அதைக் கண்டு, அது இன்னதென்று அறியாமையால் ஒருவரை ஒருவர் நோக்கி: மன்னு? — அதாவது, இது யாதோ? என்று சொன்னார்கள்.

அப்பொழுது மோயீசன் அவர்களைப் பார்த்து: இது ஆண்டவர் உங்களுக்கு உண்ணத் தந்தருளிய அப்பம், என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 77 : 18-19, 23-24, 25-26, 27-28 (பல்லவி : 24 b)

பல்லவி : ஆண்டவர் வானத்து உணவை அவர்களுக்கு அளித்தார்.

18 கடவுளை அவர்கள் பரிசோதிக்கத் துணிந்தனர்: தங்கள் இச்சையின்படி உணவு கேட்டனர்.
19 கடவுளை எதிர்த்து, "பாலைவெளியில் கடவுள் நமக்குப் பந்தி படைக்க முடியுமோ?" என்றனர்.
பல்லவி

23 ஆனால் அவரோ வானில் உலவும் மேகங்களுக்குக் கட்டளையிட்டார்: வானங்களின் கதவுகளைத் திறந்துவிட்டார்.
24 உண்பதற்கு மன்னாவை மழைபோல் பொழிந்தார்: வானத்து உணவை அவர்களுக்கு அளித்தார்.
பல்லவி

25 விண்ணோரின் உணவை மனிதன் உண்ணலானான்: வேண்டிய அளவுக்கு உணவை அனுப்பினார்.
26 வானினின்று கீழ்த்திசைக் காற்று எழும்பச் செய்தார்: தம் வல்லமையால் தெற்கிலிருந்து காற்று வீசச் செய்தார்.
பல்லவி

27 தூசிபோல் ஏராளமாக இறைச்சியைப் பொழிந்தார்: கடல் மணல்போல்
எண்ணற்ற பறவைகளை வரவழைத்தார்.
28 அவை அவர்களுடைய பாளையத்தில் வந்து விழுந்தன: அவர்களுடைய
கூடாரங்களைச் சுற்றிக் கிடந்தன. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**மக்களினங்களுக்கு இறைவாக்கினராக உன்னை ஏற்படுத்தினேன்.**

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்தின் தொடக்கம். *1: 1, 4-10*

பென்யமீன் நாட்டில் அநாத்தோத்து என்னும் ஊரில் இருந்த அர்ச்சகர்களுள் ஒருவராகிய எல்சியாஸ் என்பவரின் மகனான எரெமியாசின் வார்த்தைகள்.

ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது. "உன் தாய் வயிற்றில் உன்னை உருவாக்குமுன்பே நாம் உன்னை அறிந்திருந்தோம்; கருப்பையினின்று நீ வெளிப்படுமுன்பே உன்னை நாம் அர்ச்சித்திருக்கிறோம்; மக்களினங்களுக்கு இறைவாக்கினராக ஏற்படுத்தினோம்."

நான்: "ஐயோ, ஆண்டவராகிய இறைவா, எனக்குப் பேசத் தெரியாது; நான் சிறுபிள்ளை!" என்றேன். ஆனால் ஆண்டவர் சொன்னார்: "'நான் சிறுபிள்ளை' என்று சொல்லாதே. ஏனெனில் நாம் யாரிடம் உன்னை அனுப்புகிறோமோ அவர்களிடம் நீ செல்வாய்; நாம் எதைச் சொல்லக் கற்பிக்கிறோமோ அதை நீ அறிவிப்பாய்: நீ அவர்கள்முன் அஞ்சாதே; நாம் உன்னோடு இருக்கிறோம்; உன்னை அவர்களிடமிருந்து விடுவிப்போம் என்கிறார் ஆண்டவர்."

ஆண்டவர் தமது கையை நீட்டி என் வாயைத் தொட்டு, "இதோ நம் வார்த்தைகளை உனது வாயில் ஊட்டினோம்; பிடுங்கிப் பறிக்கவும், இடித்துத் தகர்க்கவும், அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும், கட்டி உயர்த்தவும், நட்டு வைக்கவும் மக்களினங்கள்மேலும் அரசுகள்மேலும் இதோ உன்னை ஏற்படுத்தியிருக்கிறோம்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 70 : 1-2, 3-4a, 5-6 ab, 15ab & 17 (பல்லவி : 15 காண்)

பல்லவி : **ஆண்டவரே, உம் அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும்.**

1 **ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுகிறேன் : எந்நாளும் நான் ஏமாற்றம் அடைய விடாதேயும்.**
2 **உமது நீதிக்கேற்ப எனக்கு விடுதலை அளித்துக் காத்தருளும். எனக்கு உம் செவிசாய்த்து என்னை மீட்டுக்கொள்ளும்.** பல்லவி

3 **என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும் : கோட்டை அரணுயிருந்து என்னை மீட்டருளும் : ஏனெனில், நீர் எனக்குக் கற்பாறையாகவும் அரணாகவும் இருக்கிறீர்.**
4 **தீயவனின் கையினின்று, என் இறைவா, என்னை விடுவித்தருளும்.** பல்லவி

5 **ஏனெனில், என் இறைவா, நான் உம்மையே எதிர்நோக்கி வாழ்கிறேன் : ஆண்டவரே, என் இளமையிலிருந்து நீரே என் நம்பிக்கை.**
6 **பிறப்பிலிருந்து நீரே எனக்கு ஆதாரம் : தாயின் வயிற்றிலிருந்து நீரே என் பாதுகாப்பு.** பல்லவி

15 **உமது அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும் : நாள் முழுதும் உம் அருட்துணையை எடுத்துச் சொல்லும்.**
17 **இறைவா, நீர் எனக்கு என் இளமையிலிருந்தே அறிவு புகட்டினீர் : இந்நாள்வரை நான் உமது வியத்தகு செயல்களை வெளிப்படுத்துகிறேன்.** பல்லவி

அல்லேலூயா

**அல்லேலூயா. இறைவனின் வார்த்தையே விதையாம், அதை விதைப்பவர் கிறிஸ்துவே ; அவரைக் கண்டடைபவர் எல்லாம் என்றென்றும் நிலைத்திருப்பர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நூறு மடங்கு பலன் கொடுத்தது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *13: 1-9*

அந்நாளில் யேசு வீட்டைவிட்டு வெளியே போய்க் கடலோரத்தில் உட்கார்ந்திருந்தார். பெருங்கூட்டம் அவரை நெருக்கவே, அவர் படகிலேறி அமர வேண்டியிருந்தது. கூட்டம் அனைத்தும் கரையில் இருந்தது. அவர், அவர்களுக்கு உவமைகளால் பற்பல எடுத்துரைத்தார்.

" இதோ, விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரமாய் விழுந்தன. வானத்துப் பறவைகள் வந்து அவற்றைத் தின்றுவிட்டன. சில அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடிமண் இல்லாததால் விரைவில் முளைத்தன. வெயில் ஏறியதும் தீய்ந்து, வேரில்லாமையால் காய்ந்து போயின. சில முட்செடிகள் நடுவில் விழுந்தன. முட்செடிகள் அவற்றை நெரித்துவிட்டன. சில நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் ஒரு சில நூறு மடங்கு, வேறு சில அறுபது மடங்கு, இன்னும் சில முப்பது மடங்கு பலன் கொடுத்தன.

கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் எல்லா மக்களுக்கும் முன் சீனாய்மலை மேல் இறங்குவார்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் **19: 1-2, 9-11, 16-20b**

இஸ்ராயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்டு வந்த மூன்றாம் மாதத்தின் மூன்றாம் நாள் சீனாய்ப் பாலைவனத்தை அடைந்தனர். அவர்கள் இராப்பிதிம் என்னும் இடத்திலிருந்து பயணமாகிச் சீனாய்ப் பாலைவனம் சேர்ந்து, அவ்விடத்திலேயே பாளையம் இறங்கினர். அங்கே இஸ்ராயேல் மக்கள் மலைக்கு எதிரே கூடாரம் அடித்தனர்.

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நாம் உன்னோடு பேசும்போது மக்கள் கேட்டால், அவர்கள் என்றும் உன்னை நம்புவார்கள். அதன் பொருட்டு நாம் இனிமேல் கார்மேகத்திலிருந்து வருவோம் என்றார்.

மக்களின் வார்த்தைகளை மோயீசன் ஆண்டவருக்குத் தெரிவித்த போது, அவர் அவரை நோக்கி: நீ போய் இன்றும் நாளையும் மக்களைத் தூய்மைப்படுத்து. அவர்கள் தங்கள் ஆடைகளைக் கழுவி, மூன்றும் நாளைக்கு ஆயத்தமாய் இருக்கக்கடவார்கள்; ஏனென்றால், மூன்றும் நாளிலே ஆண்டவர் எல்லா மக்களுக்கும் முன் சீனாய் மலைமேல் இறங்குவார்.

மூன்றும் நாள் பொழுது புலரும் நேரத்தில் இதோ பேரிடி முழங்கியது; மின்னல் வெட்டியது; மலையின் மேல் கார்மேகம் வந்து கவிழ்ந்தது; எக்காளம் பேரொலி எழுப்பியது. அதனால் பாளையத்திலிருந்த மக்கள் அனைவரும் அச்சமுற்றனர். அப்பொழுது மக்கள் ஆண்டவருக்கு எதிர்கொண்டு போக, மோயீசன் அவர்களைப் பாளையம் இருந்த இடத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார். அவர்கள் மலையின் அடிவாரத்திலே நின்றனர். ஆண்டவர் சீனாய் மலைமீது நெருப்பில் இறங்கியபடியாலும், சூளையிலிருந்து புகை புறப்படுவதுபோல மலையினின்று புகை எழும்பியதாலும், அந்தச் சீனாய் மலை புகைக் காடாகிப் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. எக்காளமும் வர வரப் பேரொலி எழுப்பி நெடுநேரம் முழங்கிக் கொண்டிருந்தது.

அவ்வேளை மோயீசன் கடவுளோடு பேசிக் கொண்டிருந்தார்: ஆண்டவரும் அவருக்கு மறுமொழி சொல்லிய வண்ணம் இருந்தார். ஆண்டவர் சீனாய் மலையின் சிகரத்தில் இறங்கி, மோயீசனை அங்கு வரச் சொல்லி அழைத்தார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

தானி. 3 : 52, 53, 54, 55, 56

52 **எங்கள் தந்தையரின் இறைவனாகிய ஆண்டவரே, நீர் புகழ் பெறுவீராக!**

பதிலுரை : **என்றென்றும் நீர் போற்றப்படவும், உயர்த்தப்படவும் தகுதியுள்ளவர்.**

**உமது மகிமையுள்ள திருப்பெயர் புகழப்படுவதாக!**

பதிலுரை : **என்றென்றும் போற்றப்படவும் உயர்த்தப்படவும் கடவதாக!**

53 உமது மகிமையுள்ள பரிசுத்த கோயிலில் நீர் புகழப்படுவீராக!

பதிலுரை: என்றென்றும் எல்லார்க்கும் மேலாக வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

54 உமது அரசின் அரியணையின்மேலே நீர் புகழப்படுவீராக!

பதிலுரை: என்றென்றும் வாழ்த்தும் உயர்ச்சியும் பெறுவீராக!

55 கெருபீம்கள்மேல் அமர்ந்து பாதாளத்தைக் காண்கிறவரே, நீர் புகழப்படுவீராக!

பதிலுரை: என்றென்றும் போற்றுதலும் உயர்ச்சியும் பெறுவீராக!

56 வானகத்திலே நீர் புகழப்படுவீராக!

பதிலுரை: என்றென்றும் வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*உயிருள்ள நீர் சுரக்கும் ஊற்றாகிய எம்மைக் கைவிட்டனர்;*
*ஓட்டைத் தொட்டிகளைத் தங்களுக்கென கட்டிக்கொண்டனர்.*

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்
2: 1-3, 7-8, 12-13

ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது:

“எருசலேம் நகரத்தார் அனைவருக்கும் கேட்கும்படி நீ போய் அறிவி: ஆண்டவர் கூறுகிறார்: உன் இளமையின் அன்பை நினைவு கூர்கிறோம், பத்தினிக்குரிய உன் அன்பை அறிவோம்; விதைக்கப்படாத இடமாகிய பாலைநிலத்தில் நம்மை எவ்வாறு பின்பற்றினாய் என்பதையும் நாம் நினைவுகூர்கிறோம். இஸ்ராயேல் இனம் ஆண்டவருக்கென அர்ச்சிக்கப் பட்டதாகவும், அவருடைய அறுவடையின் முதற்கனியாகவும் இருந்தது; அதை உண்டவர்கள் அனைவரும் குற்றவாளிகள்; தீங்கு அவர்களைச் சூழ்ந்துகொண்டது, என்கிறார் ஆண்டவர்.

செழிப்பான நாட்டுக்கு உங்களைக் கூட்டி வந்தோம்; அதன் கனிகளையும் நன்மைகளையும் நீங்கள் உண்டு இன்புறக் கூட்டிவந்தோம்; ஆனால், நீங்கள் அங்கே போய்ச் சேர்ந்ததும் நமது நாட்டைத் தீட்டுப்

படுத்தினீர்கள் : நமது உரிமைச் சொத்தை அருவருப்பாக்கினீர்கள். அர்ச்சகர்கள்கூட, 'ஆண்டவர் எங்கே?' என்று கேட்கவில்லையே! நம் திருச்சட்டத்தைக் கற்றவர்களும் நம்மை அறிந்தார்கள் அல்லர்; மேய்ப்பர்கள் நம்மை எதிர்த்தார்கள்; இறைவாக்கினர்கள் பாகால் பேரால் பேசினார்கள்; பயனற்ற பொருட்களைப் பின்பற்றிச் சென்றார்கள்.

வானங்களே, இதைக் கண்டு வியப்படையுங்கள்; மிகவும் அஞ்சித் திடுக்கிடுங்கள், என்கிறார் ஆண்டவர். நம் மக்கள் இரண்டு தீமைகள் செய்தார்கள் : உயிருள்ள நீர் சுரக்கும் ஊற்றாகிய எம்மைக் கைவிட்டனர், நீரை வைத்திராத ஓட்டைத் தொட்டிகளைத் தங்களுக்கெனக் கட்டிக் கொண்டனர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 35 : 5-6 ab, 7-8, 9-10 (பல்லவி : 9a)*

பல்லவி : **ஆண்டவரே, உயிர்தரும் ஊற்று உம்மிடமே உள்ளது.**

5 ஆண்டவரே, உமது அருளன்பு வானங்கள் வரைக்கும் உயர்ந்துள்ளது:
உமது சொல்லுறுதி மேகங்களையே எட்டுகிறது.
6 உம்முடைய நீதி மிக உயர்ந்த மலைகள்போல உயர்ந்துள்ளன : உம்
நியாயத் தீர்ப்புகள் அடி காணாத கடல்போல் ஆழ்ந்துள்ளன. பல்லவி

7 இறைவா, உமதருள் எவ்வளவு உயர்மதிப்புள்ளது? மனுமக்கள் உம்
இறக்கைகளின் நிழலில் வந்து அடைக்கலம் புகுகின்றனர்.
8 உமது வீட்டில் உள்ள செழுமையால் அவர்கள் நிறைவு கொள்கின்றனர் :
உம் பேரின்ப நீரோடையில் அவர்களது தாகத்தைத் தணிக்கின்றீர்.

பல்லவி

9 ஏனெனில், உயிர்தரும் ஊற்று உம்மிடமே உள்ளது. உமது ஒளியிலே
நாங்கள் ஒளி காண்போம்.
10 உம்மை வணங்குபவர்களுக்கு உமது இரக்கத்தையும் செம்மையான
நெஞ்சினர்க்கு உமது நேர்மையையும் காண்பித்தருளும். பல்லவி

அல்லேலூயா

மத். 11 : 25 காண்.

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது; அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13: 10-17

அக்காலத்தில் :

சீடர் யேசுவை அணுகி, "அவர்களிடம் நீர் உவமைகளில் பேசுவதேன்?" என்றனர்.

அவர், அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது: "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில், உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; அவனும் நிறைவு பெறுவான். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். ஏன் அவர்களிடம் உவமைகளில் பேசுகிறேனெனில், அவர்கள் கண்டும் காண்பதில்லை; கேட்டும் கேட்பதில்லை; உணர்வதுமில்லை. இசையாஸ் கூறியுள்ள இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது.

'கேட்டுக் கேட்டும் நீங்கள் உணர்வதில்லை, பார்த்துப் பார்த்தும் நீங்கள் காண்பதில்லை. அவர்கள் கண்ணால் காணாமலும் காதால் கேட்காமலும் உளத்தால் உணராமலும் அவர்கள் மனந்திரும்பாமலும் நான் அவர்களைக் குணமாக்காமலும் இருக்கும்படி இம்மக்களின் உள்ளம் மழுங்கி விட்டது; இவர்கள் காது மந்தமாகிவிட்டது: கண்ணை மூடிக்கொண்டனர்.'

"உங்கள் கண்களோ பேறுபெற்றவை; ஏனெனில் அவை காண்கின்றன. காதுகளும் பேறுபெற்றவை: ஏனெனில் அவை கேட்கின்றன. நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்: இறைவாக்கினர், நீதிமான்கள் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மோயீசன் வழியாக சட்டம் அருளப்படுகிறது.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *20: 1-17*

*அந்நாட்களில் :*

ஆண்டவர் திருவுளம் பற்றிய எல்லா வாக்கியங்களுமாவன :

எகிப்து நாட்டிலிருந்தும் அடிமை வாழ்வினின்றும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள். நமக்கு முன்பாக வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக.

மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழுள்ள தண்ணீரிலும் உள்ளவைகளுக்கு ஒப்பான ஓர் உருவத்தையேனும் யாதொரு விக்கிரகத்தையேனும் உனக்கு நீ உண்டாக்கிக்கொள்ள வேண்டாம். அவைகளை வணங்கித் தொழவும் வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கிற நாம் வல்லவரும் எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம்; நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையரின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம் மூன்றும் நான்காம் தலைமுறைவரை விசாரித்து வருகிறவராய் இருக்கிறோம். நம்மிடம் அன்புகூர்ந்து, நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகிவருகிறவர்களுக்கோ, ஆயிரமாயிரம் தடவையும் தயவு காட்டுவோம்.

உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச்சொல்ல வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் தம்முடைய பெயரை வீணில் சொல்பவனைத் தண்டியாமல் விடமாட்டார்.

ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாட நினைவு கூர்வாயாக. ஆறு நாளும் நீ வேலைசெய்து உன் தொழிலுக்கடுத்த காரியங்களை எல்லாம் நடத்துவாயாக. ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவரின் ஓய்வு நாளாய் இருப்பதனால், அன்று நீயாவது, உன் மகன் மகளாவது, உன் வேலைக்காரன் வேலைக்காரியாவது, உன் மிருகங்கள் அல்லது உன் வாயில்களில் இருக்கிற அந்நியனாவது யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் ஆறு நாளில் விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து, ஏழாம் நாளிலே ஓய்வு கொண்டமையால், ஆண்டவர் ஓய்வு நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப் போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக. கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக. உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

உன் அயலான் வீட்டை விரும்பாதே: அவனுடைய மனைவியையாவது, வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, மாட்டையாவது, கழுதையையாவது, மேலும் அவனுக்குக் கிடைத்த யாதொன்றையாவது விரும்பாதிருப்பாயாக என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 18: 8, 9, 10, 11 (பல்லவி : அரு. 6 : 68)

பல்லவி : ஆண்டவரே, முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள்
உம்மிடம்தானே உள்ளன.

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி
ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; பல்லவி
கண்களுக்கு ஒளியூட்டுவது.

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது:
ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் பல்லவி
நீதியானவை.

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத்தக்கவை: பல்லவி
தேனினும் தேனடையினும் இனிமையானவை.

11 உம் ஊழியனும் அவற்றால் பயிற்சி பெறுகிறான்: பல்லவி
அவற்றைக் கடைப்பிடிப்பதில் மிக விழிப்பாயிருக்கிறான்.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*நம் இதயத்திற்கேற்ற ஆயர்களை உங்களுக்குக் கொடுப்போம்; எல்லா இனத்தவரும் எருசலேமில் வந்து கூடுவர்.*

**இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 3 : 14-17

"பிரமாணிக்கமற்ற பிள்ளைகளே, திரும்பி வாருங்கள்; ஏனெனில் நாமே உங்கள் தலைவர்: உங்களில் ஒருவன் ஒரு பட்டணத்தினின்றும், இருவர் ஒரு குடும்பத்திலிருந்தும் வந்த போதிலும், நாம் உங்களைச் சீயோனில் கொண்டுபோய்ச் சேர்ப்போம். நமது இதயத்திற்கேற்ற ஆயர்களை உங்களுக்குக் கொடுப்போம்; அவர்கள் உங்களுக்கு அறிவையும் ஞானத்தையும் ஊட்டுவார்கள்.

நீங்கள் பூமியில் பெருகிப் பலுகிய பின்னர், 'இதோ ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழை' என்று சொல்லமாட்டார்கள்; அது அவர்கள் நினைவில் இராது, ஞாபகத்திற்கும் வராது; அதைக் குறித்து விசாரித்தலும் இல்லை; இனி ஒரு முறை அது நிகழவும் மாட்டாது, என்கிறார் ஆண்டவர்.

அக்காலத்தில் யெருசலேமை ஆண்டவருடைய அரியணை என்பார்கள், ஆண்டவர் பேரால் எல்லா இனத்தாரும் யெருசலேமில் வந்து கூடுவார்கள்; அதற்குப் பிறகு தங்கள் தீய இதயத்தின் கெட்ட நாட்டத்தைப் பின்பற்ற மாட்டார்கள்," என்கிறார் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

எரே. 31 : 10, 11-12 ab, 13 (பல்லவி : 10 ஈ)

பல்லவி : **ஆயன் மந்தையைக் காப்பதுபோல் ஆண்டவர் நம்மைக் காப்பார்.**

10 "புறவினத்தாரே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள்: கேட்டுத் தொலைவிலுள்ள தீவுகளுக்கு அறிவியுங்கள்: 'இஸ்ராயேலைச் சிதறடித்தவர் அவர்களைச் சேர்ப்பார், ஆயன் மந்தையைக் காப்பதுபோல் அவர்களைக் காப்பார்' என்று சொல்லுங்கள்.

பல்லவி

11 ஏனெனில் ஆண்டவர் யாக்கோபை மீட்டார்; வலியவன் கையினின்று
அவனை விடுவித்தார்.
12 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியில் பாடிப் போற்றுவார்கள்,
ஆண்டவர் அவர்களுக்கு அளிக்கும் நன்மைகளை நாடிக் கூட்டமாய்
ஓடி வருவார்கள்.
பல்லவி

13 அப்போது கன்னிப் பெண்கள் நாட்டியமாடிக் களிப்பார்கள்; இளைஞரும்
முதியோரும் அவ்வாறே மகிழ்வார்கள்; அவர்களுடைய அழுகையை
அக்களிப்பாக மாற்றுவோம்; அவர்களைத் தேற்றித் துயரத்தைப் போக்கி,
அவர்களை மகிழச் செய்வோம்.
பல்லவி

அல்லேலூயா — லூக். 8 : 15 காண்க.

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில் பதித்து, நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறுபெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

வார்த்தையைக் கேட்டு, உணர்ந்துகொள்கிறவன் பலன் கொடுப்பான்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13 : 18-23

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறியதாவது:

"விதைப்பவன் உவமையின் பொருள் என்னவென்று கேளுங்கள்: விண்ணரசைப்பற்றிய வார்த்தையை ஒருவன் கேட்டும் உணராவிட்டால், அவன் உள்ளத்தில் விதைத்ததைத் தீயவன் வந்து பறித்துக்கொள்வான். வழியோரம் விதைக்கப்பட்டவன் இவனே.

பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு உடனே மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறவனே. ஆனால், அவன் தன்னில் வேரற்றவன்; நிலையற்றவன். வார்த்தையின் பொருட்டு வேதனையுற்றதும் அல்லது துன்புறுத்தப்பட்டதும் இடறல் படுவான்.

முட்செடிகள் நடுவில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு இவ்வுலகக் கவலையும் செல்வ மாயையும் வார்த்தையை நெரிக்க, பயனற்றுப் போகிறவனே.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் யாரெனில், வார்த்தையைக் கேட்டு உணர்ந்துகொள்ளுகிறவனே. இவன் நூறுமடங்கோ, அறுபது மடங்கோ, முப்பது மடங்கோ பலன் கொடுப்பான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

**ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன்படிக்கையின் இரத்தம் இதுவே.**

*யாத்திராகமத்திலிருந்து வாசகம்* *24 : 3-8*

*அந்நாட்களில் :*

*மோயீசன் வந்து ஆண்டவருடைய எல்லா வாக்கியங்களையும் நீதிச் சட்டங்களையும் விவரித்துச் சொன்னார். அதைக் கேட்ட மக்கள் எல்லாரும்: ஆண்டவர் திருவுளம்பற்றின எல்லா வாக்கியங்களின்படியும் நடப்போம் என்று ஒரே குரலாய் மறுமொழி சொன்னார்கள்.*

*மோயீசனோ, ஆண்டவர் சொன்ன வாக்கியங்களை யெல்லாம் எழுதி வைத்து, பின், காலையில் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலிப்பீடத்தைக் கட்டி, இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் நினைவாக பன்னிரண்டு தூண்களை நிறுத்தினார். இஸ்ராயேல் மக்களில் இளைஞர்களை அனுப்பினார். அவர்கள் ஆண்டவருக்குத் தகனப்பலிகளையும், சமாதானப் பலிகளாகக் கன்றுக்குட்டிகளையும் பலியிட்டார்கள். அப்போது மோயீசன் இரத்தத்தில் ஒரு பாதியை எடுத்துப் பாத்திரங்களில் வார்த்து, மற்றப் பாதியைப் பலிப்பீடத்தின்மேல் ஊற்றினார்.*

*பின் உடன்படிக்கையின் புத்தகத்தை எடுத்து மக்கள் கேட்க வாசித்தார். அவர்கள் : ஆண்டவர் சொன்னபடி யெல்லாம் செய்வோம் என்றார்கள். அப்பொழுது மோயீசன் பாத்திரத்தில் வார்த்து வைத்திருந்த இரத்தத்தை மக்களின்மேல் தெளித்து : இந்த எல்லா வார்த்தைகளின்படியும் ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று கூறினார்.*

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49 : 1-2, 5-6, 14-15 (பல்லவி : 14a)

பல்லவி : **இறைபுகழ்ச்சி எனும் பலியை ஆண்டவருக்குச் செலுத்து.**

1 ஆண்டவராகிய இறைவன் பேசலானார் : கீழ்த்திசைமுதல் மேற்றிசை
வரையுள்ள பூவுலகைத் தீர்ப்புக்கு அழைக்கலானார்.
2 எழில் மிக்க சீயோனிலிருந்து கடவுள் ஒளி வீசி எழுந்தார். பல்லவி

5 'பலிகளினால் என்னுடன் உடன்படிக்கை செய்துகொண்ட என் புனிதர்களை
ஒன்று கூட்டுங்கள்' என்கிறார்.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்தியம்பும் : ஏனெனில், கடவுளே நீதிபதி
யாய் வருகின்றார். பல்லவி

14 இறை புகழ்ச்சி எனும் பலியை ஆண்டவருக்குச் செலுத்து : உன்னதமான
வருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து.
15 துன்பநாளில் என்னைக் கூப்பிடு : உன்னை விடுவிப்பேன், நீ என்னை
மேன்மைப்படுத்துவாய். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**என் பெயரால் குறிக்கப்படும் இந்தவீடு கள்ளர்குகையாகிவிட்டதோ?**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 1-11

ஆண்டவருடைய வாக்கு எரெமியாசுக்கு அருளப்பட்டது : "நீ ஆண்டவருடைய வீட்டின் வாயிலில் நின்றுகொண்டு அறிவிக்கவேண்டியது இதுவே : இவ்வாயில் வழியாய் ஆண்டவரை வழிபட உள்ளே போகும் யூதாவின் மக்களே, ஆண்டவருடைய வாக்கியத்தைக் கேளுங்கள் :

இஸ்ராயேலின் கடவுளும் சேனைகளின் ஆண்டவருமானவர் கூறுகிறார் : உங்கள் வழிகளையும் செயல்களையும் செவ்வைப்படுத்திக் கொள்ளுங்கள் ; அப்போது இவ்விடத்தில் உங்களோடு குடியிருப்போம். 'இது ஆண்டவருடைய கோயில் ! ஆண்டவருடைய கோயில் !! ஆண்டவருடைய கோயில் !!!' என்று சொல்லும் வஞ்சக வார்த்தைகளை நீங்கள் நம்ப வேண்டாம்.

உங்களுடைய வழிகளையும் செயல்களையும் நீங்கள் உண்மையாகவே திருத்திக்கொண்டால், ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் உண்டாகும் வழக்கில் உண்மையாகவே நீதி வழங்கினால், அந்நியரையும் அநாதைகளையும் கைம்பெண்களையும் நீங்கள் ஒடுக்காதிருந்தால், மாசற்ற இரத்தத்தை இவ்விடத்தில் சிந்தாதிருந்தால், உங்களுக்கே தீமையாக வேற்றுத் தெய்வங்களைப் பின்தொடராதிருந்தால், உங்கள் தத்தையர்க்கு முற்காலத்தில் நாம் கொடுத்த இந்த நாட்டில் உங்களோடு என்றென்றும் குடியிருப்போம்.

ஆனால் இதோ உங்களுக்குப் பயன் தராத பொய் வார்த்தைகளை நம்புகின்றீர்கள். களவு, கொலை, விபசாரம், பொய்யாணை, பாகாலுக்கு வழிபாடு, நீங்கள் அறியாத வேற்றுத் தெய்வங்களைத் தொழுதல் இவற்றையெல்லாம் செய்துவிட்டு, நீங்கள் இங்கு வந்து நம் பெயரால் வழங்கப்படும் இவ் வீட்டில் நம் முன்னிலையில் நின்றுகொண்டு, 'நாங்கள் விடுதலைபெற்றோம்' என்று சொல்லுகிறீர்கள்; சொல்லிக்கொண்டு தொடர்ந்து அதே அருவருப்பான செயல்களைச் செய்கிறீர்கள்.

என் பெயரால் குறிக்கப்படும் இந்த வீடு உங்கள் கண்களுக்குக் கள்ளர் குகையாய்த் தோன்றுகிறதோ? இதோ நாமே நேரில் பார்த்தோம், என்கிறார் ஆண்டவர்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 83 : 2, 3, 4-5 a & 7 a, 10-11 a (பல்லவி : 1)*

பல்லவி : **வான் படைகளின் ஆண்டவரே,**
**உமதில்லம் எத்துணை அருமையாயுள்ளது!**

2 என் ஆன்மா ஆண்டவருடைய ஆலய முற்றங்களை விரும்பித் தேடிச் சோர்ந்துபோகின்றது. என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனை நினைந்து களிகூர்கின்றன. பல்லவி

3 அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்தது : சேனைகளின் ஆண்டவரே, என் அரசே, என் இறைவா, உம் பீடங்களுள்ள இடத்திலே கிடைத்தது. பல்லவி

4 ஆண்டவரே, உம் இல்லத்தில் வாழ்வோர் பேறு பெற்றோர். எந்நாளும் உம்மைப் புகழ்வார்கள்.
5 திருயாத்திரை செய்வதிலே நினைவாயிருந்து, உம்மிடம் உதவி பெறுபவன் பேறு பெற்றவன்.
7 வலிமைமேல் வலிமைகொண்டு யாத்திரை செய்வர். பல்லவி

10 உமது ஆலய முற்றங்களில் ஒருநாள் இருப்பது, வேறிடத்தில் ஆயிரம்
நாள் வாழ்வதைவிட உண்மையிலே மேலானது.
11 பாவிகளின் கூடாரங்களில் தங்குவதைவிட என் இறைவனது இல்லத்தின்
வாயிலில் நிற்பதே மேலானது. பல்லவி

அல்லேலூயா யாக். 1 : 21

அல்லேலூயா. உங்கள் மனத்தில் ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள் : இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்கவல்லது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*13: 24-30*

அக்காலத்தில் :

யேசு இன்னுமோர் உவமையை மக்களுக்கு எடுத்துச் சொன்னார்:

"விண்ணரசு, தன் வயலில் நல்ல விதை விதைத்தவனுக்கு ஒப்பாகும். ஆட்கள் தூங்கும்போது அவனுடைய பகைவன் வந்து கோதுமையிடையே களைகளை விதைத்துவிட்டுப் போனான்.

பயிர் வளர்ந்து கதிர்விட்டபோது களைகளும் தோன்றின. வீட்டுத் தலைவனிடம் ஊழியர் வந்து, 'ஐயா, உம் வயலில் நல்ல விதையல்லவா விதைத்தீர்? பின் அதில் களைகள் வந்தது எப்படி?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'இது பகைவன் செய்த வேலை' என்றான். ஊழியரோ, 'நாங்கள் போய் அவற்றைப் பிடுங்கிச் சேர்க்க வேண்டுமா?' என்றனர்.

அவன் 'வேண்டாம்; களைகளைச் சேர்க்கும்போது ஒருவேளை கோதுமைப் பயிரையும் அவற்றுடன் பிடுங்கிவிடக்கூடும். அறுவடை வரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடைக் காலத்தில் அறுப்போரிடம், 'முதலில் களைகளை ஒன்று சேர்த்து, எரிப்பதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று சொல்வேன்' என்றான்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# பதினேழாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

(முதல் வாசகம்)

ஞானத்தை உனக்குத் தர வேண்டினாய்.

முதல் அரசர் ஆகமத்திலிருந்து வாசகம் 3: 5, 7-12

அந்நாட்களில்:

சாலமோனுக்கு இரவிலே ஆண்டவர் கனவில் தோன்றி, "நீ விரும்புவதைக் கேள்" என்றார்.

அதற்குச் சாலமோன்: "என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் உம் அடியானை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக அரியணையில் ஏற்றினீர். நானோ சிறுவன்; எதையும் தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல் அற்றவன். நீர் தேர்ந்து கொண்டவர்களும், எண்ணிக்கைக்குள் அடங்காத மதிப்பிட முடியாதவர்களுமான திரளான மக்களாகிய உம் மக்கள் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் வேண்டிய ஞானத்தை அடியேனுக்கு அளித்தருளும்; ஏனெனில், கணக்கற்ற இந்த உம் மக்களுக்கு நீதி வழங்க யாரால் முடியும்?" என்றார்.

சாலமோன் சொன்ன சொற்களும், செய்துகொண்ட விண்ணப்பமும் ஆண்டவருக்குப் பிடித்திருந்தன. ஆகையால் ஆண்டவர் அவரை நோக்கி, "உனக்கென நீடிய ஆயுளையும் மிகுந்த செல்வத்தையும் உன் எதிரிகளின் உயிர்களையும் கேளாமல், நீ இதையே கேட்டு, நீதி வழங்குவதற்கு ஏற்ற ஞானத்தை உனக்குத் தரவேண்டும் என்று நீ மன்றாடினதால், உன் வார்த்தையின்படியே நாம் உனக்குச் செய்தோம். ஞானமும் அறிவும் உள்ள இதயத்தை உனக்குத் தந்தோம். இதில் உனக்கு இணையானவன் இதற்குமுன் இருந்ததுமில்லை; இதற்குப்பின் இருக்கப் போவதுமில்லை," என்று திருவாய் மலர்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 57-72, 76-77, 127-128, 129-130 (பல்லவி : 97 அ)

பல்லவி : **ஆண்டவரே, நான் உமது சட்டத்தை
எவ்வளவோ நேசிக்கிறேன்.**

57 ஆண்டவரே, உம் வார்த்தைகளை அனுசரிப்பதே, என் வாழ்க்கைப் பயன்
எனக் கருதினேன்.
72 நீர் திருவாய் மலர்ந்த சட்டம், ஆயிரம் பொன்னையும் வெள்ளியையும்விட
மேலானது. பல்லவி

76 எனக்கு ஆறுதலளிக்க உமது இரக்கம் எனக்குக் கிடைக்கட்டும்: உம்
ஊழியனுக்கு வாக்குறுதி தந்தீர் அன்றோ.
77 நான் வாழ்வு பெறும்படி இரக்கப்பெருக்கம் எனக்கு உதவட்டும்;
ஏனெனில், உமது திருச்சட்டத்தில் நான் இன்பம் காண்கிறேன். பல்லவி

127 ஆதலால் நான் உம் கற்பனைகளின்மீது அன்பு வைக்கிறேன். பொன்னையும்
மணியையும்விட நேசித்தேன்.
128 ஆகவே உம் கட்டளைகளெல்லாம் நீதியென ஏற்றுக்கொண்டேன்.
பொய்யான வழி எதையும் வெறுக்கிறேன். பல்லவி

129 உம் ஆணைகள் வியப்புக்குரியவை. ஆகவே என் ஆன்மா அவற்றைக்
கடைப்பிடிக்கிறது.
130 உம் வார்த்தைகளுக்குத் தரும் விளக்கம் அறிவொளி தருகிறது. அது
எளியோர்க்கு அறிவூட்டுகிறது. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி நம்மை
முன் குறித்துவைத்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8: 28-30

சகோதரர்களே :

கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும். ஏனெனில், கடவுள் யாரை முன்பே தேர்ந்துகொண்டாரோ, அவர்கள் தம் மகனின்

சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி முன் குறித்திருக்கிறார்; சகோதரர் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்கவேண்டுமென்றே இப்படிக் குறித்துவைத்தார்.

யாரை முன் குறித்துவைத்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; யாரை அழைத்தாரோ அவர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினார்; யாரைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினாரோ, அவர்களுக்குத் தம் மாட்சிமையில் பங்கு தந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

மத். 11:25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தனக்குள்ளதெல்லாம் விற்று, அந்நிலத்தை வாங்கிக்கொள்கிறான்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

13: 44-52

அக்காலத்தில்: யேசு மக்களை நோக்கிக் கூறியதாவது:

"விண்ணரசு, நிலத்தில் மறைந்துள்ள புதையலுக்கு ஒப்பாகும். அதைக் கண்டுபிடித்தவன் அதை மறைத்துவிட்டு, அதைக் கண்ட மகிழ்ச்சியில் போய்த் தனக்குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்கிக் கொள்கிறான்.

பின்னும் விண்ணரசு நல்ல முத்துக்களைத் தேடும் வணிகனுக்கு ஒப்பாகும். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டதும், போய்த் தனக்குள்ள தெல்லாம் விற்று அதை வாங்கிக்கொள்கிறான். ★

மேலும் விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லாவகை மீன்களையும் வாரிவரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை வெளியில் இழுத்து, கரையில் அமர்ந்து, நல்லவற்றைப் பொறுக்கிக் கூடைகளில் வைத்துக்கொண்டு தீயவற்றை வெளியே எறிந்துவிடுகின்றனர். இவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். வானதூதர் சென்று தீயோரை நீதிமான் களிடையே இருந்து பிரித்து, தீச்சூளையில் தள்ளுவர். அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும்" என்றார்.

“இவையெல்லாம் கண்டுணர்ந்தீர்களா?” என்று யேசு கேட்க, அவர்கள், “ஆம்” என்றனர். அவர், “ஆகையால், விண்ணரசில் சீடனான மறைநூல் அறிஞன் எவனும், தன் கருவூலத்தினின்று புதியனவும் பழையனவும் எடுக்கிற வீட்டுத் தலைவனுக்கு ஒப்பாவான்” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13: 44-46

அக்காலத்தில் யேசு மக்களை நோக்கிக் கூறியதாவது :

★ அடையாளம் வரை

---

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இவர்கள் உண்டபின்னும் மீதியிருக்கும்.**

அரசராகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 4: 42-44

அந்நாட்களில் :

பாவால்சலிசா என்ற ஊரிலிருந்து ஒரு மனிதன் புதுத் தானியத்தில் செய்யப்பட்ட சில அப்பங்களையும், இருபது வாற்கோதுமை உரொட்டிகளையும், ஒரு சாக்குப் புதுத் தானியத்தையும் கடவுளின் மனிதரிடம் கொண்டுவந்தான். எலிசேயு, “இவ்வப்பங்களை மக்களுக்குச் சாப்பிடக் கொடு” என்றார். அவன் மறுமொழியாக, “நூறு பேருக்கு இவை எப்படிப் போதும்?” என்றான்.

அவர் மறுபடியும் ஊழியனை நோக்கி, “மக்களுக்கு இவற்றைச் சாப்பிடக்கொடு. ஏனெனில், ‘இவர்கள் உண்ட பின்னும் மீதி இருக்கும்’ என்று ஆண்டவர் திருவுளம் பற்றியுள்ளார்” எனக் கூறினார். எனவே, அவன் அவற்றை அவர்களுக்குப் பரிமாறினான், அவர்களும் உண்டனர். ஆண்டவர் சொல்லியிருந்தபடி மீதியும் இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 10-11, 15-16, 17-18 (பல்லவி : 16 காண்)

பல்லவி : **ஆண்டவரே, உமது கையைத் திறந்து,
எங்களுக்கு நிறைவாய் உணவூட்டுகிறீர்.**

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக. உமது
ஆற்றலைப பறை சாற்றுவார்களாக. பல்லவி

15 ஆண்டவரே, எல்லாருடைய கண்களும் உம்மையே நம்பிக்கையுடன்
நோக்குகின்றன: எல்லாருக்கும் நீர் தக்க காலத்தில் உணவளிக்கிறீர்.
16 உமது கையைத் திறந்து விடுகிறீர் : உயிருள்ள எதையும் உம் இரக்கத்
தினால் நிரப்புகிறீர். பல்லவி

17 ஆண்டவர் தம் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர். தம் செயல்களி
லெல்லாம் புனிதமானவர்.
18 தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில்
உள்ளார். நேர்மையுடன் தம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் ஆண்டவர்
அண்மையில் உள்ளார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஒரே உடல், ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 1-6

சகோதரர்களே :

ஆண்டவருடைய கைதியாகிய நான், உங்களுக்கு அறிவுறுத்துவதாவது : நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ற வாழ்க்கை நடத்துங்கள். நிறைவான தாழ்ச்சியும் சாந்தமும் பொறுமையும் உள்ளவர்களாய் நடந்து, அன்பினால் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். தேவ ஆவி அளிக்கும் ஒருமைப்பாட்டைச் சமாதானம் என்னும் பிணைப்பால் காப்பாற்றக் கண்ணுங் கருத்துமாய் இருங்கள். ஒரே நம்பிக்கையில் பங்குபெற நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

ஒரே நம்பிக்கை இருப்பதுபோல், ஒரே உடலும் ஒரே ஆவியும் உண்டு. அவ்வாறே ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் உண்டு. எல்லாருக்கும் கடவுளும் தந்தையும் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர், எல்லாரிலும் செயலாற்றுபவர், எல்லாருக்குள்ளும் இருப்பவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 7: 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றி யுள்ளார்; கடவுள் தம் மக்களைத் தேடிவந்திருக்கின்றார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பந்தியமர்ந்தவர்களுக்கு வேண்டியமட்டும் பகிர்ந்தளித்தார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 1-15

அக்காலத்தில் :

யேசு கலிலேயாக் கடலின் அக்கரைக்குச் சென்றார். அதற்குத் திபேரியாக் கடல் என்றும் பெயர். அவர் பிணியாளிகளுக்குச் செய்துவந்த அருங்குறிகளைக் கண்டதனால் பெரும் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது. யேசு மலைமேல் ஏறி அங்குத் தம் சீடர்களோடு அமர்ந்திருந்தார். யூதர்களின் திருவிழாவாகிய பாஸ்கா அண்மையிலிருந்தது.

யேசு ஏறெடுத்துப் பார்த்துப் பெருங்கூட்டம் ஒன்று தம்மிடம் வருவதைக் கண்டு, “இவர்கள் எல்லாருக்கும் உணவளிப்பதற்கு எங்கிருந்து அப்பம் வாங்குவது?” என்று பிலிப்பைக் கேட்டார். தாம் செய்யப்போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிக்கவே இவ்வாறு கேட்டார்.

அதற்குப் பிலிப்பு, “இருநூறு வெள்ளிக் காசுக்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கொரு சிறு துண்டுகூட வராதே” என்றார். அவருடைய சீடருள் ஒருவரும், சீமோன் இராயப்பருடைய சகோதரருமான பெலவேந்திரர், “இங்கே ஒரு பையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பமும், இரண்டு மீனும் உள்ளன. ஆனால், இத்தனைப் பேருக்கு இது எப்படிப் போதும்” என்று சொன்னார்.

யேசுவோ, "மக்களைப் பந்தியமர்த்துங்கள்" என்றார். அங்கே நல்ல புல் தரை இருந்தது. எல்லாரும் அமர்ந்தனர். அவர்களுள் ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம்.

யேசு அப்பங்களை எடுத்து நன்றி கூறி, பந்தியமர்ந்தவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அவ்வாறே மீன்களையும் கொடுத்தார். வேண்டிய மட்டும் வாங்கியுண்டார்கள். அவர்கள் வயிறார உண்டபின், "ஒன்றும் வீணாகாதபடி மீதியான துண்டுகளைச் சேர்த்துவையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே சேர்த்து, மக்கள் எல்லாரும் உண்டபின், ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினர்.

யேசு செய்த இந்த அருங்குறியைக் கண்டு, மக்கள், "உலகிற்கு வரப்போகும் இறைவாக்கினர் உண்மையிலே இவர்தான்" என்றார்கள். ஆகவே, அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக்கொண்டுபோய் அரசனாக்க விரும்புகின்றனர் என்பதை அறிந்து, யேசு அவர்களை விட்டு விலகித் தனியாக மீண்டும் மலைக்குச் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவரே, நான் பேசுவதால் கோபிக்க வேண்டாம்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 18: 20-32

அந்நாட்களில் :

ஆண்டவர் : சொதோம் கொமோரா நகரங்களின் ஆரவாரம் மிஞ்சிப் போயிற்று. அவைகளின் பாவமும் அளவின்றிப் பெருகிப் போயிற்று. ஆதலால், இதோ, நாம் இறங்கிப் போய், நம்மை எட்டிய அந்தக் கூக்குரலுக்கு ஏற்ப அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்ப்போம், என்றார்.

அப்பொழுது அவர்கள் அவ்விடம் விட்டுச் சொதோமை நோக்கிப் போனார்கள். ஆபிரகாமோ, ஆண்டவர் திருமுன் நின்றவராய், அண்மையில் வந்து : நீர் தீயவர்களோடு கூட நீதிமானையும் அழிக்கவிருக்கிறீரோ? நகருக்குள்ளே நீதிமான்கள் ஐம்பது பேர் இருந்தால், (பாவிகளோடு) கூட அவர்களும் அழிந்து போவார்களோ? அவ்விடத்திலே

நீதிமான்கள் ஐம்பது பேர் இருப்பார்களாயின், அவர்கள் பொருட்டு அந்த இடத்தைக் காப்பாற்றமாட்டீரோ? தீயவனோடு நீதிமானையும் அழிப்பதும் நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவதும் உமக்குத் தூரமாய் இருப்பதாக. அது உமக்கு உகந்ததன்று. மண்ணகம் முழுவதற்கும் நடுவராய் இருக்கிறீரே: இத்தகைய தீர்ப்பு நிச்சயம் செய்யமாட்டீரே: (என்றார்).

ஆண்டவர் அவரை நோக்கி: நாம் சொதோம் நகருக்குள்ளே ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அவர்களின் பொருட்டு அந்நகர் முழுவதையும் காப்பாற்றுவோம் என்றார்.

ஆபிரகாம் மறுமொழியாக: புழுதிக்கும் சாம்பலுக்கும் சமமாய் இருக்கிற அடியேன் ஆண்டவரோடு பேசத் தொடங்கினபடியால், இன்னும் என் ஆண்டவரிடம் ஒன்று கேட்பேன். ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்து பேர் குறைந்திருந்தாலும் இருக்கலாம். நாற்பத்தைந்து பேரைப் பார்த்து நகர் முழுவதையும் அழிப்பீரோ என்று கேட்க, கடவுள்: நாம் நாற்பத்தைந்து பேரை அங்கே கண்டால் அதனை அழிப்பதில்லை என்றார்.

மீண்டும் அவரை நோக்கி: அவ்விடத்தில் நாற்பது பேர் மட்டும் இருந்தால் என்ன செய்வீர் என, ஆண்டவர்: நாற்பது நீதிமான்களின் பொருட்டு அதனை அழிப்பதில்லை என்றார்.

அப்பொழுது ஆபிரகாம்: ஆண்டவரே, தயைபுரியும். நான் பேசுவதினால் கோபிக்கவேண்டாம். முப்பது நீதிமான்கள் காணப்பட்டால் என்று கேட்க, அவர்: முப்பது பேர் காணப்பட்டால் அதை அழியேன் என்று பதில் கூறினார்.

அவர்: நான் பேசத் தொடங்கிவிட்டேன்: எப்படியாவது என் ஆண்டவரிடம் இன்னும் ஒன்று கேட்கத் துணிவேன்: அவ்விடத்தில் இருபது நீதிமான்களே இருக்கக் கண்டால் என்ன என, அவர்: இருபது பேரானாலும் அதை நாம் அழிப்பதில்லை என்றார்.

அவர்: ஆண்டவரே, அருள்கூறும். அடியேன் இன்னும் ஒரு முறை மட்டும் கேட்கிறேன். ஆண்டவருக்குக் கோபம் வேண்டாம். அவ்விடத்தில் பத்துப் பேர் மட்டும் காணப்பட்டால் என, ஆண்டவர்: அந்தப் பத்துப் பேருக்காக அந்நகரை அழிக்க மாட்டோம் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 137 : 1-2a, 2bc-3, 6-7ab, 7c-8 (பல்லவி 3a)

பல்லவி : **ஆண்டவரே, நான் உம்மைக் கூவியழைத்த நாளில்**
**என் மன்றாட்டைக் கேட்டருளினீர்.**

1 ஆண்டவரே, என் முழு மனத்துடன் உம்மைப் போற்றிப் புகழ்வேன் :
ஏனெனில் நான் வாய்திறந்து உம்மிடம் சொன்னதைக் கேட்டருளினீர்.
வான்தூதர் முன்னிலையில் உமக்குப் புகழ் பாடுவேன்.
2 உமது புனித ஆலயத்தில் உம்மை ஆராதிப்பேன். பல்லவி

உமது இரக்கத்தையும் சொல்லுறுதியையும் நினைத்து, உமது திருப்பெயரைப் புகழ்வேன் ; ஏனெனில் அனைத்திற்கும் மேலாக உமது திருப்பெயரையும் உம் வாக்குறுதியையும் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.
3 நான் உம்மைக் கூவியழைத்த நாளில் என் மன்றாட்டைக் கேட்டருளினீர் :
என் ஆன்மாவுக்கு மேன்மேலும் வலிமை தந்தருளினீர். பல்லவி

6 ஆண்டவர் உண்மையாகவே உன்னதமானவர், எனினும் எளியவரைக் கண்நோக்குகின்றார் ; செருக்குற்றோரையோ வெகு தொலைவிலிருந்து காண்கிறார்.
7 நான் துன்பத்திடையே நடந்தாலும் என் உயிரைக் காப்பீர் : என் எதிரிகளின் சினத்துக்கு விரோதமாக உமது கரத்தை நீட்டினீர். பல்லவி

உமது வலக் கரம் என்னைக் காப்பாற்றும்.
8 ஆண்டவர் தாம் தொடங்கிய வேலையை எனக்கெனச் செய்து முடிப்பார் :
ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது. உம் படைப்புகளைக் கைவிடாதேயும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்களை மீண்டும் அவரோடு உயிர்பெறச் செய்தார், உங்கள் குற்றங்களையெல்லாம் மன்னித்துவிட்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 12-14

சகோதரர்களே :

ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு புதைக்கப்பட்டிருக்கிறீர்கள். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல் மீதுகொண்ட விசுவாசத்தால், அவரோடு நீங்களும் உயிர்த்தெழுந்தீர்கள்.

நீங்கள் பாவிகளாய் இருந்தாலும், உடலில் செய்யப்படும் விருத்த சேதனம்கூட உங்களுக்கு இல்லாததாலும் இறந்தவர்களாயிருந்தீர்கள். உங்களை இறைவன் மீண்டும் அவரோடு உயிர்பெறச் செய்தார். அவர் நம் குற்றங்களை யெல்லாம் மன்னித்துவிட்டார்; நமக்கு எதிரான விதிகள் பலகொண்ட கடன்பத்திரம் ஒன்று இருந்தது; அதை அழித்துவிட்டார், சிலுவையில் அதை அறைந்து ஒழித்து விட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா உரோ. 8 : 15

அல்லேலூயா. பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள்: அந்த ஆவியினால் நாம் "அப்பா, தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*11: 1-13*

ஒருநாள் யேசு ஓரிடத்தில் செபம் செய்துகொண்டிருந்தார். அது முடிந்தபின், சீடருள் ஒருவர் அவரைப் பார்த்து, "ஆண்டவரே அருளப்பர் தம் சீடருக்குச் செபிக்கக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்" என்றார். அதற்கு அவர், நீங்கள் செபிக்கும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள் :

'தந்தாய், உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக, உமது அரசு வருக; எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு நாள்தோறும் அளித்தருளும், எங்கள் பாவங்களை மன்னித்தருளும், ஏனெனில், எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்பவர் அனைவரையும் நாங்களும் மன்னிக்கிறோம். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்' என்றார்.

மேலும் "உங்களுள் ஒருவன் தன் நண்பனிடம் நள்ளிரவில் சென்று, 'நண்பா, எனக்கு மூன்று அப்பம் கடன் கொடு. ஏனெனில், பயணம் செய்யும் என் நண்பன் ஒருவன் என்னிடம் வந்திருக்கிறான். அவனுக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை' என்று சொல்லுகிறான் என வைத்துக் கொள்வோம். அவனும் உள்ளிருந்து மறுமொழியாக, 'என்னைத் தொந்தரை செய்யாதே. கதவு பூட்டியாயிற்று. என் குழந்தைகளும் என்னோடு படுக்கையில் உள்ளனர். எழுந்து உனக்குக் கொடுக்க முடியாது' என்று சொல்லுகிறான். நண்பனே கதவைத் தட்டிக்கொண்டே இருந்தால்,

[illegible]

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## திங்கள்

முதல் ஆண்டு

முதல் வாசகம்

[illegible]

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 32: 15-24, 30-34

அந்நாட்களில்:

மோசே மலையிலிருந்து இறங்கி வந்தார். [illegible]

அவர் பாளையத்தை அணுகி வரவே, கன்றுக்குட்டியையும் ஆடல் பாடல்களையும் கண்டார். மிகவும் கோபமடைந்து தம் கையிலிருந்த இரு பலகைகளையும் மலையின் அடியில் எறிந்து துண்டு துண்டாய் உடைத்தார். அவர்கள் செய்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்துத் தவிடு பொடியாக்கி, அப்பொடியைத் தண்ணீரோடு கலந்து, இஸ்ராயேல் மக்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்.

பின் அவர் ஆரோனை நோக்கி: நீ இந்த மக்கள்மேல் இந்தப் பெரும் பாவத்தை வருவிப்பதற்கு அவர்கள் உனக்கு என்ன செய்தார்கள் என்றார். அதற்கு ஆரோன்: என் தலைவருக்குக் கோபம் வேண்டாம். இவர்கள் பொல்லாத மக்கள், தீமையை நாடும் மக்களென்று நீர் அறிந்திருக்கிறீர். அவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்னின்று நடத்தும் பொருட்டுத் தெய்வங்களை எங்களுக்குச் செய்து கொடும். எகிப்து நாட்டிலிருந்து நம்மை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோயீசனுக்கு என்ன நேர்ந்ததோ, அறியோம் என்றார்கள். அப்பொழுது நான்: உங்களில் யார் யாரிடம் பொன் இருக்கிறது என்று கேட்டேன். அவர்கள் பொன்னைக் கொணர்ந்து என்னிடம் ஒப்புவித்தார்கள். நான் அதை நெருப்பில் போட்டேன். அதிலிருந்து அந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது என்று பதில் சொன்னார்.

மறுநாள் மோயீசன் மக்களை நோக்கி: நீங்கள் பெரிய பாதகத்தைச் செய்திருக்கிறீர்கள். நானே உங்களுக்காகப் பாவப் பரிகாரம், செய்யக் கூடுமோவென்று இயன்ற வரையில் மன்றாடும் பொருட்டு ஆண்டவருடைய சந்நிதிக்கு ஏறிப் போகிறேன் என்றார். அப்படியே மோயீசன் ஆண்டவரிடம் திரும்பிப் போய்: இந்த மக்கள் மிகப் பெரிய பாவத்தைச் செய்திருக்கிறார்கள். பொன்னால் தங்களுக்குத் தெய்வங்களைச் செய்து கொண்டார்கள். ஒன்றில், நீர் இந்தப் பாவத்தை மன்னிக்க வேண்டும். அல்லது நீர் எழுதிய உமது புத்தகத்திலிருந்து என் பெயரையும் அழித்துவிடும் என்று மன்றாடினார்.

ஆண்டவர் அவருக்கு மறுமொழியாக: நமக்கு விரோதமாய்த் துரோகம் செய்பவன் பெயரை நம்முடைய புத்தகத்திலிருந்து அழித்து விடுவோம். நீயோ நாம் உனக்குச் சொன்ன இடத்திற்கு இந்த மக்களை அழைத்துக் கொண்டு போ. நம் தூதர் உனக்கு முன் செல்வார். ஆயினும் நாம், பழிவாங்கும் நாளில் அவர்களுடைய பாவத்திற்காக அவர்களைத் தண்டிப்போம் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 105: 19-20, 21-22, 23 (பல்லவி 1a)

பல்லவி: **ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில் அவர் நல்லவர்.**

**அல்லேலூயா.**

19 ஓரேப் மலையில் கன்றுக்குட்டியை உருவாக்கினர்:
பொன்னால் வார்த்த சிலையை வணங்கலாயினர்.
20 புல் மேயும் காளையின் சிலைக்குக் கடவுளின் மாட்சியை ஈடாக்கினர். பல்லவி

21 தங்களை மீட்டுக்கொண்ட கடவுளை அவர்கள் மறந்தனர்:
எகிப்தில் புதுமை செய்தவரை மறந்தனர்.
22 காமின் நாட்டில் நிகழ்ந்த அற்புதங்கள் ஆற்றியவரை,
செங்கடலருகே வியப்புக்குரியன செய்தவரை மறந்தனர். பல்லவி

23 இறைவன் அவர்களை அடியோடு தொலைத்துவிட எண்ணினார்: ஆனால்
அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோயீசன் குறுக்கிட்டார். அவரிடம்
அவர்களுக்காகப் பரிந்து பேசினார்: அவர் கொண்ட சினத்தை
அமர்த்தலானார்; அவர்களை அழித்துவிடாதபடி செய்தார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**இந்த மக்கள் ஒன்றும் உதவாத இக்கச்சையைப் போலாவார்கள்.**

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *13: 1-11*

ஆண்டவர் எனக்குச் சொன்னார்: "நீ போய் உனக்கு ஒரு சணல் கச்சையை வாங்கி உன் இடையில் கட்டிக்கொள்; அதனைத் தண்ணீரில் நனைக்காதே." ஆண்டவரின் வார்த்தைக்கேற்ப ஒரு கச்சை வாங்கி என் இடையில் கட்டிக் கொண்டேன்.

ஆண்டவரின் வாக்கு எனக்கு இரண்டாம் முறையாக அருளப்பட்டது: "நீ வாங்கி, இடையில் கட்டியிருக்கும் கச்சையை அவிழ்த்து எடுத்துக் கொண்டு, எழுந்து எப்பிராத்து நதிக்குப்போய் அங்கே கல் இடுக்கில் மறைத்து வை" என்றார். ஆண்டவர் எனக்குக் கட்டளையிட்டவாறே நான் போய் அதனை எப்பிராத்து நதியின் ஓரத்திலே மறைத்து வைத்தேன்.

நாட்கள் பல கடந்த பின்னர் ஆண்டவர் ஒரு நாள் என்னிடம், "நீ எழுந்து எப்பிராத்துக்குப் போய் அங்கே நாம் மறைந்து வைக்கும்படி உனக்குச் சொன்ன அந்தக் கச்சையை அங்கிருந்து எடுத்துக் கொள்" என்றார். நான் அவ்வாறே எப்பிராத்துக்குப் போய், அந்தக் கச்சையைப் புதைத்த இடத்தைத் தோண்டி அதனை எடுத்தேன்; இதோ அந்தக் கச்சை ஒன்றுக்கும் பயன்படாதபடி நைந்து போயிருந்தது.

பின்னர், ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது: "ஆண்டவர் கூறுகிறார்: இவ்வாறு யூதாவின் செருக்கையும் யெருசலேமின் மிஞ்சின இறுமாப்பையும் நையச் செய்வோம். நம் சொற்களைக் கேளாமல் தங்கள் இதயத்தின் பிடிவாதப் போக்கில் நடந்து, அந்நிய தெய்வங்களைப் பின்சென்று, சேவித்து, வழிபட்டு வருகிற இந்தக் கொடிய மக்கள் ஒன்றுக்கும் உதவாத இக்கச்சையைப்போல் ஆவார்கள். கச்சை மனிதனின் இடையில் ஒட்டிச் சேர்ந்திருப்பதுபோல், இஸ்ராயேல் வீடு முழுவதையும், யூதாவின் வீடு முழுவதையும் நம்மோடு ஒன்றித்திருக்கச் செய்தோம்; அவர்கள் நமக்கு மக்களாகவும் பெயராகவும் புகழாகவும் மகிமையாகவும் இருக்கும்படி செய்திருந்தோம்; ஆயினும் அவர்கள் நமக்குச் செவிசாய்க்கவில்லை, என்கிறார் ஆண்டவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

உப. 32 : 18-19, 20-21 (பல்லவி 18a)

பல்லவி உன்னைப் பெற்ற கடவுளைக் கைவிட்டாய்.

18 உன்னைப் பெற்ற கடவுளை விட்டு, உன்னை உருவாக்கிய ஆண்டவரை
மறந்து விட்டாயே !
19 ஆண்டவர் அதனைக் கண்டார். தம்முடைய புதல்வரும் புதல்வியரும்
தமது கோபத்தை மூட்டியதினால் அவர் குரோதமுள்ளவரானார். பல்லவி

20 அவர் கூறினார்: ஆ! இவர்கள் கெட்டார்கள்; வஞ்சனையுள்ள புதல்வ
ரானார்கள்; ஆதலால், நம் முகத்தை அவர்களுக்கு மறைத்து, அவர்
களுடைய முடிவு எப்படிப்பட்டதாய் இருக்குமோவென்று பார்ப்போம்.
21 அவர்கள் தெய்வமல்லாதவைகளாலும் நமக்கு எரிச்சல் வருவித்து, தங்கள்
வீணான தீச்செயல்களாலும் நமக்கு முடிவு உண்டாகச் செய்தார்களே;
இதோ நம் மக்களென்று மதிக்கப்படாதவர்கள் மூலமாய் அவர்களுக்கு
எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட இனத்தவர்களாலேயே அவர்களுக்குக்
கோபம் உண்டாகச் செய்வோம். பல்லவி

அல்லேலூயா யாக். 1 : 18

அல்லேலூயா. தம் படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு உண்மையை அறிவிக்கும் வாக்கினால் பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடுகுமணி வளர்ந்து, வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில் தங்கக்கூடிய மரமாகிறது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*13 : 31-35*

அக்காலத்தில் :

யேசு இன்னுமோர் உவமையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் : "விண்ணரசு, கடுகு மணிக்கு ஒப்பாகும். அதை ஒருவன் எடுத்துத் தன் வயலில் விதைக்கிறான். அது விதைகளிலெல்லாம் மிகச் சிறியதாயினும், வளர்ந்ததும் செடிகளிலெல்லாம் மிகப் பெரியதாகி வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில் தங்கக்கூடிய மரமாகும்."

இன்னுமோர் உவமையும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னார் : "விண்ணரசு புளிப்பு மாவுக்கு ஒப்பாகும். அதைப் பெண் ஒருத்தி எடுத்து மூன்றுபடி மாவில் பொதிந்து வைக்கிறாள். மாவு முழுவதும் புளிப்பேறுகிறது."

இவையெல்லாம் யேசு மக்கட் கூட்டத்திற்கு உவமைகளால் சொன்னார். உவமைகளால் அன்றி அவர் அவர்களிடம் ஒன்றும் பேசியதில்லை. 'உவமைகளில் பேசுவேன். உலகம் தோன்றியது முதல் மறைந்துள்ளதை வெளியாக்குவேன்' என்று இறைவாக்கினர் கூறியது இவ்வாறு நிறைவேற வேண்டியிருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் மோயீசனோடு நேரிலே உரையாடிக்கொண்டிருப்பார்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *33: 7-11; 34: 5b-9, 28*

*அந்நாட்களில் :*

மோயீசன் ஆசாரக் கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளையத்துக்கு வெளியே தூரத்தில் நிறுவினார்; அதன் பெயரை 'உடன்படிக்கைக் கூடாரம்' என்று அழைத்தார். அது முதல் யாதொரு வழக்கு உண்டானால், மக்களெல்லாம் பாளையத்துக்கு வெளியே உடன்படிக்கைக் கூடாரத்துக்குப் போவார்கள்.

மோயீசன் வெளிப்பட்டுக் கூடாரத்துக்குப் போகும்போது, மக்களெல்லோரும் எழுந்திருந்து தத்தம் கூடார வாயிலிலே நின்று, மோயீசன் உடன்படிக்கைக் கூடாரத்தில் நுழையுமட்டும் அவர் முதுகைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர் உடன்படிக்கைக் கூடாரத்தில் நுழைந்த பின்னரோ மேகத்தூண் வாயிலில் இறங்கி நிற்கும். அப்பொழுது ஆண்டவர் மோயீசனோடு பேசுவார். மேகத்தூண் கூடார வாயிலிலே நின்று கொண்டிருப்பதை யாவரும் காண்பார்கள். மக்களும் எழுந்து தத்தம் கூடார வாயிலிலே பணிந்து வணக்கம் புரிவர். ஒருவன் தன் நண்பனோடு பேசுவதுபோல ஆண்டவர் மோயீசனோடு நேரிலே உரையாடிக் கொண்டிருப்பார். பிறகு அவர் பாளையத்துக்குத் திரும்பிப் போகும்போது, நூனின் புதல்வனும் இளைஞனுமான யோசுவா என்னும் அவனுடைய சீடன் திருக்கூடாரத்தை விட்டு விலகாதிருந்தான். மோயீசன் ஆண்டவருடைய (திருப்) பெயரைக் கூவியழைத்து, அவர் தம் முன் கடந்து போகையில் அவரை நோக்கி : எல்லா அதிகாரமும் கொண்டுள்ள ஆண்டவராகிய கடவுளே, அருள்நோக்கும் தயவும் பொறுமையும் அளவில்லாத இரக்கமும் பொருந்திய கடவுளே, ஆயிரம் படைப்புக்களுக்கும் இரக்கம் புரிகிறவரே, அக்கிரமத்தையும் பாதகங்களையும் பாவங்களையும் போக்குபவரே, உமது முன்னிலையில் தன் சுபாவ இயல்பினால் மாசில்லாதவன் ஒருவனும் இல்லை. தந்தையர் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பேரப்பிள்ளைகளிடத்திலும், மூன்றும் நான்காம் தலைமுறை வரை தண்டிக்கிறவரே" என்று கூறி, மோயீசன் விரைந்து, பணிந்து, குப்புறவிழுந்து தொழுது: "ஆண்டவரே, உமது முன்னிலையில் அடியேனுக்கு அருள் கிடைத்ததாயின், (இம் மக்கள் வணங்காக் கழுத்துடையவர்களாகையால்) நீர் எங்களுடன்

எழுந்தருளவும், எங்கள் அக்கிரமங்களையும் பாவங்களையும் போக்கவும், அடியோர்களை உரிமையாக்கிக் கொள்ளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்'' என்றார்.

ஆகையால், மோயீசன் அவ்விடத்தில் நாற்பது பகலும் நாற்பது இரவுமாய் ஆண்டவரோடு தங்கி, உண்ணாமலும் குடியாமலும் இருந்தார். ஆண்டவரும் உடன்படிக்கையின் பத்து வாக்கியங்களையும் கற்பலகைகளில் எழுதியருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 102 : 6-7, 8-9, 10-11, 12-13* (பல்லவி 8a)

பல்லவி : **அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.**

6 நீதிமிக்க செயல்களைப் புரிகிறார் ஆண்டவர்: துன்புற்றோர் யாவருக்கும் நீதி வழங்குகிறார்.
7 மோயீசனுக்குத் தம் வழிகளை வெளிப்படுத்தினார் :
இஸ்ராயேல் மக்களுக்குத் தம் செயல்களை விளங்கச் செய்தார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங்கொள்ளத் தாமதிப்பவர்: சாந்தமுடையவர்.
9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர் : எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
பல்லவி

10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை.
11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ,
அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார். பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்புகாட்டுவதுபோல, ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவரே, எங்களோடு நீர் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, அதனை முறித்துவிடாதேயும்.

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம். 14: -17-22

என் கண்கள் இடைவிடாது இரவும் பகலும் கண்ணீர் சொரியட்டும்; ஏனெனில் என் இனமாகிய கன்னிப்பெண் நொறுக்குண்டு நைந்து படுகாயமுற்றாள்; நான் வெளியே போனால், இதோ, அங்கே வாளால் மடிந்தவர்கள்! நான் பட்டணத்துக்குள் நுழைந்தால், இதோ அங்கே பட்டினியால் மாய்ந்தவர்கள்! தீர்க்கதரிசியும் அர்ச்சகரும் நாடெல்லாம் அலைந்து திரிகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு அறிவு இல்லை.

ஆண்டவரே, யூதாவை முற்றிலும் வெறுத்துவிட்டீரா? சீயோன் உமது மனத்துக்கு அருவருப்பாகிவிட்டதோ? நாங்கள் நலமாக முடியாத வகையில் ஏன் எங்களைக் காயப்படுத்தினீர்? நாங்கள் சமாதானத்தைத் தேடினோம். ஆனால், ஒரு நன்மையும் விளையவில்லை, நலமாக்கப்படும் காலத்தை எதிர்பார்த்தோம்; இதோ திகில்தான் ஆட்கொண்டது.

ஆண்டவரே, எங்கள் கெடுமதியையும், எங்கள் தந்தையரின் அக்கிரமத்தையும் ஒப்புக்கொள்கிறோம்; ஏனெனில் உமக்கெதிராய் நாங்கள் பாவம் செய்தோம். உமது திருப்பெயரை முன்னிட்டு, எங்களை வெறுத்துத் தள்ளாதிரும்; உமது மகிமைமிகு அரியணையை அவமதிக்காதேயும்; எங்களோடு நீர் செய்த உடன்படிக்கையை நினைவுகூரும்; அதனை முறித்துவிடாதேயும்.

புறவினத்தாரின் பொய்த் தெய்வங்களுள் மழை பெய்விக்கக் கூடியவர் உண்டோ? அல்லது வானந்தான் தானாகவே மழை பெய்யுமா? எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, நீரல்லவோ அப்படிப்பட்டவர்? உம்மீதுதான் எங்கள் நம்பிக்கையை வைக்கிறோம்; ஏனெனில் இவற்றையெல்லாம் செய்பவர் நீரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 78 : 8, 9, 11 & 13 (பல்லவி : 9bc)

பல்லவி : ஆண்டவரே, உம் திருப்பெயரின் மகிமைக்காக
எங்களுக்கு விடுதலை அளித்தருளும்.

8 முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள்மேல் சுமத்தாதேயும், உமது
இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக. ஏனெனில், நாங்கள்
துயரத்துக்குள்ளானோம். பல்லவி

9 எங்கள் மீட்பரான இறைவா, உம் திருப்பெயரின் மகிமைக்காக எங்க
ளுக்குத் துணை செய்யும், உம் பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை
மன்னித்து எங்களுக்கு விடுதலையளித்தருளும். பல்லவி

11 சிறைப்பட்டவர்களின் பெருமூச்சு உம் காதில் விழுவதாக, சாவுக்குக்
குறிக்கப்பட்டவர்களை உமது கரத்தின் வல்லமைக்கேற்ப விடுவித்தருளும்.
13 நாங்களோ உம் மக்கள், உமது மேய்ச்சலின் ஆடுகள் என்றென்றும்
உம்மைப் போற்றிப் புகழ்வோம். தலைமுறை தலைமுறையாக உமது
புகழை எடுத்துரைப்போம். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையே விதையாம், அதை விதைப்பவர் கிறிஸ்துவே; அவரைக் கண்டடைபவர் எல்லாம் என்றென்றும் நிலைத்திருப்பர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

எவ்வாறு களைகள் ஒன்று சேர்த்துத் தீயில் எரிக்கப்படுமோ, அவ்வாறே உலக முடிவிலே நடக்கும்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13 : 36-43

அக்காலத்தில் :

யேசு கூட்டத்தை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தார். அப்பொழுது அவருடைய சீடர் அவரை அணுகி, "வயலில் விதைத்த களைகளின் உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்" என்றனர். அதற்கு அவர்:

"நல்ல விதை விதைக்கிறவன் மனுமகன். வயல், இவ்வுலகம்; நல்ல விதை, அரசின் மக்கள்; களைகளோ தீயோனுடைய மக்கள். அவற்றை விதைத்த பகைவன், அலகை; அறுவடை, உலகின் முடிவு; அறுப்போர், வானதூதர்.

எவ்வாறு களைகள் ஒன்றுசேர்த்துத் தீயில் எரிக்கப்படுமோ, அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். மனுமகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய அரசில் இடறலாய் உள்ள யாவற்றையும், நெறிகெட்டவர்களையும் ஒன்றுசேர்த்து, தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தம் தந்தையின் அரசில் கதிரோனைப்போல ஒளிர்வர்.

"கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மோயீசனின் முகத்தைக் கண்டு, அவர் அருகில்வர அஞ்சினார்கள்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *34: 29-35*

மோயீசன் சீனாய் மலையிலிருந்து இறங்கும்போது இரண்டு சாட்சியப் பலகைகளையும் தம் கையில் எடுத்துக்கொண்டு வந்தார். ஆனால், தம்மோடு ஆண்டவர் பேசியதினாலே தம் முகம் ஒளிவீசிக் கொண்டிருப்பதை அறியாதிருந்தார். அப்பொழுது ஆரோனும் இஸ்ராயேல் மக்களும், மோயீசனின் முகம் இரண்டு கொம்புகளைப்போல் சுடர்விட்டு எரிவதைக் கண்டு, அவர் அருகில் வர அஞ்சினார்கள். அவர் அவர்களை வரச் சொன்னார். அப்பொழுது ஆரோனும் மக்கள் தலைவர்களும் மோயீசனிடம் திரும்பி வந்தபோது, அவர் அவர்களோடு பேசினார். பின் இஸ்ராயேல் மக்கள் எல்லாரும் அவரிடம் வந்தார்கள். அவர் சீனாய் மலையில் ஆண்டவர் தம்மோடு பேசிய காரியங்களையெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்தார்.

அவர்களுடன் பேசி முடிந்தபின் மோயீசன் தம் முகத்தின்மேல் முக்காடு போட்டார். மோயீசன் ஆண்டவர் திருமுன் அவரோடு பேசும்படி போகையில், உள்ளே புகுந்ததுமுதல் வெளியே புறப்பட்டு வரும்வரை முக்காட்டை நீக்கிவிடுவார். பின் அவர் வெளியே வந்து, தனக்குத் தெரிவிக்கப்பட்டவை யெல்லாம் இஸ்ராயேல் மக்களுக்குச்

சொல்லுவார். மோயீசன் வெளியே வரும்போது அவர் முகம் சுடர்விட்டெரிவதை அவர்கள் காண்பார்கள். ஆனால், அவர் எதையேனும் அவர்களிடம் சொல்ல வேண்டியிருந்தால், திரும்பவும் முக்காட்டைத் தன் முகத்தின்மேல் போட்டுக்கொள்வார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 98 : 5, 6, 7, 9 (பல்லவி : 9c காண்.)

பல்லவி : **எங்கள் இறைவனாகிய ஆண்டவரே, நீர் பரிசுத்தர்.**

5 நம் ஆண்டவராகிய இறைவனைப் போற்றிப் புகழுங்கள். அவருடைய கால்மணையில் விழுந்து பணியுங்கள். அவர் பரிசுத்தர். பல்லவி

6 மோயீசனும் ஆரோனும் அவர் அமைத்த குருகுலத்தைச் சார்ந்தவர்; அவருடைய பெயரைக் கூவியழைப்பவர்களுள் சாமுவேலும் உள்ளார். ஆண்டவரை அவர்கள் கூவியழைத்தார்கள்: அவர் அவர்களுடைய மன்றாட்டுக்குச் செவிசாய்த்தார். பல்லவி

7 மேகத்தூணிலிருந்து அவர்களிடம் பேசினார். அவர் அவர்களுக்குத் தந்த கற்பனைகளையும் கட்டளையையும், அவர்கள் செவியுற்றனர். பல்லவி

9 நம் ஆண்டவராகிய இறைவனைப் புகழ்ந்து போற்றுங்கள், அவருடைய திருமலையில் வீழ்ந்து பணியுங்கள். ஏனெனில், நம் இறைவனாகிய ஆண்டவர் பரிசுத்தர். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**என் என் துன்பம் நீடித்திருக்கின்றது?**
**திரும்பி வந்தால், நீ நம் முன்னிலையில் நிற்பாய்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 15: 10, 16-21

என் தாயே, எனக்கு ஐயோ கேடு! நாடெங்கும் வழக்குக்கும் விவாதத்துக்கும் காரணமாய் இருக்கும்படி என்னை நீ பெற்றாயே! நான் வட்டிக்குப் பணம் கொடுக்கவுமில்லை; அல்லது வட்டிக்குக் கடன் வாங்கியதுமில்லை; இருப்பினும் என்னை எல்லாரும் சபிக்கிறார்கள்.

உம் வார்த்தைகளைக் கண்டடைந்தேன்; அவற்றை உண்டேன்; உம் வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியாயின; என் உள்ளத்திற்கு இன்பந் தந்தன. சேனைகளின் கடவுளாகிய ஆண்டவரே, உமது திருப் பெயரன்றோ எனக்கு வழங்குகிறது?

களிப்பவர் கூட்டத்தில் நான் அமர்ந்து மகிழ்ந்ததில்லை, நான் தனியாளாய் அமர்ந்திருந்தேன்; ஏனெனில் உம் கரம் என்மேல் இருந்தது, நீர் என்னைச் சினத்தால் நிரப்பியிருந்தீர். ஏன் என் துன்பம் நீடித்திருக்கின்றது? என் காயம் ஆறாத கொடிய புண்ணாயிருப்பதேன்? நீர் எனக்கு வஞ்சகக் கானல் நீராயும், பயனற்று வற்றிப்போகும் நீரோடையாயும் இருப்பீரோ?

ஆதலால் ஆண்டவர் கூறுகிறார்: "நீ திரும்பி வந்தால், நாம் உன்னைப் பழைய நிலையில் வைப்போம், நீ நம் முன்னிலையில் நிற்பாய்; உயர்வானதை உரைத்துப் பயனற்றதை விலக்கினால் நீ நமது வாயாக இருப்பாய்; அவர்கள் உன்னிடம் திரும்பி வருவார்கள்; நீ அவர்களிடம் திரும்ப மாட்டாய். இந்த மக்களின் முன்னிலையில் நாம் உன்னை அசைக்க முடியாத வெண்கலச் சுவர்போலாக்குவோம்; அவர்கள் உனக்கெதிராய்ப் போரிடுவார்கள்; ஆனால் உன்னை மேற்கொள்ள அவர்களால் இயலாது; ஏனெனில் உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம், என்கிறார் ஆண்டவர். கொடியவர்களின் கையினின்று நாம் உன்னை விடுவிப்போம்; முரடர்கள் பிடியினின்று உன்னை மீட்போம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 58 : 1-2, 3, 9-10, 16-17 (பல்லவி : 16d)*

பல்லவி : இறைவா, நெருக்கிடையான வேளையில்
எனக்கு அடைக்கலம் நீரே.

1 என் இறைவா, என் எதிரிகளினின்று என்னை விடுவித்தருளும்: எனக்
கெதிராய் எழும்புவோரிடமிருந்து எனக்குப் பாதுகாப்பளித்தருளும்.
2 தீமை செய்வோரிடமிருந்து எனக்கு விடுதலையளித்தருளும்: இரத்த
வெறியர்களிடமிருந்து என்னைக் காத்தருளும். பல்லவி

3 இதோ! அவர்கள் என் உயிருக்கு உலை வைக்கிறார்கள்; வலியோர் எனக்
கெதிராய்ச் சதி செய்கிறார்கள். ஆண்டவரே, என்னிடம் தீவினையோ,
பாவமோ இல்லை. பல்லவி

9 எனக்கு வலிமையானவரே, உம்மையே நோக்கியுள்ளேன் : ஏனெனில்
இறைவா, நீர் என் பாதுகாப்பு அரண்.
10 என் இறைவனே, என் மீது இரங்குபவர் நீரே ; என் எதிரிகள் மீது
வெற்றிகொண்டு மகிழ எனக்கு அருள்வாராக.

பல்லவி

16 நானே உமது வல்லமையைப் புகழ்ந்து பாடுவேன் : காலைதோறும் உமது
இரக்கத்தை நினைத்து அக்களிப்பேன் ; ஏனெனில், நீரே எனக்கு அரணா
யிருக்கிறீர். நெருக்கிடையான வேளையில் எனக்கு அடைக்கலமா
யிருக்கிறீர்.

பல்லவி

17 எனக்கு வலிமையானவரே, உமக்குப் புகழ் பாடுவேன் : ஏனெனில்
இறைவனே, நீரே எனக்குப் பாதுகாப்பு அரண். என் இறைவனே, என்மீது
இரங்குபவர் நீரே !

பல்லவி

அல்லேலூயா அரு. 15 : 15 b

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நான் உங்களை நண்பர்கள் என்றேன் : ஏனெனில், தந்தையிடமிருந்து கேட்டதையெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தனக்குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்கிக்கொள்கிறான்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13 : 44-46

அக்காலத்தில் : யேசு மக்களை நோக்கிக் கூறியதாவது :

" விண்ணரசு, நிலத்தில் மறைந்துள்ள புதையலுக்கு ஒப்பாகும். அதைக் கண்டுபிடித்தவன் அதை மறைத்துவிட்டு, அதைக் கண்ட மகிழ்ச்சியில் போய்த் தனக்குள்ளதெல்லாம் விற்று அந்நிலத்தை வாங்கிக்கொள்கிறான்.

பின்னும் விண்ணரசு நல்ல முத்துக்களைத் தேடும் வணிகனுக்கு ஒப்பாகும். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டதும், போய்த் தனக்குள்ளதெல்லாம் விற்று அதை வாங்கிக் கொள்கிறான் ".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*ஒரு மேகம் சாட்சியக் கூடாரத்தை மூடிற்று ;*
*ஆண்டவருடைய மாட்சியும் அதனை நிரப்பிற்று.*

யாத்திராகமத்திலிருந்து வாசகம் . 40: 14-19, 32-36

அந்நாட்களில் :

ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டிருந்த எல்லாவற்றையும் மோயீசன் செய்தார். ஆகையால், இரண்டாம் ஆண்டின் முதல் மாதம் முதல் நாளன்று ஆசாரக் கூடாரம் நிறுவனம் செய்தாயிற்று. மோயீசனே அதை நிறுவினார். பலகைகளையும் பாதங்களையும் தண்டுகளையும் வைத்துத் தூண்களையும் நிறுத்தி, ஆண்டவர் கட்டளையிட்டிருந்தபடி கூடாரத்தின்மீது திரையையும் விரித்து, அதன் மேலே மூடியையும் பரப்பினார். சாட்சியப் (பலகைகளைப்) பெட்டகத்தினுள் வைத்து, அதன் கீழே தண்டுகளையும், அதன் மேலே இரக்கத்தின் அரியணையையும் அமைத்தார். பெட்டகத்தைக் கூடாரத்தினுள்ளே கொண்டு வந்த பின், ஆண்டவருடைய கட்டளையை நிறைவேற்றும்படி, அதன்முன் திரையைக் கட்டித் தொங்கவிட்டார்.

இவையெல்லாம் முடிந்தபோது ஒரு மேகம் சாட்சியக் கூடாரத்தை மூடினதுமன்றி, ஆண்டவருடைய மாட்சியும் அதனை நிரப்பிற்று. மேகம் எல்லாவற்றையும் மூடிக்கொண்டு ஆண்டவருடைய மாட்சி மின்னி எரிந்ததினாலே, மோயீசன், உடன்படிக்கைக் கூடாரத்திற்குள்ளே நுழைய இயலாதிருந்தார். ஏனென்றால், அம்மேகம் எல்லாவற்றையும் மூடிக்கொண்டிருந்தது. திருவுறைவிடத்திலிருந்து மேகம் எழும்பும்போது இஸ்ராயேல் மக்கள் புறப்பட்டுப் போவார்கள். மேகம் எழும்பாமல் மேலே தங்கியிருக்கும்போதோ, அவர்கள் பயணம் செய்யாமல் அவ்விடத்திலேயே இருப்பார்கள். ஏனென்றால், இஸ்ராயேல் மக்கள் எல்லாரும் தங்கள் இல்லிடங்களிலிருந்து பார்த்துக்கொண்டிருக்க, பகலிலே ஆண்டவருடைய மேகமும் இரவிலே நெருப்புச் சுடரும் உடன்படிக்கைக் கூடாரத்தின்மேல் தங்கியிருந்தன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 83 : 2, 3, 4-5a & 7a, 10 (பல்லவி : 1)

பல்லவி : வான் படைகளின் ஆண்டவரே,
உமதில்லம் எத்துணை அருமையாயுள்ளது!

2 என் ஆன்மா ஆண்டவருடைய ஆலய முற்றங்களை விரும்பித் தேடிச் சோர்ந்து போகின்றது. என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனை நினைந்து களிகூர்கின்றன.
பல்லவி

3 அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்தது: சேனைகளின் ஆண்டவரே, என் அரசே, என் இறைவா, உம் பீடங்களுள்ள இடத்திலே கிடைத்தது.
பல்லவி

4 ஆண்டவரே, உம் இல்லத்தில் வாழ்வோர் பேறு பெற்றோர். எந்நாளும் உம்மைப் புகழ்வார்கள்.
5 உம்மிடம் உதவி பெறுபவன் பேறு பெற்றவன்.
7 வலிமைமேல் வலிமைகொண்டு யாத்திரை செய்வர்.
பல்லவி

10 உமது ஆலய முற்றங்களில் ஒருநாள் இருப்பது வேறிடத்தில் ஆயிரம்நாள் வாழ்வதைவிட உண்மையிலேயே மேலானது: பாவிகளின் கூடாரங்களில் தங்குவதைவிட என் இறைவனது இல்லத்தின் வாயிலில் நிற்பதே மேலானது.
பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**குயவன் கையில் மண்போல் நம் கையில் நீங்கள் இருக்கிறீர்கள்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 18 : 1-6

ஆண்டவர் எரெமியாசுக்கு அருளிய வாக்கு: "நீ எழுந்து குயவன் வீட்டுக்குப் போ ; அங்கு நம்முடைய வாக்கியங்களைக் கேட்பாய்."

அவ்வாறே நான் குயவன் வீட்டுக்குப் போனேன்; அவன் தன் சக்கரத்தினால் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் மண்ணால் வனையும் பாண்டம் சரியாக அமையாதபோதெல்லாம், அவன் திரும்பவும் செய்ய முற்பட்டுத் தனக்குச் சரியெனத் தோன்றியவாறு அதனை வேறொரு கலமாகச் செய்தான்.

அப்பொழுது ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது: "இஸ்ராயேல் வீடே, இந்தக் குயவன் செய்ததைப்போல நாம் உனக்குச் செய்ய முடியாதா, என்கிறார் ஆண்டவர். இஸ்ராயேல் வீடே, இதோ, குயவன் கையில் இம்மண் எப்படியோ, அப்படியே நம் கையில் நீங்கள் இருக்கிறீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 145 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 5a)*

பல்லவி : யாக்கோபின் இறைவன் யாருக்குத் துணை புரிகிறாரோ,
அவன் பேறு பெற்றவன்.

அல்லது : அல்லேலூயா.

1 நெஞ்சே நீ ஆண்டவரைப் புகழ்வாய், என் வாழ்நாளில் ஆண்டவரைப் புகழ்வேன்.
2 என் உயிருள்ளவரையில் நான் கடவுளுக்குப் புகழ் பாடுவேன். பல்லவி

3 தலைவர்களிடம் நம்பிக்கை வையாதீர்கள், மனிதனை நம்ப வேண்டாம். அவனால் மீட்பு இல்லை.
4 அவனுடைய ஆவி பிரிய, தான் தோன்றிய மண்ணுக்கே திரும்புகிறான்: அப்போது அவன் திட்டங்கள் எல்லாம் பாழாகும். பல்லவி

5 யாக்கோபின் இறைவன் யாருக்குத் துணைபுரிகிறாரோ அவன் பேறு பெற்றவன். தம் கடவுளாகிய ஆண்டவர்மீது நம்பிக்கை வைப்பான்.
6 அவரே வானத்தையும் வையத்தையும் கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கினார். பல்லவி

அல்லேலூயா — அப். பணி 16 : 14b காண்

அல்லேலூயா. உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி, ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நல்லவற்றைப் பொறுக்கிக் கூடையில் வைத்துக்கொண்டு, தீயவற்றை வெளியே எறிந்துவிடுகின்றனர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *13: 47-53*

அக்காலத்தில் : யேசு மக்களை நோக்கிக் கூறியதாவது :

"விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லாவகை மீன்களையும் வாரிவரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை வெளியில் இழுத்து, கரையில் அமர்ந்து, நல்லவற்றைப் பொறுக்கிக் கூடைகளில் வைத்துக்கொண்டு தீயவற்றை வெளியே எறிந்துவிடுகின்றனர். இவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். வானதூதர் சென்று தீயோரை நீதிமான்களிடையே இருந்து பிரித்து, தீச்சூளையில் தள்ளுவர். அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும்" என்றார்.

"இவையெல்லாம் கண்டுணர்ந்தீர்களா?" என்று யேசு கேட்க, அவர்கள், "ஆம்" என்றனர். அவர், "ஆகையால், விண்ணரசில் சீடனான மறைநூல் அறிஞன் எவனும், தன் கருவூலத்தினின்று புதியனவும் பழையனவும் எடுக்கிற வீட்டுத் தலைவனுக்கு ஒப்பாவான்" என்றார்.

இந்த உவமைகளை முடித்ததும் யேசு அவ்விடம் விட்டுச் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவரின் திருநாட்களை மிகச் சிறந்தன, பரிசுத்தமானவை என்று கொள்வீர்களாக.**

லேவியர் ஆகமத்திலிருந்து வாசகம் *23: 1, 4-11, 15-16, 27, 34b-37*

ஆண்டவர் மோயீசனை நோக்கிக் கூறியதாவது :

குறித்த காலத்திலே நீங்கள் பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டிய ஆண்டவருடைய ஓய்வு நாட்களாவன : முதல் மாதத்தின் பதினான்காம் நாள் மாலை ஆண்டவருடைய பாஸ்கு (எனப்படும் பாஸ்காத் திரு

விழாவும்), அம்மாதத்தின் பதினைந்தாம் நாளில் ஆண்டவருடைய புளியாத (அப்பத்) திருவிழாவாம். அப்போது, ஏழுநாள் புளியாத (அப்பங்களை) உண்பீர்கள். முதல் நாள் உங்களுக்கு மிகச் சிறப்பானதும் பரிசுத்தமானதுமாய் இருக்கும். அதிலே எவ்வித சாதாரண வேலையும் செய்யாமல், அவ்வேழு நாளும் ஆண்டவருக்குத் தகனப் பலிகளை இடக் கடவீர்கள். ஏழாம் நாளோ மிகச் சிறப்பானதும் பரிசுத்தமானதுமாய் இருக்கும். அன்றும் சாதாரண வேலை ஒன்றும் செய்யலாகாது என்று திருவுளம்பற்றினார்.

மீண்டும் ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ இஸ்ராயேல் மக்களிடம் சொல்ல வேண்டியதாவது: நாம் உங்களுக்கு அளிக்கவிருக்கும் நாட்டை அடைந்து, அதில் விளைச்சலை அறுக்கும்போது, உங்கள் அறுவடையின் முதற் பலனாகிய கதிர்க் கட்டுகளைக் குருவிடம் கொண்டு வரக் கடவீர்கள். உங்களுக்காக அது ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்டு அவர் ஓய்வு நாளுக்கு அடுத்த நாளன்று ஆண்டவர் திருமுன் அந்தக் கதிர்க்கட்டுகளை உயர்த்திப் பரிசுத்தமாக்குவார்.

ஆகையால், நீங்கள் புதுப்பலன்களின் கதிர்க் கட்டை ஒப்புக் கொடுத்த ஓய்வு நாளுக்கு அடுத்த நாளிலிருந்து ஏழு நிறை வாரங்களை எண்ணத் தொடங்கி, ஏழாம் வாரம் நிறைவெய்திய மறுநாள், அதாவது: ஐம்பதாம் நாளன்று, ஆண்டவருக்குப் புதிதான பலியைச் செலுத்த வேண்டும்:

அவ்வேழாம் மாதத்தின் பத்தாம் நாள் பரிகாரத் திருநாள். அது மிகவும் சிறந்த நாள், பரிசுத்த நாளென்று கூறப்படும்; அந்த நாளிலே உடலை ஒறுத்து ஆண்டவருக்குத் தகனப் பலி செலுத்துவீர்கள்.

இந்த ஏழாம் மாதத்தின் பதினைந்தாம் நாள் முதல் ஏழு நாள்வரை ஆண்டவருக்குப் புகழ்ச்சியாகக் கூடாரங்களில் திருவிழா கொண்டாடக் கடவீர்கள். முதல் நாள் மிகவும் முக்கியமும் பரிசுத்தமுமாக எண்ணப் படும். அன்று எந்தச் சாதாரண வேலையும் செய்யாதிருப்பீர்கள். அன்றியும் ஏழு நாளும் ஆண்டவருக்குத் தகனப் பலிகளை ஒப்புக்கொடுப் பீர்கள். எட்டாம் நாளும் மிகமுக்கியமும் பரிசுத்தமுமாகையால், ஆண்ட வருக்குத் தகனப்பலியை ஒப்புக்கொடுப்பீர்கள். ஏனென்றால், அன்று மக்கள் அனைவரும் ஒன்றாய்க் கூட வேண்டும். அன்று யாதொரு சாதாரண வேலையும் செய்யலாகாது.

இவைகளே ஆண்டவருடைய திருநாட்கள். அவற்றை நீங்கள் மிகவும் சிறந்தனவென்றும், பரிசுத்தமானவை யென்றும் கொண்டு அவற்றின் ஒவ்வொரு நாளுக்கும் உரிய முறைப்படி ஆண்டவருக்குக் காணிக்கை, தகனப்பலி, பான போசனப்பலி முதலியவற்றைச் செலுத்தக் கடவீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 80 : 2-3, 4-5ab, 9-10 ab (பல்லவி : 1a)*

பல்லவி : **நம் துணைவராம் இறைவனுக்கு அக்களிப்போடு புகழ் பாடுங்கள்.**

2 வீணை மீட்டுங்கள், முரசு கொட்டுங்கள், இன்னிசை எழுப்பும் யாழும்
சுரமண்டலமும் இசைத்துப் பாடுங்கள்.
3 அமாவாசை, முழுமதி, மற்றும் விழா நாட்களில் எக்காளம் ஊதுங்கள்.
பல்லவி

4 இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுத்த ஆணை அது. யாக்கோபின் இறைவன்
தந்த கட்டளை அது.
5 எகிப்தைவிட்டு வெளியேறியபோது இச்சட்டத்தை அவர் சூசையின்
இனத்தவர்க்குத் தந்தார். அறியாத மொழியொன்று என் செவியில்
விழுந்தது.
பல்லவி

9 வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது; அந்நிய தேவன்
யாரையும் நீ வணங்கலாகாது.
10 எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற்றிய கடவுளாகிய ஆண்டவர்
நாமே.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**மக்கள் எல்லாம் ஆண்டவர் திருமுன் குழுமியிருந்தார்கள்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *26: 1-9*

யோசியாசின் மகனான யோவாக்கீம் என்கிற யூதா அரசனுடைய ஆட்சியின் துவக்கத்தில் ஆண்டவர் எரெமியாசுக்கு அருளிய வாக்கு இதுவே :

"ஆண்டவர் கூறுகிறார் : நீ ஆண்டவருடைய கோயிலின் முற்றத்தில் நின்று கொண்டு, ஆண்டவருடைய கோயிலில் ஆராதனை செலுத்த வரும் யூதாவின் எல்லா நகரங்களின் மக்களுக்கும், நாம் சொல்லக் கட்டளையிட்ட வார்த்தைகள் எல்லாவற்றையும் அறிவி; ஒருவார்த்தையும் விடாமல் அனைத்தையும் அறிவி. ஒருவேளை உன்

சொற்களுக்கு அவர்கள் செவிசாய்த்துத் தத்தம் தீய வழிகளை விட்டுத் திரும்பலாம்; அப்பொழுது அவர்களுடைய தீய செயல்களுக்கு நாம் தண்டனை தர எண்ணியதற்காக மனம் வருந்துவோம்;

நீ அவர்களுக்குச் சொல்: 'ஆண்டவர் கூறுகிறார்: நீங்கள் நாம் சொல்வதைக் கேளாமலும், உங்களுக்குக் கொடுத்திருக்கும் சட்டத்தைக் கடைப்பிடிக்காமலும், நாம் உங்களிடம் திரும்பத் திரும்ப அனுப்பியும் நீங்கள் செவி மடுக்காமற் போன நம்முடைய ஊழியர்களான இறை வாக்கினர்களின் வார்த்தைகளைக் கேட்காமலும் போவீர்களாகில், இந்தக் கோயிலைச் சீலோவைப்போல் ஆக்கிவிடுவோம்; இந்த நகரத்தை உலகத்தின் எல்லா மக்களினத்தார் முன்னிலையிலும் ஒரு சாபமாக்குவோம்."

அர்ச்சகர்களும் தீர்க்கதரிசிகளும் மக்கள் எல்லாரும், எரெமியாஸ் ஆண்டவரின் கோயிலில் அறிவித்த இவ்வார்த்தைகளைக் கேட்டார்கள். மக்கள் அனைவருக்கும் சொல்லும்படியாக ஆண்டவர் கற்பித்த எல்லா வார்த்தைகளையும் எரெமியாஸ் சொல்லி முடித்தவுடன், அர்ச்சகர்களும் தீர்க்கதரிசிகளும் மக்கட் கூட்டம் முழுவதும் அவரைப் பிடித்து, "நீ கண்டிப்பாய்ச் சாகவேண்டும்; 'இந்தக் கோயில் சீலோவைப் போலாகும், இந்நகரம் குடியிருப்பாரற்றுப் பாழாய்ப் போகும்' என்று ஆண்டவர் திருப்பெயரால் நீ ஏன் இறைவாக்குரைத்தாய்?" என்று சொல்லி, ஆண்டவரின் கோயிலிலேயே மக்களெல்லாரும் எரெமியாசைச் சூழ்ந்துகொண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 68: 4, 7-9, 13 (பல்லவி: 13c)*

*பல்லவி:* உறுதியான உமது அருட்துணைக் கேற்ப,
எனக்குச் செவிசாய்த்தருளும், ஆண்டவரே.

4 காரணமின்றி என்னைப் பகைப்பவர்கள் என் தலையின் முடியைவிட அதிகமாயுள்ளனர்: அநியாயமாய் என்னை எதிர்ப்பவர்கள் என்னைவிட வலிமை கொண்டுள்ளனர்: நான் எடுத்துக்கொள்ளாததைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்கின்றனர். *பல்லவி*

7 ஏனெனில், உம் பொருட்டே நான் நிந்தனையை ஏற்றேன்: உம் பொருட்டே வெட்கத்தால் என் முகம் கவிந்துபோயிற்று.
8 என் உறவினர்க்கும் நான் அந்நியனானேன்: என் சகோதரருக்கும் நான் வேற்று மனிதனானேன்.
9 உமது இல்லத்தின்மீது எனக்குண்டான ஆர்வம் என்னை எரித்துவிட்டது: உம்மை நிந்திப்பவர்களின் நிந்தனைகள் என்மேல் விழலாயின. *பல்லவி*

13 ஆனால் ஆண்டவரே, உம்மை நோக்கியே உள்ளது என் மன்றாட்டு :
இறைவா, உமக்குகந்த நேரத்தில் உம்மை நோக்கி வேண்டுகிறேன். தகுதி
யான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப என் மன்றாட்டைக் கேட்டருளும் :
உறுதியான உமது அருட்துணைக்கேற்ப எனக்குச் செவிசாய்த்தருளும்.

பல்லவி

அல்லேலூயா 2 இரா. 1 : 25

அல்லேலூயா. ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும் :
இச்சொல்லே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*இவர் தச்சன் மகன் அல்லரோ !*
*பின் இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது ?*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13 : 54-58

அக்காலத்தில் :

யேசு தம் சொந்த ஊருக்கு வந்து அவர்களது செபக் கூடத்தில் போதிக்கலானார். அவர்கள் மலைத்துப்போய், "இந்த ஞானமும் புதுமைகளும் இவருக்கு எங்கிருந்து வந்தன? இவர் தச்சன் மகன் அல்லரோ? இவருடைய தாய், மரியாள் என்பவள் அல்லரோ? இவருடைய சகோதரர் : யாகப்பன், சூசை, சீமோன், யூதா அல்லரோ? இவருடைய சகோதரிகள் யாவரும் நம்மிடையே இல்லையா? பின் இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது?" என்று சொல்லி, அவரைப்பற்றி இடறல் பட்டனர்.

யேசு அவர்களை நோக்கி, "தன் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர, மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு" என்றார். அவர்களிடம் விசுவாசமில்லாமையால் அவர் அங்குப் பல புதுமைகள் செய்யவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*ஜூபிலி ஆண்டிலே யாவரும் தங்கள் சொத்துக்களைத் திரும்ப அடைவார்கள்.*

லேவியர் ஆகமத்திலிருந்து வாசகம் 25: 1, 8-17

ஆண்டவர் சீனாய் மலையில் மோயீசனை நோக்கிக் கூறியதாவது :

ஏழு ஆண்டு வாரங்களை — அதாவது : ஏழு தடவை ஏழாக, நாற்பத்தொன்பது ஆண்டுகளை — எண்ணுவாய். நாடெங்கும், பரிகார காலமாகிய ஏழாம் மாதத்தின் பத்தாம் நாளில் எக்காளம் முழங்கச் செய்யவேண்டும். ஐம்பதாம் ஆண்டைப் பரிசுத்தமாக்கி, உன் நாட்டின் எல்லாக் குடிகளுக்கும் மன்னிப்பென்று கூறுவாய். ஏனென்றால், அது (மகிழ்ச்சி எனப்படும்) ஜூபிலி ஆண்டு. அதிலே உங்களில் ஒவ்வொரு மனிதனும் தன் தன் சொத்துக்களைத் திரும்ப அடைவான்; தன் தன் முந்தின குடும்பத்திற்குத் திரும்பிப் போவான். ஏனென்றால், அது ஜூபிலி ஆண்டும், ஐம்பதாம் ஆண்டுமாம். அப்போது நீங்கள் விதைப்பதுமில்லை; வயலில் தானாய் விளைந்திருப்பதை அறுத்துச் சேர்ப்பதுமில்லை; திராட்சைகளின் புதுப்பலனாகிய பழங்களை அறுத்துச் சேர்ப்பதுமில்லை. அதற்குக் காரணம், ஜூபிலி ஆண்டின் பரிசுத்தத் தன்மையே. (அந்த ஆண்டில்) வயல் வெளிகளில் அகப்படுவதை நீங்கள் உண்ணவேண்டும்.

ஜூபிலி ஆண்டிலே யாவரும் தங்கள் சொத்துக்களைத் திரும்ப அடைவார்கள். உன் ஊரானுக்கு நீ எதையேனும் விற்றாலும், அல்லது அவனிடமிருந்து பெற்றாலும், உன் சகோதரனைத் துன்பப்படுத்தாமல், ஜூபிலி ஆண்டுக்குப் பின் வரும் ஆண்டுகளின் தொகைக்கு ஏற்றபடியே நீ அவனிடமிருந்து வாங்குவாய். அவனும் பலனுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கைப்படியே உனக்கு விற்பான். ஜூபிலி ஆண்டிற்குப் பின்வரும் ஆண்டுகளின் தொகை எவ்வளவு ஏறுமோ அவ்வளவு விலையும் ஏறும். ஆண்டுகளின் தொகை எவ்வளவு குறையுமோ வாங்குகிற விலையும் அவ்வளவு குறையும். ஏனென்றால், பலனுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கையைப் பார்த்தே அவன் உனக்கு விற்பான்.

உங்கள் இனத்தாரை நீங்கள் துன்பப்படுத்தாதீர்கள். உங்கள் கடவுளுக்குப் பயப்பட வேண்டும். ஏனென்றால், நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 66 : 1-2, 4, 6-7. (பல்லவி : 3)

பல்லவி : **இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக. மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.**

1 கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக: நம்மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.
2 அப்போது உலகம் உமது வழியை அறிந்துகொள்ளும், மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும். பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள்மீது ஆட்சி செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

6 பூமி தன் பலனைத் தந்தது; கடவுள் நமக்கு ஆசி அளித்தார்.
7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக, மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள் அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

# 2-ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இவ்வார்த்தைகளைச் சொல்லும்படி உண்மையில் ஆண்டவர்தாம் என்னை உங்களிடம் அனுப்பினார்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 26: 11-16, 24

அந்நாட்களில் :

அர்ச்சகர்களும் தீர்க்கதரிசிகளும், தலைவர்களையும் மக்கள் அனைவரையும் நோக்கி, "இந்த மனிதன் சாவுக்குத் தீர்ப்பிடப்படவேண்டும்; ஏனெனில், இந்தப் பட்டணத்திற்கு விரோதமாய் இவன் இறைவாக்குரைத்தான்; நீங்களோ உங்கள் காதால் கேட்டீர்கள்" என்றார்கள்.

அப்போது எரேமியாஸ் தலைவர்கள் அனைவரையும், மக்கட் கூட்டம் முழுவதையும் நோக்கி : "இந்தக் கோயிலுக்கும் இந்நகரத்திற்கும் எதிராக நீங்கள் கேட்ட வார்த்தைகளையெல்லாம் அறிவித்து இறைவாக்குரைக்கும்படி ஆண்டவர்தாம் என்னை அனுப்பினார். ஆதலால், இப்பொழுது உங்கள் நெறிகளையும் செயல்களையும் செவ்வைப்படுத்திக்

கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் சொல்லுக்குக் கீழ்ப் படியுங்கள்; அவ்வாறு செய்தால், ஆண்டவர் உங்களுக்கு விரோதமாய்த் தீமை செய்வதாக அறிவித்ததற்கு மனம் வருந்துவார். இதோ, நான் உங்கள் கைகளில் இருக்கிறேன்; நல்லதென்றும் நீதியென்றும் உங்களுக்குத் தோன்றுவதை எனக்குச் செய்யுங்கள். ஆனால், ஒன்றை மட்டும் நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள் : என்னை நீங்கள் கொல்லுவீர்களாகில், மாசற்ற வனின் இரத்தப் பழியை உங்கள் மேலும் இப்பட்டணத்தின் மேலும் இதன் குடிகள் மேலும் விழச் செய்வீர்கள்; ஏனெனில் உண்மையில் ஆண்டவர் தாம் என்னை உங்களிடம் அனுப்பி இவ்வார்த்தைகளையெல்லாம் நீங்கள் கேட்கும்படி சொல்லச் சொன்னார்" என்றார்.

தலைவர்களும் மக்கட் கூட்டமும், அர்ச்சகர்களையும் தீர்க்கதரிசிகளையும் நோக்கி, "இந்த மனிதன் சாவுக்குத் தீர்ப்பிடப்படக்கூடாது; ஏனெனில் அவன் நம் கடவுளாகிய ஆண்டவர் திருப்பெயராலேயே நம்மிடம் பேசினான்" என்றார்கள்.

மக்கள் கையில் விடப்பட்டுச் சாகாதபடி சாப்பானின் மகன் ஆயிகாம் எரேமியாசுக்குத் துணையாய் இருந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 68 : 14-15, 29-30, 32-33 (பல்லவி : 13 காண்)

பல்லவி ஆண்டவரே, உமக்கு உகந்த நேரத்தில்
எனக்குச் செவி சாய்த்தருளும்.

14 சேற்றில் நான் அமிழ்ந்திப் போகாதபடி என்னை விடுவித்தருளும்:
என்னைப் பகைப்பவர்களிடமிருந்து எனக்கு விடுதலையளித்தருளும்: ஆழ்ந்த
வெள்ளத்தினின்று என்னைக் காத்தருளும்.
15 பெருவெள்ளம் என்னை மூழ்கடிக்கவோ, ஆழ்கடல் என்னை விழுங்கி
விடவோ விடாதேயும் : பாழ்கிணறு என்னை மூடிக்கொள்ள விடாதேயும்.
பல்லவி

29 நானோவெனில் சிறுமையுற்றவனும் துயர்மிக்கவனும் ஆனேன். இறைவா,
உமது அருட்துணை என்னைக் காப்பதாக.
30 புகழ் இசைத்து இறைவனின் பெயரைப் புகழ்வேன் : நன்றி உணர்வோடு
அவர் புகழ் சாற்றுவேன். பல்லவி

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளுங்கள். இறைவனைத்
தேடுவோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.
33 ஏனெனில், ஏழைகளின் குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார் : சிறைப்
பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

அல்லேலூயா மத். 5:10

**அல்லேலூயா. நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**ஏரோது ஆளனுப்பி அருளப்பரது தலையை வெட்டுவித்தான்; அவருடைய சீடர் வந்து யேசுவிடம் அறிவித்தனர்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 14: 1-12

அக்காலத்தில் யேசுவைப்பற்றிய பேச்சு சிற்றரசன் ஏரோதின் காதுக்கு எட்டியது. அவன் தன் ஊழியரிடம், "இவர் ஸ்நாபக அருளப்பர். இறந்தோரிடமிருந்து உயிர்த்திருக்கிறார். ஆதலால்தான் புதுமை செய்யும் வல்லமை இவரிடம் செயலாற்றுகிறது" என்று சொன்னான்.

அந்த ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவி ஏரோதியாளின் பொருட்டு அருளப்பரைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையிலடைத்திருந்தான். ஏனெனில், அருளப்பர் அவனை நோக்கி, "நீ அவளை வைத்திருக்கலாகாது" என்று சொல்லியிருந்தார். அவனோ அவரைக் கொன்றுவிட நினைத்தான். ஆனால், மக்கள் அவரை இறைவாக்கினராகக் கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான்.

ஏரோதின் பிறப்பு விழாவில் ஏரோதியாளின் மகள் எல்லார் முன்னும் நடனம் ஆடி ஏரோதை மகிழ்வித்தாள். அதனால் அவள் தன்னிடம் எதைக் கேட்டாலும் கொடுப்பதாக அவன் ஆணையிட்டு உறுதிமொழி கூறினான். அவளோ தன் தாய் தூண்டிவிட்டபடி, "ஸ்நாபக அருளப்பரின் தலையை ஒரு தட்டில் இப்போதே எனக்குக் கொடும்" என்றாள். அரசன் வருந்தினான். ஆனால் தன் ஆணையின் பொருட்டும், விருந்தினர் பொருட்டும், அதைக் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆள் அனுப்பிச் சிறையில் அருளப்பரது தலையை வெட்டுவித்தான். அவருடைய தலையைத் தட்டில் கொண்டுவந்து சிறுமியிடம் கொடுக்க, அவளும் தன் தாயிடம் கொண்டுபோனாள்.

அவருடைய சீடர் வந்து அவருடலை எடுத்துச்சென்று அடக்கம் செய்துவிட்டு யேசுவிடம் வந்து அறிவித்தனர்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# பதினெட்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

விரைந்து வந்து உண்ணுங்கள்.

55: 1-3

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்.

இறைவன் கூறுவதாவது :

" தாகமாயிருப்பவர்களே, அனைவரும் நீரருகில் வாருங்கள், கையில் பணமில்லாதவர்களே, விரைந்து வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்! வாருங்கள், பணமுமின்றி விலையுமின்றி திராட்சை இரசமும் பாலும் வாங்கிப் பருகுங்கள்!

அப்பமல்லாத ஒன்றுக்காகப் பணஞ் செலவிடுவானேன்? உங்களுக்கு நிறைவு தராத ஒன்றுக்காக உழைப்பானேன்? நாம் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள்; அப்போது சுவையானதை உண்பீர்கள், கொழுப்புள்ளதைப் புசித்து மகிழ்வீர்கள்.

செவிசாயுங்கள், நம்மிடம் வாருங்கள்; நாம் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்; தாவீதுக்கு நாம் வாக்களித்த அருள் வரங்களை நிலைப்பிக்க, உங்களோடு முடிவில்லா உடன்படிக்கை செய்து கொள்வோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 144 : 8-9, 15-16, 17-18 (பல்லவி : 16 காண்)

பல்லவி : ஆண்டவரே, உமது கையைத் திறந்து
எங்களுக்கு நிறைவாய் உணவூட்டுகிறீர்.

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர். சினங்கொள்ளத் தாமதிப்பவர்.
அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்: தம் படைப்புகள் அனைத்தின்
மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

15 ஆண்டவரே, எல்லாருடைய கண்களும் உம்மையே நம்பிக்கையுடன்
நோக்குகின்றன; எல்லாருக்கும் நீர் தக்க காலத்தில் உணவளிக்கிறீர்.
16 உமது கையைத் திறந்து விடுகிறீர் : உயிருள்ள எதையும் உம்
இரக்கத்தினுல் நிரப்புகிறீர். பல்லவி

17 ஆண்டவர் தம் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர். தம் செயல்களி
லெல்லாம் புனிதமானவர்.
18 தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் உள்ளார்.
நேர்மையுடன் தம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் ஆண்டவர்
அண்மையில் உள்ளார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**எந்தப் படைப்புப் பொருளும் கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *8: 35, 37-39*

சகோதரர்களே :

கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் எவன்? வேதனையோ? நெருக்கடியோ? கலாபனையோ? பசியோ? ஆடையின்மையோ? இடர்களோ? வாளோ? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?

ஆனுல் நம்மேல் அன்பு வைத்தவரின் செயலால் நாம் இவை அனைத்திலும் மாண்புமிக்க வெற்றி அடைகிறோம். ஏனெனில், சாவோ வாழ்வோ, வானதூதரோ தலைமை ஏற்பவரோ, நிகழ்வனவோ வருவனவோ, வலிமை மிக்கவரோ, வானத்தில் உள்ளவையோ ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்புப் பொருளோ, நம் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருத்து நம்மைப் பிரிக்கமுடியாது என்பது என் துணிபு.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

*அல்லேலூயா*[1] மத். 4 : 4b

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினுல் மட்டுமன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினுலும் உயிர் வாழ்கிறுன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அனைவரும் வயிறார உண்டனர்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14: 13-21

அக்காலத்தில்:

அருளப்பரின் மரணத்தைப் பற்றிக் கேள்வியுற்றதும், யேசு அங்கிருந்து படகேறித் தனிமையாகப் பாழ்வெளி சென்றார். இதைக் கேட்டு மக்கட் கூட்டம் ஊர்களிலிருந்து கால் நடையாக அவரைப் பின்தொடர்ந்தது. அவர் கரையில் இறங்கியபோது பெருங் கூட்டத்தைக் கண்டு அவர்கள்மீது மனமிரங்கி அவர்களுள் பிணியாளிகளைக் குணமாக்கினார்.

மாலையானதும் அவருடைய சீடர் அவரிடம் வந்து, "இது பாழ்வெளி ஆயிற்றே; நேரமும் ஆகிவிட்டது; ஊர்களுக்குச் சென்று உணவு வாங்கிக்கொள்ளும்படி கூட்டத்தை அனுப்பிவிடும்" என்றனர். யேசுவோ அவர்களிடம், "அவர்கள் போக வேண்டியதில்லை. நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார்.

அதற்கு அவர்கள், "இங்கே ஐந்து அப்பமும் இரண்டு மீனும் தவிர வேறொன்றும் எங்களிடமில்லை" என்றனர். அவர், "அவற்றை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார்.

கூட்டம் பசும்புல் தரையில் அமரும்படி கட்டளையிட்டு, ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, இறைபுகழ் கூறி, அப்பத்தைப் பிட்டுச் சீடருக்கு அளித்தார்; சீடர் கூட்டத்திற்கு அளித்தனர். அனைவரும் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தனர். பெண்களும் சிறுவர்களும் நீங்கலாக, உணவு அருந்திய ஆண்கள் தொகை ஐயாயிரம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நாம் உங்களுக்கு வானத்தினின்று அப்பம் பொழிவோம்.*

*யாத்திராகமத்திலிருந்து வாசகம்* *16: 2-4, 12-15*

அந்நாட்களில் :

பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களின் கூட்டத்தார் எல்லாரும் மோயீசனையும் ஆரோனையும் பகைத்து முறுமுறுத்துப் பேசினர். இஸ்ராயேல் மக்கள் அவர்களை நோக்கி, நாங்கள் எகிப்து நாட்டிலேயே ஆண்டவருடைய கையாலே செத்துப் போயிருப்போமாயின் தாவிளை. அவ்விடத்திலே நாங்கள் இறைச்சி நிறைந்த பாத்திரங்களண்டை உட்கார்ந்து, வயிறார அப்பம் சாப்பிட்டு வருவோம். இந்த மக்களெல்லாரையும் பட்டினிபோட்டுக் கொல்லவேண்டுமென்று அல்லவோ நீங்கள் எங்களை ஆள் நடமாட்டமில்லாத இந்த இடத்திற்கு அழைத்துவந்தீர்கள் என்று சொன்னார்கள்.

ஆண்டவர் (அதனைக்) கேட்டு மோயீசனை நோக்கி: இதோ நாம் உங்களுக்கு வானத்தினின்று அப்பங்கள் பொழிவிப்போம். மக்கள் வெளியே போய், ஒவ்வொரு நாளும் அந்நாளுக்குப் போதுமானதை மட்டும் சேகரிக்கட்டும். அதன்மூலம் அவர்கள் நமது நியாயச் சட்டப்படி நடப்பார்களோ அல்லவோ என்று அவர்களைச் சோதித்துப் பார்ப்போம்.

நாம் இஸ்ராயேல் மக்களின் முறுமுறுப்புக்களைக் கேட்டுக்கொண்டோம். நீ அவர்களை நோக்கி, மாலையில் இறைச்சிகளை உண்பீர்கள்; விடியற்காலையில் அப்பங்களைத் திருப்தியாகச் சாப்பிடுவீர்கள் ; உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே என்று அறிந்து கொள்வீர்கள் என்று சொல் என்றார்.

அவ்வாறே மாலையில் காடைகள் வந்து விழுந்து பாளையத்தை மூடிக்கொண்டன. விடியற்காலையில் பாளையத்தைச் சுற்றிலும் பனி பெய்திருந்தது. பூமியை மூடிக்கொண்ட பின்னர், பாலைவனத்தில் உரலிலே குத்தப்பட்டதும் உறைந்த பனிக்கட்டியைப் போன்றதுமான ஒரு பொருள் காணப்பட்டது. இஸ்ராயேல் மக்கள் அதைக் கண்டு, அது இன்னதென்று அறியாமையால் ஒருவரை ஒருவர் நோக்கி: மன்னு? - அதாவது, இது யாதோ? - என்று சொன்னார்கள்.

அப்பொழுது மோயீசன் அவர்களைப் பார்த்து: இது ஆண்டவர் உங்களுக்கு உண்ணத் தந்தருளிய அப்பம், என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 77 : 3 & 4 bc, 23-24, 25 & 54 (பல்லவி : 24 b)

பல்லவி : **ஆண்டவர் வானத்து உணவை அவர்களுக்கு அளித்தார்.**

3 நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை: எங்கள் முன்னோர்கள் எங்களுக்குச் சொன்னவை, இவற்றை உரைப்போம்.
4 வரும் தலைமுறைக்கு ஆண்டவருடைய மாண்புமிக்க செயல்களையும் அவருடைய வல்லமையையும் கூறுவோம். பல்லவி

23 ஆனால் அவரோ வானில் உலவும் மேகங்களுக்குக் கட்டளையிட்டார்: வானங்களின் கதவுகளைத் திறந்துவிட்டார்.
24 உண்பதற்கு மன்னாவை மழைபோல் பொழிந்தார்: வானத்து உணவை அவர்களுக்கு அளித்தார். பல்லவி

25 விண்ணோரின் உணவை மனிதன் உண்ணலானான்: வேண்டிய அளவுக்கு உணவை அனுப்பினார்.
54 தம் புனித நாட்டுக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போனார்: தம் வலக்கரத்தால் சொந்தமாக்கிக்கொண்ட மலைகளுக்கு அழைத்துச் சென்றார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 7, 20--24

சகோதரர்களே :

ஆண்டவருக்குள் நான் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுவதாவது: புற இனத்தார் நடப்பதுபோல் இனி நீங்கள் நடக்கலாகாது. அவர்கள் மனத்தில் தோன்றும் எல்லா வீண் எண்ணங்களையும் பின்பற்றி வாழ்கின்றனர்.

ஆனால், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றி இவ்வாறு கற்றறியவில்லை. உங்களுக்கு யேசுவைப்பற்றி அறிவிக்கப்பட்டதும், போதிக்கப்பட்டதும் அவரில் அடங்கியுள்ள உண்மைக்கு ஏற்ப இருந்ததன்றோ? அதன்படி உங்களுடைய முந்தின நடத்தையை விட்டுவிட்டு, தீய இச்சைகளால் ஏமாந்து பாழ்பட்டுப் போகும் பழைய இயல்பைக் களைந்துவிடுங்கள்; உள்ளத்தின் ஆழத்தில் உங்களைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்; உண்மையால் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 4:4b

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர்வாழ்கிறான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது;
என்னிடம் விசுவாசம் கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது.

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
6: 24-35

அக்காலத்தில் :

யேசுவும் அவருடைய சீடர்களும் அங்கு இல்லாததைக் கண்டு மக்கள் அப்படகுகளிலேறிக் கப்பர்நகூமுக்கு அவரைத் தேடி வந்தார்கள். கடலின் இக்கரையில் அவரைப் பார்த்து, "ராபி, எப்பொழுது இங்கு வந்தீர்?" என்று கேட்டனர்.

யேசு மறுமொழியாக, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் என்னைத் தேடுவது அருங்குறிகளைக் கண்டதாலன்று, அப்பங்களை வயிறார உண்டதால்தான். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம்; முடிவில்லாத வாழ்வளிக்கும் நிலையான உணவுக்காக உழையுங்கள். அதை மனுமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில், அவருக்கே தந்தையாகிய கடவுள் தம் அதிகாரத்தைக் கொடுத்து அனுப்பிவைத்தார்" என்றார்.

அவர்கள் அவரை நோக்கி, "கடவுளுக்கேற்ற செயல்களைச் செய்ய நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என, யேசு, "அவர் அனுப்பியவரை விசுவசிப்பதே கடவுளுக்கேற்ற செயல்" என்றார். அவர்கள், "உம்மை நாங்கள் விசுவசிக்க ஓர் அருங்குறி பார்க்கவேண்டும்; என்ன அருங்குறி செய்வீர்? என்ன செயல் ஆற்றுவீர்? 'அவர்கள் உண்பதற்கு வானகத்திலிருந்து உணவு அருளினார்' என்று எழுதியுள்ளதற்கேற்ப எங்கள் முன்னோர் பாலைவனத்தில் மன்னாவை உண்டனரே" என்று கேட்டனர்.

யேசு அவர்களை நோக்கி, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: வானத்திலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோயீசன் அல்லர்; வானத்திலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே. ஏனெனில், வானின்று இறங்கி வந்து உலகிற்கு உயிர் அளிப்பவரே கடவுள் தரும் உணவு" என்றார்.

அவர்களோ, "ஆண்டவரே இவ்வுணவை எப்பொழுதும் எங்களுக்குத் தாரும்" என்றனர். அதற்கு யேசு, "நானே உயிர் தரும் உணவு, என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது. என்னில் விசுவாசங்கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது." என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

மனிதனுக்குத் தான் பட்ட மனத்துயரத்தினால் வந்த இலாபம் என்ன ?

சங்கத்திருவுரை ஆகமத்திலிருந்து வாசகம் 1: 2; 2: 21-23

வீணிலும் வீண் என்று உரைத்தான் சங்கப் போதகன். வீணிலும் வீண், எல்லாமே வீண் என்கிறான்.

உள்ளபடி ஒருவன் ஞானத்தையும் கல்வியையும் ஆவலாய்த் தேடி உழைத்த பின்பு, தான் ஈட்டியவற்றை உழைக்காதிருந்த வேறொருவனுக்கு விட்டுவிடுகிறான். இதுவன்றோ வீணும் பெரிய தீமையுமாய் இருக்கிறது? மனிதன் சூரியன் முகத்தே பட்ட எல்லாத் தொல்லையினாலேயும் வதைக்கப்பட்ட மனத்துயரத்தினாலேயும் அவனுக்கு என்ன இலாபம் இருக்கும்? அவன் நாட்களிலெல்லாம் அலுப்பும் அலைச்சலும் உள்ளன. இரவில் முதலாய் அவனுக்கு ஓய்வு இல்லை. இதுவும் வீணேயன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94 : 1-2, 6-7, 8-9 (பல்லவி : 8b, 7b)

பல்லவி : 'உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்' என்னும்
ஆண்டவரது குரலை இன்று கேட்பீர்களா!

1 வாருங்கள், ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம். மீட்பளிக்கும் பாறையாம்
அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்:
இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம், நம்மைப்
படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர்
அரவணைப்பிலுள்ள மந்தை. இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்
களா? அக்குரல் கூறுவதாவது : பல்லவி

8 அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
9 "அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்; என் செயல்களைக்
கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்." பல்லவி

## இரண்டாம் வாசகம்

*மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்! அங்கேதான் கிறிஸ்து இருக்கின்றார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3: 1-5, 9-11

சகோதரர்களே :

கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான், கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகில் உள்ளவற்றின்மீது மனத்தைச் செலுத்தாமல் மேலுலகிலுள்ளவற்றின்மீதே மனத்தைச் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் இறந்துவிட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது. நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும்பொழுது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்.

ஆகவே உங்களில் உலகிற்கடுத்தவற்றைச் சாகச் செய்யுங்கள் : கெட்ட நடத்தை, கற்பின்மை, காமம், தீய இச்சைகள், சிலை வழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசை ஆகியவற்றை ஒழித்து விடுங்கள்.

இனி ஒருவரிடம் ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில் பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, தன்னை உண்டாக்கியவரின் சாயலுக்கேற்ப, உண்மை அறிவை அடையும் பொருட்டுப் புதுப்பிக்கப்பட்டு வரும் புதிய இயல்பை அணிந்துகொண்டீர்கள். இப்புது வாழ்வில் கிரேக்கனென்றும் யூதனென்றும் இல்லை; விருத்தசேதனம் பெற்றவனென்றும் பெறாதவனென்றும் இல்லை; மிலேச்சன் என்றும், சீத்தியன் என்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும் இல்லை. கிறிஸ்துவே அனைவரிலும் அனைத்துமானவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 5:3

**அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர்,**
**ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நீ தேடி வைத்தது யாருக்குக் கிடைக்குமோ?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 13-21

அக்காலத்தில் :

கூட்டத்தில் ஒருவன், "போதகரே, என் சகோதரன் என்னுடன் சொத்தைப் பங்கிட்டுக்கொள்ளுமாறு சொல்லும்" என்றான். அதற்கு யேசு, "அன்பனே, நியாயம் தீர்க்கவோ, பாகம் பிரிக்கவோ என்னை ஏற்படுத்தியதார்?" என்றார்.

பின் மக்களைப் பார்த்து, "எவ்வகைப் பொருளாசையும் கொள்ளாதபடி கவனமாயிருங்கள். ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவுதானிருந்தாலும் செல்வப் பெருக்கினால் வாழ்வு வந்துவிடாது" என்றார்.

பின்னர், அவர்களுக்கு இவ்வுவமையைச் சொன்னார்: "பணக்காரன் ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன் 'விளைபொருளைச் சேர்த்துவைக்க இடமில்லையே, என்ன செய்வது என்று தனக்குள் எண்ணி, 'சரி, என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன். அங்கு என் உடைமை, கோதுமை எல்லாம் சேர்த்து வைத்து, 'நெஞ்சே, பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருள் உனக்கு ஏராளமாய் உள்ளது. இளைப்பாறு; உண்டு குடித்து விருந்தாடு என்று சொல்லிக்கொள்வேன்' என்றான்.

ஆனால், கடவுள், 'அறிவிலியே, இன்றிரவே உன் உயிரை வாங்கப் போகிறார்கள். நீ தேடி வைத்தது யாருக்குக் கிடைக்குமோ?' என்றார்.

கடவுள்முன் செல்வம் இல்லாதவனாய், தனக்காகவே செல்வந் திரட்டுகிறவன் இவ்வாறே இருக்கிறான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இவர்கள் எல்லாரையும் நான் ஒருவனாகத் தாங்கமுடியாது.**

*எண்ணாகமத்திலிருந்து வாசகம்* *11: 4b-15*

இஸ்ராயேலர் ஒருமிக்க உட்கார்ந்து, அழுது: ஆ! நமக்கு இறைச்சியை உண்ணக் கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே செலவில்லாமல் உண்ட மீன்களையும், வெள்ளரிக் காய்களையும், கொம்மட்டிக் காய்களையும், பெரு முள்ளிக் கீரைகளையும் வெங்காய வெள்ளுள்ளிகளையும், நினைத்துக் கொள்ளுகிறோம். இப்பொழுதோ நமது உயிர் வாடுகிறது. மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்றார்கள்.

மன்னாவோவென்றால் கொத்தமல்லி போலவும் உளுக முத்து நிறமாகவும் இருந்தது. மக்கள் சுற்றித் திரிந்து அதைப் பொறுக்கிக் கொண்டு வந்து, எந்திரக் கல்லில் அரைத்து அல்லது உரலில் குத்தி பிடித்துச் சட்டியில் சமைப்பார்கள். பிறகு அதை அப்பங்களாக்குவார்கள். அதன் சுவை ஒலிவ எண்ணெயில் செய்த பணியாரத்தின் சுவை போல் இருக்கும். இரவுதோறும் பாளையத்தின்மீது பனி பெய்யும்போது மன்னாவும் பெய்யும்.

மக்கள் தங்கள் குடும்பத்தோடு தத்தம் கூடார வாயிலிலே அழுவதை மோயீசன் கேட்டார். ஆண்டவருக்கும் கோபம் மூண்டது; மோயீசனாலும் அதைப் பொறுக்க முடியவில்லை. அவர் ஆண்டவரை நோக்கி:

"ஆண்டவரே அடியேனை வதைத்ததேன்? உமக்கு முன்பாக எனக்குக் கருணை கிடையாததென்ன? நீர் இந்த எல்லா மக்கள் பாரத்தையும் என்மேல் சுமத்தியதென்ன? இந்த மக்களையெல்லாம் கருத்தாங்கியவன் நானோ? நானோ அவர்களைப் பெற்றெடுத்தேன்? அப்படியிருக்க நீர் அடியேனை நோக்கி: தாய்ப்பாலை உண்ணும் குழந்தையைச் சுமப்பதுபோல் நீ அவர்களை உன் மடியிலே சுமந்து கொண்டுபோய், நாம் ஆணையிட்டு அவர்களது முன்னோருக்கு வாக்குறுதி செய்துள்ள நாட்டிற்கு அவர்களை அழைத்துக்கொண்டு போ என்று எனக்குச் சொல்வானேன்? இத்தனை மக்களுக்குக் கொடுக்க இறைச்சி எனக்கு எங்கிருந்து கிடைக்கும்? உண்ண எங்களுக்கு இறைச்சி கொடு என்று என்னைப் பார்த்து அழுது முறையிடுகிறார்களே! இவர்கள் எல்லாரையும் நான் ஒருவனாகத் தாங்கக்

கூடுமா? இது என்னுலே இயலாது. ஆண்டவருடைய திருவுளம் என் விருப்பத்திற்கு இணங்குவது இயலாதாயின், இப்படிப்பட்ட சகிக்கக் கூடாத தொல்லையை நான் காணுதிருக்க, இறைவா இப்பொழுதே என்னைக் கொன்றுவிட்டு, உம்முடைய கண்களில் எனக்குக் கருணை கிடைக்கும்படி செய்தலே நலம்" என்று சொன்னுர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 80 : 11-12, 13-14, 15-16 (பல்லவி : 1a)

பல்லவி : நம் துணைவராம் இறைவனுக்கு
அக்களிப்போடு புகழ் பாடுங்கள்.

11 ஆனுல் என் மக்கள் என் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை : இஸ்ராயேலர்
எனக்குக் கீழ்ப்படியவில்லை.
12 ஆகவே அவர்களை அவர்கள் இருதயக் கடினத்திற்கே கையளித்தேன் :
தங்கள் யோசனையின்படி நடக்க விட்டுவிட்டேன். பல்லவி

13 என் மக்கள் எனக்குச் செவிசாய்த்திருந்தால் எவ்வளவோ நலம்! நான்
காட்டிய வழியில் இஸ்ராயேல் நடந்திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்
திருக்கும்.
14 அவர்கள் எதிரிகளை உடனுக்குடனே ஒழித்திருப்பேன் : என் கரத்தின்
வல்லமை அவர்கள் எதிரிகளைத் தாக்கியிருக்கும். பல்லவி

15 ஆண்டவரைப் பகைக்கிறவர்கள் அவரிடம் இச்சகம் பேசியிருப்பார்கள்.
அவர்களுடைய தண்டனைத் தீர்ப்பு என்றென்றும் நீடித்திருக்கும்.
16 கோதுமையின் கொழுமையால் நான் இஸ்ராயேல் மக்களை உண்பித்
திருப்பேன். காட்டுத் தேனுல் அவர்களுக்கு நிறைவளித்திருப்பேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அனனியாசே, ஆண்டவர் உன்னை அனுப்பவில்லை ;**
**இந்த மக்கள் உன் பொய்யை நம்பும்படி செய்துவிட்டாய்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 28: 1-17

அதே ஆண்டில், யூதாவின் அரசனாகிய செதேசியாஸ் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் நான்காம் ஆண்டின் ஐந்தாம் மாதத்தில் இது நடந்தது: அஜூர் மகனும் கபாவோன் ஊரானுமாகிய அனனியாஸ் என்னும் தீர்க்கதரிசி ஆண்டவரின் கோயிலில் அர்ச்சகர்கள் முன்னிலையிலும், மக்கள் அனைவர் முன்னிலையிலும் என்னிடம் சொன்னான்:

"இஸ்ராயேலின் கடவுளாகிய சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: பபிலோனிய மன்னனின் நுகத்தை நாம் முறித்துவிட்டோம்; பபிலோனிய மன்னன் இந்த இடத்திலிருந்து பபிலோனுக்குத் தூக்கிப்போன ஆண்டவரின் கோயில் பாத்திரங்கள் அனைத்தையும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் திரும்ப இவ்விடத்திற்குக் கொண்டுவருவோம். யூதாவின் அரசனும் யோவாக்கீமுடைய மகனுமான எக்கோனியாசையும், யூதாவினின்று பபிலோனுக்குச் சென்ற எல்லாரையும் இவ்விடத்திற்குத் திரும்பக் கொண்டு வருவோம்; ஏனெனில் பபிலோனிய மன்னனின் நுகத்தை முறித்துவிடுவோம், என்கிறார் ஆண்டவர்" என்றான்.

பின்பு, இறைவாக்கினரான எரெமியாஸ் அர்ச்சகர்களின் முன்னிலையிலும், ஆண்டவரின் கோயிலில் நின்றுகொண்டிருந்த எல்லா மக்களின் முன்னிலையிலும் அனனியாஸ் தீர்க்கதரிசியிடம் பேசினார்: இறைவாக்கினரான எரெமியாஸ் அவனை நோக்கி, "ஆமென்! அவ்வாறே ஆண்டவர் செய்வாராக! நீ உரைத்த வார்த்தைகளை ஆண்டவர் நிறைவேற்றுவாராக! பாத்திரங்கள் ஆண்டவரின் கோயிலுக்குத் திரும்பக் கொண்டுவரப்படுக! பபிலோனுக்குப் போனவர்கள் இவ்விடத்திற்குத் திரும்பி வருக! ஆயினும் நீயும் இங்குள்ளவர்களும் கேட்க நான் சொல்லும் இவ்வார்த்தையைக் கேள்: ஆதிமுதல் உனக்கும் எனக்கும் முன்வாழ்ந்த தீர்க்கதரிசிகள் பல நாடுகளைப்பற்றியும், வல்லரசுகள், போர், துன்பம், பஞ்சம் ஆகியவற்றைக் குறித்தும் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்கள்; சமாதானத்தை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசி ஒருவன் இருந்தால், அவன் சொன்ன சொல் நிறைவேறினால்தான், அவனை உண்மையாகவே ஆண்டவர் அனுப்பினார் என்பது தெளிவாகும்" என்று மறுமொழி கூறினார்.

அதைக் கேட்டு, அனனியாஸ் தீர்க்கதரிசி எரெமியாஸ் இறைவாக்கினரின் கழுத்திலிருந்த நுகத்தை முறித்து எறிந்துவிட்டான். பின்னும் அனனியாஸ் மக்கள் அனைவர் முன்னிலையிலும் வாய் திறந்து, "ஆண்டவர்

கூறுகிறூர்: இவ்வாறே பபிலோனிய மன்னனுகிய நபுக்கோதனசாரின் நுகத்தை எல்லா மக்களினத்தாரின் கழுத்தினின்றும் இன்னும் இரண்டே ஆண்டுகளில் முறித்துவிடுவோம்" என்ருன். அதன்பின் எரெமியாஸ் இறைவாக்கினர் அவ்விடம் விட்டகன்ருர்.

அனனியாஸ் தீர்க்கதரிசி எரெமியாஸ் இறைவாக்கினரின் கழுத்தினின்று நுகத்தடியை முறித்தெறிந்த சில நாட்களுக்குப் பின், ஆண்டவருடைய வாக்கு எரெமியாசுக்கு அறிவிக்கப்பட்டது. "நீ போய் அனனியாசுக்குச் சொல்: 'ஆண்டவர் கூறுகிறூர்: நீ மர நுகத்தை முறித்தாய்; ஆனல் அதற்குப் பதிலாக இரும்பு நுகத்தைச் செய்வோம். ஏனெனில் பபிலோனிய அரசனுகிய நபுக்கோதனசாருக்கு அடங்கிச் சேவை செய்யுமாறு இந்த மக்கள் எல்லாருடைய கழுத்திலும் இரும்பு நுகத்தை வைத்தோம்; அவர்கள் அவனுக்குத் தொண்டு புரிவார்கள்; பூமியின் மிருகங்களையும் அவனுக்கு அளித்திருக்கிறேம், என்கிறூர் இஸ்ராயேலின் கடவுளாகிய சேனைகளின் ஆண்டவர்.'"

அப்பொழுது எரெமியாஸ் இறைவாக்கினர் அனனியாஸ் தீர்க்கதரிசியை நோக்கி, "அனனியாசே, கூர்ந்து கேள்; ஆண்டவர் உன்னை அனுப்பவில்லை; இந்த மக்கள் உன் பொய்யை நம்பும்படி செய்துவிட்டாய்; ஆதலால் ஆண்டவர் கூறுகிறூர்: 'இதோ நாம் உன்னை இவ்வுலகத்திலிருந்தே அகற்றிவிடுவோம்; இந்த ஆண்டிலேயே நீ சாவாய்; ஏனெனில், நீ ஆண்டவருக்கு விரோதமாய்ப் பேசினுய்'" என்று சொன்னூர்.

அந்த ஆண்டிலேயே ஏழாம் மாதத்தில் அனனியாஸ் தீர்க்கதரிசி இறந்துபோனுன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118: 29, 43, 79, 80, 95, 102 (பல்லவி: 68b)

பல்லவி: ஆண்டவரே, எனக்கு உம் நியமங்களைக் கற்பியும்.

29 தவருன வழியில் என்னை நடக்க விடாதேயும், உமது திருச்சட்டத்தை எனக்கு அருளும். பல்லவி

43 என் வாயினின்று உண்மையை எடுத்து விடாதேயும், ஏனெனில், உம் முறைமைகளின்மீது நான் நம்பிக்கை வைத்துள்ளேன். பல்லவி

79 உமக்கு அஞ்சுவோர் என் சார்பாய்த் திரும்புவார்களாக; உம் ஆணைகளைப் பற்றிக் கவலையுறுவோர் என் பக்கம் இருப்பார்களாக. பல்லவி

80 உம் நியமங்களில் என் உள்ளம் முற்றிலும் ஊன்றியிருப்பதாக. நான் வெட்கமுறேன். பல்லவி

95 பாவிகள் என்னைத் தொலைத்துவிடப் பார்க்கிறார்கள் : என் கவனமோ உம் ஆணைகளின்மீதே இருக்கிறது. பல்லவி

102 உம் விதிகளை விட்டுச் சிறிதேனும் தவறுவதில்லை; ஏனெனில் நீர் எனக்கு அறிவு புகட்டினீர். பல்லவி

அல்லேலூயா மத். 4:4b

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*வானத்தை அண்ணாந்து பார்த்து, இறைபுகழ் கூறி, அப்பத்தைச் சீடருக்கு அளித்தார்; சீடர் கூட்டத்திற்கு அளித்தனர்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14: 13-21

அக்காலத்தில் :

அருளப்பர் கொலையுண்டார் என்று கேட்டதும் யேசு அங்கிருந்து படகேறித் தனிமையாகப் பாழ்வெளி சென்றார். இதைக் கேட்டு மக்கட் கூட்டம் ஊர்களிலிருந்து கால் நடையாக அவரைப் பின் தொடர்ந்தது. அவர் கரையில் இறங்கியபோது பெரும் கூட்டத்தைக் கண்டு அவர்கள் மீது மனமிரங்கி அவர்களுள் பிணியாளிகளைக் குணமாக்கினார்.

மாலையானதும் அவருடைய சீடர் அவரிடம் வந்து, "இது பாழ்வெளி ஆயிற்றே; நேரமும் ஆகிவிட்டது; ஊர்களுக்குச் சென்று உணவு வாங்கிக்கொள்ளும்படி கூட்டத்தை அனுப்பிவிடும்" என்றனர். யேசுவோ அவர்களிடம், "அவர்கள் போக வேண்டியதில்லை. நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார். அதற்கு அவர்கள், "இங்கே ஐந்து அப்பமும் இரண்டு மீனும் தவிர வேறொன்றும் எங்களிடமில்லை" என்றனர். அவர், "அவற்றை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார்.

கூட்டம் புல்தரையில் அமரும்படி கட்டளையிட்டு, ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, இறைபுகழ் கூறி, அப்பங்களைப் பிட்டுச் சீடருக்கு அளித்தார்; சீடர் கூட்டத்திற்கு அளித்தனர். அனைவரும் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தனர். பெண்களும் சிறுவர்களும் நீங்கலாக, உணவு அருந்திய ஆண்கள் தொகை ஐயாயிரம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

இந்த நற்செய்தி வாசகம் முதல் ஆண்டில் முந்தின ஞாயிறன்று வாசிக்கப் பட்டிருந்தால், இன்று மத். 14: 22-36 வாசிக்கப்படும் (பக். 437)

---

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*பிற இறைவாக்கினரைப் போலல்ல மோயீசன்; நீங்கள் அவரை எதிர்த்துப் பேச அஞ்சாதிருப்பதேன்?*

எண்ணாகமத்திலிருந்து வாசகம் 12: 1-13

அந்நாட்களில்:

எத்தியோப்பியப் பெண்ணை மோயீசன் மணந்தபடியால் மரியாளும் ஆரோனும் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: ஆண்டவர் மோயீசனைக் கொண்டு மட்டுமா பேசினார்? எங்களைக் கொண்டும் அவர் பேசவில்லையா? என்றார்கள். ஆண்டவர் அதைக் கேட்டார். மோயீசனோ பூமியிலுள்ள எல்லா மனிதர்களைக் காட்டிலும் மிக்க சாந்தமுள்ளவராய் இருந்தார். திடீரென (ஆண்டவர்) அவரையும், ஆரோன், மரியாள் என்பவர்களையும் நோக்கி: நீங்கள் மூவருமே உடன்படிக்கைக் கூடாரத்திற்குப் புறப்பட்டு வாருங்கள் என்றார்.

அவர்கள் புறப்பட்டு வந்த பிறகு ஆண்டவர் மேகத்தூணில் இறங்கி ஆலயப் புகுமுகத்தில் நின்றவராய், ஆரோனையும் மரியாளையும் அழைத்தார். இவர்கள் இருவரும் போனார்கள். அப்பொழுது அவர்: நம்முடைய வார்த்தைகளை உற்றுக் கேளுங்கள். உங்களுக்குள்ளே ஒருவன் ஆண்டவருடைய இறைவாக்கினனாய் இருந்தால், அவனுக்குத் தரிசனத்தில் நம்மைக் காண்பிப்போம்; அல்லது கனவிலே அவனோடு பேசுவோம். நம்முடைய ஊழியனாகிய மோயீசனோ அப்படிப்பட்டவ

ஸல்லவே. அவன் நம்முடைய வீட்டிலெங்கும் மிக்க விசுவாசமுள்ளவனாய் இருக்கிறான். நாம் அவனோடு நேரிலே பேசுகிறோம். நம்மை அவன் மறைவிலேனும் போலியாயேனும் காணாமல், கண்கூடாகவே நம்மைக் காண்கிறான். ஆதலால், நீங்கள் நம் ஊழியனாகிய மோயீசனை விரோதித்துப் பேச அஞ்சாதிருப்பதேன்? என்று சொல்லி, கோபத்துடன் அவர்களை விட்டு மறைந்தார். அவர் மறைந்தபோது கூடாரத்தின் மீதிருந்த மேகம் நீங்கிப் போயிற்று. நீங்கவே, மரியாள் உறைந்த பனிபோல் வெண் தொழுநோய் பிடித்த உடலுள்ளவளாய்க் காணப்பட்டாள்.

ஆரோன் அவளைப் பார்த்து, தொழுநோய் அவளை மூடினதென்று கண்டவுடனே, மோயீசனை நோக்கி: தலைவா, நாங்கள் அறிவில்லாமல் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தவேண்டாமென்று வேண்டுகிறேன். இவள் செத்தவளைப்போலவும், தாயின் கருவிலிருந்து செத்து விழுந்த பிள்ளையைப் போலவும் ஆகாதிருப்பாளாக. இதோ ஏற்கெனவே அவள் உடலில் பாதித்தசை தொழுநோயால் தின்னப்பட்டிருக்கிறதே! என்றான். அப்பொழுது மோயீசன் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டு: என் கடவுளே, உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். அவளைக் குணப்படுத்தியருளும் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 50 : 1-2, 3-4, 10-11 (பல்லவி : 1a காண்)

பல்லவி : இறைவா, இரக்கம் வையும், நாங்கள் பாவம் செய்தோம்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்குறைகளைப் போக்கிவிடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கிவிடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

3 என் குற்றங்குறைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்: நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது.
4 உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன்; உம் திரு முன்னிலையிலேயே செய்தேன்: உமது தீர்ப்பில் உம் நீதி விளங்குகின்றது, உமது நியாய வாக்கினில் உம் நேர்மை துலங்குகின்றது. பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்: உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்: உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*மிக மோசமான உன் பாவங்களை முன்னிட்டே நாம் இவற்றை உனக்குச் செய்தோம். நாம் யாக்கோபின் கூடாரங்களை மீண்டும் நிலைநாட்டுவோம்.*

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்
30: 1-2, 12-15, 18-22

ஆண்டவரின் வாக்கு எரெமியாசுக்கு அருளப்பட்டது: "இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுகிறார்: நாம் உனக்குச் சொன்ன வாக்கியங்களையெல்லாம் ஒரு புத்தகத்தில் எழுது".

ஆண்டவர் மீண்டும் கூறுகிறார்: உன் காயம் ஆறாது, உன் புண் மிகவும் கொடியது; உன் காயத்தைக் கட்டுவார் ஒருவருமில்லை, உன் காயங்களை ஆற்றுவதற்கு மருந்தே இல்லை. உன் காதலர்கள் அனைவரும் உன்னை மறந்துவிட்டார்கள்; அவர்கள் உன்னைத் தேடுகிறதே இல்லை; நாமோ மாற்றானைத் தாக்குவதுபோல் உன்னைத் தாக்கினோம்; இரக்கமற்ற பகைவனைப்போலத் தண்டித்தோம்; ஏனெனில் உன் அக்கிரமம் மிகப் பெரியது; உன் பாவங்கள் மிக மோசமானவை. நீ நசிந்து போனதாய் ஏன் கூவுகிறாய்? உன் நோய் தீருவது இயலாத ஒன்று; ஏனெனில் உன் அக்கிரமம் மிகப் பெரியது; உன் பாவங்கள் மிக மோசமானவை. எனவேதான் இவற்றையெல்லாம் செய்தோம்.

மீண்டும் ஆண்டவர் கூறுகிறார்: நாம் யாக்கோபின் கூடாரங்களைத் திரும்ப நிலைநாட்டுவோம்; அவன் வீடுகளின்மீது இரக்கம் காட்டுவோம்; நகரம் தன் மலையின்மேல் மீண்டும் கட்டப்படும்; அரண்மனையும் முன்னிருந்த இடத்தில் அமைக்கப்படும்; அவர்களிடமிருந்து நன்றிக் கீதங்கள் எழும்பி வரும்; மகிழ்ச்சி கொண்டாடுவோரின் குரல்கள் கேட்கும்; நாம் அவர்களைப் பலுகச் செய்வோம்; அவர்கள் எண்ணிக்கையில் குறையமாட்டார்கள்; நாம் அவர்களை மகிமைப்படுத்துவோம்; இனி அவர்கள் சிறுமையடைய மாட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள் முன்னாளில் இருந்ததுபோலவே இருப்பார்கள்; அவர்களுடைய சபை நம் முன்னிலையில் நிலைநாட்டப்படும்; அவர்களைத் துன்புறுத்துவோர் அனைவரையும் தண்டிப்போம். அவர்களின் தலைவன் அவர்களுள் ஒருவனாகவே இருப்பான்; அவர்களை ஆளுபவன் அவர்கள் நடுவினின்றே தோன்றுவான்; அவன் நம்மை அணுகும்படி செய்வோம்; அவனும் நம்மை அணுகி வருவான்; ஏனெனில் தானாகவே நம்மை அணுகி வரத் துணிபவன் எவன்? என்கிறார் ஆண்டவர்.

நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள்; நாம் உங்கள் கடவுளாய் இருப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 101 : 15-17, 18-20, 27 & 21-22 (பல்லவி : 16)

பல்லவி : **ஆண்டவர் சீயோனை மீண்டும் எழுப்புவார் :**
**தம் மாட்சிமையில் அவர் விளங்குவார்.**

15 ஆண்டவரே, புறவினத்தார் உம் பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர் :
மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமை கண்டு மருள்வர்.
16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது, தம் மாட்சிமையில் அவர்
விளங்கும்போது,
17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார் : அவர்
களுடைய வேண்டுதலைப் புறக்கணியார். பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும் : உருவாகி வரும்
மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.
19-20 சிறைப்பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும், சாவுக்கென குறிக்கப்
பட்டவர்களை விடுவிக்கவும், உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று
ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார் : வானினின்று வையகத்தை
நோக்கினார். பல்லவி

27 உம் ஊழியரின் மக்கள் அச்சமின்றி வாழ்வார்கள் : அவர்கள் மக்கள் உம்
முன்னே நிலைத்திடுவர்.
21-22 இவ்வாறு ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படி மக்களினங்கள், அரசுகள்
அனைத்தும் ஒன்றாய்க் கூடும்போது,
ஆண்டவருடைய திருப்பெயர் சீயோனில் போற்றப்படும் : அவருடைய
புகழ் யெருசலேமிலும் சாற்றப்படும். பல்லவி

அல்லேலூயா அரு. 1 : 49 b

**அல்லேலூயா. ராபி, நீர் கடவுளின் மகன், நீரே இஸ்ராயேலின் அரசர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வரக் கட்டளையிட்டருளும்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

14: 22-36

மக்கள் வயிருர உண்டபின், தாம் மக்களை அனுப்பிக்கொண்டிருக்கையில், சீடர்கள் உடனே படகிலேறிக் கடலைக் கடந்து தமக்குமுன் அக்கரைக்குப் போகும்படி யேசு வற்புறுத்தினுர். கூட்டத்தை அனுப்பியதும் செபிக்கத் தனியாக மலைமீது ஏறினுர். இரவாயிற்று ; அங்குத் தனித்திருந்தார். படகோ, எதிர்காற்றடித்தபடியால் அலைகளால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

நான்காம் சாமத்தில் அவர் கடல்மீது நடந்து அவர்களை நோக்கி வந்தார். சீடரோ, அவர் கடல் மேல் நடப்பதைக் கண்டு கலங்கி, 'ஐயோ! பூதம்' என்று அச்சத்தால் அலறினர். உடனே யேசு, "தைரியமாயிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்" என்று அவர்களுக்குச் சொன்னுர்.

அதற்கு இராயப்பர், "ஆண்டவரே, நீர்தாம் என்ருல், நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வரக் கட்டளையிடும்" என்ருர். அவர், "வா" என்ருர். இராயப்பரும் படகினின்று இறங்கிக் கடல்மீது நடந்து யேசுவை நோக்கி வந்தார். காற்று பலமாயிருப்பதைக் கண்டு அஞ்சி மூழ்கப் போகையில், "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று அலறினுர். உடனே யேசு கையை நீட்டி, அவரைப் பிடித்து, "குறைவான விசுவாசம் உள்ளவனே, ஏன் தயங்கினுய் ?" என்ருர்.

அவர்கள் படகில் ஏறியதும் காற்று ஓய்ந்தது. படகில் இருந்தவர்கள் வந்து அவரைப் பணிந்து, "உண்மையாகவே நீர் கடவுள் மகன்" என்றனர்.

அவர்கள் கடலைக் கடந்து கெனேசரேத்தில் கரை சேர்ந்தனர். அவ்விடத்து மக்கள் அவரை அறிந்துகொண்டதும், சுற்றுப்புறமெங்கும் ஆள் அனுப்பி நோயாளிகள் அனைவரையும் அவரிடம் கொண்டுவந்து, அவருடைய போர்வை விளிம்பையாகிலும் தொடவிடும்படி அவரை வேண்டினர். தொட்டவர் அனைவரும் குணமாயினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது, இந்த வாசகம் "முதல் ஆண்டில்" முந்தின நாள் வாசிக்கப்பட்டிருந்தால்:

**என் வானகத் தந்தை நடாத நாற்றெல்லாம் பிடுங்கி எறியப்படும்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*15: 1-2, 10-14*

அக்காலத்தில்:

பரிசேயரும் மறைநூல் அறிஞரும் யெருசலேமிலிருந்து யேசுவிடம் வந்து "உம் சீடர், முன்னோர் பரம்பரையை மீறுவது ஏன்? அவர்கள் உண்ணும்பொழுது கை கழுவுவதில்லையே" என்றனர்.

கூட்டத்தைத் தம்மிடம் அழைத்து, "நான் சொல்லுவதைக் கேட்டு உணர்ந்து கொள்ளுங்கள். வாய்க்குள் நுழைவது மனிதனை மாசுபடுத்துவதில்லை. வாயிலிருந்து வெளிவருவதே மனிதனை மாசுபடுத்தும்" என்றார்.

அப்போது, சீடர் அவரை அணுகி, "பரிசேயர் இவ்வார்த்தையைக் கேட்டு இடறல் பட்டது உமக்குத் தெரியுமா?" என்றனர். அவரோ மறுமொழியாக, "என் வானகத் தந்தை நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும். அவர்கள் இருக்கட்டும்: அவர்கள் குருடருக்கு வழிகாட்டும் குருடர். குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால், இருவரும் குழியில் வீழ்வர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**விருப்பிற்குரிய நாட்டை அவர்கள் அசட்டை செய்தார்கள்.**

எண்ணாகமத்திலிருந்து வாசகம் *13: 2-3a, 26-14: 1, 26-30, 34-35*

அந்நாட்களில்:

பாரான் என்னும் பாலைவனத்திலே ஆண்டவர் மோயீசனை நோக்கி: நாம் இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுக்கவிருக்கும் கானான் நாட்டைச் சுற்றிப்பார்க்கும்படி நீ ஆட்களை அனுப்பு. ஒவ்வொரு கோத்திரத்தினின்றும் ஒரு தலைவரை அனுப்பக்கடவாய் என்றார்.

அவர்கள் நாட்டை முற்றிலும் சுற்றிப்பார்த்து நாற்பது நாளுக்குப் பின்பு திரும்பி, காதேஸில் இருக்கும் பாரான் பாலைவனத்திற்கு வந்து மோயீசன், ஆரோன் மற்றுமுள்ள இஸ்ராயேல் மக்கள் எல்லாரையும் பார்த்து, அவர்களோடும் மக்களோடும் பேசிக்கொண்டே நாட்டின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்கள் மோயீசனை நோக்கி: நீர் எங்களை அனுப்பிய நாட்டிற்கு நாங்கள் போய் வந்தோம். அது பாலும் தேனும் பொழியும் நாடு. இதற்குச் சான்று இந்தக் கனிகளே. ஆயினும், அந்த நாட்டிலே குடியிருக்கிற மக்கள் மிக வலியவர். அரண்கள் உள்ள பெரிய நகர்கள் பல இருக்கின்றன. அவ்விடத்தில் எனக்கின் குலத்தாரையும் கண்டோம். அமலேக்கியர் தென்புறத்திலும், எட்டையர், ஜெபுசேயர், அமோறையர் மலைநாட்டிலும் குடியிருக்கிறார்கள். கானானையரோ கடல் அருகிலும் யோர்தான் நதி பாயும் நாடுகளிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்.

அப்பொழுது மோயீசனுக்கு எதிராக மக்கள் முறுமுறுத்துப் பேசுவதைக் காலேப் கேட்டு, அவர்களை அமைதிப்படுத்தத் தக்கதாக: நாம் உடனே போய் அந்த நாட்டை உரிமையாக்கிக் கொள்வோம். எளிதாக அதைப் பிடித்துக் கொள்ளலாம் என்றான். ஆனால், அவனோடு போய் வந்த மற்ற மனிதரோ ஏது! நாம் போய் அம்மக்களோடு போராட முடியாது. நம்மைக் காட்டிலும் அவர்கள் வலியவர்கள் என்றார்கள்.

மேலும், நாங்கள் சுற்றிப் பார்த்து வந்தோமே அந்த நாடு தன் குடிகளை விழுங்குகிற நாடாம். நாங்கள் அதிலே கண்ட மக்கள் மிகவும் நெட்டையானவர்கள். அங்கே நாங்கள் கண்ட எனக்கின் குலத்தாரில் சிலர் எங்குமில்லாத அரக்கராய் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாக நாங்கள் வெட்டுக் கிளிகளைப்போல் இருந்தோம் என்றார்கள்.

அதைக் கேட்டு மக்கள் எல்லாரும் அன்றிரவு கூக்குரலிட்டுப் புலம்பினர்.

பின் ஆண்டவர் மோயீசனையும் ஆரோனையும் நோக்கி: பெரும் கயவராகிய இந்த மக்கள் எதுவரையிலும் நமக்கு விரோதமாய் முறுமுறுப்பார்கள்? இஸ்ராயேல் மக்களுடைய குறைப்பாடுகளைக் கேட்டுக் கொண்டோம். ஆகையால், நீ அவர்களுக்கு ஆண்டவர் சொல்கிறதாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நாம் வாழ்கிறவர். நீங்கள் நம் செவிகள் கேட்கச் சொல்லிய வண்ணமே உங்களுக்குச் செய்வோம். இந்தப் பாலைவனத்திலேயே உங்கள் பிணங்கள் கிடக்கும். உங்களில் இருபது வயது உள்ளவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமாக எண்ணப்பட்டவர்களில் எவரெவர் நமக்கு விரோதமாய் முறுமுறுத்துப் பேசினார்களோ அவர்களுள் ஜெப்பனேயின் புதல்வன் காலேப், நூனின் புதல்வன் ஜோசுவா என்பவர்களைத் தவிர மற்றெவனும், நாம் உங்களைக் குடியேறச் செய்வோமென்று ஆணையிட்டு வாக்குறுதி வழங்கிய அந்த நாட்டில் புகுவதில்லை. நீங்கள் அந்நாட்டைச் சுற்றிப்பார்த்த நாற்பது நாள் கணக்கின்படியே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆண்டாகக் கணிக்கப்படும். அப்படியே

நீங்கள் நாற்பது ஆண்டுகளாய் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து கொள்வதன் மூலம் நமது பழியைக் கண்டுணர்வீர்கள். நமக்கு விரோதமாய் எழும்பின மிகவும் பொல்லாத இந்த மக்களுக்கு நாம் பேசினபடியே செய்வோம். அவர்கள் இப்பாலைவனத்தில் வாடி வதங்கிச் சாவார்கள் என்பாய் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 105 : 6-7a, 13-14, 21-22, 23 (பல்லவி : 4a)

பல்லவி : நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப,
ஆண்டவரே, எங்களை நினைவுகூரும்.

அல்லது : அல்லேலூயா.

6 எங்கள் முன்னோர்களைப்போல நாங்களும் பாவம் செய்தோம், அக்கிரமம் செய்தோம். தீமைகள் புரிந்தோம்.
7 எங்கள் முன்னோர்கள் எகிப்தில் நீர் செய்த அற்புதச் செயல்களை உணரவில்லை. பல்லவி

13 ஆனால் அவர் செய்த செயல்களை விரைவிலேயே மறந்துவிட்டனர் : அவரது திட்டத்தின்மீது நம்பிக்கைகொள்ளவில்லை.
14 பாலைவெளியில் அவர்கள் தங்கள் இச்சைக்கு இடம் தரலாயினர் : கடவுளை அவர்கள் அங்கே சோதிக்கலாயினர். பல்லவி

21 தங்களை மீட்டுக்கொண்ட கடவுளை அவர்கள் மறந்தனர் : எகிப்தில் புதுமை செய்தவரை மறந்தனர்.
22 காமின் நாட்டில் நிகழ்ந்த அற்புதங்கள் ஆற்றியவரை, செங்கடலருகே வியப்புக்குரியன செய்தவரை மறந்தனர். பல்லவி

23 இறைவன் அவர்களை அடியோடு தொலைத்துவிட எண்ணினார் : ஆனால் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோயீசன் குறுக்கிட்டார்.
அவரிடம் அவர்களுக்காகப் பரிந்துபேசினார் : அவர் கொண்ட சினத்தை அமர்த்தலானார். அவர்களை அழித்துவிடாதபடி செய்தார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**முடிவில்லாத அன்பினால் உன்மேல் அன்பு வைத்தோம்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *31: 1-7*

"ஆண்டவர் மீண்டும் கூறுகிறார் : அக்காலத்தில், இஸ்ராயேலின் எல்லாக் குடும்பங்களுக்கும் நாமே கடவுளாய் இருப்போம்; அவர்கள் நம் மக்களாய் இருப்பர்."

ஆண்டவர் கூறுகிறார் : "வாளுக்குத் தப்பிப் பிழைத்த ஒரு மக்களினம், பாலைநிலத்தில் நம் அருளைக் கண்டடைந்தது; இஸ்ராயேல் இளைப்பாற்றியைத் தேடியபோது, ஆண்டவர் அவனுக்குத் தொலைவில் தோன்றினார்; முடிவில்லாத அன்பினால் உன்மேல் அன்பு வைத்தோம், ஆதலால் உனக்குத் தொடர்ந்து அன்பு செய்கிறோம். இஸ்ராயேலாகிய கன்னிப் பெண்ணே, உன்னை நாம் மீண்டும் கட்டுவோம், நீ கட்டப்படுவாய்; மீண்டும் நீ மேளதாளத்தோடு மகிழ்ச்சி கொண்டாடுவாரோடு ஆடிப்பாடி வெளிப்படுவாய். சமாரியா நாட்டு மலைகளின்மேல் மீண்டும் நீ திராட்சைக் கொடிகளை நடுவாய்; நடுகிறவர்கள் நடுவார்கள், அதன் கனிகளை உண்டு களிப்பார்கள்; நாள் வரும்; அப்போது எப்பிராயீம் மலையில் காவலர், 'எழுந்து வாருங்கள், சீயோனுக்கு நம் கடவுளாகிய ஆண்டவரிடம் செல்வோம்' என்று கூவுவார்கள்."

ஆண்டவர் தொடர்ந்து கூறுகிறார் : "யாக்கோபைக் குறித்து மகிழ்ச்சியினால் அக்களியுங்கள்; மக்களின் தலைவர்களைக் குறித்து ஆர்ப்பரியுங்கள், குரலையுயர்த்தி அறிவியுங்கள், புகழ் பாடுங்கள் : 'ஆண்டவர் தம் மக்களை மீட்டார், இஸ்ராயேலில் எஞ்சினவர்களை மீட்டார்' என்று சொல்லுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

எரே. 31: 10,11-12ab, 13 (பல்லவி: 10d)

பல்லவி : **ஆயன் மந்தையைக் காப்பதுபோல்**
**ஆண்டவர் நம்மைக் காத்தருள்வார்.**

10 புறவினத்தாரே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள் : கேட்டுத் தொலைவிலுள்ள தீவுகளுக்கு அறிவியுங்கள் : 'இஸ்ராயேலைச் சிதறடித்தவர் அவர்களைச் சேர்ப்பார், ஆயன் மந்தையைக் காப்பதுபோல் அவர்களைக் காப்பார்' என்று சொல்லுங்கள். பல்லவி

11 ஏனெனில் ஆண்டவர் யாக்கோபை மீட்டார்; வலியவன் கையினின்று
அவனை விடுவித்தார்.
12 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியில் பாடிப் போற்றுவார்கள், ஆண்டவர்
அவர்களுக்கு அளிக்கும் நன்மைகளை நாடிக் கூட்டமாய் ஓடிவருவார்கள்.
பல்லவி

13 அப்போது கன்னிப் பெண்கள் நாட்டியமாடிக் களிப்பார்கள்; இளைஞரும்
முதியோரும் அவ்வாறே மகிழ்வார்கள். அவர்களுடைய அழுகையை
அக்களிப்பாக மாற்றுவோம்; அவர்களைத் தேற்றித் துயரத்தைப் போக்கி,
அவர்களை மகிழச் செய்வோம். பல்லவி

அல்லேலூயா லூக். 7: 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்: கடவுள் தம் மக்களைத் தேடிவந்திருக்கின்றார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அம்மா, உன் விசுவாசம் பெரிது.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15: 21-28

அக்காலத்தில்:

யேசு அங்கிருந்து விலகி, தீர், சீதோன் நகரங்களின் பக்கம் சென்றார். இதோ! அங்கே வாழ்ந்த கனானேயப் பெண் ஒருத்தி அவரிடம் வந்து, "ஆண்டவரே, தாவீதின் மகனே! என்மேல் இரக்கம் வையும். என் மகள் பேய் பிடித்துப் பெரிதும் துன்புறுகிறாள்" என்று கூவினாள். அவர் ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லவில்லை.

சீடர் அவரை அணுகி, "இவள் நமக்குப்பின் கத்திக்கொண்டு வருகிறாளே; இவளை அனுப்பிவிடும்" என்று வேண்டினர். அதற்கு அவர், "இஸ்ராயேல் குலத்தில் சிதறிப்போன ஆடுகளிடமட்டுமே நான் அனுப்பப்பட்டேன்" என்றார்.

அவளோ வந்து அவரைப் பணிந்து, "ஆண்டவரே, எனக்கு உதவி புரியும்" என்றாள். அவர் மறுமொழியாக, "பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குப் போடுதல் நல்லதன்று" என்றார். அவளோ, "ஆமாம், ஆண்டவரே, நாய்க்குட்டிகளும் உரிமையாளரின் மேசையினின்று கீழே விழும் சிறு துண்டுகளைத் தின்கின்றனவே" என்றாள்.

அப்போது யேசு அவளுக்கு மறுமொழியாக, "அம்மா, உன் விசுவாசம் பெரிது. உன் விருப்பப்படியே ஆகட்டும்" என்றார். அந்நேர முதல் அவள் மகள் குணமாயிருந்தாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

உமது செல்வமாகிய நல்ல நீரூற்றை இவர்களுக்குத் தந்தருள்வீர்.

எண்ணாகமத்திலிருந்து வாசகம் 20: 1-13

அந்நாட்களில்:

இஸ்ராயேல் மக்களாகிய சபையாரெல்லாம் முதல் மாதத்திலே சின் என்னும் பாலைவனத்தை அடைந்தபோது, அவர்கள் காதேஸில் தங்கிக் கொண்டு இருக்கையிலே மரியாள் இறந்து அவ்விடத்தில் அடக்கம் செய்யப்பட்டாள்.

அப்போது மக்களுக்குத் தண்ணீர் இல்லாததைப்பற்றி மோயீசனுக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் மக்கள் கூட்டம் கூடி, குழப்பஞ் செய்துகொண்டு: எங்கள் சகோதரர்கள் ஆண்டவருடைய முன்னிலையில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருந்திருக்குமே. நீங்கள் ஆண்டவருடைய சபையைப் பாலைவனத்திற்கு அழைத்துக் கொண்டு வருவானேன்? நாங்களும் எங்கள் மிருகங்களும் சாகும்படி தானோ? இங்கே விதைப்புமில்லை; அத்திமரமும் இல்லை; கொடிமுந்திரியும் இல்லை; மாதுளஞ் செடியும் இல்லை; குடிக்கத் தண்ணீர் முதலாய் இல்லை. நீங்கள் எங்களை எகிப்து நாட்டினின்று இந்த வறண்ட இடத்திற்குக் கொண்டு வந்ததென்ன? என்றார்கள்.

அப்பொழுது மோயீசனும் ஆரோனும் மக்களை அனுப்பிவிட்டு, உடன்படிக்கைக் கூடாரத்தினுள் போய்த் தரையில் குப்புற விழுந்து, ஆண்டவரை நோக்கி ஆண்டவராகிய கடவுளே! இந்த மக்களின் கூக்குரலைக் கேட்டருள்வீர். அவர்கள் திருப்தியடைந்து முறுமுறுக்காதபடி உமது செல்வமாகிய நல்ல நீரூற்றைத் தந்தருள்வீர் என்றார்கள்.

அந்நேரமே ஆண்டவருடைய மாட்சி அவர்களுக்குக் காணப் பட்டது. ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ உன் கோலை எடுத்துக் கொண்டு, நீயும் உன் சகோதரன் ஆரோனும் மக்களைக் கூடி வரச் செய்

யுங்கள். அவர்கள் கண்களுக்கு முன்னே நீங்கள் கற்பாறையைப் பார்த்துப் பேசினால் அதிலிருந்து தண்ணீர் புறப்படும். அவ்விதமாய் நீ கற்பாறையிலிருந்து அவர்களுக்குத் தண்ணீர் சுரக்கச் செய்த பிற்பாடு அவர்கள் எல்லாரும் குடிப்பார்கள ; அவர்களுடைய மிருகங்களும் குடிக்கும் என்றார்.

ஆகையால், மோயீசன் ஆண்டவருடைய கட்டளைப்படி ஆண்டவருடைய முன்னிலையிலிருந்த கோலை எடுத்துக்கொண்டார். சபையெல்லாம் கற்பாறைக்கு முன்பாகக் கூடியபோது, மோயீசன் அவர்களை நோக்கி: விசுவாசமில்லாத குழப்பக்காரர்களே, கேளுங்கள்! இப்பாறையினின்று உங்களுக்குத் தண்ணீர் சுரக்கச் செய்வது எங்களால் கூடுமானதோ? என்று சொல்லி, தன் கையை ஓங்கிக் கற்பாறையைக் கோலினால் இரு முறை அடித்தார். அதிலிருந்து தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. மக்களெல்லாம் குடித்தார்கள்; மிருகங்களும் குடிக்கத் தொடங்கின.

பின்பு ஆண்டவர் மோயீசனையும் ஆரோனையும் நோக்கி: நீங்கள் நம்மை நம்பாமலும் இஸ்ராயேல் மக்கள் கண்களுக்கு முன்பாக நம் புனிதத் தன்மையைப் பேணாமலும் நடந்தீர்களாதலால், நாம் அவர்களுக்குக் கொடுக்கவிருக்கிற நாட்டிற்கு நீங்கள் அவர்களைக் கொண்டு போவதில்லை என்றார். இவ்விடத்தில் இஸ்ராயேல் மக்கள் ஆண்டவருக்கு விரோதமாய் வாக்குவாதம் செய்தும் அவருடைய புனிதத்தன்மை அவர்களிடையே விளங்கினதனாலே அந்தத் தண்ணீர் "வாக்குவாதத் தண்ணீர்" எனப்பட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 94 : 1-2, 6-7, 8-9 (பல்லவி : 8b, 7b)*

பல்லவி : 'உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்' என்னும்
ஆண்டவரது குரலை இன்று நீங்கள் கேட்பீர்களா!

1 வாருங்கள், ஆண்டவருக்குப் புகழ் பாடுவோம். மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்: இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம், நம்மைப் படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது : பல்லவி

அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல் உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
"அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்; என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்." பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**புதியதொரு உடன்படிக்கை செய்வோம்; அவர்களது பாவத்தை இனி நினைவுகூரமாட்டோம்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *31: 31-34*

"இதோ, நாட்கள் வருகின்றன: அப்போது நாம் இஸ்ராயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை செய்வோம், என்கிறார் ஆண்டவர்; இது, நாம் எகிப்து நாட்டினின்று விடுவித்து, இவர்களுடைய தந்தையரைக் கைபிடித்து நடத்திவந்தபோது நாம் அவர்களோடு செய்த உடன்படிக்கையைப் போன்றிராது; நாம் அவர்களின் தலைவராய் இருந்தும் நம் உடன்படிக்கையை அவர்கள் முறித்துப் போட்டார்கள், என்கிறார் ஆண்டவர். அந்நாள் வரும்போது நாம் இஸ்ராயேல் வீட்டாரோடு செய்யப்போகும் உடன்படிக்கை இதுவே: நமது திருச்சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்போம்; அவர்களுடைய இதயங்களின்மேல் அதை எழுதுவோம்; நாம் அவர்களின் கடவுளாய் இருப்போம்; அவர்கள் நம் மக்களாய் இருப்பர், என்கிறார் ஆண்டவர். இனி ஒவ்வொருவனும் தன் அயலானையோ, தன் சகோதரனையோ பார்த்து, 'ஆண்டவரை அறிந்துகொள்' என்று சொல்லிக் கற்பிக்க மாட்டான்; ஏனெனில், அவர்களுள் சிறியவன் முதல் பெரியவன்வரை அனைவரும் என்னை அறிந்து கொள்வார்கள், என்கிறார் ஆண்டவர்; ஏனெனில் அவர்களுடைய அக்கிரமத்தை நாம் மன்னித்து விடுவோம், அவர்களுடைய பாவத்தை இனிமேல் நினைவுகூரவே மாட்டோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 51: 10-11, 12-13, 16-17 (பல்லவி: 10a)

பல்லவி: தூயதோர் உள்ளத்தை, இறைவா,
நீர் என்னகத்தே உருவாக்கும்.

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்: உறுதி
தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்: உமது பரிசுத்த
ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்: பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்; உமது பெருந்
தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன்: பாவிகள் உம்மிடம்
திரும்பி வருவர். பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை: தகனப்பலி கொடுத்
தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நாம் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே:
தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.
பல்லவி

அல்லேலூயா மத். 16 : 18

அல்லேலூயா. உன் பெயர் பாறை, இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உன் பெயர் பாறை, வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16: 13-23

அக்காலத்தில்:

யேசு பிலிப்புச் செசரியா நகர்ப்புறம் வந்து தம் சீடரைப் பார்த்து, "மனுமகனை யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அவர்களோ, "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் எரேமியாஸ் அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர்.

“ நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் ? ” என்று யேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, “ நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன் ” என்றார்.

அதற்கு யேசு, “யோனாவின் மகன் சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில், இதை உனக்கு வெளிப்படுத்தியது மனித வல்லமையன்று, வானகத்திலுள்ள என் தந்தையே. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: உன் பெயர் ‘பாறை.’ இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. வானகத்தின் திறவு கோல்களை உனக்குக் கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் கட்டப்பட்டதாகவே இருக்கும். எதெல்லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும் ” என்றார்.

பின்னர், தாம் மெசியா என்பதை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று தம் சீடருக்குக் கட்டளையிட்டார்.

அதுமுதல் யேசு தாம் யெருசலேமுக்குச் சென்று மூப்பர், மறைநூல் அறிஞர், தலைமைக் குருக்கள் இவர்கள் கையால் பாடுகள் பல படவும், கொலையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழவும் வேண்டும் எனத் தம் சீடருக்கு விளக்கத் தொடங்கினார்.

இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து, “ ஆண்டவரே, ஐயோ! இது வேண்டாம். இஃது உமக்கு நேராது ” என்று அவரைக் கடிந்து கொண்டார். அவர் திரும்பி இராயப்பரிடம், “போ பின்னாலே, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய். ஏனெனில், உன் கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல, மனிதனுடைய கருத்துக்களே” என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உன் தந்தையரை நேசித்து, அவர்களுக்குப் பின் அவர்கள் சந்ததியைத் தேர்ந்து கொண்டார்.**

உப ஆகமத்திலிருந்து வாசகம் *4: 32-40*

*மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:*

கடவுள் உலகிலே மனிதனைப் படைத்த நாள்முதல் உனக்கு முற்பட்ட பழைய நாட்களில், வானத்தின் ஒரு கடைசி எல்லை தொடங்கி மறு எல்லை வரையிலுமுள்ள எவ்விடத்திலேனும், இப்படிப்பட்ட காரியம் நடந்ததுண்டோ அல்லது எப்போதேனும் கேள்விப்பட்டதுண்டோ என்று விசாரித்துக்கேள். நெருப்பின் நடுவிலிருந்து பேசின கடவுளின் குரலொலியை நீ சாகாமல் கேட்டதுபோல யாதொரு மக்களேனும் கேட்டதுண்டோ? அல்லது உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம், கடவுள் மற்ற மக்களுக்குள்ளே ஓர் இனத்தைத் தமக்கென்று, சோதனைகளாலும் அடையாளங்களாலும் அற்புதங்களாலும் போரினாலும் வலிமையினாலும் ஓங்கிய கையாலும் மிகவும் பயங்கரமான காட்சிகளாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ள, வகை செய்ததுண்டோ என்று நீ விசாரித்துப்பார். ஆண்டவரே கடவுள்; அவரைத்தவிர வேறே கடவுள் இல்லையென்பதை நீ அறியும்படியன்றோ (அவர் அவையெல்லாம் செய்தார்)?

உனக்குக் கற்பிக்கக் கருதி, அவர் வானத்தினின்று தமது குரலொலியை உனக்குக் கேட்கச்செய்து, பூமியிலே தமது கொடிய நெருப்பை உனக்குக் காண்பித்தார். நெருப்பின் நடுவிலிருந்து வந்த அவருடைய வார்த்தைகளை நீயே கேட்டாய். உன் தந்தையரை நேசித்ததனாலும், அவர்களுக்குப்பின் அவர்கள் சந்ததியைத் தேர்ந்து கொண்டதனாலும், அவர் தமது மிகுந்த வல்லபத்துடன் உனக்குமுன் நடந்து எகிப்திலிருந்து உன்னைப் புறப்படச் செய்தார். உன்னிலும் வலிமை மிக்க இனத்தவரை அடியோடு அழிக்கும்படி உன்னை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய நாட்டிலே உன்னைப் புகுவித்து, அந்த நாட்டை உனக்கு உரிமையாகக் கொடுத்தார். இது இந்நாளில் நடக்கிற காரியம்தானே?

**ஆகையால், மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் கடவுளாகிய ஆண்டவரே கடவுள்; அவரைத் தவிர வேறொருவருமில்லை என்பதை நீ இன்று அறிந்து உன் இதயத்தில் சிந்திக்கக்கடவாய். உனக்கும், உனக்குப் பின் உன் புதல்வருக்கும் நன்மையாகும் பொருட்டும், உன் கடவுளாகிய**

ஆண்டவர் உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ நெடுங்காலம் வாழும் பொருட்டும், நான் உனக்குக் கற்பிக்கிற அவரது கட்டளையையும் சட்டங்களையும் கைக்கொண்டு ஒழுகக்கடவாய் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 76 : 11-12, 13-14, 15 & 20 (பல்லவி : 11a)

பல்லவி : ஆண்டவருடைய செயல்களை நினைத்தேன்.

11 ஆண்டவருடைய செயல்களை நினைத்தேன். ஆதி முதல் அவர் செய்த
வியத்தகு செயல்களை மறக்கமாட்டேன்.
12 உம் செயல்கள் அனைத்தையும்பற்றித் தியானம் பண்ணுவேன். உம் அரிய
செயல்களில் என் மனத்தைச் செலுத்துவேன். பல்லவி

13 இறைவா, நீர் காட்டிய வழி புனிதமானது;
14 நம்முடைய இறைவனைப்போல் மகத்துவமுள்ள வேறு கடவுள் யார் ?
பல்லவி

15 அரியன செய்கிற கடவுள் நீரே. மக்களிடையில் உமது வல்லமை விளங்கச்
செய்தீர். யாக்கோபு, சூசை இவர்களுடைய சந்ததியாகிய உம் மக்களை
உமது கரத்தால் மீட்டீர்.
20 மந்தையைப்போல் உம் மக்களை நடத்திச் சென்றீர் : மோயீசன், ஆரோன்
இவர்களைக்கொண்டு அழைத்துச் சென்றீர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**இரத்தக்கறை படிந்த நகரத்துக்கு ஐயோ கேடு!**

இறைவாக்கினர் நாகும் ஆகமத்திலிருந்து வாசகம்

*1: 15; 2: 2; 3: 1-3, 6-7*

இதோ, சமாதானத்தை அறிவிக்கும் நற்செய்தியைக் கொண்டு வருகிறவனின் கால்கள் மலைகளின்மேல் நடந்து வருகின்றன! யூதாவே, உன் திருவிழாக்களைக் கொண்டாடு, உன் நேர்ச்சிக்கடன்களை நிறைவேற்று; ஏனெனில் பெலியால் உன் நடுவில் இனி வரவே மாட்டான், அவன் முற்றிலும் அழிந்து போனான்.

இஸ்ராயேலின் மாட்சிமை போலவே யாக்கோபின் மாட்சிமையை ஆண்டவர் மறுபடி நிலைநாட்டுகிறார்; கொள்ளைக்காரர்கள் அவற்றைக் கொள்ளையடித்தனர், அவற்றின் கிளைகளை அவர்கள் முறித்துப்போட்டனர்.

இரத்தக்கறை படிந்த நகரத்துக்கு ஐயோ கேடு! அதில் பொய்களும் கொள்ளைப்பொருளும் நிறைந்துள்ளன, சூறையாடல் அங்கே ஓயாமல் நடக்கிறது. இதோ சாட்டைகளின் ஓசை, சக்கரங்களின் கிறீச்சொலி, தாவிப்பாயும் குதிரைகள், உருண்டு வரும் தேர்கள்! சீறித் தாக்கும் குதிரை வீரர்கள், மின்னும் வாள், பளபளக்கும் ஈட்டி, வெட்டுண்டவர்களின் கூட்டம், பிணங்களின் குவியல், செத்தவர்களுக்குக் கணக்கில்லை — பிணங்களின்மேல் இடறி விழுகின்றனர்!

அருவருப்பானவற்றை உன்மீது எறிவோம், உன்னை வெறுப்புடன் நடத்திப் பகடிப் பொருள் ஆக்குவோம்; உன்னை ஏறெடுத்துப் பார்ப்பவரெல்லாம் பின்வாங்கி, 'நினிவே பாழாய்ப் போய்விட்டது' என்று சொல்லுவார்கள்; உனக்காக இரங்குவோர் உண்டோ? உனக்கு ஆறுதல் சொல்வாரை எங்கே தேடுவோம்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

உப. 32:35cd-36ab, 39abcd, 41 (பல்லவி: 39c)

பல்லவி: நாமே கொல்லுகிறோம், நாமே உயிர்ப்பிக்கிறோம்.

35 அழிவு நாள் இதோ நெருங்கியிருக்கிறது, குறிக்கப்பட்ட காலங்கள் ஓடி
36 வருகின்றன. ஆண்டவர் தம் மக்களை நியாயந் தீர்த்து, தமக்கு அன்பு
செய்து பணி புரிவோர்மேல் மனம் இறங்குவார். பல்லவி

39 நாம் மட்டுமே இருக்கிறவர். நம்மைத் தவிர வேறு கடவுள் இல்லை. நாம் மட்டுமே கொல்லுகிறோம், உயிர்ப்பிக்கிறோம். நாம் மட்டுமே காயப்படுத்தி, காயப்பட்டவனைக் குணமாக்குகிறோம். பல்லவி

41 நாம் மின்னலைப்போல் நமது வாளைக் கூராக்கி நம் கையில் நியாயத்தைப் பிடித்துக்கொண்டு வருவோமாயின், நம் பகைவரிடம் பழிவாங்கி, நம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்போமன்றோ? பல்லவி

## அல்லேலூயா

மத். 5:10

அல்லேலூயா. நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுப்பான்?**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*16: 24-28*

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டுத் தன் உயிரை இழப்பவனே அதைக் கண்டடைவான். ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மா விற்குக் கேடு விளைந்தால், அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுப்பான்?

மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் தம் வானதூதரோடு வரப்போகிறார். அப்பொழுது ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயலுக்கு ஏற்பக் கைம்மாறு அளிப்பார். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுமகன் தம் அரசில் வருவதைக் காணும்வரை இங்கு இருப்பவர்களுள் சிலர் சாவுக்கு உள்ளாக மாட்டார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**உன் முழு இதயத்தோடு உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக.**

உப ஆகமத்திலிருந்து வாசகம்

*6: 4-13*

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:

இஸ்ராயேலே, உற்றுக்கேள். நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆன்மாவோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக.

இன்று நான் உனக்குக் கற்பிக்கிற இந்த வார்த்தைகள் உன் இதயத்திலே பதியக் கடவன. நீ அவைகளை உன் புதல்வர்களுக்கு விவரித்துச் சொல்லவும், நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும் வழியில் நடந்து போகும்போதும், தூங்கும் வேளையிலும் விழித்தெழுந் திருக்கையிலும் அவைகளைத் தியானிக்கவும் கடவாய். அவற்றை உன் கையிலே அடையாளம்போல் கட்டுவாய். அவைகளை உன் கண்களுக்கு நடுவே தொங்கியாடும்படி வைக்கவும், உன் வீட்டின் வாயிற்படியிலும் கதவின் நிலைகளிலும் அவைகளை எழுதவும் கடவாய்.

பின்னும், உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுப்போம் என்று ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்பவர்களாகிய உன் மூதாதையருக்கு ஆணையிட்டுக் கொடுத்த நாட்டில் உன்னைப் புகச் செய்யும் போதும், நீ ஏற்படுத்தாத வசதியான பெரிய நகரங்களையும், நீ கட்டாத, எல்லாச் செல்வங்களாலும் நிறைந்த வீடுகளையும், நீ வெட்டாத கிணறுகளையும், நீ நடாத கொடிமுந்திரித் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் அவர் உனக்குக் கொடுக்கும்போதும், நீ உண்டு நிறைவுகொண்ட பின்னர், உன்னை எகிப்து நாட்டினின்றும் அடிமை வாழ்வினின்றும் புறப்படச் செய்த ஆண்டவரை மறவாதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாய் இருப்பாயாக.

நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி, அவரொருவருக்கே பணிந்து, அவருடைய பெயரைக்கொண்டு ஆணையிடுவாயாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 17 : 1-2a, 2bc-3, 46 & 50 ab (பல்லவி : 1)*

பல்லவி : **ஆண்டவரே, என் ஆற்றலாயுள்ளவரே,**
**உமக்கு நான் அன்பு செய்கிறேன்**

1 என் ஆற்றலாய் உள்ளவரே, ஆண்டவரே, உமக்கு நான் அன்பு செய்கிறேன் :
2 ஆண்டவரே, நீரே என் கற்பாறை, என் அரண், என் மீட்பர். பல்லவி

என் இறைவனாய் உள்ளவரே, நான் அடைக்கலம் புகுவதற்கு ஏற்ற கோட்டையாக உள்ளவரே, என் கேடயமும் எனக்கு மீட்பளிக்கும் வலிமையும் என் அடைக்கலமுமாக உள்ளவரே !
3 புகழ்ச்சிக்குரிய ஆண்டவரை நான் கூவி அழைப்பேன் :
என் எதிரிகளினின்று மீட்படைவேன். பல்லவி

46 ஆண்டவர் வாழ்க, என் கற்பாறையாகிய அவர் வாழ்த்தப்பெறுவாராக :
என் மீட்பரான இறைவன் பெரிதும் புகழப்படுவாராக.
50 நீர் ஏற்படுத்திய அரசருக்குப் பெரிய வெற்றிகளை அளித்தவர் நீரே :
உம்மால் அபிஷேகமானவருக்கு இரக்கம் காட்டியவர் நீரே. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீதிமான் தன் விசுவாசத்தினுல் வாழ்வான்.**

இறைவாக்கினர் அபாக்கூக் ஆகமத்திலிருந்து வாசகம் 1: 12-2: 4

ஆண்டவரே, என் இறைவா, என் பரிசுத்தரே, தொன்றுதொட்டே நீர் இருக்கிறீர் அன்ருே? நாங்கள் சாவைக் காணமாட்டோம். ஆண்டவரே, அவர்களை எங்கள்மேல் தண்டனைத் தீர்ப்பாய் வைத்தீர், புகலிடமே, எங்களைச் சாடும் சாட்டையாய் நீர் அவர்களை ஆக்கினீர். உம்முடைய தூய கண்கள் தீமையைக் காணக் கூசுகின்றன, நீர் கொடுமையைப் பார்க்கத் தாங்காதவர் ; தீமை செய்பவர்களை நீர் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறீர்? தன்னிலும் நேர்மையானவனைப் பொல்லாதவன் ஒருவன் விழுங்கும்போது நீர் பேசாமல் இருப்பதெப்படி?

மனிதர்களை நீர் கடல் மீன்களைப்போலும், ஆளுநன் இல்லாத ஊர்வனவற்றைப் போலும் நடத்துகிறீர். அவர்கள் மற்றவர்களையெல்லாம் தூண்டிலால் பிடிக்கிருர்கள், வலையால் வாரி இழுக்கிருர்கள் ; தங்கள் பறியில் கூட்டிச் சேர்க்கிருர்கள், அகமகிழ்ந்து அக்களிக்கிருர்கள். ஆதலால் தங்கள் வலைக்குப் பலிசெலுத்துகிருர்கள் ; பறிக்குத் தூபம் காட்டுகிருர்கள் ; ஏனெனில் அவற்ருல் அவர்கள் இன்ப வாழ்வு பெறுகிருர்கள், அறுசுவை உண்டியும் அவற்ருல் கிடைக்கிறது. அப்படியாளுல், அவர்கள் தங்கள் வலையிலிருப்பதை விடாமல் கொட்டி, மக்களினங்களை இரக்கமின்றி எந்நாளும் கொன்று குவிப்பார்களோ?

நான் சாமக் காவலனுய் நிற்பேன், காவற் கோட்டைமேல் இருந்து காவல் புரிவேன் ; எனக்கு அவர் என்ன சொல்லப் போகிருர் என்றும், என் முறையீட்டுக்கு என்ன விடைதருவார் என்றும் பார்ப்பதற்காகக் காத்திருப்பேன்.

ஆண்டவர் எனக்களித்த மறுமொழி இதுவே: "காட்சியை எழுதி வை ; விரைவாய்ப் படிக்கும்படி பலகைகளில் தெளிவாய் எழுது. இன்னும் குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி காத்திருக்கிறது, ஆயினும் முடிவை நோக்கி விரைந்து போகிறது, பொய்யாகாது ; காலந்

தாழ்த்துவதாகத் தெரிந்தால், எதிர்பார்த்திரு; அது நிறைவேறியே தீரும், தவணை மீறுது. இதோ, விசுவசியாதவன் நேர்மையான உள்ளத்தினன் அல்லன், ஆனால் நீதிமான் தன் விசுவாசத்தினால் வாழ்வான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 9:7-8, 9-10, 11-12 (பல்லவி: 10b)

பல்லவி: **ஆண்டவரே, உம்மைத் தேடுவோரை நீர் கைநெகிழ்வதில்லை.**

7 ஆண்டவரோ என்றும் தம் அரியணையில் அமர்ந்துள்ளார்: நீதி வழங்கத்
தம் அரியணையை நிறுவியுள்ளார்.
8 அவர் தாமே உலகினர்க்கெல்லாம் நீதியுடன் தீர்ப்புக் கூறுவார்:
நேர்மையோடு மக்களனைவர்க்கும் நீதி வழங்குவார். பல்லவி

9 ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆண்டவர் அடைக்கலமாயிருப்பார்:
இடுக்கண் நேரும்போதெல்லாம் ஏற்ற சரண் அவரே.
10 உம் பெயரை அறிந்தோர் உம்மீது நம்பிக்கை கொள்வர்: உம்மைத்
தேடுவோரை நீர் கைநெகிழ்வதில்லை, ஆண்டவரே. பல்லவி

11 சீயோனில் உறையும் ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்: மக்களினங்க
ளிடையே அவருடைய அருஞ்செயல்களை அறிவியுங்கள்.
12 இரத்தப் பழிவாங்கும் அவர், அவர்களை நினைவில் கொண்டுள்ளார்:
எளியோரின் கூக்குரலைக் கேட்க மறவார். பல்லவி

அல்லேலூயா — 2 திமோ. 1:10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து, வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச்செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்களுக்கு விசுவாசம் இருந்தால், உங்களால் முடியாதது ஒன்றும் இராது.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**
17 : 14-19

அக்காலத்தில் :

ஒருவன் யேசுவை அணுகி அவர்முன் முழந்தாளிட்டு, "ஆண்டவரே, என் மகன்மேல் இரக்கம் வையும். ஏனெனில், அவன் வலிப்பினால் துன்பப் படுகிறான். அடிக்கடி நெருப்பிலும் நீரிலும் விழுகிறான். அவனை உம் சீடரிடம் கொண்டுவந்தேன். அவனைக் குணமாக்க அவர்களால் முடியவில்லை" என்றான்.

அதற்கு யேசு, "விசுவாசம் இல்லாத சீர்கெட்ட தலைமுறையே, எதுவரை உங்களுடன் இருப்பேன்? எதுவரை உங்களைப் பொறுத்துக் கொண்டிருப்பேன்? அவனை என்னிடம் இங்குக் கொண்டுவாருங்கள்" என்றார். யேசு அவனைக் கடிய, பேய் அவனை விட்டு நீங்கியது. அந்நேர முதல் பையன் குணமாயிருந்தான்.

பின், சீடர் தனிமையாக யேசுவை அணுகி, "அதை ஓட்ட ஏன் எங்களால் முடியவில்லை?" என்று வினவினர்.

அதற்கு யேசு கூறியது: "உங்கள் விசுவாசக் குறைவினால்தான். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இம்மலையை நோக்கி, 'இவ்விடம் விட்டு அவ்விடம் செல்' என்றால் அது பெயர்ந்து செல்லும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## நற்செய்தி வாசகம்

**உங்களுக்கு விசுவாசம் இருந்தால், உங்களால் முடியாதது ஒன்றும் இராது.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**
17: 14-19

**அக்காலத்தில்:**

**ஒருவன் யேசுவை அணுகி அவர்முன் முழந்தாளிட்டு, "ஆண்டவரே, என் மகன்மேல் இரக்கம் வையும். ஏனெனில், அவன் வலிப்பினால் துன்பப் படுகிறான். அடிக்கடி நெருப்பிலும் நீரிலும் விழுகிறான். அவனை உம் சீடரிடம் கொண்டுவந்தேன். அவனைக் குணமாக்க அவர்களால் முடிய வில்லை" என்றான்.**

**அதற்கு யேசு, "விசுவாசம் இல்லாத சீர்கெட்ட தலைமுறையே, எதுவரை உங்களுடன் இருப்பேன்? எதுவரை உங்களைப் பொறுத்துக் கொண்டிருப்பேன்? அவனை என்னிடம் இங்குக் கொண்டுவாருங்கள்" என்றார். யேசு அவனைக் கடிய, பேய் அவனை விட்டு நீங்கியது. அந்நேர முதல் பையன் குணமாயிருந்தான்.**

**பின், சீடர் தனிமையாக யேசுவை அணுகி, "அதை ஓட்ட ஏன் எங்களால் முடியவில்லை?" என்று வினவினர்.**

**அதற்கு யேசு கூறியது: "உங்கள் விசுவாசக் குறைவினால்தான். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இம்மலையை நோக்கி, 'இவ்விடம் விட்டு அவ்விடம் செல்' என்றால் அது பெயர்ந்து செல்லும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது".**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# பத்தொன்பதாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவருக்கு முன்பாக மலையின்மேல் நில்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *19: 9a, 11-13a*

*அந்நாட்களில்:*

எலியாஸ் ஓரேப் என்னும் கடவுளின் மலையை அடைந்தபின், ஒரு குகைக்குள் தங்கியிருந்தார். அப்பொழுது ஆண்டவர் அவரை நோக்கி, "நீ வெளியே வந்து ஆண்டவருக்கு முன்பாக மலையின்மேல் நில்; ஏனெனில், ஆண்டவர் இதோ கடந்து செல்கிறார்" என்றார்.

அப்பொழுது ஆண்டவருக்கு முன்பாகக் குன்றுகளைப் பெயர்த்துக் கொண்டும், கற்பாறைகளைப் பிளந்துகொண்டும் வலுத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆயினும் அக்காற்றில் ஆண்டவர் இருக்கவில்லை. காற்றுக்குப்பின் நில நடுக்கம் ஏற்பட்டது; நில நடுக்கத்திலும் ஆண்டவர் இருக்கவில்லை. நில நடுக்கத்துக்குப் பின் தீ கிளம்பிற்று; தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை. தீக்குப்பின் தென்றலின் மெல்லிரைச்சல் உண்டானது. அதை எலியாசு கேட்டவுடன் போர்வையினால் தம் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து குகையின் வாயிலில் நின்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 84 : 8 ab-9, 10-11, 12-13 (பல்லவி : 7)*

பல்லவி : **ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்: உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன்:
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில்
உள்ளது. அதனால், நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும்.

பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்: நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும்: நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார்: நம் நிலமும் தன் பலனைத்தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**என் சகோதரர்களுக்காக நான் சாபத்துக்கு உள்ளாகவும் தயங்கேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 9: 1-5

சகோதரர்களே:

பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ள என் மனச்சான்று எனக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன், கிறிஸ்துவுக்குள் உண்மையே சொல்லுகிறேன், பொய் சொல்லவில்லை. உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும் உண்டு.

இரத்த உறவினரான என் சகோதரர்களுக்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகவும் தயங்கேன். அவர்கள் இஸ்ராயேல் மக்கள் அல்லரா? அவர்களே கடவுளின் மக்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். அவர்களிடையில்தான் இறைவன் தம் மாட்சிமையை விளங்கச் செய்தார். உடன்படிக்கைகளும் திருச்சட்டமும், இறைவழிபாடும் வாக்குறுதிகளும் அவர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டன. குலத் தந்தையர்களின் வழி வந்தவர்கள் அவர்கள்; மனிதன் என்ற முறையில் கிறிஸ்துவும் அவர்களினின்றே தோன்றினார். இவரோ எல்லாவற்றிற்கும் மேலான கடவுள். என்றென்றும் போற்றுதற்குரியவர். ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா சங். 129 : 5

**அல்லேலூயா. ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன்: அவரது வாக்குறுதியில் நம்பிக்கை கொண்டுள்ளேன். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நான் கடல்மீது நடந்து உம்மிடம் வரக் கட்டளையிடும்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14: 22-33

மக்கள் வயிறார உண்டபின், தாம் அவர்களை அனுப்பிக்கொண்டிருக்கையில், சீடர்கள் உடனே படகிலேறிக் கடலைக் கடந்து தமக்குமுன் அக்கரைக்குப் போகும்படி யேசு வற்புறுத்தினார். கூட்டத்தை அனுப்பியதும் செபிக்கத் தனியாக மலைமீது ஏறினார். இரவாயிற்று; அங்குத் தனித்திருந்தார்.

படகோ, எதிர் காற்றடித்தபடியால் அலைகளால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. நான்காம் சாமத்தில் அவர் கடல்மீது நடந்து அவர்களை நோக்கி வந்தார். சீடரோ, அவர் கடல்மேல் நடப்பதைக் கண்டு கலங்கி, 'ஐயோ! பூதம்' என்று அச்சத்தால் அலறினர்.

உடனே யேசு, "தைரியமாயிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

அதற்கு இராயப்பர், "ஆண்டவரே, நீர்தாம் என்றால், நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வரக் கட்டளையிடும்" என்றார். அவர், "வா" என்றார். இராயப்பரும் படகினின்று இறங்கிக் கடல்மீது நடந்து யேசுவை நோக்கி வந்தார்.

காற்று பலமாயிருப்பதைக் கண்டு அஞ்சி மூழ்கப்போகையில், "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று அலறினார். உடனே யேசு கையை நீட்டி, அவரைப் பிடித்து, "குறைவான விசுவாசம் உள்ளவனே. ஏன் தயங்கினாய்?" என்றார். அவர்கள் படகில் ஏறியதும் காற்று ஓய்ந்தது.

படகில் இருந்தவர்கள் வந்து அவரைப் பணிந்து, "உண்மையாகவே நீர் கடவுள் மகன்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**அவ்வுணவினால் வலிமை பெற்று அவர் நடந்து கடவுளின் மலையை அடைந்தார்.**

**அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்** 19 : 4-8

அந்நாட்களில் :

எலியா பாலைவனத்தில் ஒருநாள் பயணம் செய்தார். அங்கே ஒரு சூரைச் செடியின் அடியில் அமர்ந்து, தாம் சாகவேண்டுமெனக் கோரி, "ஆண்டவரே, நான் வாழ்ந்தது போதும்; என் உயிரை எடுத்துக் கொள்ளும். ஏனெனில் நான் என் முன்னோரைவிட நல்லவன் அன்று" என்று வேண்டினார். பின்னர், அச்சூரைச் செடியின் நிழலில் அவர் படுத்து உறங்கினார்.

அப்பொழுது ஆண்டவரின் தூதர் ஒருவர் அவரைத் தட்டி எழுப்பி, "எழுந்து சாப்பிடு" என்றார். அவர் விழித்துப் பார்க்க, இதோ தணலிலே சுட்ட ஓர் உரொட்டியும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் தம் தலைமாட்டில் இருக்கக் கண்டார். அவற்றை அவர் உண்டு குடித்தபின் திரும்பவும் படுத்துத் தூங்கினார்.

ஆண்டவரின் தூதர் இரண்டாம் முறையும் வந்து அவரைத் தட்டி எழுப்பி, "எழுந்து சாப்பிடு. ஏனெனில், நீ இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கிறது" என்றார். அப்பொழுது அவர் எழுந்து உண்டு குடித்தார். அவ்வுணவினால் வலிமை அடைந்த அவர் இரவு பகலாய் நாற்பது நாள் நடந்து, ஓரேப் என்ற கடவுளின் மலையை அடைந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 3-4, 5-6, 7-8 (பல்லவி : 8a)

பல்லவி : **ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன், அவரது புகழ் எப்போதும்
என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும். சிறுமையுற்றோர் இதைக்
கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

அல்லேலூயா அரு. 6:51-52

அல்லேலூயா, நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு ;
இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## இரண்டாம் வாசகம்

நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு.

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

6: 41-51

அக்காலத்தில் :

'வானின்று இறங்கி வந்த உணவு நானே' என்று யேசு சொன்னதால் யூதர்கள் முணுமுணுத்து, "சூசையின் மகனுகிய யேசு அன்ரு இவர்? இவருடைய தாயும் தந்தையும் நமக்குத் தெரியுமே! 'நான் வானின்று இறங்கி வந்தேன்' என்று இவர் சொல்வதெப்படி?" என்றனர்.

இதற்கு யேசு, "உங்களுக்குள்ளே முணுமுணுக்கவேண்டாம். என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது; நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன். 'கடவுளிடமிருந்தே அவர்கள் எல்லாரும் கற்றுக்கொள்வர்' என்று இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது. தந்தைக்குச் செவிசாய்த்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட எவனும் என்னிடம் வருகிறான். தந்தையை யாரேனும் நேரடியாகக் கண்டார்கள் என்றல்ல, கடவுளிடமிருந்து வந்தவர் தவிர வேறு ஒருவரும் கண்டதில்லை, அவர் ஒருவரே தந்தையைக் கண்டுள்ளார். உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன், விசுவசிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்.

நானே உயிர் தரும் உணவு. பாலைவனத்தில் உங்கள் முன்னோர் மன்னாவை உண்டனர்; ஆயினும் இறந்தனர். ஆனால், நான் குறிப்பிடும் உணவை உண்பவன் சாகான். இதற்காகவே இவ்வுணவு வானின்று இறங்கியது.

நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு, இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே" என்ருர்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எங்கள் பகைவர்களைத் தண்டித்தீர்;
எங்களையோ அழைத்து மகிமைப்படுத்தினீர்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் *18: 6-9*

தாங்கள் நம்பிக்கை வைத்திருந்த வாக்குறுதிகளை மெய்யாகவே அறிந்து அவற்றில் துணிவோடு மகிழ்ந்திருக்கும்படிக்கு எங்கள் தந்தையர்க்கு அவ்விரவு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. நீதிமான்களின் விடுதலையையும் அவர்களுடைய பகைவர்களின் அழிவையும் உம் மக்கள் எதிர்பார்த்துகொண்டுதான் இருந்தார்கள். எங்கள் பகைவர்களைத் தண்டித்த அந்த ஒரே செயலால் எங்களை உம்மிடம் அழைத்து மகிமைப் படுத்தினீர்.

நல்லவர்களின் பரிசுத்த மக்கள் மறைவில் பலிகள் தந்தனர்; நன்மைகளாயினும் தீமைகளாயினும் அவற்றைச் சரிநிகராகப் பகிர்ந்து கொள்வோம் என்று சொல்லி, இறைவனது திருச்சட்டத்திற்குப் பரிசுத்தர்கள் உடன்பட்டனர்; தந்தையர்களின் புகழ்ப்பாடல்களைப் பாடிப் போற்றினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 1 & 12, 18-19, 20 & 22 (பல்லவி : 12b)

பல்லவி : தமது உரிமைப் பொருளாக ஆண்டவர்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள்: நேர்மனத்தோர் அவரைப்
புகழ்வது தகுமே.
12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது:
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்ற
வர்கள். பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை
நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்சக் காலத்தில் அவர்களுக்கு
உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது: அவரே நமக்கு
உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக: நாங்கள் உம்மை நம்பி
யிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**அவர் எதிர்நோக்கியிருந்த நகருக்குச் சிற்பியும் ஆக்குநரும் கடவுளே.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 11: 1-2, 8-19

சகோதரர்களே :

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவைபற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர்.

இறைவனின் அழைப்பை ஏற்ற ஆபிரகாம் கீழ்ப்படிந்து தம் உரிமைச் சொத்தாகப் பெறவிருந்த இடத்திற்குப் போனது விசுவாசத்தினாலேயே. போகவேண்டிய இடத்தை அறியாதிருந்தும் புறப்பட்டுப் போனார். வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி, அதே வாக்குறுதியின் உடன் உரிமையாளர்களான ஈசாக், யாக்கோபுடன் கூடாரங்களில் குடியிருந்து, வேற்று நாட்டினர்போல் வாழ்ந்தது, விசுவாசத்தினாலேயே. ஏனெனில், அவர் அசையாத அடித்தளமுள்ளதொரு நகரை எதிர்நோக்கியிருந்தார். அதன் சிற்பியும் ஆக்குநரும் கடவுளே.

சாராள் வயதான காலத்திலும் ஒரு மகனை ஈன்றெடுக்க ஆற்றல் பெற்றது விசுவாசத்தினாலேதான். ஏனென்றால், வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர் என்று அவள் கருதினாள். இவ்வாறு உயிரிழந்தவர்போலிருந்த ஒரே ஆள், விண்மீன்களைப்போலவும், கடற்கரை மணலைப் போலவும் கணக்கற்ற மக்களுக்குத் தந்தையானார்.

இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலேயே இறந்தனர்: வாக்களிக்கப்பட்டவற்றைக் கைக்கொள்ளவில்லையெனினும், அவற்றைத் தொலைவில் கண்டனர்; கண்டு வாழ்த்தினர். இவ்வுலகில் தாங்கள் வேற்று நாட்டினர் எனவும், அந்நியர்களெனவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். இவ்வாறு ஒப்புக்கொள்பவர்களோ தம் தாய்நாட்டைத் தேடுவோர் எனக் காட்டுகின்றனர். தாங்கள் விட்டுவந்த நாட்டையே நினைவில் வைத்திருந்தால் திரும்பிச் செல்ல வாய்ப்பு இல்லாமலா இருந்திருக்கும்! ஆனால், அவர்கள், உண்மையில் நாடியது ஒரு மேலான நாட்டை, அதாவது விண்ணக நாட்டையே. அதனால்தான் கடவுளும் தம்மை 'அவர்களுடைய கடவுள்' என அழைத்துக்கொள்ள வெட்கப்படவில்லை. தாமே அவர்களுக்காக ஒரு நகரை அமைத்துள்ளார் அல்லரோ?

விசுவாசத்திஞலேயே ஆபிரகாம் தாம் பரிசோதிக்கப்பட்டபொழுது ஈசாக்சைப் பலியிடத் துணிந்தார். "உன் பெயர் நீடிக்க, ஈசாக்கின் வழியாய் உனக்கு மக்கள் பிறப்பார்கள்" என்று இறைவன் கூறியிருந்தார். வாக்குறுதிகளைப் பெற்றிருந்தும் ஆபிரகாம் தம் ஒரே மகனைப் பலியிடத் தயங்கவில்லை. ஏனெனில், கடவுள் இறந்தோரையும் எழுப்ப வல்லவர் என்பதை மனத்திற்கொண்டிருந்தார். எனவே, தம் மகனை மீண்டும் பெற்றுக்கொண்டார். இது ஒரு முன்னடையாளமாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *11: 1-2, 8-12*

சகோதரர்களே :

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவைபற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர்.

இறைவனின் அழைப்பை ஏற்ற ஆபிரகாம் கீழ்ப்படிந்து தம் உரிமைச் சொத்தாகப் பெறவிருந்த இடத்திற்குப் போனது விசுவாசத்திஞலேயே. போகவேண்டிய இடத்தை அறியாதிருந்தும் புறப்பட்டுப் போனார். வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி, அதே வாக்குறுதியின் உடன் உரிமையாளர்களான ஈசாக், யாக்கோபுடன் கூடாரங்களில் குடியிருந்து, வேற்று நாட்டினர்போல் வாழ்ந்தது, விசுவாசத்திஞலேயே. ஏனெனில், அவர் அசையாத அடித்தளமுள்ளதொரு நகரை எதிர்நோக்கியிருந்தார். அதன் சிற்பியும் ஆக்குநரும் கடவுளே.

சாராள் வயதான காலத்திலும் ஒரு மகனை ஈன்றெடுக்க ஆற்றல் பெற்றது விசுவாசத்திஞலேதான். ஏனென்றால், வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர் என்று அவள் கருதினாள். இவ்வாறு உயிரிழந்தவர்போலிருந்த ஒரேஆள், விண்மீன்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் கணக்கற்ற மக்களுக்குத் தந்தையானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லேலூயா மத். 24 : 42, 44

**அல்லேலூயா.** விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள் : ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

12: 32-48

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

“சிறு மந்தையே, அஞ்சாதே ; ஏனெனில், உங்கள் தந்தை தம் அரசை உங்களுக்குக் கொடுக்கத் திருவுளங்கொண்டார்.

உங்கள் உடைமைகளை விற்றுப் பிச்சையிடுங்கள். இற்றுப்போகாத பணப்பைகளையும், வானகத்தில் குறையாத செல்வத்தையும் தேடிக் கொள்ளுங்கள். அங்கே திருடன் அண்டுவதில்லை, பூச்சி அரிப்பதுமில்லை. உங்கள் செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.

இடுப்பில் வரிந்து கட்டியிருங்கள். விளக்குகளும் எரிந்துகொண்டிருக்கட்டும். திருமண விருந்துக்குப் போன தம் தலைவன், எப்பொழுது வருவானோ என்று காத்திருக்கிறவர்களைப்போல, நீங்களும் இருங்கள். அவன் வந்து தட்டிய உடனே திறக்கவேண்டுமன்றோ? எவ்வூழியர் விழித்திருக்கக் காண்பானோ, அவ்வூழியர் பேறுபெற்றவர்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் : அவன் இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிலமர்த்தி, ஒவ்வொருவனையும் அணுகி அவர்களுக்குப் பணிவிடை புரிவான். அவன் இரண்டாம் சாமத்தில் வந்தாலும், மூன்றாம் சாமத்தில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருக்கக் கண்டால், அவ்வூழியர் பேறுபெற்றவர்கள்.

திருடன் இன்ன சாமத்தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால், வீட்டில் கன்னம் வைக்க விடமாட்டான் அன்றோ? இதை யுணர்ந்து நீங்களும் ஆயத்தமாக இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.” இதைக் கேட்ட இராயப்பர், “ஆண்டவரே, இவ்வுவமை எங்களுக்கு மட்டுமா? எல்லாருக்குமா?” என்று வினவினார்.

ஆண்டவர் கூறியதாவது : “தக்க காலத்தில் தன் வேலையாட்களுக்குப் படியளக்கத் தலைவன் ஏற்படுத்திய, நம்பிக்கையும் விவேகமும் உள்ள கண்காணிப்பாளன் யார்? எந்த ஊழியன் அவ்வாறு செய்து கொண்டிருப்பதைத் தலைவன் வந்து காண்பானோ அவன் பேறுபெற்றவன். அவனைத் தன்னுடைமைக்கெல்லாம் அதிகாரியாக ஏற்படுத்துவான் என உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். ஆனால், ‘என் தலைவர் வரக் காலம் தாழ்த்துகிறார்’ என்று அவ்வூழியன் தனக்குள் சொல்லிக்கொண்டு, வேலைக்காரர் வேலைக்காரிகளை அடித்து, மயக்கமுற உண்டு குடிக்கத்

தொடங்கினால், அவ்வூழியன் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் தலைவன் வந்து அவனை நீக்கிவிட்டு, விசுவாசமற்றவர் கதிக்கு அவனை உள்ளாக்குவான்.

தன் தலைவனின் விருப்பத்தை அறிந்திருந்தும், முன்னேற்பாடு செய்யாமலும், அவனது விருப்பத்தின்படி நடவாமலும் இருந்த ஊழியன் நன்றாய் அடிபடுவான். அவன் விருப்பத்தை அறியாமல் தண்டனைக்குரியவற்றைச் செய்பவனோ கொஞ்சம் அடிபடுவான். எவனுக்கு அதிகம் அளிக்கப்பட்டதோ, அவனிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும். எவனிடம் அதிகம் ஒப்படைத்தார்களோ, அவனிடம் இன்னும் அதிகமாய்க் கேட்பார்கள்.”

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

---

அல்லது குறுகிய வாசகம்

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

12: 35-40

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறியதாவது:

“இடுப்பில் வரிந்து கட்டியிருங்கள். விளக்குகளும் எரிந்துகொண்டிருக்கட்டும். திருமண விருந்துக்குப் போன தம் தலைவன், எப்பொழுது வருவானோ என்று காத்திருக்கிறவர்களைப்போல, நீங்களும் இருங்கள். அவன் வந்து தட்டிய உடனே திறக்க வேண்டுமன்றோ? எவ்வூழியர் விழித்திருக்கக் காண்பானோ, அவ்வூழியர் பேறுபெற்றவர்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: அவன் இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிலமர்த்தி, ஒவ்வொருவனையும் அணுகி அவர்களுக்குப் பணிவிடை புரிவான். அவன் இரண்டாம் சாமத்தில் வந்தாலும், மூன்றாம் சாமத்தில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருக்கக் கண்டால், அவ்வூழியர் பேறுபெற்றவர்கள்.

திருடன் இன்ன சாமத்தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால், வீட்டில் கன்னம் வைக்க விடமாட்டான் அன்றோ? இதையுணர்ந்து நீங்களும் ஆயத்தமாக இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.”

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் இதயத்தை விருத்தசேதனம் செய்து கொள்ளுங்கள், அகதிகளுக்கு அன்பு செய்யுங்கள், ஏனெனில் நீங்களும் அந்நியராயிருந்தீர்கள்.**

உப ஆகமத்திலிருந்து வாசகம் 10: 12-22

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது :

இப்பொழுது, இஸ்ராயலே, நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி, அவருடைய நெறியில் ஒழுகி, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கொண்டு, உன் முழு இதயத்தோடும் ஆன்மாவோடும் அவருக்கு ஊழியம் செய்து, உனக்கு நன்மை பயக்கும் பொருட்டு நான் இன்று உனக்குக் கற்பிக்கிற ஆண்டவருடைய கட்டளைகளையும் ஆசாரங்களையும் நீ கைக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டுமென்பதேயல்லாது, உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னிடம் வேறு எதனைக் கேட்கிறார் ?

இதோ வானமும், வானங்களின் வானமும், பூமியும் அதிலடங்கிய அனைத்தும் உன் கடவுளாகிய ஆண்டவரின் உடைமைகளே. ஆயினும், ஆண்டவர் உன் மூதாதையரோடு ஒன்றித்து அவர்களை நேசித்தமையால், அவர்களுடைய சந்ததியாகிய உங்களை எல்லா மக்கள் கூட்டங்களுக்குள் தேர்ந்து கொண்டார். இது இந்நாளிலே எண்பிக்கப்பட்டதன்றோ ?

ஆகையால், நீங்கள் உங்கள் இதயத்தின் மிஞ்சின (ஆசை என்னும்) நுனித்தோலை விருத்தசேதனம் செய்து, உங்கள் தலையையும் இனி கடினப்படுத்தாதீர்கள். ஏனென்றால், உங்கள் கடவுளாகிய ஆண்டவர்தாமே கடவுளர்க்கெல்லாம் கடவுளும், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரும், மகத்துவரும் வல்லவரும் பயங்கரமுள்ளவருமான கடவுளாய் இருக்கிறார். அவர் ஒருதலைச் சார்பாய் இருப்பவருமல்லர்; கையூட்டு வாங்குபவருமல்லர். அவர் அநாதைப் பிள்ளைக்கும் விதவைக்கும் நீதி நியாயம் வழங்குபவரும், அகதியை நேசித்து அவனுக்கு உணவும் உடையும் தந்தருளுபவருமாய் இருக்கிறார். நீங்களும் எகிப்து நாட்டில் அந்நியர்களாய் இருந்தீர்கள் அல்லவா ? ஆகையால், அகதிகளுக்கு அன்பு செய்யுங்கள்.

உன் கடவுளாகிய ஆண்டவருக்குப் பயந்து, அவருக்கே பணிசெய்து, அவரோடு ஒன்றித்திருந்து, அவருடைய பெயரைக் கைக்கொண்டு ஆணையிடுவாயாக. உன் புகழும் அவரே; உன் கடவுளும் அவரே; உன் கண்கள் கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை நடத்தினவரும்

அவரே. உன் மூதாதையர் எழுபது ஆட்களாய் எகிப்துக்குப் போனார்கள். ஆனால் இதோ கடவுளாகிய ஆண்டவர் உன்னை விண்மீன்களைப் போல் பெருகச் செய்துள்ளார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147 : 1-2, 3-4, 8-9 (பல்லவி : 1)

பல்லவி : எருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய் :
சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.

அல்லது : அல்லேலூயா.

1 யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய் : சீயோனே, உன் இறை
வனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார் :
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார் : கோதுமை வளத்தால் உனக்கு
நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார். விரைந்து செல்கிறது அவருடைய
வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார்.
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை : தம் கட்டளைகளை
அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரது மாட்சியினுடைய சாயலின் காட்சி இதுவே.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 1 : 2-5, 24-28

யோவாக்கீம் அரசனுடைய சிறைவாசத்தின் ஐந்தாம் ஆண்டு அது; அந்த ஐந்தாம் நாளிலே, கல்தேயர் நாட்டிலுள்ள கேபார் நதியருகில் இருந்த பூசி என்ற அர்ச்சகரின் மகனாகிய எசேக்கியேலின்மீது ஆண்டவரின் வார்த்தையும் கரமும் இறங்கிற்று.

நான் கண்ட காட்சியாவது: இதோ வடக்கிலிருந்து புயல் காற்றெழும்பிற்று; அப்போது பெரியதொரு மேகத்தையும், அதன் நடுவில் நெருப்பினுள்ளிருந்து துலங்கி மின்னிய ஒருவகை வெண்கலத்தின் உருவத்தையும் கண்டேன். அதன் நடுவில் நான்கு மிருகங்களின் சாயல் காணப்பட்டது; அவற்றின் உருவமோ மனித சாயலாய் இருந்தது.

அவை நடக்கும்போது அவற்றின் இறக்கைகளால் ஏற்பட்ட ஒலியைக் கேட்டால், பெருக்கெடுத்து ஓடிவரும் தண்ணீரின் இரைச்சல் போலும், எல்லாம் வல்லவரின் குரலொலி போலும், திரண்டு செல்லும் சேனைகளின் ஆரவாரம் போலும் இருக்கும்; அவை நிற்கும்போது தங்கள் இறக்கைகளைத் தாழ்த்தி விடும். அவற்றின் தலைமீது படர்ந்து நின்ற மேகமண்டலத்தில் குரலொலி கேட்டது; மிருகங்கள் நிற்கும்போது இறக்கைகளைத் தளர விடும்.

அவற்றின் தலைமீதிருந்த மண்டலத்தின் மேல் மரகதத்தால் ஆன அரியணை போல் ஒன்று தென்பட்டது; அந்த அரியணையில் மனிதனைப் போன்ற உருவம் ஒன்று வீற்றிருந்தது. அவர் உடலின் உள்ளும் புறமும் சுற்றிலும் தீயொளிபோல மின்னிய ஒருவித வெண்கலத்தின் உருவத்தைக் கண்டேன்; இடுப்பிலிருந்து மேலும் கீழும் சுற்றிலும் நெருப்பு மயமாய் ஒளிரும் பிரகாசத்தைக் கண்டேன். அரியணையைச் சூழ்ந்திருந்த ஒளி மழைக்காலத்தில் மேகத்தில் தோன்றும் வான வில்லைப்போல் இருந்தது.

ஆண்டவரது மாட்சியினுடைய சாயலின் காட்சி இவ்வாறு தோன்றிற்று; நான் அதைப் பார்த்தபோது முகங்குப்புற விழுந்தேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 148 : 1-2, 11-12, 13, 14

பல்லவி : **வானமும் வையமும் உமது மகிமையால் நிறைந்துள்ளன.**

அல்லது : **அல்லேலூயா.**

1 வானத்திலின்று ஆண்டவரைப் புகழுங்கள் : உன்னதத்தில் நின்று அவரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவர்தம் தூதர்களே, அவரைப் புகழுங்கள் : அவருடைய படைகளே, நீங்களெல்லோரும் அவரைப் போற்றுங்கள். பல்லவி

11 உலகத்து அரசர்களும் மக்களனைவரும்: தலைவர்கள், உலகத்தின் நீதிபதிகள் அனைவருமே,
12 இளைஞர்கள், இளங்குமரிகள், முதியோர் சிறுவருடன்கூடி ஆண்டவரைப் புகழுங்கள். பல்லவி

13 படைப்பு எல்லாம் ஆண்டவரைப் புகழட்டும், ஏனெனில் அவருடைய பெயர் மட்டும் உன்னதமானது. அவருடைய மகத்துவம் வானம் பூமியனைத்தையும் கடந்தது.

பல்லவி

14 தம் மக்களை மேன்மைப்படுத்தி வலிமையடையச் செய்தார்.
அவர் செய்தது அவர் அடியார்க்குப் பெருமை அளித்தது ;
அவருடைய புனிதர்களனைவரும் போற்றப்படுக ;
அவரை அண்மித்துள்ள இஸ்ராயேல் மக்களுக்குப் பெருமை அளித்தது.

பல்லவி

அல்லேலூயா 2 தெச. 2 : 14

அல்லேலூயா. நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் மகிமையைப் பெற்றுக்கொள்ளும்படி நற்செய்தி வழியாக இறைவன் நம்மை அழைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவரைக் கொல்லுவார்கள் ; அவர் உயிர்த்தெழுவார்.
தீர்வைசெலுத்த மக்களுக்குக் கடமையில்லை.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

17 : 22-27

அக்காலத்தில் :

சீடர்கள் கலிலேயாவில் கூடியிருக்கையில், யேசு அவர்களை நோக்கி, " மனுமகன் மனிதரிடம் கையளிக்கப்படப் போகிறார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். அவர் மூன்றும் நாள் உயிர்த்தெழுவார் " என்று சொல்ல, அவர்கள் மிகவும் வருந்தினர்.

அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தபோது வரிப்பணம் வாங்குவோர் இராயப்பரிடம் வந்து, " உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துவதில்லையா ? " என்றனர். " ஆம் செலுத்துகிறார் " என்றார்.

வீட்டுக்குள் வந்து அவர் இதைச் சொல்லுவதற்கு முன்னமே, யேசு, " சீமோன், இதைப்பற்றி உன் கருத்து என்ன ? மண்ணக அரசர்கள், தீர்வையோ வரியோ யாரிடம் வாங்குகின்றனர் ? தம் மக்களிடமா ? அன்னியரிடமா ? " என்று கேட்டார். " அன்னியரிடந்தான் " என்று அவர் சொல்ல,

யேசு, "அப்படியானால் மக்களுக்குக் கடமையில்லை அன்றோ? ஆயினும் நாம் அவர்களுக்கு இடறலாகாதபடி நீ கடலுக்குச் சென்று, தூண்டில் போட்டு, முதலில் படும் மீனை எடுத்து அதன் வாயைத் திறந்து பார்த்தால் 'ஸ்தாத்தேர்' என்னும் நாணயத்தைக் காண்பாய். அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களுக்குச் செலுத்து" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நீ வலிமைகொண்டு மனத்திடன் மிக்கவனாய் இரு :**
**நீதான் இந்த மக்களை அந்த நாட்டிற்குக் கொண்டுபோவாய்.**

உப ஆகமத்திலிருந்து வாசகம் *31: 1-8*

மோயீசன் போய், இஸ்ராயேலர் எல்லாருக்கும் பின்வருவனவற்றையெல்லாம் சொன்னார். அவர் அவர்களை நோக்கி: இன்று எனக்கு வயது நூற்றிருபது. இனி என்னால் போகவர இயலாது. சிறப்பாக, 'இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை' என்று ஆண்டவர் எனக்குச் சொல்லியிருக்கிறார். உன் கடவுளாகிய ஆண்டவரே உன் முன்பாக நடந்து போவார். அவரே உனக்கு முன்நின்று அந்த இனத்தவரையெல்லாம் அழித்தொழிக்க, நீ அவர்கள் நாட்டை உரிமையாக்கிக்கொள்வாய். ஆண்டவர் சொன்னபடியே, இங்கே இருக்கிற யோசுவா உன் முன்பாக நடப்பான். ஆண்டவரோ ஏற்கெனவே அமோறையரின் அரசர்களான செகோன், ஓக் என்பவர்களுக்கும் அவர்களின் நாட்டிற்கும் தாம் செய்தது போல் இவர்களுக்கும் செய்து, இவர்களையும் அழிப்பார். ஆகையால், ஆண்டவர் அவர்களை உன்னிடம் கையளித்த பின், நான் உங்களுக்கு விதித்த கட்டளையின்படியே நீங்கள் அவர்களுக்குச் செய்யக்கடவீர்கள். துணிவு கொண்டு மனத் தைரியமாய் இருங்கள். அவர்களைப் பார்த்து அஞ்சவும் திகைக்கவும் வேண்டாம். ஏனென்றால், உன் கடவுளாகிய ஆண்டவரே உன்னை நடத்துபவர். அவர் உன்னை விட்டு நீங்கப் போவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை என்றார்.

பிறகு மோயீசன் யோசுவாவை அழைத்து, இஸ்ராயேலர் எல்லாரும் பார்க்க அவனை நோக்கி: நீ வலிமை கொண்டு மனத்திடனாய் இரு. இவர்களுக்குக் கொடுப்போம் என்று ஆண்டவர் இவர்களுடைய மூதாதையருக்கு ஆணையிட்ட நாட்டிற்கு, நீ இந்த மக்களை அழைத்துக்கொண்டு

போய்த் திருவுளச் சீட்டுப்போட்டு அதை அவர்களுக்குள்ளே பங்கிடுவாய். உங்களை நடத்துபவராகிய ஆண்டவர் உன்னோடு இருப்பாரல்லது, அவர் உன்னை விட்டு நீங்கவும் உன்னைக் கைநழுவ விடவும் மாட்டாராகையால், நீ அஞ்சவும் கலங்கவும் வேண்டாம் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

உப. 32 : 3-4a, 7, 8, 9 & 12 (பல்லவி : 9a)

பல்லவி : **ஆண்டவருடைய மக்களே அவருடைய உரிமை.**

3 நான் ஆண்டவருடைய திருப்பெயரைப் போற்றிப் புகழ்ந்து வருவதனால்
நம்முடைய கடவுளை மேன்மைப்படுத்திப் பாராட்டக்கடவீர்கள்.
4 அவர் செய்யும் செயல்கள் உத்தமமானவை.
பல்லவி

7 ஆரம்ப நாட்களை நினைத்துப்பார்; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற
ஆண்டுகளைக் கவனித்துப்பார். உன் தந்தையைக் கேள் : அவன் உனக்கு
அறிவிப்பான். உன் பெரியோர்களைக் கேள்; அவர்கள் உனக்கு மறுமொழி
சொல்வார்கள்.
பல்லவி

8 மிகவும் உன்னதமானவர் வெவ்வேறு இனத்தவருக்கு வெவ்வேறு உரிமை
களைப் பங்கிட்டு ஆதாமின் புதல்வரை வெவ்வேறாகப் பிரித்தபொழுது,
இஸ்ராயேலின் புதல்வருடைய கோத்திரத் தொகைக்குத் தக்கதாகவே
எல்லா இனத்தாரின் எல்லைகளையும் திட்டம் செய்தார்.
பல்லவி

9 ஆண்டவருடைய மக்களோ அவருடைய உரிமை; யாக்கோபோ
12 அவருடைய உடைமையின் சங்கிலியாம். ஆண்டவர் ஒருவரே அவர்களை
நடத்தினார். அந்நிய கடவுள் அவர்களோடு இருந்ததேயில்லை.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

ஓலைச்சுருளை எனக்குப் புசிக்கத் தந்தார்:
அது என் வாய்க்குத் தேனைப்போல் தித்தித்தது.

**இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்** 2: 8-3 : 4

**இறைவன் கூறுவதாவது :**

"மனிதா, அந்தக் கலகக்காரரைப்போல நீயும் கலகக்காரனாய் இராதே; நாம் உனக்குச் சொல்வதைக் கேள்: உன் வாயைத் திறந்து உனக்கு நாம் எதைக் கொடுக்கிறோமோ அதைப் புசி." அப்போது ஓலைச் சுருள் பிடித்திருந்த கையொன்று கண்டேன், அந்தக் கை ஓலைச் சுருளை என்முன் நீட்டிற்று; அந்தச் சுருளின் உள்ளும் புறமும் எழுதியிருக்கக் கண்டேன்; அதில் முறைப்பாடுகளும் புலம்பல்களும் சாபங்களும் எழுதியிருந்தன.

அவர் மறுபடியும் என்னிடம், "மனிதா, உனக்குத் தரப்படுவதைப் புசி; இந்த ஓலைச் சுருளைப் புசி; புசித்தபின் இஸ்ராயேல் மக்களிடம் போய்ப் பேசு" என்றார். அவ்வாறே நான் என் வாயைத் திறந்தேன்; அவர் அந்த ஓலைச்சுருளை எனக்குப் புசிக்கத் தந்தார். பின்னர் என்னிடம்: "மனிதா, நாம் உனக்குக் கொடுக்கும் இந்த ஓலைச்சுருளை உண்டு உன் வயிற்றை நிரப்பு" என்றார். நானும் அவ்வாறே அதை உண்டேன்; அது என் வாய்க்குத் தேனைப்போலத் தித்தித்தது.

மீண்டும் அவர் என்னைப் பார்த்து, "மனிதா, நீ இஸ்ராயேல் வீட்டாரிடம் போய் எம் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 118: 14, 24, 72, 103, 111, 131 (பல்லவி: 103a)

பல்லவி : **உம் வாக்குகள் சுவைக்கு எவ்வளவு இனிமையாயுள்ளன !**

14 பெருஞ் செல்வத்தில் மகிழ்ச்சி கொள்வதுபோல் நான் உம் ஆணைகளைக் குறித்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

பல்லவி

24 எனெனில், உம் ஆணைகள் எனக்கு இனிமையாயுள்ளன: உம் நியமங்களே எனக்கு ஆலோசனை தருபவை.

பல்லவி

72 நீர் திருவாய் மலர்ந்த சட்டம், ஆயிரம் பொன்னையும் வெள்ளியையும்விட மேலானது. பல்லவி

103 உம் வாக்குகள் சுவைக்கு எவ்வளவு இனிமையாயுள்ளன ! என் வாய்க்குத் தேனினும் சுவை மிகுந்தவையே. பல்லவி

111 உம் ஆணைகளே என்றென்றைக்கும் என் உரிமைச்சொத்து : ஆகவே அவை என் இதயத்துக்கு மகிழ்வளிக்கின்றன. பல்லவி

131 வாய் திறக்கிறேன், பெருமூச்சு விடுகிறேன் : ஏனெனில் உம் கற்பனைகளை விரும்புகிறேன். பல்லவி

அல்லேலூயா மத். 11 : 29 ab

அல்லேலூயா. உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் : ஏனெனில் நான் சாந்தமும் மனத் தாழ்ச்சியும் உள்ளவன், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

இச்சிறுவருள் ஒருவனையும் புறக்கணியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

18: 1-5, 10-14

அந்நேரத்தில் சீடர் யேசுவை அணுகி, "விண்ணரசில் யார் பெரியவன்?" என்று கேட்டனர். யேசு, ஒரு குழந்தையை அழைத்து, அவர்கள் நடுவில் நிறுத்தி, கூறியதாவது :

"உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : நீங்கள் குழந்தைகளாக மாறாவிடில், விண்ணரசில் நுழைய மாட்டீர்கள். எனவே, இக்குழந்தையைப்போல் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிறவன் எவனோ, அவனே விண்ணரசில் பெரியவன். மேலும் இத்தகைய குழந்தை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்கிறவன் எவனும், என்னையே ஏற்றுக்கொள்கிறான்.

இச்சிறுவருள் ஒருவனையும் புறக்கணியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில், உங்களுக்குச் சொல்லுகிறேன் : அவர்களுடைய விண்ணுலகத் தூதர் வானகத்திலுள்ள என் தந்தையின் முகத்தை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க, அவற்றுள் ஒன்று வழி தவறிப்போனால் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுவிட்டுத் தவறிப் போனதைத் தேடிச் செல்வான் அன்றோ? அதைக் கண்டுபிடிக்க நேர்ந்தால், தவறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைப்பற்றி அவன் கொள்ளும் மகிழ்ச்சியை விட, அவ்வொன்றைப்பற்றி அவன் கொள்ளும் மகிழ்ச்சி பெரிதாம் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதமே இச்சிறுவருள் ஒருவன்கூட அழிவுறுவது, வானகத்தில் உள்ள உங்கள் தந்தையின் விருப்பமன்று."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மோயீசன் அவ்விடத்தில் ஆண்டவருடைய கட்டளைப்படி இறந்தார். அவருக்கு நிகரான வேறொரு இறைவாக்கினர் அவருக்குப் பின் உதித்ததேயில்லை.**

உப ஆகமத்திலிருந்து வாசகம் *34: 1-12*

அந்நாட்களில் :

மோயீசன் மோவாபின் வெளிகளிலிருந்து எரிக்கோவுக்கு எதிராயுள்ள நேபோ மலையிலிருக்கும் பஸ்காக் கொடுமுடியில் ஏறினார். அப்பொழுது ஆண்டவர் தான் வரையிலுமுள்ள கலாத் நாடு அனைத்தையும், நெப்தலி நாடு முழுவதையும், எபிராயீம் மனாசே என்பவர்களின் நாட்டையும், கடைக் கோடிக் கடல் வரையுள்ள யூதா நாடு அனைத்தையும், தென்னாடுகளையும், சேகோர் வரையிலுள்ள பனைமர நகரமாகிய எரிக்கோவின் வெளிகளையும் காண்பித்தார். பின்பு ஆண்டவர் மோயீசனை நோக்கி : உங்கள் சந்ததிக்குக் கொடுப்போம் என்று நாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுச் சொல்லிய நாடு இதுவே. நீ அதைக் கண்ணாலே கண்டாய். ஆனால், நீ அதனுள் புகுவதில்லை என்றார்.

ஆண்டவரின் ஊழியனாகிய மோயீசன் மோவாப் நாடான அவ்விடத்தில் தானே ஆண்டவருடைய கட்டளைப்படி இறந்தார். ஆண்டவர் தாமே அவரைப் பொகோருக்கு எதிராக மோவாபின் பள்ளத்தாக்கில் அடக்கம் செய்தமையால், இந்நாள் வரையிலும் ஒருவனும் அவருடைய கல்லறையை அறியான். மோயீசன் இறந்தபோது அவருக்கு

வயது நூற்றிருபது. ஆயினும், அவருடைய கண் மங்கினதுமில்லை; பற்கள் உதிர்ந்ததுமில்லை. இஸ்ராயேல் மக்கள் மோயீசனுக்காக முப்பது நாட்கள் மோவாப் வெளிகளில் அழுத பின்பு, மோயீசனுக்காக இழவு கொண்டாடினவர்களுடைய துக்கம் முடிவுபெற்றது.

மோயீசன் நூனின் புதல்வனை யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்திருந்தமையால், இவர் ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார். இஸ்ராயேல் மக்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, ஆண்டவர் மோயீசனுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து வந்தார்கள்.

ஆண்டவரை முகமுகமாய்க் கண்டறிந்த மோயீசனுக்கு நிகரான வேறொரு இறைவாக்கினர் இஸ்ராயேலரிடையே அவருக்குப்பின் உதித்ததேயில்லை. ஆண்டவர் அவர் வழியாய் எகிப்து நாட்டிலே பரவோனுக்கும் பரவோனின் ஊழியர்களுக்கும் பரவோனின் நாடு அனைத்திற்கும் விரோதமாய்ச் செய்து காண்பித்த எல்லா அடையாளம் முதலிய அற்புத அதிசயங்களிலிருந்தும், மோயீசனே இஸ்ராயேல் சபையார் எல்லாருக்கும் முன்பாகச் செய்து வந்த வல்லமை பொருந்திய நிகழ்ச்சிகள், ஆச்சரியமான செயல்களிலிருந்தும் மோயீசன் நிகரில்லாதவர் என்பது உறுதி.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 65: 1-3a, 5&8, 16-17 (பல்லவி: 20a & 9a காண்)*

பல்லவி : என்னை வாழவைத்த இறைவன் போற்றி!

1 மாநிலத்தோரே நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.
2 அவருடைய பெயரின் மாட்சிமையைப் புகழ்ந்து பாடுங்கள்.
அவரது புகழ் எங்கும் விளங்கச் செய்யுங்கள்.
3 இறைவனை நோக்கி: உம் செயல்கள் எத்துணை மலைப்புக்குரியவை, என்று போற்றுங்கள்.
பல்லவி

5 வாருங்கள், கடவுளுடைய செயல்களைப் பாருங்கள்:
மனிதர்களிடையே அவர் செய்தவை மலைப்புக்குரியவையே!
8 மக்களினத்தாரே, நம் இறைவனுக்கு வாழ்த்துக் கூறுங்கள்.
அவரது புகழின் பெருமையைப் பறைசாற்றுங்கள்.
பல்லவி

16 கடவுளுக்கு அஞ்சுவோரே வாருங்கள், வந்து கேளுங்கள்:
எனக்கு எத்துணை நன்மை அவர் செய்துள்ளார் எனக் கூறுவேன்.
17 வாய்திறந்து அவரையே நான் கூவியழைத்தேன்;
என் நாவாலே அவரது புகழைச் சொன்னேன்.
பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எருசலேமின் அக்கிரமங்களுக்காக வருந்துவோரின் நெற்றியில் அடையாளம் இடு.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்
*9: 1-7; 10: 18-22*

ஆண்டவர் என் காதுகளில் உரக்கக் கூவி, "நகரத்தின் கொலைஞர்களே, இங்கே வாருங்கள், உங்கள் கையில் கொலைக் கருவியை ஏந்தி வாருங்கள்" என்று சொன்னார். இதோ, ஆறு கொலைஞர்கள் தத்தம் கைகளில் கொலைக் கருவியைப் பிடித்துக் கொண்டு, வடதிசையை நோக்கியிருக்கும் உயர்ந்த வாயிலின் வழியாய் வந்தார்கள்; அவர்களோடு கூடச் சணல் நூலாடையணிந்து, எழுதும் மைக்கூட்டை இடையில் வைத்திருந்த மனிதன் ஒருவன் இருந்தான்; இவர்கள் உள்ளே வந்து வெண்கலப் பீடத்தின் அருகில் நின்றார்கள்.

அப்பொழுது, இஸ்ராயேலின் ஆண்டவருடைய மகிமை கெருபீம் மேலிருந்து எழும்பி வீட்டின் வாயிற்படிக்கு வந்து நின்றது; சணல் நூலாடையணிந்து, இடையில் மைக்கூடு வைத்திருத்த மனிதனை ஆண்டவர் அழைத்தார். ஆண்டவர் அவனிடம், "நீ நகரமெல்லாம் — யெருசலேம் பட்டணம் முழுவதும் சுற்றிவந்து, அங்கு செய்யப்படுகிற எல்லா அக்கிரமங்களுக்காகவும் வருந்திப் பெருமூச்சு விடுகிறவர்களின் நெற்றியில் அடையாளம் இடு" என்றார்.

நான் கேட்டுக்கொண்டிருக்கும்போதே மற்றவர்களிடம்: "நீங்கள் இவன் பின்னாலேயே பட்டணமெங்கும் போய் வெட்டுங்கள்; ஒருவரையும் தப்ப விடாதீர்கள்; மனமிரங்க வேண்டாம். கிழவர்களையும் இளைஞர்களையும் இளம் பெண்களையும் குழந்தைகளையும் பெண்களையும் கொன்று வீழ்த்துங்கள். ஆனால் எச்சரிக்கை! நெற்றியில் அடையாளத்தைத் தாங்கியுள்ளவர்களைத் தொடாதீர்கள்; நமது பரிசுத்த இடத்திலிருந்தே இவ்வேலையைத் தொடங்குங்கள்" என்றார்.

அவ்வாறே அவர்கள் கோயிலுக்குமுன் இருந்த கிழவர்களை முதலில் வெட்டத் தொடங்கினார்கள். பின்பு அவர் அவர்களை நோக்கி, "கொலையுண்டவர்களின் உடலால் முற்றத்தை நிரப்பிக் கோயிலை அசுத்தப்படுத்துங்கள், புறப்படுங்கள்" என்றார். அவர்களும் புறப்பட்டுப் போய், பட்டணத்திலுள்ளவர்களை வெட்டி வீழ்த்தினார்கள்.

ஆண்டவரின் மகிமை கோயிலின் வாயிற்படியை விட்டுக் கெருபீம்கள்மேல் வந்து நின்றது. நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே கெருபீம்கள் தங்கள் இறக்கைகளை விரித்துப் பூமியை விட்டு மேலெழும்பின;

அவை புறப்படுகையில் சக்கரங்களும் அவற்றுடன் புறப்பட்டன; ஆண்டவருடைய கோயிலின் கீழ்த்திசை வாயிற்படியில் வந்து நின்றன; இஸ்ரா யேலின் கடவுளுடைய மகிமை அவற்றின்மேல் இருந்தது. கேபார் நதியருகில் இஸ்ராயேலின் கடவுளுக்குக் கீழே அன்று நான் கண்ட மிருகங்கள் இவையே; அவற்றுக்குக் கெருபீம்கள் என்பது பெயர் என அறிந்து கொண்டேன். அவை ஒவ்வொன்றுக்கும் நான்கு முகங்களும் நான்கு இறக்கைகளும் இருந்தன; இறக்கைகளின்கீழ் மனித கையின் சாயல் தென்பட்டது. இவற்றின் முகச்சாயல், நான் கேபார் நதியருகில் கண்டதைப் போலவே இருந்தது. அவை ஒவ்வொன்றும் நேராகச் சென்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 112 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 4 b)*

பல்லவி : வானங்களையும்விட உயர்ந்தது இறைவனின் மாட்சிமை.

அல்லேலூயா.

1 ஆண்டவர்தம் ஊழியர்களே, அவரைப் போற்றுங்கள் : அவருடைய திருப்பெயரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவருடைய திருப்பெயர் வாழ்த்தப் பெறுவதாக : இன்றும் என்றும் வாழ்த்தப் பெறுவதாக. பல்லவி

3 கீழ்த்திசைமுதல் மேற்றிசைவரை ஆண்டவருடைய திருப்பெயர் போற்றப் படுவதாக.
4 மக்கள் இனங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர் : வானங்களையும் விட உயர்ந்தது அவரது மாட்சிமை. பல்லவி

5-6 உன்னதத்தில் வீற்றிருந்து வானத்தையும் வையத்தையும் ஊடுருவிப் பார்க்கும் நம் ஆண்டவராகிய கடவுளைப்போல் வேறு யார் உண்டு !
பல்லவி

*அல்லேலூயா* 2 கொரி 5 : 19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்முடன் ஒப்புரவாக்கினார் : அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவன் உனக்குச் செவிசாய்த்தால், உன் சகோதரனை உன் வசமாக்கிக் கொள்வாய்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*18: 15-20*

அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறியதாவது :

"உன் சகோதரன் உனக்கு எதிராகக் குற்றஞ் செய்திருந்தால் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவனைக் கண்டித்துப் பார். அவன் உனக்குச் செவி சாய்த்தால் உன் சகோதரனை உன் வசமாக்கிக் கொள்வாய். அவன் உனக்குச் செவி சாய்க்காவிட்டால், உன்னுடன் ஒருவர் அல்லது இருவரைச் சேர்த்துக்கொள். 'இவ்வாறு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் சொற்படி காரியம் எல்லாம் தீரும்.' அவர்களுக்கும் செவி சாய்க்காவிடில், திருச்சபையிடம் சொல். திருச்சபைக்கும் செவி சாய்க்காவிடில், அவன் உனக்குப் புற இனத்தான் போலவும், ஆயக்காரன் போலவும் இருக்கட்டும்.

உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் கட்டுவீர்களோ, அதெல்லாம் விண்ணுலகிலும் கட்டப் பட்டதாகவே இருக்கும். மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் அவிழ்ப்பீர் களோ, அதெல்லாம் விண்ணுலகிலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும்.

மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன் : மண்ணுலகில் உங்களில் இருவர் தாங்கள் கேட்கும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் அது விண்ணுலகிலுள்ள என் தந்தையால் அவர்களுக்கு அருளப்படும். இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ, அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரின் உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்குமுன் யோர்தானைக் கடந்து செல்லும்.**

யோசுவா ஆகமத்திலிருந்து வாசகம் *3: 7-10a, 11, 13-17*

*அந்நாட்களில் :*

ஆண்டவர் யோசுவாவை நோக்கி, "நாம் மோயீசனோடு இருந்தது போல் உன்னோடும் இருக்கிறோம் என்று இஸ்ராயேலர் எல்லாரும் அறியும்படி, இன்று அவர்கள் முன்னிலையில் உன்னை மேன்மைப்படுத்தத் தொடங்குவோம். நீ உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிச் செல்லும் குருக்களைக் கண்டு பேசி, 'நீங்கள் யோர்தான் தண்ணீரில் சிறிது தூரம் சென்றதும், அங்கே நில்லுங்கள்' என்று அவர்களுக்குக் கட்டளையிடு" என்றார்.

அப்போது யோசுவா இஸ்ராயேல் மக்களைப் பார்த்து, "நீங்கள் அருகில் வந்து உங்கள் ஆண்டவராகிய கடவுள் திருவாக்கைக் கேளுங்கள்" என்றார். மறுபடியும் அவர்களை நோக்கி, "உயிருள்ள ஆண்டவராகிய கடவுள் உங்கள் நடுவே இருக்கிறார் என்பதையும், அவர் கானானையரை உங்கள் முன்னிலையில் அழித்துவிடப் போகிறார் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அதற்கு அடையாளமாக, இதோ, அனைத்துலக ஆண்டவரின் உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்குமுன் யோர்தானைக் கடந்து செல்லும். பிறகு அனைத்துலகின் ஆண்டவராகிய கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிச் செல்லும் குருக்கள் யோர்தானின் தண்ணீரிலே உள்ளங்கால் வைத்து நடப்பர். உடனே நதியின் அடித் தண்ணீர் மறைந்தோட, மேல் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும்" என்றார்.

அதன்படியே மக்கள் யோர்தானைக் கடக்கத் தங்கள் கூடாரங்களிலிருந்து புறப்பட்டார்கள். குருக்களோ உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, அவர்களுக்கு முன் நடந்து சென்றனர். யோர்தான் நதியில் கால் வைத்தார்கள். (அது அறுவடைக் காலம்; ஆகவே தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.) அவர்களின் கால்கள் தண்ணீரில் நனையத் தொடங்கின. உடனே, மேலேயிருந்து ஓடிவந்த தண்ணீர் ஒன்றாய்க் கூடி ஆதோம் நகர் முதல் சற்தான் என்ற இடம்வரை மலைபோல் குவிந்து நிற்பதாகக் காணப்பட்டது. கீழேயுள்ள தண்ணீர் முழுவதும் சாக்கடல் என இப்போது அழைக்கப்படும் பாலைவனக் கடலுக்குள் வடிந்தோடிப் போயிற்று. அதற்குள் மக்கள் நதியைக் கடந்து எரிக்கோ

வுக்கு நேரே செல்லத் தொடங்கினர். ஆண்டவருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து வந்த குருக்களோ, தயாராக ஆற்றின் நடுவே உலர்ந்த தரையில் காலூன்றி நின்றனர். மக்கள் அனைவரும் வறண்டு போயிருந்த ஆற்றின் வழியே நடந்து சென்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 113 : 1-2, 3-4, 5-6

பல்லவி : அல்லேலூயா.

1 இஸ்ராயேல் மக்கள் எகிப்தைவிட்டு வெளியேறியபோது : கொடிய மக்களிடையினின்று யாக்கோபின் இனத்தார் வெளியேறியபோது,
2 யூதா குலம் அவருக்குத் திருத்தலமாயிற்று : இஸ்ராயேல் அவரது ஆட்சிக்கு உட்பட்டது. பல்லவி

3 கடல் அவரைக் கண்டது : கண்டு பின்வாங்கியது : யோர்தான் திசை திரும்பி ஓடியது.
4 மலைகள் செம்மறிகள் எனத் துள்ளின. குன்றுகள் ஆட்டுக் குட்டிகள் போலக் குதித்தன. பல்லவி

5 கடலே, உனக்கென்ன நடந்தது? ஏன் பின்வாங்கினாய்? யோர்தானே, உனக்கென்ன ஆயிற்று? ஏன் திசை திரும்பிச்சென்றாய்?
6 மலைகளே, நீங்கள் ஏன் செம்மறிகள்போலத் துள்ளினீர்கள்? குன்றுகளே, நீங்கள் ஏன் ஆட்டுக் குட்டிகளெனக் குதித்தீர்கள்? பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

வெளிநாட்டுக்குப் போகிறவன்போல் அவர் காணப் பகல் வேளையில் புறப்படு.

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 12 : 1-12

ஆண்டவரின் வாக்கு எனக்குக் கூறியது :

“ மனிதா, குழப்பக்காரர்கள் நடுவில் நீ வாழ்கிறாய்; கண்ணிருந்தும் அவர்கள் காண்பதில்லை; காதிருந்தும் அவர்கள் கேட்பதில்லை; அவர்களோ அடங்காத மக்கள்.

ஆனால் மனிதா, நீ வெளிநாட்டுக்கு அடிமையாய்ப் போகிறவனுக்குரிய பொருட்களைத் தயார் செய்துகொண்டு, அவர்கள் பார்க்கும்படி பட்டப் பகலில் புறப்படு; உன் உறைவிடத்தை விட்டு வேறோர் இடத்திற்குப் போக வெளிப்படையாய்ப் புறப்பட்டுப் போ. கலகக்காரராய் இருப்பினும் அவர்கள் ஒருவேளை அதைக் கண்டுணர்வார்கள். அடிமையாய் வெளிநாட்டுக்குப் போகிறவன்போல் அவர்கள் பார்க்கும்படி உன் பொருட்களைப் பகல் வேளையில் எடுத்து வை; தன் நாட்டை விட்டுப் பிற நாட்டுக்குப் போகிறவன்போல் அவர்கள் காணும்படி மாலை வேளையில் புறப்படு.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது, நீ உன் வீட்டுச் சுவரில் வழி உண்டாக்கி, அதன் வழியாய் வெளியேறு. அவர்கள் பார்க்கும்படி உன் மூட்டையை எடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு வெளியே இருளில் தூக்கிக்கொண்டு போ; தரையைக் காணாதபடி உன் முகத்தை மூடிக்கொள்; ஏனெனில் இஸ்ராயேல் மக்களுக்கு உன்னை ஓர் அடையாளமாக வைத்திருக்கிறோம்."

நான் ஆண்டவரின் கட்டளைப்படியே செய்தேன்; அடிமையாய் வெளிநாடு செல்பவனைப்போல் என் பொருட்களை வெளியில் எடுத்து வைத்தேன்; மாலை வேளையில் என் கையால் சுவரில் துவாரமிட்டு, இருளில் அதன் வழியாய் வெளியேறி, எல்லாரும் பார்க்க என் மூட்டையைத் தூக்கிக்கொண்டு போனேன்.

காலையில் ஆண்டவர் என்னிடம் பேசினார்: "மனிதா, கலகக்காரராகிய இஸ்ராயேல் மக்கள் உன்னை நோக்கி, 'நீ செய்கிறது என்ன?' என்று கேட்கவில்லையா? அவர்களுக்கு நீ சொல்லவேண்டிய மறுமொழி இதுவே: 'ஆண்டவராகிய இறைவன் சொல்லுகிறார்: இந்த இறைவாக்கு யெருசலேமின் அதிபதியையும், அதில் வாழும் இஸ்ராயேல் மக்களையும் பற்றியது ஆகும்.' தொடர்ந்து சொல்: 'நான் உங்களுக்கு ஓர் அடையாளம்; நான் செய்தது போலவே அவர்களுக்குச் செய்யப்படும்; அடிமைகளாய் ஊரூராய்ச் செல்லும் சிறைக் கைதிகளாய் இருப்பார்கள். அவர்கள் நடுவில் வாழும் அதிபதி தன் தோள்மீது மூட்டையைத் தூக்கிக்கொண்டு இருளிலே வெளியேறுவான்; அவனை வெளியேற்றச் சுவரில் துவாரமிடுவார்கள்; பூமியைக் காணாதபடி தன் முகத்தை மூடிக்கொள்வான்.'"

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 77 : 56-57, 58-59, 61-62 (பல்லவி : 7b காண்)

பல்லவி : **இறைவன் செயல்களை மறவாதீர்கள்.**

56 எனினும், அவர்கள் உன்னத கடவுளைச் சோதித்தனர். அவருக்கு எரிச்ச
லூட்டினர் : அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவில்லை.
57 தங்கள் முன்னோர்களைப்போல் அவர்களும் தவறு செய்தனர் : முறை
தவறிப்போயினர். கோணலான அம்பைப்போல குறி பிசகிப்போயினர்.
பல்லவி

58 குன்றுகளில் பீடங்கள் கட்டி அவர்கள் சினமூட்டினர் : சிலைகளை வழிபட்டு
அவருக்குக் கோபத்தை உண்டாக்கினர்.
59 கடவுள் இதையறிந்து சினந்தெழுந்தார் : இஸ்ராயேலை அறவே புறக்
கணித்தார். பல்லவி

61 தம் வலிமையை அடிமைத்தனத்துக்குக் கையளித்தார் : தம் மாட்சியை
எதிரியின் கையில் விட்டுவிட்டார்.
62 தம் மக்களை வாளுக்கு இரையாகச் செய்தார் : தம் உரிமைச் சொத்தான
வர்கள்மீது சினந்தெழுந்தார். பல்லவி

அல்லேலூயா

சங். 118 : 135

அல்லேலூயா. உம் ஊழியன் எனக்கு இன்முகம் காட்டியருளும் :
உம் நியமங்களை எனக்குக் கற்பித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஏழுமுறை என்றன்று, எழுபதுமுறை ஏழுமுறை என உனக்குச் சொல்லுகிறேன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*18: 21-19: 1*

அக்காலத்தில் :

இராயப்பர் யேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றஞ் செய்துவந்தால், நான் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை வரைக்குமா?" என்று கேட்டார். அதற்கு யேசு கூறியதாவது: "ஏழு முறை என்றன்று, எழுபது முறை ஏழு முறை என உனக்குச் சொல்லுகிறேன்.

ஆகவே விண்ணரசு, தன் ஊழியரிடம் கணக்குக் கேட்க விரும்பிய ஓர் அரசனுக்கு ஒப்பாகும். கணக்குக் கேட்கத் தொடங்கியபொழுது, அவனிடம் பத்தாயிரம் 'தாலந்து' கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் கடன்தீர்க்க வகையற்றிருந்ததால், அவனையும் அவன் மனைவி மக்களையும் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் விற்றுக் கடனைத் தீர்க்குமாறு தலைவன் கட்டளையிட்டான். அவ்வூழியனோ அவன் காலில் விழுந்து, 'பொறுத்துக்கொள்ளும்; கடன் எல்லாம் தீர்த்துவிடுகிறேன்' என்று வேண்டினான். அவ்வூழியனுடைய தலைவன் மனமிரங்கி அவன் கடனை மன்னித்து அவனை விட்டுவிட்டான்.

அவ்வூழியன் வெளியே சென்றதும், தன் உடனூழியரில் தன்னிடம் நூறு வெள்ளிக்காசு கடன்பட்ட ஒருவனைக் கண்டான். அவனைப் பிடித்துக் கழுத்தை நெரித்து, 'நீ பட்ட கடனைத் தீர்த்துவிடு' என்று கேட்டான். அந்த உடனூழியன், காலில் விழுந்து, 'பொறுத்துக்கொள்ளும்; எல்லாம் தீர்த்துவிடுகிறேன்' என்று வேண்டினான். அவனோ இணங்கவில்லை. ஆனால், கடனைத் தீர்க்குமட்டும் அவனைச் சிறையில் அடைத்தான்.

அவனுடைய உடனூழியர் நடந்ததைக் கண்டு மிகவும் வருந்தித் தலைவனிடம் சென்று நடந்ததையெல்லாம் அறிவித்தனர். அப்போது அவனுடைய தலைவன் அவனை அழைத்து, 'கெட்ட ஊழியனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால் உன் கடனையெல்லாம் மன்னித்தேனே. ஆகவே, நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல, நீயும் உன்னுடைய உடனூழியனுக்கு இரக்கம் காட்டியிருக்கவேண்டாமா?' என்று கேட்டு, சினந்து, கடன் முழுவதும் தீர்க்கும்வரை வதைப்போரிடம் அவனைக் கையளித்தான்.

உங்களுள் ஒவ்வொருவனும் தன் சகோதரனை முழு உள்ளத்தோடு மன்னிக்காவிட்டால், என் வானகத் தந்தையும் இவ்வாறே உங்களுக்குச் செய்வார்."

யேசு இவ்வார்த்தைகளைச் சொல்லி முடித்தபின் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அப்பாலுள்ள யூதேயா பகுதிக்கு வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மெசொப்பொத்தேமியாவிலிருந்து உங்கள் தந்தையை அழைத்து வந்தோம்; உங்களை எகிப்திலிருந்து வெளியேற்றினோம், இந்த நாட்டிற்குக் கொண்டுவந்தோம்.**

யோசுவா ஆகமத்திலிருந்து வாசகம் 24: 1-13

அந்நாட்களில் :

யோசுவா இஸ்ராயேல் கோத்திரங்களை எல்லாம் சிக்கேமில் ஒன்று கூட்டி, பெரியோர்களையும் மக்கட் தலைவர்களையும் நீதிபதிகளையும் போதகர்களையும் தம்பால் வரவழைத்தார். அவர்கள் ஆண்டவர் திருமுன் வந்து நின்றனர். அப்பொழுது அவர் எல்லா மக்களையும் நோக்கி,

"இஸ்ராயேலின் ஆண்டவராகிய கடவுள் திருவாய் மலர்ந்து அருள்வதாவது : 'முன்னாளில் உங்கள் முன்னோராகிய ஆபிரகாமுக்கும் நாக்கோருக்கும் தந்தையான தாரே நதிக்கப்புறத்தில் குடியிருந்தபோது அவர்கள் அந்நிய தேவர்களை வழிபட்டு வந்தனர். அப்படியிருக்கையில் நாம் மெசொப்பொத்தேமியாவின் எல்லைகளிலிருந்து உங்கள் தந்தையாகிய ஆபிரகாமை அழைத்து வந்தோம்; அவனைக் கானான் நாட்டில் கொண்டு சேர்த்து அவன் சந்ததியைப் பெருகச் செய்தோம். அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தோம். ஈசாக்குக்கு யாக்கோபையும் எசாவுவையும் அளித்தோம். இவர்களுள் எசாவுவுக்குச் செயீர் என்ற மலைநாட்டைச் சொந்தமாகக் கொடுத்தோம். யாக்கோபும் அவன் பிள்ளைகளுமே எகிப்துக்குப் போனார்கள்.

பிறகு மோயீசனையும் ஆரோனையும் அனுப்பிப் பற்பல அடையாளங்களாலும் அதிசயங்களாலும் எகிப்தியரை வதைத்தோம். மறுபடியும் உங்களையும் உங்கள் முன்னோரையும் எகிப்திலிருந்து வெளியேற்றினோம். நீங்கள் கடற்கரைக்கு வந்தபோது எகிப்தியர் தேர்களோடும் குதிரை வீரரோடும் உங்கள் முன்னோரைச் செங்கடல்வரை பின் தொடர்ந்தனர். அப்பொழுது இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட, அவர் கடலை எகிப்தியர்மேல் புரளச் செய்து தண்ணீரில் அவர்களை மூழ்கடித்தார். நாம் எகிப்தில் செய்தவற்றையெல்லாம் நீங்கள் கண்ணால் கண்டீர்கள். பின்பு வெகுநாள் பாலைவனத்தில் வாழ்ந்தீர்கள்.

அதன்பின் உங்களை யோர்தானுக்கு அப்புறத்தில் குடியிருந்த அமோறையரின் நாட்டிற்குக் கொண்டுவந்தோம். அவர்கள் உங்களை எதிர்த்துப் போரிடும் போதோ, நாம் அவர்களை உங்கள் கையில்

ஒப்படைத்தோம். அவர்கள் நாட்டையும் நீங்கள் கைப்பற்றினீர்கள் : அவர்களையும் கொன்று குவித்தீர்கள். மோவாப் நாட்டு அரசனை செப்போரின் மகன் பாலாக் எழுந்து இஸ்ராயேலை எதிர்த்துப் போரிட்டு உங்கள்மேல் சாபம் போட பெயோரின் மகன் பாலாமை அழைத்து அனுப்பிவைத்தான். ஆனால் நாம் அவனுக்குச் செவி கொடாது அவன் மூலமாய் உங்களுக்கு ஆசி வழங்கி உங்களை அவன் கைகளினின்று தப்பு வித்தோம்.

பின்பு நீங்கள் யோர்தானைக் கடந்து எரிக்கோவுக்கு வந்து சேர்ந்தீர்கள். எரிக்கோ நகரின் வீரர்களும் அமோறையர்களும் பெரேசை யர்களும் கானானையர்களும் ஏத்தையர்களும் கெர்கேசையர்களும் ஏவை யர்களும் ஜெபுசேயர்களும் உங்களுடன் போரிடத் தொடங்கினர். நாம் அவர்களை உங்கள் கையில் அகப்படச் செய்தோம். மேலும், நாம் உங்களுக்கு முன்பாகச் செல்லும்படி குளவிகளுக்கும் கட்டளையிட்டு, உங்கள் வாளாலும் அம்புகளாலுமன்றி, அவற்றைக்கொண்டே அவர்களையும் அமோறைய அரசர் இருவரையும் அவர்தம் இடத்தினின்று நாம் துரத்திவிட்டோம். அப்படியே நீங்கள் குடியிருப்பதற்கு நீங்கள் பண்படுத்தாத நாட்டையும் நீங்கள் கட்டாத நகர்களையும், நீங்கள் நடாத திராட்சைத் தோட்டங் களையும் ஒலிவத்தோப்புகளையும் உங்களுக்குத் தந்தோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 135 : 1-3, 16-18, 21-22 & 24*

1 ஆண்டவர் நல்லவர், அவரைப் போற்றுங்கள் :

பதிலுரை : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

2 தேவர்களுக்கெல்லாம் தேவனைப் போற்றுங்கள் :

பதிலுரை : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

3 ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரைப் போற்றுங்கள் :

பதிலுரை : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

16 பாலைவனத்தின் வழியே தம் மக்களை அழைத்துச் சென்றவர் அவரே : அவரைப் போற்றுங்கள் :

பதிலுரை : ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

17 பெரிய அரசர்களை வதைத்து வீழ்த்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்.

பதிலுரை: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

18 வல்லமை மிக்க அரசர்களைக் கொன்று குவித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்.

பதிலுரை: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

21 அவர்கள் நாட்டைத் தம் மக்களுக்கு உரிமையாக்கியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்.

பதிலுரை: ஏனெனில் அவர் இரக்கம் என்றும் நிலைத்துள்ளது.

22 தம் ஊழியரான இஸ்ராயேலுக்கு உரிமையாக்கியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்:

பதிலுரை: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

24 நம் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்.

பதிலுரை: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நான் உனக்குக் கொடுத்த அழகில் நீ நிறைவுபெற்றவளாய் இருந்தாய்; ஆனால் விபசாரத்தில் ஈடுபட்டாய்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 16: 1-15, 60, 63

ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது:

"மனிதா, யெருசலேமுக்கு அதன் அக்கிரமத்தை எடுத்துக் காட்டிப் பேசு. ஆண்டவராகிய இறைவன் யெருசலேமுக்குக் கூறுகிறார்: நீ தோன்றியதும் பிறந்ததும் கானான் நாட்டிலே; உன் தந்தை ஓர் அமோரியன்; உன் தாய் ஒரு கெத்தியாள். நீ பிறந்த விவரம் இதுவே: நீ பிறந்த அன்று

இன்னும் உன் தொப்புள்கொடி அறுக்கப்படவில்லை ; நீ தண்ணீரால் சுத்த மாகக் கழுவப்படவில்லை; உப்பால் தேய்க்கப்படவில்லை; துணிகளால் சுற்றப்படவுமில்லை. உன்மீது இரக்கப்பட்டு இக்காரியங்களில் எதையும் உனக்குச் செய்வாரில்லை ; ஆனால் நீ வெளியே எறியப்பட்டாய் ; பிறந்த நாளிலேயே நீ வெறுத்து ஒதுக்கப்பட்டாய்.

அவ்வழியாய்க் கடந்துபோன நாமோ நீ உன் இரத்தத்தில் மிதிபடு வதைக் கண்டு, இரத்தத்தில் கிடந்த உன்னிடம், 'பிழைத்திரு, வயல் வெளியில் வளரும் செடிபோல வளர்க' என்று சொன்னோம். நீயும் தேறி வளர்ந்தாய் ; பெரியவளாகி ஆபரணங்களை அணிந்தாய். உன் கொங்கைகள் பருத்துவந்தன ; கூந்தல் அடர்ந்து வளர்ந்தது ; ஆனால் நீ அப்போது ஆடையின்றி நாணி நின்றாய்.

அவ்வழியாய்க் கடந்துபோன நாமோ உன்னருகில் வந்து, நீ பருவ மங்கையாய் இருப்பதைக் கண்டு, நமது ஆடையை உன்மேல் விரித்து, உன் நிருவாணத்தை மூடினோம்; பிறகு உனக்கு நாம் ஆணையிட்டு உன்னுடன் உடன்படிக்கை செய்தோம்; நீயோ நம்முடையவள் ஆனாய், என்கிறார் ஆண்டவராகிய இறைவன். நாம் உன்னைத் தண்ணீரால் கழுவி, இரத்தக்கறையை உன்னிடமிருந்து போக்கி, உனக்கு எண்ணெய் பூசினோம். சித்திரத் தையலாடையால் உன்னை உடுத்தி, சிவந்த செருப்புக்களை அணி வித்து, மெல்லிய ஆடைகளால் மூடி, பட்டாடைகளையும் உனக்கு அளித்தோம்.

விலையுயர்ந்த அணிகலன்களால் உன்னை அழகுசெய்து, கைக்குக் காப்புகளும், கழுத்துக்குப் பொற் சங்கிலியும் பூட்டினோம். மூக்குக்கு மூக் குத்தியும், காதுகளுக்குத் தோடுகளும், தலையில் அழகான மணிமுடியும் அணிவித்தோம். இவ்வாறு பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப் பட்டு, மெல்லிய சித்திரத் தையலாடையையும், பல நிறமுள்ள புடவை களையும் அணிந்து, தேனும் எண்ணெயும் மாவும் உண்டு, மிக்க அழகு வாய்ந்தவளாய், ஓர் அரசியாய் விளங்கினாய். உன் அழகின் காரண மாய் உன் பெயர் புறவினத்தார் நடுவில் மகிமை பெற்றது; ஏனெனில் நாம் உனக்குக் கொடுத்த மகிமையிலும் அழகிலும் நீ முற்றிலும் நிறைவு பெற்றவளாய் இருந்தாய், என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

நீயோ உன் அழகை நம்பி, உன் மகிமையைப் பாராட்டிக் கொண்டு, விபசாரத்தில் ஈடுபட்டுப் போவார் வருவார்க்கெல்லாம் உன்னைக் கையளித்தாய்.

ஆயினும், உன் இளமையின் நாட்களில் நாம் உன்னுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, உன்னுடன் நித்திய உடன்படிக்கை செய்வோம். நீ செய்ததையெல்லாம் நாம் பொறுத்துக்கொள்ளும் காலத்தில், உன் அக்கிரமங்களை நினைத்து வெட்கத்தினால் வாய்பேசாமல் நிற்பாய், என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது, தேவைக்கேற்ப :

**நாம் உன்னுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்வோம்; நீயோ வெட்கமுறுவாய்.**

**இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்** 16 : 59-63

**ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார் :**

"கொடுத்த வாக்கை மீறி உடன்படிக்கையை நீ முறித்ததுபோலவே நாமும் உனக்குச் செய்வோம்; ஆயினும், உன் இளமையின் நாட்களில் நாம் உன்னுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, உன்னுடன் நித்திய உடன்படிக்கை செய்வோம். உன் தமக்கையரையும் தங்கையரையும் உனக்குக் குமாரத்திகளாக நாம் கொடுக்கும்போது, உன் நடத்தையை நினைத்து அதற்காக நாணி நிற்பாய்; நாம் அவர்களை உனக்குக் கொடுப்பது உன்னுடன் செய்த உடன்படிக்கையின் காரணமாகவன்று.

நாம் உன்னோடு உடன்படிக்கை செய்து கொள்வோம்; அப்போது நாமே ஆண்டவர் என்பதை அறிவாய்; நீ செய்ததையெல்லாம் நாம் பொறுத்துக்கொள்ளும் காலத்தில், உன் அக்கிரமங்களை நினைத்து வெட்கத்தினால் வாய்பேசாமல் நிற்பாய், என்கிறார் ஆண்டவராகிய இறைவன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## பதிலுரைப் பாடல்

இசை. 12 : 2-3, 4bcd, 5-6 (பல்லவி : 1c)

பல்லவி : **உமது சினம் தணிந்துவிட்டது, எனக்கு நீர் ஆறுதலளித்தீர்.**

2 "இதோ கடவுள்தான் என் மீட்பு, அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன்,
அஞ்சேன்; ஏனெனில் ஆண்டவரே என் வலிமை, அவரையே பாடுவேன்,
என் மீட்பு அவரே."
3 மீட்பின் ஊற்றுகளினின்று தண்ணீரை அகமகிழ்வோடு நீங்கள்
முகந்துகொள்வீர்கள். பல்லவி

4 "ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள், அவரது பெயரைப் போற்றிப்
புகழுங்கள்; புறவினத்தார்க்கு அவர் செயல்களை அறிக்கையிடுங்கள்,
அவர் பெயர் உயர்ந்ததெனப் பறைசாற்றுங்கள். பல்லவி

5 ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள், ஏனெனில் மகிமைக்குரிய
செயல்களைச் செய்தார்;
6 உலகெங்கும் இதனைத் தெரியப்படுத்துங்கள்.
சீயோனின் குடிகளே ஆர்ப்பரியுங்கள், மகிழ்ச்சியினால் பாடுங்கள்;
ஏனெனில் இஸ்ராயேலின் பரிசுத்தர்,
உன் நடுவில் மேன்மையோடு விளங்குகிறார்." பல்லவி

அல்லேலூயா 1 தெச. 2 : 13

அல்லேலூயா. கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுங்கள்; அதை மனித வார்த்தையாக அன்று, உள்ளபடியே கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொள்ளுங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் முரட்டுத்தனத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிட மோயீசன் அனுமதி அளித்தார்.
தொடக்கத்திலோ அப்படியில்லை.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 19: 3-12

அக்காலத்தில் :

பரிசேயர் யேசுவிடம் வந்து, "எக்காரணத்திற்காவது ஒருவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர்.

அதற்கு அவர், "படைத்தவர் தொடக்கத்திலிருந்தே 'ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' என்றும், 'ஆதலால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடி இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள் எனக் கூறினார்' என்றும் நீங்கள் படித்ததில்லையா? இனி அவர்கள் இருவர் அல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார்.

அவர்கள், "அப்படியானால் முறிவுச் சீட்டுக் கொடுத்து, மனைவியை விலக்கிவிடும்படி மோயீசன் கட்டளையிட்டது ஏன்?" என்று கேட்டனர்.

அவரோ, "உங்கள் முரட்டுத்தனத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிட மோயீசன் அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கத்திலோ அப்படி இல்லை. நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: கெட்ட நடத்தைக்காக அன்றி, எவனொருவன் தன் மனைவியை விலக்கிவிட்டு,

வேறொருத்தியை மணந்துகொள்கின்றானோ, அவன் விபசாரம் செய்கிறான்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

சீடர்கள் அவரை நோக்கி, "கணவன் மனைவியின் நிலை இப்படியென்றால், மணந்து கொள்ளாதிருப்பதே நலம்" என்று சொன்னார்கள். அவரோ, "அருள்பெற்றவரன்றி வேறு எவரும் இதை உணர்ந்துகொள்வதில்லை. ஏனெனில், தாய் வயிற்றிலே அண்ணகராய்ப் பிறந்தவரும் உளர்; மனிதரால் அண்ணகரானவரும் உளர்; விண்ணரசை முன்னிட்டுத் தம்மைத்தாமே அண்ணகராக்கிக்கொண்டவரும் உளர்.

உணர்ந்துகொள்ளக் கூடியவன் உணர்ந்துகொள்ளட்டும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

யாரை வழிபடுவதென்று நீங்கள் இன்று தேர்ந்துகொள்ளுங்கள்.

யோசுவா ஆகமத்திலிருந்து வாசகம் 24: 14-29

அந்நாட்களில்: யோசுவா மக்களிடம் கூறியதாவது:

"நீங்கள் ஆண்டவருக்கு அஞ்சி உண்மையுடனும் முழு இதயத்துடனும் அவருக்குப் பணிபுரிந்து, உங்கள் முன்னோர் மெசொப்பொத்தேமியாவிலும் எகிப்திலும் தொழுது வந்த தேவர்களை அகற்றிவிடுங்கள். ஆண்டவரைத் தொழுவது தீமையானது எனத் தென்பட்டால் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். மெசொப்பொத்தேமியாவில் உங்கள் முன்னோர் தொழுதுவந்த தேவர்களை வழிபடுவதா அல்லது நீங்கள் வாழுகின்ற அமோறையர் நாட்டுத் தேவர்களை வழிபடுவதா என்பதில் எது உங்களுக்கு விருப்பமோ அதை இன்றே தீர்மானித்துவிடுங்கள். ஆனால் நானும் என் வீட்டாரும் ஆண்டவரையே தொழுது வருவோம்" என்றார்.

அப்போது மக்கள் மறுமொழியாக, "நாங்கள் ஆண்டவரை விட்டு விலகி அந்நிய தேவர்களைத் தொழுவது எங்களுக்குத் தூரமாய் இருப்பதாக. நம்மையும் நம் முன்னோரையும் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து கொணர்ந்தவரும், நம்முடைய கண்களுக்கு முன்பாக அத்தனை அதிசயங்களைச் செய்தவரும், நாம் நடந்து வந்த எல்லா வழிகளிலும்

நம்மைப் பாதுகாத்தவரும், நாம் கடந்துபோன எல்லா மக்களிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றினவரும் நம் ஆண்டவராகிய கடவுளேயன்றி வேறல்லர். இந்நாட்டில் குடியிருந்த அமோறையர் முதலான புறவினத்தார் அனைவரையும் நமக்கு முன்பாகத் துரத்திவிட்டவர் அவரன்றோ! அவரே நம் கடவுளாய் இருப்பதால் அவரையே வழிபடுவோம்" என்றனர்.

இதற்கு யோசுவா மக்களை நோக்கி, "ஆனால் நம் கடவுள் தூயவரும் வல்லவரும் தனியுரிமை பாராட்டுகிறவரும், உங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிந்திருக்கிறவருமாய் இருப்பதால் அவருக்கு நீங்கள் ஊழியம் செய்ய முடியாது. முன்பு அவர் எத்தனையோ நன்மைகளை உங்களுக்குச் செய்திருந்தாலும் நீங்கள் அவரைக் கைவிட்டு அந்நிய தேவர்களைத் தொழுவீர்களேயாகில், அவர் மனம் மாறி உங்களைத் துன்புறுத்தி அடிமைப்படுத்துவார்" என்றார்.

மக்கள் யோசுவாவை நோக்கி, "நீர் சொல்லுவது போல் ஒருபோதும் நிகழாதிருப்பதாக. ஏனெனில், நாங்கள் ஆண்டவரையே தொழுது வருவோம்" என்றனர். யோசுவா மக்களைப் பார்த்து, "அவரைத் தொழும்படி நீங்கள் அவரை உங்கள் ஆண்டவராகத் தேர்ந்துகொண்டதற்கு நீங்கள் சாட்சி" என்றார். அதற்கு மக்கள், "ஆம், நாங்கள் சாட்சி" என்று சொன்னார்கள். அப்பொழுது யோசுவா, "அப்படியானால், உங்கள் நடுவே இருக்கிற அந்நிய தேவர்களைக் கொண்டு வாருங்கள். இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர்பால் உங்கள் இதயத்தைத் திருப்புங்கள்" என்றார். மக்கள் இதைக் கேட்டு, "நம் ஆண்டவராகிய கடவுளையே வழிபடுவோம்; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்" என்று கூறினர்.

அதன்படி யோசுவா அன்றே சிக்கேமில் மக்களுடன் உடன்படிக்கை செய்து அவர்களுக்கு ஆண்டவருடைய சட்டங்களையும் நீதி நெறிகளையும் எடுத்துக் கூறினார். மேலும் இவ்வார்த்தைகளை எல்லாம் கடவுளின் சட்ட நூலில் எழுதி வைத்தார். பிறகு ஒரு பெரிய கல்லை எடுப்பித்துப் புனித இடத்திற்கு அருகிலிருந்த தெரெபிந்த் என்ற ஒரு மரத்தின் கீழே அதை நாட்டினார். பின்னர் எல்லா மக்களையும் பார்த்து, "இதோ இக்கல் ஆண்டவர் உங்களுக்குச் சொல்லியிருக்கிற எல்லா வார்த்தைகளையும் கேட்டிருக்கின்றது. நீங்கள் எப்போதாவது அவற்றை மறுத்து உங்கள் ஆண்டவராகிய கடவுளுக்கு எதிராகப் பொய் சொல்லத் துணிவீர்களேயானால், இக்கல் உங்கள் நடுவில் உண்மைக்குச் சான்றாக விளங்கும்" என்றார். பிறகு யோசுவா மக்களுக்கு விடைகொடுத்து அவர்களைத் தத்தம் வீட்டிற்கு அனுப்பிவைத்தார்.

இறுதியில் நூனின் மகனும் ஆண்டவரின் அடியானுமான யோசுவா தம் நூற்றுப்பத்தாவது வயதில் உயிர் நீத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15 : 1-2a & 5, 7-8, 11 (பல்லவி : 5a காண்)

பல்லவி : **ஆண்டவரே, நீர் தாம் என் உரிமைச் சொத்து.**

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும் : உம்மிடம் நான் அடைக்கலம்
2 புகுந்தேன். “ நீரே என் ஆண்டவர் :
5 ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம் : எனக்
குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே,” என்றேன். பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன் ; இரவில்
கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன் : அவர்
என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர் : உம் திருமுன்
எனக்கு நிறை மகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்
தையும் நீர் காட்டுவீர். பல்லவி

# 2-ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஒவ்வொருவனையும் அவனவன் நடத்தைக்குத் தக்கவாறு தீர்ப்பிடுவோம்.**

**இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்**

*18: 1-10, 13b, 30-32*

ஆண்டவருடைய வாக்கு மீண்டும் எனக்கு அருளப்பட்டது. “ ‘ தந்தையர் திராட்சைக்காய் தின்ன, பிள்ளைகளுக்குப் பல் கூசிற்ரும்’ என்னும் பழமொழியை இஸ்ராயேல் நாட்டைக் குறித்து நீங்கள் வழங்குவதன் பொருள் என்ன ?

ஆண்டவராகிய இறைவன் கூறுகிருர் ! நம் உயிர்மேல் ஆணை ! இஸ்ராயேலில் இப்பழமொழி இனிமேல் வழங்கப்படாது. இதோ, ஆன்மாக்கள் அனைத்தும் நமக்கே சொந்தம் ; தந்தையின் ஆன்மாவும் நம்முடையதே ; மைந்தனின் ஆன்மாவும் நம்முடையதே. பாவஞ் செய்யும் ஆன்மாவே சாகும்.

எவனொருவன் நீதிமானுய் இருந்து சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்வானுயின் — அதாவது, மலைகளின்மேல் படைக்கப்பட்டதை

உண்ணாமலும், இஸ்ராயேல் வீட்டின் சிலைகளை நோக்கிப் பாராமலும், அயலான் மனைவியைத் தீண்டாமலும், தீட்டுள்ள பெண்ணோடு சேராமலும், பிறனை ஒடுக்காமல், கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக் கொடுத்தும், கொள்ளையிடாமலும், பசித்தவனுக்குத் தன் அப்பத்தைப் பகிர்ந்தளித்தும், ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடை கொடுத்தும், வட்டிக்குப் பணம் கொடாமலும், தான் கொடுத்ததற்கு அதிகமாய் வாங்காமலும், அக்கிரமத்தில் உட்படாமலும், ஒருவர் ஒருவருக்கு இடையே உண்டான வழக்கை நியாயமாய்த் தீர்த்தும், நம் கற்பனைகளைக் கடைப்பிடித்தும், நாம் வகுத்த முறைகளின்படி நடந்தும் வந்தால்— அவனே நீதிமான்; அவன் வாழ்வான் என்பது உறுதி, என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

ஆனால் இம்மனிதனுக்கு ஒரு மகன் பிறந்து, அவன் திருடனாகவும், இரத்தம் சிந்துகிறவனாகவும், முன்சொல்லிய குற்றங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்கிறவனாகவும் இருந்தால், அவன் உயிர் வாழான்; அருவருப்பான அவற்றையெல்லாம் செய்த அவன் சாவான் என்பது உறுதி; அவனது இரத்தப் பழி அவன் மேலேயே இருக்கும்.

ஆகையால், இஸ்ராயேல் வீட்டாரே, உங்களுள் ஒவ்வொருவனையும் அவனவன் நடத்தைக்குத் தக்கவாறு தீர்ப்பிடுவோம், என்கிறார் ஆண்டவராகிய இறைவன். நீங்கள் உங்கள் அக்கிரமங்களையெல்லாம் விட்டு மனந்திரும்புங்கள்; அப்போது நீங்கள் பாவத்தில் விழ இடமிராது. நமக்கு எதிராய் நீங்கள் செய்த துரோகங்களையெல்லாம் தூரமாக எறிந்து விடுங்கள்; புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக்கொள்ளுங்கள். இஸ்ராயேல் வீட்டாரே, நீங்கள் ஏன் சாக வேண்டும்? எவனும் சாக வேண்டும் என நாம் விரும்புவதில்லையே, என்கிறார் ஆண்டவராகிய இறைவன். ஆகவே மனந்திரும்புங்கள்; உயிர் வாழ்வீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 50 : 10-11, 12-13, 16-17 (பல்லவி : 10a)

பல்லவி : தூயதோர் உள்ளத்தை, இறைவா,
நீர் என்னகத்தே உருவாக்கும்.

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும். உறுதி
தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும், உமது பரிசுத்த
ஆவியை என்னிடமிருந்தே எடுத்துவிடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்: உமது பெருந்
தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன். பாவிகள் உம்மிடம்
திரும்பி வருவர்.
பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை, தகனப்பலி கொடுத்
தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்தவேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே:
தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.
பல்லவி

அல்லேலூயா

மத். 11:25 காண்.

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி, ஏனெனில், விண்ணரசின் மறை பொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**குழந்தைகள் என்னிடம் வருவதைத் தடுக்கவேண்டாம். ஏனெனில், விண்ணரசு இத்தகையோரதே.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*19: 13-15*

அக்காலத்தில்:

யேசு குழந்தைகள்மேல் தம் கைகளை வைத்துச் செபிக்குமாறு அவர்களை அவரிடம் கொண்டுவந்தனர். சீடர் அவர்களை அதட்டினர். யேசுவோ அவர்களிடம், "குழந்தைகள் என்னிடம் வருவதைத் தடுக்க வேண்டாம், விடுங்கள். ஏனெனில், விண்ணரசு இத்தகையோரதே" என்றார். அவர்கள்மீது கைகளை வைத்தபின் அங்கிருந்து சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபதாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அந்நியர்களை நமது பரிசுத்த மலைக்குக் கூட்டிவருவோம்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 56: 1, 6-7

ஆண்டவர் கூறுகிறார்: "நீதியைக் கடைப்பிடியுங்கள், நேர்மையானதைச் செய்யுங்கள்: ஏனெனில் நாம் தரப்போகும் மீட்பு அண்மையில் இருக்கிறது, நமது நீதி வெளியாகப் போகிறது.

ஆண்டவரிடம் அவரை வழிபடுவதற்காக அணுகி வந்து, அவருடைய அடியார்களாய் இருக்கும்படி ஆண்டவரின் திருப் பெயர்மேல் அன்புகூர்கிற அந்நியர்கள் ஓய்வு நாளை அவசங்கை செய்யாமல் அதைக் கடைப்பிடித்து நமது உடன்படிக்கையை உறுதியாய்ப் பற்றியிருந்தால்- அவர்களை நமது பரிசுத்த மலைக்குக் கூட்டிவந்து, நம் செப வீட்டில் அவர்கள் மகிழ்ந்திருக்கச் செய்வோம்; நமது பீடத்தின்மேல் அவர்கள் தரும் தகனப் பலிகளும் மற்றப் பலிகளும் நமக்குகந்தவையாய் ஏற்கப் படும்: ஏனெனில் நம் வீடு எல்லா மக்களினங்களுக்கும் செப வீடு என வழங்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 66: 1-2, 4, 5 & 7 (பல்லவி: 3)

பல்லவி: இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக: மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

1 கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக: நம்மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.
2 அப்போது உலகம் உமது வழியை அறிந்துகொள்ளும், மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும்.

பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள் மீது ஆட்சி
செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

5 இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக: மக்கள்
எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.
7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக, மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள்
அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

இஸ்ராயேலுக்குக் கடவுள் கொடுத்த வரங்களையும், விடுத்த அழைப்பையும் அவர் திருப்பி வாங்கிக்கொள்வதில்லை.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 11: 13-15, 29-32

சகோதரர்களே :

புறவினத்தாராகிய உங்களுக்குச் சொல்லுகிறேன்: "நான் புறவினத்தாரின் அப்போஸ்தலன்தான்; ஆனால் என் இனத்தாருள் போட்டி மனப்பான்மையைத் தூண்டிவிட்டு அவர்களுள் சிலரை மீட்கக்கூடும் என்று நம்பியே அந்த அப்போஸ்தலத் திருப்பணியை மேலானதாக மதிக்கிறேன். யூதர்கள் தள்ளுண்டதால் உலகம் இறைவனோடு ஒப்புரவாயிற்று என்றால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுபற்றி என்னென்போம்? இறந்தோர் உயிர் பெறுவதாகும்.

ஏனெனில், கடவுள் தாம் கொடுத்த வரங்களையும், விடுத்த அழைப்பையும் திருப்பி வாங்கிக்கொள்வதில்லை. ஒரு காலத்தில் நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தீர்கள்; இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினால் நீங்கள் இரக்கம் பெற்றுக்கொண்டீர்கள். அதுபோல நீங்கள் இரக்கம் பெற்றுக்கொண்டதால் அவர்கள் இப்பொழுது கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள்; அவர்கள் இப்படிக் கீழ்ப்படியாமல் இருப்பது, அவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வதற்கே. ஏனெனில், அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகக் கடவுள் அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப்பற்றிய செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அம்மா, உன் விசுவாசம் பெரிது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

15: 21-28

அக்காலத்தில் :

யேசு அங்கிருந்து விலகி, தீர், சீதோன் நகரங்களின் பக்கம் சென்ருர். இதோ ! அங்கே வாழ்ந்த கனேனயப் பெண் ஒருத்தி அவரிடம் வந்து, "ஆண்டவரே, தாவீதின் மகனே ! என் மேல் இரக்கம் வையும். என் மகள் பேய் பிடித்துப் பெரிதும் துன்புறுகிருள்" என்று கூவினுள். அவர் ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லவில்லே.

சீடர் அவரை அணுகி, "இவள் நமக்குப்பின் கத்திக்கொண்டு வருகிருளே ; இவளே அனுப்பிவிடும்" என்று வேண்டினர். அதற்கு அவர், "இஸ்ராயேல் குலத்தில் சிதறிப்போன ஆடுகளிடமட்டுமே நான் அனுப்பப் பட்டேன்" என்ருர்.

அவளோ வந்து அவரைப் பணிந்து, "ஆண்டவரே, எனக்கு உதவி புரியும்" என்ருள். அவர் மறுமொழியாக, "பிள்ளேகளின் உணவை எடுத்து நாய்க்குப் போடுதல் நல்லதன்று" என்ருர். அவளோ, "ஆமாம், ஆண்டவரே, நாய்க்குட்டிகளும் உரிமையாளரின் மேசையினின்று கீழே விழும் சிறு துண்டுகளேத் தின்கின்றனவே" என்ருள்.

அப்போது யேசு அவளுக்கு மறுமொழியாக, "அம்மா, உன் விசுவாசம் பெரிது. உன் விருப்பப்படியே ஆகட்டும்" என்ருர். அந்நேர முதல் அவள் மகள் குணமாயிருந்தாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**என் அப்பத்தை உண்டு, உங்களுக்காக நான் கலந்து வைத்திருக்கும் பழச்சாற்றையும் குடியுங்கள்.**

9 : 1-6

பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம்

ஞானம் தனக்கு ஒரு வீட்டைக் கட்டி, ஏழு தூண்களையும் அறுத்து நிறுத்தினது; தன் பலி மிருகங்களையும் கொன்று, பழச் சாற்றையும் கலந்து வார்த்து விருந்து செய்தது. அது தன் ஊழியக்காரிகளைக் கோட்டைக்கும், நகரத்தின் மதில்களுக்கும் அனுப்பி, "சிறுவனாய் இருப்பவன் எவனும் என்னிடம் வருவானாக" என்று சொன்னது.

விவேக மில்லாதவர்களுக்கு உரைத்ததாவது : "வாருங்கள் ; என் அப்பத்தை உண்டு, உங்களுக்காக நான் கலந்து வைத்திருக்கும் பழச்சாற்றையும் குடியுங்கள். சிறு பிள்ளைத்தனத்தை விட்டுவிட்டு வாழுங்கள். விவேகத்தின் வழிகளில் நடந்து செல்லுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 9-10, 11-12, 13-14 (பல்லவி : 8 a)

பல்லவி : **ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன், அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும், சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக.
பல்லவி

9 ஆண்டவருடைய புனிதர்களே, அவருக்கு அஞ்சுங்கள் : ஏனெனில், அவருக்கு அஞ்சுவோருக்கு எதுவும் குறைவுபடாது.
10 வலிமையுற்றோர் வறிஞராய்ப் பசியுற்றனர்: ஆண்டவரைத் தேடுவோர்க்கோ எந்த நன்மையும் குறைவுபடாது.
பல்லவி

11 வாரீர் மக்களே, நான் சொல்லுவதைக் கேளீர்: உங்களுக்குத் தேவபயத்தைக் கற்பிப்பேன்.
12 வாழ்க்கைமீது பற்றுதல் கொண்டுள்ளவன் யார்? நலன்களைத் துய்க்க நீடிய வாழ்வை விரும்பும் மனிதன் யார்?
பல்லவி

13 உன் நாவை நீ தீமையினின்று காத்திடு: வஞ்சக மொழி பேச வாயெடுக்காதிரு.
14 தீமையைத் தவிர்த்து நன்மை செய் : சமாதானத்தை விரும்பித் தேடு.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

ஆண்டவருடைய திருவுளம் யாது என அறிந்துணருங்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர்
எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 15-20

சகோதரர்களே:

ஆகையால், உங்கள் நடத்தையைப்பற்றிக் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் நடக்காமல் ஞானிகளாக நடந்துகொள்ளுங்கள். நாம் வாழும் இக்காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள்; இது பொல்லாத காலம். எனவே, அறிவிலிகளாய் இல்லாமல் ஆண்டவருடைய திருவுளம் யாது என அறிந்துணருங்கள்.

குடிமயக்கத்திற்கு இடங்கொடாதீர்கள். அதனால், ஒழுக்கக் கேடுதான் விளையும். தேவ ஆவியிலே நிறைவுபெறுங்கள். தேவ ஆவி ஏவிய சங்கீதங்கள், புகழ்ப் பாக்கள், பாடல்கள் இவற்றைக்கொண்டு உரையாடி, ஆண்டவருக்கு உளமார இசைபாடிப் புகழுங்கள். இங்ஙனம், கடவுளும் தந்தையுமானவருக்கு, நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பெயரால், அனைத்திற்காகவும் எந்நேரமும் நன்றிகூறுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 6 : 56

அல்லேலூயா. என் தசையைத் தின்று, என் இரத்தத்தைக் குடிப்பவன்
என்னில் நிலைத்திருக்கிறான்,
நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் தசை மெய்யான உணவு, என் இரத்தம் மெய்யான பானம்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 51-59

அக்காலத்தில்: யேசு மக்கள் கூட்டத்தை நோக்கி,

“நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு, இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே” என்றார்.

“நாம் உண்பதற்கு இவர் தம் தசையை எவ்வாறு அளிக்கக்கூடும்?” என்று யூதர் தமக்குள் வாதித்துக்கொண்டிருக்க, யேசு அவர்களை நோக்கிச் சொன்னதாவது:

“உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுமகனின் தசையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்குள் உயிர் இராது. என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன்.

என் தசை மெய்யான உணவு. என் இரத்தம் மெய்யான பானம். என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன். உயிருள்ள தந்தை என்னை அனுப்பினார், நானும் அவரால் வாழ்கின்றேன். அதுபோல என்னைத் தின்பவனும் என்னால் வாழ்வான்.

வானின்று இறங்கிவந்த உணவு இதுவே, இது நம் முன்னோர் உண்ட உணவுபோல் அன்று. அவர்கள் அதை உண்டார்கள், ஆயினும் இறந்தார்கள். இவ்வுணவைத் தின்பவனோ என்றுமே வாழ்வான்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நாடெங்கும் வழக்குக்குக் காரணமாய் இருக்கும்படி என்னைப் பெற்றாயே!**

*இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்* *38: 4-6, 8-10*

*அந்நாட்களில் :*

*தலைவர்கள் அரசனை நோக்கி, "இம்மனிதனைக் கொன்றுபோடுங்கள்: ஏனெனில் இவன் இவ்வாறு பேசி இப்பட்டணத்திலிருக்கிற போர் வீரர்களின் ஊக்கத்தையும், மக்கள் எல்லாருடைய ஊக்கத்தையும் வேண்டுமென்றே தளரச் செய்கிறான்; ஆதலால் இவன் மக்களுக்குத் தீமையைத் தேடுகிறானேயன்றி நன்மையைத் தேடுவதில்லை" என்றார்கள்.*

*அதற்குச் செதேசியாஸ் அரசன், "இதோ, அவனை உங்களுக்கே கையளிக்கிறேன்; நீங்கள் கேட்கும் எதையும் அரசன் மறுக்க இயலாது" என்றான். அவர்களோ எரெமியாசைக் கொண்டுபோய் அமெலேக்கின் மகனான மெல்கியாசுடைய சிறைக்கூடத்து முற்றத்திலிருந்த பாழுங் கிணற்றில் கயிற்றால் இறக்கிவிட்டார்கள்; அந்தக் கிணற்றில் நீரின்றி வெறும் சேறு மட்டுமே இருந்தது; இவ்வாறு எரெமியாஸ் அச்சேற்றில் இறங்கினார்.*

*அப்தேமேலேக்கு அரசன் மாளிகையை விட்டுப் புறப்பட்டு அரசனிடம் சென்று, " என் ஆண்டவனே, அரசே, இறைவாக்கினரான எரெமியாசுக்கு அந்த மனிதர்கள் செய்ததெல்லாம் அநியாயம்; பட்டணத்தில் உணவு நெருக்கடி இருக்கும் இக்காலத்தில் அவரைக் குழியில் தள்ளிப் போட்டால், அவர் பட்டினியால் செத்துப் போவாரே!" என்றான்.*

*அதைக் கேட்ட அரசன் எத்தியோப்பியனான அப்தேமேலேக்கை நோக்கி, "உன்னோடு இங்கிருந்து முப்பது பேரைக் கூட்டிக்கொண்டுபோய், இறைவாக்கினராகிய எரெமியாஸ் சாவதற்குள் அவரைக் குழியிலிருந்து தூக்கி விடு" என்று கட்டளையிட்டான்.*

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 39 : 1, 2, 3, 17 (பல்லவி : 13 b)

பல்லவி : **ஆண்டவரே, எனக்குத் துணைசெய்ய விரைவீராக.**

1 நம்பினேன், ஆண்டவரை நம்பினேன், அவர் என் பக்கமாய்க் குனிந்து,
என் கூக்குரலைக் கேட்டருளினார். பல்லவி

2 அழிவுதரும் குழியினின்றும் சதுப்பு நிலச் சேற்றினின்றும் அவர் என்னைத்
தூக்கிவிட்டார் : உறுதியான பாறையின்மீது என் காலடிகளை நிறுத்தினார்,
நடக்க எனக்கு உறுதி தந்தார். பல்லவி

3 புதியதோர் பாடலை, நம் இறைவனைப் புகழும் பாடல் ஒன்றை என் நாவி
னின்று எழச் செய்தார். பலரும் இதைப் பார்த்து அச்சம்கொள்வர் :
ஆண்டவர்மீது நம்பிக்கை கொள்வர். பல்லவி

17 நானோ துயர்மிக்கவன், ஏழை மனிதன் : இறைவன் என்மேல் அக்கறை
கொண்டுள்ளார். எனக்குத் துணை செய்பவரும் விடுதலையளிப்பவரும்
நீரே : ஆண்டவரே, தாமதியாதேயும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 12: 1-4

சகோதரர்களே :

எண்ணிக்கையில்லாச் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க, நமக்குத் தடையாயிருக்கும் எந்தச் சுமையையும், நம்மை எளிதில் வயப்படுத்தும் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மனஉறுதியோடு ஓடுவோமாக. விசுவாசத்தைத் தொடங்கி வைத்தவரும், அதை நிறைவு பெறச் செய்பவருமான யேசுவின்மேல் கண்களைப் பதிய வைப்போம். அவர் தம் முன்னே வைத்திருந்த மகிழ்ச்சியின்பொருட்டு, நிந்தையைப் பொருட்படுத்தாமல், சிலுவையைத் தாங்கினார். இப்பொழுது கடவுளது அரியணையின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார்.

பாவிகளால் தமக்கு உண்டான எவ்வளவோ எதிர்ப்பைத் தாங்கிக் கொண்ட அவரைச் சிந்தையில் இருத்துங்கள். அப்போது நீங்கள் மனம் தளர்ந்து போகமாட்டீர்கள். பாவத்திற்கு எதிராகச் செய்யும் போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே !

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன ; நானும் அவற்றை அறிவேன் ; அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சமாதானத்தை அளிக்க அல்ல, பிரிவினை உண்டாக்கவே வந்தேன்**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12: 49-53

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

“மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன். இப்போதே அது பற்றிஎரிய வேண்டுமென்று எவ்வளவோ விரும்புகிறேன் ! நான் பெற வேண்டிய ஞானஸ்நானம் ஒன்றுண்டு. அது நிறைவேறும் அளவும் நான் எவ்வளவோ ஏக்கமாயிருக்கிறேன்.

நான் மண்ணுலகிற்குச் சமாதானத்தை அளிக்க வந்தேனென்று எண்ணுகிறீர்கள் ? இல்லை, பிரிவினை உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்லுகிறேன். இதுமுதல் ஒரு வீட்டிலுள்ள ஐவருள் மூவர் இருவருக்கு எதிராகவும், இருவர் மூவருக்கு எதிராகவும் பிரிந்திருப்பர். தகப்பன் மகனுக்கும், மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும், மருமகள் மாமிக்கும் எதிராகப் பிரிக்கப்படுவர்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் நீதிபதிகளைத் தோற்றுவித்தார்: ஆனால் இவர்களுக்கும் செவிமடுக்க அவர்கள் விரும்பவில்லை.**

நீதிபதிகள் ஆகமத்திலிருந்து வாசகம் 2: 11-19

அந்நாட்களில்:

இஸ்ராயேல் மக்கள் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் புரிந்து பாவாலிமைத் தொழுதனர். எகிப்து நாட்டிலிருந்து தம் முன்னோரை மீட்டவரும், தம் தந்தையரின் ஆண்டவருமான கடவுளை விட்டுவிட்டு அன்னிய தேவர்களையும், தம்மைச் சுற்றிலும் இருந்த மக்களின் தெய்வங்களையும் பின்பற்றி இருந்த மக்களின் தெய்வங்களையும் பின்பற்றி வழிபட்டனர். இதனால் ஆண்டவருக்குக் கோபமூட்டினர். அவரை இகழ்ந்து, பாவாலையும் அஸ்தரோத்தையும் தொழுதனர்.

எனவே ஆண்டவர் இஸ்ராயேலர் மேல் கோபம் கொண்டு கொள்ளைக்காரர் கைகளில் அவர்களை ஒப்படைக்க, இவர்களும் அவர்களைப் பிடித்துத் தங்களைச் சுற்றிலுமிருந்த எதிரிகளுக்கு விற்று விட்டனர். பகைவர்களை எதிர்க்க அவர்களால் முடியவில்லை. ஆனால் அவர்கள் எங்குப் போனபோதிலும், ஆண்டவர் வாக்களித்திருந்தபடி அவர் கைகள் அவர்கள்மேல் இருந்ததால் அவர்கள் மிகவும் துன்புற்றனர்.

அவர்களைத் துன்புறுத்தினவர்களின் கைகளிலிருந்து அவர்களை மீட்க ஆண்டவர் நீதிபதிகளை எழுப்பினார். ஆனால் இவர்களுக்குச் செவிமடுக்கக்கூட அவர்கள் விரும்பவில்லை. அன்னிய தெய்வங்களுடன் விபசாரம் செய்து அவற்றை வழிபட்டனர். வெகு விரைவில் அவர்கள் தங்கள் முன்னோரின் வழிகளை விட்டு விட்டு, ஆண்டவரின் கற்பனைகளைக் கேட்டிருந்தும் அவற்றிற்கு முற்றிலும் மாறாய் நடந்தனர்.

ஆண்டவர் நீதிபதிகளை எழுப்பி, அவர்களின் காலத்திலே இரக்கத்தால் மனம் உருகி, துன்புறுவோரின் பெருமூச்சுகளுக்குச் செவிமடுத்து, அவர்களைத் துன்புறுத்திக் கொன்றவர்களிடமிருந்து மீட்டு வந்தார். நீதிபதி இறந்தபோதோ இஸ்ராயேலர் திரும்பவும் தீயோராகித் தம் முன்னோர் செய்த கேடுகளை விட இழிவான காரியங்களைச் செய்து, அன்னிய தெய்வங்களைப் பின்பற்றி வழிபட்டு வந்தனர். அவர்கள் மேன்மேலும் பாவம் செய்து கொண்டேயிருந்தனர். தங்கள் முன்னோரின் முரட்டு வழியையும் விட்டுவிடவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 105 : 34-35, 36-37, 39-40, 43 ab & 44 (பல்லவி : 4a)

பல்லவி : **உம் மக்கள் மீது நீர் காட்டிய கருணைக்கேற்ப,**
**ஆண்டவரே, எங்களை நினைவு கூரும்.**

34 புறவினத்தாரை அழிக்கும்படி ஆண்டவர் கட்டளையிட்டார் :
ஆனால் அவர்கள் அழிக்கவில்லை.
35 அதோடு அவ்வேற்றினத்தாரோடு சேர்ந்துகொண்டனர் :
அவர்கள் செய்த அக்கிரமங்களையே இவர்களும் செய்யலாயினர். பல்லவி

36 அவர்கள் வழிபட்ட சிலைகளை வணங்கலாயினர் :
அவையே அவர்களுக்குக் கண்ணிகள் ஆயின.
37 தம் ஆண்மக்களை அச்சிலைகளுக்குப் பலியிடலாயினர்:
தம் பெண்மக்களைப் பேய்களுக்குப் பலியிட்டனர். பல்லவி

39 தம் செயல்களால் அவர்கள் தீட்டு அடைந்தனர்:
தங்கள் அக்கிரமங்களால் வேசித்தனம் செய்தனர்.
40 தம் மக்கள் மீது ஆண்டவர் சினம் மூண்டெழுந்தார்.
தம் உரிமைப் பொருளான அவர்களை வெறுத்துத் தள்ளினார். பல்லவி

43 எத்தனையோ முறை அவர்களை விடுவித்தார்:
அவர்கள் அவருக்கு மனக் கசப்பு உண்டாக்கினர்.
44 எனினும் அவர் அவர்களின் துன்பங்களைப் பார்த்தார்:
அவர்கள் கூக்குரலைக் கேட்டு ஏற்கலானார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**எசேக்கியேல் உங்களுக்கு ஓர் அடையாளமாய் இருப்பார் ;**
**அவர் செய்ததுபோல நீங்களும் செய்வீர்கள்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 24 :15-24

ஆண்டவரின் வாக்கு மீண்டும் எனக்கு அருளப்பட்டது : " மனிதா, இதோ, உன் கண்களுக்கு இன்பந் தருவதை ஒரே நொடியில் எடுத்துவிடப் போகிறோம் ; ஆனால் நீ புலம்பவோ அழவோ கண்ணீர்விடவோ கூடாது ; மறைவாய்ப் பெருமூச்சு விடு ; ஆனால் சத்தமாய் இழவு கொண்டாடாதே; உன் தலைப்பாகை தலையில் இருக்கட்டும் ; செருப்புகளைக் காலில் அணிந்திரு; உன் முகத்தை மூடிக்கொள்ளாதே ; இழவு கொண்டாடுகிறவர் உண்ணும் உணவைப் புசிக்காதே."

நான் ஊராருடன் பேசினேன்; அன்று மாலை என் மனைவி இறந்து போனாள்; மறுநாட் காலையில் ஆண்டவர் கட்டளையிட்டபடியே செய்தேன். அப்போது மக்கள் திரள், "நீர் செய்வதற்கு என்ன பொருள் என எங்களுக்குச் சொல்லமாட்டீரோ" என்று என்னைக் கேட்டார்கள்.

அதற்கு நான் சொன்ன விடை இதுவே: "ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது: 'இஸ்ராயேல் வீட்டாருக்குச் சொல்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: உங்கள் நாட்டில் பெருமை மிக்கதும், உங்கள் கண்களுக்கு இன்பந் தருவதும், அழியக் கூடாது என்று உங்கள் இதயம் விரும்பி ஏங்குவதுமான நமது பரிசுத்த இடத்தை நாம் பங்கப்படுத்தப் போகிறோம்: நீங்கள் யெருசலேமில் விட்டுவந்த உங்கள் புதல்வர் புதல்வியர் வாளுக்கு இரையாவார்கள். அப்பொழுது நீங்களும் நான் செய்தது போலச் செய்வீர்கள்: உங்கள் முகத்தை மூடமாட்டீர்கள்; இழவு நாளில் உண்ணும் உணவைப் புசிக்கமாட்டீர்கள். உங்கள் தலைப்பாகை தலையிலிருக்கும்; காலில் செருப்பு அணிந்திருப்பீர்கள்; நீங்கள் புலம்பவோ அழவோ மாட்டீர்கள்; ஆனால் உங்கள் அக்கிரமங்களை நினைத்துச் சோர்வுற்று, ஒருவரையொருவர் பார்த்து விம்மித் தவிப்பீர்கள். இவ்வாறு எசேக்கியேல் உங்களுக்கு ஓர் அடையாளமாய் இருப்பான்; அவன் செய்தது போல, காலம் வரும்போது நீங்களும் செய்வீர்கள்; அப்போது ஆண்டவராகிய இறைவன் நாமே என்பதை அறிவீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

உ.ப. 32 : 18-19, 20, 21 (பல்லவி : 18a)

பல்லவி : **உன்னைப் பெற்ற கடவுளைக் கைவிட்டாய்.**

18 உன்னைப் பெற்ற கடவுளை விட்டு, உன்னை உருவாக்கிய ஆண்டவரை
மறந்துவிட்டாயே!
19 ஆண்டவர் அதனைக் கண்டார். தம்முடைய புதல்வரும் புதல்வியரும்
தமது கோபத்தை மூட்டியதினால் அவர் குரோதமுள்ளவராகிக் கூறினார்:
பல்லவி

20 "ஆ! இவர்கள் கெட்டார்கள்; வஞ்சனையுள்ள புதல்வரானார்கள்;
ஆதலால், நம் முகத்தை அவர்களுக்கு மறைத்து, அவர்களுடைய முடிவு
எப்படிப்பட்டதாய் இருக்குமோவென்று பார்ப்போம். பல்லவி

21 அவர்கள் தெய்வமல்லாதவைகளாலும் நமக்கு எரிச்சல் வருவித்து, தங்கள் வீணான தீச் செயல்களாலும் நமக்கு முடிவு உண்டாகச் செய்தார்களே; இதோ நம் மக்களென்று மதிக்கப்படாதவர்கள் மூலமாய் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட இனத்தவர்களாலேயே அவர்களுக்குக் கோபம் உண்டாகச் செய்வோம்.

பல்லவி

*அல்லேலூயா*

மத். 5 : 3

**அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நீ நிறைவு பெற விரும்பினால், உன் உடைமைகளை விற்றுவிடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

19: 16-22

அக்காலத்தில் :

இதோ ஒருவன் யேசுவிடம் வந்து, "போதகரே, முடிவில்லா வாழ்வுபெற நான் என்ன நன்மை செய்யவேண்டும்?" என்று கேட்டான். அவர் அவனை நோக்கி, "நன்மையைப்பற்றி என்னைக் கேட்பதேன்? நல்லவர் ஒருவரே. வாழ்வுபெற விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி" என்றார்.

அவன், "எவற்றை?" என்றான். "யேசு, கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச் சான்று சொல்லாதே. தாய் தந்தையைப் போற்று. மேலும், உன்மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக" என்று கூறினார்.

வாலிபன் அவரிடம், "இவை எல்லாம் கடைப்பிடித்து வருகிறேன். என்னிடத்தில் இன்னும் குறைவாய் இருப்பதென்ன?" என்று கேட்டான். அதற்கு யேசு, "நீ நிறைவுபெற விரும்பினால், போய் உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்னர் வந்து என்னைப் பின்செல்" என்றார்.

இவ்வார்த்தையைக் கேட்டு அவ்வாலிபன் வருத்தத்துடன் சென்றான். ஏனெனில், அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*கெதெயோனே, இஸ்ராயேலை மீட்பாய்; நாமே உன்னை அனுப்பினோம் என்று அறிந்துகொள்.*

நீதிபதிகள் ஆகமத்திலிருந்து வாசகம் 6: 11-24a

அந்நாட்களில்:

ஆண்டவரின் தூதர் வந்து, எஸ்ரி குடும்பத் தலைவனான யோவாசுக்குச் சொந்தமான எபிராவிலிருந்த கருவாலி மரத்தடியில் உட்கார்ந்தார். யோவாசின் மகன் கெதெயோன் மதியானியருக்குத் தப்பியோடக் கோதுமையை அடித்துச் சேர்க்கையில், ஆண்டவரின் தூதர் அவனுக்குத் தோன்றி, "மனிதருள் மாவீரனே, ஆண்டவர் உன்னோடு இருப்பாராக" என்றார்.

கெதெயோன் அவரை நோக்கி, "ஐயனே, ஆண்டவர் எங்களோடு இருப்பாராகில் இவையெல்லாம் எங்களுக்கு நிகழ்வானேன்? ஆண்டவர் எம்மை எகிப்தினின்று மீட்டார் என்று எம் தந்தையர் கூறினதும் சொன்னதுமான மற்ற அதிசயங்கள் எங்கே? இப்போதோ ஆண்டவர் எங்களைக் கைவிட்டு விட்டார்; மதியானியருக்கு எங்களைக் கையளித்தார்" என்றான்.

ஆண்டவர் அவனை நோக்கி, "இதே உறுதியுடன் நீ சென்று மதியானியர் கைகளினின்று இஸ்ராயேலை மீட்பாய்; நாமே உன்னை அனுப்பினோம் என்று அறிந்துகொள்" என்றார். ஆனால், அவன், "ஆண்டவரே நான் இஸ்ராயேலை எப்படி மீட்பேன்? மனாசே வமிசத்தில் என் குடும்பமே வலுக் குறைந்தது. நானோ என் தந்தை வீட்டில் மிகச் சிறியவன்" என்றான்.

அதற்கு ஆண்டவர், "நாம் உன்னோடு இருப்போம்; மதியானியர் எல்லாரையும் ஒரு மனிதனைப்போல் முறியடிப்பாய்" என்றார். அவனோ, "உமது இரக்கம் எனக்கு உண்டானால் என்னிடம் பேசுபவர் நீரே என்பதற்கு அடையாளம் காண்பியும். நான் போய், பலிகொணர்ந்து ஒப்புக்கொடுக்கும்வரை இவ்விடத்தை விட்டு அகலாதேயும்" என்றான். அவரும் மறுமொழியாக, "உன் வருகைக்காகக் காத்திருப்போம்" என்றார்.

கெதெயோன் போய் ஆட்டுக் குட்டியைச் சமைத்து ஒரு படிக் கோதுமை மாவில் புளியாத அப்பங்கள் செய்து, கறியை ஒரு கூடையிலும்,

கறிக்குழம்பை ஒரு பானையிலும் வைத்து அனைத்தையும் கருவாலி மரத் தடிக்குக் கொணர்ந்து ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான். ஆண்டவரின் தூதர் அவனை நோக்கி, "நீ கறியையும் அப்பங்களையும் அக்கல்லின்மேல் வைத்துக் குழம்பை அவற்றின்மேல் ஊற்று" என்றார். அவன் அப்படியே செய்தான். ஆண்டவரின் தூதர் தம் கைக்கோலை நீட்டிக் கறியையும் அப்பங்களையும் தொடவே, கல்லினின்று தீ எழும்பிக் கறியையும் அப்பங்களையும் சுட்டெரித்தது. ஆண்டவரின் தூதரோ அவன் கண்களினின்று மறைந்தார்.

கெதெயோன், அவர் ஆண்டவரின் தூதர்தான் எனக்கண்டு, "ஐயோ! என் ஆண்டவராகிய கடவுளே; ஆண்டவரின் தூதரை நான் நேரில் கண்டேன்" என்றான். ஆண்டவர் அவனை நோக்கி, "உனக்குச் சமாதானம் உண்டாகட்டும். அஞ்சாதே, சாகமாட்டாய்" என்றார். எனவே, கெதெயோன் அவ்விடத்திலேயே பலிபீடத்தைக் கட்டி, அதை 'ஆண்டவரின் சமாதானம்' என்று அழைத்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 84 : 8, 10-11, 12-13 (பல்லவி : 8 காண்)*

பல்லவி : **இறைவன் தம் மக்களுக்குக் கூறுவது சமாதானமே.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன்.
அவர் பேசுவதோ சமாதானமே.
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும், மனம் திரும்பி அவரிடம்
செல்வோருக்கும் அவர் கூறுவது சமாதானமே. பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் அமைதி
யும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் அமைதியும் ஒன்றையொன்று
அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும். நீதி நேர்மை வானத்தினின்று
எட்டிப்பார்க்கும்.
பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார், நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும். மீட்பும் அவரைப் பின்தொடரும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*நீ மனிதன்தான், கடவுள் அல்ல; நீ கடவுளைப்போல் அறிவாளியாக இருப்பதாக நினைக்கிறாய்.*

**இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்** 28: 1-10

அந்நாட்களில்:

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. "மனிதா, தீர் நகரத்துத் தலைவனுக்குச் சொல்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: உன் இதயம் செருக்குற்று, 'நானே கடவுள்; நடுக்கடலில் தெய்வங்களின் இருக்கையில் வீற்றிருக்கிறேன்' என்று நீ சொன்னாய்: நீ கடவுளைப்போல் அறிவாளியாக இருப்பதாக எண்ணினாலும், நீ மனிதன்தான். நீ தானியேலைவிட அறிவாளிதான், நீ அறியாத மறைபொருள் ஒன்றுமில்லை; உன் ஞானத்தாலும் அறிவாலும், செல்வமும் வல்லமையும் பெற்றாய்; பொன்னும் வெள்ளியும் சேர்த்து உன்னுடைய கருவூலத்தை நிரப்பினாய். வாணிகத்தில் உள்ள உன் சிறந்த ஞானம், இருந்த செல்வத்தை மிகுதிப் படுத்திற்று; வல்லமை வளர்ந்தது; நிறமை மிகுதியால் உன்னுடைய இதயம் செருக்குக் கொண்டது.

ஆகையால் ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: 'நீ கடவுளைப் போல் அறிவாளியாய் இருப்பதாக நினைப்பதால், வேற்று நாட்டவருள் மிகக் கொடியவர்களான அந்நியர்களை உனக்கெதிராய் எழுப்புவோம்; அவர்கள் கையிலேந்திய வாளோடு வருவர்; வந்து உன் ஞானத்தின் பெருமையைப் போக்குவர்: அதனுடைய பேரழகைக் கெடுப்பார்கள். உன்னைக் கொன்று அரியணையிலிருந்து தள்ளுவர்; கடலில் கொலையுண்டவர்கள் நடுவில் அழிவாய். நீ மனிதன்தான்: கடவுள் அல்லவே: உன்னைக் கொல்ல வருகின்றவர்களிடம், 'நான் கடவுள்' என்று சொல்வாயோ? விருத்தசேதனம் செய்யப்படாதவனைப்போல், அந்நிய நாட்டினர் கையால் சாவாய்; ஏனெனில் நாமே சொன்னோம்,' என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

உப. 32 : 26-27 ab, 27 cd-28, 30, 35 cd-36 ab (பல்லவி : 39c)

பல்லவி : நாமே கொல்லுகிறோம், நாமே உயிர்ப்பிக்கிறோம்.

26 நாம்: அவர்கள் எங்கே என்றோம். மனிதருக்குள் அவர்கள் பெயர்
முதலாய் மறைந்து போகும்படி செய்வோம்.
27 ஆனால், அவர்களுடைய பகைவர்களின் குரோதத்தைப் பற்றி நாம்
பொறுத்துக் கொண்டோம். பல்லவி

ஒருவேளை அவர்கள் அகங்காரம் கொண்டு: "நாங்கள் இந்தக் காரியங்களை
எல்லாம் எங்கள் வலுவுள்ள கையினால் செய்தோமேயன்றி ஆண்டவர்
அவற்றைச் செய்தாரல்லர்" என்று வீம்பு பேசக்கூடும்.
28 அவர்கள் மதிகெட்ட விவேகமற்ற மக்களல்லரோ? பல்லவி

30 ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவது இயலுமோ? இரண்டுபேர் பதினா
யிரம் வீரரைத் தோற்கடிப்பது கூடுமானதோ? தங்கள் கடவுள்
அவர்களை ஒப்புக்கொடுப்பதினாலும் ஆண்டவர் அவர்களை அடைப்பதி
னாலும் தானே அது நிகழக்கூடும். பல்லவி
35 அவர்களுடைய அழிவு நாள் இதோ நெருங்கியிருக்கிறது, குறிக்கப்பட்ட
36 காலங்கள் ஓடிவருகின்றன. ஆண்டவர் தம் மக்களை நியாயந் தீர்த்து,
தமக்கு அன்பு செய்து பணி புரிவோர்மேல் மனம் இரங்குவார். பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 8 : 9

அல்லேலூயா. யேசுகிறிஸ்து செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*19: 23-30*

அக்காலத்தில்

யேசு தம் சீடரிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: பணக்காரன் விண்ணரசில் நுழைவது அரிது. மீண்டும் உங்களுக்குச்

சொல்லுகிறேன் : பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

இவற்றைக் கேட்டு அவருடைய சீடர் மிகவும் மலைத்துப்போய், "அப்படியானால் யார்தான் மீட்புப்பெற முடியும்?" என்று கேட்டனர். யேசு அவர்களை உற்றுநோக்கி, "மனிதரால் இது முடியாது. ஆனால், கடவுளால் எல்லாம் முடியும்" என்று சொன்னார்.

அப்போது இராயப்பர், "இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின் சென்றோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று கேட்டார்.

யேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : உலகம் புத்துயிர் பெறும் நாளில், மனுமகன் தமது மாட்சி அரியணையில் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்சென்ற நீங்களும் இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் நடுவராகப் பன்னிரு அரியணையில் வீற்றிருப்பீர்கள். மேலும் வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலங்களையோ என் பெயரின்பொருட்டு துறந்துவிடும் எவனும் பன்மடங்கு பெறுவான்; முடிவில்லாத வாழ்வும் பெற்றுக்கொள்வான்.

முதலானோர் பலர் கடைசியாவர்: கடைசியானோர் பலர் முதலாவர்" என்றுரைத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரே உங்களை ஆண்டுவர, ஓர் அரசன் உங்களை ஆளவேண்டுமென்று கூறினீர்கள்.**

நீதிபதிகள் ஆகமத்திலிருந்து வாசகம் 9: 6-15

அந்நாட்களில் :

சிக்கேமிலிருந்த எல்லா மனிதரும் மெக்லோ நகரின் எல்லாக் குடும்பங்களும் சிக்கேமிலிருந்த கருவாலி மரத்தடியில் ஒன்றுகூடி அபிமெலேக்கைத் தம் அரசனாக்கினர்.

யோவாத்தாமுக்கு இச்செய்தி எட்டவே அவன் கரிசீம் மலை
உச்சிக்குப் போய், தனது குரலை உயர்த்திக் கூக்குரலிட்டு, "சிக்கேம்
மனிதரே, கடவுள் உங்களுக்குச் செவி மடுக்கிறதுபோல, நீங்களும்
எனக்குச் செவி கொடுங்கள். மரங்கள் தமக்குள் ஓர் அரசனைத் தேர்ந்
தெடுக்க விரும்பி, ஒலிவ மரத்திடம், 'எமக்கு அரசனாயிரு' என்றன.
அதற்கு ஒலிவ மரம், 'தேவர்களும் மனிதரும் பயன்படுத்தும் என்
செழுமையை உதறிவிட்டு, மரங்களுக்கு அரசனாவதா?' என்றது.
அப்போது மரங்கள் சீமை அத்திமரத்திடம், 'நீ வந்து எங்கள் அரசனாக
இரு' என்க, அத்திமரம், 'நான் என் இனிமையையும் நற்கனிகளையும்
உதறிவிட்டு, மரங்களுக்குத் தலைவனாகவா?' என்றது. பின்னர் மரங்கள்
திராட்சையிடம், 'நீ வந்து எம்மை அரசாள்'' என்றன. 'அதற்குத்
திராட்சை, 'தேவர்களையும் மனிதரையும் மகிழ்விக்கும் என் இரசத்தை
விட்டுவிட்டு, மரங்களை அரசாள நீங்கப்போவேனா?' என்றது. அப்போது
மரங்கள் எல்லாம் முட்செடியிடம், 'நீ வந்து எம்மை அரசாள்' என்றன.
அதற்கு முட்செடி, 'உண்மையாகவே நீங்கள் என்னை அரசனாக்கினால்,
எல்லாரும் என் நிழலில் வந்து இளைப்பாறுங்கள். இளைப்பாற மனமில்லை
யானால், முட்செடியினின்று தீ கிளம்பி லீபானின் கேதுரு மரங்களைச்
சுட்டெரிக்கட்டும்'' என்றது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 20 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 1 a)

பல்லவி ஆண்டவரே, உமது வல்லமையை நினைத்து
அரசர் மகிழ்வுறுகிறார்.

1 ஆண்டவரே, உமது வல்லமையை நினைத்து அரசர் மகிழ்வுறுகிறார் :
நீர் தரும் உதவியை நினைத்து எவ்வளவோ அக்களிப்புக் கொள்கின்றார் ;
2 அவரது உள்ளத்தின் விருப்பம் நிறைவேறச் செய்தீர் :
வாய் திறந்து அவர் உம்மிடம் கேட்டதை நீர் புறக்கணிக்கவில்லை. பல்லவி

3 அவரை எதிர்கொண்டுபோய் நலமிக்க ஆசியை நிரம்ப அளித்தீர்;
அவர் தலையில் தூய தங்கத்தால் ஆன முடியைச் சூட்டினீர்.
4 வாழ்வளிக்கும்படி அவர் உம்மிடம் கேட்டார்;
நீரும் நீடிய வாழ்வை அவருக்கு அளித்தீர். பல்லவி

5 உம் துணையால் அவருக்குக் கிடைத்தது பெருமாண்பு :
மகத்துவமும் மேன்மையும் அவருக்கு ஆடையாக உடுத்தினீர்.
6 என்றென்றும் அவர் ஆசிமிக்கவராகச் செய்தீர் :
உம் திருமுன் மகிழ்ச்சி மிக்கவராய் விளங்கச் செய்தீர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*அவர்கள் வாயினின்று நம் ஆடுகளை மீட்போம்; அவை இனி அவர்களுக்கு இரையாகா.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 34: 1-11

அந்நாட்களில் :

ஆண்டவருடைய வாக்கு மீண்டும் எனக்கு அருளப்பட்டது: "மனிதா, இஸ்ராயேலின் மேய்ப்பர்களுக்கு எதிராக நீ இறைவாக்குரைத்து அவர்களைப் பார்த்துச் சொல்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: இஸ்ராயேலின் மேய்ப்பர்களுக்கு ஐயோ கேடு! அவர்கள் தங்களையே மேய்த்துக் கொள்கிறார்கள். மேய்ப்பர்கள் மந்தையை அல்லவா மேய்க்க வேண்டும்? கொழுப்பானதை நீங்கள் உண்டு, ஆட்டு மயிரை ஆடையாக்கி உடுத்தினீர்கள்; கொழுத்து வளர்ந்த ஆட்டை அடித்துச் சாப்பிட்டீர்கள்; ஆனால் ஆடுகளையோ நீங்கள் மேய்க்கவில்லை. வலிமையற்ற ஆடுகளை நீங்கள் தேறும்படி செய்யவில்லை; பிணியுற்றவற்றை நீங்கள் பராமரிக்கவில்லை; எலும்பு முறிந்தவற்றுக்குக் கட்டுப்போடவில்லை; வழி தவறியவற்றைத் திரும்பக் கொண்டுவரவில்லை; காணமற் போனவற்றைத் தேடவில்லை; ஆனால் அவற்றைக் கண்டிப்புடனும் கடுமையாகவும் நடத்தினீர்கள். மேய்ப்பன் இல்லாததால் நம்முடைய ஆடுகள் சிதறுண்டு போயின; சிதறியவை கொடிய மிருகங்களுக்கு இரையாகி மடிந்தன. நம்முடைய ஆடுகள் சிதறிப்போய் மலைகளிலும் உயர்ந்த குன்றுகளிலும் அலைந்து திரிந்தன; பூமியின் எல்லாப் பக்கத்திலும் நம்முடைய ஆடுகள் சிதறுண்டு திரிந்தன; அவற்றைத் தேடவோ, தேடிக் கண்டுபிடிக்கவோ அக்கறையுள்ளவர் யாருமில்லை.

ஆதலால் மேய்ப்பர்களே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள். ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: நம் உயிர்மேல் ஆணை! மேய்ப்பன் இல்லாததால் நம்முடைய ஆடுகள் கொள்ளையிடப்பட்டன; காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின; நம் ஆயர்களோ நமது மந்தையைக் கண்காணிக்கவில்லை; மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்துக்கொண்டார்கள்.

ஆகையால் மேய்ப்பர்களே, ஆண்டவரின் வார்த்தையைக் கேளுங்கள்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: இதோ, நாம் நம்முடைய மேய்ப்பர்களுக்கு எதிராக வந்து, நமது மந்தையை அவர்கள் கையிலிருந்து மீட்டுக்கொண்டு, ஆடுகளை மேய்க்கும் வேலையிலிருந்து அவர்களை நீக்கிவிடுவோம்; அவர்கள் இனிமேல் தங்களையே மேய்த்துக் கொள்ளமுடியாது. அவர்கள் வாயினின்று நம்முடைய ஆடுகளை மீட்போம்; அவை இனி அவர்களுக்கு இரையாகா.

ஏனெனில் ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: "இதோ, நாமே இனி நம்முடைய ஆடுகளைத் தேடிப்போவோம்; ஆர்வத்தோடு தேடுவோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 22: 1-3a, 3b-4, 5, 6 (பல்லவி: 1)

பல்லவி: **என் ஆயன் ஆண்டவர், எனக்கென்ன குறைவு!**

1 என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர் அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்:
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில்
செலுத்துகின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையான
தெதற்கும் அஞ்சேன்: ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர்; உமது
கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்: என்
தலைக்கு எண்ணெய் பூசினீர்: என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும்; என் வாழ்நாளெல்லாம்
என்னைத் தொடரும்: ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்;
ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

அல்லேலூயா எபி. 4: 12

அல்லேலூயா. இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது:
உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும்
சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***நான் நல்லவனாய் இருக்கிறேன் என்பதால் உனக்குப் பொறாமையோ?***

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 20:1-16a**

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குச் சொன்ன உவமையாவது:

"விண்ணரசு, தன் திராட்சைத் தோட்டத்திற்கு வேலையாட்களை அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்ற வீட்டுத் தலைவனுக்கு ஒப்பாகும். நாள் ஒன்றுக்கு ஒரு வெள்ளிக்காசு என்று வேலையாட்களுடன் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சைத் தோட்டத்திற்கு அனுப்பினான்.

ஏறக்குறைய ஒன்பது மணிக்கு வெளியே சென்று பொதுவிடத்தில் சிலர் வேலையற்று நிற்பதைக் கண்டான். அவர்களிடம், 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லுங்கள். நியாயமானதை உங்களுக்குக் கொடுப்பேன்' என்றான். அவர்கள் போனார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும், அப்படியே செய்தான்.

ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டான். அவர்களிடம், 'நாள் முழுவதும் நீங்கள் ஏன் இங்கு வாளாயிருக்கிறீர்கள்?' என்றான். அவர்களோ, 'எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை' என்றனர். அவனோ, 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லுங்கள்' என்று அவர்களுக்குச் சொன்னான்.

மாலையானதும் திராட்சைத் தோட்டத் தலைவன் தன் காரியத் தலைவனிடம், 'வேலையாட்களைக் கூப்பிட்டுக் கடைசி ஆள் தொடங்கி முதல் ஆள் வரை கூலி கொடு' என்றான். எனவே, ஐந்து மணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் வந்து தலைக்கு ஒரு வெள்ளிக்காசு பெற்றுக் கொண்டார்கள். முதலில் அமர்த்தப்பட்டவர்கள் வந்தபோது தங்களுக்குக் கூடுதலாய் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால், அவர்களுக்கும் தலைக்கொரு வெள்ளிக் காசுதான் கிடைத்தது.

அதை வாங்கும்போது, 'கடைசியில் வந்த இவர்கள் ஒருமணி நேரமே உழைத்தனர். பகலின் உழைப்பையும் வெயிலின் கொடுமையையும் தாங்கிய எங்களோடு இவர்களைச் சமமாக்கினீரே' என்று வீட்டுத் தலைவனுக்கு எதிராக முணுமுணுத்தனர். அவனோ மறுமொழியாக அவர்களுள் ஒருவனிடம், 'நண்பா, உனக்கு நான் அநீதி செய்யவில்லையே; ஒரு வெள்ளிக்காசு என்று என்னிடம் நீ கூலி பேசவில்லையா? உனக்குரியதை வாங்கிக்கொண்டு போ. உனக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என் விருப்பம். என் விருப்பம்போலச் செய்ய எனக்கு உரிமையில்லையா? நான் நல்லவனாய் இருக்கிறேன் என்பதால் உனக்குப் பொறாமையோ?' என்றான்.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவோம், உங்கள் உள்ளத்தில் நமது ஆவியை ஊட்டுவோம்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் *36 : 23-28*

இறைவன் கூறுவதாவது :

"புறவினத்தாரின் நடுவில் நமது திருப்பெயரின் பரிசுத்தத்தை நீங்கள் பங்கப்படுத்தினீர்கள்; பங்கப்படுத்தப்பட்ட மகத்தான நமது திருப்பெயரை நாம் பரிசுத்தமாக்குவோம்; இவ்வாறு நாம் உங்கள் வழியாய் அவர்கள் கண்முன் நமது பரிசுத்தத்தை நிலைநாட்டும்போது, நாமே ஆண்டவர் என்பதைப் புறவினத்தார் அறிந்துகொள்வார்கள், என்கிறார் ஆண்டவர்.

ஏனெனில் புறவினத்தாரிடமிருந்து நாம் உங்களை மீட்போம்; எல்லா நாடுகளிலிருந்தும் உங்களைக் கூட்டிச் சேர்த்து, உங்கள் சொந்த நாட்டுக்கே திரும்பக் கொண்டுவருவோம். நாம் உங்கள்மேல் தூய நீரைத் தெளிப்போம்; உங்கள் அழுக்குகள் எல்லாம் போய்விட, நீங்கள் தூய்மையாய் இருப்பீர்கள்; சிலை வழிபாட்டுத் தீட்டுக்களிலிருந்து உங்களைத் தூய்மையாக்குவோம். உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவோம்; உங்கள் உள்ளத்தில் புதிய ஆவியை ஊட்டுவோம்; உங்கள் உடலிலிருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு, உணர்ச்சியுள்ள இதயத்தை உங்களுக்குக் கொடுப்போம். உங்கள் உள்ளத்தில் நமது ஆவியை ஊட்டுவோம். நம் கற்பனைகளின்படி நடக்கவும், நம் நீதி முறைகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாயிருக்கவும் செய்வோம்.

உங்கள் தந்தையர்களுக்கு நாம் தந்த நாட்டில் நீங்கள் குடியிருப்பீர்கள்; அப்போது நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள், நாம் உங்கள் கடவுளாய் இருப்போம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 50 : 10-11, 12-13, 16-17 (பல்லவி : எசேக். 36 : 25)

பல்லவி : நாம் உங்கள்மேல் தூய நீரைத் தெளிப்போம் :
உங்கள் அழுக்கெல்லாம் நீங்கி, நீங்கள் தூய்மையாவீர்கள்.

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்,
உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்,
உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும் :
உமது பெருந்தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன்.
பாவிகள் உம்மிடம் திரும்பி வருவர். பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை,
தகனப்பலி கொடுத்தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்தவேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே :
தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.
பல்லவி

அல்லேலூயா சங். 94 : 8b, 7b.

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவிகொடுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்துக்கு அழையுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 22:1-14

அக்காலத்தில் :

யேசு மீண்டும் தலைமைக் குருக்கள், மூப்பரிடம் உவமைகளில் உரைத்ததாவது :

“விண்ணரசு, தன் மகனுக்குத் திருமணம் செய்துவைத்த அரசனுக்கு ஒப்பாகும். அவன் ஊழியரை அனுப்பித் திருமணத்துக்கு அழைக்கப்பெற்றவர்களை வரச் சொன்னான். அவர்களோ வர விரும்பவில்லை.

மீண்டும் வேறு ஊழியரை அனுப்பி, ‘இதோ! விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்; காளைகளும் கொழுத்த மிருகங்களும் அடித்து எல்லாம் ஏற்பாடாயிற்று. திருமணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பெற்ற வருக்குச் சொல்லுங்கள்’ என்றான். அழைக்கப்பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை; ஒருவன் தன் தோட்டத்திற்கும், வேறொருவன் வியாபாரத்துக்கும் போய்விட்டான். மற்றவர்களோ அவன் ஊழியரைப் பிடித்து அவமானப்படுத்திக் கொன்றனர்.

அதைக் கேட்ட அரசன் சினந்து, தன் படையை அனுப்பிக் கொலைக்காரர்களைத் தொலைத்து அவர்கள் நகரையும் தீக்கிரையாக்கினான்.

பின்னர், தன் ஊழியரிடம், ‘திருமண விருந்து ஏற்பாடாகிவிட்டது. அழைக்கப்பெற்றவர்களோ தகுதியற்றவர்களாயினர். எனவே, வீதி களுக்குச் சென்று நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்துக்கு அழை யுங்கள்’ என்றான். அவன் ஊழியரும் வீதிகளுக்குச் சென்று தாங்கள் கண்ட நல்லவர் கெட்டவர் அனைவரையும் கூட்டிச் சேர்த்தனர். மன்றம் நிரம்ப அவர்கள் பந்தி அமர்ந்தனர்.

அமர்ந்தோரைப் பார்க்க அரசன் உள்ளே வந்தான். அங்கே திருமண உடையணியாத ஒருவனைக் கண்டான். அவனை நோக்கி, ‘நண்பா, திருமண உடையின்றி எப்படி உள்ளே நுழைந்தாய்?’ என்று கேட்க, அவன் பேசாதிருந்தான். பின்னர் அரசன் பணியாளரை நோக்கி ‘கையும், காலும் கட்டி இவனை வெளி இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்’ என்று சொன்னான்.

ஏனெனில், அழைக்கப்பெற்றவர்களோ பலர்; தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நோயேமி மோவாபியப் பெண் ரூத்துடன் புறப்பட்டு, பெத்லகேமுக்குத் திரும்பிவந்தாள்.**

ரூத் ஆகமத்தின் தொடக்கம் *1: 1, 3-6, 14b-16, 22*

நீதிபதிகளுடைய காலத்தில், ஒரு நீதிபதியினுடைய நாட்களிலே நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதைக்கண்டு யூதா நாட்டுப் பெத்லகேம் நகர மனிதன் ஒருவன் தன் மனைவியோடும் இரண்டு புதல்வர்களோடும் மோவாப் நாட்டுக்குப் பிழைக்கச் சென்றான்.

நோயேமினுடைய கணவன் எலிமெலேக் இறந்தான். அவளோ தன் புதல்வர்களோடு வாழ்ந்து வந்தாள். அவர்கள் ஓர்பா, ரூத் என்ற இரு மோவாபிய பெண்களை மணந்து பத்து ஆண்டுகள் அங்கே வாழ்ந்தனர். பின்னர் மகலேன், கேளியோன் இருவரும் இறக்க, அவள் கணவனையும் இரு மக்களையும் இழந்தவளாய் விடப்பட்டாள்.

ஆண்டவர் தம் மக்களைக் கடைக்கண் நோக்கி உயிர்வாழ அவர்களுக்கு உணவு அளித்தார் என்று கேள்விப்பட்டு, அவள் மோவாப் நாட்டிலிருந்து தன் இரு மருமக்களோடு புறப்பட்டுத் தன் சொந்த ஊர் போக விழைந்தாள்.

அப்பொழுது அவர்கள் ஓலமிட்டு அழத் தொடங்கினர். ஓர்பா மாமியை முத்தமிட்டுத் தன் வீடு திரும்பினாள். ஆனால் ரூத் தன் மாமியை விட்டுப் பிரியவில்லை.

நோயேமி அவளைப் பார்த்து, "இதோ! உன் உறவினள் தன் இனத்தாரிடமும் தேவர்களிடமும் திரும்பிப் போய் விட்டாளே; நீயும் அவளோடு போ" என்றாள்.

அதற்கு ரூத், "நான் உம்மைவிட்டுப் போகும்படி இன்னும் என்னைத் தூண்டவேண்டாம். நீர் எங்குப் போனாலும் நானும் வருவேன். நீர் எங்குத் தங்குவீரோ அங்கு நானும் தங்குவேன். உங்கள் இனமே என் இனம்; உங்கள் கடவுளே எனக்கும் கடவுள்."

இப்படி நோயேமி தன் மோவாபிய மருமகளோடு தான் பிழைக்கப் போயிருந்த நாட்டை விட்டுப் புறப்பட்டுப் பெத்லகேமுக்குத் திரும்பி வந்தாள். அது வாற்கோதுமை அறுவடைக் காலம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 145 : 5-6, 7, 8-9a, 9bc-10 (பல்லவி : 1b)*

பல்லவி **நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.**

அல்லது **அல்லேலூயா.**

5 யாக்கோபின் இறைவன் யாருக்குத் துணைபுரிகிறாரோ, அவன் பேறு
பெற்றவன். தம் கடவுளாகிய ஆண்டவர்மீது நம்பிக்கை வைப்பான்,
6 அவரே வானத்தையும் வையத்தையும் கடலையும்,
அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கினார். பல்லவி

7 அவர் என்றென்றும் சொல் தவறுதவர்.
துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிருர்.
பசியுற்ருேர்க்கு உணவளிக்கிருர்.
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிருர். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்துவிடுகிருர்.
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிருர்.
நீதிமான்கள் மீது ஆண்டவர் அன்புகூர்கிருர்.
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிருர். பல்லவி

அனுதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிருர்.
பாவிகளின் திட்டத்தைக் கலைத்து விடுகிருர்.
10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார்:
சீயோனே, உன் இறைவன் தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உலர்ந்த எலும்புகளே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள். இஸ்ராயேல் வீட்டாரே, உங்கள் கல்லறைகளிலிருந்து நாம் உங்களைத் திரும்பக் கூட்டி வருவோம்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 37: 1-14

அந்நாட்களில்:

ஆண்டவருடைய கரம் என்மேல் இருந்தது; ஆண்டவருடைய ஆவி என்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் விட்டது; அங்கே எலும்புகள் மிகுதியாய்க் கிடந்தன. அவற்றைச் சுற்றி என்னை அழைத்துச் சென்ருர்; இதோ, அந்தப் பள்ளத்தாக்கில் எலும்புகள் மிகப்பல கிடந்தன; அவை முற்றும் உலர்ந்திருந்தன.

அவர் என்னை நோக்கி, "மனிதா, இந்த எலும்புகள் உயிர்பெறக் கூடுமோ?" என்று வினவினுர். "ஆண்டவராகிய இறைவா, உமக்குத் தெரியுமே" என்று விடை பகர்ந்தேன்.

மீண்டும் அவர் என்னிடம், "இந்த எலும்புகளுக்கு இறைவாக்குரைத்து அவற்றுக்குச் சொல்: உலர்ந்த எலும்புகளே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள். இந்த எலும்புகளுக்கு ஆண்டவராகிய இறைவன் கூறுகிருர்: இதோ, உங்களுக்குள் ஆவி நுழையச்செய்வோம், நீங்கள் உயிர்பெற்று வாழ்வீர்கள். பின்னும், உங்கள்மேல் நரம்புகளை வைப்போம், உங்கள்மேல் சதை பிடிக்கச் செய்வோம்; உங்களைத் தோலால்

மூடுவோம்; உங்களில் ஆவியை ஊட்டுவோம்; நீங்கள் உயிர் பெற்று வாழ்வீர்கள். அப்போது நாமே ஆண்டவர் என்பதை அறிவீர்கள்" என்று சொல் எனக் கூறினார்.

அவர் கட்டளையிட்டவாறே நான் இறைவாக்குச் சொன்னேன்; அவ்வாறு நான் இறைவாக்குரைக்கும்போது, ஓர் ஒலி கேட்டது; இதோ, அசைவும் உண்டாயிற்று; ஒவ்வொரு எலும்பும் மற்றொரு எலும்பை அணுகி ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டன. நான் பார்த்துக்கொண்டு இருக்கும்போது, இதோ, அவற்றின்மேல் நரம்புகள் காணப்பட்டன; அவற்றில் சதை பிடித்திருந்தது; அவற்றைத் தோல் மூடியிருந்தது; ஆயினும் அவற்றில் உயிர் இல்லை.

அப்பொழுது அவர் என்னை நோக்கி, "ஆவிக்கு இறைவாக்குக் கூறு, மனிதா, இறைவாக்குச் சொல்; ஆவிக்கு நீ சொல் : ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார் : ஆவியே, நாற்றிசையிலிருந்தும் வா; வந்து உயிரிழந்த இவர்கள் மீது ஊதி, இவர்கள் உய்யும்படி செய்" என்றார்.

அவர் எனக்குக் கட்டளையிட்டவாறே நான் இறைவாக்குரைத்தேன்; அவர்களுள் ஆவி புகுந்தது; அவர்கள் உயிர்பெற்றுத் தரையில் காலூன்றி நின்றனர்; அவர்கள் மாபெரும் சேனைபோல் இருந்தனர். பின்னும், அவர் என்னிடம் சொன்னார் : "மனிதா, இந்த எலும்புகள் இஸ்ராயேல் வீட்டாரனைவரும். இதோ, அவர்கள், 'எங்கள் எலும்புகள் முற்றிலும் உலர்ந்து போயின; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் முற்றிலும் அறுபட்டோம்' என்கிறார்கள்.

ஆகையால் நீ அவர்களுக்கு இறைவாக்குக் கூறு : ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார் : எம் மக்களே, இதோ நாம் உங்கள் கல்லறைகளைத் திறப்போம்; கல்லறைகளிலிருந்து உங்களை எழுப்புவோம்; இஸ்ராயேல் நாட்டுக்கு உங்களைத் திரும்பக் கூட்டிவருவோம். எம் மக்களே உங்கள் கல்லறைகளைத் திறந்து, அவற்றினின்று நாம் உங்களை எழுப்பும் போது, நாமே ஆண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குள் நாம் ஆவியைப் புகுத்துவோம்; நீங்கள் உயிர்பெறுவீர்கள். உங்கள் சொந்த நாட்டில் உங்களை வாழ வைப்போம்; அப்போது, ஆண்டவராகிய நாமே இதைச் சொன்னோம், நாமே இதைச் செய்து முடித்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள், என்றார் ஆண்டவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 106 : 2-3, 4-5, 6-7, 8-9 (பல்லவி : 1)

பல்லவி : **ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில் என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.**

அல்லது : **அல்லேலூயா.**

2 ஆண்டவரால் மீட்படைந்தோர், எதிரியின் கையினின்று மீட்கப் பட்டோர், இங்ஙனம் சொல்வார்களாக.
3 கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் : பல நாடுகளினின்றும் ஒன்று சேர்க்கப்பட்டவர்களும் இப்படிச் சொல்வார்களாக. பல்லவி

4 பாலைவெளியில் மனிதர் வாழாத இடத்தில் அவர்கள் அலைந்து திரிந்தனர் : குடியிருக்க ஒரு நகருக்குச் செல்ல அவர்கள் வழிகாணவில்லை.
5 பசிகொண்டவர், தாகமுற்றனர்: மனமுடைந்து களைத்துப்போயினர். பல்லவி

6 தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர் : அவர்களுக்குற்ற துன்பங்களிலிருந்து அவர் அவர்களை விடுவித்தார்.
7 நேரிய பாதையில் அவர்களை வழிநடத்தினார்:
குடியிருக்கும் நகரத்தை அவர்கள் அடையச் செய்தார். பல்லவி

8 ஆண்டவருடைய இரக்கத்தை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவார் களாக: மனுமக்களுக்காக அவர் செய்த வியத்தகு செயல்களை நினைத்துக் கொள்வார்களாக.
9 பசியுற்றவனுக்கு அவர் நிறைவளித்தார்:
பட்டினி கிடந்தவனை நன்மையால் நிரப்பினார். பல்லவி

அல்லேலூயா

சங். 24 : 4c, 5a

**அல்லேலூயா. ஆண்டவரே, உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும் : நேரிய வழியில் என்னை நடத்திச் செல்லும். அல்லேலூயா.**

### நற்செய்தி வாசகம்

உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல், உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *22: 34-40*

அக்காலத்தில்:

யேசு சதுசேயரை வாயடக்கியது கேள்வியுற்ற பரிசேயர் ஒன்று கூடினர். அவர்களுள் சட்டவல்லுநனுகிய ஒருவன், "போதகரே, திருச்சட்டத்தின் பெரிய கட்டளை எது?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டான்.

யேசு அவனிடம், "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக. இதுவே எல்லாவற்றிலும் பெரிய முதன்மையான கட்டளை. இரண்டாவது இதையொத்ததே; உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக. திருச்சட்டம் முழுவதற்கும் இறைவாக்குகளுக்கும் இவ்விரு கட்டளைகளும் அச்சாணி போன்றவை" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவர் உன் குடும்பத்தில் வாரிசு அற்றுப்போக விடவில்லை; அவன்தான் தாவீதின் தந்தையாகிய ஈசாயியுடைய தந்தை.

ரூத் ஆகமத்திலிருந்து வாசகம் *2: 1-3, 8-11; 4: 13-17*

நோயேமியுடைய கணவனுன எலிமெலேக்கின் உறவினனும் செல்வாக்கு உள்ளவனும் பெருத்த செல்வந்தனுமான போசு என்ற ஒருவன் இருந்தான்.

மோவாபிய பெண் ரூத் தன் மாமியை நோக்கி, "நீர் அனுமதி கொடுத்தால் நான் வயல்வெளிக்குப் போய் எந்தக் குடியானவனுடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்குமோ, அவன் பிறகே சென்று,

அறுவடை செய்கிறவர்களுடைய கைக்குத் தப்பின கதிர்களைப் பொறுக்கிக் கொண்டு வருவேன்" என்றாள். அதற்கு நோயேமி, "என் மகளே, போய் வா" என்றாள். ரூத் அவ்வாறே சென்று அறுவடை செய்கிறவர்கள் பிறகே கதிர்களைப் பொறுக்கி வந்தாள். அந்த வயலோ எலிமெலேக்கின் உறவினனான போசுக்குச் சொந்தமானது.

அப்பொழுது போசு ரூத்தைப் பார்த்து, "மகளே, கேள். கதிர் பொறுக்குவதற்காக நீ வேறு வயலுக்குப் போகாமலும், இவ்விடத்தை விட்டு வேறு எங்கும் செல்லாமலும் இங்கேயே என் ஊழியக்காரிகளோடு தங்கியிரு. அவர்கள் அறுவடை செய்யும்போது நீ அவர்கள் பிறகே போ; ஒருவரும் உனக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று என் ஆட்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, உனக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர்க் குடங்கள் அருகே சென்று வேலைக்காரர் குடிக்கிற தண்ணீரையே நீயும் குடிக்கலாம்" என்றான்.

அப்பொழுது அவள் தரையில் முகம் குப்புற விழுந்து வாழ்த்தி, அவனை நோக்கி, "தங்கள் கண்களில் எனக்குத் தயை கிடைத்ததும், அன்னிய பெண்ணாகிய என்னைத் தாங்கள் கவனித்துக் கொள்ளும்படி மனம் வைத்ததும் ஏனோ?" என்றாள்.

அதற்குப் போசு, "உன் கணவன் இறந்த பிறகு நீ உன் மாமிக்குச் செய்தவை அனைத்தும், நீ உன் பெற்றோரையும் பிறந்த நாட்டையும் விட்டு விட்டு, முன்பின் அறியாத மக்களிடம் வந்ததும் எனக்குத் தெரிவிக்கப்பட்டன" என்றான்.

ஆகையால், போசு ரூத்தை மணந்து தன் மனைவியாக அவளை ஏற்றுக்கொண்டான். அவர்கள்கூடி வாழ்ந்தபோது அவள் கருவுற்று ஒரு மகனைப்பெறும்படி ஆண்டவர் அவள்மேல் அருள் கூர்ந்தார்.

அப்பொழுது பெண்கள் நோயேமியை, நோக்கி "ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக! ஏனெனில் அவர் உன் குடும்பத்தில் வாரிசு அற்றுப்போக விடாமல், அவன் பெயர் இஸ்ராயேலில் புகழடையச் செய்துள்ளார். அத்தோடு உன் மனத்தைத்தேற்றி முதிர்ந்த வயதில் உன்னைக் காப்பாற்ற ஒருவனை உனக்குத் தந்தருளினார். உனக்கு அன்பு செய்யும் மருமகளுக்குப் பிள்ளை பிறந்திருப்பது உனக்கு ஏழு புதல்வர்கள் இருப்பதிலும் சிறந்தது அன்றோ?" என்றனர். நோயேமி அப்பிள்ளையை எடுத்துத் தன் மடியிலே வைத்துக்கொண்டு அதன் செவிலித் தாயாகக் குழந்தையை இடுப்பிலே தூக்கி வளர்த்து வந்தாள்.

அண்டை வீட்டுப் பெண்களோ, 'நோயேமிக்கு ஒரு மகன் பிறந்தான்' என்று அவளை வாழ்த்தி, அவனுக்கு ஒபேது என்று பெயர் இட்டனர். அவன்தான் தாவீதின் தந்தையாகிய ஈசாயியுடைய தந்தை.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

பதிலுரைப் பாடல்

சங். 127 : 1-2, 3, 4-5 (பல்லவி : 4)

பல்லவி : ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக்
கிடைக்கும் ஆசி இதுவே.

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன் :
அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறுபெற்றோன்.
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக்கொள்வாய் :
பேறு பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனிதரும் கொடி முந்திரிபோல்
உன் மனைவி உன் வீட்டில் உட்புறத்தில் இருப்பாள்.
ஒலிவச் செடிகள் போல்
உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசிபொழிவாராக :
5 உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை
நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவருடைய மகிமை திருக்கோயிலுக்குள் நுழைந்தது.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 43 : 1-7a

அந்நாட்களில் :

அந்த மனிதர் கீழ்த்திசையை நோக்கியிருக்கும் வாயிலுக்கு என்னை அழைத்துச் சென்றார். இதோ, இஸ்ராயேலின் கடவுளுடைய மகிமை கிழக்கிலிருந்து வந்தது; அவருடைய வருகையின் பேரொலி வெள்ளப் பெருக்கின் இரைச்சல் போலக் கேட்டது; அவருடைய மகிமையால் மண்ணுலகம் ஒளி வீசிற்று. நான் பார்த்த காட்சி, அவர் நகரத்தை அழிப்பதற்காக வந்தபோது நான் கண்ட காட்சியைப் போலவும், கேபார் நதியருகில் முன்பு நான் கண்ட காட்சியைப் போலவும் இருந்தது; நானோ தரையில் முகங்குப்புற விழுந்தேன்.

ஆண்டவருடைய மகிமை கீழ்த் திசையை நோக்கியிருக்கும் வாயில் வழியாய்த் திருக்கோயிலுக்குள் நுழைந்தது; அப்பொழுது, ஆவி என்னைப் பிடித்துத் தூக்கி, உள் முற்றத்துக்குக் கொண்டுவந்து விட்டது; இதோ, ஆண்டவருடைய மகிமை திருக்கோயிலை நிரப்பிற்று.

அந்த மனிதர் என்னருகில் இன்னும் நின்றுகொண்டிருந்தார்; அப்போது திருக்கோயிலுக்குள்ளிருந்து யாரோ என்னிடம் பேசும் குரல் கேட்டது: அவர் எனக்குச் சொன்னார்: "மனிதா, இது நமது அரியணைக்குரிய இடம்; இங்கே இஸ்ராயேல் மக்கள் நடுவில் நாம் என்றென்றைக்கும் குடியிருப்போம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 84 : 8ab-9, 10-11, 12-13 (பல்லவி : 9b காண்)

பல்லவி : **ஆண்டவரின் மாட்சிமை நம் நாட்டில் குடிகொள்ளும்.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன் :
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும், அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது.
அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும் :
நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும் :
நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார் :
நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும்,
மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

அல்லேலூயா மத். 23 : 9b, 10b

அல்லேலூயா. விண்ணுலகில் உள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை;
மெசியா ஒருவரே உங்கள் குரு. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர்கள் சொல்லுகிறார்கள்; செய்வதில்லை.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** *23: 1-12*

அக்காலத்தில் :

யேசு தம் சீடரையும் மக்கட் கூட்டத்தையும் நோக்கிக் கூறியதாவது :

"மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோயீசனுடைய இருக்கையில் அமர்ந்துள்ளனர். அவர்கள் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் கடைப்பிடித்து நடங்கள். ஆனால், அவர்கள் செய்வதுபோல் செய்யாதீர்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள்; செய்வதில்லை. பளுவான சுமையைக் கட்டி மக்களுடைய தோள்மேல் வைக்கிறார்கள்; தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்கமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டுமென்றே செய்கிறார்கள். ஏனெனில், அவர்கள் தம் சீட்டுப் பட்டங்களை அகலமாக்கிக் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதலிடங்களையும், செபக்கூடங்களில் முதல் இருக்கைகளையும் விரும்புகின்றனர். பொது இடங்களில் வணக்கம் பெறவும், மக்களால் 'ராபி' எனப்படவும் ஆசிக்கின்றனர்.

நீங்களோ 'ராபி' என்று அழைக்கப்படவேண்டாம். ஏனெனில், உங்கள் போதகர் ஒருவரே : நீங்கள் அனைவரும் சகோதரர். மண்ணுலகில் ஒருவரையும் தந்தையென்று கூறவேண்டாம். ஏனெனில், விண்ணுலகில் உள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை. குரு என்றும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில், மெசியா ஒருவரே உங்கள் குரு.

உங்களுக்குள் பெரியவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் பெறுவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தொன்றும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தாவீதின் வீட்டுத் திறவுகோலை நாம் அவன் தோள்மேல் வைப்போம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 22: 19-23

ஆலயக் காரியக்காரனாகிய சோப்னாவுக்கு ஆண்டவர் கூறியதாவது:

உன் பதவியிலிருந்து உன்னைக் கீழே தள்ளுவோம், உன் நிலையிலிருந்து உன்னை விழத்தாட்டுவோம். அந் நாளில் எல்கியாவின் மகனான நம் ஊழியன் எலியாக்கீமை அழைப்போம். உன் உடைகளை அவனுக்கு உடுத்துவோம், உன் இடைக் கச்சையை அவனுக்குக் கட்டுவோம், உன் அதிகாரத்தை அவன் கையில் ஒப்படைப்போம், எருசலேமின் குடிகளுக்கும், யூதாவின் வீட்டாருக்கும் அவன் ஒரு தந்தையைப்போல் இருப்பான்.

தாவீதின் வீட்டுத் திறவுகோலை நாம் அவனுடைய தோள்மேல் வைப்போம்; அவன் திறந்தால், யாரும் அதை மூடமாட்டார்கள்; அவன் மூடினால், யாரும் அதைத் திறக்கமாட்டார்கள். உறுதியான சுவரில் முளைபோல் அவனை அடித்து வைப்போம்; அவன் தன் தந்தையின் வீட்டுக்கு மகிமையின் அரியணையாவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 137: 1-2a, 2b-3, 6 & 8bc (பல்லவி: 8bc)

பல்லவி: **ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது; உம் படைப்புக்களைக் கைவிடாதேயும்.**

1 ஆண்டவரே, என் முழு மனத்துடன் உம்மைப் போற்றிப் புகழ்வேன்:
ஏனெனில் நான் வாய்திறந்து உம்மிடம் சொன்னதைக் கேட்டருளினீர்.
வானதூதர் முன்னிலையில் உமக்குப் புகழ் பாடுவேன்.
2 உமது புனித ஆலயத்தில் உம்மை ஆராதிப்பேன். பல்லவி

2 உமது இரக்கத்தையும் சொல்லுறுதியையும் நினைத்து,
உமது திருப்பெயரைப் புகழ்வேன் :
3 நான் உம்மைக் கூவியழைத்த நாளில் என் மன்றாட்டைக் கேட்டருளினீர் :
என் ஆன்மாவுக்கு மேன்மேலும் வலிமை தந்தருளினீர். பல்லவி

6 ஆண்டவர் உண்மையாகவே உன்னதமானவர்,
எனினும் எளியவரைக் கண்ணோக்குகின்றார் ;
செருக்குற்றோரையோ வெகு தொலைவிலிருந்து காண்கிறார்.
8 ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது.
உம் படைப்புகளைக் கைவிடாதேயும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

யாவும் அவரிடமிருந்தே வந்தன.
அவராலேயே உண்டாயின, அவருக்காகவே இருக்கின்றன.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 11: 33-36

கடவுளின் அருட்செல்வம் எத்துணை மிகுதியானது! அவரின் ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. 'ஏனெனில் ஆண்டவரின் மனத்தை அறிபவர் யார்? அவருக்கு ஆலோசனை சொல்லக்கூடியவர் யார்? கைம்மாருக ஏதாவது பெற்றுக்கொள்ள முன்னதாகவே அவரிடம் கொடுத்துவைத்தவர் யார்? ஏனெனில், யாவும் அவரிடமிருந்தே வந்தன. அவராலேயே உண்டாயின, அவருக்காகவே இருக்கின்றன. அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாகுக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 16 : 18

அல்லேலூயா : உன் பெயர் பாறை.
இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உன் பெயர் பாறை.**
**வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன்.**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

16 : 13-20

அக்காலத்தில் :

யேசு பிலிப்புச் செசரியா நகர்ப்புறம் வந்து தம் சீடரைப் பார்த்து, "மனுமகன் யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார்.

அவர்களோ, "சிலர் ஸ்நானக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் எரேமியாஸ் அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர்.

"நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று யேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்" என்றார்.

அதற்கு யேசு, "யோனாவின் மகன் சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில், இதை உனக்கு வெளிப்படுத்தியது மனித வல்லமையன்று, வானகத்திலுள்ள என் தந்தையே. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: உன் பெயர் 'பாறை'. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா. வானகத்தின் திறவு கோல்களை உனக்குக் கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் கட்டப்பட்டதாகவே இருக்கும். எதெல்லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும்" என்றார்.

பின்னர், தாம் மெசியா என்பதை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று தம் சீடருக்குக் கட்டளையிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**அவரே நம் கடவுள், அவரையே வழிபடுவோம்.**

**யோசுவா ஆகமத்திலிருந்து வாசகம்** *24 : 1-2a, 15-17, 18b*

*அந்நாட்களில் :*

யோசுவா இஸ்ராயேல் கோத்திரங்களை எல்லாம் சிக்கேமில் ஒன்று கூட்டி, பெரியோர்களையும் மக்கட் தலைவர்களையும் நீதிபதிகளையும் போதகர்களையும் தம்பால் வரவழைத்தார். அவர்கள் ஆண்டவர் திருமுன் வந்து நின்றனர். அப்பொழுது அவர் எல்லா மக்களையும் நோக்கி :

“ஆண்டவரை தொழுவது தீமையானது எனத் தென்பட்டால் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். மெசோப்பொத்தேமியாவில் உங்கள் முன்னோர் தொழுது வந்த தேவர்களை வழிபடுவதா, அல்லது நீங்கள் வாழுகின்ற அமோறையர் நாட்டுத் தேவர்களை வழிபடுவதா என்பதில் எது உங்கள் விருப்பமோ அதை இன்றே தீர்மானித்துவிடுங்கள். ஆனால் நானும் என் வீட்டாரும் ஆண்டவரையே தொழுது வருவோம்” என்றார்.

அப்போது மக்கள் மறுமொழியாக, “நாங்கள் ஆண்டவரை விட்டு விலகி அந்நிய தேவர்களைத் தொழுவது எங்களுக்குத் தூரமாய் இருப்பதாக. நம்மையும் நம் முன்னோரையும் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து கொணர்ந்தவரும், நம்முடைய கண்களுக்கு முன்பாக அத்தனை அதிசயங்களைச் செய்தவரும், நாம் நடந்து வந்த எல்லா வழிகளிலும் நம்மைப் பாதுகாத்தவரும், நாம் கடந்துபோன எல்லா மக்களிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றினவரும், நம் ஆண்டவராகிய கடவுளேயன்றி வேறல்லர். அவரே நம் கடவுளாய் இருப்பதால் அவரையே வழிபடுவோம்” என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 15-16, 17-18, 19-20, 21-22 (பல்லவி : 8அ)

பல்லவி : ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று
சுவைத்துப் பாருங்கள்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்,
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்.
சிறுமையுற்றோர் இதைக்கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

15 ஆண்டவருடைய கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன ;
அவருடைய செவிகள் அவர்களது குரலைக் கேட்கின்றன.
16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது ;
ஆண்டவர் பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்துவிடுவார்.
பல்லவி

17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர்: ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்;
எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்.
18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்,
மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார். பல்லவி

19 நீதிமானின் துயரங்கள் பல; ஆனால் அவையனைத்தினின்றும் ஆண்டவர்
அவனைக் கடைத்தேற்றுவார்.
20 அவர்களுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுவார்.
அவற்றில் ஒன்று முதலாய் நொறுங்காது. பல்லவி

21 தீயோரைத் தீவினையே சாகடிக்கும் :
நீதிமான்களைப் பகைப்பவர்களோ தண்டனைக்குள்ளாவார்கள்.
22 தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கிறார்.
அவரிடம் அடைக்கலம் புகுபவன் எவனும் தண்டனையடையான். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது: இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 21-32

சகோதரர்களே :

கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள். மனைவியரே, ஆண்டவருக்குப் பணிந்திருப்பதுபோல் உங்கள் கணவர்க்குப் பணிந்திருங்கள். ஏனெனில், கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போல் கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான். கிறிஸ்து திருச்சபை யாகிய தம் உடலின் மீட்பர். அந்தத் திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந் திருப்பதுபோல் மனைவியரும் கணவர்க்கு அனைத்திலும் பணிந்திருத்தல் வேண்டும்.

கணவர்களே, கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் உங்கள் மனைவியருக்கு அன்பு செய்யுங்கள். ஏனெனில், கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மையே கையளித்தார். அத்திருச்சபை கறைதிரையோ வேறு எக்குறையோ இன்றி, பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் தம் திருமுன் மகிமையோடு துலங்கச் செய்ய வேண்டு மென்று அவர் திருவார்த்தையாலும் முழுக்கினாலும் அதைத் தூயதாக்கிப் பரிசுத்தமாக்குவதற்குத் தம்மைக் கையளித்தார். அவ்வாறே கணவர் களும் தம் மனைவியரைத் தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்பு செய்யவேண்டும். மனைவிக்கு அன்பு காட்டுபவன் தனக்கே அன்பு காட்டுகிறான். தன்னுடைய உடலை எவனும் என்றும் வெறுப்பதில்லை; எவனும் அதைப் பேணி வளர்க்கிறான், கிறிஸ்துவும் அவ்வாறே திருச் சபையைப் பேணி வளர்க்கிறார். ஏனெனில் நாம் அவரது உடலின் உறுப்புகள்.

"அதனால், கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவி யோடு கூடி இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்." இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 6 : 63b - 68b

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்: முடிவில்லா உயிர்தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.**

✠ **அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

6: 60-69

**அக்காலத்தில்:**

யேசுவின் சீடருள் பலர் "இந்தப் பேச்சு மிதமிஞ்சிப் போகிறது. யார் இதைக் கேட்பார்?" என்றனர்.

இதைப்பற்றித் தம் சீடர் முணுமுணுப்பதை யேசு உணர்ந்துகொண்டு, "இது உங்களுக்கு இடறலாக உள்ளதோ? இதற்கே இப்படியென்றால், மனுமகன் முன்னர் இருந்த இடத்திற்கு ஏறிச்செல்வதை நீங்கள் கண்டால் என்ன சொல்வீர்களோ! உயிர் அளிப்பது ஆவியே. ஊனுடல் ஒன்றுக்கும் உதவாது. நான் சொன்ன சொற்கள் உங்களுக்கு ஆவியும் உயிருமாகும். ஆனால், விசுவசியாதவர் சிலர் உங்களிடையே இருக்கின்றனர்" என்று அவர்களுக்குச் சொன்னார். ஏனெனில், விசுவசியாதவர் யார், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் யார் என்று யேசு தொடக்கத்திலிருந்தே அறிந்திருந்தார்.

மேலும், "என் தந்தை அருள்கூர்ந்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது என இதன் பொருட்டே நான் உங்களுக்குச் சொன்னேன்" என்றார்.

அன்றே அவருடைய சீடருள் பலர் அவரை விட்டுப் பிரிந்தனர். அதுமுதல் அவர்கள் அவரோடு சேரவில்லை.

யேசு பன்னிருவரை நோக்கி, "நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?" என்றார். அதற்கு சீமோன் இராயப்பர்: "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர்" என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எல்லா மக்களினங்களினின்றும் உங்கள் சகோதரரைக் கூட்டி வருவார்கள்.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** *66: 18-21*

**ஆண்டவர் கூறுவதாவது :**

"அவர்களுடைய செயல்களையும் எண்ணங்களையும் நாம் அறிவோம்; வேற்றினத்தார், பிறமொழியினர் அனைவரையும் கூட்டிச் சேர்க்க நாமே வருகிறோம்; அவர்கள் கூடிவந்து நம்முடைய மகிமையைக் காண்பார்கள். அவர்கள் நடுவில் ஓர் அடையாளத்தை நாட்டுவோம்; அவர்களுள் மீதியாய் இருப்பவர்களை ஆப்பிரிக்காவுக்கும், வில் வீரர்கள் வாழும் லீதியாவுக்கும், தூபால், கிரீஸ் நாடுகளுக்கும், தொலைவிலுள்ள தீவுகளுக்கும், நம் திருப் பெயரைக் கேட்டிராதார், நம் மகிமையைக் கண்டிராதார் அனைவரிடமும் அனுப்புவோம்.

அவர்களும் மக்களினங்களுக்கு நம் மகிமையை வெளிப்படுத்துவார்கள். அவர்கள் ஆண்டவருக்கு உகந்த காணிக்கையாக எல்லா மக்களினங்களினின்றும் உங்கள் சகோதரரைச் சேர்த்து, இஸ்ராயேல் மக்கள் காணிக்கைகளைச் சுத்தமான பாத்திரத்தில் ஏந்தி ஆண்டவரின் கோயிலுக்குக் கொண்டு வருவதுபோல் அவர்களைக் குதிரைகள் மேலும் தேர்களின் மீதும், பல்லக்குகளிலும், கழுதைகள்மேலும், ஒட்டகங்கள் மேலும் ஏற்றி எருசலேமிலுள்ள நமது பரிசுத்த மலைக்குக் கொண்டுவருவார்கள், என்கிறார் ஆண்டவர். அவர்களுள் சிலரை அர்ச்சகர்களாகவும், லேவியராகவும் தேர்ந்து கொள்வோம்," என்கிறார் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 116 : 1, 2. (பல்லவி : மாற்கு 16 : 15)*

பல்லவி : **உலகெங்கும்போய் நற்செய்தியை அறிவியுங்கள்.**

அல்லது: **அல்லேலூயா.**

1 **மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள் :**
**மண்ணுலக மக்களே, நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.**
பல்லவி

2 ஏனெனில், நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது :
நம்மீது அவர் கொண்டுள்ள பிரமாணிக்கம் என்றும் நிலைத்திருக்கும்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

***ஆண்டவர் யார்மேல் அன்பு கூர்கிறாரோ, அவனைக் கண்டித்துத் திருத்துகிறார்.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *12: 5-7, 11-13*

சகோதரர்களே :

தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த அறிவுரையை நீங்கள் மறந்துவிட்டீர்களோ? "என் மகனே, ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்தும்போது, அதைப் பொருட்படுத்தாமலிராதே. அவர் தண்டிக்கும்போது, தளர்ந்துபோகாதே. ஏனெனில், ஆண்டவர் யார்மேல் அன்பு கூர்கிறாரோ, அவனைக் கண்டித்துத் திருத்துகிறார். தாம் ஏற்றுக்கொள்ளும் பிள்ளைகள் அனைவரையும் ஒறுக்கிறார்." திருத்தப்படுவதற்காகத்தான் நீங்கள் துன்புறுகிறீர்கள். கடவுள் உங்களைத் தம் மக்கள் என நடத்துகிறார். தகப்பன் கண்டித்துத் திருத்தாத மகன் உண்டோ?

கண்டித்துத் திருத்தம் பெறுவது இப்பொழுது இன்பமாயிராமல் துன்பமாகத்தான் தோன்றும். ஆனால், அவ்வாறு பயிற்றப்பட்டவர்கள் பின்னர் அமைதியையும் நீதி வாழ்வையும் பயனாகப் பெறுவர். எனவே, 'சோர்வுற்ற கைகளையும், தளர்ந்துபோன முழங்கால்களையும் திடப்படுத்துங்கள்.' 'நீங்கள் நடந்து செல்லும் பாதையை நேர்மையாக்குங்கள்.' அப்போதுதான் ஊனமான உறுப்பு மூட்டு பிசகாது நலமடையும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 14 : 5

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும், உண்மையும், உயிரும் : என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கிழக்கிலும் மேற்கிலுமிருந்து மக்கள் வந்து கடவுளின் அரசில் பந்தி அமர்வார்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*13: 22-30*

அக்காலத்தில்:

நகரங்கள் ஊர்கள்தோறும் போதித்துக்கொண்டே அவர் எருசலேம் நோக்கிப் பயணம் செய்தார். ஒருவன் அவரைப் பார்த்து, "ஆண்டவரே, மீட்புப் பெறுபவர் சிலர்தானே?" என்று கேட்க, அவர் மக்களுக்குக் கூறியது:

"ஒடுக்கமான வாயில் வழியே நுழையப் பாடுபடுங்கள். ஏனெனில், பலர் நுழைய முயன்றும் முடியாமற் போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வீட்டுத் தலைவன் எழுந்து கதவைத் தாளிட, நீங்கள் வெளியே நின்று கதவைத் தட்டிக்கொண்டே, 'ஆண்டவரே, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்' என்பீர்கள். அதற்கு அவர், 'நீங்கள் எவ்விடத்தாரோ, யானறியேன்' என்று கூறுவார். பின்பு நீங்கள், 'உம்முடன் உண்டோம், குடித்தோம், நீரும் எங்கள் தெருக்களில் போதித்தீரே' என்று சொல்வீர்கள்.

ஆனால் அவர், 'நீங்கள் எவ்விடத்தாரோ, யானறியேன். அநீதி புரியும் அனைவரும் என்னை விட்டு அகன்று போங்கள்' என்பார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபும் இன்னும் எல்லா இறைவாக்கினர்களும் கடவுளின் அரசில் இருப்பதையும், நீங்கள் புறம்பே தள்ளப்படுவதையும் காணும் போது, புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும். கிழக்கிலும் மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலும் இருந்து மக்கள் வந்து கடவுளின் அரசில் பந்தி அமர்வார்கள்.

இதோ! கடைசியானோர் சிலர் முதலாவர். முதலானோர் சிலர் கடைசியாவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பிய நீங்கள் அவர் உயிர்ப்பித்த தம் திருமகனுக்காகக் காத்திருக்கிறீர்கள்.***

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்தின் தொடக்கம்** 1 : 1-5, 8ac-10

பரம தந்தையாகிய கடவுளுக்குள்ளும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்குள்ளும் வாழ்கின்ற தெசலோனிக்கேய மக்களின் சபைக்கு, சின்னப்பனும், சில்வானும் தீமோத்தேயுவும் எழுதுவது: உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக!

எங்கள் செபங்களில் உங்களைக் குறிப்பிட்டு உங்கள் அனைவரையும் நினைத்துக் கடவுளுக்கு என்றும் நன்றி கூறுகிறோம். நீங்கள் விசுவாசத்தால் ஆற்றிய செயல்களையும், அன்பினால் மேற்கொண்ட உழைப்பையும், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கையால் கொண்ட மன உறுதியையும், நம் கடவுளும் தந்தையுமானவர் திருமுன் இடைவிடாமல் நினைவு கூருகிறோம்.

கடவுளால் அன்பு செய்யப்படும் சகோதரர்களே, அவர் உங்களைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் நற்செய்தியை வெறும் வார்த்தையில் மட்டும் உங்களுக்குக் கொண்டுவரவில்லை; பரிசுத்த ஆவிதரும் ஆற்றலோடும், அசையா உள்ளத்துறுதியோடும் கொண்டுவந்தோம். உங்கள் நன்மைக்காக நாங்கள் உங்களிடையே எப்படி நடந்துகொண்டோம் என்பது உங்களுக்குத் தெரிந்ததே.

கடவுள்மேல் உங்களுக்குள்ள விசுவாசம் எங்குமே எட்டியுள்ளது. உங்கள் விசுவாசத்தைப் பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லத் தேவையே இல்லை. நீங்கள் எங்களை எவ்வாறு வரவேற்கிறீர்கள் என்றும், உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக, எவ்வாறு தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினீர்கள் என்றும் மக்களே எடுத்துக் கூறுகின்றனர். கடவுளிடம் திரும்பிய நீங்கள் வானினின்று வரும் அவர் மகனுக்காகக் காத்திருக்கிறீர்கள். இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த இந்த யேசுவே வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 149 : 1-2, 3-4, 5-6a & 9b (பல்லவி : 4a)

பல்லவி : **ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிறார்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 **ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்.**
**புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக!**
2 **இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து**
**அகமகிழ்வார்களாக :**
**சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.** பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக :
தம்பூராவும் யாழும்கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார்.
தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணி செய்கிறார். பல்லவி

5 மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக :
தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
6 அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக :
9 இத்தகைய மகிமை அவர் தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் வழியாக ஆண்டவரின் பெயருக்கும்,**
**அவருள் உங்களுக்கும் மகிமை உண்டாவதாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்தின் தொடக்கம். 1: 1-5, 11b-12

நம் தந்தையாகிய கடவுளுக்குள்ளும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்குள்ளும் வாழுகின்ற தெசலோனிக்கேய மக்களின் சபைக்கு, சின்னப்பனும் சில்வானும் தீமோத்தேயுவும் எழுதுவது: பரம தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக!

சகோதரர்களே, உங்களை நினைத்துக் கடவுளுக்கு நாங்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆம், அவ்வாறு செய்வது தகுதியே. ஏனெனில், உங்கள் விசுவாசம் வளர்ந்து ஓங்குகிறது: நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பும் பெருகி வருகிறது. உள்ளபடியே, நீங்கள் வேதனைக்குள்ளாகித் துன்புறுத்தப்பட்டபோதெல்லாம் காட்டிய மன உறுதியையும் விசுவாசத்தையும் கண்டு, நாங்களும் கடவுளின் சபைகளில் உங்களைக் குறித்துப் பெருமையாகப் பேசுகிறோம். நீங்கள் படும்பாடெல்லாம் கடவுளின் அரசுக்காகவே. இத்துன்பங்கள் நீங்கள் கடவுளின் அரசுக்குத் தகுதியுள்ளவர்கள் என்பதை விளங்கச் செய்து, துன்பங்களில் நீங்கள் காட்டும் மன உறுதியும் விசுவாசமும் கடவுளின் தீர்ப்பு நீதியானது என்பதற்கு அத்தாட்சி.

நம் கடவுள் தாம் விடுத்த அழைப்பிற்கு உங்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குவாராக. உங்கள் நற்கருத்து ஒவ்வொன்றையும், விசுவாசத்தால் ஏவப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வாராக. இவ்வாறு நம் கடவுளும் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவும் அளிக்கும் அருளுக்கேற்ப, உங்கள் வழியாக் நம் ஆண்டவராகிய யேசுவின் பெயருக்கும், அவருள் உங்களுக்கும் மகிமை உண்டாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 95 : 1-2a, 2b-3, 4-5 (பல்லவி : 3)

பல்லவி : ஆண்டவருடைய வியத்தகு செயல்களை
மக்கள் அனைவரிடையிலும் கூறுங்கள்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் ;
மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள்.
3 புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள் :
மக்கள் அனைவரிடையிலும் அவர்தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.
பல்லவி

4 ஏனெனில், மாண்பு மிக்கவர் ஆண்டவர், மிகு புகழ்ச்சிக்குரியவர்.
தெய்வங்கள் அனைத்தையும்விட அச்சத்துக்குரியவர்.
5 ஏனெனில், புற இனத்தார் தெய்வங்களெல்லாம் வெறுமையே ;
ஆண்டவரோ வானங்களைப் படைத்தவர். பல்லவி

அல்லேலூயா அரு. 10 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவி கொடுக்கின்றன;
நானும் அவற்றை அறிவேன்,
அவையும் என்னைப் பின்தொடர்கின்றன,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**குருட்டு வழிகாட்டிகளே, உங்களுக்கு ஐயோ கேடு!**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
*23 : 13-22*

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

"வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், மனிதர் விண்ணரசில் நுழைகையில் வாயிலை அடைத்து விடுகிறீர்கள். நீங்களும் நுழைவதில்லை, நுழைவோரையும் விடுவதில்லை.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், ஒருவனை மதத்தில் சேர்க்க நாடும் கடலும் சுற்றி அலைகிறீர்கள். அவன் சேர்ந்தபின் உங்களைவிட இரு மடங்கு அவனை நரகத்துக்கு உரியவனாக்குகிறீர்கள்.

குருட்டு வழிகாட்டிகளே, உங்களுக்கு ஐயோ கேடு! ஆலயத்தின்மீது ஒருவன் ஆணையிட்டால் அது ஒன்றுமில்லை; ஆனால், ஆலயத்தின் பொன்மீது ஆணையிட்டால் அவன் கடமைப்பட்டவன் என்கிறீர்களே. மூடரே, குருடரே, எது பெரிது? பொன்னா? பொன்னைப் பரிசுத்தமாக்கும் ஆலயமா? மேலும் ஒருவன் பீடத்தின்மீது ஆணையிட்டால் அது ஒன்றுமில்லை; ஆனால், பீடத்தின் மேலுள்ள காணிக்கையின்மீது ஆணையிட்டால் அவன் கடமைப்பட்டவன் என்கிறீர்கள். குருடரே, எது பெரிது? காணிக்கையா? காணிக்கையைப் பரிசுத்தமாக்கும் பீடமா?

எனவே, பீடத்தின்மீது ஆணையிடுவோன் அதன் பெயராலும், அதன்மேலுள்ள அனைத்தின் பெயராலும் ஆணையிடுகிறான். ஆலயத்தின் பெயரால் ஆணையிடுகிறவன் அதன் பெயராலும், அதில் குடிகொண்டிருப்பவர் பெயராலும் ஆணையிடுகிறான். வானகத்தின் பெயரால் ஆணையிடுகிறவன் கடவுளுடைய அரியணையின் பெயராலும், அதன்மேல் வீற்றிருப்பவர் பெயராலும் ஆணையிடுகிறான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நற்செய்தியை மட்டுமன்று, எங்களை முழுவதுமே கையளிக்க ஆவலாய் இருந்தோம்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1-8

சகோதரர்களே, நாங்கள் உங்களிடம் வந்தது பயனற்றுப் போகவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அறிந்திருப்பதுபோல், உங்களிடம் வருவதற்கு முன்னர் பிலிப்பி நகரில் நாங்கள் துன்புற்றோம், அவமானத்துக்கு ஆளானோம். ஆயினும் பெரும் போராட்டத்தினிடையிலும் கடவுளின் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்க நம் கடவுளிடமிருந்து துணிவு பெற்றோம்.

எங்கள் அறிவுரைகள் ஏமாற்றத்தினாலோ, கெட்ட கருத்தினாலோ, கபட எண்ணத்தினாலோ தூண்டப்பட்டவை அல்ல. நாங்கள் தகுதியுள்ளவர்களெனக் கடவுளே எங்களை நம்பி, நற்செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். அதற்கேற்ப நாங்கள் அதை அறிவிக்கிறோம். மனிதருக்கு அல்ல, எங்கள் உள்ளங்களை உய்த்துணரும் கடவுளுக்கே உகந்தவர்களாய் இருக்கப் பார்க்கிறோம். நாங்கள் ஒருகாலும் இச்சகமாகப் பேசியதேயில்லை ; இது உங்களுக்குத் தெரியும். போதனை என்னும் போர்வையில் நாங்கள் பொருள்பறிக்கப் பார்க்கவில்லை. கடவுளே இதற்குச் சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என்று பெருமை கொண்டாடியிருக்கமுடியும். ஆனால், மனிதர் தரும் மகிமையை நாங்கள் உங்களிடமோ மற்றவர்களிடமோ தேடவில்லை. மாறாக, தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதுபோல் உங்களிடையே அன்பாய் நடந்துகொண்டோம்.

உங்கள்மீது இத்தகைய ஏக்கமுள்ளவர்களாய் உங்களுக்குக் கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்று, எங்களை முழுவதுமே கையளிக்க ஆவலாய் இருந்தோம். உங்கள்மேல் எங்களுக்கு அவ்வளவு அன்பு இருந்தது !

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 138 : 1-3, 4-6 (பல்லவி : 1a)

பல்லவி : **ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர்.**

1 **ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர் :**
2 **நான் அமர்வதும் எழுவதும், என் வாழ்க்கை முழுதுமே**
**நீர் அறிந்திருக்கிறீர்.**
**என் நினைவுகள் எல்லாம் முன்பிருந்தே உமக்கு வெளிச்சம்.**
3 **நான் நடப்பதும் படுப்பதும் எல்லாமே நீர் அறிந்துள்ளீர்.**
**நான் செல்லும் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தனவே.** பல்லவி

4 **என் வாயில் வார்த்தை உருவாகுமுன்பே நீர் எல்லாம் அறிந்திருக்கிறீர்.**
5 **எனக்கு முன்னும் பின்னும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்,**
**உம் திருக்கரத்தை என்மேல் வைக்கிறீர்.**
6 **இத்தகைய அறிவு எனக்கு மிகவும் வியப்பாயுள்ளது, உன்னதமானது :**
**அதை நான் புரிந்து கொள்ள முடியாது.** பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்கள் கற்றறிந்த பரம்பரைப் படிப்பினைகளைப் பற்றிக்கொள்ளுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 1-3 a, 14-17

**சகோதரர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வருகையைப்பற்றியும், அவரோடு நாம் ஒன்று கூடுதல்பற்றியும் உங்களுக்கு நாங்கள் சொல்ல விரும்புவது : ஆண்டவருடைய நாள் வந்துவிட்டது என யாராவது தேவ ஆவியின் வாக்காகவோ, திருவுரையாகவோ, நாங்கள் எழுதிய கடிதத்தின் செய்தியாகவோ சொன்னால், நீங்கள் உடனே நிலைகுலைந்து மனங்கலங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். எவனும் உங்களை எவ்வாறேனும் ஏமாற்ற விடாதீர்கள்.**

**இதற்காகவே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் மகிமையை நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக இறைவன் உங்களை அழைத்தார். எனவே, சகோதரர்களே, எங்களிடமிருந்து வாய் மொழியாகவோ, கடிதத்தின் வழியாகவோ நீங்கள்**

கற்றறிந்த பரம்பரைப் படிப்பினைகளைப் பற்றிக்கொண்டு நிலையாயிருங்கள். நம்மேல் அன்பு கூர்ந்து, தம் அருளால் முடிவில்லாத ஆறுதலும், நல்ல நம்பிக்கையும் அளித்த நம் தந்தையாகிய கடவுளும், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவும் உங்கள் உள்ளங்களுக்கு ஆறுதல் அளித்து, எல்லா வகையான நற்செயலிலும் நற்சொல்லிலும் உங்களை உறுதிப்படுத்துவார்களாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 95 : 10, 11-12a, 12b-13 (பல்லவி : 13ab)

பல்லவி: பூவுலகை ஆட்சிசெய்ய ஆண்டவர் வருகின்றார்.

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள் ;
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் : பூவுலகை அவர் நிலைநிறுத்தியுள்ளார்.
அது அசைவுறாது : மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும் ;
கடலும் அதில் வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும்.
12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும். பல்லவி

காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது ஆண்டவர்முன் மகிழ்ச்சியுறும்.
13 ஏனெனில், அவர் வருகின்றார் : பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார் :
மக்களை அவர்தம் சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

### அல்லேலூயா

எபி. 4 : 12

அல்லேலூயா. இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது :
உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும்
சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இவற்றையே கடைப்பிடித்திருக்க வேண்டும்; அவற்றையும் விடலாகாது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 23: 23-26

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

"வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் புதினா, சதகுப்பி, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பகுதி செலுத்துகிறீர்கள். ஆனால், திருச்சட்டத்தில் முக்கிய படிப்பினைகளான நீதி, இரக்கம், விசுவாசம் ஆகியவற்றை விட்டுவிட்டீர்கள். இவற்றைத்தான் கடைப்பிடித்திருக்க வேண்டும்; அவற்றையும் விடலாகாது. குருட்டு வழிகாட்டிகளே, கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூயதாக்குகிறீர்கள். ஆனால், உள்ளே கொள்ளையும் துர் இச்சையும் நிறைந்துள்ளன. குருட்டுப் பரிசேயனே, கிண்ணத்தின் உட்புறத்தை முதலில் தூயதாக்கு: அப்பொழுது வெளிப்புறமும் தூயதாகும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**இராப் பகலாய் வேலைசெய்துகொண்டே நற்செய்தியை உங்களுக்கு அறிவித்தோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 9-13

சகோதரர்களே, நாங்கள் எவ்வாறு பாடுபட்டு உழைத்தோம் என்பதை நினைவுகூருங்கள். உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி எங்கள் பிழைப்புக்காக இராப்பகலாய் வேலைசெய்துகொண்டே கடவுளின்

நற்செய்தியை உங்களுக்கு அறிவித்தோம். விசுவாசிகளான உங்கள் முன்பு நாங்கள் எவ்வளவு புனிதராய், நீதியோடு, குற்றமின்றி நடந்தோம் என்பதற்கு நீங்களே சாட்சி, கடவுளும் சாட்சி. தந்தை தன் பிள்ளைகளை நடத்துவதுபோல், உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தினோம், ஊக்கமூட்டினோம். தம் அரசுக்கும் மாட்சிமைக்கும் உங்களை அழைக்கும் கடவுளுக்கு ஏற்க வாழுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டோம். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே.

நாங்கள் அறிவித்த கடவுளுடைய வார்த்தையை நீங்கள் பெற்றுக் கொண்டபோது அதை மனித வார்த்தையாக ஏற்றுக்கொள்ளவில்லை; கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டீர்கள். இதற்காக இடைவிடாது கடவுளுக்கு நன்றிகூறுகிறோம். உள்ளபடியே அது கடவுளுடைய வார்த்தைதான். அதுவே விசுவசிக்கும் உங்களுக்குள் செயலாற்றுகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 138 : 7-8, 9-10, 11-12ab (பல்லவி : 1a)

பல்லவி : **ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர்.**

7 உமது ஆவியை விட்டு, நான் எங்கே தொலைவில் போகக்கூடும்?
உம்முடைய திருமுன்னிலையை விட்டு, நான் எங்கே ஒளியக்கூடும்?
8 நான் வானகத்துக்குப் பறந்து சென்றால், நீர் அங்கே இருக்கிறீர்!
பாதாளத்துக்குச் சென்று படுத்துக்கொண்டாலும் அங்கேயும் இருக்கிறீர்.
பல்லவி

9 நான் விடியற்காலையில் சிறகடித்துப் பறந்து சென்றபோதிலும்,
கடல்களின் கடைஎல்லைகளில் வாழ்ந்தாலும்,
10 அங்கேயும் உமது கரம் என்னை நடத்திச் செல்லும்.
உமது வலக்கரம் என்னைத் தாங்கி நிற்கும். பல்லவி

11 'இருளாவது என்னை மூடிக்கொள்ளாதோ;
ஒளிபோல, இரவும் என்னைச் சூழ்ந்துகொள்ளாதோ'
என்று நான் விரும்பினாலும்,
12 இருள்கூட உமக்கு இருட்டாயில்லை,
இரவும் உமக்குப் பகலைப்போல வெளிச்சமாயிருக்கிறது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 6-10, 16-18

சகோதரர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறதாவது : எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட படிப்பினைக்கு ஏற்ப நடக்காமல் சோம்பித் திரியும் எந்தச் சகோதரனிடமிருந்தும் விலகி நில்லுங்கள். எங்களைப்போல் நடப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமே. உங்களோடிருந்தபோது நாங்கள் சோம்பித் திரியவில்லை. யாரிடமும் நாங்கள் இலவசமாக உணவுகொள்ளவில்லை. மாறாக, உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி பிழைப்புக்காக இராப் பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம். உங்களிடமிருந்து பிழைப்புக்குத் தேவையானதைப் பெற எங்களுக்கு உரிமையில்லை என்பதனால் இவ்வாறு உழைக்கவில்லை. நாங்கள் செய்வதுபோலவே நீங்களும் செய்யவேண்டுமென்று உங்களுக்கு முன்மாதிரியாய் இருக்கவே அப்படிச் செய்தோம். நாங்கள் உங்களோடிருந்தபொழுது, 'உழைக்க மனமில்லாத எவனும் உண்ணலாகாது' என்ற கட்டளை கொடுத்தோம்.

சமாதானத்தின் ஊற்றாகிய ஆண்டவர் எப்பொழுதும் எல்லா வகையிலும் உங்களுக்குச் சமாதானம் அருள்வாராக. ஆண்டவர் உங்கள் அனைவரோடும் இருப்பாராக.

இவ்வாழ்த்து சின்னப்பனுை நான் என் கைப்பட எழுதியது. என் கடிதம் ஒவ்வொன்றுக்கும் இதுவே அடையாளம். நான் எழுதுவது இப்படித்தான். நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 127 : 1-2, 4-5 (பல்லவி : 1a காண்)

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.**

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன் :
அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறுபெற்றோன்.
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக்கொள்வாய் :
பேறு பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக :
உன் வாழ்நாளெல்லாம் எருசலேமின் செழுமையை நீ காணும்படி
உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

அல்லேலூயா 1 அரு. 2 : 5

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால்
அவனிடம் உண்மையாகவே கடவுளன்பு
நிறைவாகியுள்ளது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் இறைவாக்கினர்களைக் கொன்றவர்களின் மக்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 23 : 27-32

அக்காலத்தில் : யேசு கூறியதாவது :

“வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை வெளியே மனிதருக்கு வனப்பாகத் தோன்றுகின்றன. உள்ளேயோ இறந்தோர் எலும்புகளும், எவ்வகை அசுத்தமும் நிறைந்துள்ளன. அவ்வாறே நீங்களும் வெளியே மனிதருக்கு நீதிமான்களாகத் தோன்றுகிறீர்கள். உள்ளேயோ கள்ளத்தனத்தாலும் அக்கிரமத்தாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், இறைவாக்கினர்களுக்குக் கல்லறை கட்டி நீதிமான்களுடைய சமாதிகளை அலங்கரிக்கிறீர்கள். எங்கள் முன்னோர்

காலத்தில் நாங்கள் இருந்திருந்தால், அவர்கள் இறைவாக்கினர்களின் இரத்தத்தைச் சிந்துவதற்கு உடந்தையாய் இருந்திருக்கமாட்டோம் என்கிறீர்கள். இவ்வாறு, இறைவாக்கினர்களைக் கொன்றவர்களுடைய மக்கள் நீங்கள் என்பதற்கு, நீங்களே உங்களுக்கு எதிர் சாட்சிகள். எனவே, உங்கள் முன்னோர் தொடங்கியதை நீங்கள் முடித்துவிடுங்கள்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒருவருக்கொருவர்மீதும், அனைவர்மீதும் உங்களுக்குள்ள அன்பில் ஆண்டவர் உங்களை வளர்ந்தோங்கச் செய்வாராக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *3: 7-13*

சகோதரர்களே, நாங்கள் படும் எல்லா நெருக்கடியிலும் வேதனையிலும் உங்கள் விசுவாசத்தைக் கண்டு உங்களால் ஆறுதல் அடைகிறோம். ஆண்டவருக்குள் நீங்கள் நிலைத்திருப்பது எங்களுக்குப் புத்துயிர் தருகிறது. உங்களை முன்னிட்டு நாங்கள் நம் கடவுளின் திருமுன் அடையும் மகிழ்ச்சி அனைத்திற்கும் கைம்மாறாக அவருக்கு எவ்வாறு நன்றிகூற இயலும்? உங்கள் முகத்தைக் காணவும் உங்கள் விசுவாசத்திற்கு இன்னும் தேவைப்படுவதை நிறைவாக்கவும் இராப்பகலாய் இறைவனை இறைஞ்சி மன்றாடுகிறோம்.

நம் கடவுளும் தந்தையுமானவரும், நம் ஆண்டவராகிய யேசுவும் நாங்கள் உங்களிடம் வந்துசேர வழிகாட்டுவார்களாக. உங்கள்மீது எங்களுக்குள்ள அன்பு பெருகுவதுபோல், ஒருவருக்கொருவர்மீதும் அனைவர்மீதும் உங்களுக்குள்ள அன்பில் ஆண்டவர் உங்களை வளர்ந்தோங்கச் செய்வாராக. நம் ஆண்டவராகிய யேசு தம்முடைய பரிசுத்தர்கள் அனைவரோடும் வரும்போது, நம் கடவுளும் தந்தையுமானவரின் திருமுன் நீங்கள் குற்றமின்றிப் பரிசுத்தராய் இருக்கும்படி உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 9 : 3-4, 12-13, 14 & 17* (பல்லவி : *14*)

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கை எங்களுக்குக் காட்டியருளும் : நாங்கள் களிகூருவோம்.

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர்;
"மனுமக்களே மண்ணுகத் திரும்புங்கள்" என்கிறீர்.
4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட,
கடந்துபோன நேற்றைய தினத்தைப்போலவும்,
ஓர் இரவுச் சாமத்தைப்போலவும் உள்ளன. பல்லவி

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு
எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும்.
எவ்வளவு காலம்கோபம் கொள்வீர்?
உம் ஊழியர்மீது இரக்கம் வையும். பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் :
எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
17 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக ;
எங்கள் வேலையைப் பயனுள்ளவையாக்கும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**எல்லாவிதத்திலும் அவருக்குள் வளம்பெற்றவர்கள் ஆனீர்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்தின் தொடக்கம். *1: 1-9*

கொரிந்து நகரில் இருக்கும் கடவுளின் சபைக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனாய் அழைக்கப்பட்ட சின்னப்பனும், சகோதரனான சொஸ்தெனேயும் எழுதுவது : நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரை எங்கும் போற்றித் தொழுகின்ற அனைவரோடும்கூடப் புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்ட உங்களுக்கு, அவர்களுக்கும் நமக்கும் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவுக்குள் பரிசுத்தராக்கப்பட்ட உங்களுக்கு, நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உண்டாகுக.

கிறிஸ்து யேசுவுக்குள் உங்களுக்கு அளிக்கப்பட்ட இறை அருளுக்காக உங்களை நினைத்து என் கடவுளுக்கு என்றும் நன்றிகூருகிறேன். ஏனெனில், கிறிஸ்துவைப்பற்றி நாங்கள் அளித்த சாட்சியம் உங்களுக்குள் உறுதிப்பட்டிருப்பதால், சொல் வன்மையும் அறிவும் நிரம்பப்பெற்று அவருக்குள் எல்லா விதத்திலும் வளம்பெற்றவர்கள் ஆனீர்கள். அதனால் நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து வெளிப்பட வேண்டுமெனக் காத்திருக்கிற உங்களுக்கு ஞானக் கொடை எதிலும் குறையே இல்லை. நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் நாளில் நீங்கள் குறைபாடற்றவர்களாயிருக்க அவரே உங்களை இறுதிவரை உறுதிப்படுத்துவார். கடவுள் நம்பிக்கைக்குரியவர். தம் மகனும் நம் ஆண்டவருமாகிய யேசு கிறிஸ்துவோடு நீங்கள் நட்புறவுகொள்ள அவரே உங்களை அழைத்திருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144 : 2-3, 4-5, 6-7 (பல்லவி : 1 காண்)*

பல்லவி : என் இறைவா, என் அரசே,
என்றென்றும் உம் பெயரை வாழ்த்துவேன்.

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன்.
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் :
அவரது மேன்மைக்கு அளவேயில்லை.
பல்லவி

4 தலைமுறை தலைமுறையாக மனிதர் உம்முடைய
செயல்களை எடுத்துரைப்பர் :
தலைமுறை தலைமுறையாக உமது வல்லமையை வெளிப்படுத்துவார்கள்.
5 உம்முடைய மகத்துவத்தின் சொல்லரிய மாட்சிமையைப்பற்றிப் பேசுவர்.
உம் வியத்தகு செயல்களை எடுத்துரைப்பர்.
பல்லவி

6 அச்சமிகு உம் செயல் வலிமையை எடுத்துச்சொல்வர் ;
உமது மேன்மையைப் பறை சாற்றுவர்.
7 உமது நன்மைப் பெருக்கின் புகழை வெளிப்படுத்துவர் ;
உமது நீதியை நினைத்து அக்களிப்பர்.
பல்லவி

## அல்லேலூயா

மத். 24 : 42a, 44

அல்லேலூயா. விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள். ஏனெனில்,
நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆயத்தமாய் இருங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 24 : 42-51

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"விழிப்பாயிருங்கள் ; ஏனெனில், எப்போது உங்கள் ஆண்டவர் வருவார் என்று உங்களுக்குத் தெரியாது. திருடன் இன்ன சாமத்தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால் அவன் விழிப்பாயிருந்து வீட்டில் கன்னம் வைக்க விடமாட்டான் அன்றோ? இதை உணர்ந்து நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.

தக்க காலத்தில் தன் வீட்டாருக்கு உணவளிக்கும்படி தலைவன் ஏற்படுத்திய, நம்பிக்கையும் விவேகமும் உள்ள ஊழியன் யார்? எந்த ஊழியன் அவ்வாறு செய்துகொண்டிருப்பதைத் தலைவன் வந்து காண்பானோ, அவன் பேறுபெற்றவன். அவனைத் தன் உடைமைக்கெல்லாம் அதிகாரியாக ஏற்படுத்துவான் என உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்.

ஆனால், அவ்வூழியன் தீயனாய் இருந்து, 'என் தலைவர் காலம் தாழ்த்துகிறார்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, உடன் ஊழியரை அடிக்கவும், குடிகாரருடன் கூடி உண்ணவும் குடிக்கவும் தொடங்கினால், அவ்வூழியன் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் தலைவன் வந்து, அவனை நீக்கி, வெளி வேடக்காரர் கதிக்கு உள்ளாக்குவான். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 1-8

சகோதரர்களே, இறுதியாக உங்களுக்கு அறிவுறுத்த விரும்புவது: நீங்கள் எவ்வாறு நடக்கவேண்டும், கடவுளுக்கு உகந்தவர்களாக எவ்வாறு வாழவேண்டும் என்ற படிப்பினையை எங்களிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள். அதன்படியே நடந்துவருகிறீர்கள். இதில் இன்னும் முன்னேற வேண்டுமென்று, ஆண்டவராகிய யேசுவின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம். ஆண்டவராகிய யேசுவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகள் எவை என அறிவீர்களன்றோ?

நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்: அதாவது, கெட்ட நடத்தையை விட்டுவிடவேண்டும். கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சைகளுக்கு இடங்கொடுப்பதுபோல் நீங்கள் செய்யாமல், உங்களுள் ஒவ்வொருவரும் தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி, பரிசுத்தமாய்க் காப்பாற்ற அறிந்திருக்கவேண்டும். எவனும் இக்காரியத்தில் மீறி நடந்து, தன் சகோதரனை வஞ்சிக்காமல் இருப்பானாக. இவை அனைத்திற்காகவும் ஆண்டவரே பழிவாங்குவார். இதை உங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறோம், வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். கடவுள் நம்மை அசுத்தத்திற்காக அழைக்கவில்லை. பரிசுத்தத்திற்காகவே அழைத்திருக்கிறார். எனவே, இக்கட்டளைகளைப் புறக்கணிப்பவன் மனிதரைப் புறக்கணிப்பதில்லை; தம் பரிசுத்த ஆவியை உங்களுக்கு அளித்த கடவுளையே புறக்கணிக்கிறான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 96 : 1 & 2b, 5-6, 10, 11-12 (பல்லவி : 12a)

பல்லவி : **நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள்.**

ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்:
1 பூவுலகு களிகூர்வதாக! தீவுகள் எல்லாம் மகிழட்டும்.
2 நீதியும் நேர்மையும் அவரது அரியணைக்கு அடிப்படை. பல்லவி

5 பூவுலகனைத்தையும் ஆளும் ஆண்டவர் முன்னே
மலைகள் மெழுகுபோல் உருகுகின்றன.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன :
உலக மக்களனைவரும் அவரது மகிமையைக் காண்கின்றனர். பல்லவி

10 தீமையை வெறுப்பவர்கள்மீது ஆண்டவர் அன்புகூருகின்றார்.
தம் புனிதர்களின் ஆன்மாக்களைக் காக்கின்றார்.
தீயவர்களின் கையினின்று அவர்களை விடுவிக்கின்றார். பல்லவி

11 நீதிமானுக்கு ஒளி எழுகின்றது :
நேரிய உள்ளத்தவருக்கு மகிழ்ச்சி பிறக்கின்றது.
12 நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள் :
அவரது திருப்பெயரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**சிலுவையில் அறையுண்ட ஒரு மெசியாவை அறிவிக்கின்றோம்: மனிதர்களுக்கு இது இடறல்; அழைக்கப்பட்டவர்களுக்கோ கடவுளின் ஞானம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 17-25

சகோதரர்களே :

கிறிஸ்து என்னை அனுப்பினது ஞானஸ்நானம் கொடுக்க அன்று, நற்செய்தியை அறிவிக்கவே. அதுவும் நாவன்மையை நம்பியன்று. அப்படி நம்பினால் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றதாய்ப் போகும். சிலுவையைப்பற்றிய போதனை அழிவுறுபவர்களுக்கு மடமையே ; மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை.

ஏனெனில், 'ஞானிகளின் ஞானத்தை அழிப்பேன் ; அறிஞர்களின் அறிவுத் திறனை வெறுமையாக்குவேன்' என்று எழுதியுள்ளது. உலகைச் சார்ந்த உன் ஞானி எங்கே? உன் சட்ட வல்லுநன் எங்கே? வாதாடுவோர் எங்கே? கடவுள் உலக ஞானத்தின் மடமையைக் காட்டிவிட்டார் அல்லரோ? ஏனெனில், கடவுளின் ஞானம் வகுத்த திட்டத்தின்படி, உலகம் தனது ஞானத்தைக்கொண்டு கடவுளை அறிந்துகொள்ளாததால், நாங்கள் அறிவிக்கும் செய்தியின் மடமையால் விசுவாசிகளை மீட்கத் திருவுளங் கொண்டார். யூதர்கள் அருங்குறிகள் வேண்டும் என்கின்றனர் ; கிரேக்கர்கள் ஞானத்தை நாடுகின்றனர். நாங்களோ, சிலுவையில் அறையுண்ட

ஒரு மெசியாவை அறிவிக்கின்றோம். இது யூதர்களுக்கு இடறலாயுள்ளது. புறவினத்தாருக்கு மடமையாயுள்ளது. ஆனால், யூதராயினும் சரி, கிரேக்கராயினும் சரி, அழைக்கப்பட்டவர்களுக்கு அவர் மெசியா, கடவுளின் வல்லமையும், கடவுளின் ஞானமுமானவர். ஏனெனில், கடவுளின் மடமை மனிதரின் ஞானத்தைவிட ஞானமிக்கது. கடவுளின் வலுவின்மை மனிதரின் வன்மையைவிட வன்மைமிக்கது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 1-2, 4-5, 10-11 (பல்லவி : 5b)

பல்லவி : **ஆண்டவருடைய அருளால் பூவுலகு நிறைந்துள்ளது.**

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள் :
நேர்மனத்தோர் அவரைப் புகழ்வது தகுமே.
2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள்.
பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள். பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்,
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

10 மக்கள் இனங்களின் திட்டங்களை ஆண்டவர் சிதறடிக்கிறார் :
மக்களின் எண்ணங்களைப் பயனற்றவை ஆக்குகிறார்.
11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் :
அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
பல்லவி

அல்லேலூயா

லூக். 21 : 36

அல்லேலூயா. மனுமகன் முன் நிற்க நீங்கள் வலிமையுள்ளவர்களாய் இருக்கும்படி எந்நேரமும் செபித்து விழிப்பாயிருங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதோ மணவாளன் வருகிறார்! அவரை எதிர்கொள்ளச் செல்லுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*25 : 1-13*

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறிய உவமையாவது:

"அந்நாளில் விண்ணரசு, மணமகனை எதிர்கொள்ளச் சென்ற பத்துக் கன்னியருக்கு ஒப்பாயிருக்கும். அவர்கள் கையில் விளக்கு எடுத்துப் போனார்கள். அவர்களுள் ஐவர் அறிவிலிகள், ஐவர் விவேகிகள். அறிவிலிகள் ஐவரும் விளக்கு எடுத்துக்கொண்டார்கள்; ஆனால், எண்ணெய் எடுத்துக்கொள்ளவில்லை. விவேகிகளோ விளக்குடன் ஏனத்தில் எண்ணெயும் எடுத்துக்கொண்டார்கள். மணமகன் வரக் காலம் தாழ்த்தவே, எல்லாரும் தூங்கிவிழுந்து, உறங்கிவிட்டார்கள்.

நள்ளிரவில் 'இதோ! மணவாளன் வருகிறார்; அவரை எதிர்கொள்ளச் செல்லுங்கள்' என்ற கூக்குரல் கேட்டது. அப்பொழுது அக்கன்னியர் எல்லாரும் எழுந்து தம் விளக்குகளைச் சரிப்படுத்தினார்கள். அறிவிலிகளோ, 'எங்கள் விளக்குகள் அணைந்துபோகின்றன, உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்' என்று விவேகிகளிடம் கேட்டார்கள். அதற்கு விவேகிகள், 'உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் பற்றாமல் போகலாம், ஆகவே கடைக்காரரிடம் சென்று நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள்' என்றனர்.

அவர்கள் வாங்கச் செல்லும்போது மணமகன் வந்தார். தயாராயிருந்தோர் அவருடன் மணவீட்டில் நுழைந்தனர். கதவு அடைக்கப்பட்டது. இறுதியாக மற்றக் கன்னியரும் வந்து, 'ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்' என்றனர். அவரோ மறுமொழியாக, 'உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்களை அறியேன்' என்றார்.

எனவே, விழிப்பாயிருங்கள்; ஏனெனில், நாளும் நேரமும் உங்களுக்குத் தெரியாது."

**இது ஆண்டவரின் அருள் வாக்கு.**

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒருவருக்கொருவர் அன்புகாட்ட கடவுளிடமிருந்தே கற்றுக்கொண்டீர்கள்.**

அப்போஸ்தலரான் புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *4 : 9-11*

சகோதரர்களே :

சகோதர அன்பைக்குறித்து நான் உங்களுக்கு எழுதத் தேவையில்லை; ஒருவருக்கொருவர் அன்புகாட்டக் கடவுளிடமிருந்து நீங்களே கற்றுக் கொண்டவர்களாய் இருக்கிறீர்கள். இதன்படி நீங்கள், மக்கெதோனியா நாடெங்கும் வாழும் சகோதரர்கள் அனைவருக்குமே அன்பு காட்டுகிறீர்கள். சகோதரர்களே, நீங்கள் இதில் இன்னும் முன்னேற வேண்டுமென்று அறிவுறுத்துகிறோம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வேலையையே பார்த்துக்கொண்டு அமைதியாக வாழ்வது பெருமையெனக் கருதி அதை நாடுங்கள். திருச்சபையைச் சேராதவர்கள்மட்டில் பாங்குடன் பழகி, பிறர் கையைப் பார்த்து வாழாதபடி, நாங்கள் கட்டளையிட்டதுபோல, உங்கள் கையாலேயே வேலை செய்யுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 97 : 1, 7-8, 9-10 (பல்லவி : 9 காண்)*

பல்லவி : **மக்களினத்தாரை நேர்மையுடன் ஆட்சிசெய்ய ஆண்டவர் வருகின்றார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் :
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.
அவரது வலக்கரமும் புனித புயமும்
அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

7 கடலும் அதில் வாழ்வனவும் ஆர்ப்பரிக்கட்டும் :
பூவுலகும் அதில் வாழ்வோரும் உளம் பூரிக்கட்டும்.
8 பெருவெள்ளங்கள் கைகொட்டட்டும் :
ஆண்டவர் எழுந்தருளும்போது மலைகளும் ஆரவாரம் செய்யட்டும்.
பல்லவி

9 ஏனெனில், அவர் வருகின்றார் :
பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
10 நீதியுடன் பூவுலகை அவர் ஆள்வார் :
மக்களினத்தாரை அவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 26-31

சகோதரர்களே, நீங்கள் அழைக்கப்பட்டபோது என்ன நிகழ்ந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். மனிதர் மதிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்? வல்லமை யுள்ளவர்கள் எத்தனை பேர்? உயர் குலத்தோர் எத்தனை பேர்? இருப்பினும் ஞானிகளை நாணச்செய்ய மடமை என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார். வன்மையானதை நாணச் செய்ய வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்து கொண்டார். உலகம் பொருட்படுத்துவதை ஒழித்துவிட, உலகம் பொருட் படுத்தாததையும், தாழ்ந்ததெனக் கருதுவதையும், இகழ்ச்சிக்குரியதையும் கடவுள் தேர்ந்துகொண்டார். எந்த மனிதனும் கடவுள் முன் பெருமை பாராட்டாதபடி இவ்வாறு செய்தார். அவர் செயலால்தான் நீங்கள் கிறிஸ்து யேசுவுக்குள் இருக்கிறீர்கள்.

இவரே கடவுளின் செயலால் நமக்கு ஞானத்தின் ஊற்றானார். இறைவனுக்கு நாம் ஏற்புடையவர்களும் பரிசுத்தர்களும் ஆவதற்கு வழியானார். நமக்கு விடுதலை அளிப்பவருமானார். ஆகவே, மறைநூலில் எழுதியுள்ளபடி, 'பெருமை பாராட்டுவோன் ஆண்டவரில் பெருமை பாராட்டுக.'

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 12-13, 18-19, 20-21 (பல்லவி :12)

பல்லவி: ஆண்டவர் தம் உரிமைப் பொருளாகத் தேர்ந்தெடுத்த மக்கள்
பேறுபெற்றவர்கள்.

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது.
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள்
பேறுபெற்றவர்கள்.
13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார்,
ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார். பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார் :
தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில்
அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது :
அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
21 அவரில் நம் உள்ளம் மகிழ்கின்றது :
அவருடைய திருப்பெயரில் நம்பிக்கை வைக்கிறோம். பல்லவி

அல்லேலூயா

அரு 13 : 34

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன் :
நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல்
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீ சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய் :**
**ஆதலால் உன் தலைவனது மகிழ்ச்சியில் பங்குகொள்,**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 25 : 14-30

அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறிய உவமையாவது :

"பயணம் செல்ல இருந்த ஒருவன் தன் ஊழியரை அழைத்துத் தன்னுடைமையெல்லாம் அவர்களிடம் ஒப்படைத்தான் என்று வைத்துக் கொள்வோம். அவனவன் திறமைக்குத் தக்கவாறு ஒருவனுக்கு ஐந்து

தாலந்தும், வேறொருவனுக்கு இரண்டும், இன்னொருவனுக்கு ஒன்றுமாகக் கொடுத்துப் பயணம் சென்றான். ஐந்து தாலந்து பெற்றவன் உடனே சென்று அவற்றைப் பயன்படுத்தி இன்னும் ஐந்து சம்பாதித்தான். அப்படியே, இரண்டு பெற்றவனும் மேலும் இரண்டு சம்பாதித்தான். ஒன்று பெற்றவனோ சென்று மண்ணைத் தோண்டித் தலைவனுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.

நெடுங் காலத்திற்குப் பின்னர், அவ்வூழியரின் தலைவன் திரும்பி வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டான்.

ஐந்து தாலந்து பெற்றவன் அணுகி, மேலும் ஐந்து தாலந்து கொண்டுவந்து, 'ஐயா, நீர் என்னிடம் ஐந்து தாலந்து ஒப்படைத்தீர். இதோ! இன்னும் ஐந்து தாலந்து சம்பாதித்துள்ளேன்' என்றான். அதற்குத் தலைவன், 'நன்று, நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய்; ஆதலால் உன்னைப் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன். உன் தலைவனது மகிழ்ச்சியில் சேர்ந்துகொள்' என்றான்.

இரண்டு தாலந்து பெற்றவனும் வந்து, 'ஐயா, நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ! மேலும் இரண்டு தாலந்து சம்பாதித்துள்ளேன்' என்றான். அதற்குத் தலைவன், 'நன்று, நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய்: ஆதலால் உன்னைப் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன். உன் தலைவனது மகிழ்ச்சியில் சேர்ந்துகொள்' என்றான்.

ஒரு தாலந்து பெற்றவனோ வந்து, 'ஐயா, உம்மை எனக்குத் தெரியும். நீர் கடுமையானவர்; விதைக்காத இடத்தில் அறுப்பவர்; தூவாத இடத்தில் சேர்ப்பவர். ஆகவே, உமக்கு அஞ்சி, உம் தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ! உம்முடையது' என்று கொடுத்தான்.

அதற்குத் தலைவன், 'கெட்ட ஊழியனே, சோம்பேறியே, நான் விதைக்காத இடத்தில் அறுப்பவன், தூவாத இடத்தில் சேர்ப்பவன் என்று உனக்குத் தெரியுமே. என் பணத்தை நீ வட்டிக்காரரிடம் கொடுத்திருக்க வேண்டும். நான் வந்து என்னுடையதை வட்டியோடு பெற்றிருப்பேன். எனவே, இவனிடமிருந்து தாலந்தைப் பிடுங்கி, பத்துத் தாலந்து உடையவனுக்குக் கொடுங்கள். ஏனெனில், உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும். அவனும் நிறைவு பெறுவான். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற ஊழியனை வெளி இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்' என்றான்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# இருபத்திரண்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஆண்டவருடைய வார்த்தை எனக்கு நிந்தையாயிற்று.

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 20 : 7-9

ஆண்டவரே, நீர் என்னை மயக்கிவிட்டீர், நானும் மயங்கிப் போனேன்; நீர் என்னைவிட வல்லமை மிக்கவர், ஆகவே நீர் என்னை மேற்கொண்டு விட்டீர்; நாள் முழுவதும் நகைப்புக்குள்ளானேன்; என்னை எல்லாரும் ஏளனம் செய்கிறார்கள். ஏனெனில் நான் பேசும் போதெல்லாம் உரக்கக் கத்துகிறேன்; "கொடுமை! அழிவு!" என்றுதான் கூவி அறிவிக்கிறேன்; ஆண்டவருடைய வார்த்தை நாள் முழுவதும் எனக்கே நிந்தையாகவும் நகைப்பாகவும் ஆயிற்று.

"அவரைப்பற்றிக் குறிப்பிடமாட்டேன், அவர்பேரால் இனி பேசவும் மாட்டேன்" என்பேனாகில், என் எலும்புகள் எரியும் நெருப்பால் பற்றி எரிவதுபோல் இருக்கிறது. அதனை அடக்கிவைத்து, அடக்கிவைத்துச் சோர்ந்துபோனேன், ஆனால் அதை அடக்கிவைக்க முடியவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 62 : 1, 2-3, 4-5, 7-8 (பல்லவி : 1b)

பல்லவி : ஆண்டவரே, என் இறைவா, என் உள்ளம்
உம்மீது வேட்கைக் கொண்டுள்ளது.

1 இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன்.
நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கி இருப்பதுபோல்,
என் உள்ளம் உம்மீது வேட்கைக்கொண்டுள்ளது.
என் உடலும் உம்மை ஆசிக்கிறது. பல்லவி

2 உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன்.
உமது வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.
3 வாழ்க்கையை விட உமது அருள் எவ்வளவோ மேலானது,
என் நாவும் உம்மைப் புகழ்ந்தேத்தும். பல்லவி

4 இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன்,
உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.
5 செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் என் உள்ளம் நிறைவுபெறும்;
என் வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும் :
என் நாவில் புகழ்ச்சி எழும். பல்லவி

7 ஏனெனில், நீர் எனக்கு உதவியுள்ளீர்,
உம் சிறகுகளின் நிழலில் நான் அக்களிக்கின்றேன்.
8 என் ஆன்மா உறுதியாக உம்மைப் பற்றிக்கொண்டது.
உமது வலக்கரம் எனக்கு ஆதரவாயுள்ளது. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் உடலைக் கடவுளுக்கு உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *12: 1-2*

சகோதரர்களே! கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன்: உங்கள் உடலைக் கடவுளுக்கு உகந்த பரிசுத்த பலியாகவும் உயிருள்ள பலியாகவும் ஒப்புக்கொடுங்கள். இதுவே நீங்கள் செலுத்த வேண்டிய ஆன்மீக வழிபாடு. இவ்வுலகம் காட்டும் மாதிரியைப் பின்பற்றாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று, முற்றிலும் மாற்றம் அடைவதாக. இவ்விதம் கடவுளின் திருவுளம் எது என உய்த்துணர்வீர்கள். அப்போது எது நல்லது, எது உகந்தது, எது தலை சிறந்தது என உங்களுக்கு விளங்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* எபே. 1 : 17-18 காண்

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்து கொள்ளும்படி, நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுப்பானாக.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16 : 21-27

அக்காலத்தில் :

யேசு தாம் எருசலேமுக்குச் சென்று மூப்பர், மறைநூல் அறிஞர், தலைமைக் குருக்கள் இவர்கள் கையால் பாடுகள் பல படவும், கொலையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழவும் வேண்டும் எனத் தம் சீடருக்கு விளக்கத் தொடங்கினார்.

இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து, "ஆண்டவரே, ஐயோ ! இது வேண்டாம். இஃது உமக்கு நேராது" என்று அவரைக் கடிந்து கொண்டார். அவர் திரும்பி இராயப்பரிடம், "போ பின்னாலே சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய். ஏனெனில், உன் கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல, மனிதனுடைய கருத்துக்களே" என்றார்.

பின் யேசு தம் சீடரை நோக்கி, 'என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டுத் தன் உயிரை இழப்பவனே அதைக் கண்டடைவான். ஒருவன் உலகமெல்லாம் தன தாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவிற்குக் கேடு விளைந்தால், அவனுக்கு வரும் பயனென்ன ? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுப்பான் ?

மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் தம் வானதூதரோடு வரப்போகிறார். அப்பொழுது ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயலுக்கு ஏற்பக் கைம்மாறு அளிப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நான் உங்களுக்குச் சொல்லும் வார்த்தைகளில் ஒன்றையும் கூட்ட வேண்டாம். ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகுவீர்கள்.**

**உப ஆகமத்திலிருந்து வாசகம்** *4 : 1-2, 6-8*

இப்பொழுது, ஓ இஸ்ராயேலரே! நீங்கள் பிழைத்திருக்கும் படிக்கும், உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கவிருக்கிற நாட்டிலே நீங்கள் புகுந்து அதை உரிமையாக்கிக் கொள்ளவும், உங்களுக்கு நான் சொல்லி வருகிற கட்டளைகளையும் நீதிகளையும் கூர்ந்து கேளுங்கள். நான் உங்களுக்குச் சொல்லும் வார்த்தைகளில் ஒன்றையும் கூட்டவும் குறைக்கவும் வேண்டாம். நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் கடவுளாகிய ஆண்டவருடைய கட்டளைகளை நீங்கள் கைக்கொண்டு ஒழுகக்கடவீர்கள். நீங்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதோடல்லாமல் அவற்றின்படி நடந்துகொள்ளவும் வேண்டும்.

உங்கள் ஞானமும் விவேகமும் மக்களின்முன்பாக எவ்வாறு விளங்கும்? அவர்கள் உங்களுடைய எல்லாச் சட்டங்களையும்பற்றி நீங்கள் சொல்லக் கேட்டு: ஆ! இவர்கள் பெரிய இனத்தவர்; ஞானிகளும் அறிவாளிகளுமாய் இருக்கிறார்கள் என்று சொன்னால் மட்டுமேயன்றோ? நம் கடவுளாகிய ஆண்டவரை நாம் மன்றாடுகிறபோதெல்லாம் அவர் நமது அண்டையில்தானே இருக்கிறார். ஆ! நம் கடவுளுக்கும் நமக்கும் இடையே இருக்கிற நெருங்கிய உறவு, வேறு எந்தப் புகழ்பெற்ற இனத்தவருக்கும் அவர்களுடைய தேவர்களுக்கும் இடையே உண்டோ? இல்லை. உள்ளபடியே இந்நாளில் நான் உங்களுக்கு விவரித்துத் தெளிவிக்கும் சடங்கு முறைகளையும், நீதியுள்ள கட்டளைகளையும், நியாயச் சட்டங்களையும் பெற்றிருக்கிற வேறு சிறந்த மக்கள் யார்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 14 : 2-3ab, 3cd-4ab, 5 (பல்லவி : 1a)

பல்லவி : **ஆண்டவரே, உம் இல்லத்தில் தங்கி வாழ்வோர் யார்?**

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன்,
இதயத்தில் நேரியவை நினைப்பவன்.
3 நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன். பல்லவி

3 அயலானுக்குத் தீமை செய்யாதவன்,
பிறரைப் பழித்துரைக்காதவன் :
4 தீயோரை இழிவாகக் கருதுபவன்,
ஆண்டவருக்கு அஞ்சுவோரை, உயர்வாக மதிப்பவன் : பல்லவி

5 தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன் :
மாசற்றவர்களுக்கு எதிராகக் கைக்கூலி வாங்காதவன்,
இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்திடுவான். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறைவார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 17-18, 21b-22, 27*

என் அன்புச் சகோதரர்களே :

நன்மையான எக்கொடையும், நிறைவான எவ்வரமும், விண்ணினின்றே வருகின்றன. ஒளியெல்லாம் படைத்த தந்தையே அவற்றிற்குப் பிறப்பிடம். அவரிடம் எவ்வகை மாற்றமும் இல்லை; மாறிமாறி நிழல் விழச் செய்யும் ஒளியன்று அவர். தம் படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு, உண்மையை அறிவிக்கும் வாக்கினால் நம்மை ஈன்றெடுத்தார். தாமே விரும்பியபடி இங்ஙனம் செய்தார்.

உங்கள் உள்ளத்திலே ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்க வல்லது. இறை வார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள். அதைக் கேட்பதோடுமட்டும் நின்றுவிடாதீர்கள். அப்படிச் செய்வது உங்களையே ஏமாற்றிக்கொள்வதாகும்.

தந்தையாகிய கடவுள் முன்னிலையில் புனிதமும் மாசற்றதுமான தொண்டு எதுவெனில், வேதனையுறும் அனாதைகள், கைம்பெண்கள் இவர்களை ஆதரிப்பதும், உலகத்தால் மாசுபடாமல் தன்னைக் காத்துக் கொள்வதுமே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

யாக. 1 : 18

*அல்லேலூயா*

அல்லேலூயா. தம் படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு,
உண்மையை அறிவிக்கும் வாக்கினால்
பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளின் கட்டளையைக் கைவிட்டு, மனிதரின் பரம்பரையைக் கடைப்பிடிக்கிறீர்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
7 : 1-8, 14-15, 21-23

அக்காலத்தில் :

பரிசேயரும், எருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞர் சிலரும் யேசுவிடம் வந்து கூடினர். அவர்கள் அவருடைய சீடரில் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதைக் கண்டனர். - பரிசேயரும் எல்லா யூதரும் முன்னோரின் பரம்பரையைக் கடைப்பிடித்துக் கைகளைத் தேய்த்துக் கழுவாமல் உண்பதில்லை. பொது இடங்களிலிருந்து வரும்பொழுது, குளிக்காமல் உண்பதில்லை. பரம்பரையின்படி கடைப்பிடிக்க வேண்டியவை இன்னும் பல இருந்தன. அதாவது, கிண்ணங்கள், பாத்திரங்கள், செம்புகளைக் கழுவுவது முதலியன.

எனவே, "முன்னோர் பரம்பரையின்படி உம் சீடர் நடவாமல் தீட்டான கைகளால் உண்பதேன்?" என்று பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரைக் கேட்டனர்.

அதற்கு அவர்,"வெளிவேடக்காரராகிய உங்களைப்பற்றி இசையாஸ் பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார் : 'இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர், அவர்கள் உள்ளமோ என்னைவிட்டுத் தொலைவில் இருக்கின்றது. அவர்கள் என்னை வழிபடுவது வீண், ஏனெனில், அவர்கள் போதிப்பது மனிதர் கற்பனை' என்று அவர் எழுதியுள்ளார். கடவுளுடைய கட்டளைகளைக் கைவிட்டு மனிதர்களுடைய பரம்பரையைக் கடைப்பிடிக்கிறீர்கள்" என்றார்.

மீண்டும் அவர் கூட்டத்தைத் தம்மிடம் அழைத்து, "அனைவரும் நான் சொல்வதைக் கேட்டு உணர்ந்துகொள்ளுங்கள். புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே சென்று, அவனை மாசுபடுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதனுள்ளிருந்து வெளிவருவதே அவனை மாசு படுத்தும். ஏனெனில், மனிதர் உள்ளத்தினின்றே தீய எண்ணம், மோகம், களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், கபடு, கெட்ட நடத்தை, பொறாமை, பழிச்சொல், செருக்கு, மதிகேடு ஆகியவை வெளிவரும். இத் தீயவை யாவும் உள்ளத்திலிருந்து வந்து மனிதனை மாசுபடுத்தும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***உன்னைத் தாழ்த்து : கடவுள்முன் இரக்கம் காண்பாய்.***

**சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்** *3 : 19-21, 30-31*

மகனே, உன் செயல்களைச் சாந்த குணத்தோடு செய்வாயாகில், மனிதரால் அதிக மேன்மையாய் நேசிக்கப்படுவாய். எவ்வளவுக்கு நீ பெரியவனாய் இருக்கிறாயோ அவ்வளவுக்கு அனைத்திலும் உன்னைத் தாழ்த்து. அப்போது கடவுள் முன் இரக்கத்தைக் காண்பாய். ஏனென்றால், கடவுள் ஒருவரே மிக வல்லமையுள்ளவர். அவர் தாழ்ச்சியுள்ளவர்களால் மாட்சிப் படுத்தப்படுகிறார்.

அகந்தையுள்ளவர்களுடைய கூட்டத்திற்குத் திருத்தம் உண்டாகாது. ஏனென்றால், பாவம் ஒரு செடிபோல அவர்கள் அறியாமலே அவர்களிடம் வேரூன்றும். ஞானியின் நடத்தை அவன் ஞானத்தால் அறியப்படும். நற்குணமுள்ளவனின் செவி ஞானம் உணர்த்துவதை வெகு ஆவலோடு கேட்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 67 : 3-4ac, 5-6ab, 9-10* (பல்லவி : 10b காண்)

பல்லவி : இறைவா ஏழைக்கென்று உம் அருளால்
உறைவிடம் ஒன்றைத் தயார் செய்தீர்.

3 நீதிமான்களோ மகிழ்வுறுவர், கடவுள் திருமுன் அக்களிப்பர் :
மகிழ்ச்சியால் இன்பம் கொள்வர்.
4 இறைவனுக்கு இன்னிசை பாடுங்கள், அவரது பெயருக்குப் புகழ் பாடுங்கள்.
ஆண்டவர் என்பது அவரது திருப்பெயர். பல்லவி

5 தம் புனித இல்லத்தில் உறையும் இறைவன் அனாதைகளுக்குத் தந்தை,
விதவைகளுக்குப் பாதுகாவல்.
6 கைவிடப்பட்டவர்க்குக் கடவுள் இல்லமொன்றை ஆயத்தப்படுத்துகிறார்,
சிறைப்பட்டவர்களை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார். பல்லவி

9 இறைவனே, உம் உரிமையான நாட்டின்மீது
நிரம்ப மழை பொழியச் செய்தீர் :
சாரமற்றுப்போன நிலத்தை மீண்டும் வளமாக்கினீர்.
10 உம்முடைய மந்தையான மக்கள் அதில் குடியிருந்தனர்.
இறைவனே, உமது அருளால் நீர் ஏழைகளுக்கென்று
அதைத் தயார் செய்தீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*நீங்கள் வந்தடைந்திருப்பதோ சீயோன் மலை,
உயிருள்ள கடவுளின் நகர்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 12 : 18-19, 22-24a

சகோதரர்களே :

நீங்கள் வந்தடைந்திருப்பது சீனாய் மலையன்று : அம்மலையில் எரிகின்ற நெருப்பும், இருண்ட மேகமும் காரிருளும் சூழ்ந்திருந்தன : சுழல் காற்று வீசியது ; எக்காளம் முழங்கியது ; பேசும் குரலொன்று ஒலித்தது ; அதைக் கேட்டு நின்றவர்கள், அக்குரல் அதற்குமேல் பேச வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

நீங்கள் வந்தடைந்திருப்பதோ சீயோன் மலை, உயிருள்ள கடவுளின் நகர், வானக எருசலேம். அங்கே எண்ணற்ற வானதூதர் சூழ்ந்துள்ளனர். வானகத்தில் பெயர் எழுதியுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை அங்கே விழாக் கூட்டமெனக் கூடியுள்ளது. நிறைவுபெற்ற நீதிமான்களின் ஆவிகளோடு சேர்ந்து அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளரான யேசுவின் முன்னிலையிலும் நிற்கின்றீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 11 : 29ab

அல்லேலூயா. உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு
என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் :
ஏனெனில், நான் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

# நற்செய்தி வாசகம்

*தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்,*
*தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14 : 1, 7-14

அக்காலத்தில்

ஓய்வுநாளில் பரிசேயரின் தலைவனொருவன் வீட்டில் அவர் உணவருந்தச் சென்றபோது, அவர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தனர்.

அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதலிடங்களைத் தேர்ந்துகொள்ளுவதைக் கண்டு, அவர்களுக்கு உவமையாகக் கூறினதாவது: "உன்னை ஒருவன் மண விருந்திற்கு அழைக்கும்போது, நீ முதலிடத்தில் அமராதே. ஏனெனில், உன்னைவிட மதிப்பிற்குரிய ஒருவரை அவன் அழைத்திருக்கலாம். உன்னையும் அவரையும் அழைத்தவன் வந்து உன்னை நோக்கி, 'இவருக்கு உன் இடத்தைவிடு' என்பான். அப்போது நீ வெட்கிக் கடைசி இடத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும்.

மாருக, உன்னை ஒருவன் அழைக்கும்போது கடைசி இடத்தில் போய் அமர்ந்துகொள். அப்படிச் செய்தால் உன்னை அழைத்தவன் வந்து உன்னை நோக்கி, 'நண்ப, மேல் இடத்திற்குப் போம்' என்று சொல்வான். அப்பொழுது உன்னுடன் பந்தியிலிருப்பவர் முன்பாக, நீ பெருமை அடைவாய். ஏனெனில், தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப் பெறுவான்."

பின் தம்மை அழைத்திருந்தவனை நோக்கி, "நீ பகல் உணவிற்காவது, இரா உணவிற்காவது உன் நண்பர்களையோ, சகோதரர்களையோ, உறவினர்களையோ, செல்வரான அண்டை வீட்டாரையோ அழைக்காதே. அவர்களும் உன்னைத் திரும்ப அழைக்கலாம். அப்போது உனக்குக் கைம்மாறு கிடைத்துவிடும். மாருக, நீ விருந்து நடத்தும்போது ஏழைகள், ஊனர்கள், முடவர்கள், குருடர்கள் ஆகியோரைக் கூப்பிடு.

அப்போது நீ பேறுபெற்றவன். ஏனெனில், உனக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *4 : 13-17*

சகோதரர்களே, இறந்தோரைப்பற்றி உங்களுக்கு ஐயமிருத்தலாகாது. நம்பிக்கையற்ற ஏனையோரைப்போல் நீங்களும் வருந்தலாகாது. யேசு இறந்தபின் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவசிக்கின்றோம் அல்லவா ? அப்படியானால், யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்.

ஆண்டவருடைய வார்த்தையில் ஊன்றி, நாங்கள் உங்களுக்குச் சொல்லுவதாவது : உயிருடனிருக்கும் நாம், ஆண்டவரின் வருகை வரையில் உயிரோடு எஞ்சி நிற்கும் நாம், இறந்தோருக்கு முந்திக்கொள்ள மாட்டோம். அதிதூதரின் குரலொலியும் கடவுளின் எக்காளமும் அடையாளமாக முழங்க, ஆண்டவர் தாமே வானிலிருந்து இறங்கி வருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் இறந்தோர், முதலில் உயிர்த்தெழுவர். அதன் பின்னரே உயிரோடு எஞ்சி நிற்கும் நாம் அவர்களோடுகூட ஒன்றாய் மேகங்கள்மீது தூக்கிச் செல்லப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளப் போவோம். போய், ஆண்டவரோடு எப்போதும் இருப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். *95 : 1 & 3, 4-5, 11-12, 13* (பல்லவி : *13ab*)

பல்லவி : **பூவுலகை ஆட்சிசெய்ய ஆண்டவர் வருகின்றார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.
மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
3 புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்.
மக்கள் அனைவரிடையிலும் அவர் தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.
பல்லவி

4 ஏனெனில், மாண்பு மிக்கவர் ஆண்டவர், மிகு புகழ்ச்சிக்குரியவர் :
தெய்வங்கள் அனைத்தையும் விட அச்சத்துக்குரியவர்.
5 ஏனெனில், புற இனத்தார் தெய்வங்களெல்லாம் வெறுமையே :
ஆண்டவரோ வானங்களைப் படைத்தவர். பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும் :
கடலும் அதில் வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும்.
12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும்.
காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது
ஆண்டவர் முன் மகிழ்ச்சியுறும். பல்லவி

13 ஏனெனில், அவர் வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார்.
மக்களை அவர் தம் சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

## 2-ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை உங்களுக்கு அறிவித்தேன்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1-5

சகோதரர்களே, கடவுளின் மறைபொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது சிறந்த சொல் வன்மையையோ, ஞானத்தையோ காட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில், நான் உங்களிடையே இருந்தபோது யேசு கிறிஸ்துவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையுண்ட அவரைத் தவிர வேறெதையும் அறிய விரும்பவில்லை. உங்களோடு இருந்தபோது வலுவற்றவனாய் மிகுந்த அச்ச நடுக்கத்தோடு இருந்தேன். நான் சொன்னதும் அறிவித்ததும் மனித ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை ; ஆவியானவரும், அவரது வல்லமையும் தந்த அத்தாட்சியின்மீது அமைந்தன. உங்கள் விசுவாசம் மனிதர்களின் ஞானத்தில் ஊன்றியிராமல் கடவுளின் வல்லமையிலே ஊன்றியிருக்க வேண்டுமென்றே இவ்வாறாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 97, 98, 99, 100, 101, 102 (பல்லவி : 97a)

பல்லவி : **ஆண்டவரே, நான் உமது சட்டத்தை எவ்வளவோ நேசிக்கிறேன்.**

97 **ஆண்டவரே, நான் உமது சட்டத்தை எவ்வளவோ நேசிக்கிறேன் :**
**நாள் முழுவதும் அது என் தியானமாய் உள்ளது.** பல்லவி

98 **என் எதிரிகளைவிட என்னை அறிவுள்ளவன் ஆக்கியது உமது கற்பனை :**
**ஏனெனில், என்றென்றும் அது என்னோடு உள்ளது.** பல்லவி

99 **எனக்கு அறிவு புகட்டுவோர் அனைவரினும்**
**நான் அறிவாளியாயிருக்கிறேன் :**
**ஏனென்றால் உம் ஆணைகளையே நான் தியானிக்கிறேன்.** பல்லவி

100 **முதியோர்களைவிட நான் அறிவு பெற்றேன் ;**
**ஏனெனில், உம் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறேன்.** பல்லவி

101 **தீய வழி எதிலும் அடி எடுத்து வைக்காதபடி**
**நான் பார்த்துக் கொள்கிறேன் :**
**உம் வார்த்தையின்படி நடப்பதே என் கவலை.** பல்லவி

102 **உம் விதிகளை விட்டுச் சிறிதேனும் தவறுவதில்லை :**
**ஏனெனில் நீர் எனக்கு அறிவு புகட்டினீர்.** பல்லவி

அல்லேலூயா லூக் 4 : 18

**அல்லேலூயா.** **ஆண்டவரின் ஆவி என்மேலே :**
**எளியோர்க்கு நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார்.**
**அல்லேலூயா.**

# நற்செய்தி வாசகம்

எளியோர்க்கு நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார்.
இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில்
ஏற்கப்படுவதில்லை.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

4 : 16-30

அக்காலத்தில் :

யேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்தார். வழக்கப்படி ஓய்வுநாளன்று செபக்கூடத்திற்கு வந்து வாசிக்க எழுந்தார். இசையாஸ் எழுதிய இறைவாக்குகளின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர்.

அதை விரித்ததும் பின்வரும் பகுதியைக் கண்டார். 'ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்.' பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். செபக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே நோக்கிய வண்ணமாயிருந்தன.

அப்போது அவர், "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார். யாவரும் அவரைப் பாராட்டி, அவர் வாயினின்று எழுந்த அருள்மொழிகளை வியந்து, "இவர் சூசையின் மகனன்றோ?" என்றனர்.

பின் அவர் அவர்களை நோக்கி, "'மருத்துவனே, உன்னையே குணமாக்கிக்கொள்' என்ற பழமொழியை எனக்கே சொல்லிக் காட்டி, 'கப்பர்நகூம் ஊரில் நீர் செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம், உம் சொந்த ஊராகிய இங்கேயும் செய்யும்' எனக் கண்டிப்பாக நீங்கள் கூறுவீர்கள்" என்றார்.

மேலும், அவர், "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்கப்படுவதில்லை. உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாசின் காலத்தில் மூன்று ஆண்டுகள் ஆறு மாதங்களாக வானம் வறண்டு நாடெங்கும் பஞ்சம் உண்டானபோது, இஸ்ராயேல் நாட்டில் கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் சீதோன் நாட்டின் சரெப்தா ஊர்க் கைம்பெண் ஒருத்தியிடமன்றி வேறு எவரிடமும் எலியாஸ் அனுப்பப்படவில்லை. இறைவாக்கினரான எலிசேயுவின் காலத்திலும் இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர்

இருந்தனர். ஆயினும் சிரியா நாட்டு நாமானைத் தவிர வேறு எவரும் குணமாக்கப்படவில்லை" என்றார்.

இவற்றைக் கேட்டுச் செபக்கூடத்தில் இருந்த அனைவரும் வெகுண்டெழுந்து, அவரை ஊருக்கு வெளியே தள்ளி, அவ்வூர் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடக் கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே நடந்து தம் வழியே போனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## செவ்வாய்

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

*தம்மோடு ஒன்றித்து வாழும்படி அவர் நமக்காக இறந்தார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6, 9-11

சகோதரர்களே, காலங்கள் நேரங்களைப்பற்றி உங்களுக்கு எழுதத் தேவையில்லை. திருடன் நள்ளிரவில் வருவதுபோல் ஆண்டவருடைய நாள் வரும் என்பது உங்களுக்குத் திண்ணமாய்த் தெரியும்.

'எல்லாம் அமைதி, ஆபத்து ஒன்றுமில்லை' என்று மக்கள் கூறும்போதே, கர்ப்பவதிகளுக்கு வேதனை ஏற்படுவதைப்போல் திடீரென அவர்களுக்கு அழிவு வரும். யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆனால், சகோதரர்களே, நீங்கள் இருளில் நடப்பவர்களல்ல. திடீரெனத் தாக்கும் திருடனைப்போல் அந்த நாள் உங்களுக்கு இராது. நீங்கள் அனைவரும் ஒளியின் மக்கள், பகலின் மக்கள். நாம் இரவுக்கோ, இருளுக்கோ உரியவரல்ல. எனவே, மற்றவர்களைப்போல் நாமும் தூங்கலாகாது, விழித்திருக்கவேண்டும் ; மட்டு மிதத்தோடு இருத்தல் வேண்டும்.

ஏனெனில், கடவுள் நம்மைத் தம் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை ; நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தினார். நாம் விழித்திருந்தாலும், சாவில் உறங்கினாலும் தம்மோடு ஒன்றித்து வாழும்படி இவரே நமக்காக இறந்தார். ஆகையால் நீங்கள் இப்போது செய்து வருவதுபோலவே, ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ளுங்கள் ; ஞான வளர்ச்சி அடைய ஒருவர்க்கொருவர் துணை செய்யுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 26 : 1, 4, 13-14 (பல்லவி : 13)*

பல்லவி : வாழ்வோருடைய நாட்டில், ஆண்டவருடைய நலன்களைக் காண்பேன் என நான் நம்புகின்றேன்.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு :
நான் யாருக்கு அஞ்சவேண்டும்?
ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம்,
யாருக்கு நான் நடுங்கவேண்டும்? பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே :
நான் விரும்புவதும் ஒன்றே :
ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும்
குடியிருக்கவேண்டும் ;
ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும் ;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும். பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக்
காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு :
உன் உள்ளம் திடம் கொள்வதாக,
ஆண்டவரை எதிர்பார்த்திரு. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**மனித இயல்பால் மட்டும் இயங்குபவன்**
**கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை;**
**அந்த ஆவியைப் பெற்றுக்கொண்டவன் எல்லாவற்றையும்**
**மதித்துணர்கிறான்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 10b-16

சகோதரர்களே :

தேவ ஆவி எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார். கடவுளுடைய உள்ளத்தின் ஆழத்தையும் காண்கிறார். மனிதனின் உள்ளத்தில் இருப்பதை மனிதனுக்குள் இருக்கும் அவன் ஆவியேயன்றி வேறு எவரும் அறியார்.

அவ்வாறே கடவுளின் உள்ளத்தில் இருப்பதைக் கடவுளின் ஆவியேயன்றி வேறெவரும் அறியார். நாம் பெற்றுக்கொண்டது இந்த உலகத்தின் மனப்பான்மையன்று, கடவுளிடமிருந்து வரும் ஆவியே. கடவுள் நமக்கு அருளியவற்றை அந்த ஆவியினால் உணரக்கூடும். அவற்றை நாங்கள் மனித ஞானம் கற்பிக்கும் சொற்களால் பேசாமல், ஆவியானவர் கற்பிக்கும் சொற்களால் பேசுகிறோம். இங்ஙனம், தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு ஆவிக்குரியவற்றை விளக்கியுரைக்கிறோம்.

மனித இயல்பால் மட்டும் இயங்குபவன் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. அவை அவனுக்கு மடமையாகத் தோன்றும். அவற்றை அவனால் அறியவும் இயலாது. ஏனெனில், தேவ ஆவியைக்கொண்டுதான் அவற்றை மதித்துணர முடியும். அந்த ஆவியைப் பெற்றுக்கொண்டவன் எல்லாவற்றையும் மதித்துணர்கிறான். அவனையோ, ஆவியைப் பெறாத எவனும் மதித்துணர முடியாது. 'ஆண்டவர் மனத்தை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரை தரக்கூடியவர் யார்? ஆனால் நாம் கிறிஸ்துவின் மனத்தைக்கொண்டுள்ளோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144 : 8-9, 10-11, 12-13abc, 13cd-14 (பல்லவி 17 a)*

பல்லவி : **ஆண்டவர் தம் வழிகளில் எல்லாம் நீதியுள்ளவர்.**

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்.
சினங்கொள்ளத் தாமதிப்பவர்.
அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர் :
தம் படைப்புகள் அனைத்தின் மீதும் இரக்கம்காட்டுபவர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக.
உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

12 இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்து கொள்வர்.
உமது மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்து கொள்வர்.
13 உமது அரசு ஊழி ஊழியாக உள்ள அரசு :
உம்முடைய ஆட்சி தலைமுறை தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

ஆண்டவர் தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவராயிருக்கிறார்.
தம் செயல்களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார் :
தாழ்த்தப்பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார். பல்லவி

அல்லேலூயா லூக். 7 : 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார் : கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கின்றார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4 : 31-37

அக்காலத்தில் :

யேசு கலிலேயா நாட்டுக் கப்பர்நகூம் ஊருக்கு வந்து, அங்கே மக்களுக்கு ஓய்வு நாளில் போதித்து வந்தார். அவர் அதிகாரத் தொனியோடே பேசினதால் அவருடைய போதனையைக் குறித்து மலைத்துப் போயினர்.

அப்போது, செபக்கூடத்தில் அசுத்த பேய் பிடித்த ஒருவன் இருந்தான். அவன், "ஐயோ ! நாசரேத்தூர் யேசுவே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர் ? எங்களைத் தொலைக்க வந்தீரோ ? நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர்" என்று உரக்கக் கத்தினான்.

யேசுவோ, "பேசாதே, இவனை விட்டுப் போ" என்று அதட்டினார். அப்பொழுது, அப்பேய் அவனை அவர்கள் நடுவே வீழ்த்தி, அவனுக்கு ஒரு தீங்குமிழைக்காமல் அவனை விட்டு அகன்றது.

அதனால் திகில் எல்லாரையும் ஆட்கொள்ள, "இவர் வார்த்தை எத்தகையதோ ? அதிகாரத்தோடும் வல்லமையோடும் இவர் அசுத்த பேய்களுக்கும் கட்டளையிடுகிறார், அவை போய்விடுகின்றனவே !" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறமெல்லாம் பரவியது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உண்மை வார்த்தை உலகம் முழுவதும் பரவியதுபோல் உங்களையும் வந்தடைந்தது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்தின் தொடக்கம் *1 : 1-8*

கிறிஸ்துவுக்குள் வாழ்வோரும் விசுவாசமுள்ள சகோதரர்களுமான கொலோசே நகரத்து இறைமக்களுக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனான சின்னப்பனும், சகோதரர் தீமோத்தேயுவும் எழுதுவது: நம் தந்தையாகிய கடவுளிடமிருந்து உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக!

உங்களுக்காகச் செபிக்கும்போது நம் ஆண்டவராம் யேசு கிறிஸ்துவின் தந்தையாகிய கடவுளுக்கு என்றும் நன்றி கூறுகிறோம். ஏனெனில், வானகத்தில் உங்களுக்கென வைத்திருக்கும் நன்மைகளில் நீங்கள் நம்பிக்கை கொண்டதால் கிறிஸ்து யேசுவில் உங்களுக்கு எத்தகைய விசுவாசம் உண்டென்றும், இறைமக்கள் அனைவரிடமும் நீங்கள் எவ்வித அன்பு காட்டுகிறீர்களென்றும் கேள்வியுற்றோம். நற்செய்தியாகிய உண்மை வார்த்தையை நீங்கள் முன்பு கேட்டபோது இந்நம்பிக்கை உங்களுக்கு உண்டாயிற்று. இந்த நற்செய்தி உலகம் முழுவதும் பரவிப் பயனளித்து வளர்ந்து வருகிறது. அது உங்களையும் வந்தடைந்தது. கடவுளுடைய அருளைப்பற்றிய அச்செய்தியை நீங்கள் கேட்டு, அதன் உண்மையான பொருளை உணர்ந்த நாள் முதல் உங்களிடையிலும் வளர்ந்து வருகிறது. எம் அன்புள்ள உடன் ஊழியரான எப்பாப்பிரா இந்த அருளைப்பற்றி உங்களுக்குக் கற்பித்தார். இவர் எங்கள் சார்பில் பணி செய்பவர், கிறிஸ்துவின் விசுவாசமுள்ள பணியாளர். தேவ ஆவியினால் உங்களிடம் உண்டான அன்பைப்பற்றி அவர்தான் எங்களுக்கு அறிவித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 51 : 8, 9, (பல்லவி : 8b காண்)

பல்லவி : **ஆண்டவரே, உமது இரக்கத்தை என்றென்றும் நம்பியுள்ளேன்.**

8 நானோ செழித்து வளரும் ஒலிவ மரத்தைப்போல்
இறைவன் இல்லத்தில் விளங்குகிறேன்.
கடவுளுடைய இரக்கத்தை என்றென்றும் நம்பியுள்ளேன். பல்லவி

9 இப்படி எனக்குச் செய்ததால் உம்மை என்றென்றும் போற்றுவேன் :
உமது திருப்பெயர் நன்மையானது.
அதை உம் புனிதர் முன்னிலையில் சாற்றுவேன். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நாங்கள் கடவுளோடு உழைப்பவர்கள்; நீங்கள் கடவுள் பண்படுத்தும் பண்ணை, கடவுள் எழுப்பும் கட்டடம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 3 : 1-9

சகோதரர்களே, ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களிடம் பேசுவது போல் உங்களிடம் பேச முடியவில்லை. ஊனியல்பு உள்ளவர்கள் போலவும், கிறிஸ்தவ வாழ்க்கையில் குழந்தைகள் போலவும் உங்களைப் பாவித்துப் பேசவேண்டியதாயிற்று. உங்களுக்கு நான் ஊட்டியது பால் உணவே, கெட்டியான உணவன்று. அதை உண்ண முடியாதிருந்தீர்கள். இப்போதுங்கூட முடியாமல்தான் இருக்கிறீர்கள். ஏனெனில், இன்னும் ஊனியல்பு உள்ளவர்களாகவே இருக்கிறீர்கள். உங்களிடையே பொறாமையும் சண்டை சச்சரவும் இருக்கையில் நீங்கள் ஊனியல்பு உள்ளவர்கள்தானே. வெறும் மனித இயல்புக்கு ஏற்றவாறுதானே வாழ்கிறீர்கள்.

உங்களுள் ஒருவன், "நான் சின்னப்பரைச் சேர்ந்தவன்" எனவும், வேறொருவன், "நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்" எனவும் சொல்லும்போது நீங்கள் காட்டுவது வெறும் மனித இயல்பே அன்றோ? ஆகிலும் அப்பொல்லோ யார், சின்னப்பன் யார், உங்களுக்கு விசுவாசம் கொண்டுவந்த வெறும் பணியாளர்களே அல்லரோ! ஆண்டவர் அருளியவாறு அவனவன் பணியாற்றுகிறான். நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; ஆனால் விளையச் செய்தவர் கடவுள்தாமே. ஆதலின்

நடுகிறவனுக்கு என்ன பெருமை? நீர் பாய்ச்சுபவனுக்கு என்ன பெருமை? விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை எல்லாம். நடுகிறவனும் நீர் பாய்ச்சுபவனும் ஒன்றுதான். ஒவ்வொருவனும் தன் உழைப்புக்கேற்பத் தனக்குரிய கூலியைப் பெறுவான். ஏனெனில், நாங்கள் கடவுளோடு உழைப்பவர்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் பண்ணை, கடவுள் எழுப்பும் கட்டடம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 12-13, 14-15, 20-21 (பல்லவி : 12b)

பல்லவி : தமது உரிமைப் பொருளாக இறைவன்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது ;
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த
மக்கள் பேறுபெற்றவர்கள்.
13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார் :
ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார். பல்லவி

14 பூவில் வாழ்வோர் அனைவரையும்
அவர் தம் உறைவிடத்தினின்று நோக்குகிறார்.
15 அனைவருடைய நெஞ்சங்களையும் உருவாக்கின அவர்,
அவர்கள் செய்வதையெல்லாம் கவனிக்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது.
அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கின்றார்.
21 அவரில் நம் உள்ளம் மகிழ்கின்றது.
அவருடைய திருப்பெயரில் நம்பிக்கை வைக்கிறோம். பல்லவி

அல்லேலூயா

லூக். 4 : 18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும்
ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நான் மற்ற ஊர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவேண்டும்; இதற்காகவே அனுப்பப்பட்டேன்.*

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

4 : 38-44

அக்காலத்தில் :

யேசு செபக் கூடத்தைவிட்டு, சீமோன் வீட்டிற்கு வந்தார். சீமோனுடைய மாமியார் கடுங் காய்ச்சலால் துன்பப்பட்டுக்கொண்டிருந்ததால் அவளுக்காக அவரிடம் வேண்டினர். அவர் அவளருகில் நின்று காய்ச்சலைக் கடிந்துகொண்டார். காய்ச்சல் அவளை விட்டு அகல, அவள் உடனே எழுந்து அவர்களுக்குப் பணிவிடை புரிந்தாள்.

பொழுதுசாயும் வேளையில் யாவரும் தங்களிடையே இருந்த பற்பல பிணியாளரை அவரிடம் கொண்டுவந்தனர். ஒவ்வொருவர்மேலும் தம் கைகளை வைத்துக் குணமாக்கினார். பேய்கள், "நீரே கடவுளின் மகன்" என்று கூவிக்கொண்டு பலரிடமிருந்து வெளியேறின. அவர் மெசியா என்று அவை அறிந்திருந்ததால் யேசு அவற்றை அதட்டி, பேசவிடவில்லை.

பொழுது புலரவே, அவர் புறப்பட்டுத் தனிமையானதோர் இடத்திற்குச் சென்றார். திரளான மக்கள் அவரைத் தேடினர். அவரிடம் வந்ததும் தங்களை விட்டு அகலாதபடி அவரை நிறுத்தப் பார்த்தனர். அவரோ, "நான் மற்ற ஊர்களுக்கும் கடவுளுடைய அரசைப்பற்றிய நற்செய்தியை அறிவிக்கவேண்டும். இதற்காகவே அனுப்பப்பட்டேன்" என்று அவர்களிடம் கூறினார்.

அதன்படியே, கலிலேயாவின் செபக் கூடங்களில் தூது உரைத்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அவரே இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்து,
தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டுவந்து சேர்த்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 1 : 9-14

சகோதரர்களே :

நாங்கள் உங்களைப்பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாது செபிக்கிறோம். நீங்கள் முழு ஞானத்தையும் தேவ ஆவிக்கேற்ற அறிவுத்திறனையும் அடைந்து இறைவனுடைய திருவுள்ளத்தை உணரும் அறிவை நிறையப் பெறுமாறு மன்றாடுகிறோம். இவ்வாறு நீங்கள் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவர்களாய் இருக்கும்படி, அவருக்கு ஏற்ப வாழ்க்கை நடத்துவீர்கள்; எல்லா வகையான நற்செயல்களால் நற்பயன் விளைத்து கடவுளை அறியும் அறிவில் நீங்கள் மேன்மேலும் வளர்வீர்கள்; அவருடைய மாட்சிமை மிக்க ஆற்றலுக்கேற்ப எந்நிலையிலும் பொறுமையும் மன உறுதியும் கொண்டிருக்கும்படி முழு வல்லமையாலும் வலுப்படுத்தப் பெறுவீர்கள்; பரம தந்தை ஒளியினிடையே தம் மக்களுக்குத் தந்த உரிமைப்பேற்றில் பங்கு பெற நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கியதற்காக அவருக்கு மகிழ்வோடு நன்றி கூறுவீர்கள். அவரே இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுவித்து, தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டுவந்து சேர்த்தார். இம்மகனால்தான் நமக்கு மீட்பு உண்டு. பாவமன்னிப்பு உண்டு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 97 : 2-3ab, 3cd-4, 5-6 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினர்.**

2 ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினர் :
மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் ;
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ்பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்,
வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.
6 எக்காளமும் கொம்பும் ஊதி,
ஆண்டவராகிய அரசரின் திருமுன் களிகூருங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

எல்லாம் உங்களுக்கு உரியவையே, நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள் ; கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 18-23

சகோதரர்களே :

யாரும் தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். உங்களுள் எவனாவது இவ்வுலகப் போக்கின்படி தன்னை ஞானி எனக் கருதினால், ஞானியாகும்படி மடையனாகட்டும். ஏனெனில், இவ்வுலகத்தின் ஞானம் கடவுள் முன் மடமைதானே. ‘ ஞானிகளை அவர்களுடைய சூழ்ச்சியிலேயே சிக்கவைக்கிறார் ’ என்றும், ஞானிகளின் எண்ணங்களை அறிவார், அவை வீண் என அவருக்குத் தெரியும் ’ என்றும் எழுதியுள்ளதன்றோ ? ஆகையால் வெறும் மனிதர்களைப்பற்றி யாரும் பெருமை பாராட்டலாகாது. சின்னப்பனோ, அப்பொல்லோவோ, கெபாவோ, உலகமோ, வாழ்வோ சாவோ, நிகழ்காலமோ எதிர்காலமோ எல்லாம் உங்களுக்கு உரியவையே. நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள் ; கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23 : 1-2, 3-4ab, 5-6 (பல்லவி : 1a)

பல்லவி : **மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன.**

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன :
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலை நிறுத்தியவர் அவரே :
ஆறுகளின்மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனத்தைச் செலுத்தாதவன். பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான் :
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே :
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே. பல்லவி

அல்லேலூயா மத். 4 : 19

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : என் பிறகே வாருங்கள், உங்களை, மனிதரைப் பிடிப்போராக்குவேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யாவற்றையும் துறந்து, அவரைப் பின் தொடர்ந்தார்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

5 : 1-11

அக்காலத்தில் :

யேசு கெனேசரேத்து ஏரிக் கரையில் நின்று கொண்டிருந்தபோது, திரளான மக்கள் கடவுளின் வார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக் கொண்டிருந்தனர். அப்போது ஏரிக் கரையில் இரண்டு படகுகள் இருக்கக் கண்டார். மீனவர்களோ படகை விட்டு இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தனர். அப்படகுகளுள் ஒன்று சீமோனுடையது. அதில் ஏறி, கரையிலிருந்து சற்றே தள்ளச் சொல்லி, அமர்ந்துகொண்டு படகிலிருந்தே கூட்டத்திற்குப் போதிக்கலானார்.

பேசி முடித்ததும் சீமோனிடம், "ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று கூறினார். அதற்கு சீமோன், "குருவே, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயினும் உமது சொல்லை நம்பி வலைகளைப் போடுகிறேன்" என்றார்.

அவ்வாறே செய்ததும் ஏராளமான மீன்களை வளைத்துப் பிடித்தனர். வலைகள் கிழியத் தொடங்கவே, மற்றப் படகிலிருந்த தங்கள் தோழர்களுக்குச் சைகை காட்டி உதவிக்கு வருமாறு அழைத்தனர். அவர்களும் வந்து படகுகள் இரண்டையும் நிரப்ப, அவை மூழ்குவனபோல் இருந்தன.

இதைக் கண்ட சீமோன் இராயப்பர் யேசுவின் காலில் விழுந்து, "ஆண்டவரே, பாவியோனை விட்டு அகலும்" என்றார். அவரும் அவரோடிருந்த அனைவரும், அகப்பட்ட மீன்பாட்டைக் கண்டு திகிலுற்றனர். சீமோனுடைய கூட்டாளிகளான செபெதேயுவின் மக்கள், யாகப்பரும் அருளப்பரும் அவ்வாறே திகிலுற்றனர்.

யேசுவோ சீமோனை நோக்கி, "அஞ்சாதே, இன்றுமுதல் நீ மனிதர்களைப் பிடிப்பவன் ஆவாய்" என்றார்.

அவர்கள் படகுகளைக் கரை சேர்த்ததும், யாவற்றையும் துறந்து, அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அவராலேயே, அவருக்காகவே அனைத்தும் ஆயின.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 15-20

கிறிஸ்து யேசு கட்புலனாகாக் கடவுளின் சாயல், படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்; ஏனெனில், அவரில் அனைத்தும் உண்டாயிற்று. விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை கட்புலனாவன, கட்புலனாகாதன, அரியணை சூழ்வோர், ஆட்சி புரிவோர், தலைமை ஏற்போர், அதிகாரம்

தாங்குவோர் ஆகிய வானதூதர் அனைவரும் உண்டானது அவரிலேதான். அவராலேயே அவருக்காகவே அனைத்தும் ஆயின. அனைத்துக்கும் முன்பே உள்ளவர் அவர் ; அனைத்தும் அவரில் இணைந்து நிலைக்கும்.

திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் அவரே. ஆதியானவரும் அவரே. அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு அவரே. முழுநிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார். சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால் சமாதானம் உண்டாக்கி, விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 99 : 1-2, 3, 4, 5 (பல்லவி : 2 b)*

பல்லவி : ஆண்டவர் திருமுன் மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.
பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள் :
அவரே நம்மை உண்டாக்கினவர்.
அவருக்கே நாம் சொந்தம் : அவருடைய மக்கள் நாம்,
அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப் பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள் ;
இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள் :
அவரைப் போற்றிப் புகழுங்கள்,
அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர்,
அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது.
அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும்.

பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*உள்ளங்களின் உட்கருத்துக்களை ஆண்டவர் வெளியாக்குவார்.*

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்** 4 : 1-5

**சகோதரர்களே :**

ஆகவே எங்களைக் கிறிஸ்துவின் பணியாளர், கடவுளுடைய மறை பொருள்களின் கண்காணிப்பாளர் என்றே எவரும் கருதவேண்டும். இனி, கண்காணிப்பாளர் நம்பிக்கைக்குரியவராய் இருக்கவேண்டும் என்று எதிர் பார்க்கலாம் அன்றோ? என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு நீங்களோ, மனிதரின் நீதிமன்றமோ தீர்ப்புக் கூறுவதுபற்றி நான் கவலைப்படவில்லை. நானும் எனக்குத் தீர்ப்பிட்டுக்கொள்ள மாட்டேன். என் மனச்சாட்சி என்னை எதிலும் குற்றம் சாட்டவில்லை. ஆயினும் இதனால் நான் குற்ற மற்றவன் என்று சொல்ல முடியாது. எனக்குத் தீர்ப்புக் கூறுகிறவர் ஆண்ட வர்தாம். ஆகையால் குறித்த காலம் வருமுன் தீர்ப்பிடாதீர்கள். ஆண்டவர் வரும்வரை காத்திருங்கள். இருளில் மறைந்திருப்பதை அவர் வெட்ட வெளிச்சமாக்குவார். உள்ளங்களின் உட்கருத்துக்களை வெளியாக்குவார். அப்பொழுதுதான் ஒவ்வொருவனும் கடவுளிடமிருந்து புகழ்பெறுவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 36 : 3-4, 5-6, 27-28, 39-40 (பல்லவி : 39a)*

பல்லவி : **நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும்.**

3 ஆண்டவர்மீது நம்பிக்கை வை, நன்மை செய் ;
புனித நாட்டில் எவ்விதக் கவலையின்றி இருப்பாய்.
4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு :
அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார். பல்லவி

5 உன் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு,
அவர் பேரில் நம்பிக்கை வைத்திரு; அவரே எல்லாம் செய்வார்.
6 உனது நேர்மை ஒளிபோல எழும்பச் செய்வார்.
உனது மாசின்மை பட்டப்பகல்போல் விளங்கச் செய்வார். பல்லவி

27 தீமையை விலக்கு, நன்மை செய் :
அப்போது என்றென்றும் வாழ்வாய்.
28 ஏனெனில், ஆண்டவர் நேர்மையை விரும்புகிறார்,
தம் புனிதர்களை அவர் கைவிடுவதில்லை : பல்லவி

39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும் :
துன்ப வேளையில் அவர்களுக்குப் புகலிடம் அவரே.
40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலை அளிக்கிறார் ;
தீயோரின் கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார் ;
ஏனெனில் அவர்கள் அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர். பல்லவி

அல்லேலூயா அரு. 8 : 12

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே உலகின் ஒளி :
என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக்
கொண்டிருப்பான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மணமகன் அவர்களை விட்டுப் பிரியும்போது அவர்கள் நோன்பு இருப்பார்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
5 : 33-39

அக்காலத்தில் : பரிசேயரும் மறைநூல் அறிஞரும் :

"அருளப்பரின் சீடர் அடிக்கடி நோன்பு இருந்து செபம் செய்கின்றனர். பரிசேயர்களின் சீடரும் அவ்வாறே செய்கின்றனர். உம்முடைய சீடரோ, உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே" என்று யேசுவிடம் சொன்னார்கள்.

அதற்கு யேசு, "மணமகன் தன் தோழர்களோடு இருக்குமளவும் அவர்களை நோன்பிருக்கச் செய்யக்கூடுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும், அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்" என்றார்.

மேலும் அவர்களுக்கு ஓர் உவமை கூறினார். அதாவது, "புதிய போர்வையிலே ஒரு துண்டைக் கிழித்துப் பழைய போர்வைக்கு ஒட்டுப் போடுவார் யாருமில்லை. அவ்வாறு போட்டால் புதியதும் கிழிபடும், அதிலிருந்து கிழித்த துண்டும் பழையதோடு பொருந்தாது.

புது திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பவர் எவருமில்லை. வைத்தால், புது இரசம் சித்தைகளைக் கிழித்துச் சிந்திப் போவதும் அல்லாமல் சித்தைகளும் பாழாகும். ஆனால், புதுத் திராட்சை இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றி வைக்க வேண்டும். பழைய திராட்சை இரசத்தைக் குடித்தவன் புதியதை விரும்புவதில்லை. பழையதே சிறந்தது என்பான்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களை மாசு மறுவின்றி பரிசுத்தர்களாய்த் தம்முன் நிறுத்த, இறைவன் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 21-23*

சகோதரர்களே :

முன்னர் நீங்கள் இறைவனோடு உறவிழந்து நின்றீர்கள்; அவர்மீது பகையுள்ளம் கொண்டவர்களாய்த் தீய செயல்களில் மூழ்கி இருந்தீர்கள். இப்பொழுதோ உங்களை மாசு மறுவும் குறைபாடுமின்றிப் பரிசுத்தர் களாய்த் தம் திருமுன் நிறுத்த இறைவன் விரும்பி, கிறிஸ்துவுடைய ஊனுடலில் அவருடைய சாவின் வழியாக உங்களைத் தம்மோடு ஒப்புர வாக்கினார். ஆனால் நீங்கள் கேட்ட நற்செய்தியில் அடங்கியுள்ள நம்பிக்கையை நழுவவிடாது, விசுவாசத்தில் உறுதியாக ஊன்றி நிலைத்து நிற்க வேண்டும். வானத்தின் கீழுள்ள எல்லாப் படைப்புக்கும் அறிவிக்கப் பட்ட இந்த நற்செய்திக்குத்தான் சின்னப்பனாகிய நான் பணியாளன் ஆனேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 53 : 1-2, 4 & 6, (பல்லவி : 4a)

பல்லவி : **இதோ, கடவுள் எனக்குத் துணைபுரிகிறார்!**

1 இறைவா உம் பெயரின் வல்லமையால் என்னைக் காத்தருளும் :
உமது வல்லமையால் எனக்கு நீதி வழங்கும்.
2 இறைவா என் மன்றாட்டைக் கேட்டருளும் :
என் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

4 இதோ! கடவுள் எனக்குத் துணைபுரிகிறார்.
ஆண்டவர் என் வாழ்வுக்கு ஆதரவாயிருக்கிறார்.
6 மன மகிழ்வோடு உமக்குப் பலி செலுத்துவேன் :
ஆண்டவரே, உமது பெயரைப் போற்றுவேன்.
ஏனெனில், அது நல்லது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நாங்கள் பசியாயிருக்கிறோம், தாகமாயிருக்கிறோம், ஆடையின்றிருக்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 6-15

சகோதரர்களே, உங்கள் பொருட்டு என்னையும் அப்பொல்லோவையும் உவமைப்படுத்திப் பேசினேன். "எழுதியுள்ளதற்குமேல் போகாதே" என்பதன் பொருளை எங்களைப் பார்த்து நீங்கள் கற்றுக் கொள்ள இவையெல்லாம் எடுத்துரைத்தேன். உங்களுள் யாரும் ஒருவனைச் சார்ந்துகொண்டு வேறொருவனுக்கு எதிராக நின்று இறுமாப்பு அடைய வேண்டாம். ஏனெனில், நீ உயர்ந்தவன் என்று சொன்னது யார்? பெற்றுக் கொள்ளாதது உன்னிடத்தில் என்ன உண்டு? நீ பெற்றுக்கொண்டவனாய் இருக்கும்போது, பெற்றுக் கொள்ளாதவனைப்போல் ஏன் பெருமை பாராட்டிக்கொள்கிறாய்? உங்களுக்கு வேண்டியதெல்லாம் இதற்குள் கிடைத்துவிட்டதோ! இதற்குள் நீங்கள் செல்வர்களாகிவிட்டீர்களோ! எங்களை விட்டு நீங்கள் மட்டும் அரசாளத் தொடங்கிவிட்டீர்களோ! அப்படி நீங்கள் அரசாளத் தொடங்கிவிட்டால் நல்லதுதான்! நாங்களும் உங்களோடு சேர்ந்து அரசாள்வோமே!

உள்ளபடியே அப்போஸ்தலர்களாகிய எங்களைக் கடவுள் அனைவரிலும் கடையராக்கினார் என நினைக்கிறேன். எல்லாரும் காணக் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டவர்கள்போல் ஆனோம். ஏனெனில் மனிதருக்கும் வானதூதருக்கும் உலகம் அனைத்திற்கும் நாங்கள் வேடிக்கையானோம்.

கிறிஸ்துவுக்காக நாங்கள் மடையர்கள், நீங்களோ கிறிஸ்துவில் விவேகம் கொண்டவர்கள். நாங்கள் வலுவற்றவர்கள், நீங்களோ வலுமிக்கவர்கள். நீங்கள் மாண்புள்ளவர்கள், நாங்களோ மதிப்பற்றவர்கள். இந்நாள் வரை நாங்கள் பசியாயிருக்கிறோம், தாகமாயிருக்கிறோம், ஆடையின்றிருக்கிறோம், அடிபடுகிறோம், தங்க இடமின்றி இருக்கிறோம். எங்கள் கையால் பாடுபட்டு உழைக்கிறோம். பிறர் எங்களைப் பழித்துரைக்கும்போது நாங்கள் ஆசி கூறுகிறோம்; எங்களைத் துன்புறுத்தும்போது நாங்கள் பொறுத்துக்கொள்கிறோம். எங்களைத் தூற்றும்போது நாங்கள் உறவாடுகிறோம். நாங்கள் இவ்வுலகத்தின் குப்பைபோல் ஆனோம். அனைவரிலும் கழிவடையானோம். இதுவரை எங்கள் நிலை இதுவே.

நான் இவற்றை எழுதுவது உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படியன்று, என் அன்புக்குழந்தைகளென உங்களுக்கு அறிவு புகட்டவே. ஏனெனில், கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு ஆசிரியர் பல்லாயிரம்பேர் இருக்கலாம்; ஆனால் தந்தையர் பலர் இல்லை. நற்செய்தியின் வழியாய் நான்தான் உங்களைக் கிறிஸ்து யேசுவுக்குள் ஈன்றெடுத்தேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 17-18, 19-20, 21 (பல்லவி : 18 a)

பல்லவி : தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும்
ஆண்டவர் அண்மையில் உள்ளார்.

17 ஆண்டவர் தம் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர்.
நம் செயல்களிலெல்லாம் புனிதமானவர்.
18 தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் உள்ளார்.
நேர்மையுடன் தம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும்
ஆண்டவர் அண்மையில் உள்ளார். பல்லவி

19 தமக்கு அஞ்சுகிறவர்களின் ஆசையை நிறைவேற்றுவார்.
அவர்களுடைய மன்றாட்டைக் கேட்டு மீட்பளிப்பார்.
20 தம்மீது அன்பு செலுத்தும் யாவரையும் ஆண்டவர் காப்பாற்றுகிறார்.
தீயோர் யாவரையும் அழித்துவிடுவார். பல்லவி

21 ஆண்டவருடைய புகழ்ச்சியை என் நா எடுத்தியம்புவதாக.
மனிதர் யாவரும் என்றென்றும் அவருடைய திருப்பெயரை
வாழ்துவார்களாக. பல்லவி

அல்லேலூயா அரு. 14:5

**அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும் உண்மையும் உயிரும்: என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**ஓய்வு நாளில் செய்யத் தகாததை நீங்கள் செய்வதேன்?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6 : 1-5

ஓர் ஓய்வுநாளன்று வயல் வழியே யேசு செல்லும்பொழுது, சீடர் கதிர்களைக் கொய்து கையில் கசக்கித் தின்றனர். பரிசேயருள் சிலர், "ஓய்வு நாளில் செய்யத் தகாததை நீங்கள் செய்வதேன்?" என்றனர்.

அதற்கு யேசு, "தாவீதும் அவருடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபொழுது, அவர் என்ன செய்தார் என்று நீங்கள் வாசித்ததில்லையோ? அவர் கடவுளின் இல்லத்தில் நுழைந்து, குருக்கள் தவிர மற்றெவரும் உண்ணக்கூடாத காணிக்கை அப்பங்களை எடுத்து, தாம் உண்டதுமன்றி, கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே" என்றார்.

மேலும், "மனுமகன் ஓய்வுநாளுக்கு ஆண்டவர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்து மூன்றும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தீயவனுக்கு நீ எச்சரிக்கை செய்யாமல் விடுவாயாகில்,*
*அவனது இரத்தப் பழியை உன்மேலேயே சாற்றுவோம்.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 33 : 7-9

ஆண்டவர் கூறுவதாவது :

"மனிதா, உன்னை நாம் இஸ்ராயேல் வீட்டாருக்குச் சாமக் காவலனாக வைத்திருக்கிறோம் ; ஆதலால் நீ நம் வாயினின்று புறப்படும் வார்த்தையைக் கேட்கும்போதெல்லாம் அதைச் சொல்லி, அவர்களை எச்சரிக்கை செய்யவேண்டும். தீயவன் ஒருவனிடம், 'நீ கண்டிப்பாய்ச் சாவாய்' என்று நாம் சொல்ல, அவன் தன் தீய வழியினின்று திரும்பும்படி அவனுக்கு நீ எச்சரிக்கை செய்யாமல் விடுவாயாகில், அந்தத் தீயவன் தன் அக்கிரமத்திலேயே சாவான் ; ஆனால் அவனது இரத்தப்பழியை உன் மேலேயே சாற்றுவோம். அதற்கு மாறாக, தீயவன் தன் தீய வழியைவிட்டு மனந்திரும்ப வேண்டுமென்று நீ அவனுக்கு எச்சரிக்கை செய்திருந்தும், அவன் தன் தீய வழியிலிருந்து திரும்பாமல் இருப்பானாயின், அவன் தன் அக்கிரமத்திலேயே சாவான் ; ஆனால் உன்னையே நீ காத்துக்கொள்வாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 94 : 1-2, 6-7, 8-9 (பல்லவி : 8)

பல்லவி : "உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்" என்னும்
ஆண்டவரது குரலை இன்று கேட்பீர்களா !

1 வாருங்கள், ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம்.
மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம் :
இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம் வணங்குவோம்,
நம்மைப் படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
அவரே நம் கடவுள் : நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள்,
7 அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. பல்லவி

8-9 இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா ?
அன்று மெரிபாவிலும், பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்,
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் :
அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர் ;
என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**திருச்சட்டத்தின் நிறைவு அன்பே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 13 : 8-10

சகோதரர்களே :

யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செய்வது நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்புகூர்பவன் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகிறான். ஏனெனில், 'விபசாரம் செய்யாதே ; கொலை செய்யாதே ; களவு செய்யாதே ; இச்சிக்காதே' என்னும் கட்டளைகளும் வேறு எந்தக் கட்டளையும் 'உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக' என்னும் ஒரே கட்டளையில், சுருக்கமாய் அடங்கியுள்ளன. அன்பு பிறர்க்குத் தீமை செய்யாது. ஆகவே, திருச்சட்டத்தின் நிறைவு அன்பே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 கொரி. 5 : 19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார் : அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அவன் உனக்குச் செவிசாய்த்தால், உன் சகோதரனை உன் வசமாக்கிக்கொள்வாய்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

18 : 15-20

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உன் சகோதரன் உனக்கு எதிராகக் குற்றஞ் செய்திருந்தால் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவனைக் கண்டித்துப் பார். அவன் உனக்குச் செவி சாய்த்தால் உன் சகோதரனை உன் வசமாக்கிக் கொள்வாய். அவன் உனக்குச் செவி சாய்க்காவிட்டால், உன்னுடன் ஒருவர் அல்லது இருவரைச் சேர்த்துக்கொள். 'இவ்வாறு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் சொற்படி காரியம் எல்லாம் தீரும்.' அவர்களுக்கும் செவி சாய்க்காவிடில், திருச்சபையிடம் சொல். திருச்சபைக்கும் செவி சாய்க்கா விடில், அவன் உனக்குப் புற இனத்தான் போலவும், ஆயக்காரன் போலவும் இருக்கட்டும்.

உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் கட்டுவீர்களோ, அதெல்லாம் விண்ணுலகிலும் கட்டப்பட்ட தாகவே இருக்கும். மண்ணுலகில் நீங்கள் எதெல்லாம் அவிழ்ப்பீர்களோ, அதெல்லாம் விண்ணுலகிலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும்.

மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன்: மண்ணுலகில் உங்களில் இருவர் தாங்கள் கேட்கும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் அது விண்ணுல கிலுள்ள என் தந்தையால் அவர்களுக்கு அருளப்படும். இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ, அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றல் பெறும்;
ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 35 : 4-7a

உள்ளத்தில் உரமில்லாதவர்களை நோக்கி: "உறுதியாய் இருங்கள், அஞ்சவேண்டா: இதோ உங்கள் கடவுள் பழிதீர்க்க வருகிறார், வந்து கைம்மாறு கொடுப்பார், கடவுள்தாமே வந்து உங்களை மீட்பார்" என்று சொல்லுங்கள்.

அப்போது குருடருடைய கண்கள் திறக்கப்படும், செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றல் பெறும்; அப்போது முடவன் மான்கன்று போலத் துள்ளுவான், ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்; பாழ்வெளியில் நீரூற்றுகள் பீறிட்டுக் கிளம்பும், பாலைநிலத்தில் நீரோடைகள் வழிந்தோடும்.

கொதிக்கும் மணல் பரப்பு நீர் நிறைந்த குளமாகும், வறண்ட பூமி நீரூற்றுகள் நிறைந்திருக்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145 : 7, 8-9a, 9bc-10 (பல்லவி : 1)

பல்லவி : நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.

அல்லது : அல்லேலூயா.

7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர்.
துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்.
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்.
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்து விடுகிறார்.
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிறார்.
நீதிமான்கள் மீது ஆண்டவர் அன்புகூர்கிறார்.
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார். பல்லவி

அனாதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார் :
பாவிகளின் திட்டங்களைக் கலைத்து விடுகிறார்.
நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார் :
சீயோனே, உன் இறைவன் தலைமுறை தலை முறையாக ஆள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**அரசில் உரிமை தரக் கடவுள் ஏழைகளைத் தேர்ந்துகொள்ளவில்லையா?**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *2 : 1-5*

என் சகோதரர்களே, மாட்சிமை மிக்க நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ள நீங்கள் மக்களின் தோற்றத்தைப் பார்த்து அவர்களை நடத்தாதீர்கள். நீங்கள் கூடியுள்ள இடத்தில், பொன் மோதிர மணிந்து பகட்டான உடை உடுத்திய ஒருவன் வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அழுக்குக் கந்தையோடு ஏழை ஒருவனும் அங்கே வருகிறான். பகட்டாக உடுத்தியவனைப் பார்த்து, "ஐயா, தயவுசெய்து இங்கே அமருங்கள்" என்று கவனித்துக் கொள்கிறீர்கள். ஏழையிடமோ, "அடே, அங்கே நில்" என்கிறீர்கள், அல்லது "தரையில் உட்கார்" என்கிறீர்கள். இப்படி உங்களுக்குள்ளே வேறுபாடு காட்டி, தவறான முறையில் தீர்ப்பிடுகிறீர்கள் அல்லவா!

என் அன்புச் சகோதரர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்: உலகினர் கண்ணுக்கு ஏழையாய் உள்ளவர்களைக் கடவுள் விசுவாசத்தில் செல்வமுடையவர்களாக்கவும், தம்மீது அன்பு செலுத்துபவர்களுக்கு வாக்களித்த அரசில் உரிமை தரவும் தேர்ந்துகொள்ளவில்லையா?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 4 : 23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கிவந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**செவிடர் கேட்கவும், ஊமைகள் பேசவும் செய்கிறார்.**

✠ *மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 31-37*

அக்காலத்தில் :

யேசு தீர் நாட்டை விட்டு, சீதோன் வழியாகத் தெக்கப்போலி நாட்டின் நடுவே வந்து கலிலேயாக் கடலை அடைந்தார்.

செவிடனும் திக்கு வாயனுமாகிய ஒருவனை அவரிடம் கொண்டு வந்து, அவன்மீது கையை வைக்குமாறு அவரை வேண்டினர். அவர் அவனைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று தம் விரல்களை அவன் காதுகளில் விட்டு, உமிழ் நீரால் அவன் நாவைத் தொட்டார். பின், வானத்தை அண்ணாந்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டு அவனை நோக்கி, 'எப்பெத்தா' — அதாவது, திறக்கப்படு — என்றார். உடனே அவன் காதுகள் திறக்கப்பட்டன. நாவின் கட்டவிழ்ந்தது. நன்றாகப் பேசினான்.

இதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். எவ்வளவுக்கு அவர் கட்டளையிட்டாரோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவர்கள் அதை விளம்பரப்படுத்தினர்.

அவர்கள் மிகவும் மலைத்துப்போய், "எல்லாம் நன்றாகச் செய்திருக்கிறார். செவிடர் கேட்கவும், ஊமைகள் பேசவும் செய்கிறார்" என்று கூறினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவர் விரும்புவதைக் கண்டுபிடிப்பவன் யார்?**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 9: 13-19

உள்ளபடியே கடவுளின் திருவுளத்தை அறிபவன் யார்? அல்லது ஆண்டவர் விரும்புவதைக் கண்டுபிடிப்பவன் எவன்? மனிதருடைய எண்ணங்கள் பயனற்றவை; நம்முடைய திட்டங்கள் தவறக்கூடியவை; ஏனெனில் அழியக்கூடிய உடல் ஆன்மாவைப் பளுவாக்குகிறது; இந்த மண் குடிலை சிந்தனை நிறைந்த மனத்தை அழுத்துகிறது.

உலகில் உள்ளவற்றை அறிவதே நமக்கு மிகக் கடினம்; நம் கண்முன் விருப்பவற்றைக் கண்டு பிடிப்பதோ மிக அரிது ; அப்படியிருக்க, விண்ணிலுள்ளவற்றை ஆராய்பவன் எவன்? நீர் ஞானத்தைத் தராமலும், உன்னதத்திலிருந்து உமது பரிசுத்த ஆவியை அனுப்பாமலும் இருந்தால், உமது திருவுளத்தை அறியக் கூடியவன் யார்? இவ்வாறு, உலகோரின் வழிகள் செம்மைப்படுத்தப்பட்டன ; உமக்கு உகந்தவை மனிதர்களுக்குக் கற்பிக்கப்பட்டன ; ஞானத்தால் அவர்கள் மீட்கப்பட்டனர்.

ஏனெனில், ஆண்டவரே, தொடக்கமுதல் உமக்கு உகந்தவர்களாய் இருந்த அனைவரும், ஞானத்தினால் நலமடைந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 89 : 3-4, 5-6, 12-13, 14 & 17 (பல்லவி : 1)

பல்லவி : **ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக நீரே எங்களுக்குப் புகலிடம்.**

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர் :
“மனுமக்களே மண்ணாகத் திரும்புங்கள்” என்கிறீர்.
4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட,
கடந்துபோன நேற்றைய தினத்தைப்போலவும்,
ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன. பல்லவி

5 அவர்களை எடுத்துவிடுகிறீர் :
வைகறையில் செழித்து வளரும் பூண்டைப்போல ஆகிறார்கள்.
6 காலையில் பூக்கிறது, செழித்திருக்கிறது :
மாலையிலோ வாடிவிடுகிறது. பல்லவி

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு,
எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும் ;
எவ்வளவு காலம் கோபம் கொள்வீர் ?
உம் ஊழியர்மீது இரக்கம் வையும். பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் :
எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
17 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக.
எங்கள் வேலைகளைப் பயனுள்ளவையாக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

இனி அவனை நீர் அடிமையாக அன்று, அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலமோனுக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 9b-10, 12-17

வயதுசென்ற சின்னப்பனாகிய நான், இப்பொழுது கிறிஸ்துவின் கைதியாக இருக்கும் நான், சிறையிலிருக்கையில் நான் ஈன்றெடுத்த பிள்ளை ஒனேசிமுவுக்காக உம்மை வேண்டுகிறேன். அவனை உம்மிடம் திரும்ப அனுப்புகிறேன். அவனை அனுப்புவது என் உயிரையே அனுப்புவது போலாகும். நற்செய்திக்காகச் சிறையில் இருக்கும் எனக்கு உமது பெயரால் பணியாற்ற, அவனை என்னிடமே நிறுத்திக்கொள்ள நினைத்தேன். ஆனால் உம்முடைய உடன்பாடின்றி ஒன்றும் செய்ய விரும்பவில்லை. நீர் செய்யப் போகும் நன்மையைக் கட்டாயத்தின்மேல் செய்யாமல், மனதாரச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். இனி என்றுமே பிரியாத முறையில் அவன் உம்மோடு இருக்கவேண்டுமென்றே அவன் உம்மைவிட்டுச் சிறிதுகாலம் பிரிந்திருந்தான்போலும். இனி அவனை நீர் அடிமையாக அன்று, அடிமையைவிட மேலானவனாக, அதாவது அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ளும். அவன் என் தனிப்பட்ட அன்புக்குரியவனே. அப்படியானால் உலக வழக்கின்படியும், ஆண்டவரில் ஏற்பட்ட புதிய உறவின் படியும் அவன் எவ்வளவோ மேலாக உம் அன்புக்குரியவனாக இருக்க வேண்டும் ! எனவே, நமக்குள்ள உறவைக் கருதி, என்னை ஏற்றுக்கொள்வதுபோல் அவனை ஏற்றுக்கொள்ளும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா சங். 118 : 135

அல்லேலூயா. உம் ஊழியன் எனக்கு இன்முகம் காட்டியருளும் :
உம் நியமங்களை எனக்குக் கற்பித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தன் உடைமையெல்லாம் துறக்காவிடில் உங்களுள் எவனும் என் சீடனாயிருக்க முடியாது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
14 : 25-33

அக்காலத்தில் :

யேசுவுடன் பெருங்கூட்டம் சென்றுகொண்டிருந்தது. அவர் அவர்கள் பக்கம் திரும்பிக் கூறியதாவது : "என்னிடம் வருகிறவன் தன் தந்தை, தாய், மனைவி, மக்கள், சகோதர சகோதரிகளையும், ஏன், தன் உயிரையுமே வெறுக்காவிட்டால் என் சீடனாயிருக்க முடியாது. தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லாதவன் என் சீடனாயிருக்க முடியாது.

உங்களுள் யாராவது கோபுரங் கட்ட விரும்பினால் வேலையை முடிக்கத் தன்னால் முடியுமாவென்று பார்ப்பதற்கு, முதலில் உட்கார்ந்து, வேண்டிய செலவைக் கணிக்க மாட்டானா? இல்லாவிடில் அதற்கு அடித்தளமிட்டபின் முடிக்க முடியாததைக் கண்ணுறும் யாவரும், 'இவன் கட்டத் தொடங்கினான், முடிக்கவில்லை' என்று ஏளனம் செய்வர்.

அல்லது, ஓர் அரசன் மற்றோர் அரசன்மேல் போர் தொடுக்கப் போகுமுன், இருபதாயிரம் பேருடன் தன்னை எதிர்த்து வருபவனைப் பத்தாயிரம் பேருடன் எதிர்க்க முடியுமோ என்று முதலில் அமர்ந்து ஆராய்ந்து பார்க்கமாட்டானா? எதிர்க்க முடியாதெனில், அவன் இன்னும் தொலைவிலிருக்கும்பொழுதே தூது விடுத்து, சமாதானத்திற்கு ஆவன கோருவான்.

இவ்வாறே தன் உடைமை யெல்லாம் துறக்காவிடில் உங்களுள் எவனும் என் சீடனாயிருக்க முடியாது.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஊழூழியாய் ஒளிவிலிருந்த திட்டத்தை நிறைவேற்ற திருச்சபையின் பணியாளன் ஆயினேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 24 - 2 : 3

சகோதரர்களே :

உங்களுக்காக நான் படும் துன்பங்களில் இப்பொழுது மகிழ்ச்சி கொள்கிறேன். திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குகிறேன். கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் அலுவலை நிறைவேற்ற, கடவுள் உங்களை முன்னிட்டு எனக்களித்த பொறுப்பை ஏற்றுள்ளதால் நான் திருச்சபையின் பணியாளன் ஆனேன்.

நான் அறிவிப்பதோ மறைவான இறைத்திட்டம். ஊழூழியாக, தலைமுறை தலைமுறயாக ஒளிவிலிருந்த இத்திட்டம் இப்பொழுது இறை மக்களுக்கு வெளியாக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இத்திட்டத்தின் மாட்சிமை புறவினத்தாரிடையே எவ்வளவு வளமிக்கதாய் உள்ளது என்பதைத் தம் மக்களுக்குத் தெரிவிக்க இறைவன் திருவுளங்கொண்டார். கிறிஸ்து உங்களுக்குள் இருத்தலே அத்திட்டம். நாம் மாட்சிமை அடைவோம் என்பதற்கு அவரே நம் நம்பிக்கை. அவரையே நாங்கள் அறிவிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரையும் நிறைவுள்ளவராக்கும்படி ஒவ்வொருவருக்கும் அறிவு புகட்டி ஒவ்வொருவருக்கும் முழு ஞானத்தோடு போதிக்கிறோம். என்னுள் வல்லமையோடு செயல்படும் ஆற்றலுக்கேற்ப இந்நோக்கத்திற்காகவே நான் பாடுபட்டு உழைக்கிறேன்.

உங்களுக்காகவும், லவோதிக்கேயா நகர் மக்களுக்காகவும், என்னை நேரில் பார்த்திராத மற்றனைவருக்காகவும் நான் எவ்வளவு பாடுபடுகிறேன் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவர்களின் உள்ளங்கள் ஊக்கமடைந்து, அவர்கள் அன்பினால் ஒன்றாய் இணைக்கப்பட்டு, கடவுளுடைய திட்டத்தின் மறைபொருளை அறிந்துணரச் செய்யக்கூடிய அறிவுத் திறனின் வளத்தை நிறைவாகப் பெறவேண்டுமென்றே நான் இங்ஙனம் பாடுபடுகிறேன். கிறிஸ்துவே அந்த மறைபொருள். அவருள்ளே இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாம் மறைந்துள்ளது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 61 : 5-6, 8 (பல்லவி : 7a)

பல்லவி : **என் மீட்பும் மகிமையும் கடவுளிடம் உள்ளது.**

5 **நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள் :**
**ஏனெனில், நான் எதிர்பார்ப்பது அவரிடமிருந்தே வருகிறது.**
6 **அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார் ;**
**நான் அசைவுறேன்.** பல்லவி

8 **நாட்டு மக்களே, எந்நாளும் அவர்மீது நம்பிக்கை வையுங்கள் ;**
**உங்கள் உள்ளத்திலுள்ளதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள் :**
**கடவுளே நமக்கு அடைக்கலம்.** பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**பழைய புளிப்பு மாவை அப்புறப் படுத்துங்கள் ; ஏனெனில், நமது பாஸ்காப் பலி நிறைவேறிவிட்டது ; கிறிஸ்துவே அப்பலி.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-8

சகோதரர்களே :

உங்களிடையே கெட்ட நடத்தை இருப்பதாக எங்குமே பேச்சு. ஒருவன் தன் தந்தையின் மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானாம். இத்தகைய கெட்ட நடத்தை புற இனத்தாரிடையில்கூட இருக்காது. இப்படியிருந்தும் நீங்கள் இறுமாந்திருக்கிறீர்கள். மாறாக, துக்கம் கொண்டாடியிருக்க வேண்டும். இச்செயல் செய்தவனை உங்களிடையேயிருந்து அகற்றிவிட்டிருக்க வேண்டும். ஆனால் என் உடலால் உங்களை விட்டுப் பிரிந்திருந்தாலும், உள்ளத்தால் உங்களோடுதான் இருக்கிறேன். உங்களோடிருப்பதுபோல், நான் அத்தகைய செயல் செய்தவனுக்கு ஆண்டவராகிய யேசுவின் பெயரால் ஏற்கெனவே தீர்ப்பிட்டு விட்டேன். அதாவது, நீங்கள் எல்லாரும் கூடிவந்து, நானும் உள்ளத்தால் உங்களோடிருக்க, நம் ஆண்டவராகிய யேசுவின் வல்லமை துணைநிற்க, (அத்தகையவனை) சாத்தானுக்குக் கையளிக்க வேண்டும். அவனது உடல் அழிவுற்றாலும், அவனது ஆன்மா ஆண்டவரின் நாளில் மீட்படையும்படி இவ்வாறு செய்வோம்.

நீங்கள் பெருமை பாராட்டுவது முறையன்று. சிறிதளவு புளிப்பு மாவு பிசைந்த மாவு முழுவதையும் புளிக்கச் செய்யும் என்பது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படி பழைய புளிப்பு மாவை அப்புறப் படுத்துங்கள். நீங்கள் புளியாத அப்பமன்றோ? ஏனெனில், நமது பாஸ்காப் பலி நிறைவேறிவிட்டது. கிறிஸ்துவே அப்பலி. ஆகையால், விழாக் கொண்டாடுவோம். அதில் பழைய புளிப்பு மாவைப் பயன்படுத்தலாகாது. தீயமனம், கெடுமதி என்னும் புளிப்பு மாவை விலக்கி, நேர்மை, உண்மை என்னும் புளியாத அப்பத்தையே உண்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 5 : 4-5a, 5b-6, 11 (பல்லவி : 8a)*

பல்லவி: **ஆண்டவரே, உம் நீதியைக் காட்டி
என்னை வழிநடத்தும்.**

4 தீமையை விரும்பும் கடவுள் நீர் அல்லீர் :
தீயவன் உம்மோடு தங்கமாட்டான்.
5 கெட்டவர்கள் உம் திருமுன் நிற்கமாட்டார்கள் : பல்லவி

தீமை செய்யும் அனைவரையும் நீர் வெறுக்கின்றீர்.
6 பொய் சொல்லும் அனைவரையும் நீர் அழிக்கின்றீர் :
கொலை வெறியரை, வஞ்சகரை ஆண்டவர் வெறுக்கின்றார். பல்லவி

11 உம் அடைக்கலம் நாடி வருவோர் அனைவரும் அகமகிழ்வார்களாக ;
என்றென்றும் அக்களிப்பார்களாக ;
உமது பெயர்மீது அன்பு வைத்தவர்களைப் பாதுகாப்பீராக ;
அவர்கள் உம்மை நினைத்து மகிழ்ச்சியுறுவார்களாக. பல்லவி

அல்லேலூயா *அரு 10 : 27*

**அல்லேலூயா: என் ஆடுகள் என் குரலுக்குச் செவி கொடுக்கின்றன ; நானும் அவற்றை அறிவேன்; அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

*ஓய்வு நாளில் குணமாக்குவாரா என்று பார்த்துக்கொண்டிருந்தனர்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:6-11

ஓர் ஓய்வுநாளில் யேசு செபக்கூடத்திற்குப் போய்ப் போதிக்கலானார். வலது கை சூம்பிப்போன ஒருவன் அங்கு இருந்தான். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் அவரிடம் குற்றம் காணும்படி, ஓய்வுநாளில் குணமாக்குவாரா என்று பார்த்துக்கொண்டே இருந்தனர்.

அவர்களுடைய எண்ணங்களை அவர் அறிந்து, சூம்பிய கையனை நோக்கி, "எழுந்து நடுவில் நில்" என்றார். அவன் எழுந்து நின்றான்.

யேசு அவர்களிடம், "உங்களை ஒன்று கேட்கிறேன் : ஓய்வுநாளில் எது செய்வது முறை? பிறருக்கு நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா?" என்று கேட்டார். எல்லாரையும் சுற்றி ஒரு பார்வை பார்த்தபின், அவனை நோக்கி, "கையை நீட்டு" என்றார். அப்படியே செய்தான் ; கை குணமாயிற்று.

அவர்களோ கோப வெறிகொண்டு யேசுவை என்ன செய்யலாமென்று கலந்து பேசலாயினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*இறைவன் உங்களை அவரோடு உயிர்பெறச் செய்தார் ; அவர் குற்றங்களையெல்லாம் மன்னித்துவிட்டார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 6-15

சகோதரர்களே :

ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டதற்கு ஏற்ப, அவரோடு ஒன்றித்து நடந்து வாருங்கள். அவரில் வேரூன்றி, அவர்மீது உங்கள் வாழ்க்கையாகிய கட்டடத்தை எழுப்புங்கள். உங்களுக்குப் போதித்தவாறு, விசுவாசத்தில் உறுதிபெற்று நன்றி மிக்கவர்களாய்த் திகழுங்கள்.

வெறும் மனிதப் பரம்பரையில் வந்த போலி ஞானத்தாலும், பொருளற்ற ஏமாற்றுப் பேச்சாலும் யாரும் கவரப்படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். இப்போலி ஞானம் கிறிஸ்துவைச் சார்ந்ததன்று, இவ்வுலகப் பூதங்களையே சார்ந்தது. ஏனெனில், அவருள்தான் கடவுள் தன்மையின் முழு நிறைவும் உடலுருவில் குடிகொண்டிருக்கிறது. அவருள்ளே நீங்களும் நிறைவுபெற்றவர்களாய் இருக்கிறீர்கள். தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் முதலிய தூதர் அனைவருக்கும் தலைவர் அவரே.

கையால் செய்யாத விருத்தசேதனம் ஒன்றை நீங்கள் அவருள் பெற்றிருக்கிறீர்கள். பாவத்திற்குட்பட்ட உடலைக் களைந்துவிடுவதே இவ்விருத்தசேதனம். இதுவே கிறிஸ்துவினின்று உண்டான விருத்தசேதனம். ஞானஸ்நானத்தில் அவரோடு புதைக்கப்பட்டிருக்கிறீர்கள். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்ட விசுவாசத்தால், அவரோடு நீங்களும் உயிர்த்தெழுந்தீர்கள்.

நீங்கள் பாவிகளாய் இருந்ததாலும், உடலில் செய்யப்படும் விருத்தசேதனம்கூட உங்களுக்கு இல்லாததாலும் இறந்தவர்களாயிருந்தீர்கள். உங்களை இறைவன் மீண்டும் அவரோடு உயிர்பெறச் செய்தார். அவர் நம் குற்றங்களை யெல்லாம் மன்னித்துவிட்டார்; நமக்கு எதிரான விதிகள் பல கொண்ட கடன் பத்திரம் ஒன்று இருந்தது; அதை அழித்துவிட்டார், சிலுவையில் அதை அறைந்து ஒழித்துவிட்டார். தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் முதலிய தூதருடைய படைக்கலங்களைப் பறித்துக் கொண்டு சிலுவையில் கிடைத்த வெற்றியால், எல்லாரும் அவர்களைக் காண, இழுத்துக்கொண்டு பவனி சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 1-2, 8-9, 10-11 (பல்லவி : 9a)

பல்லவி : **ஆண்டவர் அனைவருக்கும் நன்மைசெய்பவர்.**

1 என் இறைவா, என் அரசே, நான் உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
என்றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.
2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன் :
என்றென்றும் உம் திருப்பெயரைப் புகழ்வேன். பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் :
சினங்கொள்ளத் தாமதிப்பவர், அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர் :
தம் படைப்புகள் அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக:
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக;
உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**சகோதரன் சகோதரனுக்கு எதிராக வழக்காடுவதா?**
**அதுவும் அவிசுவாசிகள் முன்னிலையிலா?**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 1-11

சகோதரர்களே :

நீங்கள் ஒருவனுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும்போது, தீர்ப்புப் பெற இறை மக்களிடம் போகாமல், அவிசுவாசிகளிடம் போகத் துணிவானேன்? இறை மக்கள் இவ்வுலகத்துக்குத் தீர்ப்பிடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? உலகமே உங்கள்முன் தீர்ப்புக்காக நிற்க வேண்டியிருக்க, சின்னஞ்சிறிய வழக்குகளைத் தீர்க்க உங்களுக்குத் தகுதியில்லாமல் போய்விட்டதா? வானதூதர்களுக்கும் நாம் தீர்ப்பிடுவோம் என்பதை அறியீர்களோ? அப்படியிருக்க அன்றாட வாழ்க்கைக்குரியவற்றைத் தீர்க்கமுடியாதா? அத்தகைய வழக்குகள் இருந்தால் திருச்சபையின் மதிப்பைப் பெறாதவர்களை நடுவர்களாக ஏற்படுத்துவதெப்படி?

உங்களுக்கு வெட்கம் உண்டாகவே இதைச் சொல்லுகிறேன். சகோதரர்களுடைய வழக்கில் நடுவனாயிருக்கத்தக்க சான்றோன் உங்களிடையே ஒருவன்கூட இல்லையா? சகோதரன் சகோதரனுக்கு எதிராக வழக்காடுவதா? அதுவும் அவிசுவாசிகள் முன்னிலையிலா? ஒருவன்மீது ஒருவன் வழக்குத் தொடர்வதே உங்களுக்கு ஒரு தோல்வி. அநியாயத்தை நீங்கள் ஏன் தாங்கிக்கொள்ளக் கூடாது? பிறர் உங்கள் பொருளை வஞ்சித்துக் கவர ஏன் விட்டுவிடக் கூடாது? மாறாக நீங்களே அநியாயம் செய்கிறீர்கள். பிறர் பொருளை வஞ்சித்துக் கவர்கிறீர்கள். அதுவும் சகோதரர்களுக்கே இப்படிச் செய்கிறீர்கள்.

அநியாயம் செய்பவர்களுக்குக் கடவுளின் அரசு உரிமையாகாது என்பது உங்களுக்குத் தெரியாதா? ஏமாந்துபோக வேண்டாம். காமுகர், சிலைவழிபாட்டினர், விபசாரர், இயற்கைக்கு மாறான பாவம் செய்வோர், அதற்கு உடன்படுவோர், திருடர், பொருளாசை பிடித்தவர், குடிகாரர், பழி பேசுவோர், கொள்ளைக்காரர் இவர்களுக்குக் கடவுளின் அரசு

உரிமையாகாது. இத்தகையோர் உங்களிடையிலும் சிலர் இருந்தனர். ஆயினும் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயராலும், நம் கடவுளின் ஆவியாலும் உங்கள் பாவக் கறைகளைக் கழுவிப் போக்கிக்கொண்டீர்கள், பரிசுத்தராவீர்கள், இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்பட்டீர்கள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 149 : 1-2, 3-4, 5-6a & 9b (பல்லவி : 9a)

பல்லவி : **ஆண்டவர் தம் மக்கள் மீது அன்பு கூர்கிறார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்:
புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக !
2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து
அகமகிழ்வார்களாக :
சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக. பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக:
தம்புராவும் யாழும்கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிறார்:
தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார். பல்லவி

5 மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக:
தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
6 அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக:
இத்தகைய மகிமை அவர் தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

## அல்லேலூயா

அரு. 15 : 16

அல்லேலூயா. நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாகவும்,
அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவும்,
நானே உங்களைத் தேர்ந்துகொண்டேன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளை வேண்டுவதில் இரவெல்லாம் கழித்தார். பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அப்போஸ்தலர் என்று பெயரிட்டார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
*6 : 12-19*

அந்நாட்களில் யேசு செபிக்கும்படி மலைக்குச் சென்று கடவுளை வேண்டுவதில் இரவெல்லாம் கழித்தார்.

பொழுது புலர்ந்ததும், தம் சீடரை அழைத்து அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 'அப்போஸ்தலர்' என்று பெயரிட்டார். அவர்கள் யாரெனில்: இராயப்பர் என்று அவர் பெயரிட்ட சீமோன், அவருடைய சகோதரர் பெலவேந்திரர், யாகப்பர், அருளப்பர், பிலிப்பு, பார்த்தொலொமேயு, மத்தேயு, தோமையார், அல்பேயுவின் மகன் யாகப்பர், 'தீவிரவாதி' எனப்படும் சீமோன், யாகப்பரின் சகோதரர் யூதா, காட்டிக்கொடுத்தவனான யூதாஸ் இஸ்காரியோத்தும் ஆவர்.

அவர் அவர்களோடு இறங்கி வந்து சமதளமான ஓரிடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீடர்கள் பெருங்கூட்டமாய் இருந்தனர். யூதேயா முழுவதிலிருந்தும் யெருசலேமிலிருந்தும், தீர் சீதோன் கடற்கரையிலிருந்தும் மாபெரும் திரளாக மக்களும் வந்திருந்தனர். அவர் சொல்லுவதைக் கேட்கவும், தங்கள் நோய்கள் நீங்கிக் குணமாகவும் அவர்கள் வந்திருந்தனர். அசுத்த ஆவிகளால் தொல்லைப்பட்டவர்கள் குணமானார்கள்.

அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு யாவரையும் குணமாக்கியதால் அங்குத் திரண்டிருந்த யாவரும் அவரைத் தொடுவதற்கு முயன்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள்; ஆகவே உங்களில் உலகிற்கடுத்தவற்றைச் சாகச் செய்யுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 1-11

சகோதரர்களே :

கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான், கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகில் உள்ளவற்றின் மீது மனத்தைச் செலுத்தாமல் மேலுலகிலுள்ளவற்றின் மீதே மனத்தைச் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் இறந்துவிட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது. நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும்பொழுது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்.

ஆகவே உங்களில் உலகிற்கடுத்தவற்றைச் சாகச் செய்யுங்கள். கெட்ட நடத்தை, கற்பின்மை, காமம், தீய இச்சைகள், சிலை வழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள். இவையே, கடவுளுடைய சினத்தை வரவழைக்கின்றன. இத்தீயவற்றில் உழன்ற காலத்தில் நீங்களும் இவ்வாறுதான் நடந்துகொண்டீர்கள். ஆனால், இப்பொழுது நீங்கள் இதையெல்லாம் விலக்குங்கள். சினம், சீற்றம், தீயமனம் ஆகியவற்றையெல்லாம் நீக்குங்கள். பழிச்சொல், நாணங்கெட்ட பேச்சு எதுவும் உங்கள் வாயில் வராதிருக்கட்டும். இனி ஒருவரிடம் ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில் பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, தன்னை உண்டாக்கியவரின் சாயலுக்கேற்ப, உண்மை அறிவை அடையும் பொருட்டுப் புதுப்பிக்கப்பட்டு வரும் புதிய இயல்பை அணிந்துகொண்டீர்கள். இப்புது வாழ்வில் கிரேக்கனென்றும் யூதனென்றும் இல்லை; விருத்தசேதனம் பெற்றவனென்றும் பெறாதவனென்றும் இல்லை; மிலேச்சன் என்றும் சீத்தியன் என்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக்குடிமகனென்றும் இல்லை. கிறிஸ்துவே அனைவரிலும் அனைத்துமானவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 2-3, 10-11, 12-13 (பல்லவி : 9 a)

பல்லவி : **ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்.**

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன் :
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் :
அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக.
உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

12 இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்துகொள்வர்.
உமது மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்துகொள்வர்.
13 உமது அரசு ஊழி ஊழியாக உள்ள அரசு :
உம்முடைய ஆட்சி தலைமுறை தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**திருமணத்தால் பிணைக்கப்பட்டிருக்கிறாயா? மணமுறிவைத் தேடாதே. திருமணத்தால் பிணைக்கப்படாமல் இருக்கிறாயா? மணஞ் செய்யத் தேடாதே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 7 : 25-31

சகோதரர்களே :

மணமாகாதவர்களைக் குறித்து ஆண்டவர் அளித்த கட்டளை எதுவும் எனக்குத் தெரியாது. நம்பிக்கைக்குரியவனாய் இருக்கும்படி ஆண்டவரின் இரக்கத்தால் வரம்பெற்றவன் என்ற முறையில் என் கருத்தைச் சொல்லுகிறேன் : அதாவது, மணமாகாத ஒருவன் தான் இருக்கும் நிலையில் இருந்துவிடுவதே நல்லது. இப்போதைய நெருக்கடியை முன்னிட்டே அது நல்லதென எண்ணுகிறேன். திருமணத்தால் பிணைக்கப்பட்டிருக்கிறாயா? மணமுறிவைத் தேடாதே. திருமணத்தால் பிணைக்கப்படாமல் இருக்கிறாயா? மணஞ் செய்யத் தேடாதே. அப்படி நீ மணஞ்செய்துகொண்

டாலும், அது பாவமில்லை. அங்ஙனமே கன்னிப்பெண் மணஞ்செய்து கொண்டாலும், அது பாவமில்லை. ஆனால் இவர்களெல்லாரும் இவ்வுலக வாழ்வில் வேதனை அடைவார்கள். இதற்கு நீங்கள் உள்ளாகக்கூடா தென்று இவ்வாறு சொல்லுகிறேன்.

சகோதரர்களே, நான் சொல்வது இதுதான் : இனியுள்ள காலம் குறுகியதே. இனி மனைவி உள்ளவர்களும் மனைவி இல்லாதவர்களைப்போல் இருக்கட்டும். துயருறுவோர் துயரத்திலேயே ஆழ்ந்தவர்கள்போலவும், மகிழ்ச்சியுறுவோர் மகிழ்ச்சியிலேயே மயங்கினவர்கள் போலவும் இருத்த லாகாது. பொருளை விலைக்கு வாங்குவோர், அதைத் தமக்கென்றே வைத்துக்கொள்ளாமலும், இவ்வுலகப் பயனைத் துய்ப்போர், அதிலேயே ஆழ்ந்துவிடாமலும் இருக்கட்டும். ஏனெனில், இவ்வுலகத்தின் அமைப்பு கடந்து செல்லுகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 44 : 10-11, 13-14, 15-16* (பல்லவி : 10a)

பல்லவி : மகளே, நான் சொல்வது கேள்,
நினைத்துப்பார், இதற்குச் செவிசாய்.

10 மகளே, நான் சொல்வது கேள், நினைத்துப்பார்,
இதற்குச் செவிசாய், உன் இனத்தாரையும் வீட்டாரையும் மறந்துவிடு.
11 அரசர் உன் பேரெழிலை விரும்புவார் :
அவரே உன் தலைவர், அவருக்குத் தலை வணங்கு. பல்லவி

13 அரசனின் மகள் எழில் மிக்கவளாய் இதோ வருகின்றாள் :
பொன் இழை ஆடையை அணிந்துள்ளாள்.
14 பன்னிற ஆடையை அணிந்தவளாய் அவள் அரசரிடம்
அழைத்து வரப்படுகின்றாள் :
இளந்தோழியரும் அவளோடு உம்மிடம் வருகின்றனர். பல்லவி

15 மகிழ்ச்சியோடும் அக்களிப்போடும் அவர்கள் அழைத்து வரப்படுகின்றனர்:
அரச மாளிகையில் அவர்கள் இதோ நுழைகின்றனர்.
16 உன் முன்னோருக்குப் பதிலாக உனக்குப் புதல்வர்கள் இருப்பர் :
மாநிலமனைத்திற்கும் அவர்களை நீ தலைவர்களாக்குவாய். பல்லவி

அல்லேலூயா லூக் 6 : 23ab

அல்லேலூயா. துள்ளி அகமகிழுங்கள், என்கிறார் ஆண்டவர் ;
ஏனெனில், இதோ! வானகத்தில்
உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
6 : 20-26

அக்காலத்தில் :

யேசு தம் சீடரை ஏறெடுத்துப் பார்த்துக் கூறியதாவது :

“ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள் : ஏனெனில், கடவுளின் அரசு உங்களதே. இப்பொழுது பசியாய் இருப்பவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள் ; ஏனெனில், நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுபவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள் ; ஏனெனில், சிரிப்பீர்கள்.

மனுமகன் பொருட்டு மனிதர் உங்களை வெறுத்துப் புறம்பாக்கி வசை கூறி, உங்கள் பெயரே ஆகாது என்று இகழ்ந்து ஒதுக்கும்பொழுது நீங்கள் பேறுபெற்றவர்கள். அந்நாளில் துள்ளி அகமகிழுங்கள். ஏனெனில், இதோ! வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய முன்னோரும் இறைவாக்கினருக்கு அவ்வாறே செய்தனர்.

“ஆனால் பணக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், உங்களுக்கு ஆறுதல் கிடைத்துவிட்டது. இப்பொழுது திருப்தியாயிருப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், பசியாயிருப்பீர்கள். இப்பொழுது சிரிப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், துயருற்று அழுவீர்கள். மனிதர் எல்லாரும் உங்களைப் புகழும்பொழுது உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், அவர்களுடைய முன்னோரும் போலித் தீர்க்கதரிசிகளுக்கு அவ்வாறே செய்தனர்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அன்பை அணிந்துகொள்ளுங்கள்: அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிப்பது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 12-17

சகோதரர்களே :

கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டு அவரால் அன்பு செய்யப்பட்ட இறைமக்கள் நீங்கள். இரங்கும் உள்ளம், பரிவு, தாழ்ச்சி, சாந்தம், பொறுமை ஆகிய பண்புகளை அணிந்துகொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள் ; ஒருவர் மீது ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால், மன்னித்துவிடுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் மன்னியுங்கள்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அன்பை அணிந்துகொள்ளுங்கள். அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிப்பது. கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி புரிவதாக. இச்சமாதானத்திற்கே நீங்கள் ஒரே உடலின் உறுப்பினராய் அழைக்கப் பட்டீர்கள். நன்றியுள்ளவர்களாயும் இருங்கள்.

கிறிஸ்துவின் வார்த்தை நிறை வளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக. முழு ஞானத்தோடு ஒருவருக்கொருவர் போதியுங்கள் ; அறிவு புகட்டுங்கள். தேவ ஆவி ஏவிய சங்கீதங்களையும் புகழ்ப்பாக்களையும் பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடுங்கள். எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவராகிய யேசுவின் பெயரால் செய்து, அவர் வழியாகத் தந்தையாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 150 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 6)

பல்லவி : **உயிருள்ளதெல்லாம் ஆண்டவரைப் புகழ்ந்தேத்துவதாக.**

அல்லது : **அல்லேலூயா.**

1 **ஆண்டவர் தம் திருத்தலத்தில் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :**
**மாண்பு மிக்க வான்தலத்தில் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.**
2 **அவருடைய மாண்பு மிக்க செயல்களை நினைத்து**
**அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :**
**அவரது உன்னத மாட்சியை நினைத்து அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.** பல்லவி

3 எக்காளத் தொனி முழங்க அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
வீணையுடன் யாழ் இசைத்து அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
4 முரசொலித்து, நடனம் செய்து அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
நரம்பிசைத்து, குழல் ஊதி அவரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

5 நாதமிகு தாளத்துடன் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
கைத்தாள ஒலி முழங்க அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
6 உயிருள்ளனவெல்லாமே அவரைப் புகழ்ந்தேத்துவனவாக. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## இரண்டாம் வாசகம்

**நீங்கள் சகோதரர்களுடைய வலிமையற்ற மனச்சான்றைக் காயப்படுத்துவதால், கிறிஸ்துவுக்கு எதிராகவே பாவஞ் செய்கிறீர்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 8 : 1b-7, 11-13

சகோதரர்களே :

அறிவு இறுமாப்பையே உண்டாக்கும்: அன்புதான் ஞான வளர்ச்சி தரும். தனக்கு அறிவு உண்டு என நினைக்கிறவன் அறியவேண்டிய முறையில் எதையும் இன்னும் அறிந்துகொள்ளாதவன். ஆனால் கடவுளிடம் ஒருவனுக்கு அன்பிருந்தால், அவனை அவர் அறிந்திடுவார். இனி, சிலைகளுக்குப் படைத்த பொருளைக்குறித்து நீங்கள் அறியவேண்டியது:

உலகிலே தெய்வத்தின் சிலையென்பது ஒன்றுமே இல்லை, ஒரே கடவுளைத்தவிர வேறில்லை. இது நமக்குத் தெரிந்ததே. கடவுளர் எனக் கருதப்படுவோர் வானத்திலும் வையத்திலும் பலர் இருக்கலாம்; இத்தகைய கடவுளர் பலரும், ஆண்டவர்கள் பலரும் இருந்தே வருகிறார்கள். நமக்கோ கடவுள் ஒருவரே; அவர் பரம தந்தை; அவரிடம் இருந்தே எல்லாம் வந்தன; அவருக்காகவே நாம் இருக்கிறோம்; ஆண்டவரும் ஒருவர்தான்; அவர் யேசு கிறிஸ்துவே; அவராலேயே எல்லாம் உண்டாயின: நாமும் அவராலேயே உண்டானோம். ஆனால் இந்த அறிவு எல்லாரிடமும் இல்லை. இதுவரையில் இருந்துவந்த சிலைவழிபாட்டுப் பழக்கத்தால், படைக்கப்பட்ட உணவைத் தெய்வத்திற்கு அர்ப்பணித்த தாகக் கருதி உண்போரும் சிலர் உள்ளனர்.

இங்ஙனம் உனக்குள்ள அறிவால், வலிமையற்றவன் அழிந்து போகிறான்; அவன் உன் சகோதரன் அல்லனோ? அவனுக்காகக் கிறிஸ்து உயிர் துறந்தாரல்லரோ? இவ்வாறு நீங்கள் சகோதரர்களுடைய வலிமை யற்ற மனச்சான்றைக் காயப்படுத்தி, அவர்களுக்கு எதிராகப் பாவஞ் செய்கிறீர்கள். ஆகையால், நான் உண்ணும் உணவு என் சகோதரனுக்கு இடறலாயிருக்குமாயின், சகோதரனுக்கு இடறல் ஆகாதபடி நான் ஒரு போதும் புலால் உண்ணவே மாட்டேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 138 : 1-3, 13-14ab, 23-24 (பல்லவி : 24b)*

பல்லவி : ஆண்டவரே, முன்னோர் காட்டிய வழியில்
என்னை நடத்தியருளும்.

1 ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர் :
2 நான் அமர்வதும் எழுவதும், என்வாழ்க்கை முழுவதுமே
நீர் அறிந்திருக்கிறீர் :
என் நினைவுகள் எல்லாம் முன்பிருந்தே உமக்கு வெளிச்சம்.
3 நான் நடப்பதும் படுப்பதும் எல்லாமே நீர் அறிந்துள்ளீர்:
நான் செல்லும் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தனவே. பல்லவி

13 ஏனெனில், நீரே என் உள் உறுப்புகளை உண்டாக்கினீர் :
என் தாயின் கருவில் என்னை உருவாக்கியவர் நீரே.
14 இவ்வளவு வியப்புக்குரிய விதமாய் நீர் என்னைப் படைத்ததை நினைத்து
நான் உம்மைப் போற்றுகிறேன் :
உம்முடைய செயல்கள் அதிசயமுள்ளவை. பல்லவி

23 இறைவா, நீர் என் உள்ளத்தைப் பரிசோதித்து அறியும் :
உள் உணர்வுகளை அறிந்தவராய் என்னைச் சோதித்துப் பாரும்.
24 தீய வழியில் நான் செல்கின்றேனோ என்று பாரும் :
முன்னோர் காட்டிய வழியில் என்னை நடத்தியருளும். பல்லவி

அல்லேலூயா 1 அரு. 4 : 12

அல்லேலூயா. நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால், கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார்; அவரது அன்பு நம்மிடம் நிறைவுற்றிருக்கிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

6 : 27-38

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"நான் சொல்வதைக் கேட்டுகொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன் : உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். உங்களைத் தூற்றுவோருக்காகச் செபியுங்கள்.

ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு, மறு கன்னத்தையும் காட்டு. உன் மேலாடையைப் பறிப்பவனுக்கு, உள்ளாடையையும் மறுக்காதே.

உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் தமக்கு அன்பு செய்பவர்களுக்கு அன்பு செய்கின்றனரே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் அவ்வாறு செய்கின்றனரே. எவரிடமிருந்து திரும்பிப்பெற எதிர்பார்க்கிறீர்களோ, அவர்களுக்கே கடன் கொடுத்தால் உங்களுக்கு என்ன பலன்? ஏனெனில், சரிக்குச் சரி பெறுமாறு பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கின்றனரே.

உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள், அவர்களுக்கு நன்மை புரியுங்கள். ஒன்றும் எதிர்பாராமல் கடன் கொடுங்கள். அப்போது உங்களுக்கு மிகுதியான கைம்மாறு கிடைக்கும். உன்னதரின் மக்களாயிருப்பீர்கள். ஏனெனில், அவர் நன்றிகெட்டவர்க்கும் தீயவர்க்கும் பரிவு காட்டுகிறார்.

உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெற மாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில், எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## வெள்ளி

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

**நானே முன்னர் கடவுளை நிந்தித்தேன் : இருப்பினும் இறைவனின் இரக்கத்தைப் பெற்றேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்தின் தொடக்கம் 1 : 1-2, 12-4

விசுவாச வாழ்வில் என் உண்மை மகனாகிய தீமோத்தேயுவுக்கு, நம் மீட்பராகிய கடவுளிடமிருந்தும், நம் நம்பிக்கையாகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் பெற்ற கட்டளையால், யேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனான சின்னப்பன் யான் எழுதுவது : பரம தந்தையாகிய கடவுளிடமிருந்தும், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உமக்கு அருளும் இரக்கமும் சமாதானமும் உண்டாகுக!

என்னை உறுதிப்படுத்திய நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். ஏனெனில், என்னைத் தம் ஊழியத்திற்கு ஏற்றுத் தம் நம்பிக்கைக்குத் தகுதியுள்ளவன் எனக் கருதினார். நானே முன்னர் கடவுளை நிந்தித்தேன். திருமறையைத் துன்புறுத்தினேன்.

கொடுமை புரிந்தேன். இருப்பினும் இறைவனின் இரக்கத்தைப் பெற்றேன். ஏனெனில், விசுவாசத்தைப் பெருத நிலையில் அறியாமையால் அவ்வாறு நடந்தேன். கிறிஸ்து யேசுவுக்குள் நாம் பெற்றுக்கொள்ளும் விசுவாசத்தோடும் அன்போடும் நம் ஆண்டவருடைய அருள் இணைந்து அளவின்றிப் பெருகலாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 15 : 1-2a & 5, 7-8, 11 (பல்லவி : 5a காண்)*

பல்லவி : **ஆண்டவரே, என் உரிமைச் சொத்து நீரே.**

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.
2 " நீரே என் ஆண்டவர் " என்று ஆண்டவரிடம் சொன்னேன்.
5 ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம் :
எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே. பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன் :
இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன் :
அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர் :
உம் திருமுன் எனக்கு நிறை மகிழ்ச்சியையும்,
உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒரு சிலரையாவது மீட்க, எல்லார்க்கும் எல்லாம் ஆனேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 9 : 16-19, 22-27

சகோதரர்களே :

நற்செய்தியை அறிவிப்பதுகூட நான் பெருமைப்படுவதற்குரியதன்று, அது என்மேல் சுமத்தப்பட்ட கடமையே. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ! எனக்குக் கேடு; நானாகவே இந்த வேலையை மேற்கொண்டிருந்தால், அதற்குத் தக்க ஊதியம் கிடைத்திருக்கும். ஆனால் அது என்மேல் சுமத்தப்பட்டதாயிருப்பதால், கண்காணிப்பாளன் என என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவலையே செய்கிறேன். ஆகவே, எனக்குரிய ஊதியம் எது? நற்செய்தியை நான் அறிவிக்கும்போது அந்த நற்செய்தி எனக்குத் தரும் உரிமையைப் பயன்படுத்திக்கொள்ளாமல், உங்களுக்கு எச்செலவுமின்றி, அந்நற்செய்தியை வழங்குவதே எனக்குரிய ஊதியம். இவ்வாறாக, நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும், மிகுதியான மக்களை வசமாக்க என்னையே எல்லார்க்கும் அடிமையாக்கினேன்.

வலிமையற்றவர்களை வசமாக்க, வலிமையற்றவர்களுக்கு வலிமையற்றவன் ஆனேன். எப்படியேனும் ஒரு சிலரையாவது மீட்க, எல்லார்க்கும் எல்லாம் ஆனேன். நற்செய்தியின் பலனில், பங்குபெற வேண்டி நற்செய்திக்காகவே இவையெல்லாம் செய்கிறேன்.

பந்தயத் திடலில் ஓட வந்திருப்போர் எல்லாரும் ஓடினாலும், பரிசு பெறுபவன் ஒருவனே என்பது உங்களுக்குத் தெரியாதா? பரிசு பெறுவதற்காக நீங்களும் அவர்களைப்போல் ஓடுங்கள். பந்தயத்தில் போட்டியிடுகிறவர்கள் எல்லாரும் தங்களை எல்லாவகையிலும் ஒடுக்குகிறார்கள்; அவர்கள் அழிவுறும் வெற்றிவாகை பெறுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். நாமோ அழியாத வெற்றிவாகை அடைவதற்காக இப்படிச் செய்கிறோம். ஆகையால் நான் ஓடுவது குறிக்கோள் இல்லாமல் அன்று, நான் மற்போர்புரிவது காற்றில் குத்துபவன்போல் அன்று. பிறருக்கு நற்செய்தி அறிவித்தபின், நானே தகுதியற்றவன் என நீக்கப்படாதவாறு என் உடலை ஒறுத்து அடிமைப்படுத்துகிறேன்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 83 : 2, 3, 4-5, 11bcd (பல்லவி : 1)

பல்லவி வான் படைகளின் ஆண்டவரே,
உமதில்லம் எத்துணை அருமையானது !

2 என் ஆன்மா ஆண்டவருடைய ஆலய முற்றங்களை
விரும்பித் தேடிச் சோர்ந்து போகின்றது :
என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனை நினைந்து களிகூர்கின்றன.
பல்லவி

3 அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத்
தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்தது :
சேனைகளின் ஆண்டவரே, என் அரசே, என் இறைவா,
உம் பீடங்கள் உள்ள இடத்திலே கிடைத்தது. பல்லவி

4 ஆண்டவரே, உம் இல்லத்தில் வாழ்வோர் பேறு பெற்றோர் :
எந்நாளும் உம்மைப் புகழ்வார்கள்.
5 திருயாத்திரை செய்வதிலே நினைவாயிருந்து,
உம்மிடம் உதவி பெறுபவன் பேறு பெற்றவன். பல்லவி

11 ஆண்டவராகிய கடவுளே, கதிரோனும் கேடயமுமாய் உள்ளார் :
அருளும் மாட்சியும் தருபவர் ஆண்டவரே,
மாசின்றி நடப்போர்க்கு எந்த நலனையும் மறுக்கமாட்டார். பல்லவி

அல்லேலூயா அரு 17 : 17 b, 17a

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை :
உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**குருடர் குருடருக்கு வழிகாட்ட முடியுமா?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
6 : 39-42

அக்காலத்தில் :

யேசு தம் சீடர்களுக்கு ஓர் உவமையும் கூறினார் : "குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இருவரும் குழியில் விழமாட்டார்களா? சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்லன். தேர்ச்சி பெற்ற எவனும் தன் குருவைப் போலிருப்பான்.

உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன்? உன் கண்ணிலுள்ள விட்டத்தைப் பார்க்காத நீ, உன் சகோதரனை நோக்கி, 'தம்பி, உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுக்க விடு' என்று எப்படிச் சொல்லலாம்?

வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்தெறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்றாய்க் கண் தெரியும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**பாவிகளை மீட்கவே இவ்வுலகத்திற்கு வந்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்
1 : 15-17

அன்புக்குரியவரே :

'பாவிகளை மீட்கவே யேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார்' – என்னும் மொழி உண்மையானது. எல்லாரும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. அந்தப் பாவிகளிலெல்லாம் பெரும்பாவி நானே. இருப்பினும் இறைவனின்

இரக்கத்தைப் பெற்றேன். எதற்கெனில், யேசு கிறிஸ்து முதன்முதல் என்னிடம் நீடிய பொறுமையைக் காட்ட விரும்பினர். இவ்வாறு, அவரில் விசுவாசம் கொண்டு, முடிவில்லா வாழ்வு பெறவேண்டியவர்களுக்கு நான் மாதிரியானேன்.

உலகெல்லாம் ஆளும் அரசன் அழிவிலான், கண்ணுக்குப் புலப்படான், ஒரே கடவுளுக்கென்றென்றும் மகிமையும் மாட்சியும் உண்டாகுக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 112 : 1-2, 3-4, 5a & 6-7 (பல்லவி : 2 காண்)

பல்லவி : ஆண்டவருடைய திருப்பெயர்
என்றென்றும் வாழ்த்தப்பெறுவதாக.

1 ஆண்டவர்தம் ஊழியர்களே, அவரைப் போற்றுங்கள் :
அவருடைய திருப்பெயரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவருடைய திருப்பெயர் வாழ்த்தப் பெறுவதாக:
இன்றும் என்றும் வாழ்த்தப் பெறுவதாக. பல்லவி

3 கீழ்த்திசைமுதல் மேற்றிசைவரை
ஆண்டவருடைய திருப்பெயர் போற்றப்படுவதாக.
4 மக்கள் இனங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர் :
வானங்களையும்விட உயர்ந்தது அவரது மாட்சிமை. பல்லவி

5,6 உன்னதத்தில் வீற்றிருந்து வானத்தையும் வையத்தையும் ஊடுருவிப்
பார்க்கும் நம் ஆண்டவராகிய கடவுளைப்போல் வேறு யார் உண்டு!
7 வறியவனைத் தரையிலிருந்து தூக்கி விடுகிறார் :
ஏழையைக் குப்பை மேட்டிலிருந்து தூக்கி விடுகிறார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்; ஏனெனில்
நாம் அனைவரும் ஒரே அப்பத்தில்தான் பங்குபெறுகிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *10 : 14-22*

என் அன்புக்குரியவர்களே, சிலைவழிபாட்டை விட்டு விலகுங்கள். உங்களை விவேகிகள் என்று மதித்துப் பேசுகிறேன்; நான் சொல்லப் போவதைக் குறித்து நீங்களே ஆய்ந்து முடிவு செய்யுங்கள். திருக் கிண்ணத்தை ஏந்தி நாம் இறைபுகழ் கூறுகிறோமே; அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அன்றோ? நாம் அப்பத்தைப் பிட்கிறோமே; அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அன்றோ? அப்பம் ஒன்றே; ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்; ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குபெறுகிறோம். பழைய இஸ்ராயேல் மக்களைப் பாருங்கள்; பலிப்பொருளை உண்பவர்கள் பலிப் பீடத்தோடு உறவு கொள்கிறார்கள் அல்லரோ?

இப்படி நான் சொல்லும்போது, சிலைகளுக்குப் படைத்ததையோ, சிலையையோ பொருட்படுத்த வேண்டுமென்பதா என் கருத்து? இல்லை, சிலைகளுக்குப் படைப்பவர்கள் பலியிடுவது கடவுளுக்கு அன்று, பேய்களுக்கே என்பதுதான் கருத்து. நீங்கள் இவ்வாறு பேய்களோடு உறவு கொண்டவர்களாவதை நான் விரும்பேன். நீங்கள் ஆண்டவரின் கிண்ணத்திலும் பேய்களின் கிண்ணத்திலும் பருக இயலாது. ஆண்டவரின் பந்தியிலும் பேய்களின் பந்தியிலும் பங்குபெற இயலாது. ஆண்டவருக்குச் சினமூட்ட நினைப்பதா? அவரைவிட நாம் ஆற்றல் மிக்கவர்களோ!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 115 : 3-4, 8-9 (பல்லவி : 8a)

பல்லவி : **புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன், ஆண்டவரே.**

அல்லது : **அல்லேலூயா.**

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் என்ன கைம்மாறு செய்வேன் ?
4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து,
ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்
ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன்.
9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு
என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

அல்லேலூயா அரு. 14 : 23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால்,
என் வார்த்தையைக் கேட்பான்.
என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார் :
நாங்களும் அவனிடம் வந்து,
அவனோடு குடிகொள்வோம்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் சொல்வதைச் செய்யாமல், ' ஆண்டவரே, ஆண்டவரே' என்று என்னை நீங்கள் அழைப்பானேன் ?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

6 : 43-49

அக்காலத்தில் யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது :

"கெட்ட கனி தரும் நல்ல மரமில்லை ; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே. ஏனெனில், முட்செடியில் அத்திப்பழம் பறிப்பாருமில்லை : நெருஞ்சியில் திராட்சைகுலை கொய்வாருமில்லை. நல்லவன் தன் உள்ளமாகிய நற்கரு

லூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக் கொடுக்கிறான். தீயவனோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுக்கிறான். ஏனெனில், உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்.

நான் சொல்லுவதைச் செய்யாமல் 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று என்னை நீங்கள் அழைப்பானேன்? என்னிடம் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்பவன் எவனும் யாருக்கு ஒப்பாவான் என்று உங்களுக்குக் கூறுவேன்.

அவன், ஆழத்தோண்டி, பாறைமீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டுகிறவனுக்கு ஒப்பாவான். ஆறு பெருக்கெடுத்து வீட்டின்மீது மோதியும், அதை அசைக்க முடியாமல் போயிற்று. ஏனெனில், நன்றாகக் கட்டியிருந்தது.

ஆனால், கேட்டும் அதன்படி நடக்காதவன், அடித்தளமில்லாமல் மண்மீது வீடு கட்டியவனுக்கு ஒப்பாவான். ஆறு அதன்மீது மோதியதும் அது இடிந்து விழுந்தது. அவ்வீட்டிற்குப் பெரும் அழிவு ஏற்பட்டது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்து நான்காம் வாரம்

# ஞாயிறு முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**உனக்குத் தீமை செய்யும் அயலானுக்கு மன்னிப்புக்கொடு; அப்போதுதான் நீ மன்றாடும்போது உனக்கும் பாவங்கள் மன்னிக்கப்படும்.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* *27 : 33 - 28 : 9*

கோபம், வெறி இவை இரண்டும் வெறுப்புக்குரியவை. ஆனால், பாவிகளிடம் இவை இரண்டும் உண்டு.

பழிவாங்க ஆசைப்படுகிறவனைக் கடவுள் தாமே பழிவாங்குவார். அவன் பாவங்களை அவர் ஒருபோதும் மறக்கமாட்டார்.

உனக்குத் தீமை செய்யும் அயலானுக்கு மன்னிப்புக்கொடு; அப்போதுதான் நீ மன்றாடும்போது உனக்கும் பாவங்கள் மன்னிக்கப்படும். மனிதன் மற்றொருவனை மன்னிக்காது இருக்கிறான். ஆனால், தன்னை மன்னிக்கும்படி கடவுளைக் கேட்கிறான். தன்னைப் போன்ற மனிதன்மீது அவனுக்கு இரக்கம் இல்லை; ஆனால் தன் பாவங்களுக்காக மன்றாடுகிறான். அழிவுள்ள மனிதனை அவன் கோபம் பாராட்டுகிறான்; கடவுளிடமோ மன்னிப்புக் கேட்கிறான். அவன் குற்றங்களுக்காக மன்றாடுகிறவன் யார்?

உன் முடிவுகளை நினைத்துப் பகைமையை விட்டுவிடு. கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதவர்மேல் அழிவும் சாவும் அடுத்திருக்கின்றன. தெய்வ பயத்தோடு நட. அயலான்மேல் கோபம் கொள்ளாதே. உன்னத கடவுளின் உடன்படிக்கையை நினைத்துக்கொள். அயலானுடைய அறியாமையைப் பொருட்படுத்தாதே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 9-10, 11-12 (பல்லவி : 8)

பல்லவி : ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர் :
சினம்கொள்ளத் தாமதிப்பவர்; சாந்தமுடையவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக :
என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக :
அவர் செய்த நன்மைகளை எல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்.
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்.
அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர் :
எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை :
நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ,
அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு
காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து
அகற்றிவிடுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

வாழ்ந்தாலும் செத்தாலும் நாம் ஆண்டவர்க்கே உரியவர்களாய் இருக்கிறோம்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 14 : 7-9

சகோதரர்களே :

நம்முள் எவனும் தனக்கென்று வாழ்வதில்லை. தனக்கென்று சாவதில்லை. வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம், செத்தாலும் ஆண்டவருக்கென்றே சாகிறோம். ஆகவே வாழ்ந்தாலும் செத்தாலும்

நாம் ஆண்டவர்க்கே உரியவர்களாய் இருக்கிறோம்: ஏனெனில் கிறிஸ்து இறந்ததும் உயிர்த்ததும் இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு 13 : 34

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்:
நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல்
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஏழுமுறை என்றன்று, எழுபதுமுறை ஏழுமுறை
மன்னிப்பாயாக என்று உனக்குச் சொல்லுகிறேன்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18:21-35

அக்காலத்தில்:

இராயப்பர் யேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றஞ் செய்துவந்தால், நான் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை வரைக்குமா?" என்று கேட்டார். அதற்கு யேசு கூறியதாவது: "ஏழு முறை என்றன்று, எழுபது முறை ஏழு முறை என உனக்குச் சொல்லுகிறேன்.

ஆகவே விண்ணரசு, தன் ஊழியரிடம் கணக்குக் கேட்க விரும்பிய ஓர் அரசனுக்கு ஒப்பாகும். கணக்குக் கேட்கத் தொடங்கியபொழுது, அவனிடம் பத்தாயிரம் 'தாலந்து' கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் கடன்தீர்க்க வகையற்றிருந்ததால், அவனையும் அவன் மனைவி மக்களையும் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் விற்றுக் கடனைத் தீர்க்குமாறு தலைவன் கட்டளையிட்டான். அவ்வூழியனோ அவன் காலில் விழுந்து, 'பொறுத்துக்கொள்ளும்; கடன் எல்லாம் தீர்த்துவிடுகிறேன்' என்று வேண்டினான். அவ்வூழியனுடைய தலைவன் மனமிரங்கி அவன் கடனை மன்னித்து அவனை விட்டுவிட்டான்.

அவ்வூழியன் வெளியே சென்றதும், தன் உடனூழியரில் தன்னிடம் நூறு வெள்ளிக்காசு கடன்பட்ட ஒருவனைக் கண்டான். அவனைப் பிடித்துக் கழுத்தை நெரித்து, 'நீ பட்ட கடனைத் தீர்த்துவிடு' என்று கேட்டான். அந்த உடனூழியன், காலில் விழுந்து, 'பொறுத்துக்கொள்ளும்; எல்லாம் தீர்த்துவிடுகிறேன்' என்று வேண்டினான். அவனோ இணங்கவில்லை. ஆனால், கடனைத் தீர்க்குமட்டும் அவனைச் சிறையில் அடைத்தான்.

அவனுடைய உடனூழியர் நடந்ததைக் கண்டு மிகவும் வருந்தித் தலைவனிடம் சென்று நடந்ததையெல்லாம் அறிவித்தனர். அப்போது அவனுடைய தலைவன் அவனை அழைத்து, 'கெட்ட ஊழியனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால் உன் கடனையெல்லாம் மன்னித்தேனே. ஆகவே, நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல, நீயும் உன்னுடைய உடனூழியனுக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டாமா?' என்று கேட்டு, சினந்து, கடன் முழுவதும் தீர்க்கும்வரை வதைப்போரிடம் அவனைக் கையளித்தான்.

உங்களுள் ஒவ்வொருவனும் தன் சகோதரனை முழு உள்ளத்தோடு மன்னிக்காவிட்டால், என் வானகத் தந்தையும் இவ்வாறே உங்களுக்குச் செய்வார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 50 : 5-9a

கடவுளாகிய ஆண்டவர் என் காதுகளைத் திறந்தார், நானோ அவரை எதிர்த்துப் பேசவில்லை, அவரை விட்டுப் பின்வாங்கிப் போகவில்லை. துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன். தாடியைப் பிய்க்கிறவர்களுக்கு என் கன்னங்களைக் காட்டினேன்; நிந்தை கூறுவோர்க்கும், காறி உமிழ்வோர்க்கும், என் முகத்தை மறைத்துக் கொள்ளவில்லை. கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணை நிற்கிறார். ஆதலால் நான் கலக்கம் கொள்ளேன்; ஆதலால் என் முகத்தைக் கருங்கல்போல வைத்துக் கொண்டேன், அதற்காக வெட்கப்படேன் என்பது எனக்குத் தெரியும். என் சார்பில் தீர்ப்பு வழங்குபவர் அருகில் நிற்கிறார். எனக்கு எதிராய் வழக்குத் தொடுப்பவன் எவன்? நடுவர்முன் ஒருமிக்க எழுந்து நிற்போம். என்மேல் குற்றம் சுமத்துகிறவன் யார்? அவன் என்னை அணுகி வரட்டும். இதோ, கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணை நிற்கிறார், என்னைக் குற்றவாளியெனத் தீர்ப்பிடுகிறவன் யார்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 114: 1-2, 3-4, 5-6, 8-9 (பல்லவி : 9)

பல்லவி : நான் ஆண்டவர் திருமுன் நடந்திடுவேன் :
வாழ்வோர் நாட்டில் வாழ்ந்திடுவேன்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவர்மீது அன்பு வைத்தேன்.
ஏனெனில், என் மன்றாட்டின் குரலை அவர் கேட்டருளினார்.
2 ஏனெனில், அவரை நான் மன்றாடிய நாளில்
எனக்குச் செவி சாய்த்தருளினார். பல்லவி

3 மரணத்தின் தளைகள் என்னை வளைத்துக்கொண்டன;
பாதாளங்களின் கண்ணிகள் என்னைப் பற்றிக்கொண்டன;
கவலைக்கும் துன்பத்துக்கும் நான் ஆளானேன்.
4 நானோ ஆண்டவருடைய பெயரைக் கூவி அழைத்தேன்:
'ஓ ஆண்டவரே, என் உயிரைக் காத்தருளும்'
என்று வேண்டினேன். பல்லவி

5 ஆண்டவர் கருணையும் நீதியுமுள்ளவர்:
நம் இறைவன் இரக்கமுள்ளவர்.
6 எளியோரை ஆண்டவர் காக்கின்றார்:
துயர் மிக்கவனான எனக்கு மீட்பளித்தார். பல்லவி

8 ஏனெனில், என் ஆன்மாவை மரணத்தினின்று விடுவித்தார்:
நான் கண்ணீர் சிந்தாதபடியும்
என் கால்கள் இடறி விழாதபடியும் காப்பாற்றினார்.
9 நான் ஆண்டவர் திருமுன் நடந்திடுவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**செயலோடு கூடியதாய் இராத விசுவாசம் உயிரற்றதாகும்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *2 : 14-18*

என் சகோதரர்களே, தன்னிடம் விசுவாசம் உண்டு எனச் சொல்லுகிறவன் செயலில் அதைக் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த விசுவாசம் அவனை மீட்க முடியுமா? போதிய உடையோ அன்றாட உணவோ இல்லாத சகோதர சகோதரி யாரேனும் இருந்தால், தேவையானது ஒன்றையும் கொடாமல், ஒருவன் அவர்களைப் பார்த்து, "சுகமாகப் போய் வாருங்கள்; குளிர் காய்ந்துகொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்" என்பானாகில் பயன் என்ன? விசுவாசமும் இதைப்போலவே செயலோடு கூடியதாய் இராவிட்டால், அது தன்னிலே உயிரற்றதாகும்.

ஆனால், "ஒருவனிடம் விசுவாசம் உள்ளது, இன்னொருவனிடம் செயல் உள்ளது; அதனால் என்ன?" என்று யாராவது சொல்லக்கூடும். செயல்கள் இல்லாத அந்த விசுவாசத்தை எனக்குக் காட்டு. நான் செயல்களைக்கொண்டு என் விசுவாசத்தை உனக்குக் காட்டுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

கலாத். 6 : 14

**அல்லேலூயா.** நானோ ஆண்டவருடைய சிலுவையிலன்றி வேறெதிலும் ஒருகாலும் பெருமை பாராட்டமாட்டேன்: அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது. நானும் உலகத்திற்கு அறையுண்டவனாய் இருக்கிறேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீர் மெசியா ... மனுமகன் பாடுகள் பல பட வேண்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 27-35

அக்காலத்தில் :

**யேசு தம் சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போனார். வழியில் தம் சீடரை நோக்கி, " மக்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள் ? " எனக் கேட்டார்.**

**அதற்கு அவர்கள், " சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் இறைவாக்கினர்களுள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் " என்றனர்.**

**பின் அவர், " நீங்களோ என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் ? " என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர் மறுமொழியாக, " நீர் மெசியா " என்றார். தம்மைப்பற்றி யாருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.**

**மேலும் மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும், தலைமைக் குருக்களாலும், மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டுக் கொலையுண்டு, மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இதெல்லாம் வெளிப்படையாகச் சொன்னார்.**

**இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து அவரைக் கடிந்துகொண்டார். அவர் தம் சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து, " போ பின்னாலே, சாத்தானே, ஏனெனில் உன் கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல, மனிதனுடைய கருத்துக்களே " என்று இராயப்பரைக் கடிந்து கொண்டார்.**

பின் தம் சீடரையும் கூட்டத்தையும் அழைத்து, "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக்கொள்வான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவருக்குக் கோபம் தணிந்து, தாம் செய்வதாகச் சொல்லியிருந்த கேட்டினைச் செய்யாமல் விட்டுவிட்டார்.**

*யாத்திராகமத்திலிருந்து வாசகம்* *32 : 7-11, 13-14*

*அந்நாட்களில் :*

ஆண்டவர் மோயீசனுக்குத் திருவாக்கருளி: இறங்கிப்போ. நீ எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் மக்கள் பாவம் செய்தார்கள். நீ அவர்களுக்குக் காண்பித்த வழியை அவர்கள் எவ்வளவு விரைவாய் விட்டு விலகி, தங்களுக்கு வார்ப்பினால் கன்றுக்குட்டியொன்றைச் செய்து ஆராதித்து, பின் அதற்குப் பலியிட்டு: இஸ்ராயேலே! உன்னை எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் தேவர்கள் இவர்களேயாம் என்று சொன்னார்கள் என்றார்.

மீண்டும் ஆண்டவர் மோயீசனோடு பேசி: இந்த மக்களைப் பார்த்தோம். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் ஆகையால், நீ நம்மை விட்டுவிடு, நமது கோபம் அவர்கள் மேல் மூண்டு அவர்களை அழித்தொழிக்கும். உன்னை ஒரு பெரிய இனத்திற்குத் தலைவனாக்குவோம் என்றார்.

மோயீசனோ தம் கடவுளாகிய ஆண்டவரை மன்றாடி, ஆண்டவரே! நீர் மகத்தான பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உம் மக்கள்மேல் ஏன் உமது கோபம் மூள வேண்டும்?

நீர் ஆபிரகாம், ஈசாக், இஸ்ராயேல் ஆகிய உம் ஊழியர்களை நினைத்தருளும். அவர்களை நோக்கி: உங்கள் சந்ததியை விண்மீன்களைப் போன்று பெருகச் செய்து, நாம் சொன்ன இந்த நாடு முழுவதையும்

நீங்களும் உங்கள் சந்ததியாரும் என்றென்றும் உரிமையாகக் கொள்ளும் படிக்குத் தந்தருள்வோம் என்று உமது பேரில் ஆணையிட்டுத் திருவுளம் பற்றினீரன்றோ என்று மன்றாடினார்.

அப்பொழுது ஆண்டவருக்குக் கோபம் தணிய, தாம் மக்களுக்கு எவ்விதக் கேடும் செய்வதாகச் சொல்லியிருந்தாரோ அதைச் செய்யாமல் விட்டுவிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50 : 1-2, 10-11, 15 & 17 (பல்லவி : லூக். 15 : 18)*

பல்லவி : **நான் எழுந்து என் தந்தையிடம் போவேன்.**

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும் :
உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்களைப் போக்கிவிடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப்போக்கிவிடும்.
என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்.
உறுதிதரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும் :
உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். பல்லவி

15 ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்துவிடும் :
என் வாய் உமது புகழ்ச்சியை எடுத்துரைக்கும்.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே.
தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பாவிகளை மீட்கவே கிறிஸ்து வந்தார்.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்** *1 : 12-17*

அன்புக்குரியவரே,

என்னை உறுதிப்படுத்திய நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். ஏனெனில், என்னைத் தம் ஊழியத்திற்கு ஏற்றுத் தம் நம்பிக்கைக்குத் தகுதியுள்ளவன் எனக் கருதினார். நானோ முன்னர் கடவுளை நிந்தித்தேன். திருமறையைத் துன்புறுத்தினேன். கொடுமை புரிந்தேன். இருப்பினும் இறைவனின் இரக்கத்தைப் பெற்றேன். ஏனெனில், விசுவாசத்தைப் பெறாத நிலையில் அறியாமையால் அவ்வாறு நடந்தேன். கிறிஸ்து யேசுவுக்குள் நாம் பெற்றுக்கொள்ளும் விசுவாசத்தோடும் அன்போடும் நம் ஆண்டவருடைய அருள் இணைந்து அளவின்றிப் பெருகலாயிற்று.

'பாவிகளை மீட்கவே யேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார்' - என்னும் மொழி உண்மையானது. எல்லாரும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. அந்தப் பாவிகளிலெல்லாம் பெரும்பாவி நானே. இருப்பினும் இறைவனின் இரக்கத்தைப் பெற்றேன். எதற்கெனில், யேசு கிறிஸ்து முதன்முதல் என்னிடம் நீடிய பொறுமையைக் காட்ட விரும்பினார். இவ்வாறு, அவரில் விசுவாசம் கொண்டு, முடிவில்லா வாழ்வு பெறவேண்டியவர்களுக்கு நான் மாதிரியானேன்.

உலகெல்லாம் ஆளும் அரசன் அழிவிலான், கண்ணுக்குப் புலப்படான். ஒரே கடவுளுக்கென்றென்றும் மகிமையும் மாட்சியும் உண்டாகுக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா *2 கொரி. 5 : 19*

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள்
தம்மோடு ஒப்புரவாக்கினார் :
அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை
நம்மிடம் ஒப்படைத்தார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து வானகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

15 : 1-32

அக்காலத்தில் :

யேசு சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும் அவரை அணுகியவண்ணமாயிருந்தனர். அதனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும், "இவர் பாவிகளை வரவேற்கிறார். அவர்களோடு உண்கிறார்" என்று முணுமுணுத்தனர்.

அப்போது அவர் பின்வரும் உவமையைக் கூறினார்: "உங்களுள் ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க, அவற்றில் ஒன்றை இழந்தால் அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளைப் பாழ்வெளியில் விட்டுவிட்டு, இழந்த ஆட்டைக் கண்டு பிடிக்கும்வரை தேடிச் செல்லமாட்டானா? கண்டுபிடித்த பின் அதைத் தன் தோள்மேல் போட்டுக்கொண்டு, மகிழ்ச்சியோடு வீட்டிற்கு வந்து நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், இழந்துபோன என் ஆட்டைக் கண்டு பிடித்து விட்டேன்' என்பான்.

அவ்வாறே, மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒரு பெண்ணிடம் இருந்த பத்து வெள்ளிக்காசுகளுள் ஒன்று காணாமற்போய்விட்டால், விளக்கேற்றி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்வரை, அவள் அக்கறையோடு தேடுவதில்லையா? அதைக் கண்டுபிடித்த பின், தன் தோழியரையும் அண்டை வீட்டுப் பெண்களையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள், ஏனெனில், காணாமற்போன வெள்ளிக் காசைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பாள்.

அவ்வாறே, மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்துக் கடவுளுடைய தூதரிடையே மகிழ்ச்சியுண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

அவர் மேலும் கூறியதாவது: "ஒருவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். இளையவன் தந்தையை நோக்கி, 'அப்பா, சொத்தில் எனக்கு வரவேண்டிய பங்கைக் கொடும்' என்றான். அவர் தம் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். சில நாட்களுக்குப்பின் இளைய மகன் தன் சொத்தெல்லாம் விற்றுப் பணத்தைத் திரட்டிக்கொண்டு தொலை நாட்டிற்குப் பயணமானான். அவ்விடத்தில் ஊதாரித்தனமாக வாழ்ந்து,

சொத்தெல்லாம் அழித்தான். எல்லாவற்றையும் செலவழித்த பின்பு, அந்நாடெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அவன் வறுமையுறலானான். அந்நாட்டுக் குடிகளுள் ஒருவனிடம் அண்டிப் பிழைக்கச் சென்றான். அவன் அவனைப் பன்றி மேய்க்கத் தன் வயலுக்கு அனுப்பினான். பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தன் வயிற்றை நிரப்ப விரும்பினான். ஆனால், அதையும் அவனுக்கு அளிப்பாரில்லை.

அறிவு தெளிந்து, 'என் தந்தையின் கூலியாட்கள் எத்தனையோ பேருக்கு நிறைய உணவு இருக்க, நான் இங்குப் பசியால் மடிகிறேனே. எழுந்து என் தந்தையிடம் போவேன். போய் "அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் என்று எண்ணப்படத் தகுதியற்றவன். என்னை உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக நடத்தும்" என்று அவரிடம் சொல்வேன்' என்றான். அப்படியே எழுந்து தன் தந்தையிடம் வந்தான். அவன் தொலைவில் வரும்போதே அவனுடைய தந்தை அவனைக் கண்டு மனமுருகி, ஓடிப்போய் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார்.

மகன் அவரிடம், 'அப்பா, வானகத்திற்கு எதிராகவும், உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன் என்று எண்ணப்பட நான் தகுதியற்றவன்' என்றான். தந்தையோ ஊழியர்களை நோக்கி, 'முதல் தரமான ஆடை கொண்டுவந்து, இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் விரைவில் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், இறந்துபோயிருந்த என் மகன் இவன் மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தவன் மீண்டும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளான்' என்றார். அவர்கள் விருந்து கொண்டாடத் தொடங்கினர்.

அப்போது மூத்த மகன் வயலில் இருந்தான். வயலிலிருந்து திரும்பி வீட்டை நெருங்கிய பொழுது நடனத்தையும் இசை முழக்கத்தையும் கேட்டு, ஊழியர்களுள் ஒருவனை அழைத்து நடப்பதென்னவென்று வினவினான். அதற்கு ஊழியன், 'உம் தம்பி வந்துவிட்டார். அவர் நலமாகத் தம்மிடம் வந்துசேர்ந்ததால், உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்' என்றான். அவனோ சினந்து உள்ளே நுழைய மனமில்லாதிருந்தான். எனவே, அவனுடைய தந்தை வெளியில் வந்து அவனை அழைத்தார்.

அவன் தன் தந்தையிடம், 'இதோ! இத்தனை ஆண்டுகளாக உமக்கு ஊழியம் செய்து வருகிறேன்; உம்முடைய கட்டளையை என்றும் மீறியதில்லை. ஆயினும் என் நண்பரோடு விருந்து கொண்டாட ஓர் ஆட்டுக் குட்டிகூட நீர் எனக்குக் கொடுத்ததில்லை. விலைமாதரோடு உமது சொத்தையெல்லாம் அழித்துவிட்ட இந்த மகன் வந்தபொழுது, அவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கின்றீரே' என்றான்.

அதற்குத் தந்தை 'மகனே, நீ என்றும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே; நாம் விருந்தாடி மகிழ்வது முறையே. ஏனெனில், உன் தம்பி இறந்துபோயிருந்தான், உயிர்த்து விட்டான். காணாமற்போயிருந்தான், கிடைத்துவிட்டான்' என்றார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது: குறுகிய வாசகம்

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

15 : 1-10

அக்காலத்தில் :

யேசு சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும் அவரை அணுகியவண்ணமாயிருந்தனர். அதனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும், "இவர் பாவிகளை வரவேற்கிறார், அவர்களோடு உண்கிறார்" என்று முணுமுணுத்தனர்.

அப்போது அவர் பின்வரும் உவமையைக் கூறினார்: "உங்களுள் ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க, அவற்றில் ஒன்றை இழந்தால் அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளைப் பாழ்வெளியில் விட்டுவிட்டு, இழந்த ஆட்டைக் கண்டு பிடிக்கும்வரை தேடிச் செல்லமாட்டானா? கண்டுபிடித்த பின் அதைத் தன் தோள்மேல் போட்டுக்கொண்டு, மகிழ்ச்சியோடு வீட்டிற்கு வந்து நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், இழந்துபோன என் ஆட்டைக் கண்டு பிடித்து விட்டேன்' என்பான்.

அவ்வாறே, மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒரு பெண்ணிடம் இருந்த பத்து வெள்ளிக் காசுகளுள் ஒன்று காணாமற்போய்விட்டால், விளக்கேற்றி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டு பிடிக்கும் வரை, அவள் அக்கறையோடு தேடுவதில்லையா? அதைக் கண்டு பிடித்தபின், தன் தோழியரையும் அண்டை வீட்டுப் பெண்களையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், காணாமற்போன வெள்ளிக் காசைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பாள்.

அவ்வாறே, மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்துக் கடவுளுடைய தூதரிடையே மகிழ்ச்சியுண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அனைவருக்காகவும் இறைவனை மன்றாடவேண்டும்: எல்லா மனிதரும் மீட்புப் பெறவேண்டும் என்பதே அவரது விருப்பம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1-8

அன்புக்குரியவரே,

முதன்முதல், வேண்டுதல், செபம், மன்றாட்டு, நன்றியறிதலை அனைவருக்காகவும் நீங்கள் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் பக்தியும் ஒழுக்கமும் உடையவர்களாய்க் கலகமில்லா அமைதி வாழ்வு நடத்துமாறு அரசர்களுக்காகவும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நம் மீட்பராகிய கடவுளின் கண்ணுக்கு இதுவே சிறந்தது. இதுவே ஏற்றது. எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையின் அறிவை அடைந்து கொள்ளவும் வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

ஏனெனில், கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதனான யேசு கிறிஸ்துவே. இவர் அனைவரின் மீட்புக்கு ஈடாகத் தம்மையே கையளித்தார். இவ்வாறு குறித்த காலம் வந்தபொழுது அந்த மீட்புத் திட்டத்திற்குச் சாட்சியம் தந்தார். இதற்காகவே, நான் தூதுரைப்போனாகவும் அப்போஸ்தலனாகவும், விசுவாசத்தையும் உண்மையையும் புறவினத்தாருக்குக் கற்பிக்கும் போதகனாகவும் ஏற்படுத்தப் பெற்றேன். (நான் சொல்வது உண்மையே, பொய்யன்று).

எனவே, ஆடவர் சினமும் சச்சரவும் தவிர்த்து, எவ்விடத்திலும் தூய கைகளை உயர்த்திச் செபிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 27 : 2, 7, 8-9 (பல்லவி 6)

பல்லவி : **ஆண்டவர் வாழ்த்தப்பெறுவாராக :
ஏனெனில், என் வேண்டுதலின் குரலைக் கேட்டருளினார்.**

2 உம்மை நோக்கி நான் கூவுகையில்,
என் வேண்டுதலின் குரலைக் கேட்டருளும் :
உமது ஆலயத் தூயகத்தை நோக்கி என் கைகளை நான் உயர்த்தும்போது
என் குரலைக் கேட்டருளும். பல்லவி

7 ஆண்டவர் என் வலிமையும் கேடயமுமாயிருக்கிறார்.
என் இதயம் அவர்மீது நம்பிக்கை கொண்டது.
எனக்குதவி கிடைத்தது ; ஆகவே, என் இதயம் அக்களிக்கின்றது.
இன்னிசை பாடி அவரைப் புகழ்கிறேன்.
8 ஆண்டவர் தம் மக்களுக்கு வலிமை ஆவார் : பல்லவி

தம்மால் அபிஷேகம் பெற்றவருக்கு மீட்பு தரும் பாதுகாப்பும் அவரே.
9 ஆண்டவரே, உம் மக்களைக் காத்தருளும்.
உம் உரிமைப் பொருளான அவர்களுக்கு ஆசி அளித்தருளும்,
மேய்ப்பனாக இருந்து என்றென்றும் அவர்களைத் தாங்கிக்கொள்ளும்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் நடுவில் பிளவுகள் இருந்தால், நீங்கள் உண்பது ஆண்டவரின் விருந்தன்று.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 11 : 17-26

சகோதரர்களே :

நான் கூறுகின்ற இந்த அறிவுரையும் உங்களுக்குப் பெருமை தராது. நீங்கள் ஒன்றுகூடும்போது உங்களுக்கு நன்மையைவிடத் தீமையே விளைகிறது. முதலாவதாக, நீங்கள் சபையில் கூடும்போது உங்கள் நடுவில் பிளவுகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஓரளவு அந்தச் செய்தியை நம்புகிறேன் - உங்கள் நடுவில் பிரிவினைகள் உண்டாகத்தான் செய்யும்.

அதனால் உங்களுள் தகுதியுடையோர் யாரெனத் தெரியவரும் - இனி, நீங்கள் ஒன்றாகக்கூடி உண்பது ஆண்டவரின் விருந்தன்று, உங்கள் சொந்த விருந்தே. ஏனெனில், நீங்கள் உண்ணும்போது, ஒவ்வொருவனும் உண்பதற்கு முந்திக்கொள்வதால் ஒருவன் பசியாய் இருக்கிறான், வேறொருவன் குடிவெறி கொள்கிறான். உண்டு குடிக்க உங்களுக்கு வீடு இல்லையா? அல்லது இல்லாதவர்களை நாணச்செய்து, கடவுளின் சபையை இழிவுபடுத்த நினைக்கிறீர்களா? என்ன சொல்வது? உங்களைப் புகழ்வதா? இதில் உங்களை எப்படிப் புகழ்வது?

ஏனெனில், நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே - அதையே நான் உங்களுக்குக் கையளித்தேன் - அதாவது, ஆண்டவராகிய யேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து, நன்றிகூறி அதைப்பிட்டு: 'இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அவ்வாறே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து 'இக்கிண்ணம் எனது இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை. இதைப் பருகும் போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். எனவே, நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும்போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 39 : 6-7a, 7b-8, 9,16 (பல்லவி : 1 கொரி. 11 : 26b)

பல்லவி : ஆண்டவர் வரும் வரையில்
அவரது மரணத்தை அறிக்கையிடுங்கள்.

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை;
ஆனால் என் செவிகளை நீர் திறந்துவிட்டீர்:
தகனப் பலியும் பாவம் போக்கும் பலிப்பொருளும் நீர் கேட்கவில்லை.
7 அப்போது நான் சொன்னது:
"இதோ வருகிறேன். ஏட்டுச் சுருளில் என்னைக் குறித்து: பல்லவி

8 என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம்:
உம் திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன்
என்று எழுதப்பட்டுள்ளது". பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன்:
இதோ! நான் என் வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை;
ஆண்டவரே, இதை நீர் அறிவீர். பல்லவி

16 உம்மைத் தேடுவோர் அனைவரும் மகிழ்ச்சிகொண்டு அக்களிப்பார்களாக:
உமது அருட்துணையை வேண்டுவோர், "இறைவா போற்றி!" என்று
எந்நேரமும் வாழ்த்துவாராக.

பல்லவி

அல்லேலூயா அரு 3 : 16

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு, தம் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:1-10

அக்காலத்தில்:

யேசு மக்களோடு பேசி முடித்தபின், கப்பர்நகூம் ஊருக்கு வந்தார். நூற்றுவர் தலைவன் ஒருவனுடைய வேலையாள் நோயுற்றுச் சாகக் கிடந்தான். தலைவன் அவன்மீது மிகுந்த பற்றுக்கொண்டிருந்தான். யேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு, யூதரின் மூப்பரை அவரிடம் அனுப்பித் தன் வேலையாளைக் காப்பாற்ற வருமாறு வேண்டினான்.

அவர்களும் யேசுவிடம் வந்து, வருந்திக் கேட்டதாவது: "உம்மிடம் இவ்வரம் பெறுவதற்கு அவர் தகுதியுள்ளவரே. ஏனெனில், நம் மக்கள் மீது அவருக்கு அன்பு மிகுதி. நமக்கெனச் செபக்கூடம் கட்டியிருக்கிறார்." யேசு அவர்கள்கூடப் போனார்.

வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலிருந்தபொழுதே அவரிடம் நூற்றுவர் தலைவன் நண்பர்களை அனுப்பி, "ஆண்டவரே, இவ்வளவு தொந்தரை வேண்டாம்; நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். அதனால்தான் நானும் உம்மிடம் வரத் தகுதியற்றவன் எனக் கருதினேன். ஒரு வார்த்தை சொல்லும். என் வேலையாள் குணமாகட்டும். ஏனெனில், நான் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயினும் எனக்கு அடியிலும் படைவீரர் உள்ளனர். ஒருவனை நோக்கிப் 'போ' என்றால் போகிறான்; வேறொருவனை நோக்கி, 'வா' என்றால் வருகிறான். என் வேலையாளைப் பார்த்து 'இதைச் செய்' என்றால் செய்கிறான் என்றான்."

அதைக்கேட்ட யேசு அவனை வியந்து தம்மைப் பின் தொடரும் மக்கட் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்து, "இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்து ஊழியன் உடல் நலத்தோடு இருப்பதைக் கண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**விசுவாசிகளை மேற்பார்வையிடும் அலுவலை ஏற்பவர் குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருக்கவேண்டும்: அவ்வாறே திருப்பணியாளர்கள் விசுவாசத்தின் மறைபொருளைத் தூய மனச்சாட்சியோடு காத்துவரவேண்டும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *3 : 1-13*

அன்புக்குரியவரே :

"விசுவாசிகளை மேற்பார்வையிடும் அலுவலை ஏற்க விழைபவன் ஒரு மேன்மையான தொழிலையே விரும்புகிறான்" என்பது உண்மையான வார்த்தை. எனவே, அவ்வலுவலை ஏற்பவர் பிறருடைய குறை சொல்லுக்கு ஆளாகாதிருக்கவேண்டும். ஒருமுறை மட்டும் திருமணம் புரிந்தவராய், மிதமிஞ்சிக் குடியாமல் விவேகம், நயமான நடத்தை, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகிய நல்லியல்புகள் வாய்க்கப்பெற்று, குடிவெறி, கலகம், வீண் சண்டை, பொருளாசை இவற்றை விலக்கிக் கனிந்த உள்ளத்தினராய் இருத்தல் வேண்டும். குடும்பத்தைச் செவ்வனே ஆண்டு, தம் மக்களைக் கீழ்ப்படிதலிலும் ஒழுக்கத்திலும் வளர்க்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தம் குடும்பத்தையே ஆண்டு நடத்தத் தெரியாதிருந்தால் கடவுளின் சபையை எவ்வாறு கண்காணிக்க முடியும்? அவர் புதுக் கிறிஸ்தவனாகவும் இருத்தல் கூடாது. இருந்தால் இறுமாப்புக் கொள்ளக் கூடும். அதனால் அலகைக்குக் கிடைத்த தண்டனையை அடையலாம். மேலும், திருச்சபையைச் சேராதவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றவராயிருக்க வேண்டும். இல்லையேல், இகழ்ச்சிக்காளாகலாம் : அலகையின் வலையிலும் விழக்கூடும்.

அவ்வாறே திருப்பணியாளர்கள் இரட்டை நாவுள்ளவர்களாகவோ, மதுபானப் பிரியர்களாகவோ, இழிவான முறையில் ஊதியம் தேடுபவர்களாகவோ இராது கண்ணியமுள்ளவர்களாக இருக்கவேண்டும். விசுவாசத்தின் மறைபொருளைத் தூய மனச்சாட்சியோடு காத்துவர வேண்டும். அவர்களை முதலில் சோதித்துப் பார்க்கவேண்டும். யாதொரு குறைச் சொல்லுக்கும் ஆளாகாதிருந்தால் திருப்பணிக்கு ஏற்றுக் கொள்ளலாம். அவர்களுடைய மனைவியரும் அவ்வாறே கண்ணியம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். புறணி பேசாமல், மிதமிஞ்சிக் குடியாது, எல்லாவற்றிலும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருக்கட்டும். திருப்பணியாளர்கள் ஒருமுறை மட்டுமே திருமணம் செய்தவர்களாய்த் தம் மக்களையும் குடும்பத்தையும் செவ்வனே நடத்துபவர்களாயிருக்கவேண்டும். திருப்பணியை நன்கு ஆற்றுவோர் உயர்நிலையடைவர். யேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப்பற்றிப் பேசத் துணிவும் பெறுவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 100 : 1-2ab, 2cd-3ab, 5, 6 (பல்லவி . 2b)*

*பல்லவி :* இதய நேர்மை விளங்க
நான் வாழ்க்கை நடத்துவேன்.

1 உமது அருளையும், நீதியையும் புகழ்ந்து பாடுவேன்.
ஆண்டவரே, உமக்குக் கீதம் இசைப்பேன்.
2 நல்லார் ஒழுகிய நெறியில் நான் நடப்பேன் :
என்னிடம் எப்போது வருவீர் ! — பல்லவி

என் நடத்தையில் இதய நேர்மை விளங்கும் :
என் இல்லத்திலே நான் மாசற்றவனாய் இருப்பேன்.
3 அநீதியானதெதையும் என் மனத்தில் கொள்ளமாட்டேன்.
நெறி பிறழ்ந்தவர்களை நான் வெறுக்கிறேன். — பல்லவி

5 தன் அலயானுக்கு மறைவில் தீங்கிழைப்பவன் எவனோ,
அவனை ஒழிப்பேன்.
கர்வமிக்க பார்வையும், இதயச் செருக்கும் உள்ளவன் எவனோ,
அவனை நான் பொறுக்கமாட்டேன். — பல்லவி

6 பூமியில் வாழும் விசுவாசிகள்மீது என் பார்வை தங்குகிறது :
அவர்கள் என்னோடு வாழ்வார்கள்.
நல்லார் ஒழுகிய நெறியில் நடப்பவன் எவனோ,
அவன் எனக்குப் பணி புரிவான். — பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்களோ கிறிஸ்துவின் உடல்: ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *12 : 12-14, 27-31a.*

சகோதரர்களே :

உடல் ஒன்று, உறுப்புகள் பல; உடலின் உறுப்புகள் பலவகையாயினும், ஒரே உடலாய் உள்ளன: கிறிஸ்துவும் அவ்வாறே என்க. ஏனெனில், நாம் யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளாயினும் உரிமைக்குடிமக்களாயினும் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்: ஒரே ஆவியால் தாகந்தணியப் பெற்றோம். உடல் ஒரே உறுப்பன்று: பல உறுப்புகளால் ஆனது.

நீங்களோ கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு. அவ்வாறே, திருச்சபையிலும் கடவுள், முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது இறைவாக்கினரையும், மூன்றாவது போதகரையும் ஏற்படுத்தினார்; பின்னர் புதுமை செய்யும் ஆற்றல், பின்பு நோய்களைக் குணமாக்கும் வரம், பிறர் சேவை, ஆளும் வரம், பல்வகைப் பரவசப் பேச்சு இவையுள்ளன. அனைவருமா அப்போஸ்தலர்? எல்லாருமா இறைவாக்கினர்? யாவரும் போதகரோ? எல்லாரும் புதுமை செய்யும் ஆற்றல் வாய்ந்தவரோ? எல்லாரும் நோய்களைக் குணமாக்கும் வரமுடையவரோ? எல்லாருமா பரவசப் பேச்சு பேசுகிறார்கள்? எல்லாருமா விளக்கம் சொல்லுகிறார்கள்? ஆனால், நீங்கள் ஆர்வமாய்த் தேடவேண்டியது மேலான வரங்களையே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 99 : 1-2, 3, 4, 5 (பல்லவி : 3c)*

பல்லவி : **ஆண்டவருடைய மக்கள் நாம்;**
**அவரது மந்தையின் ஆடுகள் நாம்.**

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.
பெருமகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள் :
அவரே நம்மை உண்டாக்கினவர்.
அவருக்கே நாம் சொந்தம் :
அவருடைய மக்கள் நாம்,
அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப் பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்;
இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள் :
அவரைப் போற்றிப் புகழுங்கள்,
அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது.
அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

அல்லேலூயா லூக். 7 : 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் தோன்றியுள்ளார் :
கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கின்றார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இளைஞனே, உனக்கு நான் சொல்லுகிறேன், எழுந்திரு.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 11-17

அக்காலத்தில் :

யேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும், திரளான மக்களும் அவரோடு சென்றுகொண்டிருந்தனர். யேசு ஊர் வாயிலை நெருங்கியபொழுது, இறந்த ஒருவனைத் தூக்கி வந்தனர். தாய்க்கு அவன் ஒரே பிள்ளை. அவளோ கைம்பெண். ஊராரும் அவளோடு பெருங் கூட்டமாய் இருந்தனர்.

அவளைக் கண்டு ஆண்டவர் அவள்மீது மனமிரங்கி, 'அழாதே' என்றார். பின்பு முன்னால் சென்று பாடையைத் தொட்டார். அதைத் தூக்கி வந்தவர்கள் நின்றார்கள்.

நின்றதும், 'இளைஞனே, உனக்கு நான் சொல்லுகிறேன், எழுந்திரு' என்றார். இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். தாயிடம் அவனை ஒப்படைத்தார்.

அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள, "நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார்" என்று அவர்கள் கடவுளை மகிமைப்படுத்தினார்கள். அவரைப் பற்றிய பேச்சு யூதேயா முழுவதிலும் சுற்றுப்புறமெங்கும் பரவியது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## புதன்

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

நமது விசுவாசத்தின் மறைபொருள் பெரியது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 14-16

அன்புக்குரியவரே :

நான் இதை எழுதும்போது விரைவில் வந்து உம்மைக் காணும் நம்பிக்கையோடு எழுதுகின்றேன். ஒருவேளை நான் வரத் தாமதித்தால், நீர் கடவுளின் வீட்டில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை இக்கடிதம் உணர்த்தும். இவ்வீடு உயிருள்ள கடவுளின் திருச்சபையே, அதுவே உண்மைக்குத் தூணும் அடிப்படையுமாகும்.

மெய்யாகவே, நமது விசுவாசத்தின் மறைபொருள் பெரியது, ஐயமே இல்லை. ஊன் உருவிலே அவர் தோன்றினார். தேவ ஆவியின் செயலாலே அவர் இறைவனுக்கு ஏற்புடையவரென விளங்கினார். வான தூதர்க்குத் தமைக் காண்பித்தார். புறவினத்தார்க்கு அறிவிக்கப் பெற்றார். விசுவாசத்தோடு உலகில் ஏற்கப்பெற்றார், மாட்சிமையிலே அவர் விண்ணேற்பு அடைந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 110 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை.**

அல்லது : **அல்லேலூயா.**

1 நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன் :
நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை :
அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

3 அவருடைய செயல் மகத்துவமும் மாண்பும் மிக்கது.
அவருடைய நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
4 தம் வியத்தகு செயல்கள் என்றும் நினைவில் இருக்கச் செய்தார் :
அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர். பல்லவி

5 தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார் :
தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.
6 புறவினத்தாரைத் தம் மக்களுக்கு உரிமையாக்கினார் :
இவ்வாறு வல்லமை மிக்க தம் செயல்களைத்
தம் மக்களுக்கு வெளிப்படுத்தினார். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன ; இவற்றுள் தலைசிறந்தது அன்பே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12 : 31-13 : 13

சகோதரர்களே :

நீங்கள் ஆர்வமாய்த் தேடவேண்டியது மேலான வரங்களையே. அனைத்திலும் சிறந்த நெறியை நான் உங்களுக்குக் காட்டப்போகிறேன்.

மண்ணோர் மொழிகளிலும் விண்ணோர் மொழிகளிலும் நான் பேசினும், அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் ஆனேன். இறைவாக்கு வரம் எனக்கு இருப்பினும் மறைபொருள்

யாவும் எனக்குத் தெரிந்தாலும் அறிவு அனைத்தும் எனக்கு இருந்தாலும் மலைகளைப் பெயர்த்தகற்றும் அளவுக்கு விசுவாசம் என்னிடம் நிறைந்திருப்பினும் அன்பு எனக்கு இல்லையேல், நான் ஒன்றுமில்லை. எனக்குள்ளதெல்லாம் நான் வாரி வழங்கினாலும் எரிப்பதற்கு என் உடலைக் கையளித்தாலும் அன்பு எனக்கு இல்லையேல், எனக்குப் பயன் ஒன்றுமில்லை.

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது. அன்பு அழுக்காறுகொள்ளாது. பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது. இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத் தேடாது. சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம் வைக்காது. அநீதியைக் கண்டு மகிழ்வுறாது; உண்மையைக் கண்டு உளம் மகிழும். அனைத்தையும் தாங்கிக்கொள்ளும்; பிறர்மீது நல்லெண்ணம் இழப்பதில்லை; நம்பிக்கையில் தளர்வதில்லை; அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்.

அன்புக்கு என்றும் முடிவு இராது; இறைவாக்கு வரம் எது இருந்தாலும், அது ஒருநாள் இல்லாமற் போகும்: பரவசப் பேச்சு வரம் இருந்தால், அதுவும் ஒருநாள் இல்லாமற் போகும். ஏனெனில் நமது அறிவு குறைவுள்ளது; நாம் உரைக்கும் இறைவாக்கும் குறைவுள்ளது; நிறைவுள்ளது தோன்றும்பொழுது குறைவுள்ளது மறைந்துவிடும். நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையின் பேச்சு குழந்தையின் மனநிலை குழந்தையின் எண்ணம்கொண்டிருந்தேன். நான் பெரியவனாய் வளர்ந்த பின்னர், குழந்தைக்குரியதைக் களைந்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியில் மங்கலாகக் காண்கிறோம்; அப்பொழுது முகமுகமாய்க் காண்போம். இப்பொழுது அரை குறையாய் அறிகிறேன்; அப்பொழுது கடவுள் என்னை அறிவதுபோல் நானும் அறிவேன்.

எனவே, விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன; இவற்றுள் தலைசிறந்தது அன்பே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 32 : 2-3, 4-5, 12 & 22 (பல்லவி : 12b)*

பல்லவி : தமது உரிமைப் பொருளாக
ஆண்டவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறு பெற்றவர்கள்.

2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் :
பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள்.
3 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்,
மகிழ்ச்சிக் குரலில் நன்றாகப் பாடுங்கள். பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்,
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது.
தமது உரிமைப் பொருளாக
அவர் தேர்ந்தெடுத்த மக்கள் இனம் பேறு பெற்றவர்கள்.
22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக.
நாங்கள் உம்மை நம்பியிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக.
பல்லவி

அல்லேலூயா — அரு. 6 : 63b, 68b

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்: முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாங்கள் குழல் ஊதினோம், நீங்கள் ஆடவில்லை :**
**நாங்கள் புலம்பினோம்; நீங்கள் அழவில்லை.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 31-35

அக்காலத்தில் :

ஆண்டவர் கூறியதாவது : "இத்தலைமுறையின் மக்களை யாருக்கு ஒப்பிடுவேன்? அவர்கள் யாருக்கு ஒப்பானவர்கள்? பொது இடத்தில் உட்கார்ந்து ஒருவரை ஒருவர் அழைத்து, 'நாங்கள் குழல் ஊதினோம், நீங்கள் ஆடவில்லை: நாங்கள் புலம்பினோம், நீங்கள் அழவில்லை' என்று கூறும் சிறுவரைப் போன்றவர்கள் அவர்கள்.

ஏனெனில், ஸ்நாபக அருளப்பர் வந்தபோது அப்பம் உண்ணவில்லை, திராட்சை இரசம் குடிக்கவுமில்லை. அவரைப் பேய்பிடித்தவன் என்று சொல்லுகிறீர்கள்.

மனுமகன் வந்தபோதோ உண்டார்; குடித்தார். அவரை, 'இதோ! போசனப்பிரியன், குடிகாரன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பன்' என்று சொல்லுகிறீர்கள்; ஆனால் தேவஞானம் சரியென்று அதை ஏற்றுக் கொண்ட மக்கள் அனைவராலும் விளங்கிற்று."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**போதனை பற்றியும் விழிப்பாயிரும்; இவ்வாறு நீர் மீட்படைவீர்; உமக்குச் செவிசாய்ப்பவர்களையும் மீட்படையச் செய்வீர்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *4 : 12-16*

அன்புக்குரியவர்களே !

நீர் இளைஞராயிருப்பதால் உம்மை யாரும் அவமதியாதிருக்கட்டும். சொல், நடத்தை, அன்பு, விசுவாசம், தூய்மை முதலியவற்றில் நீர் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக விளங்கும். விசுவாசிகளுக்கு வாசித்துக் காட்டுவதிலும், அறிவுரை கூறுவதிலும் போதிப்பதிலும் நான் வரும்வரை கருத்தாய் இரும். மூப்பர் ஒன்றுகூடி உம்மீது கைகளை விரித்தபோது, இறைவாக்கினால் ஞானவரம் உமக்களிக்கப்பட்டது. உம்மில் இருக்கும் அவ்வரத்தைப்பற்றி அசட்டையாய் இராதீர். உமது முன்னேற்றம் எல்லாருக்கும் தெரியும்படி இவற்றைச் செய்வதில் கவலையாயிரும். இவற்றிற்கே உம்மை முழுதும் ஒப்படைத்துவிடும். உம் வாழ்க்கைமுறை பற்றியும் போதனைபற்றியும் விழிப்பாயிரும். இவற்றில் நிலையாயிரும். இவ்வாறு நடந்தால் நீர் மீட்படைவீர். உமக்குச் செவிசாய்ப்பவர்களையும் மீட்படையச் செய்வீர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 110 : 7-8, 9, 10 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை.**

அல்லது : **அல்லேலூயா.**

அவரது திருக்கரச் செயல்கள் நம்பிக்கைக்குரியவை,
நேர்மையானவை, அவர் தரும் கட்டளைகள் நிலையானவை :
என்றென்றும், நித்தியமும் நிலையாயுள்ளவை,
உறுதியும் நேர்மையும் அவற்றின் அடிப்படை. பல்லவி

9 தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்;
தம் உடன்படிக்கையை என்றென்றும் நிலைக்கச் செய்தார்.
10 அவரது திருப்பெயர் புனிதமானது, வணங்குதற்குரியது. பல்லவி

ஆண்டவர்மீதுள்ள அச்சமே ஞானத்தின் தொடக்கம்;
அவரை வழிபடுவோர் யாவரும் அறிவுள்ளவர்கள்.
அவரது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

***நாங்கள் அறிவிப்பது இதுவே; நீங்கள் விசுவசித்ததும் இதுவே.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 1-11

சகோதரர்களே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன்; நீங்கள் அதை ஏற்றுக்கொண்டீர்கள்; அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு நற்செய்தியாக அறிவித்த வாக்கை நீங்கள் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், அதனாலேயே மீட்படைவீர்கள்; இல்லையேல் நீங்கள் விசுவசித்தது வீண் என்று சொல்ல வேண்டியிருக்கும்.

ஏனெனில், நான் பெற்றுக்கொண்டதும், முதன்மையானதாக உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறைநூலில் உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு, மறைநூலில் உள்ளபடியே, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். கேபாவுக்கும் பின்னர் பன்னிருவர்க்கும் தோன்றினார். பின்பு ஒரே சமயத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்களுக்குத் தோன்றினார். — அவர்களுள் பலர் இன்னும் உயிரோடு இருக்கின்றனர்; ஒரு சிலர் இறந்து போயினர். — பின்னர் யாகப்பருக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியாக, காலந்தப்பிய பிறவி போன்ற எனக்கும் தோன்றினார்.

நானோ அப்போஸ்தலர்களுள் மிகச்சிறியன்; கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்திய நான் அப்போஸ்தலன் என்னும் பெயர்பெறத் தகுதியற்றவன். ஆயினும் நான் இப்பொழுது இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான்; அவர் எனக்குத் தந்த அருளோ வீணாய்ப்

போகவில்லை; அவர்கள் அனைவரையும்விட நான் மிகுதியாகவே உழைத்
தேன்—ஆனால் உழைத்தவன் நானல்லேன், என்னோடு இருக்கும் இறை
யருள் தான் உழைத்தது - நானோ அவர்களோ யார் போதித்தாலும்
நாங்கள் அறிவிப்பது இதுவே; நீங்கள் விசுவசித்ததும் இதுவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 117 : 1-2, 16ab-17, 28 (பல்லவி : 1a)

பல்லவி : ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்,
ஏனெனில் அவர் நல்லவர்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ; ஏனெனில், அவர் நல்லவர் :
என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.
2 "என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்" என்று
இஸ்ராயேல் இனத்தார் சாற்றுவார்களாக. பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது :
ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது.
17 இறந்தொழியேன், உயிர் வாழ்வேன் :
ஆண்டவருடைய அருஞ்செயல்களைப் பறை சாற்றுவேன். பல்லவி

28 என் இறைவன் நீரே, உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.
என் இறைவா, உம்மைப் புகழ்ந்தேத்துகிறேன். பல்லவி

## அல்லேலூயா

மத். 11 : 28

அல்லேலூயா. சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே,
எல்லாரும் என்னிடம் வாருங்கள் :
உங்களை நான் இளைப்பாற்றுவேன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன; அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 36-50

அக்காலத்தில் :

பரிசேயன் ஒருவன் யேசுவைத் தன்னுடன் உண்பதற்கு அழைத்தான். அவரும் பரிசேயனுடைய வீட்டுக்கு வந்து உணவருந்த அமர்ந்தார். இதோ! பாவி ஒருத்தி அந்நகரிலே இருந்தாள். பரிசேயனுடைய வீட்டில் அவர் உணவருந்தப்போகிறார் என்று அறிந்து பரிமளத் தைலம் நிறைந்த படிகச் சிமிழ் ஒன்றை எடுத்து வந்தாள். அவருடைய கால்மாட்டில் பின்புறமாக இருந்து, அழுது கொண்டே அவர் பாதங்கள் மேல் கண்ணீர் பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்து, முத்தமிட்டு அப்பாதங்களில் தைலம் பூசினாள்.

அவரை அழைத்த பரிசேயன் இதைக் கண்டு, "இவர் இறைவாக்கினராய் இருந்தால் தம்மைத் தொடும் இவள் யார், எத்தகையவள் என்று அறிந்திருப்பார். இவளோ பாவி" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

யேசு அவனை நோக்கி, "சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்ல வேண்டும்" என்று கூற, அவனும் "போதகரே, சொல்லும்" என்றான். "கடன் கொடுப்பவன் ஒருவனுக்குக் கடன்காரர் இருவர் இருந்தனர். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கடன்பட்டிருந்தனர். கடனைத் திருப்பிக் கொடுக்க அவர்களால் முடியாமற் போகவே இருவர் கடனையும் மன்னித்துவிட்டான். அவர்களுள் யார் அவனுக்கு அதிகமாக அன்பு செய்வான்?" "யாருக்கு அதிகக் கடனை மன்னித்தானோ அவன்தான் என்று நினைக்கிறேன்" என்றான் சீமோன். "நீர் சொன்னது சரி" என்றார் அவர்.

பின்பு அப்பெண்ணின் பக்கம் திரும்பி, சீமோனிடம், "இவளைப் பார்த்தீரா? நான் உம் வீட்டுக்குள் வந்தபொழுது, நீர் என் பாதங்களைக் கழுவத் தண்ணீர் தரவில்லை; இவளோ, என் பாதங்கள்மேல் கண்ணீர் பொழிந்து அவற்றைக் கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு முத்தமளிக்கவில்லை; இவளோ, நான் உள்ளே வந்ததுமுதல் என் பாதங்களை முத்தம் செய்து ஓயவில்லை. நீர் என் தலையில் எண்ணெய் பூசவில்லை; இவளோ, என் பாதங்களுக்குப் பரிமளத் தைலம் பூசினாள். அதனால், நான் உமக்குச் சொல்வதாவது : 'அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன. அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று. குறைவாக மன்னிப்புப் பெறுபவர்களோ குறைவாக அன்பு செய்கிறார்கள்' " என்றார்.

பின் அவளை நோக்கி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். "பாவங்களையும் மன்னிக்கும் இவர் யார்?" என்று அவரோடு பந்தி அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

அவரோ, அப்பெண்ணை நோக்கி, "உன் விசுவாசம் உன்னை மீட்டது, சமாதானமாய்ப் போ" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுளின் அடியாராகிய நீர் நீதியைக் கடைப்பிடியும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 2c-12

அன்புக்குரியவரே :

நீர் தரும் போதனைகளும் அறிவுரைகளும் இதற்கேற்ப அமையட்டும். யாராவது நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் நலமிக்க வார்த்தைகளிலும், பக்தி நெறிக்கு ஒத்த போதனையிலும் நிலைத்திராது, மாறுபட்ட கொள்கைகளைப் போதித்தால், அவன் ஓர் அறிவிலி. இறுமாப்புக்கொண்டு குருடனானவன். வீண் வாக்குவாதம் செய்வதிலும், வெறும் சொற்களைப் பற்றிச் சண்டையிடுவதிலும் பைத்தியம் கொண்டவன். இவற்றினின்று தான் பொறாமை, சண்டை சச்சரவு, பழிச்சொல், பிறர்மீது பொல்லாத சந்தேகங்கள், சீரழிந்த மனத்தவர்களிடையே மோதல்கள் முதலியன வெல்லாம் உண்டாகின்றன. இப்படிச் சீரழிந்தவர்கள் உண்மையை இழந்தவர்களாய், பக்தி நெறியை ஆதாயம் தரும் தொழில் எனக் கருதுகிறார்கள். ஆம், பக்தி நெறி நல்ல ஆதாயம் தருவதுதான்; ஆனால் போதுமென்ற மனமுள்ளவர்களுக்கே தரும். பிறந்தபொழுது நாம் ஒன்றையும் கொண்டுவரவில்லை. இறக்கும்பொழுது எதையும் எடுத்துச் செல்லவும் முடியாது. எனவே, உணவு, உடையோடு மனநிறைவுகொள்வோம். செல்வம் சேர்க்க விரும்புகிறவன் சோதனைகளில் வீழ்கிறான்; பேயின் வலையில் சிக்குகிறான்; தீமை விளைவிக்கும் மதிகேடான பல்வேறு ஆசைகளில் அமிழ்ந்துவிடுகிறான். இவையோ அவனைக் கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்திவிடும். பண ஆசைதான் எல்லாத் தீமைகளுக்கும் வேர். அந்த

ஆசையால்தான் சிலர் விசுவாசத்தினின்று தவறிப் போய்த் தங்களையே ஊடுருவக் குத்திக்கொள்வதுபோல் பல துன்பங்களைத் தங்கள்மேல் வருவித்துக்கொண்டார்கள்.

ஆனால், கடவுளின் அடியாராகிய நீர் இவையெல்லாம் தவிர்த்து விடும். நீதி, பக்தி, விசுவாசம், அன்பு, மனவுறுதி, சாந்தம் இவற்றைக் கடைப்பிடியும். விசுவாச வாழ்வு என்னும் சீரிய பந்தயத்தில் தளராதீர். முடிவில்லா வாழ்வைக் கைப்பற்றிக்கொள்ளும். அதற்காகவே அழைக்கப் பெற்றிருக்கிறீர். அதை முன்னிட்டே பல சாட்சிகள் முன்னிலையில் சிறந்த விசுவாச அறிக்கை செய்தீர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 48 : 5-6, 7-9, 16-17, 18-19 (பல்லவி : மத். 5 : 3)

பல்லவி : எளிய மனத்தோர் பேறுபெற்றோர்,
ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

5 துன்பமிகு நாளில் நான் அஞ்சவேண்டுவதேன் ?
என்னைத் துன்புறுத்துவோர் செய்யும் அக்கிரமம்
என்னைச் சூழும்போது நான் ஏன் அஞ்சவேண்டும் ?
6 தங்கள் செல்வத்தில் நம்பிக்கை வைப்போருக்கும்
தம் செல்வப் பெருக்கை நினைத்துப் பெருமைப்படுவோருக்கும்
நான் அஞ்ச வேண்டுவதேன் ? பல்லவி

7 தன்னைத்தானே விடுவித்துக் கொள்பவன் ஒருவனுமில்லை :
தன் மீட்புக்குரிய விலையைக் கடவுளுக்குத் தர யாராலும் இயலாது.
8 அந்த மீட்புக்குரிய விலை மிக உயர்ந்தது.
9 சாவைக் காணாததும் என்றென்றும் நீடிப்பதுமான வாழ்வை
வாங்கிக்கொள்ள எத்தொகையும் போதவே போதாது. பல்லவி

16 ஒருவன் பணக்காரனானால் அவனைக் கண்டு அஞ்சவேண்டாம் :
அவன் குடும்பச் செல்வம் பெருகினால் அஞ்சவேண்டாம்.
17 அவன் சாகும்பொழுது தன்னோடு எடுத்துச் செல்வது ஒன்றுமில்லை :
அவனுடைய சொத்து அவனோடு போவதில்லை. பல்லவி

18 “ நிம்மதியான வாழ்வு உனக்குக் கிடைத்ததென பிறர் புகழ்வர் ”
என்று வாழ்நாளில் அவன் தன்னைப் பாராட்டிக் கொண்டாலும்,
19 தன் முன்னோர்கள் போன இடத்திற்கே அவனும் போவான் :
அவர்கள் எந்நாளும் ஒளியைக் காணப்போவதில்லை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் உங்கள் விசுவாசம் வீணானதே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 12-20

சகோதரர்களே:

கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என அறிவிக்கப் பட்டிருக்க, இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுள் சிலர் சொல்வ தெப்படி? இறந்தோர் உயிர்த்தெழுதல் இல்லையென்றால், கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை யென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் விசுவாசமும் பொருளற்றதே. நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்சாட்சி சொல்பவர் ஆவோம். ஏனெனில், இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை என்பது உண்மையானால், கடவுள் உயிர்த்தெழச் செய்யாத கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்தார் என்று நாங்கள் சொன்னபோது கடவுள் பெயரால் பொய்ச்சாட்சி சொன்னவர்கள் ஆனோம். ஏனெனில், இறப்பவர்கள் உயிர்த்தெழுவதில்லை யென்றால் கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே. நீங்கள் இன்னும் பாவ நிலையிலேயே இருக்கிறீர்கள். அப்படியானால், கிறிஸ்துவுக்குள் துஞ்சியவர் களும் அழிந்து விட்டனர். இம்மை வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்து வின்மீது நம்பிக்கை வைத்தவர்களாயிருந்தால், எல்லாரையும்விட நாம் இரங்குதற்குரியவர் ஆவோம்.

ஆனால் உள்ளபடி, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த் தெழுந்தார்; துஞ்சினோரின் முதற் கனி அவரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 16 : 1, 6-7, 8 & 15 (பல்லவி : 15b)

பல்லவி : உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே
நான் விழைகிறேன், ஆண்டவரே.

1 ஆண்டவரே, என் நியாயமான என் வழக்கைக் கேட்டருளும்;
என் கூக்குரலைக் கவனித்தருளும் :
வஞ்சகமற்ற உதட்டினின்று எழும் என் வேண்டுதலுக்குச்
செவிசாய்த்தருளும். பல்லவி

6 இறைவா, என் மன்றாட்டைக் கேட்டருள்வீர் என்பதால்
நான் உம்மைக் கூவியழைக்கிறேன்;
எனக்குச் செவிசாய்த்தருளும்;
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
7 வியப்புக்குரிய உமது இரக்கத்தைக் காட்டியருளும்;
உம் வலக்கரத்தில் உம்மிடம் அடைக்கலம் புகுவோரை
எதிரிகளிடமிருந்து காப்பவர் நீரே. பல்லவி

8 கண்ணின் மணியைப்போல என்னைக் காத்தருளும்,
உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும்.
15 நானோவெனில், நீதியில் நிலைத்து
உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன்;
உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே நான் விழைகிறேன்.

பல்லவி

அல்லேலூயா மத். 11 : 25 காண்க

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே
போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச்
சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பெண்கள் சிலரும் யேசுவோடு இருந்து தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்துவந்தனர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 1-3

அக்காலத்தில் :

கடவுளின் அரசைப்பற்றிய நற்செய்தியை அறிவித்துக்கொண்டே யேசு ஊர் ஊராய்ச் செல்லலானார். பன்னிருவரும் அவருடன் சென்றனர். பொல்லாத ஆவிகளினின்றும் பிணிகளினின்றும் குணமான பெண்கள் சிலரும் அவர்களோடு இருந்தனர். இப்பெண்கள் யாரெனில், ஏழு பேய்கள் நீங்கப் பெற்ற மதலேன் என்னும் மரியாள், ஏரோதின் காரியத் தலைவன் கூசாவின் மனைவி அருளம்மாள், சூசன்னா, மற்றும் பெண்கள் பலர். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் பிரசன்னமாகும்வரை எக்குற்றத்துக்கும் இடம் தராமல் கட்டளைகளைக் கடைப்பிடியும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 13-16

அன்புக்குரியவரே :

அனைத்திற்கும் உயிரளிக்கும் கடவுள் முன்னிலையிலும், போஞ்சு பிலாத்தின்முன் நின்று சிறந்த விசுவாச அறிக்கையைச் செய்த யேசு கிறிஸ்து முன்னிலையிலும் உமக்கு வலியுறுத்திச் சொல்லுகிறேன். நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து பிரசன்னமாகும்வரை எக்குற்றத்துக்கும் குறைச் சொல்லுக்கும் இடம் தராமல் இக்கட்டளைகளைக் கடைப்பிடியும். அப்பிரசன்னத்தைக் கடவுள் குறித்த காலத்தில் நாம் காணச் செய்வார்.

அப்பேரின்பக் கடவுள் ஒரே வேந்தர், அரசர்க்கெல்லாம் அரசர். ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர், இறப்பே அறியா ஒருவர், அணுக முடியா ஒளியில் உறைபவர். அவரைக் கண்டவர் யாருமே இலர். காணக்கூடியவர் ஒருவரும் இலரே! அவருக்கே என்றென்றும் மகிமையும், வல்லமையும் உரியன. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99 : 1-2, 3-4, 5 (பல்லவி : 2c)

பல்லவி : ஆண்டவர் திருமுன் மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றி
ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ் செய்யுங்கள்.
பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள் :
அவரே நம்மை உண்டாக்கினவர்.
அவருக்கே நாம் சொந்தம் : அவருடைய மக்கள் நாம்,
அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப் பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள் ;
இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள் :
அவரைப் போற்றிப் புகழுங்கள், அவருடைய பெயரை வாழ்த்துங்கள்.
பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது.
அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**விதைக்கப்படுவது அழிவுக்குரியது. உயிர்த்தெழுவதோ அழியாதது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 35-37, 42-49

சகோதரர்களே :

'இறந்தோர் எப்படி உயிர்த்தெழுவார்கள்? எத்தகைய உடலோடு வருவார்கள்?' என்று ஒருவன் கேட்கலாம். அறிவிலியே, நீ விதைப்பது மடிந்தாலொழிய, புத்துயிர் பெறாது; முளைக்கப்போகும் உருவத்தில் நீ அதை விதைக்கவில்லை: வெறும் கோதுமை மணியையோ மற்றெந்த விதையையோ நீ விதைக்கிறாய்.

இவ்வாறே, இறந்தோர் உயிர்த்தெழுதலும் இருக்கும். விதைக்கப்படுவது அழிவுக்குரியது, உயிர்த்தெழுவதோ அழியாதது. விதைக்கப்படுவது இழிவானது, உயிர்த்தெழுவதோ மாட்சிமைக்குரியது. விதைக்கப்படுவது வலுவற்றது, உயிரத்தெழுவதோ வலிமையுள்ளது. விதைக்கப்படுவது மனித உயிர்கொண்ட உடல், உயிர்த்தெழுவது தேவ ஆவிக்குரிய உயிர்கொண்ட உடல். மனித உயிர்கொண்ட உடல் உள்ளதுபோல, தேவ ஆவிக்குரிய உயிர்கொண்ட உடலும் உள்ளது. மறைநூலில் உள்ளபடி முதல் மனிதனாகிய ஆதாம் மனித உயிருள்ளவன் ஆனான். கடைசி ஆதாமோ உயிர் தரும் ஆவியானார்.

முதலில் உண்டானது தேவ ஆவிக்குரிய உயிர்கொண்டதன்று, மனித உயிர்கொண்டதுதான்; தேவ ஆவிக்குரியது பிந்தியதே. முதல் மனிதன் மண்ணிலிருந்து வந்தான். அவன் மண்ணைச் சார்ந்தவன். இரண்டாம் மனிதனே விண்ணிலிருந்து வந்தார். மண்ணைச் சார்ந்த அவன் எப்படியோ, அப்படியே மண்ணைச் சார்ந்த யாவரும் உள்ளனர்: விண்ணைச் சார்ந்த இவர் எப்படியோ, அப்படியே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர்.

ஆகவே, மண்ணைச் சார்ந்தவனின் சாயலைத் தாங்கியிருந்ததுபோல, விண்ணைச் சார்ந்தவரின் சாயலையும் தாங்கியிருப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 55 : 9, 10-11, 12-13, (பல்லவி : 13b)

பல்லவி : வாழ்வோரின் ஒளியிலே இறைவனின் முன்னிலையில்
நான் நடக்கச் செய்தீர்.

9 நான் உம்மை எந்நேரத்தில் கூவியழைத்தாலும்
என் எதிரிகள் பின்னடைந்து போவர் :
கடவுள் என் சார்பாய் உள்ளார். இதை நான் நன்கறிவேன். பல்லவி

10 இறைவனின் வாக்குறுதியை நான் புகழ்ந்தேத்துகிறேன் :
11 இறைவன்மீது நம்பிக்கை வைக்கிறேன், அச்சமெனக்கில்லை :
மனிதன் எனக்கு என்ன செய்வான் ? பல்லவி

12 இறைவனே, நான் உமக்குச் செய்த பொருத்தனைகளை
நிறைவேற்ற வேண்டுமல்லவா ?
நன்றிப் பலிகளை உமக்குச் செலுத்துவேன்.
13 ஏனெனில், சாவினின்று என் உயிரைக் காத்தீர் :
சறுக்கி விழாதபடி என் அடிகளைக் காத்தீர்.
வாழ்வோரின் ஒளியிலே இறைவனின் முன்னிலையிலே
நான் நடக்கச் செய்தீர். பல்லவி

அல்லேலூயா

லூக். 8 : 15 காண்

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில் பதித்து, நிலையாயிருந்து பலனளிப்பவன் பேறுபெற்றோன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நல்ல நிலத்தில் விழுந்த விதையோ, வார்த்தையைக் கேட்டு மனதில் பதித்து, நிலையாயிருந்து பலன் அளிப்பவர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 4-15

**அக்காலத்தில் :**

பெருந் திரளான மக்கள் எல்லா ஊர்களிலிருந்தும் யேசுவிடம் வந்தபோது அவர் உவமையாகக் கூறியது: "விதைப்பவன் விதையை விதைக்கச் சென்றான். விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரமாய்

விழுந்தன; அவை மிதிபட்டு வானத்துப் பறவைகளால் தின்னப்பட்டன. சில பாறைமீது விழுந்தன; முளைத்தும் ஈரமின்மையால் காய்ந்துபோயின. சில முட்செடிகளின் நடுவே விழுந்தன; கூட வளர்ந்த முட்செடிகளோ அவற்றை நெரித்துவிட்டன. சில நன்னிலத்தில் விழுந்தன; அவை முளைத்து நூறு மடங்கு பலன் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்."

பின்னர், அவருடைய சீடர், "இவ்வுவமையின் பொருள் யாது?" என்று வினவினர். அவர் அவர்களுக்குக் கூறியது: "கடவுளுடைய அரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்றவர்களுக்கோ அவர்கள் கண்டும் காணாதவாறும், கேட்டும் உணராதவாறும், அவை உவமைகளாகக் கூறப்பட்டன.

இந்த உவமையின் பொருளாவது: விதை கடவுளின் வார்த்தை. வழியோரமாய் விழுந்த விதை அவ்வார்த்தையைக் கேட்பவர்களைக் குறிக்கிறது. அவர்கள் அதைக் கேட்கிறார்கள். ஆனால் அலகை வந்து அவர்கள் விசுவசித்து மீட்புப் பெறாதபடி அவ்வார்த்தையை அவர்கள் உள்ளத்திலிருந்து எடுத்து விடுகிறது. பாறைமீது விழுந்த விதை அவ்வார்த்தையைக் கேட்கும்போது அதை ஏற்றுக்கொள்பவர்களைக் குறிக்கிறது. மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் வேரற்றவர்கள்: சிறிது காலம் விசுவசித்து, சோதனை வேளையில் பின்வாங்குகிறார்கள். முட்செடிகள் நடுவில் விழுந்த விதை வார்த்தையைக் கேட்கும் வேறு சிலரைக் குறிக்கிறது. அவர்களும் கேட்கிறார்கள். ஆனால் நாளாவட்டத்தில் கவலைகள், செல்வம், வாழ்வின் இன்பங்களால் நெரிக்கப்பட்டு முதிர்ச்சியடைவதில்லை.

நல்ல நிலத்தில் விழுந்த விதையோ வார்த்தையைக் கேட்டுச் சீரிய செம்மனத்தில் பதித்து நிலையாயிருந்து பலன் அளிப்பவர் ஆவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தைந்தாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நம்முடைய எண்ணங்கள் உங்கள் எண்ணங்களல்ல.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 55 : 6-9

ஆண்டவரைக் கண்டடையக்கூடியபோதே, அவரைத் தேடுங்கள்; அவர் அண்மையில் இருக்கும்போதே, அவரைக் கூவியழையுங்கள். தீயவன் தன் தீநெறியையும், அநீதன் தன் எண்ணங்களையும் தள்ளிவிட்டு, ஆண்டவரிடம் திரும்பி வரட்டும், அவன்மேல் அவர் இரக்கம் காட்டுவார்; நம்முடைய கடவுளிடம் வரட்டும், ஏனெனில் மன்னிப்பு வழங்குவதில் அவர் வள்ளல்.

நம்முடைய எண்ணங்கள் உங்கள் எண்ணங்களல்ல, நம்முடைய வழிகள் உங்கள் வழிகளல்ல, என்கிறார் ஆண்டவர். மண்ணிலிருந்து விண் மிக உயர்ந்திருப்பதுபோல் உங்கள் வழிகளைவிட நம்முடைய வழிகளும், உங்கள் எண்ணங்களைவிட நம்முடைய எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 144 : 2-3, 8-9, 17-18 (பல்லவி : 18a)*

பல்லவி : **தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும்**
**ஆண்டவர் அண்மையில் உள்ளார்.**

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன்.
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் :
அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர், சினங்கொள்ளத் தாமதிப்பவர் :
அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர் :
தம் படைப்புகள் அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

17 ஆண்டவர் தம் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர் :
தம் செயல்களிலெல்லாம் புனிதமானவர்.
18 தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும்,
நேர்மையுடன் தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும்,
ஆண்டவர் அண்மையில் உள்ளார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**எனக்கு வாழ்வதென்பது கிறிஸ்துவே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 20c-24, 27a*

சகோதரர்களே :

நான் இருந்தாலும் இறந்தாலும் என்னால் அவரது புகழ் விளங்கும். இதுவே என் பேராவல். இதுவே என் நம்பிக்கை. ஏனெனில், எனக்கு வாழ்வதென்பது கிறிஸ்துவே; சாவது ஆதாயமே. ஆனால், உலகில் வாழ்ந்தால், பயனுள்ள பணிசெய்யக் கூடுமாயின் எதைத் தேர்ந்து கொள்வதென்று எனக்குத் தெரியவில்லை.

இரு பக்கங்களிலும் நெருக்கப்படுகிறேன். உயிர் நீத்து கிறிஸ்துவோடு இருக்கவேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். - இதுவேமிகச் சிறந்தது. - மற்றொரு புறம், இன்னும் உலகில் வாழ்வது உங்கள் பொருட்டுத் தேவையாயிருக்கிறது.

ஆனால், கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்ற வாழ்க்கை நடத்துங்கள் :

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அப். பணி 16 : 14b காண்க

**அல்லேலூயா.** உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் நல்லவனாய் இருப்பதால் உனக்குப் பொறாமையோ?**

✠ **மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 20:1-16a

**அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குக் கூறிய உவமையாவது :**

**"விண்ணரசு, தன் திராட்சைத் தோட்டத்திற்கு வேலையாட்களை அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்ற வீட்டுத் தலைவனுக்கு ஒப்பாகும். நாள் ஒன்றுக்கு ஒரு வெள்ளிக்காசு என்று வேலையாட்களுடன் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சைத் தோட்டத்திற்கு அனுப்பினான். ஏறக்குறைய ஒன்பது மணிக்கு வெளியே சென்று பொதுவிடத்தில் சிலர் வேலையற்று நிற்பதைக் கண்டான். அவர்களிடம், 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லுங்கள். நியாயமானதை உங்களுக்குக் கொடுப்பேன்' என்றான். அவர்கள் போனார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும், அப்படியே செய்தான்.**

**ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டான். அவர்களிடம். 'நாள் முழுவதும் நீங்கள் ஏன் இங்கு வாளா யிருக்கிறீர்கள்?' என்றான். அவர்களோ, 'எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை' என்றனர். அவனோ, 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்திற்குச் செல்லுங்கள்' என்று அவர்களுக்குச் சொன்னான்.**

**மாலையானதும் திராட்சைத் தோட்டத் தலைவன் தன் காரியத் தலைவனிடம், 'வேலையாட்களைக் கூப்பிட்டுக் கடைசி ஆள் தொடங்கி முதல் ஆள் வரை கூலி கொடு' என்றான். எனவே, ஐந்து மணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் வந்து தலைக்கு ஒரு வெள்ளிக்காசு பெற்றுக் கொண்டார்கள். முதலில் அமர்த்தப்பட்டவர்கள் வந்தபோது தங்களுக்குக் கூடுதலாய்க் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால், அவர்களுக்கும் தலைக்கொரு வெள்ளிக்காசு தான் கிடைத்தது.**

**அதை வாங்கும்போது, 'கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே உழைத்தனர். பகலின் உழைப்பையும் வெயிலின் கொடுமையையும் தாங்கிய எங்களோடு இவர்களைச் சமமாக்கினீரே' என்று வீட்டுத் தலைவனுக்கு எதிராக முணுமுணுத்தனர். அவனோ மறுமொழியாக அவர்களுள் ஒருவனிடம், 'நண்பா, உனக்கு நான் அநீதி செய்யவில்லையே; ஒரு வெள்ளிக்காசு என்று என்னிடம் நீ கூலி பேசவில்லையா? உனக்குரியதை வாங்கிக்கொண்டு போ. உனக்குக் கொடுத்தபடியே கடைசியில்**

வந்த இவனுக்கும் கொடுப்பது என் விருப்பம். என் விருப்பம்போலச் செய்ய எனக்கு உரிமையில்லையா? நான் நல்லவனாய் இருக்கிறேன் என்பதால் உனக்குப் பொறாமையோ?' என்றான்.

இவ்வாறே கடைசியானோர் முதலாவர், முதலானோர் கடைசியாவர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**வெட்கத்துக்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 2:17-20

பொல்லாதவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்வதாவது:

"நீதிமானின் சொற்கள் உண்மையா என்று பார்ப்போம். அவன் வாழ்வின் முடிவில் என்ன நடக்குமெனச் சோதித்தறிவோம்.

ஏனெனில், நீதிமான் கடவுளின் மகனாயின், அவனுக்கு அவர் துணை செய்வார், மாற்றார் கையினின்று அவனை விடுவிப்பார். அவனுடைய சாந்தத்தை அறிந்துகொள்ளவும், பொறுமையைச் சோதித்துப் பார்க்கவும், அவனை நிந்தை வேதனைப்படுத்திப் பார்ப்போம். வெட்கத்துக்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம், ஏனெனில், அவன் சொற்படி அவனுக்குத்தான் கடவுளின் துணையிருக்குமே!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 53:1-2, 3, 4 & 6 (பல்லவி: 4b)

பல்லவி: ஆண்டவர் என் வாழ்வுக்கு ஆதரவாயிருக்கிறார்.

1 இறைவா உம் பெயரின் வல்லமையால் என்னைக் காத்தருளும்:
உமது வல்லமையால் நீதி வழங்கும்.
2 இறைவா என் மன்றாட்டைக் கேட்டருளும்:
என் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

3 ஏனெனில், செருக்குற்றோர் என்னை எதிர்த்தெழுந்தார்கள்.
கொடியவர்கள் உயிரைப் பறிக்கத் தேடினார்கள்,
கடவுளை அவர்கள் தங்கள் கண்முன் கொள்ளவில்லை. பல்லவி

4 இதோ! கடவுள் எனக்குத் துணைபுரிகிறார்.
ஆண்டவர் என் வாழ்வுக்கு ஆதரவாயிருக்கிறார்.
6 மன மகிழ்வோடு உமக்குப் பலி செலுத்துவேன்:
ஆண்டவரே, உமது பெயரைப் போற்றுவேன். ஏனெனில் அது நல்லது.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**சமாதானம் செய்வோர், சமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வெனும் கனி விளைகிறது.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம். 3 : 16-4 : 3

அன்புக்குரியவர்களே :

பொறாமையும் கட்சி மனப்பான்மையும் எங்குள்ளதோ, அங்கே குழப்பமும் எல்லா தீச்செயல்களும் இருக்கும். விண்ணினின்று வரும் ஞானமோ தீய எண்ணத்துடன் கலவாதது; இதுவே அதன் தலையான பண்பு. மேலும் அது சமாதானத்தை நாடும்; பொறுமையைக் கடைப்பிடிக்கும்; இணக்கத்தை விரும்பும்; இரக்கமும் நற்செயல்களும் பெருகச் செய்யும்; நடுநிலை தவறாது; கள்ளமறியாது. சமாதானம் செய்வோர், சமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வென்னும் கனி விளைகிறது.

உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணம் என்ன? உங்கள் உடலில் போராட்டம் விளைவிக்கும் கீழ்த்தர ஆசைகள் அல்லவா? பிறர் பொருள்மீது ஆசை வைக்கிறீர்கள்: அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்; பேராசை கொள்கிறீர்கள்; ஆசைப்படுவதை அடைய முடியாததால், சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். ஆசைப்படுவதை ஏன் அடையமுடியவில்லை? இறைவனிடம் கேட்காததால்தான். கேட்டாலும் ஏன் அடைவதில்லை? தீய எண்ணத்தோடு கேட்பதாலே. கிடைப்பதைக் கீழ்த்தர ஆசைகளை நிறைவேற்றுவதில் செலவழிக்கவே கேட்கிறீர்கள்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா | 2 தெச. 2:14

**அல்லேலூயா. நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் மகிமையை நாம் பெற்றுக்கொள்ளும்படி, நற்செய்தி வழியாக இறைவன் நம்மை அழைத்தார். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் கையளிக்கப்படுவார் . . . ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையவனாய் இருக்கட்டும்.**

✠ **மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 9 : 30-37

**அக்காலத்தில் :**

**யேசுவும் அவர் சீடர்களும் மலையைவிட்டுப் புறப்பட்டுக் கலிலேயாவினூடே சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று விரும்பினார். ஏனெனில், "மனுமகன் மனிதர்களிடம் கையளிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்" என்று தம் சீடர்களுக்குப் போதிக்கலானார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்கவும் அஞ்சினர்.**

**கப்பர்நகூமுக்கு வந்தனர். வீட்டிலிருக்கும்போது அவர் அவர்களை நோக்கி, "வழியில் என்ன வாதாடிக்கொண்டு வந்தீர்கள் ?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். ஏனெனில், "பெரியவன் யார் ?" என்பதைப்பற்றி வழியில் தங்களுக்குள் விவாதித்திருந்தார்கள்.**

**அப்போது அவர் அமர்ந்து பன்னிருவரையும் அழைத்து, "ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும், அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்" என்றார்.**

**பின்னர் ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, அதை அரவணைத்து, "இத்தகைய குழந்தைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்ளுகிறவனும் என்னையன்று, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றார்.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**பணத்துக்கு ஏழைகளை வாங்குபவர்களுக்கு எதிராக.**

**இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 8 : 4-7

எளியவர்களை நசுக்கி, நாட்டில் உள்ள ஏழைகளை ஒழிக்கத் தேடுகிறவர்களே, இதைக் கேளுங்கள்: "நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்? ஓய்வு நாள் எப்பொழுது முடிவுறும்? முடிந்தால், கோதுமையை நல்ல விலைக்கு விற்கலாம், படியைச் சிறிதாக்கி, ஷெக்கெல் நிறையை உயர்த்தி கள்ளத்தராசினால் மோசடி செய்யலாம்; பணத்துக்கு ஏழைகளையும், ஒரு சோடி செருப்புக்கு எளியவர்களையும் வாங்கலாம், கோதுமைப் பதர்களையும் விற்கலாம்" என்றெல்லாம் நீங்கள் ஏங்குகிறீர்கள்.

ஆண்டவர் யாக்கோபின் பெருமைமீது ஆணையிட்டுக் கூறுகிறார்: "அவர்களுடைய இந்தச் செயல்களில் ஒன்றையேனும் நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 112 : 1-2, 4-6, 7-8 (பல்லவி : 1a & 7b காண்)

பல்லவி : **ஏழைகளைத் தூக்கிவிடும் ஆண்டவரைப் போற்றுங்கள்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 ஆண்டவர்தம் ஊழியர்களே, அவரைப் போற்றுங்கள்:
அவருடைய திருப்பெயரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவருடைய திருப்பெயர் வாழ்த்தப் பெறுவதாக. பல்லவி

4 மக்கள் இனங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர்;
வானங்களையும்விட உயர்ந்தது அவர் மாட்சிமை.
5-6 உன்னதத்தில் வீற்றிருந்து வானத்தையும் வையத்தையும்
ஊடுருவிப் பார்க்கும் நம் ஆண்டவராகிய கடவுளைப்போல்
வேறு யார் உண்டு! பல்லவி

7 வறியவனைத் தரையிலிருந்து தூக்கி விடுகிறார் :
ஏழையைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகிறார்.
8 தலைவர்களிடையே, தம் மக்களை ஆளும் தலைவர்களிடையே
அமர்த்துமாறு அவனைக் கைதூக்கி விடுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**எல்லா மனிதரும் மீட்புப்பெற வேண்டுமென்பதே கடவுளின் விருப்பம் : எனவே எல்லா மனிதருக்காகவும் செபம் செய்யவேண்டும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *2 : 1-8*

அன்புக்குரியவரே :

முதன்முதல், வேண்டுதல், செபம், மன்றாட்டு, நன்றியறிதலை அனைவருக்காகவும் நீங்கள் செலுத்தக் கேட்டுக்கொள்கிறேன். நாம் பக்தியும் ஒழுக்கமும் உடையவர்களாய்க் கலகமில்லா அமைதி வாழ்வு நடத்துமாறு அரசர்களுக்காகவும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நம் மீட்பராகிய கடவுளின் கண்ணுக்கு இதுவே சிறந்தது. இதுவே ஏற்றது. எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையின் அறிவை அடைந்து கொள்ளவும் வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

ஏனெனில், கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதரான யேசு கிறிஸ்துவே. இவர் அனைவரின் மீட்புக்கு ஈடாகத் தம்மையே கையளித்தார். இவ்வாறு குறித்த காலம் வந்தபொழுது அந்த மீட்புத் திட்டத்திற்குச் சாட்சியம் தந்தார். இதற்காகவே, நான் தூதுரைப்போனாகவும் அப்போஸ்தலனாகவும், விசுவாசத்தையும் உண்மையையும் புறவினத்தாருக்குக் கற்பிக்கும் போதகனாகவும் ஏற்படுத்தப் பெற்றேன். நான் சொல்வது உண்மையே, பொய்யன்று.

எனவே, ஆடவர் சினமும் சச்சரவும் தவிர்த்து, எவ்விடத்திலும் தூய கைகளை உயர்த்திச் செபிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 கொரி. 8 : 9

அல்லேலூயா. யேசு கிறிஸ்து செல்வமிக்கவராய் இருந்தும், அவரது ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** *16 : 1-13*

**அக்காலத்தில் யேசு தம் சீடர்களுக்குச் சொன்னதாவது :**

**"பணக்காரன் ஒருவனிடம் கண்காணிப்பாளன் ஒருவன் இருந்தான். தன் தலைவனின் உடைமைகளை விரயம் செய்ததாக அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. தலைவன் அவனை அழைத்து, 'என்ன இது? நான் உன்னைப்பற்றி இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேன். உன் கண்காணிப்புக் கணக்கை ஒப்புவி. நீ இனி என் கண்காணிப்பாளனாய் இருக்க முடியாது' என்றான்.**

**அப்போது கண்காணிப்பாளன், 'இனி என்ன செய்வது? கண் காணிப்பினின்று என்னைத் தலைவன் நீக்கிவிடப் போகிறானே. மண் வெட்டவோ எனக்கு வலிமையில்லை; பிச்சையெடுக்கவோ வெட்கமாய் இருக்கிறது. கண்காணிப்பினின்று நான் தள்ளப்படும்போது, பிறர் என்னைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளும்படி என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.**

**பின்பு, அவன் தன் தலைவனிடம் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக அழைத்தான். ஒருவனைப் பார்த்து, 'என் தலைவனிடம் நீ எவ்வளவு கடன் பட்டிருக்கிறாய்?' என்று கேட்க, அவன், 'நூறு குடம் எண்ணெய்' என்றான். அதற்கு அவன், 'இதோ! உன் கடன் பத்திரம், உட்கார்ந்து ஐம்பது என்று உடனே எழுது' என்றான். பின்னர், மற்றொருவனிடம், 'நீ எவ்வளவு கடன்பட்டிருக்கிறாய்?' என, அவன், 'நூறு கலம் கோதுமை' என்றான். அதற்கு அவன், 'இதோ! உன் கடன் பத்திரம், எண்பது என எழுது' என்றான்.**

**அந்த அநீத கண்காணிப்பாளன் விவேகத்தோடு நடந்துகொண்டதற்காகத் தலைவன் அவனை மெச்சிக்கொண்டான். ஏனெனில், ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தம் போன்றவர்களிடத்தில் மிக்க விவேகமுள்ளவர்களாய் இருக்கின்றனர்.**

**ஆகையால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : அநீத செல்வத்தைக்கொண்டு நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். அது உங்களைக் கைவிடும்பொழுது, அவர்கள் உங்களை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.**

**மிகச் சிறிய காரியத்தில் நம்பத்தக்கவன், பெரியதிலும் நம்பத் தக்கவனே. மிகச் சிறியதில் நீதியற்றவன், பெரியதிலும் நீதியற்றவனே. அந்த செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத் தகாதவர்களாய் இருந்தால்**

உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவர் யார்? உங்களுக்குப் புறம்பான பொருட்கள் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால், உங்களுடையதை உங்களுக்கு அளிப்பவர் யார்?

எந்த வேலைக்காரனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனிடம் அன்பாயிருப்பான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு, மற்றவனைப் புறக்கணிப்பான்.

கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்யமுடியாது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16 : 10-13

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குச் சொன்னதாவது:

"மிகச் சிறிய காரியத்தில் நம்பத்தக்கவன், பெரியதிலும் நம்பத்தக்கவனே. மிகச் சிறியதில் நீதியற்றவன், பெரியதிலும் நீதியற்றவனே. அநீத செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால் உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவர் யார்? உங்களுக்குப் புறம்பான பொருட்கள் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால், உங்களுடையதை உங்களுக்கு அளிப்பவர் யார்?

எந்த வேலைக்காரனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனிடம் அன்பாயிருப்பான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு, மற்றவனைப் புறக்கணிப்பான்.

கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்யமுடியாது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இறைவனின் மக்களாயிருப்பவர்கள் யெருசலேமுக்குப்போய் ஆண்டவருக்குக் கோயில் கட்டுவார்களாக.**

**எஸ்ரா ஆகமத்தின் தொடக்கம்** *1 : 1-6*

பாரசீக அரசனான சீருசின் முதல் ஆண்டில் எரேமியாசு வழியாக ஆண்டவர் சொல்லியிருந்தது நிறைவேறும்படி, பாரசீக அரசன் சீருசின் மனத்தை ஆண்டவர் தூண்டிவிட்டார். அதனால், அவன் தன் நாடெங்கும் ஓர் ஆணை பிறப்பித்து அதை எழுத்து மூலமும் வெளியிட்டான்.

"பாரசீக அரசனான சீருஸ் சொல்லுவதாவது: விண்ணகக் கடவுளான ஆண்டவர் மண்ணிலுள்ள எல்லா அரசுகளையும் எனக்கு அடிமைப்படுத்தியுள்ளார்; மேலும், யூதேயாவிலுள்ள யெருசலேமில் தமக்கு ஒரு கோவிலைக் கட்டும்படி அவர் எனக்குக் கட்டளையிட்டுள்ளார். உங்கள் நடுவே அவருடைய மக்கள் யாரேனும் உண்டா? அவர்களோடு அவர்களின் கடவுள் இருப்பாராக! அவர்கள் யூதாவிலுள்ள யெருசலேமுக்குப் போய் இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவருக்கு ஒரு கோவிலைக் கட்டுவார்களாக. யெருசலேமில் எழுந்தருளியிருக்கும் கடவுளே உண்மைக் கடவுள். அக்குலத்தார் எங்கெங்கு வாழ்ந்துவரினும் அவர்கள் யெருசலேமிலுள்ள தங்கள் கடவுளுடைய ஆலயத்திற்குக் காணிக்கைகளை ஒப்புக்கொடுப்பதோடு, பொன்னும் வெள்ளியும், ஏனைய பொருட்களும், ஆடுமாடுகளும் அவர்களுக்குக் கொடுத்து உதவுவார்களாக" என்பதே அக்கட்டளை.

அப்போது யெருசலேமிலிருந்த ஆண்டவரின் ஆலயத்தைத் திரும்பவும் கட்டி எழுப்புவதற்கு யூதா, பென்யமீன் குலத் தலைவர்களும் குருக்களும் லேவியரும் கடவுளின் ஆவியால் ஏவப்பட்டிருந்த அனைவரும் முன்வந்தனர். சுற்றிலுமுள்ள ஊர்களில் வாழ்ந்துவந்த அனைவரும் காணிக்கையாகக் கொடுத்திருந்தவற்றைத் தவிர, பொன், வெள்ளிப் பாத்திரங்களையும் மற்றப் பொருட்களையும் மிருகங்களையும் தட்டுமுட்டுகளையும் அவர்களுக்குக் கொடுத்து உதவினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 125 : 1-2ab, 2cd-3, 4-5, 6 (பல்லவி : 3a)

பல்லவி: **ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்.**

1 **ஆண்டவர் சீயோனின் அடிமைகளை மீட்டு வந்தபோது,**
**நாங்கள் கனவு கண்டவர்கள்போல் இருந்தோம்.**
2 **அப்போது நம் உதடுகளில் சிரிப்பு ஒலித்தது,**
**நாவில் மகிழ்ச்சிக் கீதமும் எழும்பியது.** பல்லவி

**'ஆண்டவர் அவர்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்!'**
**என்று அப்போது மக்களினத்தார் பேசிக்கொண்டனர்.**
3 **ஆம், ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார் :**
**அதனால் பெரு மகிழ்ச்சி கொண்டோம்.** பல்லவி

4 **ஆண்டவரே, பாலை நிலத்தில் வெள்ளத்தைத் திருப்பிவிடுவதுபோல,**
**எங்கள் நிலைமையை மாற்றிவிடும்.**
5 **கண்ணீரோடு விதை விதைப்பவர்கள்,**
**பெரு மகிழ்ச்சியோடு அறுவடை செய்வார்கள்.** பல்லவி

6 **விதை தெளிக்கச் செல்லும்போது,**
**அழுகையோடு செல்கிறார்கள் :**
**அறுத்த அரிகளைச் சுமந்து வரும்போது**
**பெருமகிழ்ச்சியோடு வருவார்கள்.** பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**சூதுள்ளவன் ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கிறான்.**

பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 27-35

**என் மகனே : நன்மை புரிய முயல்கிறவனை நீ விலக்காதே. உன்னால் இயலுமானால், நீயும் நன்மை செய். நீ அந்நேரமே தருமம் செய்யக் கூடியவனாய் இருக்கையில், போய்த் திரும்பி வா ; உனக்கு நாளை தருவேன் என்று உன் நண்பனுக்குச் சொல்லாதே.**

**உன்பால் தன் நம்பிக்கையை வைத்திருக்கும் நண்பனுக்குத் தீமை புரியக் கருதாதே. ஒருவன் உனக்கு யாதொரு தீங்கும் புரியாதிருக்கையில், அம்மனிதனுக்கு விரோதமாய் வீணே வழக்காடாதே. அநீதனைக் கண்டுபாவியாதே. அவன் வழிகளையும் பின்பற்றாதே.**

ஏனென்றால், சூதுள்ளவன் எவனே அவன் ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கிறான். நேர்மையாளரோடுதான் அவர் உரையாடுவார். அக்கிரமியின் வீட்டிற்கு அவர் வறுமையை அனுப்புவார். நீதிமான்களின் உறைவிடங்களை ஆசீர்வதிப்பார். கபடமுள்ளோரைப் புறக்கணித்து, சாந்தமுடையோர்க்குத் (தம்முடைய) அருளைத் தந்தருள்வார். ஞானிகள் மகிமை பெறுவார்கள். அறிவிலிகளின் உயர்வோ இழிவேயாம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 14 : 2-3ab, 3cd-4ab, 5 (பல்லவி : 1b காண்)

பல்லவி : **ஆண்டவரே, நீதிமான் உமது திருமலையில் குடியிருப்பான்.**

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்,
நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன்,
இதயத்தில் நேரியவை நினைப்பவன் ;
3 நாவால் எப்பழிச்சொல்லும் கூருதவன். பல்லவி

அயலானுக்குத் தீமை செய்யாதவன்,
பிறரைப் பழித்துரைக்காதவன் ;
4 தீயோரை இழிவாகக் கருதுபவன்,
ஆண்டவருக்கு அஞ்சுவோரை உயர்வாக மதிப்பவன் ; பல்லவி

5 தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன்,
மாசற்றவர்களுக்கு எதிராகக் கைக்கூலி வாங்காதவன்.
இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்திடுவான். பல்லவி

மத். 5 : 16

அல்லேலூயா

அல்லேலூயா. மக்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு, வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப் படுத்தும்படி, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்வதாக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உள்ளே வருபவர் ஒளியைக் காணும்படி விளக்கைத் தண்டின் மீது வைப்பான்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*8 : 16-18*

அக்காலத்தில் : மக்கள் கூட்டத்தை நோக்கி யேசு கூறியதாவது :

"எவனும் விளக்கை ஏற்றிப் பாத்திரத்தால் மூடுவதில்லை : கட்டிலின் கீழ் வைப்பதுமில்லை, உள்ளே வருபவர் ஒளியைக் காணும்படி அதை விளக்குத் தண்டின்மீது வைப்பான். வெளிப்படாமல் ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை. அறியப்படாமலும் வெளியாகாமலும் மறைந்திருப்பது ஒன்றுமில்லை.

ஆகையால், நீங்கள் எத்தகைய மனநிலையில் தேவ வார்த்தையைக் கேட்கிறீர்கள் என்று பார்த்துக்கொள்ளுங்கள். உள்ளவனுக்குக் கொடுக்கப்படும். இல்லாதவனிடமிருந்து, உள்ளதாகக் கருதுவதும் எடுக்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**இறைவனின் ஆலயத்தைக் கட்டிமுடித்து பாஸ்கா விழாக் கொண்டாடுங்கள்.**

எஸ்ரா ஆகமத்திலிருந்து வாசகம் *6 : 7-8, 12b, 14-20*

அந்நாட்களில் : தாரியுஸ் அரசன் நதிக்கு அக்கரையிலுள்ள ஆளுநருக்கு எழுதிய கட்டளைக் கடிதமாவது :

"யூதர்களின் ஆளுநரும் அவர்களின் மூப்பர்களும் இக் கடவுளின் ஆலயத்தை அது முன்பு இருந்த இடத்திலேயே கட்டும்படியாக விட்டு விடுங்கள். மேலும், கடவுளின் ஆலயத்தைக் கட்டுவதற்கு யூதர்களின் மூப்பர்கள் செய்ய வேண்டியதைக்குறித்து, நாம் இடும் கட்டளையாவது : வேலை தடைபடாமலிருக்கும் பொருட்டு, நதிக்கு அக்கரையில் உள்ள

நாட்டினின்று அரசனுக்கு வரும் கப்பத்திலிருந்து அம்மனிதர்களுக்கு வேண்டியதையெல்லாம் தவறாது கொடுக்கவேண்டும். தாரியுஸ் ஆகிய நாமே இக்கட்டளையைக் கொடுத்தோம். இது கவனமாய் அனுசரிக்கப் படவேண்டும்."

யூதர்களின் மூப்பர்கள், ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தனர்; இறை வாக்கினர் ஆக்கேயும், அத்தோ மகன் சக்கரியாசும் உரைத்திருந்தபடி கட்டட வேலை முன்னேறியது. அவர்கள் இஸ்ராயேலின் கடவுளின் கட்டளைப்படியும், பாரசீக அரசர்களான சீருஸ், தாரியுஸ், அர்தக்சேர்செஸ் ஆகியோரின் கட்டளைப்படியும் ஆலயத்தைக் கட்டி எழுப்பினர். அரசன் தாரியுசுடைய ஆட்சியின் ஆறும் ஆண்டு, ஆதார் மாதம் மூன்றும் நாள் ஆலய வேலை முடிவுற்றது.

அப்பொழுது இஸ்ராயேல் மக்களும் குருக்களும் லேவியர்களும் அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்திருந்த ஏனையோரும் கடவுளின் கோவில் அபிஷேகத் திருவிழாவை அக்களிப்புடன் கொண்டாடினர். கோயில் அபிஷேகத்திற்காக நூறு இளங்காளைகளும் இருநூறு செம்மறிக் கடாக்களும் நானூறு செம்மறிக்குட்டிகளும், இஸ்ராயேல் கோத்திரங்களின் கணக்குப்படி, இஸ்ராயேல் மக்கள் அனைவரின் பாவத்துக்காகப் பன்னிரு வெள்ளாட்டுக் கடாக்களும் ஒப்புக்கொடுத்தனர். மோயீசனின் நூலில் எழுதியுள்ளவாறு, அவர்கள் யெருசலேமிலுள்ள கடவுளின் ஆலயத்தில் திருப்பணி புரியக் குருக்களையும் லேவியர்களையும், தத்தம் பிரிவின் முறைப்படி நியமித்தனர்.

மேலும், அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்திருந்த இஸ்ராயேல் மக்கள் முதன் மாதம் பதினான்காம் நாள், பாஸ்காத் திருவிழாவைக் கொண்டாடினர். குருக்களும் லேவியர்களும் ஒருமனப்பட்டவர்களாய்த் தங்களைத் தூய்மைப் படுத்தியிருந்தனர். குருக்கள் அடிமைத் தனத்தி லிருந்து திரும்பி வந்திருந்த எல்லாருக்காகவும் தங்கள் உடன் குருக்களுக் காகவும் தங்களுக்காகவும் பாஸ்காவைப் பலியிட்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 121 : 1-2, 3-4a, 4b-5 (பல்லவி : 1 காண்)

பல்லவி **மகிழ்ச்சியுடன் ஆண்டவர்தம் இல்லம் செல்வோம்.**

1 ஆண்டவர்தம் இல்லம் செல்வோம் என்று எனக்குச் சொல்லினர் :
நான் பெருமகிழ்ச்சியுற்றேன்,
2 யெருசலேமே, இதோ உன் வாயிலில் வந்து நிற்கின்றோம். பல்லவி

3 மாநகராய் அமைக்கப்பட்டுள்ளது யெருசலேம்,
எல்லாம் இசைவாகப் பொருத்தப்பட்டுள்ள நகர் அது.
4 கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன,
ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன : பல்லவி

இஸ்ராயேலின் சட்டப்படி ஆண்டவருடைய திருப்பெயரைப்
போற்றச் செல்கின்றன.
5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன :
தாவீதின் இல்லத்து அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**பொன்மொழிகள் பல.**

பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம் 21 : 1-6, 10-13

நீரோடைகள் எவ்வாறோ அவ்வாறே ஆண்டவர் கையில் அரசனின் இதயம். அவர் தம் விருப்பப்படி அதைச் சாய்ப்பார். மனிதனுடைய நெறியெல்லாம் அவனுக்கு முறையானவையாய்த் தோன்றுகின்றன. ஆனால், ஆண்டவர் இதயங்களை எடை போடுகிறார்.

இரக்கத்தையும் நீதியையும் கடைப்பிடித்தல் பலிகளைவிட ஆண்டவருக்கு அதிக விருப்பமாம்.

பார்வையின் பெருமிதமே மனத்தின் அகந்தையாம். அக்கிரமிகளிடம் பிறக்கிறதெல்லாம் பாவமாம்.

சுறுசுறுப்புள்ளவனின் சிந்தனைகள் எப்போதும் சுகத்தைத் தரும். ஆனால், சோம்பேறி எவனும் எப்போதும் வறுமையால் வருத்தப்படுவான்.

பொய் சொல்வதன் மூலம் செல்வத்தைச் சேகரிக்கிறவன் வீணனும் மூடனுமாம். அவன் சாவுக் கண்ணிகளில் சிக்கிக்கொள்வான்.

அக்கிரமியின் ஆன்மா தீமையை நாடுகின்றது. தன் அயலானுக்கும் அவன் இரங்கமாட்டான். தீயவன் தண்டிக்கப்படுவதன் மூலம் நேர்மையாளன் அதிக ஞானமுள்ளவனாவான். ஞானியை அவன் பின்தொடர்வானானால் அறிவையும் பெறுவான்.

அக்கிரமிகளைத் தீமையினின்று அகற்றும் பொருட்டு நீதிமான் அக்கிரமியின் வீட்டைத் (திருத்த) முயல்கிறான். ஏழையின் கூக்குரலுக்குத் தன் காதை இறுக மூடுகிறவன் தானும் கூக்குரலிட்டுக் கூப்பிடுவான்; கேட்கப்படவும் மாட்டான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 1, 27, 30, 34, 35, 44 (பல்லவி : 35a)

பல்லவி : ஆண்டவரே, உம் கற்பனை காட்டும் நெறியில்
என்னை நடத்தியருளும்.

1 மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர் :
ஆண்டவர் தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர். பல்லவி

27 உம் கட்டளைகள் காட்டும் வழியில் என்னைச் செலுத்தும்.
நான் உம் வியப்புக்குரிய செயல்களைத் தியானிப்பேன். பல்லவி

30 உண்மையின் பாதையை நான் தேர்ந்துகொண்டேன்.
உம் முறைமைகளை என் கண்முன் கொண்டேன். பல்லவி

34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும் :
அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். பல்லவி

35 உம் கற்பனைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும் :
அதுவே என் இன்பம். பல்லவி

44 உமது திருச்சட்டத்தை நான் எப்போதும் கடைப்பிடிப்பேன்,
என்றென்றும் முடிவின்றி அதைக் காப்பேன். பல்லவி

லூக் 11 : 28

## அல்லேலூயா

அல்லேலூயா. கடவுள் வார்த்தையைக் கேட்டு,
கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் வார்த்தையைக் கேட்டு நடப்போர் எனக்குத் தாயும் சகோதரரும் ஆவர்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

*8 : 19-21*

**அக்காலத்தில் :**

யேசுவின் தாயும் சகோதரரும் அவரிடம் வந்தனர். ஆனால் கூட்ட மிகுதியினால் அவரை அணுகமுடியவில்லை, "உம் தாயும் சகோதரரும் உம்மைக் காண விரும்பி வெளியே நிற்கின்றனர்" என்று அவருக்கு அறிவித்தனர்.

அதற்கு அவர், "கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்களே எனக்குத் தாயும் சகோதரரும் ஆவர்" எனக் கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**அடிமைகளாயிருந்தும் கடவுள் நம்மைக் கைவிடவில்லை.**

எஸ்ரா ஆகமத்திலிருந்து வாசகம் *9 : 5-9*

எஸ்ராவாகிய நான் மாலைப்பலி நேரத்திலே என் துயரை விடுத்து, கிழிந்த போர்வையோடும் அங்கியோடும் முழந்தாளிட்டு என் கடவுளான ஆண்டவரை நோக்கி, என் கைகளை விரித்தேன்.

"என் கடவுளே, நான் உம்மை நோக்கி என் முகத்தைத் திருப்ப வெட்கி நாணுகிறேன். ஏனெனில், எம் பாவங்கள் எம் தலைக்கு மேல் பெருகிற்று. எம் அக்கிரமங்கள் விண்ணைத் தொட்டுவிட்டன. எம் முன்னோர் காலந்தொட்டு இன்றுவரை நாங்கள் பெரும் பாவங்களைச் செய்துள்ளோம். எங்கள் பாவங்களின் பொருட்டல்லோ நாங்களும் எம் அரசர்களும் குருக்களும், புறவின அரசர்களின் கைக்கும் வாளுக்கும், அடிமைத்தனத்துக்கும் கொள்ளைக்கும் வெட்கக்கேட்டுக்கும் கையளிக்கப் பட்டோம்! இன்னும் எங்களுக்கு அதே நிலைதானே!

ஆனால் இப்பொழுது எம் கடவுளான ஆண்டவர் எம்மில் சிலரை மீதியாக வைக்கவும், தமது திருவிடத்தில் எங்களுக்குச் சிறிது இடம் தரவும், எம் கண்களுக்கு ஒளியை அருளவும், எம் அடிமைத்தனத்தினின்று எங்களுக்குச் சிறிது மீட்பு அளிக்கவும் வேண்டி எம் கடவுளை நோக்கிச் சற்று மன்றாடினேம். நாங்கள் அடிமைகளாயிருந்தும் எம் கடவுள் எம்மைக் கைவிட்டு விடவில்லை. மாறாக, நாங்கள் உயிர் பிழைக்கவும், பாழடைந்து கிடந்த எங்கள் கடவுளின் ஆலயத்தைத் திரும்பக் கட்டி எழுப்பவும், யூதாவிலும் யெருசலேமிலும் எங்களுக்குத் தக்க பாதுகாப்பை அளிக்கவும், பாரசீக அரசர்முன் எமக்குத் தயை கிடைக்கவும் செய்தருளினர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

தொபி. 13 : 2, 4, 6, 7, 8 (பல்லவி : 1 b)

பல்லவி : **ஆண்டவரே, நீர் என்றென்றும் மாண்புமிக்கவர்.**

2 தண்டிப்பவரும் மீட்பவரும் நீரே.
பாதாளத்தில் அமிழ்த்துகிறவரும் அதினின்று எழுப்புகிறவரும் நீரே.
ஒருவனும் உமது கைக்குத் தப்பமுடியாது. பல்லவி

4 ஏனெனில் அவர்தம் வியப்புக்குரிய செயல்களை நீங்கள் வெளிப்படுத்தி,
அவரை அன்றி எல்லாம்வல்ல கடவுள் வேறுயாரும் இல்லை என்று,
அவரை இன்னும் அறியாத புறவினத்தார்க்கு
நீங்கள் அறிவிக்கும் பொருட்டே
அவர் அவர்கள் மத்தியில் உங்களைச் சிதறடித்தார். பல்லவி

6 நம் நடுவில் அவர் செய்தவற்றைப் பாருங்கள்.
அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அவரை மகிமைப்படுத்துங்கள்.
என்றும் ஆளும் அரசரை உங்கள் செயல்களால் ஏத்திப் போற்றுங்கள்.
பல்லவி

7 "நானே அடிமை நாட்டில் இருந்துகொண்டே
அவரைப் புகழ்ந்து பாடுவேன்.
ஏனெனில் அவர் பாவியான மக்கள்மீது
தமது மகிமையை வெளிப்படுத்தினர். பல்லவி

8 ஆகையால் ஓ பாவிகளே, மனம் திரும்புங்கள்.
கடவுள் உங்களுக்கு இரக்கம் காட்டுவார் என்று நம்பி
அவரது திருமுன் நேர்மையோடு நடங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**வறுமையையோ செல்வத்தையோ எனக்குத் தராமல்,
உன் வாழ்க்கைக்குத் தேவையானதையே கொடுத்தருளும்.**

**பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம்** 30 : 5-9

கடவுளின் வார்த்தை நெருப்பினால் (பரிசுத்தப்) பட்டது. அதை நம்பி இருக்கின்றவர்களுக்கு (அது) கேடயமாம். நீ கண்டிக்கப்பட்டுப் பொய்யனாய்ப் போகாதபடி அவருடைய வார்த்தைகளோடு யாதொன்றையும் சேர்க்காதே.

இரண்டு (காரியங்களை) நான் உம்மிடம் கேட்கிறேன்; நான் இறக்குமுன் (அவற்றை) நீர் எனக்கு மறுத்துவிடாதீர். வீணானதையும் பொய்யான சொற்களையும் என்னைவிட்டு அகன்றிருக்கச் செய்யும்; வறுமையையேனும் செல்வத்தையேனும் எனக்குக் கட்டளையிடாமல் என் வாழ்க்கைக்குத் தேவையானதைமட்டும் எனக்குக் கொடும். (ஏனென்றால்), நான் ஒரு ஒருவேளை நிறைவினால் தூண்டப்பட்டு: ஆண்டவர் யார் என்று மறுத்துச் சொல்வேன்; அல்லது, வறுமையின் கொடுமையினால் திருடி, என் கடவுள் பெயரால் பொய்யாணை யிடுவேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 118 : 29, 72, 89, 101, 104, 168 (பல்லவி : 105அ)

பல்லவி: **எனக்கு வழிகாட்டும் விளக்கு
உமது வார்த்தைதான், ஆண்டவரே.**

29 தவறான வழியில் என்னை நடக்க விடாதேயும்,
உமது திருச்சட்டத்தை எனக்கு அருளும். பல்லவி

72 நீர் திருவாய் மலர்ந்த சட்டம்,
ஆயிரம் பொன்னையும் வெள்ளியையும்விட மேலானது. பல்லவி

89 ஆண்டவரே, என்றென்றைக்கும் உள்ளது உமது வார்த்தை:
வானத்தைப்போல் அது நிலையாயுள்ளது. பல்லவி

101 தீயவழி எதிலும் அடி எடுத்து வைக்காதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்:
உம் வார்த்தையின்படி நடப்பதே என் கவலை. பல்லவி

104 உம் கட்டளைகளால் நான் அறிவுள்ளவனாகிறேன்:
ஆகவேதான் தீமையான பாதை எதையும் நான் வெறுக்கிறேன். பல்லவி

163 அக்கிரமத்தை வெறுத்து ஒதுக்குகிறேன்,
உமது திருச்சட்டத்தை நேசிக்கிறேன். பல்லவி

அல்லேலூயா மாற்கு. 1 : 15

அல்லேலூயா: கடவுளரசு நெருங்கிவிட்டது :
மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இறை அரசைப் பற்றிய செய்தியை அறிவிக்கவும், நோயாளிகளைக் குணமாக்கவும் அவர்களை அனுப்பினார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 1-6

அக்காலத்தில் :

பன்னிருவரையும் அழைத்து, பேய்களையெல்லாம் அடக்கவும், நோய்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்கு அளித்தார். இறை அரசைப் பற்றிய செய்தியை அறிவிக்கவும் நோயாளிகளைக் குணமாக்கவும் அவர்களை அனுப்பினார்.

அப்போது அவர்களைப் பார்த்து, "வழிப் பயணத்திற்குக் கோலோ பையோ, உணவோ பணமோ, ஒன்றும் எடுத்துச் செல்லாதீர்கள். இரண்டு உள்ளாடைகளை யாரும் வைத்திருக்க வேண்டாம். எந்த வீட்டுக்குப் போனாலும், அங்கே தங்கியிருங்கள்; அங்கிருந்தே புறப்படுங்கள். யாராவது உங்களை ஏற்றுக்கொள்ளாவிடின் அவர்களுடைய ஊருக்கு வெளியே போய் அவர்களுக்கு எதிர் சாட்சியாக உங்கள் காலிலிருக்கும் தூசியைத் தட்டி விடுங்கள்" என்றார்.

அவர்கள் புறப்பட்டு ஊர் ஊராகச் சென்று, எங்கும் நற்செய்தியைப் பரப்பி நோயாளிகளைக் குணமாக்கினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.



ST. XAVIER'S COLLEGE
PALAYANKOTTAI
TIRUNELVELI-2.
627002.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

கோயில் கட்டுங்கள். அங்கே நாம் மகிழ்ச்சியுடன் குடியிருப்போம்.

இறைவாக்கினர் ஆகாய் ஆகமனத்தின் தொடக்கம் 1 : 1-8

தாரியுஸ் மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டில் ஆறும் மாதத்தின் முதல் நாளன்று, யூதாவின் ஆளுநன் சலாத்தியேலின் மகனுகிய சொரொபாபெலுக்கும், தலைமைக் குருவாகிய யோசதேக்கின் மகன் யோசுவாவுக்கும் இறைவாக்கினர் ஆகாய் வாயிலாய் அருளப்பட்ட ஆண்டவரின் வாக்கு: "சேனைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே: ஆண்டவருடைய இல்லத்தை மீண்டும் எழுப்புவதற்குரிய காலம் இன்னும் வரவில்லை என்று இந்த மக்கள் சொல்லுகிறுர்கள்."

அப்போது இறைவாக்கினர் ஆகாய் வாயிலாய் ஆண்டவருடைய வாக்கு அருளப்பட்டது: இந்த இல்லம் பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மட்டும் மாடமாளிகைகளில் குடியிருப்பதற்குரிய காலம் வந்து விட்டதோ? ஆதலால் இப்பொழுது சேனைகளின் ஆண்டவர் கூறுவதைக் கேளுங்கள்: உங்களுக்கு நேர்ந்தவற்றைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் விதைத்ததோ மிகுதி, அறுத்ததோ கொஞ்சந்தான்; நீங்கள் உண்ணுகிறீர்கள், ஆனல் வயிறு நிரம்புகிறதில்லை; நீங்கள் நீர் அருந்துகிறீர்கள், ஆயினும் தாகம் தணிவதில்லை; நீங்கள் உடுத்திக்கொள்ளுகிறீர்கள், ஆயினும் குளிர் விட்டபாடில்லை; கூலி வாங்குகிறவனும் வாங்கிய கூலியைப் பொத்தலான பையிலேயே போட்டு வைக்கிறுன்.

உங்களுக்கு நேர்ந்தவற்றைச் சிந்தித்துப் பாருங்கள், என்கிறுர் சேனைகளின் ஆண்டவர். மலைகளுக்குப் போய், மரங்கள் கொண்டுவாருங்கள், கோயில் கட்டுங்கள்; அங்கே நாம் மகிழ்ச்சியுடன் குடிகொள்வோம், மகிமை பெறுவோம், என்கிறுர் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 149 : 1-2, 3-4, 5-6a & 9b (பல்லவி : 4a)

பல்லவி : ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிருர்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலேப் பாடுங்கள்.
புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக !
2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து
அகமகிழ்வார்களாக :
சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக. பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக :
தம்பூராவும் யாழும்கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிருர்,
தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிருர். பல்லவி

5 மகிமைப் பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக :
6 தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக !
அவர்களது நாவில் இறைவனது பெரும்புகழ் ஒலிப்பதாக :
9 இத்தகைய மகிமை அவர் தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

சூரியன் முகத்தே புதியது ஒன்றும் இல்லை.

சங்கத் திருவுரை ஆகமத்திலிருந்து வாசகம் : 1 : 2-11

வீணிலும் வீண் என்று உரைத்தான் சங்கப் போதகன். வீணிலும் வீண், எல்லாமே வீண் என்கிருன். சூரியன் முகத்தே மனிதன் உழைத்து மேற்கொள்ளும் எல்லா முயற்சியினுலும் அவனுக்கு வரும் பயன் என்ன ? ஒரு தலைமுறை போகிறது ; மறு தலைமுறை வருகிறது. பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கின்றது. சூரியன் உதிக்கிறது ; பின்னர் மறைந்து, தான் உதித்த இடத்திற்கே திரும்பச் சென்று, அங்கிருந்து மறுபடியும் உதயமாகி, தெற்கே சாய்ந்து வடக்கே ஏறிப்போகும். காற்று சுழன்று சுழன்று அடித்துத் தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வருகிறது.

எல்லா ஆறுகளும் கடலில் ஓடி விழுந்தும் கடல் நிரம்பிக் கரை புரளாது; ஆறுகள் தாங்கள் உற்பத்தியான இடத்திற்கு மறுபடி திரும்பி ஓடும்.

எல்லாக் காரியங்களும் கண்டுபிடிக்க அரியனவாய் இருக்கின்றன. அவை எத்தகையன என்று மனிதரால் சொல்ல முடியாது. காண்கிறதனால் கண் நிறைவடைவதுமில்லை; கேட்கிறதினால் செவி நிறைவு பெறுவது மில்லை.

முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே இனிமேலும் செய்யப்படும். சூரியன் முகத்தே புதியது ஒன்றும் இல்லை. இதைப் பார்; இது நவீனம் என்று எவனும் சொல்ல இயலாது. ஏனென்றால் அது நமக்கு முன் சென்ற பழங்காலங்களிலும் இருந்தது. முன் இருந்தவைகளின் ஞாபகம் இப்பொழுது இல்லை. அப்படியே பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனி இறுதிக் காலத்தில் இருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 89 : 3-4, 5-6, 12-13, 14 & 17 (பல்லவி 1)

பல்லவி : ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக
எங்களுக்குப் புகலிடம் நீரே.

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர் ;
"மனுமக்களே மண்ணாகத் திரும்புங்கள்" என்கிறீர்.
4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட,
கடந்துபோன நேற்றைய தினத்தைப் போலவும்,
ஓர் இரவு சாமத்தைப் போலவும் உள்ளன. பல்லவி

5 அவர்களை எடுத்துவிடுகிறீர் ; வைகறையில் கண்ட கனவைப் போலவும்,
செழித்து வளரும் பூண்டைப் போலவும் ஆகிறார்கள்.
6 காலையில் பூக்கிறது. செழித்திருக்கிறது :
மாலையிலோ வாடிவிடுகிறது. பல்லவி

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு
எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும்.
எவ்வளவு காலம் கோபம் கொள்வீர்? உம் ஊழியர்மீது இரக்கம் வையும்.
பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் :
எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
17 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக ;
எங்கள் வேலைகளைப் பயனுள்ளவையாக்கும்.

பல்லவி

அல்லேலூயா அரு. 14:6

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும், உண்மையும் உயிரும்,
என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அருளப்பர் தலையை நான்தான் வெட்டினேன், இவர் யாரோ ?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 7-9

அக்காலத்தில் :

யேசு புரிந்தவற்றை எல்லாம் கேள்வியுற்ற சிற்றரசன் ஏரோது மனம் கலங்கினன். ஏனெனில், சிலர், "அருளப்பர் இறந்தோரிடமிருந்து உயிர்த்திருக்கிறார்" என்றனர். வேறு சிலர், "எலியாஸ் மறுபடியும் தோன்றியிருக்கிறார்" என்றனர். மற்றும் சிலர், "முற்காலத்து இறைவாக்கினர்களுள் ஒருவர் உயிர்த்தெழுந்திருக்கிறார்" என்றனர்.

ஏரோதோ, "அருளப்பரா? அவர் தலையை நான்தான் வெட்டினேனே. இவர் யாரோ? இவரைப்பற்றி இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேனே" என்று சொல்லி அவரைக் காண வாய்ப்புத் தேடினன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இன்னும் சிறிது காலம்: அப்போது நாம் இந்த இல்லத்தை மகிமையால் நிரப்புவோம்.**

இறைவாக்கினர் ஆகாய் ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 1b-10

மன்னன் தாரியுசின் இரண்டாம் ஆட்சி யாண்டில், ஏழாம் மாதத்தின் இருபத்தோராம் நாளில் ஆண்டவரின் வாக்கு இறைவாக்கினர் ஆகாய் வாயிலாக அருளப்பட்டது. "யூதாவின் ஆளுநன் சலாத்தியேலின் மகன் சொரொபாபெலிடமும், தலைமைக் குருவாகிய யோசதேக்கின் மகன் யோசுவாவிடமும், மக்களுள் எஞ்சியிருப்போர் அனைவரிடமும் இப்பொழுது நீ போய்ச் சொல்லவேண்டியது: 'இந்தக் கோயிலின் முன்னைய மகிமையைக் கண்டவன் எவனாகிலும் உங்கள் நடுவில் இருக்கிறானா? இப்போது இது உங்களுக்கு எத்தன்மைத்தாய்த் தோன்றுகிறது? உங்கள் கண்களுக்கு இது ஒன்றுமில்லாததுபோலத் தோன்றுகிறதல்லவா? ஆயினும் சொரொபாபெலே, தைரியமாயிரு, என்கிறார் ஆண்டவர்; தலைமைக் குருவாகிய யோசதேக்கின் மகனான யோசுவாவே, தைரியமாயிரு; நாட்டு மக்களே, நீங்கள் அனைவரும் தைரியமாயிருங்கள், என்கிறார் ஆண்டவர். தொடர்ந்து வேலை நடத்துங்கள்; நாம் உங்களோடு இருக்கிறோம், என்கிறார் ஆண்டவர். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த போது உங்களோடு நாம் செய்த உடன்படிக்கையின்படி, உங்கள் நடுவில் நமது ஆவி குடிகொண்டிருக்கிறது; நீங்கள் அஞ்சாதீர்கள்."

ஏனெனில் சேனைகளின் ஆண்டவர் சொல்லுகிறார்: "இன்னும் கொஞ்ச காலத்தில் நாம் மறுபடியும் விண்ணையும் மண்ணையும், நீரையும் நிலத்தையும் அசைப்போம்; மக்களினங்கள் அனைத்தையும் திகைக்கச் செய்வோம்; அப்போது எல்லா மக்களினங்களின் செல்வங்களும் இங்கே வந்து குவியும்; இந்த இல்லத்தை நாம் மகிமையால் நிரப்புவோம், என்கிறார் சேனைகளின் ஆண்டவர். வெள்ளியும் நமக்குரியது, பொன்னும் நமக்குரியதே, என்கிறார் சேனைகளின் ஆண்டவர். இந்த இல்லத்தின் பின்னைய மகிமை முன்னைய மகிமையினும் மிகுதியாயிருக்கும், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்; இந்த இடத்தில் நாம் சமாதானத்தை அருளுவோம், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 42 : 1, 2, 3, 4 (பல்லவி : 5 bc காண்)

பல்லவி : இறைவன்மீது நம்பிக்கை கொள் :
என் முகம் மலர, மீட்பளிப்பவரான
என் இறைவனைப் போற்றிப் புகழ்ந்திடுவேன்.

1 இறைவா, புனிதமற்ற மனிதர்க்கு எதிராக
என் நியாய வழக்கை விசாரித்து எனக்கு நீதி வழங்கும் :
தீயவனும் வஞ்சகனுமான மனிதனிடமிருந்து
என்னை விடுவிப்பீராக. பல்லவி

2 ஏனெனில், இறைவா, நீரே என் வலிமை ;
ஏன் என்னைத் தள்ளிவிட்டீர் ?
பகைவனால் துன்புற்றவனாய் நான் துயருடன் அலைவானேன் ? பல்லவி

3 உமது ஒளியை வீசியருளும், உமது உண்மையைக் காட்டியருளும் :
அவையே என்னை வழிநடத்தி உமது புனித மலைக்கும்
உறைவிடத்துக்கும் கொண்டுசேர்க்கும். பல்லவி

4 இறைவனின் பீடத்துக்குச் செல்வேன் :
எனக்கு அகமகிழ்வும் அக்களிப்பும் தரும் இறைவனிடம் செல்வேன்.
இறைவா, என் இறைவா,
வீணைகொண்டு உமக்குப் புகழ்பாடுவேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**வானத்தின்கீழ் நிகழ்வனவெல்லாம் குறிக்கப்பட்ட கெடுவின்படி நடக்கின்றன.**

சங்கத் திருவுரை ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 1-11

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு; வானத்தின்கீழ் நிகழ்வனவெல்லாம் அதற்குக் குறிக்கப்பட்ட கெடுவின்படி நடக்கின்றன. பிறக்க ஒரு காலமுண்டு; இறக்க ஒரு காலமுண்டு. நடுவதற்கு ஒரு காலமுண்டு; நட்டதைப் பிடுங்குவதற்கு ஒரு காலமுண்டு. கொல்ல ஒரு காலமுண்டு; குணமாக்க ஒரு காலமுண்டு. இடிக்க ஒரு காலமுண்டு; கட்ட ஒரு காலமுண்டு. கண்ணீர்விட ஒரு காலமுண்டு; சிரிக்க ஒரு

காலமுண்டு, புலம்ப ஒரு காலமுண்டு ; கூத்தாட ஒரு காலமுண்டு. கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு ; கற்களைச் சேர்ப்பதற்கு ஒரு காலமுண்டு, தழுவுவதற்கு ஒரு காலமுண்டு ; தழுவாதிருப்பதற்கு ஒரு காலமுண்டு, பொருட்களைத் தேட ஒரு காலமுண்டு; இழக்க ஒரு காலமுண்டு, காப்பாற்ற ஒரு காலமுண்டு ; எறிந்துவிட ஒரு காலமுண்டு, கிழிக்க ஒரு காலமுண்டு ; தைக்க ஒரு காலமுண்டு, மௌனமாயிருக்க ஒரு காலமுண்டு ; பேச ஒரு காலமுண்டு, அன்பு செய்ய ஒரு காலமுண்டு ; பகைக்க ஒரு காலமுண்டு, போர்புரிய ஒரு காலமுண்டு ; சமாதானம் செய்ய ஒரு காலமுண்டு.

வருந்தி உழைப்பதனால் மனிதனுக்குப் பயன் என்ன ? மனுமக்கள் பாடுபட்டுப் பரிசோதிக்கப்படும்படி கடவுள் அவர்களுக்கு நியமித்துள்ள தொல்லையைக் கண்டேன்.

அவர் எல்லாவற்றையும் அதனதன் காலத்திலே நல்லதாய் இருக்கும்படி செய்திருக்கிறார். உலகத்தையோ அதைக் குறித்து அவர்கள் விவாதிப்பதற்கு விட்டுவிட்டார். உண்மையில் கடவுளுடைய செயலெல்லாவற்றையும் தொடக்கத்திலிருந்து முடியும்வரையிலும் கண்டுபிடிக்கிற மனிதன் ஒருவனுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 143 : 1a & 2abc, 3-4 (பல்லவி : 1a)

பல்லவி : என் அடைக்கலப் பாறையாகிய
ஆண்டவர் போற்றி.

1 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி ;
2 எனக்கு இரக்கம் காட்டுபவர், என் அடைக்கலக் கோட்டை அவரே ;
எனக்குப் பாதுகாப்பும் விடுதலையும் அளிப்பவர் அவரே.
என் கேடயமும் புகலிடமும் அவரே. பல்லவி

3 ஆண்டவரே, நீர் மனிதனைப்பற்றிக் கவலைப்பட அவன் யார் ?
அவனைப்பற்றி நீர் நினைக்க அவன் யார் ?
4 அவன் ஒரு மூச்சுக்கு ஒப்பானவன் :
அவன் வாழ்நாள் மறைந்து போகும் நிழலை ஒத்தது. பல்லவி

## அல்லேலூயா

மாற்கு. 10 : 45

அல்லேலூயா. மனுமகன் பணிவிடை புரியவும்,
பலருடைய மீட்புக்கு விலையாகத்
தன் உயிரை அளிக்கவும் வந்தார். அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**நீர் கடவுளின் மெசியா. மனுமகன் பாடுகள் பல படவேண்டும்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 9 : 18-22

யேசு தனியே செபித்துக்கொண்டிருக்கும் பொழுது, அவருடைய சீடரும் அவருடன் இருந்தனர். அவர் அவர்களை நோக்கி, "மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் ?" எனக் கேட்டார்.

அவர்கள், "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் முற்காலத்து இறைவாக்கினர்களுள் ஒருவர் உயிர்த்தார் என்றும் சொல்லுகின்றனர்" என்றார்கள்.

"நீங்களோ என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் ?" என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர், மறுமொழியாக, "நீர் கடவுளின் மெசியா" என்றார். இதை ஒருவருக்கும் சொல்லக்கூடாது என்று கண்டிப்பான கட்டளையிட்டார்.

மேலும், "மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும் தலைமைக் குருக்களாலும் மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழவும் வேண்டும்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ ! நாம் வந்து, உன் நடுவில் குடிகொள்வோம்.**

**இறைவாக்கினர் சக்கரியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 2 : 1-5, 10-11a

நான் என் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, இதோ, அளவு நூலைக் கையில் பிடித்திருந்த ஒருவர் தென்பட்டார். "எங்கே போகிறீர் ?" என்று அவரைக் கேட்டேன். அதற்கு அவர், "யெருசலேமை அளந்து அதன் நீளத்தையும் அகலத்தையும் பார்க்கப் போகிறேன்" என்றார்.

இதோ, என்னிடம் பேசிய தூதர் கிளம்பிப் போகும்போது, வேறொரு தூதர் அவருக்கு எதிரில் வந்தார். வந்தவர் முன்னவரை நோக்கி, "விரைந்து போய் அந்த இளைஞரிடம், 'யெருசலேமில் இருக்கின்ற திரளான மனிதர்களையும் கால்நடைகளையும் முன்னிட்டு அந்நகரம் மதில் சூழா ஊர்களைப் போலவே இருக்கும். ஏனெனில் நாமே அதனைச் சுற்றி நெருப்புச் சுவராய் அமைவோம், நாமே அதனுள் மகிமையாக இருப்போம், என்கிறார் ஆண்டவர்' என்று சொல்" என்றார்.

"சீயோன் மகளே, அகமகிழ்ந்து அக்களி, இதோ, வருகிறோம், வந்து உன் நடுவில் குடிகொள்வோம், என்கிறார் ஆண்டவர். அந்நாளில் பல நாட்டு மக்களினங்கள் ஆண்டவரிடம் வந்து சேர்ந்துகொள்வார்கள்; அவர்கள் அவருடைய மக்களாய் இருப்பார்கள், அவர் உன் நடுவில் குடிகொண்டிருப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*எரேமி. 31 : 10, 11-12ab, 13 (பல்லவி : 10 d)*

பல்லவி : ஆயன் மந்தையைக் காப்பதுபோல்
ஆண்டவர் நம்மைக் காத்தருள்வார்.

10 புறவினத்தாரே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள் :
கேட்டுத் தொலைவிலுள்ள தீவுகளுக்கு அறிவியுங்கள் :
'இஸ்ராயேலைச் சிதறடித்தவர் அவர்களைச் சேர்ப்பார்,
ஆயன் மந்தையைக் காப்பதுபோல் அவர்களைக் காப்பார்'
என்று சொல்லுங்கள். பல்லவி

11 ஏனெனில் ஆண்டவர் யாக்கோபை மீட்டார் ;
வலியவன் கையினின்று அவனை விடுவித்தார்.
12 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியில் பாடிப் போற்றுவார்கள்,
ஆண்டவர் அவர்களுக்கு அளிக்கும் நன்மைகளை நாடிக்
கூட்டமாய் ஓடி வருவார்கள். பல்லவி

13 அப்போது கன்னிப் பெண்கள் நாட்டியமாடிக் களிப்பார்கள் ;
இளைஞரும் முதியோரும் அவ்வாறே மகிழ்வார்கள் ;
அவர்களுடைய அழுகையை அக்களிப்பாக மாற்றுவோம் ;
அவர்களைத் தேற்றித் துயரத்தைப் போக்கி,
அவர்களை மகிழச் செய்வோம். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

மண்ணானது மீண்டும் பூமிக்கே போகுமுன்னும், ஆவி கடவுளிடம் திரும்பிச் சேருமுன், உன் வாலிப நாட்களில் உன்னைப் படைத்தவரை நினை.

சங்கத் திருவுரை ஆகமத்திலிருந்து வாசகம் *11:9-12:8*

இளைஞனே, உன் இளமையிலே மகிழ்ச்சியாய் இரு; உன் வாலிப நாட்களில் உன் இதயம் மகிழட்டும்; உன் மனமும் கண்களும் போன வழியே நட. ஆனால், இந்த எல்லாக் காரியத்திலும் கணக்குச் சொல்லக் கடவுள் உன்னை நீதியாசனத்தின்முன் அழைத்துக்கொண்டு போய் நிறுத்துவாரென்பதை மறவாதே. உன் இதயத்தினின்று கோபத்தையும், உன் உடலினின்று கெட்டவை யாவையும் நீ விலக்கக்கடவாய். ஏனென்றால், இளமையும் வீண்; சிற்றின்பமும் வீணே.

துயர நாட்கள் வருமுன்னே, உன் வாலிப நாட்களில் உன்னைப் படைத்த கடவுளை நினை. ஏனென்றால்: நல்லதன்று என்று நீ சொல்லப் போகிற காலம் அண்மையில் இருக்கும். சூரியனும் சந்திரனும் வெளிச்சமும் விண்மீன்களும் இருண்டு போகுமுன்னும், மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வருமே - அதற்கு முன்னும் (கடவுளை நினை). வீட்டுக் காவலாட்கள் சோர்வடைந்து, பேராற்றல் உடையவர்கள் தள்ளாடி, இயந்திரம் சுழற்றும் பெண்கள் சிலருமாய் வேலை செய்யாதவர்களுமாய் ஓய்வதற்கு முன்னும்; பலகணி வழியாய்ப் பார்க்கிறவர்களின் கண்கள் இருண்டு போவதற்கு முன்னும்; இயந்திரக்கல் சுழலும் ஒலி மெலிந்து போக, தெரு வாயிற் கதவுகள் அடைபட்டு, பறவைகள் கூவ, மனிதர் எழுந்து, இசைக்கருவி இயக்கும் பெண்களெல்லாம் உணர்வு இழக்கு முன்னும்;

மேட்டுக்குப் பயந்து வழியிலே திகில் உண்டாக்கி, வாதுமை மரம் பூத்து, வெட்டுக்கிளி பெருத்து, கப்பாரீச் செடியின் தழைகள் உதிரு முன்னும்; மனிதன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதனால் தூங்கு கிறவர்கள் வீதியிலே திரியுமுன்னும்; வெள்ளிக்கயிறு அறுந்துபோய், பொன் (தெப்பம்) அவிழ்க்கப்பட்டு, ஊற்றினருகே குடம் உடைந்து, கேணியண்டையில் அதன் கப்பி உடைந்து போகுமுன்னும்;

மண்ணால் ஆனது தான் தோன்றின பூமிக்கே மறுபடியும் போகு முன்னும்; ஆவி அதனை அளித்த கடவுளிடம் திரும்பிச் சேருமுன்னும் - நீ உன்னைப் படைத்தவரை (நினைக்கக் கடவாய்).

வீணிலும் வீண் என்கிறான் (சங்கப் போதகன்); எல்லாம் வீணே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 89 : 3-4, 5-6, 12-13, 14 & 17 (பல்லவி : 1)

பல்லவி : **ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக
எங்களுக்குப் புகலிடம் நீரே.**

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர்;
“மனுமக்களே மண்ணாகத் திரும்புங்கள்” என்கிறீர்.
4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட,
கடந்துபோன நேற்றைய தினத்தைப்போலவும்,
ஓர் இரவு சாமத்தைப் போலவும் உள்ளன. பல்லவி

5 அவர்களை எடுத்துவிடுகிறீர்; வைகறையில் கண்ட கனவைப் போலவும்,
செழித்து வளரும் பூண்டைப்போலவும் ஆகிறார்கள்.
6 காலையில் பூக்கிறது, செழித்திருக்கிறது:
மாலையிலோ வாடி விடுகிறது. பல்லவி

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு எங்கள் வாழ்நாளைக்
கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும். எவ்வளவு காலம் கோபம் கொள்வீர்?
உம் ஊழியர் மீது இரக்கம் வையும். பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் :
எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
17 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக :
எங்கள் வேலைகளைப் பயனுள்ளவையாக்கும். பல்லவி

அல்லேலூயா 2 திமொ. 1 : 10b

**அல்லேலூயா.** **நம் மீட்பராம் யேசு கிறிஸ்து சாவை அழித்து,
நற்செய்தியின் வழியாக வாழ்வை ஒளிரச்செய்தார்.
அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் மனிதரிடம் கையளிக்கப்படப்போகிறார், இதைப் பற்றி அவரிடம் கேட்க அஞ்சினர்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 9 : 44b-45

அக்காலத்தில்:

யேசு செய்ததெல்லாம் பார்த்து எல்லாரும் வியந்துகொண்டிருக்க, அவர் சீடரிடம், "நான் சொல்லுவதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்: மனுமகன் மனிதரிடம் கையளிக்கப்படப் போகிறார்" என்றார்.

அவர்களோ, அவர் சொன்னதைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் உணர்ந்துகொள்ளாதவாறு அது மறைபொருளாயிருந்தது. ஆயினும் அவர் சொன்னதைப்பற்றி அவரைக் கேட்க அஞ்சினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தாறும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தீயவன் தன் தீய வழியை விட்டு விலகினால், தன்னையே காத்துக்கொள்வான்.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 18 : 25-28

இறைவன் கூறுவதாவது:

நீங்கள், 'ஆண்டவர் நடந்து கொள்வது நீதியில்லை' என்று சொல்வீர்களோ? இஸ்ராயேல் வீட்டாரே, கேளுங்கள்: நமது வழியா நீதியானதில்லை? நீதியற்ற வழி உங்கள் வழியே அல்லவா? நீதிமான் தன் நீதிநெறியை விட்டு விலகி, அநீதியைச் செய்தால், அதன் காரணமாய்ச் சாவான்; தான் செய்த அநீதியாலேயே சாவான்.

தீயவன் தான் நடந்த தீய வழியைவிட்டு விலகி நீதி நெறியில் நடந்து, சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்தால், தன்னையே காத்துக்கொள்வான். தன் நிலையை எண்ணிப்பார்த்து, தான் முன்செய்த அக்கிரமங்களையெல்லாம் விலக்கினதால், அவன் உயிர் வாழ்வான் என்பது உறுதி; அவன் சாகான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 24 : 4-5, 6-7, 8-9 (பல்லவி : 6a)

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்:
உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.
5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி பல்லவி

எனக்கு அறிவு புகட்டியருளும்:
என் மீட்பராம் இறைவன் நீரே,
என்றும் உம்மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்:
ஆதிகால முதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.
7 உம் அருளன்பிற்கேற்ப என்னை நினைவுகூரும்,
உமது அருள்நன்மையின் பொருட்டு என்னை மறவாதேயும். பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்:
ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.
9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்:
எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்துயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *2 : 1-11*

சகோதரர்களே:

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு ஊக்கம் ஊட்டுவதெனில், அன்பினால் ஆறுதல் விளைவிப்பதெனில், ஆவியானவரோடு நட்புறவு தருவதெனில், பரிவும் இரக்கமும் உண்டாக்குவதெனில் நீங்கள் ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவுபெறச் செய்யுங்கள்; ஒரே அன்பும், ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டிருங்கள். போட்டி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத்தாழ்ச்சியோடு மற்றவரை உங்களினும் உயர்ந்தவராகக் கருதுங்கள். உங்களுள் ஒவ்வொருவரும் தன்னலத்தையே நாடாது, பிறர் நலத்தையும் நாடவேண்டும்.

கிறிஸ்து யேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக. கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே,

யேசுவின் பெயருக்கு விண்ணவர் மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட, 'யேசு கிறிஸ்து ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது: குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1 5

சகோதரர்களே :

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு ஊக்கம் ஊட்டுவதெனில், அன்பினால் ஆறுதல் விளைவிப்பதெனில், ஆவியானவரோடு நட்புறவு தருவதெனில், பரிவும் இரக்கமும் உண்டாக்குவதெனில் நீங்கள் ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவுபெறச் செய்யுங்கள்; ஒரே அன்பும், ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டிருங்கள். போட்டி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம் தரவேண்டாம். மனத்தாழ்ச்சியோடு மற்றவரை உங்களினும் உயர்ந்தவராகக் கருதுங்கள். உங்களுள் ஒவ்வொருவரும் தன்னலத்தையே நாடாது, பிறர் நலத்தையும் நாடவேண்டும். கிறிஸ்து யேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லேலூயா அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன;
நானும் அவற்றை அறிவேன்,
அவையும் என்னைப் பின் தொடர்கின்றன,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

மனமாறிச் சென்றான்... ஆயக்காரரும் விலைமாதரும்
உங்களுக்குமுன் கடவுள் அரசில் சேருவார்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
21 : 28-32

அக்காலத்தில் : யேசு தலைமைக் குருக்களையும், மக்களின் மூப்பரையும் நோக்கிக் கூறியதாவது:

"இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? ஒருவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவன் ஒருவனிடம் போய் 'மகனே, இன்று என் திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய், என்றான். அதற்கு அவன், 'போகமாட்டேன்' என்றான். பின்னர் வருந்தி மனமாறிச் சென்றான். மற்றவனிடமும் வந்து அவ்வாறே சொன்னான். அதற்கு அவன், 'இதோ! போகிறேன், ஐயா' என்றான். ஆனால் போகவில்லை. இருவருள் எவன் தந்தையின் விருப்பப்படி நடந்தவன்?" என்று கேட்டார். அவர்கள், "முந்தியவனே" என்றனர்.

யேசு அவர்களை நோக்கி "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆயக்காரரும் விலைமாதரும் உங்களுக்கு முன் கடவுள் அரசில் செல்வார்கள்: ஏனெனில், அருளப்பர் நீதிநெறியைக் காட்ட உங்களிடம் வந்தார்; நீங்களோ அவரை நம்பவில்லை. ஆனால், ஆயக்காரரும் விலைமாதரும் அவரை நம்பினர்; நீங்களோ அதைப் பார்த்த பின்னும் வருந்தி மனமாறி அவரை நம்பவில்லை," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

நீ என் பொருட்டுப் பொறாமைப்படுகிறாயா? மக்கள் அனைவரும் இறைவாக்கினர்களாய் இருந்தால் நலமாயிருக்குமே!

எண்ணிக்கை நூலிலிருந்து வாசகம் 11 : 25-29

அந்நாட்களில்:

ஆண்டவர் மேகத்தினின்று இறங்கி வந்து மோசேயோடு உரையாடிய பின்பு மோசேயினிடத்திலிருந்த ஆவியை அவ்வெழுபது பெரியோருக்கும் பிரித்துக் கொடுத்தார். ஆவி தங்கள் மேல் வந்து தங்கினவுடனே அவர்கள் இறைவாக்குரைக்கத் தொடங்கினார்கள். அந்நாள் முதல் அவர்கள் இடைவிடாது இறைவாக்குரைத்தார்கள்.

அப்பொழுது எல்தாத், மேதாத் என்று அழைக்கப்படும் இரண்டு ஆடவர்மேல் ஆவி இறங்கியிருந்தது. அவர்கள் (எழுபது முதியோருடைய) பெயர்ப்பட்டியலில் எழுதப்பட்டிருந்தும், சாட்சியக் கூடாரத்திற்கு எழுந்து வராமல் பாளையத்திலே இருந்து கொண்டார்கள்.

அவர்கள் பாளையத்திலே இறைவாக்குரைக்கும்போது சிறுவன் ஒருவன் மோசேயிடம் ஓடி வந்து: இதோ எல்தாத், மேதாத் என்பவர்கள் பாளையத்திலே இறைவாக்குரைக்கிறார்கள் என அறிவித்தான். உடனே, நூனின் புதல்வனும் மோசேயுடைய ஊழியர்களில் சிறந்தவனுமாகிய யோசுவா மோசேயை நோக்கி: தலைவா! அதைத் தடை செய்யும் என்றான். அதற்கு மோசே: என் காரியத்தில் நீ எரிச்சலாய் இருப்பானேன்? (மக்கள்) எல்லாருமே இறைவாக்கினர் ஆக ஆண்டவர் அவர்கள் மேல் தம்முடைய ஆவியைத் தந்தால் நலமாயிருக்குமே என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 18 : 7, 9, 11-12, 13 (பல்லவி : 8a)

பல்லவி: ஆண்டவர்தம் கட்டளைகள் நேரியவை:
உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.

ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது;
ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது:
ஆண்டவருடைய கட்டளை உறுதியானது;
எளியோருக்கு அறிவூட்டுவது.

பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது ;
என்றென்றும் நிலைத்திருப்பது :
ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை :
அவை எல்லாம் நீதியானவை.

பல்லவி

11 உம் ஊழியனும் அவற்றால் பயிற்சி பெறுகிறான் :
அவற்றைக் கடைப்பிடிப்பதில் மிக விழிப்பாயிருக்கிறான்.
12 குற்றங்குறைகளை யார் கண்டுணர்வர் ?
எனவே, மறைவாயுள்ள என் குற்றங்களை நீக்கி என்னைப் புனிதப்படுத்தும்.

பல்லவி

13 தற்பெருமையினின்று உம் ஊழியனைக் காத்தருளும் :
அது என்னை அடிமைப்படுத்தாதிருப்பதாக.
அப்போது நான் குற்றமற்றவனாகி,
பெரும் பாவங்களினின்று விடுபட்டுத் தூயவனாவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் செல்வம் மட்கிப் போயிற்று.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6

பணக்காரரே, சற்றுக் கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும் அவல நிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மட்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச் சாட்சியாய் இருக்கும் ; உங்கள் சதையைத் தின்றுவிடும். இறுதி நாளுக்காக நீங்கள் உங்களுக்கென நெருப்பைத்தான் குவித்துவைத்திருக்கிறீர்கள்.

உங்கள் வயலில் அறுவடை செய்தவர்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். கொடுக்காத கூலி கூக்குரலிடுகிறது. அறுவடையாளர் எழுப்பும் அப்பேரொலி வான்படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது. இவ்வுலகிலே இன்பப் பெருவாழ்வில் மூழ்கியிருந்தீர்கள். உங்களுடைய அழிவு நாளுக்காக உங்கள் உள்ளங்களைக் கொழுக்க வைத்திருக்கிறீர்கள். நீதிமானுக்குத் தண்டனைத் தீர்ப்பளித்துக் கொலை செய்தீர்கள். அவனோ உங்களை எதிர்க்கவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**பஞ்சணையில் படுத்து பண்ணிசைக்கும் நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள்.**

இறைவாக்கினர் ஆமோஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 5 : 1a, 4-7

எல்லாம் வல்ல இறைவன் கூறுவதாவது :

சீயோனில் சிற்றின்ப வாழ்வில் திளைத்திருக்கிறவர்களே, சமாரியா மலைமேல் கவலையற்றிருக்கிறவர்களே, மக்களினங்களுள் சிறந்த இவ்வினத்தின் பெருங்குடி மக்களே, இஸ்ராயேல் மக்கள் தேடிவருமளவுக்குப் பெருமை வாய்ந்தவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு ! தீய நாளை இன்னும் தள்ளிவைப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் வன்முறையின் அரியணையை அருகில் கொண்டுவருகிறீர்கள் ; தந்தத்தால் இழைத்த கட்டிலில் படுத்து பஞ்சணையில் சாய்ந்து கிடக்கிறார்கள் ; கிடையிலிருந்து ஆட்டுக் குட்டிகளையும் மந்தையிலிருந்து கொழுத்த கன்றுகளையும் சாப்பிடுகிறார்கள்; வீணையொலி எழுப்பி அலறித் தீர்க்கிறார்கள், தாவீதைப்போலப் புதிய இசைக் கருவிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். கோப்பைகளில் திராட்சை இரசம் குடிக்கிறார்கள், உயர்ந்த நறுமண எண்ணெய் தடவிக்கொள்ளுகிறார்கள், ஆனால் யோசேப்பின் வீட்டாரழிவைக் குறித்துக் கலங்குகிறதில்லை ! ஆகையால் அவர்கள்தான் முதற்கண் நாடு கடத்தப்படுவர், சிற்றின்பம் தேடுகிறவர் கூட்டம் அற்றுப்போகும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145 : 7, 8-9a, 9bc-10 (பல்லவி : 1a)

பல்லவி : **நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.**

அல்லது : **அல்லேலூயா.**

7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர்.
துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்.
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்.
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

அல்லேலூயா

2 கொரி. 8 : 9

அல்லேலூயா. யேசு கிறிஸ்து செல்வமிக்கவராய் இருந்தும்,
அவரது ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி,
உங்களுக்காக ஏழையானுர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உனக்கு இன்பசுகமும், இலாசருக்குத் துன்ப துயரமுமே கிடைத்தது ;
இப்பொழுது அவன் ஆறுதலடைகிருன், நீயோ வேதனைப்படுகிருய்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16 : 19-31

அக்காலத்தில் : யேசு பரிசேயரிடம் கூறியதாவது :

பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் விலையுயர்ந்த ஆடையும், மெல்லிய உடையும் அணிந்து நாள்தோறும் ஆடம்பரமாய் விருந்தாடுவான். அவனுடைய வாசலருகே இலாசர் என்னும் ஏழை ஒருவன் கிடந்தான் ; அவனுடலெல்லாம் ஒரே புண்ணுயிருந்தது. அவன் அப்பணக்காரனின் பந்தியில் சிந்தினவற்றைக்கொண்டு பசியாற்ற விரும்பினுன். நாய்கள்கூட வந்து அவனுடைய புண்களை நக்கும். இந்த ஏழை இறந்தான் ; வானதூதர் அவனைத் தூக்கிச் சென்று ஆபிரகாமின் அருகிலேயே அமர்த்தினர். பணக்காரனும் இறந்தான் ; புதைக்கப்பட்டான்.

அவன் பாதாளத்திலே வேதனைப்படுகையில் ஏறெடுத்துப் பார்த்தான். தொலைவில் ஆபிரகாமையும், அவர் அருகிலேயே அமர்ந்திருந்த இலாசரையும் கண்டான். 'தந்தை ஆபிரகாமே, என்மீது இரங்கி, இலாசர் தன் விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து, என் நாவைக் குளிரச் செய்யும்படி அவனை அனுப்பும். நான் இந்நெருப்பில் வேதனைப்படுகிறேன்' என்று கத்தினுன்.

ஆபிரகாம் அவனை நோக்கி, 'மகனே, வாழ்நாளில் உனக்கு இன்பசுகமே கிடைத்தது, இலாசருக்குத் துன்ப துயரமே கிடைத்தது. இதை நினைத்துப் பார். ஆனுல், இப்பொழுது அவன் இங்கே ஆறுதலடைகிருன், நீயோ வேதனைப்படுகிருய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பாதாளம் ஒன்று அமைந்துள்ளது. எனவே, இங்கிருந்து உங்களிடம் கடந்துவர ஒருவன் விரும்பினுலும் முடியாது ; அங்கிருந்து எங்களிடம் தாண்டி வருவதும் கிடையாது' என்ருர்.

அதற்கு அவன், ‘தந்தையே, அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டுகிறேன். எனக்குச் சகோதரர் ஐவர் இருக்கின்றனர். அவர்களும் இந்த வேதனைக் களத்திற்கு வராதபடி அவன் எச்சரிக்கட்டும்’ என்றான். ஆபிரகாமோ, ‘அவர்களுக்கு மோயீசனும் இறைவாக்கினர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்’ என்றார்.

அவனோ, ‘அப்படியன்று, தந்தை ஆபிரகாமே, இறந்தோரிடமிருந்து யாராவது அவர்களிடம் சென்றால், மனந்திரும்புவர்’ என்றான். அதற்கு அவர், ‘மோயீசனுக்கும் இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்காவிடில் இறந்தோரிடமிருந்து ஒருவன் உயிர்த்தெழுந்தாலும் நம்பமாட்டார்கள்’ என்றார்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கீழ்த்திசை, மேற்றிசை நாடுகளிலிருந்து நம் மக்களை நாம் மீட்டு வருவோம்.**

இறைவாக்கினர் சக்கரியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *8 : 1-8*

அந்நாட்களில் :

சேனைகளின் ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது: “சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: சீயோன்மீது நாம் அளவில்லா அன்பார்வம் கொண்டுள்ளோம், அவளைக் காப்பதற்காக அடங்காத ஆத்திரத்தோடு ஆர்வம் கொண்டுள்ளோம்.

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: சீயோனுக்கு நாம் திரும்பி வரப்போகிறோம், யெருசலேமின் நடுவில் குடிகொள்ளுவோம்; யெருசலேம் நகரம் பிரமாணிக்கமுள்ள நகரமென்றும், சேனைகளின் ஆண்டவருடைய மலை பரிசுத்த மலையென்றும் பெயர் பெற்று விளங்கும்.

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: யெருசலேமின் பொதுவிடங்களில் மறுபடியும் கிழவர்களும் கிழவிகளும் அமர்ந்திருப்பார்கள்; வயதில் முதிர்ந்தவர்களானதினால் ஒவ்வொருவரும் கையில் கோல் வைத்திருப்பர். நகரத்தின் தெருக்களில் சிறுவர்களும் சிறுமிகளும் நிறைந்து தெருக்களிலே விளையாடுவார்கள்.

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: இம்மக்களுள் எஞ்சியிருப்போர்க்கு அந்நாட்களில் இதெல்லாம் பெரும் புதுமையாய்த் தோன்றுமாயின், நமக்கும் அது புதுமையாகத் தோன்றுமோ, என்கிறார் சேனைகளின் ஆண்டவர்.

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: இதோ, கீழ்த்திசை நாட்டினின்றும் மேற்றிசை நாட்டினின்றும் நம்முடைய மக்களை நாம் மீட்டு வருவோம்; அவர்களைக் கூட்டி வருவோம், அவர்களும் யெருசலேமின் நடுவில் குடியிருப்பர்; அவர்கள் நம் மக்களாய் இருப்பார்கள், நாம் அவர்களுக்குக் கடவுளாயிருப்போம்; எங்களுக்கிடையில் பிரமாணிக்கமும் நீதியும் நிலவும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 101; 15-17, 18-20, 27 & 21-22 (பல்லவி: 16)

பல்லவி: ஆண்டவர் சீயோனை மீண்டும் எழுப்பினார்:
தம் மாட்சிமையில் அவர் விளங்கினார்.

15 ஆண்டவரே, புற இனத்தார் உமது பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர்:
மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமை கண்டு மருள்வர்.
16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது,
தம் மாட்சிமையில் அவர் விளங்கும்போது;
17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார்:
அவர்களுடைய வேண்டுதலைப் புறக்கணியார். பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும்:
உருவாகி வரும் மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.
19,20 சிறைப்பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும்,
சாவுக்கென குறிக்கப்பட்டவர்களை விடுவிக்கவும்,
உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று
ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார்;
வானினின்று வையகத்தை நோக்கினார். பல்லவி

27 உம் ஊழியரின் மக்கள் அச்சமின்றி வாழ்வார்கள்:
அவர்கள் மக்கள் உம்முன்னே நிலைத்திடுவர்:
21 இவ்வாறு ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படி மக்களினங்கள்,
அரசுகள் அனைத்தும் ஒன்றாய்க் கூடும்போது,
22 ஆண்டவருடைய திருப்பெயர் சீயோனில் போற்றப்படும்:
அவருடைய புகழ் யெருசலேமிலும் சாற்றப்படும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார்;
ஆண்டவரின் திருப்பெயர் வாழ்த்தப்பெறுக.**

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் *1 : 6-22*

ஒரு நாள் வானவர்கள் ஆண்டவரின் முன்னிலையில் ஒன்றுகூடியிருந்தபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே நின்றான். ஆண்டவர் சாத்தானை நோக்கி, "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். அவன், "உலகெங்கும் சுற்றி உலவி வந்தேன்" என்றான்.

ஆண்டவர் சாத்தானைப் பார்த்து, "நம் ஊழியனாகிய யோபுவைக் கவனித்தாயா? அவனைப்போல் மாசற்றவனும் நேர்மையுள்ளவனும் கடவுளுக்கு அஞ்சித் தீமையை விலக்கி நடக்கிறவனும் வேறெவனும் இவ்வுலகில் இல்லை?" என்றார்.

அதற்குச் சாத்தான் எதிர்வாதமாக ஆண்டவரிடம், "ஆதாயமில்லாமலா யோபு கடவுளுக்கு அஞ்சி நடக்கிறான்? அவனையும் அவன் வீட்டையும் அவன் உடைமைகள் அனைத்தையும் சுற்றி எப்பக்கமும் நீர் காவல்போடவில்லையோ? அவன் மேற்கொள்ளும் வினைகளை நீர் ஆசீர்வதிக்கவில்லையோ? அவன் உடைமைகளும் இந்நாட்டில் ஏராளமாக உள்ளனவே! ஆனால் உமது கையை ஓங்கி, அவன் உடைமைகளையெல்லாம் தொடும்; அப்போது, அவன் உமது முகத்திற்கு எதிரிலேயே உம்மைப் பழிக்கிறானா இல்லையா என்று பாரும்" என்றான்.

ஆண்டவர் சாத்தானைப் பார்த்து, "இதோ, அவன் உடைமைகள் எல்லாம் உன் கையில் இருக்கின்றன; அவன் மேல் மட்டும் உன் கையை நீட்டாதே" என்றார். உடனே, சாத்தான் ஆண்டவரின் திருமுன்னிருந்து புறப்பட்டான்.

பிறகு, யோபுவின் புதல்வர் புதல்வியர் ஒரு நாள் தங்கள் மூத்த அண்ணன் வீட்டில் விருந்து அருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது தூதன் ஒருவன் யோபுவிடம் ஓடிவந்து, "ஐயா, எருதுகள் ஏர் உழுது கொண்டிருந்தன; அவற்றின் அருகில் கழுதைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவ்வேளையில் சபேயர் அவற்றின்மேல் பாய்ந்து எல்லாவற்றையும் ஓட்டிக்கொண்டு போனதுமல்லாமல், வேலைக்காரரையும் வாளால் கொன்று போட்டுவிட்டார்கள்; நான் ஒருவனே தப்பிப் பிழைத்து, இதை உமக்கு அறிவிக்க ஓடிவந்தேன்" என்றான்.

இவன் சொல்லி வாய் மூடுமுன் வேறொருவன் வந்து, "கடவுளின் நெருப்பு வானத்திலிருந்து விழுந்து ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துவிட்டது; நான் ஒருவனே தப்பிப் பிழைத்து இதை உமக்கு அறிவிக்க ஓடி வந்தேன்" என்றான்.

இவன் இன்னும் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, இன்னொருவன் வந்து, "கல்தேயர் மூன்று கூட்டமாய் வந்து ஒட்டகங்களைக் கவர்ந்து ஓட்டிச் சென்று விட்டார்கள்; வேலைக்காரர்களையும் வாளால் கொன்று போட்டார்கள்; நான் ஒருவனே தப்பிப் பிழைத்து இதை உமக்கு அறிவிக்க ஓடி வந்தேன்" என்றான்.

இவன் இன்னும் பேசிக் கொண்டிருக்கையிலேயே, மற்றொருவன் வந்து, "உம்முடைய புதல்வர் புதல்வியர் தங்கள் பெரிய அண்ணன் வீட்டில் விருந்து உண்டுகொண்டிருந்தார்கள்; அப்போது இதோ பாலை நிலத்திலிருந்து மாபெரும் சூறாவளி யெழுந்து வந்து வீட்டின் நான்கு மூலைகளிலும் மோதவே, வீடு இடிந்து உம் பிள்ளைகள்மேல் விழுந்தது; அவர்கள் அங்கேயே மாண்டு போயினர்; நான் ஒருவனே தப்பிப் பிழைத்து இதை உமக்கு அறிவிக்க ஓடி வந்தேன்" என்றான்.

அப்போது யோபு எழுந்திருந்து தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு, தலையையும் மழித்துவிட்டுத் தரையில் விழுந்து தொழுது, "நிருவாணியாய் என் தாய் வயிற்றிலிருந்து வெளிப்பட்டேன். நிருவாணியாகவே திரும்பிப் போவேன்; ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார்; ஆண்டவரின் திருப்பெயர் வாழ்த்தப்பெறுக" என்றார். இவற்றில் எல்லாம் யோபு பாவமேதும் செய்யவில்லை; கடவுள் மேல் குறை கூறவுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 16 : 1, 2-3, 6-7 (பல்லவி : 6ab)

பல்லவி : இறைவா, எனக்குச் செவி சாய்த்து
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

1 ஆண்டவரே, என் நியாயமான என் வழக்கைக் கேட்டருளும்:
என் கூக்குரலைக் கவனித்தருளும்:
வஞ்சகமற்ற உதட்டினின்று எழும்
என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

2 நீரே எனக்கு நீதி வழங்கியருளும்:
நேர்மையானது எதுவென்று நீரே பார்க்கின்றீர்.
3 என் இதயத்தை நீர் பரிசோதிப்பீராகில்,
இரவு நேரத்தில் என்னைச் சந்திக்க வருவீராகில்:
நெருப்பில் என்னைப் புடமிட்டுப் பார்ப்பீராகில்:
தீமையானது எதையும் என்னிடம் காணமாட்டீர். பல்லவி

6 இறைவா, என் மன்றாட்டைக் கேட்டருள்வீர் என்பதால்
நான் உம்மைக் கூவியழைக்கிறேன்:
எனக்குச் செவிசாய்த்தருளும்;
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
7 வியப்புக்குரிய உமது இரக்கத்தைக் காட்டியருளும்:
உம் வலக்கரத்தில் உம்மிடம் அடைக்கலம் புகுவோரை
எதிரிகளிடமிருந்து காப்பவர் நீரே. பல்லவி

அல்லேலூயா மாற்கு. 10 : 45

அல்லேலூயா. மனுமகன் பணிவிடை புரியவும்,
பலருடைய மீட்புக்கு விலையாகத்
தம் உயிரை அளிக்கவும் வந்தார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உங்கள் அனைவருள் சிறியவன் எவனோ அவனே பெரியவன்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

9 : 46-50

அக்காலத்தில் :

தங்களுள் பெரியவன் யார் என்ற விவாதம் அவர்களிடையே எழுந்தது.

யேசு அவர்கள் உள்ளக் கருத்தை அறிந்து ஒரு குழந்தையின் கையைப் பிடித்துத் தம் அருகே நிறுத்தி, அவர்களை நோக்கி, "என் பெயரால் இக் குழந்தையை ஏற்றுக்கொள்பவன் எவனும் என்னையே ஏற்றுக்கொள்கிறான். உங்கள் அனைவருள் சிறியவன் எவனோ, அவனே பெரியவன்" என்றார்.

"குருவே, ஒருவன் உம் பெயரால் பேயோட்டுவதைக் கண்டு அவனைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில், அவன் நம்மைச் சாராதவன்" என்று அருளப்பர் கூறினார்.

யேசு அவரை நோக்கி, “அவனைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், உங்களுக்கு எதிராக இல்லாதவன் உங்கள் சார்பாக இருக்கிறான்” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*பல்வேறு நாட்டினர் ஆண்டவரைத் தேடி யெருசலேமுக்கு வருவார்கள்.*

இறைவாக்கினர் சக்கரியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 8 : 20-23

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார் :

“மக்களினங்களும், பல நகரங்களின் மாந்தரும் இன்னும் வருவார்கள்; ஒரு நகரத்தின் மக்கள் இன்னொரு நகரத்தாரிடம் போய், ‘ஆண்டவருடைய அருளை மன்றாடவும், சேனைகளின் ஆண்டவரைத் தேடவும் உடனே புறப்பட்டுப் போவோம், வாருங்கள்; நாங்களும் வருகிறோம்’ என்று சொல்லுவார்கள். பல்வேறு நாட்டினரும் வலிமை வாய்ந்த மக்களினங்களும் சேனைகளின் ஆண்டவரைத் தேடவும், ஆண்டவருடைய அருளை மன்றாடிக் கேட்கவும் யெருசலேமுக்கு வருவார்கள்.

சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: அந்நாட்களில் ஒவ்வொரு மொழி பேசும் இனத்தாரிலிருந்து பத்துப்பேர் சேர்ந்து ஒரு யூதனுடைய மேலாடையைப் பிடித்துக்கொண்டு, நாங்களும் உன்னோடு வருகிறோம்; ஏனெனில் கடவுள் உங்களோடிருக்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்’ என்பார்கள்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 86 : 1-3, 4-5, 6-7 (பல்லவி : சக. 8 23)

பல்லவி : இறைவன் நம்மோடு இருக்கிருர்.

1 திருமலேமீது தாம் அமைத்த இல்லத்தின் மேல்
ஆண்டவர் பற்றுக்கொண்டிருக்கிருர்.
2 யாக்கோபின் கூடாரங்களேவிடச் சீயோனின் வாயில்கள் மீது
அதிக அன்பு வைத்திருக்கிருர்.
3 இறைவனின் திருநகரே, உன்னேக் குறித்து
மாண்புமிக்க செய்திகள் கூறப்படுகின்றன. பல்லவி

4 என்னே வழிபடுபவர்களோடு ராகாபையும்
பாபிலோனேயும் சேர்த்துக்கொள்வேன்.
இதோ பிலிஸ்தேயா, தீர், எத்தியோப்பிய மக்களேக் குறித்து
'இவர்களும் அங்கே பிறந்தனர்' என்பர்.
5 சீயோனேக் குறித்து 'இன்னுனின்னுன் அதிலே பிறந்தான்.
உன்னதமானவர் தாமே அதை உறுதிப்படுத்தினுர்'
என்று சொல்லப்படும். பல்லவி

6 மக்களினங்களேப் பதிவு செய்யும்போது
'இன்னுர் இங்கே பிறந்தனர்' என்று எழுதுவார்.
7 'என் ஊற்றுகளெல்லாம் உன்னிடத்திலே உள்ளன'
என்று நடனமாடி அனேவரும் பாடுவர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**வருத்தமுற்றவனுக்கு ஒளி தரப்படுவானேன்?**

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 1-3, 11-17, 20-23

யோபு பேசத் தொடங்கி, தாம் பிறந்த நாளேச் சபிக்கலானுர். யோபு சொன்னது இதுவே : "நான் பிறந்த அந்த நாள் அழிக! 'ஆண் குழந்தையொன்று கருவாகியுள்ளது' என்று சொல்லிய அந்த இரவு தொலேக! அந்த நாள் இருண்டு போகக்கடவது!

பிறக்கும்போதே நான் ஏன் சாகாமற்போனேன்? கருப்பையினின்று வெளிப்பட்ட உடனேயே நான் அழிந்து போயிருக்கக்கூடாதா! தாயின் மடி என்னே ஏந்திக்கொண்டதேன்? நான் பால் குடிக்க முலேகள் இருந்ததேன்?

இதெல்லாம் இல்லாதிருந்தால் இப்போது நான் அமைதியாய்ப் படுத்து உறங்கி இளைப்பாறியிருப்பேன்; பாழடைந்தவற்றைத் தங்களுக்கெனக் கட்டியெழுப்பிய உலகத்தின் மன்னர்கள் மந்திரிகளோடும், பொன்னைத் தேடிச் சேர்த்துத் தங்கள் வீடுகளை வெள்ளியால் நிரப்பிய தலைவர்களோடும் இளைப்பாறியிருப்பேன். அல்லது வெளிப்படாத முதிராப் பிண்டம்போலும், ஒருபோதும் ஒளியைக் காணாக் குழந்தைகள்போலும் இருந்திருப்பேனே! அங்கே கொடியவர்கள் தரும் தொல்லை முடிவுறும், களைப்புற்றோர் அங்கே இளைப்பாறுவர்.

வருத்தமுற்றவனுக்கு ஒளி தரப்படுவானேன்? உள்ளம் கசந்து போனவனுக்கு உயிர் எதற்கு? புதையலைத் தேடுவதினும் ஆவலாய்த் தேடிச் சாவை விரும்பி ஏங்கியும் அது வராதவர்களுக்கும், பிணக்குழியைக் கண்டடையும்போது அகமகிழ்ந்து அக்களிப்போர்க்கும் வாழ்க்கை ஏன் தரப்படவேண்டும்? கடவுள் ஒருவனை எப்பக்கமும் வளைத்து அடைத்துவிட, அவனுக்கு வழி மறைந்திருக்கும்போது அவனுக்கு எதற்காக ஒளி தரவேண்டும்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 87 : 1-2, 3-4, 5, 6-7 (பல்லவி : 2a)

பல்லவி : ஆண்டவரே, என் வேண்டுதல்
உம் திருமுன் வருவதாக.

1 என் ஆண்டவரே, என் இறைவா,
பகலில் உம்மை நோக்கி அழைக்கிறேன் :
இரவிலும் உம் திருமுன் அழுது புலம்புகிறேன்.
2 என் செபம் உம்மிடம் வரக்கடவது :
என் குரலுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

3 ஏனென்றால் என் ஆன்மா தீமைகளால் நிறைந்துவிட்டது :
என் வாழ்க்கை கீழுலகை நெருங்குகிறது.
4 கீழுலகில் இறங்குகிறவர்களில் நானும் ஒருவனானேன் :
வலுவற்ற மனிதனைப்போலானேன். பல்லவி

5 இறந்தவர்களுள் ஒருவனாய்க் கிடக்கிறேன் :
கொலையுண்டு கல்லறையில் வைக்கப்பட்டவர்கள்போல் ஆனேன்.
அவர்களை நீர் நினைப்பதில்லை :
உம் அரவணைப்பினின்று அவர்கள் விலக்கப்பட்டனர். பல்லவி

6 படுகுழியில் என்னை விட்டுவிட்டீர்:
இருளினிடையிலும் பாதாளத்திலும் என்னை வைத்தீர்.
7 உமது சினம் என்மேல் வந்து விழுகின்றது.
உமது சினம் என்னும் கடலின் வெள்ளத்தால் — பல்லவி
என்னை நீர் மூழ்கடிக்கின்றீர்.

அல்லேலூயா

அல்லேலூயா. மனுமகன் பணிவிடைபுரியவும், பலருடைய மீட்புக்கு
விலையாகத் தம்முயிரை அளிக்கவும் வந்தார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*யெருசலேமுக்குச் செல்ல முனைந்து நின்றார்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:51-56

யேசு விண்ணேற்படையும் நாட்கள் நெருங்கி வரவே, யெருசலேமுக்குச் செல்ல முனைந்து நின்றவராய்த் தமக்கு முன்பாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் சென்று முன்னேற்பாடு செய்யும்படி சமாரியருடைய ஊர் ஒன்றுக்கு வந்தார்கள். அவர் யெருசலேமுக்குச் செல்லும் நோக்கமாயிருந்ததால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை:

அவருடைய சீடர் யாகப்பரும் அருளப்பரும் இதைக் கண்டு, "ஆண்டவரே," இவர்களை அழிக்க வானத்திலிருந்து நெருப்பு விழும்படி நாங்கள் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீரா?" என்றனர். அவர் அவர்கள் பக்கம் திரும்பி அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு, வேறு ஓர் ஊருக்குச் சென்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அரசர் மனம் வைத்தால், என் முன்னோரின் நகரைக் கட்டி எழுப்ப எனக்கு விடைகொடும்.

நெகேமியா ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 1-8

அரசர் அர்தக்சேர்செசின் இருபதாம் ஆண்டு, நீசான் மாதத்தில் அரசருக்கு முன்பாகத் திராட்சை இரசம் வைக்கப்பட்டிருந்தது. நான் அதை எடுத்து, அவருக்குக் கொடுத்தேன். அப்பொழுது நான் மிகவும் வருத்தமுற்றவன் போன்று தோன்றினேன்.

எனவே அரசர் என்னைப் பார்த்து, “நீ ஏன் இவ்வாறு வருத்தமுற்றிருக்கிறாய்? நீ நோயுற்றிருப்பதாகத் தெரியவில்லையே. இதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். ஏதோ உன் மனத்தை வாட்டிக்கொண்டிருக்கிறது” என்றார்.

நானோ மிகவும் அச்சமுற்றேன். எனவே அரசரை நோக்கி, “அரசே, நீர் நீடூழி வாழ்க; என் முன்னோரின் கல்லறைகள் இருக்கும் நகர் பாழ்பட்டுக் கிடப்பதையும், அதன் வாயில்கள் தீக்கிரையாகி இருப்பதையும் கண்டு நான் எவ்வாறு கவலையின்றி இருக்கமுடியும்?” என்று சொன்னேன்.

அதற்கு அரசர், “உனக்கு என்ன வேண்டும்?” என்றார். நானோ, விண்ணகக் கடவுளை வேண்டிக்கொண்டவனாய், அரசரைப் பார்த்து, “அரசர் மனம் வைத்தால், அடியேன்மீது இரக்கம் வைத்தால், நான் யூதேயா நாடு சென்று என் முன்னோரின் கல்லறைகள் இருக்கும் நகரைக் கட்டி எழுப்ப எனக்கு விடைகொடும்” என்று மறுமொழி சொன்னேன்.

அப்பொழுது அரசரும் அவர் அருகே அமர்ந்திருந்த அரசியும் என்னைப் பார்த்து, “இதற்கு எத்தனை நாள் செல்லும்? நீ எப்பொழுது திரும்பி வருவாய்?” என்று கேட்டனர். என்னை அனுப்பிவைக்க அரசருக்கு மனமிருந்தது கண்டு, நான் திரும்பி வரக்கூடிய காலத்தைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

திரும்பவும் நான் அரசரைப் பார்த்து, “அரசருக்கு மனமிருந்தால் நான் யூதேயா நாட்டை அடையும்வரை நதிக்கு அக்கரையில் வாழ்ந்து வரும் ஆளுநர்கள் எனக்கு வழிவிடவேண்டும் என்று ஒரு கட்டளைக் கடிதம் கொடுத்தருளும். அதேபோன்று ஆலயத்தின் கோபுரக் கதவு

களுக்கும், நகர வாயில்களுக்கும், நான் தங்கவிருக்கிற வீட்டுக்கும் தேவையான மரங்களை எனக்குக் கொடுத்து உதவும்படி அரசருடைய காடுகளின் காவலரான ஆசாப்புக்கு மற்றொரு கடிதமும் என் கையில் கொடுத்தருள வேண்டுகிறேன்" என்றேன்.

என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருந்ததால் அரசர் என் வேண்டுகோளின்படியே செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 136 : 1-2, 3, 4-5, 6 (பல்லவி : 6 a)

பல்லவி : உன்னை நான் நினையாதிருந்தால்,
என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

1 பாபிலோனின் ஆறுகளருகே அமர்ந்து சீயோனை நினைத்தபோது,
நாங்கள் கண்ணீர் சிந்தினோம்.
2 அந்த நாட்டு அலரிச் செடிகள்மீது,
எங்கள் யாழ்களை மாட்டி வைத்தோம். பல்லவி

3 எங்களைச் சிறையாக்கியவர்கள்,
நாங்கள் பாடும்படி கேட்டார்கள்;
எங்களைத் துன்புறுத்தியவர்கள்
மகிழ்ச்சிப் பா இசைக்கச் சொன்னார்கள் :
'சீயோனைப்பற்றிக் கீதங்கள் சிலவற்றைப்
பாடிக்காட்டுங்கள்' என்றார்கள். பல்லவி

4 ஆண்டவருடைய பாடலை அந்நிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்?
5 யெருசலேமே நானுன்னை மறப்பதாயிருந்தால்,
என் வலக்கை சூம்பிப்போவதாக. பல்லவி

6 உன்னை நான் நினையாதிருந்தால்,
என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக :
எனக்குள்ள மகிழ்ச்சிகளுக்கெல்லாம் மேலானதாக
நான் யெருசலேமைக் கருதாவிடில்,
எனக்கு இதெல்லாம் நிகழ்வதாக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கடவுள் முன் மனிதன் எப்படி நீதிமானாகத் தோன்றமுடியும்?

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் *9 : 1-12, 14-16*

யோபு தன் நண்பர்களுக்குக் கூறிய மறுமொழியாவது :

" நீ சொல்வது உண்மைதான், எனக்கும் தெரியும் ; ஆனால் கடவுள் முன்னிலையில் மனிதன் எப்படி நீதிமானாகத் தோன்றக் கூடும்? அவரோடு வழக்காட எவனாவது துணிவானாயின், ஆயிரத்தில் ஒன்றுக்குக்கூட அவனால் பதில் சொல்ல முடியாதே! அவரோ உள்ளத்தில் ஞான மிக்கவர், ஆற்றலில் வல்லவர்; - அவரை எதிர்த்து நின்று வெற்றி கண்டவன் யார்? - அவர் மலைகளைப் பெயர்க்கிறார், அவை அதை அறியமாட்டா ; சினமுற்ற போது அவர் அவற்றை விழத்தாட்டுகிறார். மண்ணுலகை அதனிடத்தினின்று அசைக்கிறார், அதன் தூண்கள் அதிர்கின்றன. அவர் ஆணையிட்டால் கதிரவன் எழமாட்டான், விண்மீன்களையும் அவரே முத்திரையிடுகிறார். அவர் ஒருவரே வான்வெளியை விரித்தார், கடலின் பேரலைகளைக் காலால் மிதித்தார், சப்தரிஷிகணம், மிருகசீரிடம், கார்த்திகை விண்மீன்களையும், தென்திசை மண்டல விண்மீன் குழுக்களையும் அவரே படைத்தார். ஆராய்ச்சியறிவுக்கு எட்டாத அரிய செயல்களையும் கணக்கற்ற விந்தைகளையும் அவர் செய்கிறார்.

அவர் என்னைக் கடந்துபோனாலும் நான் காண்கிறதில்லை, அவர் அசைந்து போனதுகூட எனக்குப் புலப்படுகிறதில்லை. அவர் ஒன்றைப் பறித்துச் சென்றால், அவரை மறிப்பவன் யார்? 'என்ன செய்கிறீர்?' என அவரைக் கேட்பவன் யார்? அப்படியிருக்க, அவருக்கு நான் மறுமொழி கூறுவதெப்படி? அவரோடு வழக்காட எவ்வாறு சொற்களைத் தேர்ந்தெடுப்பேன்? நான் குற்றமற்றவனே என்றாலும், வழக்காடுவதால் பயனென்ன?

என் நீதிபதியையே நான் கெஞ்சி மன்றாடுவேன். நான் அழைக்கும் போது மறுமொழிகூற அவர் வந்தாலும், என் குரலைக் கேட்பாரென நான் நம்புவதெப்படி?"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 87 9bc-10, 11-12, 13-14 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவரே, என் வேண்டுதல்**
**உம் திருமுன் வருவதாக.**

**ஆண்டவரே, நாள் முழுதும் உம்மைநோக்கி என் கைகளை நீட்டினேன்:**
9 **இறந்தோருக்காகவா நீர் அரியன செய்கிறீர் ?**
10 **இறந்தோர் எழுந்து உம்மைப் போற்றுவரோ ?** பல்லவி

**கல்லறையில் உமது நன்மைத்தனத்தை எடுத்துரைப்பவர்கள் யார் ?**
11 **கீழ் உலகில் உமது பிரமாணிக்கத்தைப் போற்றுபவர்கள் யார் ?**
**இருட்டுலகில் உம் வியத்தகு செயல்கள் வெளிப்படுமா ?**
12 **மறதி நிலவும் அவ்வுலகில் உமது அருள் வெளியாகுமா ?** பல்லவி

**ஆண்டவரே, நாளுவெளில் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்,**
13 **காலையில் என் வேண்டுதல் உம்மை நோக்கி எழும்புகிறது.**
**ஆண்டவரே, ஏன் என் ஆன்மாவைப் புறக்கணிக்கிறீர் ?**
14 **என்னிடமிருந்து ஏன் உமது திருமுகத்தை**
**மறைத்துக் கொள்கிறீர் ?** பல்லவி

அல்லேலூயா

பிலிப். 3 : 8-9

**அல்லேலூயா. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும்,**
**அவரோடு ஒன்றித்திருக்கவும்,**
**நான் அனைத்தையும் குப்பையெனக் கருதுகிறேன்.**
**அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நீர் எங்கு சென்றாலும், நான் உம்மைப் பின்செல்வேன்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

9 : 57-62

**அக்காலத்தில் :**

**யேசு தம் சீடரோடு வழியே போகையில் ஒருவன் அவரிடம், "நீர் எங்கு சென்றாலும் நானும் உம்மைப் பின் செல்வேன்" என்றான்.**

யேசு அவனை நோக்கி, "நரிகளுக்கு வளைகள் உண்டு. வானத்துப் பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ, தலை சாய்க்கவும் இடமில்லை" என்றார்.

அவர் வேறொருவனை நோக்கி, "என்னைப் பின்செல்" என, அவன், "ஆண்டவரே, முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்து விட்டு வர விடை கொடும்" என்றான். யேசு அவனைப் பார்த்து, "இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்து கொள்ளட்டும். நீ போய் கடவுளுடைய அரசை அறிவி" என்றார்.

இன்னொருவன், "ஆண்டவரே, உம்மைப் பின் செல்வேன்; ஆனால் முதலில் வீட்டில் சொல்லிவிட்டு வர விடை தாரும்" என்றான். யேசுவோ, அவனை நோக்கி, "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவன் எவனும் கடவுளின் அரசிற்குத் தகுதியற்றவன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**எஸ்ரா திருச்சட்ட நூலைத் திறந்தார்; அவர் இறைவனைத் துதித்து வாழ்த்தவே, மக்கள் எல்லாரும் ஆமென், ஆமென் எனப் பதில் கூறினர்.**

நெகேமியா ஆகமத்திலிருந்து வாசகம் 8 : 1-4a, 5-6, 7b-12

*அந்நாட்களில் :*

இஸ்ராயேல் மக்கள் அனைவரும் தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் ஒன்றுகூடினர். ஆண்டவர் இஸ்ராயேலுக்குக் கொடுத்திருந்த மோயீசனின் திருச்சட்ட நூலைக் கொண்டுவருமாறு திருச்சட்ட வல்லுநர் எஸ்ராவை வேண்டினர். அவ்வாறு ஏழாம் மாதம் முதல் நாள் குரு எஸ்ரா திருச்சட்ட நூலைப் புரிந்து கொள்ளும் திறமை படைத்த ஆண், பெண் அடங்கிய சபை முன்னிலையில் கொண்டுவந்தார். தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் காலை முதல் நண்பகல்வரை அவர்கள்முன் அதை அவர் வாசித்தார். எல்லா மக்களும் திருச்சட்டநூலுக்குக் கவனமாய்ச் செவிமடுத்தனர்.

திருச்சட்ட வல்லுநர் எஸ்ராவோ பேசுவதற்கென்று மரத்தால் செய்யப்பட்ட ஒரு மேடையின்மேல் நின்று கொண்டிருந்தார். எஸ்ரா எல்லா மக்களையும் பார்க்கும் அளவுக்கு உயரமான இடத்தில் நின்று கொண்டு அவர்கள் முன்னிலையில் நூலைத் திறந்தார். உடனே மக்கள் எல்லாரும் எழுந்து நின்றனர். அப்பொழுது எஸ்ரா ஆண்டவராகிய மகத்தான கடவுளைத் துதித்து வாழ்த்தவே, மக்கள் எல்லாரும் தங்கள் கைகளை உயர்த்தி, "ஆமென், ஆமென்" என்று சொல்லிப் பணிந்து, முகங்குப்புற விழுந்து கடவுளைத் தொழுதார்கள். மேலும் லேவியர்கள் திருச்சட்ட நூலை மக்களுக்கு விளக்கிக் கூறினார்கள். அப்பொழுது மக்கள் தங்கள் இடத்திலேயே நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும் பொருளோடும் கடவுளின் திருச்சட்ட நூலை வாசித்தார்கள். ஆதலால் மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்து கொண்டனர்.

ஆளுநர் நெகேமியாவும், குருவும் மறைநூல் அறிஞருமான எஸ்ராவும், லேவியர்களும் மக்கள் அனைவர்க்கும் திருச்சட்டத்தின் பொருளை விளக்கிக் கூறினர். "கடவுளான ஆண்டவரின் புனித நாள் இதுவே! எனவே நீங்கள் அழுது புலம்ப வேண்டாம்" என்றனர். ஏனெனில் எல்லா மக்களும் திருச் சட்ட நூலை வாசிக்கக் கேட்டுக் கண்ணீர் விட்டு அழுதுகொண்டே யிருந்தனர்.

மீண்டும் எஸ்ரா அவர்களைப் பார்த்து, "நீங்கள் போய்க் கொழுத்தவற்றை உண்டு இனிய திராட்சை இரசத்தைக் குடித்து, உண்ண இல்லாதவர்களுக்கு உணவு அனுப்பி வையுங்கள். ஏனெனில், ஆண்டவரின் புனித நாள் இதுவே! எனவே வருந்த வேண்டாம். ஆண்டவரில் மகிழ்வதிலேயே உங்களுடைய ஆற்றல் அடங்கியிருக்கிறது" என்றார்.

லேவியர்களோ எல்லா மக்களையும் பார்த்து, "அமைதியாயிருங்கள்; ஏனெனில் இது புனித நாள். எனவே கவலைப்படாதீர்கள்" என்று சொல்லி அவர்கள் அமைதியாய் இருக்கச் செய்தனர். எஸ்ரா கூறியதைப் புரிந்துகொண்ட எல்லா மக்களும் உண்டு குடிக்கவும், உணவு அனுப்பி வைத்து மகிழ்ச்சி கொண்டாடவும் புறப்பட்டுப் போனார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 18 : 7, 8, 9, 10 (பல்லவி : 8அ)

பல்லவி : ஆண்டவர் தம் கட்டளைகள் நேரியவை,
உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது ;
ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது :
ஆண்டவருடைய கட்டளை உறுதியானது,
எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை ;
உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை :
ஆண்டவரது கற்பனை தூய்மையானது ;
கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது ;
என்றென்றும் நிலைத்திருப்பது :
ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை ;
அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத்தக்கவை :
தேனினும் தேனடையினும் இனிமையானவை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**என்னை மீட்பவர் உயிரோடிருக்கிறார் என்று அறிவேன்.**

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் 19 : 21-27

யோபு கூறியதாவது :

“ நண்பர்களே, என்மேல் இரங்குங்கள், என்மேல் இரங்குங்கள் ; ஏனெனில் கடவுளின் கை என்னைத் தண்டித்தது. கடவுள் செய்வதுபோல நீங்கள் என்னைத் துரத்துவானேன் ? என்னைச் சின்னாபின்னமாக்கினீர்களே, அது போதாதா ? நான் சொல்லப்போவதை எழுதிவைக்கவோ அவற்றை ஒரு சுவடியில் வரைந்துவைக்கவோ யார் முன்வருவார் ! இரும்பு எழுத்தாணியாலும் ஈயத்தாலும் அது என்றென்றைக்கும் பாறையில் பொறிக்கப்படக்கூடாதா !

என்னை மீட்பவர் உயிரோடிருக்கிறார் என்றும், இறுதியில் அவர் புவிமீது எழுந்தருள்வார் என்றும் அறிவேன். என் தோல் இவ்வாறு அழிந்துபோனபிறகு என் சதையிலிருந்து விடுபட்டுக் கடவுளைக் காண்பேன். அவர் என்பக்கத்தில் நிற்கக் காண்பேன், என் கண்களால் நானே பார்ப்பேன், வேறு யாரும் பாரார். என் உள்ளம் என்னுள் மயங்கிச் சோர்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திருப்பாடல் 27 : 7-8அ, 8ஆ-9அபc, 13-14 (பல்லவி : 13)

பல்லவி: வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக்
காண்பேன் என யான் நம்புகிறேன்.

7 ஆண்டவரே, நானும்மை நோக்கி எழுப்பும் குரலைக் கேட்டருளும் :
என்மீது அருள்கூரும், என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.
8 என் உள்ளம் உம்மோடு உரையாடுகிறது ;
உம்மை நான் பார்க்க விரும்புகிறேன். பல்லவி

ஆண்டவரே, நீர் எனக்கு இன்முகம் காட்ட வேண்டுமென விழைகிறேன்.
9 உம் முகத்தை எனக்கு மறைத்துக்கொள்ளாதேயும் :
சினங்கொண்டு உம் ஊழியனைத் தள்ளிவிடாதேயும்.
நீரே எனக்குத் துணை, என்னைத் தள்ளிவிடாதேயும். பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில்,
ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு :
உன் உள்ளம் திடம் கொள்வதாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு. பல்லவி

அல்லேலூயா மாற்கு 1:15

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கி விட்டது :
மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உங்கள் சமாதானம் அவனிடம் தங்கும்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
10 : 1-12

அக்காலத்தில் :

ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் அவர்களை இருவர் இருவராகத் தமக்கு முன்னால் அனுப்பினார்.

அப்போது அவர்களைப் பார்த்துக் கூறினதாவது : "அறுவடையோ மிகுதி ; வேலையாட்களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள். செல்லுங்கள், ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளைப்போல் உங்களை அனுப்புகிறேன். பணப்பையோ கைப்பையோ மிதியடியோ எதுவும் எடுத்துச் செல்ல வேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.

நீங்கள் எந்த வீட்டுக்குப் போனாலும், முதலில், 'இவ்வீட்டுக்குச் சமாதானம்' என்று வாழ்த்துங்கள். சமாதானத்திற்குரியவன் அங்கு இருந்தால், உங்கள் சமாதானம் அவனிடம் தங்கும்; இல்லையேல் உங்களிடம் திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை உண்டு குடித்து அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாள் கூலிக்கு உரிமையுடையவன்.

வீடு வீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால், உங்களுக்குப் பரிமாறுகிறதை உண்டு, அங்குள்ள பிணியாளரைக் குணமாக்கிக் 'கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளது' என்று மக்களுக்குத் தெரிவியுங்கள்.

மாறாக, நீங்கள் போகும் ஊரில் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், தெருவில் சென்று, 'எங்கள் காலில் ஒட்டிய உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிப் போடுகிறோம் ; இருப்பினும் கடவுளின் அரசு நெருங்கியுள்ளது என்று அறிந்துகொள்ளுங்கள்' எனச் சொல்லுங்கள்.

அந்நாளில் சொதோமுக்கு நேரிடுவது அவ்வூருக்கு நேரிடுவதைப் போல் அவ்வளவு கடினமாயிராது என உங்களுக்குக் கூறுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் முன்னிலையில் பாவம் செய்தோம்.
அவருக்கு நாம் கீழ்ப்படியவில்லை.**

இறைவாக்கினர் பாரூக் ஆகமத்திலிருந்து வாசகம் *1 : 15-22*

நீதி நம் கடவுளாகிய ஆண்டவருக்குரியது; ஆனால், இன்றிருப்பது போல, நாணித் தலைகுனிதல்தான் நமக்கும், யெருசலேமின் குடிகளுக்கும் யூதாவின் மக்களுக்கும், நம்முடைய அரசர்கள், தலைவர்கள், அர்ச்சகர்கள், தீர்க்கதரிசிகள், நம் தந்தையர்கள் அனைவர்க்கும் உரியது; ஏனெனில் நம் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் பாவம் கட்டிக்கொண்டோம். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவுமில்லை; நம் கடவுளாகிய ஆண்டவர் நமக்குக் கொடுத்த கற்பனைகளின் நெறியில் நடக்கும்படி நாம் அவருடைய குரலுக்குச் செவிசாய்க்கவுமில்லை. எகிப்து நாட்டினின்று நம் தந்தையர்களை ஆண்டவர் மீட்டுக்கொண்டுவந்த நாள்முதல் இன்று வரையிலும் நம் கடவுளாகிய ஆண்டவருக்குக் கீழ்ப்படியவில்லை; நம்முடைய கவலையீனத்தால் அவருடைய குரலொலிக்குச் செவிசாய்க்கவில்லை.

ஆதலால்தான் இன்று வரையில், பாலும் தேனும் பொழியும் நாட்டை நமக்குக் கொடுப்பதற்காக எகிப்து நாட்டிலிருந்து நம் தந்தையர்களை மீட்டுக் கூட்டிவந்தபோது, ஆண்டவர் தம் ஊழியராகிய மோயீசன் வாயிலாக நமக்குத் தெரிவித்திருந்த துன்பங்களும் சாபனைகளும் நம்மைப் பீடிக்கின்றன. நம் கடவுளாகிய ஆண்டவர் நமக்கு அறிவுறுத்தும்படி நம்மிடம் அனுப்பிய இறைவாக்கினர்களின் வார்த்தைகளையெல்லாம் பொருட்படுத்தாமல், அவருடைய குரலொலிக்குச் செவிகொடுக்க மறுத்தோம். நாம் ஒவ்வொருவரும் நம் உள்ளத்தின் தீய போக்கின்படியே அந்நிய தெய்வங்களுக்கு ஊழியம் செய்தோம்; நம் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் தீமைகள் புரிந்தோம்.

**இது ஆண்வவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

சங். 78 : 1-2, 3-5, 8, 9 (பல்லவி : 9bc)

பல்லவி : ஆண்டவரே, உம்பெயரின் மகிமைக்காக
விடுதலை அளித்தருளும் எங்களுக்கே.

1 இறைவனே, புறஇனத்தார் உமது சொந்த நாட்டின்மீது
படையெடுத்தார்கள்,
உமது திருக்கோயிலைத் தீட்டுப்படுத்தினார்கள்.
எருசலேமைத் தரைமட்டமாக்கினார்கள்.
2 உம் அடியார்களின் பிணங்களை
வானத்துப் பறவைகளுக்கு இரையாக்கினார்கள்.
உம் புனிதர்களின் உடல்களை
விலங்குகளுக்கு உணவாகத் தந்தார்கள். பல்லவி

3 அவர்களுடைய இரத்தத்தை எருசலேமைச் சுற்றித்
தண்ணீர்போல் இறைத்தார்கள்.
அவர்களை அடக்கம் செய்வதற்குக்கூட யாருமில்லை.
எங்கள் அயலாரின் நிந்தனைக்கு நாங்கள் ஆளானோம் :
4 எங்களைச் சூழ்ந்துள்ள மக்களின் ஏளனத்திற்கும்
நகைப்புக்கும் உள்ளானோம்.
ஆண்டவரே, இன்னும் எவ்வளவு காலத்திற்கு?
5 என்றென்றும் சினம் கொள்வீரோ ?
உமது எரிச்சல் நெருப்புப்போல் எரிந்து கொண்டிருக்குமோ ? பல்லவி

முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள்மேல் சுமத்தாதேயும்,
8 உமது இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக.
ஏனெனில், நாங்கள் துயரத்துக்குள்ளானோம். பல்லவி

எங்கள் மீட்பரான இறைவா,
9 உம்திருப்பெயரின் மகிமைக்காக எங்களுக்குத் துணை செய்யும்,
உம்பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை மன்னித்து
எக்களுக்கு விடுதலையளித்தருளும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

***விடியும்படி நீ கட்டளையிட்டதுண்டோ? கடலின் ஊற்றுக்களில் நீ நுழைந்து பார்த்திருக்கிறாயோ?***

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் *38 : 1, 12-21; 39 : 33-35*

அப்பொழுது ஆண்டவர் சுழற்காற்றின் நடுவினின்று யோபுவுக்குக் கூறிய மறுமொழி பின்வருமாறு :

என்றைக்காவது விடியற்காலையைப் புலரும்படி நீ கட்டளை யிட்டதுண்டோ? வைகறைப் பொழுதுக்கு அதன் இடத்தை என்றும் நீ காட்டினாயோ? அது நிலவுலகை மூடியுள்ள இருட்போர்வையைப் பிடித்துதறி பொல்லாதவர்களை அதினின்று உதிர்த்தது உன் ஆணையாலோ? முத்திரையால் களிமண் உருபெறுவதுபோல், வைகறைப் பொழுதால் மண்ணுலகம் உருபெறுகிறது; பலவண்ண ஆடைபோல் நிலம் காணப் படுகிறது. அப்போது பொல்லாதவர்களிடமிருந்து அவர்கள் ஒளி எடுக்கப் படுகிறது, ஓங்கியிருக்கும் அவர்கள் கை முறிக்கப்படுகிறது.

கடலின் ஊற்றுகளில் நீ நுழைந்து பார்த்திருக்கிறாயோ? கடலின் ஆழத்தில் நீ நடமாடி யிருக்கிறாயோ? சாவின் வாயில்கள் உனக்கு வெளிப்படுத்தப்பட்டனவோ? அடர்ந்த காரிருளின் கதவுகள் உனக்குப் புலப்பட்டதுண்டோ? மண்ணுலகின் பரப்பை நீ கண்டுபிடித்து விட்டாயோ? இதெல்லாம் நீ அறிந்திருந்தால், விவரித்துச் சொல், பார்ப்போம்.

ஒளியின் இருப்பிடத்தை அடையும் வழி எது? இருள் இருக்கும் இடம் எங்கே இருக்கிறது? அவற்றின் உறைவிடங்களுக்கு அவற்றை நீ கூட்டிச் செல்வாயோ? அவற்றின் இருப்பிடங்களுக்கு நீ வழி கண்டு சொல்வாயோ? உனக்குத் தெரிந்திருக்குமே! நீ அப்பொழுதே பிறந்து விட்டாயே! உன் நாட்களின் எண்ணிக்கையும் பெரிதாயிற்றே!

அப்பொழுது யோபு ஆண்டவருக்கு மறுமொழியாக, "நாயேன் நான்! உமக்கு என்ன பதிலுரைப்பேன்? கையால் என் வாயைப் பொத்திக்கொள்கிறேன்! ஒரு முறை நான் பேசிவிட்டேன், இனி வாய் திறவேன்; இன்னொரு முறையும் பேசினேன், இனிப் பேசவே மாட்டேன்!" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 138 : 1-3, 7-8, 9-10, 13-14ab (பல்லவி : 24b)*

பல்லவி முன்னோர் காட்டிய வழியில்
என்னை நடத்தும், ஆண்டவரே.

1 ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர் :
2 நான் அமர்வதும் எழுவதும்,
என் வாழ்க்கை முழுதுமே நீர் அறிந்திருக்கிறீர்.
என் நினைவுகள் எல்லாம் முன்பிருந்தே உமக்கு வெளிச்சம்.
3 நான் நடப்பதும் படுப்பதும் எல்லாமே நீர் அறிந்துள்ளீர்.
நான் செல்லும் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தனவே.

பல்லவி

7 உமது ஆவியை விட்டு, நான் எங்கே தொலைவில் போகக்கூடும்?
உம்முடைய திருமுன்னிலையை விட்டு, நான் எங்கே ஒளியக்கூடும்?
8 நான் வானகத்துக்குப் பறந்து சென்றால், நீர் அங்கே இருக்கிறீர்!
பாதாளத்துக்குச் சென்று படுத்துக்கொண்டாலும் அங்கேயும் இருக்கிறீர்.

பல்லவி

9 நான் விடியற்காலையில் சிறகடித்துப் பறந்து சென்றபோதிலும்,
கடல்களின் கடை யெல்லைகளில் வாழ்ந்தாலும்,
10 அங்கேயும் உமது கரம் என்னை நடத்திச் செல்லும்.
உமது வலக்கரம் என்னைத் தாங்கி நிற்கும்.

பல்லவி

13 ஏனெனில், நீரே என் உள் உறுப்புகளை உண்டாக்கினீர் :
என் தாயின் கருவில் என்னை உருவாக்கியவர் நீரே.
14 இவ்வளவு வியப்புக்குரிய விதமாய் நீர் என்னைப் படைத்ததை நினைத்து
நான் உம்மைப் போற்றுகிறேன் ;
உம்முடைய செயல்கள் அதிசயமுள்ளவை என்று உம்மைப் புகழ்கிறேன்.

பல்லவி

### அல்லேலூயா

*சங். 94 : 8b, 7b*

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள் :
மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவிகொடுங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*என்னைப் புறக்கணிப்பவன்*
*என்னை அனுப்பினவரைப் புறக்கணிக்கிறான்.*

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 10 : 13-16

அக்காலத்தில் : யேசு கூறியதாவது :

"கொரோசின் நகரே, உனக்கு ஐயோ கேடு ! பெத்சாயிதா நகரே, உனக்கு ஐயோ கேடு ! ஏனெனில், உங்களிடம் செய்த புதுமைகள் தீர் சீதோனில் செய்யப்பட்டிருப்பின், முன்பே கோணி உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார். ஆனால் தீர்வை நாளில் தீர் சீதோனுக்கு நேரிடுவது உங்களுக்கு நேரிடுவதைப்போல் அவ்வளவு கடினமாயிராது. கப்பர்நகூமே, வானளாவ உயர்வாயோ? பாதாளம் வரை தாழ்ந்திடுவாய்.

உங்களுக்குச் செவிசாய்ப்பவன் எனக்குச் செவிசாய்க்கிறான். உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னைப் புறக்கணிப்பவனோ என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

*உங்கள்மேல் தீமைகளை வரச்செய்தவரே,*
*மகிழ்ச்சியையும் திரும்பக் கொடுப்பார்.*

இறைவாக்கினர் பாரூக் ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 5-12, 27-29

இஸ்ராயேலின் நினைவுச் சின்னமாய் இருக்கிற இனமே, என் குடிமக்களே, தைரியமாயிருங்கள். அழிந்து போவதற்காகப் புறவினத்தாரிடம் நீங்கள் விற்கப்படவில்லை. ஆனால் நீங்கள் கடவுளின் கோபத்தை மூட்டியதால்தான் எதிரிகளுக்குக் கையளிக்கப்பட்டீர்கள். ஏனெனில் கடவுளுக்குப் பலியிடாமல் பேய்களுக்குப் பலியிட்டு, உங்களை உண்டாக்கிய கடவுளுக்கு எரிச்சல் உண்டுபண்ணினீர்கள். உங்களை உண்பித்து வந்த நித்திய கடவுளை மறந்தீர்கள், உங்களை வளர்த்து வந்த யெருசலேமைத் துயரப்படுத்தினீர்கள்.

கடவுளுடைய கோபம் உங்கள்மேல் வருவதைக் கண்டு, யெருசலேம் சொன்னது : "சீயோனின் அண்டை நாட்டவரே, கேளுங்கள் ; கடவுள் எனக்குப் பெருந்துயரத்தைத் தந்திருக்கிறார். ஏனெனில் என் மக்களையும், புதல்வர், புதல்வியரையும் நித்தியமானவர் அடிமைத்தனத்திற்குள்ளாக்கினதைக் காண்கிறேன். அவர்களை நான் மகிழ்ச்சியோடு வளர்த்து வந்தேன். இப்பொழுது, அழுகையோடும் கண்ணீரோடும் போகவிட்டிருக்கிறேன். நான் கைம்பெண்ணாகித் துன்புறுவதைக்கண்டு எவனும் மகிழாதிருக்கட்டும் ; என் பிள்ளைகளின் பாவங்களை முன்னிட்டுப் பலராலும் நான் கைவிடப்பட்டேன் ; ஏனெனில் என் மக்கள் கடவுளின் கட்டளையை மீறினார்கள்.

மக்களே, தைரியமாயிருங்கள், ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிடுங்கள் ; ஏனெனில் உங்களுக்கு இத்துயரம் அனுப்பியவர் உங்களை மறக்க மாட்டார். கடவுளை விட்டு அகன்று போவதே முன்பு உங்கள் கருத்தாய் இருந்ததுபோல் இப்பொழுது மீண்டும் அவரிடம் திரும்பிய பிறகு, பத்து மடங்கு ஆர்வத்தோடு அவரைத் தேடுங்கள். ஏனெனில் இந்தத் தீமைகளை உங்கள்மேல் வரச்செய்தவரே முடிவில்லாத மகிழ்ச்சியையும் மீட்பையும் உங்களுக்குத் திரும்பவும் கொடுப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 68 : 32-34, 35-36 (பல்லவி : 33a)

பல்லவி : **ஏழைகளின் குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார்.**

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளுங்கள்.
இறைவனைத் தேடுவோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.
33 ஏனெனில், ஏழைகளின்குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார் :
சிறைப்பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை.
34 வானமும் வையமும் அவரைப் புகழ்வனவாக :
கடல்களும் கடல்களில் வாழும் அனைத்துமே அவரைப் புகழ்வனவாக.
பல்லவி

35 ஏனெனில், கடவுள் சீயோனுக்கு மீட்பளிப்பார் :
யூதாவின் நகரங்களைக் கட்டி எழுப்புவார் :
அவர்கள் அங்குக் குடியிருப்பர், அதை உரிமையாக்கிக்கொள்வர்.
36 அவருடைய ஊழியர்கள் வழிவந்தோர் அதை உரிமைப்படுத்திக்கொள்வர் :
அவர்மீது அன்பு கொள்பவர் அதில் வாழ்வார்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உம்மை என் கண்கள் கண்டன; எனவே, என்னையே நான் கடிந்துகொள்கிறேன்.**

போபு ஆகமத்திலிருந்து வாசகம் *42 : 1-3, 5-6, 12-16*

போபு ஆண்டவருக்கு மறுமொழியாக: "நீர் எல்லாம் செய்ய வல்லவர் என்பதையும் எந்தத் திட்டமும் உம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதன்று என்பதையும் நானறிவேன். 'அறிவில்லாத சொற்களால் நம் ஆலோசனையை இருளாக்கிவிட்டவன் யார்?' என்றீரே, நான்தான் அவன். எனக்குத் தெரியாததை நான்தான் உளறிவிட்டேன். எனக்கு எட்டாத விந்தைகளைப் பற்றிப் பிதற்றிவிட்டேன். உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம் காதால் கேட்டதே; இப்பொழுதோ உம்மை என் கண்கள் கண்டன. ஆதலால் என்னையே நான் கடிந்துகொள்கிறேன், புழுதியிலும் சாம்பலிலும் அமர்ந்து மனம் வருந்துகிறேன்" என்றார்.

ஆண்டவரோ முன் நிலைமையைக் காட்டிலும் போபுவின் பின் நிலைமையை மிகுதியாக ஆசீர்வதித்தார்; பதினாலாயிரம் ஆடுகளும் ஆறாயிரம் ஒட்டகங்களும், ஆயிரம் ஏர்மாடுகளும், ஆயிரம் கழுதைகளும் அவருக்குச் சேர்ந்தன. மேலும் அவருக்கு ஏழு புதல்வர்களும் மூன்று புதல்வியரும் பிறந்தார்கள். மூத்த மகளுக்கு 'மாடப்புறு' என்றும், இரண்டாம் மகளுக்குப் 'பரிமளம்' என்றும், மூன்றும் மகளுக்கு 'அஞ்சனச் சிமிழ்' என்றும் பெயரிட்டார். போபுவின் புதல்வியரைப்போல் அழகு வாய்ந்த பெண்கள் நாடெங்கணும் இருந்ததில்லை; அவர்களுடைய தந்தை அவர்களின் சகோதரருக்குக் கொடுத்தது போலவே அவர்களுக்கும் சொத்தில் பங்கு கொடுத்தார்.

அதன் பிறகு போபு நூற்று நாற்பது ஆண்டுகள் உயிர்வாழ்ந்து, நான்காம் தலைமுறை வரையில் தம் பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டு களித்தார். இறுதியாக போபு முதுமை படைந்து, நிறைந்த ஆயுள் உள்ளவராய் இறைவனடி சேர்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 66, 71, 75, 91, 125, 130 (பல்லவி : 135a)

பல்லவி : **ஆண்டவரே, உம் ஊழியன் எனக்கு**
**இன்முகம் காட்டியருளும்.**

66 **நீதியும் ஞானமும் எனக்குக் கற்பியும் :**
**ஏனெனில், உம் கற்பனைகளின்மீது நம்பிக்கை வைக்கிறேன்.** பல்லவி

71 **எனக்குத் துன்பம் விளைந்தது நன்மையே :**
**அதனால் உம் நியமங்களை நான் கற்றுக்கொள்ள முடிந்தது.** பல்லவி

75 **ஆண்டவரே, உம் தீர்ப்புகள் நீதியானவை என அறிவேன் :**
**நீர் என்னைத் துன்பத்துக்குள்ளாக்கியது நீதியே.** பல்லவி

91 **நீர் குறித்த விதிகளின்படி அவை எந்நாளும் நிலைத்துள்ளன.**
**ஏனெனில், எல்லாம் உமக்கு ஊழியம் செய்கின்றன.** பல்லவி
125 **உமது ஊழியன் நான் ; எனக்கு அறிவு புகட்டும்.**

**அப்போது உம் ஆணைகளை அறிந்துகொள்வேன்.** பல்லவி
130 **உம் வார்த்தைகளுக்குத் தரும் விளக்கம் அறிவொளி தருகிறது.**
**அது எளியோர்க்கு அறிவூட்டுகிறது.** பல்லவி

அல்லேலூயா

மத். 11 : 25 காண்

**அல்லேலூயா.** தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் பெயர் வானகத்தில் எழுதியுள்ளது என்று மகிழுங்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 17-24

அக்காலத்தில் :

எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் வந்து, “ ஆண்டவரே, உம் பெயரால் பேய்கள்கூட எங்களுக்கு அடங்குகின்றன ” என்றனர். அதற்கு அவர், “ வானத்தினின்று மின்னலைப்போல் சாத்தான் விழக் கண்டேன்.

இதோ பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வலிமையை வெல்லவும் உங்களுக்கு வல்லமை அளித்தேன்; எதுவும் உங்களுக்குத் தீங்கு இழைக்காது. ஆயினும் ஆவிகள் உங்களுக்கு அடங்கி இருக்கின்றன என்று மகிழ வேண்டாம். ஆனால் உங்கள் பெயர் வானகத்தில் எழுதியுள்ளது என்றே மகிழுங்கள் " என்றார்.

அந்நேரத்தில் யேசு பரிசுத்த ஆவியினால் அக்களிப்புற்றுக் கூறியதாவது : " தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய், இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று தந்தையன்றி வேறெவனும் அறியான். தந்தை யாரென்று மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவனும் அறியான். "

அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களுக்கு மட்டும் தனிமையாகக் கூறியதாவது : " நீங்கள் காண்பதைக் காணும் கண்கள் பேறுபெற்றவை. ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : ' இறைவாக்கினர், அரசர் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை. "

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தேழாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**சேனைகளின் ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் வீட்டாரே.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 5 : 1-7

என்னுடைய நண்பருக்கொரு கவிதை பாடுவேன், அவரது திராட்சைத் தோட்டத்தைக் குறித்துக் காதல் பாட்டொன்று இசைப்பேன்.

வளம் நிறைந்த குன்று ஒன்றின்மேல் என் நண்பருக்குத் திராட்சைத் தோட்டம் ஒன்றிருந்தது. அவர் நன்றாக அதைக் கொத்தி விட்டுக் கற்களை அகற்றி, தேர்ந்தெடுத்த திராட்சைக் கொடிகளை அதில் நட்டு வைத்தார்; அதன் நடுவில் கோபுரம் ஒன்றையும் கட்டினார், அதில் திராட்சை பிழியும் ஆலையையும் அமைத்தார்; நற் திராட்சைக் குலைகள் காய்க்குமெனக் காத்திருந்தார், காட்டுத் திராட்சைக் குலைகளே காய்த்தன.

இப்பொழுது யெருசலேமின் குடிமக்களே, யூதாவின் மனிதர்களே, நமக்கும் நம் திராட்சைத் தோட்டத்துக்கும் இடையில் நீதி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். நமது திராட்சைத் தோட்டத்திற்கு இன்னும் என்ன செய்யாமல் விட்டோம்? நற் கனிகளைத் தருமென்று நாம் காத்திருக்க, நமக்குக் காட்டுக் கனிகளை அது தந்தது ஏன்?

இனி நமது திராட்சைத் தோட்டத்திற்கு நாம் செய்யப்போவதைக் கேளுங்கள்: நாமே அதன் வேலியைப் பிடுங்கியெறிவோம், அதுவோ பிறரால் சூறையாடப்படும்; அதன் சுற்றுச் சுவரை நாம் தகர்த்திடுவோம், அதுவோ மனிதர் கால்களில் மிதிபடும். நாம் அதனைப் பாழாக்குவோம், கிளைகள் கழிக்கப்படா, பூமி கொத்தப்படாது; முட்களும் முட்புதர்களுமே அதில் வளரும்; அதன் மீது மழை பெய்யாதிருக்கும்படி மழை மேகங்களுக்கு நாம் கட்டளை தருவோம்.

சேனைகளின் ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் வீட்டாரே. அவருக்கு விருப்பமான நாற்று யூதாவின் மனிதர்களே. அறம் விளையுமெனக் காத்திருந்தார், விளைந்ததோ மறம்! முறைமை தழைக்குமெனப் பார்த்திருந்தார், எழுந்ததோ முறைப்பாடு!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் வாசகம்

அனைத்தையும் கடைப்பிடியுங்கள் : சமாதானத்தின்
ஊற்றாகிய கடவுள் உங்களோடிருப்பார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 6-9

சகோதரர்களே :

எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால், எல்லாத் தேவைகளிலும் நன்றியோடு கூடிய செபத்திலும் மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள். அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து யேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனத்துக்கும் அரணாயிருக்கும்.

இறுதியாக சகோதரர்களே, உண்மை எதுவோ, கண்ணியமானது எதுவோ, நீதி எதுவோ, தூயது எதுவோ, இனியது எதுவோ, எதெல்லாம் நற்பண்புடையதோ, எதெல்லாம் புகழ்ச்சிக்குரியதோ, அவற்றையே மனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்ட போதனைகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள், என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்க்கையில் நீங்கள் பார்த்தவை அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அப்போது சமாதானத்தின் ஊற்றாகிய கடவுள் உங்களோடிருப்பார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு 15 : 16

அல்லேலூயா. நீங்கள் உலகிற்சென்று பலன் தரும்படியாகவும்,
அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவும்,
நானே உங்களைத் தேர்ந்துகொண்டேன். அல்லேலூயா.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள்.**

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** 2 : 18-24

ஆண்டவராகிய கடவுள் : மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று : ஆதலால் அவனுக்குச் சரிநிகரான ஒரு துணைவியை அவனுக்கென உண்டாக்குவோம் என்றார்.

ஆண்டவராகிய கடவுள் பூமியின் எல்லாவித மிருகங்களையும் வானத்துப் பறவைகள் அனைத்தையும் மண்ணினின்று படைத்த பின்னர், அவற்றிற்கு ஆதாம் என்னென்ன பெயர் இடுவானென்று பார்க்க அவற்றையெல்லாம் அவனிடம் கூட்டி வந்தார். ஏனென்றால் அந்த உயிரினங்களுக்கு ஆதாம் எந்தப் பெயரிட்டானோ அதுவே அவற்றிற்குப் பெயராய் அமைந்தது. அவ்வாறே ஆதாம் எல்லாக் கால்நடைகளுக்கும், வானத்துப் பறவைகளுக்கும், பூமியிலுள்ள எல்லா மிருகங்களுக்கும் தகுதியான பெயர்களை இட்டான். ஆனால் ஆதாமுக்கு ஒத்த துணை ஒன்றும் தென்படவில்லை.

அப்போது ஆண்டவராகிய கடவுள் ஆதாமுக்கு ஆழ்ந்த தூக்கம் வரச் செய்தார். அவன் அவ்வாறு தூங்கிக் கொண்டிருந்தபோது கடவுள் அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்து, அவ்வாறு எடுத்த இடத்தைச் சதையினால் மூடினார். பின்னர் ஆண்டவராகிய கடவுள் ஆதாமிடமிருந்து எடுத்த விலாவெலும்பை ஒரு பெண்ணாகச் செய்து, அந்தப் பெண்ணை ஆதாமிடம் அழைத்துக் கொண்டு வந்தார்.

ஆதாம் : இவள் என் எலும்புகளின் எலும்பும் மாமிசத்தின் மாமிசமுமாய் இருக்கிறாள் ; இவள் மனிதனிடத்தினின்று எடுக்கப்பட்டவளாதலால் மனுசி எனப்படுவாள் என்றான். இதன் பொருட்டு மனிதன் தன் தந்தையையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான் ; இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள், (என்று சொன்னார்.)

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 128: 1-2, 3, 4-5, 6 (பல்லவி: 5 காண்க)

பல்லவி: **நம் வாழ்நாளெல்லாம் ஆண்டவர் நமக்கு ஆசியளிப்பாராக.**

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறு பெற்றோன்;
அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறு பெற்றோன்.
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்;
பேறு பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனி தரும் கொடி முந்திரிபோல்
உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள்;
ஒலிவச் செடிகள்போல உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர்.
பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக;
உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை
நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

6 உன் மக்களின் மக்களை நீ காண்பாயாக;
இஸ்ராயேல் மக்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பரிசுத்தமாக்குபவர், பரிசுத்தமாக்கப்படுபவர்கள் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 9-11

சகோதரர்களே:

நாம் காண்பது, சிறிது காலத்திற்கு வானதூதர்களைவிடத் தாழ்ந்தவராக்கப்பட்ட ஒருவரைத்தான். இவர் யேசுவே. இவர் பாடுபட்டு இறந்ததால், 'மகிமையும் மாட்சியும்' இவருக்கு முடியெனச் சூட்டப்பட்டதையும் காண்கிறோம். இங்ஙனம் கடவுளின் அருளால் அனைவருடைய நன்மைக்காகவும் இவர் சாவுக்குட்பட வேண்டியிருந்தது.

யாருக்காக எல்லாம் உள்ளனவோ, யாரால் எல்லாம் உண்டாயினவோ அவர், புதல்வர் பலரை மகிமைக்கு அழைத்துச் செல்ல விரும்பிய

போது, அவர்களுடைய மீட்பைத் தொடங்கி வைத்த யேசுவைப் பாடுகளால் நிறைவுள்ளவராக்கியது தகுதியே. பரிசுத்தமாக்குபவர், பரிசுத்தமாக்கப்படுபவர்கள் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. இதனாலே இறைமகன் அவர்களைச் 'சகோதரர்கள்' என்றழைக்க வெட்கப்படவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா                      1 அரு. 4 : 12

**அல்லேலூயா.** நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால்
கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார்;
அவரது அன்பு நம்முள் நிறைவுற்றிருக்கிறது.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*10 : 2-16*

அக்காலத்தில் :

பரிசேயர் யேசுவை அணுகி, "கணவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர்.

அதற்கு அவர், "மோயீசன் உங்களுக்கு என்ன கட்டளையிட்டார்?" என்று கேட்க அவர்கள், "முறிவுச் சீட்டு எழுதி அவளை விலக்கிவிடலாம் என்று மோயீசன் அனுமதி அளித்தார்" என்றனர்.

அதற்கு யேசு, "உங்களுடைய முரட்டுத்தனத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே, கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதலால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார்.

வீட்டிற்கு வந்து அவருடைய சீடர் மீண்டும் அதைப்பற்றி அவரைக் கேட்டனர். அதற்கு அவர் அவர்களை நோக்கி, "தன் மனைவியை விலக்கி விட்டு வேறொருத்தியை மணப்பவன் எவனும் அவளுக்கு விரோதமாக விபசாரம் செய்கிறான். மனைவி தன் கணவனை விலக்கி வேறொருவனை மணந்துகொண்டால் அவளும் விபசாரம் செய்கிறாள்" என்றார்.

குழந்தைகளை அவர் தொட வேண்டும் என்று அவரிடம் கொண்டு வந்தனர். சீடர் அதட்டினர். இயேசு அதைக்கண்டு சினந்து, அவர்களை நோக்கி, "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்க வேண்டாம், ஏனெனில், கடவுளின் அரசு இத்தகையோரதே. உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசைக் குழந்தையைப்போல ஏற்றுக்கொள்ளாத எவனும் அதனுள் நுழைய முடியாது" என்றார்.

பின்பு அவர் அவர்களை அரவணைத்து, கைகளை அவர்கள்மேல் வைத்து ஆசீர்வதித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது: குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய புனித நற்செய்தியிலிருந்து வாசகம் 10:2-12

அக்காலத்தில் :

பரிசேயர் அவரை அணுகி, "கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர்.

அதற்கு அவர், "மோசே உங்களுக்கு என்ன கட்டளையிட்டார்?" என்று கேட்க அவர்கள், "மணமுறிவுச் சீட்டு எழுதி அவளை விலக்கி விடலாம் என்று மோசே அனுமதி அளித்தார்" என்றனர்.

அதற்கு இயேசு, "உங்களுடைய கடின உள்ளத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதிவைத்தார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே, கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதலால், கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான்,

இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார்.

வீட்டிற்கு வந்த அவருடைய சீடர் மீண்டும் அதைப்பற்றி அவரைக் கேட்டனர். அதற்கு அவர் அவர்களை நோக்கி, "தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொருத்தியை மணப்பவன் எவனும் அவளுக்கு விரோதமாக விபசாரம் செய்கிறான். மனைவி தன் கணவனை விலக்கி வேறொருவனை மணந்துகொண்டால் அவளும் விபசாரம் செய்கிறாள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நீதிமான் தன் விசுவாசத்தினுல் வாழ்வான்.**

இறைவாக்கினர் அபாக்கூக் ஆகமத்திலிருந்து வாசகம் *1 : 2-3; 2 : 2-4*

ஆண்டவரே, எத்துணைக் காலத்திற்கு நான் உம்மை நோக்கிக் கூக்குரலிட்டுக் கொண்டிருப்பேன், நீரும் செவி சாய்க்காமல் இருப்பீர்? இன்னும் எத்துணைக் காலத்திற்கு நான் "என்னைக் கொடுமைப்படுத்துகிருர்கள்!" என்று கதறுவேன், நீரும் என்னை மீட்காமல் இருப்பீர்?

ஏன் நான் அக்கிரமத்தையும் கொடுமையையும் பார்க்கும்படி நீர் செய்கிறீர்? கொள்ளையும் கொடுமையும் என் கண்முன் இருக்கின்றன, பூசல் எழும்புகின்றது. எங்குமே போட்டி!

ஆண்டவர் எனக்களித்த மறுமொழி இதுவே: "காட்சியை எழுதி வை; விரைவாய்ப் படிக்கும்படி பலகைகளில் தெளிவாய் எழுது. இன்னும் குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி காத்திருக்கிறது, ஆயினும் முடிவை நோக்கி விரைந்து போகிறது, பொய்யாகாது; காலந் தாழ்த்துவதாகத் தெரிந்தால், எதிர்பார்த்திரு; அது நிறைவேறியே தீரும், தவணை மீருது. இதோ, விசுவசியாதவன் நேர்மையான உள்ளத்தினன் அல்லன், ஆனுல் நீதிமான் தன் விசுவாசத்தினுல் வாழ்வான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94 : 1-2, 6-7, 8-9 (பல்லவி : 8)

பல்லவி: உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள் என்னும்
ஆண்டவர் குரலை இன்று கேட்பீர்களா!

1 வாருங்கள், ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம்.
மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்:
இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்,
நம்மைப் படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள்,
அவர் அரவணைப்பிலுள்ள மந்தை.
இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா?
அக்குரல் கூறுவதாவது : பல்லவி

8 அன்று மெரிபாவிலும் பாலைவெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
9 "அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்;
என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்."

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவரைப்பற்றிச் சாட்சியம் கூற வெட்கப்படவேண்டாம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 6-8, 13-14*

அன்புக்குரியவரே:

உம்மீது என் கைகளை விரித்ததால் கடவுளின் வரம் உமக்குள் வந்துள்ளது. அதை நீர் தீயெனப் பற்றியெரியச் செய்ய வேண்டுமென்று உமக்கு நினைவுறுத்துகிறேன். கடவுள் தம் ஆவியால் கோழை உள்ளத்தை நமக்கு அருளவில்லை. வலிமையும் அன்பும் விவேகமும் கொண்ட உள்ளத்தையே அருளினார். ஆதலின் ஆண்டவரைப்பற்றிச் சாட்சியம் கூற வெட்கப்படாதீர். அவருடைய கைதியான என்னைக் குறித்தும் வெட்கப்படாதீர். கடவுளின் வல்லமை பெற்று நற்செய்திக்காக என்னோடு துன்புறத் தயங்காதீர்.

கிறிஸ்து யேசுவுக்குள் நாம் பெற்றுக்கொள்ளும் விசுவாசத்திலும் அன்பிலும் வாழ்பவராய் என்னிடமிருந்து நீர் கேட்டறிந்த நலமிக்க வார்த்தைகளை வாழ்க்கைச் சட்டமாகக் கொண்டிரும். நமக்குள் குடிகொண்டிருக்கும் பரிசுத்த ஆவியின் உதவியினால் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நற்போதனையைப் பாதுகாப்பீராக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

**அல்லேலூயா.** ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும்:
இச்சொல்லே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்களுக்கு விசுவாசம் இருந்தால் ...**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
*17 : 5-10*

அக்காலத்தில் :

அப்போஸ்தலர்கள், "எங்களிடம் விசுவாசத்தை அதிகமாக்கும்" என்று ஆண்டவரைக் கேட்டார்கள். ஆண்டவரோ, "கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் இம்முசுக்கட்டை மரத்தை நோக்கி, 'வேருடன் பெயர்ந்து கடலில் ஊன்றிக்கொள்' என்பீர்களாகில் உங்களுக்கு அது கீழ்ப்படியும்.

உழுவதற்கோ மேய்ப்பதற்கோ உங்களிடம் ஒரு வேலையாள் இருந்தால், அவன் வயலிலிருந்து திரும்பி வரும்பொழுது, 'நீ உடனே என்னோடு வந்து சாப்பிடு' என்று உங்களுள் எவனாவது அவனுக்குச் சொல்லுவானோ? மாறாக, 'எனக்குச் சாப்பாடு ஆயத்தம் செய். உன் இடையை வரிந்து கட்டிக்கொண்டு நான் உண்டு குடிக்குமளவும் எனக்குப் பணிவிடை செய்; பின்பு நீ உண்டு குடிக்கலாம்' என்று சொல்ல மாட்டானோ? தான் கட்டளையிட்டதைச் செய்ததற்காகத் தன் வேலையாளுக்கு நன்றி சொல்வானோ?

அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்டதெல்லாம் செய்த பின், 'நாங்கள் பயனற்ற ஊழியர்கள், செய்ய வேண்டியதைத்தான் செய்தோம்' எனச் சொல்லுங்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யோனாஸ் ஆண்டவரின் திருமுன்னிருந்து தப்பியோட எழுந்தார்.**

**இறைவாக்கினர் யோனாஸ் ஆகமத்தின் தொடக்கம்** *1 : 1-2 : 1, 11*

அமாத்தி என்பவரின் மகனான யோனாஸ் என்பவருக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது: "நீ புறப்பட்டு நினிவே என்னும் மாநகருக்குப் போய், அவர்கள் செய்யும் தீமை நம் திருமுன் எட்டிற்று என்று அவர்களுக்கு அறிவி" என்றார்.

யோனாசோ ஆண்டவரின் திருமுன்னிருந்து தார்சீசுக்குத் தப்பியோடிப்போக எண்ணிப் புறப்பட்டார்; ஆகவே யோப்பா பட்டினத்திற்குப் போய், தார்சீசுக்குப் போகத் தயாராய் இருந்த ஒரு கப்பலைக் கண்டு, கட்டணத்தைக் கொடுத்து ஆண்டவருடைய திருமுன்னிருந்து தப்பி அவர்களோடு தார்சீசுக்குப் போகக் கப்பலேறினார்.

ஆனால் ஆண்டவர் கடலின்மேல் பெருங் காற்றை அனுப்பினார்; கடலில் பெரும் புயல் உண்டாயிற்று; கப்பலோ உடைந்துபோகும் நிலையில் தத்தளித்தது. அப்போது கப்பலில் இருந்தவர்கள் திகில் கொண்டவர்களாய்த் தத்தம் கடவுளைக் கூவி மன்றாடினர்; கப்பலின் பளுவைக் குறைப்பதற்காக அதிலிருந்த சரக்குகளை வாரிக் கடலில் எறிந்தார்கள்; யோனாசோ கப்பலின் அடித்தளத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்தார்.

கப்பல் தலைவன் அவரிடம் வந்து, "என்ன இது, நீ உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாயே? எழுந்திரு, உன் கடவுளைக் கூவி மன்றாடு; ஒருவேளை நாம் அழிந்துபோகாதபடி அந்தக் கடவுள் நம்மை நினைத்தருள்வார்" என்றான். கப்பலில் இருந்தவர்கள் ஒருவர் ஒருவரைப் பார்த்து, "எவனை முன்னிட்டு நமக்கு இந்தத் தீங்கு வந்தது என்றறியத் திருவுளச் சீட்டுப் போடுவோம், வாருங்கள்" என்றனர்; அவ்வாறு அவர்கள் போட்ட சீட்டு யோனாசின்பேரில் விழுந்தது.

அப்போது அவர்கள் அவரைப் பார்த்து, "இந்த ஆபத்து எங்களுக்கு வரக் காரணம் என்ன? உன் தொழிலென்ன? நீ எந்த ஊர்? எங்கே போகிறாய்? உன் இனத்தார் யார்? சொல்" என்றார்கள். அதற்கு அவர் அவர்களை நோக்கி, "நான் ஓர் எபிரேயன்; கடலையும் நிலத்தையும் படைத்தவரான விண்ணகக் கடவுளாகிய ஆண்டவரின் அடியான்" என்று விடையளித்தார்.

அப்போது அவர்கள் மிகவும் அஞ்சி, "நீ என்ன செய்தாய்?" என்று கேட்டார்கள்; அவர்களோ அவர் ஆண்டவரின் திருமுன்னிருந்து தப்பியோடுகிறார் என்பதை அவரிடமிருந்தே கேட்டறிந்தனர். கடல் அலைகள் பொங்கியெழுந்தமையால், அவர்கள், "கடல் எங்கள்மட்டில் அமைதியடையும்படிக்கு உனக்கு நாங்கள் செய்ய வேண்டியதென்ன?" என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர், "என்னைத் தூக்கிக் கடலில் எறிந்துவிடுங்கள்; அப்போது உங்கள்மேல் கடல் அமைதி கொள்ளும்; ஏனெனில் என்னை முன்னிட்டுத்தான் இந்தக் கடும் புயல் உங்கள்மேல் வந்தது என்பதை நான் அறிவேன்" என்றார்.

ஆயினும், கப்பலைக் கரைக்குக் கொண்டுவர முனைந்து தண்டு வலித்தனர்; ஆனால் இயலவில்லை. ஏனெனில் கடல் அலைகள் மேலும் மேலும் பொங்கிக் கொந்தளித்தன. ஆகவே, அவர்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டு, "ஆண்டவரே, இந்த மனிதனின் உயிரை முன்னிட்டு எங்களை அழிய விடாதேயும்; மாசற்ற இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்தாதேயும்; ஏனெனில், ஆண்டவரே, உமக்கு விருப்பமானதை நீர்தான் செய்கிறீர்" என்று மன்றாடினர்.

பிறகு அவர்கள் யோனாவைத் தூக்கிக் கடலில் எறிந்தார்கள்; கொந்தளிப்பும் ஓய்ந்தது, அந்த மனிதர்கள் ஆண்டவர்மட்டில் பெரிதும் அச்சங்கொண்டு ஆண்டவருக்குப் பலியிட்டு நேர்ச்சைகளும் செய்து கொண்டார்கள்.

யோனாவை விழுங்கும்படி ஆண்டவர் ஒரு பெரிய மீனுக்குக் கட்டளை கொடுத்திருந்தார்; யோனாவோ அந்த மீன் வயிற்றிலே மூன்று பகலும் மூன்று இரவும் இருந்தார். ஆண்டவர் அந்த மீனுக்குக் கட்டளையிட, அது யோனாவைக் கடற்கரையில் கக்கிவிட்டது.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

யோனாஸ். 2 : 3-4, 5-8 (பல்லவி : 7c)

பல்லவி : **ஆண்டவரே, பாதாளப் படுகுழியிலிருந்து
என்னுயிரை மீட்டுவந்தீர்.**

என் வேதனையின்போது என் ஆண்டவரிடம் கூக்குரலிட்டேன்,
அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார்;
பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூவினேன்,
நீர் என் குரலைக் கேட்டருளினீர். பல்லவி

சகோதரர்களே, உங்களுக்கு ஒன்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதனின் படைப்பன்று. மனிதனிடமிருந்து நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. எந்த மனிதனும் அதை எனக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. யேசு கிறிஸ்து அருளிய திரு வெளிப்பாட்டின் வழியாகவே அந்நற்செய்தி எனக்குக் கிடைத்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 110 : 1-2, 7-8, 9 & 10c (பல்லவி : 5b)

பல்லவி தாம் செய்த உடன்படிக்கையை என்றென்றும் மறவார்.

அல்லது : அல்லேலூயா.

1 நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன் :
நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை :
அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

7 அவரது திருக்கரச் செயல்கள் நம்பிக்கைக்குரியவை, நேர்மையானவை :
அவர் தரும் கட்டளைகள் நிலையானவை ;
8 என்றென்றும் நித்தியமும் நிலையாயுள்ளவை :
உறுதியும் நேர்மையும் அவற்றின் அடிப்படை. பல்லவி

9 தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார் ;
தம் உடன்படிக்கையை என்றென்றும் நிலைக்கச் செய்தார் :
அவரது திருப் பெயர் புனிதமானது, வணங்குதற்குரியது.
10 அவரது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். பல்லவி

அரு. 13 : 34

## அல்லேலூயா

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன் :
நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல்,
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் அயலான் யார்?**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சவிசேஷத்திலிருந்து வாசகம்** 10 : 25-37

**அக்காலத்தில் :**

**சட்ட வல்லுநன் ஒருவன் எழுந்து யேசுவைச் சோதிக்க, "போதகரே, முடிவில்லாத வாழ்வு பெற, நான் செய்யவேண்டிய தென்ன ?" என்று வினவினான்.**

**அதற்கு அவர், "திருச் சட்ட நூலில் என்ன எழுதியுள்ளது ? அதில் என்ன வாசிக்கிறீர் ?" என்றார். அவன் மறுமொழியாக, "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக. உன்மீது நீ அன்புகாட்டுவதுபோல், உன் அயலான்மீதும் நீ அன்பு காட்டுவாயாக" என்றான். அவரோ, சரியாய்ப் பதில் சொன்னீர் ; இப்படியே செய்யும் ; வாழ்வீர்" என்றார்.**

**அவன், தான் கேட்டது சரியான கேள்வி என்று காட்ட விரும்பி, "என் அயலான் யார் ?" என்று யேசுவை வினவினான்.**

**அதற்கு யேசு, "யெருசலேமிலிருந்து யெரிக்கோவுக்கு ஒருவன் இறங்கிச் செல்லுகையில், கள்வர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் ஆடைகளைப் பறித்துக்கொண்டு அவனைக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுச் சென்றார்கள். அதே வழியாக ஒரு குருவும் இறங்கிச் செல்ல நேர்ந்தது. அவர் அவனைக் கண்டும் விலகிச் சென்றார். அவ்வாறே லேவியன் ஒருவனும் அவ்விடத்துக்கு வந்து அவனைக் கண்டு விலகிச் சென்றான்.**

**ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியன் ஒருவன் அவன் அருகில் வந்து, அவனைக்கண்டு, மனமிரங்கினான். அவனை அணுகி எண்ணெயும் திராட்சை இரசமும் வார்த்து, அவன் காயங்களைக் கட்டித் தன் சொந்த வாகனத்தில் ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவனைக் கண்காணித்தான்.**

**மறுநாள் இரு வெள்ளிக்காசுகளை எடுத்துச் சாவடிக்காரனிடம் கொடுத்து, 'இவனைக் கண்காணித்துக்கொள். இதற்குமேல் செலவானால் திரும்பி வரும்போது கொடுத்துவிடுவேன்' என்றான்.**

"கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இம்மூவருள் எவன் அயலான் என்று உமக்குத் தோன்றுகிறது?" என்றார். அதற்கு அவன், "அவனுக்கு இரக்கம் காட்டியவன்தான்" என்றான்.

யேசு, "நீரும் போய் அவ்வாறே செய்யும்" என்று கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நினிவே மக்கள் தங்கள் தீயநெறியைவிட்டு மனந்திரும்பினர்; அதைக்கண்டு கடவுள் இரக்கம் கொண்டார்.**

இறைவாக்கினர் யோனாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 1-10

ஆண்டவர் இரண்டாம் முறையாக யோனாசுக்குக் கூறினார்: "நீ புறப்பட்டு நினிவே என்னும் மாநகருக்குப் போய் நாம் உனக்குச் சொல்லும் தூதுரையை அவர்களுக்கு அறிவி" என்றார். யோனாஸ் உடனே புறப்பட்டு ஆண்டவருடைய வார்த்தையின்படியே நினிவே நகருக்குப் போனார்; நினிவே ஒரு மாபெரும் நகரம்; அதன் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்குச் செல்ல மூன்று நாளாகும். யோனாஸ் நகருக்குள் நுழைந்து, ஒருநாள் பயணம் செய்து, உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாட்களில் நினிவே வீழ்த்தப்படும்" என்று அறிவித்தார்.

நினிவே மக்கள் கடவுளை விசுவசித்தனர்; உடனே, உண்ணாநோன்பு இருக்கும்படி அறிக்கையிட்டனர்; பெரியோர்முதல் சிறியோர் ஈறாக அனைவரும் கோணியுடுத்திக் கொண்டனர்.

இந்தச் செய்தி நினிவே மன்னனுக்கு எட்டிற்று; அவனும் தன் அரியணையை விட்டிறங்கி, அரச ஆடையை அகற்றிவிட்டு கோணியுடுத்திச் சாம்பலில் அமர்ந்தான். மேலும் அறிக்கை யொன்று தயாரித்து நினிவே முழுவதும் விளம்பரப்படுத்தச் சொன்னான்: "அரசர், அவர் அமைச்சர்கள் ஆகியோரின் ஆணையாவது: மனிதனோ மிருகமோ ஆடு மாடுகளோ எதையும் சுவைத்தலாகாது; உண்ணவோ நீர் பருகவோ கூடாது. மனிதன், மிருகம் எல்லாருமே கோணியாடை உடுத்திக்கொண்டு, கடவுளை நோக்கி உரத்த குரலில் கூவியழைக்கட்டும்; ஒவ்வொருவனும் தன் தீய வழியை விட்டுத் திரும்பட்டும்; தன் கைகளைக் கறைப்படுத்தும்

வன்முறைச் செயல்களை விட்டொழிக்கட்டும். அப்போது ஒருவேளை ஆண்டவர் தம் மனத்தை மாற்றிக்கொண்டு, தம் கடுஞ்சினத்தை அமர்த்துக்கூடும்; நாமும் அழியாமல் தப்புவோம்."

அவர்கள் செய்தவற்றைக் கடவுள் கண்டு, அவர்கள் தங்கள் தீயநெறியை விட்டுத் திரும்பியதை அறிந்தார்; தாம் அவர்களுக்குச் செய்வதாகச் சொல்லியிருந்த தீங்கைக் குறித்துக் கடவுள் தம் மனத்தை மாற்றிக்கொண்டு, அதைச் செய்யாமல் விட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 130: 1-2. 3-4ஆ. 7-8 (பல்லவி: 3)

பல்லவி: ஆண்டவரே, பாவங்களை நீர் நினைவுகூர்ந்தால்
உமக்கு முன் யார் நிற்கமுடியும்?

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக் கூவி அழைக்கின்றேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவிசாய்த்தருளும்;
என் வேண்டுதலின் குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும்.

பல்லவி

3 ஆண்டவரே, நான் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில்,
உமக்குமுன் யார் நிற்கமுடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு,
நீர் பாவங்களை மன்னிக்கிறீர்.

பல்லவி

7 ஏனெனில் ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது.
அவருடைய மீட்புத்திறனே பொங்கி வழிகின்றது.
8 இஸ்ரயேலரை அவர் மீட்பார்;
அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தினின்றும்
அவர்களை மீட்டுக்கொள்வார்.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நற்செய்தியைப் புறவினத்தாருக்கு அறிவிக்கும்படி,
தம் மகனை எனக்குள் வெளிப்படுத்தினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 13-24*

சகோதரர்களே :

ஒரு காலத்தில் நான் யூத மறையைப் பின்பற்றியபொழுது, என்ன செய்துவந்தேன் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கடவுளின் திருச்சபையை எவ்வளவோ துன்புறுத்தி, ஒழிக்க முயன்றேன். முன்னோர் பரம்பரையில் ஆர்வம் மிக்கவனாய், என் இனத்தவருள் என் வயதினர் பலரினும் மேலாக யூத மறை ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினேன்.

ஆயினும் தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தேர்ந்தெடுத்துத் தமது அருளால் என்னை அழைத்த இறைவன், தம் மகனைப் பற்றிய நற்செய்தியை நான் புறவினத்தார்க்கு அறிவிக்கும்படி, அம்மகனை எனக்குள் வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டார். அப்போது நான் எந்த மனிதனிடமும் போய்க் கலந்து ஆலோசிக்காமல், எனக்கு முன் அப்போஸ்தலர் ஆனவர்களையும் காண எருசலேமுக்குப் போகாமல், உடனே அரேபியாவுக்குச் சென்றேன். அங்கிருந்து தமஸ்கு நகருக்குத் திரும்பினேன். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் கேபாவைப் பார்த்துப் பேச எருசலேமுக்குப் போனேன் ; அங்கே பதினைந்து நாள் அவருடன் தங்கியிருந்தேன். மற்ற அப்போஸ்தலருள் ஆண்டவரின் சகோதரரான யாகப்பரைத் தவிர வேறு யாரையும் நான் காணவில்லை. நான் எழுதுகிற இதில் பொய்யொன்றுமில்லை. கடவுளே சாட்சி.

பின்பு சீரியா, சிலிசியா நாட்டுப் பகுதிகளுக்குப் போனேன். ஆயினும் யூதேயா நாட்டுக் கிறிஸ்தவ சபைகளுக்கு அதுவரை அறிமுகம் ஆகாமலே இருந்தேன். ஒரு காலத்தில் நம்மைத் துன்புறுத்தியவன், தான் முன்பு ஒழிக்க முயன்ற விசுவாசத்தைப் போதித்து இப்பொழுது நற்செய்தி அறிவிக்கிறான் என்றுமட்டும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர். அதற்காக என்னை முன்னிட்டுக் கடவுளை மகிமைப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 138 : 1-3, 13-14ab, 14c-15 (பல்லவி : 24b)

பல்லவி : முன்னோர் காட்டிய வழியில்
என்னை நடத்தியருளும், ஆண்டவரே.

1 ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர் :
2 நான் அமர்வதும் எழுவதும்,
என் வாழ்க்கை முழுவதுமே நீர் அறிந்திருக்கிறீர்.
என் நினைவுகள் எல்லாம் முன்பிருந்தே உமக்கு வெளிச்சம்.
3 நான் நடப்பதும் படுப்பதும் எல்லாமே நீர் அறிந்துள்ளீர்,
நான் செல்லும் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தனவே. பல்லவி

13 ஏனெனில், நீரே என் உள் உறுப்புக்களை உண்டாக்கினீர் :
என் தாயின் கருவில் என்னை உருவாக்கியவர் நீரே.
14 இவ்வளவு வியப்புக்குரிய விதமாய் நீர் என்னைப் படைத்ததை நினைத்து
நான் உம்மைப் போற்றுகிறேன்:
உம்முடைய செயல்கள் அதிசயமுள்ளவை,
என்னை முற்றிலும் நீர் நன்கறிவீர். பல்லவி

15 என் உடலின் அமைப்பு உமக்குத் தெரியாததன்று
மறைவான விதத்தில் நான் உருவானதையும்,
பூமியின் ஆழத்தில் நான் உருப்பெற்றதையும்
நீர் தெரிந்திருந்தீர். பல்லவி

அல்லேலூயா லூக் 11 : 28

**அல்லேலூயா. கடவுள் வார்த்தையைக் கேட்டு
கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

*மார்த்தாள் அவரைத் தன் வீட்டில் வரவேற்ருள்.*
*மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள்,*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

10 : 38-42

அக்காலத்தில் :

யேசு ஓர் ஊருக்குள் வர, மார்த்தாள் என்னும் பெண் ஒருத்தி, தன் வீட்டில் அவரை வரவேற்ருள். அவளுக்கு மரியாள் என்னும் சகோதரி இருந்தாள். அவள் ஆண்டவருடைய காலடியில் அமர்ந்து, அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

மார்த்தாளோ, பலவகையாய்ப் பணிவிடை புரிவதில் பரபரப்பாயிருந்தாள். அவள் வந்து, "ஆண்டவரே, நான் உமக்குப் பணிபுரிய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்" என்ருள்.

அதற்கு ஆண்டவர், "மார்த்தா, மார்த்தா, நீ பல காரியங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிருய். ஆனுல், தேவையானது ஒன்றே. மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*ஆமணக்குச் செடிக்காக நீ வருந்துகிருய் : நினிவே மாநகரத்தின் மேல் நாம் இரங்காதிருப்போமோ?*

இறைவாக்கினர் யோனுஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 1-11

யோனுசுக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை; அவர் மிகுந்த சினங்கொண்டார். அவர் ஆண்டவரை நோக்கி முறையிட்டு: "ஆண்டவரே, என் நாட்டில் இருக்கும்போதே நான் இதைத்தானே சொன்னேன்! இதை முன்னிட்டுத்தான் நான் தார்சீசிக்கு ஓடிப்போக முயற்சி செய்தேன்;

ஏனெனில், நீர் பரிவும் இரக்கமும் உள்ள கடவுள் என்றும், நீடிய பொறுமையும் நிறைந்த அன்பும் கொண்டவர் என்றும், செய்பவிருக்கும் தீங்கைக் குறித்து மனம் மாறுகிறவர் என்றும் எனக்கு அப்பொழுதே தெரியுமே! ஆகையால், ஆண்டவரே, உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்: என் உயிரை எடுத்துவிடும்; நான் வாழ்வதினும் சாவது நன்று" என்று வேண்டிக்கொண்டார்.

அதற்கு ஆண்டவர், "நீ சினம் கொள்வது சரியா?" என்றார்.

பின்பு யோனாஸ் நகரத்தினின்று வெளியேறி, நகரத்திற்குக் கிழக்கே போய்த் தங்கினார்; அங்கே தமக்கு ஒரு பந்தற்போட்டு, நகரத்திற்கு நிகழப்போவதைக் காணும்வரையில் பந்தலின் நிழலில் காத்திருந்தார். கடவுளாகிய ஆண்டவர் ஆமணக்குச் செடியொன்றை முளைக்கச் செய்து, அது யோனாசின் தலைக்குமேல் படர்ந்து நிழல் தந்து அவருடைய சோர்வைப் போக்கும்படி செய்தார்; யோனாசும் அந்த ஆமணக்குச் செடியைக் கண்டு மகிழ்ந்தார், ஆனால் மறுநாள் வைகறையில் ஆண்டவர் ஒரு புழுவை அனுப்பினார்; அது ஆமணக்குச் செடியை அரிக்கவே, செடி உலர்ந்து போயிற்று.

பொழுது எழுந்ததும், கிழக்கிலிருந்து வெப்பக் காற்று வரும்படி கடவுள் கட்டளையிட்டார்; உச்சி வெயில் யோனாசின் தலைமேல் தாக்க, அவர் சோர்ந்து போனார்; அவர் சாக விரும்பி, "நான் வாழ்வதினும் சாவது நன்று" என்று சொன்னார்.

அப்போது ஆண்டவர் யோனாசைப் பார்த்து, "நீ அந்த ஆமணக்குச் செடியைக் குறித்துச் சினங்கொள்வது சரியா?" என்று கேட்டார்; அதற்கு அவர், "நான் சாவை விரும்பும் அளவுக்குச் சினங்கொள்வது சரியே" என்று மறுமொழி சொன்னார்.

ஆண்டவர் அவரைப் பார்த்து, "நீ நட்டு வளர்க்காமலே, தானாக ஒரே இரவில் முளைத்தெழுந்து, ஒரே இரவில் உலர்ந்துபோன அந்த ஆமணக்குச் செடிக்காக நீ இவ்வளவு வருந்துகிறாயே! வலக்கை எது இடக்கை எது என்ற வேறுபாடு கூடத்தெரியாத இலட்சத்து இருபதாயிரம் பேருக்கு மிகுதியான மனிதர்களும், பெருந்தொகையான மிருகங்களும் இருக்கிற இந்த நினிவே மாநகரத்தின்மேல் நாம் இரங்காதிருப்போமோ?" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 85 : 3b-4, 5-6, 9-10 (பல்லவி : 15b)

பல்லவி : **ஆண்டவரே, நீர் சினந்துகொள்ளத் தாமதிப்பவர்:
அளவுகடந்த அருளன்பு உள்ளவர்.**

3 **ஆண்டவரே, என்மேல் இரக்கமாயிரும்;
ஏனெனில், எந்நேரமும் நான் உம்மை நோக்கி அபயக்குரல் எழுப்புகிறேன்.
4 ஆண்டவரே என் ஆன்மாவை உம்மை நோக்கி எழுப்பினேன்.
ஆதலால் உம் ஊழியனுடைய உள்ளத்தை மகிழ்வித்தருளும்.** பல்லவி

5 **ஏனெனில் ஆண்டவரே, நீர் நல்லவர்; கருணைமிக்கவர்;
உம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்.
6 ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.
என் வேண்டுதலின் குரலுக்குச் செவிசாய்த்தருளும்.** பல்லவி

9 **ஆண்டவரே, நீர் படைத்த மக்களினத்தார் அனைவரும்
உம்மை வணங்குவார்கள்.
உமது புகழைச் சாற்றுவார்கள்.
10 ஏனெனில், நீர் மகத்துவமுள்ளவர்,
வியப்புக்குரிய செயல்களைச் செய்பவர் : நீர் ஒருவரே கடவுள்.** பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**எனக்கு அளிக்கப்பட்ட அருளை உணர்ந்துகொண்டனர்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1-2, 7-14

சகோதரர்களே :

**பதினான்கு ஆண்டுகள் கடந்தபின், தீத்துவையும் கூட்டிக்கொண்டு, மறுபடியும் பர்னபாவுடன் எருசலேமுக்குப் போனேன். அங்குப் போக வேண்டுமென்று இறைவன் வெளிப்படுத்தியதால் நான் போனேன்; நான் புறவினத்தாரிடையே அறிவிக்கும் நற்செய்தியை அங்கே விளக்கிக் காட்டினேன்; அதாவது, செல்வாக்குள்ளவர்களுக்குத் தனிமையில் எடுத்துரைத்தேன். இப்போது நான் வருந்திச் செய்யும் வேலையும் இதுவரை உழைத்த உழைப்பும் வீணாகுமோ என்று அஞ்சி இப்படிச் செய்தேன்.**

மாறாக, விருத்தசேதனம் பெற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணி இராயப்பருக்கு ஒப்படைக்கப்பட்டது போலவே, புறவினத்தாருக்கு அதை அறிவிக்கும் பணி எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுகொண்டனர் — ஆம், விருத்தசேதனமுள்ளவர்களின் அப்போஸ்தலத்துவப் பணிக்கு இராயப்பரில் செயலாற்றியவரே புறவினத்தாரின் அப்போஸ்தலத்துவப் பணிக்கு என்னிலும் செயலாற்றினார் — அத்துடன் எனக்கு அளிக்கப்பட்ட அருளைக் கண்டு, திருச்சபையின் தூண்கள் என மதிக்கப்பட்ட யாகப்பர், கேபா, அருளப்பர் ஆகியோர், நட்புறவின் அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் கை கொடுத்தனர்; விருத்தசேதனம் உள்ளோரிடம் அவர்கள் நற்செய்தி அறிவிப்பது என்றும், விருத்தசேதனம் இல்லாதவரிடம் நாங்கள் நற்செய்தி அறிவிப்பது என்றும் ஏற்பாடு செய்துகொண்டோம். ஏழைகளை மறக்க வேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொண்டனர்; அவர்களுக்கு உதவி செய்வதில்தான் நான் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தேன்.

ஆனால், கேபா அந்தியோக்கியாவுக்கு வந்தபோது, அவர் செய்தது கண்டனத்துக்கு உரியது என நன்றாகத் தெரிந்ததால், நான் நேருக்கு நேராய் எதிர்த்தேன். எவ்வெனில், யாகப்பரின் ஆட்கள் சிலர் வருமுன், கேபா புறவினத்தாருடன் உண்டு வந்தார். அவர்கள் வந்தபோது, விருத்தசேதனம் உள்ளவர்க்கு அஞ்சிப் பிரிந்து விலகலானார். மற்ற யூதர்களும் இந்த வெளிவேடத்தில் அவரோடு சேர்ந்துகொண்டனர். இந்த வெளிவேடம் பர்னபாவைக்கூடக் கவர்ந்துவிட்டது.

ஆனால் அவர்கள் நற்செய்தியின் உண்மை எனும் நேர்பாதையில் நடவாததை நான் கண்டபோது, எல்லார் முன்னிலையிலும் கேபாவிடம் சொன்னதாவது: "நீர் யூதராயிருந்தும், யூத முறைப்படி நடவாமல், புறவினத்தாரின் முறைமைப்படி வாழ்கிறீர். புறவினத்தார் யூத முறைமையைக் கடைப்பிடிக்கும்படி நீர் கட்டாயப்படுத்துவது எப்படி?"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 116 : 1, 2 (பல்லவி : மாற் 16 : 15)

பல்லவி : **உலகெங்கும்போய் நற்செய்தியை அறிவியுங்கள்.**

மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்;
மன்னுலக மக்களே,
நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

2 ஏனெனில், நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது :
நம்மீது அவர் கொண்டுள்ள பிரமாணிக்கம்
என்றும் நிலைத்திருக்கும்.

பல்லவி

அல்லேலூயா உரோ. 8 : 15

அல்லேலூயா. பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள் : அந்த ஆவியினால் நாம் 'அப்பா, தந்தாய்'' எனக் கூப்பிடுகிறோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஆண்டவரே, எங்களுக்குச் செபிக்கக் கற்றுக்கொடும்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*11 : 1-4*

அக்காலத்தில் :

ஒருநாள் யேசு ஓரிடத்தில் செபம் செய்துகொண்டிருந்தார். அது முடிந்தபின், சீடருள் ஒருவர் அவரைப் பார்த்து, "ஆண்டவரே அருளப்பர் தம் சீடருக்குச் செபிக்கக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக் கொடும்'' என்றார்.

அதற்கு அவர், "நீங்கள் செபிக்கும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள் : 'தந்தாய், உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக, உமது அரசு வருக; எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு நாள்தோறும் அளித்தருளும். எங்கள் பாவங்களை மன்னித்தருளும், ஏனெனில், எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்பவர் அனைவரையும் நாங்களும் மன்னிக்கிறோம். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்''.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ அந்த நாள் சூளையைப் போல் எரிந்துகொண்டு வரும்.**

**இறைவாக்கினர் மலாக்கியா ஆகமத்திலிருந்து வாசகம்** 3:13-20a

“ என்னைப் பற்றிக் கடுமையாகப் பேசியிருக்கிறீர்கள், என்கிறார் ஆண்டவர். அதற்கு, ‘உமக்கு எதிராக என்ன பேசினோம்?’ என்று கேட்கிறீர்கள். ‘கடவுளுக்கு ஊழியம் செய்வது வீண்; அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தும், சேனைகளின் ஆண்டவர் முன்னிலையில் மனவருத்தத்தோடு நடந்தும் நமக்கு என்ன பயன்? ஆணவம் கொண்டவர்களே பேறுபெற்றவர்கள் என்பதுதான் இனி எங்கள் கருத்து; தீமை செய்கிறவர்கள் முன்னேறுவது மட்டுமல்ல; கடவுளை அவர்கள் சோதிக்கும்போது அவர்கள் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்’ என்றெல்லாம் நீங்கள் சொல்லவில்லையா?”

அப்பொழுது, ஆண்டவருக்கு அஞ்சி நடந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசினர்; ஆண்டவர் கவனித்துக் கேட்டார்; ஆண்டவருக்கு அஞ்சி நடந்து அவர் பெயரைச் சிந்திக்கிறவர்களைக் குறித்துவைக்கும் நினைவுநூல் ஒன்று அவர் முன்னிலையில் எழுதப்பட்டது. “நான் செயலாற்றும் அந்த நாளில் அவர்கள் நம் உரிமைச் சொத்தாய், தனிப்பெரும் சொத்தாய் இருப்பார், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்; தந்தை தனக்கு ஊழியம் செய்யும் மகனுக்கு இரக்கம் காட்டுவதுபோல நாம் அவர்களுக்கு இரக்கம் காட்டுவோம். அப்போது, நேர்மையாளனுக்கும் தீயவனுக்கும், கடவுளுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டுணர்வீர்கள்.

இதோ அந்த நாள் சூளையைப் போல் எரிந்துகொண்டு வரும்; அப்போது ஆணவம் கொண்டவர், கொடுமை செய்பவர் அனைவரும் அதில் போடப்பட்ட வைக்கோலாவார், அப்படி வருகின்ற அந்த நாள், அவர்களுடைய வேரோ கிளையோ இல்லாதபடி அவர்களை முற்றிலும் சுட்டெரித்துவிடும், என்கிறார் சேனைகளின் ஆண்டவர். ஆனால் நம் திருப்பெயருக்கு அஞ்சி நடக்கும் உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான்; தன் இறக்கைகளில் நலத்தைத் தாங்கி வருவான்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1 : 1-2, 3, 4 & 6 (பல்லவி : 39 : 5a)

பல்லவி : தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவர் மீது வைத்தவனே
பேறுபெற்றவன்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன்,
பாவிகளின் வழியில் செல்லாதவன்,
பழிக்காரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய்,
அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும்
உதிர்க்காமல் தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்;
அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒருநாளுமிராது :
காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார் :
தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆவியை நீங்கள் பெற்றுக்கொண்டது, திருச்சட்டம் விதித்த செயல்களை நிறைவேற்றுவதாலா, அல்லது நற்செய்தியைக் கேட்டு விசுவசித்ததாலா?**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 1-5

அறிவிலிகளான கலாத்தியரே, உங்களை மயக்கியவன் யார்? யேசு
கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது உங்கள் கண்முன்னுல் சித்திரித்துக்
காட்டப்படவில்லையா? உங்களிடம் ஒன்று கேட்டறிய விரும்புகிறேன்;
நீங்கள் தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டது எவ்வாறு? திருச்சட்டம்
விதித்த செயல்களைச் செய்ததினுலோ? நற்செய்தியைக் கேட்டு விசுவசித்த
தினுலோ? ஆவியைச் சார்ந்த வாழ்க்கையைத் தொடங்கினீர்களே;
இப்பொழுது ஊனுடலைச் சார்ந்தவற்றில் நிறைவு காணப்போகிறீர்களா?
அத்தகைய அறிவிலிகளா நீங்கள்? இதனுல், உங்களுக்குக் கிடைத்த

இத்துணை மேலான நன்மைகளும் வீண்தானா? வீணாகத்தான் முடியுமா? அப்படியானால், உங்களுக்குத் தேவ ஆவியை அளித்து, உங்களிடையே வல்லமை மிக்க செயல்களைச் செய்பவர் ஏன் அப்படிச் செய்கிறார்? நீங்கள் திருச்சட்டம் விதித்த செயல்களை நிறைவேற்றுவதால் செய்கிறாரா? நீங்கள் நற்செய்தியைக் கேட்டு விசுவசித்ததால் செய்கிறாரா?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

லூக் 1:69-70, 71-72, 73-75 (பல்லவி: 68)

பல்லவி: இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி!
ஏனெனில் தம் மக்களைத் தேடிவந்தார்.

69-70 தொன்று தொட்டு வந்த தம் பரிசுத்த இறைவாக்கினர்களின்
வாயினால் அவர் மொழிந்தது போலவே,
தம் அடியானாகிய தாவீதின் குலத்திலே
மீட்கும் வல்லமை எழச் செய்தருளினார். பல்லவி

71 இவ்வாறு நம் பகைவரிடமிருந்தும்,
நம்மை வெறுப்பவர் அனைவரின் கையினின்றும் மீட்டருளினார்.
72 நம் முன்னோர்க்கு இரக்கம் காட்டி,
தமது பரிசுத்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தருளினார். பல்லவி

73-75 நம் பகைவரின் கையினின்று விடுதலை பெற்று,
அச்சமின்றி நம் வாழ்நாளெல்லாம் அவர் முன்னிலையில்,
புனிதத்தோடும் நீதியோடும் அவருக்குப் பணிபுரிய,
தாம் வழி வகுப்பதாக அவர்
நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதி மொழியையும்,
நினைவுகூர்ந்தருளினார். பல்லவி

அல்லேலூயா அப். பணி 16:14ஆ காண்க

அல்லேலூயா. உம் திருமகனின் சொற்களை
எங்கள் மனத்தில் இருத்தும்படி,
ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 5-13

**அக்காலத்தில்: யேசு சீடர்களை நோக்கிக் கூறியதாவது:**

"உங்களுள் ஒருவன் தன் நண்பனிடம் நள்ளிரவில் சென்று, நண்பா, 'எனக்கு மூன்று அப்பம் கடன் கொடு. ஏனெனில், பயணம் செய்யும் என் நண்பன் ஒருவன் என்னிடம் வந்திருக்கிறான். அவனுக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை' என்று சொல்லுகிறான் என வைத்துக்கொள்வோம். அவனும் உள்ளிருந்து மறுமொழியாக, 'என்னைத் தொந்தரை செய்யாதே. கதவு பூட்டியாயிற்று. என் குழந்தைகளும் என்னோடு படுக்கையில் உள்ளனர். எழுந்து உனக்குக் கொடுக்க முடியாது' என்று சொல்லுகிறான்.

நண்பனோ கதவைத் தட்டிக்கொண்டே இருந்தால், அவன் தன் நண்பன் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவனுடைய தொல்லையின் பொருட்டாவது எழுந்து, அவனுக்கு எத்தனை தேவையோ அத்தனையும் கொடுப்பான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மேலும் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்கிற எவனும் பெறுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

உங்களில் ஒருவன் தன் தந்தையிடம் அப்பம் கேட்டால், அவனுக்குக் கல்லையா கொடுப்பான்? மீன் கேட்டால், மீனுக்குப் பதிலாகப் பாம்பையா கொடுப்பான்? முட்டை கேட்டால், தேளையா கொடுப்பான்? ஆகவே, தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிவீர்களானால், வானகத்திலுள்ள உங்கள் தந்தை, தம்மிடம் கேட்பவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரின் நாள் வருகிறது. அது இருளும் காரிருளும் கலந்த நாள்.**

இறைவாக்கினர் யோவேல் ஆகமத்திலிருந்து வாசகம் *1 : 13-15; 2:1-2*

அர்ச்சகர்களே, கோணி யுடுத்திக்கொண்டு அழுங்கள் ; பீடத்தில் பணிசெய்வோரே, புலம்புங்கள்; என் கடவுளின் ஊழியர்களே, கோணி யுடை அணிந்து இரவைக் கழியுங்கள்; ஏனெனில் உங்கள் கடவுளின் கோயிலில் உணவுப் பலியும் பானப்பலியும் இல்லாதாகின.

உண்ணாநோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள், வழிபாட்டுக் கூட்டத்தைக் கூட்டுங்கள்; உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கோயிலுக்கு மூப்பர்களையும், நாட்டுமக்கள் அனைவரையும் வரவழைத்து, ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள். இந்த நாளுக்கு ஐயோ கேடு! ஏனெனில் ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது, எல்லாம் வல்லவரிடமிருந்து அழிவைப்போல் அது வருகிறது.

சீயோனில் எக்காளம் ஊதுங்கள், நமது பரிசுத்த மலைமேலிருந்து கூக்குரலிடுங்கள் ; உலக மக்கள் அனைவரும் நடுங்குவார்களாக! ஏனெனில் ஆண்டவரின் நாள் வருகிறது, மிக அண்மையில் உள்ளது. அதுவோ இருளும் காரிருளும் கவிந்த நாள், கார்முகிலும் மந்தாரமும் சூழ்ந்த நாள்; காலை வெயில் மலைமீது நொடிப் பொழுதில் பரவுவதுபோல் ஆற்றல் மிக்க பெருங் கூட்டம் வருகின்றது. பண்டுமுதல் இதற்கொப்பாய்க் கண்டதுமில்லை, ஊழிக்காலம்வரை இனிக் காணப்போவதுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 9 : 1-2, 5&15, 7-8 (பல்லவி : 8a)*

பல்லவி : **ஆண்டவர் உலகிற்கெல்லாம் நீதியுடன் தீர்ப்புக் கூறுவார்.**

1 ஆண்டவரே, என் முழு உள்ளத்துடன் உம்மைப் புகழுவேன் :
உம் வியத்தகு செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்.
2 உன்னதமானவரே, உம்மை நினைத்து நான் அகமகிழ்ந்து அக்களிப்பேன் :
உம் பெயருக்குப் புகழ்பாடுவேன். *பல்லவி*

5 புற இனத்தாரை அதட்டினீர், தீயோரை அழித்துவிட்டீர்,
அவர்களுடைய பெயரையே அடியோடு எடுத்துவிட்டீர்.
15 புறவினத்தார் தாங்கள் வெட்டிய குழியில் தாங்களே விழுந்தனர் :
அவர்கள் மறைவாக வைத்த கண்ணியில் அவர்களுடைய கால்களே
சிக்கிக்கொண்டன. பல்லவி

7 ஆண்டவரோ என்றும் தம் அரியணையில் அமர்ந்துள்ளார் :
நீதி வழங்கத் தம் அரியணையை நிறுவியுள்ளார்.
8 அவர்தாமே உலகினர்க்கெல்லாம் நீதியுடன் தீர்ப்புக் கூறுவார் :
நேர்மையோடு மக்களனைவர்க்கும் நீதி வழங்குவார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**விசுவாசத்தால் வாழ்பவர்கள் விசுவாசமுள்ள ஆபிரகாம் பெற்ற ஆசியில் பங்குபெறுவர்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 7-14

சகோதரர்களே :

யார் விசுவாசத்தால் வாழ்கிறார்களோ அவர்களே ஆபிரகாமின் மக்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். கடவுள் புறவினத்தாரை விசுவாசத்தினால் தமக்கு ஏற்புடையவராக்குவார் என்பதை மறைநூல் முன்னறிந்தே, 'புறவினத்தார் அனைவரும் உன் வழியாய் ஆசி பெறுவர்' என்ற நற்செய்தியை ஆபிரகாமுக்கு முன்னுரைத்தது. ஆகவே, விசுவாசத்தால் வாழ்பவர்கள் விசுவாசமுள்ள ஆபிரகாம் பெற்ற ஆசியில் பங்கு பெறுவர்.

சட்டம் விதித்த செயல்களையே நம்பி வாழ்பவர்கள் சாபத்துக்கு ஆளானவர்கள். ஏனெனில், 'திருச்சட்ட நூலில் எழுதப்பட்டிருக்கும் யாவற்றையும் கடைப்பிடிப்பதில் நிலைத்திராத எவனும் சபிக்கப்படுக!' என்று எழுதியுள்ளது. 'திருச்சட்டத்தினால் எவனும் கடவுள் முன்னிலையில் ஏற்புடையவனாவதில்லை என்பதும் தெளிவு ; ஏனெனில், 'விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்பட்டவனே வாழ்வு பெறுவான்' என்று எழுதியுள்ளது. திருச்சட்டம் விசுவாசத்தைச் சார்ந்ததன்று : மாறாக, "கட்டளைகளைக் கடைப்பிடிப்பவன் அவற்றால் உயிர் வாழ்வான்" என்று எழுதப்பட்டுள்ளது.

'கழுமரத்தில் தொங்குபவன் எவனும் சபிக்கப்பட்டவனே' என்று எழுதியுள்ளவாறு, நமக்காகக் கிறிஸ்து சாபமாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசி யேசு கிறிஸ்துவின் வழியாய்ப் புறவினத்தார்க்குக் கிடைக்கவும், இவ்வாறு வாக்களிக்கப்பட்ட தேவ ஆவியை நாம் விசுவாசத்தின் வழியாய்ப் பெற்றுக்கொள்ளவும் இப்படிச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 110 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 5b)

பல்லவி: தாம் செய்த உடன்படிக்கையை
ஆண்டவர் என்றும் மறவார்.

அல்லது: அல்லேலூயா.

1 நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன் ;
நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை :
அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

3 அவருடைய செயல் மகத்துவமும் மாண்பும் மிக்கது :
அவருடைய நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
4 தம் வியத்தகு செயல்கள் என்றும் நினைவில் இருக்கச் செய்தார் :
அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர். பல்லவி

5 தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார் :
தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.
6 புறவினத்தாரைத் தம் மக்களுக்கு உரிமையாக்கினார் :
இவ்வாறு வல்லமை மிக்க தம் செயல்களைத்
தம் மக்களுக்கு வெளிப்படுத்தினார். பல்லவி

அரு. 12 : 31b-32

அல்லேலூயா

அல்லேலூயா. இப்பொழுதே இவ்வுலகின் தலைவன் புறம்பே தள்ளப் படுவான்: நானே உலகினின்று உயர்த்தப்பெற்றபின் அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விரலால் என்றால்,
கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது."

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
11 : 15-26

**அக்காலத்தில் :**

யேசு பேயை ஓட்டிவிடவே, மக்களுள் சிலர் : "பேய்கள் தலைவனை பெயல்செபூலைக்கொண்டே இவன் பேய் ஓட்டுகிறான்" என்றனர். வேறு சிலர் அவரைச் சோதிக்க, வானிலிருந்து அருங்குறி ஒன்று காட்டும்படி கேட்டனர்.

அவர்களுடைய எண்ணங்களை அறிந்த யேசுவோ, "தனக்கு எதிராகப் பிரியும் எந்த அரசும் பாழாய்ப்போம் ; வீடுகளும் ஒன்றின்மேல் ஒன்றாய் விழுந்தழியும். பெயல்செபூலைக்கொண்டு நான் பேய் ஓட்டுகிறேன் என்று சொல்லுகிறீர்களே ; தனக்கு எதிராகத் தானே பிரியும் சாத்தானின் அரசு எப்படி நிலைக்கும்? நான் பேய்களை ஓட்டுவது பெயல்செபூலைக் கொண்டு என்றால், உங்கள் மக்கள் யாரைக்கொண்டு ஓட்டுகிறார்கள்? எனவே, அவர்களே உங்களுக்குத் தீர்ப்பிடுவார்கள். நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விரலால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது. வலியவன் போர்க்கோலம் பூண்டு தன் அரண்மனையைப் பாதுகாத்தால், அவன் உடைமைகள் பத்திரமாக இருக்கும். அவனிலும் வலியவன் ஒருவன் எதிர்த்து வந்து அவனை வென்றால், அவன் நம்பியிருந்த போர்க் கருவிகளையெல்லாம் பறித்துக்கொண்டு கொள்ளைப் பொருளையும் பங்கிடுவான்.

என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான். என்னோடு சேகரிக்காதவன் சிதறடிக்கிறான்.

அசுத்த ஆவி ஒருவனை விட்டு வெளியேறியபின் வறண்ட இடங்களிலெல்லாம் சுற்றி அலைந்து, இளைப்பாற இடம் தேடிக் கண்டடையாமல் 'நான் விட்டு வந்த என் வீட்டிற்கே திரும்புவேன்' என்று சொல்லுகிறது. திரும்பி வந்து அவ்வீடு கூட்டி அழகுபடுத்தியிருப்பதைக் காண்கிறது. மீண்டும் சென்று தன்னிலும் பொல்லாத வேறு ஏழு பேய்களை அழைத்து வர, அவை அதனுள் நுழைந்து குடியிருக்கின்றன.

அம்மனிதனின் பின்னைய நிலை முன்னைய நிலையினும் மோசமாயிற்று" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அரிவாளை எடுத்து அறுங்கள், விளைச்சல் முற்றிவிட்டது

இறைவாக்கினர் யோவேல் ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 13-21

ஆண்டவர் கூறுவதாவது :

"மக்களினங்கள் யாவும் கிளம்பி வரட்டும், வந்து யோசப்பாத் பள்ளத்தாக்கில் சேரட்டும் ; ஏனெனில் சுற்றுப்புறத்து மக்களினங்கள் அனைத்தையும் தீர்ப்பிட நாம் அங்கே அமர்ந்திருப்போம். அரிவாளை எடுத்து அறுங்கள், விளைச்சல் முற்றிவிட்டது ; வந்து மிதியுங்கள், இரசம் பிழியும் ஆலை நிறைந்துள்ளது ; திராட்சை இரசத் தொட்டிகள் பொங்கி வழிகின்றன, அவர்கள் செய்த தீமை மிகுந்துபோயிற்று.

மக்களினங்கள், மக்கட் கூட்டங்கள் தீர்ப்பு வழங்கும் பள்ளத் தாக்கில் நிறைந்துள்ளன ; ஏனெனில் தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கில் ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது. கதிரவனும் நிலவும் இருண்டு போகின்றன, விண்மீன்கள் ஒளிமங்கி விடுகின்றன. சீயோனிலிருந்து ஆண்டவர் கர்ச்சனை செய்கிறார், எருசலேமில் தமது குரலை யெழுப்புகிறார், விண்ணும் மண்ணும் நடுங்குகின்றன ; ஆனால் ஆண்டவர் தம் மக்களுக்குப் புகலிடம், இஸ்ராயேல் மக்களுக்குக் காவலரண். "அப்போது, நமது பரிசுத்த மலையான சீயோனில் குடிகொண்டுள்ள உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே என்று அறிவீர்கள் ; எருசலேம் நகரம் பரிசுத்த இடமாயிருக்கும், அந்நியர் அதன் வழியாய் ஒருபோதும் செல்லமாட்டார்கள்.

அந்நாளில் - மலைகள் இனிமையான இரசம் சிந்தும், குன்றுகளிலிருந்து பால் வழிந்தோடும் ; யூதாவின் அருவிகளிலெல்லாம் நீரோடும், ஆண்டவரின் கோயிலிலிருந்து நீரூற்று ஒன்று கிளம்பும், சித்தீம் என்னும் பள்ளத்தாக்கில் பாயும். எகிப்து நாடு பாழாகும், இதுமேயா பாலைநிலமாகிவிடும் ; ஏனெனில் யூதாவின் மக்களை அநியாயமாய்த் துன்புறுத்தின, தங்கள் நாட்டில் மாசற்ற இரத்தத்தைச் சிந்தின. யூதாவோ என்றென்றும் மக்கள் குடியிருக்கும் இடமாகும், எருசலேமிலும் எல்லாத் தலைமுறைக்கும் மக்கள் வாழ்வர். அவர்கள் இரத்தத்திற்கு நாம் பழிவாங்குவோம், குற்றவாளிகளை நாம் தண்டியாமல் விடோம், ஆண்டவர் சீயோனில் குடிகொண்டிருப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 96 : 1-2, 5-6, 11-12 (பல்லவி : 12a)

பல்லவி : நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், பூவுலகு களிகூர்வதாக,
தீவுகள் எல்லாம் அகமகிழட்டும்.
2 மேகமும் இருளும் அவரைச் சூழ்ந்துள்ளன :
நீதியும் நேர்மையும் அவரது அரியணைக்கு அடிப்படை. பல்லவி

5 பூவுலகனைத்தையும் ஆளும் ஆண்டவர் முன்னே :
மலைகள் மெழுகுபோல் உருகுகின்றன :
6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன :
உலக மக்களனைவரும் அவரது மகிமையைக் காண்கின்றனர். பல்லவி

11 " நீதிமானுக்கு ஒளி எழுகின்றது :
நேரிய உள்ளத்தவருக்கு மகிழ்ச்சி பிறக்கின்றது."
12 நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள் :
அவரது திருப்பெயரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### நற்செய்தி வாசகம்

விசுவாசத்தின் வழியாய் அனைவரும் கடவுளின்
மக்களாய் இருக்கிறீர்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 22-29

சகோதரர்களே :

அனைத்துமே பாவத்தின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதாக மறைநூல் சாற்றுகிறது. வாக்களிக்கப்பட்ட அப்பேறு விசுவசிப்பவர்களுக்கு யேசு கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் கிடைக்கவேண்டுமென்று இவ்வாறு ஆயிற்று.

ஆனால் அந்த விசுவாசம் அளிக்கப்படுமுன், அவ்விசுவாசம் வெளிப்படும்வரை, சட்டத்தின் கீழ் அடைபட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். அவ்வாறு, விசுவாசத்தால் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்

ஆக்கப்படுவதற்குத் திருச்சட்டம் நம்மைக் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லும் வழித்துணையாய் அமைந்தது. இப்பொழுது விசுவாசம் அளிக்கப்பட்டதால், இனி நாம் வழித்துணைவனின் கண்காணிப்பில் இல்லை. ஏனெனில், கிறிஸ்து யேசுவின்மீது வைத்த விசுவாசத்தின் வழியாய் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்.

எவ்வாறெனில், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவை அணிந்துகொண்டீர்கள். இனி யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும் இல்லை; ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து யேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே. நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களாயின், ஆபிரகாமின் வழி வந்தவர்களாய் இருக்கிறீர்கள், வாக்குறுதியின்படி உரிமையாளர்களுமாய் இருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104 : 2-3, 4-5, 6-7 (பல்லவி : 8a)*

பல்லவி : ஆண்டவர் தம் உடன்படிக்கையை
என்றென்றும் நினைவு கூர்கின்றார்.

அல்லது : அல்லேலூயா.

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்; இசைக் கருவி மீட்டுங்கள் :
அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள்.
3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள் :
ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக. பல்லவி

4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள் :
அவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள்.
5 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள் :
அவருடைய புதுமைகளையும் அவர் உரைத்த
நீதித்தீர்ப்புகளையும் நினைவு கூருங்கள். பல்லவி

6 ஆண்டவருடைய ஊழியராகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே,
அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகிய யாக்கோபின் மக்களே,
7 ஆண்டவரே நம் கடவுள் :
அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. பல்லவி

அல்லேலூயா லூக். 11 : 28

அல்லேலூயா. கடவுள் வார்த்தையைக் கேட்டு,
கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உம்மைத் தாங்கிய வயிறு பேறுபெற்றது. கடவுள் வார்த்தையைக் கேட்போர் அதிலும் பேறுபெற்றவர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11 : 27-28

அக்காலத்தில் :

யேசு மக்களோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது, கூட்டத்திலிருந்த பெண் ஒருத்தி, "உம்மைத் தாங்கிய வயிறும், நீர் பாலுண்ட கொங்கைகளும் பேறுபெற்றவையே" என்று குரலெடுத்துக் கூறினாள்.

அவரோ, "ஆயினும் கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் அதிலும் பேறுபெற்றவர்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தெட்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் ஒரு விருந்து தயாரிப்பார், எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்துவிடுவார்.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 25:6-10அ

சேனைகளின் ஆண்டவர் இந்த மலைமேலே எல்லா மக்களுக்கும் விருந்தொன்று தயாரிப்பார்; அறுசுவை உணவும் சிறந்த பழரசமும், கொழுப்பு நிறைந்த இறைச்சியும், வடிகட்டிச் சுத்தம் செய்த திராட்சை இரசமும் அவ்விருந்திலே பரிமாறப்படும். எல்லா மக்களையும் மூடியிருக்கிற மூடியையும், எல்லா இனத்தவர் மேலிருக்கும் அழுகையின் முக்காட்டையும் இந்த மலையின்மேல் அவர் அகற்றிவிடுவார்.

என்றென்றைக்கும் சாவை அழித்து விடுவார், கடவுளாகிய ஆண்டவர் எல்லா முகங்களினின்றும் கண்ணீரைத் துடைத்துவிடுவார்; உலகத்தில் எங்குமே இராதபடி தம் மக்களின் நிந்தையை அகற்றி விடுவார்; ஏனெனில் ஆண்டவரே இதைச் சொல்லியிருக்கிறார்.

அந்நாளில் மக்கள் அனைவரும், “இதோ, இவரே நம் கடவுள், இவரையே நாம் எதிர்பார்த்திருந்தோம், இவரே நம்மை மீட்பார், இவரே ஆண்டவர், இவரையே நாம் எதிர்பார்த்திருந்தோம், இவர் தரும் மீட்பைக் குறித்து அகமகிழ்ந்து அக்களிப்போம்” என்பார்கள். ஏனெனில் ஆண்டவருடைய கைவன்மை இம் மலைமேல் அமரும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 22 : 1-3a, 3b-4, 5, 6 (பல்லவி : 6cd)

பல்லவி : ஆண்டவர் தம் இல்லத்தில்
ஊழிஊழிக் காலமாய் நான் குடியிருப்பேன்.

1 என் ஆயன் ஆண்டவர் : எனக்கென்ன குறைவு !
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார் :
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு
என்னைத் தம் நேரிய வழியில் செலுத்துகின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,
தீமையானதெதற்கும் அஞ்சேன் :
ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர் ;
உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர் :
என் தலைக்கு எண்ணெய் பூசினீர் :
என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும் :
என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடரும் :
ஆண்டவர் தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்;
ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன், பல்லவி

## இரண்டாம் வாசகம்

எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய
எனக்கு ஆற்றல் உண்டு.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 12-14, 19-20

சகோதரர்களே :

எனக்கு வறுமையிலும் வாழத்தெரியும், வளமையிலும் வாழத் தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவுற்று வாழவோ, குறைவுற்றுத் தாழவோ, எதற்கும் பயிற்சி பெற்றிருக்கிறேன்.

எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. ஆயினும் நான் பட்ட வேதனையில் நீங்கள் பங்குகொண்டதற்கு நன்றி.

மாட்சிமிக்க தம் செல்வத்திற்கேற்ப என் கடவுள் உங்கள் தேவைகள் அனைத்தையும் கிறிஸ்து யேசுவுக்குள் நிறைவாக்குவார். நம் தந்தையாகிய கடவுளுக்கு என்றென்றும் மகிமை உண்டாகுக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — எபே. 1 : 17-18 காண்

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால், எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளதென்று நாம் அறிந்துகொள்ளும்படி, நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக்கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்துக்கு அழையுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 22: 1-14

அக்காலத்தில்:

யேசு தலைமைக் குருக்களிடமும் மக்களின் மூப்பரிடமும் மீண்டும் உவமைகளில் உரைத்ததாவது :

"விண்ணரசு, தன் மகனுக்குத் திருமணம் செய்துவைத்த அரசனுக்கு ஒப்பாகும். அவன் ஊழியரை அனுப்பித் திருமணத்திற்கு அழைக்கப் பெற்றவர்களை வரச் சொன்னான். அவர்களோ வர விரும்பவில்லை.

மீண்டும் வேறு ஊழியரை அனுப்பி, 'இதோ! விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்; காளைகளும், கொழுத்த மிருகங்களும் அடித்து எல்லாம் ஏற்பாடாயிற்று. திருமணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பெற்றவருக்குச் சொல்லுங்கள்' என்றான். அழைக்கப்பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை; ஒருவன் தன் தோட்டத்திற்கும், வேறொருவன் வியாபாரத்துக்கும் போய்விட்டான். மற்றவர்களோ அவன் ஊழியரைப் பிடித்து அவமானப்படுத்திக் கொன்றனர்.

அதைக் கேட்ட அரசன் சினந்து, தன் படையை அனுப்பிக் கொலைகாரர்களைத் தொலைத்து அவர்கள் நகரையும் தீக்கிரையாக்கினான்.

பின்னர், தன் ஊழியரிடம், 'திருமண விருந்து ஏற்பாடாகிவிட்டது. அழைக்கப்பெற்றவர்களோ தகுதியற்றவர்களாயினர். எனவே, வீதிகளுக்குச் சென்று நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்துக்கு அழையுங்கள்' என்றான். அவன் ஊழியரும் வீதிகளுக்குச் சென்று தாங்கள் கண்ட நல்லவர் கெட்டவர் அனைவரையும் கூட்டிச் சேர்த்தனர். மன்றம் நிரம்ப அவர்கள் பந்தி அமர்ந்தனர்.

அமர்ந்தோரைப் பார்க்க அரசன் உள்ளே வந்தான். அங்கே திருமண உடையணியாத ஒருவனைக் கண்டான். அவனை நோக்கி, 'நண்பா, திருமண உடையின்றி எப்படி உள்ளே நுழைந்தாய்?' என்று கேட்க, அவன் பேசாதிருந்தான். பின்னர் அரசன் பணியாளரை நோக்கி, 'கையும் காலும் கட்டி இவனை வெளி இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்' என்று சொன்னான்.

ஏனெனில், அழைக்கப்பெற்றவர்களோ பலர்; தேர்ந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 22: 1-10

அக்காலத்தில்:

யேசு தலைமைக் குருக்களிடமும் மக்களின் மூப்பரிடமும் மீண்டும் உவமைகளில் உரைத்ததாவது:

"விண்ணரசு, தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்த அரசனுக்கு ஒப்பாகும். அவன் ஊழியரை அனுப்பித் திருமணத்திற்கு அழைக்கப் பெற்றவர்களை வரச் சொன்னான். அவர்களோ வர விரும்பவில்லை.

மீண்டும் வேறு ஊழியரை அனுப்பி, 'இதோ! விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்; காளைகளும், கொழுத்த மிருகங்களும் அடித்து எல்லாம் ஏற்பாடாயிற்று. திருமணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பெற்றவருக்குச் சொல்லுங்கள்' என்றான். அழைக்கப்பெற்றவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை; ஒருவன் தன் தோட்டத்திற்கும், வேறொருவன் வியாபாரத்துக்கும் போய்விட்டான். மற்றவர்களோ அவன் ஊழியரைப் பிடித்து அவமானப்படுத்திக் கொன்றனர்.

அதைக் கேட்ட அரசன் சினந்து, தன் படையை அனுப்பிக் கொலைகாரர்களைத் தொலைத்து அவர்கள் நகரையும் தீக்கிரையாக்கினான்.

பின்னர், தன் ஊழியரிடம், 'திருமண விருந்து ஏற்பாடாகி விட்டது. அழைக்கப்பெற்றிருந்தவர்களோ தகுதியற்றவர்களாயினர். எனவே, வீதிகளுக்குச் சென்று நீங்கள் காணும் எல்லாரையும் மணவிருந்துக்கு அழையுங்கள்' என்றான். அவ்வூழியரும் வீதிகளுக்குச் சென்று தாங்கள் கண்ட நல்லவர் கெட்டவர் அனைவரையும் கூட்டிச் சேர்த்தனர். மன்றம் நிரம்ப அவர்கள் பந்தி அமர்ந்தனர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## ஞாயிறு - 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஞானத்தோடு ஒப்பிட்டால் செல்வம் பெருக்கு ஒன்றுமேயில்லை எனக் கருதினேன்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 7-11

நான் மன்றாடிக் கேட்டேன், எனக்கு அறிவு வழங்கப்பட்டது; கடவுளிடம் வேண்டிக்கொண்டேன், ஞான உணர்வு எனக்குக் கிடைத்தது; செங்கோல்கள், அரியணைகளினும் மேலாக அதை மதித்தேன், அதனோடு ஒப்பிட்டால் செல்வப் பெருக்கும் ஒன்றுமேயில்லை எனக் கருதினேன். விலையுயர்ந்த மாணிக்கத்தையும் நான் அதற்கு ஒப்பிடவில்லை; ஏனெனில் பொன்னெல்லாம் அதன்முன் சிறு மணல்தான்; வெள்ளியும் அதனோடு ஒப்பிட்டால் களிமண்தான்.

உடல் நலம், அழகு இவற்றினும் மிகுதியாய் அதன்மேல் அன்பு கொண்டேன், ஒளியைவிட அதுவே சிறந்ததென்று தேர்ந்துகொண்டேன், ஏனெனில் அதனுடைய சுடர் என்றென்றைக்கும் குன்றாது.

அதனுடன் எனக்கு எல்லா நன்மைகளும் கிடைத்தன, அதன் கையால் அளவற்ற செல்வம் உண்டாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 89 : 12-13, 14-15, 16-17 (பல்லவி : 14)

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கப்பெருக்கைக் காட்டியருளும் : நாங்கள் களிகூருவோம்.

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு எங்கள் வாழ்நாளைக்
கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும். எவ்வளவு காலம் கோபம் கொள்வீர்?
உம் ஊழியர் மீது இரக்கம் வையும். பல்லவி

14 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும் :
எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
15 எங்களை நீர் தண்டித்த காலத்திற்கும், எங்கள் மீது துன்பங்கள்
வந்த காலத்திற்கும் ஏற்றவாறு எங்களை மகிழ்வித்தருளும். பல்லவி

16 உம் திருச்செயலை உம் அடியார்கள் காண்பார்களாக ;
அவர்களுடைய மக்களுக்கு உம் மகிமை விளங்குவதாக.
17 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக ;
எங்கள் வேலைகளைப் பயனுள்ளவையாக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுள் வார்த்தை உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது.

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 12-13

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது, இரு பக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவின் உள்ளாழத்தையும் ஆவியின் உள்ளாழத்தையும் ஊடுருவுகிறது ; மூட்டு, மூளைவரை எட்டுகிறது ; உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அவரது பார்வைக்கு மறைந்திருக்கும் படைப்பெதுவும் இல்லை. யாருக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டுமோ, அவரது கண்ணுக்கு அனைத்தும் வெளிப்படையாகவும் திறந்தவையாகவும் உள்ளன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

மத். 5 : 3

அல்லேலூயா

அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உனக்குள்ளதெல்லாம் விற்று, என்னைப் பின்செல்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 17-30

அக்காலத்தில் :

யேசு புறப்பட்டுப் போகும்போது, ஒருவன் ஓடிவந்து அவர் முன் முழந்தாளிட்டு, "நற்போதகரே, நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

யேசுவோ அவனை நோக்கி, "என்னை நல்லவர் என்பானேன்? கடவுள் ஒருவர் அன்றி நல்லவர் எவருமில்லை. கட்டளைகள் உனக்குத் தெரியுமே. கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, அநியாயம் செய்யாதே, தாய் தந்தையரைப் போற்று" என்றார். அதற்கு அவன், "போதகரே, சிறுவமுதல் இவை எல்லாம் கடைப்பிடித்து வருகிறேன்" என்றான்.

யேசு, அவனை உற்று நோக்கி, அவன்மீது அன்புகூர்ந்தார். "உனக்கு ஒன்று குறைவாயிருக்கிறது. போய் உனக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்பு வந்து என்னைப் பின்செல்" என்றார். அவன் இவ்வார்த்தையைக் கேட்டு, முகம் வாடி, வருத்தத்துடன் சென்றான். ஏனெனில், அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது.

யேசு சுற்றிலும் பார்த்துத் தம் சீடரிடம், "கடவுளின் அரசில் செல்வமுடையவர் நுழைவது எவ்வளவோ அரிது!" என்றார். சீடர், அவருடைய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டனர். யேசுவோ மீண்டும் அவர்களை நோக்கி, "பிள்ளைகளே, பணத்தை நம்பி இருப்பவர்கள் கடவுளின் அரசில் நுழைவது எவ்வளவோ அரிது! பணக்காரன் கடவுளின் அரசில் நுழைவதைவிட ஊசிக்காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

அவர்கள் இன்னும் அதிகமாக மலைத்துப்போய், "பின் யார்தான் மீட்புப் பெறமுடியும்?" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர். யேசு, அவர்களை உற்றுநோக்கி, "மனிதரால் இது முடியாது. ஆனால் கடவுளுக்கு அப்படியன்று. கடவுளால் எல்லாம் முடியும்" என்று சொன்னார்.

அப்பொழுது இராயப்பர் அவரிடம், "இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோமே" என்று சொன்னார்.

அதற்கு யேசு, "தன் வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலங்களையோ, என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறந்துவிடும் எவனும், இம்மையில் இன்னல்களோடுகூட, வீடு, சகோதர சகோதரி, தாய், பிள்ளை, நிலபுலங்களை நூறு மடங்காகவும், மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

10 : 17-27

அக்காலத்தில் :

யேசு புறப்பட்டுப்போகும்போது, ஒருவன் ஓடிவந்து அவர்முன் முழந்தாளிட்டு, "நற்போதகரே, நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

யேசுவோ அவனை நோக்கி, "என்னை நல்லவர் என்பானேன்? கடவுள் ஒருவர் அன்றி நல்லவர் எவருமில்லை. கட்டளைகள் உனக்குத் தெரியுமே. கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, அநியாயம் செய்யாதே, தாய் தந்தையரைப் போற்று" என்றார். அதற்கு அவன், "போதகரே, சிறுவமுதல் இவை எல்லாம் கடைப்பிடித்து வருகிறேன்" என்றான்.

யேசு, அவனை உற்று நோக்கி, அவன்மீது அன்புகூர்ந்தார். "உனக்கு ஒன்று குறைவாயிருக்கிறது. போய் உனக்குள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்பு வந்து என்னைப் பின்செல்" என்றார். அவன் இவ்வார்த்தையைக் கேட்டு, முகம் வாடி, வருத்தத்துடன் சென்றான். ஏனெனில், அவனுக்கு எராளமான சொத்து இருந்தது.

யேசு சுற்றிலும் பார்த்துத் தம் சீடரிடம், "கடவுளின் அரசில் செல்வமுடையவர் நுழைவது எவ்வளவோ அரிது!" என்றார். சீடர், அவருடைய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டனர். யேசுவோ மீண்டும் அவர்களை நோக்கி, "பிள்ளைகளே, பணத்தை நம்பி இருப்பவர்கள் கடவுளின் அரசில் நுழைவது எவ்வளவோ அரிது! பணக்காரன் கடவுளின் அரசில் நுழைவதைவிட ஊசிக்காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

அவர்கள் இன்னும் அதிகமாய் மலைத்துப்போய், "பின் யார்தான் மீட்புப் பெறமுடியும்?" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர். இயேசு அவர்களை உற்றுநோக்கி, "மனிதரால் இது முடியாது; ஆனால் கடவுளுக்கு அப்படியன்று. கடவுளால் எல்லாம் முடியும்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நாமான் கடவுளின் மனிதரிடம் திரும்பி வந்து ஆண்டவரை ஏற்றுக் கொண்டான்.*

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 5 : 14-17

அந்நாட்களில்:

நாமான் புறப்பட்டுச் சென்று கடவுளின் மனிதர் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடி யோர்தான் நதியில் ஏழுமுறை குளித்தான். இப்படிச் செய்ததால் அவனது உடல் நலம் பெற்று ஒரு சிறு குழந்தையின் உடலைப் போல் மாறினது; அவனும் முழுதும் தூய்மையானான்.

பின்பு அவன் தன் பரிவாரங்களோடு கடவுளின் மனிதரிடம் திரும்பி வந்தான். அவர்முன் நின்று, "இஸ்ராயேலின் கடவுளைத் தவிர வேறு கடவுள் அகிலத்திலும் இல்லை என இப்போது நிச்சயமாக அறிந்துகொண்டேன். ஆகையால், அடியேனுடைய காணிக்கைகளைத் தாங்கள் ஏற்க வேண்டும் என்று வேண்டுகிறேன்" என்றான்.

அதற்கு அவர், "நான் வழிபட்டுவரும் ஆண்டவர்மேல் ஆணை! நான் உன்னுடைய காணிக்கைகளில் எதையும் பெற்றுக்கொள்ளேன்" என மறுமொழி கூறினார். நாமான் எவ்வளவோ வற்புறுத்தியும் எலிசேயு அதற்கு உடன்படவில்லை.

அப்போது நாமான் அவரைப் பார்த்து, "உமது விருப்பப்படியே ஆகட்டும். ஆனால் இரு கோவேறு கழுதைகள் சுமக்கக் கூடிய அளவு மண்ணை இங்கிருந்து எடுத்துச் செல்ல உம் அடியானுக்கு அனுமதி தர வேண்டும் என்று உம்மை வேண்டுகிறேன். இனிமேல் உம் அடியான் அன்னிய தேவர்களுக்குத் தகனப்பலிகளையோ வேறு பலிகளையோ ஒரு போதும் செலுத்தப் போவதில்லை. நான் ஆண்டவருக்கு மட்டுமே பலியிடுவேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1, 2-3ab, 3cd-4 (பல்லவி : 2b காண்)

பல்லவி : **ஆண்டவர் தம் மீட்பை மக்களினத்தார் காண வெளிப்படுத்தினர்.**

1 **ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்:**
**வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.**
**அவரது வலக்கரமும் புனித புயமும்**
**அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன.** பல்லவி

2 **ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினர்:**
**மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.**
3 **தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்**
**தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார்.** பல்லவி

**மாநிலத்தின் எல்லைகள் யாவும்**
**நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.**
4 **வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் :**
**அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள்.** பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்துவோடு நிலைத்து நின்றால், அவரோடு அரசாள்வோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். 2 : 8-13

அன்புக்குரியவரே :

யேசு கிறிஸ்துவை நினைவில் வையும். அவர் தாவீதின் மரபில் தோன்றி, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். இதுவே நான் கூறும் நற்செய்தி. இந்த நற்செய்தியின் பொருட்டே நான் ஒரு குற்றவாளியைப் போல விலங்கிடப்படும் அளவுக்குத் துன்புறுகிறேன். ஆனால் கடவுளுடைய வார்த்தைக்கு விலங்கெதுவுமில்லை. தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து யேசுவிலுள்ள மீட்பையும் முடிவில்லா மகிமையையும், பெறவேண்டுமென்று அவர்களுக்காக நான் இவையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன்.

மேலும், "எழுந்து போ, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று" என்று அவனிடம் கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு, அப்போஸ்தலப் பணி புரியும் திரு அருளை நாம் கிறிஸ்து வழியாகவே பெற்றுக்கொண்டோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்தின் தொடக்கம் 1 : 1-7

இறை மக்களாகும்படி அழைக்கப்பட்டு, கடவுளின் அன்பைப் பெற்றிருக்கிற உரோமைக் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும், கிறிஸ்து யேசுவின் ஊழியனும், அப்போஸ்தலனாக அழைக்கப் பெற்றவனுமாகிய சின்னப்பன் யான் எழுதுவது: நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக. அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட நான், கடவுளின் நற்செய்தியை அறிவிக்கக் குறிக்கப்பட்டிருக்கிறேன். இந் நற்செய்தியை இறைவன் தம் வாக்குரைப்போர் வழியாய், பரிசுத்த நூல்களில் ஏற்கெனவே வாக்களித்திருந்தார்.

இந்நற்செய்தி அவருடைய மகனைப் பற்றியதாகும். இவர் மனிதன் என்ற முறையில் தாவீதின் வழிவந்தவர். இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்ததனால் பரிசுத்த ஆவியைப் பெற்ற நிலையில் கடவுளின் வல்லமை விளங்கும் இறைமகனாக ஏற்படுத்தப்பட்டார். இவரே நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து. புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு, அப்போஸ்தலப் பணிபுரியும் திரு அருளை இவருடைய பெயரின் மகிமைக்காக இவர் வழியாகவே பெற்றுக்கொண்டோம். அந்தப் புறவினத்தாரைச் சார்ந்த நீங்களும் இறைவனின் அழைப்புப் பெற்று, யேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 98 : 1, 2-3ab, 3cd-4 (பல்லவி : 2a)

பல்லவி: **ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் :
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.
அவரது வலக்கரமும் புனித புயமும்
அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் :
மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும்
நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் :
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

நாம் அடிமைப் பெண்ணின் மக்களல்ல;
அடிமையல்லாத மனைவியின் மக்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 22-24, 26-27, 31 5 : 1

சகோதரர்களே :

ஆபிரகாமுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர், ஒருவன் அடிமைப் பெண்ணிடம் பிறந்தவன், மற்றவன் அடிமையல்லாத மனைவியிடம் பிறந்தவன் என்று எழுதியுள்ளது. ஆனால் அடிமைப் பெண்ணின் மகன் இயல்பு முறைப்படி பிறந்தவன். அடிமையல்லாத மனைவியின் மகனோ வாக்குறுதியின் பயனாய்ப் பிறந்தவன்.

இது ஓர் உருவகம்: இந்தப் பெண்கள் இருவரும் இரண்டு உடன்படிக்கைகளைக் குறிக்கின்றனர்; ஒன்று, சீனாய் மலையில் செய்யப்பட்ட உடன்படிக்கை. அதனால் அடிமைத்தனத்துக்கெனப் பிள்ளைகள் பிறக்கின்றனர்; ஆகாரால் குறிக்கப்படுவது இதுவே. விண்ணக எருசலேமோ

அடிமையன்று; அந்த எருசலேம் நமக்கு அன்னை. ஏனெனில், 'பிள்ளை பெறாத மலடியே மகிழ்வாயாக! பேறுகால வேதனையுறாதவளே, துள்ளிக் குதித்து ஆர்ப்பரிப்பாயாக! வாழ்க்கைப்பட்டவளின் மக்களைவிட, கைவிடப் பட்டவளின் மக்களே மிகப் பலர்' என்று எழுதியுள்ளது.

ஆகவே, சகோதரர்களே, நாம் அடிமைப் பெண்ணின் மக்கள் அல்ல; அடிமை அல்லாத மனைவியின் மக்கள். கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வு நமக்கு அளித்தார். அதிலே நிலைத்திருங்கள், அடிமைத்தனத்தின் நுகத்தைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 112 : 1-2, 3-4, 5a & 6-7 (பல்லவி : 2 காண்)

பல்லவி : **ஆண்டவர் திருப்பெயர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவதாக.**

1 ஆண்டவர்தம் ஊழியர்களே, அவரைப் போற்றுங்கள் :
அவருடைய திருப்பெயரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவருடைய திருப்பெயர் வாழ்த்தப் பெறுவதாக :
இன்றும் என்றும் வாழ்த்தப் பெறுவதாக. பல்லவி

3 கீழ்த்திசைமுதல் மேற்றிசைவரை ஆண்டவருடைய
திருப்பெயர் போற்றப்படுவதாக.
4 மக்கள் இனங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர் :
வானங்களையும்விட உயர்ந்தது அவரது மாட்சிமை. பல்லவி

5,6 உன்னதத்தில் வீற்றிருக்கும் நம் ஆண்டவராகிய
கடவுளைப்போல் வேறு யார் உண்டு !
7 வறியவனைத் தரையிலிருந்து தூக்கி விடுகிறார் :
ஏழையைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகிறார். பல்லவி

அல்லேலூயா

சங். 94 : 8b, 7b

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்த வேண்டாம் :
மாறாக, ஆண்டவர் குரலுக்குச் செவிகொடுங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியேயன்றி வேறெந்த அருங்குறியும் இத்தலைமுறைக்கு அளிக்கப்படாது.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11 : 29-32

அக்காலத்தில் :

கூட்டம் பெருகப் பெருக, யேசு கூறலானார் : "இத்தலைமுறை பொல்லாத தலைமுறை. அருங்குறி ஒன்று கேட்கிறது. யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியேயன்றி வேறெந்த அருங்குறியும் அதற்கு அளிக்கப்படாது. எவ்வாறு யோனாஸ் நினிவே மக்களுக்கு அருங்குறியாய் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் இத்தலைமுறைக்கு அருங்குறியாய் இருப்பார். தீர்வையின்போது தென்னாட்டு அரசி இத்தலைமுறையின் மக்களுக்கு எதிராக எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வாள். ஏனெனில், சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க உலகின் கடையெல்லையிலிருந்து வந்தாள். சாலொமோனிலும் மேலானது இதோ! இங்குள்ளது. தீர்வையின் போது, நினிவே மக்கள் இத்தலைமுறைக்கு எதிராக எழுந்து இதனைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில், அவர்கள் யோனாஸ் உரைத்த தூதைக்கேட்டு மனந்திரும்பினார்கள். யோனாசிலும் மேலானது இதோ! இங்குள்ளது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

## முதல் வாசகம்

*மனிதர் கடவுளை அறிந்திருந்தும், கடவுளுக்கு உரிய மகிமை அளிக்கவில்லை.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 16-25

நற்செய்தியைப்பற்றி நான் நாணமடையமாட்டேன். ஏனெனில், அது மீட்பளிப்பதற்குக் கடவுளின் வல்லமையாய் உள்ளது. முதலில் யூதனுக்கும், அடுத்துக் கிரேக்கனுக்கும், விசுவசிக்கும் ஒவ்வொருவனுக்குமே

அது அங்ஙனம் உள்ளது. ஏனெனில், 'விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்பட்டவனே வாழ்வு பெறுவான்' என எழுதியுள்ள தன்றோ? இவ்வாறு ஏற்புடையவர்களாக்கும் இறையருட் செயல் முறை அந்த நற்செய்தியிலேயே வெளிப்படுகிறது. தொடக்கமுதல் இறுதிவரை அது விசுவாசத்தினாலேயே ஆகும்.

இறைப்பற்று இல்லாத மனிதர்களின் ஒழுக்கக்கேட்டின் மீதெல்லாம் கடவுளின் சினம் விண்ணினின்று வெளிப்படுகிறது; ஏனெனில், இவர்கள் தங்கள் ஒழுக்கக்கேட்டினால் உண்மையை ஒடுக்கிவிடுகின்றனர். கடவுளைப் பற்றி அறியக் கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாய் விளங்கிற்று. அதைக் கடவுளே அவர்களுக்குக் காட்டித் தெளிவுறுத்தினார். ஏனெனில் கட்புலனாகாத அவருடைய பண்புகளும், அவருடைய முடிவில்லா வல்லமையும், கடவுள் தன்மையும் உலகம் உண்டானதுமுதல் அவருடைய படைப்புகளிலேயே அறிவுக்குப் புலனாகின்றன. ஆகவே அவர்கள் சாக்குச் சொல்வதற்கு வழியில்லை. ஏனெனில், அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்கு உரிய மகிமையை அவருக்கு அளிக்கவுமில்லை; நன்றி செலுத்தவுமில்லை. மாறாக, தங்கள் வீணான சிந்தனைகளில் அறிவிழந்தனர். அவர்களுடைய உணர்வில்லா உள்ளம் இருண்டு போயிற்று. தங்களை ஞானிகள் எனப் பிதற்றும் அவர்கள் வெறும் மடையர் ஆயினர். அழிவில்லாக் கடவுளின் மாட்சிமையை விடுத்து, அதற்குப் பதிலாக அழிந்துபோகும் மனிதர், பறவைகள், விலங்குகள், ஊர்வன ஆகியவற்றின் சாயலான உருவங்களை ஏற்று வழிபட்டனர்.

ஆகவே, அவர்களுடைய உள்ளத்து இச்சைகளின்படி அவர்களைக் கடவுள் அசுத்தத்திற்குக் கையளித்து அவர்கள் ஒருவரோடொருவர் தங்கள் உடல்களை இழிவுபடுத்த விட்டுவிட்டார். ஏனெனில், அவர்கள் கடவுளின் உண்மையைப் பொய்யாக மாற்றினர்: படைப்புப் பொருட்களுக்கு வழிபாடும் ஊழியமும் செய்தனர்; படைத்தவரை மறந்தனர்; அவரே என்றென்றும் போற்றுதற்குரியவர். ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 18 : 1-2, 3-4 (பல்லவி : 1a)*

பல்லவி : வானங்கள் கடவுளின் மாட்சியைச் சாற்றும்.

1 வானங்கள் கடவுளின் மாட்சிமையைச் சாற்றும் :
வானமண்டலம் அவரது கைத்திறனை எடுத்துரைக்கும்.
2 பகல்தோறும் பகல் அதைத் தெரிவிக்கிறது ; பல்லவி
இரவுதோறும் இரவு அதை அறிவிக்கிறது.

3 அவற்றிற்குச் சொல்லுமில்லை, பேச்சுமில்லை :
அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை.
4 எனினும், அவற்றின் குரல் உலகெல்லாம் கேட்கிறது :
அவை விடுக்கும் செய்தி உலகின் எல்லைவரை எட்டுகிறது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

விருத்தசேதனம் பயனற்றது.
தேவைப்படுவது அன்புவழியாய்ச் செயலாற்றும் விசுவாசமே.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6

சகோதரர்களே :

கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வு நமக்கு அளித்தார். அதிலே நிலைத்திருங்கள், அடிமைத்தனத்தின் நுகத்தைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். சின்னப்பனாகிய நான் உங்களுக்குச் சொல்வது : நீங்கள் விருத்தசேதனம் செய்துகொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்குப் பயனே இல்லை. விருத்தசேதனம் செய்துகொள்ளும் ஒவ்வொருவனுக்கும், மீளவும் நான் எச்சரித்து வலியுறுத்துவது : அவ்வாறு செய்பவன் யூதச் சட்டம் முழுவதையும் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவன் ஆவான். அச்சட்டத்தால் இறைவனுக்கு ஏற்புடையவராகப் பார்க்கும் நீங்கள் கிறிஸ்துவுடன் உறவற்றுப் போய்விட்டீர்கள் ; அருளாட்சியினின்று நிலை பெயர்ந்துவிட்டீர்கள்.

நாமோ விசுவாசத்தால் இறைவனுக்கு ஏற்புடையவராக்கப் படுவோம் என்னும் நம்பிக்கை நிறைவேறுமென ஆவலோடு காத்திருக்க தேவ ஆவி நம்மைத் தூண்டுகிறார். கிறிஸ்து யேசுவுக்குள் வாழ்கிறவர்களுக்கு விருத்தசேதனமும் பயனற்றது ; விருத்தசேதனமின்மையும் பயனற்றது. ஒன்றும் செய்ய இயலாது. தேவைப்படுவது அன்பின் வழியாய்ச் செயலாற்றும் விசுவாசமே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 41, 43, 44, 45, 47, 48 (பல்லவி : 41 a)

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை
என்மீது பொழிந்தருளும்.

41 ஆண்டவரே, உம் இரக்கப்பெருக்கத்தை என்மீது பொழிந்தருளும் :
உமது வாக்குறுதியின்படி எனக்கு உதவியளித்தருளும். பல்லவி

43 என் வாயினின்று உண்மையை எடுத்துவிடாதேயும் : ஏனெனில்
உம் முறைமைகளின்மீது நான் நம்பிக்கை வைத்துள்ளேன். பல்லவி

44 உமது திருச்சட்டத்தை நான் எப்போதும் கடைப்பிடிப்பேன்,
என்றென்றும் முடிவின்றி அதைக் காப்பேன். பல்லவி

45 அகன்றதொரு பாதையில் நான் நடப்பேன் : ஏனெனில், உம்
கட்டளைகளைப் பற்றி நான் கருத்தாய் இருக்கிறேன். பல்லவி

47 உம் கற்பனைகளில் நான் இன்பம் கொள்வேன் :
அவற்றை நேசிக்கிறேன். பல்லவி

48 உம் கற்பனைகளை நோக்கி என் கைகளைக் கூப்புவேன் ,
உம் நியமங்களை நான் தியானிப்பேன். பல்லவி

அல்லேலூயா எபி. 4 : 12

அல்லேலூயா. இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது ;
உள்ளத்தின் கருத்துகளையும் எண்ணங்களையும்
சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

பிச்சை கொடுங்கள், உங்களுக்கு எல்லாம் தூயதாய் இருக்கும்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 37-41

அக்காலத்தில் :

யேசு பேசிக்கொண்டிருக்கையில் பரிசேயன் ஒருவன் தன்னோடு உண்பதற்கு அவரை அழைத்தான். யேசுவும் வந்து அமர்ந்தார். உண்பதற்கு முன்னால் கைகால் கழுவாததைக் கண்டு பரிசேயன் வியப்படைந்தான்.

ஆண்டவர் அவனை நோக்கி, "நீங்களோ, பரிசேயரே கிண்ணத்தையும், உணவுப் பாத்திரத்தையும் வெளிப்புறத்தில் தூயதாக்குகிறீர்கள். உங்கள் உள்ளத்திலோ, கொள்ளையும் தீமையும் நிறைந்துள்ளன. அறிவிலிகளே, வெளிப்புறத்தை உண்டாக்கியவரே உட்புறத்தையும் உண்டாக்கினார் அன்றோ? பாத்திரத்தில் உள்ளதைப் பிச்சைகொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு எல்லாம் தூயதாய் இருக்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அவனவன் செயல்களுக்கேற்ப, முதலில் யூதனுக்கும், அடுத்துக் கிரேக்கனுக்கும், கைம்மாறு செய்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *2 : 1-11*

பிறருக்குத் தீர்ப்பிடும் மனிதா, நீ யாராயினும் சரி, சாக்குச் சொல்லுவதற்கு வழியில்லை. ஏனெனில், பிறருக்குத் தீர்ப்பிடுவதால் நீ உனக்கு எதிராகவே தீர்ப்புக் கூறுகிறாய்; தீர்ப்புக்கூறும் நீயே அவற்றைச் செய்கிறாயே! இத்தகைய செயல்களைச் செய்வோருக்குக் கடவுள் இடும் தீர்ப்பு நீதி வழுவாதது என்று நமக்குத் தெரியும்.

இவற்றைச் செய்பவர்களின்மேல் தீர்ப்புக்கூறும் நீயும் இவற்றையே செய்து வருகிறாய். நீ மட்டும் கடவுளின் தீர்ப்புக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என நினைக்கிறாயா? அல்லது, அவரது அளவற்ற பரிவையும் சகிப்பையும் பொறுமையையும் புறக்கணிக்கின்றாயா? கடவுள் பரிவு காட்டுவது உன்னை மனந்திரும்பத் தூண்டுவதற்கே என்பதை அறியாயோ?

உன் முரட்டுத்தனம் உன்னை மனந்திரும்ப விடவில்லை; ஆகையால், கடவுளின் சினமும் நீதித் தீர்ப்பும் வெளிப்படவேண்டிய நாளில் உன்மேல் விழப்போகும் தண்டனையை நீ சேர்த்து வைக்கின்றாய். அவர் ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயல்களுக் கேற்பக் கைம்மாறு தருவார். நற்செயல் செய்வதில் உறுதி தளராமல், மகிமையும் மாண்பும் அழியாமையும் தேடுவோருக்கு முடிவில்லாத வாழ்வை வழங்குவார். ஆனால், கட்சி மனப்பான்மை உள்ளவர்களாய், உண்மைக்குப் பணியாமல், அநியாயத்திற்குப் பணிபவர்களின் தலைமேல் அவருடைய சினமும் வெகுளியும் வந்து விழும்.

முதலில் யூதனுக்கும், அடுத்துக் கிரேக்கனுக்கும், தீமை செய்யும் எந்த மனிதனுக்குமே வேதனையும் நெருக்கடியும் உண்டாகும். அவ்வாறே, முதலில் யூதனுக்கும், அடுத்துக் கிரேக்கனுக்கும், நன்மை செய்யும் அனைவருக்குமே, மகிமையும் மாண்பும் அமைதியும் கிடைக்கும்; ஏனெனில், ஆளுக்கொரு நீதி என்பது கடவுளிடம் இல்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 61 : 1-2, 5-6, 8 (பல்லவி : 12b)

பல்லவி : ஆண்டவரே, அவனவன் செயலுக்கேற்ப
நீர் கைம்மாறு அளிப்பீர்.

1 கடவுளிடம்தான் என் ஆன்மா சாந்தி கொள்கிறது:
அவரிடமிருந்தே எனக்கு மீட்பு வருகிறது.
2 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார்:
எந்நாளும் நான் அசைவுறேன். பல்லவி

5 நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள்;
ஏனெனில், நான் எதிர்பார்ப்பது அவரிடமிருந்தே வருகிறது.
6 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார்:
நான் அசைவுறேன். பல்லவி

8 நாட்டு மக்களே, எந்நாளும் அவர்மீது நம்பிக்கை வையுங்கள்;
உங்கள் உள்ளத்திலுள்ளதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்:
கடவுளே நமக்கு அடைக்கலம். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கிறிஸ்துவுக்கு உரியவர்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடு சிலுவையில் அறைந்துவிட்டார்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 18-25

சகோதரர்களே:

நீங்கள் தேவ ஆவியினால் இயக்கப்பட்டால் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கமாட்டீர்கள்.

ஊனியல்பின் செயல்கள் யாவர்க்கும் தெரிந்தவையே. அவை பின்வருமாறு: கெட்ட நடத்தை, அசுத்தம், காமவெறி, சிலைவழிபாடு, பில்லிசூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சினம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை. இத்தகையவற்றில் ஈடுபடுவோர்க்குக் கடவுளின் அரசு உரிமையாகாது என்று நான் ஏற்கெனவே சொன்னதை இப்போதும் சொல்லி எச்சரிக்கிறேன்.

ஆனால் தேவ ஆவி விளைவிக்கும் பலன்களாவன: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம். இவையுள்ள இடத்தில் சட்டம் எத்தடையும் விதிப்பதற்கு இடமில்லை. கிறிஸ்து யேசுவுக்கு உரியவர்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். தேவ ஆவியே நமக்கு உயிர் ஊட்டுபவராயின், அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடப்போமாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1 : 1-2, 3, 4 & 6 (பல்லவி : அரு. 8 : 12)

பல்லவி : ஆண்டவரே, உம்மைப் பின்செல்பவன்
உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன்,
பாவிகளின் வழியில் செல்லாதவன்,
பழிக்காரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய்,
அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்
தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்;
அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒருநாளுமிராது:
காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்:
தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன :
நானும் அவற்றை அறிவேன் ;
அவையும் என்னைப் பின்தொடர்கின்றன,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு !
சட்டவல்லுநரே, உங்களுக்கும் ஐயோ கேடு!

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 42-46

அக்காலத்தில் : யேசு கூறியதாவது :

"பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு ! ஏனெனில், நீங்கள் புதினா, சதாப்பு, காய்கறி முதலியவற்றுள் பத்திலொரு பாகம் செலுத்துகிறீர்கள். ஆனால், நீதியையும் கடவுளன்பையும் பொருட்படுத்துவதில்லை. இவற்றைத் தான் கடைப்பிடித்திருக்கவேண்டும்; அவற்றையும் விடலாகாது.

பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு ! ஏனெனில் செபக்கூடங்களில் முதல் இருக்கைகளையும், பொது இடங்களில் வணக்கத்தையும் விரும்புகிறீர்கள். உங்களுக்கு ஐயோ கேடு ! ஏனெனில், அடையாளம் தெரியாத சவக்குழிகள்போல் இருக்கிறீர்கள். அவற்றை அறியாமல் மனிதர் அவற்றின்மேல் நடந்துபோகிறார்கள் " என்றார்.

சட்ட வல்லுநருள் ஒருவன் அவரிடம், "போதகரே, இப்படிப் பேசி எங்களையும் அவமானப்படுத்துகிறீர் " என்றான்.

அவர், கூறியதாவது : "சட்ட வல்லுநரே, உங்களுக்கும் ஐயோ கேடு ! ஏனெனில், தாங்கமுடியாத சுமையை மக்கள்மேல் சுமத்துகிறீர்கள். நீங்களோ, அச்சுமையை ஒரு விரலாலும் தொடுவதில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாகிறான்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 21-30a

சகோதரர்களே :

இப்பொழுதோ கடவுளின் திருவருட் செயல்முறை திருச்சட்டத்தின் சார்பின்றியே வெளியாக்கப்பட்டுள்ளது: அச் செயல்முறையையே திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்தனர். இத்திருவருட்செயல் முறைப்படி யேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் வழியாய்க் கடவுள் செயலாற்றுகின்றார். விசுவசிக்கும் அனைவருக்காகவுமே இப்படிச் செயலாற்றுகிறார். இதில் இன வேறுபாடே இல்லை. ஏனெனில், எல்லாருமே பாவம் செய்தனர் : எல்லாருமே கடவுளது மாட்சிமையின் சாயலை இழந்து போயினர். ஆனால் இறைவன் அருளால் அவர்கள் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகிறார்கள்; கிறிஸ்து யேசு நிறைவேற்றிய விடுதலைச் செயலின் வாயிலாய் அங்ஙனம் ஆக்கப்படுகிறார்கள். விசுவாசத்தின் வழியாய்ச் செயல்படும் பரிகாரச் சாதனமாக அவரைக் கடவுள் இரத்தப் பலியாக்கினார். கடந்த காலத்தில் தம்முடைய திருவருட் செயல்முறையைக் காட்ட விரும்பிய கடவுள் கடந்த காலத்தில் பொறுமையாய் இருந்து, மனிதர் செய்த பாவங்களைத் தண்டிக்காமல் விட்டார். இக்காலத்தில், அத்திருவருட் செயல்முறையைக் காட்ட விரும்பி, அவர் அருள் மிக்கவராகவும், யேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடையவன் ஆகும்படி அருள் அளிப்பவராகவும் விளங்குகிறார்.

அப்படியிருக்க, பெருமை பாராட்ட இடமேது? இடமில்லை. எந்த அடிப்படையில் இடமில்லை? செயல்களின் அடிப்படையிலா? இல்லை; விசுவாசத்தின் அடிப்படையில் என்க. ஏனெனில், திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகிறான் என்பது என் கருத்து. கடவுள் யூதர்களுக்கு மட்டுமே கடவுளா? புறவினத்தாருக்கும் கடவுள் அல்லரா? ஆம், புறவினத்தாருக்கும் அவர் கடவுளே. ஏனெனில், விருத்தசேதனம் பெற்றவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனம் பெறாதவர்களை விசுவாசத்தின் வழியாகவும், தமக்கு ஏற்புடையவர்களாக்கும் கடவுள் ஒருவரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 129 : 1-2, 3-4, 5-6a (பல்லவி : 7)

பல்லவி : ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது :
அவருடைய மீட்புத்துணை பொங்கி வழிகின்றது.

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக் கூவி அழைக்கிறேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவிசாய்த்தருளும் :
என் வேண்டுதலின் குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும். பல்லவி

3 ஆண்டவரே, யாம் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில்,
உமக்குமுன் யார் நிற்கமுடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு,
நீர் பாவங்களை மன்னிக்கிறீர். பல்லவி
5 ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன் :
அவரது வாக்குறுதியில் என் ஆன்மா நம்பிக்கை கொண்டுள்ளது.
6 என் ஆன்மா ஆண்டவரை எதிர்நோக்குகின்றது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

உலகம் உருவாகுமுன்னரே அவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்துகொண்டார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்தின் தொடக்கம் 1 :-1-10

கிறிஸ்து யேசுவுக்குள் வாழ்கின்ற விசுவாசிகளான எபேசு நகரத்து இறைமக்களுக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனான சின்னப்பன் யான் எழுதுவது: நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக!

நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி! அவர் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும், தேவ ஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தும் பொழிந்து, நமக்கு ஆசி அளித்தார். எவ்வாறெனில், நாம் அவரது திருமுன் பரிசுத்தரும் மாசற்றவருமாய் இருக்குமாறு, உலகம் உருவாகு முன்னரே அவர் நம்மைக்

கிறிஸ்துவுக்குள் தேர்ந்துகொண்டார். அவர் திருவுள விருப்பத்திற்கேற்ப, தம் அன்பு மகனுக்குள் நமக்கருளிய அருளின் மாட்சிமை புகழ்பெற்று விளங்க, யேசுகிறிஸ்துவின் வழியாகவே, நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார்.

அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய், இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்பு அடைகிறோம். குற்றங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறோம். அந்த அருளை முழு ஞானமாகவும் அறிவுத்திறனாகவும், நம்மில் பெருகச் செய்தார். தம் திருவுளத்தின் மறைவான திட்டத்தை நமக்கு அறிவித்தார். கால நிறைவில் நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடாக முதலிலிருந்தே கிறிஸ்துவுக்குள் அத்தயவான திட்டத்தை வகுத்து வைத்திருந்தார். விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டும் என்பதே அத்திட்டம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1, 2-3ab, 3cd-4, 5-6 (பல்லவி : 2a)

பல்லவி : **ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் :
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.
அவரது வலக்கரமும் புனித புயமும்
அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் :
மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும்
நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் :
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்,
வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.
6 எக்காளமும் கொம்பும் ஊதி
ஆண்டவராகிய அரசரின் திருமுன் களிகூருங்கள். பல்லவி

அரு. 14:6

**அல்லேலூயா.** **ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும், உண்மையும் உயிரும்: என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**ஆபேலுடைய இரத்தம்முதல் சக்கரியாசின் இரத்தம்வரை சிந்தப்பட்ட இறைவாக்கினரின் இரத்தத்துக்காகக் கணக்குக் கேட்கப்படும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11:47-54

அக்காலத்தில் யேசு கூறியதாவது:

“இறைவாக்கினர்களுக்குக் கல்லறை கட்டுகிற உங்களுக்கு ஐயோ கேடு! உங்கள் முன்னோரே அவர்களைக் கொன்றவர்கள். உங்கள் முன்னோரின் செயல்களுக்கு நீங்களும் உடன்படுகிறீர்கள் என்பதற்கு இவ்வாறு சாட்சி அளிக்கிறீர்கள். ஏனெனில், உங்கள் முன்னோர் அவர்களைக் கொலை செய்தனர்; நீங்களோ அவர்களுக்குக் கல்லறை கட்டுகிறீர்கள்.

அதனால்தான் கடவுளின் ஞானம் இங்ஙனம் கூறியது: ‘இறைவாக்கினர்களையும் அப்போஸ்தலர்களையும் அவர்களிடம் அனுப்புவேன். அவர்களுள் சிலரைக் கொல்லுவார்கள்; சிலரைத் துன்புறுத்துவார்கள்.’ ஆபேலுடைய இரத்தம்முதல், பீடத்திற்கும் புனித இல்லத்திற்கும் இடையே மடிந்த சக்கரியாசின் இரத்தம்வரை, உலகம் தோன்றியது முதல், சிந்தப்பட்ட இறைவாக்கினர்கள் அனைவரின் இரத்தத்திற்காக இத்தலைமுறையிடம் கணக்குக் கேட்கப்படும். ஆம், உங்களுக்குச் சொல்லுகிறேன்: இத்தலைமுறையிடம் கணக்குக் கேட்கப்படும்.’

சட்ட வல்லுநரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், அறிவின் திறவுகோலைக் கைப்பற்றிக்கொண்டு நீங்களும் நுழையவில்லை; நுழைவோரையும் தடுத்தீர்கள்.” அவர் அங்கிருந்து புறப்பட்டபோது, பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவர்மீது சீறி எழுந்து, அவருடைய பேச்சில் குற்றம் கண்டுபிடிக்கும்படி சூழ்ச்சியாகக் கேள்விகள் பல கேட்கலாயினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார் ; அதனால் அவருக்கு ஏற்புடையவரென மதிக்கப்பட்டார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 1-8

சகோதரர்களே :

நம் இனத்தின் தந்தையாகிய ஆபிரகாமைப் பற்றி என்ன சொல்வோம்? ஆபிரகாம், செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவராகியிருந்தால், பெருமை பாராட்ட அவருக்கு இடமுண்டு ; ஆனால் கடவுளின் முன் பெருமை பாராட்ட இடமில்லை. ஏனெனில், மறைநூல் கூறுவதென்ன? 'ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார் ; அதனால் கடவுள் அவரைத் தமக்கு ஏற்புடையவரென மதித்தார்.'

வேலை செய்தவன் வாங்கும் கூலி நன்கொடை என்று மதிக்கப்படுவதில்லை, உரிமை என்றே மதிக்கப்படும். உரிமை பாராட்டுதற்குரிய செயல் புரியாத ஒருவன், பாவியைத் தமக்கு ஏற்புடையவன் ஆக்குபவர்மீது விசுவாசம் வைத்தால், அவ்விசுவாசத்தை முன்னிட்டு இறைவன் அவனை ஏற்புடையவன் என மதிக்கிறார். அவ்வாறே, செயல்கள் இன்றியே, தமக்கு ஏற்புடையவன் எனக் கடவுள் மதிக்கும் மனிதன் பேறுபெற்றவன் என்று தாவீது கூறுகிறார். அவர் சொல்லுவது :

'யாருடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டனவோ, யாருடைய பாவங்கள் அகற்றப்பட்டனவோ அவர்கள் பேறு பெற்றோர். யாருடைய பாவத்தை ஆண்டவர் கணிப்பதில்லையோ அவன் பேறு பெற்றோன்.'

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 31 : 1-2, 5, 11 (பல்லவி : 7 காண்)

பல்லவி
ஆண்டவரே, நீரே எனக்கு அடைக்கலமாய் உள்ளீர்:
உம் மீட்பால் வருகின்ற மகிழ்வால் என்னை அணைக்கின்றீர்.

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறுபெற்றவன் :
எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறு பெற்றவன்.
2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ
அவன் பேறு பெற்றவன் :
யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறுபெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன் :
என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்தேனில்லை.
" ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக்கொடுக்கிறேன் " என்றேன் :
பல்லவி

11 வாரீர் மக்களே, நான் சொல்லுவதைக் கேளீர் :
உங்களுக்குத் தேவபலத்தைக் கற்பிப்பேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கிறிஸ்துவின்மேல் முதன்முதல் நம்பிக்கை வைத்தோம்;
பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொண்டீர்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 11-14

சகோதரர்களே :

தம் திருவுளக் கருத்திற்கேற்ப அனைத்தையும் செய்து முடிக்கும் இறைவனின் திட்டப்படி, முன் குறிக்கப்பட்ட நாங்கள் கிறிஸ்துவுக்குள்ளே இறைவனின் உரிமைப் பொருளானோம். இவ்வாறு, கிறிஸ்துவின் மேல் முதன் முதல் நம்பிக்கைவைத்த நாங்கள் தம்முடைய மாட்சிமைக்குப் புகழ்ச்சியாய் விளங்க வேண்டுமென, இறைவன் விரும்பினார். நீங்களும், உங்கள் மீட்பின் நற்செய்தியாகிய உண்மை வார்த்தையைக் கேட்டு, விசுவாசம் கொண்டு, வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் முத்திரையைக் கிறிஸ்துவுக்குள்ளே பெற்றுக்கொண்டீர்கள். நாம் மீட்படைந்து,

**இறைவனின் உரிமைப் பொருளாவதற்கென தேவ ஆவியே நாம் பெறப் போகும் உரிமைப் பேற்றின் அச்சாரமாய் இருக்கிறார். இவ்வாறே இறைவனுடைய மாட்சிமையின் புகழ் விளங்க வேண்டியிருந்தது.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 32 : 1-2, 4-5, 12-13 (பல்லவி : 12b)*

பல்லவி :

**ஆண்டவர் தம் உரிமைப் பொருளாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.**

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள் :
நேர்மனத்தோர் அவரைப் புகழ்வது தகுமே.
2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் :
பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள். பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்,
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும்
மக்கள் இனம் பேறு பெற்றது :
13 தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த
மக்கள் பேறு பெற்றவர்கள்.
வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார் :
ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார். பல்லவி

## அல்லேலூயா

சங். 32 : 22

**அல்லேலூயா. உம்மை நாங்கள் நம்பியிருக்கும் அளவுக்கு, ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளது.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** 12 : 1-7

அக்காலத்தில் :

ஒருவரையொருவர் மிதித்துக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்கையில் அவர் தம் சீடருக்குக் கூறியதாவது : "பரிசேயரின் வெளிவேடமாகிய புளிப்பு மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வெளிப்படாதபடி மறைந்திருப்பது ஒன்றுமில்லை ; அறியப்படாதபடி ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை. ஆதலின், நீங்கள் இருளில் கூறியதெல்லாம் ஒளியில் கேட்கப்படும். அறைகளில் காதோடு காதாய்ப் பேசியது கூரை மீதிருந்து அறிவிக்கப்படும்.

என் நண்பர்களாகிய உங்களுக்குச் சொல்லுகிறேன் : உடலைக் கொன்றபின் அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்சாதீர்கள். யாருக்கு அஞ்ச வேண்டும் என்று உங்களுக்குக் காண்பிப்பேன். கொன்றபின் நரகத்தில் வீழ்த்தவும் வல்லவருக்கு அஞ்சுங்கள். ஆம், அவருக்கே அஞ்சுங்கள் என உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் விற்பதில்லையா? அவற்றில் ஒன்றும் கடவுள் முன்னிலையில் மறக்கப்படுவதில்லையே ! ஆம், உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளது. அஞ்சாதீர்கள். ஏனெனில், குருவிகள் பலவற்றிலும் நீங்கள் மேலானவர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நம்பிக்கைக்கு இடமில்லையெனத் தோன்றினும் அவர்
நம்பிக்கை கொண்டார், விசுவசித்தார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 13, 16-18

சகோதரர்களே :

உலகமே அவருக்கு உரிமையாகும் என்ற வாக்குறுதி ஆபிரகாமுக்கோ அவர் வழிவந்தவர்களுக்கோ திருச்சட்டத்தின் வழியாய்க் கிடைக்கவில்லை ; விசுவாசத்தினால் அவர் இறைவனுக்கு ஏற்புடையவரானதால்தான், அவ்வாக்குறுதி கிடைத்தது. ஆகவே, யாவும் அருளின் செயலாய் விளங்கும்படி, விசுவாசம் அனைத்திற்கும் அடிப்படையாயிற்று ; இவ்வாறு ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எல்லாருக்கும் வாக்குறுதி செல்லக் கூடியதாயிற்று. ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எனக் குறிக்கப்படுகிறவர்கள் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்கள் மட்டும் அல்லர், அவரைப் போல் விசுவாசம் கொண்டவர்களும் ஆவர். ஏனெனில், 'பல இனத்தார்க்குத் தந்தையாக உன்னை ஏற்படுத்தினேன்' என்று எழுதியுள்ளவாறு ஆபிரகாம் நம்மனைவர்க்கும் தந்தையானார்; ஆம், இறந்தவர்களை வாழ்விக்கிறவரும், இல்லாததைத் தம் சொல்லால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள்மேல் விசுவாசம் வைத்து, அவர் முன்னிலையில் ஆபிரகாம் நம் தந்தையானார். அந்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்டார்.

'உன் வழி வருவோர் இத்துணை மிகுதியாய் இருப்பர்' எனச் சொல்லப்பட்டது. அது நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாததுபோல் தோன்றினும், அவர் நம்பிக்கைகொண்டார்; விசுவசித்தார்; ஆகவே அந்த வாக்குறுதிக்கேற்ப பல இனத்தார்க்குத் தந்தையானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 104 : 5 & 7, 8-9, 42-43 (பல்லவி : 8a)

பல்லவி : ஆண்டவர் தம் உடன்படிக்கையை
என்றென்றும் நினைவு கூர்கின்றார்.

அல்லது : அல்லேலூயா.

5 ஆண்டவருடைய ஊழியர்களாகிய
ஆபிரகாமின் வழித்தோன்றல்களே,
அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய
யாக்கோபின் மக்களே :
7 ஆண்டவரே நம் கடவுள் :
அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. பல்லவி

8 தம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவுகூர்கின்றார்:
ஆயிரமாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த
வாக்குறுதியை அவர் நினைவுகூர்கின்றார்.
9 ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை :
ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

42 ஏனெனில், தம்முடைய திருவாக்கை அவர் நினைவு கூர்ந்தார் :
தம் ஊழியன் ஆபிரகாமுக்குச் சொன்னதை அவர் மறக்கவில்லை.
43 பெருமகிழ்ச்சியிடையே தம் மக்களை வெளியேற்றினார் :
தாம் தேர்ந்தெடுத்தவர்களை அக்களிப்பிடையில் கூட்டிச் சென்றார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கிறிஸ்துவைத் திருச்சபைக்குத் தலைவராய் ஏற்படுத்தினார் :
திருச்சபையோ அவருடைய உடல்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 15-23

சகோதரர்களே :

ஆண்டவராகிய யேசுவில் உங்களுக்குள்ள விசுவாசத்தையும், இறை மக்களான அனைவரிடமும் நீங்கள் காட்டும் அன்பையும் கேள்வியுற்று, நானும் என் செபங்களில் உங்களைக் குறிப்பிட்டு, உங்களை நினைத்து இடைவிடாது நன்றி கூறுகிறேன்.

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும் மாட்சிமை மிக்க தந்தையுமானவர் தேவ ஆவியை உங்களுக்குக் கொடுப்பாராக! அந்த ஆவியினால் நீங்கள் உண்மையை வெளிப்படுத்தும் அருளையும் ஞானத்தையும் பெற்று, அவரை முற்றும் அறிந்துகொள்வீர்களாக. இறைவன் உங்களை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இறைமக்களிடையே அவர் உங்களுக்கு அளிக்கும் உரிமைப் பேற்றின் மாட்சிமை எவ்வளவு வளம் மிக்கது என்றும், விசுவசிப்போரான நம் பொருட்டு அவர் விளங்கச் செய்யும் வல்லமை எத்துணை பெருமை மிக்கது என்றும் நீங்கள் அறிந்துகொள்ளும்படி உங்கள் அகக்கண்களுக்கு ஒளி தருவாராக! நமக்காக அவர் காட்டும் இவ்வல்லமை கிறிஸ்துவில் அவர் செயற்படுத்திய அவரது வலிமை மிக்க பேராற்றலே ஆகும். இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்து அவரை விண்ணுலகில் தம் வலப்புறத்தில் அமரச்செய்தது இவ்வல்லமையே. ஆம், தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர், வலிமை மிக்கோர், ஆட்சி புரிவோர் ஆகிய தூதர் அனைவருக்கும் மேலாகவும், இவ்வுலகில் மட்டுமன்று மறுவுலகிலும், வேறு எப்பெயர் கொண்டவருக்கும் மேலாகவும் அவரை உயர்த்தினார்.

அனைத்தையும் அவருக்கு அடிபணியச் செய்து, அனைத்திற்கும் மேலாக அவரைத் திருச்சபைக்குத் தலையாய் ஏற்படுத்தினார். திருச்சபையோ அவருடைய உடல்: எல்லா வகையாலும் எப்பொழுதும் இறைவனால் நிறைவாக்கப்பெறும் கிறிஸ்துவின் நிறைவே அத்திருச்சபை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 8 : 1-2a, 3-4, 5-6 (பல்லவி : 6 காண்)*

பல்லவி : உம் படைப்புக்கள் அனைத்தின்மீதும்
உம் மகனுக்கு அதிகாரம் தந்தீர்.

1 ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர்
உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது!
நீர் உம் மகிமையை வானங்களுக்கு மேலாக விளங்கச் செய்தீர்.
2 சிறுவர்களின் வாயும் உம்மைப் புகழ்ந்தேத்தச் செய்தீர். பல்லவி

3 உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை,
நீர் அமைத்த நிலவை, விண்மீன்களைக் காணும்போது:
4 மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்?
அவனைப்பற்றி அக்கறை கொள்ள அவன் யார்?
என்று சொல்லத் தோன்றுகிறது. பல்லவி

5 வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்;
மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.
6 உம் படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர். பல்லவி

அல்லேலூயா

அரு. 15 : 26b, 27a

அல்லேலூயா. உண்மையின் ஆவி என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார்:
நீங்களும் சாட்சியம் கூறுவீர்கள், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நீங்கள் அவ்வேளையில் என்ன சொல்ல வேண்டுமென்று பரிசுத்த ஆவி உங்களுக்குக் கற்பிப்பார்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12 : 8-12

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :

"மனிதர் முன் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ, அவனை மனுமகனும் கடவுளின் தூதர்கள் முன் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வார். மனிதர்முன் என்னை மறுதலிக்கிறவனோ, கடவுளின் தூதர்முன் மறுதலிக்கப்படுவான்.

மனுமகனுக்கு எதிராய்ப் பேசுகிறவன் எவனும் மன்னிப்புப் பெறுவான். ஆனால், பரிசுத்த ஆவியைப் பழிப்பவனோ மன்னிப்புப் பெறான்.

செபக்கூடங்களுக்கும் ஆள்வோர் முன்னும், அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது, எப்படிப் பதில் சொல்வது, என்ன பதில் அளிப்பது, என்ன பேசுவது என்று கவலைப்படவேண்டாம். ஏனெனில், அவ்வேளையில் என்ன சொல்ல வேண்டுமென்று பரிசுத்த ஆவி உங்களுக்குக் கற்பிப்பார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இருபத்தொன்பதாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*சீருசுக்கு முன்பாக மக்களினங்களைக் கீழ்ப்படுத்த,*
*அவன் வலக்கையைப் பிடித்துக்கொண்டேன்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *45 : 1, 4-6*

ஆண்டவர் அபிஷேகம் செய்த சீருசுக்கு முன்பாக மக்களினங்களைக் கீழ்ப்படுத்தவும், அரசர்கள் புறங்காட்டி ஓடச் செய்யவும், அவன்முன் கோட்டைக் கதவுகள் திறக்கப்படவும், கோட்டை வாயில்கள் மூடப்படா திருக்கவும், அவனுடைய வலக் கையைப் பிடித்துக்கொண்டு, ஆண்டவர் அவனுக்குக் கூறுவது :

"நம் ஊழியனாகிய யாக்கோபை முன்னிட்டும், நாம் தேர்ந்து கொண்ட இஸ்ராயேலின் பொருட்டும், உன்னை நாம் பெயரிட்டு அழைத் தோம் ; நம்மை நீ அறியாதவனாயிருந்தும், உனக்குச் சிறப்புப் பெயர் தந்தோம். நாமே ஆண்டவர், வேறு எவனுமில்லை; நம்மையன்றி வேறு கடவுள் கிடையாது; நம்மை நீ அறியாதவனாயிருந்தும், உனக்குச் சிறப்புப் பெயர் தருவோம். கதிரவன் தோன்றும் திசையிலிருந்து மறையும் திசை வரையில் வாழ்வோர் அனைவரும், நம்மையன்றி வேறில்லையென அறியு மாறு இவ்வாறு செய்தோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 95 : 1 & 3, 4-5, 7-8, 9-10 a & c (பல்லவி : 7c)*

பல்லவி : **மகிமையும் வல்லமையும் ஆண்டவருக்குச் செலுத்துங்கள்.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் ;
மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
3 புற இனத்தாரிடையே அவரது மாட்சியை எடுத்துச் சொல்லுங்கள் :
மக்கள் அனைவரிடையிலும் அவர்தம்
வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.

பல்லவி

4 மாண்பு மிக்கவர் ஆண்டவர், மிகு புகழ்ச்சிக்குரியவர் :
தெய்வங்கள் அனைத்தையும் விட அச்சத்திற்குரியவர்.
5 ஏனெனில் புற இனத்தாரின் தெய்வங்களெல்லாம் வெறுமையே :
ஆண்டவரோ வானங்களைப் படைத்தவர். பல்லவி

7 மக்கள் இனத்தோரே, ஆண்டவருக்குச் செலுத்துங்கள்,
மகிமையும் வல்லமையும் ஆண்டவருக்குச் செலுத்துங்கள்.
8 அவரது பெயருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்.
பலிப்பொருளை ஏந்தி அவர்தம் ஆலய முற்றங்களில் செல்லுங்கள். பல்லவி

9 திருவுடை அணிந்து ஆண்டவரை வணங்குங்கள் ;
மாநிலமே நீ அவர்முன் நடுங்குவாயாக.
10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள் :
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் :
மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் விசுவாசம், அன்பு, நம்பிக்கையை நினைவு கூருகிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்தின் தொடக்கம் 1 : 1-5 b

பரம தந்தையாகிய கடவுளுக்குள்ளும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்குள்ளும் வாழ்கின்ற தெசலோனிக்கேய மக்களின் சபைக்கு, சின்னப்பனும் சில்வானும் தீமோத்தேயுவும் எழுதுவது : உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக !

எங்கள் செபங்களில் உங்களைக் குறிப்பிட்டு உங்கள் அனைவரையும் நினைத்துக் கடவுளுக்கு என்றும் நன்றி கூறுகிறோம். நீங்கள் விசுவாசத்தால் ஆற்றிய செயல்களையும், அன்பினால் மேற்கொண்ட உழைப்பையும், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையால் கொண்ட மன உறுதியையும், நம் கடவுளும் தந்தையுமானவர் திருமுன் இடைவிடாமல் நினைவு கூருகிறோம். கடவுளால் அன்பு செய்யப்படும் சகோதரர்களே, அவர் உங்களைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் நற்செய்தியை வெறும் வார்த்தையில் மட்டும் உங்களுக்குக் கொண்டுவரவில்லை; பரிசுத்த ஆவி தரும் ஆற்றலோடும், அசையா உள்ளத்து உறுதியோடும் கொண்டுவந்தோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா பிலிப். 2 : 15-16

அல்லேலூயா. வாழ்வைப் பற்றிய வார்த்தைகளை ஏந்தி நின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத் துலங்குவீர்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

சொருடையதைச் செசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

22 : 15-21

அக்காலத்தில் :

பரிசேயர் போய் யேசுவைப் பேச்சில் அகப்படுத்த ஆலோசனை செய்தனர்.

தங்கள் சீடரை ஏரோதியரோடு அவரிடம் அனுப்பி, "போதகரே, நீர் உண்மை உள்ளவர் ; கடவுள் வழியை உண்மைக்கேற்பப் போதிக்கிறீர். நீர் யாரையும் பொருட்படுத்துவதில்லை, முகத்தாட்சணியம் பார்ப்பதில்லை என்று எங்களுக்குத் தெரியும். எனவே, எங்களுக்குச் சொல்லும் : செசாருக்கு வரி கொடுப்பது முறையா ? இல்லையா ? இதைப்பற்றி உம் கருத்து என்ன ?" என்றனர்.

யேசு அவர்களது கெடுமதியை அறிந்து, "வெளிவேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள் ? வரி நாணயத்தை எனக்குக் காட்டுங்கள்" என்றார். ஒரு வெள்ளிக்காசை அவரிடம் கொண்டுவந்தனர்.

யேசு, "இவ்வுருவமும் எழுத்தும் யாருடையவை ?" என்றார். "செசாருடையவை" என்றனர்.

அப்பொழுது அவர்களை நோக்கி, "ஆதலால் செசாருடையதைச் செசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**பாவத்திற்காக அவர் தம்மையே பலியாக்கினால்
நீடுவாழும் சந்ததியைக் காண்பார்.**

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** *53 : 10-11*

**அவரை வேதனையிலாழ்த்தி நொறுக்க ஆண்டவர் விரும்பினார். தம்மையே பாவத்திற்காக அவர் பலியாக்கினால், பெரியதொரு சந்ததியைக் கண்டு நீடுவாழ்வார்; ஆண்டவரின் திருவுளம் அவர் கையால் நிறைவேறும். தம் ஆன்மா பட்ட வேதனையின் பலனை அவர் கண்டு நிறைவு கொள்வார்; நம் ஊழியனாகிய அந்த நீதிமான் தமது அறிவினால் பலரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 32 : 2-3, 4-5, 18-19, 20 & 22 (பல்லவி : 22)*

பல்லவி : **ஆண்டவரே, நாங்கள் நம்பியிருக்கும் அளவுக்கு
உம் இரக்கம் எம்மீது இருப்பதாக.**

4 **ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.**
5 **நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்,
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது.** பல்லவி

18 **இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார் :
தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.**
19 **அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும்,
பஞ்ச காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார்.** பல்லவி

20 **நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது :
அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.**
22 **ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக :
நாங்கள் உம்மை நம்பியிருக்கும் அளவுக்கு
உம் இரக்கமும் இருப்பதாக.** பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறையருளின் அரியணையை அணுகிச் செல்லத் துணிவோமாக.**

**எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்** *4 : 14-16*

**சகோதரர்களே :**

**வானங்களையெல்லாம் கடந்து சென்ற ஒருவரை — அதாவது, கடவுளின் மகனாகிய யேசுவை — தனிப்பெரும் தலைமைக் குருவாகப் பெற்றுள்ள நாம், நாம் அறிக்கையிடும் விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமாக. நம்முடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்லர், நம் தலைமைக் குரு. மாறாக, அவர் நம்மைப் போல் ஒருவராயிருப்பதால், பாவம் தவிர, மற்றெல்லாவற்றிலும் சோதனை துன்பங்களுக்கு உட்பட்டவரானார். தக்க வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், இரக்கத்தைப் பெறவும் இறை அருளின் அரியணையை அணுகிச் செல்லத் துணிவோமாக.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

அல்லேலூயா

மாற்கு 10 : 45

**அல்லேலூயா.** **மனுமகன் பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்க வந்தார்.**

✠ **மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்** *10:35-45*

**அக்காலத்தில் :**

**செபெதேயுவின் மக்கள் யாகப்பரும் அருளப்பரும் யேசுவிடம் வந்து, "போதகரே, நாங்கள் கேட்கப்போவதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும்" என்றனர். யேசுவோ அவர்களை நோக்கி, "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்றார். "நீர் உம் மாட்சிமையில் வீற்றிருக்கும்போது, எங்களுள் ஒருவர் உமது வலப்பக்கமும், மற்றவர் இடப்பக்கமுமாக அமர அருளும்" என்றார்கள்.**

அதற்கு யேசு, "நீங்கள் கேட்பது என்னவென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்களும் குடிக்க முடியுமா? நான் பெறும் ஞானஸ்நானத்தை நீங்களும் பெற முடியுமா?" என்றார். "முடியும்" என்றனர்.

அதற்கு யேசு, "நான் குடிக்கும் கிண்ணத்தில் குடிப்பீர்கள்; நான் பெறும் ஞானஸ்நானத்தையும் பெறுவீர்கள். ஆனால் எனது வலப்பக்கமோ இடப்பக்கமோ அமர அருள்வது என்னுடையதன்று: யாருக்கு ஏற்பாடு ஆகியிருக்கிறதோ அவர்களுக்கே அது கிடைக்கும்" என்றார்.

அதைக் கேட்ட பதின்மரும், யாகப்பர்மேலும் அருளப்பர்மேலும் சினங்கொள்ளத் தொடங்கினர். யேசு, அவர்களைத் தம்மிடம் அழைத்து அவர்களுக்குக் கூறியது :

"புறவினத்தாரிடையே தலைவர்கள் எனப்படுவோர் அவர்களை அடக்கி ஆளுகின்றனர். அவர்களுள் பெரியோர் அவர்கள்மீது அதிகாரம் காட்டுகின்றனர். இது உங்களுக்குத் தெரியும். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுக்குள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும். ஏனெனில், மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது: குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:42-45

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :

"புறவினத்தாரிடையே தலைவர்கள் எனப்படுவோர் அவர்களை அடக்கி ஆளுகின்றனர். அவர்களுள் பெரியோர் அவர்கள்மீது அதிகாரம் காட்டுகின்றனர். இது உங்களுக்குத் தெரியும். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுக்குள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும். ஏனெனில், மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**மோயீசன் தம் கையை உயர்த்தியிருக்கையில் இஸ்ராயேலர் வெற்றி பெறுவர்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *17 : 8-13*

அந்நாட்களில் :

அமலேசித்தார் வந்து இராப்பிதிமிலே இஸ்ராயேலரோடு போர் புரிந்தனர். அப்போது மோயீசன் யோசுவாவை நோக்கி : நீ (வேண்டிய) வீரர்களைத் தெரிந்துகொண்டு, அமலேசித்தாரோடு போராடு. நாளை நான் பாறை உச்சியிலே, கடவுள் கொடுத்த கோலை என் கையிலே பிடித்துக் கொண்டு நிற்பேன் (என்றார்). யோசுவா மோயீசன் சொன்னபடியே அமலேசித்தாரோடு போர் புரிந்தான். மோயீசன், ஆரோன், ஊர் ஆகியோர் மலை உச்சிக்கு ஏறிப் போனார்கள்.

மோயீசன் தம் கையை உயர்த்தியிருக்கையில் இஸ்ராயேலர் வெற்றி பெறுவர். அவர் சிறிதேனும் தம் கையைத் தாழவிட்டாலோ, அந் நேரத்தில் அமலேசித்தார் வெற்றி கொள்வர். ஆனால், மோயீசனின் கைகள் அசந்து போயின என்று கண்டு, அவர்கள் ஒரு கல்லைக் கொண்டு வந்து அவருக்குக் கீழே வைத்தனர். அவர் அதன்மேல் உட்கார்ந்த பின், ஆரோனும் ஊரும் இரு பக்கமும் அவர் கைகளைத் தாங்கிக் கொண்டனர். அதனால் சூரியன் மறையுமட்டும் அவர் கைகள் அசந்து போகவில்லை. யோசுவா அமலேக்கையும் அவன் மக்களையும் வாளின் கருக்கினாலே வெட்டிச் சிதறடித்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 120 : 1-2, 3-4, 5-6, 7-8 (பல்லவி : 2 காண்)

பல்லவி : **எனக்குதவி ஆண்டவரிடமிருந்து வரும் :**
**வானமும் வையமும் படைத்தவர் அவரே.**

1 "மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்தினேன் ;
உதவி எனக்கு எங்கிருந்து வரும்?" என்றேன்.
2 உதவி எனக்கு ஆண்டவரிடமிருந்தே வரும் ;
அவரே வானமும் வையமும் படைத்தவர். பல்லவி

3 உன் கால் இடற விடமாட்டார் ;
உன்னைக் காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார்.
4 இதோ இஸ்ராயேலைக் காப்பவர் அயர்வதுமில்லை,
உறங்குவதுமில்லை. பல்லவி

5 ஆண்டவர் உன்னைக் காக்கிறார் ;
ஆண்டவர் உன் வலப்புறத்தில் உன் பாதுகாப்பாயிருக்கிறார்.
6 பகலில் வெயில் உனக்குத் தீங்கு இழைக்காது,
இரவில் நிலாவும் தீமை ஒன்றும் செய்யாது. பல்லவி

7 ஆண்டவர் எல்லாத் தீமையினின்றும் உன்னைக் காப்பார் ;
அவரே உன் ஆன்மாவையும் காப்பவர்.
8 ஆண்டவர் நீ போகும்போது காப்பார், வரும்போதும் காப்பார் ;
இப்போதும் எப்போதும் உன்னைக் காப்பார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுளின் அடியான், திறமை நிரம்பப் பெற்று, எல்லா வகையான நற்செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவனாகிறான்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் திமோத்தேயுவுக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 14 - 4 : 2

அன்புக்குரியவரே :

நீர் கற்றுக்கொண்டவற்றையும், உம்மனத்தில் உறுதியாய் நிறுத்திய உண்மைகளையும் கடைப்பிடியும். உமக்குக் கற்பித்தவர்கள் யாரென்று தெரியுமன்றோ ? குழந்தைப் பருவமுதலே உமக்கு மறைநூல் தெரியும் என்பதை நீர் மறவாதீர். மறைநூல் கிறிஸ்து யேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் மீட்பிற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஞானத்தை அளிக்க வல்லது. மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும் கண்டிக்கவும் சீர்திருத்தவும், இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும். இவ்வாறு கடவுளின் அடியான், திறமை நிரம்பப் பெற்று, எல்லா வகையான நற்செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவனாகின்றான்.

கடவுள் முன்னிலையிலும், வாழ்வோர்க்கும் இறந்தோர்க்கும் தீர்ப்பிடப்போகும் கிறிஸ்து யேசுவின் முன்னிலையிலும் இவரது பிரசன்னத்தை முன்னிட்டும், இவரது அரசாட்சியை முன்னிட்டும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது : தேவ வார்த்தையை அறிவியும் ; வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிடினும் வலியுறுத்திப் பேசும் ; கண்டித்துப் பேசும் ; கடிந்துகொள்ளும் ; அறிவுரை கூறும். மிகுந்த பொறுமையோடு போதித்துக்கொண்டே இரும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இவ்வாறு நம் பகைவரிடமிருந்தும்,
71 நம்மை வெறுப்பவர் அனைவரின் கையிலிருந்தும் மீட்டருளினர்.
நம் முன்னோர்க்கு இரக்கங் காட்டி,
72 தமது பரிசுத்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தருளினர்; பல்லவி

73-75 நம் பகைவரின் கையினின்று விடுதலை பெற்று,
அச்சமின்றி நம் வாழ்நாளெல்லாம் அவர் முன்னிலையில்,
புனிதத்தோடும் நீதியோடும் அவருக்குப் பணிபுரிய,
தாம் வழி வகுப்பதாக அவர் நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு
அளித்த உறுதிமொழியையும், நினைவுகூர்ந்தருளினர். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**கிறிஸ்துவுக்குள் நாம் உயிர்த்தெழவும்**
**விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2 : 1-10

சகோதரர்களே :

நீங்கள் உங்கள் குற்றங்களாலும் பாவங்களாலும் இறந்தவர்களாய் இருந்தீர்கள். ஒரு காலத்தில் வான்வெளியின் தலைவனுக்கு அடங்கி இவ்வுலகப் போக்கின்படி பாவ வழியில் நடந்தீர்கள். இறைவனுக்குக் கீழ்ப்படியாத மக்களிடையே இப்பொழுது செயலாற்றும் அந்த ஆவிக்குப் பணிந்து இருந்தீர்கள். இந்நிலையில்தான் ஒரு காலத்தில் நாம் எல்லோரும் இருந்தோம். நம்முடைய ஊனியல்பின் இச்சைகளின்படி வாழ்ந்து, அவ்வியல்பும் அதன் நாட்டங்களும் தூண்டியவாறு நடந்து, மற்றவர்களைப்போல நாமும் இயல்பாக இறைவனின் சினத்திற்கு ஆளாகியிருந்தோம்.

ஆனால் கடவுள் இரக்கப் பெருக்கமுள்ளவர், அன்புமிக்கவர். நம் குற்றங்களால் நாம் இறந்தவர்களாய் இருந்தபோதிலும், அவர் நம்மீது கொண்ட பேரன்பினால் கிறிஸ்துவோடு நாம் உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்புப் பெற்றிருப்பது அருளாலேயே - கிறிஸ்து யேசுவுக்குள் நாம் அவரோடு உயிர்த்தெழவும், விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். கிறிஸ்து யேசுவில் இறைவன் நம்மீது காட்டிய பரிவினாலே தம் அளவற்ற அருள் வளத்தை, வரப்போகும் காலங்களில் காண்பிப்பதற்காகவே இவையெல்லாம் செய்தார். அந்த அருளாலேயே விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைந்திருக்கிறீர்கள்.

இது உங்களால் ஆனதன்று: கடவுளின் நன்கொடையே. இது மனித செயல்களால் ஆனதன்று; எனவே, எவனும் பெருமை பாராட்டிக் கொள்ளலாகாது.

ஏனென்றால் நாம் இறைவனின் கைவேலையே. நாம் செய்ய வேண்டுமென்று கடவுள் முன்னேற்பாடு செய்த நற்செயல்களில் நாம் ஈடுபடுவதற்கே கிறிஸ்து யேசுவுக்குள் நாம் படைக்கப்பட்டோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99: 1-2, 3, 4, 5 (பல்லவி: 3b)

பல்லவி: ஆண்டவரே, நம்மை உண்டாக்கினவர்:
அவருக்கே நாம் சொந்தம்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள்:
அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம்:
அவருடைய மக்கள் நாம்,
அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப் பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்;
இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள்:
அவரைப் போற்றிப் புகழுங்கள்,
அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர்,
இவர் இரக்கம் என்றென்றுமுள்ளது.
அவருடைய வார்த்தை
தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

மத். 5: 3

## அல்லேலூயா

அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் விண்ணரசு அவர்களதே.
அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**நீ தேடிவைத்தது யாருக்குக் கிடைக்கும்?**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**
*12 : 13-21*

( பக்கம் 427 காண்க )

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே சாவு ஆட்சி செலுத்தினதென்றால், இன்னும் மேலாக வாழ்வு பெற்று, ஆட்சி செலுத்துவார்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *5 : 12, 15b, 17-19, 20b-21*

சகோதரர்களே :

ஒரே மனிதனால் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போலவும், இவ்வாறு எல்லாரும் பாவஞ் செய்தமையால் எல்லா மனிதர்க்குள்ளும் சாவு பரவியது போலவும்...

ஒருவன் செய்த குற்றத்தால் அனைவரும் இறந்தார்கள் அல்லவா? ஆனால் கடவுளின் அருளும், யேசு கிறிஸ்து என்னும் ஒரு மனிதரின் அருளால் கிடைக்கும் கொடையும் அனைவருக்கும் எவ்வளவோ மிகுதியாய்ப் பெருகியுள்ளன.

ஏனெனில், ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே... அந்த ஒருவன் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றால், அருட்பெருக்கையும், இறைவனுக்கு ஏற்புடையவராகும் வரத்தையும் அடைந்துகொண்டவர்கள், யேசு கிறிஸ்து என்னும் ஒரே ஒருவர் வழியாக வாழ்வுபெற்று ஆட்சி செலுத்துவார்கள் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ?

ஆகவே ஒரே ஒருவனின் குற்றம் எல்லா மனிதர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதர்க்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது. ஏனெனில்,

ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகளானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்.

ஆனால் பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது. இவ்வாறு சாவின் வழியாய்ப் பாவம் ஆட்சி செலுத்தியது போல், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய், முடிவில்லா வாழ்வுக்காக இறையருள் மனிதரை இறைவனுக்கு ஏற்புடையராக்கி, ஆட்சி செய்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 39 : 6-7a, 7b-8, 9, 16 (பல்லவி : 7a & 8a காண்)

பல்லவி : என் இறைவா, உம் திருவுளப்படி நடக்க,
இதோ நான் வருகின்றேன்.

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை :
ஆனால் என் செவிகளை நீர் திறந்துவிட்டீர்.
தகனப் பலியும் பாவம் போக்கும் பலிப் பொருளும்
நீர் கேட்கவில்லை.
7 அப்போது நான் சொன்னது : "இதோ வருகிறேன். பல்லவி

ஏட்டுச் சுருளில் என்னைக் குறித்து :
8 "என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம் :
உம் திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன்"
என்று எழுதப்பட்டுள்ளது. பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன் :
இதோ ! நான் என் வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை ;
ஆண்டவரே, இதை நீர் அறிவீர். பல்லவி

உம்மைத் தேடுவோர் அனைவரும் மகிழ்ச்சிகொண்டு அக்களிப்பார்களாக :
16 உமது அருட்துணையை வேண்டுவோர் "இறைவா போற்றி !" என்று
எந்நேரமும் வாழ்த்துவாராக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அவரே நம் சமாதானம்;**
**அவரே இரு இனத்தையும் ஒன்றாய் இணைத்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 12-22

சகோதரர்களே :

ஒரு காலத்தில் மெசியாவின்றி, இஸ்ராயேலரின் சமுதாயத்தோடு உறவின்றி இருந்தீர்கள்; வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைகளுக்கு அந்நியராகவும் இருந்தீர்கள். நம்பிக்கையற்றவராய் கடவுள் இல்லாதவராய் இவ்வுலகில் இருந்தீர்கள். ஒரு காலத்தில் தொலைவில் நின்ற நீங்கள், இப்பொழுது கிறிஸ்து யேசுவுக்குள் அவருடைய இரத்தத்தினால் அருகே கொணரப்பெற்றீர்கள்,

ஏனெனில், கிறிஸ்துவே நம் சமாதானம். அவரே யூத இனத்தையும் புறவினத்தையும் ஒன்றாய் இணைத்தார். தடைச் சுவரென நின்ற பகைமையைத் தம் ஊனுடலில் தகர்த்தெறிந்தார்; இவ்விரு இனத்தாரிலிருந்தும் தமக்குள் புதியதொரு மனுக்குலத்தைப் படைத்துச் சமாதானம் செய்யும்படி, பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை வெறுமையாக்கினார்; சிலுவையினால் பகைமையை ஒழித்து, அதன் வழியாக இவ்விரு திறத்தாரையும் ஒரே உடலில் கடவுளோடு ஒப்புரவாக்கும்படியும் இவ்வாறு செய்தார்.

அவர் வந்து, தொலைவில் நின்ற உங்களுக்கும் அருகிலிருந்தவர்களுக்கும் சமாதான நற்செய்தியை அறிவித்தார். அவர் வழியாகவே இரு திறத்தாராகிய நாம் ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு பெற்றோம்.

எனவே, இனி நீங்கள் அந்நியரல்ல, வெளி நாட்டாருமல்ல; இறை மக்கள் சமுதாயத்தின் உறுப்பினர், கடவுளுடைய குடும்பத்தைக் சேர்ந்தவர்கள். அப்போஸ்தலர், இறைவாக்கினர் இவர்களை அடிக்கல்லாகவும், கிறிஸ்து யேசுவையே மூலைக்கல்லாகவும்கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாயிருக்கிறீர்கள். கட்டடம் முழுவதும் அவரில் இசைவாய்ப் பொருந்தி, பரிசுத்த ஆலயமாக ஆண்டவருக்குள் வளர்ச்சி பெறுகிறது. நீங்களும் அவருக்குள்ளே கடவுளின் ஒரே உறைவிடமாக, தேவ ஆவிக்குள் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 84 : 8ab-9 10-11, 12-13 (பல்லவி : 8 காண்க)

பல்லவி : **ஆண்டவர் தம் மக்களுக்குக் கூறுவது சமாதானமே.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன் :
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும்,
அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு
மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது :
அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும் :
நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும் :
நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார் :
நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும்,
மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

அல்லேலூயா லூக். 21 : 36

அல்லேலூயா. நீங்கள் மனுமகன் முன் நிற்க
வலுவுள்ளவர்களாய் இருக்கும்படி
எந்நேரமும் செபித்து, விழிப்பாயிருங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

எவ்வூழியர் விழித்திருக்கத் தலைவன் காண்பானோ,
அவ்வூழியர் பேறு பெற்றோர்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
12 : 35-38

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது :

"இடுப்பில் வரிந்து கட்டியிருங்கள். விளக்குகளும் எரிந்துகொண்டிருக்கட்டும். திருமண விருந்துக்குப்போன தம் தலைவன், எப்பொழுது வருவானோ என்று காத்திருக்கிறவர்களைப்போல, நீங்களும் இருங்கள். அவன் வந்து தட்டிய உடனே திறக்க வேண்டுமன்றோ?

எவ்வூழியர் விழித்திருக்கக் காண்பாரோ, அவ்வூழியர் பேறுபெற்றவர்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: அவன் இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிலமர்த்தி, ஒவ்வொருவரையும் அணுகி அவர்களுக்குப் பணிவிடை புரிவான். அவன் இரண்டாம் சாமத்தில் வந்தாலும், மூன்றாம் சாமத்தில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருக்கக் கண்டால், அவ்வூழியர் பேறுபெற்றவர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இறந்தோர்களிடமிருந்து உயிர்த்து வாழ்கிறவர்களாய், உங்களைக் கடவுளுக்கு ஒப்படையுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 12-18

சகோதரர்களே :

உடலின் இச்சைகளுக்கு உங்களைக் கீழ்ப்படியச் செய்யும் பாவம், சாவுக்குரிய உங்கள் உடலில் ஆட்சி செலுத்தாதிருப்பதாக. நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீமைசெய்யும் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்படைக்காதீர்கள்; மாறாக, இறந்தோர்களிடமிருந்து உயிர்த்து வாழ்கிறவர்களாய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள்; கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகள் இருக்கட்டும். பாவம் உங்கள்மீது ஆட்சி செலுத்துதல் ஆகாது; நீங்கள் சட்டத்தின் அதிகாரத்தில் இல்லை; இறையருளின் அதிகாரத்திலே இருக்கிறீர்கள்.

ஆகவே, என்ன சொல்வோம்? சட்டத்தின் அதிகாரத்தில் இல்லாமல், இறையருளின் அதிகாரத்தில் இருப்பதால் நாம் பாவம் செய்யலாம் என்போமா? ஒருகாலும் இல்லை. எவனுக்குக் கீழ்ப்படிந்து அடிமைகளாக உங்களைக் கையளிக்கிறீர்களோ, அவனுக்கு நீங்கள் அடிமை என்பது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் பாவத்துக்கு அடிமையானால் சாவீர்கள்; கீழ்ப்படிதலை ஏற்றுக்கொண்டால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாவீர்கள்.

ஆனால், முன்னே பாவத்திற்கு அடிமைகளாய் இருந்த நீங்கள் உங்களிடம் கையளிக்கப்பட்ட படிப்பினையின் ஒழுங்குக்கு முழு மனத்துடன் கீழ்ப்படிந்தீர்கள்; இதற்காகக் கடவுளுக்கு நன்றி. பாவத்தினின்று விடுதலை பெற்று, இறைவனுக்கு ஏற்புடைய நிலைக்கு உங்களை அடிமையாக்கிக் கொண்டீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 123 : 1-3, 4-6, 7-8 (பல்லவி : 8a)

பல்லவி: **ஆண்டவர் பெயரால் நமக்கு உதவியுண்டு.**

1 ஆண்டவரே நம் சார்பில் இருந்திராவிடில்,
இஸ்ராயேலர் இங்ஙனம் திரும்பச் சொல்லட்டும் :
2 ஆண்டவரே நம் சார்பில் இருந்திராவிடில்
நம்மை எதிர்த்து ஆட்கள் எழுந்தபோது,
3 நம்மீது அவர்கள் சினம் மூண்டெழுந்தபோது
உயிரோடு நம்மை விழுங்கியிருப்பர். பல்லவி

4 அப்போது வெள்ளம் நம்மை மூழ்கடித்திருக்கும்.
வெள்ளப் பெருக்கு நம்மேல் பாய்ந்திருக்கும்.
5 அது நம்மேல் பொங்கி எழுந்து பாய்ந்திருக்கும்.
6 ஆண்டவர் போற்றி ;
ஏனெனில் அவர் நம்மை எதிரிகளின் பற்களுக்கு
இரையாகத் தரவில்லை. பல்லவி

7 வேடர்கள் வைத்த கண்ணியினின்று தப்பிய
பறவைபோல் நாம் உயிர் தப்பினோம்.
கண்ணி அறுந்தது, நாம் பிழைத்தோம்.
8 ஆண்டவர் பெயரால் நமக்கு உதவி உண்டு.
விண்ணும் மண்ணும் படைத்தவர் அவரே. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*கிறிஸ்துவின் மறைபொருள் இப்பொழுது வெளியாகியுள்ளது: புற இனத்தாரும் உரிமைப் பேற்றுக்கு வாரிசுகள் என்பதே இம் மறைபொருள்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 2-12

சகோதரர்களே :

உங்கள் நன்மைக்காகக் கடவுள் எனக்களித்த அருளைப் பற்றிய பொறுப்பைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டுத்தானிருப்பீர்கள். இறை வெளிப்பாட்டின் வழியாய்த்தான் இறைவனின் மறைபொருள் எனக்கு அறிவிக்கப்பட்டது. இம் மறைபொருளைப்பற்றி உங்களுக்குச் சுருக்கமாக மேலே எழுதியுள்ளேன். அதைப் படித்தீர்களாயின், நான் கிறிஸ்துவின் மறைபொருளை அறிந்து உணர்ந்திருக்கிறேன் என உங்களுக்குத் தெரிய வரும். தேவ ஆவியின் வழியாக இறைவன் தம் பரிசுத்த அப்போஸ்தலருக்கும், இறைவாக்கினருக்கும் இந்த மறைபொருளை இப்பொழுது வெளியாக்கியதுபோல, முந்தின தலைமுறைகளில் மனுமக்களுக்குத் தெரிவிக்கவில்லை. நற்செய்தியின் வழியாக கிறிஸ்து யேசுவுக்குள் புற இனத்தவரும் இறைமக்களோடு சேர்ந்து ஒரே உரிமைப் பேற்றுக்கு வாரிசுகள், ஒரே உடலின் உறுப்பினர், வாக்குறுதியில் பங்கு உடையோர் ஆயினர் என்பதே அம் மறைபொருள். கடவுள் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்தி எனக்களித்த அவருடைய அருட் கொடைக்கேற்ப, நான் அந்த நற்செய்தியின் பணியாளன் ஆக்கப்பட்டேன்.

கிறிஸ்துவின் அளவிட முடியாத செல்வங்களைப் பற்றிய நற்செய்தியைப் புறவினத்தாருக்கு அறிவிக்கவும், மறை பொருளான திட்டம் எதுவென்று வெளிப்படுத்தவும், இறைமக்கள் அனைவரிலும் மிகச் சிறியேனாகிய எனக்கு அருள் அளிக்கப்பட்டது. பல்வகையாய்ச் செயல்படும் இறை ஞானமானது, தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் முதலிய விண்ணகத் தூதருக்குத் திருச்சபையின் வழியாய் இப்பொழுது அறிவிக்கப்பட வேண்டுமென்று அனைத்தும் படைத்த கடவுள் இத்திட்டத்தைத் தமக்குள் ஊழியாக மறைத்து வைத்திருந்தார். இதுவே நம் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவில் நிறைவேற்ற இறைவன் ஊழிக்காலமாகக் கொண்டிருந்த கருத்து. கிறிஸ்துவின்மேல் கொண்டுள்ள விசுவாசத்தால் நாம் நம்பிக்கையோடு இறைவனை அணுக அவருக்குள் துணிவுகொள்கிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

இசை. 12: 2-3, 4bcd, 5-6 (பல்லவி: 3)

பல்லவி: மீட்பின் ஊற்றுக்களினின்று தண்ணீரை
அகமகிழ்வோடு முகந்து கொள்வீர்கள்.

2 " இதோ கடவுள் தான் என் மீட்பு,
அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், அஞ்சேன்;
ஏனெனில் ஆண்டவரே என் வலிமை,
அவரையே பாடுவேன், என் மீட்பு அவரே."
3 மீட்பின் ஊற்றுகளினின்று தண்ணீரை
அகமகிழ்வோடு நீங்கள் முகந்துகொள்வீர்கள். பல்லவி

4 " ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள்,
அவரது பெயரைப் போற்றிப் புகழுங்கள்;
புறவினத்தார்க்கு அவர் செயல்களை அறிக்கையிடுங்கள்,
அவர் பெயர் உயர்ந்ததெனப் பறைசாற்றுங்கள். பல்லவி

5 ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்,
ஏனெனில் மகிமைக்குரிய செயல்களைச் செய்தார்;
உலகெங்கும் இதனைத் தெரியப்படுத்துங்கள்,
6 சீயோனின் குடிகளே ஆர்ப்பரியுங்கள், மகிழ்ச்சியினால் பாடுங்கள்;
ஏனெனில் இஸ்ராயேலின் பரிசுத்தர்,
உன் நடுவில் மேன்மையோடு விளங்குகிறார்." பல்லவி

அல்லேலூயா மத். 24: 42a, 44

அல்லேலூயா. விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள்: ஏனெனில்,
நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

எவனுக்கு அதிகம் அளிக்கப்பட்டதோ,
அவனிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12: 39-48

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது:

"திருடன் இன்ன சாமத்தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால், வீட்டில் கன்னம் வைக்க விடமாட்டான் அன்றோ? இதை யுணர்ந்து நீங்களும் ஆயத்தமாக இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்."

இதைக் கேட்ட இராயப்பர், "ஆண்டவரே, இவ்வுவமை எங்களுக்கு மட்டுமா? எல்லாருக்குமா?" என்று வினவினார்.

ஆண்டவர் கூறியதாவது: "தக்க காலத்தில் தன் வேலையாட்களுக்குப் படியளக்கத் தலைவன் ஏற்படுத்திய, நம்பிக்கையும் விவேகமும் உள்ள கண்காணிப்பாளன் யார்? எந்த ஊழியன் அவ்வாறு செய்து கொண்டிருப்பதைத் தலைவன் வந்து காண்பானோ அவன் பேறுபெற்றவன். அவனைத் தன்னுடைமைக்கெல்லாம் அதிகாரியாக ஏற்படுத்துவான் என உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். ஆனால், 'என் தலைவர் வரக் காலம் தாழ்த்துகிறார்' என்று அவ்வூழியன் தனக்குள் சொல்லிக்கொண்டு, வேலைக்காரர் வேலைக்காரிகளை அடித்து, மயக்கமுற உண்டு குடிக்கத் தொடங்கினால், அவ்வூழியன் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் தலைவன் வந்து அவனை நீக்கிவிட்டு, விசுவாசமற்றவர் கதிக்கு அவனை உள்ளாக்குவான்.

தன் தலைவன் விருப்பத்தை அறிந்திருந்தும், முன்னேற்பாடு செய்யாமலும், அவனது விருப்பத்தின்படி நடவாமலும் இருந்த ஊழியன் நன்றாய் அடிபடுவான். அவன் விருப்பத்தை அறியாமல் தண்டனைக்குரிய வற்றைச் செய்பவனோ கொஞ்சம் அடிபடுவான். எவனுக்கு அதிகம் அளிக்கப்பட்டதோ, அவனிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும். எவனிடம் அதிகம் ஒப்படைத்தார்களோ, அவனிடம் இன்னும் அதிகமாய்க் கேட்பார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## வியாழன்

### முதல் ஆண்டு

முதல் வாசகம்

*இப்பொழுது பாவத்தினின்று விடுதலை பெற்றுக் கடவுளின் அடிமைகள் ஆனீர்கள்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 19-23

சகோதரர்களே:

நீங்கள் வலுவற்ற மனிதத் தன்மையுள்ளவர்கள் என்பதை மனத்திற்கொண்டு, மனிதர் பேசும் முறையில் பேசுகிறேன்: அக்கிரமத்தில் ஆழ்த்தும் அசுத்தத்திற்கும், ஒழுக்கக் கேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை

முன்பு நீங்கள் அடிமைகள் ஆக்கியிருந்தீர்கள்; அதுபோல இப்பொழுது பரிசுத்தத்தில் மலரும் ஏற்புடைய வாழ்வுக்கு உங்கள் உறுப்புகளை உட்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் பாவத்தின் அடிமைகளாய் இருந்தபோது இறைவனுக்கு ஏற்புடைய நிலைக்கு அடிமைகள் ஆகாதிருந்தீர்கள். இப்பொழுது உங்களை நாணச் செய்யும் செயல்களையே நீங்கள் அப்போது செய்துவந்தீர்கள்; அவற்றால் நீங்கள் கண்ட பலன் யாது? அவற்றின் முடிவு சாவே.

ஆனால், இப்பொழுது பாவத்தினின்று விடுதலைபெற்றுக் கடவுளின் அடிமைகள் ஆனீர்கள்; இதனால் உங்களுக்குக் கிடைத்துள்ள பலன் நீங்கள் பரிசுத்தர்கள் ஆவதே; அதன் முடிவு முடிவில்லா வாழ்வு. ஏனெனில், பாவம் கொடுக்கும் கூலி சாவு. கடவுள் அளிக்கும் அருட்கொடையோ நம் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவுக்குள் முடிவில்லா வாழ்வு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1: 1-2, 3, 4 & 6 (பல்லவி: சங். 39: 4a)

பல்லவி: **ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தவன் பேறுபெற்றவன்.**

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன்,
பாவிகளின் வழியில் செல்லாதவன்,
பழிக்காரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய்,
அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு,
இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில்
கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்;
அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒருநாளுமிராது:
காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்:
தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடிப்படையுமாக அமைவதாக. கடவுளின் முழு நிறைவையும் அடையும் அளவுக்கு நிரப்பப்படுவீர்களாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *3 : 14-21*

சகோதரர்களே :

விண்ணிலும் மண்ணிலும் உள்ள ஒவ்வொரு குலத்தவரும் எத்தந்தையிடமிருந்து இறைவனின் பிள்ளைகள் என்ற பெயரைப் பெறுகின்றார்களோ அவர் திருமுன் நான் மண்டியிட்டு மன்றாடுவதாவது: தம்முடைய மாட்சிமையின் வளத்திற்கேற்ப, அவருடைய ஆவியினால், உங்கள் உள் மனத்தில் நீங்கள் வலிமையும் ஆற்றலும் பெறும்படி அருள்வாராக. விசுவாசத்தின் வழியாக கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிகொள்வாராக. அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடிப்படையுமாக அமைவதாக. இவ்வாறு நீங்கள், இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத இந்த அன்பை அறியும் ஆற்றல் பெறுவீர்களாக; கடவுளுடைய முழு நிறைவையும் அடையும் அளவுக்கு நிரப்பப்படுவீர்களாக.

நம்மில் செயலாற்றும் வல்லமைக் கேற்றபடி நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிக மேலாகச் செய்யவல்ல அவருக்கே, திருச்சபையிலும் கிறிஸ்து யேசுவிலும், தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 32 : 1-2, 4-5, 11-12, 18-19 (பல்லவி 5b)*

பல்லவி : **ஆண்டவருடைய பரிவன்பினால் இவ்வையகம் நிறைந்துள்ளது.**

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள் :
நேர்மனத்தோர் அவரைப் புகழ்வது தகுமே.
2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் :
பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள்.

பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது :
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார் :
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் :
அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது.
தமது உரிமைப் பொருளாக
அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள். பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார் :
தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும்,
பஞ்ச காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார்.
பல்லவி

அல்லேலூயா

பிலிப். 3 : 8-9

அல்லேலூயா. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும்,
அவரோடு ஒன்றித்திருக்கவும்,
நான் அனைத்தையும் இழந்துவிட்டேன்,
அனைத்தையும் குப்பையெனக் கருதுகிறேன்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சமாதானம் அளிக்கவல்ல, பிரிவினை உண்டாக்கவே வந்தேன்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12 : 49-53

( பக்கம் 504 காண்க )

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***சாவின் பிடியிலுள்ள இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 7 : 18-25a

சகோதரர்களே :

என்னுள், அதாவது வலுவற்ற என் இயல்பில், நலமிக்கது எதுவும் குடிகொண்டில்லை என எனக்குத் தெரியும். நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை, அதைச் செய்யத்தான் முடியவில்லை. நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கிறேன். அப்படி நான் எதை விரும்பவில்லையோ அதையே செய்கிறேன் என்றால், அதைச் செய்பவன் நானல்லேன். என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே அதைச் செய்கிறது என்பது தெளிவு.

ஆகவே, நான் நன்மைசெய்ய விரும்பும்போதெல்லாம், என் கைக்கு எட்டுவது தீமைதான்; இத்தகையதொரு செயல் முறையை என்னுள் காண்கிறேன். ஏனெனில், என் உள்மனத்தில் நான் கடவுளின் சட்டத்திற்கு மனமுவந்து உட்படுகிறேன். ஆனால், என் உறுப்புகளில் வேறொரு சட்டத்தைக் காண்கிறேன்; என் மனம் ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை அது எதிர்த்துப் போராடுகிறது. என் உறுப்புகளில் இருக்கும் பாவச் சட்டத்திற்கு என்னைச் சிறைப்படுத்துகிறது.

ஆழ் துயரில் மூழ்கியுள்ள மனிதன் நான்! சாவின் பிடியிலுள்ள இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்? நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு நன்றி.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 66, 68, 76, 77, 93, 94 (பல்லவி : 68 b)

பல்லவி : **ஆண்டவரே, எனக்கு உம் நியமங்களைக் கற்பியும்.**

66 நீதியும் ஞானமும் எனக்குக் கற்பியும் :
ஏனெனில், உம் கற்பனைகளின்மீது நம்பிக்கை வைக்கிறேன். பல்லவி

68 நல்லவர் நீர், நன்மையே செய்பவர் :
எனக்கு உம் நியமங்களைக் கற்பியும். பல்லவி

76 எனக்கு ஆறுதலளிக்க உமது இரக்கம் எனக்குக் கிடைக்கட்டும் :
உம் ஊழியனுக்கு வாக்குறுதி தந்தீர் அன்றோ. பல்லவி

77 நான் வாழ்வு பெறும்படி உம் இரக்கப் பெருக்கம் எனக்கு உதவட்டும் :
ஏனெனில், உமது திருச்சட்டத்தில் நான் இன்பம் காண்கிறேன். பல்லவி

93 உம் கட்டளைகளை நான் எந்நாளும் மறவேன் :
ஏனெனில், அவற்றைக் கொண்டு எனக்கு நீர் வாழ்வளித்தீர். பல்லவி

94 உமக்கே நான் சொந்தம் : என்னைக் காத்தருளும் :
ஏனெனில் உம் கட்டளைகளையே நான் நாடினேன். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒரே உடல், ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம்,
ஒரே ஞானஸ்நானம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 1-6

சகோதரர்களே :

ஆண்டவருடைய கைதியாகிய நான், உங்களுக்கு அறிவுறுத்துவதாவது : நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ற வாழ்க்கை நடத்துங்கள். நிறைவான தாழ்ச்சியும் சாந்தமும் பொறுமையும் உள்ளவர்களாய் நடந்து, அன்பினால் ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். தேவ ஆவி அளிக்கும் ஒருமைப்பாட்டைச் சமாதானம் என்னும் பிணைப்பால் காப்பாற்றக் கண்ணுங் கருத்துமாய் இருங்கள்.

ஒரே நம்பிக்கையில் பங்குபெற நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே நம்பிக்கை இருப்பதுபோல், ஒரே உடலும் ஒரே ஆவியும் உண்டு. அவ்வாறே ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் உண்டு. எல்லாருக்கும் கடவுளும் தந்தையும் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர், எல்லாரிலும் செயலாற்றுபவர், எல்லாருக்குள்ளும் இருப்பவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23 : 1-2, 3-4ab, 5-6 (பல்லவி : 6 காண்)

பல்லவி : **ஆண்டவரே, உமது திருமுகத்தைத் தேடும்
மக்களினம் இதுவே.**

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன :
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலைநிறுத்தியவர் அவரே :
ஆறுகளின்மீது அதை நிலை நாட்டியவர் அவரே.

பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனத்தைச் செலுத்தாதவன்.

பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான் :
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே :
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே.

பல்லவி

அல்லேலூயா — மத். 11 : 25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வானின் தோற்றத்தையும் பூமியின் தோற்றத்தையும் உய்த்துணர நீங்கள் அறிந்திருந்தும், இக்காலத்தை நீங்கள் உய்த்துணராமல் இருப்பது எப்படி ?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12 : 54-59

அக்காலத்தில் : யேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது :

"மேற்கிலிருந்து மேகம் எழும்புவதை நீங்கள் பார்த்ததும் மழை வரும் என்கிறீர்கள். அப்படியே நடக்கிறது. தெற்கிலிருந்து காற்று அடிப்பதைப் பார்க்கும்பொழுது மிகுந்த வெப்பம் உண்டாகும் என்கிறீர்கள். அதுவும் அப்படியே நடக்கிறது. வெளிவேடக்காரரே, வானின் தோற்றத்தையும், பூமியின் தோற்றத்தையும் உய்த்துணர நீங்கள் அறிந்திருந்தும் இக்காலத்தை நீங்கள் உய்த்துணராமல் இருப்பது எப்படி ? எது நீதியானதென்று நீங்களாகவே ஏன் தீர்மானிக்க முடியாது ?

நீ உன் எதிரியோடு அதிகாரியிடம் செல்லும்போது, வழியிலேயே வழக்கைத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய். இல்லையேல், அவன் உன்னை நீதிபதியிடம் இழுத்துக் கொண்டு போக, நீதிபதி உன்னைச் சேவகனிடம் கையளிக்கக்கூடும். சேவகன் உன்னைச் சிறையில் அடைக்க நேரிடும்.

கடைசிக் காசைத் திருப்பிக் கொடுக்குமளவும் அங்கிருந்து நீ வெளியேற மாட்டாய் என உனக்குச் சொல்லுகிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இறந்தோரிடமிருந்து யேசுவை உயிர்ப்பித்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *8 : 1-11*

சகோதரர்களே :

கிறிஸ்து யேசுவுக்குள் இருக்கிறவர்களுக்கு இனித் தண்டனைத் தீர்ப்பு என்பதில்லை. ஏனெனில், கிறிஸ்து யேசுவுக்குள் உயிர் தரும் ஆவியின் சட்டம் என்னைப் பாவம், சாவு என்பவற்றின் சட்டத்தினின்று விடுதலை செய்துவிட்டது. ஊனியல்பினால் வலுவற்றதாக்கப்பட்ட பழைய சட்டம் செய்ய முடியாத ஒன்றைக் கடவுள் செய்தார். எவ்வாறெனில், பாவப் பிடியிலுள்ள நம் இயல்பு போன்ற இயல்பில் தம் சொந்த மகனை அனுப்பி, அவரைப் பாவத்திற்குப் பரிகாரப் பலியாக்கி, அந்த இயல்பைக் கொண்டே பாவத்திற்குத் தண்டனைத் தீர்ப்புக் கொடுத்தார்; ஊனியல்புக்கு ஏற்ப நாம் நடவாமல், ஆவியின் ஏவுதலுக்கேற்ப நடக்கும் நம்மில் சட்டம் கட்டளையிட்டது நிறைவுறும்படி அவ்வாறு செய்தார்.

ஏனெனில், ஊனியல்பினரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்கு உரியவற்றின்மீதே இருக்கும்; ஆவியால் தூண்டப்படுவோரின் நாட்டமோ, ஆவிக்கு உரியவற்றின் மீதே இருக்கும். ஊனியல்பின் நாட்டத்தால் விளைவது சாவே; ஆவியால் தூண்டப்படும் இயல்பின் நாட்டத்தால் வருவது வாழ்வும் அமைதியுமே. ஏனெனில், ஊனியல்பின் நாட்டம் கடவுளுக்குப் பகையானது; அது கடவுளின் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதில்லை, இருக்கவும் முடியாது. ஊனியல்பினர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது.

நீங்களோ ஊனியல்புக்கு உட்பட்டவர்கள் அல்ல; ஆவியின் செயலுக்கு உட்பட்டவர்கள். ஆனால், கடவுளின் ஆவி உங்களுள் குடியிருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் ஆவியை ஒருவன் கொண்டிராவிடில், அவன் கிறிஸ்தவன் அல்லன். பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும் கிறிஸ்து உங்களுள் இருந்தால், இறைவனுக்கு ஏற்புடையவர்களாக்கப்பட்ட உங்களுக்குத் தேவ ஆவி உள்ளுயிராய் இருப்பார். இறந்தோரிடமிருந்து யேசுவை உயிர்ப்பித்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்தவர்

உங்களுள் குடிகொள்ள தமது ஆவியாலேயே சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23 : 1-2, 3-4ab, 5-6 (பல்லவி : 6கோண்)

பல்லவி : ஆண்டவரே, உமது திருமுகத்தைத் தேடும்
மக்களினம் இதுவே.

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன :
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலைநிறுத்தியவர் அவரே :
ஆறுகளின்மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார் ?
அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவன் யார் ?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனதைச் செலுத்தாதவன். பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான் :
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே :
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

கிறிஸ்துவே தலை : அவர் செயலால்
உடல் முழுவதும் வளர்ச்சி பெறுகிறது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 7-16

சகோதரர்களே :

கிறிஸ்து கொடுக்க விரும்பிய அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டது. ஆகையால் தான், 'அவர் உன்னதத்திற்கு ஏறிச் சென்றபோது பகைவரைக் கைதியாக்கிக் கொண்டுசென்றார் ; மனிதர்களுக்குக் கொடைகளை அருளினார்' என்று எழுதியுள்ளது.

"ஏறிச் சென்றார்" என்பதனால் முதலில் மண்ணுலகின் கீழ்ப் பகுதிக்கு இறங்கினார் என்று விளங்குகிறதன்றோ. கீழே இறங்கியவர்தான் ஏழு உலகங்களுக்கும் மேலாக ஏறிச் சென்றவர். இங்ஙனம் சென்றது, அனைத்தும் நிறைவுபெறச் செய்வதற்கே.

பின்னர், அவர் தம் 'கொடைகளை' அருளிச் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியின் தூதர்களாகவும் ஆயர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தினார். கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும், திருப்பணிக்குரிய வேலையை முன்னிட்டு இறைமக்களைப் பக்குவப்படுத்தவும் அக்கொடைகளை அளித்தார். இவ்வாறு, இறுதியாக நாம் எல்லோரும் கடவுளின் திருமகனைப் பற்றிய விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பாட்டை எய்துவோம்; கிறிஸ்துவினுடைய முழுப் பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சிபெற்ற மனிதனாவோம்.

ஆகவே, இனி நாம் குழந்தைகளாய் இருத்தலாகாது. மனிதருடைய சூழ்ச்சியையும், கைதேர்ந்த ஏமாற்று வித்தையையும் நம்பி, அவர்களுடைய போதனைகளாகிய காற்றால், அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படக்கூடாது. அன்பிலே உண்மையைப் பற்றிக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்றிலும் நாம் வளரவேண்டும். இறுக்கிப் பிணைக்கும் தசை நார்களால் உடல் முழுமையும் அவர் செயலால் ஒன்றாய் இணைந்து, இசைவாய்ப் பொருந்தி இருக்கிறது. அதனால், ஒவ்வொரு உறுப்பும் அதனதன் அலுவலுக்கேற்பச் செயல்படுவதால் உடல் வளர்ச்சி பெற்று, அன்பினால் கட்டடமாக எழும்புகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 121 : 1-2, 3-4a, 4b-5 (பல்லவி : 1)*

*பல்லவி :* **மகிழ்ச்சியுடன் ஆண்டவர்தம் இல்லம் செல்வோம்.**

1 ஆண்டவர் தம் இல்லம் செல்வோம் என்று எனக்குச் சொல்லினர் :
நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.
2 எருசலேமே, இதோ உன் வாயிலில் வந்து நிற்கின்றோம். *பல்லவி*

3 மாநகராய் அமைக்கப்பட்டுள்ளது எருசலேம்,
எல்லாம் இசைவாகப் பொருத்தப்பட்டுள்ள நகர் அது.
4 கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன,
ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன. *பல்லவி*

இஸ்ராயேலின் சட்டப்படி
ஆண்டவருடைய திருப்பெயரைப் போற்றச் செல்கின்றன.
5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன :
தாவீதின் இல்லத்து அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

அல்லேலூயா எசே. 33 : 11

அல்லேலூயா. தீயவன் சாகவேண்டும் என்பதல்ல,
மனந்திரும்பி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனந்திரும்பாவிடில், நீங்கள் எல்லாரும் அவ்வாறே அழிவீர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13 : 1-9

அவ்வேளையில் சிலர் யேசுவிடம் வந்து, பிலாத்து கலிலேயரின் இரத்தத்தை அவர்களுடைய பலியோடு கலந்தான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் மறுமொழியாக, " இக்கலிலேயர் இத்தகைய சாவுக்கு உள்ளானார்கள் என்பதால், மற்றெல்லாக் கலிலேயரையும்விட இவர்கள் பாவிகள் என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்கள்.

சிலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; அவர்கள் எருசலேமில் வாழ்ந்த மற்றெல்லாரையும்விடக் குற்றவாளிகள் என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்கள் " என்றார்.

மேலும் அவர் இந்த உவமையைக் கூறினார் : " ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தான். அவன் வந்து அதிலே பழம் தேடியபொழுது ஒன்றுங் காணவில்லை. ஆகவே, தோட்டக்காரனிடம், 'மூன்று ஆண்டுகளாக வந்து இந்த அத்திமரத்திலே, பழம் தேடுகிறேன். ஒன்றுங் காணவில்லை. இதை வெட்டிவிடு. ஏன் வீணாக இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது?' என்றான்.

அதற்கு அவன், 'ஐயா, இந்த ஆண்டும் இருக்கட்டும். சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். காய்த்தால் சரி, இல்லாவிட்டால் வெட்டி விடலாம்' என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# முப்பதாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**விதவைப் பெண்ணுக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் அநீதி செய்தீர்களாயின், உங்களுக்கு எதிராக என் கோபம் மூண்டெழும்.**

*யாத்திராகமத்திலிருந்து வாசகம்* 22 : 21-27

*ஆண்டவர் கூறுவதாவது :*

"அந்நியனைத் துன்புறுத்தவும் வதைக்கவும் வேண்டாம். நீங்களும் எகிப்து நாட்டிலே அந்நியராய் இருந்தீர்களல்லவா ?

விதவைப் பெண்ணுக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் அநீதி செய்யலாகாது. அவர்களுக்கு அநீதி செய்தீர்களாயின், அவர்கள் நம்மை நோக்கிக் கூப்பிட, நாம் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு, கோபம் மூண்டவராய் வாளினால் உங்களைக் கொல்வோமாதலால், உங்கள் பெண்களும் விதவை ஆவார்கள் ; உங்கள் பிள்ளைகளும் திக்கற்ற பிள்ளைகளாய்த் திரிவார்கள்.

உன்னோடு குடியிருக்கிற நம் மக்களில் ஏழையான ஒருவனுக்கு நீ கடனாகப் பணம் கொடுத்திருப்பாயாகில், அவனை நெருக்கடி செய்யவும் மிதமிஞ்சின வட்டி வாங்கவும் வேண்டாம்.

உன் அயலானுடைய ஆடையை ஈடாக வாங்கி யிருப்பாயாகில், சூரியன் மறையுமுன் அதை அவனுக்குத் திரும்பக் கொடுப்பாயாக. ஏனென்றால், அவன் தன் உடலை மூடி உடுத்துவதற்கு அது ஒன்றேயன்றி, போர்த்திப் படுத்துக்கொள்வதற்கு வேறு இல்லை. அவன் நம்மை நோக்கி முறையிடும்போது, இரக்கமுள்ளவராகிய நாம் அவனுக்குச் செவி கொடுப்போம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 17 : 1-2a, 2bc-3, 46 & 50ab (பல்லவி : 1)

பல்லவி : ஆண்டவரே, என் ஆற்றலாய் உள்ளவரே,
நான் உமக்கு அன்பு செய்கிறேன்.

1 என் ஆற்றலாய் உள்ளவரே, ஆண்டவரே, உமக்கு நான்
அன்பு செய்கிறேன் :
2 ஆண்டவரே, நீரே என் கற்பாறை, என் அரண், என் மீட்பர். பல்லவி

என் இறைவனாய் உள்ளவரே, நான் அடைக்கலம்
புகுவதற்கு ஏற்ற கோட்டையாக உள்ளவரே,
என் கேடயமும் எனக்கு மீட்பளிக்கும் வலிமையும்
என் அடைக்கலமுமாக உள்ளவரே !
3 புகழ்ச்சிக்குரிய ஆண்டவரை நான் கூவி அழைப்பேன் :
என் எதிரிகளினின்று மீட்படைவேன். பல்லவி

46 ஆண்டவர் வாழ்க, என் கற்பாறையாகிய அவர் வாழ்த்தப்பெறுவாராக :
என் மீட்பரான இறைவன் பெரிதும் புகழப்படுவாராக.
50 நீர் ஏற்படுத்திய அரசருக்குப் பெரிய வெற்றிகளை அளித்தவர் நீரே :
உம்மால் அபிஷேகமானவருக்கு இரக்கம் காட்டியவர் நீரே. பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுளிடம் திரும்பவும், அவர் மகனுக்காக
காத்திருக்கவும் சிலைகளை விட்டுவிட்டீர்கள்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 5c-10

சகோதரர்களே :

உங்கள் நன்மைக்காக நாங்கள் உங்களிடையே எப்படி நடந்துகொண்டோம் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. மிகுந்த வேதனை உண்டானபோதிலும் பரிசுத்த ஆவி அளிக்கும் மகிழ்ச்சியோடு தேவ வார்த்தையை ஏற்று எங்களைப்போலவும் ஆண்டவரைப்போலவும் நடப்பவர்களானீர்கள். இங்ஙனம் மக்கெதோனியாவிலும் அக்காயாவிலும் உள்ள விசுவாசிகள் அனைவருக்கும் முன்மாதிரியாய் விளங்கினீர்கள்.

ஆண்டவருடைய வார்த்தை உங்கள் நகரிலிருந்து எழுந்து ஒலித்தது. கடவுள்மேல் உங்களுக்குள்ள விசுவாசம் மக்கெதோனியாவுக்கும் அக்காயாவுக்கும் மட்டுமன்று, எங்குமே எட்டியுள்ளது. உங்கள் விசுவாசத்தைப்

பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லத் தேவையே இல்லை. நீங்கள் எங்களை எவ்வாறு வரவேற்றீர்கள் என்றும், உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக, எவ்வாறு தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினீர்கள் என்றும் மக்களே எடுத்துக் கூறுகின்றனர். கடவுளிடம் திரும்பிய நீங்கள் வானின்று வரும் அவர் மகனுக்காகக் காத்திருக்கிறீர்கள். இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த யேசுவே வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — அரு 14 : 23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்புசெய்தால்,
என் வார்த்தையைக் கேட்பான் :
என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார் ;
நாங்களும் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக; உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் — 22 : 34-40

அக்காலத்தில் :

யேசு சதுசேயரை வாயடக்கியது கேள்வியுற்ற பரிசேயர் ஒன்று கூடினர். அவர்களுள் சட்டவல்லுநனுகிய ஒருவன், "போதகரே, திருச்சட்டத்தின் பெரிய கட்டளை எது?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டான்.

யேசு அவனிடம், "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக. இதுவே எல்லாவற்றிலும் பெரிய முதன்மையான கட்டளை. இரண்டாவது இதையொத்ததே: உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக. திருச்சட்டம் முழுவதற்கும் இறைவாக்குகளுக்கும் இவ்விரு கட்டளைகளும் அச்சாணிபோன்றவை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**நாம் குருடனையும் முடவனையும் இரக்கத்தோடு மீட்டு வருவோம்**

**இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** *31 : 7-9*

**ஆண்டவர் கூறுவதாவது :**

யாக்கோபைக் குறித்து மகிழ்ச்சியினால் அக்களியுங்கள் ; மக்களின் தலைவர்களைக் குறித்து ஆர்ப்பரியுங்கள் ; குரலையுயர்த்தி அறிவியுங்கள், புகழ் பாடுங்கள் : 'ஆண்டவர் தம் மக்களை மீட்டார், இஸ்ராயேலில் எஞ்சினவர்களை மீட்டார்' என்று சொல்லுங்கள்.

இதோ, வட நாட்டினின்று நாம் அவர்களை அழைத்து வருவோம் : பூமியின் கடைகோடிகளினின்று அவர்களை ஒருமிக்கச் சேர்ப்போம் ; அவர்களுள் குருடரும் முடவரும் கர்ப்பவதிகளும் பிரசவப் பெண்களும் இருப்பார்கள் ; அவர்கள் எல்லாரும் சேர்ந்து பெருங் கூட்டமாய்த் திரும்பி வருவார்கள்.

அவர்கள் அழுகையோடு திரும்பி வருவார்கள் ; நாமோ இரக்கத்தோடு அவர்களை அழைத்து வருவோம் ; நீரோடைகளின் அருகிலே அவர்களை நடக்கச் செய்வோம் ; இடறாத செம்மையான நேர் வழியில் நடத்தி வருவோம் ; ஏனெனில் இஸ்ராயேலுக்கு நாமே தந்தை ; எப்பிராயீமோ நமக்குத் தலைப்பேறான பிள்ளை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 125 : 1-2ab, 2cd-3, 4-5, 6 (பல்லவி : 3)*

பல்லவி : **ஆண்டவர் நமக்கு மகத்தானவற்றைச் செய்தார் :
ஆதலால் பெருமகிழ்ச்சி கொண்டோம்.**

1 **ஆண்டவர் சீயோனின் அடிமைகளை மீட்டு வந்தபோது,
நாங்கள் கனவு கண்டவர்கள்போல் இருந்தோம்.**
2 **அப்போது நம் உதடுகளில் சிரிப்பு ஒலித்தது,
நாவில் மகிழ்ச்சிக் கீதமும் எழும்பியது.** பல்லவி

"ஆண்டவர் அவர்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்!"
என்று அப்போது மக்களினத்தார் பேசிக்கொண்டனர்.
3 ஆம், ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார் — பல்லவி
அதனால் பெருமகிழ்ச்சிகொண்டோம்.

4 ஆண்டவரே, பாலைநிலத்தில் வெள்ளத்தைத் திருப்பிவிடுவதுபோல,
எங்கள் நிலைமையை மாற்றிவிடும்.
5 கண்ணீரோடு விதை விதைப்பவர்கள், பல்லவி
பெருமகிழ்ச்சியோடு அறுவடை செய்வார்கள்.

6 விதை தெளிக்கச் செல்லும்போது, அழுகையோடு செல்கிறார்கள்:
அறுத்த அரிகளைச் சுமந்து வரும்போது பல்லவி
பெரு மகிழ்ச்சியோடு வருவார்கள்.

## இரண்டாம் வாசகம்

**மெல்கிசேதேக்கின் முறைப்படி**
**நீர் என்றென்றும் குருவாயிருக்கிறீர்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6

தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடையிலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்டு, பாவங்களுக்காகப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதற்காகக் கடவுளைச் சார்ந்தவற்றிற்கென மனிதர்களின் சார்பாக ஏற்படுத்தப்படுகிறார். தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால், அறியாமையால் நெறி தவறிச் செல்வோரைப் பொறுமையோடு நடத்தக் கூடியவராயிருக்கிறார். அவர் எவ்வாறு மக்களுக்காகப் பலி செலுத்து கிறாரோ, அவ்வாறே தம் வலுவின்மையின் பொருட்டு தமக்காகவும் பாவப் பரிகாரப் பலி ஒப்புக்கொடுக்கவேண்டும். மேலும் யாரும் இவ்வுயர் நிலையைத் தானே தனக்கு உரியதாக்கிக்கொள்வதில்லை; ஆரோனைப் போன்று கடவுளிடமிருந்து அழைப்புப் பெற வேண்டும்.

அவ்வாறே கிறிஸ்துவும் தலைமைக் குருவாகும் மகிமைக்குத் தம்மையே உயர்த்திக்கொள்ளவில்லை. "நீரே என் மகன். இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்" என்று கூறியவரே அந்த மகிமையை அளித்தார். அங்ஙனமே மற்றோரிடத்தில், "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி என்றென்றும் குருவாயிருக்கிறீர்" எனவும் கூறுகிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 திமோ 1 : 10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து,
வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ராபூனி, நான் பார்வை பெறவேண்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 46-52

( பக்கம்: 91 காண்க )

# ஞாயிறு - 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**தன்னைத் தாழ்த்துகிறவனுடைய வேண்டுதல் மேகங்களை ஊடுருவும்.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 35 : 15b-17, 20-22a

ஆண்டவர் நீதிபதியாய் இருக்கிறார்; அவரிடம் மனித ஒருதலைச் சார்பு இல்லை. அவர் வறியவனுக்கு விரோதமாய் எவனையும் ஒருதலைச் சார்பாய் ஏற்றுக்கொள்ள மாட்டார்; துன்புறுத்தப் பட்டவனுடைய மன்றாட்டைக் கேட்பார். அனாதைப் பிள்ளையினுடைய வேண்டுதலைப் புதக்கணிக்க மாட்டார். பெருமூச்சு விட்டு முறையிடும் விதவையைத் தள்ளிவிட மாட்டார்.

மகிழ்ச்சியோடு கடவுளை ஆராதிக்கிறவன் ஏற்றுக்கொள்ளப்படுவான். அவன் மன்றாட்டு மேகங்கள் வரையிலும் எட்டும். தன்னைத் தாழ்த்துகிறவனுடைய வேண்டுதல் மேகங்களை ஊடுருவிப்போகும். அது அங்குச் சேர்கிற வரையிலும் ஆறுதல் அடையாது; உன்னத கடவுள் பார்க்கிற வரையிலும் திரும்பிப்போகாது.

ஆண்டவரும் தூரமாய்ப் போகமாட்டார்; நீதிமான்களை ஆதரித்துத் தீர்ப்பிடுவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 16-17, 18 & 22 (பல்லவி : 6a)

பல்லவி : திக்கற்றவன் கூவியழைக்க,
ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்.
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்.
சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது :
ஆண்டவர் பூமியிலிருந்து அவர்களுடைய நினைவை எடுத்துவிடுவார்.
17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர் :
ஆண்டவர் அவர்களுக்குச் செவி சாய்த்தார் ;
எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார். பல்லவி

18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்,
மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார்.
22 தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கிறார்,
அவரிடம் அடைக்கலம் புகுபவன் எவனும் தண்டனை யடையான்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நல்வாழ்வின் பரிசான வெற்றிவாகை
எனக்காகக் காத்திருக்கிறது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 6-8, 16-18

அன்புக்குரியவரே :

எனக்கோ, பிரியவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதோ என் வாழ்க்கை, பலியின் இரத்தமென வார்க்கப்படுகிறது. சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன், ஓட்டத்தை முடித்துவிட்டேன் ; விசுவாசத்தைப் பாதுகாத்தேன். இனி எனக்கு இருப்பது ஒன்றே; நல்வாழ்வின் பரிசான வெற்றிவாகை எனக்காகக் காத்திருக்கிறது. இதை நீதியுள்ள நடுவராம் ஆண்டவர் அந்த இறுதி நாளிலே எனக்குக் கைம்மாறாக அருள்வார். எனக்கு மட்டுமன்று, அவரது பிரசன்னத்தை ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் அனைவருக்குமே அருள்வார்.

நான் முதல் விசாரணையில் என் வழக்கை எடுத்துச் சொன்னபோது, எனக்குத் துணை நிற்க யாரும் முன்வரவில்லை. எல்லாரும் என்னைக் கை விட்டனர். அக்குற்றம் அவர்களைச் சாராதிருப்பதாக. ஆனால் ஆண்டவர் எனக்குத் துணை நின்றார். என் வழியாய் நற்செய்தியின் அறிவிப்பு முற்றுப் பெறும்படியும், புறவினத்தார் அனைவரும் அதைக் கேட்டறியும்படியும் என்னை உறுதிப்படுத்தினார். சிங்கத்தின் வாயினின்று நான் விடுவிக்கப் பட்டேன்.

ஆண்டவர் எனக்கு உண்டாகும் எல்லாத் தீங்குகளினின்றும் என்னை விடுவித்து மீட்பளித்துத் தம்முடைய வானக அரசினுள் என்னைச் சேர்த்துக் கொள்வார். அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாகுக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 கொரி. 5:19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள்
தம்மோடு ஒப்புரவாக்கினார்:
அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை
நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இறைவனுக்கு ஏற்புடையவனாகி வீடு திரும்பியவன்
ஆயக்காரனே, பரிசேயன் அல்லன்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18:9-14

அக்காலத்தில்:

தம்மை நீதிமான்களென நம்பிப் பிறரைப் புறக்கணிக்கும் சிலரை நோக்கி, யேசு இந்த உவமையைச் சொன்னார்: "இருவர் செபம் செய்யக் கோயிலுக்குச் சென்றனர். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

பரிசேயன் நின்றுகொண்டு, 'கடவுளே, கள்வர் அநீதர் விபசாரர் முதலான மற்ற மனிதரைப்போலவோ, இந்த ஆயக்காரனைப்போலவோ நான் இராததுபற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன். வாரத்திற்கு இருமுறை நோன்பிருக்கிறேன். என் வருவாயிலெல்லாம் பத்திலொரு பகுதி கொடுக்கிறேன்' என்று தனக்குள்ளே செபித்தான். ஆயக்காரனோ தொலைவில் நின்று வானத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் துணியாமல், 'கடவுளே, பாவி என்மேல் இரக்கமாயிரும்' என்று சொல்லி மார்பில் அறைந்துகொண்டான்.

இறைவனுக்கு ஏற்புடையவனாகி வீடு திரும்பியவன் இவனே, அவனல்லன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்பெறுவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

பிள்ளைகளாக்கும் தேவ ஆவியைப் பெற்றுக் கொண்டீர்கள்:
அந்த ஆவியினால் நாம் "அப்பா, தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *8: 12-17*

சகோதரர்களே! நாம் கடமைப்பட்டிருப்பது, ஊனியல்புக்கு அன்று; அதன்படி நாம் வாழ வேண்டுமென்பதில்லை. ஏனெனில், நீங்கள் அந்த இயல்புக்கு ஏற்றபடி வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள்; ஆனால், ஆவியின் செயலால், உடலின் செயல்களைச் சாகடித்தால், வாழ்வீர்கள்.

ஏனெனில், கடவுளின் ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ, அவர்களே கடவுளின் மக்கள். நீங்கள் பெற்றுக் கொண்டது, திரும்பவும் அச்சத்திற்குள்ளாக்கும் அடிமையுள்ளம் அன்று; பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள். அந்த ஆவியினால் நாம், "அப்பா, தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம்.

நாம் இவ்வாறு கூப்பிடும்போது நம் உள்ளத்தோடு தேவஆவியே நாம் கடவுளின் பிள்ளைகள் என்று சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமையாளர்களுமாய் இருக்கிறோம். ஆம், கடவுளின் செல்வத்திற்கு உரிமையாளர்கள்; கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்கள்; ஆனால், அவருடைய பாடுகளில் நாம் பங்கு பெறவேண்டும்; அப்போதுதான் அவரோடு மகிமையிலும் பங்குபெறுவோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 67 : 1 & 3, 5-6ab, 19-20 (பல்லவி 20a)

பல்லவி : நம் கடவுள் நமக்கு மீட்பருளும் கடவுள்.

1 எழுகின்றார் இறைவன், சிதறுண்டு போகிறார்கள் அவர் எதிரிகள்:
அவரைப் பகைத்தவர்கள் அவர் திருமுன் நிற்காமல் ஓடிப்போகிறார்கள்.
3 நீதிமான்களோ மகிழ்வுறுவர், கடவுள் திருமுன் அக்களிப்பர்:
மகிழ்ச்சியால் இன்பம் கொள்வர். பல்லவி

5 தம் புனித இல்லத்தில் உறையும் இறைவன்
அநாதைகளுக்குத் தந்தை, விதவைகளுக்குப் பாதுகாவல்.
6 கைவிடப்பட்டவர்க்குக் கடவுள் இல்லமொன்றை ஆயத்தப்படுத்துகிறார்,
சிறைப்பட்டவர்களை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார். பல்லவி

19 ஒவ்வொரு நாளும் ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக.
மீட்பராகிய கடவுள் நம் சுமைகளைத் தாங்கிக் கொள்கின்றார்.
20 நம் கடவுள் நமக்கு மீட்பருளும் கடவுள்:
சாவினின்று தப்பச் செய்பவர் ஆண்டவராகிய கடவுள். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

கிறிஸ்துபோல் நீங்களும் அன்புகொண்டு ஒழுகுங்கள்'

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 4: 32 - 5 : 8

சகோதரர்களே:

ஒருவருக்கொருவர் பரிவும், இரக்கமும் காட்டுங்கள். கிறிஸ்துவுக்குள் கடவுள் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்.

ஆகவே, அன்புப் பிள்ளைகளாய், நீங்கள் கடவுளைப்போல் ஒழுக முயலுங்கள். கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக நம்மை முன்னிட்டுக் கையளித்து உங்கள்மேல் அன்புகூர்ந்ததுபோல், நீங்களும் அன்புகொண்டு ஒழுகுங்கள்.

கெட்ட நடத்தை, அசுத்தம், பொருளாசை முதலியவற்றின் பெயர் முதலாய் உங்களிடையே சொல்லப்படலாகாது. இதுவே இறை மக்களுக்கு ஏற்ற நடத்தை. நாணங்கெட்ட பேச்சு, மூடச்சொல், பகடித் தனம் முதலியன வேண்டாம். இவையெல்லாம் சரியல்ல; நன்றி கூருதலே தகும்.

ஏனெனில், கெட்ட நடத்தையுள்ளவன், காமுகன், சிலைவழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசைகொண்டவன் எவனும் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப் பேறு அடையான். இது உங்களுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கட்டும். வீண் வார்த்தைகளால் யாரும் உங்களை ஏமாற்ற விடாதீர்கள். ஏனெனில், இவையே இறைவனுக்குக் கீழ்ப்படியாத மக்கள்மீது அவருடைய சினத்தை வரவழைக்கின்றன. ஆகவே நீங்கள் அவர்களோடு ஒன்றும் வைத்துக்கொள்ள வேண்டாம்.

ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்பொழுது ஆண்டவருக்குள் ஒளியாய் இருக்கிறீர்கள். ஒளியின் மக்களாக நடந்துகொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 1 : 1-2, 3, 4 & 6* (பல்லவி : எபே. 5 : 1 காண்)

பல்லவி : நாம் அன்புப் பிள்ளைகளாய்க்
கடவுளைப் போல் ஒழுகுவோம்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன்,
பாவிகளின் வழியில் செல்லாதவன்,
பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்ருேன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனுய்,
அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்ருேன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு,
இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில்
கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்:
அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒருநாளுமிராது:
காற்ருேடு காற்ருய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்:
தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

அல்லேலூயா அரு. 17 : 17b, a

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை:
உண்மையினுல் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஆபிரகாமின் மகளாகிய இவளை ஓய்வு நாளிலே
இந்தக் கட்டிலிருந்து விடுவிப்பது ஆகாத செயலா?

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:10-17

அக்காலத்தில் :

ஓய்வுநாளில் செபக்கூடம் ஒன்றில் யேசு போதித்துக்கொண்டிருந்தார். பதினெட்டு ஆண்டுகளாகப் பேயால் நோயுற்றிருந்த பெண் ஒருத்தி அங்கிருந்தாள். அவள் நிமிர்ந்து பார்க்கவும் முடியாத ஒரு கூனி.

அவளைக் கண்ட யேசு, தம்மிடம் அழைத்து, அவளிடம், "அம்மா, உன் நோயினின்று நீ விடுபட்டாய்" என்று, தம் கைகளை அவள்மீது வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து, கடவுளை மகிமைப்படுத்தலானுள்.

யேசு ஓய்வுநாளில் குணமாக்கியதைப் பார்த்து, செபக்கூடத் தலைவன் கோபவெறிகொண்டு, கூட்டத்தை நோக்கி, "வேலை செய்ய ஆறு நாள் உண்டே, அந்நாட்களில் வந்து குணம்பெற்றுப் போங்கள். ஓய்வு நாளில் ஆகாது" என்ருன்.

ஆண்டவர் அவனுக்கு மறுமொழியாக, "வெளிவேடக்காரரே, ஓய்வு நாளிலே உங்களுள் ஒவ்வொருவனும் தன் எருதையோ கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய்த் தண்ணீர் காட்டுவதில்லையோ? ஆபிரகாமின் மகளாகிய இவளைப் பதினெட்டு ஆண்டுகளாகச் சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து இவளை ஓய்வு நாளிலே விடுவிப்பது ஆகாத செயலா?" என்ருர்.

என்றதும், அவருடைய எதிரிகள் அனைவரும் வெட்கிப் போயினர். அவர் செய்த மாட்சிக்குரிய செயல்களை எல்லாம் பார்த்து, கூட்டம் அனைத்தும் மகிழ்ந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுளின் மக்கள் வெளிப்படவேண்டுமென்று படைப்பு அனைத்துமே எதிர்நோக்கியிருக்கிறது.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8: 18-25

சகோதரர்களே :

இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப் போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை என எண்ணுகிறேன். இம் மகிமையுடன் கடவுளுடைய மக்கள் வெளிப்படவேண்டுமென்று படைப்பனைத்துமே ஏக்கத்தோடு எதிர்நோக்கியிருக்கிறது. ஏனெனில், படைப்பு முழுவதும் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது; தானே விரும்பி அப்படி உட்படவில்லை; அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அப்படி உள்ளது. எனினும் அது நம்பிக்கையற்ற நிலையில் இல்லை. படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்நாள்வரை படைப்புப் பொருள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். படைப்பு மட்டுமன்று; முதற்கனியாகத் தேவ ஆவியைக்கொண்டுள்ள நாமும் இறை மக்களாக்கப்படும் நாளை எதிர்நோக்கி, அதாவது நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏனெனில், மீட்பு நமக்குக் கிடைத்துள்ளதெனினும், நம்பிக்கை அளவில் தான் கிடைத்துள்ளது. எதிர்பார்க்கும் ஒன்றைக் கண்டடைந்தால், அங்கு நம்பிக்கைக்கு இடமில்லை. கண்ணால் காண்கிறதை எவனாவது எதிர் பார்ப்பானா? நாம் காணாததை எதிர்நோக்கி நம்பிக்கை கொண்டிருந்தால், அப்படி எதிர்பார்ப்பதில் நம் மனவுறுதியைக் காட்டுகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 125 : 1-2ab, 2cd-3, 4-5, 6 (பல்லவி : 3a)

பல்லவி : **ஆண்டவர் நமக்கு மகத்தானவற்றைச் செய்தார்.**

1 ஆண்டவர் சீயோனின் அடிமைகளை மீட்டுவந்தபோது
நாங்கள் கனவு கண்டவர்கள்போல் இருந்தோம்.
2 அப்போது நம் உதடுகளில் சிரிப்பு ஒலித்தது.
நாவில் மகிழ்ச்சிக்கீதமும் எழும்பியது. பல்லவி

ஆண்டவர் அவர்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்தார் என்று
அப்போது மக்களினத்தார் பேசிக்கொண்டனர்.
3 ஆம், ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்.
அதனால் பெரு மகிழ்ச்சி கொண்டோம். பல்லவி

4 ஆண்டவரே, பாலை நிலத்தில் வெள்ளத்தைத் திருப்பி விடுவதுபோல,
எங்கள் நிலைமையை மாற்றிவிடும்.
5 கண்ணீரோடு விதை விதைப்பவர்கள்,
பெருமகிழ்ச்சியோடு அறுவடை செய்வார்கள். பல்லவி

6 விதை தெளிக்கச் செல்லும்போது,
அழுகையோடு செல்லுகிறார்கள்.
அறுத்த அரிகளைச் சுமந்துவரும்போது
பெருமகிழ்ச்சியோடு வருவார்கள். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது : இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 21-33

சகோதரர்களே :

கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள். மனைவியரே, ஆண்டவருக்குப் பணிந்திருப்பதுபோல் உங்கள் கணவர்க்குப் பணிந்திருங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோல்

கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். கிறிஸ்து திருச்சபையாகிய தம் உடலின் மீட்பர். அந்தத் திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல் மனைவியரும் கணவர்க்கு அனைத்திலும் பணிந்திருத்தல் வேண்டும்.

கணவர்களே, கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் உங்கள் மனைவியருக்கு அன்பு செய்யுங்கள். ஏனெனில், கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மையே கையளித்தார். அத்திருச்சபை கறைதிரையோ வேறு எக்குறையோ இன்றி; பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் தம் திருமுன் மகிமையோடு துலங்கச் செய்யவேண்டுமென்று அவர் திருவார்த்தையாலும் முழுக்கினாலும் அதைத் தூய தாக்கிப் பரிசுத்தமாக்குவதற்குத் தம்மைக் கையளித்தார்.

அவ்வாறே கணவர்களும் தம் மனைவியரைத் தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்பு செய்ய வேண்டும். மனைவிக்கு அன்பு காட்டுபவன் தனக்கே அன்பு காட்டுகிறான். தன்னுடைய உடலை எவனும் என்றும் வெறுப்பதில்லை; எவனும் அதைப் பேணி வளர்க்கிறான், கிறிஸ்துவும் அவ்வாறே திருச்சபையைப் பேணி வளர்க்கிறார். ஏனெனில், நாம் அவரது உடலின் உறுப்புகள். "அதனால், கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்."

இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்.

சுருங்கக்கூறின், உங்களுள் ஒவ்வொருவனும் தன் மீது அன்பு காட்டுவதுபோல், தன்மனைவியின்மீது அன்பு காட்டுவானாக. மனைவியும் தன் கணவனுக்கு அஞ்சி நடப்பாளாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 127 : 1-2, 3, 4-5 (பல்லவி : 1a காண்)

பல்லவி : ஆண்டவருக்கு அஞ்சுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன்:
அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறுபெற்றோன்:
2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்:
பேறு பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனி தரும் கொடிமுந்திரி போல் உன் மனைவி
உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள் :
ஒலிவச் செடிகள்போல உன் மக்கள்
பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக :
உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை
நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

அல்லேலூயா — மத். 11 : 25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே,
போற்றி! ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச்
சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*கடுகுமணி வளர்ந்து, பெரிய மரமாயிற்று.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13 : 18-21

அக்காலத்தில்: யேசு உரைத்ததாவது:

"கடவுளின் அரசு எதற்கு ஒப்பானது? அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்? அது கடுகு மணிக்கு ஒப்பாகும். ஒருவன் அதை எடுத்துத் தன் தோட்டத்திலே விதைக்கிறான். அது வளர்ந்து பெரியமரமாயிற்று. வானத்துப் பறவைகளும் அதனுடைய கிளைகளில் வந்து தங்குகின்றன" என்றார்.

மீண்டும் அவர் சொன்னதாவது: "கடவுளின் அரசை எதற்கு ஒப்பிடுவேன்? அது புளிப்பு மாவுக்கு ஒப்பாகும். அதைப் பெண் ஒருத்தி எடுத்து மூன்றுபடி மாவில் பொதிந்து வைக்கிறாள். மாவு முழுவதும் புளிப்பேறுகிறது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அவர்கள் நன்மைக்காக அவர் அனைத்திலும் ஒத்துழைக்கிறார்.*

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்** 8: 26-30

சகோதரர்களே:

நம் வலுவற்ற நிலையில் நமக்குத் தேவஆவி துணைநிற்கிறார்; ஏனெனில், செபிக்க வேண்டிய முறையில் செபிப்பதெப்படி என நாம் அறியோம்; தேவஆவி தாமே சொல்லொண்ணாப் பெருமூச்சுகளோடு பரிந்து பேசிச்செபிக்கிறார். உள்ளங்களை ஊடுருவிக் காண்கிற இறைவன் தேவஆவியின் கருத்தை அறிவார்; அவர் இறைமக்களுக்காகக் கடவுளுக் கேற்பப் பரிந்து பேசுகிறார் என்பதை இறைவன் அறிவார்.

கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற் கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு தேவஆவி அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும்.

ஏனெனில், கடவுள் யாரை முன்பே தேர்ந்துகொண்டாரோ, அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி முன் குறித்து வைத்தார்; சகோதரர் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிச்செய்தார். யாரை முன்குறித்து வைத்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; யாரை அழைத்தாரோ அவர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினார்; யாரைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினாரோ, அவர்களுக்குத் தம் மாட்சிமையில் பங்கு தந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 12 : 3-4, 5 (பல்லவி : 5a)

பல்லவி : **ஆண்டவரே, உமது இரக்கத்தையே நான் நம்பியிருக்கிறேன்.**

3 **என் ஆண்டவராகிய இறைவா, என்னைக் கண்ணோக்கி,**
**என் மன்றாட்டைக் கேட்டருளும்.**
4 **மரண உறக்கத்தில் நான் ஆழ்ந்துவிடாமல் என் கண்களுக்கு**
**உமது ஒளியை வீசும்: 'அவனை மேற்கொண்டேன்' என்று**
**என் எதிரி சொல்லவிடாதேயும்: நான் வீழ்ச்சியுற்றதைக் கண்டு**
**என் எதிரிகளை அக்களிக்கவிடாதீர்.** பல்லவி

5 **உமது இரக்கத்தையே நான் நம்பியிருக்கிறேன் அன்றோ!**
**உம்மிடமிருந்து வரும் உதவியை நினைத்து என் நெஞ்சம் அக்களிப்பதாக:**
**எனக்கு நன்மையே செய்யும் ஆண்டவருக்கு**
**நான் இன்னிசை பாடுவேனாக.** பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**மனிதர்களுக்காக உழைப்பவர்கள் போலல்ல,**
**கிறிஸ்துவின் ஊழியர்களாய் இருங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6: 1-9

**பிள்ளைகளே, ஆண்டவருக்குள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; இதுவே முறை. "தாய் தந்தையைப் போற்று" என்பதே வாக்குறுதியோடு கூடிய கட்டளைகளுள் முதலாவது. "அப்போது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய், நீடூழி வாழ்வாய்" என்பது அவ்வாக்குறுதி. தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்குச் சினமூட்டாதீர்கள். அவர்களைக் கண்டித்துத் திருத்தி, ஆண்டவருக்கேற்ற முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்.**

**அடிமைகளே, கிறிஸ்துவுக்கே கீழ்ப்படிவதுபோல், இவ்வுலகத்தில் உங்கள் தலைவராய் இருப்போருக்கு, அச்ச நடுக்கத்தோடும் நேர்மையான உள்ளத்தோடும் கீழ்ப்படிந்திருங்கள். மனிதர்களுக்கு உகந்தவராகலாம் என்று, கண்முன் மட்டும் உழைப்பவர்களாய் இராமல், கிறிஸ்துவின் ஊழியர்களெனக், கடவுளுடைய திருவுளத்தை நெஞ்சார நிறைவேற்றுங்கள்.**

மனிதருக்குச் செய்வதுபோலன்றி, கடவுளுக்கே செய்வதுபோல், உற்சாகத்தோடு ஊழியம் செய்யுங்கள். அடிமையாயினும் உரிமையுள்ளவனாயினும் நன்மை செய்யும் ஒவ்வொருவனும் ஆண்டவரிடமிருந்து கைம்மாறு பெறுவான்; இது உங்களுக்குத் தெரியுமன்றோ?

தலைவர்களே, நீங்களும் அடிமைகள்மட்டில் அவ்வாறே நடந்து கொள்ளுங்கள், அவர்களை மிரட்டுவதை விட்டு விடுங்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு தலைவர் வானகத்தில் இருக்கிறார் என்பதும், அவர் முகத்தாட்சண்யம் பார்ப்பதில்லை என்பதும் நீங்கள் அறியாததன்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 144 : 10-11, 12-13ab, 13cd-14 (பல்லவி : 13c)

பல்லவி : ஆண்டவர் தம் வார்த்தைகளில் எல்லாம்
உண்மை உள்ளவர்.

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக:
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக:
உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

12 இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்துகொள்வர்:
உமது மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்து கொள்வர்.
13 உமது அரசு ஊழி ஊழியாக உள்ள அரசு;
உம்முடைய ஆட்சி தலைமுறை தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

ஆண்டவர்தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவரா யிருக்கிறார்;
தம் செயல்களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார்:
தாழ்த்தப்பட்ட அனைவரையும் தூக்கிவிடுகிறார். பல்லவி

அல்லேலூயா 2 தெச. 2 : 14

அல்லேலூயா. நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் மகிமையை
நாம் ஏற்றுக்கொள்ளும்படி, நற்செய்தி வழியாக
இறைவன் நம்மை அழைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

கிழக்கிலும் மேற்கிலுமிருந்து மக்கள் வந்து,
கடவுள் அரசில் பந்தி அமர்வார்கள்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

13: 22-30

அக்காலத்தில்:

நகரங்கள் ஊர்கள்தோறும் போதித்துக்கொண்டே யேசு எருசலேம் நோக்கிப் பயணம் செய்தார்.

ஒருவன் அவரைப் பார்த்து, "ஆண்டவரே, மீட்புப்பெறுபவர் சிலர் தானே?" என்று கேட்க, அவர் மக்களுக்குக் கூறியது: "ஒடுக்கமான வாயில் வழியே நுழையப் பாடுபடுங்கள். ஏனெனில், பலர் நுழைய முயன்றும் முடியாமற் போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

வீட்டுத் தலைவன் எழுந்து கதவைத் தாளிட, நீங்கள் வெளியே நின்று கதவைத் தட்டிக்கொண்டே, 'ஆண்டவரே, எங்களுக்குக் கதவைத் திறந்து விடும்' என்பீர்கள். அதற்கு அவர், 'நீங்கள் எவ்விடத்தாரோ, யானறியேன்' என்று கூறுவார்.

பின்பு நீங்கள், 'உம்முடன் உண்டோம், குடித்தோம், நீரும் எங்கள் தெருக்களில் போதித்தீரே, என்று சொல்வீர்கள். ஆனால் அவர், 'நீங்கள் எவ்விடத்தாரோ, யானறியேன். அநீதி புரியும் அனைவரும் என்னை விட்டு அகன்று போங்கள்' என்பார்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபும் இன்னும் எல்லா இறைவாக்கினர்களும் கடவுளின் அரசில் இருப்பதையும், நீங்கள் புறம்பே தள்ளப்படுவதையும் காணும்போது, புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும். கிழக்கிலும் மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலும் இருந்து மக்கள் வந்து கடவுளின் அரசில் பந்தி அமர்வார்கள். இதோ! கடைசியானோர் சிலர் முதலாவர், முதலானோர் சிலர் கடைசியாவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்பிலிருந்து எவ்வித படைப்புப் பொருளும் நம்மைப் பிரிக்கமுடியாது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8: 31b-39

சகோதரர்களே:

கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நம்மை எதிர்த்து நிற்பவர் யார்? தம் சொந்த மகனென்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்த அவர், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுக்கு எதிராய் எவன் குற்றம் சாட்டக்கூடும்? அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கடவுளே சொல்லும்போது, தண்டனைத் தீர்ப்புக் கூறுபவர் யார்? கிறிஸ்து யேசு நமக்காக உயிர் நீத்தார், ஏன், உயிர்ப்பிக்கவும் பெற்றார். இந்தக் கிறிஸ்துவே கடவுளின் வலப்பக்கத்தில் இருந்து நமக்காகப் பரிந்துபேசுகிறார்.

கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் எவன்? வேதனையோ? நெருக்கடியோ? கலாபனையோ? பசியோ? ஆடையின்மையோ? இடர்களோ? வாளோ? எதுதான் நம்மைப் பிரிக்கமுடியும்? 'உம்மை முன்னிட்டு நாள் முழுவதும் சாவுக்காளாகிறோம். கொல்லப்படக் காத்திருக்கும் ஆடுகளாய்க் கருதப்பட்டோம்' என எழுதியுள்ளதன்றோ? ஆனால் நம்மேல் அன்பு வைத்தவரின் செயலால் நாம் இவை அனைத்திலும் மாண்பு மிக்க வெற்றி அடைகிறோம்.

ஏனெனில், சாவோ வாழ்வோ, வானதூதரோ தலைமை ஏற்பவரோ, நிகழ்வனவோ வருவனவோ, வலிமை மிக்கவரோ, வானத்தில் உள்ளவையோ ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்புப் பொருளோ, நம் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கமுடியாது என்பது என் துணிபு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 109: 21-22, 26-27, 30-31 (பல்லவி: 26b)*

பல்லவி: **ஆண்டவரே, உமது இரக்கத்திற்கேற்ப என்னை மீட்டருளும்.**

21 ஆண்டவராகிய இறைவா,
நீர் உமது பெயரின் பொருட்டு என்னை ஆதரியும்:
ஏனெனில், கருணைமிக்கது உம் இரக்கம், என்னை மீட்டருளும்.
22 நானோ துயருற்றவன், ஏழ்மை மிக்கவன்,
என் இதயம் என்னுள் புண்பட்டுள்ளது. பல்லவி

26 ஆண்டவரே, என் இறைவா, எனக்குதவியாக வாரும்:
உமது இரக்கத்திற்கேற்ப என்னை மீட்டுக்கொள்ளும்.
27 இது உம் கைவேலையென்று அவர்கள் அறியட்டும்:
ஆண்டவரே, இது உம் செயலென்று
அவர்களுக்குத் தெரியட்டும். பல்லவி

30 என் நாவினால் ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன்:
மக்கள் பலரிடையில் அவரைப் போற்றுவேன்.
31 ஏனெனில், ஏழையின் வலப்பக்கம் அவர் நிற்கிறார்:
குற்றம் சாட்டி அவனை ஒறுப்போரிடமிருந்து
அவனைக் காக்க நிற்கிறார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்கள் வெற்றியடைந்து நிலைத்து நிற்க, கடவுள் தரும் படைக்கலங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 6: 10-20

சகோதரர்களே:

இறுதியாக, ஆண்டவரில் அவர் தரும் வலிமைமிக்க ஆற்றலால் உறுதி பெறுங்கள். அலகையின் வஞ்சகத் தந்திரங்களை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் தரும் படைக்கலங்களை அணிந்துகொள்ளுங்கள். ஏனென்றால் நாம் வெறும் மனிதர்களோடு போராடுவதில்லை.

தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர், இருளில் மூழ்கிய இவ்வுலகின்மீது ஆதிக்கம் செலுத்துவோர், வான்வெளியில் திரியும் தீய ஆவிகள் ஆகிய இவர்களோடு போராடுகிறோம்.

எனவே பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின்மீதும் வெற்றியடைந்து நிலைநிற்க வலிமை பெறும்படி, கடவுள் தரும் படைக்கலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஆகையால் உண்மையை உங்கள் இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்டு, நீதியை உங்கள் மார்புக் கவசமாக அணிந்து நில்லுங்கள். சமாதான நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வத்தை உங்கள் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள். எந்நிலையிலும் விசுவாசமாகிய கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். இதைக்கொண்டு நீங்கள் தீயவனின் தீக்கணைகளை அவிக்க முடியும்.

மீட்பையே தலைச்சீராவாகத் தாங்கி, கடவுளின் சொல்லைத் தேவ ஆவி தரும் போர்வாளாக ஏந்திக்கொள்ளுங்கள். செபிப்பதிலும் மன்றாடுவதிலும் நிலையாய் இருங்கள். தேவ ஆவியால் ஏவப்பட்டு எவ்வேளையிலும் செபியுங்கள். இதன் பொருட்டு, சோர்வுறாமல் விழிப்பாய் இருங்கள். இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள். நான் பேசும்போது நற்செய்தியின் மறைபொருளைத் துணிவுடன் வெளிப்படுத்துவதற்கு இறைவன் வார்த்தையை எனக்கு அளிக்கும்படி எனக்காகவும் மன்றாடுங்கள். இந்த நற்செய்திக்காகவே நான் சிறைப்பட்ட தூதுவனாக இருக்கிறேன். பேச வேண்டிய முறையில், நான் அதைத் துணிவோடு எடுத்துரைக்க, எனக்காக வேண்டுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சாங். 143 : 1-2, 9-10 (பல்லவி : 1a)

பல்லவி : என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி !

1 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி;
போரிட என் கைகளுக்குப் பயிற்சி அளிப்பவர் :
சண்டையிட என் கைக்குப் பலமளிப்பவர் அவரே. பல்லவி

2 எனக்கு இரக்கம் காட்டுபவர், என் அடைக்கலக் கோட்டை அவரே :
எனக்குப் பாதுகாப்பும் விடுதலையும் அளிப்பவர் அவரே.
என் கேடயமும் புகலிடமும் அவரே :
மக்கள் இனத்தாரை எனக்குக் கீழ்ப்படுத்துபவர் அவரே. பல்லவி

9 இறைவா, நான் உமக்குப் புதியதொரு பாடலைப் பாடுவேன் :
பத்து நரம்பு வீணையால் உமக்குப் புகழ் பாடுவேன்.
10 மன்னர்களுக்கு வெற்றியளிப்பவர் நீரே :
உம் ஊழியன் தாவீதை விடுவித்தவர் நீரே. பல்லவி

அல்லேலூயா லூக். 19 : 38; 2 : 14 காண்

அல்லேலூயா. ஆண்டவர் பெயரால் அரசராக வருகிறவர் வாழி!
விண்ணிலே மகிமையும் உலகிலே அமைதியும் ஆகுக.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

இறைவாக்கினர் எருசலேமுக்கு வெளியே மடிவது முறையாகாது.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13 : 31-35

அந்நேரத்தில் பரிசேயர் சிலர் யேசுவிடம் வந்து, "இங்கிருந்து போய்விடும். ஏரோது உம்மைக் கொல்ல வேண்டுமென்றிருக்கிறான்" என்றனர். அதற்கு அவர், "நீங்கள் போய் அந்தக் குள்ள நரியிடம் இதை அறிவியுங்கள் : இன்றும் நாளையும் பேய் ஓட்டுகிறேன். நோய்களையும் குணமாக்குகிறேன். மூன்றாம் நாள் முடிவடைவேன். ஆயினும், இன்றும் நாளையும் அடுத்த நாளும் நான் என் வழியே செல்லவேண்டும். ஏனெனில் இறைவாக்கினர் எருசலேமுக்கு வெளியே மடிவது முறையாகாதே!

எருசலேமே, இறைவாக்கினர்களைக் கொன்று, உன்னிடம் அனுப்பப்பட்டோரையும் கல்லால் எறியும் எருசலேமே, கோழி தன் குஞ்சுகளை இறக்கைக்குள் ஒன்று சேர்ப்பதுபோல, நானும் உன் மக்களை ஒன்று சேர்க்க எத்தனையோ முறை விரும்பினேன். நீயோ உடன்படவில்லை. இதோ! உங்கள் வீடு குடியற்றுப் போகும். 'ஆண்டவருடைய பெயரால் வருகிறவர் வாழி' என்று நீங்கள் கூறும் நாள் வரை என்னைக் காண மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**என் சகோதரர்களுக்காகச் சாபத்திற்கு உள்ளாகவும் தயங்கேன்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 9: 1-5

சகோதரர்களே:

கிறிஸ்துவுக்குள் உண்மையாய்ச் சொல்லுகிறேன், பொய் சொல்லவில்லை: பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ள மனச்சான்றே எனக்குச் சாட்சி. உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும், இடைவிடாத வேதனையும் உண்டு.

இரத்த உறவினரான என் சகோதரர்களுக்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகவும் தயங்கேன். அவர்கள் இஸ்ராயேல் மக்கள் அல்லரா? அவர்களையன்றோ கடவுள் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். அவர்களிடையில்தான் அவர் தம் மாட்சிமையை விளங்கச் செய்தார். உடன்படிக்கைகளும் திருச்சட்டமும், இறை வழிபாடும் வாக்குறுதிகளும் அவர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டன. குலத் தந்தையர்களின் வழிவந்தவர்கள் அவர்கள்: மனிதன் என்ற முறையில் கிறிஸ்துவும் அவர்களினின்றே தோன்றினார். இவரோ எல்லாவற்றிற்கும் மேலான கடவுள், என்றென்றும் போற்றுதற்குரியவர். ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 147 : 1-2, 3-4, 8-9 (பல்லவி : 1)

பல்லவி : **எருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்.**

1 எருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்:
சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்:
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார்.

பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்;
கோதுமை வளத்தால் உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார்,
விரைந்து செல்கிறது அவருடைய வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார்.
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை;
தம் கட்டளைகளை அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்களில் சிறந்ததொரு வேலையைத் தொடங்கியவர், கிறிஸ்துவின் நாள்வரை அதைத் தொடர்ந்து செய்து, நிறைவுபெறச்செய்வார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய
திருமுகத்தின் தொடக்கம் 1: 1-11

கிறிஸ்து யேசுவுக்குள் பிலிப்பி நகரில் வாழ்கின்ற இறைமக்கள், மேற்பார்வையாளர், திருப்பணியாளர் அனைவருக்கும் கிறிஸ்து யேசுவின் ஊழியர்களான சின்னப்பனும், தீமோத்தேயுவும் எழுதுவது: நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக!

செபத்தில் உங்களைக் குறிப்பிடும்போதெல்லாம் என் கடவுளுக்கு நன்றிகூருகிறேன். உங்கள் அனைவருக்காகவும் நான் மன்றாடும் பொழுதெல்லாம், தொடக்கத்திலிருந்தே இன்றுவரை நீங்கள் நற்செய்தித் திருப்பணியில் பங்கேற்று வருவதை நினைத்து, மகிழ்ச்சியுடன் மன்றாடுகிறேன். உங்களில் சிறந்ததொரு வேலையைத் தொடங்கியவர், யேசு கிறிஸ்துவின் நாள்வரை அதைத் தொடர்ந்துசெய்து நிறைவுபெறச் செய்வார் என நான் நம்பியிருக்கிறேன்.

உங்கள் எல்லோரையும்பற்றி எனக்கு இத்தகைய உணர்ச்சிகள் எழுவது இயற்கைதானே! ஏனெனில், நான் சிறையில் இருந்தபொழுதும், நான் நற்செய்திக்காகப் போராடி அதை நிலைநாட்டியபொழுதும், என்னுடனிருந்து எனக்குக் கிடைத்த வரத்தில் பங்குகொண்ட நீங்கள் என் இதயத்தில் இடம் பெற்றுவிட்டீர்கள். கிறிஸ்து யேசுவுக்குரிய அதே பரிவுள்ளத்தோடு உங்கள் எல்லோர்மீதும் எவ்வளவோ ஏக்கமாயிருக்கிறேன். இதற்குக் கடவுளே சாட்சி.

எனவே, உங்கள் அன்பு மேன்மேலும் வளர்ந்து மேலானவற்றையே பகுத்தறியச் செய்யும் அறிவையும் உள்ளுணர்வு அனைத்தையும் உங்களுக்குத் தரவேண்டும் என்பதே என் செபம். இவ்வாறு யேசுகிறிஸ்துவின் வழியாய் நாம் பெறும் ஏற்புடைய வாழ்வின் பயனால் நிரப்பப்பட்டு, கிறிஸ்துவின் நாளை எதிர்நோக்கி, கடவுளின் மகிமைக்காகவும் புகழுக்காகவும் நீங்கள் குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து வருவீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 110 : 1-2, 3-4, 5-6 (பல்லவி : 2a)

பல்லவி: **ஆண்டவரின் செயல்கள் மகத்தானவை.**

அல்லது: **அல்லேலூயா.**

1 நெஞ்சார ஆண்டவரைப் புகழ்வேன்:
நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
2 ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை:
அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர். பல்லவி

3 அவருடைய செயல் மகத்துவமும் மாண்பும் மிக்கது:
அவருடைய நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
4 தம் வியத்தகு செயல்கள் என்றும் நினைவிலிருக்கச் செய்தார்:
அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர். பல்லவி

5 தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார்.
தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.
6 புறவினத்தாரைத் தம் மக்களுக்கு உரிமையாக்கினார்:
இவ்வாறு வல்லமைமிக்க தம் செயல்களைத்
தம் மக்களுக்கு வெளிப்படுத்தினார். பல்லவி

## அல்லேலூயா

அரு. 10 : 27

அல்லேலூயா. **என் ஆடுகள் என்குரலுக்குச் செவிகொடுக்கின்றன;
நானும் அவற்றை அறிவேன்;
அவையும் என்னைப் பின்தொடர்கின்றன,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

தன் மகனோ, மாடோ கிணற்றில் விழுந்தால்,
ஓய்வு நாளானாலும் உடனே அவன் தூக்கிவிடமாட்டானா?

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14: 1-6

அக்காலத்தில் :

ஓய்வுநாளில் பரிசேயரின் தலைவனொருவன் வீட்டில் யேசு உணவருந்தச் சென்றபோது, அவர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தனர். அங்கே அவருக்கு எதிரே, நீர்க்கோவை நோயுற்ற ஒருவன் இருந்தான்.

யேசு சட்டவல்லுநரையும் பரிசேயரையும் நோக்கி, "ஓய்வுநாளில் குணமாக்குதல் முறையா ? இல்லையா?" எனக்கேட்டார். அவர்கள் பேசாதிருந்தனர். அவரோ அவன் கையைப் பிடித்துக் குணமாக்கி அனுப்பிவிட்டார்.

பின் அவர்களிடம், "உங்களுள் ஒருவனுடைய மகனோ, மாடோ கிணற்றில் விழுந்தால் ஓய்வு நாளென்றாலும் உடனே அவன் தூக்கிவிடமாட்டானா ?" என்றார். அதற்கு மறுமொழிகூற அவர்களால் முடியவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

யூதர்கள் தள்ளுண்டதால் உலகம் இறைவனோடு ஒப்புரவாயிற்றென்றால்,
அவர்களை ஏற்றுக்கொள்வது, இறந்தோர் உயிர்பெறுவதாகும்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 11: 1-2, 11-12, 25-29

சகோதரர்களே :

கடவுள் தம் மக்களைத் தள்ளிவிட்டார் எனலாமா? ஒருகாலும் இல்லை. நானும் ஓர் இஸ்ராயேலன் தானே. நானும் ஆபிரகாமின் வழிவந்தவன். பென்யமீனின் குலத்தைச் சார்ந்தவன். முன்பு தேர்ந்தெடுத்த

தம் மக்களைக் கடவுள் தள்ளிவிடவில்லை. எலியாவைப்பற்றிய மறைநூல் பகுதி என்ன சொல்லுகிறது என்பதை அறியீர்களா? அவர் இஸ்ராயேலுக்கு எதிராகக் கடவுளிடம் மன்றாடினார்.

அப்படியானால், அவர்கள் கால் இடறியது விழுந்து ஒழிவதற்கா? இல்லவே இல்லை. அவர்கள் தவறியதால் புறவினத்தாருக்கு மீட்புக் கிடைத்தது; அவர்களுள் போட்டி மனப்பான்மையைத் தூண்டவே இங்ஙனம் ஆயிற்று. அவர்கள் தவறியதால் உலகம் வளமுற்றதென்றால், அவர்கள் வீழ்ச்சியுற்றதால் புறவினத்தார் வளம்பெற்றனர் என்றால் யூதர்கள் முழுத் தொகையும் மனந்திரும்பும்போது அவ்வளம் இன்னும் எத்துணையோ மிகுதியாகும்.

சகோதரர்களே, அறிவாளிகளென்று நீங்கள் பெருமிதம் கொள்ளாதவாறு, மறைபொருள் ஒன்றை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது புறவினத்தாரின் முழுத்தொகையும் வந்தடையும் வரையில்தான் இஸ்ராயேலில் ஒரு பகுதியினர் மழுங்கிய உள்ளம்கொண்டிருப்பர். இந்தத் திட்டம் நிறைவேறிய பின்னரே இஸ்ராயேல் இனம் மீட்கப்படும்; அதற்கொப்பவே மறைநூலிலும்: 'விடுதலை அளிப்பவர் சீயோனிலிருந்து வருவார், யாக்கோபின் குலத்திலிருந்து இறைப் பற்றின்மை அனைத்தையும் போக்கி விடுவார்: நான் அவர்களுடைய பாவங்களை எடுத்து விடுவேன், நான் அவர்களோடு செய்யும் உடன்படிக்கை இதுவே' என்று எழுதியுள்ளது.

நற்செய்தியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் அவர்கள் இறைவனின் வெறுப்புக்கு உரியவர்களே; அதுவும் உங்கள் நன்மைக்கே. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால், அவர்களுடைய முன்னோரை முன்னிட்டு அவர்கள் இறைவனின் அன்புக்கு உரியவர்களே. ஏனெனில் கடவுள் தாம் கொடுத்த வரங்களையும், விடுத்த அழைப்பையும் திரும்பி வாங்கிக்கொள்வதில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 93 : 12-13a, 14-15, 17-18 (பல்லவி : 14a)*

பல்லவி : **ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை.**

12 ஆண்டவரே, உம்மால் அறிவு புகட்டப்பெறுபவன் பேறுபெற்றவன் :
உமது சட்டத்தைக்கொண்டு யாருக்குக் கற்பிக்கின்றீரோ
13 அவன் பேறுபெற்றவன்.
அவன் துன்பநாளிலும் உம்மிடமிருந்து இளைப்பாற்றி அடைவான். பல்லவி

14 ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை :
தம் உரிமைப் பொருளானவர்களைக் கைவிடுவதில்லை.
15 நீதிமான்கள் நீதித் தீர்ப்பையே பெறுவர் :
நேரிய மனத்தோர் யாவரும் அதையே பின்பற்றுவர். பல்லவி

17 ஆண்டவர் எனக்குத் துணை செய்திராவிடில் :
விரைவாகவே என் ஆன்மா கீழுலகம் சென்றிருக்கும்.
18 "இதோ என் நடை தள்ளாடுகிறது" என்று நான் நினைக்கையில் :
ஆண்டவரே, உம் அருள் என்னைத் தாங்குகிறது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**எனக்கு வாழ்வதென்பது கிறிஸ்துவே;**
**சாவது ஆதாயமே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 1: 18b-26

சகோதரர்களே:

எப்படியும் கிறிஸ்து அறிவிக்கப்படுகின்றார். அது எனக்கு மகிழ்ச்சியே; ஆம், இனியும் மகிழ்ச்சியாகவே இருக்கும். உங்கள் மன்றாட்டினாலும் யேசு கிறிஸ்துவுடைய ஆவியின் துணையாலும் இதெல்லாம் எனக்கு மீட்பளிப்பதாய் முடியும் என்று நான் அறிவேன். என்ன நேரிடினும் நான் நிலைகுலையமாட்டேன்; துணிவை இழக்க மாட்டேன். இதுவரையில் என்னால் கிறிஸ்துவின் புகழ் விளங்கியதுபோல் இப்பொழுதும் நான் இருந்தாலும் இறந்தாலும் என்னால் அவரது புகழ் விளங்கும். இதுவே என் பேராவல். இதுவே என் நம்பிக்கை.

ஏனெனில், எனக்கு வாழ்வதென்பது கிறிஸ்துவே; சாவது ஆதாயமே. ஆனால், உலகில் வாழ்ந்தால், பயனுள்ள பணிசெய்யக்கூடுமாயின் எதைத் தேர்ந்துகொள்வதென்று எனக்குத் தெரியவில்லை. இரு பக்கங்களிலும் நெருக்கப்படுகிறேன். உயிர் நீத்து கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். இதுவே மிகச் சிறந்தது. மற்றொரு புறம், இன்னும் உலகில் வாழ்வது உங்கள் பொருட்டுத் தேவையாயிருக்கிறது.

இந்த உறுதியில் நான் ஒன்று சொல்லமுடியும்: நான் இன்னும் உயிரோடிருந்து நீங்கள் விசுவாசத்தில் வளர்ச்சிபெற்று மகிழ்ச்சி காணும்படி உங்கள் அனைவரோடும் தங்கியிருப்பேன். ஆகவே, நான் உங்களிடம் திரும்பி வருவதால், கிறிஸ்து யேசுவுக்குள் நீங்கள் கொள்ளும் பெருமிதம் என்பொருட்டு மிகுதியாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 41:1,2, 42:4 (பல்லவி: 2a)

பல்லவி: உயிருள்ள இறைவன்மீது
என்னுள்ளம் தாகம் கொண்டுள்ளது.

1 கலைமான் நீரோடைகளை
ஆர்வமுடன் நாடிச் செல்வது போல்,
இறைவா, என் நெஞ்சம்
உம்மை ஆர்வத்துடன் நாடிச் செல்கிறது. பல்லவி

2 இறைவன்மீது, உயிருள்ள இறைவன்மீது,
என் உள்ளம் தாகங்கொண்டது:
என்று செல்வேன்?
இறைவனின் முகத்தை என்று காண்பேன்? பல்லவி

4 இறைவனின் இல்லத்திற்குச் சென்றேனே!
அக்களிப்பும் புகழ் இசையும் முழங்க
விழாக் கூட்டத்தில் நடந்தேனே! பல்லவி

அல்லேலூயா

மத். 11:29ab

அல்லேலூயா. உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு,
என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்:
ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

# நற்செய்தி வாசகம்

தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்;
தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14: 1, 7-11

அக்காலத்தில்:

ஓய்வுநாளில் பரிசேயரின் தலைவனொருவன் வீட்டில் யேசு உணவருந்தச் சென்றபோது, அவர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தனர். அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதலிடங்களைத் தேர்ந்துகொள்ளுவதை அவர் கண்டு அவர்களுக்கு உவமையாகக் கூறினதாவது:

"உன்னை ஒருவன் மண விருந்திற்கு அழைக்கும்போது, நீ முதலிடத்தில் அமராதே. ஏனெனில், உன்னைவிட மதிப்பிற்குரிய ஒருவரை அவன் அழைத்திருக்கலாம். உன்னையும் அவரையும் அழைத்தவன் வந்து உன்னை நோக்கி, 'இவருக்கு உன் இடத்தை விடு' என்பான். அப்போது நீ வெட்கிக் கடைசி இடத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும். மாறாக உன்னை ஒருவன் அழைக்கும்போது கடைசி இடத்தில்போய் அமர்ந்துகொள். அப்படிச் செய்தால் உன்னை அழைத்தவன் வந்து உன்னை நோக்கி, 'நண்ப, மேல் இடத்திற்குப் போம்' என்று சொல்வான். அப்பொழுது உன்னுடன் பந்தியிலிருப்பவர் முன்பாக, நீ பெருமை அடைவாய்.

ஏனெனில், தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப் பெறுவான்."

இது ஆண்டவரின அருள்வாக்கு.

# முப்பத்தொன்றாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நெறிதவறினீர்கள், உங்கள் போதனையால் பலரை இடறி விழச்செய்தீர்கள்.**

இறைவாக்கினர் மலாக்கியா ஆகமத்திலிருந்து வாசகம்

*1 : 14b-2 : 2b, 8-10*

"நாமே மாமன்னர், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்; மக்களினங்கள் யாவும் நம் திருப்பெயருக்கு அஞ்சுகின்றன. இப்படியிருக்க, அர்ச்சகர்களே, நாம் உங்களுக்குத் தரும் கட்டளை இதுவே. இதற்கு நீங்கள் செவிமடுக்காவிடில், நம் திருப்பெயருக்கு மகிமை தரும்படி உங்கள் உள்ளத்தில் நீங்கள் கருதாவிட்டால், உங்கள்மேல் சாபத்தை அனுப்புவோம், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்.

ஆனால் நீங்கள் நெறிதவறினீர்கள்; உங்களுடைய போதனையால் பலரை இடறிவிழச் செய்தீர்கள்; லேவியோடு செய்த உடன்படிக்கையைக் கெடுத்து விட்டீர்கள், என்கிறார் சேனைகளின் ஆண்டவர். ஆதலால் எல்லா மக்கள் முன்னிலையிலும் உங்களை இழிவுக்கும் தாழ்வுக்கும் உள்ளாக்குவோம்; ஏனெனில், நம் வழிகளை நீங்கள் கடைப்பிடிக்கவுமில்லை; உங்கள் போதனைகளில் பாரபட்சமும் காட்டினீர்கள்."

நம் யாவருக்கும் ஒரே தந்தையன்றோ? நம்மைப் படைத்தவர் ஒரே கடவுளன்றோ? பின்னர் ஏன் நாம் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கம் தவறுகிறோம், நம் தந்தையரின் உடன்படிக்கையை முறிக்கிறோம்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 130 : 1, 2 3

பல்லவி: ஆண்டவரே, என் ஆன்மா அமைதிபெற
உம் திருமுன் அதை வைத்துக் காத்தருளும்.

1 ஆண்டவரே, என் இதயம் இறுமாப்பு கொள்ளவில்லை:
என் பார்வை மேட்டிமையோடு விளங்கவில்லை.
பெரிய காரியங்களையோ, என் ஆற்றலுக்கு மிஞ்சின காரியங்களையோ
நான் தேடவில்லை. பல்லவி

2 மாறாக, தாயின் மடியில் குழந்தையிருப்பதுபோல
என்னுள் என் ஆன்மா அமைதியுடன் இருக்கும்படி
பார்த்துக் கொண்டேன்;
குழந்தையைப்போல் என் உள்ளம் அமைதியாய் இருக்கிறது. பல்லவி

3 இஸ்ராயேலே, ஆண்டவர்மீது நம்பிக்கை வை:
இன்றும் என்றும் அவரை நம்பு. பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுளின் நற்செய்தியை மட்டுமன்று, எங்களை முழுவதுமே
உங்களுக்குக் கையளிக்க ஆவலாய் இருந்தோம்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 7b-9, 13

சகோதரர்களே:

தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதுபோல் உங்களிடையே அன்பாய் நடந்துகொண்டோம். உங்கள்மீது இத்தகைய ஏக்கமுள்ளவர்களாய் உங்களுக்குக் கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்று, எங்களை முழுவதுமே கையளிக்க ஆவலாய் இருந்தோம். உங்கள்மேல் எங்களுக்கு அவ்வளவு அன்பு இருந்தது! ஆம், சகோதரர்களே, நாங்கள் எவ்வாறு பாடுபட்டு உழைத்தோம் என்பதை நினைவுகூருங்கள். உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி எங்கள் பிழைப்புக்காக இராப்பகலாய் வேலைசெய்துகொண்டே கடவுளின் நற்செய்தியை உங்களுக்கு அறிவித்தோம்.

நாங்கள் அறிவித்த கடவுளுடைய வார்த்தையை நீங்கள் பெற்றுக்கொண்டபோது அதை மனித வார்த்தையாக ஏற்றுக்கொள்ளவில்லை;

கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டீர்கள். இதற்காக இடைவிடாது கடவுளுக்கு நன்றிகூறுகிறோம். உள்ளபடியே அது கடவுளுடைய வார்த்தைதான். அதுவே விசுவசிக்கும் உங்களுக்குள் செயலாற்றுகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

மத். 23 : 9a, 10b

அல்லேலூயா. விண்ணில் உள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை:
மெசியா ஒருவரே உங்கள் குருவுமாவார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அவர்கள் சொல்லுகிறார்கள், செய்வதில்லை.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 23: 1-12

அக்காலத்தில்: யேசு தம் சீடரையும் மக்கட்கூட்டத்தையும் நோக்கிக் கூறியதாவது:

"மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோயிசனுடைய இருக்கையில் அமர்ந்துள்ளனர். அவர்கள் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் கடைப்பிடித்து நடங்கள். ஆனால், அவர்கள் செய்வதுபோல் செய்யாதீர்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள்; செய்வதில்லை. பளுவான சுமையைக் கட்டி மக்களுடைய தோள்மேல் வைக்கிறார்கள்; தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்கமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டுமென்றே செய்கிறார்கள். ஏனெனில், அவர்கள் தம் சீட்டுப் பட்டங்களை அகலமாக்கிக் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதலிடங்களையும், செபக்கூடங்களில் முதல் இருக்கைகளையும் விரும்புகின்றனர். பொது இடங்களில் வணக்கம் பெறவும், மக்களால் 'ராபி' எனப்படவும் ஆசிக்கின்றனர்.

நீங்களோ 'ராபி' என்று அழைக்கப்படவேண்டாம். ஏனெனில், உங்கள் போதகர் ஒருவரே: நீங்கள் அனைவரும் சகோதரர். மண்ணுலகில் ஒருவரையும் தந்தையென்று கூறவேண்டாம். ஏனெனில், விண்ணுலகிலுள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை. குரு என்றும் அழைக்கப்படவேண்டாம். ஏனெனில், மெசியா ஒருவரே உங்கள் குரு.

உங்களுக்குள் பெரியவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் பெறுவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

இஸ்ராயேலே உற்றுக்கேள் :
உன் முழு இதயத்தோடு ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக.

உப ஆகமத்திலிருந்து வாசகம் 6: 2-6

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது :

"உன் வாழ்நாள் நீடிக்கும் பொருட்டு, நான் உனக்கும் உன் புதல்வர்களுக்கும் பேரர்களுக்கும் விதிக்கிற கடவுளின் கட்டளை சட்டங்களையெல்லாம் நீ கைக்கொண்டு, உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி உயிருள்ளவரை நிறைவேற்ற வேண்டும் என்பதேயாம்.

இஸ்ராயேலே, செவிகொடு. உன் தந்தையரின் கடவுளாகிய ஆண்டவர் பாலும் தேனும் பொழியும் நாட்டை உனக்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்ததினால், நீ ஆண்டவர் கட்டளையிட்டபடி நடக்கக் கவனமாயிருப்பாயானால் நன்மையையும் பெறுவாய்; அதனோடு மேன் மேலும் பெருகுவாய்.

இஸ்ராயேலே, உற்றுக்கேள். நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆன்மாவோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக. இன்று நான் உனக்குக் கற்பிக்கிற இந்த வார்த்தைகள் உன் இதயத்திலே பதியக்கடவன".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 17 : 1-2a, 2bc-3, 46 & 50ab (பல்லவி : 1)

பல்லவி : என் ஆற்றலாய் உள்ளவரே, ஆண்டவரே,
உமக்கு நான் அன்பு செய்கிறேன்.

1 என் ஆற்றலாய் உள்ளவரே, ஆண்டவரே,
உமக்கு நான் அன்பு செய்கிறேன் :
2 ஆண்டவரே, நீரே என் கற்பாறை,
என் அரண், என் மீட்பர். பல்லவி

என் இறைவனும் உள்ளவரே,
நான் அடைக்கலம் புகுவதற்கு ஏற்ற கோட்டையாக உள்ளவரே,
என் கேடயமும் எனக்கு மீட்பளிக்கும் வலிமையும்
என் அடைக்கலமுமாக உள்ளவரே!
3 புகழ்ச்சிக்குரிய ஆண்டவரை நான் கூவி அழைப்பேன்:
என் எதிரிகளின்று மீட்படைவேன். பல்லவி

46 ஆண்டவர் வாழ்க.
என் கற்பாறையாகிய அவர் வாழ்த்தப்பெறுவாராக:
என் மீட்பரான இறைவன் பெரிதும் புகழப்படுவாராக.
50 நீர் ஏற்படுத்திய அரசருக்குப் பெரிய வெற்றிகளை அளித்தவர் நீரே:
உம்மால் அபிஷேகமான தாவீதுக்கு இரக்கம் காட்டுபவர் நீரே. பல்லவி

## இரண்டாம் வாசகம்

*இவர் என்றென்றும் நிலைத்திருப்பதால்,*
*மாறாத குருத்துவத்தைப் பெற்றிருக்கிறார்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 7:23-28

சகோதரர்களே:

பழைய ஏற்பாட்டின் குருக்கள் நிலைத்திராதபடி சாவு தடுத்ததால் குருக்கள் பலர் ஏற்படலாயினர். இவரோ என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவத்தைப் பெற்றுள்ளார். ஆகையால் தம் வழியாகக் கடவுளை அணுகிச் செல்வோரை முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார்.

நமக்கேற்ற தலைமைக் குரு எத்தகையவரெனில்: புனிதர், குற்றமில்லாதவர், மாசற்றவர், பாவிகளின்று பிரிக்கப்பட்டு வானகங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர். ஏனைய தலைமைக் குருக்கள் செய்வதுபோல், இவர் முதன்முதலில் தம்முடைய பாவங்களுக்காகவும், பின்பு மக்களுடைய பாவங்களுக்காகவும் நாள்தோறும் பலி ஒப்புக்கொடுக்கத் தேவையில்லை. ஏனெனில், தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தபோது ஒரே முறையில் எக்காலத்திற்குமே பலியை நிறைவேற்றி விட்டார்.

திருச்சட்டம் குறைபாடுள்ள மனிதர்களையே தலைமைக் குருக்களாக ஏற்படுத்துகிறது. அச் சட்டத்துக்குப் பின் வந்த ஆணையோடு கூடிய திருவாக்கு என்றென்றும் நிறைவு பெற்ற மகனையே குருவாக ஏற்படுத்துகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அரு 14 : 23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால்,
என் வார்த்தையைக் கேட்பான் ;
என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார் ;
நாங்களும் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதுவே முதல் கட்டளை; இரண்டாவது இதற்கு ஒத்ததே.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12 : 28b-34

( பக்கம் 125 காண்க )

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**அனைவருக்கும் நீர் இரக்கம் காட்டுகிறீர் ; ஏனெனில்
அனைத்தின்மீதும் அன்பு செலுத்துகிறீர்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 11 : 23-12 : 2

ஆண்டவரே, தராசுத் தட்டில் நுண்ணிய எடை வேறுபாடு காட்டும் மிகச் சிறிய துரும்புபோலும், நிலத்தில் விழும் காலைப்பனிநீர்த் துளியைப் போலும் உம் முன்னிலையில் இந்த உலகமுழுவதும் இருக்கிறது. அனைவர்க்கும் நீர் இரக்கம் காட்டுகிறீர்; ஏனெனில் உம்மால் எல்லாம் செய்ய இயலும்; மனிதர்கள் மனம் வருந்துவதற்கு வாய்ப்பளிக்கவே அவர்கள் பாவங்களைப் பார்த்தும் பாராமல் இருக்கிறீர். ஆம், நீர் உண்டாக்கிய அனைத்தின்மீதும் அன்பு கூருகிறீர்; படைத்தவற்றுள் எதையும் நீர் அருவருத்துத் தள்ளுகிறதில்லை; ஏனெனில் நீர் எதையேனும் வெறுத்துப் பகைத்திருந்தால், அதை உண்டாக்கியிருக்கவே மாட்டீர்.

உமக்குத் திருவுளமில்லாமல் இருந்திருந்தால், எதுதான் அழியாமல் நிலைத்திருக்கக்கூடும்? உம்மால் அழைக்கப்படாதிருந்தால், எதுதான் காப்பாற்றப்படக் கூடும்? உயிரினங்கள்மேல் அன்புள்ளவரே, நீர் எல்லாவற்றையும் காத்து வருகிறீர்; ஏனெனில் யாவும் உம்முடையவையே !

உமது சாகாத உயிர்மூச்சு அனைத்திலும் இருக்கிறது; ஆகையால், மீறுகிறவர்களை நீர் சிறிது சிறிதாய்க் கண்டிக்கிறீர்; அவர்கள் எந்தக் காரியங்களில் பாவம் செய்கிறார்களோ அந்தக் காரியங்களை நினைவுபடுத்தி எச்சரிக்கை செய்கிறீர்; ஆண்டவரே, அவர்கள் தீமையினின்று விடுபடவும், உம்மில் தங்கள் நம்பிக்கையை வைக்கவுமே நீர் இவ்வாறு செய்கிறீர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144 : 1-2, 8-9, 10-11, 13cd-14 (பல்லவி : 1 காண்)*

பல்லவி : என் இறைவா, என் அரசே, என்றென்றும்
நான் உமது திருப்பெயரை வாழ்த்துவேன்.

1 என் இறைவா, என் அரசே, நான் உம்மைப் புகழ்ந்து பாடுவேன்:
என்றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.
2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன்:
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன். பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்:
சினங் கொள்ளத் தாமதிப்பவர், அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்:
தம் படைப்புகள் அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக:
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக:
உமது ஆற்றலைப் பறைசாற்றுவார்களாக. பல்லவி

13 ஆண்டவர் தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவராயிருக்கிறார்.
தம் செயல்களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார்:
தாழ்த்தப்பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் வழியாக கிறிஸ்துவின் பெயருக்கும், அவருள் உங்களுக்கும் மகிமை உண்டாகும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 11-2 : 2

சகோதரர்களே :

உங்களுக்காக என்றும் செபிக்கிறோம்; நம் கடவுள் தாம் விடுத்த அழைப்பிற்கு உங்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குவாராக. உங்கள் நற்கருத்து ஒவ்வொன்றையும், விசுவாசத்தால் ஏவப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வாராக. இவ்வாறு நம் கடவுளும் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவும் அளிக்கும் அருளுக்கேற்ப, உங்கள் வழியாக நம் ஆண்டவராகிய யேசுவின் பெயருக்கும், அவருள் உங்களுக்கும் மகிமை உண்டாகும்.

சகோதரர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும், அவரோடு நாம் ஒன்று கூடுதல்பற்றியும் உங்களுக்கு நாங்கள் சொல்ல விரும்புவது : ஆண்டவருடைய நாள் வந்துவிட்டது என யாராவது தேவ ஆவியின் வாக்காகவோ, திருவுரையாகவோ, நாங்கள் எழுதிய கடிதத்தின் செய்தியாகவோ சொன்னால், நீங்கள் உடனே நிலைகுலைந்து மனங்கலங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 3 : 16

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவனும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு, அந்த ஒரு பேரான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இழந்துபோனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்தார்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**
19: 1-10

அக்காலத்தில் :

யேசு யெரிக்கோவுக்கு வந்து அதனூடே போய்க்கொண்டிருந்தார். அங்கே சக்கேயு என்னும் ஒருவன் இருந்தான். அவன் தலைமை ஆயக்காரன், பெரிய பணக்காரன். யேசு யாரென்று பார்க்க வழிதேடினான். கூட்டமாயிருந்ததாலும், அவன் குள்ளனாயிருந்ததாலும் அவரைப் பார்க்க முடியவில்லை. அவரைக் காணும் பொருட்டு முன்னே ஓடி ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக்கொண்டான். ஏனெனில், அவர் அவ்வழியே வரவிருந்தார்.

யேசு அந்த இடத்திற்கு வந்தபோது, ஏறெடுத்து அவனை நோக்கி, "சக்கேயுவே, விரைவாய் இறங்கி வா. இன்று உன் வீட்டில் நான் தங்க வேண்டும்" என்றார். அவன் விரைவாய் இறங்கி மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றான். இதைக் கண்ட அனைவரும், "பாவியோடு தங்குவதற்குப் போயிருக்கிறாரே" என்று முணுமுணுத்தனர்.

ஆனால் சக்கேயு எழுந்து, "ஆண்டவரே, இதோ! என் உடைமையில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவனையாவது ஏமாற்றி எதையாவது கவர்ந்திருந்தால், நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று ஆண்டவரிடம் சொன்னான்.

அதற்கு யேசு, "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. இவனும் ஆபிரகாமின் மகன்தானே. இழந்துபோனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக, கீழ்ப்படியாமையின் கொடுமையால் அனைவரும் கட்டுண்டு கிடக்கச் செய்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *11: 29-36*

சகோதரர்களே:

கடவுள் தாம் கொடுத்த வரங்களையும், விடுத்த அழைப்பையும் திருப்பி வாங்கிக்கொள்வதில்லை. ஒரு காலத்தில் நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தீர்கள்; இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினால் நீங்கள் இரக்கம் பெற்றுக்கொண்டீர்கள். அதுபோல நீங்கள் இரக்கம் பெற்றுக்கொண்டதால் அவர்கள் இப்பொழுது கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள்; அவர்கள் இப்படிக் கீழ்ப்படியாமல் இருப்பது, அவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வதற்கே. ஏனெனில், அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகக் கடவுள் அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டுகிடக்கச் செய்தார்.

கடவுளின் அருட்செல்வம் எத்துணை மிகுதியானது! அவரின் ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. 'ஏனெனில், ஆண்டவரின் மனத்தை அறிபவர் யார்? அவருக்கு ஆலோசனை சொல்லக்கூடியவர் யார்? கைம்மாறாக ஏதாவது பெற்றுக்கொள்ள முன்னதாகவே அவரிடம் கொடுத்துவைத்தவர் யார்? ஏனெனில், யாவும் அவரிடமிருந்தே வந்தன, அவராலேயே உண்டாயின, அவருக்காகவே இருக்கின்றன. அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாகுக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 68 : 29-30, 32-33, 35-36 ( பல்லவி 13 cd )

பல்லவி : மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கேற்ப,
ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.

29 நானோவெனில் சிறுமையுற்றவனும் துயர்மிக்கவனும் ஆனேன்.
இறைவா, உமது அருட்துணை என்னைக் காப்பதாக.
30 புகழ் இசைத்து இறைவனின் பெயரைப் புகழ்வேன் :
நன்றி உணர்வோடு அவர் புகழ் சாற்றுவேன். பல்லவி

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்.
இறைவனைத் தேடுவோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.
33 ஏனெனில், ஏழைகளின் குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார் :
சிறைப்பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

35 ஏனெனில், கடவுள் சீயோனுக்கு மீட்பளிப்பார் :
யூதாவின் நகரங்களைக் கட்டி எழுப்புவார் :
36 அவர்கள் அங்குக் குடியிருப்பர், அதை உரிமையாக்கிக்கொள்வர்.
அவருடைய ஊழியர்கள் வழிவந்தோர் அதை உரிமைப்படுத்திக்கொள்வர்:
அவர்மீது அன்பு கொள்பவர் அதில் வாழ்வார்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீங்கள் ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவுபெறச் செய்தருளும்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 1-4

சகோதரர்களே :

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு ஊக்கம் ஊட்டுவதெனில், அன்பினால் ஆறுதல் விளைவிப்பதெனில், ஆவியானவரோடு நட்புறவு தருவதெனில், பரிவும் இரக்கமும் உண்டாக்குவதெனில், நீங்கள் ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவுபெறச் செய்யுங்கள் ; ஒரே அன்பும், ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டிருங்கள். போட்டி மனப்

பாராட்டுக்கும், வீண் பெருமைக்கும் இடம் தரவேண்டாம். மனத்தாழ்ச்சியோடு மற்றவரை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள். உங்களுள் ஒவ்வொருவரும் தன்னலத்தையே நாடாது, பிறர் நலத்தையும் நாடவேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 130 : 1, 2, 3

பல்லவி: ஆண்டவரே, என் ஆன்மா அமைதிபெற
உம் திருமுன் அதை வைத்துக் காத்தருளும்.

1 ஆண்டவரே, என் இதயம் இறுமாப்புகொள்ளவில்லை;
என் பார்வை மேட்டிமையோடு விளங்கவில்லை.
பெரிய காரியங்களையோ,
என் ஆற்றலுக்கு மிஞ்சின காரியங்களையோ நான் தேடவில்லை. பல்லவி

2 மாறாக, தாயின் மடியில் குழந்தையிருப்பதுபோல
என்னுள் என் ஆன்மா அமைதியுடன் இருக்கும்படி
பார்த்துக் கொண்டேன்;
குழந்தையைப்போல் என் உள்ளம் அமைதியாய் இருக்கிறது. பல்லவி

3 இஸ்ராயேலே, ஆண்டவர்மீது நம்பிக்கை வை :
இன்றும் என்றும் அவரை நம்பு. பல்லவி

அல்லேலூயா

அரு. 8 : 31b-32

அல்லேலூயா. என் வார்த்தையில் நிலைத்து இருப்பீர்களாகில்
உண்மையாகவே என் சீடராயிருப்பீர்கள்,
உண்மையையும் அறிவீர்கள், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**உன் நண்பர்களேயல்ல, ஏழைகளேயும் ஊனர்களேயும் கூப்பிடு.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
14: 12-14

அக்காலத்தில் :

யேசு தம்மை அழைத்த பரிசேயரின் தலைவனை நோக்கிக் கூறியதாவது :

"நீ பகல் உணவிற்காவது, இரா உணவிற்காவது உன் நண்பர்களையோ, சகோதரர்களையோ, உறவினர்களையோ, செல்வரான அண்டை வீட்டாரையோ அழைக்காதே. அவர்களும் உன்னைத் திரும்ப அழைக்கலாம். அப்போது உனக்குக் கைம்மாறு கிடைத்துவிடும். மாறாக, நீ விருந்து நடத்தும்போது ஏழைகள், ஊனர்கள், முடவர்கள், குருடர்கள் ஆகியோரைக் கூப்பிடு. அப்போது நீ பேறு பெற்றவன். ஏனெனில், உனக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்.
12: 5-16 a

சகோதரர்களே:

பலராயிருக்கிற நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம். ஆயினும், நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு வரங்களைப் பெற்றுள்ளோம்: நாம் பெற்றது இறைவாக்கு வரமாயின், விசுவாசத்திற்கு இசைந்தவாறு அதைப் பயன்படுத்த வேண்டும்; திருப்பணி வரமாயின்,

பணிபுரிய வேண்டும்: போதிப்பவன் போதிப்பதிலும், ஊக்கமூட்டுபவன் ஊக்கந்தருவதிலும் ஈடுபடுக. தனக்குள்ளதைக் கொடுப்பவன் வள்ளன்மையும், தலைமையாய் உள்ளவன் அக்கறையும், இரக்கச் செயல்களில் ஈடுபடுபவன் முகமலர்ச்சியும் காட்டுக.

உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொண்டிருங்கள். சகோதரர்க்குரிய முறையில் ஒருவர்க்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள் ; பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள். ஊக்கந் தளராதிருங்கள்; ஆர்வம் தணியாதிருங்கள் ; நீங்கள் ஊழியஞ் செய்வது ஆண்டவருக்கே. நம்பிக்கை கொண்டவர்களாய் மகிழ்ச்சியோடு இருங்கள்; வேதனையில் மன உறுதியோடு இருங்கள்; செபத்தில் நிலையாய் இருங்கள். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களுக்குள்ளதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள்.

உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள் ; ஆம், ஆசி கூறுங்கள், சபிக்க வேண்டாம். மகிழ்வாரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள். உங்களுக்குள் ஒன்றுபட்டு வாழுங்கள். உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்ந்தவர்களோடு அன்பாய்ப் பழகுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 130 : 1, 2, 3

பல்லவி : ஆண்டவரே, என் ஆன்மா அமைதிபெற
உம் திருமுன் அதை வைத்துக் காத்தருளும்.

1 ஆண்டவரே, என் இதயம் இறுமாப்பு கொள்ளவில்லை :
என் பார்வை மேட்டிமையோடு விளங்கவில்லை.
பெரிய காரியங்களையோ, என் ஆற்றலுக்கு மிஞ்சின காரியங்களையோ
நான் தேடவில்லை. பல்லவி

2 மாறாக, தாயின் மடியில் குழந்தையிருப்பதுபோல என்னுள்
என் ஆன்மா அமைதியுடன் இருக்கும்படி பார்த்துக்கொண்டேன் ;
குழந்தையைப்போல் என் உள்ளம் அமைதியாய் இருக்கிறது. பல்லவி

3 இஸ்ராயேலே, ஆண்டவர்மீது நம்பிக்கை வை :
இன்றும் என்றும் அவரை நம்பு. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**தம்மையே தாழ்த்தினார்; ஆதலால் கடவுள் அவரை உயர்த்தினார்.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்** *2 : 5-11*

**சகோதரர்களே :**

**கிறிஸ்து யேசுவில் இருந்த மன நிலையே உங்களிலும் இருப்பதாக :**

**கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார்.**

**மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே, யேசுவின் பெயருக்கு விண்ணவர் மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட, 'யேசு கிறிஸ்து ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும்.**

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

### பதிலுரைப் பாடல்

*சங். 21 : 25 b-26, 27-29 a, 30-31 (பல்லவி : 25 a )*

*பல்லவி :* **ஆண்டவரே, பேரவையில் உம்மைப் புகழும் வரம்**
**உம்மிடமிருந்தே எனக்குண்டு.**

5 **அவருக்கு அஞ்சுவோர் முன்னிலையில்**
**என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.**
6 **எளியோர் உண்பர், நிறைவு பெறுவர்,**
**ஆண்டவரைத் தேடுவோர் அவரைப் புகழ்வர் :**
**'உங்களுடைய நெஞ்சங்கள் என்றென்றும் வாழ்க!' என்பர்.** *பல்லவி*

27 பூவுலகின் கடையெல்லைகளில் உள்ளவர்கள் அனைவருமே
இதை நினைத்து ஆண்டவரிடம் திரும்புவார்கள்.
உலகின் மக்களினங்களெல்லாம் அவர் திருமுன் விழுந்து வணங்குவார்கள்.
28 ஏனெனில், ஆண்டவருடையதே அரசு :
நாடுகள் அனைத்தின்மீதும் ஆட்சி செலுத்துபவர் அவரே.
29 தரையினுள் துஞ்சுவோர் யாவரும்
அவரை மட்டுமே ஆராதிப்பர். பல்லவி

30 என் சந்ததியார் அவருக்கே ஊழியம் செய்வர் :
31 வரப்போகிற தலைமுறையினருக்கு
ஆண்டவரைக் குறித்துத் தெரிவிப்பார்கள்.
பிறக்கப்போகும் மாந்தர்க்கு அவருடைய நீதியைக் குறித்து,
'இதெல்லாம் ஆண்டவருடைய செயல்' என்று அறிவிப்பார்கள். பல்லவி

அல்லேலூயா மத். 11 : 28

அல்லேலூயா. சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே,
எல்லாரும் என்னிடம் வாருங்கள் :
உங்களை நான் இளைப்பாற்றுவேன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*சாலைகளிலும் வேலியோரங்களிலும் போய், என் வீடு நிறையும்படி, மக்களை வற்புறுத்திக் கூட்டி வா.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14 : 15-24

அக்காலத்தில் :

யேசுவுடன் பந்தியில் இருந்தவர்களுள் ஒருவன் இதைக் கேட்டு அவரை நோக்கி, "கடவுளின் அரசில் விருந்து உண்பவன் பேறுபெற்றவன்" என்றான்.

அதற்கு அவர் கூறியதாவது : "ஒருவன் பெரிய விருந்து செய்ய விரும்பிப் பலரை அழைத்தான். விருந்துக்கு நேரமானதும் 'எல்லாம் ஏற்பாடாயிற்று வாருங்கள்' என்று அழைக்கப் பெற்றவர்களிடம் சொல்லும்படி தன் ஊழியனை அனுப்பினான். எல்லாரும் ஒன்றுபோல் சாக்கு சொல்லத் தொடங்கினர். 'தோட்டம் வாங்கியிருக்கிறேன். அதை நான் கட்டாயம் போய்ப் பார்க்க வேண்டும். என்னை மன்னிக்க வேண்டுகிறேன்' என்றான் ஒருவன். 'நான் ஐந்து ஏர் மாடு வாங்கியிருக்கிறேன்.

அவற்றை ஓட்டிப்பார்க்கப் போகிறேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன்' என்றான் இன்னொருவன். 'நான் மணமுடித்துள்ளேன். ஆதலால் என்னால் வர முடியாது' என்றான் வேறொருவன்.

ஊழியன் திரும்பி வந்து இதையெல்லாம் தன் தலைவனுக்கு அறிவித்தான். வீட்டுத் தலைவன் சினமுற்றுத் தன் ஊழியனிடம், 'நகரத்தின் தெருக்களிலும் சந்துகளிலும் விரைவில் சென்று, ஏழைகள், ஊனர்கள், குருடர்கள், முடவர்கள் ஆகியோரை இங்கே கூட்டிவா' என்றான். ஊழியனும் 'ஐயா, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று; இன்னும் இடமிருக்கிறது' என்றான். அதற்குத் தலைவன், 'சாலைகளிலும் வேலியோரங்களிலும் போய் என் வீடு நிறையும்படி மக்களை வற்புறுத்திக் கூட்டிவா.

அழைக்கப் பெற்றவர்களுள் எவனும் என் விருந்தைச் சுவைக்க மாட்டான் என உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**திருச்சட்டத்தின் நிறைவு அன்பே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *13: 8-10*

சகோதரர்களே:

யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செய்வது நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்புகூர்பவன் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகிறான். ஏனெனில், 'விபசாரம் செய்யாதே; கொலை செய்யாதே; களவு செய்யாதே; இச்சிக்காதே, என்னும் கட்டளைகளும் வேறு எந்தக் கட்டளையும் 'உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக' என்னும் ஒரே கட்டளையில், சுருக்கமாய் அடங்கியுள்ளன.

அன்பு பிறர்க்குத் தீமை செய்யாது. ஆகவே, திருச்சட்டத்தின் நிறைவு அன்பே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 111 : 1-2, 4-5, 9 ( பல்லவி : 5அ )*

பல்லவி : **மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதன்
நல்லதைச் செய்கிறான்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறு பெற்றோன்.
அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும்.
நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசிபெறும். பல்லவி

4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்.
கருணை, இரக்கம், நீதி உள்ளவனாய் இருப்பான்.
5 மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்.
தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே. பல்லவி

9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான் :
அவனது ஈகை என்றும் நிலைத்திருக்கும் :
அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும்.

பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள் :
நீங்கள் எதையும் விரும்பவும் செயலாற்றவும் செய்பவர் கடவுளே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *2: 12-18*

சகோதரர்களே :

என் அன்பிற்குரியவர்களே, எப்பொழுதும் கீழ்ப்படிதலோடு நடந்ததுபோல் இப்போதும் நடங்கள். நான் இப்போது உங்களோடு இல்லாவிடினும், உங்களோடு இருந்தபோது நீங்கள் காட்டிய பணிவைவிட மிகுந்த பணிவு காட்டி, அச்ச நடுக்கத்தோடு உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள். நீங்கள் எதையும் விரும்பவும் செயலாற்றவும் தம் திருவுளம் நிறைவேற, உங்களில் செயலாற்றுபவர் கடவுளே.

செய்வதெல்லாம் முணுமுணுக்காமல் வாதாடாமல் செய்யுங்கள். அப்பொழுதுதான் நெறிகெட்ட, சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமின்றி மாசற்றவர்களாய்க் கடவுளின் குழந்தைகளெனத் திகழ்வீர்கள்; வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை வழங்க ஏந்தி நின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத் துலங்குவீர்கள். வீணாக நான் ஓடவில்லை. வெறுமனே நான் உழைக்கவில்லை என்பதற்கு நீங்கள் ஒன்றாய் நின்று, கிறிஸ்துவின் நாளில் நான் பெருமையடையச் செய்வீர்கள்.

உங்கள் விசுவாசமாகிய காணிக்கையை ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் நான் என் இரத்தத்தையே சிந்தவேண்டியிருப்பினும் அது எனக்கு மகிழ்ச்சியே. அம்மகிழ்ச்சியை நான் உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்ளுகிறேன். அதுபோலவே நீங்களும் அகமகிழுங்கள். உங்கள் மகிழ்ச்சியை என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 26 : 1, 4, 13-14 ( பல்லவி : 1 a )*

பல்லவி : ஆண்டவரே என் ஒளி,
ஆண்டவரே என் மீட்பு.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு :
நான் யாருக்கு அஞ்சவேண்டும் ?
ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம்,
யாருக்கு நான் நடுங்கவேண்டும் ?
பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே :
நான் விரும்புவதும் ஒன்றே :
ஆண்டவருடைய இல்லத்தில்
நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும் :
ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும் ;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும்.
பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில்
ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு :
உன் உள்ளம் திடம் கொள்வதாக,
ஆண்டவரை எதிர்ப்பார்த்திரு.
பல்லவி

அல்லேலூயா

1 இரா. 4:14

அல்லேலூயா. கிறிஸ்துவின் பெயருக்காகப் பிறர் உங்களை வசைகூறினல், நீங்கள் பேறுபெற்றவர்கள் :
கடவுளின் ஆவி உங்கள்மீது தங்கும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தன் உடைமையெல்லாம் துறக்காவிடில், உங்களுள் எவனும் என் சீடனுயிருக்க முடியாது.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14:25-33

அக்காலத்தில் :

யேசுவுடன் பெருங்கூட்டம் சென்றுகொண்டிருந்தது. அவர் அவர்கள் பக்கம் திரும்பிக் கூறியதாவது: "என்னிடம் வருகிறவன் தன் தந்தை, தாய், மனைவி, மக்கள், சகோதர சகோதரிகளையும், ஏன், தன் உயிரையுமே வெறுக்காவிட்டால் என் சீடனுயிருக்க முடியாது. தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லாதவன் என் சீடனுயிருக்க முடியாது.

உங்களுள் யாராவது கோபுரங்கட்ட விரும்பினல் வேலையை முடிக்கத் தன்னல் முடியுமாவென்று பார்ப்பதற்கு, முதலில் உட்கார்ந்து, வேண்டிய செலவைக் கணிக்க மாட்டானு? இல்லாவிடில் அதற்கு அடித்தளமிட்டபின் முடிக்க முடியாததைக் கண்ணுறும் யாவரும், "இவன் கட்டத் தொடங்கினன், முடிக்கவில்லை" என்று ஏளனம் செய்வர்.

அல்லது, ஓர் அரசன் மற்ருேர் அரசன்மேல் போர் தொடுக்கப் போகும்முன், இருபதாயிரம் பேருடன் தன்னை எதிர்த்து வருபவனைப் பத்தாயிரம் பேருடன் எதிர்க்க முடியுமோ என்று முதலில் அமர்ந்து ஆராய்ந்து பார்க்கமாட்டானு? எதிர்க்க முடியாதெனில், அவன் இன்னும் தொலைவிலிருக்கும்பொழுதே தூது விடுத்து, சமாதானத்திற்கு ஆவன கோருவான்.

இவ்வாறே தன் உடமை யெல்லாம் துறக்காவிடில் உங்களுள் எவனும் என் சீடனுயிருக்க முடியாது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**வாழ்ந்தாலும், செத்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 14: 7-12

சகோதரர்களே :

நம்முள் எவனும் தனக்கென்று வாழ்வதில்லை. தனக்கென்று சாவதில்லை. வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம், செத்தாலும் ஆண்டவர்க்கென்றே சாகிறோம். ஆகவே வாழ்ந்தாலும் செத்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்.

ஏனெனில் கிறிஸ்து இறந்ததும் உயிர்த்ததும் இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே. அப்படியிருக்க, நீ ஏன் உன் சகோதரனைக் குறித்துத் தீர்ப்பிடுகிறாய்? நீ உன் சகோதரனை ஏன் இழிவாகக் கருதுகிறாய்? நாம் அனைவரும் கடவுளின் நீதியிருக்கை முன் நிறுத்தப்படுவோம் அல்லவா?

ஏனெனில், 'ஆண்டவர் சொல்வது: என் உயிர்மேல் ஆணை, என்முன் எல்லாரும் மண்டியிடுவர், எல்லா நாவுமே கடவுளைப் புகழ்ந்தேத்தும்' என்று எழுதியுள்ளது. ஆகவே, நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்தே கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 26 : 1, 4, 13-14 ( பல்லவி : 13 )

பல்லவி : வாழ்வோர் நாட்டில் ஆண்டவரின் நலன்களை
காண்பேன் என நான் நம்புகிறேன்.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு:
நான் யாருக்கு அஞ்சவேண்டும்?
ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம்,
யாருக்கு நான் நடுங்கவேண்டும்? பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே:
ஆண்டவருடைய இல்லத்தில்
நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்கவேண்டும்;
ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும்;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும். பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில்
ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு:
உன் உள்ளம் திடம் கொள்வதாக; ஆண்டவரை எதிர்பார்த்திரு. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

எனக்கு ஆதாயமானவற்றைக் கிறிஸ்துவின்பொருட்டு
இழப்பு எனக் கருதினேன்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 3-8அ

சகோதரர்களே :

நாமே உண்மையான விருத்தசேதனம் பெற்றுக் கொண்டவர்கள். நாமே கடவுளின் ஆவிக்கேற்ப உண்மை வழிபாடு செலுத்துகிறோம். கிறிஸ்து யேசுவில் நாம் பெருமை பாராட்டுகிறோமே தவிர, உடலைச் சார்ந்ததில் நம்பிக்கை கொள்வதில்லை. நானும் இத்தகையவற்றில் நம்பிக்கை வைக்க முடியும். இத்தகையவற்றில் நம்பிக்கை கொள்ள முடியும் என

ஒருவன் நினைத்தால், நான் அவனைவிட மிகுதியாய் நினைக்க முடியும். நான் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டேன். நானும் இஸ்ராயேல் இனத்தவன். நான் பென்யமீன் குலத்தவன், எபிரேயர் குலத்தில் பிறந்த எபிரேயன். திருச்சட்டத்தைக் கடைப் பிடிப்பதில் பரிசேயன். அதன்மேல் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன். திருச் சட்டத்துக்குரிய நீதியைப் பொறுத்தமட்டில் குற்றமற்றவனாயிருந்தேன்.

ஆனால் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன். ஆம், என் ஆண்டவராம் கிறிஸ்து யேசுவை அறிதலாகிய ஒப்பற்ற செல்வத்தின் பொருட்டு அவை யெல்லாம் இழப்பு எனக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள வும், அவரோடு ஒன்றித்திருக்கவும் எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104 : 2-3, 4-5, 6-7 (பல்லவி : 3 b)*

பல்லவி : ஆண்டவரைத் தேடும் உள்ளம் மகிழ்வதாக.

அல்லது : அல்லேலூயா.

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்; இசைக் கருவி மீட்டுங்கள் :
அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள்.
3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள்:
ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக. பல்லவி

4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்:
அவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள்.
5 ஆண்டவருடைய ஊழியர்களாகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே,
அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய யாக்கோபின் மக்களே. பல்லவி

6 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்:
அவருடைய புதுமைகளையும் அவர் உரைத்த
நீதித்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.
7 ஆண்டவரே நம் கடவுள் :
அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. பல்லவி

அல்லேலூயா மத் 11 28

**அல்லேலூயா.** சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே,
எல்லாரும் என்னிடம் வாருங்கள் :
உங்களை நான் இளைப்பாற்றுவேன், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனந்திரும்பும் ஒரு பாவியைக்குறித்து வானகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15: 1-10

அக்காலத்தில் :

யேசு சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும் அவரை அணுகியவண்ணமாயிருந்தனர்.

அதனால் பரிசேயரும் மறைநூல்வல்லுநரும், "இவர் பாவிகளை வர வேற்கிறார். அவர்களோடு உண்கிறார்" என்று முணுமுணுத்தனர்.

அப்போது அவர் பின்வரும் உவமையைக் கூறினார்: "உங்களுள் ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க, அவற்றில் ஒன்றை இழந்தால், தொண்ணூற்றொன்பது ஆடுகளைப் பாழ்வெளியில் விட்டுவிட்டு, இழந்த ஆட்டைக் கண்டு பிடிக்கும்வரைத் தேடிச் செல்ல மாட்டானா?

கண்டு பிடித்தபின் அதைத் தன் தோள் மேல் போட்டுக்கொண்டு மகிழ்ச்சியோடு வீட்டிற்கு வந்து நண்பர்களையும், அண்டை வீட்டாரையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், இழந்துபோன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பான்.

அவ்வாறே மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனந் திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒரு பெண்ணிடம் இருந்த பத்து வெள்ளிக் காசுகளுள் ஒன்று காணமற் போய்விட்டால், விளக்கேற்றி வீட்டைப்பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்வரை, அவள் அக்கறையோடு தேடுவதில்லையா?

அதைக் கண்டுபிடித்தபின், தன் தோழியரையும் அண்டை வீட்டுப் பெண்களையும் அழைத்து, 'என்னோடு மகிழுங்கள். ஏனெனில், காணுமல் போன வெள்ளிக் காசைக் கண்டுபிடித்து விட்டேன்' என்பாள்.

'அவ்வாறே மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்துக் கடவுளுடைய தூதரிடையே மகிழ்ச்சியுண்டாகும்' என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

புறவினத்தார் இறைவனுக்குகந்த காணிக்கையாகும்படி
அவர்களுக்காக நான் கிறிஸ்து யேசுவின் தொண்டனுயிருக்கிறேன்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 15: 14-21

என் சகோதரர்களே! நீங்கள் நன்னயம் நிறைந்தவர்களாயும், எல்லா அறிவும் நிரம்பப் பெற்றவர்களாயும், ஒருவர்க்கு ஒருவர் அறிவு புகட்டக் கூடியவர்களாயும் இருக்கிறீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆயினும் உங்களுக்கு நினைவூட்டும் வகையில் இக்கடிதத்தின் சில பகுதிகளில் மிகத்துணிவுடன் எழுதியுள்ளேன்; நான் கடவுளின் தனிப்பட்ட அருளைப் பெற்றவன் என்பதால் அவ்வாறு எழுதினேன். அந்த அருள்தான் என்னைப் புறவினத்தாருக்காகக் கிறிஸ்து யேசுவின் திருத்தொண்டனுக்கிற்று. புறவினத்தார் பரிசுத்த ஆவியால் அர்ச்சிக்கப் பட்டதும், இறைவனுக்கு உகந்ததுமான காணிக்கை ஆகும்படி கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே நான் செய்யும் திருத்தொண்டு; அதுவே என் குருத்துவப் பணி.

கடவுளுக்காகச் செய்யும் பணியை முன்னிட்டு கிறிஸ்து யேசுவுக்குள் நான் பெருமை பாராட்டிக்கொள்ள இடமுண்டு. புறவினத்தார் தமக்குக் கீழ்ப்படியும் பொருட்டுக் கிறிஸ்து என் வழியாய்ச் சொல்லாலும் செயலாலும், அருங்குறிகள் அற்புதங்களின் வல்லமையாலும், தேவ ஆவியின் வல்லமையாலும் செய்து முடித்தவற்றைத் தவிர, வேறெதைப் பற்றியும் பேச நான் துணியேன். இவற்றின் விளைவாக, எருசலேமில் தொடங்கி, அதனை மையமாகக்கொண்டு, இல்லிரிக்கம் நாடுவரை எங்கணும் சுற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்து விட்டேன்.

கிறிஸ்துவின் பெயர் கேள்விப்படாத இடங்களில் மட்டும் நற்செய்தி அறிவிப்பதே பெருமையெனக் கருதினேன்; ஏனெனில், வேறொருவர் இட்ட அடிப்படைமீது கட்டிடம் எழுப்ப நான் விரும்பவில்லை. ஆனால் எழுதியுள்ளபடி: 'அவரைப்பற்றி அறிவிக்கப்படாதவர்கள் காண்பார்கள், அவரைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் உணர்வார்கள்.'

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1, 2-3 ab, 3 cd-4 (பல்லவி. 2b காண்)

பல்லவி: ஆண்டவர் தம் மீட்பை
மக்களினத்தார் காண வெளிப்படுத்தினார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்:
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.
அவரது வலக்கரமும் புனித புயமும்
அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்;
மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்:
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உரு மாற்றுவார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 17-4 : 1

சகோதரர்களே, நீங்கள் அனைவரும் ஒருமிக்க என்னைப்போல் நடங்கள், நாங்கள் உங்களுக்கு முன்மாதிரி. அந்த முன்மாதிரியைப் பின்பற்றுபவர்களைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளாய்

நடப்போர் பலர் உள்ளனர். இதை உங்களுக்குப் பலமுறை கூறியுள்ளேன்; இப்போதும் கண்ணீரோடு சொல்லுகிறேன். அழிவே அவர்கள் முடிவு, வயிறே அவர்கள் கடவுள், மானக்கேடே அவர்கள் மகிமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்ததே.

நமக்கோ வானகமே தாய்நாடு. அங்கிருந்து மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவே அந்த மீட்பர். அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்த வல்ல ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்.

ஆகவே என் அன்புச் சகோதரர்களே, என் வாஞ்சைக்குரியவர்களே, நீங்களே என் மகிழ்ச்சி, நீங்களே என் வெற்றி வாகை. அன்புக்குரியவர்களே, நான் கூறியவாறு ஆண்டவருக்குள் நிலைத்திருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 121 : 1-2, 4b 5, (பல்லவி : 1)*

பல்லவி : **மகிழ்ச்சியுடன் ஆண்டவர் தம் இல்லம் செல்வோம்.**

1 ஆண்டவர் தம் இல்லம் செல்வோம் என்று எனக்குச் சொல்லினர்:
நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.
2 எருசலேமே, இதோ உன் வாயிலில் வந்து நிற்கின்றோம். பல்லவி

4 ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன :
இஸ்ராயேலின் சட்டப்படி ஆண்டவருடைய திருப்பெயரைப்
போற்றச் செல்கின்றன.
5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன :
தாவீதின் இல்லத்து அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

## அல்லேலூயா

1 அரு. 2 : 5

**அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால்,
அவனிடம் கடவுளன்பு உண்மையாக
நிறைவாகியுள்ளது. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தம்போன்றவர்களிடத்தில் மிக்க விவேகமுள்ளவர்களாய் இருக்கின்றனர்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16 : 1-8

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குச் சொன்னதாவது:

"பணக்காரன் ஒருவனிடம் கண்காணிப்பாளன் ஒருவன் இருந்தான். தன் தலைவனின் உடைமைகளை விரயம் செய்ததாக அவன்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

தலைவன் அவனை அழைத்து, "என்ன இது? நான் உன்னைப்பற்றி இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேன். உன் கண்காணிப்புக் கணக்கை ஒப்புவி. நீ இனி என் கண்காணிப்பாளனாய் இருக்க முடியாது" என்றான்.

அப்போது கண்காணிப்பாளன், 'இனி என்ன செய்வது? கண்காணிப்பினின்று என்னைத் தலைவன் நீக்கிவிடப் போகிறானே. மண் வெட்டவோ எனக்கு வலிமையில்லை; பிச்சையெடுக்கவோ வெட்கமாய் இருக்கிறது. கண்காணிப்பினின்று நான் தள்ளப்படும்போது, பிறர் என்னைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளும்படி என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பின்பு, அவன் தன் தலைவனிடம் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக அழைத்தான். ஒருவனைப் பார்த்து, 'என் தலைவனிடம் நீ எவ்வளவு கடன்பட்டிருக்கிறாய்?' என்று கேட்க, அவன், 'நூறுகுடம் எண்ணெய்' என்றான். அதற்கு அவன், 'இதோ! உன் கடன் பத்திரம், உட்கார்ந்து ஐம்பது என்று உடனே எழுது' என்றான். பின்னர், மற்றொருவனிடம், "நீ எவ்வளவு கடன்பட்டிருக்கிறாய்?' என, அவன், "நூறு கலம் கோதுமை' என்றான். அதற்கு அவன், "இதோ! உன் கடன் பத்திரம், எண்பது என எழுது" என்றான்.

அந்த அநீத கண்காணிப்பாளன் விவேகத்தோடு நடந்துகொண்டதற்காகத் தலைவன் அவனை மெச்சிக்கொண்டான். ஏனெனில், ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தம்போன்றவர்களிடத்தில் மிக்க விவேகமுள்ளவர்களாய் இருக்கின்றனர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**பரிசுத்த முத்தங்கொடுத்து, ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *16 : 3-9, 16, 22-27*

சகோதரர்களே :

கிறிஸ்து யேசுவுக்குள் என் உடனுழைப்பாளிகளான பிரிஸ்காளுக்கும் ஆக்கிலாவுக்கும் என் வாழ்த்து. இவர்கள் என் உயிரைக் காக்கத் தங்கள் தலையைக் கொடுக்கவும் முன்வந்தனர் ; அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் ; நான் மட்டுமன்று, புறவினத்தார் நடுவில் உள்ள சபைகள் அனைத்தும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன. அவர்கள் வீட்டிலிருக்கும் சபைக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள்.

என் அன்புக்குரிய எப்பைனத்துக்கும் வாழ்த்துக் கூறுங்கள். ஆசியாவில் கிறிஸ்துவுக்குக் கிடைத்த முதற்கனி இவரே. உங்களுக்காக மிக உழைத்த மரியாளுக்கு வாழ்த்துத் தெரிவியுங்கள். என் உறவினரும் உடன் கைதிகளுமான அந்திரோனீக்கு, யூனியா ஆகியோருக்கும் என் வாழ்த்துக்கள் ; அப்போஸ்தலர்களுள் இவர்கள் பேர்பெற்றவர்கள் ; இவர்கள் எனக்கு முன் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆண்டவருக்குள் என் அன்பார்ந்த அம்பிலியாத்துக்கு என் வாழ்த்துக்கள். கிறிஸ்துவுக்குள் என் உடனுழைப்பாளியான உர்பானுக்கும், என் அன்புள்ள ஸ்தாக்கிக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள்.

பரிசுத்த முத்தம் கொடுத்து ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் எல்லாச் சபைகளும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றன.

இந்தக் கடிதத்தை எழுதிக்கொடுத்த தெர்த்தியுவாகிய நான் ஆண்டவருக்குள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். நான் தங்கவும் சபையினர் கூடவும் தம் வீட்டில் இடமளிக்கும் காயு உங்களுக்கு வாழ்த்துச் சொல்கிறார். நகரத்தின் பொருளாளரான எரஸ்தும், சகோதரனாகிய குவர்த்துவும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள்.

ஊழி ஊழிக் காலமாக மறைவாயிருந்து இப்பொழுது வெளியாக்கப் பட்டு முடிவில்லாக் கடவுளின் திட்டத்திற்கொப்ப, புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு இறைவாக்குகளின் மூலமாய்

அறிவிக்கப்பட்ட மறைபொருளை வெளிப்படுத்தும் என் நற்செய்தியின் படியும், யேசு கிறிஸ்துவைப்பற்றிய தூதுரையின்படியும், உங்களை உறுதிப் படுத்த வல்லவரும் ஞானமே உருவும் ஆன கடவுள் ஒருவருக்கே யேசு கிறிஸ்துவின் வழியாய் என்றென்றும் மகிமை உண்டாவதாக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144 : 2-3, 4-5, 10-11 (பல்லவி : 1 காண்)*

பல்லவி : என் இறைவா, என் அரசே, என்றென்றும்
நான் உமது திருப்பெயரை வாழ்த்துவேன்.

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன்.
என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.
3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர் :
அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

தலைமுறை தலைமுறையாக
4 மனிதர் உம்முடைய செயல்களை எடுத்துரைப்பர் :
தலைமுறை தலைமுறையாக உமது வல்லமையை வெளிப்படுத்துவார்கள்.
உம்முடைய மகத்துவத்தின் சொல்லரிய மாட்சிமையைப் பற்றிப் பேசுவர்.
5 உம் வியத்தகு செயல்களை எடுத்துரைப்பர். பல்லவி

ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
10 உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக.
11 உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 10-19

சகோதரர்களே :

என்மீது உங்களுக்கு இருந்த அக்கறை இப்போதாவது மலர்ந்தது கண்டு ஆண்டவருக்குள் நான் பெரிதும் அகமகிழ்ந்தேன். அந்த அக்கறை ஏற்கெனவே உங்களுக்கு இருந்தது. அதைக் காட்ட வாய்ப்புக் கிடைக்கவில்லை. நான் இவ்வாறு சொல்லுவது எனக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு குறையினாலன்று. ஏனெனில், எந்நிலையிலும் போதுமென்ற மனத்தோடு வாழக் கற்றுக்கொண்டேன்.

வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத்தெரியும், வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவுற்று வாழவோ, குறைவுற்றுத் தாழவோ, எதற்கும் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. ஆயினும் நான் பட்ட வேதனையில் நீங்கள் பங்குகொண்டதற்கு நன்றி.

பிலிப்பியர்களே, உங்களுக்குத் தெரிந்திருப்பதுபோல், நற்செய்தியை நான் போதிக்கத் தொடங்கின காலத்தில் மக்கதோனியாவைவிட்டு, வெளிக்கிளம்பியபொழுது, உங்களைத் தவிர வேறு எந்தச் சபையும் என் வரவு செலவு கணக்கில் இடம் பெறவில்லை. நான் தெசலோனிக்கேயில் இருந்தபோது என் தேவையைப் போக்க ஒருமுறை மட்டுமன்று, இருமுறை உதவி அனுப்பினீர்கள். நன்கொடைகளல்ல நான் நாடுவது; நான் நாடுவதெல்லாம் உங்கள் கணக்கில் பெருகிவரும் ஆக்கமே. நீங்கள் அனுப்பியதெல்லாம் பெற்றுக்கொண்டேன். இப்போது என் தேவைக்கு மேல் இருக்கிறது. நீங்கள் அனுப்பிய கொடைகளை எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இப்போது என்னிடம் நிறைய இருக்கிறது. உங்கள் கொடைகளோ நறுமணம் வீசும் காணிக்கையும், கடவுளுக்கு உகந்த பலிப்பொருளுமாகும்.

மாட்சிமிக்க தம் செல்வத்திற்கேற்ப என் கடவுள் உங்கள் தேவைகள் அனைத்தையும் கிறிஸ்து யேசுவுக்குள் நிறைவாக்குவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 116 : 1-2, 5-6, 8a & 9 ( பல்லவி : 1a )

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்.**

அல்லது : **அல்லேலூயா.**

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்.
அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும்.
நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசிபெறும். பல்லவி

5 மனமிரங்கி கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்.
தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
6 எந்நாளும் அவன் அசைவுறான் :
என்றென்றும் அவன் மக்கள் நினைவில் வாழ்வான். பல்லவி

8 அவன் நெஞ்சம் நிலையாய் இருக்கும் ;
அவனுக்கு அச்சம் மேலிடாது :
9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான் :
அவனது ஈகை என்றும் நிலைத்திருக்கும் :
அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும். பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 8 : 9

**அல்லேலூயா. யேசுகிறிஸ்து செல்வமிக்கவராய் இருந்தும்,
அவரது ஏழ்மையில் நீங்கள் செல்வராகும்படி
உங்களுக்காக ஏழையானார்.
அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

*அநீத செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாயிருந்தால், உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவர் யார்?*

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

16 : 9-15

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :

"அநீத செல்வத்தைக்கொண்டு நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள் ; அது உங்களைக் கைவிடும்பொழுது, இவர்கள் உங்களை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுக்கொள்வார்கள். மிகச் சிறிய காரியத்தில் நம்பத்தக்கவன், பெரியதிலும் நம்பத்தக்கவனே. மிகச் சிறியதில் நீதியற்றவன், பெரியதிலும் நீதியற்றவனே. அநீத செல்வத்தின் மட்டில் நீங்கள் நம்பத் தகாதவர்களாய் இருந்தால் உங்களை நம்பி உண்மைப் பொருளை ஒப்படைப்பவர் யார்? உங்களுக்குப் புறம்பான பொருட்கள் மட்டில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய் இருந்தால், உங்களுடையதை உங்களுக்கு அளிப்பவர் யார்?

எந்த வேலைக்காரனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனிடம் அன்பாயிருப்பான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு, மற்றவனைப் புறக்கணிப்பான். கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது."

பொருளாசை மிக்க பரிசேயர் இதெல்லாம் கேட்டு அவரை ஏளனம் செய்தனர்.

அவர்களுக்கு அவர் கூறியதாவது : "மனிதர்முன் நீதிமான்களாகக் காட்டிக்கொள்ளுகிறவர்கள் நீங்கள் தான். கடவுளோ, உங்கள் உள்ளங்களை அறிவார். மனிதர்களுக்கு மேன்மையானது கடவுளுக்கு அருவருப்பானது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# முப்பத்திரெண்டாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தேடுகிறவர்கள் ஞானத்தைக் கண்டடைவார்கள்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம்

*6: 13-17*

ஞானம் ஒளிமிக்கது, மங்காதது ; அதன்மேல் அன்புள்ளவர்கள் எளிதில் அதைக் காண்பார்கள், அதைத் தேடுகிறவர்கள் அதைக் கண்டடைவார்கள். அதன்மேல் நாட்டமுள்ளவர்களுக்குத் தன்னையே வெளிப்படுத்த முந்திக்கொள்ளும்.

அதைத் தேடுவதற்காகக் காலையிலேயே எழுந்திருப்பவனுக்கு அதைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமன்று: அது தன் வாயிலருகிலேயே அமர்ந்திருப்பதைக் காண்பான். ஞானத்தின்மேல் ஒருவன் தன் சிந்தையை நிறுத்தினால் அதுவே அவனுக்கு அறிவின் நிறைவு. அதனை அடைய விழிப்பாயிருப்பவன், விரைவில் கவலைகளினின்று விடுபடுவான் ;

தன்னை ஏற்கத் தகுதியுள்ளவர்களை ஞானம் சுற்றித் தேடிக்கொண்டு போகிறது ; வழியில் அவர்களுக்கு இன்முகத்தோடு தோன்றுகிறது; நினைக்குந்தோறும் அவர்களை எதிர்கொண்டு சந்திக்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

### பதிலுரைப் பாடல்

*சங். 62 : 1, 2-3, 4-5, 6-7 (பல்லவி : 1b )*

பல்லவி : ஆண்டவரே, என் இறைவா, என் உள்ளம்
உம்மீது வேட்கை கொண்டுள்ளது.

1 இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன்.
நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கி யிருப்பதுபோல்
என் உள்ளம் உம்மீது வேட்கைகொண்டுள்ளது.
என் உடலும் உம்மை ஆசிக்கிறது. பல்லவி

2 உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன்.
உமது வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.
3 வாழ்க்கையைவிட உமது அருள் எவ்வளவோ மேலானது.
என் நாவும் உம்மைப் புகழ்ந்தேத்தும். பல்லவி

4 இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன்.
உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.
5 செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் என் உள்ளம் நிறைவுபெறும்;
என் வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும் :
என் நாவில் புகழ்ச்சி எழும். பல்லவி

6 படுக்கையிலும் நான் உம்மை நினைத்துக்கொண்டிருப்பேன்.
இரவு சாமங்களில் உம்மைத் தியானிப்பேன்.
7 ஏனெனில், நீர் எனக்கு உதவியாயுள்ளீர்.
உம் சிறகுகளின் நிழலில் நான் அக்களிக்கின்றேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக்
கடவுள் அவருடன் அழைத்து வருவார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 13-18

சகோதரர்களே, இறந்தோரைப்பற்றி உங்களுக்கு ஐயமிருத்தலாகாது. நம்பிக்கையற்ற ஏனையோரைப்போல் நீங்களும் வருந்தலாகாது. யேசு இறந்தபின் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவசிக்கின்றோம் அல்லவா? அப்படியானால், யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். ஆண்டவருடைய வார்த்தையில் ஊன்றி, நாங்கள் உங்களுக்குச் சொல்லுவதாவது: உயிருடனிருக்கும் நாம், ஆண்டவரின் வருகை வரையில் உயிரோடு எஞ்சி நிற்கும் நாம், இறந்தோருக்கு முந்திக்கொள்ளமாட்டோம்.

அதிதூதரின் குரலொலியும் கடவுளின் எக்காளமும் அடையாளமாக முழங்க, ஆண்டவர்தாமே வானிலிருந்து இறங்கி வருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் இறந்தோர், முதலில் உயிர்த்தெழுவர். அதன் பின்னரே உயிரோடு எஞ்சி நிற்கும் நாம் அவர்களோடுகூட ஒன்றாய் மேகங்கள்மீது தூக்கிச் செல்லப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளப் போவோம். போய், ஆண்டவரோடு எப்போதும் இருப்போம். எனவே, இக்கருத்துக்களைக்கொண்டு ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

மத். 24 : 42 a, 44

அல்லேலூயா. ஆயத்தமாயிருங்கள், விழிப்பாயிருங்கள் : ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 25: 1-13

அக்காலத்தில் : யேசு தம் சீடருக்குச் சொன்ன உவமையாவது :

"அந்நாளில் விண்ணரசு, மணமகனை எதிர்கொள்ளச் சென்ற பத்துக் கன்னியருக்கு ஒப்பாயிருக்கும். அவர்கள் கையில் விளக்கு எடுத்துப் போனார்கள். அவர்களுள் ஐவர் அறிவிலிகள், ஐவர் விவேகிகள். அறிவிலிகள் ஐவரும் விளக்கு எடுத்துக்கொண்டார்கள்; ஆனால், எண்ணெய் எடுத்துக்கொள்ளவில்லை. விவேகிகளோ விளக்குடன் ஏனத்தில் எண்ணெயும் எடுத்துக்கொண்டார்கள். மணமகன் வரக் காலம் தாழ்த்தவே, எல்லாரும் தூங்கி விழுந்து, உறங்கிவிட்டார்கள்.

நள்ளிரவில் "இதோ! மணவாளன் வருகிறார்; அவரை எதிர் கொள்ளச் செல்லுங்கள்" என்ற கூக்குரல் கேட்டது. அப்போது அக்கன்னியர் எல்லாரும் எழுந்து தம் விளக்குகளைச் சரிப்படுத்தினார்கள். அறிவிலிகளோ, "எங்கள் விளக்குகள் அணைந்துபோகின்றன, உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்" என்று விவேகிகளிடம் கேட்டார்கள். அதற்கு விவேகிகள், "உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் பற்றாமல் போகலாம், ஆகவே கடைக்காரரிடம் சென்று நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள்" என்றனர்.

அவர்கள் வாங்கச் செல்லும்போது மணமகன் வந்தார். தயாரா யிருந்தோர் அவருடன் மணவீட்டில் நுழைந்தனர். கதவு அடைக்கப் பட்டது. இறுதியாக மற்ற கன்னியரும் வந்து, "ஆண்டவரே, ஆண்ட வரே, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்" என்றனர். அவரோ மறு மொழியாக, "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்களை அறியேன்" என்றார்.

எனவே, விழிப்பாயிருங்கள்: ஏனெனில், நாளும் நேரமும் உங்க ளுக்குத் தெரியாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**விதவை மாவினால் ஒரு சிறிய அப்பம் சுட்டு எலியாசுக்குக் கொண்டுவந்தாள்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *17 : 10-16*

அந்நாட்களில் :

எலியாசு புறப்பட்டுச் சரேப்தாவுக்குப் போனார். அந்நகரின் வாயிலை அடைந்தபோது அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவர் அவளைக் கூப்பிட்டு, "நான் குடிக்க ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார். அவள் தண்ணீர் கொண்டு வரச் செல்கையில் பின்னிருந்து சத்தமிட்டு, "எனக்குக் கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டு வா" என்றார்.

அவள் அவருக்கு மறுமொழியாக, "உம் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை! என்னிடம் அப்பம் இல்லை. என் பானையில் ஒரு சிறங்கை மாவும், கலயத்தின் அடியில் கொஞ்சம் எண்ணெயுமே இருக்கின்றன. அப்பம் சுடத்தான் இந்த இரண்டொரு விறகைப் பொறுக்கினேன். அதைச் சாப்பிட்ட பின் நானும் என் மகனும் மீண்டும் உண்ண ஒன்றுமில்லாமல் சாவோம்" என்றாள்.

அப்போது எலியாசு அவளைப் பார்த்து, "அஞ்சாதே; போய், நீ சொன்னபடியே செய். எனினும் முதலில் அதில் ஒரு சிறிய அப்பம் சுட்டு எனக்குக் கொண்டு வா. பிறகு உனக்கும் உன் மகனுக்கும் அப்பம் தயார் செய்யலாம்.

ஏனென்றால், 'ஆண்டவர் நிலத்தில் மழை பொழியச் செய்யும் வரை உன் பானையின் மாவு செலவழிந்து போவதுமில்லை: கலயத்தின் எண்ணெய் குறைந்து போவதுமில்லை' என்று இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்றார்.

அவள் போய் எலியாசின் சொற்படி செய்தாள். அவரும் உண்டார்; அவளும் அவள் வீட்டாரும் உண்டனர். ஆண்டவர் எலியாசின் மூலம் சொன்ன வார்த்தையின்படியே அன்று முதல் பானையின் மாவு செலவழிந்ததுமில்லை. கலயத்தின் எண்ணெய் குறைந்ததுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145 : 7, 8-9a, 9bc-10 ( பல்லவி : 1 )

பல்லவி : **நெஞ்சே, நீ ஆண்டவரைப் புகழ்வாய்.**

அல்லது : **அல்லேலூயா.**

7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர்.
துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்.
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்.
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்து விடுகிறார்.
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிறார்.
நீதிமான்கள் மீது ஆண்டவர் அன்புகூர்கிறார்.
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார். பல்லவி

அனாதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார்,
பாவிகளின் திட்டங்களைக் கலைத்து விடுகிறார்.
10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார் ;
சீயோனே, உன் இறைவன் தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பல்லோர் பாவங்களைப் போக்க, கிறிஸ்து ஒரே முறையில்
தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 9 : 24-28

கிறிஸ்து நுழைந்தது மனிதரின் கையால் ஆகிய தூயகம் அன்று; அது உண்மையான தூயகத்தின் முன்னடையாளமே. நமக்காகப் பேசும்படி கடவுளின் திருமுன் நிற்பதற்கு அவர் வானகத்திற்குள்ளேயே நுழைந்து விட்டார். தமதல்லாத இரத்தத்தைக் கையிலேந்தி ஆண்டு தோறும் தூயகத்திற்குள் நுழையும் தலைமைக் குருவைப்போல், கிறிஸ்து செய்யவில்லை. அவர் வானகத்திற்குள் நுழைந்தது தம்மைத் திரும்பத் திரும்ப ஒப்புக் கொடுப்பதற்காக அன்று. அப்படி ஒப்புக் கொடுப்பதாய் இருந்தால் படைப்புக் காலந்தொட்டு திரும்பத் திரும்ப பாடுபடவேண்டியிருக்கும். அதற்கு மாறாக, உலகின் இறுதிக் காலமான இப்போது தம்மைத் தாமே பலியிட்டு, பாவங்களைத் தொலைக்க ஒரேமுறை உலகில் தோன்றினார்.

மனிதர் ஒரேமுறை சாவுக்கு உட்படுகின்றனர்; பின்னர் தீர்ப்பு வருகிறது. அவ்வாறே கிறிஸ்துவும் பல்லோர் பாவங்களைப் போக்கும் பொருட்டு ஒரேமுறையில் எக்காலத்திற்குமே தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். மீண்டும் தோன்றுவார். அப்போது பாவத்திற்குப் பரிகாரம் செய்வதற்காக அன்று, தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு மீட்பு அளிக்கும் பொருட்டே தோன்றுவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 5 : 3

அல்லேலூயா. எளிய மனத்தோர் பேறுபெற்றோர்:
ஏனெனில், விண்ணரசு அவர்களதே.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எல்லாரிலும் இக்கைம்பெண்ணே அதிகம் போட்டாள்.**

✠ மாற்கு எழுதிய சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12 : 38-44

( பக்கம் 133 காண்க )

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12: 41-44

அக்காலத்தில் :

யேசு காணிக்கைப் பெட்டிகளுக்கு எதிரே அமர்ந்து, மக்கள் அவற்றினுள் காசு போடுவதைக் கவனித்துக்கொண்டிருந்தார். பணக் காரர் பலர் அதிகம் போட்டார்கள். ஏழைக் கைம்பெண் ஒருத்தி வந்து ஓர் அணு பெறுமானமுள்ள இரண்டு செப்புக் காசுகள் போட்டாள்.

யேசு சீடர்களைத் தம்மிடம் அழைத்து, " காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட எல்லாரிலும் இந்த ஏழைக் கைம்பெண்ணே அதிகம் போட்டாள் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், மற்ற எல்லாரும் தங்களிடம் மிகுதியாயிருந்த பணத்திலிருந்து போட்ட னர். இவளோ, தன் வறுமையிலும் தான் வைத்திருந்த யாவும், தன் பிழைப்புக்கானது முழுவதுமே போட்டுவிட்டாள் " என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***உலகத்தின் அரசர் நித்திய வாழ்விற்கு எங்களை உயிருடன் எழுப்புவார்.***

**மக்கபே ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்** *7 : 1-2, 9-14*

அந்நாட்களில் :

ஏழு பிள்ளைகள் தங்கள் தாயோடு பிடிபட்டு, சாட்டைகளாலும் கயிறுகளாலும் அடிக்கப்பட்டு, கட்டளைக்கு எதிராய்ப் பன்றிஇறைச்சி உண்ண மன்னனால் கட்டாயப்படுத்தப் பட்டார்கள்.

அவர்களில் முதல்வன்: உனக்கு என்ன வேண்டும்? எங்களிடமிருந்து என்ன அறிந்துகொள்ள விரும்புகிறாய்? எங்கள் முன்னோருக்குக் கொடுக்கப்பட்ட கடவுளின் கட்டளைகளை மீறுவதைவிட நாங்கள் சாகத் துணிந்திருக்கிறோம் என்றான்.

இரண்டாமவன் உயிர் பிரியப்போகும் வேளையில் அரசனை நோக்கி: நீ மிக அக்கிரமமாய் இவ்வாழ்வுக்காலத்தில் எங்களைக் கொல்கிறாய். உலக அரசரோ, தம் கட்டளைகளுக்காக நாங்கள் இறப்பதால், நித்திய வாழ்விற்கு எங்களை உயிருடன் எழுப்புவார், என்றான்.

இதன் பிறகு மூன்றாமவனைக் கொடுமைப்படுத்தினார்கள். அவர்கள் அவனைக் கேட்டபடி அவனும் தன் நாக்கையும் கைகளையும் துணிவுடன் நீட்டினான். அவன் நம்பிக்கையோடு அவர்களிடம்: வானத்தினின்று இவை எனக்குக் கிடைத்தன. ஆனால், கடவுளுடைய கட்டளைகளுக்காக இப்போது இவற்றை நான் பொருட்படுத்துவதில்லை. ஏனென்றால், அவரிடமிருந்து மறுபடியும் அவற்றை அடைவேனென்று நம்பியிருக்கிறேன் என்று கூறினான். அப்போது மன்னனும் அவனோடு இருந்தவர்களும், அவ்விளைஞன் வேதனைகளை ஒருபொருட்டாகக் கொள்ளாததால், அவன் துணிவைக் கண்டு வியப்புற்றார்கள்.

அவனும் இவ்வாறு இறந்த பிறகு, நான்காமவனையும் அவ்வண்ணமே துன்புறுத்தினார்கள். அவன் சாகப்போகும் தருணத்தில்: மனிதரால் கொலைசெய்யப்பட்டவர்கள் கடவுளால் திரும்பவும் உயிர்ப்பிக்கப்படுவார்களென்ற நம்பிக்கையோடு காத்துக்கொண்டிருக்கலாம். நீயோ வாழ்விற்கு மறுபடியும் உயிர்க்கப் போவதில்லை என்று கூறினான்.

## பதிலுரைப் பாடல்

சங். 16 : 1, 5-6, 8 & 15 ( பல்லவி 15b)

பல்லவி : **ஆண்டவரே, நான் விழித்தெழும்போது
உமது உருவைக் காண்பதில் நிறைவுபெறுவேன்.**

1 ஆண்டவரே, நியாயமான என் வழக்கைக் கேட்டருளும் ;
என் கூக்குரலைக் கவனித்தருளும் :
வஞ்சகமற்ற உதட்டினின்று எழும்
என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி

5 நீர் காட்டிய வழியில் என் காலடிகள் உறுதியாய் நிற்கின்றன :
அவ்வழியில் என் நடை பிறழவில்லை.
6 இறைவா, என் மன்றாட்டைக் கேட்டருள்வீர் என்பதால்
நான் உம்மைக் கூவியழைக்கிறேன் :
எனக்குச் செவிசாய்த்தருளும் ;
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும். பல்லவி

8 கண்ணின் மணியைப்போல என்னைக் காத்தருளும் :
உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும்.
15 நானோவெனில்,
நீதியில் நிலைத்து உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன் :
உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே நான் விழைகிறேன்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவர் எல்லா வகையான நற்செயலிலும் நற்சொல்லிலும் உங்களை உறுதிப்படுத்துவாராக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 16-3 : 5

சகோதரர்களே :

நம்மேல் அன்பு கூர்ந்து, தம் அருளால் முடிவில்லாத ஆறுதலும், நல்ல நம்பிக்கையும் அளித்த நம் தந்தையாகிய கடவுளும், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவும் உங்கள் உள்ளங்களுக்கு ஆறுதல் அளித்து, எல்லா வகையான நற்செயலிலும் நற்சொல்லிலும் உங்களை உறுதிப்படுத்துவார்களாக.

இறுதியாக, சகோதரர்களே, எங்களுக்காகச் செபியுங்கள். ஆண்டவருடைய வார்த்தை உங்களிடையே பரவியது போல, எங்கும் விரைந்து பரவி மகிமை பெறவும், முறை கெட்டவர், தீயவர் கைக்கு நாங்கள் தப்பவும் வேண்டிக்கொள்ளுங்கள் : விசுவாசம் என்பது எல்லாரிடமும் இல்லையன்றோ? ஆண்டவரோ நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களை உறுதிப்படுத்தி, தீயோனிடமிருந்து காப்பாற்றுவார். நாங்கள் கட்டளையிட்டதை எல்லாம் நீங்கள் செய்து வருகிறீர்கள், இனியும் செய்து வருவீர்கள் என்று ஆண்டவரின் அருளால் உங்கள்மேல் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். கடவுளின் அன்பைப் பெறவும், கிறிஸ்துவின் பொறுமையை அடையவும் ஆண்டவர் உங்கள் உள்ளங்களுக்கு வழி காட்டுவாராக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — திருவெளி 1:5-6

அல்லேலூயா. இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைப்பேறானவர்
யேசு கிறிஸ்துவே : இவருக்கே மகிமையும் வல்லமையும்
என்றென்றும் உரியனவாகுக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர் வாழ்வோரின் கடவுள், இறந்தோரின் கடவுளல்லர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 20 : 27-38

அக்காலத்தில் :

உயிர்த்தெழுதல் இல்லை என்று கூறும் சதுசேயருள் சிலர் யேசுவை அணுகி, "போதகரே, 'மனைவியுள்ள ஒருவன் பிள்ளையின்றி இறந்து விடுவானாயின், அவனுடைய சகோதரன் அவளை மணந்து தன் சகோதரனுக்கு மகப்பேறு அளிக்கட்டும்' என்று மோயீசன் எழுதி வைத்துள்ளார். இவ்வாறிருக்க, சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவன் ஒருத்தியை மணந்து மகப்பேறின்றி இறந்தான். இரண்டாம், மூன்றாம் சகோதரரும் அவளை மணந்தனர். இவ்வாறே எழுவரும் பிள்ளையின்றி இறந்தனர். இறுதியாக அப்பெண்ணும் இறந்தாள்.

உயிர்த்தெழும்போது அவள் யாருக்கு மனைவியாக இருப்பாள்? எழுவரும் அவளை மனைவியாகக்கொண்டிருந்தனரே" என்றனர்.

யேசு அவர்களிடம், "இவ்வுலகின் மக்கள் பெண் கொண்டும் கொடுத்தும் வருகின்றனர். மறு உலகையும் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுதலையும் அடைவதற்குத் தகுதியுள்ளவராக எண்ணப்படுவோர் அங்கே பெண் கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை. ஏனெனில், இனி அவர்கள் இறக்கமாட்டார்கள். வானதூதருக்கு ஒப்பாயிருப்பார்கள். மேலும் உயிர்த்த மக்களாயிருப்பதால் கடவுளின் மக்களாயும் இருப்பார்கள்.

இறந்தோர் உயிர்த்தெழுவர் என்பதை மோயீசன் முட்செடியைப் பற்றிய பகுதியில் வெளிப்படுத்தினார். அதில் ஆண்டவரை 'ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்' என்று குறிப்பிட்டார். அப்படியெனில், அவர் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்தோரின் கடவுள் அல்லர். ஏனெனில், அவருக்கு எல்லாரும் உயிர் உள்ளவர்களே" என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

---

அல்லது குறுகிய வாசகம்

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்**

*20 : 34-38*

**அக்காலத்தில் :**

உயிர்த்தெழுதல் இல்லை என்று மறுக்கும் சதுசேயரிடம் யேசு கூறியதாவது :

"இவ்வுலகின் மக்கள் பெண் கொண்டும் கொடுத்தும் வருகின்றனர். மறு உலகையும் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுதலையும் அடைவதற்குத் தகுதியுள்ளவராக எண்ணப்படுவோர் அங்கே பெண் கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை. ஏனெனில், இனி அவர்கள் இறக்கமாட்டார்கள். வானதூதருக்கு ஒப்பாயிருப்பார்கள். மேலும் உயிர்த்த மக்களாயிருப்பதால் கடவுளின் மக்களாயும் இருப்பார்கள்.

இறந்தோர் உயிர்த்தெழுவர் என்பதை மோயீசன் முட்செடியைப் பற்றிய பகுதியில் வெளிப்படுத்தினார். அதில் ஆண்டவரை 'ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்' என்று குறிப்பிட்டார். அப்படியெனில், அவர் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்தோரின் கடவுள் அல்லர். ஏனெனில், அவருக்கு எல்லாரும் உயிர் உள்ளவர்களே" என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

---

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஞானம் பரிவுகாட்டும் இறை ஆவி : அது உலகை நிரப்பியுள்ளது.**

ஞான ஆகமத்தின் தொடக்கம் : *1 : 1-7*

மண்ணுலகை ஆள்பவர்களே, நீதியின்மேல் அன்பு கூருங்கள், நேர்மையோடு ஆண்டவரைப்பற்றிச் சிந்தியுங்கள், எளிய உள்ளத்தினராய் அவரைத் தேடுங்கள். ஏனெனில் அவரைச் சோதிக்காமல் இருக்கிறவர்கள் அவரைக் கண்டடைவார்கள்; அவர்மேல் அவநம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு அவர் தம்மையே வெளிப்படுத்துகிறார்.

நெறி கேடான சிந்தனைகள் மனிதனைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்றன, அவரது வல்லமை சோதிக்கப்படுமாயின் அது அறிவிலிகளை வெட்கி நாணச்செய்யும். ஏனெனில் கயமைநிறை ஆன்மாவில் ஞானம் நுழையாது, பாவத்திற்கு அடிமையாகிவிட்ட உடலில் அது குடி கொள்ளாது. நம்மைப் பயிற்றுவிக்கும் பரிசுத்த ஆவி வஞ்சகத்தை விட்டு அகலும்; அறிவற்ற எண்ணங்களை விட்டு விலகும்; அக்கிரமம் அண்மையில் நெருங்கும்போதே விலகி ஒதுங்கும்.

ஏனெனில் ஞானம் பரிவு காட்டும் இறை ஆவி, ஆயினும் இறைவனைப் பழிப்பவனது சொற்களை அது பொறுக்காது; கடவுள் அவன் உள்ளுணர்ச்சிகளுக்கும் சாட்சியாவார், அவன் உள்ளத்தை உள்ளவாறு நோக்குபவர் அவரே, அவனது நாக்கு உரைப்பதைக் கேட்கிறார். ஏனெனில் ஆண்டவரின் ஆவி உலகை நிரப்பியுள்ளது, அனைத்தையும் சேர்த்திணைக்கும் அது பேசப்படும் சொல் ஒவ்வொன்றையும் அறியும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா 139. 1-3a, 3b-6, 7-8, 9-10 (பல்லவி: 24b)

பல்லவி: முன்னோர் காட்டிய வழியில்
என்னை நடத்தும், ஆண்டவரே.

1 ஆண்டவரே, நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர் :
2 நான் அமர்வதும் எழுவதும், என் வாழ்க்கை
முழுவதுமே நீர் அறிந்திருக்கிறீர் :
என் நினைவுகள் எல்லாம் முன்பிருந்தே உமக்கு வெளிச்சம்.
3 நான் நடப்பதும் படுப்பதும் எல்லாமே நீர் அறிந்துள்ளீர். பல்லவி

நான் செல்லும் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தனவே.
4 என் வாயில் வார்த்தை உருவாகுமுன்பே நீர் எல்லாம் அறிந்திருக்கிறீர்.
5 எனக்கு முன்னும் பின்னும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்,
உம் திருக்கரத்தை என்மேல் வைக்கிறீர்.
6 இத்தகைய அறிவு எனக்கு மிகவும் வியப்பாயுள்ளது, உன்னதமானது :
அதை நான் புரிந்துகொள்ள முடியாது. பல்லவி

7 உமது ஆவியை விட்டு, நான் எங்கே தொலைவில் போகக்கூடும்?
உம்முடைய திருமுன்னிலையை விட்டு, நான் எங்கே ஒளியக்கூடும்?
8 நான் வானகத்துக்குப் பறந்து சென்றால், நீர் அங்கே இருக்கிறீர் !
பாதாளத்துக்குச் சென்று படுத்துக்கொண்டாலும் அங்கேயும் இருக்கிறீர்.
பல்லவி

9 நான் விடியற்காலையில் சிறகடித்துப் பறந்து சென்றபோதிலும்,
கடல்களின் கடையெல்லைகளில் வாழ்ந்தாலும்,
அங்கேயும் உமது கரம் என்னை நடத்திச் செல்லும்.
உமது வலக்கரம் என்னைத் தாங்கி நிற்கும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நான் உமக்குப் பணித்தவாறு, மூப்பர்களை ஏற்படுத்தும்.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீத்துவுக்கு
எழுதிய திருமுகத்தின் தொடக்கம்** 1 : 1-9

கடவுளின் ஊழியனும் யேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமான
சின்னப்பன் பான் தீத்துவுக்கு எழுதுவது : நம் இருவருக்கும் பொதுவான

விசுவாச வாழ்வில் என் உண்மை மகனான உமக்கு, பரம தந்தையாகிய கடவுளிடமிருந்தும், நம் மீட்பராகிய கிறிஸ்து யேசுவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உண்டாகுக!

கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுக்கு விசுவாசம் உண்டாகவும், பக்தி நெறிக்கு ஏற்ற உண்மையை அவர்கள் அறிந்து கொள்ளவும், முடிவில்லா வாழ்வின் நம்பிக்கையில் அவர்கள் நிலைபெறவுமே நான் அனுப்பப்பெற்றேன். இவ்வாழ்வை எல்லாக் காலங்களுக்கு முன்பே பொய்யாக் கடவுள் தாமே வாக்களித்தார். அதற்கொப்ப, குறிப்பிட்ட காலத்தில் நற்செய்தியறிவிப்பின் வாயிலாகத் தம் வார்த்தையை அவர் வெளிப்படுத்தினார். இந்நற்செய்தியறிவிப்பு நம் மீட்பராகிய கடவுளின் கட்டளைப்படி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நான் திருத்தாமல் விட்டு வந்ததை நீர் சீர்திருத்தவும், நான் உமக்குப் பணித்தவாறு நகரந்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தவும் வேண்டியே, உம்மைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன். நீர் ஏற்படுத்தும் மூப்பர்கள் குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருத்தல் வேண்டும். ஒருமுறைமட்டுமே திருமணமானவராக இருக்கவேண்டும். அவர்களுடைய மக்கள் விசுவாசிகளாக இருக்கவேண்டும்; இவர்கள் ஒழுக்கமற்றவர்கள் என்று பெயரெடுத்தவர்களாகவோ, அடங்காதவர்களாகவோ இருத்தல் ஆகாது.

விசுவாசிகளை மேற்பார்வையிடுவோர் கடவுளுடைய கண்காணிப்பாளருக்கு ஏற்ப, குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருத்தல் வேண்டும். அகந்தை, கடுஞ்சினம், குடிவெறி, கலகம், இழிவான ஊதியத்தின்மேல் ஆசை ஆகியவற்றை விலக்கி, விருந்தோம்பல், நன்மையில் நாட்டம், விவேகம், நீதி, புனிதம், தன்னடக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து நற்போதனையோடு பொருந்தியதும் நம்பிக்கைக்குரியதுமான படிப்பினையை உறுதியாய்ப் பற்றிக்கொள்பவராய் இருக்கவேண்டும். அப்போதுதான் நலமிக்க போதனையைப் போதித்து அறிவுரை கூறவும், எதிர்த்துப் பேசுவோருக்கு மறுப்புக் கூறவும் அவர் வல்லவராக இருக்கமுடியும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23: 1-2, 3-4ab, 5-6 (பல்லவி: 6 காண்க)

பல்லவி: **ஆண்டவரே, உமது திருமுகத்தைத் தேடும்**
**மக்களினம் இதுவே.**

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன:
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலைநிறுத்தியவர் அவரே:
ஆறுகளின்மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனத்தைச் செலுத்தாதவன்.
5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்: பல்லவி

இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே:
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே. பல்லவி

அல்லேலூயா பிலி 2: 15-16

அல்லேலூயா. வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை ஏந்தி நின்று,
உலகில் சுடர்விடும் விண்மீன்களைனத்
துலங்குவீர்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*ஒருநாளில் ஏழு முறையும் உன்னிடம் திரும்பிவந்து,*
*"நான் மனம் வருந்துகிறேன்" என்றால், அவனை மன்னித்துவிடு.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

17: 1-6

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது:

"இடறல் வராமல் இருக்க முடியாது. ஆனால், யாரால் வருகின்றதோ, அவனுக்கு ஐயோ கேடு! அவன் இச்சிறுவருள் ஒருவனுக்கு இடறலாயிருப்பதைவிட, அவன் கழுத்தில் பெரிய எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் தள்ளுவது அவனுக்கு நலம்.

எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் குற்றம் செய்தால் அவனைக் கடிந்துகொள். மனம் வருந்தினால் அவனை மன்னித்துவிடு, அவன் ஒரு நாளில் ஏழுமுறை உனக்கெதிராகக் குற்றம் செய்து, ஏழுமுறையும் உன்னிடம் திரும்பி வந்து, 'நான் மனம் வருந்துகிறேன்' என்றால் அவனை மன்னித்துவிடு.

பின்பு அப்போஸ்தலர்கள், "எங்களிடம் விசுவாசத்தை அதிக மாக்கும்" என்று ஆண்டவரைக் கேட்டார்கள்.

ஆண்டவரோ, "கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் இம்முசுக்கட்டை மரத்தை நோக்கி, 'வேருடன் பெயர்ந்து கடலில் ஊன்றிக்கொள்' என்பீர்களாகில் உங்களுக்கு அது கீழ்ப்படியும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

அறிவிலிகளின் கண்களுக்கு அவர்கள் செத்துப்போனதாகத் தோன்றினர்: ஆனால் அவர்கள் சமாதானத்தில் இருக்கிறார்கள்.

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 23-3 : 9

அழியாமைக்கென்றே கடவுள் மனிதனைப் படைத்தார், தமது காலங் கடந்த தன்மையின் சாயலாகவே அவனை உண்டாக்கினார். ஆனால் பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. அவன் பக்கம் சேர்கிற வர்கள் அதை நுகர்வார்கள்.

ஆனால் நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையிலுள்ளன, வேதனை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் அவர்கள் செத்துப் போனதாகத் தோன்றினர், இம்மையினின்று அவர்கள் பிரிந்தது பெருந் துன்பமாய்க் கருதப்பட்டது, நம்மிடமிருந்து அவர்கள் போனது அவர்களுக்கு அழிவென எண்ணப்பட்டது; ஆனால் அவர்கள் சமாதானத்தில் இருக்கிறார்கள். ஏனெனில் மனிதர்களுக்கு முன்பாக வேதனையடைந்திருந்தாலும், அவர்களது நம்பிக்கையோ சாகாமையால் நிரம்பி யிருக்கிறது.

அற்பத் துன்புற்றபின் அவர்கள் மாபெரும் நன்மையடைவார்கள், கடவுள் அவர்களைப் பரிசோதித்தார், பரிசோதித்துத் தமக்கேற்ற தகுதியுடையவர்கள் எனக் கண்டார். பொன்னை உலையிலிட்டுச் சோதிப்பது போல் அவர்களைப் பரிசோதித்தார், தகனப் பலியாக அவர்களை ஏற்றுக் கொண்டார். கடவுளின் வருகைக் காலத்தில், அவர்கள் சுடரொளி வீசுவார்கள்; நாணற் காட்டில் தீப்பொறிகள் எரிவதுபோல் ஒளிர்வார்கள். புறவினத்தாரைத் தீர்ப்பிடுவார்கள், மக்களினங்களை ஆளுவார்கள்; ஆண்டவர் அவர்கள்மேல் என்றென்றும் ஆட்சி செலுத்துவார்.

அவரில் நம்பிக்கை வைக்கிறவர்கள் உண்மையைக் கண்டுபிடிப்பார்கள், விசுவாசம் கொண்டவர்கள் அவரோடு அன்பில் நிலைத்திருப்பார்கள், ஏனெனில் அருளும் இரக்கமும் அவரால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுக்கே உரியவை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2, 15-16, 17-18 (பல்லவி : 1a)

பல்லவி: **ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்.
சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

15 ஆண்டவருடைய கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன;
அவருடைய செவிகள் அவர்களது குரலைக் கேட்கின்றன.
16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது:
ஆண்டவர் பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்து விடுவார். பல்லவி

17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர்:
ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்;
18 எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்.
உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார்
ஆண்டவர், மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுளும், நம் மீட்பருமாகிய யேசுகிறிஸ்துவின் வருகையையும், மகிழ்வளிக்கும் நம் நம்பிக்கை நிறைவுறும் என்றும் எதிர் பார்த்துக் கொண்டு, பக்தியோடு வாழ்வோமாக.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீத்துவுக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 1-8, 11-14

அன்புக்குரியவரே :

நீர் நலமிக்க போதனைக்கேற்பப் பேசுவீராக. வயது முதிர்ந்தவர்கள் மிதமிஞ்சிக் குடியாமல், கண்ணியமும் விவேகமும் உள்ளவர்களாய் விசுவாசம், அன்பு, மன உறுதி இவற்றைப் பழுதின்றிக் காத்துக்கொள்ளச் சொல்லும். அவ்விதமே வயது முதிர்ந்த பெண்களும் மரியாதைக்குரிய நடையுடை பாவனையுள்ளவர்களாய்ப் புறணி பேசாமல், குடிவெறிக்கு அடிமையாகாமல் இருக்கவேண்டும். இவர்கள் இளம் பெண்களுக்கு விவேகத்தையூட்டும் நல்ல அறிவுரை கூறுபவர்களாய் இருக்கவேண்டும். இளம் பெண்கள் தம் கணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அன்புகாட்டி, தங்கள் வீட்டு வேலையைக் கவனித்துக்கொண்டு விவேகம், கற்பு, இரக்க மனம், கணவர்க்குப் பணிவு ஆகிய நற்பண்புகளைக் கொண்டவர்களாய் இருக்கும்படி அவ்வயதான பெண்கள் கற்பிப்பார்களாக. அப்பொழுது தான் கடவுளுடைய வார்த்தை பழிப்புக்குள்ளாகாது.

அவ்வாறே இளைஞர்களும் எல்லாவற்றிலும் விவேகத்துடன் நடந்து கொள்ள அறிவு புகட்டும். நன்னடத்தையால் அவர்களுக்கு முன்மாதிரி யாய் விளங்குவீராக. போதிப்பதில் வாய்மையும் பெருந்தன்மையும் காட்டும். யாரும் குறை காணமுடியாத, நலமிக்க வார்த்தைகளைப் பேசும். அப்போது நம்மைப்பற்றித் தீமையாகச் சொல்வதற்கு எதுவுமின்றி எதிரிகள் நாணிப்போவர்.

மாந்தர் அனைவருக்கும் மீட்பளிக்கும் கடவுளின் அருள் பிரசன்ன மாகி, நாம் இறைப் பற்றின்மையையும் உலக இச்சைகளையும் விட்டொழித்து விவேகத்தோடும் நீதியோடும் பக்தியோடும் இம்மையில் வாழ நம்மைப் பயிற்றுகிறது. இவ்வாறு வாழும் நாமோ, மகத்துவமிக்க கடவுளும், நம் மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் மாட்சிமை பிரசன்ன மாவதால், மகிழ்வளிக்கும் நம்முடைய நம்பிக்கை நிறைவேறுமென எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவர் நம்மை எல்லா அக்கிரமத்தி லிருந்தும் மீட்கவும், நம்மைத் தூயவர்களாக்கி, நற்செயல்களில் ஆர்வ முள்ள ஓரினமாகத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவும் தம்மை நமக் காகக் கையளித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 36 : 3-4, 18 & 23, 27 & 29 ( பல்லவி : 39 a )

பல்லவி : நல்லவர்களுக்கு ஈடேற்றம்
ஆண்டவரிடமிருந்தே வரும்.

3 ஆண்டவர்மீது நம்பிக்கை வை, நன்மை செய் :
புனித நாட்டில் எவ்விதக் கவலையின்றி இருப்பாய்.
4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு :
அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார். பல்லவி

18 நீதிமான்களுடைய வாழ்நாட்களைக் குறித்து
ஆண்டவர் கருத்தாய் இருக்கிறார்,
அவர்கள் உரிமைச் சொத்து என்றென்றும் நிற்கும்.
23 ஒருவனுடைய வாழ்வின் நெறி உறுதிபெறுவது ஆண்டவராலே :
அவனுடைய வாழ்வை அவர் உகந்ததென ஏற்கிறார். பல்லவி

27 தீமையை விலக்கு, நன்மை செய்,
அப்போது என்றென்றும் வாழ்வாய்.
29 நல்லவர்களோ புனித நாட்டை உரிமையாக்கிக்கொள்வர்,
என்றென்றும் அதில் வாழ்வர். பல்லவி

அல்லேலூயா அரு. 14 : 23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்புசெய்தால், என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார்; நாங்களும் அவனிடம் வந்து, அவனோடு குடிகொள்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாங்கள் பயனற்ற ஊழியர்கள், செய்யவேண்டியதைத்தான் செய்தோம்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17 : 7-10

அக்காலத்தில் : ஆண்டவர் உரைத்ததாவது :

"உழுவதற்கோ மேய்ப்பதற்கோ உங்களிடம் ஓர் ஊழியன் இருந்தால், அவன் வயலிலிருந்து திரும்பி வரும்பொழுது, 'நீ உடனே

என்னோடு வந்து சாப்பிடு' என்று உங்களுள் எவனாவது அவனுக்குச் சொல்லுவானா? மாறாக, 'எனக்குச் சாப்பாடு ஆயத்தம் செய். உன் இடையே வரிந்து கட்டிக்கொண்டு நான் உண்டு குடிக்குமளவும் எனக்குப் பணிவிடை செய்; பின்பு நீ உண்டு குடிக்கலாம்' என்று சொல்லமாட்டானா? தான் கட்டளையிட்டதைச் செய்ததற்காகத் தன் ஊழியனுக்கு நன்றி சொல்வானா? அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்டதெல்லாம் செய்த பின், 'நாங்கள் பயனற்ற ஊழியர்கள், செய்ய வேண்டியதைத்தான் செய்தோம்' எனச் சொல்லுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அரசர்களே, கேட்டு ஞானத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் *6 : 2-12*

அரசர்களே, கேட்டுக் கண்டுபிடியுங்கள்; உலகின் எல்லைகளை ஆள்பவர்களே, கற்றுக் கொள்ளுங்கள். மக்கள் கூட்டங்களை நடத்துபவர்களே, செவி கொடுங்கள்; திரளான மக்களினங்களைக் குறித்துப் பெருமிதங் கொள்பவர்களே, கேளுங்கள். உங்களுக்கு அதிகாரம் ஆண்டவர்தான் அளித்தார்; உன்னதரிடமிருந்தே நீங்கள் ஆட்சியுரிமை பெற்றிருக்கிறீர்கள்; அவர்தான் உங்கள் செயல்களை ஆராய்வார், உங்கள் திட்டங்களைப் பரிசோதிப்பார். அவருடைய அரசில் அமைச்சர்களாய் இருந்தபோது நீங்கள் நேர்மையாகத் தீர்ப்பு வழங்கவில்லை, திருச் சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை; கடவுளின் திருவுளத்திற்கேற்றபடி நடக்கவுமில்லை.

ஆதலால் திடீரென உங்கள்மேல் சினத்தோடு வருவார், ஏனெனில் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் மேல் கடுமையான தீர்ப்புச் செலுத்தப்படும். எளியவன் இரக்கம் பெற்று மன்னிக்கப்படலாம், வல்லவர்களோ கடுமையாய்த் தண்டிக்கப்படுவர். அனைத்திற்கும் ஆண்டவர் யாருக்கும் அஞ்சமாட்டார்; எவருடைய பெருமையையும் பொருட்படுத்தமாட்டார்; சிறியோரையும் பெரியோரையும் உண்டாக்கியவர் அவரே, அனைவரையும் சமமாகவே கருதி நடத்துகிறார். ஆனால், வல்லமை மிக்கவர்களிடம் கடுமையான கணக்குக் கேட்கப்படும்.

ஆகையால் மன்னர்களே, நான் சொல்வது உங்களுக்கே, நீங்கள் ஞானத்தைக் கற்றுக்கொள்ளவும் வழுவாமல் இருக்கவுமே இவற்றை உங்களுக்குச் சொல்லுகிறேன். பரிசுத்தமானவற்றைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிக்கிறவர்கள் பரிசுத்தர்களாவார்கள்; அவற்றைக் கற்றுக் கொண்டவர்கள் தங்கள் செயல்களுக்கு நியாயம் சொல்லக்கூடும். ஆதலால் என் சொற்களை ஆவலாய்க் கேளுங்கள், அவற்றைத் தேடுங்கள், உங்களுக்கு அறிவுண்டாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 81 : 3-4, 6-7 ( பல்லவி : 8 a )*

பல்லவி : **இறைவா, எழுந்தருளும், உலகுக்கு நீதி வழங்கும்.**

3 சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நியாயத் தீர்ப்புக் கூறுங்கள்,
தாழ்வுற்றவனுக்கும் ஏழைக்கும் நீதி வழங்குங்கள்.
4 துன்புற்றவனையும் எளியவனையும் விடுவியுங்கள்,
தீயவர் கையினின்று அவனுக்கு விடுதலை அளியுங்கள்' என்கிறார். பல்லவி

6 'நீங்கள் தேவர்கள், அனைவரும் உன்னதரின் மக்கள்,
7 என்னும் மனிதரைப்போல் இறப்பீர்கள்' என்று நான் கூறினேன்.
என்னும் பிற தலைவர்களுள் ஒருவனைப்போல்
வீழ்ந்து அழிவீர்கள். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் நெறிதவறி இருந்தோம்; தம் இரக்கத்தை முன்னிட்டு நம்மை மீட்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீத்துவுக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *3 : 1-7*

அன்புக்குரியவரே :

தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பணிந்து கீழ்ப்படிய மக்களுக்கு நினைவூட்டும். அவர்கள் எந்த நற்செயலுக்கும் தயாராயிருக்கவும், பழிச் சொல்லும் வீண் சண்டையும் விலக்கி, அமைதியுடன் எல்லாரிடமும்

நிறைவான சாந்தத்தோடு பழகவும் வேண்டும். நாமும் ஒரு காலத்தில் மதிகேடராய் யாருக்கும் அடங்காமல் நெறி தவறியிருந்தோம்; பல்வேறான இச்சைகளுக்கும் சிற்றின்பங்களுக்கும் அடிமைப்பட்டு, பொறாமையும் தீய மனமும் கொண்டவர்களாய் வாழ்ந்தோம்; வெறுப்புக்குரியோராய்ப் பிறரையும் வெறுத்து வந்தோம்.

நம் மீட்பராகிய கடவுளின் பரிவும் நேயமும் பிரசன்னமான போது, நீதி நெறியைப் பின்பற்றி நாமே செய்த நற்செயல்களை முன்னிட்டன்று, தம் இரக்கத்தை முன்னிட்டே புதுப்பிறப்பைத் தரும் முழுக்கினாலும், புத்துயிர் அளிக்கும் பரிசுத்த ஆவியாலும் இறைவன் நம்மை மீட்டார். இந்த ஆவியை அவர் நம் மீட்பராகிய யேசு கிறிஸ்துவின் வழியாக நம்மீது நிரம்பப் பொழிந்தார். கிறிஸ்துவின் அருளினால் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி, நமக்குள்ள நம்பிக்கையால் முடிவில்லா வாழ்வுக்கு உரிமையாளராவதற்கே இவ்வாறு செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 22 : 1-3a, 3b-4, 5, 6 (பல்லவி : 1)*

பல்லவி : **என் ஆயன் ஆண்டவர், எனக்கென்ன குறைவு.**

1 என் ஆயன் ஆண்டவர் : எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர் அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்;
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு
என்னைத் தம் நேரிய வழியில் செலுத்துகின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,
தீமையானதெதற்கும் அஞ்சேன் :
ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர்;
உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்:
என் தலைக்கு எண்ணெய் பூசினீர்;
என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும்;
என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடரும்:
ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்;
ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

அல்லேலூயா 1 தெச. 5 : 18

அல்லேலூயா. என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள் : உங்களுக்காகக் கிறிஸ்து யேசுவில் கடவுள் வெளியிட்ட திருவுளம் இதுவே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**திரும்பிவந்து கடவுளை மகிமைப்படுத்த இந்த அந்நியனைத் தவிர வேறு ஒருவரையும் காணோம்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

17 : 11-19

அக்காலத்தில் :

யேசு எருசலேமுக்குப் போகையில், சமாரியா, கலிலேயா நாடுகள் வழியாகச் சென்றார்.

ஓர் ஊருக்குள் வரும்பொழுது, தொழுநோயாளிகள் பத்துப்பேர் அவருக்கு எதிரே வந்தனர். தொலைவில் நின்றுகொண்டே, "குருவே, யேசுவே, எங்கள்மேல் இரக்கமாயிரும்" என்று உரக்கக் கூவினர்.

அவர்களைக் கண்டதும், "நீங்கள் போய்க் குருக்களிடம் உங்களைக் காட்டுங்கள்" என்றார். அவ்வாறே செல்லும்போது அவர்கள் குணமடைந்தனர்.

அவர்களுள் ஒருவன் தான் குணமடைந்ததைக் கண்டு உரத்த குரலில் கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டு திரும்பி வந்து, அவருடைய காலில் முகங்குப்புற விழுந்து நன்றி செலுத்தினான். இவனோ சமாரியன்.

யேசு அவனைப் பார்த்து, "பத்துப் பேரும் குணமடையவில்லையா? மற்ற ஒன்பதுபேர் எங்கே? திரும்பி வந்து கடவுளை மகிமைப்படுத்த இந்த அந்நியனைத் தவிர வேறு ஒருவரையும் காணோமே" என்றார்.

மேலும், "எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று" என்று அவனிடம் கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஞானம் முடிவில்லா ஒளியின் எதிரொளி; கடவுளுடைய வேலைத்திறனின் கறைபடியாக் கண்ணாடி.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 22-8 : 1

ஞானத்தில் குடிகொண்டுள்ள ஆவி அறிவுடையது; பரிசுத்தமானது, ஒரு தனித்தன்மைத்து, பல்வகை செயல்வன்மை வாய்ந்தது, நுண்மையானது; இயக்குமாற்றல் வாய்ந்தது, தெளிவுமிக்கது, மாசுபடாதது; திண்ணமானது, இனிமையானது, நன்மையை விரும்புவது; கூர்மையானது, எதிர்க்க முடியாதது; நன்மை செய்வது, மனிதர்மேல் பரிவுள்ளது; நிலைபெயராதது, அசையாதது, கவலையில்லாதது; எல்லாம் வல்லது, எல்லாவற்றையும் பார்வையிடுவது; அறிவும் தூய்மையும் நுண்மையும் கொண்ட எல்லா உள்ளங்களையும் ஊடுருவிச் செல்வது. ஞானம் அசைவுகளிலெல்லாம் மிக விரைவானது, அதன் தூய்மையின் காரணத்தால் எல்லாவற்றிலும் நிரம்பி நிற்கிறது. எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்கிறது.

அது கடவுளுடைய வல்லமையின் ஆவி; எல்லாம் வல்லவரது மகிமையொளியின் தூய சுடர்; ஆதலால் மாசுள்ளது எதுவும் அதற்குள் நுழைய முடியாது. அது முடிவில்லா ஒளியின் எதிரொளி, கடவுளுடைய வேலைத்திறனின் கறைபடியாக் கண்ணாடி; அவருடைய நன்மைத்தனத்தின் சாயல்.

அது தனித்து நிற்பினும், அனைத்தையும் செய்ய வல்லது; தான் மாறாமல் நிலைத்திருந்து, அனைத்தையும் புதுப்பிக்கிறது; ஒவ்வொரு தலைமுறையிலும் பரிசுத்த ஆன்மாக்களில் நுழைந்து, அவர்களைக் கடவுளின் நண்பர்களாகவும் இறைவாக்கினர்களாகவும் ஆக்குகிறது.

ஞானத்தோடு வாழ்கிறவனுக்கு அன்பு செய்வதைவிட வேறெவனுக்கும் கடவுள் மிகுதியாய் அன்பு செய்வதில்லை. ஏனெனில் ஞானம் கதிரவனைவிட அழகு வாய்ந்தது, விண்மீன் கூட்டங்களைவிடச் சிறப்பு மிக்கது, ஒளியோடு ஒப்பிட்டால் ஞானமே மேலானது. ஏனெனில், ஒளிக்குப்பின் இருள் சூழ்கிறது, ஆனால் தீமை ஒருபோதும் ஞானத்தை மேற்கொள்ளாது.

ஞானம் மண்ணுலகின் ஒரு முனைமுதல் மறு முனைவரை தன்னுடைய ஆற்றலைக் காட்டுகிறது; அனைத்தையும் இனிதாய் ஒழுங்கு படுத்துகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 119 : 89, 90, 91, 130, 135, 175 (பல்லவி: 89 அ)

பல்லவி : ஆண்டவரே, என்றென்றைக்கும் உள்ளது உமது வார்த்தை.

89 ஆண்டவரே, என்றென்றைக்கும் உள்ளது உமது வார்த்தை;
வானத்தைப்போல் அது நிலையாயுள்ளது. பல்லவி

90 தலைமுறை தலைமுறையாய் உள்ளது உமது சொல்லுறுதி;
நீர் உருவாக்கிய பூவுலகு நிலையாய் உள்ளது. பல்லவி

91 நீர் குறித்த விதிகளின்படி அவை எந்நாளும் நிலைத்துள்ளன.
ஏனெனில், எல்லாம் உமக்கு ஊழியம் செய்கின்றன. பல்லவி

130 உம் வார்த்தைகளுக்குத் தரும் விளக்கம் அறிவொளி தருகிறது.
அது எளியோர்க்கு அறிவூட்டுகிறது. பல்லவி

135 உம் ஊழியன் எனக்கு இன்முகம் காட்டியருளும்,
உம் நியமங்களை எனக்குக் கற்பித்தருளும். பல்லவி

175 வாழ்வுபெற்று நான் உம்மைப் புகழ்வேனாக,
உம் விதிமுறைமைகள் எனக்குத் துணை புரிவனவாக. பல்லவி

## 2 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*அவனை நீர் அடிமையாகவன்று, அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலேமோனுக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 7 - 20

அன்புக்குரியவரே :

உம்மிடம் காணும் அன்பை நினைத்துப் பெருமகிழ்வும் ஆறுதலும் கொள்கிறேன். ஆம், சகோதரரே, உம்மால் இறைமக்களின் நெஞ்சம் குளிர்ந்தது.

நீர் செய்யவேண்டியதை உமக்குக் கட்டளையிட, கிறிஸ்துவுக்குள் எனக்கு முழு உரிமை உண்டு என்றாலும் அன்பின் பெயரால் வேண்டுகோள் விடுப்பதே நலமெனக் கருதுகிறேன். வயது சென்ற சின்னப்பனாகிய நான், இப்பொழுது கிறிஸ்துவின் கைதியாயிருக்கும் நான், சிறையிலிருக்கையில் நான் ஈன்றெடுத்த பிள்ளை ஒனேசிமுவுக்காக உம்மை வேண்டுகிறேன்.

முன்பு உமக்குப் பயனற்றவனாக இருந்த அவன், இப்பொழுது எனக்கும் உமக்கும் பயனுள்ளவனாக இருக்கிறான். அவனை உம்மிடம் அனுப்புகிறேன். அவனை அனுப்புவது என் உயிரையே அனுப்புவது போலாகும். நற்செய்திக்காகச் சிறையிலே இருக்கும் எனக்கு உமது பெயரால் பணியாற்ற, அவனை என்னிடமே நிறுத்திக்கொள்ள நினைத்தேன். ஆனால் உம்முடைய உடன்பாடின்றி ஒன்றும் செய்ய விரும்பவில்லை. நீர் செய்யப்போகும் நன்மையைக் கட்டாயத்தின்மேல் செய்யாமல், மனதாரச் செய்யவேண்டும் என்று நினைத்தேன்.

இனி என்றுமே பிரியாத முறையில் அவன் உம்மோடு இருக்க வேண்டுமென்றே அவன் உம்மை விட்டுச் சிறிதுகாலம் பிரிந்திருந்தான் போலும். இனி அவனை நீர் அடிமையாக அன்று, அடிமையைவிட மேலானவனாக, அதாவது அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ளும். அவன் என் தனிப்பட்ட அன்புக்குரியவனே. அப்படியானால் உலக வழக்கின்படியும், ஆண்டவரில் ஏற்பட்ட புதிய உறவின்படியும் அவன் எவ்வளவோ மேலாக உம் அன்புக்குரியவனாக இருக்கவேண்டும்! எனவே, நமக்குள்ள உறவைக் கருதி, என்னை ஏற்றுக்கொள்வதுபோல் அவனை ஏற்றுக்கொள்ளும். அவன் உமக்கு ஏதாவது அநீதி செய்திருந்தால் அல்லது கடன்பட்டிருந்தால் இதை என் கணக்கிலே எழுதிக்கொள்ளும். “நானே ஈடு செய்வேன்” எனச் சின்னப்பனாகிய நான் என் கைப்பட எழுதுகிறேன்.

நீர் உம்மையே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டியவர் என நான் சொல்ல விரும்பவில்லை. ஆம், சகோதரரே, ஆண்டவரின் பெயரால் எனக்கு இந்த உதவி செய்யும். கிறிஸ்துவின் பெயரால் என் உள்ளம் குளிரச் செய்யும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145 : 7, 8-9a, 9bc-10 (பல்லவி : 5a)

பல்லவி : யாக்கோபின் இறைவன் யாருக்குத் துணைபுரிகிருரோ,
அவன் பேறுபெற்றவன்.

அல்லது : அல்லேலூயா.

7 துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிருர் :
பசியுற்ரேர்க்கு உணவளிக்கிருர் ;
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிருர். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்துவிடுகிருர் ;
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிருர்.
நீதிமான்கள்மீது ஆண்டவர் அன்பு கூர்கிருர். பல்லவி
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிருர்.

அனுதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிருர்.
பாவிகளின் திட்டங்களைக் கலைத்துவிடுகிருர்.
10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார் :
சீயோனே, உன் இறைவன் தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

அல்லேலூயா அரு. 15 : 5

அல்லேலூயா. நான் திராட்சைக்கொடி, நீங்கள் அதன் கிளைகள் : ஒருவன் என்னுள்ளும், நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான், என்கிருர் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளின் அரசு உங்களிடையே உள்ளது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17 : 20-25

**அக்காலத்தில் :**

"கடவுளின் அரசு எப்பொழுது வரும் ?" என்று பரிசேயர் வினவ, யேசு மறுமொழியாக, "கடவுளின் அரசு கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ இங்கே, அதோ அங்கே என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், கடவுளின் அரசு இதோ ! உங்களிடையே உள்ளது" என்ருர்.

மேலும் சீடர்களிடம் சொன்னதாவது: "காலம் வரும். மனுமக னுடைய நாட்களில் ஒன்றையாவது காண வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள். ஆனால் காணமாட்டீர்கள். உங்களிடம், 'இதோ இங்கே, அதோ அங்கே' என்பார்கள். நீங்களோ போகவேண்டாம்; அவர்கள்பின் ஓடவேண்டாம். மின்னல் வானத்தின் ஒரு முனையில் மின்னி எதிர் முனைக்குப் பாய்வதுபோலவே, மனுமகனும் தாம் வரும் நாளில் தோன்றுவார்.

ஆனால் முதலில் அவர் மிகவும் பாடுபட்டு இந்தத் தலைமுறையால் புறக்கணிக்கப்படவேண்டும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*அவர்களுக்கு உலகத்தை ஆராய்ந்தறியக் கூடுமானால், அதன் ஆண்டவரைக் கண்டறிய அவர்கள் தவறியது எப்படி?*

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் 13 : 1-9

கடவுளை அறியாத மனிதர் அனைவரும் இயல்பிலேயே மடையர்கள்; கண்ணுக்குப் புலனாகும் நன்மைகளைக் கண்டு இருக்கின்றவரை அறிந்து கொள்ள இயலாதவர்களாயினர்; கைவினைகளில் கவனம் செலுத்தி கைவினைஞரை அறிந்துகொள்ளாமல் போயினர். அதற்கு மாறாக, தீயோ, காற்றோ, சூறாவளியோ, விண்மீன் கூட்டமோ, அலைமோதும் வெள்ளமோ, வானத்தின் சுடர்களோதான் உலகத்தை ஆளுகின்ற தெய்வங்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இந்தப் பொருட்களின் அழகில் மயங்கி இவற்றைத் தெய்வங்கள் என எண்ணினார்களாயின், இவற்றையெல்லாம் ஆளுகிறவர் இவற்றினும் எவ்வளவோ மேலானர் என்பதை அறிந்து கொள்ளட்டும்; ஏனெனில் அழகின் ஊற்றே அவற்றை உண்டாக்கினார். அவற்றின் வல்லமையையும் ஆற்றலையும் கண்டு மனிதர் வியப்பில் ஆழ்கிறார்கள் எனில், அவற்றை யெல்லாம் ஆக்கியவர் அவற்றினும் எவ்வளவோ வல்லமையுள்ளவர் என்பதை அவற்றால் அறியட்டும். ஏனெனில் படைப்புகளின் பெருமை யையும் அழகையும் கண்டு அவற்றைப் படைத்தவரைக் கண்டறியலாம்.

ஆயினும் அந்த மனிதர்கள்மேல் அவ்வளவு குற்றம் இல்லையெனலாம்; ஏனெனில் கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்க முயலும்போது ஒருவேளை அவர்கள் தவறியிருக்கலாம். அவருடைய படைப்புகளின் நடுவில் வாழும்போது அவரைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்குப் புலனாவதையே நம்பிவிடுகிறார்கள்; கண்ணுக்குப் புலனாகிறவை அவ்வளவு அழகாயிருக்கின்றன.

இருப்பினும் இவர்களும் சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. ஏனெனில், உலகத்தைப்பற்றி ஆராய்ந்தறியும் அளவுக்கு அவர்களுக்கு அறிவாற்றல் இருக்கும்போது, இவற்றுக்கெல்லாம் ஆண்டவரை எளிதில் கண்டறிய அவர்கள் தவறிவிட்டதெப்படி?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 19 : 1-2, 3-4 (பல்லவி : 1a)

பல்லவி : **வானங்கள் கடவுளின் மாட்சிமையைச் சாற்றும்.**

1 வானமண்டலம் அவரது கைத்திறனை எடுத்துரைக்கும்.
2 பகல்தோறும் பகல் அதைத் தெரிவிக்கிறது;
இரவுதோறும் இரவு அதை அறிவிக்கிறது. பல்லவி

3 அவற்றிற்குச் சொல்லுமில்லை, பேச்சுமில்லை;
அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை.
4 எனினும், அவற்றின் குரல் உலகெலாம் கேட்கிறது:
அவை விடுக்கும் செய்தி உலகின் எல்லைவரை எட்டுகிறது. பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**போதனையில் நிலைத்து நிற்பவனிடம்
தந்தையும் மகனும் இருப்பார்கள்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 4 - 9

அம்மணீ: பரம தந்தையிடமிருந்து நாம் பெற்ற கட்டளைப்படி, உம் மக்களுள் சிலர் உண்மைக்கேற்ப நடப்பது கண்டு, நான் பெருமகிழ்ச்சியுற்றேன். அம்மணீ, நான் இப்பொழுது கேட்டுக்கொள்வது: ஒருவர்க்

கொருவர் நாம் அன்பு செய்வோமாக. இது ஒரு புதிய கட்டளையன்று, தொடக்கத்திலிருந்து நமக்குள்ள கட்டளையே. அவருடைய கட்டளைகளின்படி நடப்பதே அன்பு. அன்பு நெறியில் நடத்தல் வேண்டுமென்பதே இக்கட்டளை.

இவையே தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். வஞ்சகர் பலர் உலகெங்கும் பரவியுள்ளனர். ஊன் உருவில் வருகிற யேசு கிறிஸ்துவை இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இத்தகையவன் வஞ்சகன்; இவனே எதிர்க் கிறிஸ்து. உங்கள் உழைப்பின் பயனை இழக்காமல் முழுப் பயனையும் நீங்கள் அடையும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் போதனையில் நிலைத்து நில்லாமல் எல்லை மீறுபவனிடம் கடவுள் இல்லை; அந்தப் போதனையில் நிலைத்திருப்பவனிடமே தந்தையும் மகனும் இருக்கிறார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 118 : 1, 2, 10, 11, 17, 18 (பல்லவி : 1b)*

பல்லவி : **ஆண்டவர் தம் சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.**

1 மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர்
ஆண்டவர் தம் திருச்சட்டபடி நடப்போர் பேறு பெற்றோர். பல்லவி

2 அவருடைய ஆணைகளைக் கடைப்பிடிப்போர் பேறு பெற்றோர்
முழு மனத்தோடு அவரைத் தேடுவோர் பேறு பெற்றோர். பல்லவி

10 முழு மனத்தோடு நான் உம்மைத் தேடுகிறேன்:
உம் கற்பனைகளை விட்டுத் தவறிச்செல்ல என்னை விடாதேயும். பல்லவி

11 உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு:
உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன். பல்லவி

17 உம் வார்த்தைகளை நான் கடைப்பிடித்து வாழும் வண்ணம்,
உம் ஊழியன் எனக்கு அருள் கூறும். பல்லவி

18 உமது திருச்சட்டத்தின் வியத்தகு செயல்களை
நான் நன்குணரும் வண்ணம் என் கண்களைத் திறந்தருளும். பல்லவி

அல்லேலூயா, அல்லேலூயா. தலை நிமிர்ந்து நில்லுங்கள்;
உங்கள் மீட்பு நெருங்கி வருகிறது. அல்லேலூயா.

நற்செய்தி வாசகம்

மனுமகன் வெளிப்படும் நாளிலும் அவ்வாறே இருக்கும்.

✠ லூக்கா எழுதிய புனித நற்செய்தியிலிருந்து வாசகம் 17:26-37

அக்காலத்தில்: இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது:

"நோவா பெட்டகத்தில் நுழைந்த நாள்வரை மக்கள் உண்டு குடித்தும், பெண்கொண்டும் கொடுத்தும் வந்தனர். வெள்ளப்பெருக்கு வந்து அனைவரையும் அழித்தது. அவ்வாறே, லோத்தின் காலத்திலும் நடந்தது: உண்டு குடித்தனர்; விற்று வாங்கினர்; நட்டனர், கட்டினர்.

லோத்து சோதோமை விட்டுச் சென்ற நாளில், வானிலிருந்து தீயும் கந்தகமும் பொழிந்து எல்லாரையும் அழித்தது. மனுமகன் வெளிப்படும் நாளிலும் அவ்வாறே இருக்கும்.

அந்நாளில் கூரைமேல் இருப்பவன், வீட்டிலுள்ள தன் பொருட்களை எடுப்பதற்கு இறங்கவேண்டாம். அப்படியே வயலில் இருப்பவன் திரும்பி வரவேண்டாம். லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள். தன் உயிரைப் பாதுகாக்கத் தேடுகிறவன் அதை இழந்துவிடுவான். இழப்பவனோ அதைக் காத்துக்கொள்வான்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: அந்த இரவில் ஒரே படுக்கையில் இருவர் இருப்பர், ஒருவன் எடுக்கப்படுவான்; மற்றவன் விடப்படுவான். இரு பெண்கள் சேர்ந்து மாவரைப்பர். ஒருத்தி எடுக்கப்படுவாள்; மற்றவள் விடப்படுவாள்."

அதற்கு அவர்கள், "எங்கே ஆண்டவரே?" என்றார்கள். அவரோ, "பிணம் எங்கேயோ அங்கேயே கழுகுகள் கூடும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**செங்கடலில் செம்மையான வழி உண்டாயிற்று;
ஆட்டுக்குட்டிகளைப் போல் துள்ளி மகிழ்ந்தார்கள்.**

ஞான ஆகமத்திலிருந்து வாசகம் *18 : 14-16; 19 : 6-9*

எல்லாம் ஆழ்ந்த அமைதியில் அடங்கியிருக்கையில், இரவு வேளையில் பாதி கடந்தபின் நள்ளிரவு நேரத்தில், உமது எல்லாம் வல்ல வார்த்தை விண்ணகத்திலுள்ள அரச அரியணையை விட்டுக் கிளம்பி அஞ்சா நெஞ்சம் படைத்த போர்வீரனைப்போல் அறிவுக்கெனக் குறிக்கப்பட்ட நாட்டின் நடுவில் பாய்ந்தது. உமது கண்டிப்பான கட்டளையாகிய கூரிய வாளைக் கையிலேந்தி, வந்துநின்று உலக முழுவதையும் சாவினால் நிரப்பிற்று; மண்ணுலகில் காலூன்றி விண்ணகத்தைத் தொடும்படி நின்றது.

உம் பிள்ளைகள் இடையூறின்றிக் காக்கப்படும்படிக்கு உம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து படைப்பு முழுவதும் தன் இயல்பில் புதிதாக உருப்பெற்றது.

அவர்களது பாசறைக்குக் கார்மேகம் நிழல் கொடுத்தது; முன்பு தண்ணீரிருந்த இடத்தில் இப்பொழுது உலர்ந்த தரை தோன்றிற்று; செங்கடலில் செம்மையான வழியும் மோதியடிக்கும் அலைகளினூடே புல்திடலும் உண்டாயின. உமது கையால் காப்பாற்றப்பட்டவர்கள் ஓரினமாய் அவ்வழியே கடந்து சென்றனர்; வியப்புக்குரிய விந்தைச் செயல்களைக் கண்டுகொண்டே போயினர்.

நல்ல மேய்ச்சலைக் கண்ட குதிரைகளைப்போல் மகிழ்ந்து, ஆட்டுக் குட்டிகளைப்போல் துள்ளிக்கொண்டு தங்களை மீட்ட ஆண்டவராகிய உம்மைப் புகழ்ந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104 : 2-3, 36-37, 42-43 ( பல்லவி : 6 a )*

பல்லவி : **ஆண்டவர் செய்த வியத்தகு செயல்களை நினைவுகூருங்கள்.**

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள் ; இசைக்கருவி மீட்டுங்கள்;
அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள்.
3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள்:
ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக. பல்லவி

36 நாட்டிலுள்ள முதற்பேறான யாவரையும் வதைத்தார்.
அவர்கள் ஈன்ற தலைப்பேறான மக்கள் யாவரையும் வதைத்தொழித்தார்.
37 வெள்ளியோடும் பொன்னோடும் அவர்கள் வெளியேறச் செய்தார்:
அவர்களின் கோத்திரங்களில் வலிமையற்றவர் எவருமில்லை. பல்லவி

42 ஏனெனில், தம்முடைய திருவாக்கை அவர் நினைவுகூர்ந்தார்:
தம் ஊழியன் ஆபிரகாமுக்குச் சொன்னதை அவர் மறக்கவில்லை.
43 பெருமகிழ்ச்சியிடையே தம் மக்களை வெளியேற்றினார்;
தாம் தேர்ந்தெடுத்தவர்களை அக்களிப்பிடையில் கூட்டிச்சென்றார். பல்லவி

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**சகோதரரை ஆதரித்து, உண்மைக்காக அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
மூன்றாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5-8

அன்புக்குரியவரே, சகோதரர்களுக்காக - அதுவும் அந்நியரான சகோதரர்களுக்காக- நீர் உழைக்கும்போதெல்லாம் கடமை தவறாதவராய் விளங்குகிறீர். இவர்கள் எங்கள் சபையின் முன்னிலையில் உமது அன்புக்குச் சான்று பகர்ந்தனர். கடவுளுக்குகந்த முறையில் அவர்களை நீர் வழியனுப்புவீராகில் நலமாயிருக்கும். அவர்கள் கிறிஸ்துவின் பெயருக்காகப் பயணத்தை மேற்கொண்டார்கள்; வழியில் புற மதத்தாரிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இத்தகையோரை ஆதரித்து, உண்மைக்காகப் பணிபுரியும் அவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 111 : 1-2, 3-4, 5-6 ( பல்லவி : 1 a )

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறு பெற்றோன்.**

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்.
அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும்.
நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசிபெறும். பல்லவி

3 செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உலவும்:
அவனுடைய ஈகை என்றென்றும் நிலைக்கும்.
4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்.
கருணை, இரக்கம், நீதி உள்ளவனாய் இருப்பான். பல்லவி

5 மனமிரங்கி கடன்கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்.
தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
6 எந்நாளும் அவன் அசைவுறான்:
என்றென்றும் அவன் மக்கள் நினைவில் வாழ்வான். பல்லவி

அல்லேலூயா 2 தெச. 2 : 14

அல்லேலூயா. நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் மகிமையை
நாம் பெற்றுக் கொள்ளும்படி,
நற்செய்தி வழியாக இறைவன் நம்மை அழைத்தார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தாம் தேர்ந்துகொண்டவர்கள் தம்மை நோக்கிக்
கூப்பிடும்போது கடவுள் நீதி வழங்குவார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18 : 1-8

**அக்காலத்தில் :**

( பக்கம் 818 காண்க )

# முப்பத்து மூன்றும் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**அவள் தன் கைத்திறமையால் வேலை செய்தாள்.**

பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம் *31 : 10-13, 19-20, 30-31*

வல்லமையுள்ள பெண்ணைக் கண்டுபிடிப்பவன் யார்? அவள் தூரமாய்க் கடைகோடிகளினின்று அடையப்பெற்ற செல்வமாம். அவள் கணவனின் இதயம் அவள்பால் நம்பிக்கை கொள்கின்றது. கொள்ளைப் பொருட்களும் அவனுக்குக் குறைவுபடா. அவள் அவனுக்குத் தன் வாழ்நாட்கள் அனைத்தும் தீமையை அல்ல, நன்மையையே அளிப்பாள். அவள் ஆட்டு மயிரையும் சணல் நூலையும் தேர்ந்தெடுத்துத் தன் கைத் திறமையால் வேலை செய்தாள்.

வன்மையான காரியங்களுக்குத் தன் கைகளை உபயோகித்தாள். அவளுடைய விரல்கள் சிம்புக் கதிரைப் பிடித்தன. வகையில்லாதவனுக்குத் தன் கைகளைத் திறந்தாள். தன் உள்ளங் கைகளை ஏழைக்கு நீட்டினாள்.

அழகு பொய்யும், எழில் வீணுமாம். ஆண்டவருக்குப் பயப்படுகிற பெண்ணே புகழப்படுவாள். அவளுடைய கைகளினின்று பெறும் பலனை அவளுக்கே கொடுங்கள். அவளுடைய செயல்களே ( நடுவரின் ) சங்கங்களில் அவளைப் புகழக்கடவன.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 127 : 1-2, 3, 4-5 ( பல்லவி : 1 ஐ காண் )*

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.**

1 **ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறு பெற்றோன்:**
**அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறு பெற்றோன்.**
2 **ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்;**
**பேறுபெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும்.** பல்லவி

3 கனிதரும் கொடி முந்திரிபோல் உன் மனைவி
உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள்:
ஒலிவச் செடிகள்போல உன் மக்கள் பல்லவி
பந்தியில்உன்னைச் சூழ்ந்திருப்பர்.

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக:
உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை பல்லவி
நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக.

## இரண்டாம் வாசகம்

ஆண்டவருடைய நாள் திருடனைப்போல்
திடீரென உங்களைத் தாக்காதிருப்பதாக.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6

சகோதரர்களே, காலங்கள் நேரங்களைப்பற்றி உங்களுக்கு எழுதத் தேவையில்லை. திருடன் நள்ளிரவில் வருவதுபோல் ஆண்டவருடைய நாள் வரும் என்பது உங்களுக்குத் திண்ணமாய்த் தெரியும்.

‘எல்லாம் அமைதி, ஆபத்து ஒன்றுமில்லை’ என்று மக்கள் கூறும் போதே, கர்ப்பவதிகளுக்கு வேதனை ஏற்படுவதைப்போல் திடீரென அவர்களுக்கு அழிவு வரும். யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆனால், சகோதரர்களே, நீங்கள் இருளில் நடப்பவர்களல்ல. திடீரெனத் தாக்கும் திருடனைப்போல் அந்த நாள் உங்களுக்கு இராது. நீங்கள் அனைவரும் ஒளியின் மக்கள், பகலின் மக்கள். நாம் இரவுக்கோ, இருளுக்கோ உரியவரல்ல.

எனவே, மற்றவர்களைப்போல் நாமும் தூங்கலாகாது, விழித்திருக்க வேண்டும்; மட்டு மிதத்தோடு இருத்தல் வேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — அரு. 15:4, 5

அல்லேலூயா. நான் உங்களில் நிலைத்திருப்பதுபோல்
நீங்களும் என்னில் நிலைத்திருங்கள்!
ஒருவர் என்னில் நிலைத்திருந்தால்
அவன் மிகுந்த கனி தருவான்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நீ சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனும் இருந்தாய்;
எனவே, உன் தலைவனது மகிழ்ச்சியில் பங்குகொள்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 25:14-30

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறிய உவமையாவது:

"பயணம் செல்ல இருந்த ஒருவன் தன் ஊழியரை அழைத்துத் தன்னுடைமையெல்லாம் அவர்களிடம் ஒப்படைத்தான் என்று வைத்துக் கொள்வோம். அவனவன் திறமைக்குத் தக்கவாறு ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், வேறொருவனுக்கு இரண்டும், இன்னொருவனுக்கு ஒன்றுமாகக் கொடுத்துப் பயணம் சென்றான். ஐந்து தாலந்து பெற்றவன் உடனே சென்று அவற்றைப் பயன்படுத்தி இன்னும் ஐந்து சம்பாதித்தான். அப்படியே, இரண்டு பெற்றவனும் மேலும் இரண்டு சம்பாதித்தான். ஒன்று பெற்றவனோ சென்று மண்ணைத் தோண்டித் தலைவனுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.

நெடுங் காலத்திற்குப் பின்னர், அவ்வூழியரின் தலைவன் திரும்பி வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டான்.

ஐந்து தாலந்து பெற்றவன் அணுகி, மேலும் ஐந்து தாலந்து கொண்டுவந்து, 'ஐயா, நீர் என்னிடம் ஐந்து தாலந்து ஒப்படைத்தீர். இதோ! இன்னும் ஐந்து தாலந்து சம்பாதித்துள்ளேன்' என்றான். அதற்குத் தலைவன், 'நன்று, நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய்; ஆதலால் உன்னைப் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன். உன் தலைவனது மகிழ்ச்சியில் பங்கு கொள்' என்றான்.

இரண்டு தாலந்து பெற்றவனும் வந்து, 'ஐயா, நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ! மேலும் இரண்டு தாலந்து சம்பாதித்துள்ளேன்' என்றான். அதற்குத் தலைவன், 'நன்று, நன்று,

நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய்; ஆதலால் உன்னைப் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன். உன் தலைவனது மகிழ்ச்சியில் பங்குகொள்' என்றான்.

ஒரு தாலந்து பெற்றவனோ வந்து, 'ஐயா, உம்மை எனக்குத் தெரியும். நீர் கடுமையானவர்; விதைக்காத இடத்தில் அறுப்பவர்; தூவாத இடத்தில் சேர்ப்பவர். ஆகவே, உமக்கு அஞ்சி, உம் தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ! உம்முடையது' என்று கொடுத்தான்.

அதற்குத் தலைவன், 'கெட்ட ஊழியனே, சோம்பேறியே' நான் விதைக்காத இடத்தில் அறுப்பவன், தூவாத இடத்தில் சேர்ப்பவன் என்று உனக்குத் தெரியுமே. என் பணத்தை நீ வட்டிக்காரனிடம் கொடுத்திருக்க வேண்டும். நான் வந்து என்னுடையதை வட்டியோடு பெற்றிருப்பேன். எனவே, இவனிடமிருந்து தாலந்தைப் பிடுங்கி, பத்துத் தாலந்து உடையவனுக்குக் கொடுங்கள். ஏனெனில், உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும். அவனும் நிறைவு பெறுவான். இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற ஊழியனை வெளி இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்' என்றான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*25 : 14-15, 19-20*

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறிய உவமையாவது:

பயணம் செல்ல இருந்த ஒருவன் தன் ஊழியரை அழைத்துத் தன்னுடைமையெல்லாம் அவர்களிடம் ஒப்படைத்தான் என்று வைத்துக் கொள்வோம். அவனவன் திறமைக்குத் தக்கவாறு ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், வேறொருவனுக்கு இரண்டும், இன்னொருவனுக்கு ஒன்றுமாகக் கொடுத்துப் பயணம் சென்றான்.

நெடுங் காலத்திற்குப் பின்னர், அவ்வூழியரின் தலைவன் திரும்பி வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டான்.

ஐந்து தாலந்து பெற்றவன் அணுகி, மேலும் ஐந்து தாலந்து கொண்டுவந்து, 'ஐயா, நீர் என்னிடம் ஐந்து தாலந்து ஒப்படைத்தீர். இதோ! இன்னும் ஐந்து தாலந்து சம்பாதித்துள்ளேன்' என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**அக்காலத்தில் உன் இனத்தார் தப்பித்துக்கொள்வர்.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் *12 : 1-3*

"அக்காலத்தில் உன் இனத்தார்க்குக் காவலராக சேனைத் தலைவரான மிக்கேல் எழும்புவார்; மக்களினம் தோன்றியதுமுதல் அக்காலம் வரை இருந்திராத துன்பகாலம் வரும்; அக்காலத்தில் உன் இனத்தார் தப்பித்துக் கொள்வர்: யார் யார் பெயர் நூலில் எழுதப்பட்டுள்ளதோ அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள்.

இறந்துபோய் மண்ணில் உறங்குகிற பலருள் சிலர் முடிவில்லா வாழ்வடைவதற்கும், சிலர் முடிவில்லா இழிவுக்கும் நிந்தைக்கும் ஆளாவதற்கும் எழுந்திருப்பார்கள்.

ஞானிகள் வானத்தின் ஒளியைப்போலும், பலரை நல்வழியில் திருப்பியவர்கள் விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15 : 5 & 8, 9-10, 11 ( பல்லவி : 1 )

பல்லவி : **இறைவா என்னைப் பாதுகாத்தருளும்:
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.**

5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்:
எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்:
அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்;
என் உள்ளம் அக்களிக்கும்;
10 என் உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர் :
உம் புனிதர் அழிவுகாண விடமாட்டீர். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்:
உம் திருமுன் எனக்கு நிறை மகிழ்ச்சியையும்,
உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தாம் பரிசுத்தராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *10 : 11-14, 18*

ஒவ்வொரு குருவும் நாடோறும் இறைபணி ஆற்றுகையில், கையில் திரும்பத் திரும்ப அதே பலிகளை ஒப்புக்கொடுத்து வருகிறார். அவையோ பாவங்களை ஒருபோதும் போக்கிவிட இயலாதவை. ஆனால், இவர் என்றென்றைக்கும் பயன் தரும் ஒரு பலியைப் பாவங்களுக்காக ஒப்புக் கொடுத்து, 'கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்.' அங்கே, 'தம் பகைவர் தமக்குக் கால்மணையாக்கப்படும்வரை' காத்திருக்கிறார்.

தாம் பரிசுத்தராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார். இவற்றிற்கு மன்னிப்புக் கிடைத்தபின், பாவப் பரிகாரப் பலிக்கு இடமேயில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

லூக் 21 : 36

அல்லேலூயா. நீங்கள் மனுமகன் முன் நிற்க
வலிமையுள்ளவர்களாய் இருக்கும்படி
எந்நேரமும் செபித்து விழிப்பாயிருங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தாம் தெரிந்துகொண்டவர்களை நாற்றிசையிலுமிருந்து திரட்டுவார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *13: 24-32*

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது:

"ஆனால் அந்நாட்களில் இவ்வேதனைகளுக்குப் பின்னர் கதிரவன் இருண்டு விடுவான்; நிலா ஒளி கொடாது, விண்மீன்கள் வானிலிருந்து விழுந்துகொண்டிருக்கும்; வானத்தின் படைகள் அசைக்கப்படும்.

அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மேகங்களின் மீது வருவதைக் காண்பார்கள். அப்பொழுது அவர் தம் தூதர்களை அனுப்பி, மண்ணுலகின் கடைமுனைமுதல் விண்ணுலகின் கடைமுனைவரை நாற்றிசையிலுமிருந்து தாம் தேர்ந்துகொண்டவர்களைத் திரட்டுவார்.

அத்தி மரத்திலிருந்து இந்த உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் கிளைகள் மென்மையாகித் தளிர்விடும்போது கோடைக்காலம் அண்மையிலுள்ளது என்று உங்களுக்குத் தெரியும். அவ்வாறே நீங்களும் இவையெல்லாம் நடைபெறுவதைக் காணும்பொழுது, அவர் அண்மையிலிருக்கிறார். வாசலிலே இருக்கிறார் என்று அறிந்துகொள்ளுங்கள்.

இவை யாவும் நடைபெறும்வரை இத்தலைமுறை ஒழியாது என்று உங்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோகா. அந்நாளோ நாழிகையோ ஒருவனுக்கும் தெரியாது; தந்தைக்குத் தெரியுமேயன்றி, வானதூதருக்கும் மகனுக்கும்கூடத் தெரியாது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு 3- ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான்.**

இறைவாக்கினர் மலாக்கியா ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 1-2அ

"இதோ அந்த நாள் சூளைபோல் எரிந்துகொண்டு வரும்; அப்போது ஆணவங் கொண்டவர், கொடியவர் அனைவரும் அதில் போடப் பட்ட வைக்கோலாவர். அப்படி வருகின்ற அந்த நாள், அவர்களுடைய வேரோ கிளையோ இல்லாதபடி அவர்களை முற்றிலும் சுட்டெரித்துவிடும், என்கிறார் சேனைகளின் ஆண்டவர்.

ஆனால் நமது திருப்பெயருக்கு அஞ்சி நடக்கும் உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான்; தன் இறக்கைகளில் நலத்தைத் தாங்கி வருவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 5-6, 7-9அ, 10 (பல்லவி : 9 காண்)

பல்லவி: **மக்களினத்தாரை நேர்மையுடன் ஆட்சிசெய்ய
ஆண்டவர் வருகின்றார்.**

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள்,
வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.
6 எக்காளமும் கொம்பும் ஊதி ஆண்டவராகிய அரசரின்
திருமுன் களிகூருங்கள். பல்லவி

7 கடலும் அதில் வாழ்வனவும் ஆர்ப்பரிக்கட்டும்:
பூவுலகும் அதில் வாழ்வோரும் உளம் பூரிக்கட்டும்.
8 பெருவெள்ளங்கள் கைகொட்டட்டும்:
ஆண்டவர் எழுந்தருளும்போது மலைகளும் ஆரவாரம் செய்யட்டும்.
9 ஏனெனில், பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார். பல்லவி

10 நீதியுடன் பூவுலகை அவர் ஆள்வார்:
மக்களினத்தாரை அவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது.**

**அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம்** 3 : 7-12

சகோதரர்களே :

எங்களைப்போல் நடப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமே. உங்களோடிருந்தபோது நாங்கள் சோம்பித் திரியவில்லை. யாரிடமும் நாங்கள் இலவசமாக உணவுகொள்ளவில்லை. மாறாக, உங்களுள் யாருக்கும் சுமையாய் இராதபடி பிழைப்புக்காக இராப் பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம். உங்களிடமிருந்து பிழைப்புக்குத் தேவையானதைப் பெற எங்களுக்கு உரிமையில்லை என்பதனால் இவ்வாறு உழைக்கவில்லை. நாங்கள் செய்வதுபோலவே நீங்களும் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு முன்மாதிரியாய் இருக்கவே அப்படிச் செய்தோம்.

நாங்கள் உங்களோடிருந்தபொழுது, 'உழைக்க மனமில்லாத எவனும் உண்ணலாகாது' என்ற கட்டளை கொடுத்தோம். உங்களுள் சிலர் எவ்வேலையும் செய்யாமல், இங்கும் அங்கும் சோம்பித் திரிந்து, பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம்.

இத்தகையோர் தங்கள் உணவுக்காக அமைதியோடு உழைக்க வேண்டுமென்று ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் கட்டளையிட்டு அறிவுறுத்துகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 21 : 28

**அல்லேலூயா.** உங்கள் மீட்பு நெருங்கிவருகிறது என்று நீங்கள் கண்டு தலை நிமிர்ந்து நில்லுங்கள். **அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**நிலைத்து நின்றால், உங்கள் ஆன்மாக்களை விடுவித்துக்கொள்வீர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
21 : 5-19

அக்காலத்தில் :

கோயிலைப்பற்றிச் சிலர் பேசிக்கொண்டிருக்கையில், அது நல்ல கற்களாலும் பொருத்தனைக் கொடைகளாலும் அழகு செய்யப்பட்டுள்ளது என்றபோது யேசு, "ஒருநாள் வரும், நீங்கள் காணும் இதெல்லாம், கல்லின்மேல் கல் இராதபடி இடிபடும்" என்றார்.

"போதகரே, இவை நடைபெறும் காலத்தை எந்த அறிகுறிகளால் அறிந்துகொள்ளலாம்?" என்று அவரை வினவினர்.

அதற்கு அவர், "ஏமாறாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். பலர் என் பெயரை வைத்துக்கொண்டு, 'நானே அவர், குறித்த காலம் நெருங்கி விட்டது' என்பார்கள். அவர்கள் பின்னே போகாதீர்கள். போர்களைப் பற்றியும் குழப்பங்களைப்பற்றியும் கேள்விப்படும்போது திகிலடையாதீர்கள். இவை முதலில் நிகழத்தான் வேண்டும். ஆனால் முடிவு உடனே வராது" என்றார்.

மேலும் அவர் சொன்னதாவது: "நாடு நாட்டையும், அரசு அரசையும் எதிர்த்து எழும். பற்பல இடங்களில் கொடிய நிலநடுக்கமும், கொள்ளைநோய்களும், பஞ்சமும் உண்டாகும்; அச்சமூட்டும் நிகழ்ச்சிகளும், வானத்தில் பெரிய அறிகுறிகளும் தோன்றும்.

இதற்கெல்லாம் முன்னதாக என் பெயரின் பொருட்டு உங்களைப் பிடித்து, செபக்கூடங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் இழுத்துச் சென்று, அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் உங்களைக் கையளித்துத் துன்புறுத்துவர். எனக்கு நீங்கள் சாட்சியாயிருப்பதற்கு இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும். எனவே, என்ன பதில் அளிக்கலாம் என்று முன்னதாகவே எண்ணிப் பார்க்க வேண்டாம்.

இதை உள்ளத்தில் இருத்துங்கள்: உங்கள் எதிரிகள் எவருமே உங்களை எதிர்த்து நிற்கவோ, மறுத்துப் பேசவோ கூடாதபடி உங்களுக்குப் பேச்சு வன்மையும் ஞானமும் அருளுவேன்.

உங்கள் பெற்றோரும் உடன்பிறந்தோரும் உறவினரும் நண்பரும் உங்களைக் காட்டிக்கொடுப்பர். உங்களுள் சிலர் கொல்லப்படுவர். என் பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள். ஆயினும் உங்கள் தலைமயிர் ஒன்றுகூட விழவே விழாது. நிலைத்து நின்றால், உங்கள் ஆன்மாக்களை மீட்டுக்கொள்வீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*மக்கள் மிக்க கோபம் கொண்டனர்.*

மக்கபே ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்
1 : 11-16, 43-45, 57-60, 65-67

அந்நாட்களில் :

அந்தியோக்கஸ் அரசனின் புதல்வனான பெரிய அந்தியோக்கஸ் கிரேக்க அரசின் நூற்று முப்பத்தேழாம் ஆண்டு ஆண்டான். இவன் உரோமையில் பிணையாளனாக இருந்தவன்.

அக்காலத்தில் இஸ்ராயேலில் தீயவர் பலர் தோன்றி: நம்மைச் சுற்றிலும் இருக்கும் இனத்தாரோடு நாம் உடன்படிக்கை செய்து கொள்வோம். ஏனென்றால், நாம் அவர்களை விட்டுப் பிரிந்திருந்த காலமெல்லாம் நம்மைப் பலவிதத் தீமைகள் சூழ்ந்துகொண்டன என்று மற்றவர்களிடம் கூறினார்கள். அவர்கள் சொன்னது மற்றவர்களுக்கும் நல்லதாகத் தோன்றியது. ஆதலால், அவர்கள் சிலரை நியமித்தனர். அவர்கள் அரசனிடம் செல்ல, அரசனும் புறவினத்தாரின் வழக்கங்களை அவர்களும் அனுசரிக்க அனுமதி அளித்தான். புறமதத்தாருடைய வழக்கம்போல், அவர்களும் யெருசலேமில் கல்விக்கூடம் ஒன்று ஏற்படுத்தினார்கள். தங்கள் பரிசுத்த உடன்படிக்கையை விட்டுவிட்டு, நாதனை ஏற்பாடுகளை அனுசரித்து, அன்னியர்களோடு கலந்து, பொல்லாங்குகளுக்குத் தங்களையே கையளித்தார்கள்.

அந்தியோக்கஸ் மன்னன் தன் நாட்டு மக்கள் எல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டுமென்றும், தத்தம் வழக்கங்களை விட்டுவிட வேண்டுமென்றும் ஓலை அனுப்பினான். அந்தியோக்கஸ் மன்னனின் வார்த்தைப்படி நடக்க எல்லாரும் இசைந்தார்கள். இஸ்ராயேலரிலும் பலர் அவனுக்கு அடிமைகளாக இசைந்து, சிலைகளுக்குப் பலியிட்டு ஓய்வுநாளைக் கெடுத்தார்கள்.

நூற்று நாற்பத்தைந்தாம் ஆண்டு காஸ்லேயு மாதம் பதினைந்தாம் நாள் கடவுளுடைய பீடத்தின்மேல் வெறுப்பூட்டும் சிலையை அவன் நிறுவினான். யூத நகரங்களைச் சுற்றிலும் அவர்கள் பீடங்களைக் கட்டினார்கள். வீடுகளின் கதவுகளுக்கு முன்பாகவும், மைதானங்களிலும் சாம்பிராணி எந்திப் பலியிட்டார்கள். கடவுளின் கட்டளைகள் அடங்கிய நூல்களைக்

கிழித்து நெருப்பிலே எறிந்தார்கள். எவனெவனிடம் மறைநூல்களைக் கண்டார்களோ அவனையும், கடவுளின் கட்டளைகளை அனுசரிக்கிறவர்களையும் அரசன் ஆணைப்படி கொன்றார்கள்.

இஸ்ராயேலரில் பலர் அசுத்தமான உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதில்லையென்று தங்களுக்குள் தீர்மானம் செய்துகொண்டார்கள். அசுத்தமான உணவுப் பொருட்களைச் சாப்பிட்டுத் தங்களை மாசுபடுத்திக் கொள்வதைவிடச் சாகத் துணிந்திருந்தார்கள். கடவுளின் புனித கட்டளைகளை மீற மனமற்றவர்களாய் இருந்தார்கள். ஆதலால், கொலையுண்டார்கள். எனவே மக்கள் மிக்க கோபம் கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118 : 53, 61, 134, 150, 155, 158 ( பல்லவி : 88 காண் )

பல்லவி : ஆண்டவரே, என்னை உயிரோடு வைத்திரும் :
உம்முடைய ஆணைகளை நான் கடைப்பிடிப்பேன்.

53 உம் திருச்சட்டத்தைக் கைவிடும் பாவிகளைப் பார்க்கும்போது
மிகவே சினம் கொள்கிறேன். பல்லவி

61 பாவிகளின் தளைகள் என்னை இறுக்கின :
ஆனால் உம் திருச்சட்டத்தை நான் மறக்கவில்லை. பல்லவி

134 மனிதர்களால் வரும் நெருக்கடியினின்று என்னை விடுவியும்,
உம் கட்டளைகளை நான் கடைப்பிடிப்பேன். பல்லவி

150 என்னை அநியாயமாகத் துன்புறுத்துவோர் நெருங்கி வருகின்றனர்,
அவர்களுக்கும் உமது திருச்சட்டத்திற்கும் வெகுதூரம். பல்லவி

155 பாவிகள் மீட்புக்கு வெகு தொலைவிலுள்ளனர்;
ஏனெனில், அவர்கள் உம் நியமங்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. பல்லவி

158 அக்கிரமம் செய்வோரைப் பார்த்தேன், பெரிதும் வருந்தினேன்:
ஏனெனில், அவர்கள் உம் வாக்கைக் கடைப்பிடிப்பதில்லை. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீ உயர்ந்த நிலையினின்று தவறிவிட்டாய் என்று நினைவுகூர்ந்து மனந்திரும்பு.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாட்டின் தொடக்கம்

*1 : 1-4; 2 : 1-5a*

இது யேசு கிறிஸ்து அருளிய திருவெளிப்பாடு: விரைவில் நிகழ வேண்டியவற்றைத் தம் அடியார்களுக்கு வெளிப்படுத்துமாறு கடவுள் அதை அவருக்கு அருளினார். கிறிஸ்துவோ தம் தூதரை அனுப்பித் தம் அடியானாகிய அருளப்பனுக்கு அவற்றைத் தெரிவித்தார். அருளப்பன் தான் கண்டதனைத்தையும் அறிவித்து, கடவுளின் வார்த்தைக்கும், யேசு கிறிஸ்து அளித்த சாட்சியத்துக்கும் சான்று கூறினான். இவ்விறைவாக்குகளை வாசிப்பவனும், அவற்றிற்குச் செவிசாய்த்து இந்நூலில் எழுதியுள்ளதின்படி நடப்பவர்களும் பேறுபெற்றவர்களே: இதோ! குறித்த காலம் அண்மையிலேயே உள்ளது.

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் அருளப்பன் எழுதுவது: 'இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர்' எனும் பெயருள்ள இறைவனிடமிருந்தும், அவரது அரியணைமுன் நிற்கும் ஏழு ஆவிகளிடமிருந்தும், யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக.

"எபேசு சபையின் தூதருக்கு இதை எழுது: 'தமது வலக்கையில் ஏழு விண்மீன்களை ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் நடுவில் நடப்பவர் உரைப்பதாவது: உன் செயல்களை நான் அறிவேன்; நீ எவ்வளவு உழைத்திருக்கிறாய், எவ்வளவு மனவுறுதி காட்டியிருக்கிறாய் என்பதை அறிவேன். தீயவர்களின் போக்கை நீ சகிக்கிறதில்லை என்பதும் எனக்குத் தெரியும். அப்போஸ்தலர்களாய் இல்லாதிருந்தும் சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் ஆக்கிக்கொண்டார்கள். அவர்களைப் பரிசோதித்து, அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தாய். மனவுறுதியோடும் நீ விளங்குகிறாய். என் பெயரின் பொருட்டு எவ்வளவோ தாங்கிக் கொண்டாய். ஆயினும் தளர்ச்சியுறவில்லை.

ஆனால் உன்மேல் நான் சொல்லவேண்டிய குறையொன்று உண்டு: தொடக்கத்தில் உனக்கு இருந்த அன்பு இப்போதில்லை. உயர்ந்த நிலையினின்று நீ தவறிவிட்டாய். இதை நினைத்து மனந்திரும்பி, தொடக்கத்தில் நீ செய்துவந்த செயல்களைச் செய்க."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1 : 1-2, 3, 4 & 6 ( பல்லவி : திருவெளி 2 : 7 b )

பல்லவி : வாழ்வு தரும் மரத்தின் கனியை உண்ணும் பேற்றை
வெற்றி கொள்பவனுக்கு அருள்வேன்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன்,
பாவிகளின் வழியில் செல்லாதவன்,
பழிக்காரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய்,
அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு,
இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில்
கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான் ;
4 அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

6 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒருநாளுமிராது :
காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார் :
தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும். பல்லவி

அல்லேலூயா அரு. 8 : 12

அல்லேலூயா. நானே உலகின் ஒளி ; என்னைப் பின் செல்பவன்
வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பான், என்கிறார்
ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?
ஆண்டவரே, நான் பார்வை பெறவேண்டும்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

18 : 35-43

அக்காலத்தில் :

யேசு யெரிக்கோவை நெருங்கியபொழுது, குருடன் ஒருவன் வழியோரத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். திரளான மக்கள் நடந்து செல்வதைக் கேட்டு 'அது என்ன' வென்று வினவினான். நாசரேத்தூர் யேசு அவ்வழியே செல்வதாக அவனுக்கு அறிவித்தனர்.

அவன், "இயேசுவே, தாவீதின் மகனே, என்மீது இரக்கம் வையும்" என்று கத்தினான். முன்னே சென்றவர்கள், பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ, "தாவீதின் மகனே, என்மீது இரக்கம் வையும்" என்று இன்னும் அதிகமாய்க் கத்தினான்.

இயேசு நின்று, அவனைத் தம்மிடம் கூட்டிக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

அவன் நெருங்கி வந்ததும், "உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று அவனைக் கேட்க, அவன், "ஆண்டவரே, நான் பார்வை பெற வேண்டும்" என்றான். இயேசு அவனை நோக்கி, "பார்வை பெறுக; உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது" என்றார்.

அவன் உடனே பார்வை பெற்றுக் கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தான். மக்கள் அனைவரும் இதைக் கண்டு கடவுளைப் புகழ்ந்தேத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## செவ்வாய்

முதல் ஆண்டு

### முதல் வாசகம்

கட்டளைகளுக்காக நான் நேர்மையான மரணம் அடைந்தால்,
நன்மாதிரியாய் இருப்பேன்.

மக்கபே ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 6 : 18-31

அந்நாட்களில் :

மறைநூலறிஞருள் முதன்மையானவர்களில் ஒருவரான எலெயாசார் வயதில் தளர்ந்தவர்; முக அழகு உள்ளவர். அவருடைய வாயைத் திறந்து பன்றி இறைச்சியை உண்ணும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். ஆனால், அவர் நிந்தைக்குரிய வாழ்வைவிட மாட்சி நிறைந்த மரணத்தைத் தேடி, வேதனைப்பட வலியச் சென்றார். தாம் எவ்வளவு பாடுபட வேண்டுமென்று அறிந்து, பொறுமையாய் ஏற்று, விலக்கப்பட்டவைகளுக்கு வாழவேண்டுமெனும் ஆசையினால் இணங்காமலிருக்கத் தீர்மானித்துக்கொண்டார்.

அருகில் நின்றவர்கள் அவர்மீது தாங்கள் ஏற்கெனவே கொண்டிருந்த நட்பால் அவர்மீது தவறான முறையில் இரக்கம் கொண்டு, அவரைத் தனியே அழைத்துத் தாங்கள் அவர் உண்ணக்கூடிய இறைச்சியைக் கொண்டுவருவதாகவும், அவரும் அரசன் கட்டளைப்படி பலியிடப்பட்ட இறைச்சியை உண்பதுபோல நடிக்கும்படியும் சொன்னார்கள். இப்படிச் செய்வாராகில் மரணத்தினின்று காப்பாற்றப்படுவாரென்று கூறி, அவர் மீது அவர்கள் கொண்டிருந்த பழைய நட்பால் மனிதத்தன்மையுடன் இவ்வாறு நடந்து கொண்டார்கள். ஆனால், அவர் தமது வயதுக்கும் முதுமைக்கும் தகுந்த மேன்மையையும், நரைத்தலையினால் இயல்பாக வரும் மாண்பையும், சிறுவயது முதல் தமது நல்வாழ்க்கையின் செய்கைகளையும், புனிதமானதும் கடவுளால் உண்டானதுமான கட்டளையின் ஏற்பாடுகளையும் எண்ணத்தொடங்கி, தாம் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதற்கு மனம் கொண்டிருப்பதாக உடனே மறுமொழி சொன்னார்.

“ஏனென்றால்: பாசாங்கு செய்வது நம்முடைய வயதுக்குத் தகுதியன்று. இளைஞரில் பலர் தொண்ணூறு வயதுள்ள எலெயாசார் அன்னியருடைய நெறிக்குப் போய்விட்டார் என்று நினைப்பார்கள். என்னுடைய பாசாங்கை முன்னிட்டும், அழிந்துபோகும் குறுகிய வாழ்வை முன்னிட்டும் அவர்கள் மோசம் போவார்கள். இதனால் என் முதுமையில் குற்றமும் அவமானமுமே என்னைச் சாரும். ஏனென்றால், மனிதர்களுடைய வேதனைகளினின்று நான் இப்பொழுது விடுவிக்கப்பட்டபோதிலும், உயிரோடு இருந்தாலும் இறந்தாலும் எல்லாம் வல்லவருடைய கையினின்று நான் தப்பிக்கொள்ளமாட்டேன். ஆதலால், துணிவுடன் உயிரை விடுவதால் நான் முதுமைக்கு உகந்தவனாகத் தோன்றுவேன். நான் சுறுசுறுப்பான மனத்தோடு முதன்மையானவைகளும் புனிதமானவைகளுமான கட்டளைகளுக்காகத் தயக்கமின்றி நேர்மையான மரணம் அடைந்தால், இளைஞருக்கு நான் நன்மாதிரியாய் இருப்பேன்”, என்றார்.

இவையெல்லாம் சொன்ன பிறகு, துன்புறுத்தப்படுவதற்கு உடனே இழுத்துக்கொண்டு போகப்பட்டார். அவரைக் கூட்டிக்கொண்டு போனவர்கள் முதலில் சாந்தமுள்ளவர்களாய் இருந்தபோதிலும், அவர் அகந்தையாய்ப் பேசினாரென்று எண்ணிக் கோபமடைந்தார்கள்.

ஆனால், அவர் அடிபட்டுக் காயமுற்றபோது: “ஆண்டவரே மரணத்தினின்று நான் மீட்கப்படக் கூடுமானாலும், நான் இக்கொடிய உடலின் பாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். உமக்குப் பயந்து இவைகளை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன். உமது புனித ஞானத்தினால் இவை யாவையும் நீர் அறிவீர்” என்றார்.

அவர் இவ்வாறு உயிர்விட்டார். இளைஞருக்கு மட்டுமன்று, மக்கள் அனைவருக்கும் புண்ணியத்தினுடையவும் துணிவினுடையவும் மாதிரியைத் தம்முடைய மரணத்தின் நினைவாக விட்டுச் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 3: 1-2, 3-4, 5-7ஆ (பல்லவி: 5ஆ)

பல்லவி: **ஆண்டவரே என் ஆதரவாயிருக்கிறார்.**

1 ஆண்டவரே, என்னைத் துன்புறுத்துவோர் பலராயுளர்;
எனக்கெதிராய்க் கலகம் விளைப்போர் பலராயுளர்.
2 "அவனுக்கெங்கே கடவுள் துணை புரியப்போகிறார்?"
என்று என்னை இழித்துரைப்போர் பலராயுளர். பல்லவி

3 ஆனால், ஆண்டவரே, என்னைக் காப்பவர் நீரே:
எனக்குப் பெருமை தருபவர் நீரே;
நான் தலைநிமிரச் செய்பவர் நீரே.
4 கடவுளை நோக்கிக் கூக்குரலிட்டேன்:
தமது புனித மலையிலிருந்து என் குரலுக்குச் செவிசாய்த்தார். பல்லவி

5 இனி நான் படுத்து உறங்குவேன், விழித்தெழுவேன்:
ஏனெனில், ஆண்டவரே எனக்கு ஆதரவாயிருக்கிறார்.
6 என்னை எதிர்க்கச் சூழ்ந்திருக்கும்
ஆயிரமாயிரம் பகைவர்க்கு நான் அஞ்சேன்.
7 ஆண்டவரே எழுந்தருளும்:
என் இறைவா, என்னைக் காத்தருளும். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒருவன் எனக்குக் கதவைத் திறந்தால், அவனது இல்லத்தில் நுழைந்து, அவனோடு விருந்துண்பேன்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 3: 1-6, 14-22

அருளப்பன் என்னும் எனக்கு ஆண்டவர் கூறியதாவது:

"சர்தை சபையின் தூதருக்கு இதை எழுது: 'கடவுளுடைய ஏழு ஆவிகளையும் ஏழு விண்மீன்களையும் உடையவர் உரைப்பதாவது: நீ செய்வதெல்லாம் எனக்குத் தெரியும். நீ உயிருள்ளவன் என்பது பெயரளவில் தான்; உண்மையில் நீ செத்துக்கிடக்கிறாய். விழிப்புள்ளவனாகி, உன்னுள் எஞ்சி நிற்பதையாவது திடப்படுத்து; அதுவும் சாகுந் தருவாயில் உள்ளது. உன் செயல்கள், என் கடவுள் முன்னிலையில் நிறைவற்ற செயல்களாய்

இருக்கக் கண்டேன். தேவ வார்த்தையைக் கேட்டபோது நீ எவ்வளவு ஆர்வத்துடன் அதை ஏற்றுக்கொண்டாய் என்பதை நினைத்துக்கொள். அதைக் கடைப்பிடித்து மனந்திரும்பு. நீ விழித்தெழாவிட்டால், நான் கள்ளனைப்போல் வருவேன். அப்படி வந்து உன்னைத் தாக்கும் நேரத்தை நீ அறியாய்.

உன் நிலை இப்படி இருப்பினும், தங்கள் ஆடைகளைக் கறைப்படுத்தாத சிலர் சர்தையில் உள்ளனர். அவர்கள் வெண்ணுடை அணிந்து, என்னைப் புடைசூழ்ந்து செல்வர்; அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களே.

வெற்றி கொள்பவன் இவ்வாறு வெண்ணுடை அணிவிக்கப் படுவான். வாழ்வின் நூலிலிருந்து அவனது பெயரை நான் நீக்கமாட்டேன். என் தந்தை முன்னிலையிலும், அவருடைய தூதர்கள் முன்னிலையிலும் அவனது பெயரை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன்.

'தேவ ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்.'

லவோதிக்கேயாவிலுள்ள சபையின் தூதருக்கு இதை எழுது: 'ஆமென்' எனும் பெயருள்ளவர், உண்மையான சாட்சியானவர், நம்பத்தக்க சாட்சியானவர், கடவுள் படைத்த படைப்பின் ஆதியாய் உள்ளவர் உரைப்பதாவது: உன் செயல்களை நான் அறிவேன். நீ இருப்பது தட்ப நிலையுமன்று, வெப்ப நிலையுமன்று; தட்ப நிலையிலோ, வெப்ப நிலையிலோ இருந்தால் நலம், நீயோ வெப்ப நிலையிலுமில்லை, தட்ப நிலையிலுமில்லை; வெதுவெதுப்பான நிலையில் இருக்கிறபடியால், உன்னை என் வாயினின்று கக்கிவிடுவேன்.

'நான் செல்வமுள்ளவன், வளமிக்கவன் ஆகிவிட்டேன், எனக்குக் குறை ஒன்றுமில்லை' என்று நீ சொல்கிறாய். உன் நிலையோ இழிவானது, இரங்கத்தக்கது; நீ வறியவன், குருடன், ஆடையற்றவன். இதை நீ உணர்வதில்லை. ஆகவே நீ, செல்வமுள்ளவனாகும் பொருட்டு புடம்போட்ட பொன்னை என்னிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொள். ஆடையின்றி வெட்கி நிற்கும் உன் நிலையைப் பிறர் காணாதபடி வெண்ணுடை வாங்கி அணிந்து கொள். நீ பார்வை பெறும்பொருட்டு மருந்து வாங்கி உன் கண்களில் தடவு.

நான் யார்மேல் அன்புகூருகிறேனோ அவர்களைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே, நீ மனந்திரும்பி ஆர்வமுள்ள வாழ்க்கை நடத்து.

இதோ, 'நான் கதவண்டை நின்று தட்டுகிறேன். ஒருவன் எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனது இல்லத்தில் நுழைந்து, அவனோடு விருந்துண்பேன். நானும் அவனும் ஒன்றாய் விருந்துண்போம். நான் வெற்றிகொண்டு என் தந்தையின் அரியணையில் அமர்ந்தது போல, வெற்றிகொள்பவனுக்கு என் அரியணையில் அமரும் உரிமை அளிப்பேன்.

தேவ ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்'".

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 14:2-3 அ, 3 ஆ-4, 5 (பல்லவி: திருவெளி. 3:21)

பல்லவி: என் அரியணையில் அமரும் உரிமையை
வெற்றிகொள்பவனுக்கு அளிப்பேன்.

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன்,
இதயத்தில் நேரியவை நினைப்பவன்.
3 நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன். பல்லவி

அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன்;
4 தீயோரை இழிவாகக் கருதுபவன்,
ஆண்டவருக்கு அஞ்சுவோரை, உயர்வாக மதிப்பவன்; பல்லவி

5 தனக்குத் துன்பம் வந்தாலும் தந்த வாக்குறுதியை மீறாதவன்,
தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன்;
மாசற்றவர்களுக்கு எதிராகக் கைக்கூலி வாங்காதவன்,
இங்ஙனம் நடப்பவன் என்றென்றும் நிலைத்திடுவான். பல்லவி

அல்லேலூயா 1 அரு. 4:10

அல்லேலூயா. கடவுளே நமக்கு அன்புசெய்து,
நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத்
தம் மகனை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

இழந்துபோனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 19:1-10

(பக்கம் 892 காண்க)

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*உலகத்தைப் படைத்தவர்தாமே உங்களுக்கு ஆவியையும் உயிரையும் கொடுப்பார்.*

மக்கபே ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 7 : 1, 20-31

அந்நாட்களில் :

ஏழு பிள்ளைகள் தங்கள் தாயோடு பிடிபட்டு, சாட்டைகளாலும் கயிறுகளாலும் அடிக்கப்பட்டு, கட்டளைக்கு எதிராய்ப் பன்றிஇறைச்சி உண்ண மன்னனால் கட்டாயப்படுத்தப் பட்டார்கள்.

சொல்லற்கரிய வியப்பை உண்டாக்கும் (இவர்களின்) தாய் நல்லவர்கள் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதற்கு உகந்தவள்; ஒரே நாளில் தன் ஏழு பிள்ளைகளும் கொலையுண்டதைப் பார்த்துக்கொண்டிருந்த இவள் கடவுள்மீது தனக்கு உண்டான நம்பிக்கையை முன்னிட்டு இவையனைத்தையும் நல்ல மனத்தோடு ஏற்றுக்கொண்டாள். ஞானம் நிறைந்தவளாய், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் தாய்மொழியில் துணிவுடன் அறிவுரை சொன்னாள்; பெண்பிள்ளையின் பற்றுதலோடு ஆண்பிள்ளையின் திடத்தையும் சேர்த்தாள்.

அவள் அவர்களை நோக்கி: நீங்கள் என் வயிற்றில் எப்படித் தோன்றினீர்களென்று நான் அறியேன். ஏனென்றால், உங்களுக்கு ஆவியையும் ஆன்மாவையும் உயிரையும் கொடுத்தது நான் அல்ல; உங்கள் உறுப்புகளை ஒன்று சேர்த்ததும் நான் அல்ல. ஆனால் உலகத்தைப் படைத்தவர்தாமே அவையெல்லாம் செய்தவர். அவரே மனிதனை உருவாக்கியவர். அனைத்திற்கும் முதற்காரணம் அவரே. அவருடைய கட்டளைகளை முன்னிட்டு நீங்கள் இப்போது உங்களையே துன்பத்துக்குள்ளாக்குவதால், திரும்பவும் அவர் உங்களுக்கு ஆவியையும் உயிரையும் கொடுப்பார் எனக் கூறினாள்.

அந்தியோக்கஸ் தான் நிந்திக்கப்படுவதாக எண்ணினான்; தான் சொல்லிய அவமானங்களெல்லாம் வீணானதைக் கண்டான்; எல்லாருக்கும் இளையவன் எஞ்சியிருந்ததைக் கண்டு, அவனை வார்த்தைகளால் மட்டும் தூண்டி நின்றானல்லன்; மாறாக, அவனைச் செல்வமுள்ளவனும் பேறுபெற்றவனும் ஆக்கி, அவனை நாட்டுச் சட்டங்களினின்று விடுவித்துத் தன் நண்பனாகக்கொள்வதாகவும், அவனுக்குத் தேவையான பொருட்களைக் கொடுப்பதாகவும் ஆணையிட்டு உறுதிமொழி கூறினான். ஆனால், இளையவன் அவைகளுக்கு இணங்காததால், அரசன் தாயை வரவழைத்து, அவ்விளைஞனுக்கு அறிவுரை சொல்லும்படி அவளைத் தூண்டினான்.

8 கண்ணின் மணியைப்போல என்னைக் காத்தருளும்,
உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும்.
15 நானோவெனில், நீதியில் நிலைத்து
உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன்;
உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே நான் விழைகிறேன்.

பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள் பரிசுத்தர்: இருந்தவரும்,
இருக்கிறவரும், இனி வருபவரும் இவரே.

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 4: 1-11

அருளப்பன் என்னும் நான் கண்ட காட்சியாவது: விண்ணகத்தில் கதவு ஒன்று திறந்திருக்கக் கண்டேன். எக்காளத்தின் ஒலியைப்போல் என்னோடு முதலில் பேசிய குரல்: "மேலே வா, இனி நடக்கவேண்டியதை உனக்குக் காட்டுவேன்" என்றது. உடனே தேவ ஆவி என்னை ஆட்கொண்டது. அரியணை ஒன்று விண்ணகத்தில் இருக்கக் கண்டேன். அதில் ஒருவர் வீற்றிருக்கிறார்.

பார்வைக்கு அவர் மணிக்கல் போலும், கோமேதகம் போலும் காணப்படுகின்றார். மரகதம்போன்ற வானவில் அரியணையைச் சூழ்ந்திருக்கிறது. அவ்வரியணையைச் சுற்றி இருபத்து நான்கு இருக்கைகள் இருக்கின்றன. அவ்விருக்கைகளில் இருபத்து நான்கு மூப்பர் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் வெண்ணுடை அணிந்து தலையில் பொன் முடி சூடியிருக்கின்றனர். அரியணையினின்று மின்னலும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும் கிளம்புகின்றன. அரியணைமுன் ஏழு தீப் பந்தங்கள் எரிகின்றன. அவை கடவுளுடைய ஏழு ஆவிகளே.

அரியணை முன்னே பளிங்கெனத் தெளிந்த கடல்போன்றதொன்று தென்படுகிறது. நடுவில் அரியணையைச் சுற்றிலும் நான்கு உயிர்கள் இருக்கின்றன. அவற்றிற்கு முன்புறமும் பின்புறமும் கண்கள் பல இருக்கின்றன. அவ்வுயிர்களுள் முதலாவது, சிங்கத்தைப்போல் உள்ளது; இரண்டாவது இளங்காளைபோல் உள்ளது; மூன்றாவதற்கு மனித முகம் இருக்கிறது; நான்காவது பறக்கும் கழுகை ஒத்திருக்கிறது.

இந்நான்கு உயிர்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு சிறகுகள் உள்ளன. உள்ளும் புறமும் கண்கள் நிறைந்திருக்கின்றன. "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள்! இருந்தவரும் இருக்கிறவரும் இனி வருபவரும் இவரே" என்று அவை இரவும் பகலும் ஓய்வின்றிப் பாடுகின்றன. என்றென்றும் வாழ்பவர்க்கு, அரியணையில் வீற்றிருப்பவர்க்கு அவ்வுயிர்கள் மகிமையும் மாட்சிமையும் நன்றியும் செலுத்தும்போதெல்லாம், இருபத்து நான்கு மூப்பர்களும் அரியணையில் வீற்றிருப்பவர் முன், அடிபணிந்து என்றென்றும் வாழ்கின்ற அவரைத் தொழுகின்றனர். அவர்கள் தங்கள் பொன் முடிகளை எடுத்து அரியணைமுன் வைத்து, "எங்கள் ஆண்டவரே! எங்கள் இறைவனே! மகிமையும் மாட்சியும் வல்லமையும் பெறத் தக்கவர் நீரே, ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே! அனைத்தும் உண்டானது உம் விருப்பத்தாலே, உம் விருப்பத்தாலே எல்லாம் படைக்கப்பட்டன" என்று பாடுகின்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 150 : 1-2, 3-4, 5-6 ( பல்லவி : திருவெளி. 4 ; 8b )*

பல்லவி : பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,
எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள்!

1 ஆண்டவர்தம் திருத்தலத்தில் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
மாண்பு மிக்க வான் தலத்தில் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
2 அவருடைய மாண்பு மிக்க செயல்களை நினைத்து
அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
அவரது உன்னத மாட்சியை நினைத்து
அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.

பல்லவி

3 எக்காளத் தொனி முழங்க அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
வீணையுடன் யாழ் இசைத்து அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
4 முரசொலித்து, நடனம் செய்து அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
நரம்பிசைத்து, குழல் ஊதி அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.

பல்லவி

5 நாதமிகு தாளத்துடன் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
கைத்தாள ஒலி முழங்க அவரைப் புகழ்ந்தேத்துங்கள் :
6 உயிருள்ளனவெல்லாமே அவரைப் புகழ்ந்தேத்துவனவாக.

பல்லவி

அல்லேலூயா. நீங்கள் சென்று பலன் தரும்படியாகவும்,
அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவும்,
நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீ ஏன் என் பணத்தை வட்டிக்காரரிடம் கொடுத்து வைக்கவில்லை?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

19 : 11-28

அக்காலத்தில் :

யேசு யெருசலேமுக்கு அருகில் இருந்ததாலும், கடவுளின் அரசு உடனே வெளிப்படும் என்று மக்கள் எண்ணியதாலும், அவர் ஓர் உவமை சொன்னார் :

"பெருங்குடி மகன் ஒருவன் அரச பதவி பெற்றுவரத் தொலை நாட்டிற்குப் புறப்பட்டான். தன் ஊழியர் பத்துப்பேரை அழைத்து, பத்துப் பொற்காசுகளை அவர்களுக்குக் கொடுத்து, 'நான் வரும்வரை வாணிபம் செய்யுங்கள்' என்றான்.

அவனுடைய குடிமக்களோ அவனை வெறுத்தனர். ஆகையால், 'இவனை எங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்று சொல்லும்படி அவனுக்குப்பின் தூது விடுத்தனர்.

அரசப் பதவிபெற்றுத் திரும்பி வந்தபின், பணம் வாங்கிய ஒவ்வொருவனும் சம்பாதித்தது எவ்வளவு என்று அறிய அவ்வூழியரைத் தன்னிடம் அழைத்துவரச் சொன்னான்.

முதல் ஊழியன் வந்து, 'அரசே, உமது பொற்காசு பத்துப் பொற்காசுகளைச் சம்பாதித்துள்ளது' என்றான். அவனோ, 'நன்று, நன்று, நல்ல ஊழியனே, மிகச் சிறியதில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்ததால், பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரு' என்றான். வேறொருவன் வந்து, 'அரசே, உமது பொற்காசு ஐந்து பொற்காசுகளை ஆக்கியுள்ளது' என்றான். அவனிடமும் அரசன், நீ ஐந்து நகர்களுக்குத் தலைவனாய் இரு' என்றான்.

இன்னொருவன் வந்து, ' அரசே, இதோ! உமது பொற்காசு. உமக்கு அஞ்சி இதை ஒரு கைக்குட்டையில் முடிந்து வைத்திருந்தேன். ஏனெனில், நீர் கண்டிப்புள்ளவர்; வைக்காததை எடுப்பவர், விதைக்காததை அறுப்பவர்' என்றான். அரசன் அவனைப் பார்த்து, 'கெட்ட ஊழியனே, உன் வாய்ச் சொல்லைக்கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப்புள்ளவன், வைக்காததை எடுப்பவன், விதைக்காததை அறுப்பவன் என்பதை அறிந்தும், நீ ஏன் என் பணத்தை வட்டிக்காரரிடம் கொடுத்து வைக்கவில்லை? நான் வந்து வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேனே' என்றான்.

பின், சூழ நின்றவர்களை நோக்கி, ' இவனிடமிருந்து பொற்காசைப் பிடுங்கி, பத்துப் பொற்காசுகள் உடையவனுக்குக் கொடுங்கள்' என்றான். அதற்கு அவர்கள், ' அரசே அவனிடம் பத்துப் பொற்காசுகள் உள்ளனவே' என்றார்கள்.

அரசனோ, ' உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும், இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்' என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ' அன்றியும் என்னைத் தங்கள் அரசனாக ஏற்க விரும்பாத என் பகைவர்களை இங்குக் கொண்டுவந்து, என்முன் வெட்டி வீழ்த்துங்கள்' என்றான்."

இதெல்லாம் சொன்ன பின்பு, அவர் எருசலேமை நோக்கி அவர்களுக்கு முன்னால் நடந்துபோனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## வியாழன்

### முதல் ஆண்டு

முதல் வாசகம்

**எங்கள் முன்னோரின் கட்டளைக்கே கீழ்ப்படிவோம்.**

**மக்கபே ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 2: 15-29**

**அந்நாட்களில் :**

மோதின் நகரத்திற்கு ஓடிப்போனவர்களைப் பலியிடவும், தூபம் ஏந்தவும், கடவுள் கட்டளையை மீறவும் கட்டாயப்படுத்த அந்தியோக்கஸ் அரசனால் அனுப்பப்பட்டவர்கள் அவ்விடம் வந்தார்கள். இஸ்ராயேல் மக்களில் பலர் இசைந்தவர்களாய் அவர்களிடம் சென்றார்கள். ஆனால், மத்தத்தியாசும் அவர் புதல்வரும் உறுதியில் நிலைகொண்டார்கள்.

அந்தியோக்கசால் அனுப்பப்பட்டவர்கள் மத்தத்தியாசை நோக்கி: இந்த நகரத்தில் நீர் சீரும் சிறப்பும் மிக்க பிரபுவாய் இருக்கிறீர். உம் புதல்வரும் சகோதரரும் உமக்கு ஓர் அணிகலன்போல் இருக்கிறார்கள். ஆதலால் புறவினத்தாரும் யூத மக்களும், எருசலேமில் தங்கினவர்களும் செய்தவண்ணம், நீரும் முதன்முதல் அரசன் கட்டளையை நிறைவேற்றும். நீரும் உம் புதல்வர்களும் அரசனின் நண்பர்களாவீர்கள். பொன், வெள்ளி, மற்றும் பல்வேறு பரிசுகளால் நீர் நிரப்பப்படுவீர், என்றார்கள்.

அதற்கு மறுமொழியாக மத்தத்தியாஸ் உரத்த சத்தமாய்: எங்கள் முன்னோரின் வழக்கத்தை அனுசரிப்பதை எல்லா இனத்தவரும் விட்டு விட்டு அந்தியோக்கஸ் அரசருக்குக் கீழ்ப்படிந்தாலும், அவர் கட்டளைகளை அனுசரிக்க இசைந்தாலும், நானும் என் புதல்வரும் என் சகோதரரும் எங்கள் முன்னோரின் கட்டளைக்கே கீழ்ப்படிவோம். கடவுள் எங்கள்மேல் இரக்கம் கொள்வாராக. அவருடைய கட்டளைகளையும் ஏற்பாடுகளையும் விட்டுவிடுவதனால் எங்களுக்கு யாதொரு இலாபமும் இல்லை. அந்தியோக்கஸ் அரசரின் வார்த்தைகளைக் கேட்கவும் மாட்டோம். எங்கள் சட்டங்களால் விதிக்கப்பட்ட கட்டளைகளை மீறி வேறு விதமாய் நடக்கவும், பலியிடவும் மாட்டோம், என்றார்.

உடனே அரசன் கட்டளைப்படி மோதின் நகரத்துப் பீடத்தின்மேல் சிலைகளுக்குப் பலியிட யூதன் ஒருவன் எல்லாருக்கும் முன்பாக வந்தான். மத்தத்தியாஸ் அதைப்பார்த்தார். மனம் கசிந்தார். அவர் உடம்பு துடித்தது. கட்டளையின் ஒழுங்குப்படி கோபம் மூண்டு, அவன்மேல் பாய்ந்து, பீடத்தின் மீதே அவனைக் கொன்றார். அந்தியோக்கசால் அனுப்பப்பட்டு, பலியிடும்படி வற்புறுத்தின மனிதனையும் அதே நேரத்தில் கொன்று, பீடத்தையும் இடித்துத் தள்ளினார். சலோமியின் மகன் சாம்ரி என்பவனுக்குப் பினேயஸ் செய்ததுபோல, தாமும் கட்டளையின்பால் கொண்ட ஆர்வத்தால் தூண்டப்பட்டார்.

அப்போது அந்த நகரத்தில் மத்தத்தியாஸ் உரத்த சத்தமாய்: உடன்படிக்கைக் கட்டளைக்குப் பிரமாணிக்கமுள்ளவன் எவனோ அவன் என் பின்னால் வரக்கடவான் என்று சொல்லி, அவரும் அவர் புதல்வரும் தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டு மலைகளுக்கு ஓடிப்போனார்கள்.

அப்போது பலர் நியாய ஏற்பாடுகளையும் நீதியையும் தேடி பாலைவனத்திற்குச் சென்றார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 49 : 1-2, 5-6, 14-15 ( பல்லவி : 23 b )

பல்லவி : நேர்மையோடு நடப்பவன் எவனோ,
அவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

1 ஆண்டவராகிய இறைவன் பேசலானார்;
கீழ்த்திசைமுதல் மேற்றிசைவரையுள்ள
பூவுலகைத் தீர்ப்புக்கு அழைக்கலானார்.
2 எழில்மிக்க சீயோனிலிருந்து கடவுள் ஒளிவீசி எழுந்தார். பல்லவி

5 'பலிகளினால் என்னுடன் உடன்படிக்கை செய்துகொண்ட
என் புனிதர்களை ஒன்று கூட்டுங்கள்' என்கிறார்.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்தியம்பும்,
ஏனெனில், கடவுளே நீதிபதியாய் வருகின்றார். பல்லவி

14 இறை புகழ்ச்சி எனும்பலியை ஆண்டவருக்குச் செலுத்து:
உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து.
15 துன்பநாளில் என்னைக் கூப்பிடு: உன்னை விடுவிப்பேன்,
நீ என்னை மேன்மைப்படுத்துவாய். பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**செம்மறி பலியாக்கப்பட்டு, தம் இரத்தத்தால் எல்லாக் குலத்தையும் சார்ந்த நம்மை மீட்டார்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 5: 1-10

அருளப்பன் என்னும் நான் அரியணையில் வீற்றிருப்பவரின் வலப் புறத்தில் ஓர் ஏட்டுச் சுருளைக் கண்டேன். அதில் உள்ளும் புறமும் எழுதியிருந்தது. அது ஏழு முத்திரை பொறித்து மூடப்பட்டிருந்தது.

"முத்திரைகளை உடைத்து, சுருளைப் பிரிக்கத் தகுதியுள்ளவன் யார்?" என்று வலிமை மிக்க வானதூதர் ஒருவர் உரத்த குரலில் பறைசாற்றக் கண்டேன். அதைப் பிரிக்கவும் படிக்கவும் மேலுலகிலோ பூவுலகிலோ கீழுலகிலோ உள்ள எவராலும் இயலவில்லை. அதைப் பிரிக்கவும் படிக்கவும் தகுதியுள்ளவர்கள் யாரும் காணோமே என நான் தேம்பி அழுதேன்.

அப்போது மூப்பருள் ஒருவர் என்னைப் பார்த்து, "அழாதே, யூதா குலத்தின் சிங்கமும் தாவீதின் வேருமானவர் வெற்றி பெற்றூர். ஆகவே அவர் அந்த ஏழு முத்திரைகளை உடைத்து, சுருளையும் பிரித்து விடுவார்" என்றூர்.

அந்நான்கு உயிர்களும் மூப்பர்களும் சூழ, அரியணை நடுவில் செம்மறி ஒன்று நிற்கக் கண்டேன். அது பலியிடப்பட்டதுபோல் காணப் பட்டது. அதற்கு ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் இருந்தன. மண்ணுல கெங்கும் அனுப்பப்பட்ட கடவுளின் ஏழு ஆவிகளே அக்கண்கள். செம்மறி யானவர் சென்று அரியணையில் வீற்றிருந்தவரின் வலக்கையிலிருந்து அந்தச் சுருளை எடுத்தார். அவர் அதை எடுத்தபோது நான்கு உயிர்களும் இருபத்து நான்கு மூப்பரும் செம்மறியின்முன் அடிபணிந்தனர். அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் யாழும், சாம்பிராணி நிறைந்த பொற் கலசங்களும் இருந்தன. இறை மக்களின் செபங்களே அக்கலசங்கள். அவர்கள் புதியதொரு பாடலைப் பாடினர். "அதன் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ளவர் நீரே. ஏனெனில், நீர் பலியாக்கப்பட்டு உமது இரத்தத்தால் எல்லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்களைக் கடவுளுக்காக மீட்டீர். அவர்களை எம் கடவுளுக்கு அரசகுலக் குருக்களாக்கினீர்: அவர்களும் மண்மீது அரசாள் வார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 149 : 1-2, 3-4, 5-6 a & 9 b ( பல்லவி : திருவெளி. 5 : 10 )

பல்லவி : எங்களை எம் கடவுளுக்கு அரசகுலக் குருக்களாக்கினீர்.

அல்லது : அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்:
புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக!
2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை
நினைத்து அகமகிழ்வார்களாக:
சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக. பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக :
தம்பூராவும் யாழும்கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறூர்,
தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறூர். பல்லவி

மகிமை பொலிவுடன் புனிதர்கள் களிகூர்வார்களாக;
தம் படுக்கையிலும் அக்களித்துப் பாடுவார்களாக!
அவர்களது நாவில் இறைவனைப் போற்றும் புகழ் ஒலிப்பதாக:
இச்செயல் எல்லாம் அவர் தம் புனிதர்கள்
அனைவருக்கும் உரியது.

பல்லவி

சங். 94:8ab,7d

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தவேண்டாம்:
மாறாக, ஆண்டவர் குரலுக்குச் செவிகொடுங்கள்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உன் அமைதிக்கான வழியை நீ அறிந்திருக்கலாகாதா!**

✠ லூக்கா எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

19 : 41-44

அக்காலத்தில் :

இயேசு நகரை நெருங்கியபோது அதைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டுப் புலம்பியதாவது: "அமைதிக்கான வழியை நீயும் இந்நாளில் அறிந்திருக்கலாகாதா? இப்பொழுதோ, அது உன் கண்ணுக்கு மறைந்துள்ளது.

ஒருநாள் வரும், அன்று உன் பகைவர் உன்னைச் சுற்றிலும் அரண் எழுப்பி உன்னை முற்றுகையிட்டு எப்பக்கத்திலிருந்தும் நெருக்கி, உன்னையும் உன்னிடமுள்ள உன் மக்களையும் நொறுக்கித் தரைமட்டமாக்கி உன்னிடம் கல்லின்மேல் கல் இராதபடி செய்வார்கள். ஏனெனில், கடவுள் உன்னைத் தேடிவந்த காலத்தை நீ அறியவில்லை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மகிழ்ச்சியுடன் பீடத்தை அர்ச்சித்து, பலி ஒப்புக்கொடுத்தார்கள்.**

**மக்கபே ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்** *4 : 36-37, 52-59*

**அந்நாட்களில் :**

யூதாசும் அவர் சகோதரரும் : இதோ, நம் பகைவர் முறியடிக்கப் பட்டார்கள். இப்போது கடவுள் ஆலயத்தைத் தூய்மைப்படுத்திப் புதுப் பிப்போமாக, என்றார்கள். படைவீரர் எல்லோரும் சேர்ந்து சீயோன் மலைமீது ஏறினார்கள்.

நூற்று நாற்பத்தெட்டாம் ஆண்டு காஸ்லேயு மாதமாகிய ஒன்பதாம் மாதம் இருபத்தைந்தாம் நாள் பொழுது விடியுமுன் எழுந் திருந்து, கட்டளைப்படி தாங்கள் செய்திருந்த புதுப் பீடத்தின்மேல் பலி ஒப்புக்கொடுத்தார்கள். புறவினத்தார் கடவுள் ஆலயத்தைத் தீட்டுப் படுத்தின நேரத்திலும் நாளிலும், இன்னிசைகளாலும் வீணைகளாலும் இசைக் கருவிகளாலும் மணிகளாலும் கடவுள் ஆலயம் புதுப்பிக்கப்பட்டது.

எல்லா மக்களும் முகம் குப்புற விழுந்து, தங்களுக்கு உதவியாய் இருந்த கடவுளை ஆராதித்து வானமட்டும் வாழ்த்தினார்கள். எட்டு நாள் வரையிலும் பீடக் காணிக்கை செலுத்தி, மகிழ்ச்சியோடு பலிகளை ஒப்புக் கொடுத்து, நன்றிக்கு அடையாளமாகவும், வாழ்த்துக்காகவும் காணிக்கை செலுத்தினார்கள். பொன்முடிகளாலும் பதக்கங்களாலும் கடவுள் ஆலயத்தின் முகப்பை அலங்கரித்து, நிலைகளையும் பக்கத்து அறைகளையும் புதுப்பித்துக் கதவுகளை மாட்டினார்கள்.

மக்களுக்குள் நிறைந்த அக்களிப்பு உண்டாக, அதுவரையிலும் அவர்கள் பட்ட அவமானம் நீங்கினது. யூதாசும் அவர் சகோதரரும் இஸ்ராயேலர் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் ஆண்டுதோறும் காஸ்லேயு மாதம் இருபத்தைந்தாம் நாள்முதல் எட்டு நாள்வரையிலும் அக்களிப்போடும் அகமகிழ்ச்சியோடும் பீடக் காணிக்கை கொண்டாடப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

1 குறி. 29: 10, 11abc, 11d-12a, 12bcd (பல்லவி: 13b)

பல்லவி: மகிமைமிக்க உம் திருப்பெயரை வாழ்த்துகிறோம், ஆண்டவரே.

10 எங்கள் தந்தையாகிய இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவரே,
நீர் என்றென்றும் வாழ்த்தப்பெறுவீர். பல்லவி

11 ஆண்டவரே, பெருமையும் வலிமையும்
மாட்சிமையும் வெற்றியும் உமக்கே உரியன,
புகழும் உமக்கே உரியது.
விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தும் உமக்குரியதே. பல்லவி

அரசும் உமக்குரியதே, ஆண்டவரே, நீரே மன்னருக்கு மன்னர்,
12 செல்வமும் மகிமையும் உமக்குரியன. பல்லவி

அனைத்தையும் நீரே ஆள்கின்றீர்.
உமது கரத்தில் ஆற்றலும் வல்லமையும் உண்டு,
எல்லாப் பெருமையும் ஆற்றலும் உம் கரங்களிலே இருக்கின்றன. பல்லவி

## 2ஆம் ஆண்டு

முதல் வாசகம்

**சுருளை வாங்கித் தின்றேன்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 10 : 8-11

அருளப்பன் என்னும் நான் விண்ணினின்று கேட்ட குரல், என்னிடம் திரும்பவும் பேசி, "கடல் மீதும் தரை மீதும் நிற்கிற வானதூதரின் கையிலுள்ள பிரித்த ஏட்டுச் சுருளை நீ போய் வாங்கிக்கொள்" என்றது.

நானும் அந்த வானதூதரிடம் போய், அந்த ஏட்டுச் சுருளை எனக்குத் தரும்படி கேட்டேன். அவரோ, "இதை எடுத்துத் தின்றுவிடு. இது உன் வயிற்றில் கசக்கும். ஆனால் வாயிலே தேனைப்போல் இனிக்கும்" என்று என்னிடம் சொன்னார். அப்போது வானதூதரின் கையிலிருந்த அச்சுருளை வாங்கித் தின்றேன். அது வாயில் தேனைப்போல இனித்தது. ஆனால் தின்றதும் வயிற்றில் கசந்தது.

### நற்செய்தி வாசகம்

**கடவுள் வீட்டைக் கள்வர் குகையாக்கி விட்டீர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *19 : 45-48*

அக்காலத்தில் :

யேசு கோயிலுக்குள் சென்று, அங்கே விற்பவர்களைத் துரத்தத் தொடங்கி, அவர்களை நோக்கி, " 'என் வீடு செப வீடாகும்' என்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்வர் குகையாக்கி விட்டீர்கள்" என்றார்.

அவர் நாடோறும் கோயிலில் போதித்து வந்தார். தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும், மக்களுள் பெரியோர்களும் அவரைத் தொலைக்கப்பார்த்தனர். ஆனால் எப்படித் தொலைப்பதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில், மக்கள் எல்லாரும் அவர் சொல்வதைக் கேட்டு அவர் வசப்பட்டிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**எருசலேமில் நான் புரிந்த தீமைகள் பொருட்டு நான் ஆயாசமிகுதியால் சாகிறேன்.**

மக்கபே ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *6 : 1-13*

அந்நாட்களில்:

அந்தியோக்கஸ் அரசன் மேல்நாடுகளுக்குச் சென்று, பாரசீக நாட்டில் பேர்போனதும், வெள்ளி, பொன் இவைகள் மிகுந்ததுமான எலிமாயித் நகரம் இருப்பதாகக் கேள்விப்பட்டான். அதில் செல்வம் நிறைந்த கோயிலும், கிரேசியாவில் முதன்முதல் அரசு செலுத்தின மசதோனியா மன்னனை பிலிப்பின் மகன் அலெக்சாந்தர் அங்கே விட்டுப்போன பொன் திரைகளும் கவசங்களும் கேடயங்களும் இருந்தன. அரசன் வந்து நகரைக் கைப்பற்றிக் கொள்ளையடிக்க முயன்றான். ஆனால்,

நகரத்தின் உள்ளே இருந்தவர்களுக்கு அவன் எண்ணம் தெரிய வந்ததால் அவனால் முடியவில்லை. அவர்கள் எல்லாரும் சண்டைக்குப் புறப்பட்டார்கள். அவன் அங்கிருந்து துயரத்தோடு ஓடி பபிலோனியா திரும்பினான்.

அவன் பாரசீகத்தில் இருந்தபோதே, யூதேயா நாட்டிலிருந்த அவன் படைகள் அழிக்கப்பட்ட செய்தி அவனுக்கு அறிவிக்கப்பட்டது. லிசியாஸ் பெரிய படையோடு முதலில் சென்று முறியடிக்கப் பட்டானென்றும், அழிக்கப்பட்ட தன் படைகளிடமிருந்து எடுத்துக்கொண்ட போர்க்கருவிகளாலும் பொருட்களாலும் அவர்கள் வலிமை மிக்கவர்களானார்களென்றும், எருசலேமில் தான் கட்டிய பீடத்தின்மேல் வைத்திருந்த வெறுப்பூட்டும் சிலைகளை அழித்துவிட்டார்களென்றும், புனித இடத்தைச் சுற்றிலும் முன்போல் உயர்ந்த சுவர்கள் எழுப்பினார்களென்றும், தன் நகரமாகிய பெத்சூராவைச் சுற்றியும் அவ்விதமே செய்திருப்பதாகவும் அவன் கேள்விப்பட்டான்.

செய்திகளைக் கேள்விப்பட்ட அரசன் பயந்து மிகவும் நடுங்கினான். தான் நினைத்தவண்ணம் நடவாததனால், படுக்கையில் விழுந்து துயரத்தில் ஆழ்ந்தான்.

அவன் அவ்வாறு பலநாள் இருந்தான்; ஏனென்றால், துயரம் மேன்மேலும் அதிகரித்ததனால், தான் சாகப்போவதாக நினைத்தான். அவன் தன் நண்பர் எல்லாரையும் அழைத்து: என் கண்களினின்று தூக்கம் அகன்றது. கவலையினால் என் இதயம் தளர்ந்து பலவீனமானது. என் இதயத்துள் நான் சொல்லிக்கொண்டது என்னவென்றால்: எவ்வளவு துயரத்திற்கு ஆளானேன்! இப்போது துயரக்கடலில் அமிழ்ந்தினேன். முன்போ, அதிகார மிகுதியால் மகிழ்ந்திருந்தேன். யெருசலேமில் நான் புரிந்த தீமைகளை இப்போது நினைவுகூர்கிறேன். அதில் இருந்த பொன், வெள்ளிப் பொருட்களைக் கொள்ளையடித்து, யூதேயாவில் குடியிருந்தவர் காரணமின்றியே அழித்தொழிக்கும்படி படைகளை அனுப்பினேன். ஆதலால்தான் தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டனவென்று கண்டுகொண்டேன். இதோ, அன்னிய நாட்டில் துயர மிகுதியால் சாகிறேன் என்று புலம்பினான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 9: 1-2. 3, 6. 16, 18 (பல்லவி: 14 அ)

பல்லவி: ஆண்டவரே, உமது மீட்பை நினைத்து
அக்களிப்புக் கொள்கிறேன்.

1 ஆண்டவரே, என் முழு உள்ளத்துடன் உம்மைப் புகழுவேன்;
உம் வியத்தகு செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்.
2 உன்னதரானவரே, உம்மை நினைத்து நான் அகமகிழ்ந்து அக்களிப்பேன்;
உம் பெயருக்குப் புகழ் பாடுவேன். பல்லவி

3 ஏனென்றால், என் எதிரிகள் பின்னடைந்து போயினர்;
உம் திருமுன்னே தடுமாறி ஒழிந்து போயினர்.
6 புற இனத்தாரை அதட்டினீர், தீயோரை அழித்துவிட்டீர்;
அவர்களுடைய பெயரையே அடியோடு எடுத்துவிட்டீர். பல்லவி

16 புறவினத்தார் தாங்கள் வெட்டிய குழியில் தாங்களே விழுந்தனர்;
அவர்கள் மறைவாக வைத்த கண்ணியில் அவர்களுடைய
கால்களே சிக்கிக்கொண்டன.
18 ஏழைகளை இறுதிவரை மறந்து போகமாட்டார் ஆண்டவர்;
எளியோர் அவர்மேல் கொண்ட நம்பிக்கை
ஒருநாளும் வீணாகாது. பல்லவி

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**இவ் இரு இறைவாக்கினரும் உலகவாசிகளைத் துன்புறுத்தினர்.**

திருத்தூதரான புனித யோவான் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 11: 4-12

அருளப்பன் என்னும் எனக்குக் கூறப்பட்டதாவது: மண்ணுலகை ஆளும் ஆண்டவர்முன் நிற்கும் இரண்டு ஒலிவ மரங்களும், இரண்டு விளக்குத் தண்டுகளும் அவர்களே. அவர்களுக்குத் தீங்கு செய்ய யாராவது முற்பட்டால் அவர்கள் வாயினின்று தீ வெளிப்பட்டு எதிரிகளை விழுங்கி விடும். ஆம், அவர்களுக்குத் தீங்கு செய்ய முற்படுபவனுக்கு அழிவு வந்தே தீரும். தாங்கள் இறைவாக்குரைக்கும் நாளில் மழை பொழியாதபடி வானத்தை அடைத்துவிட அவர்களுக்கு வல்லமை இருக்கும். விரும்பும் போதெல்லாம் அவர்கள் தண்ணீரை இரத்தமாக்கவும், மண்ணுலகை வாதைகள் பலவற்றால் வாட்டவும் அவர்களுக்கு வல்லமை இருக்கும்.

அவர்கள் சான்று பகரும் பணியை முடித்தபின், பாதாளக் குழியினின்று வெளியே கிளம்பும் கொடிய விலங்கு அவர்களோடு போர் தொடுத்து, வென்று அவர்களைக் கொன்றுவிடும். அவர்களுடைய பிணங்கள் அந்த மாநகரத்தின் பெரு வீதியில் கிடக்கும். அந்நகரைச் சோதோம் என்றும், எகிப்து என்றும் உருவகப்படுத்துவர். அவர்களுடைய ஆண்டவர் அறையுண்டது அந்நகரிலேதான். பல இனங்கள், குலங்கள், மொழிகள் நாடுகளைச் சார்ந்த மனிதர் மூன்றரை நாளளவு அவர்களுடைய பிணங்கள் அங்குக் கிடப்பதைப் பார்ப்பார்கள். அவற்றைக் கல்லறையில் அடக்கஞ் செய்ய விடமாட்டார்கள். மண்ணில் வாழ்வோர் இதைப் பார்த்து, மகிழ்ச்சி கொண்டாடுவர். அந்த மகிழ்ச்சியில் ஒருவர்க்கொருவர் அன்பளிப்புகள் வழங்கிக்கொள்வர். ஏனெனில், இவ்விரு இறைவாக்கினரும் மண்ணில் வாழ்ந்தவர்களுக்குப் பெருந் தொல்லையாக இருந்தார்கள்.

மூன்றரை நாளுக்குப்பின் உயிரளிக்கும் ஆவி கடவுளிடமிருந்து வந்து அவர்களுக்குள் நுழைந்தது; நுழையவே, அவர்கள் எழுந்து நின்றார்கள். அதைப் பார்த்தவர்களைப் பேரச்சம் ஆட்கொண்டது. அப்போது விண்ணகத்தில் உண்டான பெரியதொரு குரல், "இங்கே வாருங்கள்" என்று தங்களுக்குச் சொல்வதை அந்த இறைவாக்கினர் கேட்டனர். உடனே பகைவர் கண்ணுக்கெதிரிலேயே அவர்கள் மேகத்தின் மீது விண்ணகத்திற்குச் சென்றார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 143 : 1, 2, 9, 10 (பல்லவி : 1 a)

பல்லவி: என் அடைக்கலப் பாறையாகிய
ஆண்டவர் போற்றி.

1 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி;
போரிட என் கைகளுக்குப் பயிற்சி அளிப்பவர்:
சண்டையிட என் கைக்குப் பலமளிப்பவர் அவரே.

பல்லவி

2 எனக்கு இரக்கம் காட்டுபவர், என் அடைக்கலக் கோட்டை அவரே :
எனக்குப் பாதுகாப்பும் விடுதலையும் அளிப்பவர் அவரே.
என் கேடயமும் புகலிடமும் அவரே:
மக்கள் இனத்தாரை எனக்குக் கீழ்ப்படுத்துபவர் அவரே.

பல்லவி

9 இறைவா, நான் உமக்குப் புதியதொரு பாடலைப் பாடுவேன்:
பத்து நரம்பு வீணையால் உமக்குப் புகழ் பாடுவேன்.
மன்னர்களுக்கு வெற்றியளிப்பவர் நீரே:
10 உம் ஊழியன் தாவீதை விடுவித்தவர் நீரே.

பல்லவி

# முப்பத்து நான்காம் வாரம்

## ஞாயிறு

# நம் ஆண்டவர் யேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

**நீங்கள் நமது மந்தை; ஆடுகளிலிருந்து ஆடுகளை நாமே தீர்ப்பிடுவோம்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 34 : 11-12, 15-17

ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: "இதோ, நாமே இனி நம்முடைய ஆடுகளைத் தேடிப்போவோம்; ஆர்வத்தோடு தேடுவோம். மேய்ப்பன் தன் ஆடுகளுள் சில சிதறுண்டுபோனால் எவ்வாறு அவற்றைத் தேடுவானோ, அவ்வாறே நாமும் நம்முடைய ஆடுகளைத் தேடுவோம். மப்பும் மந்தாரமுமான நாளில் அவை சிதறுண்டிருக்கும் எல்லா இடங்களிலுமிருந்து அவற்றை நாம் மீட்டுக்கொண்டு வருவோம்.

நம்முடைய ஆடுகளுக்கு நாமே மேய்ப்பனாய் இருப்போம்; அவற்றை நாமே இளைப்பாறச் செய்வோம், என்கிறார் ஆண்டவராகிய இறைவன். காணாமற் போனதைத் தேடுவோம்; வழி தவறியதைத் திரும்பக் கொண்டுவருவோம்; எலும்பு முறிந்ததற்குக் கட்டுப்போடுவோம்; வலுவில்லாததைத் தேறும்படி செய்வோம்; கொழுத்ததையும் வலிமையுள்ளதையும் கண்காணிப்போம்; நமது நீதி விளங்கும் வகையில் அவற்றை மேய்ப்போம்.

நமது மந்தையே, ஆண்டவராகிய இறைவன் உங்களுக்குக் கூறுகிறார்: இதோ, ஆடுகளிலிருந்து ஆடுகளையும், ஆட்டுக் கடாக்களிலிருந்து வெள்ளாட்டுக் கடாக்களையும் நாமே நடுவராய் இருந்து தீர்ப்பிடுவோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பகைவர் அனைவரையும் அவரது கால்மணை ஆக்கும்வரை அவர் அரசாள வேண்டியிருக்கிறது. அனைத்தும் அவருக்கு அடிபணிந்திருக்கும் போது, கடவுளே அனைத்திலும் அனைத்துமாய் இருக்கும்படி, மகனும் அனைத்தையும் தமக்குப் பணியச் செய்த இறைவனுக்குத் தாமே அடிபணிவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மாற்கு. 11 : 10

அல்லேலூயா. ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி !
நம் தந்தையாம் தாவீதின் அரசு வருகிறது,
அது வாழ்க ! அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அவர் தம் மாட்சி அரியணையில் வீற்றிருப்பார்; அவர்களை வெவ்வேறாகப் பிரிப்பார்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
25 : 31-46

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது :

"வானதூதர் அனைவரும் புடைசூழ மனுமகன் தம் மாட்சிமையில் வரும்போது மாட்சி அரியணையில் வீற்றிருப்பார். அவர் முன்னிலையில் எல்லா இனத்தாரும் ஒன்று சேர்க்கப்படுவர். இடையன் செம்மறிகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பதுபோல, அவர்களை வெவ்வேறாகப் பிரிப்பார். செம்மறிகளைத் தம் வலப்பக்கமும் வெள்ளாடுகளை இடப்பக்கமும் நிறுத்துவார்.

பின்னர், அரசர் தம் வலப்பக்கம் உள்ளோரை நோக்கி, 'வாருங்கள், என் தந்தையின் ஆசீபெற்றவர்களே, உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக. ஏனெனில், பசியாய் இருந்தேன், எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். அன்னியனாய் இருந்தேன், என்னை வரவேற்றீர்கள். ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினீர்கள். நோயுற்றிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள். சிறையில் இருந்தேன், என்னைக் காண வந்தீர்கள்' என்பார்.

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**அவரது ஆட்சி என்றென்றும் நீடிக்கும்.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 13-14

இரவில் நான் கண்ட காட்சியாவது: இதோ, வானத்தின் மேகங்கள்மீது மனுமகனைப்போன்ற ஒருவர் வந்தார்: நீண்ட ஆயுளுள்ளவரின் அருகில் வந்தார், அவர்முன் கொண்டுவரப் பட்டார். ஆட்சியும் மகிமையும் அரசுரிமையும் அவருக்குக் கொடுக்கப்பட்டன : எல்லா மக்களும் இனத்தாரும் மொழியினரும் அவருக்கு ஊழியம் செய்வர். அவருடைய ஆட்சி என்றென்றும் நீடிக்கும், அதற்கு என்றுமே முடிவிராது ; அவருக்கு அளிக்கப்பட்ட அரசுரிமை என்றுமே அழிந்து போகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 92 : 1ab, 1c-2, 5 (பல்லவி : 1a )*

பல்லவி : ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் :
மகத்துவத்தை ஆடையாய் அணிந்துள்ளார்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்.
மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார்;
ஆண்டவர் வல்லமையைக் கச்சைபோல் அணிந்துகொண்டிருக்கிறார்.
பல்லவி

2 பூவுலகை அவர் நிலைப்படுத்தினார்; அது அசைவுறாது.
ஆதியினின்றே உமது அரியணை நிலையாய் உள்ளது.
ஆதியினின்றே நீரும் உள்ளீர்.
பல்லவி

5 உம்முடைய நியமங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவை :
ஆண்டவரே, புனிதமே உமது இல்லத்திற்கு ஏற்றது,
எந்நாளும் ஏற்றதே.
பல்லவி

யேசு மறுமொழியாக, " நீராகவே இதைக் கேட்கின்றீரா, மற்றவர் என்னைப்பற்றி உம்மிடம் கூறினரா? " என்றார்.

அதற்குப் பிலாத்து "நான் யூதனா? உன் இனத்தாரும் தலைமைக் குருக்களும் உன்னை என்னிடம் கையளித்தார்களே, என்ன செய்தாய்?" என்றான்.

யேசுவோ, "என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று. என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததாயிருந்தால், நான் யூதரிடம் கையளிக்கப்படாதபடி என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால், என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று" என்றார்.

எனவே, பிலாத்து அவரை நோக்கி, " அப்படியானால் நீ அரசன் தானா?" என்று கேட்க, யேசு, " 'அரசன்' என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி; இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவன் எவனும் எனது குரலுக்குச் செவிமடுக்கிறான் " என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## 3ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*தாவீதை இஸ்ராயேலின் அரசராக அபிஷேகம் செய்தார்கள்.*

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 5 : 1-3

அந்நாட்களில் :

இஸ்ராயேலின் கோத்திரங்கள் எல்லாம் எபிரோனில் இருந்த தாவீதிடம் வந்து, " இதோ நாங்கள் உமது எலும்பும் தசையுமானவர்கள்; மேலும் நேற்றும் முந்தாநாளும் சவுல் எங்களுக்கு அரசனாய் இருந்தபோது, நீர் இஸ்ராயேலை நடத்திச் செல்பவராக இருந்தீரே; அன்றியும் ஆண்டவர் உம்மை நோக்கி, 'நம் மக்கள் இஸ்ராயேலை நீ பராமரித்து, இஸ்ராயேலுக்குத் தலைவனாய் இருப்பாய்' என்று உம்மிடம் திருவுளம் பற்றினாரே! " என்றனர்.

இஸ்ராயேலின் முதியவர்களும் எபிரோனில் இருந்த அரசரிடம் வந்தார்கள். தாவீது அரசர் எபிரோனில் ஆண்டவர் திருமுன் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு, அவர்கள் தாவீதை இஸ்ராயேலின் அரசராக அபிஷேகம் செய்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

சமாதானம் உண்டாக்கி, விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மாற்கு 11 : 10

அல்லேலூயா. ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி!
நம் தந்தையாம் தாவீதின் அரசு வருகிறது;
அது வாழ்க. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆண்டவரே, நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவுகூரும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 23 : 35-43

அக்காலத்தில்:

மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். தலைவர்களும், "மற்றவர்களைக் காப்பாற்றினான். இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப் பெற்றவருமானால் தன்னையே காப்பாற்றிக்கொள்ளட்டும்" என்று யேசுவை ஏளனம் செய்தனர். படைவீரர்களும் அணுகி அவருக்குக் காடியைக் கொடுத்து, "நீ யூதரின் அரசனானால் உன்னையே காப்பாற்றிக் கொள்" என்று எள்ளி நகையாடினர். 'இவர் யூதரின் அரசன்' என்று எழுதியிருந்த பலகையை அவர் தலைக்குமேல் வைத்திருந்தனர்.

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மெசியா அல்லவா? உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்தான்.

மற்றவனோ, "கடவுள் மட்டில் உனக்கு அச்சமே இல்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாயிருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. ஏனெனில், நம் செயல்களுக்குத் தக்க பலனைப் பெறுகிறோம். இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லை" என்று அவனைக் கடிந்து கொண்டான்.

பின்பு அவன், "யேசுவே, நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவுகூரும்" என்றான்.

அவனுக்கு யேசு, "இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**தானியேல், அனனியாஸ், மிசாயேல், அசாரியாஸ்**
**ஆகியோர்க்கு இணையாக யாரும் காணப்படவில்லை.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்தின் தொடக்கம் *1 : 1-6, 8-20*

யூதாவின் அரசனாகிய யோவாக்கீமின் மூன்றாம் ஆட்சியாண்டில் பபிலோனின் அரசனாகிய நபுக்கோதனசார் எருசலேமுக்கு வந்து அதை முற்றுகையிட்டான். ஆண்டவர் யூதாவின் அரசனாகிய யோவாக்கீமையும், கடவுளுடைய கோயிலின் பாத்திரங்கள் சிலவற்றையும் அவனிடம் கையளித்தார்; அவனும் அவற்றைச் சென்னார் நாட்டிலுள்ள தன் தெய்வத்தின் கோயிலுக்குக் கொண்டுபோய் அவற்றைத் தன் தெய்வத்திற்குரிய கருவூலங்களோடு சேர்த்து வைத்தான்.

அப்போது அரசன் தன் அரண்மனையிலிருந்த அண்ணகர்களின் தலைவனாகிய அஸ்பெனேசுக்கு ஒரு கட்டளை கொடுத்தான்: அதன்படி, இஸ்ராயேலருக்குள் அரசகுலத்திலிருந்தும், உயர்குடியிலிருந்தும், யாதொரு மாசும் இல்லாதவர்களும் அழகுள்ளவர்களும், எல்லாவகை ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் வல்லவர்களும், அரசனின் அரண்மனையில் சேவிக்கும் திறமையுள்ளவர்களுமான இளைஞர் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குக் கல்தேயரின் கலைகளையும் மொழியையும் கற்றுக்கொடுக்கக் கட்டளையிட்டான். அரசன் தான் உண்ணும் உணவிலும், பருகும் திராட்சை இரசத்திலும் நாடோறும் ஒரு பங்கை அவர்களுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான்; இவ்வாறு மூன்று ஆண்டுகள் வளர்ந்த பின்னர் இறுதியில் அவர்கள் அரசன் முன்னிலையில் பணிபுரியக் கொண்டுவரப்படல் வேண்டும், என்றான்.

அவர்களுள் யூதாவின் வழிவந்தவர்களான தானியேல், அனனியாஸ், மிசாயேல், அசாரியாஸ் என்பவர்கள் இருந்தார்கள். அரசனது உணவினாலும், அவன் குடிக்கும் திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப் படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார்; அவ்வாறே, தம்மைத் தீட்டுப்படுத்தாதபடிக்கு அண்ணகரின் தலைவனிடம் அனுமதியும் கேட்டுக்கொண்டார்.

கடவுளும் அண்ணகரின் தலைவனிடத்தில் தானியேலுக்குப் பரிவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்; அப்போது அண்ணகரின் தலைவன் தானியேலை நோக்கி, "உங்களுக்கு உணவும் பானமும் ஏற்பாடு செய்திருக்கும் அரசனாகிய என் ஆண்டவனுக்கு நான் அஞ்சுகிறேன்;

உங்களைப் போன்ற இளைஞர்களின் முகங்களைவிட உங்கள் முகங்கள் களை குன்றியனவாய் இருப்பதை அரசன் கண்டால் என் தலையே போய் விடுமே! நீங்கள் அதற்குக் காரணமாவீர்கள்" என்றான்.

தானியேல், அனனியாஸ், மிசாயேல், அசாரியால் ஆகியவர்களைக் கண்காணிக்கும்படி அண்ணகரின் தலைவனால் ஏற்படுத்தப்பட்டவனிடம் தானியேல், "ஐயா, தயைகூர்ந்து பத்து நாள்வரைக்கும் உம் ஊழியர்களாகிய எங்களைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு உண்பதற்கு மரக்கறிகளையும், குடிப்பதற்குத் தண்ணீரையும் மட்டும் கொடுக்கச் சொல்லும். அதற்குப் பிறகு, எங்கள் முகங்களையும், அரசன் தரும் புலால் உணவை உண்ணும் மற்ற இளைஞர்களின் முகங்களையும் ஒப்பிட்டுப் பாரும்; பின்னர் உம் விருப்பப்படி உம்முடைய ஊழியர்களாகிய எங்களுக்குச் செய்தருளும்" என்றார்.

அவர்களுடைய வேண்டுகோளின்படியே அவர்களைப் பத்து நாட்களாகச் சோதித்துப் பார்த்தான். பத்து நாட்களுக்குப் பிறகோ அரச உணவை உண்டு வந்த இளைஞர் அனைவரையும்விட இவர்கள் முகப்பொலிவோடும் உடல் கட்டோடும் விளங்குவதைக்கண்டான். ஆதலால் கண்காணிப்பாளன் புலாலுணவுக்கும் திராட்சை இரசத்திற்கும் பதிலாக மரக்கறி உணவையே அவர்களுக்குக் கொடுத்து வந்தான்.

இந்த நான்கு இளைஞர்களுக்கும் கடவுள் எல்லாக் கலைகளிலும் அறிவிலும், தேர்ச்சியையும் திறமையையும் தந்தார்; சிறப்பாகத் தானியேலுக்கு எல்லா காட்சிகளையும் கனவுகளையும் கண்டுபிடிக்கும் ஆற்றலையும் அளித்தார். அவர்களை அரசனது முன்னிலையில் கொண்டு வரும் நாள் வந்தது; அண்ணகருடைய தலைவன் அவர்களை நபுக்கோதனசாருக்கு முன்பாக கொண்டுவந்து விட்டான்.

அரசன் அவர்களோடு உரையாடினான்; அப்போது அவர்கள் அனைவருள்ளும் தானியேல், அனனியாஸ், மிசாயேல், அசாரியால் ஆகியோர்க்கு இணையாக யாரும் காணப்படவில்லை; ஆகவே அவர்கள் அரசன் முன்னிலையில் பணிபுரிய அமர்த்தப்பட்டனர். ஞானத்திற்கும் புத்திக்கும் அடுத்தவற்றில் அரசன் அவர்களிடம் விசாரித்தபோதெல்லாம் அவனது அரசில் இருக்கும் எல்லா நிமித்திகர்களையும் மந்திரக்காரர்களையும்விட அவர்கள் பத்து மடங்கு சிறந்தவர்கள் என்பதைக் கண்டறிந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

தானி 3: 52, 53, 54, 55, 56

52 எங்கள் தந்தையரின் இறைவனாகிய ஆண்டவரே, நீர் புகழ் பெறுவீராக!

பதில்: என்றென்றும் நீர் போற்றப்படவும்,
உயர்த்தப்படவும் தகுதியுள்ளவர்.

உமது மாட்சிமிக்க திருப்பெயர் புகழ்பெறுவதாக!

பதில்: என்றென்றும் போற்றப்படவும்
உயர்த்தப்படவும் கடவதாக!

53 உமது மாட்சிமிக்க புனித கோவிலில் நீர் புகழ்பெறுவீராக!

பதில்: என்றென்றும், எல்லாருக்கும் மேலாக
வாழ்த்தும் மாட்சியும் பெறுவீராக!

54 உமது அரசின் அரியணையின்மேல் நீர் புகழ்பெறுவீராக!

பதில்: என்றென்றும் வாழ்த்தும் உயர்ச்சியும் பெறுவீராக!

55 கெருபீன்கள்மேல் அமர்ந்து பாதாளத்தைக் காண்கின்றவரே,
நீர் புகழ்பெறுவீராக!

பதில்: என்றென்றும் போற்றுதலும் உயர்ச்சியும் பெறுவீராக!

56 வானகத்திலே நீர் புகழ்பெறுவீராக!

பதில்: என்றென்றும் வாழ்த்தும் மாட்சியும் பெறுவீராக!

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*கிறிஸ்துவின் பெயரும் அவர் தந்தையின் பெயரும்*
*அவர்களது நெற்றியில் பொறித்திருந்தது.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 14 : 1-3, 4b-5

அருளப்பன் என்னும் நான், இதோ, சீயோன் மலைமீது செம்மறியானவர் நிற்கக்கண்டேன். அவரது பெயரையும் அவருடைய தந்தையின் பெயரையும் தங்களது நெற்றியிலே பொறித்திருந்த நூற்று நாற்பத்து நாலாயிரம் பேர் அவரோடு இருந்தனர். பின் விண்ணினின்று ஒரு குரல் கேட்டது. அது பெருவெள்ளம் போலும், பேரிடி முழக்கம் போலும் ஒலித்தது. நான் கேட்ட குரல் யாழை மீட்டுவோர் எழுப்பும் இசைபோலும் இருந்தது.

அரியணை முன்னிலையில் நான்கு உயிர்களுக்கும் மூப்பர்களுக்கும் முன்பாக அவர்கள் புதியதொரு பாடலைப் பாடினார்கள். மண்ணுலகினின்று மீட்கப்பட்ட நூற்று நாற்பத்து நாலாயிரம் பேரைத் தவிர மற்றெவரும் அந்தப் பாடலைக் கற்க இயலவில்லை. இவர்கள் பெண்களோடு சேர்ந்து தங்களை மாசுபடுத்தாதவர்கள்; கன்னிமை காத்தவர்கள்.

இவர்கள் செம்மறி செல்லுமிடமெல்லாம் அவரைத் தொடர்ந்து செல்பவர்கள். கடவுளுக்கும் செம்மறிக்கும் அர்ச்சிக்கப்பட்ட முதற் கனிகளாக மனித குலத்தினின்று மீட்கப்பட்டவர்கள். இவர்கள் வாயினின்று பொய் வெளிப்பட்டதில்லை. இவர்கள் மாசற்றவர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 23 : 1-2, 3-4ab. 5-6 (பல்லவி : 6 காண்)

பல்லவி : ஆண்டவரே, உமது திருமுகத்தைத் தேடும்
மக்களினம் இதுவே.

1 மண்ணுலகும் அதில் நிறைந்தயாவும் ஆண்டவருடையன:
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலைநிறுத்தியவர் அவரே:
ஆறுகளின் மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனத்தைச் செலுத்தாதவன். பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்;
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே:
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே. பல்லவி

அல்லேலூயா மத். 24 : 42a, 44

அல்லேலூயா. ஆயத்தமாயிருங்கள், விழிப்பாயிருங்கள்:
ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில்
மனுமகன் வருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வறுமைமிக்க கைம்பெண் ஒருத்தி இரண்டு செப்புக்காசுகள் போடுவதைக் கண்டார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21: 1-4

அக்காலத்தில்:

யேசு ஏறெடுத்துப் பார்க்கையில் பணக்காரர் தம் காணிக்கைகளை உண்டியலில் போடுவதைக் கண்டார். வறுமை மிக்க கைம்பெண் ஒருத்தியும் இரண்டு செப்புக் காசுகளைப் போடுவதைக் கண்டு,

"இந்த ஏழைக் கைம்பெண் மற்றெல்லாரையும்விட அதிகம் போட்டாள் என்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், அவர்கள் அனைவரும் தங்களிடம் மிகுதியாயிருந்த பணத்திலிருந்து கடவுளுக்குக் காணிக்கை போட்டனர். இவளோ, தன் வறுமையிலும் தன் பிழைப்புக்கானது முழுவதையுமே போட்டு விட்டாள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் என்றுமே அழிவுறாத ஓர் அரசை நிறுவுவார்:
அது மற்ற அரசுகளையெல்லாம் அழிக்கும்.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 31-45

*அந்நாட்களில்:* தானியேல் நபுக்கோதனசாரை நோக்கிக் கூறியதாவது:

"அரசே, நீர் கண்ட காட்சி: பெரிய சிலையொன்றைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை ஒளி மிகுந்ததாய் உமக்கு எதிரே நின்றது; அதன் தோற்றமோ அச்சமூட்டுவதாய் இருந்தது. அந்த சிலையின் தலை பசும் பொன்னாலானது. அதன் மார்பும் புயங்களும் வெள்ளியாலானவை; வயிறும் தொடைகளும் வெண்கலத்தால் ஆனவை. கால்கள் இரும்பினாலும், பாதங்களில் ஒரு பகுதி இரும்பாலும், மறு பகுதி களிமண்ணாலும் ஆனவையாய் இருந்தன.

நீர் பார்த்துக்கொண்டிருந்தபோது, கைகளால் பெயர்க்கப்படாத கல்லொன்று (மலையிலிருந்து) உருண்டு வந்தது; வந்து சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய அதன் பாதங்களில் மோதி அவற்றை நொறுக்கிப் போட்டது. அப்போது, அந்த இரும்பு, களிமண், வெண்கலம், வெள்ளி, பொன் ஆகியவை யாவும் நொறுங்கிக் கோடைக்காலத்தில் போரடிக்கிற களத்துப் பதரைப்போல் ஆயின. அவற்றின் அடையாளமே இராதபடி காற்று அவற்றை அடித்துக்கொண்டு போய்விட்டது; ஆனால் சிலையை மோதிய அந்தக் கல் பெரிய மலையாய் வளர்ந்து மண்ணுலகத்தை முழுதும் நிரப்பிற்று.

இதுவே நீர் கண்ட கனவு; அரசே, அதன் உட்பொருளையும் உமக்கு இப்பொழுது தெரிவிப்பேன். நீர் அரசருக்கரசராய் விளங்குகிறீர்; விண்ணகக் கடவுள் உமக்கு அரசுரிமை, ஆற்றல், வல்லமை, மகிமை ஆகியவற்றைக் கொடுத்திருக்கிறார்: எல்லா இடங்களிலுமுள்ள மனிதர்களையும், வயல்வெளி மிருகங்களையும், வானத்துப் பறவைகளையும் உம் கைகளில் அவர் தந்திருக்கிறார்; நீர் அவற்றையெல்லாம் ஆளும்படி செய்துள்ளார்-ஆகவே பொன்னாலாகிய சிலையின் தலை உம்மையே குறிக்கிறது.

உமக்குப்பின் உம்மிலும் கீழ்ப்பட்ட வேறொரு அரசு தோன்றும்; அடுத்து உலகெல்லாம் ஆளும் வெண்கலமான மூன்றாம் அரசு எழும்பும். நான்காம் அரசு இரும்பைப்போல் இருக்கும்; இரும்பு எப்படி எல்லாவற்றையும் நொறுக்கிச் சின்னாபின்னமாக்குகிறதோ, அப்படியே இது அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்கிவிடும்.

ஆனால் அச்சிலையின் பாதங்களும் கால்விரல்களும் ஒரு பகுதி குயவனின் களிமண்ணும், மறுபகுதி இரும்புமாயிருப்பதை நீர் கண்டீர். அந்த அரசு பிரிக்கப்படும்; ஆயினும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டதுபோலவே இரும்பின் உறுதி அதில் இருக்கும். கால்களின் விரல்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாய் இருந்தன; அந்த அரசு பாதி வலிமையுள்ளதாயும், பாதி வலிமையற்றதாயும் இருக்கும் என்பதைக் குறிக்கிறது. இரும்பு களிமண்ணோடு கலந்திருப்பதை நீர் கண்டீர்; அவர்களும் மற்ற மனிதர்களுடன் திருமண உறவினால் கலந்திருப்பார்கள்; ஆனால் இரும்பு களிமண்ணோடு கலக்காததுபோல் அவர்கள் ஒருவரோடொருவர் ஒன்றித்திருக்க மாட்டார்கள்.

அந்த அரசுகளின் நாட்களில் விண்ணகக் கடவுள் ஓர் அரசை நிறுவுவார்; அது என்றுமே அழியாது; வேற்றினத்துக்கும் தரப்படாது. அது மற்ற அரசுகளையெல்லாம் அழிக்கும்; அதுவோ என்றென்றும் நிலைத்திருக்கும்; கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து வந்து, களிமண்ணையும் இரும்பையும் வெண்கலத்தையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கியதாக நீர்கண்ட அந்தக்கல் இந்த அரசையே குறிக்கிறது. இவ்வாறு எதிர்காலத்தில் நிகழப்போவதை மாபெருங் கடவுள் அரசருக்குத் தெரிவித்திருக்கிறார். கனவு உண்மையானது; அதன் உட்பொருளும் சரியானது.”

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

தானி. 3 : 57, 58, 59, 60, 61

57 **ஆண்டவருடைய எல்லாப் படைப்புகளே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

58 **ஆண்டவருடைய தூதர்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

59 **வான மண்டலங்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

60 வானமண்டலத்திற்கும் மேலிருக்கும் நீர் நிலைகளே,
நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

61 ஆண்டவருடைய வல்லமைகளே,
நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**உமது அரிவாளை எடுத்து அறுவடை செய்யும்.
அறுவடைக் காலம் வந்துவிட்டது.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் *14 : 14-20*

அருளப்பன் என்னும் நான், இதோ ஒரு வெண் மேகத்தையும், அதன்மேல் மனுமகனைப்போன்ற ஒருவர் வீற்றிருப்பதையும் கண்டேன். அவர் தலையில் ஒரு பொன்முடியும், கையில் கூரிய அரிவாளும் இருந்தன.

மற்றொரு வானதூதர் ஆலயத்தினின்று வெளிவந்து, மேகத்தின்மீது வீற்றிருப்பவரை நோக்கி, உமது அரிவாளை எடுத்து அறுவடை செய்யும். அறுவடைக் காலம் வந்துவிட்டது; மாநிலப் பயிர் முற்றிவிட்டது" என்று உரக்கக் கத்தினார். மேகத்தின்மீது வீற்றிருந்தவர் தமது அரிவாளை மாநிலத்தின்மீது வீசினார். மாநிலமும் அறுவடையாயிற்று.

வேறொரு வானதூதர் விண்ணிலுள்ள ஆலயத்திலிருந்து வெளியே வந்தார். அவரிடமும் கூரிய அரிவாள் இருந்தது. இன்னுமொரு வானதூதர் பீடத்தினின்று வெளி வந்தார். அவர் நெருப்பின்மேல் அதிகாரம் உள்ளவர். கூரிய அரிவாள் ஏந்தியவரைப் பார்த்து, "உம் கூரிய அரிவாளை எடுத்து மாநிலத்தின் திராட்சைக் குலைகளைக் கொய்துவிடும்; கனிகள் பழுத்துவிட்டன" என்று உரக்கக் கத்தினார். ஆகவே, வானதூதர் மாநிலத்தின்மீது தம் அரிவாளை வீசி, மாநிலத் திராட்சைக் கொடியின் குலைகளைக் கொய்தார். கடவுளது கோபம் என்னும் பெரிய ஆலையில் அவற்றைப் போட்டார். நகருக்கு வெளியே உள்ள ஆலையிலே அவை மிதிக்கப்பட்டன. அந்த ஆலையினின்று பாய்ந்த இரத்தம் குதிரைகளின் கடிவாள உயரமளவு இருநூறு கல் தொலைவுக்குப் பரவியது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அதற்கு அவர், "ஏமாறுதபடி பார்த்துக்கொள்ளுங்கள். பலர் என் பெயரை வைத்துக்கொண்டு, 'நானே அவர், குறித்த காலம் நெருங்கி விட்டது' என்பார்கள். அவர்கள் பின்னே போகாதீர்கள். போர்களைப் பற்றியும் குழப்பங்களைப் பற்றியும் கேள்விப்படும்போது திகிலடையாதீர்கள். இவை முதலில் நிகழத்தான் வேண்டும். ஆனால் முடிவு உடனே வராது" என்றார்.

மேலும் அவர் சொன்னதாவது: "நாடு நாட்டையும், அரசு அரசையும் எதிர்த்து எழும். பற்பல இடங்களில் கொடிய நிலநடுக்கமும், கொள்ளைநோய்களும், பஞ்சமும் உண்டாகும்; அச்சமூட்டும் நிகழ்ச்சிகளும், வானத்தில் பெரிய அறிகுறிகளும் தோன்றும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

மனித கைவிரல்கள் தோன்றி எழுதத் தொடங்கின.

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம்
5: 1-6, 13-14, 16-17, 23-28

அந்நாட்களில்:

பல்தசார் என்னும் அரசன் பெருங்குடி மக்கள் ஆயிரம் பேருக்குப் பெரிய விருந்தொன்று செய்தான்; அந்த ஆயிரம் பேர்களுடன் அவனும் திராட்சை இரசம் குடித்தான். குடி மயக்கத்தில் இருந்த அவன், அரசனும் அவனுடைய பெருங்குடி மக்களும், அவனுடைய மனைவியரும் வைப்பாட்டிகளும் குடிப்பதற்காகத் தன் தந்தையாகிய நபுக்கோதனசார் யெருசலேம் கோயிலிலிருந்து கொண்டுவந்த பொன் வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டுவரச் சொன்னான்.

அவ்வாறே, எருசலேமிலிருந்த இறைவனின் கோயிலிலிருந்து கொண்டுவந்த பொன், வெள்ளிப் பாத்திரங்களை எடுத்து வந்தார்கள்; அரசனும், அவனுடைய பெருங்குடி மக்களும், அவனுடைய மனைவியரும் வைப்பாட்டிகளும் அந்தப் பாத்திரங்களில் குடித்தார்கள்; அவர்கள் திராட்சை இரசத்தைக் குடித்துக்கொண்டு, பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், கல் இவற்றாலான தங்கள் தெய்வங்களைப் புகழ்ந்தார்கள்.

திடீரென விளக்குக்கு எதிரில், அரசனது அரண்மனைக் கூடத்துச் சுவரில் மனித கைவிரல்கள் தோன்றி எழுதத் தொடங்கின. அரசனோ எழுதுகின்ற அந்தக் கையின் மணிக்கட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது, அரசனின் முகம் மாறுபட்டது; அவனுடைய நினைவுகள் அவனைக் கலக்கத்திற்குள்ளாக்கின; அவனது இடுப்பின் கட்டுகள் தளர்ந்தன: அவனுடைய தொடைகள் நடுங்கின.

தானியேல் அரசன் முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டார்; அரசன் அவரைப் பார்த்து, "என் தந்தையாகிய அரசன் யூதேயாவிலிருந்து சிறை பிடித்து வந்த யூதர்களுள் ஒருவனாகிய தானியேல் என்பவன் நீதானோ? உன்னிடத்தில் தெய்வங்களின் ஆவியும், வியத்தகு அறிவும் புத்தியும் ஞானமும் உண்டென உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டேன். மறைபொருளை வெளிப்படுத்தவும், சிக்கலானவற்றைத் தீர்க்கவும் உன்னால் முடியும் என உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; ஆகையால் நீ இந்தச் சொற்களைப் படித்து இவற்றின் உட்பொருளை விளக்கினால், செம்பட்டாடையும் கழுத்தில் பொற்சங்கிலியும் உனக்கு அணிவித்து என் அரசில் மூன்றாம் அதிகாரியாய் உன்னை ஏற்படுத்துவேன்" என்றான்.

அப்பொழுது தானியேல் அரசனுக்கு மறுமொழியாகக் கூறினார்: "உம்முடைய பரிசுகள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம் வெகுமதிகளை வேறு யாருக்காவது கொடும். ஆனால், அரசே, இந்தச் சொற்களை உமக்குப் படித்துக் காட்டி அவற்றின் உட்பொருளை உமக்கு நான் கூறுவேன். விண்ணுலக ஆண்டவர்க்கு எதிராக உம்மையே உயர்த்தினீர்; அவருடைய கோயிலின் பாத்திரங்களைக் கொண்டுவரச் சொல்லி, நீரும் உம் பெருங்குடி மக்களும், உம்முடைய மனைவியரும் வைப்பாட்டிகளும் அவற்றில் திராட்சை இரசம் குடித்தீர்கள்; அது மட்டுமன்று; காணவோ கேட்கவோ உணரவோ இயலாத வெள்ளி, பொன், வெண்கலம், இரும்பு, மரம், கல் இவற்றாலான தெய்வங்களைப் புகழ்ந்தீர்கள்; ஆனால் தம் கையில் உமது உயிரையும், உம் வழிகளையும் கொண்டிருக்கிற கடவுளை நீர் மகிமைப் படுத்தவில்லை; ஆகையால் அவர் இந்தக் கையைத் தம் திருமுன்னிருந்து அனுப்பி இந்தச் சொற்களை எழுதுவித்தார்.

எழுதப்பட்ட சொற்கள் பின்வருமாறு: மானே, தெக்கேல், பாரெஸ். இவற்றின் உட்பொருள்: மானே - கடவுள் உமது அரசின் நாட்களை எண்ணி வரையறுத்து முடிவாக்கிவிட்டார்; தெக்கேல் - நீர் தராசில் நிறுக்கப்பட்டீர்; அப்போது இலேசாயிருந்தீர்; பாரெஸ் - உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியர்க்கும் பேர்சியர்க்கும் கொடுக்கப்பட்டது" என்றார்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

தானி. 3:62, 63, 64, 65, 66, 67

62 **கதிரவனே, நிலவே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

63 **விண்மீன்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

64 **மழையே, பனியே, அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

65 **காற்றுகளே, அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்.**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

66 **தீயே, வெப்பமே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

67 **குளிரே, வெயிலே, ஆண்டவரைப் புகழுங்கள்,**

பதில்: **என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.**

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

***மோசேயின் பாடலையும் செம்மறியின் பாடலையும் பாடினர்.***

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 15:1-4

அருளப்பன் என்னும் நான் அரிய பெரிய அறிகுறி இன்னொன்று விண்ணில் கண்டேன். ஏழு வானதூதர் ஏழு வாதைகளை வைத்திருந்தனர். இறுதியான வாதைகள் அவையே. அவற்றோடு கடவுளின் கோபம் நிறைவுறும்.

நெருப்போடு கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு காட்சியைக் கண்டேன். விலங்கின்மீதும் அதன் சிலையின்மீதும் எண்களால் குறிக்கப் பட்ட ஆள்மீதும் வெற்றி கொண்டவர்களையும் நான் கண்டேன். அவர்கள் கடவுள் தந்த யாழ்களைக் கையில்கொண்டு கண்ணாடிக் கடலருகே நின்றனர். கடவுளுடைய ஊழியனாகிய மோயீசனின் பாடலையும் இவ்வாறு பாடினர் :

எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரே, உம் செயல்கள் பெரியன, வியப்புக்குரியன. நாடுகளுக்கெல்லாம் அரசரே, உம் வழிகள் நேர்மை யானவை, உண்மையானவை. ஆண்டவரே, உமக்கு அஞ்சாதவர் எவர்? உமது பெயரை மகிமைப்படுத்தாதவர் எவர்? நீர் ஒருவரே புனிதர். எல்லா இனத்தவரும் வந்து உம் திருவடி பணிவர். ஏனெனில் உம் நீதிச் செயல்கள் வெளிப்படையாயின.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 97 : 1, 2-3 a b. 7-8, 9-10 ( பல்லவி : திருவெளி. 15 : 3 b )*

பல்லவி : எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரே,
உம் செயல்கள் பெரியன, வியப்புக்குரியன.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் :
வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.
அவரது வலக்கரமும் புனித புயமும்
அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் :
மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் இவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

7 கடலும் அதில் வாழ்வனமும் ஆர்ப்பரிக்கட்டும்:
பூவுலகும் அதில் வாழ்வோரும் உளம் பூரிக்கட்டும்.
8 பெருவெள்ளங்கள் கை கொட்டட்டும்:
ஆண்டவர் எழுந்தருளும்போது மலைகளும் ஆரவாரம் செய்யட்டும்.
பல்லவி

9 ஏனெனில், அவர் வருகின்றார் :
பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
10 நீதியுடன் பூவுலகை அவர் ஆள்வார் :
மக்களினத்தாரை அவர் நேர்மையுடன் ஆட்சிசெய்வார். பல்லவி

அல்லேலூயா திருவெளி 2: 10

அல்லேலூயா. சாவதாயினும் விசுவாசத்தில் நிலைத்திரு:
வாழ்வை உனக்கு வெற்றிவாகையாய்ச்
சூட்டுவேன், என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள்:**
**ஆயினும் உங்கள் தலைமயிர் ஒன்றுகூட விழாது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21: 12-19

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது:

"என் பெயரின் பொருட்டு உங்களைப் பிடித்து, செபக்கூடங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் இழுத்துச்சென்று, அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் உங்களைக் கையளித்துத் துன்புறுத்துவர். எனக்கு நீங்கள் சாட்சியாய் இருப்பதற்கு இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும். எனவே, என்ன பதில் அளிக்கலாம் என்று முன்னதாகவே எண்ணிப் பார்க்க வேண்டாம். இதை உள்ளத்தில் இருத்துங்கள்: உங்கள் எதிரிகள் எவருமே உங்களை எதிர்த்து நிற்கவோ, மறுத்துப் பேசவோ கூடாதபடி உங்களுக்குப் பேச்சு வல்லமையும் ஞானமும் அருளுவேன்.

உங்கள் பெற்றோரும் உடன்பிறந்தோரும் உறவினரும் நண்பரும் உங்களைக் காட்டிக்கொடுப்பர். உங்களுள் சிலர் கொல்லப்படுவர். என் பெயரைக் குறித்து உங்களை எல்லாரும் வெறுப்பார்கள். ஆயினும் உங்கள் தலைமயிர் ஒன்றுகூட விழவே விழாது. நிலைத்து நின்றால், உங்கள் ஆன்மாக்களை மீட்டுக்கொள்வீர்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

முதல் வாசகம்

**கடவுள் தம் தூதரை அனுப்பிச் சிங்கங்களின் வாயினின்று என்னைக் காப்பாற்றினார்.**

**இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம்** 6: 11-27

அந்நாட்களில்:

கும்பலாய் வந்து உள்ளே பார்த்துக்கொண்டிருந்த மனிதர்கள், தானியேல் தம் கடவுளின் திருமுன் வேண்டுவதையும் மன்றாடுவதையும் கண்டார்கள்.

அப்போது அவர்கள் அரசனிடம் வந்து, அரசனின் சட்டத்தைக் குறிப்பிட்டு, "அரசே, முப்பது நாள் வரையில் அரசராகிய உம்மிடமன்றி வேறெந்தக் கடவுளிடமோ மனிதரிடமோ யாரேனும் மன்றாட்டைக் கொண்டு சென்றால், அந்த மனிதனும் சிங்கங்களின் குகையில் போடப்படுவான் என்று நீர் சட்டத்தைப் பிறப்பித்தீர் அல்லவா?" என்றார்கள்.

அதற்கு அரசன், "மேதியர், பாரசீகர்களின் சட்டப்படி, நான் பிறப்பித்த சட்டமே நிலையானது. அதை எவரும் மாற்ற முடியாது" என்றான்.

உடனே அவர்கள் அரசனை நோக்கி, "சிறைப்பிடித்துக் கொண்டு வரப்பட்ட யூதர்களுள் ஒருவனான தானியேல் என்பவன் உமது சட்டத்தையும், நீர் பிறப்பித்த கட்டளையையும் பொருட்படுத்தவில்லை; அவன் நாள்தோறும் மூன்று வேளையும் அவன் செபத்தில் ஆழ்ந்திருக்கிறான்" என்றார்கள். அரசன் இந்தச் சொற்களைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினான்; தானியேலைக் காப்பாற்றத் தன்னுள் உறுதி செய்துகொண்டு அன்று மாலை பொழுது சாயும் வரையில் அவனைக் காக்க முயற்சி செய்தான்.

ஆனால் அந்த மனிதர்கள் அரசனின் எண்ணத்தை அறிந்துகொண்டு, கும்பலாய் வந்து அவனை நோக்கி, "அரசன் ஏற்படுத்திய சட்டத்தை மாற்ற முடியாது என்பது மேதியர், பாரசீகர்களின் சட்டம்; அரசே, அதை உமக்கு நினைவூட்டிக்கொள்ளுகிறோம்" என்றனர்.

ஆகவே, அரசனுடைய கட்டளைப்படி அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து சிங்கங்களின் குகையில் போட்டார்கள்; அப்போது அரசன் தானியேலை நோக்கி, "நீ இடைவிடாமல் வழிபட்டுவரும் உன் கடவுள்

உன்னைக் காப்பாராக!" என்றான். பெரிய கல்லொன்றைக் கொண்டுவந்து குகையின் வாயிலை அடைத்தார்கள்; தானியேலுக்குச் செய்யப்பட்டதில் யாதொன்றும் மாற்றப்படாதிருக்கும்படி அரசன் தன் மோதிரத்தினாலும் தன் பெருங்குடி மக்களின் மோதிரங்களாலும் அதில் முத்திரையிட்டான்.

அரசன் அரண்மனைக்குத் திரும்பினான்; அன்றிரவு அவன் உண்ணவில்லை; வைப்பாட்டிகளையும் உள்ளே வர விடவில்லை; அவனுக்கு உறக்கமும் பிடிக்கவில்லை. கிழக்கு வெளுக்கும்போது அரசன் எழுந்திருந்து சிங்கங்களின் குகைக்கு விரைந்து சென்றான். அவன் குகையின் அருகில் வந்ததும், துயரக் குரலில் தானியேலைக் கூப்பிட்டு, "தானியேலே, உயிர் உள்ள கடவுளின் ஊழியனே, நீ இடைவிடாமல் வழிபடும் உன் கடவுள் உன்னைச் சிங்கங்களினின்று காக்க வல்லவராய் இருந்தாரா?" என்று கேட்டான்.

அதற்குத் தானியேல் அரசனிடம், "அரசே, நீர் நீடூழி வாழ்க! என் கடவுள் தம் தூதனை அனுப்பிச் சிங்கங்களின் வாய்களைக் கட்டிப் போட்டார்; அவை எனக்குத் தீங்கொன்றும் செய்யவில்லை; ஏனெனில் அவர் முன்னிலையில் என்னிடம் பரிசுத்தமே காணப்பட்டது; மேலும், அரசே, உம் முன்னிலையிலும் நான் குற்றமற்றவன்" என்று மறுமொழி கொடுத்தார். அப்போது அரசன் மிகவும் மனமகிழ்ந்து, உடனே தானியேலைக் குகையிலிருந்து தூக்கி வெளிப்படுத்தும்படி கட்டளையிட்டான்; அவ்வாறே தானியேலைக் குகையிலிருந்து வெளியே எடுத்தார்கள்; அவருக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை; ஏனெனில் அவர் தம் கடவுளை நம்பினார். அதன்பிறகு, அரசன் தானியேலைக் குற்றம் சாட்டிய அந்த வஞ்சகர்களைக் கொண்டுவரக் கட்டளையிட்டான்; அவர்களும், அவர்களுடைய மனைவி மக்களும் சிங்கங்களின் குகையிலே போடப்பட்டார்கள்; அவர்கள் குகையில் விழுமுன்னே சிங்கங்கள் அவர்களைக் கவ்விப் பிடித்து, அவர்களுடைய எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டன.

அப்போது தாரியுஸ் அரசன் நாடெங்கணுமுள்ள எல்லா மக்களுக்கும் இனத்தார்களுக்கும் மொழியினர்களுக்கும் ஓர் அறிக்கை விடுத்தான்: "உங்களுக்குச் சமாதானம் பெருகுவதாக! என் ஆளுகைக்குட்பட்ட அரசெங்கணுமுள்ள மக்கள் அனைவரும் தானியேலின் கடவுளுக்கு அஞ்சி நடுங்கியிருத்தல் வேண்டும்- இது என் ஆணை: ஏனெனில் அவரே உயிருள்ள கடவுள், அவர் என்றென்றும் நிலைத்திருக்கிறார்; அவருடைய அரசு என்றும் அழிவுறாது, அவருடைய ஆட்சிக்கு முடிவிராது. தானியேலைச் சிங்கக் குகையினின்று காப்பாற்றினவர் அவரே; அவரே மீட்பர், விடுதலை கொடுப்பவர், விண்ணிலும் மண்ணிலும் விந்தைகள் செய்கிறார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

தானி. 3 : 68, 69, 70, 71, 72, 73, 74

68 பனித்திவலைகளே, மூடுபனியே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

69 உறைபனியே, குளிரே, ஆண்டவரைப் புகழுங்கள்.

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

70 பனிமலையே, பனிக்கட்டிகளே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

71 இரவே, பகலே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

72 ஒளியே, இருளே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

73 மின்னல்களே, மேகங்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

74 நிலவுலகம் ஆண்டவரைப் புகழ்வதாக!

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துவதாக!

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**பாபிலோன் மாநகர் வீழ்ந்தது.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் *18 : 1-2, 21-23; 19 : 1-3, 9a*

அருளப்பன் என்னும் நான் பெரும் வல்லமையுள்ள இன்னொரு வானதூதர் விண்ணினின்று இறங்கி வரக்கண்டேன். மண்ணுலகு அவரது மாட்சியால் மிகுந்த ஒளி பெற்றது. அவர் உரத்த குரலில் கூறினதாவது :

'வீழ்ந்தது, வீழ்ந்தது, பாபிலோன் மாநகர், அது பேய்களின் உறைவிடமாயிற்று, அசுத்த ஆவியெல்லாம் நடமாடும் கூடமாயிற்று, அசுத்தமும் அருவருப்பும் மிக்க பறவைகள் எல்லாம் வாழும் கூடம் அதுவே.

வலிமை மிக்க வானதூதர் ஒருவர் எந்திரக் கல் போன்றதொரு பெரிய கல்லை எடுத்து, கடலில் எறிந்து சொன்னதாவது: "பாபிலோன் மாநகர் இவ்வாறே வீசி எறியப்படும்; இருந்த இடம் தெரியாமல் அது மறைந்துவிடும். யாழ் மீட்டுபவர், பாடகர், குழல் வாசிப்பவர், எக்காளம் ஊதுவோர் இவர்களின் ஓசை இனி உன்னிடம் ஒருபோதும் எழாது. எத்தொழில் துறையிலும் உள்ள தொழிலாளிகள் இனியொருபோதும் உன்னகத்தே காணப்படமாட்டார்கள். எந்திரக்கல் அரைக்கும் ஓசை இனி ஒருபோதும் உன்னகத்தே கேட்காது. விளக்கொளி உன்னிடம் இனி ஒருபோதும் ஒளிராது; மணவிழாவின் மங்கல ஒலி இனி ஒருபோதும் உன்னிடம் எழாது. உன் வணிகர்கள் மண்ணகத்தில் தனிச் சிறப்புற்று விளங்கினர்."

இதற்குப்பின் விண்ணில் பெரியதொரு கூட்டத்தின் முழக்கம் போன்ற பேரொலியைக் கேட்டேன். அக்கூட்டம், "அல்லேலூயா, மீட்பும் மகிமையும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன. ஏனெனில், அவரிடும் தீர்ப்புகள் உண்மையானவை, நீதியானவை. தன் விபசாரத்தால் மண்ணகத்தைச் சீரழித்த, பேர்போன வேசிக்கு அவர் தீர்ப்பிட்டார்; தம் ஊழியர்களின் இரத்தத்திற்காக அவளைப் பழி வாங்கினார்" என்று ஆர்ப்பரித்தது. மேலும் அக்கூட்டம், "அல்லேலூயா, அவளை எரிக்கும் புகை என்றென்றும் மேலே எழுகிறது" என்றது.

பின்பு வானதூதர் என்னிடம் சொன்னதாவது : "செம்மறியின் மணவிருந்துக்கு அழைக்கப்பட்டோர் பேறுபெற்றோர் என்று எழுது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99 : 1-2, 3, 4, 5 ( பல்லவி : திருவெளி 19 : 9அ )

பல்லவி : செம்மறியின் மணவிருந்துக்கு
அழைக்கப்பட்டோர் பேறுபெற்றோர்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியம் செய்யுங்கள்.
பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள்.
பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறிவியுங்கள்:
அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம்:
அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப்பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்;
இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள்:
அவரைப் போற்றிப் புகழுங்கள்,
அவருடைய பெயரை வாழ்த்துங்கள்.
பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர்,
அவர் இரக்கம் என்றென்றும் உள்ளது:
அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

அல்லேலூயா

லூக். 21 : 28

அல்லேலூயா. உங்கள் மீட்பு நெருங்கி வருகிறதென்று
நீங்கள் கண்டு தலை நிமிர்ந்து நில்லுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**புறவினத்தாரின் காலம் நிறைவேறுமட்டும் எருசலேம் மிதிபடும்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
21 : 20-28

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது:

எருசலேமைப் படைகள் முற்றுகையிடக் காணும்போது, அதன் அழிவு நெருங்கிவிட்டது என்று அறிந்து கொள்ளுங்கள். அப்போது யூதேயாவிலிருப்பவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகட்டும். நகருக்குள்

இருப்பவர்கள் வெளியேறட்டும். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் நகருக்குள்ளே வராதிருக்கட்டும். தண்டனையின் காலம் அது. எழுதியுள்ளதெல்லாம் அப்போது நிறைவேற வேண்டும்.

அந்நாட்களில் கருப்பவதிகளுக்கும் பாலூட்டுவோருக்கும் ஐயோ பரிதாபம்! ஏனெனில், நாட்டிலே மிகுந்த நெருக்கடியும், இம்மக்களின் மேல் தேவ கோபமும் உண்டாகும். இவர்கள் வாள் முனையில் மடிவார்கள்; புறநாடுகளுக்கெல்லாம் அடிமைகளாகக் கொண்டுசெல்லப்படுவார்கள். புறவினத்தாரின் காலம் நிறைவேறுமட்டும் எருசலேம் புறவினத்தாரால் மிதிபடும்.

கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அறிகுறிகள் தென்படும். மண்ணுலகில் கடற்கொந்தளிப்பின் முழக்கத்தினால் நாடுகள் குழப்பமடைந்து இடுக்கண் உறும். உலகத்திற்கு என்ன நேருமோ என்னும் ஏக்கத்தினாலும் அச்சத்தினாலும் மக்கள் உயிர்விடுவர். வானத்தின் படைகள் அசைக்கப்படும்.

அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மேகத்தின்மீது வருவதைக் காண்பார்கள். இவை நிகழத் தொடங்கும்போது, தலை நிமிர்ந்து நில்லுங்கள்; உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ, வானத்தின் மேகங்கள் மீது மனுமகனைப் போன்ற ஒருவர் வந்தார்.**

இறைவாக்ினரான தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 2-14

இரவில் நான் கண்ட காட்சி இதுவே: இதோ வானத்தின் நாற்புறத்துக் காற்றுகளும் மாபெருங்கடலைக் கொந்தளிக்கச் செய்தன. அப்போது வெவ்வேறு வடிவமுள்ள நான்கு பெரிய மிருகங்கள் கடலினின்று மேலெழும்பின. அவற்றுள் முதல் மிருகம் கழுகின் இறக்கைகளையுடைய சிங்கத்தைப் போல் இருந்தது; நான் பார்த்துக்கொண்டிருக்கையில் அதன் இறக்கைகள் பிடுங்கப்பட்டன; அது தரையினின்று தூக்கப்பட்டது; மனிதனைப்போல் இரண்டு கால்களில் நின்றது; அதற்கு மனித இதயமும் கொடுக்கப்பட்டது.

அடுத்தாற்போல், இதோ முற்றிலும் வேறானதொரு மிருகத்தைக் கண்டேன். கரடியைப் போன்ற அந்த மிருகம் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று, பற்களிடையே மூன்று விலாவெலும்புகளை வாயில் கவ்விக் கொண்டிருந்தது. 'எழுந்திரு, ஏராளமான இறைச்சியை விழுங்கு' என்று அதற்குச் சொல்லப்பட்டது. இன்னும் நோக்கினேன்: இதோ, வேங்கை போலும் வேறொரு மிருகம் காணப்பட்டது; அதன்மேல் பறவையின் இறக்கைகளைப்போல நான்கு இருந்தன; அந்த மிருகத்திற்கு நான்கு தலைகள் இருந்தன; அதற்கு வல்லமை கொடுக்கப்பட்டது.

இவற்றுக்குப் பிறகு, இரவின் காட்சியில் இதோ நான்காம் மிருகம் அச்சத்திற்குரியதாயும் வியப்பூட்டத்தக்கதாயும் மிகுந்த வலிமையுள்ளதாயும் இருக்கக்கண்டேன்; அதற்குப் பெரிய இரும்புப் பற்கள் இருந்தன; அது தான் விழுங்கியது போக மீதியை நொறுக்கிக் கால்களால் மிதித்துப் போடும்; இதற்குமுன் காணப்பட்ட மிருகங்களிலிருந்து இது வேறாகக் காணப்பட்டது; இதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தன. அந்தக் கொம்புகளை நான் கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ அவற்றின் நடுவில் வேறொரு சிறிய கொம்பு எழும்பிற்று; அதற்கு இடமளிக்கும் வகையில், முன்பு அதற்கிருந்த கொம்புகளுள் மூன்று பிடுங்கப்பட்டன; இதோ, அந்தக் கொம்பில் மனித கண்களைப் போலக் கண்களும், பெருமையானவற்றைப் பேசும் வாயும் இருந்தன.

நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப் பட்டன, நீண்ட ஆயுளுள்ளவர் ஆங்கமர்ந்தார்; அவருடைய ஆடை பனிபோல வெண்மையாயும், அதாவது தலைமயிர் தூய பஞ்சுபோலும் இருந்தன. அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும், அதன் சக்கரங்கள் எரிநெருப்பாயும் இருந்தன. அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாறு புறப் பட்டது, புறப்பட்டு விரைவாய்ப் பாய்ந்தோடிற்று; ஆயிரமாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள், கோடான கோடிப்பேர் அவர்முன் நின்றார்கள்; அறங்கூறவையம் நீதி வழங்க அமர்ந்தது, நூல்களும் திறந்து வைக்கப்பட்டன. அந்தக் கொம்பு பேசின பெருமைமிக்க சொற்களை முன்னிட்டு நான் கவனித்துப் பார்த்தேன்; நான் பார்த்துக் கொண்டிருக் கையில் அந்த மிருகம் கொலைசெய்யப்பட்டது; அதன் உடல் அழிந்து போயிற்று; நெருப்பினில் எரிக்கப்படும்படி போடப்பட்டது. மற்ற மிருகங்களின் வல்லமை பறிக்கப்பட்டது; அவற்றின் வாழ்நாட்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வரையறுக்கப்பட்டன.

இரவில் நான் கண்ட காட்சியாவது: இதா, வானத்தின் மேகங்கள் மீது மனுமகனைப்போன்ற ஒருவர் வந்தார்; நீண்ட ஆயுளுள்ளவரின் அருகில் வந்தார், அவர்முன் கொண்டுவரப்பட்டார். ஆட்சியும் மகிமையும் அரசுரிமையும் அவருக்குக் கொடுக்கப்பட்டன; எல்லா மக்களும் இனத்தாரும் மொழியினரும் அவருக்கு ஊழியம் செய்வர். அவருடைய ஆட்சி என்றென்றும் நீடிக்கும், அதற்கு என்றுமே முடிவிராது; அவருக்கு அளிக் கப்பட்ட அரசுரிமை என்றுமே அழிந்து போகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

தானி. 3 : 75, 76, 77, 78, 79, 80, 81

75 மலைகளே, குன்றுகளே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

76 தரையில் தளிர்ப்பவையே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

77 நீரூற்றுக்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

78 கடல்களே, ஆறுகளே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

79 திமிங்கிலங்களே, நீர்வாழ் உயிர்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

80 வானத்துப் பறவைகளே, அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

81 மிருகங்களே, ஆடுமாடுகளே, அனைவரும் ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில் : என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**இறந்தவர்களின் செயல்களுக்கேற்ப அவர்களுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது. புதிய எருசலேம் விண்ணினின்று இறங்கிவரக் கண்டேன்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் *20 : 1-4, 11-21 : 2*

அருளப்பன் என்னும் நான் வானதூதர் ஒருவர் விண்ணினின்று இறங்கி வரக் கண்டேன். பாதாளத்தின் திறவுகோலும் பெரியதொரு சங்கிலியும் அவர் கையில் இருந்தன. ஆதியில் தோன்றிய பாம்பாகிய பறவைநாகத்தை அவர் பிடித்தார். அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படும் அப்பாம்பைப் பிடித்து, ஆயிரம் ஆண்டளவு கட்டி வைத்தார். பின் அதைப் பாதாளத்தில் எறிந்து, குழியை அடைத்து, அதற்கு முத்திரையிட்டு, ஆயிரம் ஆண்டுகள் முடியும்வரை அது நாடுகளை வஞ்சிக்காமல் தடுத்தார். அதன்பின் சற்றுநேரம் அது அவிழ்த்து விடப்படும்.

பின்பு, நான் அரியணைகளைக் கண்டேன். அவற்றின்மீது சிலர் வீற்றிருந்தனர். தீர்ப்பிடும் அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. யேசுவுக்குச் சான்று பகர்ந்து கடவுளது வார்த்தையை அறிவித்ததற்காகத் தலை வெட்டுண்டவர்களின் ஆன்மாக்களையும் கண்டேன். அவர்கள் அவ்விலங்கையோ அதன் சிலையையோ தொழவில்லை. அதனுடைய அடையாளத்தை நெற்றியிலோ கையிலோ பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மீண்டும் உயிர்பெற்று, கிறிஸ்துவோடு ஆயிரம் ஆண்டு ஆட்சி புரிந்தார்கள்.

பின் வெண்மையான பெரியதோர் அரியணையையும் அதில் வீற்றிருப்பவரையும் கண்டேன். அவருடைய முன்னிலையில் மண்ணகமும் விண்ணகமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. இறந்திருந்த சிறியோர், பெரியோர் அனைவரும் அரியணைமுன் நிற்கக் கண்டேன். அப்போது ஏட்டுச் சுருள்கள் பிரிக்கப்பட்டன. வேறொரு சுருளும் பிரிக்கப்பட்டது. அது வாழ்வு நூல். இறந்தவர்களின் செயல்கள் அச்சுருள்களில் குறித்திருந்தன. அச்செயல்களுக்கேற்ப அவர்களுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது. கடல் தன்னகத்திருந்த இறந்தோரை வெளியேற்றியது. சாவும் பாதாளமும் தம்முள் அடைத்திருந்த இறந்தோரை வெளியேற்றின. அவர்கள் அனைவரும் தங்கள் செயல்களுக்கேற்ற தீர்ப்பைப் பெற்றனர். சாவும் பாதாளமும் நெருப்புக் கடலில் எறியப்பட்டன. இந்நெருப்புக் கடலே இரண்டாவது சாவு. வாழ்வு நூலில் பெயர் எழுதப்பட்டிராத எவனும் இந்நெருப்புக் கடலில் எறியப்பட்டான்.

பின்பு நான் புதிய வானகமும் புதிய வையகமும் கண்டேன். முதலிலிருந்த வானகமும் வையகமும் மறைந்துபோயின. கடலும் இல்லாமல் போயிற்று.

அப்போது புதிய எருசலேம் ஆகிய பரிசுத்த நகரம் கடவுளிடமிருந்து விண்ணினின்று இறங்கி வரக் கண்டேன். மணமகனுக்கென அலங்கரிக்கப்பட்ட மணமகளைப்போல் அது மலர்ந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 83 : 2, 3, 4-5b & 7 a ( பல்லவி : திருவெளி. 21 : 3 )

பல்லவி : இதோ கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது.

2 என் ஆன்மா ஆண்டவருடைய ஆலய முற்றங்களை
விரும்பித் தேடிச் சோர்ந்துபோகின்றது.
என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனை
நினைந்து களிகூர்கின்றன. பல்லவி

3 அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத்
தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்தது :
சேனைகளின் ஆண்டவரே, என் அரசே, என் இறைவா,
உம் பீடங்களுள்ள இடத்திலே கிடைத்தது. பல்லவி

4 ஆண்டவரே, உம் இல்லத்தில் வாழ்வோர் பேறு பெற்றோர்.
எந்நாளும் உம்மைப் புகழ்வார்கள்.
5 உம்மிடம் உதவி பெறுபவன் பேறு பெற்றவன்.
7 அவன் வலிமைமேல் வலிமைபெற்று யாத்திரை செய்வான். பல்லவி

அல்லேலூயா லூக். 21 : 28

அல்லேலூயா. உங்கள் மீட்பு நெருங்கி வருகிறதென்று
நீங்கள் கண்டு தலைநிமிர்ந்து நில்லுங்கள்.
அல்லேலூயா.

அதன்பின்னர், மற்ற மிருகங்களினும் வேறுனதாகக் காணப்பட்டதும், மிகுந்த அச்சத்திற்குரியதும், இருப்புப் பற்கள், நகங்கள் கொண்டதாய், தான் தின்று நொறுக்கியது போக மீதியைக் கால்களால் மிதித்துப் போட்டதுமான அந்த நான்காம் மிருகத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன்; அதன் தலையில் இருந்த பத்துக் கொம்புகளைப் பற்றியும், மூன்று கொம்புகள் விழுந்து போக அவற்றினிடத்தில் எழும்பினதும், கண்களும், பெருமையானவற்றைப் பேசும் வாயும் கொண்டிருந்ததும், மற்றவர்களைக் காட்டிலும் பெரியதுமாயிருந்த அந்தக் கொம்பைப் பற்றியும் தெரிந்துகொள்ள விரும்பினேன். நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதோ அந்தக் கொம்பு பரிசுத்தர்களுக்கு எதிராய்ப் போர் புரிந்து அவர்களை வென்றது; நீண்ட ஆயுளுள்ளவர் வந்து, உன்னதருடைய பரிசுத்தர்களுக்குத் தீர்ப்புச் சொல்லும்வரை போர் நடந்தது; அதன்பின் காலம் வந்தது; அப்போது பரிசுத்தர்கள் அரசுரிமை பெற்றுக் கொண்டார்கள்.

அவர் இன்னும் தொடர்ந்து பேசினுர்: 'அந்த நான்காம் மிருகம்; உலகில் தோன்றப்போகும் நான்காம் அரசைக் குறிக்கிறது; இது மற்றெல்லா அரசுகளையும்விட வேறுபட்டதாகும். உலக முழுவதையும் அது விழுங்கிவிடும், மிதித்து நொறுக்கிவிடும்; அந்தப் பத்துக் கொம்புகள்: இந்த அரசினின்று பத்து மன்னர்கள் எழும்புவர்; அவர்களுக்குப்பிறகு மற்றொருவன் எழும்புவான்; முந்தினவர்களைவிட இவன் வேறுபட்டவனுய் இருப்பான், அவர்களுள் மூவரைத் தனக்குக் கீழ்ப்படுத்துவான். அவன் உன்னதர்க்கு எதிரான சொற்களைப் பேசுவான், உன்னதரின் பரிசுத்தர்களைத் துன்புறுத்துவான்; நாள் கிழமைகளையும் சட்டத்தையும் மாற்றப் பார்ப்பான், அவர்களோ ஒருகாலம், இருகாலம், அரைகாலம் அளவும் அவனுடைய கையில் விடப்படுவர்.

ஆனுல் அறங்கூறவையம் நீதி வழங்க அமரும், அவனுடைய அரசுரிமை அவனிடமிருந்து பறிக்கப்படும்; முடிவுவரை ஒடுக்கப்பட்டு அழிந்துபோகும். அரசும் அரசுரிமையும், வானத்தின்கீழ் எங்கணுமுள்ள அரசுகளின் மகிமை பெருமையும் உன்னதரின் பரிசுத்தர்களுடைய இனத்தார்க்குத் தரப்படும்; அவர்களுடைய அரசு என்றென்றும் நிலைக்கும் அரசு, அரசர்கள் அனைவரும், அவர்களுக்குப் பணிந்து கீழ்ப்படிவர்.'

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

82 மனுமக்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

83 இஸ்ராயேல் ஆண்டவரைப் புகழ்வதாக!

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துவதாக!

84 ஆண்டவரின் குருக்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

85 ஆண்டவரின் ஊழியர்களே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

86 நீதிமான்களின் உள்ளங்களே, ஆவிகளே, ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

87 இதயத்தில் தூய்மையும் தாழ்ச்சியும் உள்ளவர்களே,
ஆண்டவரைப் புகழுங்கள்,

பதில்: என்றென்றும் அவரை வாழ்த்தி உயர்த்துங்கள்.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*அங்கு இரவே இராது; ஆண்டவரே அவர்கள் மீது ஒளிர்வார்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம்

அருளப்பனாகிய எனக்கு வானதூதர் ஒருவர் ஆற்றைக் காண்பித்தார். அது பளிங்குபோல் மின்னிற்று. அது கடவுளும் செம்மறியானவரும் வீற்றிருக்கும் அரியணையிலிருந்து நகரின் நடுவே

பாய்ந்தோடியது. ஆற்றின் இரு பக்கங்களிலும் வாழ்வின் மரமிருந்தது. மாதத்திற்கு ஒரு முறையாக அது ஆண்டுதோறும் பன்னிருமுறை கனிகள் தரும். அதன் இலைகள் மக்கள் இனங்களைக் குணப்படுத்தக்கூடியவை. சாபத்துக்குள்ளானதெதுவும் அங்கு இல்லை. கடவுளும் செம்மறியானவரும் வீற்றிருக்கும் அரியணை அங்கே இருக்கும். அவருடைய ஊழியர்கள் அவரைத் தொழுவார்கள். அவரது முகத்தைக் காண்பார்கள். அவரது பெயர் அவர்கள் நெற்றியில் எழுதியிருக்கும். அங்கு இரவே இராது. விளக்கின் ஒளியோ கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஆண்டவராகிய கடவுளே அவர்கள்மீது ஒளிவீசுவார். அவர்களோ என்றென்றும் அரசாள்வார்கள்.

அதன்பின் அவர் என்க்குச் சொன்னது : "இவ்வார்த்தைகள் நம்பத் தக்கவை, உண்மையானவை. இறைவாக்கினருக்கு ஆவியைத் தரும் கடவுளாகிய ஆண்டவர் விரைவில் நிகழ வேண்டியவற்றைத் தம் ஊழியர்களுக்கு வெளிப்படுத்தத் தம் தூதரை அனுப்பினார். இதோ, நான் விரைவாகவே வருகிறேன்." இந்நூலிலுள்ள இறைவாக்குகளைக் கடைப்பிடிப்பவர் பேறுபெற்றவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 94 : 1-2, 3-5, 6-7 (பல்லவி : 1 கொரி 16 : 22 & திருவெளி. 22 : 20 b)*

பல்லவி : **மாரனா தா ! ஆண்டவராகிய யேசுவே, வாரும் !**

1 வாருங்கள், ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம்.
மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்.
இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

3 ஏனெனில், ஆண்டவர் மகத்துவமிக்க கடவுள் :
தேவர் அனைவருக்கும் பேரரசர்.
4 பூமியின் ஆழ்ந்த பகுதிகள் அவர் கையில் உள்ளன :
உன்னத மலைகளும் அவருக்கு உரியவையே.
5 கடலும் அவருடையதே, அவரே அதைப் படைத்தவர் :
உலர்ந்த தரையும் அவருடையது, அவர் கரங்களே அதை உருவாக்கின.
பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்.
நம்மைப் படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள் ;
அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. பல்லவி

அல்லேலூயா லூக். 21 : 36

அல்லேலூயா. மனுமகன் முன் நிற்க வலிமையுள்ளவர்களாய்
இருக்கும்படி நீங்கள் எந்நேரமும் செபித்து,
விழிப்பாயிருங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நிகழப்போகும் இவை அனைத்திலுமிருந்து தப்பித்துக்கொள்ள, நீங்கள் விழிப்பாயிருங்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

21 : 34-36

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :

"களியாட்டத்தாலும் குடிவெறியாலும் உலகக் கவலையாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடியும், அந்நாள் எதிர்பாராமல் கண்ணிபோல் உங்களைச் சிக்க வைக்காதபடியும், எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், மண்ணுலகெங்கும் வாழும் அனைவர் மேலும் அந்நாள் வந்து விடியும். நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டு மனுமகன் முன் நிற்க நீங்கள் வலிமையுள்ளவர்களாய் இருக்கும்படி எந்நேரமும் செபித்து விழிப்பாயிருங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஆண்டின் பொதுக் காலத்தில் வரும் ஆண்டவரின் பெருவிழாக்கள்.

## பரிசுத்த ஆவி விழாவுக்குப் பின்வரும் ஞாயிறு.

# பரிசுத்த திரித்துவம் பெருவிழா

முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அருள்நோக்கும் தயவும் பொருந்திய ஆண்டவராகிய கடவுளே.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 34: 4b-6, 8-9

*அந்நாட்களில் :*

மோயீசன் அதிகாலையில் எழுந்திருந்து, ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டிருந்தபடியே பலகைகளைத் தம்முடன் எடுத்துக்கொண்டு சீனாய் மலையில் ஏறினார்.

ஆண்டவர் மேகத்தில் இறங்கினபோது, மோயீசன் ஆண்டவருடைய (திருப்) பெயரைக் கூவியழைத்து, அவரோடு நின்றுகொண்டார். அவர் தம் முன் கடந்து போகையில் மோயீசன் அவரை நோக்கி: எல்லா அதிகாரமும் கொண்டுள்ள ஆண்டவராகிய கடவுளே, அருள்நோக்கும் தயவும் பொறுமையும் அளவில்லாத இரக்கமும் பொருந்திய கடவுளே, என்று கூறி, விரைந்து, பணிந்து, குப்புறவிழுந்து தொழுது :

ஆண்டவரே, உமது முன்னிலையில் அடியேனுக்கு அருள் கிடைத்த தாயின், (இம் மக்கள் வணங்காக் கழுத்துடையவர்களாகையால்) நீர் எங்களுடன் எழுந்தருளவும், எங்கள் அக்கிரமங்களையும் பாவங்களையும் போக்கவும், அடியோர்களை உரிமையாக்கிக் கொள்ளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

தானி 3 : 52, 53, 54, 55, 56

52 "எங்கள் தந்தையரின் இறைவனாகிய ஆண்டவரே,
நீர் புகழ் பெறுவீராக!
உமது மகிமையுள்ள திருப்பெயர் புகழப்படுவதாக!

பதிலுரை : என்றென்றும் போற்றப்படவும் உயர்த்தப்படவும் கடவதாக!

53 உமது மகிமையுள்ள பரிசுத்த கோவிலில் நீர் புகழப்படுவீராக!

பதிலுரை : என்றென்றும் எல்லார்க்கும் மேலாக
வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

54 உமது அரசின் அரியணையின்மேலே நீர் புகழப்படுவீராக!

பதிலுரை : என்றென்றும் வாழ்த்தும் உயர்ச்சியும் பெறுவீராக!

55 கெருபீம்கள்மேல் அமர்ந்து பாதாளத்தைக் காண்கிறவரே,
நீர் புகழப்படுவீராக!

பதிலுரை : என்றென்றும் போற்றுதலும் உயர்ச்சியும் பெறுவீராக!

56 வானகத்திலே நீர் புகழப்படுவீராக!

பதிலுரை : என்றென்றும் வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

## இரண்டாம் வாசகம்

*யேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும்,
பரிசுத்த ஆவியின் நட்புறவும்,*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 13 : 11-13

சகோதரர்களே :

மகிழ்ச்சியோடு இருங்கள் : ஞான நிறைவடைய முயலுங்கள் : என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்; ஒன்றுபட்டு வாழுங்கள். சமாதானமாய் இருங்கள். அப்போது அன்புக்கும் சமாதானத்துக்கும் ஊற்றாகிய கடவுள் உங்களோடு இருப்பார். பரிசுத்த முத்தங்கொடுத்து, ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்: இறைமக்கள் அனைவரும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.

ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவியின் நட்புறவும் உங்களனைவரோடும் இருப்பதாக!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா திருவெளி 1:8

அல்லேலூயா. இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவராகிய கடவுள், தந்தை, மகன், பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே.

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3 : 16-18

அக்காலத்தில்: யேசு நிக்கோதேமுவிடம் கூறியதாவது:

"தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அதற்குத் தீர்ப்பளிக்க அன்று, அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே. அவரில் விசுவாசங் கொள்பவன் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; விசுவாசங் கொள்ளாதவனோ ஏற்கெனவே தீர்ப்புப் பெற்று விட்டான். ஏனெனில், அவன் கடவுளின் ஒரே பேறான மகனின் பெயரில் விசுவாசங் கொள்ளவில்லை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள்: அவரைத் தவிர வேறொருவருமில்லை.

உப ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 32-34, 39-40

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:

கடவுள் உலகிலே மனிதனைப் படைத்த நாள்முதல் உனக்கு முற்பட்ட பழைய நாட்களில், வானத்தின் ஒரு கடைசி எல்லை தொடங்கி மறு எல்லை வரையிலுமுள்ள எவ்விடத்திலேனும், இப்படிப்பட்ட காரியம்

நடந்ததுண்டோ அல்லது எப்போதேனும் கேள்விப்பட்டதுண்டோ என்று விசாரித்துக் கேள். நெருப்பின் நடுவிலிருந்து பேசின கடவுளின் குரலொலியை நீ சாகாமல் கேட்டதுபோல யாதொரு மக்களேனும் கேட்டதுண்டோ? அல்லது உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம், கடவுள் மற்ற மக்களுக்குள்ளே ஓர் இனத்தைத் தமக்கென்று, சோதனைகளாலும் அடையாளங்களாலும் அற்புதங்களாலும் போரினாலும் வலிமையினாலும் ஓங்கிய கையாலும் மிகவும் பயங்கரமான காட்சிகளாலும் தேர்ந்தெடுத்துக்கொள்ள, வகை செய்ததுண்டோ என்று நீ விசாரித்துப்பார்.

ஆகையால், மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் கடவுளாகிய ஆண்டவரே கடவுள்; அவரைத் தவிர வேறொருவருமில்லை என்பதை நீ இன்று அறிந்து உன் இதயத்தில் சிந்திக்கக் கடவாய். உனக்கும், உனக்குப் பின் உன் புதல்வருக்கும் நன்மையாகும் பொருட்டும், உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ நெடுங்காலம் வாழும் பொருட்டும், நான் உனக்குக் கற்பிக்கிற அவரது கட்டளையையும் சட்டங்களையும் கைக்கொண்டு ஒழுகக் கடவாய் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 4-5, 6 & 9, 18-19, 20 & 22 (பல்லவி : 12b)

பல்லவி : ஆண்டவர் தம் உரிமைப் பொருளாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது:
அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்.
அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது.
பல்லவி

6 ஆண்டவருடைய வார்த்தையால் வானங்கள் உண்டாயின:
அவரது சொல்லால் வான் அணிகள் எல்லாம் உருவாயின.
9 ஏனெனில், அவர் ஒரு வார்த்தை சொல்லவே, எல்லாம் உண்டாயின.
அவர் கட்டளையிடவே அவை உருவாயின.
பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்:
தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும்,
பஞ்சக் காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார்.
பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது:
அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
22 ஆண்டவரே, உம் இரக்கம் எம் மீது இருப்பதாக:
நாங்கள் உம்மை நம்பியிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பிள்ளைகளாக்கும் தேவ ஆவியைப் பெற்றுக் கொண்டீர்கள்;
அந்த ஆவியினால் நாம் 'அப்பா, தந்தாய்' எனக் கூப்பிடுகிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *8 : 14-17*

சகோதரர்களே:

கடவுளின் ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ, அவர்களே கடவுளின் மக்கள். நீங்கள் பெற்றுக்கொண்டது, திரும்பவும் அச்சத்திற் குள்ளாக்கும் அடிமையுள்ளம் அன்று; பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள். அந்த ஆவியினால் நாம், "அப்பா, தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம். நாம்இவ்வாறு கூப்பிடும் போது நம் உள்ளத்தோடு தேவ ஆவியே நாம் கடவுளின் பிள்ளைகள் என்று சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமையாளர்களுமாய் இருக்கிறோம். ஆம், கடவுளின் செல்வத்திற்கு உரிமையாளர்கள்; கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்கள்; ஆனால், அவருடைய பாடுகளில் நாம் பங்கு பெறவேண்டும்; அப்போது தான் அவரோடு மகிமையிலும் பங்கு பெறுவோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா திருவெளி. 1 : 8

அல்லேலூயா. இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவராகிய கடவுள், தந்தை, மகன், பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 28: 16-20

அக்காலத்தில்:

பதினொரு சீடரும் தங்களுக்கு யேசு குறிப்பிட்டிருந்த கலிலேயாவின் மலைக்குச் சென்றனர். அவரைக் கண்டு பணிந்தனர். சிலரோ ஐயமுற்றனர்.

யேசு அவர்களை அணுகிக் கூறியது: "விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்.

இதோ! நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உலகம் உருவாகு முன்னரே ஞானம் கருத்தரிக்கப்பட்டிருந்தது.**

பழமொழி ஆகமத்திலிருந்து வாசகம் 8 : 22-31

இறைவனின் ஞானம் கூறுவதாவது:

ஆண்டவர் தம் வழிகளின் தொடக்கத்திலேயே, ஆதியில் எதையும் படைக்கு முன்னரே, என்னை உரிமை கொண்டிருந்தார்.

ஆதியில், பூமி உண்டாகு முன்னமே, நித்தியம் தொட்டு நான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன். பாதாளங்கள் இன்னமும் இருக்கவில்லை; நானே ஏற்கெனவே கருத்தரிக்கப்பட்டிருந்தேன். நீரூற்றுகள் இன்னும் புறப்படவில்லை; பாரச் சுமையுள்ள மலைகளும் இன்னும் உண்டாகவில்லை; நானே குன்றுகளுக்கு முன்னமே பிறப்பிக்கப்பட்டிருந்தேன். இன்னும் நிலத்தையும் ஆறுகளையும் உலகின் துருவங்களையும்(கடவுள்) படைக்கவில்லை.

அவர் வான மண்டலங்களை நிறுவ நினைக்கையிலும் நான் கூட விருந்தேன். அவர் நிச்சயமான சட்டத்தாலும் எல்லைகளாலும் பாதாளங்களைச் சுற்றி அடைக்கையிலும், அவர் மேலே வானத்தை உறுதிப்படுத்தி நீர்த்திரள்களை முறையாக நிறுத்தி வைக்கையிலும், கடலுக்குக் கோடி கட்டித் தன் எல்லையைக் கடக்காதபடி நீருக்குச் சட்டம் அமைக்கையிலும், பூமியின் அடித்தளங்களை நிறுத்திடுகையிலும், அவரோடுதானே நான் எல்லாவற்றையும் சீர்ப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தேன். நாள்தோறும் மகிழ்ந்துகொண்டும், எக்காலத்தும் அவர்முன்பாக விளையாடிக்கொண்டும், எல்லா உலகத்திலும் விளையாடிக் கொண்டும் இருந்தேன். என் மகிழ்ச்சியோ மனித மக்களுடன் இருத்தலேயாம்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 8 : 3-4, 5-6, 7-8 ( பல்லவி : 1 a )*

பல்லவி : ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர்
உலகெங்கும் எத்துணை வியப்புக்குரியது!

3 உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை, நீர் அமைத்த நிலவை,
விண்மீன்களைக் காணும்போது;
4 மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்?
அவனைப்பற்றி அக்கறை கொள்ள அவன் யார் என்று
சொல்லத் தோன்றுகிறது. பல்லவி

5 வான தூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்;
மாண்பையும் பெருமையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.
6 உம் படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்:
அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். பல்லவி

7 ஆடு மாடுகள், வெளியில் உலவும் விலங்குகள் அனைத்தும்
அவனுக்குப் பணியச் செய்தீர்;
8 வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள்;
அதில் நீந்தும் அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். பல்லவி

## நற்செய்தி வாசகம்

**தந்தையுடையதெல்லாம் என்னுடையதே ; ஆவி எனக்குள்ளதில் இருந்து பெற்றுக்கொண்டு உங்களுக்கு அறிவிப்பார்.**

அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
16 : 12-15

அக்காலத்தில் : யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது :

"நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவை இன்னும் பல உண்டு. ஆனால் அவற்றை இப்பொழுது உங்களால் தாங்கமுடியாது. உண்மையின் ஆவியானவர் வந்தபின், நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார். அவர் பேசுவதைத் தாமாகப் பேசுவதில்லை; கேட்பதையே பேசுவார். வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள்ளதிலிருந்தே பெற்றுக்கொள்வதால் அவர் என்னை மகிமைப்படுத்துவார். தந்தையுடையதெல்லாம் என்னுடையதே. எனவேதான் 'உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள்ளதிலிருந்து பெற்றுக்கொள்கிறார்' என்றேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

மிகத் தூய திரித்துவத்தின் விழாவுக்குப் பின்வரும் ஞாயிறு

## கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தம்

பெருவிழா

முதல் ஆண்டு

முதல் வாசகம்

உபாகமத்திலிருந்து வாசகம் — உப 8: 2-3, 14b-16a

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது :

"உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னைப் பணித்து, உன்னைப் பரிசோதித்து, தம்முடைய கட்டளைகளை நீ அனுசரிப்பாயோ அனுசரிக்க மாட்டாயோவென்று உன் இதயத்திலுள்ளதை நீயே அறியும்படியாக, நாற்பதாண்டளவாய்ப் பாலைவனத்திலே உன்னை நடத்திவந்த எல்லா வழிகளையும் நினைப்பாயாக.

(உன்னைத்) அவர் உன்னைப் பசியினால் வருத்தினார். பின்பு நீயும் உன் முன்னோரும் அறிந்திராத மன்னாவை உனக்கு அளித்தார். அதனால் : மனிதன் அப்பத்தினால் மட்டுமே அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் என்று உனக்குக் காண்பித்தருளினார்.

உன்னை எகிப்திலும் அடிமைத்தன வீட்டிலுமிருந்து புறப்படச் செய்த உன் கடவுளாகிய ஆண்டவரை மறவாதே. அவரன்றோ கொள்ளி வாய்ப் பாம்புகளும் திப்சாஸ் என்னும் நச்சுப் பாம்புகளும் தேள்களும் உள்ள, பயங்கரமான பெரிய நீரில்லாப் பாலைவழியாய் உன்னை நடத்தி அழைத்து வருகையில், மிகக் கடினமான கல் மலையிலிருந்து நீரருவிகள் புறப்படச் செய்து, உன் முன்னோர்கள் அறிந்திராத மன்னாவைக்கொண்டு உனக்கு உணவூட்டினார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147 : 1-2, 3-4, 8-9 (பல்லவி : 1 a)

பல்லவி : எருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்.

அல்லது : அல்லேலூயா.

1 எருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்:
சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்:
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்:
கோதுமை வளத்தால் உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார்.
விரைந்து செல்கிறது அவருடைய வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார்.
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை :
தம் கட்டளைகளை அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**அப்பம் ஒன்றே ; ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாயுள்ளோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 10 : 16-17

சகோதரர்களே :

திருக்கிண்ணத்தை ஏந்தி நாம் இறைபுகழ் கூறுகிறோமே ; அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அன்றோ? நாம் அப்பத்தைப் பிட்கிறோமே; அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அன்றோ? அப்பம் ஒன்றே: ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்; ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு பெறுகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

தொடர் பாடல்

[illegible]

1 சீயோனே, உன் மீட்பரைப் புகழ்வாய்,
கீதமும் பாடலும் இசைத்தே உந்தன்
ஆயரை, தலைவரைப் புகழ்வாயே.

2 எல்லாப் புகழும் கடந்தவர் அவரே;
இயலாது உன்னால் அவரைப் புகழ,
இயன்ற மட்டும் துணிந்திடுவாயே.

3 உயிர்மிகு அப்பம் உயிர்தரும் உணவாம்
போற்றுதற்குரிய இப்பொருளை
இன்று சிந்தனைக்கு ஏற்ற பொருளே.

4 தூய விருந்தின் பந்தியில் அன்று
பன்னிரு சோதரர் கூட்ட மதற்கே
கிடைத்த உணவிது; ஐயமே யில்லை.

5 ஆர்ப்பரிப் புடனே இனிமையும் கலந்த
நிறைபுகழ்க் கீதம் ஒலிப்பதோ டன்றி
மகிழ்வும் மனதில் பெருகிடல் தகுமே.

6 பெருஞ்சிறப்பான திருவிழா இன்றே
இத்திரு விருந்தை முதன் முதலாக
நிறுவிய நாளை நினைவுகூர்கின்றோம்.

7 புதிய பேரரசின் இத்திருப் பந்தியில்
புதிய ஏற்பாட்டின் புதுத்தனிப் பாஸ்கா
பழைய பாஸ்காவை முடிவுறச் செய்யும்.

8 புதுமை பழமையைப் போக்குதல் காணீர்,
உண்மை நிழலை ஓட்டுதல் காணீர்
ஒளியோ இரவை ஒழித்தல் காணீர்.

9 திருவிருந் ததனில் நிறைவேற்றியதைத்
தம் நினைவாகச் சீடரும் செய்யக்
கட்டளை தந்தார் கிறிஸ்து பெருமான்.

10 இருக் கட்டளையால் அறிவுரை பெற்று
அப்பமும் இரசமும் மீட்புக்குரிய
பலிப்பொருளாக அர்ச்சிக்கின்றோம்.

11 அப்பம் மாறி அவர் ஊன் ஆவதும்,
இரசமது மாறி இரத்தமாவதும்
கிறிஸ்துவர்க் கருளிய உண்மையாமே.

12 புலனையும் அறிவையும் முற்றும் கடந்து,
இயற்கை முறைமைக் கப்பால், உள்ளத்தை
உறுதியோ டேற்கும் உயிர்விசு வாசம்.

13 அப்பமும் இரசமும் குணங்களில் வேறாய்
அவற்றின் தோற்றம் மட்டுமே யிருக்க
அற்புத உட்பொருள் மறைவாய் உள்ளதே.

14 ஊனே உணவு, இரத்தமே பானம்
இருவித குணங்கள் ஒவ்வொன் றுள்ளும்
கிறிஸ்து முழுவதும் உண்டெனக் கொள்வீர்.

15 உண்பவர் அவரைப் பிய்ப்பதுமில்லை.
உடைப்பதுமில்லை, பிரிப்பதுமில்லை.
அவரை முழுதாய் உண்கின் றனரே.

16 உண்பவர் ஒருவரோ, ஆயிரம் பேரோ,
ஒருவர் உண்பதையே அனைவரும் உண்பர்;
உண்பதால் என்றுமே தீர்வதுமில்லை.

17 நல்லவர் உண்பர், தீயரும் உண்பர்
அதனால் அவர் பெறும் பயன் வெவ்வேறாம்
முன்னவர் வாழ்வார், பின்னவர் அழிவார்.

18 நல்லோர் வாழ்வார், தீயோர் அழிவார்:
உணவொன்றாயினும் எத்துணை வேறாம்
பயன்விளைத் திடுமெனப் பகுத்துணர் வாயே.

19 அப்ப மதனைப் பிட்ட பின்னரும்
முழுமையில் எதுவோ அதுவே பகுதியில்
உளதாம், அறிந்திடு, ஐயமே வேண்டா.

20 உட்பொருள் பிளவு படுவதே யில்லை;
குணத்தில் மட்டும் பிடப்படுமே
அவரது நிலையும் உருவும் குறையா.

21 வானவர் உணவிதோ வழிநடப் போர்க்கும்
உணவா யிற்றே; மக்களின் உணவை
நாய்கட் கெறிதல் நலமா காதே.

22 ஈசாக் பலியிலும் பாஸ்கா மறியிலும்
நம் முன்னோர்க்குத் தந்த மன்னாவிலும்
இந்தப் பலியின் முன்குறி காண்பீர்.

23 நல்ல ஆயனே, உண்மை உணவே,
யேசுவே, எம்மேல் இறங்கிடு வீரே,
எமக்குநல் அமுதே ஊட்டிடுவீரே.

24 நும்திரு மந்தை எம்மைக் காத்து,
நித்திய வாழ்வினர் வாழும் நாட்டில்
நலன்கள் அனைத்தும் காணச் செய்வீர்.

25 அனைத்தும் அறிவோய், அனைத்தும் வல்லோய்,
மாந்தர்க் கிங்கு உணவினைத் தருவோய்,
அங்கும் பந்தியில் அமரச் செய்வாய்.

26 அமர்ந்து நும்முடன் பங்கினைக் கொள்ளவும்,
வான்திருக் கூட்டத்தின் நட்பினராகவும்,
அருள்வீர், ஆமென், அல்லேலூயா.

அல்லேலூயா

அரு. 6 : 51-52

அல்லேலூயா. வானின்று இறங்கி வந்த உயிருள்ள அப்பம் நானே: இதை யாராவது உண்டால், அவன் என்றுமே வாழ்வான், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

என் தசை மெய்யான உணவு,
என் இரத்தம் மெய்யான பானம்.

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

6 : 51-58

அக்காலத்தில்: யேசு யூதமக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது:

"இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே" என்றார்.

"நாம் உண்பதற்கு இவர் தம் தசையை எவ்வாறு அளிக்கக்கூடும்?" என்று யூதர் தமக்குள் வாதித்துக்கொண்டிருக்க, யேசு அவர்களை நோக்கிச் சொன்னதாவது: "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுமகனின் தசையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்குள் உயிர் இராது. என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன். என் தசை மெய்யான உணவு. என் இரத்தம் மெய்யான பானம். என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன். உயிருள்ள தந்தை என்னை அனுப்பினார், நானும் அவரால் வாழ்கின்றேன். அதுபோல என்னைத் தின்பவனும் என்னால் வாழ்வான். வானின்று இறங்கிவந்த உணவு இதுவே, இது நம் முன்னோர் உண்ட உணவுபோல் அன்று. அவர்கள் அதை உண்டார்கள், ஆயினும் இறந்தார்கள். இவ்வுணவைத் தின்பவனோ என்றுமே வாழ்வான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன்படிக்கையின் இரத்தம் இதுவே.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 24 : 3-8

அந்நாட்களில்:

மோயீசன் வந்து ஆண்டவருடைய எல்லா வாக்கியங்களையும் நீதிச் சட்டங்களையும் விவரித்துச் சொன்னார். அதைக் கேட்ட மக்கள் எல்லாரும்: ஆண்டவர் திருவுளம்பற்றின எல்லா வாக்கியங்களின்படியும் நடப்போம் என்று ஒரே குரலாய் மறுமொழி சொன்னார்கள்.

மோயீசனோ, ஆண்டவர் சொன்ன வாக்கியங்களை யெல்லாம் எழுதி வைத்து, பின், காலையில் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலிப்பீடத்தைக் கட்டி, இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் நினைவாக பன்னிரண்டு தூண்களை நிறுத்தினார். இஸ்ராயேல் மக்களில் இளைஞர்களை அனுப்பினார். அவர்கள் ஆண்டவருக்குத் தகனப் பலிகளையும், சமாதானப் பலிகளாகக் கன்றுக் குட்டிகளையும் பலியிட்டார்கள்.

அப்போது மோயீசன் இரத்தத்தில் ஒரு பாதியை எடுத்துப் பாத்திரங்களில் வார்த்து, மற்றப் பாதியைப் பலிபீடத்தின்மேல் வார்த்தார். பின் உடன்படிக்கையின் புத்தகத்தை எடுத்து மக்கள் கேட்க வாசித்தார். அவர்கள்: ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம் என்றார்கள்.

அப்பொழுது மோயீசன் பாத்திரத்தில் வார்த்து வைத்திருந்த இரத்தத்தை மக்கள்மேல் தெளித்து: இந்த எல்லா வார்த்தைகளின்படியும் ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங் 115: 3-4, 6-7, 8-9 (பல்லவி: 4)

பல்லவி: மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து,
ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்.

அல்லது: அல்லேலூயா.

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் என்ன கைம்மாறு செய்வேன்?
4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து,
ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

6 ஆண்டவர் தம் அடியாரின் மரணம்
அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது.
7 ஆண்டவரே, நான் உம் ஊழியன்; உம் அடியேன்;
உமது அடியாளின் மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர். பல்லவி

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்;
ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன்.
9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும்
அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்துவின் இரத்தம் நமது மனச்சாட்சியைத் துன்பப்படுத்துகின்றது.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 9 : 11-15

சகோதரர்களே :

கிறிஸ்து வரப்போகும் நன்மைகளுக்குத் தலைமைக் குருவாக வந்துள்ளார். அவர் முன்னதைவிட மேலானதும் நிறைவுள்ளதுமான கூடாரம் ஒன்றைக் கடந்து ஒரே முறையில் எக்காலத்திற்குமே தூயகத்தில் நுழைந்து விட்டார். இந்தக் கூடாரமோ மனிதரின் கையால் அமைக்கப் பட்டதன்று. அதாவது, இந்தப் படைப்புலகைச் சார்ந்ததன்று. ஆட்டுக் கடாக்கள், இளங் காளைகளின் இரத்தத்தைக் கொண்டு கிறிஸ்து தூயகத்தில் நுழையவில்லை. தம் சொந்த இரத்தத்தைக்கொண்டே அதில் நுழைந்தார். இவ்வாறு நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச் செய்தார்.

உண்மையில் ஆட்டுக் கடாக்கள், காளைமாடுகள் இவற்றின் இரத்த மும், கிடாரியின் சாம்பலும் மாசுள்ளவர்கள்மீது தெளிக்கப்படும் பொழுது, உடலின் தூய்மையைப் பொருத்தவரை, அவர்களைப் பரிசுத்த ராக்குமெனில், முடிவில்லாத் தேவ ஆவியால் தம்மையே மாசற்ற பலியாய்க் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் இரத்தம், நாம் உயிருள்ள கடவுளுக்கு வழிபாடு செலுத்தும்படி நம்முடைய மனச்சாட்சி யைச் சாவுக்குரிய செயல்களிலிருந்து எவ்வளவோ மேலாகத் தூய்மைப் படுத்தும் அன்றோ ?

முந்தின உடன்படிக்கையின் காலத்தில் செய்யப்பட்ட குற்றங்களி லிருந்து மக்களை விடுவிக்கக் கிறிஸ்து இறந்தார். இங்ஙனம் சாவொன்று நிகழ்ந்துள்ளதால், அழைக்கப்பட்டவர்கள் புதிய உடன்படிக்கையால் வாக்களிக்கப்பட்ட முடிவில்லா உரிமையைப் பெற முடிந்தது. இவ்வகையில் அவர் புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக இருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

விருப்பம்போல், தொடர்கீதம் ("சீயோனே, உன் மீட்பரை," பக்கம் 1026) சொல்லலாம்.

அல்லேலூயா அரு. 6 : 51-52

அல்லேலூயா. வானின்று இறங்கிவந்த உயிருள்ள அப்பம் நானே!
இதை யாராவது உண்டால், அவன் என்றுமே வாழ்வான்,
என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## 3ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*அப்பமும் இரசமும் ஒப்புக்கொடுத்தார்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 14 : 18-20

அந்நாட்களில் :

சாலேமின் அரசனும் உன்னத கடவுளின் குருவுமாய் இருந்த மெல்கிசெதேக், அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் கைகளில் ஏந்தி வந்து, ஆபிராமை ஆசீர்வதித்து: விண்ணையும் மண்ணையும் படைத்த உன்னத கடவுளால் ஆபிராம் ஆசீர்வதிக்கப்படக் கடவானாக. உன்னை ஆதரித்து, உன் பகைவர்களை உன் கையில் ஒப்படைத்த உன்னத கடவுள் வாழ்த்தப் படுவாராக (என்றார்). அவருக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் பத்தில் ஒருபங்கு கொடுத்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 109 : 1, 2, 3, 4 (பல்லவி : 4ab)*

பல்லவி : மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே.

1 ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது :
“ நான் உம் பகைவரை உமக்குக் கால் மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கத்தில் அமரும். ” பல்லவி

2 வலிமைமிக்க உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்:
உம் எதிரிகளிடையே அதிகாரம் செலுத்தும். பல்லவி

3 புனிதம் சிறப்புற்றோங்க, நீர் உதித்த நாளிலே
ஆட்சியுரிமையும் உம்மோடு உதித்தது:
விடிவெள்ளி தோன்றுமுன் பனியைப்போல் உம்மை ஈன்றெடுத்தேன். பல்லவி

4 “மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே” என்று
ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார் :
சொன்ன சொல்லை மாற்றமாட்டார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நீங்கள் உண்டு, பருகும்போதெல்லாம் ஆண்டவர்
மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.**

திருத்தூதரான புனித பவுல் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 11 : 23-26

சகோதரர்களே :

நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே—அதையே நான் உங்களுக்குக் கையளித்தேன்—அதாவது, ஆண்டவராகிய யேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து, நன்றி கூறி அதைப்பிட்டு : "இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அவ்வாறே உணவு அருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து "இக்கிண்ணம் எனது இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை. இதைப் பருகும்போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார்.

எனவே, நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

விருப்பம்போல், தொடர்கீதம் ("சீயோனே, உன் மீட்பரை," பக்கம் 1026) சொல்லலாம்

அல்லேலூயா அரு. 6 : 51-52

**அல்லேலூயா. வானின்று இறங்கிவந்த உயிருள்ள அப்பம் நானே !**
**இதை யாராவது உண்டால், அவன் என்றுமே வாழ்வான்,**
**என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

அனைவரும் வயிறார உண்டனர்.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

9 : 11b-17

யேசு கடவுளின் அரசைப்பற்றி மக்கள் கூட்டத்திற்குப் போதித்து, குணமாக வேண்டியவர்களைக் குணமாக்கினார். பொழுது சாயத் தொடங்கவே, பன்னிருவர் அவரிடத்தில் வந்து, "சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் போய், விடுதியும் உணவும் பார்த்துக்கொள்ளும்படி மக்களை அனுப்பிவிடும். நாமுள்ள இடமோ பாழ்வெளி" என்றனர். அதற்கு அவர், "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்றார். அவர்களோ, எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்தான் உண்டு. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு வாங்கிவந்தால்தான் முடியும்" என்றனர்.

ஏனெனில், ஆண்களே, ஏறக்குறைய ஐயாயிரம் பேர் இருந்தனர். யேசு சீடர்களை நோக்கி, "இவர்களை ஐம்பது ஐம்பதுபேராகப் பந்தி அமரச் செய்யுங்கள்" என்றார். அவர் சொன்னபடியே அனைவரையும் அவர்கள் பந்தி அமரச் செய்தார்கள்.

அதன்பின், ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, இறைபுகழ் கூறி, பிட்டு, சீடருக்கு அளித்து மக்கட்கூட்டத்திற்குப் பரிமாறச் சொன்னார். அனைவரும் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பரிசுத்த ஆவி விழாவுக்குப் பின் 2ஆம் ஞாயிறை அடுத்த வெள்ளி

# யேசுவின் திரு இருதயம்

பெருவிழா

**முதல் ஆண்டு**

முதல் வாசகம்

*ஆண்டவர் உங்கள் மீது அன்பு கூர்ந்து, உங்களைத் தேர்ந்துகொண்டார்.*

உபாகமத்திலிருந்து வாசகம் 7 : 6-11

அந்நாட்களில் :

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது: "நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட குடியாய் இருக்கிறாய். மண்ணிலுள்ள எல்லா மக்களிலும் உன்னைக் கடவுளாகிய ஆண்டவர் தம் சொந்த மக்களாகத் தேர்ந்துகொண்டார்.

மக்கள் அனைவரிலும் நீங்கள் திரளான மக்கள் என்பதற்காக ஆண்டவர் உங்களோடு சேர்ந்துகொண்டு உங்களைத் தேர்ந்துகொள்ளவில்லை. உள்ளபடி நீங்கள் மற்றுமுள்ள எல்லா மக்களிலும் கொஞ்சமாகவே இருக்கிறீர்கள். அவர் உங்கள்மேல் அன்புகூர்ந்து, உங்கள் மூதாதையர்களுக்குத் தாம் இட்ட ஆணையைக் காக்க வேண்டுமென்பதை முன்னிட்டு தமது வலுத்த கையால் உங்களைப் புறப்படச் செய்து, அடிமைத்தன வீட்டினின்றும் எகிப்து மன்னனான பரவோனுடைய கையினின்றும் உன்னை மீட்டுக்கொண்டார்.

ஆதலால், உன் கடவுளாகிய ஆண்டவர் வலிமையும் உண்மையும் பொருந்திய கடவுளென்றும், அவர் தமக்கு அன்பு செய்து தம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்கு ஆயிரம் தலைமுறைகள் வரையிலும் தமது உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவரென்றும், தம்மைப் பகைக்கிறவர்கள்மேல் அவர் உடனே பழிவாங்கி, அவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி அவர்களுக்குச் சரியான தண்டனை வழங்கச் சற்றும் தாமதியாமல் அந்நேரமே அவர்களை அழிக்கிற கடவுளென்றும் அறியக்கடவாய்.

ஆகையால், நீ அனுசரிக்கும் பொருட்டு இன்று நான் உனக்குக் கருத்தாய்க் கற்பிக்கின்ற சட்ட ஒழுங்குகளையும் சடங்கு ஆசாரங்களையும் நீதி முறைமைகளையும் கைக்கொண்டு ஒழுகக்கடவாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1-2, 3-4, 6-7, 8 & 10 ( பல்லவி : 17 )

பல்லவி : ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்மீது
அவரது இரக்கம் என்றென்றும் நிலைநிற்கும்.

1 நெஞ்சே நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக.
என் அகத்துள்ள தெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக !
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக.
அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்.
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்.
அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

6 நீதிமிக்க செயல்களைப் புரிகிறார் ஆண்டவர் :
துன்புற்றோர் யாவருக்கும் நீதி வழங்குகிறார்.
7 மோயீசனுக்குத் தம் வழிகளை வெளிப்படுத்தினார் :
இஸ்ராயேல் மக்களுக்குத் தம் செயல்களை விளங்கச் செய்தார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர் ;
சினங்கொள்ளத் தாமதிப்பவர் ; சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை :
நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுளே நமக்கு அன்பு செய்தார்.

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 7-16

அன்புக்குரியவர்களே :

நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்வோமாக. ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது ; அன்பு செய்பவன் எவனும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான் ; அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை : ஏனெனில், அன்பே கடவுள்.

தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது.

நாம் கடவுளுக்கு அன்பு செய்ததில் அன்று; அவரே நமக்கு அன்பு செய்து, நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

அன்புக்குரியவர்களே, கடவுள் நமக்கு இவ்வாறு அன்பு செய்தார் எனில், நாமும் ஒருவர்க்கொருவர் அன்பு செய்தல்வேண்டும். கடவுளை எவனும் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால், நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்தால், கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார், அவரது அன்பு நம்மிடம் நிலைபெற்றிருக்கிறது. தம் ஆவியில் அவர் நமக்குப் பங்கு தந்தமையால், நாம் அவருள் நிலைத்திருக்கிறோம் எனவும், அவர் நம்முள் நிலைத்திருக்கிறார் எனவும் அறிகிறோம். தந்தை தம் மகனை உலகின் மீட்பராக அனுப்பினார் என்று கண்டோம்; அதற்குச் சான்று பகர்கின்றோம்.

யேசு கடவுளின் மகன் என ஏற்றுக்கொள்பவன் எவனோ அவனும் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். இங்ஙனம், கடவுள் நம்மீதுகொண்ட அன்பை அறியலானோம்; அந்த அன்பை விசுவசித்தோம். அன்பே கடவுள்; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான், கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

மத். 11 : 29 அ ஆ

அல்லேலூயா. உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்: ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 25-30

அக்காலத்தில் யேசு கூறியதாவது:

"தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய், இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று, தந்தையன்றி வேறெவனும் அறியான். தந்தை யாரென்று மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவனும் அறியான்.

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## 2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

என் உள்ளம் உன் பக்கம் திரும்பியுள்ளது.

ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 11 : 1b, 3-4, 8c-9

ஆண்டவர் கூறுவதாவது :

"இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோதே நாம் அவன்மேல் அன்புகூர்ந்தோம்; எகிப்திலிருந்து நம் மகனை அழைத்தோம். எப்பிராயீமுக்கு நடை பயிற்றுவித்தவர் நாம்தாம், அவர்களைக் கையிலேந்தி நாம் சீராட்டினோம்; ஆயினும் தங்களைப் பராமரித்து வருபவர் நாமே என்பதை அவர்கள் உணரவில்லை. பரிவு என்னும் கயிற்றால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிற்றால் கட்டி நடத்திவந்தோம். அவர்கள் கழுத்திலிருந்து நாம் நுகத்தை அகற்றி அவர்களை இளைப்பாறச் செய்து உணவளித்தோம்.

நமது உள்ளம் அதை வெறுத்தொதுக்குகிறது, நம் இரக்கம் பொங்கியெழுந்து துடிக்கிறது. நமது கோபத்தின் ஆத்திரத்தை நிறைவேற்றமாட்டோம், மறுபடியும் எப்பிராயீமை அழிக்கமாட்டோம்; ஏனெனில் நாம் கடவுள், வெறும் மனிதன் அல்ல; நாமே உங்கள் நடுவில் இருக்கும் பரிசுத்தர்; எனவே உங்களை அழிக்கும்படி வரமாட்டோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

எசா. 12: 2-3, 4bcd, 5-6 (பல்லவி: 3)

பல்லவி: மீட்பின் ஊற்றுக்களிலிருந்து தண்ணீரை
அகமகிழ்வோடு முகந்து கொள்வீர்கள்.

2 இதோ கடவுள்தான் என் மீட்பு,
அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், அஞ்சேன்;
ஏனெனில் ஆண்டவரே என் வலிமை,
அவரையே பாடுவேன்; என் மீட்பு அவரே;
3 மீட்பின் ஊற்றுகளினின்று தண்ணீரை
அகமகிழ்வோடு நீங்கள் முகந்து கொள்வீர்கள். பல்லவி

4 ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள்,
அவர் பெயரைப் போற்றிப் புகழுங்கள்;
புறவினத்தார்க்கு அவர் செயல்களை அறிக்கையிடுங்கள்;
அவர் பெயர் உயர்ந்ததெனப் பறைசாற்றுங்கள். பல்லவி

5 ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்,
ஏனெனில் மகிமைக்குரிய செயல்களைச் செய்தார்;
உலகெங்கும் இதனைத் தெரியப்படுத்துங்கள்.
6 சீயோனின் குடிகளே ஆர்ப்பரியுங்கள், மகிழ்ச்சியினால் பாடுங்கள்:
ஏனெனில் இஸ்ராயேலின் பரிசுத்தர்,
உன் நடுவில் மேன்மையோடு விளங்குகின்றார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*அறிவுக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பை அறிவதற்கு.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 8-12, 14-19

சகோதரர்களே :

கிறிஸ்துவின் அளவிட முடியாத செல்வங்களைப்பற்றிய நற்செய்தியைப் புறவினத்தாருக்கு அறிவிக்கவும், மறைபொருளான திட்டம் எதுவென்று வெளிப்படுத்தவும், இறைமக்கள் அனைவரிலும் மிகச் சிறியேனாகிய எனக்கு அருள் அளிக்கப்பட்டது. பல்வகையாய்ச் செயல்படும் இறைஞானமானது, தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் முதலிய விண்ணகத் தூதருக்குத் திருச்சபையின் வழியாய் இப்பொழுது அறிவிக்கப்பட வேண்டுமென்று அனைத்தும் படைத்த கடவுள் இத்திட்டத்தைத்